
இந்தியாவின் வரலாறு



கொ. அ. அன்தோனவா,
கி. ம. போன்காரத்-லேவின்,
கி. கி. கத்தோவ்ஸ்கி

இந்தியாவின் வரலாறு

18ம் நூற்றாண்டின் நடு முதல்
நம் காலம் வரை

சுருக்க நூல்

இரண்டு பாகங்களில்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்

Редакция литературы по истории

К. А. АНТОНОВА, Г. М. БОНГАРД-ЛЕВИН, Г. Г. КОТОВСКИЙ

ИСТОРИЯ ИНДИИ (С СЕРЕДИНЫ XVIII ВЕКА ДО НАШИХ ДНЕЙ)

на тамильском языке

© Издательство «Мысль», 1973
© Издательство «Прогресс» 1979, с изменениями
© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1979

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

А $\frac{10605—886}{014(01)—79}$ 795—79

0506000000

பொருளடக்கம்

புதிய காலத்தில் இந்தியா . 9

ஆங்கிலேயர் இந்தியாவை வெற்றி கொள்ளல் (18ம் நூற்றாண்டு) . 11

முகலாயப் பேரரசின் வீழ்ச்சி . . . 11

இந்தியாவுக்காக ஆங்கிலோ-பிரெஞ்சுப் போராட்டம் (1746—1763). 24

ஆங்கிலேயர் தென் இந்தியாவை வெல்லல் 43

இந்தியாவில் காலனி ஆட்சி அதிகாரிகளின் கொள்கை (18ம் நூற்றாண்டின் இறுதி முதல் 19ம் நூற்றாண்டின் தொடக்கம் வரை) . . 72

19ம் நூற்றாண்டின் முற்பாதியில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 87

இந்தியா இறுதியாக வென்று கைப்பற்றப்படுதல் 92

காலனியாட்சி எதிர்ப்புப் போராட்டங்கள் 95

முதலாளி வர்க்க இயக்கத்தின் தோற்றம் 100

மாபெரும் மக்கள் கிளர்ச்சி 1857—1859 103

18ம் நூற்றாண்டிலும் 19ம் நூற்றாண்டின் முற்பாதியிலும் இந்தியாவின் பண்பாடு 113

ஏகாதிபத்தியத்துக்கு மாறும் காலப் பகுதியில் இந்தியா (1860-1897) . 125

காலனி நிர்வாக அமைப்பில் மாறுதல்கள் 125

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 1860-90க்களில் 132

1860-90க்களில் இந்திய மக்கள் நடத்திய தேசிய விடுதலைப் போராட்டம் 150

முதலாளித்துவத் தேசியவாதத்தின் தோற்றமும் அதன் பல்வேறு போக்குகளும் 164

இந்தியா முதல் உலக யுத்தத்துக்கு முந்திய ஏகாதிபத்திய, ஆசிய விழிப்புக் காலப் பகுதியில் (1897-1917) . 173

பிரிட்டிஷ்-இந்திய முரண்பாடுகள் கூர்மைப்படுதல் 173

புரட்சியின் ஏற்றம் 1905-1908 . . 184

முதல் உலக யுத்தத்தின் முன்பும் யுத்தக் காலத்திலும் இந்தியா . . . 201

அண்மைக் காலத்தில் இந்தியா . 227

முதல் புரட்சித் தாக்கும் வெகுஜன அரசியல் நிறுவனங்களின் அமைப்பும் நடந்த காலப் பகுதியில் இந்தியா (1918-1927) 229

தேசிய விடுதலை இயக்கத்தின் ஏற்றம் 229

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எதிர்த் தாக்கு 256

இந்தியாவில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் தோற்றமும் தொழிலாளர், விவசாயிகளின் அரசியல் நிறுவனங்கள் அமைந்ததும் 263

ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் ஏற்றமும் ஒன்றித்த முன்னணிக்கான போராட்டமும் (1928-1939) 277

தேசிய விடுதலைப் போராட்டத்தின் புதிய ஏற்றம் 277

தேசிய இயக்கத்தில் இடதுசாரிச் சக்திகளின் பலம் மிகுதலும் தலைமைக்கானப் போராட்டம் கூர்மை அடைதலும் 303

ஒன்றித்த தேசியக் கூட்டணி ஏற்படுத்தும் முயற்சிகள். காங்கிரசில் உள் போராட்டம் முற்றுகிறது . . 312

இரண்டாவது உலக யுத்தக் காலத்தில் இந்தியா 326

யுத்தத்தின் முதல் கட்டத்தில் அரசியல் கட்சிகளின் நிலைகளும் வெகுஜன ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமும் (1939—1941) . . . 326

1942 ''ஆகஸ்டுப் புரட்சியும்'' பிரிட்டிஷ் காலனியாட்சியின் கொள்கையும். 334

யுத்தத்தின் கடைசி ஆண்டுகளில் (1943—1945) இந்தியாவின் பொருளாதார, அரசியல் நிலைமை 338

சுதந்திரப் போராட்டத்தின் இறுதிக் கட்டம் (1945-1947) . . . 347

1945—1946ல் வெகுஜன இயக்கமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அரசியல் தந்திரங்களும் 347

விடுதலை அடையும் வழியில் . . . 362

இந்திய யூனியன் டொமினியன் . . 370

சுதந்திரப் பாதையில் முதல் அடிவைப்புகள் 370

வர்க்கப் போராட்டம் மும்முரம் ஆகிறது. 385

இந்தியக் குடியரசு: சுதந்திரத்தின் அடித்தளம் நிறுவப்படுகிறது (1950-1964) 395

50க்களின் தொடக்கத்தில் உள்நாட்டு அரசியல் நிலைமை 395

பொருளாதார, அரசியல் கொள்கை. 406

இந்தியாவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையில் ''நேருவின் போக்கு'' உருவாதல் . . . 427

''நேருவின் போக்கைத்'' தொடர்வதற்கான போராட்டம் (1964-1972) 458

பொருளாதார, அரசியல் நெருக்கடி அதிகரித்தல் 458
இடதுசாரிச் சக்திகள் வலுவடைகின்றன 472

70க்களின் நடுவில் இந்தியா . 483

உள் வளர்ச்சி குறித்த முரண்பாடுகள் கூர்மை அடைதல் (1973—1977) 483

கலைச்சொல் வரிசை 508

இந்தியா
புதிய காலத்தில்

கொ. அ. அன்தோனவா, கி. கி. கத்தோவ்ஸ்கி

ஆங்கிலேயர் இந்தியாவை வெற்றி கொள்ளல் (18ம் நூற்றாண்டு)

முகலாயப் பேரரசின் வீழ்ச்சி

18ம் நூற்றாண்டில் முகலாயப் பேரரசு வீழ்ந்து சிதறித் தன் சுதந்திரத்தை இழந்தது. இந்திய அரசுகளுக்கும் இந்திய நிலப்பரப்பில் உறுதிப்பட்டு விட்டவையும் தங்கள் வல்லரசுகளின் விறலைச் சார்ந்து இருந்தவையுமான ஐரோப்பிய வர்த்தகக் கம்பெனிகளுக்கும் இடையே ஒப்பு வலிமை இந்தியாவுக்குப் பாதகமாக இடையறாது மாறிக் கொண்டிருந்தது. 16ம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களுக்கு இந்தியாவில் அரண் இடங்களும் கிட்டங்கிகளும் இருந்தன. 17ம் நூற்றாண்டில் பண்டசாலைகளும் குடியிருப்புக்களும் அவர்களுக்கு அமைந்தன. 18ம் நூற்றாண்டிலோ, ஐரோப்பியர்கள் இந்திய அரசுகளை அடிப்படுத்தத் தொடங்கினர்கள். மறு புறம், 18ம் நூற்றாண்டுக்கு முன்பு அவர்களுக்கு எதிர்நின்றது முகலாயப் பேரரசு. வலிமையைக் காட்டியும் காணிக்கைகள் அளித்தும் அதனிடமிருந்து அவர்கள் வர்த்தகச் சலுகைகள் பெற்று வந்தார்கள். மாறுகப் பதினெட்டாம் நூற்றாண்டில் அவர்கள் சமாளிக்க வேண்டி இருந்தவை தனித்தனி அரசுகள். இவை தங்களுக்குள் போராடிக் கொண்டிருந்தன. தங்கள் இந்தியப் பகைவர்களுக்கு எதிராக ஐரோப்பியர்களிடம் உதவி வேண்டி விண்ணப்பித்துக் கொண்டன.

முகலாயப் பேரரசு துண்டுகளாகச் சிதறுவது ஔரங்கசீபு காலத்திலேயே தொடங்கிவிட்டது. அவன் இறந்த பிறகு இது கணிசமாக விரைவுபட்டது. அரியணைக்காக அவனுடைய மூன்று புதல்வர்களுக்குள் நடந்த போராட்டத்தில் மூத்தவன் முவஸ்ஸம் வென்றான். இவன் பகதூர்ஷா என்ற பட்டப் பெயருடன் 1707ம் ஆண்டு டில்லியில் முடி சூட்டிக் கொண்டான் (1707—1712). இவன் வயது முதிர்ந்தவன், நெஞ்சு உறுதி அற்றவன். சீக்கியர்களுக்கு மட்டுமே எதிராக இவன் படையெடுப்பு நடத்தினான். குரு கோவிந்தர் கொல்லப்பட்ட பின் பந்தா என்பவன் சீக்கியர்களுக்குத் தலைவன் ஆனான். மனைதிடம் மிக்க

பந்தா (ஒரு நிகழ்ச்சிப் பதிவாளனின் சொற்படி) ''தாழ்ந்த சாதிகளைச் சேர்ந்த ஆத்திரம் அடைந்த'' பலரைத் தன்னைடு சேர்த்துக் கொண்டு சர்ஹிந்தைக் கைப்பற்றினன். எழுபதாயிரம் பெயர் கொண்ட படை யுடன் சகாரன்பூர் பிரதேசத்தை வசப்படுத்தி, லாகூர் நகரை முற்று கை இட்டான். ஆனல் லாகூரைக் கைப்பற்ற அவனல் முடியவில்லை. பகதூர்ஷா தானே அவன்மீது போர்தொடுத்தான். முகலாயப் படை கள் 1711ம் ஆண்டு சீக்கியர்களின் மையமான சர்ஹிந்தைப் பிடித்துக் கொண்டு அவர்களை இமய மலை அடிவாரத்துக்கு விரட்டின.

பகதூர்ஷா இறந்தபின் அவனுடைய புதல்வர்களிடையே அரி யணைக்காகப் புதிய போராட்டம் தொடங்கியது. திறமை வாய்ந்த ஆலோசகனின் துணையால் ஜகான்தார்ஷா என்பவன் (1712—1713) இந்தப் போராட்டத்தில் வெற்றி பெற்றான். இவன் பகதூர்ஷாவின் மைந்தர்கள் எல்லோரிலும் மட்டமானவன். சில மாதங்களுக்குப் பின் இவனுடைய சகோதரன் மகன் பருக் சியார் (1713—1719) இவனை ஆட்சியிலிருந்து அகற்றிச் சிறையில் கொலை செய்தான். நாட் டை உண்மையில் ஆண்டவர்கள் பருக் சியாரின் இரு ஆலோசகர்கள். இவர்கள் பர்கிக் குலத்தைச் சேர்ந்த சையது சோதரர்கள். அக்பர் காலம் முதலே தன் போர் மரபுகளுக்காகப் பெயர் பெற்றிருந்தது இந்தக் குலம்.

இதற்கிடையே பந்தா மீண்டும் பஞ்சாபில் தீவிரப் போர் நடவடிக் கைகளை மேற்கொண்டான். ஆயினும் பீரங்கிகள் இல்லாமையால் லாகூர் நகரைக் கைப்பற்ற அவனல் முடியவில்லை. பருக் சியார் சீக்கி யர்களுக்கு எதிராகச் சேனையை அனுப்பினன். குருதாஸ்பூர் கோட் டையில் சீக்கியர்கள் முற்றுகைக்கு உள்ளானர்கள். பட்டினி காரண மாக அவர்கள் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. கோட் டைக்குள் புகுந்த முகலாயப் படைகள் மக்களை வெட்டி வீழ்த்தின. பந்தாவும் அவனுடைய துணைவர்களும் சிறை பிடிக்கப்பட்டு டில்லிக்கு அனுப்பப்பட்டார்கள். அங்கே அவர்கள் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்கள்.

சையது சோதரர்களின் அரவணைப்பிலிருந்து விடுபட பருக் சியார் முயன்றான். ஆனல் அவர்கள் அவனை ஆட்சியிலிருந்து அகற்றி விட் டார்கள். இதன் பின் பகதூர்ஷாவின் இரு இளம் பேரர்கள் ஒருவர் பின் ஒருவராக டில்லிச் சிங்காதனத்தில் சிறிது காலத்துக்கு வீற்றிருந் தார்கள். முடிவில் மூன்றாம் பேரன் முகமதுஷா (1719—1748) என் னும் பெயர் பூண்டு அரியணை ஏறினன். அரசவை உட்குழுவின் ஆதர வோடு இவன் சையது சோதரர்களை ஒழித்து விட்டான். ஆனல் முக மதுஷா இன்பம் நுகர்வதிலேயே நாட்டம் கொண்டிருந்தான். ஆடம் பரமான அரசவை மரபுகளுக்கும் சேனைப் பராமரிப்புக்கும் பெருந்

தொகையான பணம் தேவைப்பட்டது. விவசாயிகளிடமிருந்து முடிந்த வகையிலெல்லாம் பணம் திரட்டப்பட்டது. வரி விதிப்பு சம்பந்தமான அளவுமானங்கள் எவையும் உண்மையில் கடைப்பிடிக்கப்படவில்லை. விவசாயிகள் வேளாண்மையை விட்டுவிட்டு வரிக் கொடுமையிலிருந்து தப்பும் பொருட்டுப் படையில் சேர்ந்தார்கள், அல்லது சொந்தப் படைப் பிரிவுகள் அமைத்துக் கொண்டார்கள். இவை டில்லியின் எல்லைப் பகுதிகளில் கூடக் கொள்ளைத் தொழில் நடத்தி வந்தன. தேசியப் பொருளாதாரம் சீர்குலைந்தது. பிரதேசங்கள் ஒன்றன் பின் ஒன்றாகப் பேரரசிலிருந்து பிரிந்தன.

வங்காளத்தில் ஔரங்கசீபின் ஆட்சிப் பிரதிநிதியாக இருந்த மூர்ஷித் குலிகான் என்பவன் தனக்கு மாற்றாக முகமதுஷாவால் 1713ம் ஆண்டு அனுப்பப்பட்டவனை விரட்டி அடித்து விட்டு, டில்லிக்கு வரிப்பணம் அனுப்புவதை நிறுத்திஞன். இவன் தன் பெயரால் மூர்ஷிதாபாத் என்னும் தலைநகரை ஏற்படுத்திக் கொண்டான். 1714—1718ல் அவன் பீகாரையும் ஒரிஸ்ஸாவையும் தன் ஆட்சிப்பரப்பில் சேர்த்துக் கொண்டான்.

வங்காளத்தின் புதிய அரசு முகலாய மன்னனின் அரசுரிமையைப் பெயரளவில் ஒப்புக்கொண்டது, ஆயினும் உண்மையில் முற்றும் சுதந்திரமாக இருந்தது. உதாரணமாக, 1717ல் பருக் சியாரால் ஆங்கில வர்த்தகர்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்த சலுகைகளை அவர்களுக்கு வழங்க அது மறுத்து விட்டது. தக்காணத்தில் முகலாயர்களின் ஆட்சிப் பிரதிநிதியாக இருந்த ஆசப்ஜா என்பவனும் பேரரசிலிருந்து பிரிந்து ஹைதராபாது என்னும் சுதந்திர அரசை நிறுவிஞன். கோல்கொண்டா கோட்டையின் அருகே (முன்பு பாக்பூர் என அழைக்கப்பட்ட) ஒரு நகருக்கு ஹைதராபாது என்று பெயர் சூட்டி அதைத் தலைநகர் ஆக்கிக் கொண்டான். ஆசப்ஜாவும் அவனுக்குப் பின் ஹைதராபாதின் மன்னர்கள் ஆனவர்களும் நிஜாம் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார்கள். இவர்கள் தென் இந்தியாவில் ஆதிக்கம் பெறுவதன் பொருட்டு மராட்டியர்களுடன் போரிட்டார்கள். 1739ம் ஆண்டு அவத் முகலாய அரசிலிருந்து பிரிந்து, லக்னௌவைத் தலைநகராகக் கொண்டு சுதந்திரச் சிற்றரசு ஆகி விட்டது. டில்லிப் பிரதேசத்தின் வட கிழக்கே குடியேறியிருந்த ஆப்கானிய இனக் குழுவினரான ரோகில்லர்களை விரட்டிவிட்டுத் தன் ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்த அவத் முயன்றது. உண்மையில் முகலாயர்கள் அந்தக் காலத்தில் ஆக்ரா-டில்லிப் பிரதேசத்தை மட்டுமே ஆண்டு வந்தார்கள்.

அனைத்து இந்தியா மீதும் ஆதிக்கத்துக்கு உரிமை கோரியவர்களில் மராட்டியர்களே முதன்மையானவர்களாக இருந்தார்கள்.

வட இந்தியாவில் முகலாயச் சிங்காதனத்திற்கு உரிமை கோரிய பல் வேறு நபர்களுக்கு இடையே அதிகாரத்துக்காகப் போராட்டம் நடந்து கொண்டிருக்கையில் மராட்டியர்கள் மேற்கு இந்தியாவில் நிலை பெற்றதோடு தங்கள் படைப் பிரிவுகளின் நடவடிக்கைகளை மத்திய இந்தியாவுக்கும் கொண்டுவந்தார்கள். இங்கே அவர்களுக்கு எதிராக ஒழுங்கமைந்த சேனைகள் இருக்கவில்லை ஆதலால், தங் களுக்குச் சேர வேண்டிய சௌத், சர்தேஷ்முகி ஆகிய வரிகளைத் திரட்டும் சாக்கில் மராட்டியர்கள் நகரங்களையும் குடியிருப்புக் களையும் தாக்கினார்கள். டில்லிச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சம்பாஜியின் மகன் ஷாகுவுக்கும் அவன் இல்லாதபோது அரசப் பிரதிநிதியாக ஆண்டுவந்த இராஜாராமனின் விதவை தாராபாய்க் கும் இடையே அரியணைக்கான போராட்டம் மகாராஷ்டிரத்தில் நடந்து கொண்டிருந்தது.

பேஷ்வா (முதலமைச்சன்) பாலாஜி விசுவநாத் என்பவன் (1713—1720) இந்தப் போராட்டத்தில் ஷாகுவை ஆதரித்து அதன் மூலம் தன் செல்வாக்கை வெகுவாகப் பெருக்கிக் கொண்டான். அவன் எல்லா ஆட்சியதிகாரத்தையும் உண்மையில் தன் கைகளில் குவித்துக் கொண்டு, மராட்டியப் பேஷ்வாக்களின் வம்சத்துக்கு அடி கோலி னன். சிவாஜி வம்சத்தவர் ராஜாக்களாகத் தொடர்ந்து எண்ணப் பட்டார்கள் ஆயினும் தாங்கள் வாழ்ந்த கோல்காப்பூரை விட்டு வெளியேற அவர்களுக்கு உரிமை இருக்கவில்லை. சையது சோதரர் களை ஆதரித்ததற்கு மாற்றாக முகலாயப் பேரரசின் ஆறு தெற்கு சூபாக்களில் (பிரதேசங்களில்) சௌத், சர்தேஷ்முகி வரிகள் வசூ லிக்கும் உரிமைப் பத்திரம் பாலாஜிக்குக் கிடைத்தது. மராட்டியர் களின் கொள்ளையை இது சட்டபூர்வம் ஆக்கிற்று. மராட்டியர்கள் வரி வசூலிப்பவர்களைப் படைப் பிரிவுகளோடு அனுப்பினார்கள், முடிந் ததை எல்லாம் பறித்துக் கொண்டார்கள், பணக்காரர்களுடைய நிதிகள் ஒளிக்கப்பட்டிருக்கும் இடங்களைத் தெரிந்து கொள்வதற்காக அவர்களைச் சித்திரவதை செய்தார்கள். மராட்டியர்கள் அருகே நெருங்கியதுமே மக்கள் தப்பி ஓடினார்கள்.

18ம் நூற்றாண்டின் முப்பதுக்களுக்குள் மராட்டியர்கள் மத்திய இந்தியாவின் விரிவான பிரதேசங்களை வசப்படுத்திக் கொண்டார் கள். விளைவாக நான்கு பெரிய மராட்டியச் சிற்றரசுகள் தோன்றின. நாகபுரியை மையமாகக் கொண்ட போசள வம்சம், குவாலியரைத் தலைநகராகக் கொண்ட சிந்தியா வம்சம், இந்தூரை மையமாகக் கொண்ட ஹோல்க்கார் வம்சம், பரோடாவைத் தலைநகராக உடைய காயக்வார் வம்சம் ஆகியவற்றின் சிற்றரசுகள் இவை. பேஷ்வாக் கள் ஆட்சி நடத்தி வந்த பூனைவை இவை நான்கும் ஓரளவு சார்ந்

திருந்தன. மராட்டியச் சிற்றரசுகளின் இந்தக் கூட்டு பல்வேறு இனக் குழுக்களும் மக்கள் இனங்களும் அடங்கிய கதம்பத் திரளாக மாறி விட்டது. மராட்டியர்கள் இதில் ஆளும் சிறுபான்மையினராக இருந்தார்கள். மராட்டியச் சேனையும் இவ்வாறே கலப்பாக இருந்தது. அதில் இருந்த எல்லா வித ஆதர்சங்களும் தேசிய உணர்வும் மறைந்து விட்டன. மராட்டியச் சிற்றரசுகளில் விவசாயிகளின் நிலைமை மிகவும் கடினமாக இருந்தது. மேலும் மேலும் புதிய வரிகள் விதிக்கப்பட்டு வந்தன. உண்மையில் மராட்டியச் சிற்றரசுகளின் கூட்டு நிலப்பிரபுத்துவப் பேரரசாக மாறிவிட்டது. முகலாயப் பேரரசு தன் முழு மலர்ச்சிக் காலத்தில் இருந்ததைக் காட்டிலும் சற்றே குறைவாக அது மையப்படுத்தப் பெற்றிருந்தது.

பாலாஜியின் மகன் பாஜி ராவ் I (1720—1740) மராட்டியர்களின் முக்கியக் கவனத்தை வடக்கே திருப்பினான். டில்லியைக் கைப்பற்றி விட்டால் இந்தியா அனைத்தின் மீதும் ஆட்சி செலுத்தலாம் என்று அவன் நம்பினான். ''பட்ட மரத்தின் தண்டைத் தாக்குவோம். கிளைகள் தாமாகவே விழுந்து விடும்'' என்று அவன் கூறினான். ஆனால் மராட்டியர்கள் தெற்கிருந்து டில்லியை நோக்கி முன்னேறிய போது, ஈரான் அரசன் நாதிர்ஷாவின் படைகள் 1739ம் ஆண்டு வடக்கிருந்து இந்தியா மீது படையெடுத்தன. முகலாய மன்னன் முகமதுஷாவின் ஒழுக்கக் கட்டுப்பாடு அற்ற படைகளால் அவற்றுக்கு எதிர் நிற்க முடியவில்லை. பானிப்பட்டுக்கு அருகில் உள்ள கர்னல் என்னும் இடத்தில் முடிவைத் தீர்மானிக்கும் போர் நடந்தது. போரின் விளைவு தெளிவாய் இல்லாததால் ஈரான் திரும்பத் தயாராகும் படி தன் படைகளுக்கு நாதிர்ஷா உத்தரவிட்டான். அந்தச் சமயத்தில் முகமதுஷாவின் தூதர்கள் எதிர்பாராமல் வந்து டில்லி அவனுக்குப் பணிவதாக அறிவித்தார்கள். நாதிர்ஷா டில்லி சென்றான். அங்கே அவன் இரண்டு மாதங்கள் தங்கினான். மக்களைத் திரளாகப் படுகொலை செய்தான். சிந்து ஆற்றின் வடக்கில் இருந்த முகலாய ஆட்சிப் பகுதிகள் (அதாவது தற்போதைய ஆப்கனிஸ்தான்) தனக்கு அளிக்கப்படுவதாக ஆணைப் பத்திரம் பெற்றான். முகலாயர்களின் நிதிக் குவைகளையும் கொள்ளைப் பொருள்களையும் வாரிக் கொண்டு தாயகம் திரும்பினான். அவன் சென்ற பிறகு வெறுமையான நகரம் கொள்ளைக்காரர்களின் ஆட்சிக்கு உள்ளாயிற்று. நகரவாசிகள் தப்பி ஓடிவிட்டார்கள். நிலப் பிரபுக்கள் வேறு அரசர்களின் அவைகளுக்கு, சிறப்பாக அவத் சிற்றரசின் தலைநகர் லக்னௌவுக்குப் போய்விட்டார்கள்.

ஆப்கானியர்கள் சிறிது காலமே ஈரானுக்குக் கீழ்ப்படிந்தார்கள். 1747ல் நாதிர்ஷா கொல்லப்பட்டதும் அகமதுஷா அப்தலி (துரானி) யின் தலைமையில் சுதந்திர ஆப்கானிய அரசு உருவாயிற்று.

அகமதுஷா நாதிர்ஷாவின் சேனையுடன் டில்லி சென்றவன். முகலாயர்களின் பலவீனத்தைக் கண்டு, இந்தியா முழுவதையும் வென்று கைப்பற்ற அவன் முடிவு செய்தான். ஐந்து முறை இந்தியா மீது படையெடுத்தான்: 1748ம், 1750ம், 1752ம், 1756ம்—1757ம், 1758ம் ஆண்டுகளில். அவனுக்கு மிகப் பெரிய எதிர்ப்பு தெரிவித்தது முகலாயரின் சேனை அல்ல, சீக்கியர்களே. அவர்கள் ஆப்கனிஸ்தானுடன் அகமதுஷாவின் போக்குவரத்துத் தொடர்பைத் துணித்து அவன் பின் வாங்கிச் செல்லுமாறு கட்டாயப்படுத்தினர்கள்.

இதற்கிடையே மராட்டியர்கள் பாஜி ராவின் (1740—1761) தலைமையில் வடக்கே சென்றார்கள். அங்கே அகமதுஷாவின் படைகளோடு அவர்களுக்கு மோதல் ஏற்பட்டது. இந்தியாவில் ஆதிக்கத்துக்கு உரிமை கொண்டாடிய இந்த இரு தரப்பாருக்கும் இடையே 1761ம் ஆண்டு பானிப்பட்டுப் போர்க்களத்தில் முடிவான சண்டை நடந்தது. மராட்டியர்கள் படு தோல்வி அடைந்தார்கள். சிறந்த மராட்டியப் படைத் தலைவர்கள் களத்தில் மடிந்தார்கள். பேஷ்வா பாஜி ராவ் காயங்களின் விளைவாக மரணம் அடைந்தான். ஆனால் அகமதுஷாவுக்கும் வெற்றி எளிதில் கிட்டவில்லை. வெகுவாகக் குறைந்துபோன படைகளை இட்டு நிரப்பிக் கொள்ளும் பொருட்டு அவன் ஆப்கனிஸ்தான் திரும்ப வேண்டியதாயிற்று. உள் விவகாரங்கள் காரணமாக அவன் தாயகத்தில் நீண்ட காலம் தங்க நேர்ந்தது. அவன் இறந்த பிறகு நிலப்பிரபுத்துவ உட்பூசல்களின் விளைவாக இந்தியா மீது ஆப்கானியர்களின் படையெடுப்புக்கள் அறவே நின்று விட்டன.

அகமதுஷாவின் சேனைகள் இந்தியாவிலிருந்து வெளியேறியதுமே சீக்கியர்கள் ஆப்கானியர்களின் காவற்படைகளைப் பஞ்சாபிலிருந்து விரட்டி விட்டுத் தங்கள் சுதந்திர அரசை விரைவில் நிறுவினர்கள். பொருளாதார நடவடிக்கைகளின் மையம் போர்களால் சீரழிந்த ஆக்ரா-டில்லிப் பிரதேசத்திலிருந்து வங்காளத்திற்கும் தென் இந்தியாவுக்கும் முடிவாக மாறிவிட்டது. எல்லோரும் எல்லோருக்கும் எதிராகப் போரிட்டுக் கொண்டிருக்கையில் நாடு வலிமை இழந்து ஐரோப்பியக் காலனி ஆட்சியாளர்களின் படையெடுப்பை எதிர்க்கத் திறன் அற்றுப் போயிற்று.

இதற்கிடையே தென் இந்தியாவில் ஹைதராபாதுக்கும் மராட்டியருக்கும் இடையிலும் சுதந்திர மதுரைச் சிற்றரசுக்கும் ஹைதராபாதின் மானியப் பிரதேசமான ஆர்க்காட்டுச் சிற்றரசுக்கு இடையிலும் ஆட்சி அதிகாரத்துக்கான போராட்டம் நடந்து கொண்டிருந்தது. விஜயநகரத்தின் இடிபாடுகள்மீது எழுந்த மைசூர் சிற்றரசும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டது.

தென் இந்தியாவில் 16ம் நூற்றாண்டு முதல் மிராசுதார்கள் என்று அழைக்கப்பட்டு வந்த நிலச் சொந்தக்கார விவசாயிகளின் எண்ணிக்கை 17ம் நூற்றாண்டின் இறுதியிலும் 18ம் நூற்றாண்டிலும் ஒரேயடியாகக் குறைந்தது. இதே சமயம் கிராமச் சமுதாயக் குத்தகைக்காரர்களும் வரிசெலுத்தும் உடைமையாளர்களின் உரிமைகளைப் பெறலாயினர். கட்டுண்ட வாரிசுரிமை பெற்ற உடைமையாளன் என்ற தரத்தில் பல்வேறு வகை விவசாயிகளினது நில உரிமைகள் சமமாக்கப்பட்டன. பெருத்த தலைவரிகள் செலுத்தும் நிபந்தனையின் பேரிலேயே விவசாயிகள் நிலத்தை உடைமையாகப் பெற்றார்கள். கைத்தொழிலினதும் வேளாண்மையினதும் இணைவை ஆதாரமாகக் கொண்ட கிராமச் சமுதாய அமைப்பு மறைந்துவிடவில்லை, ஆனால் தலைவரி கட்டுவதற்கான பரஸ்பர உத்தரவாதம் முன்பு இல்லாத இடங்களில் கூடத் தோன்றியது. சமுதாய அமைப்பும் கிராமத்தில் நிலப்பிரபுவின் உண்மையில் வரம்பற்ற அதிகாரமும் சேர்ந்ததன் விளைவாக, அதிகப் பணம் செலுத்த முடிந்தவன் அதிக நிலம் பெற்றான் என்னும் கோட்பாட்டின்படி 17ம்—18ம் நூற்றாண்டுகளில் நிலத்தின் எல்லைகள் கோலப்பட்டன. வரிகள் இடையறாது உயர்ந்து வந்த நிலையில் விவசாயிக்கு நிலம் பெரும்பாலும் சுமையாகவே இருந்தது. ''அதிகப்படி'' நிலப் பகுதியை விட்டுத் தொலைத்து கூடுதல் வரிகளிலிருந்து விடுபட அவன் முயன்றான். கிராம மூப்பர்களும் எழுத்தர்களும் வெளியிலிருந்து சமுதாயத்துக்கு வந்து மூப்பனின் உரிமைகளைப் பெற்ற குத்தகைக்காரனும் சிறு நிலப்பிரபுக்களாகவும் மிகச் சிறு நிலப்பிரபுக்களாகவும் மாறும் நிகழ்முறையும் தீவிரம் அடைந்தது. சரக்குப் பொருளாதார வளர்ச்சியின் விளைவாக நாட்டுப்புறத்தில் நிலப்பிரபுத்துவ அமைப்பு சிதையவில்லை. மாறாக நாட்டுப்புறம் நிலப்பிரபுவுக்கு மேற்கொண்டு அடிப்பட்டது, நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறை தீவிரம் ஆயிற்று, நிலப் பயன்பாட்டின் கிராமச் சமுதாய வடிவங்கள் பாதுகாக்கப்பட்டன.

ஹைதராபாது நிஜாம் ஆசப்ஜா 1748ல் இறந்த பின் அரியணைக்காக அவனுடைய இரு புதல்வர்கள்—நாசர் ஜங்கும் முசப்பர் ஜங்கும்—தங்களுக்குள் போராடினார்கள். இந்தப் போராட்டத்தில் ஐரோப்பியக் கம்பெனிகள் தலையிட்டன. இவை அவர்களது துறைமுகங்களை ஒட்டிய சிறு நிலப் பகுதிகளை உடைமையாகப் பெற்றிருந்தன. அந்தக் காலத்திய விறல் மிக்க இரு ஐரோப்பிய வல்லரசுகளான பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே வர்த்தகப் போர்கள் உண்மையில் இந்திய நிலப்பரப்பில் உக்கிரமாக நடந்தன. இந்தப் போர்கள் வளர்ந்து இந்தியா முழுவதும் கைப்பற்றப்படுவதில் முடிந்தன.

இந்தியாவில் ஐரோப்பிய வர்த்தகக் கம்பெனிகள்

ஐரோப்பிய வியாபாரிகளுக்கு இந்திய வர்த்தகம் முக்கியம் ஆனதும் சிக்கல் உள்ளதுமான தொழிலாக இருந்தது. வியாபாரிகள் வழக்கமாகக் கம்பெனிகள் அமைத்தார்கள். இவை தங்கள் அரசாங்கங்களது ஆதரவைப் பெற்றன. போராட்டம் உண்மையில் தனித் தனி வர்த்தகர்களுக்கு இடையே அல்ல, அவர்களுடைய நாடுகளின் அரசாங்கங்களுக்கு இடையே நடந்தது. போர்ச்சுகேசியரின் இந்திய ஆராய்ச்சிப் பயணங்களுக்குச் சாதன வசதியும் நிதி உதவியும் அரசனுல் அளிக்கப் பட்டன. டச்சுக்காரர்களும் ஆங்கிலேயரும் அமைத்த கம்பெனிகளுக்கு அவற்றின் அரசாங்கங்களிடமிருந்து உரிமைப் பத்திரங்கள் கிடைத்திருந்தன. உதாரணமாக, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி 17ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் உருவாயிற்று. ஆங்கில அரசாங்கத்திடமிருந்து அது படிப்படியாகப் புதிய புதிய உரிமைகளைப் பெற்றது. ஆங்கில அரசாங்கத்தால் ஏற்கப்பட்ட பல உரிமைப் பத்திரங்கள் இங்கிலாந்தில் கம்பெனியின் நிலைகளை உறுதிப்படுத்தும் எல்லைக் கற்களாக விளங்கின. கிராம்வெலின் 1657ம் ஆண்டைய உரிமைப் பத்திரம், கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் போர்ப் பிரகடனம் செய்யவும் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளவும் உரிமை அளித்த 1661ம் ஆண்டைய உரிமைப் பத்திரம்; நாணயங்கள் அடிக்கவும் இராணுவ-போர்க்கள நீதிமன்றங்களை ஒழுங்கமைக்கவும் சொந்தத் தரை, கடற் படைகள் வைத்திருக்கவும் கம்பெனிக்கு உரிமைகள் வழங்கிய 1686ம் ஆண்டைய உரிமைப் பத்திரம் ஆகியன இவை. 1698ல் தனி வர்த்தகர்கள் வேறொரு கிழக்கிந்தியக் கம்பெனியாகச் சேர்ந்தார்கள். 1702ல் தான் இரண்டு கம்பெனிகளும் இணைந்தன. இந்த இணைவு 1708ம் ஆண்டு நாடாளுமன்றச் சட்டத்தால் முறைப்படுத்தப்பட்டது. அந்த நேரம் முதல் இந்தியாவில் கம்பெனியின் செயல்கள் விரைவாக விரிவடையத் தொடங்கின.

ஆங்கிலேயரைப் போர்ச்சுகேசியருக்கு எதிர் நிறுத்தலாம் என ஜகாங்கீர் நம்பினுன். அதனுல்தான் ஆங்கில வர்த்தகர்களுக்கு முகலாயப் பேரரசில் கட்டற்ற வர்த்தக உரிமைப் பத்திரம் வழங்கினுன். ஆனுல் ஆங்கிலேயர்கள் கடற் கரைப் பகுதிகளில் நிலை பெற்று விட்டதும் முகலாய அரசர்கள் அவர்களை அங்கிருந்து விரட்டப் பல முறை முயற்சி செய்தார்கள். உதாரணமாக, 1687ம் ஆண்டில் அவர்களிடமிருந்து வங்காளத்தை விடுவிப்பதற்கு ஔரங்கசீபு முயன்றுன். 1690ம் ஆண்டு பெரிய முகலாயப் படை மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தில் ஆங்கிலேயருக்குச் சொந்தமாகிவிட்ட இடங்களின்

மையமாக விளங்கிய பம்பாயை முற்றுகை இட்டது (இங்கிலாந்தின் மன்னன் இரண்டாம் சார்லசின் மனைவி காதரைன் பிரிகான்ஸா வுக்குச் சீதனமாகப் போர்ச்சுகலால் இங்கிலாந்துக்கு 1661ம் ஆண்டு அளிக்கப்பட்டிருந்தது இந்தத் தீவு). முகலாயர்களின் இந்தப் போர் நடவடிக்கைகள் தோல்வி அடைந்தன.

18ம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்தவை எல்லாவற்றிலும் செல்வம் மிக்கதாகத் திகழ்ந்தது ஆங்கிலக் கம்பெனி. சோழமண்டலக் கரையில் வட்டார மன்னன் ஒருவனிடம் ஆங்கிலேயர்கள் 1639—1640ல் ஓர் இடத்தை விலைக்கு வாங்கி, 17ம் நூற்றாண்டின் மத்தியில் அங்கே செயிண்டு ஜார்ஜ் கோட்டையும் துறைமுகமும் நிறுவினர்கள். விளைவாக, மக்கள் நிறைந்ததும் செல்வ வளம் மிக்கதுமான துறைமுக நகரம் அமைந்தது. மதராஸ் (சென்னை) என்று பெயர் பெற்ற இந்த நகரம் ஆங்கிலக் கம்பெனியின் மையமாக விளங்கியது.

வங்காளத்தில் ஹூக்ளி ஆற்றின் (கங்கை டெல்டாவின் மேற்குக் கிளை) கரை மீது 1690ம் ஆண்டு நிறுவப் பெற்ற கல்கத்தா நகரம் நாளடைவில் ஆங்கிலக் கம்பெனியின் செயல் மையம் ஆயிற்று. 17ம் நூற்றாண்டிலேயே அங்கு கிட்டங்கிகளைப் பாதுகாப்பதற்காகக் கோட்டை கட்டப்பட்டது. அக்காலத்து இங்கிலாந்தின் அரசன் மூன்றாம் வில்லியமைக் கௌரவிக்கும் பொருட்டு இது வில்லியம் கோட்டை என அழைக்கப்பட்டது. கம்பெனியின் வங்காள நிர்வாக அலுவலகமும் வில்லியம் கோட்டையில் அமைந்திருந்தது. கம்பெனி கல்கத்தாவுக்கு அருகில் இருந்த மூன்று கிராமங்களுக்கு ஜமீன்தாராகவும் மதிக்கப்பட்டது.

1717ம் ஆண்டு ஆங்கிலேயர்களுக்கு பருக் சியாரிடமிருந்து ஓர் உரிமைப் பத்திரம் கிடைத்தது. இதன்படி இன்னும் 38 கிராமங்கள் கம்பெனிக்கு அளிக்கப்பட்டிருந்தன. முகலாயர் நிதித் துறைக்கு ஆண்டுதோறும் மூவாயிரம் ரூபாய் செலுத்தும் பட்சத்தில் கம்பெனியின் சரக்குகளுக்குத் தீர்வையிலிருந்து விலக்கு அளிக்க உரிமைப் பத்திரம் வகை செய்தது. பண்டசாலைத் தலைவன் வழங்கும் தஸ்தக் (அனுமதிச் சீட்டு) ஆங்கிலச் சரக்குகளுக்குச் சுங்கச் சோதனையிலிருந்து விடுதலை தரும் என ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் காலம் முதல் வங்காளச் சரக்குகள் இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரின் ஏற்றுமதிகளில் நாளுக்கு நாள் அதிக இடம் பெறலாயின. கம்பெனியின் வருவாய் 1717ல் 278.6 ஆயிரம் பவுண்டுகளாக இருந்தது, 1729ல் 364 ஆயிரம் பவுண்டுகளாக அதிகரித்தது.

கல்கத்தாவிலும் டாக்காவிலும் காசிம்பஜாரிலும் வங்காளத்தின் வேறு சில இடங்களிலும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பண்டசாலைகளைச் சுற்றி நெசவுத் தொழிலர் குடியிருப்புக்கள் எழுந்தன.

கல்கத்தாவில் மட்டும் சுமார் எண்ணூயிரம் சேணியர்கள் கம்பெனிக் காக வேலை செய்தார்கள். இவர்கள் ''கறுப்பு நகரம்'' எனப்பட்ட எல்லைப் பகுதியில் வசித்தார்கள். கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய ஏஜெண்டுகள் நெசவுத் தொழிலர்களுக்கு மூலப் பொருள்கள் வழங்கி ஐரோப்பியச் சந்தைகளில் நன்றுக விலை போன துணி வகை களுக்கு ஆர்டர்கள் கொடுத்தார்கள். சில சமயங்களில் இம்மாதிரி ஏஜெண்டுகள் ஐரோப்பிய வர்த்தகக் கம்பெனியின் நலன்களுக்குப் பிரதிநிதிகளாகச் செயல்பட்டதோடு நில்லாமல் சொந்த முறை யிலும் சரக்குகள் வாங்கி விற்றார்கள். இவ்வாறு இவர்கள் பண்ட முதலாளிகளாக மாறி வந்தார்கள்.

நடப்பில் சுதந்திர அரசன் ஆகி இருந்த வங்காள நவாபுக்கு ஆங் கில வர்த்தகத்தின் வளர்ச்சி ஆழ்ந்த கலவரம் ஊட்டியது. நகரங் களும் அரண் காப்புள்ள பண்டசாலைகளும் நாளடைவில் ஆங்கிலேயர் களின் தளங்களாக மாறிவிடும் என்றும் அவற்றிலிருந்து அவர்களை வெளியேற்றுவது கடினம் ஆகிவிடும் என்றும் அவன் அஞ்சினான். கிழக் கிந்தியக் கம்பெனி நாட்டின் வர்த்தகம் அனைத்தையும் தனக்கே உரிமை ஆக்கிக் கொண்டு விட்டது என்றும் அதன் அலுவலர்களது தனி வியாபாரம் கம்பெனியின் வர்த்தகத்தையும் விட அதிகமாய் இருப்பதாகவும் அவன் குற்றம் சாட்டினான்.

பருத்தி, பட்டுத் துணி வகைகளும் கச்சாப் பட்டும் வெடியுப்பும் சர்க்கரையும் அபினியும் நீலமும் நெய்யும் எண்ணெயும் அரிசியும் வங்காளத்திலிருந்து ஆங்கிலேயர் ஏற்றுமதி செய்த முக்கியப் பொருள் கள். கம்பெனியிடம் பெரும் பணத் தொகைகள் இருந்தன. தனக்கு வேண்டிய பொருள்களை மொத்தமாக வாங்கிப் போட அது முயன்று வந்தது. உதாரணமாக, அரிசி வாங்கிப் போடும் செயல் பின்வரும் முறையில் நடந்தது: நெல் அறுவடைக்கு வெகு நாட்களுக்கு முன்பே, இடைத் தரகர்களாகப் பணி ஆற்றி வந்த பெரிய இந்திய நிதி முத லாளிகளுடைய சிபாரிசின் பேரில் கம்பெனி அலுவலர்கள் இந்திய வர்த்தகர்களுக்குப் பல்வேறு தொகைகளை ரொக்கமாகக் கொடுத் தார்கள். இந்த வர்த்தகர்கள் பண்ட முதலாளிகளுக்கும் அவர்கள் விவசாயிகளுக்கும் குறித்த தொகைகளை முன்பணமாக வழங்கினர் கள். இவ்வாறு அறுவடைக்கு முன்பே விளைச்சல் மலிவாக வாங்கிப் போடப்பட்டது.

ஆங்கிலப் பண்ட முதலாளி ஏஜெண்டுகள் கம்மியர்களுக்கும் இவ் வாறே முன்பணங்கள் கொடுத்துத் தளை பூட்டி வைத்திருந்தார்கள்.

வங்காள நவாபு அலிவர்திகான் (1740—1756) ஆங்கிலக் கிழக் கிந்தியக் கம்பெனிக்குச் சில சலுகைகள் அளித்து, ஓரிஸ்ஸாவில் புகுந்து விட்ட மராட்டியர்களுடன் போரின் போது நிதி உதவியை

மாற்றுகப் பெற்றுன். ஆயினும் ஆங்கில வர்த்தகர்களின் செல்வாக்கு அதிகரித்ததைக் கண்டு அவனுக்கு அச்சம் உண்டாயிற்று. பல்லாயிரக் கணக்கான நெசவாளர்கள் கொண்ட பண்டசாலைகளை அவர்கள் வைத் திருந்தார்கள். இந்து வட்டித் தொழிலர்கள், நிதி முதலாளிகள், வர்த்தகர்கள் ஆகியோருடன் அவர்கள் தொடர்பு கொண்டிருந்தார் கள். கீழை நாடுகளுடன் கடல் வாணிகத்தில் இந்திய வர்த்தகர்களைப் படிப்படியாக அகற்றி வந்தார்கள் அவர்கள்.

பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி மற்ற ஐரோப்பியக் கம்பெனி களுக்குப் பிறகே, 1664ம் ஆண்டில், கோல்பேரின் ஆதரவுடன் அமைக்கப்பட்டது. பிரெஞ்சுக் கம்பெனிக்கு மிகப் பெரிய உரிமைகள் அளிக்கப்பட்டிருந்தன. அதனுல் வென்று கைப்பற்றப்பட்ட நிலப் பரப்புக்கள் அதன் தனிப்பட்ட பயன்பாட்டுக்கு விடப்பட்டன. தன் உடைமைப் பிரதேசங்களில் வாழ்பவர்கள் எல்லோர்மீதும் வழக்குத் தொடுக்கவும் அவர்களைத் தண்டிக்கவும் அதற்கு முடிந்தது. போர்ப் பிரகடனம் செய்யவும் சமாதானம் செய்து கொள்ளவும் அது உரிமை பெற்றிருந்தது. கம்பெனியை எல்லாப் பகைவர்களிடமிருந்தும் காப்ப தாகவும் அதன் கப்பல்களைப் பாதுகாப்பதாகவும் பிரெஞ்சு அரசாங் கம் உறுதி தந்தது. ஆயினும் 17ம்-18ம் நூற்றுண்டுகளில் கம்பெனி நிலப்பிரபுத்துவ ஒழுங்குமுறையின் தன்மைகளைப் பெற்றிருந்தது: அரசன், பொதுக் கண்காணிப்பாளன், வர்த்தக மன்றம், குடியேற்ற நாடுகள் கடற்படை அமைச்சன் எல்லோரும் உத்தரவுகள் இட்டுக் கம்பெனியின் காரியங்களில் குறுக்கிட்டார்கள். கம்பெனி முறையாக இயங்குவதற்கு இது தடையாய் இருந்தது.

இயக்குநர் மன்றம் கம்பெனிக்குத் தலைமை தாங்கியது. இயக்கு நர்களில் ஒரு பகுதியினரை அரசாங்கமே நியமித்தது. அரசாங்கத் தால் நியமிக்கப்பட்ட பொதுக் கண்காணிப்பாளனும் அவனுடைய துணைவனை தனிக் கமிஸாரும் உண்மையில் காரியங்களை மேற்பார்த் தார்கள். அரசவைச் சலுகையாளர்களே முக்கியப் பங்குதாரர்களாக இருந்தார்கள். அவர்களுடைய கையாட்கள் கம்பெனியின் உடை மைப் பிரதேசங்களை நிர்வகித்தும் அதன் தரை, கடற் படைகளுக்குத் தலைமை தாங்கியும் வந்தார்கள். இயக்குநர்களுக்குள்ளேயும் சரி, நிர்வாகிகளுக்கும் சேமிப்பாளர்களுக்கும் இடையிலும் சரி, சண்டை சச்சரவுகள் ஓயாமல் நடந்த வண்ணமாய் இருந்தன. கம்பெனியின் காரியங்கள் ஒழுங்கினமாக நடந்தன. இந்தியாவிலும் சரி, பிரான்சி லும் சரி, அலுவலர்களுக்கிடையே இலஞ்சப் பழக்கம் விரிவாகப் பரவி இருந்தது.

இந்தியாவில் பிரெஞ்சு உடைமைப் பிரதேசங்களின் மையமாக விளங்கியது பாண்டிச்சேரி. சோழமண்டலக் கரையில் உள்ள இந்த

நகரம் 1683ம் ஆண்டு வாங்கப்பட்டது. முக்கியத்துவத்தில் இரண்டாவதான நகரம் 1673ம் ஆண்டு வாங்கப்பட்ட சந்திரநகர். வங்கத்தைச் சேர்ந்த இந்நகரிலேயே வங்காளத் துணிகள் பிரான்சிலிருந்து கப்பல்கள் வரும்வரை முதன்மையாகச் சேமித்து வைக்கப்பட்டன.

18ம் நூற்றாண்டில் பிரெஞ்சுக் கம்பெனி ஆங்கிலக் கம்பெனியைக் காட்டிலும் மிகக் குறைவாகவே வியாபாரம் செய்தது. அது பிரான்சுக்கு அனுப்பிய முக்கியப் பொருள் தென் இந்தியாவில் வாங்கிய பருத்தித் துணிகளும் சிறப்பாகப் பட்டுத் துணிகளும் ஆகும். பிரெஞ்சு அரசாங்கம் தன் கீழை நாட்டு உடைமைப் பிரதேசங்களையும் வர்த்தகத்தையும் முக்கியமாகக் கருதவில்லை. ''நான் பிரான்சின் அரசனாக இருந்தால் நமக்கு உள்ள காலனிகளை ஒரு குண்டூசிக்கு மாற்றாகக் கொடுத்திருப்பேன்'' என்று 15ம் லூயி அரசனின் ஒரு மந்திரி கூறினானாம்.

பிரெஞ்சுக் கம்பெனியிடம் வலிய கடற் படை இருக்கவில்லை. அதன் தரைப்படை கடுங்காவற் கைதிகளால் ஆனது. படை அதிகாரிப் பதவியைப் பணம் கொடுத்து வாங்க முடிந்தபடியால் போதிய போர்க் கலை அறிவு பெறாதவர்கள் அடிக்கடி அதிகாரிகளாக இருந்தார்கள்.

ஆங்கில, பிரெஞ்சுக் கம்பெனிகள் இந்திய நிலப்பரப்பில் ஐரோப்பியக் கம்பெனிகள் எல்லாவற்றிலும் அதிகச் செல்வாக்கு உள்ளவையாக இருந்தன. இவற்றைத் தவிர டச்சு, டேனிஷ் கம்பெனிகளும் இந்தியாவில் பண்டசாலைகளும் குடியிருப்புக்களும் கொண்டிருந்தன. டச்சுக் கம்பெனி 17ம் நூற்றாண்டில் சோழமண்டலக் கரையில் (நாகப்பட்டினத்தை மையமாகக் கொண்டு) அமைக்கப்பட்டது. வங்காளத்திலும் இதன் குடியிருப்புக்கள் இருந்தன (முக்கியப் பண்டசாலைகள் டாக்காவிலும் சின்ஸுராவிலும்). டேனிஷ் கம்பெனி 1676ம் ஆண்டு செராம்பூரை மையமாகக் கொண்டு நிறுவப்பட்டது.

ருஷ்ய-இந்திய உறவுகள்

17ம் நூற்றாண்டில், இந்தியாவின் கடல் வழி வாணிகம் ஐரோப்பியக் கம்பெனிகளின் கைகளுக்கு நிலையாக மாறிவிட்ட பின், இந்தியர்கள் தங்கள் வட திசை அண்டை நாட்டாருடன் தரை வழி வர்த்தகத் தொடர்புகளை மேலும் மேலும் சீர்படுத்துவதில் முனைந்தார்கள். இந்திய வியாபாரிகள் பாரசீகத்தின் வழியாகவும் புகாராவின் வழியாகவும் ஆஸ்திரகன் நகரை அடைந்து 17ம் நூற்றாண்டின் நாற்பதுக்களில் அங்கே நிலையாக வேரூன்றிவிட்டார்கள். 1649ம் ஆண்டு ஆஸ்திரகனில் தனிப்பட்ட இந்திய வட்டாரம் உருவாயிற்று.

இது சுற்றுச் சுவர் சூழ்ந்த இடம். இந்தியர்களின் கடைகளும் இருப் பிடவீடுகளும் இதில் இருந்தன. பின்னர் விஷ்ணு கோயிலும் கட்டப் பட்டது. ஆஸ்திரகன் இந்தியர்கள் மாஸ்கோவிலும் நீழ்கரத் நகரில் இருந்த (மக்காரேவ்ஸ்க்) சந்தையிலும் முதன்மையாகக் கீழை நாட்டு (பாரசீக, இந்திய) சரக்குகளை விற்பனை செய்தார்கள். ஆஸ்திரக னிலிருந்து பிற ருஷ்ய நகரங்களுக்கு அவர்கள் செல்வதைத் தடை செய்ய அவர்களுடைய ருஷ்யப் போட்டியாளர்கள் செய்த முயற்சி கள் பலிக்கவில்லை. ருஷ்யாவின் கீழை நாட்டு வர்த்தகத்தில் ஜூல்பி (இஸ்பஹான்) ஆர்மீனியர்களுக்கு அடுத்தபடி இரண்டாவது இடத்தை இந்தியர்கள் பெற்றிருந்தார்கள். ஆர்மீனியர்கள் பாரசீக அரசாங்கச் சரக்குகளை முதன்மையாக வியாபாரம் செய்தார்கள். இந்தியர்களோ பெரும்பாலும் தனிப்பட்ட, அதிலும் பெரிய, வர்த் தகர்களாகத் தொழில் நடத்தினர்கள் (அவர்களில் சிலர் ஆயிரக் கணக்கான ரூபிள்களுக்குச் சரக்குகள் விற்றார்கள்).

ஜார் அரசாங்கம் இந்தியாவுடன் நேரான வர்த்தக, தூதரகத் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ள 19ம் நூற்றாண்டில் பல முறை முயற்சி செய்தது. ஆனால் அனேகக் கிழக்கு அரசுகளின் நிலப்பரப்பு வழியாகச் செல்வதில் இருந்த இடர்ப்பாடுகள் காரணமாக அதன் முயற்சி பலிக்கவில்லை. ஷாஜகானின் அரசவைக்கு அனுப்பப்பட்ட இரு ருஷ்யத் தூதுக் குழுக்கள் வழியில் பாரசீக அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டன. இவையாவன 1646ல் அனுப்பப்பட்ட நிக்கீத்தா சீரயோழினது குழுவும் 1651ல் சென்ற ரொதியோன் புஷ்னிக்கோவ், இவான் திரிவேன்ஸ்கி ஆகியோரின் குழுவும். புகாரா வழியாக அனுப்பப்பட்ட புகாராவாசி முகமது யூசுப் காசிமவின் தூதுக் குழு முகலாயப் பேரரசின் எல்லைப் புறமான காபுல் நகரம் போய்ச் சேர்ந்து விட்டது. ஆனால் ஔரங்கசீபு அதை மேலே செல்ல விட வில்லை. சிமியோன் மாலிங்கியின் வர்த்தகத் தூதுக் குழு மட்டுந்தான் 1695ம் ஆண்டு டில்லி, ஆக்ரா, சூரத்து, பர்காம்பூர் ஆகியவற்றை அடைந்தது. ஔரங்கசீபிடமிருந்து துருக்கி மொழியில் எழுதப்பட்ட ஆணைப் பத்திரம் அதற்குக் கிடைத்தது. இதன்படி அது கட்டற்ற வியாபார உரிமை பெற்றது. ஆனால் சி. மாலிங்கி திரும்புகையில் பாரசீகத்தில் இறந்து போனார்.

ஆஸ்திரகன் நகரில் இருந்த இந்தியக் குடியேற்றம் 18ம் நூற்றாண் டில் தன் வர்த்தகத் தொழிலைத் தொடர்ந்தது. ஆனால் இந்தியா வுடன் தொடர்புகள் முறிந்துவிட்டன. இந்தியர்கள் பாரசீகத்துடனும் ஓரளவு காக்கேஷியாவுடனும் மட்டுமே வாணிகம் நடத்தலாயினர். கடன்பட்ட ருஷ்ய உயர் பதவியாளர்களிடம் கூடப் பணம் வசூலிக்க இந்தியர்களுக்கு உள்ள உரிமையை ஜார் அரசாங்கம் ஆதரித்தது.

எனவே அவர்கள் வட்டித் தொழிலில் வர வர அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கினர்கள். ஆஸ்திரகனில் வசித்த இந்தியர்கள் 18ம் நூற்றாண்டில் இந்தியக் கம்பெனியை ருஷ்யாவில் அமைத்தார்கள். இது மிகப் பெருத்த வர்த்தகத் தொழில் நடத்தியது. ருஷ்ய வியாபாரிகள் ஜார் அரசாங்கத்தினது ஆதரவின் பேரில் இந்தியாவோடு வர்த்தகம் செய்வதற்கான கம்பெனியை நிறுவத் தங்கள் தரப்பில் திட்டங்கள் தயாரித்தார்கள். தரை வழியே இந்தியா செல்வதில் இருந்த இடர்ப்பாடுகள் காரணமாக இந்தத் திட்டங்கள் செயல்படவில்லை.

ருஷ்யாவில் இந்திய மாதர்கள் இல்லாமையால் இந்தியர்கள் தாத்தார் பெண்களை மணந்து கொண்டார்கள். இவர்களுடைய குழந்தைகள் ஆஸ்திரகனில் அக்ரிழான்கள் எனப்பட்டார்கள் (இச்சொல் மகன் எனப் பொருள்படும் ஓக்ளி என்ற துருக்கி மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது போலும்). கொஞ்சங் கொஞ்சமாக இந்தியர்கள் வட்டார மக்களுடன் கலந்துவிட்டார்கள். 19ம் நூற்றாண்டின் நாற்பதுக்களில் ஜார் அரசாங்கம் இந்தியக் கம்பெனியின் கடைசிச் சொத்தை வாரிசு இன்மையால் அரசுக்குரியது ஆகிவிட்டதாகக் கருதிப் பறிமுதல் செய்து விட்டது.

இந்தியாவுக்காக ஆங்கிலோ-பிரெஞ்சுப் போராட்டம் (1746—1763)

பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிதான் இந்தியாவில் காலனிப் பேரரசை நிறுவ முதல்முயற்சி செய்தது. பாண்டிச்சேரி கவர்னரான டூப்ளே 1740 முதல் பிரெஞ்சு அதிகாரிகளின் தலைமையில் இந்தியர்களின் படைப் பிரிவுகளை அமைக்கத் தொடங்கினன். முதலாவது சிப்பாய்ப் படைப் பிரிவுகள் இவ்வாறு தோன்றின. இவை மிக நன்முகப் போரிட்டபடியால் 1746ம் ஆண்டு முதல் ஆங்கிலேயர்களும் சிப்பாய்ப் படைப் பிரிவுகளை அமைக்கலானார்கள்.

ஆஸ்திரியாவின் வாரிசுரிமைக்காக இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையே முறையான போர்ப் பிரகடனம் 1744ம் ஆண்டு செய்யப்பட்டது. இந்தப் போர் இந்தியாவுக்கும் பரவியது. லபோர்தனேயின் தலைமையில் பிரெஞ்சுக் கப்பற்படைப் பிரிவு பாண்டிச்சேரியை அடைந்தது.

டூப்ளே தன் சிப்பாய்களைக் கப்பல்களில் ஏற்றினான். லபோர்தனே இந்தப் படைகளைக் கரை இறக்கிச் சென்னையைத் தாக்கிக் கைப்பற்றினான். ஆனால் நடுத்தர வகுப்பினன் ஆன டூப்ளேக்கும் பிரபு வம்சத்தைச் சேர்ந்த லபோர்தனேக்கும் இடையே கைப்பற்றப்பட்ட சென்னையை என்ன செய்வது என்பது குறித்துக் கடும் சொற்போர் மூண்டது. தான் கட்டிய கப்பல்களின் துணையால் நகரைக் கைப்பற்றிய லபோர்தனே சென்னையைத் தன் சொந்தக் கொள்ளைப் பொருளாக மதித்து, பெருந்தொகை விலையாகச் செலுத்தினால் அதைத் திருப்பித் தந்து விடுவதாக ஆங்கிலேயர்களுக்கு உறுதி அளித்தான். டூப்ளேயோ, அந்தத் துறைமுகத்தை அடியோடு தகர்த்து, இந்தியாவின் இந்தப் பகுதியில் ஆங்கிலேயர்களின் செல்வாக்கை அதன் மூலம் அழித்து விட வேண்டும் என்று வற்புறுத்தினான்.

இந்த விவாதத்தின் விளைவாக லபோர்தனே தன் கப்பல்களை இந்தியாவிலிருந்து வெளியே இட்டுச் சென்று விட்டான். கப்பற் படை அற்ற டூப்ளேயால் ஆங்கிலேயர்களுடன் வெற்றிகரமாகப் போரிட முடியவில்லை.

1748ல் ஆஹ்-லா-சாப்பெல் சமாதானத்தின்படி ஐரோப்பாவில் ஆங்கிலேயர் சில விஷயங்களில் விட்டுக் கொடுத்தார்கள். மாற்றாக, பிரெஞ்சு அரசாங்கம் சென்னையின் அரண்களைச் சிதைக்காமல் அதை ஆங்கிலேயர்களுக்குத் திருப்பிக் கொடுத்தது. இதன் விளைவு அடுத்த ஆண்டிலேயே தாமதம் இன்றித் தெரிய வந்தது. ஐரோப்பாவில் ஏற்பட்டிருந்த சமாதானத்தைப் பொருட்படுத்தாமல் இந்தியாவில் ஆங்கில, பிரெஞ்சுக் கம்பெனிகளுக்கு இடையே போர் உக்கிரமாக மூண்டது.

1748ல் ஆசப்ஜா இறந்த பிறகு நாசர்ஜங், முசப்பர்ஜங் என்னும் அவனுடைய இரு புதல்வர்களுக்குள் வாரிசுரிமைப் போராட்டம் தொடங்கியது. டூப்ளே இதில் தலையிட்டான். முசப்பர்ஜங்குக்கு உதவும் பொருட்டு அவனுடைய உறவினன் சந்தா சாகிபு 500 பிரெஞ்சுக் காரர்களும் 2000 சிப்பாய்களும் கொண்ட படைப் பிரிவுடன் பாண்டிச்சேரியிலிருந்து அனுப்பப்பட்டான். முசப்பர்ஜங் அரியணை ஏற்றப்பட்டான், சந்தா சாகிபு மானியப் பிரதேசமான ஆர்க்காட்டுக்கு நவாபு ஆனான். தக்காணத் தீபகற்பத்தின் தென் கிழக்குப் பகுதி அனைத்தும் பிரெஞ்சுக்காரர்களுடைய கையாட்களின் வசம் ஆயிற்று.

இதனால் இந்தியாவில் தங்கள் நிலைகளுக்கு எத்தகைய ஆபத்து நேரக் கூடும் என்பதை ஆங்கிலேயர்கள் புரிந்து கொண்டார்கள். எனவே அவர்கள் போரில் தலையிட்டு, ஹைதராபாதில் நாசர்ஜங்குக்கும் ஆர்க்காட்டில் முந்திய நவாபின் மகன் முகமது அலிக்கும் உதவி அளித்தார்கள். முசப்பர்ஜங் கிளர்ச்சிக்கார நிலப்பிரபுக்களால்

கொல்லப்பட்டான். நாசர்ஜங்கும் கொலையாளியின் வாளுக்கு இரை யானான். எனவே ஹைதராபாதில் பிரெஞ்சுப் படைப் பிரிவுத் தலை வனாக இருந்த புஸ்ஸி என்பவன் நாசர்ஜங்கின் இளம் பிராயத்தின னான மகனைச் சிங்காதனத்தில் அமர்த்தி, நிதியுதவி உடன்படிக்கை எனப்பட்டதில் ஹைதராபாதைக் கையெழுத்து இடச் செய்தான். இதன்படி ஹைதராபாதின் நிஜாம் பிரெஞ்சுப் படைகளின் பரா மரிப்புக்காக (அல்லது, அந்தக் காலத்தில் கூறப்பட்டது போல ''அவற்றின் நிதியுதவிக்காக'') சோழமண்டலக் கரையில் வளம் மிக்க நான்கு வட்டங்களைக் கொடுக்க வேண்டியதாயிற்று. இந்த வட்டங்கள் வடக்கு சர்க்கார்கள் (மாநிலங்கள்) எனப் பெயர் பெற்றன. (பிற் காலத்தில் இவ்வகையான நிதியுதவி உடன்படிக்கைகளே இந்தியா வை அரசியல் துறையில் அடிப்படுத்துவதற்கான கருவிகளாக ஆங் கிலேயரால் பயன்படுத்தப்பட்டன. ஆங்கில நிர்வாகிகள் தங்களுக்கு அளிக்கப்பட்ட வட்டங்களில் வரிச் சுமையை அதிகமாக்கி அவற்றைச் சீரழித்து விட்டு இந்திய அரசர்களுக்குப் பணியாற்றி வந்த தங்கள் படைகளின் பராமரிப்புக்கு மேலும் மேலும் புதிய பிரதேசங்களைக் கோரினார்கள்.) இந்த உடன்படிக்கையின் காரணமாகத் தக்காணத் தில் பிரான்சின் வல்லமை மீண்டும் உறுதிப்பட்டது.

''தென் இந்தியாவுக்குத் திறவுகோல்'' என்று அழைக்கப்பட்ட வலிய திருச்சிராப்பள்ளிக் கோட்டை மட்டுந்தான் ஆங்கிலேயர் கை யாளான முகமது அலியின் கைகளில் இருந்தது. இந்தக் கோட்டையை அவனிடமிருந்து பறித்துக் கொள்ள டூப்ளே செய்த முயற்சிகள் யாவும் வீணாயின. பிரெஞ்சுக்காரர்களின் கையாளான சந்தா சாகிபு திருச்சிராப்பள்ளியை முற்றுகை இட்டபோது கொல்லப்பட்டான்.

படைகளைப் பராமரிப்பதற்குப் போதிய பணம் புஸ்ஸியிடம் இல்லை. இதற்கிடையே போர் நடவடிக்கைகளின் விளைவாக இந்தியச் சரக்குக்கள் பிரான்சு போய்ச் சேரவில்லை. இந்தியாவால் பிரான்சுக்கு அது வரை நஷ்டம் தான் ஏற்பட்டு வந்தது. பங்குதாரர்கள் போரை நிறுத்தும்படிக் கோரினார்கள். ஆங்கிலேயர்களுடன் போராட்டத்தை நிறுத்தியதும் இந்தியாவில் அவர்களுக்குப் பல விஷயங்களில் விட்டுக்கொடுத்ததும் ஐரோப்பாவில் இங்கிலாந்துடன் சமாதானம் செய்து கொள்ளத் தனக்கு உதவும் என்று பிரெஞ்சு அரசாங்கம் நம் பியது. எனவே பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி இயக்குநர்களில் ஒருவனை கோதயூ என்பவன் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டான். அவன் ஆங்கிலேயர்களின் நிபந்தனைகள் எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டு அவர்களோடு உடன்படிக்கையில் கையெழுத்திட்டான். இதன்படி கருநாடகம் முகமது அலிக்கு (1754—1795) அளிக்கப்பட் டது. பிரெஞ்சுக்காரர்கள் வடக்கு சர்க்கார்கள் மீது தங்கள் உரிமை

யைத் துறந்தார்கள். டூப்ளே பிரான்சுக்குத் திருப்பி அழைக்கப்பட்டான். இந்தியாவில் தன் எல்லாத் தோல்விகளுக்கும் டூப்ளேயும் லபோர்தனேயுமே பொறுப்பாளிகள் என்று பிற்காலத்தில் பிரெஞ்சு அரசாங்கம் குற்றம் சாட்டியது. லபோர்தனே சில ஆண்டுகள் சிறையில் இருந்தான். டூப்ளேயோ, பிரான்சில் வறுமையுற்று 1763ம் ஆண்டு இறந்தான்.

பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் ஏழாண்டுப் போர் 1756ம் ஆண்டில் தொடங்கியது. போராட்டம் ஐரோப்பாவில் மட்டும் நிகழவில்லை, இந்தியாவிற்கும் பரவிற்று. அயர்லாந்தைச் சேர்ந்தவனும் ஆங்கிலேயர்களின் கொடிய பகைவனும் ஆன லாலி-டலண்டால் என்பவன் படைகளுடன் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு 1758ம் ஆண்டு அங்கு போய்ச் சேர்ந்தான். ஆனால் அதற்கு முன் கழிந்த ஆண்டுகளில் ஆங்கிலேயர்கள் இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் வலிவாக அரண் செய்து கொண்டதோடு 1757ம் ஆண்டு வங்காளத்தையும் கைப்பற்றுவதில் வெற்றி அடைந்தார்கள். பின்னர் வங்காளம் சென்னைக்குப் பணத்தாலும் படை பலத்தாலும் உதவலாயிற்று. இவ்வாறு உருவாகி இருந்த நிலைமை பிரெஞ்சுக்காரர்களுக்குச் சாதகமாக இல்லை. ஆயினும் லாலி கூடலூர் அருகே ஆங்கிலேயர் வசம் இருந்த செயிண்டு டேவிட் கோட்டையைப் பிடித்துக் கொண்டு ஆங்கில ஆட்சிப் பிரதேசங்களின் மையமான சென்னையை முற்றுகை இட்டான். இந்தக் காரியத்தில் வலிமை அனைத்தையும் ஈடுபடுத்த முடிவு செய்து ஹைதராபாதிலிருந்து புஸ்ஸியை அழைத்தான். ஆங்கிலேயர்கள் அக்கணமே ஹைதராபாதைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

லாலி கைக்கூலிக்கு வசப்படுபவன் அல்ல. ஆனால் முன்கோபி, பொறுமை அற்றவன். பிரெஞ்சுக் கப்பற் படைத் தளகர்த்தனுடன் அவன் சச்சரவிட்டான். தளகர்த்தன் தன் கப்பல்களை இந்தியாவிலிருந்து ஓட்டிப் போய்விட்டான். பின்பு லாலி பாண்டிச்சேரி ஆலோசனை மன்றத்தார்மீது வசைமாரி பொழிந்தான். சென்னையை முற்றுகை இட்டிருந்த பிரெஞ்சுப் படைகளுக்கு உணவுப் பண்டங்களும் தளவாடங்களும் அனுப்புவதை அவர்கள் நிறுத்தி விட்டார்கள். லாலி இந்தியர்களை இகழ்ந்தான். அவர்களுடைய சாதி அந்தஸ்தை மதியாமல் கனத்த பீரங்கிகளை இழுத்துச் செல்லும்படி பாண்டிச்சேரி இந்திய மக்களைக் கட்டாயப்படுத்தினான்.

1759ம் ஆண்டு ஆங்கிலக் கப்பற் படைப் பிரிவு சென்னையை அடைந்ததால் லாலி பின்வாங்க வேண்டியதாயிற்று. வந்தவாசி அருகே நடந்த இரண்டு சண்டைகளில் ஆங்கிலேயர்கள் லாலியின் சேனையை முறியடித்து புஸ்ஸியைச் சிறைப்படுத்தினர்கள். இதன் பின் அவர்கள் பாண்டிச்சேரி நகரை முற்றுகை இட்டார்கள்.

பயங்கரமான பஞ்சத்தின் காரணமாக அந்நகரம் ஓர் ஆண்டில் தோல்வியை ஒப்புக்கொள்ள நேர்ந்தது. வெற்றியாளர்கள் பாண்டிச் சேரியின் அரண்களை இடித்துத் தகர்த்துவிட்டார்கள். லாலி பிரான்ஸ் திரும்பினான். பிரெஞ்சு அரசாங்கம் இந்தியாவில் தனது தோல்விகளுக்கு அவன்மீது பழி சாட்ட முடிவு செய்து அவனுக்கு மரண தண்டனை விதித்தது.

பாரிஸ் சமாதான உடன்படிக்கையின்படி பிரான்சுக்குச் சொந்தமான ஐந்து நகரங்கள் மட்டுமே அதற்குத் திருப்பிக் கொடுக்கப் பட்டன. அது இந்தியாவுடன் தனது வியாபாரத்தைச் சீர்படுத்தலுற்றது. ஆயினும் இந்தியாவின் தென் பகுதியில் விசாலமான நிலப்பரப்புக்கள் மீள வகை இன்றி இழக்கப்பட்டுவிட்டன. சிதறிய பிரெஞ்சுப் படைப் பிரிவுகள் இந்திய அரசர்களுக்குப் பணி ஆற்றத் தொடங்கி 18ம் நூற்றாண்டின் இறுதிவரை ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வந்தன. இவற்றுக்கு ஒரு சில வெற்றிகள் கிடைத்தாலும் இந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தைக் குலைக்க இவற்றால் முடியவில்லை.

இங்கிலாந்து பிரான்சை வெற்றி கொண்டது தனது பொருளாதார மேம்பாட்டின் மூலமே. இந்தியாவில் இருந்த பிரெஞ்சுக் கம்பெனிப் பிரதிநிதிகள் பலர் செயலூக்கமும் திறமையும் வாய்ந்திருந்தார்கள். ஆயினும் பிரான்ஸ் தோல்வி அடைந்ததற்குக் காரணம், இங்கிலாந்திடம் இருந்தது போன்ற கப்பற் படையோ, தரைப் படையோ, பண வசதியோ, காலனிகளில் அரசாங்கத்தின் அக்கறையோ அதனிடம் இல்லாததே ஆகும்.

வங்காளம் ஆங்கிலேயர் வசமாதல்

18ம் நூற்றாண்டின் தொடக்கத் தறுவாயில் வங்காளம் முகலாயப் பேரரசின் பொருளாதார வளர்ச்சி மிக்க பிரதேசங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. முகலாய அரியணையைச் சுற்றி நடந்த நிலப்பிரபுக்களின் அரசியல் போராட்டத்தில் இந்தப் பிரதேசம் நேராகப் பங்குகொள்ளவில்லை. வங்காளத்தின் முதன்மையான செல்வமாக இருந்தது துணி நெசவுதான். பண்ட-பண உறவுகள் பெரிதும் வளர்ச்சி பெற்றிருந்தன. விவசாயிகள் பல்வேறு நெல் வகைகளும் பருத்தியும் கரும்பும் பயிரிட்டு வந்தார்கள். ஜமீன்தார்கள் என அழைக்கப்பட்ட நில உடைமையாளர்கள் வரிகளை வசூலித்து அரசாங்கப் பொக்கிஷத்தில் சேர்ப்பதற்குச் சம்பளம் பெற்று வந்தார்கள். இதற்காக அவர்கள் பெருந்தொகையை ரொக்கமாகப் பிணை கொடுக்க வேண்டி இருந்தது. இந்த முறை வரியைக் குத்தகைக்கு வாங்கும் வழக்கமாக இழிந்தது. தாங்

கள் குத்தகைக்கு வாங்கிய பிரதேசங்களில் ஜமீன்தார்கள் எவ்விதக் கண்காணிப்பும் இன்றி விருப்பம் போல மணியம் செய்யத் தலைப்பட்டார்கள். சொந்தப் படைப் பிரிவுகளின் உதவியால் வரிகள் தண்டினர்கள். மக்கள் மீது வழக்குகள் தொடுத்துத் தண்டனை வழங்கினர்கள். அரசாங்க அலுவலர்களைக் கைக்கூலி கொடுத்து வசப்படுத்திக் கொண்டார்கள். அதே சமயம் வங்காளத்தின் முதல் நவாபான முர்ஷித் குலிகானுக்கு இந்தக் குத்தகைக்கார ஜமீன்தார்கள் இன்னும் கடுமையாக அடிப்பட்டிருந்தார்கள். அவர்கள் பணம் செலுத்துவதில் பாக்கி வைத்தால், முர்ஷிதாபாதில் இதற்காகவே தோண்டப்பட்டிருந்த தனிக் கிடங்கில் அவர்களை வைத்திருக்கக் கூட நவாபால் முடிந்தது. இந்தக் கிடங்கு ''எல்லா வகையான ஆபாசங்களும் நிறைந்தது'' என்று வங்காள நிகழ்ச்சிப் பதிவாளன் ஒருவன் எழுதுகிறான்.

முர்ஷித் குலிகானின் வழி வந்தவர்களுடைய ஆட்சியின் போது வங்காள ஜமீன்தார்களின் சுதந்திர நிலைமை வலுவடைந்தது. அவர்கள் அரசாங்கத்திடமிருந்து வரிவசூல் உரிமையைக் குத்தகைக்கு வாங்கத் தொடங்கினர்கள். நவாபின் நிதித் துறைக்கு அவர்கள் செலுத்திய பணத் தொகைகள் நில உடைமைகளிலிருந்து அவர்கள் பெற்ற வருவாய்களுக்குச் சற்றும் பொருந்தவில்லை. இவ்வாறு வாடகை-வரி ஜமீன்தார்களின் உடைமைகளில் வெறும் வாடகையாக நாளடைவில் மாறலுற்றது. ஜமீன்தாரி தனி நிலப்பிரபுவின் உடைமை ஆகி, வாரிசு முறையில் கிடைக்கத் தொடங்கியது.

முகலாயப் பேரரசிடமிருந்து தனது சுதந்திரத்தை வலுவாக்கிக் கொள்ளவும் அரண்மனை ஆடம்பரங்களைத் தொடர்ந்து கடைப்பிடிக்கவும் முர்ஷித் குலிகானுக்குப் பெரும் பணத்தொகைகள் உடனுக்குடன் தேவைப்பட்டு வந்தன. தன் பொருளாளனும் ஜோத்பூரிலிருந்து வந்து வங்காளத்தில் குடியேறி இருந்தவனுமான பணக்கார மார்வாடியிடம் அவன் அடிக்கடி பணம் கடன் வாங்கி வந்தான். இதற்குக் கைம்மாறாக நாணயம் அடிக்கும் உரிமை உட்படப் பல சலுகைகளை முர்ஷித் குலிகான் அவனுக்கு வழங்கியதோடு ஜகத் சேட் (உலகப் பண முதலாளி) என்னும் பட்டத்தையும் அளித்தான். ஜகத் சேட் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் தொடர்பு கொண்டிருந்தான், சில வேளைகளில் அதற்குக் கடன்களும் கொடுத்தான் ஆயினும் வங்காளத்தில் அதன் செல்வாக்கு வளர்ந்ததைக் கண்டு அஞ்சினான்.

வங்காளத்தின் வர்த்தகர்-பண முதலாளிகள் வட்டாரத்தினரை இடைத் தரகர்களாகப் பயன்படுத்தித் தனக்கு வேண்டி இருந்த வெடியுப்பு, பட்டு, சர்க்கரை, அபினி, மசாலைப் பொருள்கள் ஆகியவற்றையும் சிறப்பாகப் பருத்தி, பட்டுத் துணிகளையும் கம்பெனி விலைக்கு வாங்கி வந்தது.

18ம் நூற்றாண்டின் முப்பதுக்களுக்கும் ஐம்பதுக்களுக்கும் இடைப் பட்ட காலத்தில் இந்தியாவிலிருந்து சரக்குகள் விரிவாக ஏற்றுமதி செய்யப்பட்டதால் நெசவுத் தொழில் உற்பத்தி பெரிதும் வளர்ச்சி அடைந்தது. விவசாயிகளின் முழு முழுக் குடியிருப்புக்களும் சில நகரங்களின் மக்களில் கணிசமான தொகையினரும் நெசவை முக் கியத் தொழிலாக வைத்துக் கொண்டார்கள். டாக்கா நகரவாசிகள் இவர்களில் முதல் இடம் பெற்றிருந்தார்கள். கம்பெனி அலுவலர்கள் வங்காளத்தின் உள் வர்த்தகத்திலும் பங்கு கொண்டார்கள். சில வேளைகளில் ஒரு பண்ட சாலையிலிருந்து மற்றதற்குச் சரக்கு ஏற்றிச் செல்லும் பாவனையில் தங்களுக்குச் சொந்தமான சரக்குக்களைத் தீர்வை இன்றி எடுத்துச் சென்றார்கள்.

1756ம் ஆண்டில் வங்காளத்தில் அரசுரிமைப் போராட்டம் மூண்டது. இளைஞன் சிராஜுத்தௌலா நவாபு ஆனன். அரசுரிமைப் போட்டியில் தோற்ற ஒரு பிரபு ஆங்கிலேயரின் பாதுகாப்பில் கல் கத்தாவுக்குத் தப்பி ஓடினன். அவனை ஒப்புக் கொடுப்பதற்கு ஆங் கிலேயர்கள் மறுக்கவே சிராஜுத்தௌலா தன் படைகளை நடத்திச் சென்று காசிம் பஜாரையும் பின்னர் கல்கத்தாவையும் தாக்கிக் கைப் பற்றினன்.

காப்டன் கிளைவ், அட்மிரல் வாட்சன் இருவரதும் தலைமையில் ஒரு படைப் பிரிவு சென்னையிலிருந்து வங்காளத்துக்கு உடனே கடல் வழியாக அனுப்பப்பட்டது. இவ்விரு ஆங்கில அதிகாரிகளும் தென் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களோடு நிகழ்ந்த சண்டையில் தங்கள் போர்த் திறமையைக் காட்டி இருந்தார்கள். இந்திய நிதி முதலாளி களான ஜகத் சேட், அமிசந்த் இருவருடனும் அவர்கள் வாயிலாக நவா பின் படைத்தலைவன் மீர் ஜாபருடனும் கிளைவ் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டான். ஆங்கிலேயர் வெற்றி பெற்றால் மீர் ஜாபரை வங்காள நவாபு ஆக்குவதாகக் கிளைவ் வாக்களித்தான். பிளாசி என்னும் இடத் தில் 1757ம் ஆண்டு ஜூன் மாதம் 23ந் தேதி நடந்த சண்டையில் மீர் ஜாபரின் துரோகம் காரணமாகக் கிளைவின் மூவாயிரம் பெயர் கொண்ட படை (இவர்களில் ஐரோப்பியர் 800 பெயர் மட்டுமே)18 ஆயிரம் குதிரைப் படையினரும் 50 ஆயிரம் காலாட்களும் இருந்த நவாபின் சேனை மீது வெற்றி பெற முடிந்தது. இதுவே இந்தியாவில் தங்கள் ஆதிக்கம் நிலைபெற்ற நாள் என்று ஆங்கிலேயர்கள் கருதுகிறார்கள்.

வெற்றி பெற்றதுமே ஆங்கிலேயர்கள் புதிய நவாபு மீர் ஜாப ரிடம் மிகப் பெருந்தொகை (சுமார் 180 லட்சம் பவுண்டு) செலுத்தும் படி கோரினார்கள். கல்கத்தாவாசிகளின் அசையும் சொத்துக்கள் அனைத்தினதும் மதிப்பைக் காட்டிலும் இந்தத் தொகை அதிகம் போலும். வட்டார மக்களின் எதிர்ப்பு, டில்லி பாதுஷா அவத் நவா

புடன் சேர்ந்து (1759லும் 1760லும்) பீகாரைக் கைப்பற்றுவதற்கு இரண்டு தடவைகள் முயன்றது ஆகியவற்றைச் சாக்கிட்டு ஆங்கிலேயர்கள் வங்காள நவாபுகளை மிரட்டி மேற்கொண்டு பணம் பறித்தார்கள். 1760ம் ஆண்டு வங்காள கவர்னராக நியமிக்கப் பெற்ற ஹென்ரி வான்சிட்டார்ட் என்பவன் மீர் ஜாபரை அகற்றிவிட்டு அவனுடைய மருமகன் மீர் காசிமை வங்காள நவாபு ஆக்கினான். மாற்றுக மீர் காசிம் கவர்னருக்கும் அவனது கவுன்சிலின் உறுப்பினர்களுக்கும் இரண்டு லட்சம் பவுண்டு பணம் கொடுத்ததோடு வங்காளத்தின் வளம் மிக்க மூன்று பிரதேசங்களான பர்துவான், மிதுனபுரி, சிட்டகாங் ஆகியவற்றைக் கம்பெனிக்கு அளித்தான். இதனால் மீர் காசிம் தனது வருவாயில் பாதியை இழந்ததுடன் கம்பெனிக்கும் அதன் சில அலுவலர்களுக்கும் மேற்கொண்டு கடன்பட்டான்.

இந்திய நிலப்பிரபுக்கள் ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்களால் இவ்வாறு நேர்முகமாகக் கொள்ளையடிக்கப்பட்டதால் பெரிதும் முக்கியமான விளைவுகள் ஏற்பட்டன. இந்தியாவின் செல்வங்கள் இங்கிலாந்துக்குப் பேரளவில் அனுப்பப்படுவது தொடங்கியது. இந்தியப் பொருளியலாரின் கணக்குப்படி, 1757 முதல் 1780 வரை மாற்றுக ஒன்றும் கொடுக்காமல் சரக்குகளின் வடிவிலும் நாணயங்களாகவும் 380 லட்சம் பவுண்டுகளை இங்கிலாந்து இந்தியாவிலிருந்து அள்ளிச் சென்றது. இந்தியாவின் ஆளும் நிலப்பிரபுத்துவ வர்க்கம் ஆட்சியதிகாரத்தையும் வருவாய்களையும் இழந்ததன் விளைவாகப் பொருளாதார வாழ்வின் அமைப்பில் ஓரளவு மாறுதல் நிகழ்ந்தது. பதினெட்டாம் நூற்றாண்டினது அறுபதுக்களின் நடுவில், நவாபின் அரசவையும் நிலப்பிரபுக்களின் ஆடம்பரமான பரிவாரங்களும் தேவையற்றுப் போன ஜாகீர்தார்களின் குதிரைப் படைகளும் நாளடைவில் ஒழிக்கப்பட்டு விட்ட பின், இவற்றின் தேவைகளை நிறைவேற்ற ஏற்பட்டிருந்த கைத்தொழில் துறைகள் வீழ்ச்சி அடைந்தன. எல்லாவற்றிலும் விலை மிக்க சிறந்த வகைத் துணிகளின் உற்பத்தி மையமாக விளங்கிய டாக்காவின் வீழ்ச்சி அந்தக் காலம் முதல் தொடங்கியது. கைத்தொழில்களின் வீழ்ச்சி காரணமாகக் கம்மியர்களிடையே வறுமை அதிகரித்தது. கம்மியர்கள் நாட்டுப்புறம் சென்று, தங்களையும் குடும்பங்களையும் பராமரிக்கும் பொருட்டு வேறு வழியின்றி நிலத்தை எவ்விதமாகவேனும் குத்தகைக்கு எடுக்க வேண்டியதாயிற்று. மலிவான வகைத் துணிகள் நெய்து வந்த நெசவாளர்களின் நிலைமையும் மோசமாயிற்று. வங்காளத்தை வென்று கைப்பற்றுவதற்குச் சிறிது காலத்துக்கு முன் கம்பெனி இந்திய வர்த்தகர்களின் இடைத் தரகை அகற்றிவிட்டுத் தன் சொந்த ஏஜெண்டுகள் வாயிலாக நெசவாளர்களுடன் தொடர்பு கொண்டது. இந்த ஏஜெண்டுகள் குமாஸ்தாக்கள்

என்று அழைக்கப்பட்டார்கள். வங்காளம் வெல்லப்பட்ட பிறகு முகமதியர்கள் கம்மியர்கள் மீது மிகப் பெருத்த ஆதிக்கம் வகிக்கலானார்கள். ஆங்கிலேயர் அல்லாத வியாபாரிகள் கொடுத்ததற்கு 20—30 சதவிகிதம் குறைவான விலைக்குத் துணிகளை விற்கும்படி இவர்கள் கம்மியர்களைக் கட்டாயப்படுத்தினார்கள். முன்பணம் வாங்கிக் கொண்டு கம்பெனிக்கே தங்கள் துணிகளைத் தருமாறு பலவந்தமாக அவர்களை வற்புறுத்தினார்கள்.

பிளாசி வெற்றிக்குப் பிறகு கம்பெனி அலுவலர்கள் சொந்தத்தில் செல்வம் திரட்டவும் இந்திய வியாபாரிகள், தனிப்பட்ட ஐரோப்பிய வர்த்தகர்கள் முதலிய தங்கள் போட்டிக்காரர்கள் எல்லோரையும் அகற்றவும் வெற்றியாளர்கள் என்ற தங்கள் நிலையை முழு அளவில் பயன்படுத்திக் கொண்டார்கள். மிக அளவறுத்த சம்பளம் பெற்று வந்த தன் ஊழியர்களைச் சொந்த வர்த்தகம் செய்யக் கம்பெனி எப்போதும் அனுமதித்து வந்தது. சுங்கத் தீர்வை செலுத்தாமல் வெளி நாட்டு வர்த்தகம் நடத்தும் உரிமையைக் கம்பெனிக்கு வழங்கி 1717ம் ஆண்டில் முகலாயப் பேரரசன் கொடுத்திருந்த ஆணைப் பத்திரத்தைப் பயன்படுத்திக் கம்பெனி ஊழியர்கள் நாட்டுக்கு உள்ளேயும் சுங்கத் தீர்வை செலுத்தாமல் வியாபாரம் நடத்தத் தலைப்பட்டார்கள். இது மட்டும் இன்றித் கிழக்கிந்தியக் கம்பெனிச் சரக்குக்களின் தீர்வைகளிலிருந்து விலக்கு அளிக்கும் தஸ்தக் எனப்பட்ட சான்றிதழ்களையும் தங்கள் ஏஜெண்டுகளுக்கு அவர்கள் விற்கலாயினர். ஏஜெண்டுகள் இந்தச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி, ஆங்கிலேயர்களுடன் தொடர்பு கொள்ளாத வியாபாரிகளை வர்த்தகத் துறையிலிருந்து வெளியேற்றினார்கள். ஒரு சமகாலத்தவரின் சொற்படி, கிழக்கிந்தியக் கம்பெனி ''வர்த்தகன் வடிவத்தில் அரசாங்கமாக'' வங்காளத்தில் செயல்பட்டு வந்தது.

துடியான இயல்புள்ள மீர் காசிம் ஆங்கிலேயர்களிடம் நவாபுப் பதவியை உண்மையில் விலைக்கு வாங்கி இருந்தான். ஆங்கிலக் கம்பெனியின் வெறும் கைப்பாவையாக இல்லாமல் வங்காளத்தின் மெய்யான ஆட்சியாளன் ஆகலாம் என அவன் நம்பினான். வரிகளை உயர்த்தியும் இடைவிடாமல் தண்டியும் இரண்டு ஆண்டுக் காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு வாக்களித்த தொகை முழுவதையும் செலுத்த அவனால் முடிந்தது. இதன் பின்னர், நாட்டைச் சீரழித்து வந்த தஸ்தக் விற்பனையை நிறுத்தும்படிக் கம்பெனி ஊழியர்களிடம் அவன் கோரினான். அவர்கள் மறுக்கவே, மீர் காசிம் இந்திய வர்த்தகர்களுக்கும் எல்லாத் தீர்வைகளிலுமிருந்து விலக்கு அளித்து அவர்களை ஆங்கிலேயர்களுக்குச் சமமான நிலையில் வைத்தான். இதற்குப் பதிலாகக் கம்பெனி ஊழியர்கள் ஆயுதங்களைத் திரட்டிக் கொண்டு 1763ம் ஆண்டு பாட்னா நகரைக் கைப்பற்றினார்கள். இதை அறிந்ததும் மீர் காசிம் ஆங்கிலேயர்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தான்.

வங்காளத்தில் ஆங்கிலேயர்களின் அடாத செயல்களால் அதிருப்தி கொண்டவர்கள் யாவரும் மீர் காசிமுடனும் அவனுடைய படைகளுடனும் (பல்வேறு நாடுகளைச் சேர்ந்த துர்ச்சாகசப் போக்குள்ள ஐரோப்பியர்களின் படைப் பிரிவு இவற்றின் மையக் கருவாக இருந்தது) சேர்ந்து கொண்டார்கள். விவசாயிகள் அவனுடன் இணைந்தார்கள், கம்மியர்கள் அவன் தரப்புக்கு ஓடி வந்தார்கள். இந்து வர்த்தகர்களும் கல்கத்தாவில் இருந்த பெரிய வியாபாரிகளான ஆர்மீனியர்களும் அவனுக்குப் பண உதவி அளித்தார்கள். 1763ல் மீர் காசிம் பாட்னு நகரை ஆங்கிலேயரிடமிருந்து பிடுங்கிக் கொண்டான். ஆனால் பல வகையானவர்கள் அடங்கியதும் பெரும்பாலும் பயிற்சி பெறுததுமான அவனுடைய சைனியம் விரைவில் தோல்வி அடைந்தது.

மீர் காசிம் அயோத்திக்குப் பின்வாங்கிச் சென்று அயோத்தி நவாபுடனும் பானிப்பட்டுப் போருக்குப் பின் அங்கே சரண் புகுந்திருந்த முகலாய அரசனின் மகன் அலி கௌஹருடனும் ஒப்பந்தம் செய்து கொண்டான். இந்த அலி கௌஹர்தான் பின்னர் இரண்டாம் ஷா ஆலம் என்ற பெயருடன் (1760—1806) டில்லிச் சிங்காதனம் ஏறினான். ஒன்றிணைந்த சைனியம் பாட்னு நகரை அணுகியது. ஆங்கிலேயர்களின் நிலைமை நெருக்கடி மிக்கது ஆயிற்று. எனினும் பக்சார் என்னும் இடத்தில் 1764ம் ஆண்டு நடந்த நிர்ணயகரமான போரில் ஆங்கிலேயர்கள் தங்கள் பகைவனை அறவே முறியடித்தார்கள். ஷா ஆலம் சரண் அடைந்தான். மீர் காசிம் டில்லிக்குத் தப்பி ஓடினான்.

பக்சார் சண்டைக்குப் பிறகு கங்கை ஆற்றின் கீழ்ப் பெருக்கை ஒட்டிய பிரதேசம் முழுவதிலும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை எதிர்க்க ஒருவரும் துணியவில்லை. ஆங்கிலேயருக்குப் பணிந்தவனை மீர் ஜாபர் மீண்டும் வங்காள நவாபு ஆனான். அவன் இறந்த பிறகு அவனது குடும்பத்தின் முதிராப் பிராயத்தினரான உறுப்பினர்கள் ஒருவர் பின் ஒருவராக நவாபு ஆக்கப்பட்டார்கள். இவர்கள் பெருத்த உதவிச் சம்பளம் பெற்று, நிர்வாகத்தில் தலையிடாமல் இருந்து வந்தார்கள்.

மீர் காசிமின் கிளர்ச்சி அடக்கப்பட்ட பின் வங்காளக் கவர்னராக நியமனம் பெற்ற கிளைவ் தன் கைதியாக இருந்த இரண்டாம் ஷா ஆலத்தை வற்புறுத்தி ஓர் ஆணைப் பத்திரத்தில் கையெழுத்து இடச் செய்தான். இதன்படிக் கம்பெனிக்கு ''திவானி'' (அதாவது, நிதி நிர்வாக) உரிமைகள் வழங்கப்பட்டன. விளைவாக ''இரட்டை ஆட்சி'' முறை உருவாயிற்று. நீதி மன்றம், ஒழுங்கை நிலைநிறுத்தல் முதலிய பொதுத்துறை விவகாரங்களை வங்காளத்தின் வட்டார அதிகாரிகள் கவனித்துக் கொண்டார்கள். நில வரி வசூலிப்பைக் கம்பெனி தன் கைகளில் எடுத்துக் கொண்டது. தொடக்கத்தில் வசூலிப்பாளர்களின்

குழுவும் வரி விதிப்பு முறையும் முந்தியவையாகவே இருந்து வந்தன.

கிளைவ் 1767ம் ஆண்டு இந்தியாவிலிருந்து போய்விட்டான். ஆனால் அவனுல் சூறையாடப்பட்ட செல்வங்கள் பற்றிய பிரச்சினை இங்கிலாந்தின் நாடாளுமன்ற மக்கள் அவையில் 1773ம் ஆண்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ''லார்டு ராபர்ட் கிளைவ் தம் நாட்டுக்குப் பாராட்டுக்குரிய பெருந் தொண்டு ஆற்றினர்'' என்ற காரணத்தால் அவனுடைய நடத்தை நியாயப்படுத்தப்பட்டது.

''இரட்டை ஆட்சி'' முறை அமலுக்கு வந்த காலம் முதல் வர்த்தகப் பிரச்சினைகள் கம்பெனிக்கும் அதன் ஊழியர்களுக்கும் இரண்டாந்தர முக்கியத்துவம் உள்ளவை ஆகிவிட்டன. வங்காள விவசாயிகளிடம் வரி வசூலிப்பதே வருவாயின் தலையூற்றுக விளங்கலாயிற்று. இவ்வாறு கிடைத்த பணம் இந்தியச் சரக்குகளை விலைக்கு வாங்கப் பயன்படுத்தப்பட்டது. ஆங்கிலேயர்கள் இதை ''இன்வெஸ்ட்மெண்டு'' (முதலீடு) என்று பாசாங்குடன் குறிப்பிட்டு வந்தார்கள். உண்மையில் ஒரு செப்புக்காசு கூட முதலீடு செய்யாமல் இந்த ''இன்வெஸ்ட்மெண்டின்'' கணக்கில் கம்பெனி இந்தியச் சரக்குகளை இங்கிலாந்துக்கு வாரிச் சென்றது. வங்காளத்தைச் சூறையாடியதால் கிடைத்த பணம் இந்தியாவின் பிற பகுதிகளில் ஆக்கிரமிப்புப் போர்கள் நடத்துவதற்குச் செலவிடப்பட்டது. இவ்வாறு இந்திய மக்கள் தங்கள் நாட்டை அடிமைப்படுத்துவதற்கு வேண்டிய பணத்தை தாங்களே கொடுக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

விவசாயிகள் சுரண்டப்படுவது கிராமச் சமுதாய அமைப்பினுலும் மரபுகளினுலும் முன்பு வரையறுக்கப்பட்டிருந்தது. இப்போதோ, அது உண்மையிலேயே பயங்கரம் ஆகிவிட்டது. வரி வசூலிப்பவர்கள் விவசாயியிடமிருந்து தங்களால் முடிந்தவற்றை எல்லாம் பறித்துக் கொண்டார்கள். அவன் சாப்பிடுவதற்குத் தேவையான தானியத்தைக் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை. 1770ம் ஆண்டு விளைச்சல் பொய்த்துப் போயிற்று. இது மக்கள் அனைவரையும் பாதித்த பயங்கர விபத்தாக மாறியது. பத்துலட்சக் கணக்கில் மக்கள் பட்டினியால் மடிந்தார்கள். உணவுப் பண்டங்களின் விலைகள் எட்ட முடியாத அளவு உயர்ந்து விட்டன. ஆயினும் லண்டன் சீமான்கள் வரிகளைக் குறைக்கும் பேச்சைக் காதில் போட்டுக்கொள்ளக் கூட இசையவில்லை. ஆனால் 1771ம் ஆண்டு கம்பெனி நாடாளுமன்றத்தினிடம் கடனுக்கு மனுச் செய்து கொள்ள வேண்டியதாயிற்று. வங்காளத்தின் பொருளாதார நிலை விக்குகள், டோரிகள் என்னும் இரு கட்சிகளின் போராட்டத்திற்குரிய விஷயம் ஆயிற்று. 1773ம் ஆண்டு இரு கட்சிகளுக்கும் ஏற்பட்ட சமரசத்தின் அடிப்படையில் இந்தியாவின் நிர்

வாகம் பற்றிய சட்டம் நாடாளுமன்றத்தில் ஏற்கப்பட்டது. இதன் படி, கம்பெனி வெறும் வர்த்தம் நிறுவனம் மட்டும் அல்ல, இந்திய நிலப்பரப்பின் ஆட்சியாளி என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன் அரசியல் நடவடிக்கைகளை மேற்பார்க்கும் பொறுப்பு ஆங்கில அரசாங்கத்தின் கைகளுக்கு மாறியது. நாடாளுமன்றம் கவர்னர் ஜெனரலையும் (இந்தப் பதவி முதன் முதலாக ஏற்படுத்தப்பட்டது) அவனுடைய நான்கு ஆலோசனையாளர்களையும் நியமனம் செய்தது. இவர்கள் ஐவரும் அடங்கியதே வங்காளக் கவுன்சில். எல்லாப் பிரச்சினைகளையும் இது பெரும்பான்மை வாக்குகளால் முடிவு செய்தது. தவிரவும் கல்கத்தாவில் உயர் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது. நகரவாசிகளைப் பொறுத்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது இதன் பொறுப்பு ஆயிற்று.

முதல் கவர்னர் ஜெனரல் ஆனவன் வாரன் ஹேஸ்டிங்ஸ். இளமைப் பருவம் முதலே இவன் கம்பெனி ஊழியனாக இருந்து வந்தான். இந்திய நிலைமைகளை நன்றாகத் தெரிந்து கொண்டும் பார்சி மொழியையும் இந்துஸ்தானியையும் கற்றுத் தேர்ந்தும் இருந்த ஹேஸ்டிங்ஸ் கல்கத்தாவில் கிளைவுக்கு மதிப்புயர்ந்த துணைவனாக விளங்கினான்.

சென்னையில் இருந்தபோதே ஹேஸ்டிங்ஸ் சில சீர்திருத்தங்களைப் புகுத்தி இருந்தான். கம்பெனி அலுவலர்களின் ஊதியங்களை அவன் உயர்த்தினான். படைக்குத் தேவையான பண்டங்களின் தரவுக்கு ஒப்பந்த முறையை அழலுக்குக் கொண்டு வந்தான். ஊழல் வளர்வதற்கும் கம்பெனி ஊழியர்கள், சிறப்பாக இயக்குநர்களின் அரவணைப்பைப் பெற்றிருந்தவர்கள், விரைவாகச் செல்வர்கள் ஆவதற்கும் இந்த முறை வழி வகுத்தது. தவிர, இந்தியப் பண்ட முதலாளிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, கம்பெனியின் வருவாய் அதிகரிக்க அவன் வகை செய்தான். இந்தக் காரணத்தால் லண்டனில் இருந்த கம்பெனி இயக்குநர்களின் கவனத்தை ஹேஸ்டிங்ஸ் தன்பால் ஈர்த்தான். எல்லா உபாயங்களாலும் கம்பெனியின் லாபங்களைப் பெருக்குவதே தன் முதற் கடமை என்று அவன் உறுதியாக முடிவு செய்து கொண்டான். 1772ம் ஆண்டில் வங்காளக் கவர்னர் ஆனதும், வங்காள நவாபிற்கும் இரண்டாம் ஷா ஆலத்துக்கும் கிளைவ் ஏற்படுத்தி இருந்த உதவிச் சம்பளத்தை ஹேஸ்டிங்ஸ் பாதியாகக் குறைத்தான். கோரா, அலாகபாது மாநிலங்களை (இவை கிளைவால் முகலாயப் பேரரசனின் பராமரிப்புக்காக அவனுக்கு வழங்கப்பட்டிருந்தன) அயோத்திக்கு 50 லட்சம் ரூபாய்க்கு விற்றான். ரோகில்லர்களுடன் கம்பெனி பகைமை கொண்டிருக்கவில்லை ஆயினும் ரோகில்லர்களோடு போரிடுவதற்கு ஆங்கில அதிகாரிகளின் தலைமையில் சிப்பாய்ப் படைப் பிரிவுகளை ஹேஸ்டிங்ஸ் அயோத்திக்குக் கொடுத்தான். இந்த

''வெட்கக்கேடான போரில்''* ரோகில்லர்கள் முறியடிக்கப்பட்டார்கள். அவர்களுடைய நிலப்பரப்பு அயோத்தியில் சேர்க்கப்பட்டது. இந்த எல்லாச் செயல்களாலும் தான் கம்பெனியின் விசுவாசமுள்ள ஊழியன் என்பதை ஹேஸ்டிங்ஸ் காட்டிக் கொண்டான்.

வங்காளக் கவுன்சிலில் ஹேஸ்டிங்சை ஆதரித்தவன் வங்காளத்தில் கம்பெனி ஊழியனாக இருந்த பார்வெல் என்பவன் மட்டுமே. மற்ற மூவரும்—பிரபு வம்சத்தினனான லார்டு கிளேவரிங், கர்னல் மோன்சன், பிலிப் பிரான்சிஸ் ஆகியோர்—தங்களைக் கம்பெனிப் பிரதிநிதிகளாக எண்ணுமல் அரசனின் பிரதிநிதிகளாகக் கருதினார்கள். இவர்களில் பிலிப் பிரான்சிஸ் என்பவன்தான் ஜூனியஸ் என்ற புனை பெயரால் கையொப்பம் இடப்பட்டு அரசாங்கத்தைத் தாக்கி விமர்சித்த பிரபலமான கடிதங்களை எழுதியவன் எனச் சந்தேகிக்கப் பட்டான். இந்த மூவரும் ஹேஸ்டிங்சின் செயல்கள் சரியற்றவை எனக் கூறி ஹேஸ்டிங்ஸ் பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்றும் அதிகாரம் கிளேவரிங்குக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் கோரினார்கள். கம்பெனிக்கும் இந்திய லாபங்களில் பெரும் பங்கு கொள்ள ஆர்வம் கொண்ட ஆங்கில முதலாளித்துவ வட்டாரங்களுக்கும் இடையே இங்கிலாந்தில் அந்தக் காலத்தில் நடந்து வந்த போராட்டத்தின் பிரதிபலிப்பே வங்காளக் கவுன்சில் போராட்டம்.

வங்காளக் கவுன்சில் உறுப்பினரிடையே நிலவிய கருத்து வேற்றுமைகள் கல்கத்தாவாசிகளுக்குத் தெரிந்து விட்டன. மிரட்டிப் பணம் பறிக்கும் ஹேஸ்டிங்சின் அடாபிடிச் செயல்களுக்கு ஆளானவர்கள் பலர் அவன் மீது குறைகூறி மனுக்கள் கொடுத்தார்கள். இவர்களில் முக்கியமானவன் நந்த குமார் என்னும் பணக்காரப் பிராமணன். ஹேஸ்டிங்சுக்கு எதிராக இவன் மனுக் கொடுத்த பிறகு, கல்கத்தாவில் ஆங்கில நீதி மன்றம் ஏற்படுவதற்கு ஆறு ஆண்டுகளுக்கு முன் நந்த குமார் பொய்க் கையெழுத்திட்டு மோசடி செய்ததாக ஒரு வழக்கு தொடரப்பட்டது. தன் பள்ளித் தோழனும் கல்கத்தா உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியும் ஆன இம்பே என்பவனது உதவியால் ஹேஸ்டிங்ஸ் நந்த குமாருக்கு மரண தண்டனை கிடைக்கச் செய்தான். நந்த குமார் ஊரறியத் தூக்கில் இடப்பட்ட பின் ஹேஸ்டிங்சுக்கு எதிராக மனுக்கள் கொடுக்கப்படுவது நின்று விட்டது. 1777ம் ஆண்டு கர்னல் மோன்சன் இறந்தான். விரைவில் கிளேவரிங்கும் காலமானான். ஹேஸ்டிங்ஸ் வங்காளத்தின் முழு அதிகாரம் பெற்ற ஆட்சியாளன் ஆகிவிட்டான்.

---

* பார்க்க கார்ல் மார்க்ஸ், **இந்திய வரலாற்றின் கால வரிசைக் குறிப்புகள் (664—1858)**, மாஸ்கோ, 1947, பக்கம் 77.

வெல்லப்பட்ட பின் வங்காளத்தின் பொருளாதார நிலை

வங்காளம் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டதன் விளைவாக இந்தியாவின் மற்றப் பகுதிகளுடனும் கிழக்கு நாடுகளுடனும் அதன் பொருளாதாரத் தொடர்புகள் துணிக்கப்பட்டன. ஆங்கிலேயர் வசப் பட்டதற்கு முன் வங்காளம் தென் கிழக்கு ஆசிய நாடுகளோடு பெரு மளவில் வியாபாரம் செய்து வந்தது. இப்போதோ கடல்வழி வாணி பம் முழுவதும் உண்மையில் ஆங்கிலேயர்களின் கைகளிலேயே குவிந் திருந்தது. வங்காளத்தின் உள் வியாபாரமும் கொஞ்சம் கொஞ்ச மாக ஆங்கிலேயர் கைகளுக்கு மாறியது. 18ம் நூற்றாண்டின் முடிவு வாக்கில், இந்திய வியாபாரிகள் பெரிய அளவில் தொழில் செய்வது அவர்கள் ஆங்கிலேயரின் ஏஜெண்டுகளாக இருந்தால்தான் முடியும் என்ற நிலை ஏற்பட்டது. நிதித் துறையிலும் ஆங்கிலேயர் இந்தியர்களை நெருக்கி வெளியேற்றும் இதே நிகழ்முறைகள் நடந்து கொண்டிருந்தன.

வங்காளம் ஆங்கிலேயர் வசம் ஆவதற்கு முன்னால் இந்திய நிதி முதலாளிகள்-வட்டித் தொழிலர்கள் (சராப்புகள்) ஆகியோரின் மிகப் பெரிய, லாபகரமான நடவடிக்கைகள் முர்ஷிதாபாதில் இருந்த பொக்கிஷத்துக்கு வரித் தொகைகளை அனுப்பி வைப்பதோடு தொடர்பு கொண்டிருந்தன. 1772ம் ஆண்டு நிதித்துறை முர்ஷிதா பாதிலிருந்து கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டது. எனவே அது ஜகத் சேட், அவன் வமிசத்தினர் ஆகியோரின் செல்வாக்கிலிருந்து அகன்று விட்டது. நாணய முறையை மையப்படுத்தி அதன் மீது அரசாங்க மேற்பார்வையை வலுவாக்கும் பொருட்டு, டாக்காவிலும் பாட்னா விலும் முர்ஷிதாபாதிலும் இருந்த நாணயச்சாலைகளை ஹேஸ்டிங்ஸ் 1773—1774ல் மூடிவிட்டு, கம்பட்டம் அடிப்பதைக் கல்கத்தாவின் தனி உரிமை ஆக்கினன். ஜகத் சேட்டுக்களின் தொழிலகங்கள் அன்று முதல் படிப்படியாகச் சீரழியலாயின. வங்கி நோட்டுகள் வெளியிட வும் ரொக்க-கடன் கொடுக்கல் வாங்கல் செய்யவும் உரிமை பெற்ற மூன்று ஆங்கில நிதிமனைகள் திறக்கப்பட்டதாலும் இந்திய நிதிக் தொழிலின் சீரழிவு விரைவுபட்டது.

முதலாவது தனியார் ஆங்கிலத் தரகு வர்த்தக நிறுவனம் 1770ம் ஆண்டு தோன்றியது. ஆங்கிலேயரிடம் ஊழியம் செய்த இந்திய ஏஜெண்டுகளான பனியாக்களின் இடத்தை இது கைப்பற்றிக் கொண் டது. இத்தகைய வர்த்தக நிறுவனங்கள் நாளடைவில் ஆங்கிலக் காலனி ஆட்சியாளர்களால் இந்தியா சுரண்டப்படுவதற்கான முக்கிய வடிவங்களில் ஒன்று ஆகிவிட்டன. இவை ஏற்றுமதி, இறக்குமதித் தொழில் நடத்தின. இதோடு, குத்தகைத் தொழில், வட்டித் தொழில், இந்தியாவில் கொள்ளையடிக்கப்பட்ட செல்வங்களை இங்கி

லாந்துக்கு அனுப்பும் தொழில், இத்தகைய பிற தொழில்கள் முதலியவற்றில் ஈடுபட்டன. நகரங்களிலிருந்து அகற்றப்பட்டுவிட்ட இந்திய நிதி, வர்த்தகப் பெரு முதலாளிகள் ஜமீன்தாரிப் பண்ணைகளை வாங்குவதிலும் நாட்டுப்புற வட்டித் தொழிலிலும் தங்கள் பணத்தை முதலீடு செய்யலானார்கள்.

கம்மியர்கள் சுரண்டப்படுவதும் தீவிரம் ஆயிற்று. நெசவாளர்கள் கம்பெனி முழுமைக்குமோ அல்லது அதன் ஊழியர்களுக்கோ வேலையை முடித்துக் கொடுக்காமல் வேறு வாடிக்கைக்காரருக்கோ சந்தையில் விற்பதற்கோ வேலை செய்வது 1775ல் தடை செய்யப்பட்டது. ஆங்கிலக் குமாஸ்தாக்கள் நெசவாளன் வீட்டில் காவலாளியை நிறுத்தி வைத்து, சேணியன் பிறத்தியாருக்குத் துணியை விற்காதபடி கண்காணிக்கச் செய்தார்கள். உண்மையில் இது நெசவாளர்கள் முழுமையாக அடிமைகள் ஆக்கப்பட்டதைக் குறித்தது. நெசவாளர்கள் அடிக்கடி தங்கள் வீடுகளை விட்டு வெளியேறிக் கிராமம் சென்று உரிமைகள் அற்ற குத்தகைக்காரர்களின் கூட்டத்தில் சேர்ந்து கொண்டார்கள். 1773லும் 1786லும் சாந்திபூரில் நெசவாளர்களின் கிளர்ச்சிகள் நடந்தன. தாங்கள் ஏமாற்றவும் அடிக்கவும் கைது செய்யவும் படுவதாக 1787ம் ஆண்டில் டாக்கா நகர நெசவாளர்களும் 1789ல் சோனர்காம் நெசவாளர்களும் புகார் செய்தார்கள். தாங்கள் துன்புறுத்தப்படுவதாக உப்பளத் தொழிலாளர்களும் குறை கூறினர்கள்.

வங்காள விவசாயிகளின் நிலைமையும் மோசம் ஆயிற்று. ஏற்கெனவே இருந்த இந்திய வரி இலாகா அமைப்பையும் வரி விதிப்பு முறையையும் கிளைவ் அப்படியே வைத்திருந்தான். ஹேஸ்டிங்ஸோ, ஆங்கில வரி இலாகா அமைப்பை ஏற்படுத்தவும் வங்காள விவசாயியைச் சுரண்டுவதற்குப் புதிய வழி துறைகளைத் தேடவும் தலைப்பட்டான். நிலத்தின் மீது நிலப்பிரபுத்துவ அரசு உடைமை உரிமை ஆங்கிலேயர்களின் கைகளுக்கு மாறிவிட்டது என அவன் நினைத்தான். முன்பு இந்த உரிமை வங்காளத்தின் ஆட்சியாளர்களிடம் இருந்தது. பிரான்சிஸ் கிண்டலாக விமர்சித்தது போல, ''இந்தியர்களை உடுக்கத் துணிகூட இல்லாத அளவுக்குக் கொள்ளை அடிக்கும் உரிமை'' என்று ஹேஸ்டிங்ஸ் இதைப் புரிந்து கொண்டான். ''இந்நாட்டு லேண்டுலார்டுகள்'' என்று தான் குறிப்பிட்ட இந்திய நிலப்பிரபுக்களை இந்தியாவில் உள்ள நிலத்தின் முழு உரிமை பெற்ற ஒரே உடைமையாளர்களாக ஒப்புக்கொள்ள வேண்டும் என்று பிரான்சிஸ் வலியுறுத்தினான். பிரான்சிஸின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் ஹேஸ்டிங்ஸ் நிலத்தைக் குறுகிய காலக் குத்தகைக்கு விடும் கொள்கையைக் கடைப்பிடித்தான். விளைவாக விவசாயிகள் முற்றிலும் சீரழிந்து போனார்கள்.

ஏன் என்ரூல் அதிகத்திலும் அதிகமாகப் பணத்தையும் விளைச்சலையும் தண்டுவதிலேயே குத்தகைக்காரர்கள் அக்கறை கொண்டிருந்தார் கள். நிலவரியின் பெயரால் விவசாயிகளைச் சுரண்டுவதைக் கம்பெனி தன் வருவாயின் தலையூற்றாக வைத்துக் கொண்ட முதல் ஆண்டான 1765 உடன் ஒப்பிடும்போது 1790ம்—1791ம் ஆண்டுகளில் வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா ஆகியவற்றில் நிலவரி அனேகமாக இரு மடங்கு ஆகிவிட்டது. இந்தக் கொள்கையின் விளைவாக வங்காளத் தின் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பு 18ம் நூற்றாண்டின் இறுதி வாக் கில் அடர் காடாக மாறிவிட்டது. முன்பு பயிர் நிலங்கள் இருந்த இடங்களில் புலிகள் ஆட்சி செய்யலாயின.

இந்த நிலைமையில் விவசாயிகளின் கிளர்ச்சிகள் ஒன்றன் பின் ஒன் றாக நடந்ததில் வியப்பில்லை. இவை எல்லாவற்றிலும் பெரிய கிளர்ச்சி தினாஜ்பூர் மாவட்டத்தில் வரிகளைக் குத்தகைக்கு எடுத்திருந்த தேபி சிங் என்பவனுக்கு எதிராக 1783ம் ஆண்டு நடந்தது. இவன் வரி வசூலிப்பதற்காக விவசாயிகளைச் சித்திரவதை செய்து வந்தான். விவசாயிகள் ரங்கபூர் நகரின் அருகே குழுமி ஒரு தலைவனைத் தேர்ந் தெடுத்துக் கொண்டு காவலாளிகளை விரட்டிவிட்டுக் கல்கத்தாவுக்கு விண்ணப்பம் அனுப்பினார்கள். பதில் கிடைக்காமையால் அவர்கள் ஆயுதம் ஏந்திக் கிளர்ச்சி நடத்தினார்கள். ஆங்கிலப் படைகள் வந்து கிளர்ச்சியை அடக்கின.

18ம் நூற்றாண்டின் அறுபதுக்கள் முதல் தொண்ணூறுகள் வரை வங்காளத்தின் வெவ்வேறு இடங்களில் சற்றுச் சிறிய அளவில் கிளர்ச்சி கள் நடந்தன. ஆங்கிலப் படைகள் செல்லக் கடினமான இடங்களில் வசித்து வந்த பின்தங்கிய காடுவாழ் இனக் குழுவினர் சில வேளை களில் விவசாயிகளோடு சேர்ந்து கொண்டார்கள். சந்தாலர்களின் கிளர்ச்சியும் சுவார் இனக் குழுவினரின் கலகங்களும் இத்தகையவை. சன்னியாசிகள் என்னும் இந்து மதப் பிரிவினரின் தலைமையில் ஆங்கில அதிகாரிகளை எதிர்த்து ஆயுதப் போராட்டம் பல ஆண்டுகள் தொடர்ந்து நடந்தது. ஒரு முறை பல பத்தாயிரம் பெயர் கொண்ட சன்னியாசிப் படைப் பிரிவுகள் அனேகமாகக் கல்கத்தாவையே நெருங்கிவிட்டன. ஆங்கில அதிகாரிகளின் தலைமையில் நிலையான சிப் பாய்ப் பட்டாளங்களை ஹேஸ்டிங்ஸ் அவற்றுக்கு எதிராக அனுப்பினான். சன்னியாசிகளுக்கு ஆதரவு கிடைப்பதையும் விவசாயிகள் அவர்களது படைகளில் சேர்வதையும் தடுப்பதற்காக ஹேஸ்டிங்ஸ் ஒரு தீர் மானம் செய்தான். இதன்படி ஒவ்வொரு கிளர்ச்சிக்காரனும் அவ னுடைய கிராமத்தில் தூக்கிலிடப்பட்டான். அந்தக் கிராமம் முழு வதற்கும் கடுமையான அபராதம் விதிக்கப்பட்டது. கொலைத் தண்டனை பெற்றவனின் குடும்பம் அடிமை ஆக்கப்பட்டது.

சன்னியாசிகளை முறியடித்து வங்காளத்தின் எல்லைகளுக்கு வெளியே விரட்டுவதில் ஹேஸ்டிங்ஸ் தன் ஆட்சிக் காலத்தின் இறுதியில் வெற்றி பெற்றான்.

ஆங்கிலேயர் கடைப்பிடித்த படைத்துணை உடன்படிக்கைக் கொள்கை

இந்தியாவில் தங்கள் ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்துவதைக் காட்டிலும் ஏற்கெனவே வெல்லப்பட்ட நிலப்பரப்பில் நிலையாக வேரூன்றிக் கொண்டு இந்தியாவின் சுதந்திர அரசுகள் மீது தனது செல்வாக்கை வலுப்படுத்துவதே 18ம் நூற்றாண்டின் 70—80க்களில் கம்பெனியின் கொள்கையாக இருந்தது.

கம்பெனியுடன் படைத்துணை உடன்படிக்கை செய்துகொள்ள இசைந்த சுதந்திரச் சிற்றரசுக்கு ஆங்கிலச் சிப்பாய்ப் படைப் பிரிவுகளை (அதாவது, போர்த் திறன் வாய்ந்த படைகளை) அளித்ததன் மூலம் இந்த இரண்டாவது நோக்கம் நிறைவேற்றப்பட்டு வந்தது.

இத்தகைய உடன்படிக்கை செய்துகொண்ட சிற்றரசு சுதந்திர வெளிநாட்டுக் கொள்கையைக் கைவிட்டது. வெளி உறவுகளைக் கம்பெனியின் வாயிலாகவே வைத்துக் கொள்வதாகவும் பிரெஞ்சுப் படைப் பிரிவுகளைக் கலைத்துவிடுவதாகவும் பிரெஞ்சுக்காரர்களை ஊழியத்துக்கு எடுத்துக் கொள்ளாதிருப்பதாகவும் அது உறுதி அளித்தது. இந்த இரண்டு நிபந்தனைகளும் உடன்படிக்கை செய்துகொண்ட சிற்றரசுக்கு ஆங்கிலேயர் செல்வாக்கிலிருந்து எப்போதும் விடுதலை பெறும் வாய்ப்பே இல்லாதவாறு செய்தன. முடிவாக, படைத்துணை உடன்படிக்கைக்கு இணங்கக் கிழக்கிந்தியக் கம்பெனி பகைவரின் தாக்குதல்களிலிருந்து தற்காப்பதற்காக என்ற சாக்கில் சிப்பாய்ப் படைப் பிரிவைச் சிற்றரசுக்கு அனுப்பியது. இந்தப் படையினருக்கு ஆங்கிலேயரால் தீர்மானிக்கப்பட்ட அளவு பராமரிப்புக்கு முழுமையாக வகை செய்து நிதியுதவி அளிக்கச் சிற்றரசின் ஆட்சியாளன் பொறுப்பு ஏற்றான். தங்களுக்கு விடப்பட்ட மாவட்டங்களில் வரி வசூலித்த கம்பெனிப் படையினர் அவற்றை ஒரேயடியாகச் சூறையாடினார்கள். எனவே சிற்றரசு ஒன்று புதிய மாவட்டங்களை அவர்களுக்கு ஒதுக்க வேண்டி இருந்தது, இல்லாவிட்டால் படையினருக்கு ஊதியம் அளிக்கத் தேவையான பணத்தைக் கம்பெனி ஊழியர்களிடம் கடன் வாங்க வேண்டி இருந்தது. இரண்டு வகையாலும் நாடுமுழுச் சீரழிவுக்கு உள்ளாகும் அபாயம் நேர்ந்தது. முடிவில் வறுமைப் பட்ட சிற்றரசு அதன் ''கெட்ட நிர்வாகத்தை'' ஒழிப்பது என்ற வியாஜத்தில் கம்பெனியின் ஆட்சிப் பரப்பில் சேர்க்கப்பட்டது.

படைத்துணை உடன்படிக்கைகளினால் சிற்றரசுகளைக் கொஞ்சங் கொஞ்சமாக அடிமைத் தளையில் பிணிக்கும் கொள்கைக்கு மக்களின் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. ஆங்கிலேயரின் மிரட்டிப் பணம் பறிக்கும் செயல்களுக்கு எதிராகச் சில வேளைகளில் வட்டார மக்கள் அனைவரும் கிளர்ந்து எழுந்தார்கள். வட்டாரக் கிளர்ச்சி தன்மையில் அனைத்து மக்கள் கிளர்ச்சியாகப் பரிணமித்தது. வாராணசி (காசி) யிலும் அயோத்தியிலும் இவ்வாறு நிகழ்ந்தது.

அயோத்தியின் மானியப் பிரதேசமான வாராணசியை 1775ம் ஆண்டு அயோத்தி நவாபிடமிருந்து ஹேஸ்டிங்ஸ் பறித்துக் கொண்டான். நவாபின் தந்தை இறந்தபின் பட்டத்துக்கு வர அவனுக்கு இருந்த உரிமையை உறுதிப்படுத்தியதற்குப் பரிசாக வாராணசி கம்பெனியின் மானியப் பிரதேசம் ஆக்கப்பட்டது. வாராணசி அயோத்தி நவாபுக்குச் செலுத்திவந்த அதே கப்பத்தைக் கம்பெனிக்குச் செலுத்தி வர வேண்டும் என்றும் இந்தக் கப்பத் தொகை ஒருபோதும் அதிகமாக்கப்படாது என்றும் வாராணசி ராஜா சைத்சிங்கிற்குக் கம்பெனி உறுதி அளித்திருந்தது. ஆயினும் போர்ச் செலவுகளுக்கு அதிகப்படி பணம் தேவைப்பட்டதும் ஹேஸ்டிங்ஸ் மேற்கொண்டு பணத் தொகை செலுத்தும்படி ராஜாவிடம் கோரினான். முடிவில் இத்தகைய பணக் கோரிக்கைகள் வாராணசியால் செலுத்த முடியாத அளவுகளை எட்டி விட்டன. அப்போது ஹேஸ்டிங்ஸ் பணத்துக்காகத் தானே வாராணசிக்குப் போனான். சைத்சிங் கெடுவை ஒத்திவைக்கும்படி கேட்டுக் கொள்ளவே, ஹேஸ்டிங்ஸ் அவனைக் கைது செய்யும்படி உத்தரவிட்டான். இதைக் கேட்டதும் வாராணசி மக்களின் கூட்டம் அரண்மனைக்குள் இடித்துப் புகுந்து, ராஜாவுக்குக் காவலாக இருந்த ஆங்கிலச் சிப்பாய்களைத் தாக்கிக் கொன்று, சைத்சிங்கை இட்டுப் போய் விட்டது. ஆங்கிலேயர்கள் இடையறாது மிரட்டிப் பணம் பறித்தது வாராணசி மக்களுக்கு ஆத்திரம் ஊட்டியிருந்தது. ஹேஸ்டிங்ஸ் சங்கடத்தில் மாட்டிக் கொண்டான். வாராணசியிலிருந்து வெளியேற அவன் பெரும்பாடு பட நேர்ந்தது.

கிளர்ச்சி வாராணசிப் பிரதேசம் முழுவதிலும் விரைவாகப் பரவி அயோத்தியையும் எட்டியது. அரண்டுபோன ஆங்கிலேயர்கள் வங்காளத்தில் இருந்த எல்லாப் படைகளையும் கொண்டுவரத் தொடங்கினர்கள். ஆயினும், சைத்சிங்கின் தலைமையில் வாராணசி நிலப் பிரபுக்கள் ஹேஸ்டிங்சுக்கு இழிவு நிறைந்த பணிவுடன் அனுப்பிய வண்ணமாயிருந்த சமாதான விண்ணப்பங்களாலும் வட்டார இந்திய நிதி முதலாளிகள் ஆங்கிலேயருக்கு அளித்த பண உதவியாலும் கிளர்ச்சியை ஒடுக்குவது ஹேஸ்டிங்சுக்கு எளிதாயிற்று. வாராணசிக்கு வேறொருவன் ராஜா ஆக்கப்பட்டான். முன்பு செலுத்தியதற்கு அனேக

மாக இரு மடங்கு கப்பம் செலுத்துவதாகவும் வரி வசூலிப்பதற் கும் சரி, போர் மூண்டாலும் சரி, கம்பெனிப் படைகளே மட்டுமே பயன்படுத்துவதாகவும் இவன் உறுதி அளித்தான். வாராணசியின் பெரிய ஜாகீர்தார்கள் தங்கள் ஜாகீர்களே இழந்தார்கள். கம்பெனி யின் மிரட்டிப் பணம் பிடுங்கும் கொள்கை காரணமாக வரிகள் உயர்த்தப்பட்டதால், முன்பு வளம் கொழித்த வாராணசிச் சிற்றரசு வறுமைப்பட்டுச் சீர்குலைந்து போயிற்று. சிற்றரசில் ''அண்மை ஆண்டுகளின் மோசமான நிர்வாகத்தின் விளைவாக, குறைந்தது மூன் றில் ஒரு பங்கு நிலம் பண்படுத்தப்படவில்லை என்று தெரிகிறது'' என வாராணசியில் ஆங்கில ஆட்சிப் பிரதிநிதியாக இருந்தவன் 1788ம் ஆண்டு அறிவித்தான்.

1781ம் ஆண்டில் வாராணசிக் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டுவிட்டது ஆயினும் அடுத்த ஆண்டு அயோத்தியில் கிளர்ச்சி மூண்டது. அயோத்தி யில் பணி ஆற்றி வந்த ஆங்கிலப் படைப் பிரிவுகளின் பராமரிப்புக் காக மேலும் மேலும் அதிகப் பணம் செலவிடும்படியும் புதிய புதிய மாவட்டங்களைக் குத்தகைக்கு விடும்படியும் அயோத்தி நவாபைக் கம்பெனி வற்புறுத்தி இணங்க வைத்தது. இதனாலேயே விவசாயிகள் கிளர்ந்தெழுந்தார்கள். ஆனால் அயோத்தியின் மற்ற மக்கள் கிளர்ச் சிக்கார விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கவில்லை. பெரிய அயோத்தி நிலப்பிரபுக்களின் படைகள் கிளர்ச்சியை நசுக்கிவிட்டன. ஆங்கி லேயர்களின் வரிக் கொடுமை காரணமாக 1784ம் ஆண்டில் பஞ்சம் ஏற்பட்ட போதிலும் அயோத்தியிடமிருந்து வர வேண்டிய கப்பத் தொகையை ஹேஸ்டிங்ஸ் குறைக்கவில்லை. சக்திக்கு மீறிய வரிகள் செலுத்தித் துன்புற்று நலிந்த மக்கள் நவாபின் மீது ஆத்திரம் அடைந்தார்கள். அடுத்த ஆண்டுகளில் ஆங்கிலப் படைகள்தாம் நவாபை அவர்களிடமிருந்து காத்தன.

வெறுமையாகிவிட்ட தன் பொக்கிஷத்தை நிறைக்கும் பொருட்டு அயோத்தி நவாபு வெவ்வேறு சாக்குகளைக் காட்டிச் சில நிலப்பிரபுக் களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து வந்தான். இதனால் நிலப் பிரபுக்கள் வட்டாரத்திலும் ஆத்திரம் மிகுந்து கொண்டு போயிற்று. அயோத்தி நவாபே உண்மை ஆட்சியதிகாரம் அனைத்தையும் இழந்து விட்டிருந்தான். முந்திய நவாபின் வளர்ப்பு மகன் வஜீர் அலி விரட்டப்பட்டு வாராணசியில் வசித்து வந்தான். ஆங்கிலேயர்பால் அதிருப்தி அடைந்தவர்கள் இவனை மையமாகக் கொண்டு குழுச் சேர்ந்தார்கள். ஆங்கிலேயர்களால் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட, வாராணசி, பீகார், வங்காளம் ஆகியவற்றைச் சேர்ந்த நிலப்பிரபு மேற்குடியினர் (முகமதியர்களும் சரி, இந்துக்களும் சரி) வஜீர் அலியை ஆதரித்தார்கள். இவர்கள் தவிர, கல்கத்தா ஆர்மீனியர்கள் உட்பட

வங்காள வர்த்தகர்களும் அயோத்திப் படையினரும் அவனுக்கு ஆதரவு அளித்தார்கள். ரோகில்லர்களின் தலைவனுடனும் குவாலியரின் மராட்டியச் சிற்றரசனுடனும் வஜீர் அலி தொடர்பு ஏற்படுத்திக் கொண்டான். ஆப்கனிஸ்தான அரசன் ஜமன்ஷாவிடம் தன் ஆட்களை அனுப்பி இந்தியா மீது படையெடுத்து வரும்படி வேண்டிக் கொண்டான். மஸ்காட் வாயிலாகப் பிரெஞ்சுக்காரர்களோடு கூட்டுச் சேர முயற்சி செய்தான். ஆனால் ஆங்கிலேயர்கள் அவனைச் சந்தேகிக்கலானார்கள். கல்கத்தாவுக்குக் குடி பெயரும்படி அவனுக்கு அவர்கள் உத்தரவு இட்டார்கள். வஜீர் அலி கீழ்ப்படியாமல் கிளர்ச்சி செய்தான். கிளர்ச்சி உரிய நேரத்துக்கு முன் தொடங்கி விட்டதால் நன்கு வளருமுன்பே நசுக்கப்பட்டுவிட்டது. வஜீர் அலி கல்கத்தாவுக்கு வெளியேற்றப்பட்டான். 1801ம் ஆண்டு ஏற்பட்ட உடன்படிக்கையின்படி கங்கை-யமுனை இடைப் பகுதியில் அயோத்தியின் நிலப் பரப்பு கணிசமாகக் குறைக்கப்பட்டது. ரோகில்கண்டும் கோரக்பூரும் அயோத்தியிடமிருந்து பிடுங்கிக் கொள்ளப்பட்டன. அயோத்தி நவாபு தன் படைகளைக் கலைத்துவிட வேண்டியதாயிற்று. அயோத்தியில் கம்பெனிப் படைகளின் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டது.

1814ம் ஆண்டு புதிய நவாபு பட்டத்துக்கு வந்ததும் மக்களிடையே முதிர்ந்து வந்த ஆத்திரம் காரணமாக அரசாங்கம் வரிகளை ஓரளவு குறைக்க நேர்ந்தது. ஆயினும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின் பரேலியில் முப்தி இவாஜ் என்பவன் தலைமையில் கடும் வரிகளுக்கு எதிராகக் கிளர்ச்சி நடந்தது. தருவிக்கப்பட்ட படைகளால்தான் அதை அடக்க முடிந்தது. நடப்பில் எல்லாம் முன் போன்றே இருந்து வந்தன. மானியப் பிரதேசமான அயோத்தியின் செலவில் பதினுயிரத்துக்கும் மேல் சிப்பாய்களை வைத்திருப்பது கம்பெனிக்குச் சாதகமாக இருந்தது. அவற்றின் பராமரிப்புக்குப் பணம் கொடுக்க நவாபு மறுக்கவில்லை. அவன் நிலைத்திருந்ததுஇந்தப் படையினரின் உதவியால்தானே.

ஆங்கிலேயர் தென் இந்தியாவை வெல்லல்

மைசூர் அரசின் உதயம்

ஆங்கிலேயர் தென் இந்தியாவின் உட்பகுதிகளில் புகுவதற்கு யாவற்றிலும் பெரிய எதிர்ப்பு காட்டியது மைசூர் சிற்றரசு. இரு புறங்களில் கிழக்கு, மேற்குத் தொடர்ச்சி மலைகளாலும் தெற்கே

காவிரி ஆற்றினாலும் சூழப்பட்ட பீடபூமியில் அமைந்துள்ள மைசூர் அரசு பகைப் படைகளுக்கு அணுகக் கடினமானதாக இருந்தது. முகலாயர்களுக்கும் மராட்டியர்களுக்கும் இடையே நடந்த நீடித்த போராட்டம், முக்கியப் போர்கள் நிகழ்ந்த வட்டாரங்களிலிருந்து ஒரு புறம் விலகி இருந்த மைசூருக்குத் தன்னை வலுப்படுத்திக் கொள்ள வாய்ப்பு அளித்தது. பெருந்தொகையான மலை ஆறுகளும் நீர்வளம் மிக்க காவேரியும் அணைக்கட்டுகளும் நீர்த் தேக்கங்களும் அடங்கிய வலைப்பின்னலும் மைசூர் விவசாயிகளுக்குச் செழிப்பான விளைச்சல் பெற உதவின. நில வரி ஒப்புநோக்கில் குறைவாக இருந்தது. கைத் தொழில்கள் விரிவாக வளர்ச்சி அடைந்திருந்தன.

மைசூரின் அனேக நகரங்களில் துணி (பெரும்பாலும் முரட்டு வகை) நெய்யப்பட்டது. ஆனாலும் மைசூர் முக்கியமாக ஏற்றுமதி செய்தவை இரும்புப் பாளங்களே. இவை இந்தியா எங்கும் விற்பனை ஆயின. மலையிலிருந்து பெருகி இரும்புக் கனியத் தூளை அடித்து வந்த ஆறுகளின் மணலிலிருந்தே இரும்பு முதன்மையாக எடுக்கப்பட்டது. காடுகள் நிறைய இருந்ததால் இந்தக் கனியத் தூளை அடுப்புக்களில் உருக்க முடிந்தது. பின்னர் சிறு உலைகளில் மீண்டும் மீண்டும் காய்ச்சி வார்த்து இரும்பும் எஃகும் தயாரிக்கப்பட்டன. பருவ காலத்தில் நாட்டுப்புறத் தொழிலாளர் குழுக்கள் கிராமங்களில் இந்தத் தொழிலில் ஈடுபட்டன. மற்ற நேரங்களில் தொழிலாளர் குழுவினர் தங்கள் நிலங்களைப் பண்படுத்தினர்கள், அல்லது விவசாயிகளிடம் கூலிக்கு வேலை செய்தார்கள். கம்மியர்களிடையே கண்ணுடித் தொழிலாளர்களும் கணிசமான எண்ணிக்கையில் இருந்தார்கள். இவர்கள் கண்ணுடி வளையல்கள் தயாரித்து விற்று வந்தார்கள். சாயக்காரர்கள், பின்னல் வேலைக்காரர்கள், பாசனக் கால்வாய் கட்டுபவர்கள், உப்பளத் தொழிலாளர்கள் முதலியோரும் நிறைய இருந்தார்கள்.

மைசூரில் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தின் விளைவாக 1761ம் ஆண்டு உடையார் வம்ச அரசனின் இடத்தைப் படைத் தலைவன் ஐதர் அலி (1761—1782) கைப்பற்றிக் கொண்டான். முதற் கடமையாக அவன் படையைச் சீரமைத்தான். தனி ஜாகீர்தார்களால் அமைக்கப்பட்டுச் சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தவையும் அவர்களுக்கு மட்டுமே கீழ்ப் படிந்தவையுமான படைப் பிரிவுகளுக்குப் பதில் ஐதர் புதிய படைப் பிரிவுகளை அமைத்தான். இவற்றின் துருப்புக்களும் அதிகாரிகளும் அவனுலேயே அமர்த்தப்பட்டார்கள். ஜாகீர்கள் வழங்கும் முறையை ரத்து செய்து விட்டுப் பொக்கிஷத்திலிருந்து படையினருக்கு ஊதியங்கள் அளித்தான். தவிரவும் ஐரோப்பிய (முதன்மையாகப் பிரெஞ்சு) அதிகாரிகளைத் தன் படையில் விரிவாக வேலைக்கு வைத்துக்கொண்டான். ஐரோப்பியப் படைத் தலைவர்கள் ஐதரின் சேனை

யைப் புதிய ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்குப் பழக்கி, புதிய போர்த்தந் திரத்தைக் கையாளவும் கற்பித்தார்கள். இந்திய அரசர்களில் முதன் முதலாகக் குதிரைப் படையைக் காட்டிலும் காலாட் படைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தவன் ஐதர் அலிதான். 50—55 ஆயிரம் துருப் புக்கள் அடங்கிய அவனுடைய போர்க்களப் படையில் 26—31 ஆயிரம் பெயர் காலாட்கள். இவர்களில் இருபதாயிரம் பெயர் ஐரோப்பிய முறையில் படைப் பயிற்சி பெற்று, துப்பாக்கிகளே ஆயுத மாகக் கொண்டிருந்த நிலையான துருப்புக்கள். குதிரைப் படையை யும் ஐதர் அலி ஒரே தலைமைக்கு உட்படுத்தி, ஒவ்வொரு படையின னுக்கும் அரசாங்கத்திலிருந்து குதிரை கொடுத்தான். இதனால் குதிரைப் படையினர் அதிகத் துணிவுடன் போரிட ஊக்கம் பெற்றார் கள். ஐதர் அலியிடம் சிறந்த பீரங்கிப் படை இருந்தது. சுடு திறனில் அது ஆங்கிலப் பீரங்கிகளுக்குக் குறைந்ததாக இல்லை. தவிர, அது விரைந்து இயங்கவும் வல்லதாக இருந்தது. போர்க்கள மருத்துவ உதவிச் சாலைகளை மேற்பார்ப்பதற்காகத் தனி அலுவலகம் ஒன்றை ஐதர் அலி தன் சேனையில் ஏற்படுத்தி இருந்தான். இவை எல்லா வற்றோடும் கூடவே திறமையாக நிர்வகிக்கப்பட்ட உளவுத் துறை போர்களில் அவனுக்கு எப்போதும் உதவி வந்தது.

இவ்வாறு புது முறைகளைப் புகுத்தியும் மைசூரின் செல்வ வளங் களைப் பயன்படுத்தியும் அந்தக் காலத்திய இந்திய அரசுகளின் சேனை கள் எல்லாவற்றிலும் வலிமை மிக்க சேனையை ஐதர் அலி சில ஆண்டு களுக்குள் நிறுவி விட்டான். 1761ம்—1764ம் ஆண்டுகளில் ஐதர் அலி நாடு பிடிக்கும் போர்கள் சிலவற்றை நடத்தினான். ஐதரா பாதுக்கு அரசுரிமை கொண்டாடியவர்களில் ஒருவனிடமிருந்து சிரா நகரத்தையும் மாவட்டத்தையும் 1761ல் மூன்று லட்சம் ரூபாய்க்கு வாங்கினான். அதன்பின் ஓஸ்கோட், தொட்ட பல்லாபூர், சிக்க பல்ல பூர், நந்திதுர்கம், குடிபந்தா, கொடிகொண்டா ஆகியவற்றையும் அண்டை அருகில் இருந்த வேறு பல சிறு குறு நிலங்களையும் தன் அரசோடு இணைத்துக் கொண்டான். இந்த ஆண்டுகளில் ஐதர் அலி தன் ஆட்சிக்கு உட்படுத்திய இடங்கள் எல்லாவற்றிலும் முக்கிய மானது பிதனூர். இது சுமார் அறுபதாயிரம் மக்கள் வாழ்ந்த பெரிய நகரம். பல வரிசை அரண்கள் சூழ்ந்தது, மேற்குத் தொடர்ச்சி மலை களில் அமைந்தது, மலையாளக் கரைப் பிரதேசங்கள் மீதும் கேரளத் திலும் தென் கன்னடத்திலுமிருந்து மைசூர் செல்வதற்கான மலைக் கணவாய்கள் மீதும் ஆதிக்கம் பெற்றிருந்தது இந்த இடம். பிதனூ ரின் அரசுரிமைக்காகப் போராடியவர்களில் ஒருவனுக்கு ஆதரவு அளிக்கும் சாக்கில் ஐதர் அலி கோட்டையைக் கைப்பற்றி, பிதனூர் மன்னர்களின் எத்தனையோ தலைமுறைகளால் அரண்மனைப் பொக்

கிஷத்தில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த கணக்கற்ற செல்வத்தைத் தனது ஆக்கிக் கொண்டான். நகருக்கு ஐதர்நகர் என்று மறு பெயர் இட்டு அதைப் பெருத்த ஆயுதசாலையாக மாற்றினான்.

ஐதரின் படைகள் பிதனூர்க் கணவாய் வழியாக மலையாளக் கடற் கரையில் இறங்கி பிதனூரின் மானியப் பிரதேசமாயிருந்த சோண்டே (பிற்காலத்தில் தென் கன்னட) சிற்றரசை எளிதாகப் பிடித்துக் கொண்டன. ஹோனவார் (ஓணூர்), மங்களூர் என்னும் இரு பெரிய துறைமுக நகரங்கள் இந்தச் சிற்றரசில் இருந்தன. இதை அடுத்து ஐதர் அலி சவானூர் நவாபின் படைகளை முறியடித்தான். ஆனால் இந்த நிலப்பரப்பைத் தன் அரசில் சேர்த்துக் கொள்ளத் தயங்கினான். போர் நஷ்ட ஈடாக மிகப் பெருந் தொகையைப் பெற்றதுடன் அவன் நின்று கொண்டான்.

பிற நிலப்பரப்புக்கள் மீது திடீர்த் தாக்குதல்கள் நடத்துவதிலும் சௌத், சர்தேஷ்முகி ஆகிய வரிகள் வசூலிப்பதிலும் ஈடுபட்டிருந்த மராட்டியர்கள் போல் அன்றி ஐதர் அலி வென்ற பிரதேசங்களைத் தன் அரசுடன் சேர்த்துக் கொண்டான். சிறு சிறு குறு நிலங்களின் இடத்தில் ஒன்றித்த வலிய மைசூரை அவன் உருவாக்கினான். தென் இந்தியா முழுவதையும் வசப்படுத்தவும் ஆங்கிலேயர்களை எதிர்க்கவும் வல்லதாக அதை மாற்ற விரும்பினான். ஆனால் எல்லாக் கைப் பற்றாளர்களையும் போலவே ஐதர் அலியும் அவனது படையினரும் வென்ற பிரதேசங்களின் மக்களைக் கொள்ளையடித்தார்கள். பின்னர், சேனையின் பராமரிப்புக்குப் பணம் தேவைப்பட்ட போது ஐதர் அலி புதிய பிரதேசங்களில் நில வரியை உயர்த்தினான். இந்தச் செயல்கள் யாவும் தோற்ற சிற்றரசர்களுக்கும் வெல்லப்பட்ட பிரதேசங்களின் குடிமக்களுக்கும் ஆத்திரமூட்டின. விளைவாக, மைசூர் அரசின் வெவ் வேறு பகுதிகளில் மாறி மாறிக் கிளர்ச்சிகள் நிகழ்ந்த வண்ணமாய் இருந்தன.

ஐதர் அலியின் ஆட்சிப் பிரதேச விஸ்தரிப்பு தென் இந்தியாவின் மற்ற இரண்டு வல்லரசுகளுடன் அவன் தவிர்க்க இயலாதபடி மோதிக் கொள்ள வழிகோலியது. மராட்டியச் சிற்றரசுகளின் கூட்டும் ஹைதராபாதும் இவை. இந்த அரசுகள் திண்ணமாக வரையறுக்கப்பட்ட எல்லைகள் கொண்டிருக்கவில்லை ஆதலால், அண்டை அரசுகளின் பிரதேசங்களைக் கைப்பற்றித் தங்கள் ஆட்சிப்பரப்பை விரிவாக்க முயன்று வந்தன. தனித் தனியான குறு நிலங்கள் ஒரு சமயம் விறல்மிக்க ஓர் அண்டை அரசின் ஆதிக்கத்திலும் மறு சமயம் வேறு அரசின் ஆதிக்கத்திலும் இருந்து வந்தன. ஒவ்வோர் அரசும் மேலாண்மை வகித்த அல்லது வகிக்கிற உரிமை பற்றிக் கப்பம் கேட்டது. 1764ம் ஆண்டு மராட்டியர்கள் மைசூர் மீது படையெடுத்ததால் ஐதர் அலி

யின் படைகள் இரு முறை தோல்வி அடைந்தன, ஆனால் ஐதர் 350 ஆயிரம் ரூபாய் செலுத்தி மராட்டியர்களுடன் சமாதானம் செய்து கொண்டான்.

இதன் பின்னர் பாலம், குடகு இரண்டையும் (மேற்குத் தொடர்ச்சி மலைக் கணவாய்கள் இருக்கும் சிற்றரசுகள்) ஐதர் தாக்கினான். பாலம் பணிந்து விட்டது. ஆனால் குடகுப் படைப் பிரிவுகளுடன் போராட்டம் 1768ம் ஆண்டு வரை நீடித்தது. மைசூர்ப் படைகள் தாற்காலிகமாகப் பின்வாங்கவும் சமாதானம் செய்து கொள்ளவும் நேர்ந்தது. ஐதரின் சேனை முகமதிய வர்த்தகர்களான மாப்பிள்ளைகளைப் பாதுகாக்கும் சாக்கில் பாலம் கணவாய் வழியே மலையாளக் கடற்கரை மீது படையெடுப்பு நடத்தியது. கள்ளிக்கோட்டையில் எல்லா முக்கியப் பதவிகளையும் வகித்துவந்த நம்பூதிரிகளும் வரி செலுத்தாமல் படைப்பணி ஆற்ற மட்டும் கடமைப்பட்டிருந்த நிலச் சொந்தக்காரர்களான நாயர்களும் 1765ம் ஆண்டு ஒரு சில நாட்களில் ஆறுயிரம் மாப்பிள்ளைகளை வெட்டிக் கொன்றிருந்தார்கள். இந்த நிகழ்ச்சியே ஐதரின் படையெடுப்புக்கு வெளிப்படையான காரணம் ஆயிற்று. நாயர்கள் காலாட்படை அணி வகுப்பில் மட்டுமே, பெரும்பாலும் வாட்களையும் விற்களையும் கொண்டு, போரிட்டார்கள். எனவே ஐதர் அலியின் படைகளுக்கு எதிர்நிற்க அவர்களால் முடியாதது இயல்பே. கண்ணனூர் அருகில் நடந்த போரில் நாயர்களின் சைனியம் படு தோல்வி அடைந்தது. ஐதர் அலி கள்ளிக்கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டான். மலையாள நிலம் அனைத்தின் மீதும் முதன் முதலாகக் கடுமையான வரி விதிக்கப் பட்டது. மூன்று-நான்கு மாதங்களுக்குப் பின் நாயர்கள் தங்கள் சுதந்திரத்தைக் காக்க மீண்டும் முயன்றார்கள். ஐதரின் படைகள் அப்போது கோயம்புத்தூரில் இருந்தன. அடை மழை பெய்து கொண்டிருந்தது, ஆறுகளில் வெள்ளம் பெருகிக் கொண்டிருந்தது. இந்த நிலையில் மலையாளக் கரை ஐதரின் படைகளிலிருந்து துணிக்கப்பட்டு விட்டது என்று நம்பிய நாயர்கள் கிளர்ந்து எழுந்து ஐதர் அலி விட்டுச் சென்றிருந்த காவற்படைகளைத் தாக்கிப் படுகொலை செய்தார்கள். ஆனால் ஐதர் அலி பருவ மழையைப் பொருட்படுத்தாமல் மீண்டும் கள்ளிக்கோட்டை மீது படையெடுத்து அந்த அரசை வாளுக்கும் நெருப்புக்கும் இரையாக்கினான். பதினாயிரத்துக்கும் மேல் நாயர்கள் மைசூரின் மையப் பகுதியில் குடிவைக்கப்பட்டார்கள்.

இதை அடுத்து ஐதர் திருவிதாங்கூர் மீது படையெடுத்தான். இதைக் கண்டு வெருண்ட மராட்டியர்களும் ஹைதராபாது நிஜாமும் ஆங்கிலேயரின் கையாளான ஆர்க்காட்டு நவாபும் ஐதருக்கு எதிராக ஒன்று திரண்டனர். தன் இந்தியப் பகைவர்களை ஐதர் பணம்

கொடுத்துச் சரிக்கட்டி விட்டான். ஆனல் ஆங்கிலேயர் பாராமகாலில் புகுந்து, மைசூரின் மையமான தலேநகர் சீரங்கபட்டணத்துக்கு முன் னேறும் ஆபத்தை ஏற்படுத்தினர். இதை அறிந்த ஐதரின் மகன் திப்பு தன் குதிரைப் படையுடன் ஆர்க்காட்டைத் தாக்கினன். இவ்வாறு முதலாவது ஆங்கில-மைசூர்ப் போர் 1767ம் ஆண்டு தொடங்கியது.

முதலாவது
ஆங்கில-மைசூர்ப் போர்

தென் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களே வென்றும் வங்காளத்தை வசப்படுத்தியும் இருந்த ஆங்கிலேயர்கள் ஐதர் அலி மீதும் அவ் வளவே விரைவாக வெற்றி பெறலாம் என்று எதிர்பார்த்தார்கள். ஆனல் 1767ம் ஆண்டு செங்கம், திருவண்ணுமலே ஆகிய இடங்களில் நடந்த முதல் சண்டைகளுக்குப் பின் ஐதர் அலி பொதுப் போர் களிலிருந்து விலகத் தொடங்கினன். அவன் வேறு போர்த் தந் திரத்தைக் கையாண்டான். புதிய போர்க் களத்துக்குத் தன் படை களே விரைவாக இட்டுச் சென்று தனிப் படைப் பிரிவுகளேயும் பல வீனமாகத் தற்காக்கப்பட்ட இடங்களேயும் தாக்கினன். ஆங்கிலச் சிப்பாய்க் காலாட்களுடன் ஒப்பிடுகையில் மைசூர்க் குதிரைப் படை யும் பீரங்கிப் படையும் அதிக விரைவாக இயங்க வல்லவையாக இருந்தமையால் இந்தப் போர்த் தந்திரம் ஐதருக்குச் சில வேளே களில் வெற்றி அளித்தது.

தொடக்கத்தில் போரின் போக்கு ஆங்கிலேயர்களுக்குச் சாதக மாய் இருந்தது, ஏனெனில் மைசூர் மீது சென்னேயிலிருந்தும் பம்பா யிலிருந்தும் தாக்கு நடத்தும் வாய்ப்பு அவர்களுக்கு இருந்தது. மலே யாளக் கடற்கரைப் பிரதேச மக்கள் பம்பாய்ச் சைனியத்தின் தூண்டு தலாலும் ஆதரவாலும் ஐதர் அலியின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். எனவே அவன் தன் முக்கியப் படைகளே மலேயாளப் பிர தேசத்திற்கு அனுப்ப வேண்டியதாயிற்று. இதற்குள் சென்னேப் படை மைசூரின் தென் கிழக்குப் பகுதிகள் யாவற்றையும் கைப்பற்றிக் கொண்டது. ஆயினும் பண்டசாலேகளிலிருந்து தொலேவில் இருந்த மையால் ஆங்கிலப் படையினர் பட்டினி கிடக்கலாயினர். அவர் களுடைய போர்த்திறன் குறைந்தது. ஐதர் அலி பொறுக்கியெடுத்த படைகளுடன் கருநாடகத்தைத் தாக்கி, கிராமங்களேத் தீக்கிரை ஆக்கிவிட்டு விரைந்து பாய்ந்து சென்னே நகர்ப்புறத்தை அடைந்து விட்டான். ஆங்கிலேயர்கள் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டியதாயிற்று. இதன்படி இரு தரப்பாரும் ஒருவரிட மிருந்து மற்றவர் கைப்பற்றிய நிலப்பரப்பைத் திருப்பித் தந்துவிட்டு, ''உடன்படிக்கை செய்துகொண்ட தரப்பாரில் ஒருவர் மீது பகைவன்

தாக்கு நடத்தினால்... பரஸ்பரம் உதவி செய்வதாக'' உறுதி அளித்தார்கள்.

ஆனால் 1770ம் ஆண்டு மராட்டியர்கள் மைசூரின் வடக்கே தாக்கி, ஐதர் ஆங்கிலேயரிடம் படையுதவி வேண்டியபோது, மராட்டியருடன் செய்துகொள்ளப்பட்ட நட்பு உடன்படிக்கையைக் காரணமாகக் காட்டி ஆங்கிலேயர் மறுத்து விட்டார்கள்.

அதுவரை இந்தியச் சிற்றரசர்கள் எல்லோரும் ஆங்கிலேயர்களைத் தங்களைப் போன்ற ஆட்சியாளர்களாகக் கருதி நடந்து வந்தார்கள். சிற்றரசர்கள் சில வேளைகளில் ஆங்கிலேயரிடம் பகைமை பாராட்டினார்கள், வேறு சில வேளைகளில் தங்கள் உள் விரோதிகளுக்கு எதிராக அவர்களோடு கூட்டு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். ஆங்கிலேயர்கள் இந்தியச் சிற்றரசுகளின் முக்கியப் பகைவர்கள் என்பதையும் அவர்களோடு ஒப்பந்தம் செய்துகொள்வது இயலாது என்பதையும் ஐதர் அலிதான் முதன் முதலாக 1770ம் ஆண்டில் புரிந்து கொண்டான். ''...ஐதர் அலியும் அவனுடைய மகன் திப்பு சாயபும் ஆங்கிலேயர்களிடம் என்றென்றும் வெறுப்பு பாராட்டுவதாகவும் அவர்களை அழிப்பதாகவும் குர்ஆன் மீது ஆணையாகச் சபதம் பூண்டார்கள்.''*

1772ம் ஆண்டு படையெடுத்து வந்த மராட்டியர்களை ஐதர் அலி பணம் கொடுத்துச் சரிக்கட்டி விட்டான். போரிடும் படைகளால் நாடு சீரழிக்கப்படுவதன் விளைவாக மைசூரின் எல்லா வளங்களும் கேடுறும் அபாயம் நேரும் என அவன் புரிந்து கொண்டான்.

வெறுமை ஆகிவிட்ட பொக்கிஷத்தை நிறைப்பதற்காக ஐதர் அலி மானியக்காரச் சிற்றரசர்களிடமிருந்து, சிறப்பாக மராட்டியர் தாக்குதலின்போது அவர்களோடு சேர்ந்து கொண்டவர்களிடமிருந்து வர வேண்டிய கப்பத் தொகையை அதிகமாக்கினான். 1772—1773ல் ஐதர் மலையாளக் கடற்கரைப் பிரதேசத்தை மீண்டும் வசப்படுத்தினான். 1774ம் ஆண்டு குடகைக் கைப்பற்றினான்.

முதலாவது ஆங்கில-மராட்டியப் போர்

இந்தக் காலத்திற்குள் ஆங்கில-மராட்டியப் போர்கள் மூண்டு விட்டன. ஐதர் அலி அவற்றில் இழுக்கப்பட்டான். 1761ம் ஆண்டு மூன்றாவது பானிப்பட்டுப் போரில் மராட்டியப் படைகள் முறியடிக்கப்பட்ட பின் மற்ற மராட்டியச் சிற்றரசர்கள் மீது பேஷ்வாவின்

---

* கார்ல் மார்க்ஸ், இந்திய வரலாற்றின் கால வரிசைக் குறிப்புகள் (664-1858), பக்கம் 76.

அதிகாரம் தளர்ந்தது. குவாலியரும் (சிந்தியா வம்சம்) இந்தூரும் (ஹோல்க்கார்) முன்னணிக்கு வந்தன. ஆயினும் பேஷ்வா முதலாம் மாதவ ராவின் ஆட்சிக் காலத்தில் (1761—1772) மகாராஷ்டிரம் தென் இந்தியாவில் முக்கியப் பங்கு ஆற்றியது. முதலாம் மாதவ ராவ் இறந்த பிறகு பூனாவில் ஆட்சியின் பொருட்டுப் போராட்டம் உக்கிரமாக மூண்டது. போட்டியாளர்களில் ஒருவன் ஆன ரகுநாத ராவ் (ரகோபா) முதலில் ஐதர் அலியிடம் உதவி வேண்டினான். ஆனால் குடகுப் படையெடுப்பில் முனைந்திருந்த ஐதரால் உதவி அளிக்க முடியவில்லை. எனவே ரகுநாத ராவ் பம்பாய்க் கவுன்சிலுடன் சூரத்தில் உடன்படிக்கை செய்து கொண்டான். இதன்படி பசேன், சால்செட், பம்பாய்க்கு அருகே இருந்த சிறு தீவுகள் ஆகிய மராட்டியப் பிரதேசங்கள் ஆங்கிலேயர் வசமாயின. தவிரவும், இரண்டாயிரத்து ஐந்நூறு பெயர் கொண்ட படைப் பிரிவின் பராமரிப்புக்காக மாதம் 150 ஆயிரம் ரூபாய் தருவதாக ரகுநாத ராவ் ஒப்புக் கொண்டான்.

ஆனால் மகாராஷ்டிரத்துக்குள் புகுந்த ஆங்கிலப் படைகள் மராட்டியச் சிற்றரசர்கள் கூட்டின் தீவிர எதிர்ப்பைச் சமாளிக்க நேர்ந்தது. இந்தியாவில் இருந்த ஆங்கில ஆட்சிப் பிரதேசங்கள் யாவற்றுக்கும் தலைவன் என்ற முறையில் ஹேஸ்டிங்ஸ் சூரத் உடன்படிக்கையை ரத்து செய்துவிட்டு, ரகுநாத ராவின் பகைவனும் குழந்தையான பேஷ்வா இரண்டாம் மாதவ ராவின் அமைச்சனுமான நானா பட்நவீசுடன் புரந்தரில் ஒப்பந்தம் செய்து கொண்டான். இந்த ஒப்பந்தப்படி, கம்பெனியின் படைகளை வெளிக் கொண்டு செல்வதற்காக அதற்குப் பன்னிரண்டு லட்சம் ரூபாய் ரொக்கமாகத் தரவும் மேற்கொண்டு ஆண்டு தோறும் மூன்று லட்சம் ரூபாய் வருவாய் தரக் கூடிய பிரதேசங்களைக் கொடுக்கவும் பேஷ்வா இசைந்தான். சால்செட் தீவு ஆங்கிலேயரிடம் தங்கி விட்டது. ஆனால் பம்பாய்க் கவுன்சில் ஹேஸ்டிங்சுக்குக் கீழ்ப்படியவில்லை. ரகுநாத ராவுக்கு ஆட்சி அதிகாரத்தை அளிக்கும் பொருட்டுப் படைகளை மகாராஷ்டிரத்துக்கு மீண்டும் அனுப்பியது.

இந்த பம்பாய்ச் சேனை மகதாஜி சிந்தியாவின் படைகளால் பூனாவுக்கு இருபது கிலோமீட்டர் தூரத்தில் பர்காம் என்னும் இடத்தில் சூழ்ந்து கொள்ளப்பட்டது. அதன் நிலைமை பெரிதும் நெருக்கடி நிறைந்ததாக இருந்தது. ஆனால் மகதாஜி சிந்தியாவைப் பேஷ்வாவின் சார்பற்ற சுதந்திர அரசனாக ஏற்றுக் கொள்வதாக ஆங்கிலேயர் வாக்களிக்கவே சிந்தியா ஏமாந்து பர்காமில் ஆங்கிலேயருடன் ஒப்பந்தம் செய்து கொண்டான். இதன்படி பேஷ்வா ரகுநாத ராவை ஒப்படைப்பதாகவும் 1776ம் ஆண்டு முதல் வென்ற எல்லாப் பிரதேசங்களையும் மராட்டியருக்குத் திருப்பிக் கொடுத்துவிடுவதாகவும்

ஆங்கிலேயர் உறுதி அளித்தார்கள். சிந்தியா ஆங்கிலப் படையை பம்பாய் திரும்ப அனுமதித்தான். படைகள் ஆபத்தில்லாத இடத்தைச் சேர்ந்ததும் பம்பாய் மாகாணக் கவுன்சில் பர்காம் ஒப்பந்தத்தை உறுதிப்படுத்த மறுத்து விட்டது. ஏமாற்றப்பட்ட மராட்டியத் தலைவர்கள் 1780ம் ஆண்டு ஐதர் அலியோடும் நிஜாமோடும் சேர்ந்து கொண்டார்கள். ஐதர் அலியால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள் மைசூரைச் சேர்ந்தவை என்று ஒப்புக்கொள்வதாக மராட்டியர்களும் நிஜாமும் உறுதி அளித்தார்கள். ஐதர் அலியின் படைகள் கருநாடகத்தின் மீது முடிவான தாக்கு நடத்த வேண்டும் என்றும் போராட்டத்தின் பெரும்பகுதிச் சுமையைத் தாங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரினார்கள். அந்தக் காலத்தில் பிரான்சு கானடாவில் இருந்த தன் ஆட்சிப் பிரதேசங்களுக்காக ஆங்கிலேயரோடு போரிட்டு வந்த தால் பிரெஞ்சுக்காரர்கள் ஐதருக்கு உதவுவதாக வாக்களித்தார்கள். இவ்வாறு தொடங்கியது இரண்டாவது ஆங்கில-மைசூர்ப் போர். ஆங்கில அலுவலன் ஒருவனது சொற்படி இந்தப் போரின் ''ஒப்புக் கொள்ளப்பட்ட குறிக்கோளாக இருந்தது இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை அழிப்பதே.''

அந்தக் காலத்தில் ஆங்கிலக் கைப்பற்றுளர்களை இந்தியாவில் எதிர்த்து நிற்க வல்லவையாக இருந்தவை இரண்டு சக்திகள் தாம். ஒன்று மராட்டியச் சிற்றரசுகளின் கூட்டு, மற்றது மைசூர். ஆனால் மைசூர் அரசு அதிக மையப்பாடும் உறுதியும் கொண்டிருந்தது. அதனிடம் அதிக நவீன சைனியம் இருந்தது. அரசின் மையத்தில் அதிக ஒரே வகையான (அதாவது தேசிய இன நோக்கில்) மக்களைக் கொண்டிருந்தது. எனவே தான் 18ம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் இந்தியாவில் ஆங்கிலேயரின் படையெடுப்பை எதிர்ப்பதில் மைசூர் தலைமைச் சக்தியாகச் செயல்பட்டது. ஆனால் மைசூருக்கு ஒரு பலவீனம் இருந்தது. மைசூருடன் அண்மையில் சேர்க்கப்பட்ட மலையாளம், குடகு முதலிய பிரதேசங்களின் மக்கள் அதிருப்தியைக் காட்டினார்கள். ஆங்கிலேயர்கள் இந்த இடங்களில் பல முறை கிளர்ச்சிகளைத் தூண்டி விட்டார்கள், ஆனால் ஐதர் அவற்றை அடக்கி விட்டான். மைசூரில் நில வரி வசூலை அவன் கண்டிப்பாகக் கண்காணித்தான். வரி வசூலிப்பவர்கள் ஒளித்து வைத்த பணத்தை வெளியில் எடுக்கச் செய்வதற்காக அவர்களைச் சவுக்கால் அடிப்பித்தான். அவனது மதக் கொள்கை பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. இந்துக்களின் மத உணர்ச்சிகளைப் புண்படுத்தாதிருக்க ஐதர் முயன்றான். அவன் வர்த்தகத்துக்கும் கைத்தொழில்களுக்கும் ஆதரவு அளித்தான். ஐரோப்பியப் பொறியாளர்களின் தலைமையில் சில ஆயுதத் தொழிற் சாலைகளை நிறுவினான்.

இரண்டாவது ஆங்கில-மைசூர்ப் போர்

1780ம் ஆண்டில் ஐதர் அலி கருநாடகத்தின் மேல் படையெடுத்தான். அவன் நடத்திச் சென்றது தென் இந்தியாவில் எக்காலத்திலும் செயல்பட்ட சேனைகள் எல்லாவற்றிலும் பெரிது. சேனையின் ஒரு பகுதி எதிர்பாராமல் தாக்கிப் போர்ட்டோ-நோவோ என்னும் முக்கியத் துறைமுகத்தைக் கைப்பற்றியது. மற்றொரு பகுதி ஐதரின் மகன் திப்புவின் தலைமையில் ஆர்க்காட்டை முற்றுகை இட்டது. கர்னல் பெய்லியின் பெரிய படைப் பிரிவு திப்புவின் படைகளால் சூழ்ந்து கொள்ளப்பட்டுப் பெரும்பாக்கம் (பொள்ளலூர்) போரில் அழிக்கப் பட்டது. ஆங்கிலப் படைகளின் தலைமைத் தளகர்த்தன் மன்ரோ காஞ்சீபுரத்திலிருந்து சென்னைக்குப் பின்வாங்க வேண்டியதாயிற்று. விரைவில் ஆர்க்காடு வீழ்ந்தது. நடப்பில் கருநாடகம் முழுதும் ஐதர் அலியின் ஆதிக்கத்தின் கீழ் வந்து விட்டது.

ஆனால் சிறந்த ஆங்கிலத் தலைமைத் தளகர்த்தன் அயர் கூட் என்பவன் கீழ் வங்காளத்திலிருந்து அனுப்பப்பட்ட உதவிப் படை வந்து விட்டது. தவிர, ஹைதராபாது நிஜாமுடன் ஆங்கிலேயர் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி ஹைதராபாது ஆங்கில எதிர்ப்புக் கூட்டணியிலிருந்து விலகி விட்டது. கைம்மாறாக, ஆங்கிலேயர் குண்டூர் மாவட்டத்தை (முன்பு ஆங்கிலேயரால் பிடிக்கப்பட்டிருந்தது இது) ஹைதராபாதுக்குக் கொடுத்தார்கள். இந்த நிகழ்ச்சிகள் போரின் போக்கை மாற்றி விட்டன. மரீஷஸ் தீவிலிருந்து வந்த பிரெஞ்சுப் படைகள் கரை இறங்குவதைக் கூட தரையிலிருந்தும் ஆங்கில அட்மிரல் ஹியூஸ் கடலிலிருந்தும் தடுத்து விட்டார்கள். இதன் பின் 1781ம் ஆண்டில் போர்ட்டோ-நோவோ, பெரும்பாக்கம், சோளங்கூர் ஆகியஇடங்களில் கூட ஐதர்அலி மீதுஅனேக வெற்றிகள் அடைந்தான்.

மலையாளக் கடற்கரைப் பிரதேசத்திலும் பாலத்திலும் குடகிலும் மைசூருக்கு எதிராகக் கிளர்ச்சிகள் தொடங்கின. டச்சுக்காரர்கள் ஐதருடன் கூட்டு சேர்ந்து விடுவார்களோ என்று அஞ்சி ஆங்கிலப் படைகள் தென் இந்தியாவில் டச்சுக்காரரின் மையமாக இருந்த நாகப்பட்டினத்தைக் கைப்பற்றிக் கொண்டன. புக முடியாததாகக் கருதப்பட்டு வந்தது மகதாஜி சிந்தியாவின் தலைநகரான குவாலியர்க் கோட்டை. ஆங்கிலப் படைப் பிரிவுகள் இரவில் திடீர்த் தாக்கு நடத்தி அதைக் கைப்பற்றி விட்டன. சால்பாய் என்னும் இடத்தில் 1782ம் ஆண்டு ஆங்கிலேயருடன் சிந்தியா உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டியதாயிற்று. இதன்படி சிந்தியா சுதந்திர அரசனாக ஏற்கப்பட்டான். மற்ற மராட்டியத் தலைவர்களும் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடுவதைக் கைவிட்டார்கள்.

ஐதர் அலிக்கு மிகச் சங்கடமான அந்தக் கணத்தில் அட்மிரல் சுப்ரேன் என்பவன் தலைமையில் பிரான்சிலிருந்து கப்பற் படைப் பிரிவு வந்து சேர்ந்தது. 1782ம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னை அருகே நடந்த கடற் போரில் சேதமுற்ற ஹியூஸின் கப்பல்கள் பின்வாங்க நேர்ந்தது. கர்னல் பிரைட்வெயிட்டின் பெரிய ஆங்கிலப் படைப் பிரிவுகள் ஆனகுடி என்னும் இடத்தருகே திப்புவின் சைனியத்தால் சூழப் பட்டு அழிக்கப்பட்டன. ஓர் இந்திய வரலாற்றாளர் தரும் சான்றுகளின்படி ஆங்கிலேயரின் தெற்குச் சேனை பெரிதும் தளர்ந்து போய், சிறிது காலத்துக்கு மேல் நடக்க இயலாதது ஆயிற்று. பிரெஞ்சுப் படைகள் கரை இறங்குவதை எதிர்பார்த்து ஐதர் அலி 1782ம் ஆண்டு ஏப்ரல் மாதம் துறைமுக நகர் கூடலூரைப் பிடித்துக் கொண்டான். அதுவே பிரெஞ்சுப் படைகளின் தளமாக விளங்க வேண்டி இருந்தது. பிரெஞ்சு, ஆங்கிலக் கடற் படைப் பிரிவுகள் இன்னும் சில தடவைகள் போரிட்டன. ஆனால் வெற்றி-தோல்வி தெளிவுபடவில்லை. நீண்ட காலமாக நோயுற்றிருந்த ஐதர் அலி 1782ம் ஆண்டு டிசம்பர் மாதம் இறந்து போனான். அவனுடைய மகன் திப்பு சுல்தான் தகப்பனின் கொள்கையையே அடிப்படையில் தொடர்ந்து கடைப்பிடித்தான். ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து விரட்டுவதே தனது முதன்மைக் குறிக்கோள் என அவன் கருதினான். அவன் திறமை சான்ற படைத் தலைவன். சேனையைத் தன் பின் நடத்திச் செல்லத் திறன் பெற்றிருந்தான்.

ஆயினும் தனது ஆட்சியின் தொடக்கத்திலேயே திப்பு பெரிய தவறு செய்தான். ஐதர் அலியின் அன்பைப் பெற்றவனும் தன்னால் வெறுக்கப்பட்டவனும் ஆன பிதனூர் கோட்டைத் தலைவன் ஷேக் ஐயாஸ் என்பவனைக் கொன்றுவிடும்படி இவன் இரகசிய ஆணையை அனுப்பினான். இந்த ஆணை ஐயாஸின் கைகளில் அகப்பட்டுவிட்டது. அவன் உயிர் பிழைக்கும் பொருட்டு 1783ம் ஆண்டு ஜனவரி மாதம் பிதனூரைப் பம்பாய் சேனைத் தலைவன் ஜெனரல் மாத்தியூஸிடம் ஒரு குண்டு சுடாமல் ஒப்புக் கொடுத்து விட்டு ஆங்கிலேயர் தரப்புக்கு மாறி விட்டான். பிதனூரை இழந்தது திப்புவுக்குப் பெருத்த அடியாக இருந்தது. மைசூரின் இதயத்தில் புக ஆங்கிலேயருக்கு வழி திறந்து விட்டது.

திப்புவின் நற்காலம், பம்பாய்ச் சைனியம் இந்தியாவில் இருந்த ஆங்கிலச் சேனைகள் எல்லாவற்றிலும் பலம் குறைந்ததாக இருந்தது. மாத்தியூசோ இயல்பான திறமையும் மனவுறுதியும் இல்லாத தளகர்த்தனாக இருந்தான். பிதனூர்க் கோட்டையைப் பிடித்துக் கொண்ட பின் மாத்தியூசும் அவனுடைய சேனையின் அதிகாரிகளும் அங்கே வைக்கப்பட்டிருந்த பெருத்த பொக்கிஷத்தைக் கவர்ந்து

கொண்டார்கள். சிப்பாய்களோ, செல்வம் கொழித்த அந்த நகரின் மக்களைக் கொள்ளையடித்தார்கள். பம்பாய்ச் சேனையில் சீரழிவு தொடங்கியது. திப்பு தன் படைகள் அனைத்தையும் நகருக்குக் கொண்டுவந்து பட்டினியால் சோர்ந்த நகரத்தைக் கைப்பற்றினான். மாத்தியூஸ் சரண் அடைந்தான். பிதனூரை வசப்படுத்திக் கொண்ட பின் திப்பு மலையாளக் கடற்கரைப் பிரதேசத்தில் தாக்கிப் புகுந்தான். ஆங்கிலேயரிடமிருந்து அவன் பல கோட்டைகளைக் கைப்பற்றினான். 1783ம் ஆண்டு, மலையாளக் கடற்கரையில் பம்பாய்ச் சேனையின் கடைசி ஆதாரத் தளமாக இருந்த மங்களூரை அவன் முற்றுகை இட்டான். அந்த நேரத்தில் பிரான்சிலிருந்து உதவிப் படை கிழவன் ஆகிவிட்ட புஸ்ஸியின் தலைமையில் கூடலூர் வந்து சேர்ந்தது.

இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் சமாதானம் ஏற்பட்டு விட்டதாக 1783ம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியாவுக்குச் செய்தி கிடைத்தது. எல்லாப் பிரெஞ்சுக்காரர்களும், அதாவது, புஸ்ஸியுடன் கூடலூருக்கு வந்தவர்கள் மட்டும் இன்றித் திப்புவிடம் படைப் பணி புரிந்து மங்களூர் முற்றுகையில் பங்கு கொண்டவர்கள் கூட, ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் தொடர்ந்து போர் நடத்த மறுத்து விட்டார்கள். மறு புறம், ஆங்கிலேயரின் கூட்டாளி ஆகி இருந்த சிந்தியாவின் படைகள் மைசூரைத் தாக்கும் அபாயம் இருந்தது. இந்த நிலையில் மைசூர்ப் படைகளை மாத்திரம் வைத்துக் கொண்டு மங்களூர் முற்றுகையைத் தொடர்வதற்கான முயற்சி தோல்வியில் முடிந்தது. திப்பு வேறு வழியின்றி 1784, மார்ச்சு 11ந் தேதி மங்களூர் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டியதாயிற்று. இதன்படி அவன் தன் படைகள் எல்லாவற்றையும் கருநாடகத்திலிருந்து திருப்பி அழைத்துக்கொள்ள இசைந்தான். ஆங்கிலேயர் மலையாளப் பிரதேசத்திலிருந்து போய்விடுவதாக வாக்களித்தார்கள். முடிவில் இரு தரப்பாரும் போர்க் கைதிகளைத் திருப்பி அனுப்புவதாக உறுதி கூறினார்கள். திடீர்த் திருப்பங்கள் நிறைந்த இரண்டாவது ஆங்கில-மைசூர்ப் போர் இவ்வாறு முடிவு அடைந்தது.

இயந்திரப் புரட்சியின் விளைவுகள் ஆங்கிலப் படை வலிமை வரவர அதிகரிப்பதற்குப் பெரிதும் காரணமாய் இருந்தன. மங்களூர்ச் சமாதானத்துக்குப் பிறகு மைசூருடன் போராட்டத்தில் இங்கிலாந்தே தாக்கும் தரப்பாக இருந்து வந்தது. தனது வெற்றியில் நம்பிக்கை காரணமாகப் போரைத் தூண்டி விட்டது. எனவே திப்புவும் தன் போர்த் தந்திரத்தை மாற்றிக் கொண்டான். ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்தில் முகமதிய ஆட்சியாளர்கள் இடையே புதிய கூட்டாளிகளை அவன் தேடினான். திப்பு சுல்தானின் வெளிநாட்டு, உள்நாட்டுக் கொள்கை ஐதர் அலியின் கொள்கையிலிருந்து வேறுப்

இருந்தது. இதற்குப் பெருமளவு காரணம் இவ்வாறு உருவான சூழ் நிலையே ஆகும்.

தென் இந்தியாவில் தங்கள் போட்டியின் விளைவாகப் புதிய போர் மூளும் என்பதை ஆங்கிலேயரும் திப்பு சுல்தானும் அறிந்திருந்தார் கள். எனவே அவர்கள் அதற்கு முன்னேற்பாடுகள் செய்தார்கள். 1786—1787ல் திப்பு மராட்டியரோடும் ஹைதராபாதோடும் போரிட்டு வெற்றி அடைந்து சில மராட்டியச் சிற்றரசுகளைத் தன் ஆட்சிப்பரப்பில் சேர்த்துக் கொண்டான். எனினும், வெற்றி பெற்ற போதிலும் மராட்டியருக்குப் பெரிதும் சாதகமான நிபந்தனைகளின் பேரில் அவன் சமாதானம் செய்து கொண்டான், ஏனெனில் அவர்களை ஆங்கிலேயருடன் கூட்டு சேருமாறு நிர்ப்பந்திக்க அவன் விரும்ப வில்லை. தனது தலைநகர் சீரங்கபட்டணத்தில் 1787ம் ஆண்டு திப்பு பாதுஷா பட்டம் சூட்டிக்கொண்டான். மைசூரின் இந்து அரசனது போலி ஆட்சிக்கு இவ்வாறு அவன் முற்றுப்புள்ளி வைத்துவிட்டான்.

ஆங்கிலக் கைப்பற்றுளர்களுடன் புதிய போர் மூளும் என முன் கண்டு திப்பு பிரான்சிடம் உதவி கோரினான். இரண்டு தூதுக் குழுக் களை அவன் பிரான்சுக்கு அனுப்பினான். இவற்றில் ஒன்று துருக்கியின் தலைநகர் இஸ்தாம்பூல் வரை போய்விட்டு மேலே செல்ல முடியாமல் திரும்பிவிட்டது. மற்றது 1788ம் ஆண்டு ஜூலை மாதம் குறித்த இடம் போய்ச் சேர்ந்தது. ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் தற்காப்பு, தாக்குக் கூட்டு ஏற்படுத்திக் கொள்ளும்படி திப்பு பிரான்சுக்கு யோசனை தெரிவித்தான். திப்புவின் தூதர்கள் வெர்சேல்ஸில் ஆடம் பரமாக வரவேற்கப்பட்டார்கள். ஆனால் பூர்ஷுவாப் புரட்சி நிகழும் தறுவாயில் இருந்த பிரான்சின் உள் நிலைமை தொலைதூர இந்தியா வுக்குப் படைகளை அனுப்ப வாய்ப்பு இல்லாதவாறு செய்து விட்டது.

1784லும் 1785லும் திப்பு சுல்தான் இஸ்தாம்பூலுக்கு இரண்டு தூதுக் குழுக்களை அனுப்பி, சோதர முஸல்மானுக்கு ஆதரவு அளிக்கும்படித் துருக்கி சுல்தானை வேண்டினான். ஆனால் ருஷ்யாவுடன் போரில் ஈடுபட்டிருந்த துருக்கி தானே இங்கிலாந்தின் உதவியை எதிர் பார்த்திருந்தமையால் திப்புவுக்கு உதவ விரும்பவில்லை.

இதற்கிடையே மலையாளக் கரைப் பிரதேசத்திலும் குடகிலும் மேலும் மேலும் புதிய கிளர்ச்சிகள் மூண்டன. 1786ம் ஆண்டு திப்பு சுல்தான் மலையாளக் கரைப் பிரதேசத்தை உண்மையில் மீண்டும் போராடிக் கைப்பற்ற வேண்டி வந்தது. மைசூர்க் காவற் படைகள் மீது நாயர்களின் தாக்குதல்கள் 1788ம் ஆண்டிலும் தொடர்ந்தன. 1789ம் ஆண்டு குடகில் கிளர்ச்சி உக்கிரமாக மூண்டெழுந்தது. திப்பு வின் சேனை குடகில் இருந்தபோது மலையாளக் கரை கிளர்ந்து எழுந்

தது. மைசூர்ப் படைகள் மலையாளக் கரை சென்றதும் குடகர்கள் மைசூர்க் காவற் படைகளிடமிருந்து தங்கள் நாட்டை மீண்டும் விடுவித்தார்கள். முக்கியக் கோட்டை ஒன்றுதான் மைசூர்ப் படைகளிடம் எஞ்சி இருந்தது.

குடகை அடக்குவதற்கு மீண்டும் படையெடுத்துச் செல்லத் திப்புவுக்கு முடியவில்லை, ஏனென்றால் திருவிதாங்கூரின் செயல்கள் அவனுக்கு அதிகக் கவலை ஏற்படுத்தின.

திருவிதாங்கூரின் ஏற்றமும் சிறு குறுநிலத்திலிருந்து ஒப்புநோக்கில் வலிய அரசாக அதன் மாற்றமும் 17ம் நூற்றாண்டின் முற்பாதியில் நிகழ்ந்தன. திருவிதாங்கூர் ராஜா மலையாளக் கடற்கரையின் தென் பகுதி முழுவதையும் வென்று கடற்கரைப் பிரதேசம் அனைத்தையும் சிறிது சிறிதாக வசப்படுத்தத் திட்டம் இட்டான். ஆனால் இந்த விஷயத்தில் ஐதர் அவனை முந்திக் கொண்டான். தன் முதன்மைப் பகைவன் மைசூர் தான் என்று அப்போது திருவிதாங்கூர் மன்னன் முடிவு செய்தான். எனவே அவன் ஆங்கிலேயருடன் நட்பு ஏற்படுத்திக் கொள்ள முயன்றான். இரண்டாவது ஆங்கில-மைசூர்ப் போரின் போது அவன் ஆங்கிலச் சேனைக்கு உதவி செய்தான். திப்புவின் தாக்குதலை எதிர்பார்த்து அஞ்சி, படைத்துணை உடன்படிக்கைப் படி 1788ம் ஆண்டில் சிப்பாய்களின் இரண்டு பட்டாளங்களை தன் அரசில் வைத்துக் கொண்டான். மைசூரின் மானியப் பிரதேசம் ஆன கொச்சியின் நிலப்பரப்பில் அவன் அரண்கள் அமைக்கத் தொடங்கினான். 1789ம் ஆண்டு இறுதியில் திப்புவின் படைகள் இந்த அரண் வரிசைகளைத் தாண்டி உட்புகுந்தன, ஆனால் முறியடிக்கப்பட்டன. ஆனால் அரண்வரிசையைக் கைப்பற்றுவதற்கான இரண்டாவது முயற்சி வெற்றி பெற்றது. திருவிதாங்கூர்ப் படை ஓட்டம் எடுத்தது. அப்போது ஆங்கிலேயர்கள் தங்கள் கூட்டாளியான திருவிதாங்கூரைக் காப்பாற்றும் சாக்கில் மைசூர் மீது படையெடுத்தனர்.

மூன்றாவது, நான்காவது ஆங்கில-மைசூர்ப் போர்கள்

இந்தியாவின் கவர்னர் ஜெனரல் கார்ன்வாலிஸ் (1786-1793) போருக்கு முன்னர், 1790ம் ஆண்டு மைசூருக்கு எதிராகப் பேஷ்வாவுடனும் நிஜாமுடனும் இராணுவ உடன்படிக்கை செய்து கொண்டான். இதன்படி வெற்றிக்குப் பின் ஆங்கிலேயர்களின் கூட்டாளிகளுக்கு அவர்களிடமிருந்து ஐதராலும் திப்புவாலும் பிடுங்கிக் கொள்ளப்பட்ட ஆட்சிப் பரப்புக்கள் திரும்பக் கிடைத்து விடும். தொன்று தொட்டு மைசூரின் பகுதிகளாக இருந்த நிலங்கள் கம்பெனிக்கும் பூனாவுக்கும் ஹைதராபாதுக்கும் இடையே சமமாகப் பகிர்ந்து

கொள்ளப்படும். நிஜாமும் பேஷ்வாவும் தலைக்கு இருபத்தையாயிரம் துருப்புக்களைப் போரில் ஈடுபடுத்தி ஆங்கிலேயருடன் ஒரே நேரத்தில் சண்டை தொடங்க வேண்டும். அதே சமயம் குடகிலும் கொச்சியிலும் மலையாளக் கரைப் பகுதியிலும் இருந்த மைசூர் மீது அதிருப்தி கொண்ட நபர்களோடு கார்ன்வாலிஸ் தொடர்பு கொண்டான். போரில் அவர்களுக்கு உதவுவதாகவும் அந்த இடங்கள் கம்பெனியின் மானியப் பிரதேசங்கள்ஆனால் ''மிகவும் மிதமான கப்பமே'' வசூலிக்கப் போவதாகவும் அவன் அவர்களுக்கு வாக்குறுதி அளித்தான்.

கார்ன்வாலிசின் போர்த் தந்திரத் திட்டப்படி ஆங்கிலப் படைகள் மூன்று புறங்களிலிருந்து மைசூருக்குள் தாக்கிப் புகுந்தன. மைசூரின் எல்லைப் பகுதிகளைச் சீரழித்து மைசூர்க் குதிரைப் படையிடமிருந்து ஆங்கிலப் படைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது மராட்டியர்களதும் நிஜாமினதும் கடமையாக இருந்தது. கூட்டாளிகளின் ஒன்றித்த படைகளில் 57 ஆயிரத்துக்குக் குறையாத துருப்புக்கள் இருந்தன. பங்களூர் கைப்பற்றவும் அழிக்கவும் பட்டது. பின்னர் ஆங்கிலப் படைகள் சீரங்கபட்டணத்தை முற்றுகை இட்டன. மூன்று வார முற்றுகைக்குப் பின் திப்பு சுல்தான் சமாதானத்துக்கு இசைய நேர்ந்தது. கார்ன்வாலிசுக்கும் சமாதானம் தேவையாக இருந்தது. அவனுடைய படைகளுக்கு உணவுப் பண்டங்களும் தளவாடங்களும் சரியாக வரவில்லை. சுமை விலங்குகளிடையே சாவுகள் நேரலாயின.

சீரங்கபட்டணம் சமாதான உடன்படிக்கை 1792ம் ஆண்டு கையெழுத்தாயிற்று. இதன் படி திப்பு 330 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு செலுத்த வேண்டி இருந்தது. இந்தத் தொகை முழுவதையும் செலுத்தும் வரை அவன் தன் இரண்டு புதல்வர்களைப் பிணையாக ஆங்கிலேயரிடம் விட்டு வைக்க நேர்ந்தது. மராட்டியர்கள் கிருஷ்ணை ஆறு வரை தங்கள் முந்திய ஆட்சிப் பிரதேசங்களைத் திரும்பப் பெற்றார்கள். ஹைதராபாதுக்குத் துங்கபத்திரா, கிருஷ்ணை ஆறுகளின் இடையில் இருந்த தன் முந்திய நிலப் பகுதி கிடைத்தது. ஆங்கிலேயர்களோ, பாராமகாலையும் திண்டுக்கல்லையும் மலையாளக் கரைப் பிரதேசம், குடகு ஆகியவற்றின் கணிசமான பகுதிகளையும், அதாவது, கருநாடகத்திலும் பம்பாயிலுமிருந்து மைசூருக்குச் செல்வதற்கான வாயில்கள் அனைத்தையும், தங்கள் ஆட்சிப் பரப்பில் சேர்த்துக் கொண்டார்கள். ஆயினும் கார்ன்வாலிஸ் மைசூரை அழிக்க விரும்பவில்லை. மராட்டியர்களுக்கு எதிர்நிறையாக அதைச் சுதந்திர அரசாக வைத்திருக்க அவன் முடிவு செய்தான்.

போர் முடிந்ததும் திப்பு அரசு அதிகாரத்தை உறுதிப்படுத்துவதில் முனைந்தான். உள் விவகாரங்களில் அவன் அனேக சீர்திருத்தங்

கள் செய்தான். இவற்றின் நோக்கம் நாட்டைப் புதிய போருக்கு ஆயத்தப்படுத்துவதாக இருந்தது. முதலாவதாகச் சைனியம் மாற்றி அமைக்கப்பட்டது. குதிரைப் படையினரின் எண்ணிக்கை குறைக்கவும் காலாட்களின் எண்ணிக்கை அதிகமாக்கவும் பட்டன. நஷ்ட ஈடு செலுத்தவும் சேனையைப் பராமரிக்கவும் பெருந் தொகையான பணம் தேவைப்பட்டது. எனவே திப்பு நில வரியை 30 சதவிகிதமாகவும் வர்த்தகத் தீர்வைகளையும் கட்டணங்களையும் 7 சதவிகிதத்துக்கு மேலும் அதிகப்படுத்தினன். பாளையக்காரர்கள், ஜாகீர்தார்கள் போன்ற சிறு நிலப்பிரபுக்களிடமும் இந்துக் கோயில்களிடமும் இருந்து, மக்களுக்குக் கடுமையான அதிருப்தி உண்டாகாத இடங்களில் எல்லாம், நிலங்களைப் பிடுங்கிக் கொள்ளவும் அவன் தலைப்பட்டான்.

மைசூர் ராஜாவின் தரப்பாளர்களான இந்துப் பரிசனங்கள் திப்பு சுல்தானுக்குப் பல முறை துரோகம் செய்திருந்தார்கள். எனவே அவன் முகமதியர்களை மிக அதிகமாக நம்பத் தொடங்கி, பொறுப்பு மிக்க பதவிகளை அவர்களுக்கே கொடுக்க முயன்றான். ஆனால் பிராமணர்கள் அடங்கிய வரி வசூலிப்பு அமைப்பைக் கண்காணிப்பதற்குப் பெரிய மாவட்டங்களில் முகமதிய அதிகாரிகளை நியமிக்க அவன் செய்த முயற்சி, நாட்டில் நிலவிய ஊழலின் நிலைமைகளில், கைக்கூலி வாங்குவோரின் எண்ணிக்கை அதிகரிக்கவே உதவியது. வரி வசூலிப் பாளர்கள் ஒரே வரியை விவசாயிகள் பல முறை செலுத்தும்படி வைத்தார்கள். வரி திரளும் போக்கைத் தணிக்கை செய்யப் பொறுப்பு ஏற்றிருந்த அலுவலர்களை, திப்புவின் வரி இலாகாத் தலைமை அதிகாரியான மீர் சாதிக் உட்பட, லஞ்சம் கொடுத்துச் சரிக்கட்டி வந்தார்கள். இவ்வாறு நில வரி வசூலிப்பை அரசாங்க அலுவலகத்தின் கைகளில் குவிக்கவும் நிலத்தின் மீது நிலப்பிரபுக்களின் சாத்தியமான எல்லா உடைமை உரிமைகளையும் ரத்து செய்யவும் திப்பு எடுத்துக் கொண்ட முயற்சிகள் அவர்களுடைய பிடிவாதமான எதிர்ப்பில் பட்டுச் சிதறின.

ஐரோப்பியர்களின் தொழில் நுட்ப மேம்பாட்டைக் கண்ட திப்பு தன் நாட்டில் புதிய தொழில்களை, சிறப்பாகப் போர்த் தேவைகளுக்கு வேண்டியவற்றை, பரப்ப முயன்றான். உதாரணமாக, பிரெஞ்சுப் படை அதிகாரிகளின் உதவியுடன் அவன் சீரங்கபட்டணத்தில் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் தயாரிக்கத் தொடங்கினன். ஆனால் இந்த உற்பத்தியின் வேகம் (மாதத்துக்கு ஒரு பீரங்கியும் ஐந்து-ஆறு துப்பாக்கிகளும்) சேனையின் தேவைகளை எவ்வகையிலும் நிறைவேற்ற முடியவில்லை. நாடு விரைந்த பொருளாதார வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்காகத் திப்பு வல்லாட்சி முறைகளால் வேறு பல முயற்சி

கள் செய்தான்: அரசாங்கத் தொழிற்சாலைகள் அமைத்து அவற்றில் கட்டாய உழைப்பைப் புகுத்தினன், வர்த்தகர்களுக்குச் சரக்குகளை அவற்றின் நடப்பு விலைகளைக் காட்டிலும் மிக அதிக விலைகளுக்கு வலுக்கட்டாயமாக விற்பதன் மூலம் வியாபாரத்தின் மீது அரசாங்கக் கட்டுப்பாட்டை நிலைநாட்டினன், மலையாளக் கரையிலிருந்து சரக்குகளை ஏற்றி வருவதை அரசின் ஏகபோக உரிமை ஆக்கினன், தென் இந்தியாவில் ஆங்கிலேயர் வசம் இருந்த பகுதிகளுடன் வர்த்தகத்தைத் தடை செய்தான், இன்னும் தான் பெருத்த வெற்றிகள் பெற்ற இடங்களில் தன் பெயரை நிலைத்திருக்கச் செய்யும் பொருட்டு நிறுவப்பட்ட புதிய நகரங்களில் மக்களைப் பலவந்தமாகக் குடியேற்றினன். ஆனால் இந்த நடவடிக்கைகளால் தீமையே விளைந்தது. நாட்டின் பொருளாதார நிலை மோசம் ஆயிற்று, மக்களின் அதிருப்தி வளர்ந்தது. திப்புவின் சில சீர்திருத்தங்கள் அவனுடைய மனச் சபலம் காரணமாக ஏற்பட்டவை, நாட்டுக்கு எவ்வகையிலும் முக்கியத்துவம் இல்லாதவை (உதாரணமாக, உடைகளின் அமைப்பைக் கட்டாயமாக மாற்றியது, அரசாங்க இலாகாக்களதும் பதவிகளுடையவும் மாதங்களினதும் கிழமைகளுடையவும் பெயர்களை மாற்றியது, மாவட்டங்களின் எண்ணிக்கையை அதிகம் ஆக்கியது, சேனையில் முன்பு இருந்தவற்றிலிருந்து வேறான படைப் பிரிவுகளை ஏற்படுத்தியது முதலியன இத்தகையவை).

பல முக்கிய நடவடிக்கைகள் தோல்வி அடைந்த போதிலும் சில ஆண்டுகளுக்குள் தனது பொக்கிஷத்தை நிறைக்கவும் உழவு நிலப் பரப்பை விரிவாக்கவும் வலிய சேனையை மீண்டும் நிறுவவும் திப்புவுக்கு இயன்றது. 1794ம் ஆண்டிலேயே ஆங்கிலேயர்களுக்கு நஷ்டஈடு செலுத்தித் தீர்க்கப்பட்டு விட்டது. பிணையாக இருந்த திப்புவின் புதல்வர்கள் அவனிடம் திருப்பி அனுப்பப்பட்டு விட்டார்கள். திப்பு மீண்டும் விறல் மிக்க பகைவன் ஆகி விட்டான். எனவே ஆங்கிலேயர்கள் மைசூரைத் தாக்க முடிவு செய்தார்கள்.

திப்பு முகமதிய மன்னர்களிடம் உதவி பெற மீண்டும் தீவிர முயற்சி செய்தான். ஆப்கனிஸ்தான அரசன் ஜமன்ஷாவையும் அவன் வேண்டிக் கொண்டான். இந்தியாவை வெல்வது எளிதாய் இருக்கும் என்று அவனுக்கு உறுதி கூறினன். இந்த யோசனைகளாலும் முன்னள் அயோத்தி நவாபின் வேண்டுதல்களாலும் ஈர்க்கப்பட்டு ஜமன்ஷா பஞ்சாபில் புகுந்தான். ஆனால் சீக்கியர்கள் அவனை எதிர்த்தார்கள். தவிரவும் சொந்த நாட்டில் தனக்கு எதிராகச் சதிகள் நடப்பதாக அவன் கேள்விப்பட்டான். எனவே, தாயகம் திரும்பினன். ரோகில்லர்களின் தலைவர்களில் ஒருவனோடும் திப்பு பேச்சு வார்த்தைகள் நடத்தினன்.

பிரான்சினிடமும் அவன் உதவி வேண்டினான். 1793ம் ஆண்டி லேயே திப்பு இரண்டாவது இரகசியத் தூதுக் குழுவை பிரான்சுக்கு அனுப்பினான். ஆனால் இந்தத் தூதுக் குழு யாருடன், என்ன விஷயம் குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியது என்பது தெரியவில்லை. ஆங்கிலக் கைப்பற்றுளர்களோ இந்தியாவிலிருந்து விரட்டும் நோக்கத் துடன் இரகசிய பிரெஞ்சு-மைசூர் தாக்கு-தற்காப்புக் கூட்டு உடன் படிக்கையின் திட்ட உருவரையை 1795-1796ல் திப்பு பிரெஞ்சுக் காரர்களுக்கு அனுப்பினான். இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களுடன் அதிக நெருக்கமான தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள 1797ல் அவன் முடிவு செய்தான். பிரெஞ்சுப் புரட்சிக்காரர்கள் கழகமான யாக் கோபின் கழகம் சீரங்கபட்டணத்தில் அமைக்கப்பட்டது. ஆனால் இதன் செயல் திட்டம் மிகவும் தெளிவற்றதாக இருந்தது. திப்பு சுல்தான் முன்னிலையில் கழக உறுப்பினர்கள் சதுக்கத்தில் விடுதலை மரக் கன்றை ஆடம்பரமாக நட்டார்கள். உரையாற்றியவர்கள் எல் லாக் கொடுங்கோலர்களும் ஒழிக என்றும் ''குடிமகன் திப்பு'' வாழ்க என்றும் ஆர்ப்பரித்தார்கள். பிரெஞ்சுப் புரட்சிக்காரர்களின் (ஸான்க் யுலோட்) தொப்பி திப்புவின் தலையில் சடங்கு முறைப்படி அணியப் பட்டது. நடப்பது என்ன என்பதைத் திப்பு அவ்வளவாகப் புரிந்து கொண்டிருக்க மாட்டான். ஆனால் இந்தச் சடங்கு பிரெஞ்சுப் படைப் பிரிவுகளின் விசுவாசத்தைத் தனக்கு உறுதிப்படுத்தும் என்பதை அவன் கண்டான். அது அவனுக்கு மிக அவசியமாக இருந்தது.

பிரெஞ்சுக்காரர்களின் உதவியைப் பெறுவதற்குத் திப்பு இன் னொரு முயற்சி செய்தான். பாய்மரக் கப்பலில் இரண்டு தூதர்களை அவன் இரகசியமாக அனுப்பினான். ஒருவன் மாரீஷஸ் தீவிலிருந்து பிரெஞ்சுப் படைகளை இட்டுவர வேண்டி இருந்தது. மற்றவன் உதவி கோரி பிரான்சு செல்லுமாறு பணிக்கப்பட்டிருந்தான். ஆனால் தூதர் கள் மாரீஷஸ் போய்ச் சேர்வதற்குள் பிரான்சில் ஆட்சி மாற்றம் ஏற் பட்டு இரண்டாவது டிரெக்டரி நிலை பெற்றுவிட்ட செய்தி கிடைத் தது. எனவே பிரான்சுக்குத் தூதர்களை அனுப்புவதில் அர்த்தம் இல்லாது போயிற்று. மாரீஷஸ் கவர்னர் மைசூர்த் தூதர்களின் வருகை பற்றிய இரகசியத்தை உடைத்து விட்டான். திப்புவினது கொடியின் கீழ் ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட விருப்பத் தொண்டர்களை அழைக்கும் அறிவிப்பை அவன் வெளியிட்டான். ஆனால் இவ்வாறு சேர்ந்த தொண்டர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருந் தது. திப்புவின் தூதர்களோடு 99 பிரெஞ்சுக்காரர்கள் தாம் மைசூ ருக்கு வந்தார்கள். திப்புவின் செயல்கள் பற்றி அறிந்ததும் திப்புவுடன் சேர்ந்து கொள்வதற்காக இந்தியாவிற்கு வர முயன்று கொண்டிருந்த

நெப்போலியனின் எகிப்தியப் படையெழுச்சி தொடங்கிவிட்டதால் கவலையுற்றும் இருந்த ஆங்கிலேயரோ தங்கள் அபாயம் மிக்க பகைவன் ஆன மைசூரை விரைவில் அழிப்பது இன்றியமையாதது எனக் கருதினர்கள்.

இந்தியாவின் கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லியின் (1798—1805) கொள்கை லண்டனின் முழு ஆதரவைப் பெற்றது. ஆங்கிலேயருக்கு இந்திய நிலப்பரப்பில் இருந்த உண்மையான ஒரே ஐரோப்பிய எதிராளி ஹைதராபாதில் பணியாற்றி வந்த பிரெஞ்சுப் படைப் பிரிவு தான். முதற்படியாக இதைத் தீங்கற்றது ஆக்க வெல்லெஸ்லி முடிவு செய்தான். அதன் இடத்தில் ஆங்கிலப் படைப் பிரிவைத் தருவதாக அவன் நிஜாமுக்கு வாக்களித்தான். ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்களைச் சூழ்ந்து, ஒரு குண்டு கூடச் சுடாமல் அவர்களுடைய ஆயுதங்களைப் பறித்துக் கொண்டு நிஜாம் நிலுவையாக வைத்திருந்த அவர்களது சம்பளத்தைக் கொடுத்துத் தீர்த்து விட்டு அவர்களைப் போக விட்டார்கள். இதன் பின் வெல்லெஸ்லியின் சைனியம் மைசூர் மீது படையெடுத்தது. கார்ன்வாலினின் எல்லாத் தவறுகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இம்முறை ஆங்கிலப் படைகள் உணவுப் பண்டங்களுக்கும் தளவாடங்களுக்கும் நன்முக வகை செய்து கொண்டிருந்தன. திப்புவின் சுயேச்சாதிகாரத்தால் அதிருப்தி அடைந்திருந்த அவனுடைய தளகர்த்தர்கள் அவனுக்குத் துரோகம் செய்தார்கள். விளைவாகச் சீரங்கபட்டணம் ஆங்கிலேயர்களால் மீண்டும் முற்றுகை இடப்பட்டு, 1799ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ந் தேதி தாக்கிக் கைப்பற்றப்பட்டது. திப்பு தானும் வீரத்துடன் சமர் புரிந்து போரில் கொல்லப்பட்டான். ஆங்கிலத் துருப்புக்கள் தடுப்பார் யாரும் இன்றித் தொடர்ந்தாற்போலப் பல நாட்கள் சீரங்கபட்டணத்தைக் கொள்ளையடித்தன.

மைசூரை வென்றதன் மூலம் ஆங்கிலக் கைப்பற்றுளர்கள் இந்தியா அனைத்தையும் அடிப்படுத்துவதற்கு வழி வகுத்துக் கொண்டார்கள். முப்பது ஆண்டுக் காலம் மைசூர் மக்கள் தங்கள் சுதந்திரத்தைக் காத்துப் போராடினர்கள். ஆங்கில ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக மைசூர்க்காரர்கள் நடத்திய போராட்டம் உண்மையிலேயே வீரம் செறிந்ததாக இருந்தது. 1799ல் வீழும் வரையில் மைசூர் ஆங்கில எதிர்ப்புப் போராட்டத்தின் மையமாக விளங்கியது. நிலப்பிரபுத்துவ மைசூர் மீது முதலாளித்துவ இங்கிலாந்தின் இறுதி வெற்றி தவிர்க்க இயலாததாக இருந்தது. ஆனல் மைசூர்க்காரர்கள் பல ஆண்டுக் காலம் நடத்திய விடாப்பிடியான எதிர்ப்புப் போரின் விளைவாக ஆங்கிலக் காலனி ஆட்சியாளர்கள் பெருத்த படைகளை எப்போதும் ஆயத்த நிலையில் வைத்திருக்க வேண்டியதாயிற்று.

மைசூரை வென்ற பின் அதன் நிலப்பரப்பைத் தங்கள் ஆட்சிப் பிரதேசங்களோடு வெளிப்படையாகச் சேர்த்துக் கொள்ளக் காலனி ஆட்சியாளர்கள் தயங்கினர்கள். ''துணிக்கப்பட்ட'' மானியச் சிற்றரசு ஆகி விட்ட மைசூர் மீது தங்கள் ஆதிக்கத்தை மறைக்கும் பொருட்டு உடையார் வம்சத்தில் பிறந்த ஒருவனை அரசு கட்டிலில் அமர்த்தினர்கள்.

கருநாடகம் அடிமை ஆக்கப்படுதல்

படைத்துணை உடன்படிக்கை மூலம் மானியச் சிற்றரசு அடிமையாக்கப்பட்டதற்குக் கருநாடகம் எடுத்துக் காட்டான உதாரணம் ஆயிற்று. 1763ம் ஆண்டு நிறைவேறிய பாரிஸ் சமாதான உடன்படிக்கைக்கு இணங்க ஆங்கிலேயருடைய கையாளான முகமது அலி கருநாடக (ஆர்க்காட்டு) நவாபு ஆக்கப்பட்டான். ஆனால் அவன் உண்மை அதிகாரம் இன்றி ஆங்கிலேயர் கைப்பாவையாகவே இருந்து வந்தான். 1756 முதல் 1763 வரை நடந்த போருக்குப் பின் படைச் செலவு ஐம்பது லட்சம் ரூபாய் ஆனதாகக் கணக்குக் காட்டி இந்தத் தொகையைச் செலுத்துமாறு கம்பெனி கோரியது. புதிய நவாபிடம் இவ்வளவு பணம் இல்லை. அப்போது கம்பெனியின் தனி ஊழியர்கள் தேவையான தொகையை அவனுக்குக் கடன் கொடுத்தார்கள். அதற்கு மாற்றாகச் சில மாவட்டங்களில் வரி வசூலிக்கும் உரிமையைத் தரும்படி கேட்டார்கள். நிதித் துறைப் பித்தலாட்டங்கள் மூலம் கம்பெனி ஊழியர்கள் தங்களுக்குக் கொடுக்கப் பட்ட மாவட்டங்களில் அதிகரித்த நிலவரி வசூலித்தார்கள். பின்பு இந்தப் பணத்திலிருந்து முகமது அலிக்கு உயர்ந்த வட்டியின் பேரில் கடன் கொடுத்தார்கள். உதாரணமாகக் கம்பெனியின் சிறு குமாஸ்தாவான பால் பென்பீல்டு என்பவன் சிறப்பாகப் பெருந் தொகைகள் கொடுக்கல் வாங்கல் செய்தான். ஆண்டுக்குச் சுமார் இருநூறு பவுண்டு ஊதியம் பெற்று வந்த பால் பென்பீல்டு நவாபுக்கு ஆயிரக்கணக்கான பவுண்டுகள் கடன் கொடுத்தான். இந்தக் கடன்களிலிருந்து விடுபடுவதற்காக நவாபு செய்த முயற்சிகள் எல்லாம் வீண் ஆயின. வட்டி செலுத்துவதற்காக முகமது அலி புதிய கடன்கள் வாங்கினான். ''கடன் கொடுப்பவர்கள் (அதாவது, வட்டித் தொழில் புரட்டர்களான ஆங்கிலேயர்கள்) இது 'மிகவும் லாபகரமானது' என்று கண்டார்கள். இந்த 'ஒட்டுண்ணிகள்' பெரு நிலச் சொந்தக்காரர்களின் நிலைக்கு உடனே உயர்ந்து, விவசாயிகளைச் சுரண்டிப் பேரளவான செல்வம் திரட்டும் வாய்ப்பைப் பெற்றார்கள்; இதன் விளைவு அந்நாட்டு விவசாயிகள் விஷயத்தில் இந்த ஐரோப்பிய (அதாவது, ஆங்கிலத் தான்தோன்றி)

ஜமீன்தார்களின் வெட்கம் மானம் அறவே இல்லாத கொடுங்கோன்மை. இவர்களும் நவாபும் கருநாடகம் முழுவதையும் பாழாக்கி விட்டார்கள்.''*

ஆர்க்காட்டுப் படைகளும் கம்பெனிப் படைகளும் செல்வம் கொழித்த தஞ்சாவூரைக் கைப்பற்றிச் சூறையாடின. அதனலும் நவாபின் பொக்கிஷம் நிறையவில்லை. கம்பெனி ஊழியர்கள் கருநாடகத்தை வேட்டை விலங்குகள் போன்று சூறையாடி அழிப்பதை நிறுத்த ஆங்கில அரச தூதன் லிண்ட்ஸே பிரபு 1771லும் பிகாட் பிரபு 1776லும் செய்த முயற்சிகளால் ஒரு பயனும் விளையவில்லை. லிண்ட்ஸே வெறுங்கையுடன் லண்டன் திரும்பினன். கருநாடகத்தையும் தஞ்சாவூரையும் கொள்ளையடிப்பதில் தாமே அக்கறை கொண்டிருந்த சென்னைக் கவுன்சில் உறுப்பினர்கள் பிகாட்டைச் சிறையில் அடைத்தார்கள். அங்கே அவன் இறந்து போனன். பால் பென்பீல்டு பணக்காரனாக இங்கிலாந்து திரும்பினன்.

19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கருநாடகம் சார்புச் சிற்றரசு நிலையிலிருந்து கம்பெனியின் சொந்த ஆட்சி நிலமாக மாறி விட்டது. எனவே, கடன்காரர்களுக்குக் கடன்களைத் திருப்பிக் கொடுப்பது நவாபின் பொறுப்பாக இன்றிக் கம்பெனியின் பொறுப்பு ஆயிற்று. அப்போது ஆங்கில நாடாளுமன்றம் இந்தக் கடன்கள் நம்பத்தகுந்தவை தாமா என்று கவனமாக ஆராய்ந்து அறியும்படி பணித்தது. இதன் விளைவாக, 13 லட்சம் பவுண்டு மட்டுமே செலுத்தப்பட வேண்டிய கடன் என்றும் 190 லட்சம் பவுண்டுக்கான தாவா மோசடி அல்லது ஆதாரம் அற்றது என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. ''இருபது ஆண்டுகளுக்குப் பிறகு (1805ல்) பழைய கடன்களில் கடைசியானது கொடுத்துத் தீர்க்கப்பட்டதும், எதிர்பார்க்கக் கூடியது போலவே, இந்தக் காலத்தில் முகமது அலி இன்னும் 300 லட்சத்துக்குப் புதிய கடன்கள் பட்டுவிட்டான் என்று தெரியவந்தது! புதிய விசாரணை 50 ஆண்டுகள் நீடித்தது. பத்து லட்சம் பவுண்டு அதற்குச் செலவு ஆயிற்று. முடிவில் நவாபின் விவகாரம் சரிக்கட்டப்பட்டுவிட்டது. ஆங்கில அரசாங்கம்—ஏனென்றால் பிட்டின் மசோதாவுக்குப் பிறகு இந்தியாவில் கம்பெனி அல்ல, ஆங்கில அரசாங்கமே நாட்டாண்மை செலுத்தியது—துரதிர்ஷ்டசாலிகளான இந்திய மக்களிடம் நடந்து கொண்ட விதம் இதுதான்!''**

---

* கார்ல் மார்க்ஸ், இந்திய வரலாற்றின் கால வரிசைக் குறிப்புகள் (664-1858), பக்கம் 91.

** கார்ல் மார்க்ஸ், இந்திய வரலாற்றின் கால வரிசைக் குறிப்புகள் (664-1858), பக்கம் 92.

குடகும் திருவிதாங்கூரும்
ஆங்கிலேயருக்கு எதிராக நடத்திய போராட்டம்

மைசூரின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்திய மக்களின் போராட்டம் ஒப்பு நோக்கில் எளிதாக அடக்கப்படக் கூடிய தனித் தனி நடவடிக் கைகளின் வடிவிலேயே வெளிப்பட்டது. முன்பு ஆங்கிலேயருடன் ஒத்துழைத்தவையும் அவர்களை இரட்சகர்களாக எண்ணியவை யுமான பிரதேசங்களின் மக்கள் கூட அவர்களது ஆட்சியின் கீழ் வந்ததும் அவர்கள் விளைத்த துன்பங்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். இந்த நோக்கில் குடகும் திருவிதாங்கூரும் எடுத்துக் காட்டான உதாரணங்கள் ஆகும்.

1792 ஆண்டில் நிறைவேறிய சீரங்கபட்டணம் உடன்படிக்கைக்கு ஏற்பக் குடகு ஆங்கிலேயர் வசமானதும் ஓடிப்போயிருத்த நில உடை மையாளர்கள் (நாயர்களும் நம்பூதிரிகளும்) அங்கே திரும்பி வரலா யினர். அவர்கள் ஓடிப்போன பின் மாப்பிள்ளைகள் அடைமானப் பொருள் வைத்திருப்போர் என்ற முறையிலோ அல்லது திப்பு சுல் தானால் குடியேற்றப்பட்டோ அவர்களுடைய நிலங்களைக் கைப்பற்றிக் கொண்டிருந்தார்கள். பழைய உடைமையாளர்கள் இந்த மாப் பிள்ளைகளைத் தங்கள் நிலப் பகுதிகளிலிருந்து வெளியேற்றத் தொடங் கினர்கள். இந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் பிணக்கு மூட்டி விடலாம் என்று நம்பி ஆங்கிலேயர்கள் பழைய உடைமையாளர்களின் செயலை ஆதரித்தார்கள். அதே சமயம் கம்பெனி நில வரியை உயர்த்தி, அதை வசூலிக்கும் உரிமையை வெவ்வேறு பெரிய நிலப் பிரபுக்களுக்குக் குத்தகைக்கு விட்டது.

1793ம் ஆண்டு நில வரிக் குத்தகை பெற நாயர்களின் தலைவனான வர்ம ராஜா உரிமை கொண்டாடினான். ஆனால் குத்தகை அவனுடைய மாமனுக்கு விடப்பட்டது. வர்ம ராஜா ஆங்கில எதிர்ப்புத் தலைவன் ஆவதற்கு இதுவே போதுமானதாக இருந்தது. கிளர்ச்சிக்காரர்கள் ஆங்கில வரி வசூலிப்பாளர்களை அடித்து விரட்டினர்கள். கம்பெனி கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராகத் தன் படைகளைப் பல முறை அனுப் பியது. ஆனால் கிளர்ச்சிக்காரர்கள் மறைந்திருந்த காடுகளில் செறிந் திருந்த அடர்ந்த புதர்கள் அவர்களை ஆங்கிலேயரின் பார்வையில் படாமல் மறைத்தன. 1797ம் ஆண்டு குடகர்கள் 1100 சிப்பாய்கள் அடங்கிய படைப் பிரிவைத் தங்கள் பதுங்கிடத்துக்குத் தந்திரமாக இழுத்து நொறுக்கி விட்டார்கள். அப்போது கம்பெனி ஆண்டுதோ றும் எண்ணூயிரம் ரூபாய் உதவிச் சம்பளம் கொடுப்பதாகக் கூறி வர்ம ராஜாவைச் சரிக்கட்டியது. அவன் இயக்கத்திலிருந்து விலகி விட் டான். கிளர்ச்சிக்காரர்களின் மற்றத் தலைவர்கள் போராட்டத்தைத்

தொடர்ந்தார்கள், ஆனால் அவர்கள் காடுகளில் ஒளிந்திருக்கவும் ஆங்கிலப் படைப் பிரிவுகள் மீதும் போக்குவரத்து மீதும் தனித் தனித் திடீர்த் தாக்குகள் நடத்துவதோடு நின்று கொள்ளவும் வேண்டியதாயிற்று.

1800ல் கிளர்ச்சி மறுபடி மூண்டது. வர்ம ராஜா மீண்டும் அதைத் தலைமையேற்று நடத்தினான். இம்முறை ஆங்கிலப் படைகளுக்குத் தலைமை தாங்கியவன் திறமை சான்ற ஆங்கிலத் தளகர்த்தர்களில் ஒருவனான ஆர்தர் வெல்லெஸ்லி. பிற்காலத்தில் இவனே டியூக் ஆவ் வெல்லிங்டன் என்ற பெயர் பெற்றான். 1802ம் ஆண்டு கிளர்ச்சிக் காரர்களின் எல்லாத் தலைவர்களும் பிடிக்கப்பட்டுத் தூக்கிலேற்றப் பட்டார்கள். எதிர்ப்பை அறவே ஒடுக்கி விட்டதாக எண்ணி ஆங்கிலே யர்கள் நிலவரியை ஒரேயடியாக உயர்த்தினார்கள். பண்ட வரியைப் பண வரியாக மாற்றிக் கணக்கிடுவதற்கு விவசாயிகளுக்கு லாபம் அற்ற முறையைக் கடைப்பிடித்தார்கள். இதனால் வெகுண்ட விவசாயி கள் புதிய கிளர்ச்சி செய்தார்கள். இம்முறை கிளர்ச்சியில் முதன்மை யாகப் பங்கு கொண்டவர்கள் குடகின் ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள். ஆங்கிலேயரின் பனமரம் என்னும் பெரிய கோட்டையை அவர்கள் திடீரெனத் தாக்கிக் கைப்பற்றினார்கள். அதன் காவற் படையைக் கொன்று அழித்து விட்டார்கள். பின்னர் மலைக் கணவாய் களைக் கைப்பற்றிக் கொண்டு ஆங்கிலேயரின் போக்கு வரத்தைத் தாக்கி, கடற்கரைப் பகுதி வரை மாவட்டம் முழுவதிலும் கிளர்ச்சி நெருப்பை மூட்டி விட்டார்கள். ஆங்கில அதிகாரிகள் விட்டுக் கொடுக்க வேண்டியது ஆயிற்று. நிலவரி முந்திய அளவுக்குக் குறைக்கப்பட்டது. விவசாயிகளின் வேறு சில கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டன. 1805ம் ஆண்டில்தான் காலனி ஆட்சியாளர் களால் கிளர்ச்சியை ஒடுக்க முடிந்தது. முடிவைத் தீர்மானித்த போரில் கிளர்ச்சியாளர்களின் முக்கியப் பகுதியினர் வீர மரணம் அடைந்தார்கள்.

1812ல் பண்ட வகை நிலவரி முழுவதும் பண வகை வரியாக மாற்றப்பட்டதை ஒட்டி இன்னும் ஒரு கிளர்ச்சி இதே வட்டாரங் களில் நிகழ்ந்தது. ஆனால் மலையாளக் கரையிலிருந்து தருவிக்கப் பட்ட படைகள் இயக்கத்தை விரைவில் அடக்கிவிட்டன.

திருவிதாங்கூரிலும் நிலைமை இதே போன்றதாக இருந்தது. அங்கே ஆங்கிலக் கொடுமையாளர்களுக்கு எதிரான போராட்டத்தை தளவாய் வேலுத்தம்பி என்பவன் 1808ல் தலைமை தாங்கி நடத் தினான். முப்பதாயிரம் துருப்புக்களும் பதினெட்டுப் பீரங்கிகளும் கொண்ட கிளர்ச்சிப் படையை இவன் அமைத்தான்; கொச்சிவாசி களும் திருவிதாங்கூர் மக்களோடு சேர்ந்து கொண்டார்கள். ஆனால்

ஆங்கில அதிகாரிகளிடம் பெரிய படை வலிமை இருந்தது. நிர்ணய கரமான இரண்டு சண்டைகளில் கிளர்ச்சிக்காரர்கள் முறியடிக்கப் பட்டார்கள். தன் இயக்கம் நசுக்கப்பட்டுவிட்டதைக் கண்ட வேலுத் தம்பி தற்கொலை செய்து கொண்டான். ஆங்கிலப் படைத் தலைவர்கள் இந்தக் கிளர்ச்சியை மட்டுமீறிய கொடுமையுடன் அடக்கி ஒடுக் கியதைக் கிழக்கிந்தியக் கம்பெனி முதல்வர்கள் கூடக் கண்டனம் செய்தார்கள்.

இரண்டாவது, மூன்றாவது ஆங்கில-மராட்டியப் போர்கள்

இந்தியாவில் ஆங்கிலேயருக்கு வசப்படாமல் எஞ்சியவை தொலை தூரப் பஞ்சாபில் இருந்த சீக்கிய அரசும் மராட்டியச் சிற்றரசுகளும் மட்டுமே. மைசூர் வெல்லப்பட்ட பின் (மராட்டியர் தாமே இதற்கு ஓரளவு உதவினார்கள்) ஆங்கிலேயர்களால் தங்கள் படைகள் அனைத் தையும் மராட்டியச் சிற்றரசுகளுக்கு எதிராக ஈடுபடுத்த முடிந்தது. தங்கள் வருங்காலக் கூட்டாளிகளை இழந்து விட்ட மராட்டியர்கள் பயங்கரமான ஆங்கிலப் பகைவரை எதிர்த்து நிற்க வல்லமை அற்றுப் போனார்கள். இந்த நோக்கில் திப்புவின் அழிவு உண்மையில் மராட்டியர்களின் சொந்த அழிவினது முன் அறிகுறி ஆயிற்று.

19ம் நூற்றாண்டின் தொடக்கத் தறுவாயில் மராட்டியச் சிற்றர சர்களுக்கு இடையே சச்சரவுகள் வலுத்தன. அவர்கள் ஒருவருக்கு எதிராக மற்றவர் சிறு சூழ்ச்சி வலைகளைப் பின்னியவாறு, தங்களைப் பிரித்துத் தனித் தனியே வெற்றி கொள்ள ஆங்கிலேயருக்கு வாய்ப்பு அளித்தார்கள். குவாலியருக்கும் இந்தூருக்கும்—தௌலத் ராவ் சிந்தியாவுக்கும் (1794—1827) யஷ்வந்த ராவ் ஹோல்க்காருக்கும் (1797—1811)—இடையே ஆட்சிப் பரப்பு பற்றி ஏற்பட்ட விவா தத்தின் விளைவாக 1801ல் இருவருக்கும் போர் மூண்டது. ஓர் அரசின் படைகள் பகை அரசின் நிலப்பரப்பில் தாக்கிப் புகுவதும் மக்களைக் கொலை செய்வதும் கொள்ளையடிப்பதும் உடன் நிகழ்ந்தன. இரு தரப்பாரின் சேனைகளும் இந்தக் காலத்துக்குள் மாற்றி அமைக்கப்பட் டிருந்தன. குதிரைப் படைக்குப் பதில் ஐரோப்பிய அதிகாரிகளின் தலைமையில் அமைந்த முறையான காலாட் படையே முக்கியப் போர்ச் சக்தியாக விளங்கிற்று. ஆனால் ஐரோப்பிய அதிகாரிகளின் தலைமையில் அமைந்த அதே சிப்பாய்கள் ஐரோப்பிய முறையில் உருவாக்கப்பட்ட தலைமைத் தளகர்த்தர் அலுவலகத்துக்கு இன்றிச் சிற்றரசனுக்கும் நிலப்பிரபுக்களான படைத் தலைவர்களுக்கும் கீழ்ப் பட்ட போது ஆங்கிலச் சிப்பாய்ப் படையை எதிர்த்து நிற்கத் திறன் அற்றுப் போனார்கள். போதாக்குறைக்கு ஆங்கிலேயர்கள்

மராட்டியச் சிற்றரசர்களுக்கு இடையே பகைமை நெருப்பை வேறு மூட்டி விட்டார்கள்.

1802ம் ஆண்டு பூனா அருகே நடந்த சண்டையில் ஹோல்க்காரின் சேனை சிந்தியாவினதும் பேஷ்வா இரண்டாம் பாஜி ராவினதும் (1796—1818) ஒன்றித்த படைகளைத் தோற்கடித்துத் தூள் பரத்தி விட்டது. இரண்டாம் பாஜி ராவ் பசேனில் ஆங்கிலேயரிடம் சரண் புகுந்தான். 1802 ஆண்டு டிசம்பர் மாதம் அவன் படைத் துணை உடன் படிக்கையில் கையெழுத்திட்டான். இதன்படி மகாராஷ்டிரத்தில் ஆறு யிரம் பெயருக்குக் குறையாத ஆங்கிலப் படைகளை நிலையாக வைத் திருப்பதாகவும் அவற்றின் பராமரிப்புக்காக ஆண்டு தோறும் 26 லட்சம் ரூபாய் ஒதுக்குவதாகவும் பேஷ்வா ஒப்புக் கொண்டான். தவிரவும், வெளிநாடுகளுடன் தன் உறவுகளை ஆங்கில அதிகாரிகளின் கண்டிப்பான கண்காணிப்பின் கீழ் வைக்கவும் அவன் ஒருப்பட்டான்.

இவ்விதமாக மகாராஷ்டிரம் உண்மையில் தனது சுதந்திரத்தை இழந்து ஆங்கிலேயரின் காப்பாட்சிக்குள் வந்துவிட்டது. ஆங்கிலப் படைகள் கடு நடையாகப் பூனாவில் புகுந்து பேஷ்வாவின் ஆட்சியை மீண்டும் நிலைநாட்டின. மராட்டியச் சிற்றரசுகள் மீது பூனாவின் மேலாண்மையை மேற்கோள் காட்டி, பேஷ்வாவுடன் ஏற்பட்ட உடன் படிக்கை எல்லா மராட்டியச் சிற்றரசர்களையும் கட்டுப்படுத்தும் என்று கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி அறிவித்தான். சிந்தியாவும் ஹோல்க்காரும் பசேன் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்தார் கள். பொது ஆபத்து முன் நின்ற காரணத்தால் தங்கள் உட்போரை அவர்கள் நிறுத்தி விட்டார்கள். ஆயினும் அவர்கள் முன்போலவே ஒருவரை ஒருவர் சந்தேகித்தார்கள். தங்கள் செயல்களை ஒருங்கு இசைவிக்க அவர்களால் முடியவில்லை. தொடங்கிவிட்ட இரண்டா வது ஆங்கில-மராட்டியப் போரில் இந்த இசைவின்மை அவர்களுக்கு இடைஞ்சலாக இருந்தது.

முதலில் ஹோல்க்காரைத் தாக்குவதில்லை என்று முடிவு செய்து ஜெனரல் ஆர்தர் வெல்லெஸ்லி சிந்தியாவுக்கு மட்டும் எதிராகத் தன் படைகளை அனுப்பினான். புக முடியாதது என்று கருதப்பட்ட அகமதுநகர்க் கோட்டை எடுத்த எடுப்பிலேயே கைப்பற்றப்பட்டது. அதன்பின் நிஜாமினதும் சிந்தியாவினதும் ஆட்சிப் பரப்புக்களின் இடையே செல்லும் வழிகள் கான்தேசில் பிடிபட்டன. ஹைதராபா தின் எல்லைக்கு அருகே அஸாய் என்னும் இடத்தில் ஜெனரல் வெல் லெஸ்லி தன் ஐயாயிரம் படையினருடன் சிந்தியா, நாகபுரி அரசன், ராகோஜி போன்சலே என்னும் இரண்டு மராட்டியச் சிற்றரசர்களின் ஒன்றித்த படைகளை எதிர்ப்பட்டான். மராட்டியப் படைகள் துருப் பினர் எண்ணிக்கையில் ஆங்கிலப் படைகளைவிட ஏழு மடங்கு பெரிய

வையாக இருந்தன. ஆயினும் வெல்லெஸ்லி அதைத் தாக்கினான். இந்தச் சண்டையில் போன்சலேயின் படைகள் சிந்தியாவை ஆங்கிலேயரின் தாக்குதலுக்கு எதிரே நிறுத்தி விட்டுப் பின் வாங்கின. இந்தச் செயல் ஆங்கிலேயரின் வெற்றியை முன்கூட்டி உறுதிப்படுத்திற்று. வெல்லெஸ்லி போன்சலேயைப் பின் தொடர்ந்தான். ஆனால் சிந்தியா தகுதி அற்ற கூட்டாளிக்கு உதவ விரும்பவில்லை. ஆர்கான் என்னும் இடத்தின் அருகே நடந்த நிர்ணயகரமான சண்டையில் போன்சலேயின் சேனை முறியடிக்கப்பட்டது. நாகபுரியின் முக்கியக் கோட்டையான ஹவில்கட் ஆங்கிலேயர் வசம் ஆயிற்று. 1803ம் ஆண்டு டிசம்பர் மாதம் தேவ்காம் என்னும் இடத்தில் போன்சலே ஓர் உடன் படிக்கையில் கையெழுத்திட்டான். இதன்படி நாகபுரிச் சிற்றரசு தன் சுதந்திரத்தை இழந்தது. வங்காள, சென்னை மாகாணங்களின் நிலப் பரப்பைப் பிரித்த கட்டாக் ஆங்கிலேயர் கைகளுக்கு வந்தது.

இதற்குள் லேக் வட ஆங்கிலச் சேனையை நடத்திச் சென்று அலிகார் கோட்டையைப் பிடித்தான். டில்லிக்கு அருகே நடந்த சண்டையில் வெற்றி பெற்று அந்த நகரில் புகுந்தான், பின்னர் ஆக்ரா நகரில் பிரவேசித்தான். இந்தச் சண்டைகளில் சிந்தியாவின் படைகளுக்குத் தலைமை ஏற்று நடத்தியவர்கள் பெரோன், புர்க்கேன் என்ற பிரெஞ்சு அதிகாரிகள். இவர்கள் சண்டைக்குப் பின் ஆங்கிலேயர்களிடம் சரண் அடைந்தார்கள் (பெரோன் அலிகட் அருகிலும் புர்க்கேன் டில்லி அருகிலும்). சிந்தியாவினது சேனையின் தலைமை அம்பாஜி இங்கிலியா என்னும் மராட்டியரிடம் சென்றது. லசுவரி (சரியான பெயர் நசுவரி) என்னும் இடத்தில் நடந்த நிர்ணயகரமான போரில் மராட்டியப் படையினர் அளவு கடந்த பிடிவாதத்துடன் சண்டையிட்டார்கள். அவர்களில் பெரும் பகுதியினர் போர்க் களத்தில் வீழ்ந்து பட்டார்கள். வடக்கே போரிட்ட சிந்தியாவின் சேனை அழிக்கப்பட்டது. சம்பல் ஆற்றுக்கு வடக்கே இருந்த அவனது நிலப்பரப்பு ஆங்கிலேயர் வசம் ஆயிற்று. இதன் பின் அம்பாஜி இங்கிலியா சிந்தியாவுக்கும் துரோகம் செய்து தலைநகரும் கோட்டையுமான குவாலியரை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தான். சிந்தியா 1803ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 30ந் தேதி சுர்ஜி-அஞ்சன்கோன் என்னும் இடத்தில் சமாதான உடன் படிக்கை செய்து கொள்ள வேண்டியதாயிற்று. இதன்படி கங்கை, யமுனை ஆறுகளின் இடையில் இருந்த தன் ஆட்சிப் பிரதேசங்களையும் அகமதுநகரையும் பரூச்சையும் அவன் இழந்தான். இந்தப் போரில் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவு அளித்த ராஜபுத்திரச் சிற்றரசுகள் மீது தன் மேலாண்மையைத் துறந்தான். ஆங்கிலத் துணைப் படையின் பராமரிப்புக்குப் பணம் கொடுக்க இசைந்தான்—இந்தப் படை சிந்தியாவினது ஆட்சிப் பரப்பின் எல்லையில், ஆனால் பிரிட்டிஷ் பிர

தேசத்தில் வைக்கப்பட்டிருக்கும் என்று ஏற்பாடு. முதுமை அடைந்து, ரோகில்லர்களால் குருடாக்கப்பட்டிருந்த முகலாயப் பேரரசன் இரண்டாம் ஷா ஆலத்துக்கு ஆங்கிலேயர்கள் டில்லி அரியணையைத் திருப்பிக் கொடுத்தார்கள். ஆனால் அவனிடம் உண்மை அதிகாரம் எதுவும் இருக்கவில்லை. பெருத்த இராணுவ முக்கியத்துவம் கொண்டிருந்த தலைநகரும் கோட்டையுமான குவாலியர் கோகுத் என்னும் ராஜபுத்திரச் சிற்றரசின் மன்னனுக்குக் கொடுக்கப்படும் என முடிவு ஆயிற்று.

சிந்தியாவின் படை வலிமை முறிக்கப்பட்ட பின், படைகளை இந்துஸ்தானத்திலிருந்து வெளியே கொண்டு செல்லும்படியும் அந்தப் பிரதேசங்களில் சௌத் என்னும் தண்ட வரி வசூலிக்கும் உரிமையைக் கைவிடுமாறும் 1804 ஜனவரியில் ஆங்கிலேயர்கள் ஹோல்க்காரிடம் கோரினர்கள். ஹோல்க்கார் இந்தக் கோரிக்கைகளுக்கு இணங்காமல் சிந்தியாவுடன் கூட்டு உடன்படிக்கை செய்து கொள்ள முயன்றான். ஆனால் அவன் இதற்கு முன்பே ஆங்கிலேயர்களின் கண்காணிப்பில் இருந்து வந்தான்.

1804ம் ஆண்டு ஹோல்க்காருக்கு எதிராகப் போர் தொடங்கியது. தொடக்கத்தில் முகுந்த-தரா என்னும் குறுகிய கணவாயில் ஆங்கிலப் படைகளை முறியடிக்கவும் பரத்பூர் அரசனோடு சேர்ந்து டில்லியை முற்றுகை இடவும் கூட ஹோல்க்காருக்கு முடிந்தது. ஆனால் அரண் காப்பு உள்ள நகரைக் கைப்பற்ற அவனுக்கு இயலவில்லை, எனவே அவன் பின் வாங்கினான். அப்போது ஆங்கிலப் படை தாக்குப் போர் தொடங்கியது. ஹோல்க்காரின் கோட்டைகள் ஒன்றன் பின் ஒன்றாக வீழ்ந்தன. பரத்பூர் அரசன் ஆங்கிலேயரோடு சமாதானம் செய்து கொண்டான். ஹோல்க்கார் பஞ்சாபுக்குத் தப்பி ஓடினான்.

ஆயினும் மராட்டியர்களோடு நடந்த சண்டையில் ஏராளமான பணம் செலவாயிற்று. கிழக்கிந்தியக் கம்பெனியின் பங்குதார்கள் தங்கள் ஆதாயங்கள் போய்விடுமோ என்று அஞ்சினர்கள். இந்தியாவின் புதிய கவர்னர் ஜெனரலாக நியமனம் பெற்ற பார்லோ (1805—1807) சிந்தியாவுக்கு குவாலியரையும் ஹோல்க்காருக்குச் சம்பல் ஆற்றின் தெற்கில் இருந்த அவனது ஆட்சிப் பரப்பையும் திருப்பிக் கொடுத்துவிட்டான். இருவரும் தங்கள் மாணியக்காரர்களான ராஜபுத்திரச் சிற்றரசர்களுடன் (இவர்கள் முந்திய போரில் ஆங்கிலேயர்களுக்கு உதவினர்கள்) பகைமை காரணமாக பலம் குன்றி இருப்பார்கள் என்று பார்லோ நம்பினான். உண்மையாகவே மராட்டியர்களின் ஆட்சிப் பிரதேசங்களில் உட்போராட்டம் நிகழ்ந்தது. சிந்தியாவிடமும் ஹோல்க்காரிடமும் பெரிய சேனைகள் இருந்தன. ஆனால் துண்டாடப்பட்ட அவர்களுடைய சிற்றரசுகளின் பொக்கிஷங்களில்

இந்தப் படைகளைப் பராமரிக்கப் போதுமான பணம் இல்லை. எனவே கூலிப் படையினர் அனேகமாக மக்களைக் கொள்ளையடிப்பது ஒன்றன் மூலமாகவே பிழைப்பு நடத்தி வந்தார்கள். கிராமங்களையும் நகரங் களையும் கூட அவர்கள் திடீர் திடீரெனத் தாக்கினர்கள், ஆட்களைச் சித்திரவதை செய்தார்கள், கொன்றார்கள், தங்களோடு எடுத்துச் செல்ல முடியாதவை எல்லாவற்றையும் அழித் தார்கள்.

சீரழிவுக்கு உள்ளான விவசாயிகளுக்குப் பிண்டாரிகள் என அழைக்கப்பட்ட இந்தக் கொள்ளைக்காரர்களோடு சேர்ந்து கொள் வது தவிரப் பெரும்பாலும் வேறு வழி இருக்கவில்லை. முன்பு ஹோல்க் காரின் படைத் தலைவனாக இருந்தவனும் 1804ம் ஆண்டு ஆங்கிலேய ருடன் நடந்த போரில் சிறப்பாக அருஞ் செயல்கள் ஆற்றியவனும் ஆன அமீர்கான் ரோகில்லா என்பவனும் அதே ஹோல்க்காருடன் தொடர்பு கொண்ட கரீம்கானும் சிந்தியாவின் முன்னாள் படைத் தலைவன் சித்தூரவும் போன்ஸலே அரசனிடம் படைப் பணி ஆற்றிய வசில் முகமதுவும் பிண்டாரிகளின் தலைவர்களாய் இருந்தார்கள். பிண் டாரிகளின் சேனை நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டு போயிற்று; கடைசியில் மராட்டிய, ராஜபுத்திரச் சிற்றரசுகளின் பாழாகிவிட்ட பிரதேசங்களில் உணவுப் பண்டங்களும் கால்நடைத் தீவனமும் போதாதது உறைக்கலாயிற்று.

ஆங்கிலக் காலனி ஆட்சியாளர்கள் பிண்டாரிகளின் செயல்களில் தலையிடவில்லை. ஆனால் 1816ல் பிண்டாரிகள் கம்பெனியின் நேர்முக ஆட்சிப் பரப்பாக இருந்த வட சர்க்கார்கள் மீது தாக்குதல்கள் தொடங்கினர்கள். அந்தப் பிரதேசங்களிலிருந்து வரிப் பணம் கிடைப் பது உடனே வெகுவாகக் குறைந்தது. அப்போதுதான் பிண்டாரிகளை ஒழித்துக் கட்ட ஆங்கில அதிகாரிகள் முடிவு செய்தார்கள். முன் னேற்பாடாக பூனாவில் இன்னும் ஓர் உடன்படிக்கையில் பேஷ்வா விடம் 1817ல் ஆங்கிலேயர் கையெழுத்து வாங்கினர்கள். இதன்படி பேஷ்வா மராட்டியச் சிற்றரசர்களின் தலைமையை விட்டுக் கொடுத் தான், ஆங்கிலேயர்களுக்குக் கொங்கண மாநிலத்தை அளித்தான், பிற சிற்றரசுகளோடு ஆங்கில ஆட்சிப் பிரதிநிதி மூலமாகவே உறவு கொள்வதாக உறுதி தந்தான். நாகபுரியும் ஆங்கிலேயர்களோடு படைத் துணை உடன்படிக்கை செய்து கொண்டது. பிண்டாரிகளோடு போராடு வதற்குத் தன் படைகளை ஆங்கிலேயருக்குத் தருவதாக ஓர் ஒப்பந் தத்தில் கையெழுத்திடும்படி சிந்தியா கட்டாயப்படுத்தப்பட்டான். தவிர, ராஜபுத்திரச் சிற்றரசுகளிலிருந்து மூன்று ஆண்டுகள் கப்பம் வாங்குவதில்லை என அவன் உறுதி கூறி அசீர்கட், ஹிந்தியா என்னும் கோட்டைகளை ஆங்கிலேயருக்குப் பிணையாகக் கொடுத்தான். இவ்வாறு ஆங்கிலேயர்கள் எல்லா மராட்டியச் சிற்றரசர்களையும்

தங்களுக்கு அடிப்படுத்தி விட்டுப் பிண்டாரிகளுக்கு எதிராக நட வடிக்கைகள் எடுத்துக்கொள்ள ஆயத்தம் செய்தார்கள்.

ஆனால் ஆங்கிலப் படைகளின் கணிசமான பகுதி மகாராஷ்டிரத் திலிருந்து வெளியேறியதும் பூனா மராட்டியர்கள் கிளர்ச்சி செய் தார்கள். நாகபுரியும் அவர்களோடு சேர்ந்து கொண்டது. அப்போது ஆங்கிலேயர்கள் இந்தியா வெல்லப்பட்ட காலத்தில் செயல்பட்ட வற்றில் எல்லாம் பெரிய படையை மராட்டியர்களுக்கு எதிராக ஈடு படுத்தினர்கள். இதில் 120 ஆயிரம் பெயர் (அவர்களில் 13 ஆயிரம் ஆங்கிலேயர்) இருந்தார்கள். 300 பீரங்கிகள் இந்தப் போரில் செயல் பட்டன. காத்கி, சீதாபால்டி, நாகபுரி, சால்பிகாட், ஆஷ்டா, சிவணி எங்கும் நடந்த போர்களில் மராட்டியர்கள் தோற்றார்கள். 1818ல் பேஷ்வா தோல்வியை ஒப்புக் கொண்டான். அப்போது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாய் இருந்த மாய்ரா பிரபுவுக்கு மராட்டியர் மீது பெற்ற வெற்றிக்காக ''மார்க்விஸ் ஆவ் ஹேஸ்டிங்ஸ்'' என்ற, அப் போதுதான் ஏற்படுத்தப்பட்டிருந்த பட்டம் அளிக்கப்பட்டது. அவன் பேஷ்வா பதவியை ஒழித்து, மராட்டியரது ஒற்றுமையின் இந்தச் சின்னம் இல்லாதவாறு செய்துவிட முடிவுசெய்தான். மகாராஷ்டிரம் அனைத்தினதும் நிலப்பரப்பு பம்பாய் மாகாணத்துடன் சேர்க்கப் பட்டது. சதாராவைச் சூழ்ந்துள்ள சிறு பிரதேசமும் கோல்காப்பூரும் மட்டும் அதிலிருந்து தனி ஆக்கப்பட்டு, எவ்வித அரசியல் செல்வாக் கும் அற்றவர்களான சிவாஜியின் வமிசத்தினர்களுக்கு அளிக்கப் பட்டது. பிண்டாரிகளின் தலைவர்களில் ஒருவன் ஆன அமீர்கான் தன் சேனையைக் கலைத்துவிட உடனே ஒப்புக் கொண்டான். இதற்கு மாற்றாக ஆங்கிலேயர்கள் டோங்க் என்னும் சிறு குறுநிலத்தைப் ''பரிசாக' வழங்கினர்கள். ஆனால் பிண்டாரிகளின் மற்றத் தலைவர் கள் எதிர்த்துப் போராட முயன்றார்கள்.

ஆங்கிலச் சேனையில் காலராக் கொள்ளை நோய் பரவி 9 ஆயிரம் உயிர்களைப் பறித்துச் சென்றது. இதைப் பொருட்படுத்தாமல் ஆங்கி லேயர்கள் பிண்டாரிகளை விரட்டிச் சென்றார்கள். ஹோல்க்காருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. அவனுடைய படைத் தலைவர்கள் பிண்டாரிகளுக்கு ஆதரவு அளிக்க முயன்றார்கள். ஆனால் மகித்பூர் அருகே நடந்த சண்டையில் ஹோல்க்காரின் படைகளும் தோல்வி அடைந்தன. இதன் பின் பிண்டாரிகள் சிறு சிறு படைப் பிரிவுகளாகச் சிதறி, நாளடைவில் முறியடிக்கப்பட்டார்கள். காரீம்கான் சரண் அடைந்தான். அவனுக்குக் கோரக்பூரின் அருகே ஒரு ஜாகீர் கொடுக் கப்பட்டது. வசீல் முகமது ஆங்கிலச் சிறையில் தற்கொலை செய்து கொண்டான். சித்தூ காடுகளில் இறந்துபோனான்.

மராட்டியர்கள் அடிப்படுத்தப்பட்டதுடன் இந்திய ஆக்கிரமிப்

பின் முக்கியக் கட்டம் முடிந்து விட்டது. பஞ்சாபை வென்று கைப் பற்றுவதற்காக ஆங்கிலேயர் நடத்திய கடைசிப் போர் நடவடிக்கை முப்பது ஆண்டுகளுக்குப் பிறகே நிகழ்ந்தது.

இந்தியாவில் காலனி ஆட்சி அதிகாரிகளின் கொள்கை (18ம் நூற்றுண்டின் இறுதி முதல் 19ம் நூற்றுண்டின் தொடக்கம் வரை)

ஆங்கிலேயர்கள் இந்தியாவை வசப்படுத்திய பின் நாட்டின் அரசியல் நிலைமை மட்டும் இன்றிப் பொருளாதார நிலைமையும் மாறி விட்டது. முந்திய ஆக்கிரமிப்பாளர்கள் இங்கே குடியேறி உள்நாட்டு மக்களோடு கலந்து விட்டார்கள். மாறுக முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில் முன்னேறத் தொடங்கி இருந்த இங்கிலாந்து நாட்டினரோ, ஆட்சித் தலைமை நாட்டுக்கு ஏற்றிச் செல்வதற்காகச் செல்வ வளங்களைச் சுரண்டுவதற்கு ஏற்ற களமாகவே இந்தியாவைக் கருதினர் கள். இந்தியாவைச் சுரண்டுவதற்கு பிரிட்டன் கடைப்பிடித்த முறை கள் எப்படித்தான் மாறினாலும் காலனி ஆட்சியாளர்களுக்கு இந்த நாடு ஆட்சித் தலைமை நாட்டின் இணைப்பாகவே விளங்கி வந்தது.

இந்தியா வெல்லப்பட்டுக் கொண்டிருந்த காலப் பகுதியிலேயே அங்கிருந்து செல்வ வளங்களை வெளியேற்றுவது தொடங்கி விட்டது. பின்னர் இது நிலையான ''பொருளாதார வடிகால் முறை'' ஆயிற்று. இந்த முறை இந்தியாவின் இரத்தத்தை உறிஞ்சி அதை வறுமையில் உழலும் நாடாக மாற்றி விட்டது. 15ம் நூற்றுண்டிலேயே இந்தியா சென்றிருந்த ருஷ்ய வர்த்தகன் அபனசி நிக்கீத்தின் இந்திய மக்களின் வறுமையைக் குறிப்பிட்டான். காலனி ஆட்சிக் காலப் பகுதியிலோ, மக்களின் ஏழ்மை படு மோசம் ஆகி விட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் முதன் முறை வங்காளத்தில் 1770ம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சம் ஏறத்தாழ ஒரு கோடி உயிர்களை வாரிச் சென்றது. அப்போது முதல் பஞ்சம் முறையாகத் திரும்பத் திரும்ப வரும் நிகழ்ச்சி ஆகி விட்டது. அடிக்கடி காலராவும் பிளேகும் பிற கொள்ளை நோய்களும் விபத்துக்களும் இதை அடுத்து வந்தன.

காலனி ஆட்சியில் சிக்குண்டிருந்த இந்தியாவால் தனது பொருளா தார நிலைமையை அடிப்படையில் மேம்படுத்த முடியவில்லை. நாட்டின் அடுத்துவந்த அரசியல் வரலாறு முழுவதும் காலனியாட்சிக்கு

அடிமைப்பட்டிருப்பதிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கான போராட்டத்தின் வரலாறே ஆகும்.

ஆக்கிரமிப்புக் காலப் பகுதியில் ஆங்கிலேயர்கள் பிரமாண்டமான அளவில் ''போர்ப் பரிசில்களை'' இந்தியாவிலிருந்து ஏற்றிச் சென்றார்கள். பல்வேறு இந்திய அரசர்கள், பெரு நிலப்பிரபுக்கள் முதலியோரின் பொக்கிஷங்களைக் கொள்ளையடித்ததால் கிடைத்தவை இவை. உதாரணமாக, சீரங்கபட்டணத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு சாதாரணத் துருப்பினர்கூட இரத்தினங்களால் தங்கள் சாமான் பைகளைச் செம்மச் செம்ம நிறைத்துக் கொண்டார்கள். ஆங்கில ஆட்சி நிலை பெற்றதும் இந்தியா சுரண்டப்படுவதன் இரண்டாவது கட்டம் தொடங்கியது. காலனியாகிய இந்தியாவிலிருந்து பிரிட்டனுடைய வருவாயின் தலையூற்றாக இருந்தது விவசாயிகளிடமிருந்து திரட்டப்பட்ட நிலவரி. ஆனால் விவசாய வளர்ச்சிக்கு வகை செய்யும் நிலவரி முறையைச் செயல்படுத்த ஆங்கிலேயர் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் வீணாயின. ஆங்கிலேயர் வங்காளத்தில் புகுத்திய சாசுவத நிலவரி ஏற்பாடு, தென் இந்தியாவில் அமல்படுத்திய ரயத்துவாரி முறை, மத்திய இந்தியாவில் கையாண்ட மௌஜாவாரி முறை, அல்லது பஞ்சாபில் செயல்படுத்திய பஞ்சாயத்து முறை முதலிய எல்லா நிலவரி முறைகளிலும் காலனி ஆட்சி அரசு முடிந்தவரை அதிகத்திலும் அதிகமான நிலவரியை எப்படியும் வசூலித்தது. அரைப் பட்டினி வாழ்க்கை நடத்திய விவசாயியிடம் அறிவார்ந்த வழிகளால் வேளாண்மையை மேம்படுத்துவதற்கான சாதனங்கள் இருக்கவில்லை. நிலப்பிரபுத்துவக் கால இந்தியாவில் வரி வசூலிப்பு முறைகள் யாவும் நிலைமைக்கு ஏற்பத் தளர்த்திக்கொள்ளக் கூடியவையாக இருந்தன. இயற்கை உற்பாதங்கள் நிகழ்ந்தால், அல்லது விலைகள் ஒரேயடியாகக் குறைந்தால் வரி குறைக்கப்பட்டது. தனது நிலங்கள் முற்றுகச் சீர்கெடுவது நிலப்பிரபுவின் நலன்களுக்கு உகந்ததாக இல்லை. காலனி ஆட்சியிலோ, வரி நிலையாக விதிக்கப்பட்டது. எத்தகைய பாதக நிலைமைகள் ஏற்பட்டாலும் பொருட்படுத்தாமல் அதிகாரிகள் அதை வசூலித்தார்கள். நிலப்பிரபுத்துவ உடைமையாளர்கள் தேவை ஏற்பட்ட போது தங்கள் விவசாயிகளுக்கு விதைப்பு முதல் அறுவடை வரை வேளாண்மைச் செயல் வட்டத்தை நிறைவுறுத்த அவசியமான உதவியை அளித்து வந்தார்கள் (முகலாயர்கள் காலத்தில் இந்த உதவி தக்காவி எனப்பட்டது). காலனி ஆட்சி அதிகாரிகள் இதைத் தங்கள் பொறுப்பாக நினைக்கவில்லை. வரி வசூலிப்பதே அவர்களுடைய காரியமாய் இருந்தது. எனவே நிலப்பிரபுத்துவக் காலத்தை விடக் காலனி ஆட்சிக் கால இந்தியாவில் விவசாயியின் நிலைமை மோசமாய் இருந்தது.

எல்லாவற்றிலும் அதிக வரி வசூல் தரும் முறையைக் கண்டுபிடிப்பதற்காக வெவ்வேறான மூன்று நிலவரி முறைகளைக் கையாண்ட ஆங்கில அதிகாரிகளின் சோதனைகள் இந்திய விவசாயிகளுக்கு மிக்க தீங்கு செய்தன. இத்தகைய முதல் சோதனை கார்ன்வாலிஸ் கொண்டு வந்த சாசுவத நிலவரி ஏற்பாட்டுச் சட்டம்.

சாசுவத நிலவரி ஏற்பாடு

வங்காளத்தின் கவர்னர் ஜெனரலாக இருந்த கார்ன்வாலிஸ் கல்கத்தா உயர் அதிகாரிகளின் ஆலோசனையை மதியாமல் சாசுவத நிலவரி ஏற்பாடு பற்றிய சட்டத்தை 1793ல் திடீரென்று கொண்டு வந்தான். ஜமீன்தார்கள் விஷயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை பற்றி பிரான்சிஸ் வெளியிட்டிருந்த கருத்துக்களே பெரும் பாலும் இதில் செயல் வடிவம் பெற்றிருந்தன. கார்ன்வாலிசின் சொற்படி அவனுடைய சட்டம் ''இந்திய ஜமீன்தார்களை சதா காலத்துக்கும் வாரிசுரிமை பெற்ற நிலவுடைமையாளர்களாக ஒப்புக் கொள்ள'' வகை செய்தது. அதே சமயம் ஜமீன்தார்கள் 1790ம் ஆண்டு தங்களால் வசூலிக்கப்பட்ட வரியின் பத்தில் ஒன்பது பாகத்தை அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டி இருந்தது. தவிரவும் இந்தத் தொகையும் ''சதா காலத்துக்கும்'' நிர்ணயிக்கப்பட்டது. உண்மையில் வசூலிக்கப்பட்ட நில வாடகையை இது சார்ந்திருக்கவில்லை. வரி செலுத்தப்படாமல் நிலுவை நின்றுவிட்டால் நிலம் ஏலத்தில் விடப்படலாம். இந்தச் சட்டத்தைப் புகுத்தியதன் மூலம் அடுத்து வந்த அண்மை ஆண்டுகளில் அரசாங்க நிதித் துறைக்கு வரிப் பணம் பெருந்தொகையாகக் கிடைத்து வர வகை செய்வதற்குக் கார்ன்வாலிஸ் முயன்றான். அதே சமயம், விவசாய மேம்பாட்டை எதிர்பார்த்தும் நில வாடகையின் முறையான தொகையில் அதிகரிப்பை ஒட்டியும் வருவாய்களை ஜமீன்தாருக்காக விட்டுக்கொடுத்தும் வட்டார மக்களிடையே காலனி அரசாங்கத்துக்கு வர்க்க ஆதாரத்தை உருவாக்கவும் அவன் இதன் மூலம் விரும்பினான்.

உண்மையிலோ இந்தச் சட்டம் நிலத்தின் மீது விவசாயிகளுக்கு இருந்த நிலப்பிரபுத்துவ உரிமைகளை ஒழித்து, அதை ஜமீன்தாரின் தனி உடைமையாக நிலைப்படுத்தி விட்டது. ஜமீன்தார்களின் பண்ணைகள் (முன்பு ஜமீன்தார் வரி வசூல் செய்து வந்த நிலப்பரப்பு இப்போது இவ்வாறு பெயர் பெற்றது) விற்கப்பட்டபோது நில வாடகையின் அளவு குறித்து முன்பு ''ஜமீன்தாருக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஏற்பட்டிருந்த எல்லா ஒப்பந்தங்களும்'' (ஜமீன்தார்களுக்குச் சேர வேண்டிய நிலவாடகையின் அளவைத் திட்டப்படுத்

திய இந்திய மரபுச் சட்டத்தை ஆங்கில அலுவலர்கள் இவ்வாறு அழைத்தார்கள்) ரத்தாகி விட்டதாகக் கருதப்பட்டன. நில வாடகையை உயர்த்தப் புதிய ஜமீன்தாருக்கு உரிமை இருந்தது. மார்க்ஸின் சொற்படி, ''கார்ன்வாலிசும் பிட்டும் வங்காள விவசாயிகளின் நிலங்களைச் செயற்கையாகப் பறிமுதல் செய்வித்தார்கள்''.* நிலத்தின் மீது முன்பு விவசாயிக்கு இருந்த உடைமை உரிமையை முற்றுக ஒழித்து விட்டதன் வாயிலாகக் கார்ன்வாலிசின் சட்டம் விவசாயியின் வேளாண்மை முறைகளில் எவ்வித மேம்பாட்டையும் புகுத்த முடியாதவாறு தடை செய்து விட்டது. ஏனெனில் வேளாண்மை மேம்பாட்டால் நிலவாடகை கூடுவதற்கே வழி உண்டாகும். எனவே வங்காள விவசாயம் தரத்தில் தாழ்ந்து கொண்டு போயிற்று, வங்காள விவசாயி இந்தியாவிலேயே பரம ஏழைகளில் ஒருவன் ஆனான்.

சில வேளைகளில் ஜமீன்தார்கள் நிலவாடகை வசூலிக்கும் உரிமையைத் துணைக் குத்தகைக்காரர்களுக்கு விற்றுர்கள். அவர்கள் தாங்களும் அதை அதிகத் தொகைக்கு விற்றுர்கள். வங்காளத்தின் எல்லாரிலும் பெரிய ஜமீன்தாரான பர்துவான் ராஜாவின் உதாரணம் நன்கு தெரிந்தது. அவனுடைய பண்ணைகளில் ஐந்து-ஆறு துணைக் குத்தகைக்காரர்கள் கொண்ட படிவரிசை அமைப்பு உருவாகி இருந்தது. இவர்களில் ஒவ்வொருவனும் தான் குத்தகைக்கு எடுத்த நிலத்தை மற்றவனுக்கு அதிகக் குத்தகைக்கு விட்டிருந்தான். இவ்வாறு துணைக் குத்தகைக்காரர்களின் நீண்ட சங்கிலி அமைந்திருந்தது. அதோடு அவர்களுடைய உரிமைகள் வமிச வழியாக நிலைப்படுத்தப்பட்டிருந்தன.

விவசாயிகளை நிலப்பிரபுத்துவ முறையில் சுரண்டியதால் கிடைத்த பணத்தை ஜமீன்தார்கள் நிலப்பிரபுக்களுக்கு வழக்கமான முறையில் செலவு செய்தார்கள். அதாவது பயன் அற்ற கேளிக்கைகளில் (இன்பக் களியாட்டங்கள், பரிவாரங்களை வைத்துக்கொள்ளல் முதலியன) வீணுக்கினர்கள். 19ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஆங்கில அலுவலர்கள் பின்வருமாறு தகவல் தந்தார்கள்: ''ஜமீன்தாரின் வருவாய் வேலையற்றவர்களையும் தண்டத்தீனி தின்பவர்களையும் பராமரிப்பதற்குச் செலவாகிறது. பணியாட்கள், காவற்காரர்கள், பாடகர்கள், நடன மாதர்கள் ஆகியவர்களுக்கு ஊதியம் கொடுக்கவும் அக்கம்பக்கத்து ஜமீன்தார்களை அழைத்துப் பெருந்தொகையானவர்களுக்கு விருந்துகள் அளிக்கவும் பிராமணர்களுக்குப் போஜனம் செய்விக்கவும் வீணுகச் செலவாகிறது எல்லாப் பணமும். உற்பத்தித் தேவைக்குச்

---

* கார்ல் மார்க்ஸ், இந்திய வரலாற்றின் கால வரிசைக் குறிப்புகள் (664-1858), பக்கம் 98.

சிறிதும் செலவிடப்படுவதில்லை. ஜமீன்தாரோ குத்தகைக்காரர்களோ சீர்பாட்டிற்காகப் பணம் செலவிடும் கிராமம் ஒன்று கூட இருப்பது சந்தேகந்தான்.''

ஆனால் விவசாயிகள் அளவு கடந்த வறுமைக்கு உள்ளாகி விட்ட போது அவர்களிடமிருந்து நிலவரி செலுத்தப் போதிய தொகைகள் வசூலிக்க ஜமீன்தார்களுக்கு முடியவில்லை. விளைவாக வரி பாக்கி செலுத்தப்படாததற்காக ஜமீன்தார்களின் பண்ணைகள் வலுவில் ஏலம் போடப்படுவது பொது நிகழ்ச்சி ஆகிவிட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஏஜெண்டுகளும் நீதிமன்ற அலுவலர்களும் செல்வாக்குள்ள வட்டித் தொழிலர்களும் ஆன இந்தியர்கள் இந்த நிலங்களை மலிவான விலைகளுக்கு வாங்கினர்கள். விளைவாக ஜமீன்தார்களின் புதிய வட்டாரம் உருவாயிற்று. இவர்கள் நகரங்களில் வசித்தார்கள். பழைய நிலப்பிரபுத்துவ முறைகளால் விவசாயிகளைச் சுரண்டினர்கள். வட்டித் தொழில் போன்றே ஜமீன்தாரி முதலீடு செய்ய லாபகரமான வழி என்றே கருதினர்கள்.

இது பற்றிக் கார்ல் மார்க்ஸ் பின்வருமாறு எழுதினர்: ''இந்த 'நிலவரி ஏற்பாட்டின்' விளைவு, விவசாயிகளின் 'சமுதாய, தனி உடைமை' இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டதன் உடனடியான பயன்: நிலப் பரிசு பெற்ற (தங்கள் மேல் சுமத்தப்பட்ட) 'லாண்டுலார்டு'களுக்கு' எதிராக விவசாயிகளின் முழு வரிசையான கிளர்ச்சிகள்; சில இடங்களில் ஜமீன்தார்கள் விரட்டியடிக்கப்பட்டு அவர்களின் இடத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி உடைமையாளியாகச் செயல்பட்டது; வேறு இடங்களில் ஜமீன்தார்கள் ஏழ்மை அடைந்து வரி பாக்கிகளுக்காகவும் சொந்தக் கடன்களுக்காகவும் அவர்களுடைய பண்ணைகள் வலுக் கட்டாயமாகவோ அவர்களே விரும்பியோ விற்கப்படுதல். எனவே நாட்டுப்புற நிலவுடைமைகளில் பெரும் பகுதி சுதந்திர மூலதனம் வைத்திருந்தவர்களும் அதை விருப்பத்துடன் நிலத்தில் ஈடுபடுத்தியவர்களும் ஆன ஒரு சில நகர முதலாளிகளின் கைகளுக்குப் போய்விட்டது.''*

வங்காள விவசாயிகளின் சீரழிவு அவர்களை ஆயுதக் கிளர்ச்சிக்குத் தூண்டியது. சில இடங்களில் தங்கள் பண்ணைகளைப் பறிகொடுத்து விட்ட முன்னாள் ஜமீன்தார்கள் விவசாயிகளின் கிளர்ச்சிகளுக்குத் தலைமை தாங்கினர்கள். அந்த சந்தர்ப்பங்களில் கிளர்ச்சிக்கார விவசாயிகளுக்கு மாவட்டம் முழுவதினுடையவும் ஆதரவு கிடைத்தது. அப்போது இயக்கம் துலக்கமாக வெளிப்பட்ட தேசிய விடுதலைத் தன்மையை மேற்கொண்டது. உதாரணமாக, 1795ம் ஆண்டு பாஞ்

---

* கார்ல் மார்க்ஸ், இந்திய வரலாற்றின் கால வரிசைக் குறிப்புகள் (664-1858), பக்கங்கள் 99—100.

செத் என்னும் இடத்தில் நடந்த கிளர்ச்சிகள் இத்தகையவை. அங்கே முந்திய ஜமீன்தார் விவசாயிகளோடு சேர்ந்து புதிய ஜமீன்தார் பண்ணைவீட்டில் புகுவதை மூன்று ஆண்டுகள் தடுத்துக் கொண்டிருந் தான். முடிவில் அவனுடைய உரிமைகள் அவனுக்குத் திருப்பி அளிக் கப்பட்டன. 1798ம் ஆண்டு ராய்பூரிலும் 1799ம் ஆண்டு பாலாசோ ரிலும் இதே போன்ற நிகழ்ச்சிகள் நடந்தன. 1799—1800ம் ஆண்டு களில் புது வரி தங்கள் நிலத்துக்கு விதிக்கப்பட்டதை எதிர்த்து விவ சாயிகள் கிளர்ந்து எழுந்து சில இடங்களையும் கிராமங்களையும் கைப் பற்றிக் கொண்டு மிதுனபுரி நகருக்குள் தாக்கிப் புகும் அபாயத்தை ஏற்படுத்தினர்கள். வரி ரத்து செய்யப்பட்டது. பண்ணைகள் வலுக் கட்டாயமாக விற்கப்படுவது நிறுத்தப்பட்டது. இந்தக் கிளர்ச்சிகள் தாமாகவே வெடித்துக் கிளம்பின, வட்டாரத் தன்மை கொண்டிருந் தன, எனவே விரைவில் ஒடுக்கப்பட்டன, ஆயினும் கார்ன்வாலிஸ் அமல்படுத்திய நிலவரி முறையால் விவசாயிகளும் (பழைய நிலப் பிரபு வம்சத்தினரும்) எத்தகைய துன்ப நிலைமையில் சிக்கிக் கொண் டிருந்தார்கள் என்பதை இவை காட்டின.

சாசுவத நிலவரி ஏற்பாட்டைப் புகுத்தியதன் மூலம் ஆங்கிலக் காலனி ஆட்சியாளர்கள் தம்மால் வங்காளம் வெல்லப்பட்டதன் விளைவாகத் தொடங்கியிருந்த பொருளாதார மாற்றங்களின் நிகழ் முறையைச் சட்ட வடிவில் அமைத்தார்கள். ஆளும் வர்க்கமாக இருந்த நிலப்பிரபுக்களின் அரசியல் அதிகாரத்தை ஆங்கிலக் கைப் பற்றுளர்கள் பறித்துக் கொண்டார்கள். நிலப்பிரபுத்துவ இந்தியா வின் சமுதாய-பொருளாதார அமைப்பை முதலாளித்துவ ஆட்சித் தலைமை நாட்டின் தேவைகளுக்கு இசைவிக்க அவர்கள் தொடங் கினர்கள்.

ரயத்துவாரி முறை

18ம் நூற்றாண்டின் இறுதியில் சென்னை மாகாண நிலங்களிலும் சாசுவத நிலவரி ஏற்பாட்டை ஆங்கிலேயர்கள் புகுத்தினர்கள். ஆனால் மைசூரிடமிருந்து கைப்பற்றிய நிலப்பரப்பில் தங்களுக்கு எதிராகப் போராடிய நிலப்பிரபுக்களுக்கு நிலங்களை உடைமையாக்கக் காலனி ஆட்சியாளர்கள் விரும்பவில்லை. எனவே 1793ம் ஆண்டு அங்கே வேறு நிலவரி முறை அமல்படுத்தப்பட்டது. பிற்காலத்தில் இது ரயத்து வாரி எனப் பெயர் பெற்றது. 1818—1823ம் ஆண்டுகளுக்கு இடையே இந்த முறை சாசுவத நிலவரி ஏற்பாடு இன்னும் செயலாக்கப்படாத சென்னை மாகாண நிலங்களுக்கு விதிக்கப்பட்டது.

ரயத்துவாரி முறைப்படி ஆங்கிலக் காலனி ஆட்சியாளர்கள் ஜமீன்தார்களை அல்ல, மிராசுதார்களையும் (அதாவது முழு உரிமை

பெற்ற கிராம சமுதாயத்தினர்) சில வகையான விவசாயிகளையும் நில உடைமையாளர்களாக ஒப்புக் கொண்டார்கள். இந்த விவசாயிகள் மிராசுதார்களின் உரிமைகளைப் பெற்றிருக்காவிட்டாலும் நேராக அரசாங்கத்துக்கு நிலவரி செலுத்தி வந்தார்கள். ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பே சில இடங்களில் மிராசுதார்களில் சிலர் நிலப்பிரபுத்துவ மேற்குடியினராக உயர்ந்தார்கள். சில இடங்களில் ஒரு கிராமம் முழுவதும் ஒரு மிராசுதாரின் ஆதிக்கத்தில் வந்துவிட்டது. அவன் கிராமத்திலிருந்து நிலவரியை முதலில் அரசாங்கத்துக்காகவும் பின்னர் தனது சொந்தப் பயன்பாட்டுக்காகவும் வசூலித்தான். இதன் மூலமே அவன் சிறு நிலப்பிரபு ஆனான். அவனுடைய நிலம் ஆங்கிலேயர்களால் தனியார் நிலவுடைமை ஆக்கப்பட்டது. கிராமத்தின் வறிய, முழு உரிமை இல்லாத வட்டாரத்தினர் (''வெளியிலிருந்து வந்த'' குடியானவர்களில் பெரும் பகுதியினர், அடிமைகள், தீண்டத்தகாத வகுப்புக்களைச் சேர்ந்த கம்மியர்கள் ஆகியோர்) முன்பு தங்கள் பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றி, தங்கள் நிலப் பகுதிகளுக்கு உரிய வாடகையை சமுதாயத் தலைமைக் குழுவுக்குச் செலுத்தி வந்த வரையில் அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்ற முடியாது இருந்தது. இப்போதோ, பெரும்பாலான இடங்களில் அவர்கள் நிலத்தின் மீது தங்கள் உரிமையை இழந்து, உரிமையற்ற பாட்டக் குத்தகைக்காரர் ஆகி விட்டார்கள். இவர்களது நிலப்பகுதிகளின் குத்தகைப் பணத்தை எப்போது வேண்டுமானாலும் உயர்த்துவதும் அவர்களை விரும்பியபோது நிலத்திலிருந்து வெளியேற்றுவதும் முடிந்தன.

முன்பு கிராம சமுதாயத்திற்குச் சொந்தமாய் இருந்த மேய்ச்சல் தரைகளும் தரிசு நிலங்களும் ரயத்துவாரி முறையின்படி அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டன. தங்கள் கால்நடைகளை இலவசமாக மேய்க்கவும் அடுப்பு எரிப்பதற்குப் புதர்களை வெட்டிச் சேகரிக்கவும் இருந்த வாய்ப்பை விவசாயிகள் இழந்துவிட்டார்கள். நிலத்தின் மீது காலனி ஆட்சி அரசாங்க உடைமை உரிமையின் அடிப்படையில் ஆங்கில அதிகாரிகள் உழுவர்களைத் தங்கள் ''காலக்கெடு அற்ற குத்தகைக்காரர்கள்'' எனக் கருதினர்கள். அவர்களிடம் எவ்வளவு குத்தகைப் பணம் வேண்டுமானாலும் கேட்க அதாவது அவர்களுக்கு எவ்வளவு நிலவரி வேண்டுமானாலும் விதிக்கத் தங்களுக்கு உரிமை உண்டு என்று எண்ணினர்கள். நடைமுறையில் ஆண்டுதோறும் அதிகத்திலும் அதிகமான தொகை நில வரியாக விதிக்கப்படுவதில் இந்த மனப் போக்கு வெளிப்பட்டது. நிலைமைகளின் அனுகூலமான சேர்க்கை இருந்தால்தான் இந்திய விவசாயியால் இந்த அளவு வரிப் பணத்தைச் செலுத்த முடிந்தது. சென்னை நிலவரி அலுவலகம் தரும் புள்ளி

விவரங்களின் படி, ரயத்துவாரி முறையைப் புகுத்துவதற்கான முதல் முயற்சிகளே ''அனேகமாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கோரப் பட்ட நிலவரியின் அளவை ஒரேயடியாக உயர்த்தின.'' விவசாயி களால் உண்மையில் இவ்வளவு பணம் கொடுக்க முடியவில்லை. நிலுவைகள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு போயின. 19ம் நூற்றாண்டு முழுவதிலும் நிலவரி விகிதம் ஒவ்வொரு தரம் மறு பரி சீலனை செய்யப்பட்ட போதும் ஆங்கில அதிகாரிகள் நிலுவைகளைத் தள்ளுபடி செய்யவும் வரியைக் குறைக்கவும் வேண்டியதாயிற்று.

இந்தியாவில் இருந்த ஆங்கில அதிகாரிகள் ஒப்புக்கொண்டிருக் கிறபடி ''1818 முதல் 1855 வரையிலும் பின்னரும் நிலவரி வசூலிப் பின்வரலாறு அனைத்தும் நிலவரி விகிதம் வெகுவாகக் குறைக்கப்பட வேண்டும், நிலுவைகள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்ற விடாப்பிடியான, நியாயமான கோரிக்கைகளின் வரலாறுகவே இருந் தது. ரயத்துக்கள் மீது விதிக்கப்பட்ட அளவு கடந்த நிலவரி காரண மாக இந்தக் கோரிக்கைகள் எழுந்தன.'' வங்காள முறைக்கும் ரயத்து வாரிக்கும் இருந்த முக்கிய வித்தியாசம் என்னவென்றால் வங்காளத் தில் தனி நில உடைமையாளர்களாக ஒப்புக்கொள்ளப்பட்டவர்கள் நிலப்பிரபுக்கள், ரயத்துவாரி நிலவிய இடங்களில் முதன்மையாக விவசாயிகள் என்பதே. எனினும், தென் இந்தியாவில் விவசாயி தனி நில உடைமையாளராக ஒப்புக்கொள்ளப்பட்டாலும் அவனுக்கு நிலம் தன் மதிப்பை இழந்து விட்டது. இதன் காரணம், ஆங்கில முதலாளி வர்க்கம் இந்திய மக்களை நிலப்பிரபுத்துவ முறைகளாலும், பிற்காலத் தில் அரை நிலப்பிரபுத்துவ முறைகளாலும் சுரண்டிக் காலனியாட்சி லாபங்களை வாரிச் சென்றதாகும்.

மௌஜாவார் முறை

மராட்டியர்களுடன் செய்த போர்களின் போது கிழக்கிந்தியக் கம்பெனியால் வென்று கைப்பற்றப்பட்ட மத்திய இந்தியப் பிரதேசங் கள் வங்காள மாகாணத்தின் அடங்கிய மேல் மாநிலங்கள் (இப்போது உத்தரப் பிரதேசமும் மத்தியப் பிரதேசமும்) எனப்பட்டன. இவற் றில் அமல்பட்ட நிலவரி முறை மௌஜாவார் அல்லது மால்குஜாரி எனக் குறிக்கப்பட்டது. இதன் சிறப்பு என்னவென்றால் நிதி அலகாக வும் நில உடைமையாளியாகவும் கிராம சமுதாயம் அனைத்தும் மொத்தமாக மதிக்கப்பட்டது. ஆனால் வரி சமுதாய உறுப்பினன் ஒவ்வொருவன் மீதும் தனியாக விதிக்கப்பட்டது. ஒரு சமுதாய உறுப் பினன் ஒரு தவணை வரி கட்டாமல் விட்டு விட்டால் கூட கிராமம் முழுவதன் நிலங்களும் வலுக் கட்டாயமாக விற்கப்பட்டன. நீதிமன்ற

அல்லது வரித்துறை அலுவலர்களே வழக்கமாக இவற்றை விலைக்கு வாங்கினர்கள். இவ்வாறு இவர்கள் ஜமீன்தார்களாக மாறினர்கள். வங்காள ஜமீன்தார்களுக்கும் இவர்களுக்கும் இருந்த வேறுபாடு என்னவென்றால், இவர்கள் நிதித்துறைக்குச் செலுத்த வேண்டியிருந்த தொகைகள் அவ்வப்போது மறு பரிசீலனை செய்யவும் அதிகம் ஆக்கவும் பட்டு வந்ததுதான்.

19ம் நூற்றாண்டு தொடங்கிய தறுவாயில் ஆங்கிலேயர் இந்தியாவை வென்றதன் பொருளாதார விளைவுகள்

ஆங்கில ஆதிக்கத்தின் பயனாக முதலில் பழைய நிலப்பிரபுத்துவ வம்சங்கள் வீழ்ந்தன, நிலப்பிரபுக்களின் படைகளும் பெருத்த எண்ணிக்கை கொண்ட பரிசனங்களும் பணியாட்களும் கலைக்கப்பட்டார்கள், இந்தியாவின் நிலப்பிரபுத்துவ வட்டாரத்தினர் பல நூற்றாண்டுகளாகப் பழகி இருந்த வாழ்க்கை முறை முழுவதும் மாறிவிட்டது. நிலப்பிரபுத்துவ வட்டாரங்களுக்கு ஊழியம் புரிந்து வந்த பெருந்தொகையான கம்மியர்களின் நிலைமையில் இது பிரதிபலித்தது. உதாரணமாக, வங்காளத்தில் டாக்கா நகர மக்கள் விலை மிக்க மெல்லிய துணி வகைகள் நெய்வதில் தனித் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். நிலப்பிரபுக்களின் வீழ்ச்சியை ஒட்டி டாக்கா நகரும் வீழ்ச்சி அடைந்தது. கிராமங்களுக்குப் போகாத கம்மியர்கள் கம்பெனியின் கொடிய அடிமைத் தளையில் சிக்குண்டார்கள். ஏனென்றால் வங்காளத்திலும் சரி, தெற்கேயும் சரி, தங்கள் கைத்தொழில் செய்பொருட்களை யாரேனும் தனி வர்த்தகனுக்கு விற்கக் கூடாது என அவர்கள் தடை செய்யப்பட்டிருந்தார்கள். கம்பெனி ஏஜெண்டுகள் கம்மியர்களை அடிப்பதும் புடைப்பதும் வழக்கமாகி விட்டன. 18ம் நூற்றாண்டின் தொண்ணூறுக்களில் ஏஜெண்டுகளின் அடிகளால் கம்மியர்கள் மரித்த நிகழ்ச்சிகளும் இருந்தன. கம்பெனி ஊழியர்கள் வார வேலையைச் செய்து முடிக்காததற்காக நெசவாளர்களைச் சிறையில் தள்ளி அன்னம் தண்ணீரின்றி வாட்டினர்கள்.

19ம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்குத் துணிகள் தொடர்ந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால் இந்த ஏற்றுமதியைக் கம்பெனி ஒரு நிறுவனம் என்ற வகையில் செய்யவில்லை, அதன் ஊழியர்கள் தனி வர்த்தகர்கள் என்ற முறையில் செய்தார்கள். 19ம் நூற்றாண்டு தொடங்கியது முதல் இங்கிலாந்துக்கு இந்தியத் துணிகளின் ஏற்றுமதி அறவே நின்று போய்விட்டது. ஆங்கில நெசவாலைகளுக்கு நூல் மட்டுமே இந்தியாவிலிருந்து ஏற்றுமதி ஆயிற்று. 18ம் நூற்றாண்டின் இறுதியில் பட்டுப்புழுக்களின்

வளர்ப்பும் வெடியுப்பு, கடலுப்பு உற்பத்தியும் வங்காளத்தில் நிறுத்தப்பட்டன. மொத்தத்தில் கைத்தொழிலின் வீழ்ச்சியும் கம்மியர்களின் எண்ணிக்கையில் திடீர்க் குறைவும் நேர்ந்த இந்தச் சூழலில், ஆங்கிலேயர் ஆட்சியின் போது வங்காளத்தில் தோன்றியதும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்ததுமான ஒரே புதிய உற்பத்தித் துறையாக விளங்கியது கல்கத்தா கப்பல் தளத்தில் நடந்த கப்பல் கட்டும் தொழில்தான். இதன் நிர்வாகம் முழுதும் ஆங்கிலேயர்களின் கைகளில் இருந்தது. முதன்மையாகச் சீனாவுடன் வாணிபம் செய்வதற்கான கப்பல்கள் அங்கே கட்டப்பட்டன. எல்லாப் பொருளாதார நிலைகளையும் கம்பெனி கைப்பற்றிக் கொண்டதால் பெரிய அளவு வர்த்தகத்திலும் நாணய-உண்டியல் தொழிலிலுமிருந்து இந்தியர்கள் அகல வேண்டியதாயிற்று.

விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் தென் இந்தியாவில் இருந்த நிலைமைகள் வங்காளத்தில் உருவானவற்றிலிருந்து ஓரளவு வேறாய் இருந்தன. போரினாலும் சீரழிவினாலும் ஆங்கிலேயர் வருமுன்பே கட்டப்பட்ட பாசனக் கால்வாய்த் தொகுப்பு பாழடைந்ததாலும் தென் இந்தியாவில் மொத்த உழவு நிலப்பரப்பு, சிறப்பாகத் தொழிற்பயிர் விளைநிலங்களின் பரப்பு குறைந்தது. கைத்தொழிலாளர்களின் நிலைமையைப் பொறுத்தவரையில், நெசவாளர்களைச் சுரண்டும் முறைகள் வங்காளத்தில் போன்று தென் இந்தியாவில் அவ்வளவு கடுமையாக இருக்கவில்லை. ஏனென்றால், 1818ம் ஆண்டுக்குமுன் சென்னை மாகாணத்தைச் சுற்றிச் சுதந்திர இந்திய அரசுகள் இருந்தன. கம்மியர்கள் அவற்றுக்கு ஓடித் தப்ப முடிந்தது. நிலப்பிரபுக்களின் பெரும் படைகள் கலைக்கப்பட்டதை ஒட்டி வர்த்தகத்தில் பிரிஞ்சாரர்களின் (பஞ்சாராக்கள்) முக்கியத்துவம் அற்றுப் போய்விட்டது. இவர்கள் சிறு வியாபாரிகள். இந்தியத் துருப்புக்களுக்கு உணவுப் பண்டங்கள் வழங்கியும் போர்க் கொள்ளைப் பொருள்களை அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கியும் வந்தார்கள். செட்டியார் சாதியினரும் ஜைன மதத்தினரும் ஆன சென்னை வர்த்தகர்கள் நாளடைவில் தரகு வியாபாரிகளாகவும் ஆங்கில வர்த்தகர்களின் ஏஜெண்டுகளாகவும் மாறிவிட்டார்கள். 18ம் நூற்றாண்டின் இறுதிவாக்கில் பம்பாய்ப் பார்சிகள் வர்த்தகர்களுக்கும் வட்டித் தொழிலர்களுக்கும் இடையே பெரும் பங்கு ஆற்றலானார்கள். பேரளவு வர்த்தகத்திலிருந்தும் வர்த்தகக் கடன்-நிதித்துறையிலிருந்தும் வங்காளத்தில் போலச் சென்னையில் இந்தியர்களை ஒரேயடியாக அகற்ற ஆங்கிலேயர்களுக்கு முடியவில்லை.

மராட்டியப் போர்கள் முடியும் வரை பம்பாய் ஆங்கிலேயரின் சிறு ஆட்சி நிலமாக இருந்து வந்தது. மராட்டிய ஆட்சிப் பரப்பில்

நிலையாக வசித்துவந்த குஜராத்தி வர்த்தகர்களின் உதவியாலேயே ஆங்கிலேயர்களால் ஏற்றுமதிக்குச் சரக்குகளைத் திரட்ட முடிந்தது. குஜராத்திய (பின்னர் மார்வாடி) தரகர்களின் தரகு வர்த்தகத் தொண்டுகளில் ஆங்கிலேயர்கள் அக்கறை கொண்டிருந்தது ஒத்து ழைப்புக்குக் கணிசமாக லாபகரமான நிலைமைகளை அவர்களுக்கு அளிக்கத் தூண்டியது. மராட்டிய ஆட்சிப் பிரதேசங்களை ஆங்கி லேயர் வென்று கைப்பற்றிய பின் வரிகளைக் குத்தகைக்கு எடுத்து மகாராஷ்டிரத்திற்கு அனுப்பும் லாபகரமான தொழிலைக் குஜராத் திய வர்த்தகர்கள் இழந்து விட்டார்கள். எனினும் மற்றத் துறை களில் தங்கள் செயல்களை அவர்கள் தீவிரப்படுத்தினர்கள். அவர்கள் விவசாயிகளைச் சுரண்டினர்கள், அடிமைத் தளையில் பிணித்தார்கள், ஆங்கிலத் தொழில் நிலையங்களின் பங்காளிகளாக இருந்தார்கள், ஒப்பந்தங்களின்படி விவசாய விளைபொருள்களையும் கைத்தொழிற் பொருள்களையும் ஏற்றுமதிக்கு வாங்கிக் கொடுத்தார்கள், பம்பாய் மக்களுக்கும் ஆங்கிலப் படைக்கும் தேவைப் பொருள்கள் சப்ளை செய்தார்கள். பிற்காலத்தில் (19ம் நூற்றாண்டின் முதல் முப்பத் தைந்து ஆண்டுகளில்) குஜராத்திய வர்த்தகர்கள் ஆங்கிலச் சரக்கு களை இந்தியச் சந்தைகளில் விற்பனை செய்வதற்குத் தரகர்கள் ஆனார் கள். மாளவத்திலிருந்து அபினியைச் சீனத்துக்கும் பருத்தியை இங் கிலாந்துக்கும் ஏற்றுமதி செய்தார்கள். தங்கள் கப்பல் துறைகளில் கப்பல்கள் கட்டினார்கள். பம்பாய்த் தரகு வர்த்தகர்களிடம் மிகப் பெருத்த மூலதனங்கள் திரண்டன. விளைவாகப் புதிய வர்த்தக இல்லங்கள் வளர்வதற்கு அனுகூலமான நிலைமைகள் உருவாயின. உண்டியல் தொழில் 19ம் நூற்றாண்டின் நாற்பதுக்கள் வரையிலும் இந்தியர்களின் கைகளிலேயே இருந்து வந்தது.

காலனியாட்சி இயந்திரத்தின் அமைப்பு

இந்தியா காலனி ஆன அளவுக்கு ஏற்ப, காலனியாட்சி லாபங் களில் பங்கு கொள்ள ஆங்கில இயந்திரத் தொழில் முதலாளி வர்க்கம் நடத்திய போராட்டத்தின் விளைவுகள் கம்பெனியின் கொள்கையை வரவர அதிகரித்த அளவில் நிர்ணயிக்கலாயின. இந்தியாவின் நிர்வாகத்தில் ஆங்கில நாடாளுமன்றத்தின் அதிகமாகி வந்த பங்கு இதை ஒரு வகையில் பிரதிபலித்தது. கம்பெனியின் சாசனம் ஏறத் தாழப் பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட்டது. இதோடு கூடவே இங்கிலாந்தில் உக்கிரமான அரசியல் போராட்டம் நிகழ்ந்து வந்தது.

கம்பெனியின் காரியங்களில் நாடாளுமன்றத்தின் தலையீடு 1773ம் ஆண்டில் இந்தியாவின் நிர்வாகம் பற்றிய சட்டத்தில் முதன் முறை நேர்முகமாக வெளிப்பட்டது. இந்தச் சட்டத்தின் படி கவர்னர் ஜெனரலையும் வங்காளக் கவுன்சில், கல்கத்தா உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் உறுப்பினர்களையும் கம்பெனி அல்ல, பிரிட்டிஷ் அரசன் நியமித்தான். 1784ல் சாசனம் முறைப்படி மறு பரிசீலனை செய்யப் பட்டபோது வர்த்தகர்களும் (கம்பெனியின் ஏகபோகம் இந்தியாவை அணுக இவர்களுக்கு இருந்த வழியை அடைத்திருந்தது), ''நவாபுகளின்'' (கொள்ளையடித்த செல்வங்களோடு இந்தியாவிலிருந்து வந்து நாடாளுமன்றத்தில் ''அழுகல் இடங்களை'' விலைக்கு வாங்கிய வர்கள் இவ்வாறு குறிக்கப்பட்டார்கள்) அரசியல் செல்வாக்கால் ஆத்திரம் அடைந்த நில மேற்குடியினரும் விக் கட்சியினரும் (கம்பெனிக்கும் அரசனுக்கும் இருந்த நெருங்கிய உறவு ஆங்கிலச் சுதந்திரங்களின் அடிப்படைக்கு ஆபத்து விளைப்பதாக இவர்கள் எண்ணினார்கள்) கம்பெனி இலஞ்ச ஊழலை ஆதாரமாகக் கொண்டே நிலைத்திருக்கிறது என்றும் கைக்கூலிக்கு வசப்படும் மனப் போக்கை நாட்டில் பரப்புகிறது என்றும் கருதிய முற்போக்காளர்களும் கம்பெனியை எதிர்த்தார்கள். விக்குகளால் கொண்டுவரப்பட்ட போக்ஸ் மசோதா தோற்று விட்டது. போக்ஸின் இடத்தில் வில்லியம் பிட் முதலமைச்சன் ஆனான்.

1784ம் ஆண்டு பிரிட்டிஷ் நாடாளுமன்றம் பிட் சட்டத்துக்கு ஒப்புதல் அளித்தது. கம்பெனியின் அதிகாரம் மாறுதது என்ற தோற்றத்தை இந்தச் சட்டம் ஏற்படுத்தியது. ஆனால் உண்மையிலோ இந்திய நிர்வாகம் குறித்த மிக முக்கியப் பிரச்சினைகள் பிரிட்டிஷ் அமைச்சரவையால் நியமிக்கப் பெற்ற கண்காணிப்புக் கவுன்சிலுக்குப் போய்விட்டன. இந்தக் கவுன்சில் ஒரு வகையில் இந்திய விவகாரங்களைக் கவனிக்கும் அரசாங்க இலாகா ஆகி விட்டது. ஆயினும் எல்லாச் சிவில், இராணுவப் பதவிகளுக்கும் (இந்தியாவுக்கு அனுப்பப் பட்ட ஆங்கிலச் சைனியம் நீங்கலாக) ஆட்களை நியமிக்கும் உரிமை கம்பெனி இயக்குநர் குழுவுக்கே இருந்தது.

1784ம் ஆண்டு தோல்வியுற்ற விக் கட்சியினர் போக்ஸின் மசோதா நிராகரிக்கப்பட்டதற்குப் பழி வாங்கும் பொருட்டு வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது வழக்கு தொடுக்க முடிவு செய்தார்கள். வழக்கு விசாரணை 1788ம் ஆண்டு பிரபுக்கள் மன்றத்தில் ஆழ்ந்த சடங்கு முறைச் சூழ் நிலையில் தொடங்கி எட்டு ஆண்டுகள் நீடித்தது. குற்றஞ்சாட்டிய வழக்குரைஞர்களில் இங்கிலாந்தின் தலைசிறந்த பேருரையாளர்களான எட்மண்டு பெர்க்கும் ரிச்சார்டு ஷெரிடானும் இருந்தார்கள். இந்தியாவில் கம்பெனியின் செயல்களது அருவருப்பூட்டும் விவரங்களை

நன்கு அறிந்திருந்த பிரான்சிஸ் அவர்களுக்குத் தகவல்கள் வழங்கினன். ஹேஸ்டிங்ஸ் மீது கொடுமை, அநீதி, ஊழல் குற்றங்கள் சாட்டப்பட்டன. எதார்த்தத்தில் முக்கியக் குற்றவாளியாக இருந்தது கம்பெனியே. வழக்கு தொடுத்தவர்கள் விரும்பாவிடினும் விசாரணையின் போது எடுத்துக் காட்டப்பட்ட தகவல்கள் இந்தியாவில் ஆங்கில ஆக்கிரமிப்பாளர்கள் கடைப்பிடித்த நாட்டாண்மை முறைகளையும் தொடக்க மூலதனக் குவிவுக் காலப் பகுதியில் இந்திய மக்கள் சுரண்டப்பட்டதையும் அம்பலப்படுத்தின.

ஆனால் இதே காரணத்தால் இந்தியாவின் காலனியாட்சிச் சுரண்டலுடைய பயன்களைத் துய்த்து வந்த ஆங்கில முதலாளி வர்க்கத்தால் ஹேஸ்டிங்சும் கம்பெனியும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்க முடியவில்லை. ஹேஸ்டிங்சுக்குத் தண்டனைத் தீர்ப்பு அளிப்பது இந்தியாவில் நிலப்பரப்புக்களை வென்று கைப்பற்றுவதும் சூறையாடுவதுமான இங்கிலாந்தின் கொள்கைக்குத் தண்டனைத் தீர்ப்பு அளிப்பது ஆகியிருக்கும்.

இதன் பின்னர் 1813ம் ஆண்டு கம்பெனியின் சாசனம் மறு பரிசீலனை செய்யப்பட்ட பொழுது இந்தியாவின் நிர்வாகம் பற்றிய பிரச்சினை நாடாளுமன்றப் போராட்டத்துக்கு உரிய விஷயம் ஆகிவிட்டது. அந்தக் காலத்துக்குள் மைசூரும் முக்கியமான மராட்டிய ஆட்சிப் பரப்புக்களும் வசப்படுத்தப்பட்டிருந்தன. இரண்டாவது ஆங்கில-மராட்டியப் போர் முடிந்துவிட்டது. விற்பனைச் சந்தையாக இந்தியாவைச் சுரண்டுவதற்கான முன்னேற்பாடுகள் நிறைவேறி இருந்தன. ஆகவேதான் ஆங்கில முதலாளி வர்க்கம் அனைத்தும் கிழக்கிந்தியக் கம்பெனியின் வர்த்தக ஏகபோகத்தை ஒரு மொத்தமாக எதிர்த்தது. 1813ம் ஆண்டுச் சட்டம் இந்தியாவின் நிர்வாகத்தில் கம்பெனிக்கு இருந்த சலுகைகளைத் தொடாமல் சீனாவுடன் தேயிலை வியாபாரம் ஒன்று நீங்கலாகக் கம்பெனியின் வர்த்தக ஏகபோக உரிமையை ரத்து செய்து விட்டது. அதே சமயம் கம்பெனியின் அரசியல் நடவடிக்கைகள் மீது நாடாளுமன்றத்தின் மேற்பார்வை உறுப்பு என்ற வகையில் கண்காணிப்புக் கவுன்சிலின் பொறுப்பு வலுவாக்கப்பட்டது. இவ்வாறு இந்தியா கம்பெனியின் காலனியாக அன்றி ஆங்கில முதலாளி வர்க்கம் அனைத்தினதும் காலனியாக மேலும் மேலும் அதிகமாக மாறலுற்றது.

கம்பெனியின் நிலைமையில் அடுத்த மாறுதல்கள் 1833ம் ஆண்டு ஏற்பட்டன. ஆட்சியிலிருந்த விக் கட்சியின் யோசனைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட 1833ம் ஆண்டுச் சட்டம் இந்தியாவை நிர்வகிக்கும் உரிமையைக் கம்பெனியிடமே இருக்க விட்டது, ஆனால் அதை மேற்கொண்டும் அரசாங்கத்தின் மேற்பார்வையில் வைத்தது. இந்தியா

முழுவதற்கும் உரிய சட்டத் தொகுப்பைத் தயாரிப்பதில் தனிப்பட ஈடுபடும் அலுவலாளன் ஒருவன் வங்காளக் கவுன்சிலில் அரசஞல் நியமிக்கப்படுவதற்கு இந்தச் சட்டம் வகை செய்தது. இவ்வாறு நியமனம் பெற்ற முதல் அலுவலன் மிதவாதக் கட்சியைச் சேர்ந்த வரலாற்ருளன் மெக்காலே (1800—1859). இவன் குற்றச் சட்டத் தொகுப்பைத் தயாரித்தான், ஆனல் அது செயல்படுத்தப்படவில்லே.

இந்தியாவைக் காலனியாட்சி முறையில் சுரண்டுவதற்கான அலு வலக இயந்திரம் அடிப்படை முறிவு எதுவும் இன்றிப் படிப்படியாக அமைக்கப்பட்டது. வர்த்தகக் கம்பெனி நடைமுறையில் இந்தியாவின் அரசாங்கம் ஆனதும் முற்றும் புதிய பிரச்சினைகள் அதற்கு எதிர்ப் பட்டன. இந்தப் பிரச்சினைகளேத் தீர்ப்பதற்குப் புதிய இயந்திரத்தை அது அமைக்கவில்லே, பழைய இயந்திரத்தையே இசைவிக்க முயன் றது. வர்த்தக இயந்திரம் பிரமாண்டமான நாட்டை நிர்வகிப்பதற் குரிய அதிகார-அலுவலக இயந்திரமாக நாளடைவில் மாறியது. தனது அமைப்பில் அது மிகப் பெரியதாகவும் விரைவியக்கம் இல்லாததாக வும் இருந்தது. அனேக சந்தர்ப்பங்களில் அது நிர்வாகத்துக்கு வெறுமே இடைஞ்சல் ஆகி விட்டது. அதன் எல்லாக் காரியங்களும் கண்டிப் பாகக் கட்டுப்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆயினும் காலனியாட்சி அலுவலர்களின் தான்தோன்றித்தனத்துக்கு அது தாராளமாக இடம் அளித்தது. தவிரவும் மிகப் பேரளவான பணத்தை விழுங்க வேறு செய்தது. கம்பெனியின் நிர்வாக உறுப்புக்கள் இந்தியாவிலும் இருந் தன, இங்கிலாந்திலும் இருந்தன. இங்கிலாந்தில் இயக்குநர் கவுன்சில் கம்பெனிக்குத் தலேமை தாங்கியது. இது பங்குதாரர்கள் கூட்டத் தால் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஒவ்வொரு பங்குதாரருக்கும் அவரிடம் இருந்த பங்குகளின் விலே மதிப்பைப் பொறுத்து ஒன்று முதல் நான்கு வரை வாக்குகள் இருந்தன. உதாரணமாக, 1832ம் ஆண்டு 474 பெரும் பங்குதாரர்கள் கம்பெனியின் மொத்தப் பங்குகளில் பாதிக்கு மேல் வைத்திருந்தார்கள், எல்லாக் காரியங்களேயும் நிறை வேற்றினர்கள். ''இயக்குநர்கள் கவுன்சில் ஆங்கில நிதி அதிபர் களுக்குக் கீழ்ப்பட்ட உறுப்பு தவிர வேறில்லே''* என்று மார்க்ஸ் குறிப் பிட்டார். கம்பெனி இயக்குநர்களின் வருவாய்க்கும் செல்வாக்குக்கும் தலேயூற்றுக இருந்தது ஆதரவு அளிக்கும் உரிமை. இயக்குநர்கள் பணத்துக்காகவும் அரசியல் செல்வாக்குக்காகவும் நாடாளுமன்றத் தில் இடத்துக்காகவும் பதவிகளே வழங்கினர்கள். இயக்குநர்கள் கவுன்சில் பல கமிஷன்களாகப் பிரிந்திருந்தது. இவை காலனியாட்சிக்

---

* கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 9, பக்கம் 189.

கொள்கை சம்பந்தமான எல்லா முக்கியப் பிரச்சினைகள் குறித்தும் உத்தரவுகள் இட்டன, மாகாணக் கவுன்சில்களின் செய்திகளுக்கு விடைகள் அளித்தன.

இந்தியாவை நிர்வகிப்பதற்கான இந்தச் சிக்கல் மிக்க இயந்திரம் முழுதும் மட்டு மீறிப் பிரமாண்டமாகவும் மெதுவாக இயங்குவதாக வும் இருந்தது. இந்தியாவிலிருந்து கடிதங்கள் அனுப்பியதற்கு ஆறு முதல் எட்டு மாதங்கள் வரை காலம் தாழ்த்து இங்கிலாந்து சேர்ந் தன. பதில் சில மாதங்களுக்கு, சில ஆண்டுகளுக்குக் கூட, ஒத்திப் போடப்பட்டது. பிரச்சினை இயக்குநர் கவுன்சிலிலும் கண்காணிப்புக் கவுன்சிலிலும் எல்லாக் கட்டங்களையும் கடந்து சென்று, இவ்விரண்டு உறுப்புக்களுக்கும் இடையே எழும் கருத்து வேறுபாடுகள் சரிப்படுத் தப்படுவதற்குள் அவ்வளவு காலம் கழிந்து விடும். இதற்கிடையே இந்தியாவில் நிலைமை அடியோடு மாறிவிடக் கூடும். ஆகையால்தான் எல்லா உடனடிப் பிரச்சினைகளும் வங்காள, சென்னை, பம்பாய் மாகாண கவர்னர்களாலும் அவர்களுக்குக் கீழ் இருந்த கவுன்சில் களாலுமே தீர்க்கப்பட்டு வந்தன.

ஒவ்வொரு மாகாணமும் இயக்குநர் கவுன்சிலுடன் சுதந்திரமாகக் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளவும் தன் முடிவுகளை வெளி யிடவும் உரிமை பெற்றிருந்தது. இந்திய உயர் நீதி மன்றம் ஒப்புதல் அளித்தால் இந்த முடிவுகள் சம்பந்தப்பட்ட மாகாணத்தின் நிலப் பரப்பில் சட்டங்களாகச் செயல்பட்டன. இவ்வாறு வங்காளத்திலும் சென்னையிலும் பம்பாயிலும் வெவ்வேறு சட்டங்கள் அமுலில் இருந்தன. இந்த நிலைமையால் வர்த்தக, தொழில் விவகாரங்களிலும் பிற பொதுத் துறை நடவடிக்கைகளிலும் பல அசௌகரியங்கள் ஏற் பட்டன. இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் நிலப்பரப்பு முழுவதிலும் ஒரே மாதிரிச் சட்டங்கள் நிலவ வேண்டும் என்று ஆங்கில முதலாளி வர்க்கம் கோரியது. உயர்ந்த பதவிகள் யாவும் ஆங்கிலேயர் களுக்கே அளிக்கப்பட்டன என்பது கூறுமலே விளங்கும். இந்தியர்கள் தாழ்ந்த பதவிகளுக்கே எடுத்துக்கொள்ளப்பட்டார்கள்.

காலனியாட்சி அதிகார இயந்திரத்தின் மிக முக்கிய உறுப்பாக விளங்கியது சிப்பாய்ப் படை. இந்தப் படையின் உதவியால் ஆங் கிலேயர்கள் இந்தியாவை வென்று கைப்பற்றினர்கள். புதிய கட்டத் திலும் அதன் உதவியாலேயே நாட்டைக் கடிவாளம் இட்டு வைத் திருந்தார்கள். 1830ம் ஆண்டு இந்தச் சேனையின் துருப்பு எண்ணிக்கை 2 லட்சத்து 23 ஆயிரத்து ஐந்நூறு. 1817 முதல் 1819 வரை நடந்த மூன்றாவது ஆங்கில-மராட்டியப் போருக்குப் பின் இந்தியாவில் முப் பது ஆண்டுக் காலம் போர்களே நடக்கவில்லை. நாட்டின் எல்லைகளுக்கு வெளியே நடந்த போர்களில் இந்தியச் சேனையின் சிறு பகுதிதான்

பங்கு கொண்டது. ஆனாலும் ஆங்கிலேயர்கள் சிப்பாய்ப் பட்டாளங் களைக் கலைக்கவில்லை. உண்மையில் அவை போலீசு வேலைகள் செய்து வந்தன. சில வேளைகளில் அவை காலனி ஆட்சியாளர்களால் வரி வசூலிக்கப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் மிக அடிக்கடி பல்வகை ''ஒழுங்கீனங்களை'', அதாவது இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான நடவடிக்கைகளை, ஒடுக்குவதற்கே இவை உபயோகிக்கப் பட்டு வந்தன.

இலஞ்சமும் ஊழலும் நிறைந்திருந்த நீதி மன்றத் தொகுப்பும் இந்தியாவை அடக்கி ஒடுக்கும் இயந்திர அமைப்பில் பெருத்த முக் கியத்துவம் கொண்டிருந்தது. நீதி மன்ற நடைமுறையில் பெரும் பங்கு ஆற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் இந்தியாவில் கைக்கூலி கொடுத்தும் உருட்டி மிரட்டியும் எளிதில் பெறப்பட்டன. சிவில் விவகாரங்களில் நீதி மன்ற இழுத்தடிப்பு பெருங் கேடாக இருந்தது. வழக்கு விசாரணை பல ஆண்டுகள் நீடித்தது. விவசாயிகளின் உடைமை உரிமைகள் தெளிவாக வரையறுக்கப்படாததாலும் மறுக்கப்பட்ட தாலும் பெருந் தொகையான புகார்கள் கிளம்பிய வண்ணமாய் இருந்தன. கிராமத்தில் நிலத்தை விலைக்கு வாங்கிவிட்டு கிராம சமு தாய ஒழுங்குக்குக் கீழ்ப்படியாத வேற்றூனை ஆதரித்ததன் மூலம் நீதி மன்றத் தொகுப்பு சமுதாயம் சிதறிப் போக உதவிற்று. நாட்டுப் புறப் பிரதேசத்தில் ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்ட போலீசு அதிகாரியின் தான்தோன்றித்தனத்தையும் நீதி மன்றத் தொகுப்பு ஆதரித்தது. வழிப்பறி கொள்ளைக்காரனை விட அதிகமாக இந்தப் போலீசு அதிகாரியை விவசாயிகள் அஞ்சினார்கள். கிராம சமுதாய ஒழுங்குகளைக் குலைத்துத் தனியார் நில உடைமைக்கு ஊக்கம் அளிக் கும் ஆங்கிலேயரின் இந்தக் கொள்கையின் விளைவாக விவசாயிகள் சுரண்டப்படுவது அதிகமாயிற்று.

19ம் நூற்றாண்டின் முற்பாதியில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி

இங்கிலாந்தில் இயந்திரத் தொழில் முதலாளி வர்க்கத்தின் நிலை கள் உறுதிப்பட்ட பின்னர் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ஆங்கில முதலாளி வர்க்கத்தினுடைய நலன்களுக்கு ஏற்பவே அதிக மாக இயக்கப்படலாயிற்று. இந்தியா பிரிட்டிஷ் சரக்குகளின் விற்

பனைச் சந்தையாகவும் பிரிட்டிஷ் இயந்திரத் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்களைத் தரும் சந்தையாகவும் படிப்படியாக மாற லாயிற்று.

இங்கிலாந்தின் சுங்கத் தீர்வைக் கொள்கை குறைந்த தீர்வை களின் உதவியால் இந்தியாவுக்கு ஆங்கிலச் சரக்குகளின் ஏற்றுமதிக்கு ஊக்கம் அளித்தது. அதே சமயம் உயர்ந்த தீர்வைகள் விதித்து இந் தியாவின் கைத்தொழிற் செய்பொருள்கள் இங்கிலாந்தில் இறக்குமதி ஆவதைத் தடை செய்தது. பிரிட்டிஷ் துணிகள் மீது இந்தியாவில் இறக்குமதி வரி 2 முதல் 3.5 சதவிகிதம் வரை விதிக்கப்பட்டது. ஆனால் இந்தியத் துணிகள் மீது இங்கிலாந்தில் 20 முதல் 30 சதவிகிதம் வரை வரி விதிக்கப்பட்டது. விளைவாக துணிகளை ஏற்றுமதி செய்யும் நாடாக இருந்த இந்தியா அவற்றை இறக்குமதி செய்யும் நாடாக மாறிவிட்டது. மற்றச் சரக்குகள் விஷயத்திலும் இதுவே நேர்ந்தது. உதாரணமாக, பிரிட்டனின் சுங்கத் தீர்வைக் கொள்கையின் விளை வாக சுவீடனிலும் ருஷ்யாவிலுமிருந்து ஆங்கிலேயர்கள் வாங்கிய எஃகை இந்தியாவில் இறக்குமதி செய்வது கூட லாபகரமாக இருந் தது. அதே சமயம், 1833ம் ஆண்டு போர்ட்டோ-நோவோவில் ஆங் கிலப் பொறியாளரால் நிறுவப்பட்ட சிறு வார்ப்புத் தொழிற்சாலை மிக மிகச் சாதகமான நிலைமைகள் (திறந்த கனி, பெருங்காடு, அருகாமையில் துறைமுகம் முதலியன) இருந்த போதிலும் லாபம் தராத காரணத்தால் சில ஆண்டுகளுக்குப் பின் மூடப்பட்டு விட்டது. இவ்வாறே கல்கத்தாவில் கப்பல் கட்டும் தொழில் நிறுத்தப்பட்டு விட்டது. ஏனெனில் அங்கே கட்டிய கப்பல்கள் ஆங்கிலக் கப்பல் களுடன் போட்டி இட்டிருக்கக் கூடும். பம்பாயில் மட்டும் கப்பல் கட்டும் தொழில் கம்பெனியோடு தொடர்பு கொண்ட பார்சிகளின் கைகளில் இருந்ததாலும் சீனாவுடன் கம்பெனியின் வாணிபத்துக்குத் தொண்டாற்றியதாலும் 19ம் நூற்றாண்டின் நடுவரை தொடர்ந்து நடந்து வந்தது.

பிரிட்டிஷ் துணிகள் இந்தியத் துணிகளை விட மலிவாக இந்தியா வில் விற்கப்பட்டன என்றாலும் 19ம் நூற்றாண்டின் நடுவில் நகரங் களிலும் துறைமுகங்களுக்கு அருகே இருந்த சில கிராமங்களிலும் மட்டுமே அவற்றுக்கு விரிவான கிராக்கி இருந்தது. வேறு புகலற்ற இந்திய நெசவாளர்கள் தங்கள் சரக்குகளை ஆங்கிலத் தொழிற்சாலைச் சரக்குகளின் விலைக்கே விற்க வேண்டி வந்தது. இதனால் கைத்தொழி லாளர்களின் வாழ்க்கைத் தரம் ஒரேயடியாகக் குறைந்தது. உதாரண மாக, சென்னை மாகாணத்தில் 1815லிருந்து 1844 வரை நெசவாளர் களின் நிகர வருமானம் 75 சதவிகிதம் குறைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இருபதுக்களில் ஆங்கிலத் தொழிற்சாலை நூல் இந்தியா

வில் இறக்குமதி செய்யப்படுவது தொடங்கிற்று. நூற்றாண்டின் நடுவில் பிரிட்டிஷ் நூல் இந்தியா இறக்குமதி செய்த மொத்தப் பருத்திச் சரக்குகளில் ஆறில் ஒரு பங்கு ஆகி விட்டது. நெசவாளனுக்கு இப்போது நூல் வாங்கிக் கொடுத்த வட்டிக் கடன் வியாபாரிகளின் அடிமைத் தளையில் நெசவாளன் பிணிக்கப்படுவதும் அதிகரித்தது. காட்டாக, 1844ம் ஆண்டு அறுபது சதவிகிதம் நெசவாளர்கள் வர்த்தகர்களுக்குக் கடன்பட்டிருந்தார்கள்.

விவசாயிகளைச் சுரண்டுவதற்கு நிலப்பிரபுத்துவ முறைகளைக் கையாண்டும் தீவிரப்படுத்தியும் உண்மையில் எவ்வித முதலீடும் செய்யாமலே சிறு விவசாயிகளின் பண்ணைகளிலிருந்து மூலப் பொருள்களை வாரிச் செல்ல ஆங்கிலேயர்களுக்கு முடிந்தது. இந்தக் காரணத்தால்தான் போலும் இந்தியாவில் தோட்டக்கால் தொழில் (அஸ்ஸாமின் மக்கள் தொகை குறைந்த மலைப் பிரதேசங்களில் 19ம் நூற்றாண்டின் நடுவில் தோன்றிய தோட்டக்கால்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாவிட்டால்) தழைக்கவில்லை. அபினிக் கசகசாவும் அவுரியும் வாங்குவதற்குக் கட்டாய ஒப்பந்த முறை விரிவாகக் கையாளப்பட்டது. தங்கள் பண்ணைகளில் இந்தப் பயிர்களை விளைத்து வந்த விவசாயிகளை இவ்வொப்பந்த முறை பண்ணை அடிமைகளாக மாற்றி விட்டது. ''அவுரித் தோட்ட முதலாளிகள்'' முன்பணம் கடனுகக் கொடுத்து விவசாயிகளுக்கு அடிமைத் தளை பூட்டினர்கள். பின்பு தங்கள் விருப்பப்படி நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்த விலைகளுக்கு அவர்களுடைய விளைச்சல் முழுவதையும் பிடுங்கிக் கொண்டார்கள். இந்த விலைகள் மிக மிகக் குறைவாய் இருந்ததால் விவசாயிகளால் தங்கள் கடன்களைத் தீர்க்க ஒரு போதும் முடியாதிருந்தது. பெற்றோர் பட்ட கடன்கள் குழந்தைகள் மேல் சார்ந்தன. ஒவ்வொரு தோட்ட முதலாளியும் தலைவெட்டிகள் கும்பல்களை வைத்திருந்தான். இந்தக் கொலைகாரர்கள் விவசாயிகளைக் கண்காணித்து, அவர்கள் தப்பி ஓடினால் அவர்களை இழுத்து வந்தார்கள். அண்டைத் தோட்டக்கால்களில் வேலை செய்து வந்த விவசாயிகளைக் கடத்தினர்கள். சட்ட வரம்பு அற்ற இந்தக் கொள்ளைக்கும் வன்முறைகளுக்கும் எதிராக ''அவுரித் தோட்டக் கலகக் கிளர்ச்சிகள்'' 18ம் நூற்றாண்டின் எண்பதுக்களிலிருந்து 19ம் நூற்றாண்டின் இறுதி வரை இடைவிடாது நடந்து வந்தன, சில வேளைகளில் வெற்றியில் முடிந்தன. செயற்கைச் சாயப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் அவுரிப் பயிர்த் தொழில் லாபமில்லாதது ஆகும் வரை இந்த நிலை நீடித்தது.

19ம் நூற்றாண்டினுடைய இருபதுக்களின் முடிவில் ஆங்கிலத் தொழிலதிபர்கள் கரும்புப் பயிர் நிலங்களைப் பெருக்கும் படி பீகார் விவசாயிகளைத் தூண்டலாயினர். அதே சமயம் பீராரில் நீண்ட

இழையுள்ள பருத்தி ரகத்தை விளைவிக்கக் கம்பெனி முயன்றது. வங்காளத்தில் இத்தாலியப் பட்டுப் பூச்சிகளின் கூட்டுப் புழுக்கள் கொண்டுவரப்பட்டன. மைசூரில் காப்பியும் புகையிலையும் பயிராக்கப் பட்டன. ஆயினும், அதிக உயர்தர மூலப் பொருள்கள் சப்ளை செய்யும் நாடு என்ற பாத்திரத்துக்கு இந்தியாவை இசைவிப்பதற்கான இந்த முயற்சிகள் எல்லாவற்றிலும் இந்தியர்களுக்கு ஒரு பயனும் ஏற்பட வில்லை. காரணம், விவசாயியின் வாழ்க்கைத் தரம் மிகத் தாழ்ந்தி ருந்ததால் மரபு வழி வந்த வேளாண்மை முறையை மாற்றிக் கொள்ள அவனுக்கு இயலவில்லை. இந்திய விவசாயி வரிகளும் வாடகையும் செலுத்தும் பொருட்டுத் தனது விளைச்சலை அதன் உற்பத்தி மதிப் பைச் சாராமல் அடிக்கடி விற்பனை செய்ய நேர்ந்தது. 1820க்களிலும் 30க்களிலும் வரி விலக்கு பெற்ற நிலப் பகுதிகளுக்குரிய பத்திரங் கள் பெருவாரியாக மறு பரிசீலனை செய்யப்பட்டன. விளைவாக சென்னை, பம்பாய் மாகாணங்களில் மொத்த வரித் தொகை உயர்த் தப்பட்டது. வங்காளத்தில் நில வாடகை அதிகமாக்கப்பட்டது, ஏனெனில் ஜமீன்தார்கள் கிராமங்களில் வட்டித் தொழிலும் நடத்திக் கடன்களுக்கு வட்டி பெறும் சாக்கில் தானியத்தைப் பறிமுதல் செய்யலானார்கள். இந்த நிலையில் 19ம் நூற்றாண்டின் முற்பாதியில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் ஏழு முறை பஞ்சம் ஏற்பட்டுப் பதினைந்து லட்சம் உயிர்களைக் கொள்ளை கொண்டது இயல்பே.

உலகச் சந்தையுடன் இந்தியாவின் பொருளாதார உறவுகள் ஏற் பட்டதனால் துறைமுக நகரங்கள் வளர்ந்தன, அவற்றுக்கும் நாட்டின் உட்பகுதிகளுக்கும் இடையே வர்த்தக உறவுகள் அதிகரித்தன. 19ம் நூற்றாண்டின் நடுவில் இந்தியாவில் இருப்புப் பாதைகள் முதன் முதலாகப் போடப்பட்டன. அவற்றைச் சீராக வைத்துக் கொள் வதற்கான செப்பனிடும் தொழிற்கூடங்கள் நிறுவப்பட்டன. புதிய துறைமுகக் கட்டிடங்கள் எழுந்தன. தந்திப் பாதை அமைக்கப்படலா யிற்று. அஞ்சல் நிலையத் தொடர்புகள் மேம்படுத்தப்பட்டன. பழைய பாசனக் கால்வாய்கள் மீட்டமைக்கவும் புதியவை நிறுவவும் பட் டன. இவற்றின் மூலம், சிறப்பாக கவர்னர் ஜெனரல் டால்ஹௌசி யின் காலத்தில் (1848—1856) இயந்திரத் தொழில் மூலதனத்தால் இந்தியா விரைவாக வசப்படுத்தப்படுவதற்கு ஏற்ற நிலைமைகள் உருவாக்கப்பட்டன. இந்தியாவிலேயே, இந்தியத் தரகு வர்த்தக முதலாளி வர்க்கத்தின் இடையில், முதன்மையாகப் பம்பாயிலும் கல்கத்தாவிலும், புதிய வர்த்தக இல்லங்கள் தோன்றின. இவற்றி னிடம் கோடானு கோடிப் பணம் இருந்தது. இவை ஐரோப் பியத் தோரணையில் தங்கள் வர்த்தகத்தையும் வங்கித் தொழிலையும் நடத்தி வந்தன.

இந்திய இயந்திரத் தொழில் முதலாளி வர்க்கம் 1830—50க்களில் உருவாகத் தொடங்கியது. முதல் கைத்தொழில் நிலையங்கள் முதல் இயந்திரத் தொழிற்சாலைகளுடன்—கல்கத்தாவின் அருகில் ஆங்கிலச் சணல் தொழிற்சாலை, பம்பாய் நகரில் இந்திய நெசவாலைகள் ஆகியவற்றுடன்—அனேகமாக ஒரே சமயத்தில் நிறுவப்பட்டன. வர்க்கத்தின் தோற்றம் மெதுவாகவும் சிரமத்துடனும் நிகழ்ந்தது. இந்தியா உலக வர்த்தகத்தில் ஈடுபட்டுப் புதிய பொருளாதார உறவுகள் வளர்ந்து வந்த போதிலும் விவசாயத்தில் வர்த்தகச் சரக்கு-பண உறவுகள், மொத்தத்தில் சரக்கு உற்பத்தி ஆகியவற்றின் தரம் இன்னும் தாழ்வாகவே இருந்தது. தவிர இந்தத் தரம் எங்கும் ஒரு படித்தாக இருக்கவில்லை. ஆங்கிலேயரின் ஆட்சியில் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக் காலமாக இருந்துவந்த வங்காள மாகாணத்திலும் 1830க்களில் வட மேற்குப் பிராந்தியங்கள் என்ற பெயரால் தனி மாநிலம் ஆக்கப்பட்ட எஞ்சிய வட இந்தியாவிலும் கூடச் சரக்கு-பண உறவுகளின் வளர்ச்சி பம்பாய் மற்றும் சிறப்பாகச் சென்னை மாகாணத்தின் உட்பிரதேசங்களில் நடந்ததைக் காட்டிலும் விரைவாக நிகழ்ந்தது.

மொத்தத்தில் இந்தியாவில் காலனி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை இரு வகைத் தன்மை கொண்டிருந்தது. ஒரு புறம், புதிய பொருளாதாரப் பிரதேசங்கள், புதிய போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது, கிராம சமுதாயம் சிதறிக் குலைந்தது. மறு புறம், விவசாயிகளை நடப்பில் நிலப்பிரபுத்துவ-வரிவிதிப்பின் மூலம் சுரண்டும் வழக்கம் வலுத்தது, நில உடைமையாளர்களின் தனியார் சொத்துரிமை உறுதிப்பட்டது. அவர்கள் தங்கள் நிலத்தை வாரக் குத்தகைக்கு விட்டார்கள். குடியானவர்களைப் பண்ணையடிமைகள் ஆக்கும் தளைபூட்டும் முறைகளைக் கையாண்டார்கள். ஒரு புறம், இந்தியா இங்கிலாந்தின் விவசாய-மூலப் பொருள் துணைநிலமாக மாற்றப்பட்டதால் நாட்டில் முதலாளித்துவ உற்பத்திக்கு ஏற்ற ஆதாரம் புறநிலையாக உருவாயிற்று. மறு புறம், பல்வேறு வகையான நிலப்பிரபுத்துவ மீத மிச்சங்கள் நிலையாக வைக்கப்பட்டதாலும் தேசிய உற்பத்தி வளர்ச்சியின் வழியில் தடங்கல்கள் போடப்பட்டதாலும் இந்தியப் பொருளாதார வளர்ச்சி தடைப்பட்டது.

இந்தியா இறுதியாக வென்று கைப்பற்றப்படுதல்

18ம் நூற்றாண்டின் பிற்பாதியில் இந்தியாவின் அடுத்து வந்த விதியை நிர்ணயித்த நிகழ்ச்சிகளிலிருந்து பஞ்சாப் ஒரு புறம் ஒதுங்கி இருந்தது. அந்தக் காலத்தில் பஞ்சாபின் நிலப்பரப்பில் மிசல்கள் எனப்பட்ட 12 சீக்கியச் சிற்றரசுகள் இருந்தன. இவற்றை ஆண்டவர்கள் சர்தார்கள் (தலைவர்கள்) எனப்பட்டார்கள். முகலாயர்களுடனும் ஆப்கானிய ஆக்கிரமிப்பாளர்களுடனும் நடந்த சண்டைகளின் போது சீக்கியர்களின் படைத் தலைவர்களாக இருந்தவர்கள் இவர்கள். சீக்கியர்களின் கிளர்ச்சிக் காலத்தில் எஞ்சிய வட்டார முகமதிய, இந்து நிலப்பிரபுக்களின் கைகளில் பஞ்சாபின் மிகவும் அற்பப் பகுதியே இருந்தது.

ஒவ்வொரு மிசலும் சுதந்திரச் சிற்றரசாக விளங்கியது. ஆனால் எல்லா மிசல்களும் ஒரே முழுமையின் பகுதிகள், சீக்கியக் கால்சாவின், அதாவது சமுதாயத்தின், ஆட்சிப் பிரதேசங்கள் எனக் கருதப்பட்டன (கால்சா என்பது, தூய என்று பொருள்படும் ஹாலிசா என்னும் அரபி மொழிச் சொல்லின் அடியாகத் தோன்றிய சொல் ஆகும்). நாளடைவில் இந்தச் சொல் வேறு பொருளையும் பெறலாயிற்று. சேனைத் தலைமைக் குழு கால்சா என்று அழைக்கப்படத் தொடங்கியது. பிற்காலத்தில் சேனையின் கால்சா சீக்கியச் சிற்றரசர்களுக்கு எதிர்நிற்கலுற்றது. சர்தார்கள் பிறர் சார்பின்றி ஆண்டு வந்தார்கள். கூட்டுப் படையெழுச்சிகளுக்காக மட்டுமே அவர்கள் ஒன்று சேர்ந்தார்கள். இவை தலைவர்கள் மன்றத்தில் முன்கூட்டி ஆலோசிக்கப்பட்டன.

மிசல்களின் தலைமை சீக்கிய நிலப்பிரபுக்களின் கைகளில் இருந்ததால் அவை வழக்கமான இந்தியச் சிற்றரசுகளாக மேலும் மேலும் மாறத் தலைப்பட்டன. உண்மையில் 1765 முதல் 1799 வரை பஞ்சாபில் அதிகாரத்தின் பொருட்டும் அண்டைச் சிற்றரசுகள் தலைகளில் கைவைத்து ஆட்சிப் பரப்பை விரிவாக்கிக் கொள்ளும் பொருட்டும் சர்தார்களுக்குள் கடுமையான போராட்டம் நடந்தது. இந்தப் போராட்டத்திலும் 18ம் நூற்றாண்டின் இறுதியில் பல தடவைகள் இந்தியா மீது படையெடுத்து வந்த ஆப்கானிய அரசன் ஜமன்ஷாவை எதிர்த்துப் போராடுவதிலும் சுக்கர்சக்கியா என்னும் மிசல் சிறந்து நின்றது. 1797ம் ஆண்டு முதல் இதன் தலைவனாய் இருந்தான் ரணஜீத் சிங். 1799ல் லாகூர் நகரைக் கைப்பற்றிக் கொண்டு ரணஜீத் சிங் (1799—1839) மகாராஜா என்று பட்டம் சூட்டிக் கொண்டான். இதன்பின் பஞ்சாப் முழுவதையும் தன் ஆளுகைக் கீழ்க் கொண்டு

வரும் பொருட்டு அனேக ஆண்டுகள் தொடர்ந்து போராட்டம் நடத்தினர். விவசாயிகள் ரணஜீத் சிங்கின் சேனையுடன் விருப்போடு சேர்ந்து கொண்டார்கள். ஏனெனில் சர்தார்களின் உட் பூசல்களால் அவர்கள் துன்பப்பட்டார்கள், அதோடு ஆங்கிலக் கம்பெனியிடம் அஞ்சினர்கள்.

1820க்களுக்குள் பஞ்சாபில் ரணஜீத் சிங்கின் வலிய சீக்கிய அரசு தோன்றியது. சர்தார்களின் நிலங்கள் அரசு உடைமை எனவும் பஞ்சாபின் மையத்தில் இருந்தவை ரணஜீத் சிங்கின் ஆட்சிப்பரப்பு எனவும் அறிவிக்கப்பட்டன. காச்மீரத்தையும் ஆப்கானிய பிரதேசங்கள் சிலவற்றையும் வென்று கைப்பற்றி இருந்த ரணஜீத் சிங் அந்த நிலப் பரப்புக்களிலிருந்து படைப் பணிப் பொறுப்புக்கு ஜாகீர்கள் வழங்கவும் ஒரு பகுதியைப் பெருத்ததொகை ஜாமீனுகப் பெற்றுக் கொண்டு வரிக் குத்தகையாளர்களுக்குக் கொடுக்கவும் முடிந்தது. ரணஜீத் சிங்கிடம் ஏராளமான செல்வம் இருந்தது. எனவே வரிச் சுமையைக் குறைக்க அவனுல் முடிந்தது. அதோடு கூட, நெப்போலியனின் முன்னுள் படைத் தலைவர்கள் பெரும்பாலராய் இருந்த பிரெஞ்சு அதிகாரிகளின் மேற்பார்வையில் தன் சேனையை ஐரோப்பிய மாதிரியில் அவன் மாற்றி அமைத்தான். சேனையின் ஆதாரமாக விளங்கிய காலாட் படையில் கிராம சமுதாயத்தினரான விவசாயிகள் இருந்தார்கள் இவர்கள் தாங்குதிறன் உள்ளவர்கள், உயர்ந்த போர்ப் பண்புகள் வாய்ந்தவர்கள்.

பஞ்சாப் ஒன்றுக்கப்பட்டது கைத்தொழில்களும் வர்த்தகமும் வளர்ச்சி அடைய உதவிற்று. வர்த்தகப் பாதைகள் கடந்து சென்ற இடங்களில் இவை சிறப்பான வளர்ச்சி பெற்றன. ஆனுல் உள் வட்டாரங்களில் சுய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் இயற்கைப் பொருளாதாரமே மேலோங்கி இருந்தது.

ரணஜீத் சிங் இறந்தபின் அரசு சிதறத் தொடங்கியது. பெரிய ஜாகீர்தார்களும் ஆட்சிப் பிரதிநிதிகளும்(முதற்படியாக முல்தானிலும் காச்மீரத்திலும் இருந்தவர்கள்) தனியாகப் பிரிய முயன்றார்கள். வெவ்வேறு நிலப்பிரபுக் குழுக்களிடையே மையத்தில் ஆட்சி அதிகாரத்தின் பொருட்டுப் போராட்டம் நடந்தது. ஒருவர் பின் ஒருவராக வெவ்வேறு மகாராஜாக்கள் சிங்காதனத்தில் அமர்வதும் வீழ்வதுமாக இருந்தார்கள். முடிவில் ரணஜீத் சிங்கின் புதல்வனை சிறுவன் தலீப் சிங் 1844ல் அரசு கட்டிலில் அமர்த்தப்பட்டான். ஆட்சி அதிகாரத்திற்கான இந்தப் போராட்டத்தில் மிகப் பெரிய சீக்கியத் தளகர்த்தர்கள் மடிந்தார்கள்.

சீக்கிய அரசின் சேனை அரசியல் அரங்கில் செயல்பட்டு, பட்டாளக் கமிட்டிகள் (பஞ்சாயத்துக்கள்) மூலம் நாட்டு நிர்வாகத்தின்

மீது நிர்ணயகரமான செல்வாக்கு செலுத்தத் தொடங்கியது. பஞ்சாயத்துக்கள் நடப்பில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டன. ஆனாலும், அவற்றின் கண்காணிப்பில்தான் என்றாலும், சேனைக்குத் தலைமை தாங்கியவர்கள் நிலப்பிரபுக்களான சீக்கியத் தளகர்த்தர்கள்தாம். சீக்கியச் சேனையின் படையினர் மீது நாம்தாரிகள் (இறைவன் பெயரைச் சூடுவோர்), கூக்காக்கள் (கூக்குரல் இடுவோர்) என்ற பிரிவுகளின் மதச் சீர்திருத்தப் போதனைக்குப் பெருத்த செல்வாக்கு இருந்தது. ஒழுக்கத் தூய்மையும் எளிமையும் ஜனநாயகப் பண்புகளும் வாய்ந்த தொடக்கக் காலச் சீக்கிய மதக் கோட்பாடுகளுக்குத் திரும்பும்படி நாம்தாரிகள் அழைத்தார்கள். சீக்கிய உயர் குடியினரின் ஆடம்பரத்தை அவர்கள் எதிர்த்தார்கள். பஞ்சாப் நிலப்பிரபுக்களோ, பஞ்சாயத்துக்களின் செல்வாக்கிலிருந்து விடுபட முயன்றார்கள். இதன் பொருட்டு அவர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் போரை மூட்டி விடத் தொடங்கினார்கள்.

ஆப்கனிஸ்தானத்தைக் கைப்பற்றுவதற்கான போரில் 1839—1842ல் தோல்வி அடைந்திருந்த கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவை முழுமையாக வசப்படுத்துவதன் மூலம் தன் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ள முடிவு செய்தது. 1843ம் ஆண்டு ஹைதராபாதின் (சிந்து ஆற்றின் கரையில் உள்ளது) அருகே சிந்துப் பிரதேச அமீர்களோடு நடந்த போராட்டத்துக்குப் பிறகு சிந்துப் பிரதேசம் பிரிட்டிஷ் இந்தியாவில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. மேல் சிந்துவில் ரயத்துவாரி முறை செயல்படுத்தப்பட்டது. கீழ்ச் சிந்துவிலோ, ஜமீன்தார்களே நிலத்தின் சொந்தக்காரர்களாக ஒப்புக்கொள்ளப்பட்டனர். சிந்து இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்டது பஞ்சாபைத் தாக்க ஆங்கிலேயர்களுக்கு இன்னொரு தளம் தயாரிக்கும் பொருட்டே.

1845ம் ஆண்டு பிரிட்டிஷ்-இந்திய அதிகாரிகள் சீக்கியர்களுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தார்கள். முத்கி, பிரோஸ்ஷா என்னும் இடங்களில் 1845லும் சொப்ரான் என்ற இடத்தில் 1846லும் நடந்த போர்களில் சீக்கியச் சேனை வீரத்துடன் சமர் புரிந்தது. ஆனால் ஒவ்வொரு தடவையும் நிலப்பிரபுத் தளகர்த்தர்கள் அதற்குத் துரோகம் செய்தார்கள். நிர்ணயகரமான நேரத்தில் அவர்கள் தங்கள் படைகளைத் திருப்பி அழைத்துக் கொண்டார்கள், இல்லாவிட்டால் ஓடித் தப்பினார்கள். விளைவாகப் பஞ்சாப் ஆங்கிலேயர் வசமாயிற்று. சீக்கிய அரசு முக்கியமான பல மாவட்டங்களை இழந்தது.

கிளர்ச்சி ஏற்படுமோ என்று அஞ்சி, ஆங்கிலேயர்கள் முன்போலவே தலீப் சிங்கை அரசுத் தலைவனாக ஒப்புக் கொண்டார்கள். ஆனால் அவனுடைய ஆட்சிப் பிரதிநிதி மன்றத்தின் அதிகாரம் லாகூர் மாவட்டத்திலும் பெஷாவரிலுமே சென்றது. போராட்ட உணர்ச்சி

மிக்க சீக்கிய விவசாயிகளுக்கு ஆங்கிலேயர் விட்டுக் கொடுத்தார்கள். நிலவரி சிறிது குறைக்கப்பட்டது, சீக்கிய சர்தார்கள் வசூலித்து வந்த அப்வாப் என்னும் தனி வரி அகற்றப்பட்டது. ஆயினும் முல்தான் ஆட்சிப் பிரதிநிதியை அகற்றவும் அங்கே ஆங்கிலப் படைப் பிரிவை அனுப்பவும் செய்யப்பட்ட முயற்சிக்கு எதிராக 1848ம் ஆண்டு மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். பஞ்சாபின் வட மேற்கு எல்லைப்புறத்துக்கு இந்தக் கிளர்ச்சி பரவிற்று. சிலியான்வால் என்னும் இடத்திலும் குஜராத்திலும் (பஞ்சாபில் உள்ளது) நடந்த சண்டைகளில் ஆங்கிலப் படைகள் பெருத்த சேதம் அடைந்தாலும் வெற்றி பெற்றன. பஞ்சாப் ஆங்கில ஆட்சிப் பரப்பில் சேர்க்கப்பட்டது. ஜம்மு-காச்மீரச் சிற்றரசு ரணஜீத் சிங்கின் முன்னாள் படைத் தலைவனும் பெரிய ஜாகீர்தாரும் ஆன டோக்ரா-ராஜபுத்திரன் குலாப் சிங் என்பவனுக்குக் கொடுக்கப்பட்டது. கம்பெனியின் மாணியக்காரனாக இருக்க அவன் ஒப்புக் கொண்டான்.

பஞ்சாபை வசப்படுத்திய பின் முதல் சில ஆண்டுகளில் ஆங்கிலேயர்கள் கிராம சமுதாயங்களின் அமைப்பை மாற்றவில்லை. ஆனால் சமுதாய நிலங்களின் வசதியுள்ள குத்தகைக்காரர்களுக்குக் காப்புக் குத்தகை உரிமை எனப்பட்டதை (அதாவது, முந்திய குத்தகைப் பணத்தைச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் நிலத்தை நிரந்தரமாகப் பண்படுத்தும் உரிமை) அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். பஞ்சாப் முழுவதிலும் பண்ட வரி பண வரியாக மாற்றப்பட்டது. இதனால் விவசாயிகள் விளை பொருள்களைச் சந்தையில் விற்க வேண்டி வந்தது, அகவிலை குறைந்தது, விவசாயிகளின் நிலைமை மோசமாயிற்று, வட்டித் தொழிலர்களின் செல்வாக்கு வளர்ந்தது. சீக்கிய நிலப்பிரபுக்கள் தங்கள் நிலப்பரப்புக்களின் உடைமையாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டார்கள். ஆங்கிலக் காலனி ஆட்சியாளர்களுக்கு இவர்கள் ஆதாரத் தூண்களாக விளங்கினர்கள்.

காலனியாட்சி எதிர்ப்புப் போராட்டங்கள்

காலனியாட்சி அதிகாரிகள் இந்தியாவில் ஆங்கில ஆதிக்கம் எப்போதும் நிலைத்திருக்கும் என்று உறுதியாக நம்பியபடியால் இந்தியச் சிற்றரசுகளைப் படிப்படியாக ஒழித்துவிட்டு இந்திய நிலப்பரப்பு அனைத்தையும் நேராக நிர்வகிக்க முடிவு செய்தார்கள். இந்தக் குறிக்

கோளை அடைவதற்கு அவர்கள் கையாண்ட முறைகளில் ஒன்று ''அரசு ரிமை இழப்புக் கொள்கை'' என்பதாகும். புதல்வர்கள் இல்லாவிட்டால் சிற்றரசர்களின் தத்துப் பிள்ளைகள் வாரிசுகளாக ஒப்புக் கொள்ளப்பட மாட்டார்கள் என இந்தக் கொள்கை விதித்தது. இத்தகைய சிற்றரசுகள் கம்பெனியின் நேர் ஆட்சிக்கு வந்தன. 1848 முதல் 1858 வரை இந்த முறையால், சதாரா, நாகபுரி, ஜான்சி, சம்பல்பூர் முதலிய சிற்றரசுகள் ஒழிக்கப்பட்டன. தஞ்சாவூர் ராஜாவும் கருநாடக (ஆர்க்காட்டு) நவாபும் இறந்த பிறகு இந்தப் பட்டங்களே அகற்றப்பட்டன. ஹைதராபாது நிஜாமின் கடன்களைத் தீர்க்கும் பொருட்டு யாவற்றிலும் வளர்ச்சி மிக்க பருத்தி விளைநிலப் பிரதேசமான பீரார் பிடுங்கிக் கொள்ளப்பட்டது. 1831ம் ஆண்டு முதல் மைசூர். சிற்றரசு பிரிட்டிஷ் அதிகாரிகளின் நேரான நிர்வாகத்தில் இருந்தது. ஆனால் ராஜாவுக்கு உதவிச் சம்பளம் கிடைத்து வந்தது. பேஷ்வா இரண்டாம் பாஜி ராவின் மரபினருக்கோ உதவிச் சம்பளம் நிறுத்தப்பட்டு விட்டது. 1856ம் ஆண்டின் தொடக்கத்தில் நிர்வாகம் மோசமாய் இருக்கிறது என்ற சாக்கில் அயோத்திச் சிற்றரசுக்கு முடிவு கட்டப்பட்டுவிட்டது.

அரசை இழந்ததும் முன்னாள் சிற்றரசர்கள் அரசவைகளைக் கலைத்துவிட்டார்கள். விளைவாக, சிற்றரசு நிர்வாகப் பிரதிநிதிகள் வருவாய்க்கான ஊற்றை இழந்தார்கள், சிற்றரசின் மேற்குடியினருக்கும் படைப் பிரிவுகளுக்கும் பணியாற்றி வந்த கம்மியர்கள் நிலை குலைந்து போனார்கள். வரி உயர்ந்தது, விவசாயிகளின் நிலைமை சீர்கேடு உற்றது, ஏனெனில் ஆங்கில அரசாங்கம் விளைச்சல் பொய்த்துப் போன போது வரிக் குறைப்பு செய்யவில்லை, விதைப்பு முதலியவற்றுக்காக உதவிக் கடன்களும் கொடுக்கவில்லை. முடிவாக, சிற்றரசர்கள் சாதாரண பிரிட்டிஷ் குடிகளின் நிலைக்குத் தாழ்த்தப்பட்டது இந்தியர்களின் தேசிய உணர்ச்சியைப் புண்படுத்தியது. எனவே இந்திய மக்களின் விரிவான வட்டாரங்களில் அதிருப்தி பரவியது. அடிக்கடி விவசாயிகளின் போராட்டத்துக்கு முன்னாள் நிலப்பிரபு தலைமை தாங்கினான். இந்தியாவின் பல்வேறு இனக் குழுக்கள்பால் காலனியாட்சி நிர்வாகத்தினர் கடைப்பிடித்த போக்கு மக்களின் அதிருப்திக்கு இன்னொரு காரணம் ஆயிற்று. இந்த இனக் குழுவினரில் பெரும்பாலோர் முன்பு வரிகள் செலுத்தவில்லை, படைப் பணியும் காவற் பணியும் ஆற்றினார்கள், சாலைகளின் பாதுகாப்பைக் கவனித்துக் கொண்டார்கள். இனக் குழுவினர் ஆற்றி வந்த இந்தப் பணிகள் தேவை அற்றவை என்று ஆங்கிலேயர்கள் கருதி அவர்களுடைய நிலப்பகுதிகளுக்கு வரி விதித்தார்கள். விளைவாக இந்தியா நெடுகிலும் இனக் குழுவினரின் கிளர்ச்சிகள் பரவின.

காலனி ஆட்சியாளர்களுக்கு எதிராக விவசாயிகள், இனக் குழுவினர், புண்பட்ட நிலப்பிரபுக்கள் ஆகியோரின் போராட்டங்கள் 19ம் நூற்றாண்டின் முற்பாதி முழுவதிலும் இடையறாது நடந்து வந்தன. நிலப்பிரபுக்களான பாளையக்காரர்கள் வட சர்க்கார் பிரதேசங்களில் ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராக 19ம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் விடாப்பிடியாகப் போராடினார்கள். 1801 விருந்து 1805வரை ஆங்கிலத் தண்டனைப் படைகள் ஒன்றன் பின் ஒன்றாக அங்கே அனுப்பப்பட்டன. அடக்கப்பட்டு விட்டது போன்றிருந்த கிளர்ச்சி அங்கே 1813—1814லும் பிறகு 1831லும் மீண்டும் வெடித்துக் கிளம்பியது. இந்தக் கடைசிக் கிளர்ச்சியை அடக்குவதற்குச் சில ஆண்டுகள் தேவைப்பட்டன.

1807ம் ஆண்டு டில்லி மாவட்டம் முழுதும் கிளர்ச்சிக்கு உள்ளாயிற்று. 1814ம் ஆண்டு தாப்பா மனீர் (வாராணசியின் அருகே உள்ளது) என்ற இடத்தில் ராஜபுத்திர விவசாயிகள் ஆயுதம் ஏந்திக் கிளர்ச்சி செய்து கிராமம் ''வேற்றனுக்கு'' விற்கப்படுவதை ரத்து செய்வித்தார்கள். படைப் பணிக்காக முன்பு வரி விலக்கு அளிக்கப் பட்டிருந்த விவசாய ஒதுக்கீட்டு நிலத்தின் மீது வரி விதிக்கப்பட்டதை எதிர்த்து ஒரிஸ்ஸா விவசாயிகள் வட்டார நிலப்பிரபுவின் தலைமையில் 1817—1818ல் கிளர்ச்சி செய்தார்கள். பூனா மாவட்டத்தில் 1826 முதல் 1829 வரை ரமோஷி இனக் குழுவினரின் கிளர்ச்சி நடந்தது. முன்னாள் மராட்டியச் சேனைகளின் படையினர் இதில் சேர்ந்து கொண்டார்கள். அதிகாரிகள் அவர்களுக்குக் குறைந்த வரியுள்ள நிலங்களைக் கொடுக்க வேண்டியதாயிற்று. பிதனூர் வட்டாரத்தில் வரி உயர்வை எதிர்த்து விவசாயிகள் நடத்திய கிளர்ச்சியை அடக்குவதற்காக 1830—1831ல் ஆங்கிலப் படைகள் மைசூர் சிற்றரசுக்கு அனுப்பப்பட்டன. ஓசூர் (சென்னை மாகாணம்) சிற்றரசனின் ஆட்சிப் பரப்பு கடன் பாக்கிக்காகப் பறிமுதல் செய்யப்பட்டு ஆங்கிலேயரின் நேர்முக ஆட்சி அங்கே நிலைநாட்டப்பட்டதற்கு எதிராக 1835 முதல் 1837 வரை அங்கு கிளர்ச்சி நடை பெற்றது. 1842ம் ஆண்டு இதே காரணத்தால் சாகரில் கிளர்ச்சி மூண்டது. கர்நூல் விவசாயிகள் வட்டாரப் பாளையக்காரன் தலைமையில் 1846—1847 கிளர்ச்சி செய்தார்கள். 1848ம் ஆண்டு நாகபுரியில் ரோகில்லர்கள் கலகம் செய்தார்கள். பம்பாய் மாகாணத்தில் அக்கம் பக்கமாக இருந்த கோல்காப்பூர், சந்தவாடி என்னும் சிற்றரசுகளில் ஆங்கிலேயர் வரி உயர்த்தியதை எதிர்த்துப் பெருங் கிளர்ச்சி 1844ல் மூண்டது. அதே பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த கான்தேஷ் சிற்றரசில் நில அளவீடு செய்யப்பட்டு நிலவரி உயர்த்தப்பட்டதை ஒட்டி 1852ம் ஆண்டு விவசாயிகள் கிளர்ச்சி செய்தார்கள்.

இந்தச் சமயத்தில் இனக் குழுவினரின் போராட்டங்களும் நிகழ்ந்த வண்ணமாய் இருந்தன. இவற்றுல் காலனி ஆட்சியாளர்கள் கலைப் பூட்டும் கடினமான ''சிறு போர்கள்'' நடத்துவது அவசியம் ஆயிற்று. சோட்டா நாகபுரியில் (வங்காள மாகாணம்) ஹோஸ் இனக் குழுவினர் 1831—1832ல் நடத்திய கிளர்ச்சிகள் இத்தகையவை. பம்பாய் மாகாணத்தில் அனேகக் கிளர்ச்சிகள் மூண்டன: 1818 முதல் 1831 வரை பில்ல இனத்தாரின் கிளர்ச்சிகள், 1824ல் கோலர்களின் கிளர்ச்சி, 1824லும் 1829லும் கிட்டூரில் விவசாயிகளின் கிளர்ச்சிகள், 1815 முதல் 1832 வரை கட்சு தீவில் நடந்த இடையருத எழுச்சிகள். கோலர்கள் சகியாத்ரியில் 1839ம் ஆண்டிலும் 1844 முதல் 1846 வரையிலும் மீண்டும் கிளர்ந்து எழுந்தார்கள். இந்தியாவின் மற்ற இடங்களில் இவையே போன்ற எழுச்சிகள் நிகழ்ந்தன. ராஜபுதனத்தில் மேர் சாதியினர் 1820ம் ஆண்டு கிளர்ச்சி நடத்தினர்கள். 1846ல் ஹந்து இனத்தார் ஒரிஸ்ஸாவிலும் 1855ல் சந்தாலர்கள் பீகாரிலும் கிளர்ச்சி செய்தார்கள்.

இந்தியாவின் நகரங்களிலும் கிளர்ச்சிகள் நடந்தன. வழக்கமாகப் புது வரிகள் விதிக்கப்பட்டதால் மூண்ட இவை சாதாரணமாக ஹர்த்தால் (அதாவது வேலைநிறுத்தம்) வடிவை மேற்கொண்டன. வீடுகளுக்குப் புது வரி விதிக்கப்பட்டதை ஒட்டி வாராணசியிலும் புதிய போலீசு வரிகள் போடப்பட்ட காரணத்தால் 1816ல் பரேலியிலும் நடந்த ஹர்த்தால்கள் இத்தகையவை. நிறுவனங்களின் தலைமையில் நடந்த விவசாயிக் கிளர்ச்சிகள் யாவற்றிலும் விடாப்பிடியாக நடந்தன. இவற்றில் சில நிறுவனங்கள் பல கிளைகளாகப் பரந்தவை, போராட்டத்துக்கு நீண்ட காலம் முன்னேற்பாடுகள் செய்தவை. வழக்கமாக இத்தகைய நிறுவனங்கள் ஏதேனும் மதப்பிரிவின் போதனையைப் பிரசாரம் செய்தன, ''காப்பிரிகளுடன்'' (ஆங்கிலேயர்களுடன்) போராட மக்களை அறைகூவி அழைத்தன. காட்டாக, 1810ம் ஆண்டு பம்பாய் மாகாணத்தில் போரா மெஹ்தியர்கள் அப்துர்ரகுமான் என்ற முன்னுள் தளகர்த்தனின் தலைமையில் கிளர்ச்சி செய்து சூரத்தின் அருகே இருந்த கோட்டையைப் பிடித்துக் கொண்டார்கள். அப்துர் ரகுமான் தன்னை மெஹ்தி (மார்க்கதரிசி) என்று அறிவித்துக் கொண்டான்.

வகாபியர்களின் இயக்கம் இன்னும் ஆழ்ந்த தன்மை கொண்டது, அதிக நீண்ட காலம் நடந்தது. முன்பு ஹோல்க்காரின் படைத் தலைவனுக இருந்த சயீது அகமது பரேல்வி (1786—1831) என்பவனுல் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டது வகாபியர் பிரிவு. இந்தியாவில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டுவிட்ட ''காப்பிரிகளுக்கு'' எதிராக அறப் போர் நடத்தும்படி அவன் பிரசாரம் செய்

தான். வங்காளத்தையும் பீகாரையும் சேர்ந்த முகமதிய விவசாயிகள், நகரக் கம்மியர்கள், சிறு கடைக்காரர்கள் ஆகியோர் இந்தப் பிரசாரத்தால் ஈர்க்கப்பட்டார்கள். வகாபியர்கள் ஆங்கிலேயரோடு போரிட ஏற்பாடுகள் செய்ததுடன் சமூக நியாயம் குறித்துத் தாங்கள் பிரகடனம் செய்த, ஆனால் பெரிதும் தெளிவின்றி வரையறுக்கப் பட்ட, கோட்பாடுகளுக்கு இணங்கச் சமூகத்தை மாற்றி அமைக்கும் படியும் கோரினார்கள். 1820 ஆண்டு காலனியாட்சி அதிகாரிகள் வகாபியர்களை பீகாரிலிருந்து விரட்டி விட்டார்கள். வகாபியர்கள் புஷ்து மொழி பேசும் இனத்தவரின் பிரதேசமான சித்தானவில் குடியேறினார்கள். அங்கே வகாபியர்களுக்கும் சீக்கியர்களுக்கும் மோதல்கள் ஏற்பட்டன. 1831ம் ஆண்டு சயீது அகமது சீக்கியர்களால் கொல்லப்பட்டான். ஆயினும் வங்காளத்திலும் பீகாரிலும் வகாபிய மதப் பிரிவு தொடர்ந்து செயலாற்றி வந்தது. 1831ம் ஆண்டு ஆயுதந்தாங்கிய மூன்று—நான்கு ஆயிரம் வகாபியர்கள் பாராசேத் பிரதேசத்தில் ஒரு சிறு நகரைக் கைப்பற்றிக் கொண்டு கல்கத்தா மீது படையெடுத்தார்கள். உக்கிரமான போருக்குப் பின்பே பீரங்கிப் படையால் அவர்கள் சிதறடிக்கப்பட்டார்கள்.

வகாபியர்களிடமிருந்து பிரிந்து ஹாஜி ஷரியத்துல்லாவின் தலைமையில் உருவாயிற்று பராஜி எனப்பட்ட புதிய மதப் பிரிவு. இதன் உறுப்பினர்கள் யாவரிலும் வெறுப்புக்குப் பாத்திரமான நிலப்பிரபுக்களை, அவர்கள் இந்துக்களாயினும் முகமதியர்களாயினும் ஆங்கிலத் தோட்டக்கால் முதலாளிகளாயினும் சரியே, பழி வாங்கினார்கள். வங்காளத்தில் பராஜி இயக்கம் தனது தன்மையிலும் கொள்கை வாதத்திலும் இடைக்கால வகையான விவசாயிகள் இயக்கமாக இருந்தது. வகாபியர்கள் போலவே பராஜிகளும் இஸ்லாத்தைத் தூய்மைப் படுத்த வேண்டும், ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்று கூறி வந்ததோடு தங்களுக்குள் முழுமையான சமத்துவத்தை நிலை நிறுத்தினார்கள். நிலம் ஆண்டவனுக்குச் சொந்தம் என்றும் உழவர்களிடமிருந்து தங்கள் நன்மைக்காக வரிகள் வாங்கும் உரிமை ஒருவருக்கும் கிடையாது என்றும் அவர்கள் பறை சாற்றினார்கள். வகாபியர்கள் 1852ல் ஆங்கிலேயர்களுக்கு எதிராக அறப் போர் தொடங்குமாறு பாட்னாவில் வெளிப்படையாகப் பிரசாரம் செய்தார்கள். விவசாயிகளும் நகர வட்டாரத்தினரும் சிறப்பாக வங்காளச் சேனையின் சிப்பாய்களும் அவர்கள் பேச்சை கவனமாகக் கேட்டார்கள்.

இந்தக் காலனியாட்சி எதிர்ப்புப் போராட்டங்கள் அனைத்தினதும் வெறும் பட்டியலே இந்தியாவில் ஆங்கில எதிர்ப்பு மனப்பான்மை எவ்வளவு வளர்ச்சி அடைந்திருந்தது என்பதைக் காட்டுகிறது. ஆயினும் ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராக இந்த இயக்கத்தால்

வைக்க முடிந்தது சுதந்திர நிலப்பிரபுத்துவ இந்தியா என்னும் ஆதர்சத்தையே. எனவேதான் காலனியாட்சி ஒடுக்கு முறையை எதிர்த்த போது இயக்கத் தலைவர்கள் முந்திய நிலப்பிரபுத்துவ முறைகளுக்குத் திரும்ப வேண்டுகோள் விடுத்தார்கள்.

முதலாளி வர்க்க இயக்கத்தின் தோற்றம்

இந்தக் காலத்தில் இந்தியாவில் வேறு போக்கும் தோன்றியது. இதன் தலைவர்கள் இந்தியா பின்தங்கி விட்டதை உணர்ந்து, மரபு வழி வந்த பல பழக்க வழக்கங்களையும் ஒழுங்குகளையும் எதிர்த்தார்கள். இவர்கள் ஐரோப்பிய முறையில் கல்வி பயின்றவர்கள். மனிதாபிமானம், பகுத்தறிவுக் கொள்கை ஆகியவற்றின் நோக்கில் நிலப்பிரபுத்துவ வழக்கங்களை இவர்கள் விமர்சித்தார்கள். ஆயினும், இந்து மதச் சீர்திருத்தத்துக்காகப் போராடுகையில் இவர்கள் ஆங்கிலேயர்களுடன் ஒத்துழைத்தார்கள். ஆங்கிலேயர்கள் கற்றறிந்த மனிதர்கள் ஆனபடியால் உயர் கல்வியைப் பரப்புவதிலும் மூட நம்பிக்கைகளை எதிர்த்துப் போராடுவதிலும் அவர்கள் தங்களுக்கு உதவுவார்கள் என எதிர்பார்த்தார்கள். வங்காளத்தில் இந்தப் புதிய நோக்கின் பிரதிநிதிகளாய் இருந்தவர்கள் முதன்மையாக ஜமீன்தார்களும் கம்பெனி ஊழியர்களான அதிகாரிகளும், பம்பாயில் பணக்காரப் பார்சிகளும் சென்னையில் வர்த்தகர்களும். காலனியாட்சி நிர்வாகத்தின் செயல்களை இவர்கள் அவ்வப்போது தாக்கி விமர்சித்தார்கள். ஆனல் இந்தியாவில் காலனியாதிக்கத்தை எதிர்த்து இவர்கள் ஒன்றுமே பேசவில்லை.

இந்தப் புதிய போக்கின் முதல் பிரதிநிதி வங்காளப் பிராமண ஜமீன்தார் ராம்மோகன் ராய் (1772—1833). ஆரிய சபை என்னும் கழகத்தை அவர் 1815ல் நிறுவினர். 1828ல் பிரம சமாஜம் அவரால் அமைக்கப்பட்டது. இந்தியாவில் ஐரோப்பிய மாதிரியில் அமைந்த நவீன வகையான முதலாவது பொது நிறுவனம் இதுவே. தேர்ந்தெடுக்கப்பட்ட செயற் குழு முதலியன இருப்பினும் இது மதச் சார்புள்ள கூட்டுச் சமுதாயத்தின் தன்மையைக் கொண்டிருந்தது. ராம்மோகன் ராய் மிக மோசமான நிலப்பிரபுத்துவ மீத மிச்சங்களையும் ''பிற்காலத்தில் படிந்த கசடுகள்'' என்று அவர் அழைத்த விதிகளையும் நீக்கி இந்து மதத்தைத் தூய்மைப்படுத்த முயன்றார். 1821ம் ஆண்டு வாக்கில் அவர் சம்வாத கௌமுதி என்ற இந்தியாவின் முதலா

வது வாரப் பத்திரிகையை வங்காளி மொழியிலும் 1822ம் ஆண்டு மிராத்-உல்-அஹ்பார் என்ற பத்திரிகையைப் பாரசீக மொழியிலும் வெளியிடத் தொடங்கினர். இந்தியாவினதும் வங்காளத்தினதும் சமூக வாழ்க்கை குறித்த பிரச்சினைகள் இவற்றில் விவாதிக்கப் பட்டன.

ராம்மோகன் ராயின் சீர்திருத்தச் செயல்களை இந்திய வர்த்தகர் கள் எதிர்த்தார்கள். இவர்கள் பிரம சமாஜத்துக்கு எதிர் நிறை யாகத் தரும சமாஜம் என்னும் கழகத்தை 1830ல் அமைத்தார்கள். இந்துக்களால் நிறுவப்பட்ட கல்வி நிலையமான இந்துக் கல்லூரியின் மாணவர்களது கல்விக் கழகம் டிரோசியோ என்பவர் (இவர் இந்துத் தாய்க்கும் போர்ச்சுகேசியத் தந்தைக்கும் பிறந்தவர்) தலைமையில் அப்போதே உருவாயிற்று. இந்தக் கழகம் இது போன்ற வேறு எந்தக் கழகத்தையும் விட வன்மையாக மரபு வழி வந்த கண்ணோட்டங்களை யும் மூட நம்பிக்கைகளையும் கண்டனம் செய்தது. இளம் வங்காளம் என்னும் நிறுவனம் இதன் வாரிசு ஆயிற்று. இந்துக் கல்லூரித் தலை வர்களின் தொல்லை காரணமாக இளம் வங்காளம் நிறுவனம் கலைந்து விட்டதும் அதைப் பின் பற்றியவர்கள் பிரம சமாஜத்தில் சேர்ந்தார் கள். ராம்மோகன் ராய் இறந்த பின் துவாரகாநாத் தாகூர் (1794—1846) பிரம சமாஜத்தின் தலைவர் ஆனர். இவர் வங்காளத்தில் எல்லோரிலும் பெரிய வர்த்தகர். ஐரோப்பிய மாதிரியான முதலா வது இந்திய வர்த்தகக் கம்பெனியை ஸ்தாபித்தவர் இவரே. கல்வி யறிவைப் பரப்புபவையும் இத்தகைய பிறவுமான கழகங்கள் 19ம் நூற்றாண்டின் 30-40க்களில் ஒன்றன் பின் ஒன்றாக வங்காளத்தில் தோன்றலாயின. முடிவில், 1851ல் ஒன்றித்த பிரிட்டிஷ் இந்தியா அசோசியேஷன் கல்கத்தாவில் அமைக்கப்பட்டது. வங்காளத்தில் உருவாகி வந்த தேசிய சமூக-பொருளாதார நிறுவனம் இது.

பம்பாயிலும் இவையே போன்ற நிகழ்முறைகள் நடந்தன. இங்கே இயக்கத்துக்குத் தலைமை தாங்கியவர்கள் செல்வர்களும் மரியாதைக்கு உரியவர்களுமான பார்சிகள், காலனியாட்சி நிர்வாகத்துடன் ஒத் துழைத்தவர்கள். அப்போதுதான் உருவாகிக் கொண்டிருந்த இளம் மராட்டிய அறிவுஜீவிகள் சமுதாயமும் இயக்கத்தில் பங்காற்றியது. ஐரோப்பிய மாதிரியில் அமைந்த கல்வி நிலையமான எல்பின்ஸ்டன் கல்லூரியை இந்த அறிவுஜீவிகள் மையமாகக் கொண்டிருந்தார்கள். இவர்களில் சிறந்து விளங்கியவர்களில் ஒருவர் பால் சாஸ்திரி ஜம்பேக்கர் (1812—1846). முதலாவது ஆங்கில-மராட்டி வாரப் பத்திரிகையான பம்பாய் தர்ப்பண் (பம்பாயின் கண்ணாடி) என்பதைத் தோற்றுவித்தவர் இவரே. நாட்டு நிர்வாகத்தில் இந்தியர்களுக்கும் பங்கு தரும்படி இதில் இவர் ஆங்கிலேயர்களிடம் கோரினர். காலனி

ஆட்சியாளர்களின் வரிக் கொள்கையையும் சுங்கத் தீர்வைக் கொள் கையையும் கண்டனம் செய்தார். ராம கிருஷ்ண விசுவநாத் என்பவ ரும் குறிப்பிடத் தக்கவர். இவர் இந்திய வரலாறு பற்றி மராட்டியில் ஒரு நூல் வெளியிட்டார். இந்தியாவில் பிரிட்டனின் கொள்கையை இந்நூலில் அவர் கண்டனம் செய்தார். ஆனால் கற்றுத் தேர்ந்த ஆங்கிலேயர்களுக்கும் இந்தியர்களுக்கும் இடையே அதிக நெருக்க மான தொடர்புகள் ஏற்படுத்துவதன் வாயிலாக எல்லாவற்றையும் சீர்படுத்தி விடலாம் என்று ராம கிருஷ்ண விசுவநாத் எண்ணினர். ''லோகஹிதவாதி'' (மக்கள் நலன்களைக் காப்போன்) என்னும் புனை பெயரில் **பிரபாகர் (சூரியன்)** என்னும் பூனாச் செய்தித்தாளில் கட்டுரை கள் எழுதிவந்தார் கோபால் ஹரி தேஷ்முக். இந்தியா சுதந்திரத்தை இழந்ததற்கான காரணங்களை அவர் பகுத்து ஆராய்ந்தார். பழைய நிலப்பிரபுத்துவ ஒழுங்கு முறைகளில் ஈடுபாடும் உயர் குடி யினர் இந்தியப் பொது மக்களிலிருந்து விலகி இருந்ததும் இந்தக் காரணங்கள் என்று அவர் கூறினர். கல்வியைப் பரப்பும்படி அவர் வேண்டிக் கொண்டார். இந்தியர்கள் ஆங்கிலேயரின் அரவணைப்பிலி ருந்து விடுதலை பெறுவார்கள் என்று அவர் முன்னுரைத்தார், ஆனால் இதற்குக் குறைந்தது இருநூறு ஆண்டுகள் தேவைப்படும் என்றார்.

வங்காளத்தில் ஏற்பட்டது போன்ற பிரிட்டிஷ் இந்தியா அசோசி யேஷன் 1852ல் பம்பாயிலும் தோன்றியது. ஆனால் அது பிளவுபட்டுக் கலைந்துவிட்டது. ''எல்லா இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்குச் சமமான உரிமைகள் அளிக்கப்பட வேண்டும்'' என்ற கோரிக்கையை மாணவ இளைஞர்கள் முன்வைத்ததும் தலைமைக் குழுவிலிருந்த மித வாதிகளான வர்த்தகர்கள் அசோசியேஷனிலிருந்து விலகிவிட்டார் கள். இந்த அசோசியேஷன்களில் சென்னையில் இருந்த ஒன்று மட்டுமே இந்திய நிலப்பிரபுக்கள் விவசாயிகளைச் சுரண்டுவதை வரையறைக்கு உட்படுத்த வேண்டும் என்ற பிரச்சினையை எழுப்பியது. அப்போது கிழக்கிந்தியக் கம்பெனியின் சாசனம் மறு பரிசீலனைக்கு உள்ளாக இருந்ததால் இம் மூன்று அசோசியேஷன்களும் இந்தியாவில் காலனி யாட்சி நிர்வாகத்தின் ''அநீதி'' பற்றிக் குறை கூறி ஆங்கில நாடாளு மன்றத்துக்கு விண்ணப்பங்கள் அனுப்பின.

அப்போதுதான் முளை விட்டுக் கொண்டிருந்த இந்த முதலாளி வர்க்க-தேசிய இயக்கம் கிளர்ச்சிகள் செய்து ஆங்கிலேயரை இந் தியாவிலிருந்து விரட்ட முயன்றுவந்த விவசாயிகள், நகர ஏழைகள் வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை. எனவேதான் 1857 முதல் 1859 வரை நடந்த இந்திய மக்கள் கிளர்ச்சியின் போது செல்வாக்குள்ள இந்திய முதலாளி வர்க்க வட்டாரத்தினர் அதில் பங்கு கொள்ளாமல் ஒரு புறம் ஒதுங்கி இருந்தார்கள்.

மாபெரும் மக்கள் இளர்ச்சி
1857—1859

ஆங்கிலக் காலனியாட்சி அடிமைத் தளை மீது ஏற்பட்ட ஆத்திரம் மக்களின் தனித் தனிப் படிவுகளுடைய ஒன்றோடொன்று சேராத வட்டாரப் போராட்டங்களில் 19ம் நூற்றாண்டின் முற்பாதி நெடுகிலும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. ஒழுங்கமைப்புக்குப் பழகிய சிப்பாய்கள் இயக்கத்துக்குத் தலைமை ஏற்றதும் இந்த ஆத்திரம் ஓர் அளவுக்கு ஒன்று திரண்டது. ஆங்கிலச் சிப்பாய்ப் படைகள் வங்காள, பம்பாய், சென்னை என்ற மூன்று சேனைகளாகப் பிரிந்திருந்தன. இவற்றில் யாவற்றிலும் பெரியதான வங்காளச் சேனை 170 ஆயிரம் துருப்புக்களை (இவர்களில் 140 ஆயிரம் பெயர் இந்தியர்கள்) உடையதாக இருந்ததுடன் ஒரே வகையான சமுதாய வட்டாரத்தினரைக் கொண்டிருந்தது. வங்காளச் சேனைக்குச் சிப்பாய்கள் அயோத்தியிலும் பீகாரிலும் வட மேற்குப் பிரதேசங்களிலும் மட்டுமே பிராமணர்கள், ராஜபுத்திரர்கள், ஜாட்கள், முகமதியர்கள் (சையதுகளும் பட்டாணியரும்) ஆகியோரிடையே திரட்டப்பட்டார்கள். இந்தக் குழுக்களின் பிரதிநிதிகள் கிராம சமுதாயத்தின் உயர் குடியினர் (பட்டீதார்கள்) அல்லது சிறு நிலப்பிரபுக்களின்—கிராம ஜமீன்தார்களின்—புதல்வர்கள். இவர்கள் எல்லோரும் இந்துஸ்தானி என்ற ஒரே மொழி பேசினார்கள், தங்கள் கிராமங்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார்கள்.

சிப்பாய்கள் வெகு காலமாகச் சண்டை செய்யவில்லை ஆதலால், வட இந்தியாவில் பல இடங்களில், முதன்மையாகக் கங்கை-யமுனை இடை நிலப்பரப்பில் இருந்த இராணுவக் குடியிருப்புக்களில் பாசறைகளில் வைக்கப்பட்டிருந்தார்கள். இந்திய நோக்கின்படி அவர்கள் நல்ல சம்பளம் பெற்று வந்தார்கள், ஆயினும் அவர்கள் இடையிலும் கூட அதிருப்தி முதிர்ந்தது. ஏனெனில் இந்தியன் இராணுவத்தில் சார்ஜண்டு பதவிக்கு மேல் உயர முடியவில்லை. புதிதாகப் படையில் சேர்ந்த எந்த ஆங்கிலேயனும் அவனைக் காட்டிலும் உயர்ந்த அந்தஸ்து வகித்தான். இராணுவக் குடியிருப்புக்களில் ஆங்கிலேயர்களுக்குத் தனி உணவு விடுதிகள் இருந்தன. அவர்கள் வசதியான பங்களாக்களில் வசித்தார்கள். சிப்பாய்களோ என்றால் தங்கள் மனைவி மக்களுடன் பாரக்குகளில் நெரிந்தார்கள்.

வகாபியர்களின் பிரசாரம் இந்தச் சிப்பாய்களைத் தூண்டியது. அதோடு பிளாசிப் போரின் நூறாண்டு நிறைவு நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. அன்றுதான் ஆங்கில ஆட்சியைக் கவிழ்த்த வேண்டும் என்று சிப்பாய்கள் ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். இவ்

வாறு கிளர்ச்சிக் கருத்து நீண்ட காலமாக முதிர்ந்து வந்தது. ஆயினும் கிளர்ச்சி திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்டது என்னும் எண்ணம் சரி அல்ல. அது தானுகவே வெடித்துக் கிளம்பியது. அபாய எச்சரிக்கை யின் அறிகுறியாக ரொட்டிகள் (சப்பாத்திகள்) கிராமத்துக்குக் கிராமம் வினியோகிக்கப்படுவது நிலப்பிரபுத்துவக் காலத்தில் வழக்கமாய் இருந்தது. இந்தக் கிளர்ச்சிக்கு முன்னும் ரொட்டிகள் எதற்காகவோ வினியோகிக்கப்பட்டன. ஆனல், இந்தத் தகவல் கூடக் கிளர்ச்சி திட்டம் இன்றி இயல்பாக மூண்டது என்ற முடிவுக்கு முரண்படவில்லை.

என்பீல்டு துப்பாக்கிகளுக்கு ஆங்கிலேயர்கள் அளித்த புதிய தோட்டாக்களுக்குப் பன்றிக் கொழுப்பும் பசு மாட்டின் கொழுப்பும் பூசப்பட்டிருந்ததாகப் பரவிய வதந்தி கிளர்ச்சி மூள்வதற்கு உடனடிக் காரணமாக இருந்தது. இந்தத் தோட்டா உறைகளைக் கடித்து அகற்றி விட்டு அவற்றைத் துப்பாக்கிகளில் கெட்டிக்க வேண்டி இருந்தது. மத நம்பிக்கை கொண்ட முகமதியர்களுக்கும் இந்துக் களுக்கும் இது அவமதிப்பாகப் பட்டது. ஆனல் புதிய தோட்டாக் களைப் பயன்படுத்த மறுத்தவர்களுக்கு ஆங்கிலப் படைத் தலைவர்கள் கடுந் தண்டனை விதித்தார்கள். புதிய தோட்டாக்களைப் பெற்றுக் கொள்ள மறுத்த சில சார்ஜண்டுகளும் சிப்பாய்களும் 1857, மே 10ந் தேதி பகிரங்கமாகப் படையிலிருந்து நீக்கப்பட்டுத் தீவாந்திர சிட்சை விதிக்கப் பெற்றார்கள். இது சிப்பாய்களின் கிளர்ச்சி தொடங்குவதற் கான அடையாளம் ஆயிற்று. தாழ் படிவிலிருந்த நகரவாசிகளும் அக் கம் பக்கத்துக் கிராமங்களின் விவசாயிகளும் கிளர்ச்சியை ஆதரித் தார்கள். ஆங்கிலப் படை அதிகாரிகளைக் கொன்று விட்டுச் சிப்பாய் கள் மே 11ந் தேதி டில்லி சென்றார்கள். அங்கே டில்லிக் காவற்படை அவர்களோடு சேர்ந்து கொண்டது. டில்லியைக் கைப்பற்றி ஆங்கில அதிகாரிகளைப் பழி வாங்கிய பின் சிப்பாய்கள் செங்கோட்டையில் புகுந்து தொண்டு கிழவனை இரண்டாம் பகதூர்ஷாவை (1837—1857) அணுகினர்கள். இவன் எல்லா அதிகாரத்தையும் இழந்து ஆங்கிலேயரிடம் உபகாரச் சம்பளம் பெற்று வாழ்க்கை நடத்தி வந் தான். தன்னை இந்தியாவின் அரசனுக அறிவித்துக் கொள்ளும்படியும் கிளர்ச்சிக்காரர்கள் எழுதுவித்த வேண்டுகோளில் கையெழுத்து இடும்படியும் அவர்கள் இவனை இணங்க வைத்தார்கள். முகமதிய மதகுருக்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக அறப் போர்ப் பிரகடனம் செய்தார்கள். அரசவை உயர் குடியினர் அடங்கிய அரசாங்கம் டில்லி யில் அமைக்கப்பட்டது. பகதூர்ஷா சுதந்திர இந்தியா மீண்டும் நிலை நிறுத்தப்படுவதன் உருவகச் சின்னமாகக் கிளர்ச்சிக்காரர்களுக்குத் தோற்றம் அளித்தான்.

ஆனால் டில்லியில் குழப்பம் கோலோச்சியது. வெவ்வேறு இடங்களிலிருந்து வந்த சிப்பாய்களின் படைப் பிரிவுகள் இங்கே குவிந்தன. சிப்பாய்கள் அரசவையினர் அடங்கிய டில்லி அரசாங்கத்தை நம்பாமல் தங்கள் படைத் தலைவர்களுக்கு மட்டுமே கீழ்ப்படிந்தார்கள். நகரில் உணவுப் பண்டங்கள் போதவில்லை. ஜமீன்தார்கள் தாங்கள் திரட்டிய நிலவரியை டில்லிக்கு அனுப்புவதில் நேரம் தாழ்த்ததால் பணமும் இல்லை. படையினரிடையே கட்டுப்பாடு குலைந்தது.

சங்கடமான இந்த நிலைமைகளில் சிப்பாய்கள் ஜல்ஸா (ஆலோசனைக் குழு) என்ற பெயருடன் தங்கள் சொந்த ஆட்சி உறுப்பை அமைத்தார்கள். இதில் சிப்பாய்களின் ஆறு பிரதிநிதிகளும் நகரவாசிகளின் நான்கு பிரதிநிதிகளும் இருந்தார்கள். ஆனால் டில்லியில் நிலவிய நெருக்கடி நிலைமையை இந்தக் குழுவாலும் சமாளிக்க முடியவில்லை. கார்ல் மார்க்ஸ் அப்போது எழுதினார்: ''கிளர்ச்சி செய்த சிப்பாய்கள் தங்கள் அதிகாரிகளைக் கொன்று கட்டுப்பாட்டு நுகத்தைக் கழற்றி எறிந்து விட்டார்கள் ஆயினும் பல தரப்பட்ட மனிதர்கள் அடங்கிய அந்தத் திரளால் தலைமைத் தளகர்த்தன் பொறுப்பை ஏற்கவல்ல மனிதனைத் தனக்கு இடையிலிருந்து தோற்றுவிக்க முடியவில்லை. ஆழ்ந்த முறையில் நீடித்து நடக்கும் எதிர்ப்பை ஒழுங்கமைக்க இத்தகைய திரள் சிறிதும் திறன் இல்லாதது ஆகும்.''*

சிப்பாய்கள் கட்டுப்பாட்டுக்குப் பழகி இருந்தார்கள், ஆனால் போர்க் கலையை அவர்கள் அறிந்திருக்கவில்லை. சிறு படைப் பிரிவுக்கு மேற்பட்ட படையணி எதையும் அவர்கள் தலைமை வகித்து நடத்தி இருக்கவில்லை. எனவே அவர்கள் களப் போர்த்தந்திரப் பணிகளை நிறைவேற்ற வல்லவர்களாக இருந்தார்களே தவிரப் போர்த் திட்ட வகுப்புப் பணிகளை நிறைவேற்ற அறவே திறன் பெற்றிருக்கவில்லை. டில்லிச் செங்கோட்டை போன்ற வலிய அரணை வசப்படுத்தியிருந்த அவர்கள் தங்களால் இன்னும் கைப்பற்றப்படாத பிரதேசங்களில் கிளர்ச்சியைப் பரப்புவதற்குப் பதிலாகத் தற்காப்புக்கு ஆயத்தம் செய்யத் தொடங்கினார்கள். இதனால் ஆங்கிலேயர்களுக்குச் சுதாரித்துக் கொள்ளவும் விசுவாசமுள்ள படைகளை வேறு இடங்களிலிருந்து இட்டு வரவும் டில்லியை முற்றுகை இடவும் வாய்ப்பு கிடைத்தது.

உண்மையில் கங்கை-யமுனை இடைநிலப்பரப்பும் மத்திய இந்தியப் பிரதேசங்களும்தாம் கிளர்ச்சிக்கு உட்பட்டிருந்தன. வங்காளத்தில் கவர்னர் ஜெனரல் கானிங் (1856-1862) படைச் சார்பற்ற ஆங்கிலக் குடிகள் உட்பட வங்காளத்தில் இருந்த எல்லா ஐரோப்பியர்களையும்

---

* கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 12, பக்கம் 248.

அணி திரட்டி, சிப்பாய்கள் போராட்டம் நடத்த முடியாதபடித் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டான். அவன் சிப்பாய்களின் ஆயுதங்களைப் பறித்துக் கொண்டான். இவ்வளவுக்குப் பின்னும் சில படைப் பகுதிகளில் நிகழ்ந்த கலகங்களை அவன் அடக்கிவிட்டான். பஞ்சாபிலும் சிப்பாய்களின் பொதுக் கிளர்ச்சி மூள விடாதபடித் தடுப்பதில் ஆங்கிலப் படைத் தலைமை வெற்றி அடைந்தது. கிளர்ச்சி செய்த காவற்படைகளின் நடவடிக்கைகள் ஒன்றோடு ஒன்று இணைந் திருக்கவில்லை. ஒரு சில படைப் பிரிவுகள் தாம் டில்லியில் இருந்த சிப்பாய்ச் சேனையோடு சேர்ந்து கொள்ள முடிந்தது. சீக்கிய மக்கள் இந்துஸ்தானிச் சிப்பாய்களைக் கைப்பற்றுளர் படையாகக் கருதிய தால் அவர்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை.

ஆனால் அயோத்தியையும் புந்தேல்கண்டையும் சேர்ந்த விவசாயி கள் உடனே கிளர்ச்சியில் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் வேற்று ரான புதிய நிலப்பிரபுக்களை விரட்டினர்கள், அரசாங்க அலுவல கங்களைத் தகர்த்தார்கள், தங்கள் பழைய ஜமீன்தார்களுக்கும் தாலுகாதாரர்களுக்கும் கூட வரிப் பணம் கொடுப்பதை நிறுத்தி னர்கள். காலனியாட்சி அதிகாரிகளின் பிரதிநிதிகளை விரட்டிவிட்டுக் கிராம சமுதாயத்தினர் தற்காப்புப் படைப்பிரிவுகள் அமைத்தார் கள். ஆங்கிலக் கைப்பற்றுளர்களால் தங்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டிருந்த சமுதாய நிலங்களை அவர்கள் ஆயுதமேந்திப் பாதுகாத்தார்கள்.

கங்கை-யமுனை இடைநிலப் பரப்பிலிருந்த நகரவாசிகளும் கிளர்ச் சியில் ஊக்கத்துடன் பங்கு கொண்டார்கள். பெரிய நகரங்கள் பல வற்றை அவர்கள் விடுவித்தார்கள். இவையாவன அலிகார் (மே 21), பரேலியும் லக்னௌவும் (மே 31), கான்பூர் (ஜூன் 4), அலாகபாத் (ஜூன் 6), முதலியன. இவற்றில் ஒவ்வொரு நகரிலும் அரசாங்கம் அமைக்கப்பட்டது. பரேலியில் முதிய தளகர்த்தன் கான் பகதூர் கான் அரசாங்கத் தலைவன் ஆக்கப்பட்டான். 1772ம் ஆண்டு அயோத் தியையும் கம்பெனியையும் சேர்ந்த படைகளுடன் நடந்த போரில் கொல்லப்பட்ட ஹபீஸ் ரகமத்கான் ரோகில்லாவின் மரபில் வந்த வன் இவன். கான்பூரில் அரசாங்கத் தலைவன் ஆனவன் நானு சாகிப். டால்ஹௌசியால் சிற்றரசை இழந்த பேஷ்வா இரண்டாம் பாஜி ராவின் சுவீகார புத்திரன் இவன். அலாகபாதில் வகாபியக் கொள்கையைப் பின்பற்றிய பள்ளி ஆசிரியன் மௌல்வி லியாகத் அலி தலைவன் ஆக்கப்பட்டான். புத்தக வியாபாரியும் வகாபியனும் ஆன பீர் அலி என்பவன் பாட்னாவில் தலைமை ஏற்றான்.

இதற்கிடையே டில்லியைத் தற்காத்து நின்ற சிப்பாய்கள் கோட்டையிலிருந்து திடீர் திடீர் என்று வெளியேறித் தாக்குதல்கள்

நடத்தி வந்தார்களே தவிர, பெரிய நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ளவில்லை. பரேலியிலிருந்து தருவிக்கப்பட்டிருந்த படைப் பிரிவின் துடியான தலைவன் பஹத்கான். இவன் திறமை மிக்க சிப் பாய்த் தலைவன். இவன் எவ்வளவோ கண்டிப்பான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டான். அப்படியும் இவனால் கூட ஒழுங்கை நிலை நாட்ட முடியவில்லை. சிப்பாய்களது இந்தச் செயலின்மையின் விளை வாகத் தாக்கு தொடுக்கும் வாய்ப்பு ஆங்கிலேயர் கைகளுக்குப் போய் விட்டது. அவர்கள் தங்கள் படைகளைச் சென்னையிலும் ஈரானி லு மிருந்து தருவித்து, சீனாவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த படைப் பிரிவுகளையும் அவற்றோடு இணைத்தார்கள். டில்லி முற்றுகை இடப் பட்டது. ஏறத்தாழ 65 ஆயிரம் பெயர் கொண்ட சிப்பாய்களின் சேனையால் டில்லியின் அரண்களிலிருந்து ஆறுயிரம் துருப்புகள் அடங் கிய ஆங்கிலப் படையை விரட்ட முடியவில்லை. போரில் வெற்றியின் மையும் பணப் பற்றாக்குறையும் காரணமாக சில சிப்பாய் படைப் பிரிவுகள் தாமாகவே டில்லியை விட்டு வெளியேறின. ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட பஹத்கானின் படைப் பிரிவு நஜப்கட் என்னும் இடத்தின் அருகே தோல்வி அடைந்தது சிப்பாய்களுக்கு இன்னும் ஓர் அடியாக இருந்தது. போதாக் குறைக்கு 1857ம் ஆண்டு செப் டெம்பர் மாதம் வெளியிடப்பட்ட கிளர்ச்சிக்காரர்களின் அறிக்கை யில் வெற்றி கிடைத்தால் வர்த்தகர்களுக்கும் முகமதிய மதகுரு க் களுக்கும் பிறருக்கும் பல வகையான அனுகூலங்களும் சலுகைகளும் தரப்படும் என்று உறுதி கூறப்பட்டிருந்தது, ஆனால் நிலவரிக் குறைப்பு பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. இந்தக் காரணத்தால் சிப்பாய்களின் உற்சாகம் குறைந்து விட்டது. ஏனெனில் அவர்களில் பெரும்பா லோர் கிராமங்களிலிருந்து வந்தவர்கள். படைகளை வேறு இடங் களிலிருந்து கொண்டுவந்து விட்ட ஆங்கிலேயர்கள் செப்டெம்பர் 14ந் தேதியன்று டில்லி மீது தாக்கு தொடங்கினார்கள். ஐந்து நாட் களுக்குப் பின் நகரமும் கோட்டையும் அவர்கள் வசமாகி விட்டன. ஆங்கிலேயரின் மிருகத்தனமான பழிவாங்கும் படலம் ஆரம்பம் ஆயிற்று. இது பற்றிப் பம்பாய் கவர்னர் லார்டு எல்பின்ஸ்டன் கூடப் பின்வருமாறு எழுதினான்: ''டில்லியைக் கைப்பற்றிய பின் நமது சேனை இழைத்த கடுங் குற்றங்களை வருணித்து மாளாது. நமது பழி வாங்குதல் நண்பர்களையும் பகைவர்களையும் ஒருவர் பாக்கி இல்லாமல் தாக்கியது. கொள்ளை அடிப்பதிலோ, நாம் நாதிர்ஷாவை விஞ்சி விட்டோம்.''

டில்லியைக் கைப்பற்றியதன் மூலம் ஆங்கிலேயர்கள் தங்கள் 17 ஆயிரம் படையினரை விடுவித்தார்கள். அதோடு கூடக் கிளர்ச்சிக் காரர்களுக்கு அவர்கள் உள நோக்கில் பலத்த அடி கொடுத்தார்கள்.

ஏனென்றால் சிப்பாய்களின் கண்களுக்கு டில்லி முகலாய இந்தியாவினது சுதந்திரத்தின் உருவகச் சின்னமாக விளங்கியது. நகருக்கு வெளியே இருந்த ஹுமாயூன் சமாதியில் ஒளிந்து கொண்டிருந்த பகதூர்ஷா சிறை பிடிக்கப்பட்டான். விசாரணைக்குப் பின் அவன் ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டு அங்கே 1862ம் ஆண்டு இறந்து போனான். கைதிகளான அவனது மகன்களோடு சென்ற ஹாட்சன் என்ற அதிகாரி அவர்களைக் கொன்று விட்டான். பயங்கரப் படுகொலைக்குப் பின் டில்லி பல ஆண்டுகள் வெறுமையாகக் கிடந்தது.

இதற்கிடையே டில்லி அருகே இருந்த ஆங்கிலேயர்களின் துணைக்காகக் கல்கத்தாவிலிருந்து வந்த ஜெனரல் நீல் என்பவன் கிளர்ச்சி செய்த நகரங்களான வாராணசியையும் அலாகபாதையும் சேர்ந்த சிப்பாய்களையும் குடிமக்களையும் மிருகத்தனமாகப் பழி வாங்கினான். அவனுடைய கொடுமை கவர்னர் ஜெனரல் கானிங்குக்குக் கூட அதிருப்தி உண்டாக்கிற்று. அவன் நீலை அகற்றிவிட்டு இந்தப் படைப் பிரிவுகளின் தலைமையை ஜெனரல் ஹாவ்லக் என்பவனிடம் ஒப்படைத்தான். இவனும் இந்தியர்களைப் படு வேட்டையாடினான். கிராமங்களைத் தீக்கிரை ஆக்கினான். சென்ற இடங்களில் எல்லாம் நூற்றுக் கணக்கானவர்களைத் தூக்கில் ஏற்றினான். கிளர்ச்சியின் மூன்று மையங்களில் (டில்லி, கான்பூர், லக்னௌ) ஒன்றான கான்பூர் ஹாவ்லக் சென்ற வழியில் இருந்தது. அங்கே கிளர்ச்சிக்காரர்களுக்குத் தலைமை தாங்கினார்கள் நானா சாகிபும் அவனுடைய மெய்க்காப்பாளன் தாத்தியா டோப்பேயும் செயலாளன் அஜிமுல்லாகானும். இந்த அஜிமுல்லாகான் கல்வித் தேர்ச்சி பெற்றவன். இரண்டு தடவைகள் ஐரோப்பா போய் வந்தவன். ஆங்கிலக் காவற்படையினர் தங்கள் குடும்பங்களோடு நகரின் பாசறைப் பகுதியில் அரண் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் பீரங்கிப் படை இருந்ததால் முற்றுகையாளர்களை மூன்று வாரங்கள் எதிர்த்து விரட்டியவாறு இருந்தார்கள். முடிவில் ஆங்கிலேயர்கள் கான்பூரிலிருந்து தடங்கலின்றி வெளியேற அனுமதிக்கப்படுவார்கள் என்ற நிபந்தனையின் பேரில் அவர்கள் தோல்வியை ஒப்புக்கொள்ள நேர்ந்தது. ஆங்கிலேயர்கள் கங்கையின் பெருக்கை ஒட்டினாற் போல அனுப்பப்படும் பொருட்டு மக்களின் பெருங் கூட்டத்துக்கு முன்னால் படகுகளில் ஏற்றப்பட்டார்கள். ஆனால் வெறுப்பினால் வெறி கொண்ட கூட்டம் அவர்களைத் தாக்கியது. அப்போது நானா சாகிபின் ஆணைப்படி பெண்களும் குழந்தைகளும் பாதுகாப்புக் காகச் சிறையில் வைக்கப்பட்டார்கள். ஆண்கள் அனேகமாக எல்லோரும் கொல்லப்பட்டு விட்டார்கள். ஆயுதமற்றவர்கள் இவ்வாறு அர்த்தமின்றிக் கொல்லப்பட்டது கான்பூரை நோக்கி முன்னேறிய ஆங்கிலப் படையினரைக் கடுஞ் சீற்றம் கொள்ளச் செய்தது.

நகரில் கிளர்ச்சிக்காரச் சிப்பாய்களும் விவசாயிகளுமாகச் சுமார் பதினாயிரம் பெயர் திரண்டிருந்தார்கள். உணவுப் பண்டங்கள் போதவில்லை. டில்லியில் ஏற்பட்டவையே போன்ற இடர்கள் இங்கும் ஏற்பட்டன. முன்னேறி வந்த ஹாவ்லக்கின் சேனையோடு சிப்பாய்ப் படைகள் இரண்டு தடவைகள் போரிட்டன. படையினர் வீரத்தோடு சண்டை செய்துங் கூட இரண்டு முறையும் தோல்வி அடைந்தார்கள். அப்போது சிறையிலிருந்த ஆங்கில மாதரையும் குழந்தைகளையும் கொன்று விடும்படி நானா சாகிப் உத்தரவிட்டான். ஜூன் மாத நடுவில் கான்பூர் நகருக்குள் புகுந்த ஹாவ்லக்கின் படையினர் நகரவாசிகளைக் கொடுமையாகப் பழி வாங்கினார்கள். இதன் பின் கிளர்ச்சியின் இன்னொரு மையமான லக்னௌவுக்குள் புகுவதற்கு ஹாவ்லக் செய்த இரண்டு முயற்சிகள் பலிக்காது போயின.

இங்கே நிகழ்ச்சிகள் பின்வருமாறு நடந்தன. கிளர்ச்சிக்குப் பின் மூந்திய (அயோத்தி நவாபுகளின்) வம்சம் மீண்டும் ஆட்சியில் அமர்த்தப்பட்டது. அயோத்தி அரசவையின் முதிய பிரபுக்கள் நகர நிர்வாகத்தைத் தங்கள் கைகளில் எடுத்துச் கொண்டார்கள். உண்மையில் கிளர்ச்சித் தலைவனாக இருந்தவன் அகமதுல்லாஷா என்பவன். இவன் சென்னை உயர் குடும்பத்தைச் சேர்ந்தவன். ஒரு காலத்தில் இவன் இங்கிலாந்து சென்றிருந்தான். ஆனால் அங்கிருந்து திரும்பியதும் வகாபியர்களோடு சேர்ந்து கொண்டு ஊர் ஊராய்ச் செல்லும் வகாபியப் பிரசாரகன் ஆகி விட்டான். ஆங்கிலக் காவல் படையினர் தங்கள் குடும்பங்களுடன் ரெசிடென்சி (அயோத்தியில் இருந்த கம்பெனியின் அரசியல் ஏஜண்டினுடைய மாளிகை இவ்வாறு அழைக்கப்பட்டது) சுவர்களின் பின் பதுங்கி இருந்தார்கள். சிப்பாய்கள் ரெசிடென்சியை நீண்ட நேரம் முற்றுகையிட்டுக் குண்டுகள் சுட்டார்கள். ஆனால் குறி தவறுமல் இலக்கைத் தாக்கும் கலையில் சிப்பாய்கள் தேர்ச்சி பெற்றிராததால் ஆங்கிலேயர்களுக்குப் பெருத்த சேதம் விளையவில்லை. அப்போது கிளர்ச்சிக்காரர்கள் சுரங்கம் தோண்டத் தொடங்கினார்கள். ஹாவ்லக்கின் படைப் பிரிவு செப்டெம்பர் 21ந் தேதிதான் லக்னௌவுக்குள் புகுந்தது. ஆனால் சிப்பாய்களால் சூழப்பட்டிருந்ததால் படைப் பிரிவு தானே முற்றுகைக்கு உள்ளாயிற்று.

லக்னௌவில் சிப்பாய்களும் கங்கை-யமுனை இடைநிலப் பகுதியின் எல்லைப் புறங்களைச் சேர்ந்த கிளர்ச்சிக்காரர்களும் மட்டும் குழுமவில்லை. எல்லாவற்றையும் சூறையாடியும் நெருப்பிட்டுப் பொசுக்கியும் வந்த ஆங்கிலப் படைகளிடமிருந்து தப்பியோடியவர்களும் மொத்தம் ஐம்பதாயிரம் பெயருக்கு மேல் அங்கே நெரிந்தார்கள். ஆங்கிலச் சேனையின் தலைமைத் தளகர்த்தன் ஜெனரல் காம்பெல் நாலாயிரத்து ஐந்நூறு துருப்புக்களோடும் பீரங்கிப் படையோடும்

கான்பூரிலிருந்து புறப்பட்டு 1857, நவம்பர் 17ந் தேதி லக்னௌவில் புகுந்தான். அவனுல் லக்னௌவைக் கைப்பற்ற முடியவில்லே. எனி னும் அங்கிருந்து செல்கையில், ரெசிடென்சியில் முற்றுகைக்கு உள் ளாகி இருந்த ஆங்கிலேயர்களே அவன் தன்னேடு கூட்டிச் சென்முன். இதற்கிடையே தாத்தியா டோப்பே குவாலியர் படையினரோடு (ஆங்கிலேயர்களிடம் விசுவாசம் பாராட்டிய தங்கள் சிற்றரசனே மதியாமல் கிளர்ச்சி செய்தவர்கள் இவர்கள்) கான்பூருக்கு விரைந்து அங்கே விட்டுச் செல்லப்பட்டிருந்த விண்டாமின் படைப் பிரிவைத் தாக்கி முறியடித்தான். அடுத்து நடந்த போர்களில் காம்பெல் தாத் தியா டோப்பேயைத் தோற்கடித்துக் கான்பூரை மீண்டும் வசப்படுத் தினுன். இதற்கு மூன்று மாதங்களுக்குப் பிறகே, நாற்பத்தையாயிரம் பெயர் கொண்ட படையைத் திரட்டிக் கொண்டு காம்பெல் லக்னௌ மீது இறுதித் தாக்கு நடத்த முடிவு செய்தான். அங்கே கூடியிருந்த மக்கள் அனேவரும் (சுமார் இரண்டு லட்சம் பெயர்) நகரின் தற்காப் பில் பங்கு கொண்டார்கள். அவர்கள் வீரப் போர் புரிந்தார்கள், ஆனுல் அவர்களிடம் நல்ல ஆயுதங்கள் போதிய அளவு இல்லே. தேர்ந்த படைத் தலேவர்களும் இல்லே. லக்னௌவுக்காக நடந்த போர் ஒரு மாதம் இடையருது நீடித்தது. 1858, மார்ச்சு 19ந் தேதி லக்னௌ வீழ்ந்தது. ஆங்கிலச் சேனே ஏறத்தாழ இரண்டு வாரங்கள் லக்னௌவில் கொள்ளேயும் கொலேகளும் நிகழ்த்தியது. சூறையாடப் பட்ட செல்வம் அளவற்றது.

சிப்பாய்களுடைய எதிர்ப்பின் கடைசியான பெரிய மையமான லக்னௌவின் வீழ்ச்சிக்குப் பிறகு அவர்கள் சிறு சிறு படைப் பிரிவு களாகச் சிதறி உண்மையில் கொரில்லாப் போர் நடத்தலானுர்கள். ஆங்கிலப் படைகளுடன் அவர்கள் சிறு சிறு சண்டைகள் நிகழ்த்தினுர் கள். அது வரை ஒரு தரப்பிலும் சேராமல் நடுநிலேமை வகித்த அயோத்தித் தாலுகாதாரர்களின் நிலவுடைமைகள் பறிமுதல் செய் யப்படும் என்று 1858, மார்ச்சில் கவர்னர் ஜெனரல் கானிங் அறிவித் தான். தங்கள் நிலவுடைமைகளேக் காப்பதற்காகத் தாலுகாதாரர்கள் கிளர்ந்து எழுந்து பரேலியில் கான் பகதூர்கானுடன் சேர்ந்து கொண் டார்கள். விடாப்பிடியாக எதிர்த்த பரேலியை 1858 மே மாதத்தில் தான் காம்பெல் கைப்பற்றினுன். இதன் பிறகு சிப்பாய்களில் ஒரு பகுதியினர் நானு சாகிபுடனும் அயோத்திப் பிரபுக்களுடனும் நேப் பாள எல்லேக்குப் போய்விட்டார்கள். மறு பகுதியினர் அகமதுல்லா வுடனும் வேறு சில தலேவர்களுடனும் அயோத்தி திரும்பினுர்கள். அங்கே அகமதுல்லா ஒரு நிலப் பிரபுவால் வஞ்சகமாகக் கொல்லப் பட்டான்.

சிப்பாய்களின் திறமை மிக்க படைத் தலேவர்களில் ஒருவனுகச்

செயல் ஆற்றிய தாத்தியா டோப்பே புந்தேல்கண்டில் கிளர்ச்சியை இயக்கினான். ஆங்கில ஜெனரல் ரோஸ் சேனையுடன் பம்பாயிலிருந்து புந்தேல்கண்டுக்குப் புறப்பட்டான். வழியில் ஜான்சி என்னும் சிற்றரசும் அதே பெயருள்ள கோட்டையும் இருந்தன. யுவதியான லட்சுமி பாய் என்னும் சிற்றரசி தன் வளர்ப்பு மகனுடன் அங்கே ஆண்டு வந்தாள். ஜான்சி மக்கள் கிளர்ச்சி நடத்த முயன்றார்கள். அப்போது சில ஆங்கிலேயர்கள் கொல்லப்பட்டார்கள். ஆனால் லட்சுமி பாய் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று தன் மக்களைத் தடுத்தாள். ஆங்கிலேயர்கள் கொல்லப் பட்டதைச் சாக்கிட்டு ஜெனரல் ரோஸ் ஜான்சியைத் தாக்கினான். தான் இந்தக் கொலையில் சம்பந்தப்படவில்லை என்று ஜெனரல் ரோசுக்கு நம்பிக்கையூட்ட லட்சுமி பாய் முயன்றாள். இதன் பின்னும் ஆங்கிலப் படைகள் ஜான்சியை முற்றுகை இடவே கோட்டையின் தற்காப்பை லட்சுமி பாய் தானே தலைமையேற்று நடத்தினாள்.

ஆங்கிலேயர் ஜான்சியைக் கைப்பற்றியதும் லட்சுமி பாய் தப்பி ஓடித் தாத்தியா டோப்பேயின் படையில் சேர்ந்து கொண்டாள். அவர்கள் குவாலியரைப் பிடித்துக் கொண்டார்கள். ஆனால் ரோஸ் தன் படைகளைக் கொண்டு தாத்தியா டோப்பேயை எதிர்த்து அவனைத் தோற்கடித்தான். குதிரைப் படைக்குத் தலைமையேற்றுப் போரிட்ட லட்சுமி பாய் இந்தச் சண்டையில் கொல்லப்பட்டாள். முறியடிக்கப் பட்ட படைப் பிரிவுகளில் மிஞ்சியவற்றுடன் தாத்தியா டோப்பே வெளியேறி விட்டான். விரட்டி வந்தவர்களிடமிருந்து தப்பி அவன் செல்திசையை இடைவிடாது மாற்றிய வண்ணமாக இருந்தான்: முதலில் கான்தேஷ் சென்றான், பின்பு மீண்டும் குவாலியர் திரும்பினான். முடிவில் அவன் காட்டிக் கொடுக்கப்பட்டு ஆங்கிலேயர்களால் சிறை பிடிக்கப்பட்டான். 1859ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 18ந் தேதி ஆங்கிலேயர் அவனைத் தூக்கில் இட்டனர்.

இதற்கு முன் 1858ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதி விக்டோரியா அரசியின் அறிக்கை வெளியாயிற்று. கிழக்கிந்தியக் கம்பெனி கலைக்கப்பட்டு விட்டதாகவும் இந்தியாவின் ஆட்சி அரசியின் கைகளுக்கு மாறிவிட்டதாகவும் இந்த அறிக்கை தெரிவித்தது. கிளர்ச்சியில் சேர்ந்த எல்லா நிலப்பிரபுக்களையும் மன்னிப்பதாக அரசி உறுதி அளித்தாள். ஆங்கிலேயர்களைக் கொல்வதில் நேரடியாகப் பங்கு கொண்டவர்கள் மட்டுமே இதற்கு விலக்கு ஆவார்கள் என்று அரசியின் அறிக்கை கூறியது. புதிய ஆட்சி இந்திய நிலப் பிரபுக்களின் உடைமை உரிமைகளை மதிக்கும் என்றும் அரசி தெரிவித்தாள்.

இந்த அறிக்கையின் விளைவாக நிலப்பிரபுக்களின் தலைமைக் குழு

கிளர்ச்சியிலிருந்து விலகிவிட்டது. கானிங்கின் மார்ச்சு மாதப் பிரகடனத்துக்குப் பின் போராட்டம் நடத்தி வந்த அயோத்தித் தாலுகா தாரர்களும் ராஜாக்களும் ஜமீன்தார்களும் ஆயுதங்களைப் போட்டு விட்டார்கள். மன்னிப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாத நிலப் பிரபுக்கள் தாம் தொடர்ந்து போராடினார்கள்.

முடிவில் இவர்களுடைய எதிர்ப்பும் முறிக்கப்பட்டது. நானா சாகிபும் அஜிமுல்லாவும் காட்டில் மறைந்து போனார்கள். கான் பகதூர்கான் ஆங்கிலேயர்களால் தூக்கில் இடப்பட்டான். கிளர்ச்சி ஒடுக்கப்பட்டு விட்டது.

1857 முதல் 1859 வரை நடந்த மக்கள் கிளர்ச்சி பல காரணங்களால் தோல்வி அடைந்தது. கிளர்ச்சியின் முக்கியமான இயக்கு சக்தியாக விளங்கியவர்கள் கிராம சமுதாய விவசாயிகளும் கம்மியர்களும்தாம் என்றாலும் அதைத் தலைமை தாங்கி நடத்தியவர்கள் உயர்குடி நிலப்பிரபுக்கள். மக்கள் விடுதலைப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்த இந்தத் தலைவர்கள் திறன் அற்றவர்களாக இருந்தார்கள். ஒன்றித்த போராட்டத் திட்டத்தை வகுக்கவும் ஒன்றித்த படைத் தலைமையை ஏற்படுத்தவும் அவர்களால் முடியவில்லை. அடிக்கடி அவர்கள் சொந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயன்றார்கள். தாமாக அமைந்த கிளர்ச்சி மையங்கள் மூன்றும் ஒன்றோடொன்று இசைவு இன்றிச் சுதந்திரமாகச் செயல்பட்டன. தவிரவும் விவசாயிகளின் நிலைமையை மேம்படுத்த எந்த நடவடிக்கையையும் நிலப்பிரபுக்கள் மேற்கொள்ளவில்லை. அதனால் விவசாயிகளில் ஒரு பகுதியினர் அவர்களிடமிருந்து அகன்றார்கள். ஆங்கில அரசாங்கம் நிலப்பிரபுக்களுக்கு விட்டுக் கொடுத்ததும் அவர்கள் கிளர்ச்சியை விட்டு விலகி விட்டார்கள். சிப்பாய்த் தலைவர்களால் இவ்வாறு சிக்கலான போரை நடத்த முடியவில்லை. களப் போர்த் தந்திரப் பணிகளை அவர்களால் நிறைவேற்ற முடிந்தது, ஆனால் போர்த் திட்ட வகுப்பின் நோக்கில் சிந்திக்க, அதாவது, போர் முழுவதன் போக்கையும் கணக்கில் எடுத்துக் கொள்ள அவர்கள் பயிற்சி பெற்றிருக்கவில்லை. முடிவாக, கிளர்ச்சிக்காரர்கள் தெளிவான குறிக்கோள்களை முன்வைக்கவில்லை. முந்திய காலத்துக்கு, முகலாயப் பேரரசுக் காலச் சுதந்திர இந்தியாவுக்குத் திரும்புமாறு அவர்கள் அழைத்தார்கள். ஆனால் 19ம் நூற்றாண்டின் நடுவில் நிலப்பிரபுத்துவ அமைப்புக்குத் திரும்புவது நடப்புக்கு ஏற்றதாக இல்லை.

மக்கள் கிளர்ச்சி அடக்கப்பட்டு விட்ட போதிலும் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் தங்கள் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று. கிழக்கிந்தியக் கம்பெனி மூடப்பட்டுவிட்டது. இந்தியா பிரிட்டிஷ் அரசாங்கத்தின் காலனி ஆகிவிட்டது. காலனியாட்சி அதி

காரிகள் குழு அனைத்தையும் பிரிட்டிஷ் அரசாங்கமே இப்போது நிய மித்தது. தவிரவும் நிலப்பிரபுக்கள் அதிருப்தி அடைவார்களோ என்று அஞ்சி ஆங்கிலேயர்கள் அதிக எச்சரிக்கையான கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். செல்வாக்குள்ள இந்திய நிலப்பிரபு வட்டாரத் தினருக்கு அவர்கள் சலுகைகள் அளித்தார்கள். மொத்தத்தில் கிளர்ச்சிக்குப் பிறகு இந்தியாவில் இங்கிலாந்தின் காலனியாட்சிக் கொள்கையின் புதிய கட்டம் தொடங்கியது.

18ம் நூற்றாண்டிலும் 19ம் நூற்றாண்டின் முற்பாதியிலும் இந்தியாவின் பண்பாடு

முகலாயப் பேரரசு சிதறியது, பொதுப் பொருளாதாரம் சீரழிந் தது, இந்தியா தன் சுதந்திரத்தைப் படிப்படியாக இழந்தது ஆகிய வற்றின் காரணமாக, நாம் இப்போது பார்வையீட்டுக்கு எடுத்துக் கொண்டுள்ள காலப் பகுதியில் பண்பாடு பொதுவாக வீழ்ச்சி அடைந் தது. எனினும் இந்தக் காலத்தில் கூடப் பண்பாட்டின் சில துறை களில் ஒரு சில சாதனைகள் பெறப்பட்டன. உயர் கலைப் பாங்குள்ள படைப்புக்கள் இயற்றப்பட்டன. ஆனால் மொத்தமாகப் பார்க்கும் போது இடைக் காலத்தில் உருவாகியிருந்த கலை வடிவங்கள் செப்ப மாக்கப்பட்டதுதான் இவற்றின் சாராம்சம். எடுத்துக்காட்டாக, இலக் கியத்தில் செய்யுளுக்கே முதன்மை தரப்பட்டது. கட்டிடக் கலை மொத்தத்தில் முந்திய கட்டிடங்களின் பாணியைக் காப்பி அடித்தது. சித்திரக் கலை நுணுக்க ஓவியங்களுக்குள் குறுக்கப்பட்டிருந்தது. ஆனால் 19ம் நூற்றாண்டின் முற்பாதியில் புதிய பண்புகளும் தோன்றலா யின. இவை ஓரளவுக்கு ஆங்கிலேயரிடமிருந்து இந்தியர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டவை. இந்த இயல்பு இலக்கியத்தில் சிறப் பாகக் காணப்பட்டது. பல்வேறு இந்திய மொழிகளில் எழுதப்பட்ட உரைநடைப் படைப்புக்களும் சமகால விஷயங்கள் குறித்த கடிதங் களின் தொகுப்புக்களும் வெளியாயின. அதற்கு முன் இந்தியாவுக்குத் தெரிந்திராத பத்திரிகைக் கலை தோன்றி வளர்ந்தது. ஆனால் இந்த நிகழ்முறை ஆங்கிலேயர்களை வெறுமே காப்பி அடிப்பதாக இருக்க வில்லை. இந்தப் படைப்புக்கள் சமகால வாழ்க்கை நிகழ்ச்சிகள் குறித்து எழுதப்பட்டதால் புதிய நடைக்குப் பொருத்தமான புதிய சொல் வரிசை உருவாக்கப்பட்டது.

கட்டிடக் கலையைப் பொறுத்தவரை முகலாயர் கால இந்தியாவில் நிறுவப்பட்டவை போன்ற கட்டிடங்களே பெரும்பாலும் கட்டப்பட்டன. ஆனால் சில சந்தர்ப்பங்களில் இவற்றை அமைப்பதற்கான உத்திகளை இந்தியர்கள் செவ்வைப்படுத்தினர்கள். ஆனால் ஆங்கிலேயர்களால் நிறுவப்பட்ட முற்றிலும் புது வகையான கட்டிடங்களும் இந்தியாவில் தோன்றி இருந்தன. 19ம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஆங்கிலோ-இந்தியக் கட்டிடச் சிற்பம் எனப்பட்ட தனி வகைக் கட்டிடக் கலை தோன்ற இந்தக் கட்டிடங்களில் சிலவற்றின் செல்வாக்கு காரணமாய் இருந்தது.

வரலாறு

பழைய மாதிரிகளைப் பின்பற்றிய வரலாற்று வரைவு 18ம் நூற்றாண்டில் தொடர்ந்தது. அந்த நூற்றாண்டின் சிறந்த வரலாற்று நூலான **சையாருல் முத்தாஹரீன் (கடைசி அரசர்களின் வாழ்க்கைச் சரிதைகள்)** இத்தகையது. 1780 வரை இருந்த அரசர் வரலாறு இதில் உள்ளது. இந்த நூலை எழுதியவன் குலாம் உசேன்கான் தபத்தாபாய் என்ற பிரபு. டில்லியில் முகலாய அரசவையிலும் வங்காள நவாபுகளிடமும் இவன் இருந்து வந்தான். மீர் காசிம் முறியடிக்கப்பட்டதும் கம்பெனியின் ஊழியன் ஆனான். ஐதர் அலி, திப்பு சுல்தான் இருவரதும் அரசவையில் இருந்த மீர் உசேன் அலிகான் கெர்மானி என்பவனும் இத்தகைய வரலாற்றுக் குறிப்புகள் எழுதினான்.

18ம் நூற்றாண்டின் 40-50க்களில் குஜராத்தின் திவானாக (அதாவது, நிதித்துறைத் தலைவனாக) இருந்த அலி முகமதுகான் எழுதிய **மீராத்தே அகமதி (அகமதின் கண்ணாடி)** என்னும் புத்தகம் அளவு கடந்த மதிப்புள்ள வரலாற்று நூல் ஆகும். ஆசிரியன் பல பர்மான் (அரசாணை)களையும் பிற பத்திரங்களையும் பயன்படுத்தி இருப்பதோடு 18ம் நூற்றாண்டையக் குஜராத்து பற்றிய உண்மையில் கலைக்களஞ்சியம் போன்ற வருணனையைத் தம் நூலின் இணைப்பாகச் சேர்த்திருக்கிறான். அந்தக் காலத்திய குஜராத்தின் கட்டிடங்கள், தொழில்கள், பார்க்கத் தக்க இடங்கள் ஆகியவற்றின் வருணனைகளும் பிரபல மனிதர்களின் சுருக்க வாழ்க்கை வரலாறுகளும் பிறவும் இதில் அடங்கியுள்ளன. **மாசிருல் உம்ரா (அமீர்களின் செயல்கள்)** என்னும் விரிவான வாழ்க்கை வரலாற்று நூலும் வரலாற்று மூலங்கள் குறித்த சிறந்த அறிவின் அடிப்படையில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த மிகப் பெரிய நூலின் ஆசிரியன் ஆன ஷாநவாஸ்கான் முதலில் ஆசப்ஜாவிடமும் பின்பு நாசர்ஜங்கிடமும் பணியாற்றினான். பிரெஞ்சுக்காரர்கள் தங்களுக்கு எதிராகச் செயல்பட்ட ஷாநவாஸ்கானை 1758ல் கொன்று

விட்டார்கள். 16-18ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட முகலாய இந்தியாவின் உயர்குடியினருடைய எழுநூறு வாழ்க்கைச் சரிதைகள் அவன் எழுதிய நூலில் உள்ளன. இந்நூல் விலை மிக்க வரலாற்று மூல மாகத் திகழ்கிறது. ஏராளமான முக்கியத் தகவல்கள் இதில் அடங்கி யிருக்கின்றன. இவ்வாறு, முகலாயர் காலத்து வரலாற்று விஞ்ஞானத் தின் சிறந்த மரபுகள் 18ம் நூற்றாண்டில் தொடர்ந்தன. 19ம் நூற்றாண்டில் முறையான நிகழ்ச்சிக் குறிப்புக்கள் எழுதும் பழக்கம் உண்மையில் அற்றுப் போய் விட்டது. ஏனெனில் இந்த வரைவு களுக்கு ஊதியம் வழங்கக் கூடிய செல்வாக்கு உள்ள புரவலர்கள் இருக்கவில்லை.

வானவியல்

தொழில் நுட்ப விஞ்ஞானங்களில் வானவியல் ஒன்றுதான் வளர்ச்சி அடைந்தது. ஜெய்பூர் மன்னன் ஜெய் சிங் (?—1743) இந்தத் துறை யில் எல்லோரிலும் சிறப்பாகப் பணியாற்றினான். இந்திய வானவிய லோடு கூடவே தொன்மைக் கிரேக்க, அரேபிய, போர்ச்சுகேசிய வானவியலையும் நன்கு கற்று, ஜெய்பூரிலும் (சலவைக்கல்) டில்லியிலும் (செம் மணற்கல்) மதுராவிலும் உஜ்ஜயினியிலும் வாராணசியிலும் விரிவான வான் ஆய்வு நிலையங்கள் அமைத்தான்.

இலக்கியம், பொதுப் பார்வையீடு

18ம் நூற்றாண்டிலும் 19ம் நூற்றாண்டின் முற்பாதியிலும் இந்தி யாவின் பல்வேறு இலக்கிய மொழிகளின் செவ்வைப்பாடு நிகழ்ந் தது. ஆயினும் இலக்கிய விஷயங்கள் வழக்கமாக மரபு வழி வந்தவையாகவே இருந்தன. 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பத்திரிகைக் கலை தோன்றியது. இந்தியாவில் இலக்கிய வளர்ச்சி வெவ்வேறு மொழிகளில் நிகழ்ந்தது ஆகையால் முக்கிய இந்திய மொழிகளின் இலக்கியத்தைப் பார்வையிடுவோம்.

உருது இலக்கியம்

உருதுக் கவிஞர்கள் பெரும்பாலும் அரசவையிலேயே இலக்கியம் படைத்தார்கள். எனவே உருதுக் கவிதை பெரிதும் மரபைச் சார்ந் ததாக இருந்தது. காட்டாக, சௌதா (மிர்ஜா முகமது ரபி, 1713—1781) தொடக்கத்தில் முகலாய அரசவையில் இருந்தார். டில்லி நாதிர்ஷாவால் அழிக்கப்பட்ட பின் லக்னௌவுக்குத் தப்பி ஓடி

அயோத்தி நவாபின் அவையை அடைந்தார். சௌதா கிண்டல் கவிஞர். தம் எதிராளிகளைக் கடுமையாகத் தாக்குவார். அவ்வாறு செய்கையில் இந்திய நிலப்பிரபுத்துவச் சமூகம் வீழ்ந்து சிதறியதை அவர் சித்திரித்தார். மரபு வழி வந்த ஒழுக்க நெறி முறைகள் குலைந்து ஊழல் எப்படி மிகுந்து கொண்டு போகிறது, அரசவையில் வசதியான இடங்களைப் பெறும் பொருட்டு எவ்வாறு போராட்டம் நடக்கிறது என்பவற்றையும் பிற நிகழ்ச்சிகளையும் அவர் காட்டினார். அவருடைய சமகாலத்தவரான மீர் தக்கி மீர் (1725-1810) உணர்ச்சிப் பாவலர். அவருடைய கஜல்கள் உளமார்ந்த உணர்ச்சி நிறைந்தவை. இவற்றில் அவர் தம் ஒரு தலைக் காதலை விவரித்தார். அவர் காதலித்த மங்கை மதிப்பையும் லாபத்தையும் கருதி வேறு ஒருவனுக்கு மணம் செய்விக்கப்பட்டாள். அதனால் ஏற்பட்ட துயரம் கவிஞரின் பாக்களில் பொங்குகிறது. அதே சமயம் தம் காலத்து டில்லிச் சமூகத்தில் வெகுவாகப் பரவி இருந்த கொடுங்கோன்மையையும் வன்முறையையும் மீர் தக்கி மீர் எதிர்த்தார்.

நஜீர் அக்பராபாதி (1740-1830) மற்ற உருதுக் கவிஞர்கள் போன்று ஏதேனும் அரசவையில் இருக்க விரும்பாமல் ஆக்ராவில் பள்ளி ஆசிரியராக வாழ்ந்து வந்தார். அவர் மக்களின் பல்வேறு வட்டாரத்தினருடன் பழகினார். முகமதியர்கள், இந்துக்கள், சீக்கியர்கள், எல்லோருடைய திருநாள் கொண்டாட்டங்களிலும் கலந்து கொண்டார். சாதாரண மக்களின் வாழ்க்கை பற்றி ஓரளவு முரடான, ஆனால் சுவை ததும்பும் மொழியில் பாக்கள் யாத்தார்.

ஆனால் மிர்ஜா காலிப் (1796-1869) அந்தக் காலத்து உருது எழுத்தாளர்கள் அனைவரிலும் சிறந்தவராக மதிக்கப்படுகிறார். தம் உணர்ச்சிகளையும் சிக்கலான எண்ணங்களையும் கஜல்களில் விவரிக்கையில் மொழியின் ஓரளவு வளர்ச்சியின்மையைப் போக்கும் பொருட்டு அவர் புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் புகுத்தினார். இவற்றில் பல உருதுவில் உள்ளார்ந்த இடம் பெற்று அதற்கு வளம் கூட்டியிருக்கின்றன. தமது கடிதங்களை வெளியிட்டதன் மூலம் அவர் உருது உரைநடையைத் தோற்றுவித்தார், பேச்சு மொழியை இலக்கியத்தில் கையாண்டார். முகலாயச் சமூகம் வீழ்ந்து சிதறியது குறித்து காலிப் வருந்தினார் எனினும், முகலாய அரசவையில் வாழ்ந்த அவர் 1857-1859ல் நடந்த மக்கள் கிளர்ச்சியில் பங்கு கொள்ளவில்லை.

கல்கத்தாவில் உருது உரைநடை வளர்ச்சிக்கு இன்னும் அதிகமாக ஊக்கம் அளிக்கப்பட்டது. தங்கள் அலுவலர்களுக்கு இந்திய மொழிகள் கற்பிப்பதற்காக ஆங்கிலேயர்கள் வில்லியம் கோட்டையில் தனிக் கல்லூரி திறந்தார்கள். உருதுவில் பல்வேறு பாட நூல்கள் தயாரிக்கும் பணியில் அவர்கள் இந்தியர்களை ஈடுபடுத்தினர்கள்.

தயாரான நூல்கள் இல்லாமையால் இந்த இந்தியர்கள் தாங்களே அவற்றை இயற்றினர்கள். இடைக் கால தாஸ்தான்கள் (கதைகள்) பலவற்றை அவர்கள் திருப்பி எழுதி உருது உரைநடை இலக்கிய மொழியை உருவாக்குவதற்குப் பெருந்தொண்டு ஆற்றினர் கள். இந்தக் கல்லூரியின் அச்சகத்தில் ஏறத்தாழ ஐம்பது நூல் கள் உருதுவில் பதிப்பிக்கப் பெற்றன. பாக்-ஓ-பஹார் (தோட்டமும் இளவேனிலும்) என்ற கதைக் கொத்து இவற்றில் எல்லாவற்றை யும் விட அதிகமாக மக்களால் விரும்பப்பட்டது. இதை இயற்றிய மீர் அமன் முன்பு டில்லி ஜாகீர்தாராக இருந்தவர். அகமதுஷா துரானியின் படையெடுப்புக்குப் பிறகு இவர் கல்கத்தாவில் குடி யேறினர்.

மராட்டிய இலக்கியம்

18ம் நூற்றாண்டில் பவாடா எனப்பட்ட வீரக் கதைப் பாடல் கள் மராட்டி மொழியில் ஏராளமாக இயற்றப் பெற்றன. சிவாஜி காலம் முதல் மகாராஷ்டிரத்தின் வரலாறு இவற்றில் கூறப்பட்டது. அந்தக் காலத்துக் கவிஞர்களில் மிகவும் புகழ் பெற்றிருந்தவர்கள் ராம்ஜோஷி (1758-1812), ஆனந்த பந்தோ (1744-1819) இருவரும் ஆவர். அந்தக் காலத்தில் புதுமையாக இருந்தது மராட்டி உரை நடையின், சிறப்பாகக் கட்டுரை இலக்கியத்தின் வளர்ச்சி. ஏற் கெனவே குறிப்பிடப்பட்டுள்ள பால் சாஸ்திரி ஜம்பேகர் மராட்டி இலக்கிய மொழி வளர்ச்சிக்குப் பெரும் தொண்டு ஆற்றினர். 1832ம் ஆண்டில் தாம் தொடங்கிய பம்பாய் தர்ப்பண் (பம்பாய்க் கண்ணாடி) என்னும் ஆங்கில-மராட்டிச் சஞ்சிகையில் பொது விஷயங்கள் பற்றி அவர் எழுதி வந்தார். இந்தியச் சமூகம் முன்காலத்திலும் தற்காலத் திலும் என்ற நூலை 1843ம் ஆண்டில் வெளியிட்ட இராமகிருஷ்ண விசுவநாத், 1840ம் ஆண்டில் நிறுவப்பட்ட பிரபாகர் (சூரியன்) என்னும் சஞ்சிகையில் கட்டுரைத் தொடரை 1848-1850ல் பதிப் பித்த லோகஹிதவாதி ஆகியோரும் இவ்வாறே தொண்டு புரிந்தார் கள். லோகஹிதவாதியின் கட்டுரைத் தொடர் சதபத்ரே (நூறு இதழ்கள்) என்ற தலைப்பில் தனி நூலாக வெளியிடப்பட்டது. இந்த எல்லா நூல்களிலும் எழுத்தாளர்கள் மராட்டி இலக்கியத்தில் அதற்கு முன் கையாளப்படாத விஷயங்கள் பற்றி எழுதினர்கள், புதிய சொற் களையும் சொல் வழக்குகளையும் புகுத்தினர்கள். விளைவாக மராட்டி அந்தக் காலத்து இந்திய மொழிகளில் எல்லாவற்றையும் விட அதிக வளர்ச்சி பெற்ற இலக்கிய மொழியாகத் திகழ்ந்தது. 19ம் நூற்றாண் டின் முதல் பத்தாண்டுகளில் மராட்டி மொழியின் இலக்கண, சொல் அமைப்பு ஆராய்ச்சி குறித்துப் பெருத்த வேலை செய்யப்பட்டது.

அந்தக் காலத்தில் மிகப் பிரபலமாய் இருந்த மராட்டி மொழி இயல் அறிஞர்களில் ஒருவர் தாதோபா பாண்டுரங்கர் (1814-1882).

வங்காளி இலக்கியம்

இடைக் காலப் பா வகைகள் வங்காளி மொழியில் 18ம் நூற்றாண்டில் தொடர்ந்து வளர்ச்சி அடைந்தன. இலக்கியத்தின் கருப் பொருட்களும் வடிவங்களும் மரபு வழி வந்தவையாகவே இருந்தன. ஆயினும் மொழி வளர்ச்சி பெற்றது, கவிதையின் உருவக உத்திகள் செப்பம் அடைந்தன. உவமைகள் மரபு வழி வந்தவற்றிலிருந்து விலகி வாழ்க்கையோடு ஒட்டியவை ஆயின. பாத்திரங்கள் அதிக நடப்பியல் தன்மை வாய்ந்தவை ஆயின. அந்தக் காலத்தில் இருந்த மிகப் பெரிய கவிஞர்கள் ராமப்பிரசாத சேனரும் (1718-1775) பரதசந்திர ராயும் (1712-1760) ஆவர். இருவரும் வங்காள நிலப்பிரபுக்களில் ஒருவனை நதியாவின் மன்னனுடைய அவையில் இலக்கியப் பணி புரிந்தனர். பரதசந்திர ராயின் **பித்தாவும் சுந்தரியும்** என்னும் காவியம் இரு காதலர்களைப் பற்றியது. இதன் அழகும் நடைச் சிறப்பும் முதல் ருஷ்ய இந்திய இயலாரான கெராசிம் லேபிதிவின் (1749-1817) கவனத்தைக் கவர்ந்தன. அவர் இந்தக் காவியத்தை ருஷ்ய மொழியில் ஆக்கினர். பரதசந்திரரின் பாக்களைப் பண்ணில் அமைத்து, 1795ம் ஆண்டு கல்கத்தாவில் தாம் நடத்திய நாடகத்தில் சேர்த்துக் கொண்டார்.

முதலாவது புது வகை வங்காளி எழுத்தாளர் நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள ராம்மோகன் ராய். **சம்வாத கௌமுதி** என்னும் சஞ்சிகையைத் தொடங்கி, வெவ்வேறு சமுதாய விஷயங்கள் பற்றிப் பற்பல கட்டுரைகள் எழுதியதன் வாயிலாக ராம்மோகன் ராய் வங்காளி உரைநடையை வளர்த்தார். இந்து மதத்தில் இருந்த மூட நம்பிக்கைகளையும் பின்தங்கிய சடங்குகளையும் எதிர்த்து அவர் போராட்டமும் நடத்தினர். ராம்மோகன் ராய் வங்காளி உரைநடையின் மலர்ச்சிக்கு முன்னேற்பாடுகள் செய்தார். இந்த மலர்ச்சி 19ம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஏற்பட்டது.

தமிழ் இலக்கியம்

தென் இந்திய இலக்கியங்களில் யாவற்றிலும் அதிக வளர்ச்சி பெற்றிருந்தது தமிழ் இலக்கியம்.

இத்தாலியப் பாதிரியாரான கன்ஸ்டான்ஸோ பெஸ்கி (1680-1746) 18ம் நூற்றாண்டின் முதல் பாதியில் தமிழ் உரைநடை வளர்ச்

சிக்குப் பெருந்தொண்டு ஆற்றினர். இவர் தமிழ் நாட்டாரால் வீரமா முனிவர்* என அழைக்கப்பட்டார். அதுவே இவருடைய பெயராக நிலைத்து விட்டது. கிறிஸ்தவ மத விஷயங்கள் குறித்து அவர் பல நூல்களை இயற்றினர். ஆனல் பேச்சுத் தமிழில் இயன்ற **அவிவேக பூரண** குரு கதை என்ற தொகுப்பு மக்களால் சிறப்பாக விரும்பப் பட்டது.

18ம் நூற்றாண்டின் முற்பாதியில் இலக்கியம் படைத்த தாயுமான வர் பக்தக் கவிஞர். ஆனல் அவருடைய சிவன் எல்லா மக்களுக்கும் மதங்களுக்கும் பொதுவான குணங்குறியற்ற இறைத் தத்துவம். இவ் வாறு மற்ற பக்தர்கள் போலவே தாயுமானவர் எல்லா மக்களும் சமமானவர்கள் என்ற கருத்தைப் பிரதிபலிக்க முயன்றார். இராம லிங்க சுவாமி (1823-1874) இதே கருத்தைத் தம் பழகு தமிழ்ப் பாக்களில் வெளியிட்டார். இராமலிங்கர் **மனு முறை கண்ட வாசகம்** என்னும் தம் கதையின் வாயிலாகத் தமிழ் உரைநடை வளர்ச்சிக் கும் பெருத்த தொண்டு ஆற்றினர். ஆனல் அந்தக் காலத்தில் எல் லோரிலும் பெரிய உரைநடை எழுத்தாளராக விளங்கியவர் ஆறுமுக நாவலர் (1822-1874) ஆவார். 19ம் நூற்றாண்டின் பிற்பாதியில் சுந் தரம் பிள்ளை (1855—1897) **மனேன்மணீயம்** என்னும் சிறந்த நாடகக் காப்பியத்தை இயற்றினர். தமிழில் முதல் நவீனங்கள் 19ம் நூற்றாண்டின் பிற்பாதியில்தான் வெளியாயின.

நாடக மன்றம்

18ம் நூற்றாண்டில் நாடகக் கலை வீழ்ச்சியுற்றது. நாடகங்கள் நடிப்பதற்காக இன்றி உண்மையில் உரக்கப் படிப்பதற்காகவே எழு தப்படலாயின. பண்டை இந்திய இதிகாசக் கதைகளை ஆதாரமாகக் கொண்ட மக்கள் நாடகங்கள் திருவிழாச் சந்தைகளில் நடந்தன; ஆனல் இவை வெறுமே மரபைக் கடைப்பிடித்தன. கிழக்கிந்தியக் கம்பெனி 1757ம் ஆண்டு ஆங்கிலேயர்களுக்காக ஒரு நாடக மன்றத்தைக் கல்கத்தாவில் ஏற்படுத்தியது. ஆனல் இந்தியர்கள் அதற்குப் போகவில்லை. ஏன் என்றால் நாடகங்களின் கதைகள் அவர் களுக்குப் புரியாதவையாக இருந்தன. தவிர அந்தக் காலத்தில்

---

* கன்ஸ்டான்ஸோ (Constanzo) என்ற சொல் தைரியம் எனப் பொருள்படும். எனவே பெஸ்கி பாதிரியார் தம்மைத் தைரியநாத சுவாமி எனக் கூறிக் கொண்டார். அவர் மீது ஏற்பட்ட பேரன்பினல் தமிழர்கள் (மதுரைச் சங்கத்தார்) அவருக்கு வீரமா முனிவர் எனப் பெயர் சூட்டினர்.—மொ-ர்.

நாடக நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு ஆங்கில மொழி வெகு சிலருக்கே தெரிந்திருந்தது.

இந்தியர்களுக்காக நவீன மாதிரியான நாடக மன்றம் 1795ம் ஆண்டு திறக்கப்பட்டது கல்கத்தாவின் வாழ்க்கையில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சியாக விளங்கியது. இசைஞர் (பிற்காலத்தில் இந்திய இயல் அறிஞர்) கெராசிம் லேபிதிவ் இதை நிறுவினர். அவர் பன்னி ரண்டு ஆண்டுகள் இந்தியாவில் வாழ்ந்து சமஸ்கிருதம், வங்காளி, இந்துஸ்தானி ஆகிய மொழிகளைக் கற்றார். இரண்டு ஆங்கில நாட கங்களைப் பேச்சு வங்காளி மொழியில் தழுவி எழுதினர். நாடகத்தின் நிகழ்ச்சிகளை இந்தியாவுக்குக் கொண்டு வந்தார். நாடக பாத்திரங் களை வங்காளிகள் ஆக்கினர். தங்களுக்குப் போட்டியாக முளைத்த லேபிதிவ் வறுமையுறவும் அவருடைய நாடக மன்றம் மூடப்படவும் வேண்டும் என்பதற்காகக் கம்பெனி நாடக மன்ற முதலாளிகள் பல வகைச் சூழ்ச்சிகள் செய்து வெற்றி பெற்று விட்டார்கள். லேபிதிவ் இந்தியாவை விட்டுப் போக வேண்டியதாயிற்று. 1831ம் ஆண்டில் தான் ப. டாகுர் என்ற வங்காளி இந்து நாடக மன்றத்தை அமைத் தார். ஆனால் இதில் நாடகங்கள் ஆங்கில மொழியில் நடிக்கப்பட்டன. 19ம் நூற்றாண்டின் 40க்களில் கல்கத்தாவில் இத்தகைய நாடக மன் றங்கள் பல திறக்கப்பட்டன. தவிர அவற்றில் நாடகங்கள் வங்காளி மொழியில் நடந்தன.

கட்டிடக் கலை

18ம் நூற்றாண்டில் கட்டிடக் கலை மொத்தத்தில் வீழ்ச்சி அடைந் தது. முகலாயப் பேரரசின் முழு மலர்ச்சிக் காலத்தில் நிறுவப்பட்ட கட்டிடங்களின் சிறப்புத் தன்மையான மாட்சியும் தகவுப் பொருத்தங் களின் ஒருங்கிசைவும் மங்கி மறைந்து விட்டன. அளவு கடந்த அலங் கார வேலைப்பாடும் ஏராளமான விவரங்களும் 18ம் நூற்றாண்டுப் பாணியின் பொதுத் தன்மையாக இருந்தன. இந்த விவரங்கள் ஆக்கச் சிறப்பு கொண்டிருக்கவில்லை. உண்மையில் இவை கவனத்தைச் சிதற அடித்தன. தனித் தனி வடிவங்களின் பகுப்பும் இந்தப் பாணிக்கு இயல்பாக இருந்தது. இவற்றோடு கூடவே புதிய கட்டிடச் சிற்பத் தீர்வுகளும் உத்திகளும் தோன்றின.

18ம் நூற்றாண்டில் அரண்மனைகளும் வீதிகளும் பாலங்களும் இத்தகைய பிறவும் அடங்கிய பல புதிய நகரங்கள் நிறுவப்பட்டன. உதாரணமாக ஜெய்பூர் இத்தகையது. முன்னர் குறிக்கப்பட்டுள்ள ராஜா ஜெய்சிங்கால் 1728ம் ஆண்டு இதன் கட்டுமானம் தொடங்கப் பட்டது. ஜெய்பூர் நகர அரண்மனை பல கட்டிடங்கள் அடங்கிய

தொகுப்பு. இவற்றில் மிகப் பெயர் பெற்றது ஹவா மகல் (காற்று மாளிகை). பற்பல மாடக்குழிகளும் கவிகைச் சாளரங்களும் அமைந்த பெரிய கட்டிடம். இந்தச் சாளரங்கள் குளிர்மையும் காற்றோட்டமும் ஏற்பட வகை செய்வதோடு காற்றில் மெல்லென ரீங்காரமும் செய்கின்றன. அரண்மனை உட்பகுதிகள் பல வண்ணச் சலவைக் கற் பாளங்கள் பதித்தும் நீலக்கல் செதுக்கு வேலையாலும் அணி செய்யப் பட்டுள்ளன. அரண்மனைகளுக்கும் கோட்டைக்கும் இடையே ஆங்கில மாதிரியான பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை மலை சூழ்ந்த நிலக் காட்சிக்கு நன்கு இசைகின்றன. இத்தகைய இன்னொரு நகரம் குவாலியர் சிற்றரசின் புதிய தலைநகரான லஷ்கர். இது 1812ம் ஆண்டு நிறுவப்பட்டது. அங்குள்ள கட்டிடங்கள் மரபு வழி வந்த உத்திகளின் படி முன்னே துருத்திய தாழ்வாரங்களும் மெல்லிய தூண்கள் மேல் சித்திர வேலை செய்த கமான் வளைவுகள் கொண்ட முன் மாடங்களும் செதுக்கு வேலை செய்த நீலக்கற்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய திறந்த கவிகைச் சாளரங்களும் உள்ளவை. லஷ்கரில் அழகான பாலம் நன்கு கட்டப்பட்டிருக்கிறது.

வட இந்தியாவில் 18ம் நூற்றாண்டின் போது கட்டப்பட்டது அயோத்தி நவாபுகளின் தலைநகரான லக்னௌ. அரண்மனைகளும் மசூதிகளும் அயோத்தி மன்னர்களதும் உயர் குடியினரதும் சமாதிகளும் பெரிய, சிறிய இமாம்பாடாக்களின் தொழுகைக் கூடங்களும் இத்தகைய பிற கட்டிடங்களும் சேர்ந்த முழுத் தொகுப்பு இங்கே நிறுவப்பட்டது. (இமாம்பாடா என்பது முகமதியர்களுக்கு மிகப் புனிதமான முகர்ரம் பண்டிகை கொண்டாடப்படும் கட்டிடம். ஷியாக்களின் பெரு மதிப்புக்கு உரிய இமாம் உசேன் கி. பி. 680ல் கர்பலா என்னும் இடத்தில் கொல்லப்பட்டார். அவரது கல்லறையின் உருவம் மரத்தால் செய்து நன்மணிகள் இழைத்து இங்கே வைக்கப்பட்டிருக்கும். ஊர்வலத்தின் போது இந்தக் கல்லறை உருவம் வீதிகளில் ஆடம்பரமாக எடுத்துச் செல்லப்படும். இமாம் உசேன் போரில் கொல்லப்பட்ட வரலாறு அப்போது நடித்துக் காட்டப்படும்.) இந்த எல்லாக் கட்டிடங்களும் சாம்பல் நிற மணற்கற்களாலோ தட்டைச் செங்கற் பாளங்களாலோ கட்டப்பட்டுப் பளிச்சிடும் சிப்பிச் சுண்ணச் சாந்து பூசப்பட்டுள்ளன. புடைப்புச் சிற்ப வேலைப்பாடுகளாலும் செயற்கைக் கற்பனை அணிகளாலும் செய்த அலங்காரங்கள் ஏராளம். நுனியில் உருண்டைகள் கொண்ட கழிகளின் கட்டுக்கள் வடிவிலும் நெளிவரிக் கும்மட்டங்களின் உச்சியில் வெவ்வேறு அளவுகள் கொண்ட வளையங்கள் மாட்டிய கூம்புகளின் வடிவிலும் செயற்கை அலங்காரங்கள் உள்ளன. அதே சமயம் இந்தக் கட்டுமானங்கள் கட்டிடச் சிற்ப உத்திகளின் தனித்தன்மையாலும் துணிவாலும் சிறந்து

விளங்குகின்றன. உதாரணமாக, பெரிய இமாம்பாடாவின் செவ்வக மான பெரிய கூடத்தைக் காட்டலாம் (சுமார் 800 சதுர மீட்டர்). இது தட்டையான விட்டம் உள்ளது. இதைத் தாங்குவதற்கு ஒரு தூணே வேறு ஆதாரமோ இல்லை. இந்தக் கூடம் அற்புதமான ஒலியமைப்பு உள்ளது. கூடத்தின் ஒரு கோடியில் கிசுகிசுக்கும் சொல் மறு கோடியில் தெளிவாகக் கேட்கும்.

வாராணசியில் கங்கையின் செங்குத்துக் கரை மேல் உள்ள பெரும் பாலான அரண்மனைகளும் கோயில்களும் மடங்களும் படித்துறை களும் 18ம் நூற்றாண்டிலேயே கட்டப்பட்டன.

19ம் நூற்றாண்டின் முற்பாதியில் நிறுவப்பட்ட தனிக் கட்டிடங் கள் சில கவனத்தை ஈர்க்கின்றன. இவற்றில் ஒன்று 1844ம்-1848ம் ஆண்டுகளில் வெண் சலவைக் கற்களால் கட்டப்பட்ட சமண தீர்த் தங்கரர் தருமநாதர் கோயில் அகமதாபாதில் உள்ளது. இன்னொன்று பிகானேரில் செல்வனை ஒரு வணிகன் கட்டியுள்ள மூன்று மாடிக் கட்டிடம். இது கைபிடிச் சுவர் வைத்த வேயா மாடம். செதுக்கு வேலைகளும் சிற்ப வடிவங்களும் நிறைந்தது. இத்தகைய கட்டிடங் கள் இன்னும் பல உள்ளன. 18ம் நூற்றாண்டின் கட்டிடச் சிற்ப அற் புதங்களில் ஒன்று அமிர்தசரசில் உள்ள சீக்கியரின் தங்கக் கோயில். எழிலார்ந்த மண்டபங்களால் அணி செய்யப்பட்டது. தங்க முலாம் பூசிய செப்புத் தகடுகள் வேய்ந்தது. இது 1764ல் அல்லது 1766ல் கட்டப்பட்டது. டில்லியில் உள்ள சப்தர்ஜங் மசூதி (1753ம் ஆண்டு) முகலாய அரசின் முழு மலர்ச்சிக் காலக் கட்டிடங்களை வடிவில் ஒத் திருக்கிறது. ஆனால் மலிவான பொருள்களால் கட்டப்பட்டிருக்கிறது.

18ம் நூற்றாண்டில் இந்தியாவில் ஐரோப்பியக் கட்டிடங்களும் முதலாவதாக வங்காளத்தில் தோன்றின (ஆனால் தென் இந்தியாவில் 16ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு சில போர்ச்சுகேசியச் சர்ச்சுகளும் 17ம் நூற்றாண்டைய டச்சுக் கிட்டங்கிகளும் இருப்பிட வீடுகளும் எஞ்சியிருந்தன). 18ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆங்கிலேயர் வீடுகள் பெரும்பாலும் தொன்மைக் கிரேக்க-ரோமானியப் பாணியில், வழக்க மாகத் தூண்களுடன் அமைந்திருந்தன. சுற்றும் இருந்த இடத்துக்கு அவை சிறிதும் இசையவில்லை. இந்தியாவில் ஐரோப்பியர்களால் அந்தக் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள் எல்லாவற்றிலும் படு அவலட்சணமானது லக்னௌவில் உள்ள இராணுவக் கல்லூரியான லா மார்ட்டினேர் என்பது ஆகும். முதல் அயோத்தி நவாபுகளின் பிரங்கிப் படைத் தலைவனுக இருந்த கிளாடு மார்ட்டின் என்னும் முரட்டுத் துணிச்சல் கொண்ட பிரெஞ்சுக்காரன் செயற்கை ஏரிக் கரையில் கட்டியது இது. கிளாடு மார்ட்டின் இந்தியாவில் நம்ப முடி யாத அளவு செல்வம் திரட்டினான். அவன் கட்டிய கட்டிடம் சாளரங்

கள் இல்லாத திண்ணிய சுவர்களும் நாற்கோணமும் வட்டமுமான கோபுரங்களும் இரண்டாம் மாடியில் உயரக் காவல் மேடையும் உச்சியில் ஊடு திறந்த மகுடமும் கொண்டது. பல்வேறு பாணிகளில் அமைந்த ஐரோப்பிய அரண்மனை போன்று இது தோற்றம் அளிக்கிறது. கோபுரங்களின் முகடுகள் மீது வெவ்வேறு மட்டங்களில் ஐரோப்பியத் தொன்மைக் கிரேக்க-ரோமானிய மரபு வகையான சிற்ப வடிவங்கள் வைக்கப்பட்டுள்ளன. முகப்பில் புகு வாயிலுக்கு மேலே பிரமாண்டமான இரு தட்டைக்கற் சிங்க உருவங்கள் உள்ளன. இவற்றின் வாய்கள் வழியே வானம் தென்படுகிறது. நல்ல காலமாக இம்மாதிரிக் கட்டிடங்கள் இந்தியக் கட்டிடச் சிற்பப் பாணியைப் பாதிக்கவில்லை.

ஓவியம்

முகலாய நுணுக்க ஓவியம் நாளுக்கு நாள் பெருத்த எண்ணிக்கையில் கைத்தொழில் தரத்தில் தயாரிக்கப்படலாயிற்று. அது பழைய மாதிரிகளையே மீண்டும் படைத்தது. ஆனால் அதிகம் பளிச்சிடும் வண்ணங்களை, சில வேளைகளில் கண்ணைக் கூசச் செய்யும் வண்ணங்களைக் கையாண்டது. ஏராளமான நுணுக்க ஓவியங்கள் இப்போது கைத்தொழில் செய்பொருள்கள் (பெட்டிகள், தாம்பாளங்கள், தந்தப் பதக்கங்கள் முதலியவை) மேல் தீட்டப்பட்டன. 18ம் நூற்றாண்டின் நடுவில் முகலாய நுணுக்க ஓவியப் பாணி உண்மையில் மறைந்து விட்டது. ஆனால் 18ம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஜம்மு, சம்பா, மண்டி, குலேர், காங்கிரா, டேரி-கட்வால் ஆகிய சிறு மலைச் சிற்றரசுகளில் ஓவியப் பாணிகள் மலர்ச்சி பெறலாயின. எனவேதான் அங்கு வளர்ந்த நுணுக்க ஓவியக் கலை ''பஹாடி'' (மலைநாட்டது) எனப்பட்டது.

காங்கிரா ஓவியப் பாணி இவை எல்லாவற்றிலும் முக்கியமானது. முகலாயச் சிற்றோவியங்களில் முகலாயப் பிரபுக்களின் வாழ்க்கை சித்திரிக்கப்பட்டது, அல்லது பாரசீக மொழிக் கவிஞர்களின் படைப்புக்களுக்கு விளக்கப் படங்கள் தீட்டப்பட்டன. மாறுகக் காங்கிரா ஓவியங்களில் இந்து இதிகாசக் கதைப் பொருள்கள், சிறப்பாகக் கண்ணன் வழிபாட்டுக்குரிய விஷயங்கள் முதன்மையான இடம் பெற்றிருந்தன. கண்ணனின் குழந்தைப் பருவம், ஆயர்களிடையே கண்ணன், வேய்ங்குழலூதும் கண்ணன், அவனுடைய காதலி ராதை தன் தோழியருடன், கண்ணனும் ராதையும் சந்தித்தல் முதலியன சித்திரிக்கப்பட்டன. கண்ணன் எப்போதும் அசாதாரணமான இள நீல வண்ணத்தில் தீட்டப்பட்டான். ராஜபுத்திர ஓவியப் பாணியிலிருந்து உருவங்களின் தட்டையான, பெரும்பாலும் பக்கத் தோற்றச்

சித்திரிப்பையும் கண்களே வழக்கத்துக்கு மாறுகச் சற்று பெரியவை யாகக் காட்டும் மரபையும் காங்கிராப் பாணி எடுத்துக் கொண்டது. தொலையணிமை வழக்கமாகக் காட்டப்படவில்லை. கூட்டத்தைக் காட்டுவதற்கு உருவங்கள் சில வரிசைகளைப் போலத் தீட்டப்பட்டன. மரங்கள் செயற்கையான மரபு முறைப்படி வரையப்பட்டன. பெரும்பாலும் இரவுக் காட்சிகள் விண்மீன்கள் சிதறிக்கிடக்கும் வானத்துடன் சித்திரிக்கப்பட்டன. அப்போதும் வண்ணங்கள் பளிச் சிட்டன, ஆனால் வேறுபாடுகள் இன்றி, வழக்கமாக ஒரே நிறத்தில் அதாவது ஆழ்நீல-இளநீலச் சாயல்களிலோ பொன்வண்ண-பழுப்பு வண்ணச் சாயல்களிலோ தீட்டப்பட்டன. காங்கிராச் சிற்றோவியங் களில் அரசவைக் காட்சிகள் சித்திரிக்கப்படவில்லை. உழவர்களும் ஆயர்களும் கம்மியர்களும் பிறரும் தீட்டப்பட்டுள்ளனர். இந்த ஓவிய மரபின் இன்னொரு சிறப்பு இது.

18ம் நூற்றாண்டின் இறுதியில் வண்ணங்கள் வெளிறின, காட்சி அமைப்பு தரங்குன்றியது, கடவுளர்கள் கூடச் சாதாரண மனிதர் கள் போல நடைமுறை வாழ்க்கைச் சூழ்நிலையில், அடிக்கடி குடும்பத் தாருடன் சித்திரிக்கப்பட்டார்கள். 19ம் நூற்றாண்டின் முற்பாதியில் ஓவியக் கலை நாளுக்கு நாள் அதிகக் கைத்தொழில் தன்மையை மேற் கொண்டது. ஆங்கில அதிகாரிகளின் உருவப் படங்கள் அடிக்கடி தீட்டப்பட்டன. பல வகைக் கொண்டாட்ட ஊர்வலங்களும் சித்திரிக் கப்பட்டன. புத்தகங்களின் பக்கங்களில் தீட்டப்பட்டு வந்த சிற்றோவியங்கள் அன்றாடம் புழங்கும் பொருள்கள் மீதே தீட்டப் படலாயின.

ஏகாதிபத்தியத்துக்கு மாறும் காலப்பகுதியில் இந்தியா (1860—1897)

காலனி நிர்வாக அமைப்பில் மாறுதல்கள்

1857-1859ல் நடந்த மக்கள் கிளர்ச்சி இந்திய புதிய கட்ட வரலாற்றில் முக்கியமான எல்லையாக விளங்கியது. ஆங்கில ஆதிக்கத்தின் சமுதாய அடித்தளம் ஒப்பு நோக்கில் எவ்வளவு பலவீனமாக இருந்தது என்பதையும் நாட்டை அடிமைப்படுத்தியவர்கள் மீது திரளான இந்தியப் பொதுமக்களின் வெறுப்பு எவ்வளவு ஆழமாக இருந்தது என்பதையும் அது புலப்படுத்தியது. இந்திய தரிசனம் என்னும் தமது நூலில் ஜவாகர்லால் நேரு குறிப்பிட்டிருப்பது போல, ''கிளர்ச்சி நாட்டின் ஒரு சில பகுதிகளேயே நேரடியாகப் பாதித்தது என்றாலும் அது இந்தியா முழுவதையும், சிறப்பாக ஆங்கில நிர்வாக அமைப்பை, உலுக்கி விட்டது.''*

60க்களில் நிகழ்ந்த நிர்வாகச் சீர்திருத்தங்கள்

ஆங்கில முதலாளி வர்க்கம் காலனி நிர்வாகத்தில் முக்கியமான மாறுதல்கள் செய்ய வேண்டியதாயிற்று. நிர்வாக இயந்திரத்தை வலுப்படுத்துவதும் அதைப் புதிய வரலாற்று நிலைமைகளுக்கு இசைவிப்பதும் இந்த மாறுதல்களின் நோக்கமாக இருந்தது. 19ம் நூற்றாண்டின் 60க்களில் நிர்வாகச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டபோது காலனியாட்சி மூலம் இந்தியாவை அடிமைப்படுத்துவதற்கான முக்கியக் கருவியாக விளங்கிய அரசு இயந்திரத்தை நிலைப்படுத்தும் செயல் நிறைவேற்றப்பட்டது.

கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவிலும் சரி, பிரிட்டனிலும் சரி, அவப் பெயர் பெற்று விட்டது. வரலாற்று நோக்கில் காலத்துக்கு ஒவ்வாததாக அது எப்போதோ மாறிவிட்டிருந்தது! கார்ல் மார்க்ஸ்

---

* ஜவாகர்லால் நேரு, இந்திய தரிசனம் (ருஷ்யப் பதிப்பு), மாஸ்கோ, 1955, பக்கங்கள் 350-351.

எழுதியதுபோல, அது ''போர் முடிவதற்கு முன்பே மூடப்பட்டு விட்டது.''*

''இந்தியாவின் நிர்வாகம் பற்றிய சட்டம்'' 1858ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2ந் தேதியன்று பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெற்றது. இதன் படி இந்தியாவில் அரசு அதிகாரம் ஆங்கில அரசர் பொறுப்பு ஆயிற்று. காலனியாட்சி நிர்வாகம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தினதும் அரசாங்கத்தினதும் நேரான கண்காணிப் புக்கு உள்ளாயிற்று. கண்காணிப்புக் கவுன்சில், கிழக்கிந்தியக் கம் பெனி இயக்குநர் மன்றம் இரண்டின் வாயிலாகவும் நடந்து வந்த இரட்டையாட்சி முறைக்கு முடிவு கட்டப்பட்டது. இந்த உறுப்புக் கள் அகற்றப்பட்டன. இவற்றின் காரியங்கள் புதிதாக நிறுவப்பட்ட இந்திய விவகார அமைச்சகத்தினிடம் ஒப்படைக்கப்பட்டன. இதன் தலைவன் அரசுச் செயலாளன் எனப்பட்டான். அவன் கீழ் இந்தியக் கவுன்சில் என்னும் ஆலோசனை மன்றம் ஏற்படுத்தப்பட்டது. பிரிட் டிஷ் இந்தியாவில் ஊழியம் புரிந்த பெரிய அலுவலர்கள் இதன் உறுப் பினர்களாக இருந்தார்கள். ஆங்கில கவர்னர் ஜெனரல் வைசிராய் என்னும் பட்டம் பெற்று இந்தியாவில் பிரிட்டிஷ் அரசனின் நேரான பிரதிநிதி ஆனான். நிர்வாகத்தை மையப்படுத்தியதன் மூலம் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் காலனி நிர்வாகத்தின் நடவடிக்கைகள் மீது தன் கண்காணிப்பை வலுப்படுத்தியது. கிழக்கிந்தியக் கம்பெனியின் உடைமைகள் ஆங்கில அரசுக்கு உரியவை ஆயின. கம்பெனிப் பங் குதாரர்களுக்கு இந்திய பட்ஜெட்டிலிருந்து (அதாவது இந்தியாவின் வரி செலுத்துவோரின் பணத்தைக் கொண்டு) 30 லட்சம் பவுண்டு இழப்பீடாக அளிக்கப்பட்டது.

1857 முதல் 1859 வரையுள்ள காலப்பகுதியில் சிப்பாய்ப் படை கள் கிளர்ச்சிக்காரர்களின் நடவடிக்கைகளில் ஊக்கத்துடன் பங்கு கொண்டதன் விளைவாக 1861 முதல் 1864 வரை இராணுவச் சீர் திருத்தங்கள் செய்யப்பட்டன. காலனிச் சேனை மாற்றி அமைக்கப்பட் டது. இதன்படி ஆங்கிலப் பட்டாளங்களதும் படைப் பிரிவுகளதும் பங்கு கணிசமாக அதிகரித்தது (சீர்திருத்தத்துக்கு முன் ஆங்கிலத் துருப்புக்களுக்கும் சிப்பாய்த் துருப்புக்களுக்கும் ஒப்பு விகிதம் ஒன் றுக்கு ஆறாக இருந்தது. சீர்திருத்தத்தின் பின் அது ஒன்றுக்கு இரண்டு ஆயிற்று. பிற்காலத்தில் ஒன்றுக்கு மூன்றாக நிலைத்தது). பட்டாளங் களை அமைக்கையிலும் வினியோகிக்கையிலும் வெவ்வேறு நாட்டினர் களையும் மதங்களையும் சாதிகளையும் சேர்ந்த குழுக்களை ஒன்றுக்

---

* கார்ல் மார்க்ஸ், **இந்திய வரலாற்றின் கால வரிசைக் குறிப்புகள் (664—1858)**, பக்கம் 160.

கொன்று எதிராக வைக்கும் கோட்பாடு கடைப்பிடிக்கப்பட்டது: பஞ்சாபி சீக்கியர்களிலிருந்தும் இமாலய மலைச்சாரல்களிலும் நேப்பாளத்திலும் வசித்த மலைநாட்டாரிலிருந்தும் சிப்பாய்களின் பெரும் பகுதியினர் திரட்டப்பட்டனர். இந்தியாவின் முக்கியப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களோடு குறைந்த தொடர்பு கொண்ட மானிட இனக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் இவர்கள். சிப்பாய்களுக்குத் தவாளிப்பற்ற குழல்கள் உள்ள துப்பாக்கிகளும் ஆங்கிலத் துருப்புக்களுக்குச் சுருகுழல் துப்பாக்கிகளும் கொடுக்கப்பட்டன. பீரங்கிப் படையில் ஆங்கிலேயர் மட்டுமே பணியாற்றினர்கள். இதனலும் போர்-இயந்திரத் துறையில் சிப்பாய்ப் படைகளை விட ஆங்கிலப் படைகள் உயர் நிலையில் இருப்பது சாத்தியம் ஆயிற்று.

இராணுவச் சீர்திருத்தத்தின் போது சிற்றதிகாரிகள் பதவிகளுக்கான நியமனங்கள் பற்றிய புது முறை ஏற்படுத்தப்பட்டது. இந்திய நிலப்பிரபுத்துவ உயர் குடியினருக்கு இராணுவ சேவையில் பதவி உயர்வு பெறும் வாய்ப்பு இதனல் கிடைத்தது.

காலனி நிர்வாகத் துறையில் செய்யப்பட்ட பிற மாற்றங்கள் போலவே இராணுவச் சீர்திருத்தமும் இரண்டு நோக்கங்கள் கொண்டிருந்தது: ஒரு புறம் இந்தியாவில் ஆங்கில அரசு இயந்திரத்தை மையப்படுத்தி வலுவாக்குவது, மறு புறம், நிலப்பிரபுக்கள் வர்க்கத்தின் வடிவில் நிலையான சமுதாய ஆதாரத்தைக் காலனியாட்சிக்கு ஏற்படுத்துவது.

இந்த ஆண்டுகளில் செய்யப்பட்ட நிர்வாகச் சீர்திருத்தமும் இதே உள்ளடக்கம் கொண்டிருந்தது. இந்தியக் கவுன்சில்கள் பற்றிய சட்டத்திற்கு (1861) இணங்க, வைசிராய், மூன்று மாகாண கவர்னர்கள், வட மேற்கு, பஞ்சாப் மாநில டிப்டி கவர்னர்கள் ஆகியோரின் கீழ் சட்டக் கவுன்சில்கள் (ஆலோசனை மன்றங்கள்) நிறுவப்பட்டன. இவை ஆலோசனை கூறும் பொறுப்பு பெற்றிருந்தன. இந்தக் கவுன்சில்களின் உறுப்பினர்களில் பாதிக்குக் குறையாதவர்கள் அரசு ஊழியர்கள் அல்லாதவர்களாக இருக்க வேண்டும் என்று வகை செய்யப்பட்டது. இந்தியா மந்திரி சார்லஸ் வுட் 1861ம் ஆண்டு மக்கள் மன்றத்தில் ஆற்றிய உரையில் நிர்வாகச் சீர்திருத்தம் செய்வதன் நோக்கத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறினன். சட்டக் கவுன்சில்களின் வேலையில் இந்திய நிலப்பிரபுக்களை ஈடுபடுத்துவதன் அவசியத்தை ஆதாரங்களுடன் விளக்குகையில் அமைச்சன் கூறியதாவது: ''உயர் பதவியிலுள்ள சுதேசிகளை நம் முடைய ஆட்சிக்கு இந்த அளவு ஆதரவாளர்கள் ஆக்குவது வேறு எதனலும் முடியாது என்று நான் உறுதியாக நினைக்கிறேன்.''

சட்டக் கவுன்சில்கள் நிறுவப்பட்டது வைசிராய், மாகாண கவர்

னர்கள் ஆகியோரின் மேலாண்மை அதிகாரத்தை எவ்வகையிலும் குறைக்கவில்லை. நிதி, வரிவிதிப்பு, இராணுவம், மதம், இந்தியச் சிற்றரசுகளுடனும் அயல் நாட்டு அரசுகளுடனும் உறவுகள் போன்ற கொள்கை பற்றிய முக்கியப் பிரச்சினைகள் சட்டக் கவுன்சில்களின் விவாதத்துக்கு உரியவை அல்ல என்று நிர்வாகச் சீர்திருத்தம் குறித்த 1861ம் ஆண்டுச் சட்டத்தில் சிறப்பாகக் கூறப்பட்டிருந்தது எடுத்துக் காட்டானதாகும். காலனி நிர்வாக அலுவலகத்தின் வெவ்வேறு இலாகாக்களின் தலைவர்கள் அடங்கிய செயற்குழு வைசிராயின் உதவிக்காக நிறுவப்பட்டது. மத்திய, மாகாணச் சட்டக் கவுன்சில்களின் முடிவுகளை நிராகரிக்கும் அதிகாரம் வைசிராய்க்கு இருந்தது.

இதே ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட நீதித்துறைச் சீர்திருத்தமும் அரசு இயந்திரத்தின் மையப்பாட்டை வலுவாக்குவதையும் அதில் ஆங்கிலக் காலனியாட்சி அதிகாரி வர்க்கத்தின் செல்வாக்கை அதிகப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. விளைவாக, முன்பு சம உரிமையுடன் நிலவி வந்த அரச நீதிமன்றங்கள், கிழக்கிந்தியக் கம்பெனி நீதிமன்றங்கள் (ஸதர் அதாலத்துக்கள்) என்ற அமைப்பு ஒழிக்கப்பட்டது. மூன்று மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் 1861லும் வட மேற்கு மாநிலங்களில் 1866லும் உயர் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

காலனியாட்சிக்கு உட்பட்ட இந்தியாவின் அரசு இயந்திரம் நிலையாக்கப்படுவது 19ம் நூற்றாண்டின் பிற்பாதியில் பெருமளவு நிறைவு பெற்றது. இதன் முதன்மையான சிறப்பியல்பு இது பிரிட்டிஷ் சுரண்டுவோர் வர்க்கங்களின் நலன்களுக்கே பிரதானமாகத் தொண்டு ஆற்றியதாகும். அதனால் தான் இதன் தலைமைப் பகுதிகள் (இந்தியாவுக்காகச் சட்டங்கள் இயற்றிய நாடாளுமன்றம், காலனி நிர்வாகத்தின் நடவடிக்கைகளைத் தனி அமைச்சகத்தின் மூலம் காண்காணித்து இயக்கிய அரசாங்கம் ஆகியவை) இங்கிலாந்தில் இருந்தன.

சமஸ்தான மன்னர்களுடனும் நிலப்பிரபுக்களுடனும் கூட்டு

இந்திய நிலப்பிரபுத் தலைவர்கள் விஷயத்தில் விக்டோரியா அரசியால் 1858ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதி பிரகடனம் செய்யப்பட்ட புதுக் கொள்கை காலனி நிர்வாகத்தால் ஒத்திசைந்த முறையில் கடைப்பிடிக்கப்பட்டது.

கிளர்ச்சியின் போது தங்களைச் செயல் முறையில் ஆதரித்த நிலப்பிரபுத் தலைவர்களுக்கு ஆங்கிலேயர்கள் தாராளமாகப் பரிசு வழங்கினர்கள். வட மேற்கு மாநிலங்களைச் சேர்ந்த பல நிலப்பிரபுக்களுக்கு ராஜா, நவாபு என்ற கௌரவப் பட்டங்கள் 1867 முதல் 1870 வரை

அளிக்கப்பட்டன. அவர்களுக்குப் பெரும் பணத் தொகைகள் கொடுக்கப்பட்டதோடு நிலங்களும் உதவிச் சம்பளங்களும் தரப்பட்டன. சில சமஸ்தானங்களின், உதாரணமாகப் பட்டியாலா, ஜிந்து, ராம்பூர், குவாலியர் ஆகியவற்றின் மன்னர்களுக்குக் கிளர்ச்சிக்காரர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட பிரதேசங்களில் கணிசமான நிலப்பரப்புக்கள் மானியமாக வழங்கப்பட்டன.

நிலப்பிரபுக்களுக்கும் சமஸ்தான மன்னர்களுக்கும் நிலங்களைப் பகிர்ந்து அளித்ததன் மூலம் இந்தியச் சமூகத் தலைவர்களுடன் தங்கள் கூட்டை ஆங்கிலேயர்கள் பொருளாதார நோக்கில் வலுவாக்கிக் கொண்டார்கள். இந்திய மக்களின் தேசிய நலன்களுக்கு இந்திய நிலப்பிரபுக்கள் செய்த துரோகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது இந்தக் கூட்டு. இந்தியாவில் ஆங்கிலேயர்களுடைய கொள்கையின் முக்கியக் கோட்பாடுகளில் ஒன்றான பிரித்தாளும் சூழ்ச்சியும் அவர்களது இந்தச் செயலில் வெளிப்பட்டது. மக்களுக்கு இடையே மதச் சச்சரவுகளை மூட்டிவிடுவதற்கு வாய்ப்பான நிலைமைகளை ஏற்படுத்தும் வகையில் சமஸ்தானங்களின் நிலப்பரப்பு எல்லைகளைக் காலனி ஆட்சியாளர்கள் மாற்றியது எடுத்துக்காட்டானது.

1859ம் ஆண்டு ஆக்ராவில் தர்பார் நடந்தது. கவர்னர் ஜெனரலும் இந்தியாவின் முதல் வைசிராயுமான லார்டு கானிங்கைச் சந்திப்பதற்காக ராஜபுதனத்தையும் இந்தியாவின் வேறு சில பிரதேசங்களையும் சேர்ந்த அரசுரிமை பெற்ற சமஸ்தான மன்னர்கள் இந்த தர்பாருக்கு அழைக்கப்பட்டார்கள். ''அரசுரிமை இழந்த'' (அதாவது நேர் ஆண் வாரிசு இல்லாத) சமஸ்தானங்கள் பற்றிய பிரிட்டிஷ் கொள்கையில் மாறுதல் செய்யப்பட்டிருப்பதாக இந்தச் சந்தர்ப்பத்தில் முதன் முதலாக அறிவிக்கப்பட்டது. குவாலியர் சமஸ்தான மன்னனை சிந்தியாவுக்கு ஆண் வாரிசைத் தத்து எடுத்துக் கொள்ளக் கானிங் அனுமதி அளித்தான். அடுத்த ஆண்டு தத்து எடுத்துக் கொள்ளும் உரிமை ஜாகீர்தார்களுக்கு மேற்பட்ட பட்டங்கள் உடைய எல்லா நிலப்பிரபுக்களுக்கும், அவர்கள் ஆங்கில அரசாங்கத்துக்கு விசுவாசத்துடன் தொண்டு ஆற்றி வர வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், வழங்கப்பட்டது. முன்பு ஆங்கிலேயர்களால் பறிமுதல் செய்யப்பட்டிருந்த சில சமஸ்தானங்கள் முந்திய மன்னர்களின் தத்துப் பிள்ளைகளுக்குத் திருப்பி அளிக்கப்பட்டன. இவையாவன: 1859ல் டோரி-கட்வாலும் 1861ல் கோல்காப்பூரும் 1864ல் தாரும். டால்ஹௌசியின் ''அரசுரிமை இழப்புக் கொள்கையைக்'' கைவிட்டு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டதன் வாயிலாகக் காலனியாட்சி அதிகாரிகள் சமஸ்தான மன்னர்களின் ஆட்சிப்பரப்புகளின் முழுமையையும் காப்புரிமையையும் நிலை நிறுத்துவது பற்றி விக்டோரியா அரசி

யின் பிரகடனத்தில் அளிக்கப்பட்டிருந்த வாக்குறுதியைச் செயல்படுத்தினர்கள்.

ஆயினும், டால்ஹௌசியால் ஆங்கில ஆட்சிப்பரப்பில் இணைக்கப்பட்ட முன்னுள் சமஸ்தான நிலப்பரப்புக்களின் பெரும்பாலான பகுதிகள் முன்போலவே பிரிட்டிஷ் இந்தியாவில் அடங்கியவையாக இருந்து வந்தன. உதாரணமாக ஹைதராபாது சமஸ்தானத்தின் மிகச் செழிப்பான பகுதியாகிய பீரார் ''சாசுவதக் குத்தகை'' வடிவில் ஆங்கில ஆட்சிப்பரப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டு அப்படியே இருந்து வந்தது.

சமஸ்தான மன்னர்களும் அவர்களைச் சூழ்ந்திருந்த நிலப்பிரபுக்களும் ஊதாரித்தனமாகப் பணத்தை வாரி இறைத்தார்கள். தவிர, காலனி ஆட்சியாளர்களுக்கு அவர்கள் கப்பம் செலுத்தி வந்தார்கள். இந்தக் காரணங்களால் சமஸ்தானங்களில் நிதிப் பற்றுக்குறை அடிக்கடி ஏற்பட்டு வந்தது. மன்னர்கள் பெரிய வர்த்தக, வட்டித் தொழில் குடும்பங்களிடம் கடன்பட்டவாறு இருந்தார்கள். 1857ம்—1859ம் ஆண்டுக் கிளர்ச்சிக்கு முந்திய ஆண்டுகளில் சமஸ்தானங்களை ஆங்கிலேயரின் நேரான ஆட்சியில் இருந்த நிலப்பரப்புடன் சேர்த்துக் கொள்வதற்கு இத்தகைய கடன்பட்ட நிலையை அதிகாரிகள் அடிக்கடி பயன்படுத்தி வந்தார்கள். இப்போதோ, காலனி ஆட்சியாளர்களின் புதிய உள்நாட்டுக் கொள்கை காரணமாக, நிதித்துறை சீர்குலைந்த நிலையில் இருந்த சமஸ்தானங்கள் அரசாங்க அரவணைப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆங்கில அதிகாரிகள் தாற்காலிகமாக அவற்றின் தலைமையில் அமர்த்தப்பட்டார்கள்.

தங்களைச் சார்ந்திருந்த சமஸ்தான மன்னர்களுக்கு உற்சாகமூட்டுவது, பரிசுகள் வழங்குவது என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வந்த ஆங்கிலேயர்கள் அதே சமயத்தில் அவர்களை முழுமையான இராணுவ-அரசியல் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்கள். ருஷ்ய இந்திய இயல் அறிஞர் இ. பா. மினயெவ் 1880ல் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தார். மத்திய இந்திய யாத்திரையின் போது ஏற்பட்ட உளப்பதிவுகளைக் கொண்டு, சமஸ்தானங்களில் ஆங்கில ''ஆட்சிப் பிரதிநிதிதான் எல்லாம்'' என்று அவர் தம் நாட்குறிப்பில் எழுதினர்.

படைகள் வைத்துக் கொள்ளும் உரிமை சமஸ்தான மன்னர்களுக்கு இருந்தது. சமஸ்தானங்களுக்கு உள்ளே நிலப்பிரபுத்துவத்துக்கும் காலனியாட்சிக்கும் எதிரான போராட்டங்களை ஒடுக்குவதற்காகவே இந்தப் படைகள் முதன்மையாக ஏற்படுத்தப்பட்டிருந்தன. மோசமாகப் பயிற்றப்பட்டுத் தரக் குறைவான ஆயுதங்கள் அணிந்திருந்த சமஸ்தானப் படைகள் காலனி ஆட்சியாளர்களுக்கு ஆழ்ந்த

அபாயம் உண்டாக்க வல்லமை கொண்டிருக்கவில்லை. தவிர சமஸ்தான மன்னர்கள் ஆங்கிலேயரின் விசுவாசமுள்ள ஊழியர்களாகத் தங்களைக் காட்டிக் கொண்டதால் இத்தகைய அபாயம் ஏற்பட இடமே இல்லாதிருந்தது. ஆயினும் பல விதமான ஆங்கில ''ஆட்சிப் பிரதிநிதிகள்'', ''அரசியல் ஏஜெண்டுகள்'' ஆகியோரின் அதிகாரத்தை வலுப்படுத்தும் பொருட்டு ஆங்கில-இந்தியப் பட்டாளங்களும் பெரும் படைப் பிரிவுகளும் கூடச் சமஸ்தானங்களில் வைக்கப் பட்டிருந்தன. ஆங்கிலக் காவற்படைகள் போர்த்தந்திர நோக்கில் முக்கியமான இடங்களில் அமைந்திருந்தன. முதன்மையான போக்குவரத்துச் சாலைகளை இவை கண்காணிப்பில் வைத்திருந்தன.

1877ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியன்று வைசிராய் மாளிகையில் அரசுரிமை பெற்ற இந்தியச் சமஸ்தான மன்னர்கள் சிறப்பாகக் கூட்டப்பட்டார்கள். பிரிட்டனின் அரசி இந்தியாவின் சக்கரவர்த்தினியாக அப்போது அறிவிக்கப்பட்டாள். சமஸ்தானங்கள் மீது ஆங்கிலக் காலனி நிர்வாகத்தின் கண்காணிப்பு இதனால் முறைப்படி அதிகமாக்கப்பட்டது. சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் பேரரசின் பகுதிகளாகச் சேர்க்கப்பட்டதையும் நடப்பில் மட்டும் இன்றிச் சட்டப்படியும் ஆங்கில அரசியின் மானியப் பிரதேசங்கள் ஆகிவிட்டதையும் இது குறித்தது.

தங்கள் காலனிப் பேரரசை உருவாக்கிய போது ஆங்கிலேயர்கள் நாட்டை ''பிரிட்டிஷ் இந்தியா'', சில நூறு ''சுதேச சமஸ்தானங்கள்'' என்று பிரித்தார்கள். இதோடு ஒவ்வொரு சமஸ்தானமும் முதலில் கிழக்கிந்தியக் கம்பெனியுடனும் பின்னர் பிரிட்டிஷ் அரசாங்கத்துடனும் தனிப்பட்ட உடன்படிக்கை உறவுகள் ஏற்படுத்திக் கொள்ளுமாறு செய்தார்கள். ஒவ்வொரு சமஸ்தானமும் கட்ட வேண்டிய கப்பத்தின் அளவும் அதன் மீது பிரிட்டிஷ்-இந்திய அதிகாரிகளின் இராணுவ-அரசியல் கண்காணிப்பின் பரிமாணமும் வெவ்வேறாக இருந்தன. இந்த வேறுபாடுகள் மன்னர்களுக்கு இடையே முரண்பாடுகளை அதிகமாக்கின. சிறு சமஸ்தானங்கள் பெரியவற்றை மானியப் பிரதேசங்களாகச் சார்ந்திருந்த நிலை அப்படியே வைக்கப் பட்டிருந்தது. இதனாலும் மானியக்காரச் சிற்றரசர்களுக்குள் பூசல்களும் பிணக்குகளும் ஓயாமல் ஏற்பட்ட வண்ணமாய் இருந்தன. காலனியாட்சி அதிகாரிகள் இந்த விவாதங்களிலும் சச்சரவுகளிலும் வழக்கமாக நடுவர்களாகச் செயல்பட்டார்கள். சுதேச சமஸ்தானங்களில் ஆங்கிலேயரின் செல்வாக்கை வலுப்படுத்துவதற்குத் தங்கள் மத்தியஸ்தத்தை அவர்கள் பயன்படுத்தினார்கள்.

சில சமஸ்தான மன்னர்கள் எதிர்ப்புப் போக்கைக் காட்டியது வழக்கமாக வெளிப்படுத்தன்மை கொண்டிருந்தது, தனிப்பட்ட

சொந்தப் பிரச்சினைகள் குறித்த விவாதங்களில் காலனியாட்சி அதிகாரிகளை வற்புறுத்துவதற்காக அவர்களால் பயன்படுத்தப்பட்டது. வட மேற்கு ஆசியா ருஷ்யாவுடன் இணைக்கப்பட்ட காலப் பகுதியில் ஆங்கில-ருஷ்ய முரண்பாடுகள் ஒரேயடியாகக் கூர்மை அடைந்திருந்த போது தாஷ்கந்தில் இருந்த ருஷ்ய நிர்வாக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள ஒரு சில சமஸ்தான மன்னர்கள் முயன்றார்கள் (உதாரணமாக, காச்மீர மன்னன் 1865லும் 1870லும், இந்தூர் மன்னன் 1867லும் குவாலியர் மன்னன் 1879லும் ஜெய்பூர் மன்னன் 1880லும்). ஆனால் பிரிட்டிஷ் காலனிகளின் உள்விவகாரங்களில் தலையிடாமைக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த ஜார் அரசாங்கம் எச்சரிக்கையுள்ள நிலையை மேற்கொண்டிருந்தது. முக்கியமாக இந்தக் காரணத்தால் மேற்கண்ட முயற்சிகள் பலிக்காது போயின.

எதிர்ப்பு மனப்பான்மை கொண்டிருந்த சமஸ்தான மன்னர்கள் காலனியாட்சி அதிகாரிகளால் பல்வேறு சாக்குக்கள் காட்டி அகற்றப் பட்டார்கள் (உதாரணமாக, பரோடா மன்னன் 1875லும் காச்மீர மன்னன் 1889லும் நீக்கப்பட்டார்கள்), அல்லது பல விதச் சலுகைகளால் ''சமாதானப்படுத்தப்பட்டார்கள்.'' காட்டாக, போர்த் தந்திர முக்கியத்துவம் உள்ள, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த குவாலியர்க் கோட்டை 1886ல் குவாலியர் மன்னனுக்குத் திருப்பித் தரப் பட்டது. அது வரை அங்கு ஆங்கிலக் காவற்படை வைக்கப்பட்டிருந்தது. மைசூரை மன்னன் பெயரால் ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலம் ஆங்கில அதிகாரிகள் ஆண்டு வந்தார்கள். பின்னர் அங்கு வட்டார மகாராஜாவின் ஆட்சி மீண்டும் நிலைநாட்டப்பட்டது.

ஆனால் தனித் தனிப் பூசல்களும் பிணக்குகளும் சமஸ்தான மன்னர்களுக்கும் காலனியாட்சி அதிகாரிகளுக்கும் இடையே நிலவிய உறவுகளை ஆழ்ந்த முறையில் சிறிதும் பாதிக்கவில்லை. மானியக்காரச் சிற்றரசர்கள், நிலப்பிரபுக்கள் ஆகியோர் விஷயத்தில் பிரிட்டிஷ் காலனி ஆட்சியாளர்கள் 19ம் நூற்றாண்டின் பிற்பாதியில் கடைப் பிடித்த கொள்கை அவர்களோடு கூட்டை விரிவாக்கி வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. நில உறவுகள், வரி விதிப்பு முறை ஆகியவற்றின் துறையில் காலனி ஆட்சியாளர்கள் கடைப் பிடித்த கொள்கை இதற்கு உதவியது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 1860-90க்களில்

பிரிட்டன் முதலாளித்துவத்தின் இறுதிக் கட்டமான ஏகாதிபத்தியத்துக்கு மாறுவதைக் காட்டிய அடையாளங்கள் அதன் பொரு

ளாதார, அரசியல் அமைப்பில் 1860க்கள் முதல் நாளுக்கு நாள் துலக்கமாகத் தென்படலாயின. ஆட்சித் தலைமை நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாக இந்தியாவைக் காலனியாட்சிக்கு அடிப்படுத்தவும் சூறையாடவுமான புதிய வடிவங்களும் முறைகளும் தோன்றின. 19ம் நூற்றாண்டின் 50-70க்களில் ஆங்கிலேயரால் பெரும் அளவுகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலவரி நடவடிக்கைகள் புதிய வரலாற்று நிலைமைகளில் ஆங்கிலக் காலனி ஆட்சியாளர்களின் அதிகாரத்தை வலுப்படுத்துவதையும் இந்தியாவை இன்னும் அதிகமாகச் சுரண்டுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தன.

ஆங்கிலேயரின் நிலவுடைமைக் கொள்கை. நிலத்தின் மீது காலனி ஆட்சியாளர்-நிலப்பிரபுக்களின் ஏகபோக உரிமை

70க்களின் முடிவு வாக்கில் ரயத்துவாரி, தாற்காலிக ஜமீன்தாரிப் பிரதேசங்களில் நில அளவீடும் புதிய நிலவரி விதிப்பும் செய்யப்பட்டன. அப்போது நிலப்பிரபுக்களின் வெவ்வேறு குழுவினருக்குத் தனி நிலச் சொந்தக்காரர்களின் உரிமைகள் முடிவாகச் சட்டத்தில் பதிவு செய்யப்பட்டன. 19ம் நூற்றாண்டின் முற்பாதியிலேயே தொடங்கப் பட்ட நிலவரி முறைச் சீர்திருத்தம் இந்தக் காலப் பகுதியில் நிறைவுற்றது.

அண்மையில் கிளர்ச்சி நடந்த பிரதேசங்களில் நில உறவுகளை முறைப்படுத்துவதில் காலனியாட்சி அதிகாரிகள் தனிப்பட்ட கவனம் செலுத்தினர்கள். அயோத்தித் தாலுகாதார்களிடமிருந்து கிளர்ச்சியின் போது அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்ட மொத்தம் 23,522 கிராமங்களில் 23,157 அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப் பட்டன. நில சொந்தக்காரர்கள் என்ற வகையில் அவர்களுடைய உரிமைகள் 1869லும் 1870லும் பிறப்பிக்கப்பட்ட தனிச் சட்டங்களால் நீதிமன்ற நோக்கில் பதிவு செய்யப்பட்டன.

நிலப்பிரபுக்களின் நிலவுடைமை உரிமையை நிலைப்படுத்திய பின்னர், கிளர்ச்சியில் செயல்முறைப் பங்கு எடுத்துக் கொண்ட கிராம சமுதாயத் தலைவர்களின் நலன்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்வது காலனியாட்சி அதிகாரிகளுக்கு அவசியம் ஆயிற்று. நிலவரி விதிப்பு செயல்படுத்தப்பட்ட போது கிராம சமுதாயத் தலைவர்களும் வட மேற்கு மாநிலங்களிலும் அயோத்தியிலும் இனாம்தார்களும் நிலப்பிரபுத்துவத் துணை உடைமையாளர்கள்—குத்தகைக்

கார விவசாயிகளுக்கும் ஜமீன்தார்கள், தாலுகாதார்களான நிலப் பிரபுக்களுக்கும் இடையிலுள்ள தரகர்கள்—என்ற அந்தஸ்து அளிக்கப் பெற்றார்கள்.

நிலப்பிரபு உடைமையாளர்களின் வெவ்வேறு குழுக்களுக்கு இடையே உடைமை உரிமைகள் ஓரளவு துண்டுகளாகப் பிரிந்திருந்ததை ஆங்கிலேயர்கள் நிலைப்படுத்தியதன் நோக்கம் காலனியாட்சி அதிகாரத்தின் சமுதாய அடித்தளத்தை விரிவாக்கி வலுப்படுத்துவது ஆகும்.

காலனியாட்சி அதிகாரிகளின் நிலவுடைமைக் கொள்கை பெருத்த உள் முரண்பாடுகள் கொண்டிருந்தது. ஒரு புறம், 18ம் நூற்றாண்டின் இறுதி முதல் ஆங்கிலேயர் செயல்படுத்தி வந்த நிலவரி மாற்றங்கள் கிராம சமுதாய நிலவுடைமை, நிலப் பயன்பாட்டு அமைப்பைக் குலைத்து நிலப்பிரபுக்களின் தனியார் உடைமையும் விவசாயிகளின் பகுதி நில உடைமையும் (ரயத்துவாரிப் பிரதேசங்களில்) நிலை பெறும் நிகழ்முறை நிறைவடைய உதவின. மறு புறம், நிலவரி வசூலிப்பு முறையில் அரசு நிலவுடைமையின் மீதமிச்சங்களை அப்படியே வைத்திருந்ததும் நிலத்தைப் பண்ணை முறையில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களைச் சட்ட மூலம் குறுக்கியதும் (உதாரணமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் 50-80க்களில் பிறப்பிக்கப்பட்ட குத்தகைச் சட்டங்கள் புறநிலையாக இந்த நோக்கம் கொண்டிருந்தன) இந்தியாவின் நிலவுடைமை அமைப்பை நிலப்பிரபுத்துவ உடைமையினது சிதைவின் இறுதிக் கட்டத்துக்கு முந்திய மட்டத்தில் நிலைப்படுத்த ஏற்ற நிலைமைகளை உருவாக்கின.

ஜமீன்தார் வகையான நிலப்பிரபுக்களின் நிலவுடைமை உரிமையை நிலைப்படுத்திய பின் காலனியாட்சி அதிகாரிகள் பஞ்சாபில் முன்பு இருந்த கிராம சமுதாயத்தின் தலைமை வட்டாரத்தினருடைய நலன்களையும் கருத்தில் கொள்ள வேண்டியதாயிற்று. ஆகவேதான் பஞ்சாபின் நிலப்பிரபுத்துவ நில உடைமையாளர்களின் தலைமைக் குழுக்கள் (உதாரணமாகத் தாலுகாதார்களும் ஆலா-மாலிக்குகளும்) அரசாங்க உதவிச் சம்பளம் பெறுவோர் ஆகி விட்டார்கள். நிலவரிச் சலுகை பெற்ற நிலப்பிரபுத்துவ நில உடைமையாளர் (ஜாகீர்தார்கள், இனாம்தார்கள்) குழுக்களின் உடைமை உரிமைகள் தீர்மானிக்கப் பட்ட போது அவர்களுடைய உடைமை குறைக்கக்கூடப் பட்டது.

சில மாநிலங்களில் ஜாகீர்தார்கள் இனாம்தார்கள் போலவே குறைந்த விகிதங்களில் வரி செலுத்தும் சலுகையாளர் வகையைச் சேர்ந்த நில உடைமையாளர்களாக மாறிவிட்டார்கள் (உதாரணமாக, பம்பாயிலும் பீராரிலும்). சிந்து மாநிலத்தில் ஜாகீர்தார்கள் (முன்பு நிபந்தனைக்குட்பட்ட மானியம் பெற்றவர்கள்) அவர்களிடம்

இருந்த நிலப் பகுதிகளின் சொந்தக்காரர்களாக ஆங்கிலேயர்களால் உரிமை அளிக்கப்பட்டார்கள். ஆயினும் பெரும்பாலான ஜாகீர்தார்களும் நிலப்பிரபுக்களின் வேறு சில குழுவினரும் நிலவரி வசூலிப்பில் பங்கு கொள்வதிலிருந்து படிப்படியாக நீக்கப்பட்டார்கள். இது மட்டும் இன்றி, இனாம்களையும் ஜாகீர்களையும் பற்றிய கமிஷன்களது விசாரணையின் போது ஒரு சில இனாம்தார்களும் ஜாகீர்தார்களும் தங்கள் நில, பண மானியங்களை இழந்தார்கள். 1857-1859 கிளர்ச்சியின் போது எந்தப் பிரதேசங்களில் காலனி ஆட்சி அமைப்புக்கு ஆகக் குறைந்த அளவு சோதனை ஏற்பட்டதோ, அதனால் எங்கே மற்ற இடங்களை விட அதிக நிலையாய் இருப்பதாகக் காலனி ஆட்சியாளர்கள் உணர்ந்தார்களோ அங்கே (பஞ்சாப், சிந்து, மேற்கு, தெற்கு இந்தியா) இது சர்வ சகஜமான நிகழ்ச்சியாக இருந்தது. பம்பாய் மாகாணத்தில் இனாம்களதும் ஜாகீர்களதும் எண்ணிக்கை சிறப்பாகக் குறைந்து விட்டது. இனாம்தார்களுடையவும் ஜாகீர்தார்களுடையவும் நிலவுடைமைகள் குறைக்கப்பட்டது சிறு, நடுத்தர மராட்டிய நிலப்பிரபுக்கள், நிலச் சொந்தக்கார அறிவுஜீவிகள் ஆகியோரிடையே 19ம் நூற்றாண்டின் கடைசி முப்பது ஆண்டுகளில் அதிருப்தியும் எதிர்ப்பு மனப்பான்மையும் பரவியதற்கு ஒரு காரணம் ஆயிற்று.

ஆங்கிலக் காலனி ஆட்சியாளர்கள் பெரு நிலப்பிரபுக்களின் நில உடைமைகளை நிலைப்படுத்தியதோடு நிற்கவில்லை. 1860ம் ஆண்டு மத்திய மாநிலங்களின் பெரும் பகுதி நிலப்பரப்பில் ஜமீன்தார்கள், தாலுகாதார்கள் முதலியோர் போன்ற பழைய நிலப்பிரபுத்துவ உயர்குடிப் பிரதிநிதிகள் மட்டும் இன்றி, மால்குஜாரி எனப்பட்ட நிலவரி வசூலுக்கு அரசாங்கத்துக்குப் பொறுப்பாளர்களாக இருந்த நபர்களும் நிலத்தின் மீது உடைமை உரிமை பெற்றார்கள். ஆங்கிலேயர் வென்று கைப்பற்று முன் இவர்களில் பெரும்பாலோர் கிராம சமுதாயங்களின் மூப்பர்களாகவோ வரிக் குத்தகையாளர்களாகவோ இருந்தார்கள். இவ்வாறு, தற்போது தமக்குச் சொந்தமாகி விட்ட நிலத்தின் பெரும் பகுதி மீது நிலப்பிரபுத்துவக் காலப் பகுதியில் பெயரளவுக்குக் கூட உடைமை உரிமை பெற்றிராத நபர்களைக் கொண்டு நிலப்பிரபுக்கள் வர்க்கத்தின் புதிய வட்டாரம் உருவாக ஆங்கிலக் காலனி ஆட்சியாளர்கள் இந்தியாவின் இந்தப் பிரதேசங்களில் வாய்ப்பு அளித்தார்கள். நிலத்தின் மீது காலனி ஆட்சியாளர்-நிலப்பிரபுக்களின் ஏகபோக உரிமை 19ம் நூற்றாண்டின் பிற்பாதியில் முடிவாக உருவாகி விட்டது.

மூலப் பொருள் விளைநிலம், விற்பனைச் சந்தை என்ற வகையில் இந்தியாவின் சுரண்டல் தீவிரமாகிறது. சரக்கு-பண உறவு வளர்ச்சி

காலனி ஆட்சியாளர்களின் ஆதாரமான இந்திய நிலப்பிரபுக்கள் வர்க்கத்தைப் பொருளாதார நோக்கில் வலுவாக்குவது இன்றியமையாததாக இருந்தது மட்டுமே ஆங்கிலேயரின் நிலவுடைமைக் கொள்கைக்குக் காரணமாக இருக்கவில்லை. காலனி ஆட்சியாளரால் இந்தியா சுரண்டப்படுவதற்கான முறையில் மாறுதல்கள் ஏற்பட்டதும் இதற்குக் காரணமாக இருந்தது. மூலப் பொருள் விளைநிலம், விற்பனைச் சந்தை என்ற முறையில் இந்தியா சுரண்டப்பட்டது காலனி ஆட்சியாளரால் அது சூறையாடப்படுவதன் முக்கிய வடிவமாக 50-60க்களிலேயே நிலை பெற்று விட்டது. முதலாளித்துவ பிரிட்டனின் விவசாய மூலப் பொருள் துணை நிலம் என்ற வகையில் இந்தியாவின் சுரண்டலைத் தீவிரப்படுத்துவதற்கு விவசாய விளைச்சல் பெருக, சிறப்பாக விற்பனைச் சரக்கு உற்பத்தி உயர அதிகச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்துவது அவசியமாய் இருந்தது. இதற்கு நிலத்தின் மீது தனியார் உடைமை உரிமையை நிலை நிறுத்துவது தேவைப்பட்டது.

இந்தியாவை பிரிட்டனின் விவசாய மூலப் பொருள் துணை நிலமாக மாற்றும் செயல் 19ம் நூற்றாண்டின் பிற்பாதியில் பெரும்பாலும் நிறைவு பெற்றது. ''உலகத் தொழிற் கூடம்'' என்ற பாத்திரத்தை பிரிட்டன் நாளடைவில் இழந்தது, ஆப்பிரிக்காவிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் ஓஷனியா எனப்படும் பசிபிக் மாகடல் தீவுகளிலும் பிரெஞ்சுக்காரர்களும் ஜெர்மானியர்களும் தங்கள் ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தியதால் ஆகப் பெரிய காலனியாட்சி வல்லரசு என்ற முறையில் பிரிட்டனின் நிலை குறுகியது ஆகியவற்றின் விளைவாகப் பிரிட்டனுடைய பொருளாதாரத்தின் வளர்ச்சியில் இந்தியாவினது முக்கியத்துவம் அதிகரித்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் அறுபதுக்களில் பிரிட்டிஷ் முதலாளிகள் இந்தியாவிலிருந்து தங்கள் நாட்டிற்கு மூலப் பொருள்களின், முதன்மையாகப் பஞ்சின் ஏற்றுமதியை ஒரேயடியாக அதிகமாக்கியதன் விளைவாகப் பஞ்சுக்கு ஏற்பட்ட திடீர்க் கிராக்கி இந்த நிகழ்முறைக்குத் துணை செய்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்நாட்டுப் போர் (1862-1865) நடந்தமையால் ஐரோப்பியச் சந்தைக்கு அமெரிக்கப் பஞ்சின் ஏற்றுமதி குறைந்தது. எனவே இந்தியப் பஞ்சுக்குக் கிராக்கி உடனே அதிகம் ஆயிற்று. பிரிட்டனில் இறக்குமதி செய்யப்பட்ட மொத்தப் பஞ்சில் இந்தியப் பஞ்சின் ஒப்பு விகிதம் 1860-1868ல் மும்மடங்கு ஆயிற்று. இந்தியா பிரிட்டனுக்குப் பஞ்சு சப்ளை செய்யும் பிரதான நாடு ஆகிவிட்டது.

முதன்மையாக ஏற்றுமதியின் தேவை காரணமாக இந்தியாவில் பருத்தி விளைச்சல் அதிகம் ஆயிற்று. 1860க்களில் மத்திய இந்தியாவும் மேற்கு இந்தியாவும் (பம்பாய், சிந்து, ராஜபுதனம், மத்திய இந்தியச் சமஸ்தானங்கள், பீரார், மத்திய மாநிலம், ஹைதராபாது ஆகியவை) ஏற்றுமதியின் பொருட்டு விற்பனைச் சரக்கு வடிவில் பருத்தி விளைநிலங்களாக மாறிவிட்டன.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்நாட்டுப் போர் முடிந்ததும் பஞ்சுக்கு ஏற்பட்டிருந்த திடீர்க் கிராக்கி தீர்ந்து இந்தியப் பஞ்சின் விலைகள் சரிந்தன. ஆனாலும் நாட்டில் பருத்தி விளைச்சல் அதிகரிப்பு தொடர்ந்தது. 1870-90க்களில் பஞ்சாபிலும் சிந்து மாநிலத்திலும், சிறப்பாகப் பாசன வசதி பெற்ற நிலங்களில், புதிய பருத்திக் கேந்திரம் உருவாகலாயிற்று. இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நடந்த வர்த்தகத்தின் வளர்ச்சி பிரிட்டிஷ் தொழில் துறைக்கும் இந்திய விவசாயத்துக்கும், பிரிட்டனின் நகரங்களுக்கும் இந்தியாவின் கிராமங்களுக்கும் இடையே அடுத்து வந்த உழைப்பும் பிரிவினை நிகழ்முறையைக் காட்டியது.

19ம் நூற்றாண்டின் 60க்கள் முதல் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் இந்தியாவிலிருந்து விவசாய மூலப் பொருள்களை ஏற்றிச் செல்லத் தொடங்கியது. இந்தியா ஏற்றுமதி செய்த முக்கியப் பொருள்கள் பஞ்சு, கம்பளி, சணல், தென்னை நார், அரிசி, கோதுமை, எண்ணெய் விதைகள், மசாலைப் பொருள்கள், நீலம், அபினி ஆகியவை. மொத்த ஏற்றுமதியில் பெரும் பகுதி (காட்டாக, பஞ்சில் 80 சதவிகிதம்) பிரிட்டனுக்குச் சென்றது. இந்தியா இங்கிலாந்துக்கு உணவுப் பண்டங்கள் வழங்கும் பிரதான நாடு ஆயிற்று. இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான சரக்குகளின் மொத்த விலை 1860-190க்களில் மும்மடங்கு ஆகிவிட்டது.

விற்பனைச் சந்தை என்ற வகையிலும் இந்தியா சுரண்டப்படுவது அதிகரித்துக் கொண்டு போயிற்று. இந்தக் காலப் பகுதியில் இந்தியாவுக்கு பிரிட்டிஷ் சரக்குகளின் ஏற்றுமதி ஐந்து மடங்கு பெருகிற்று. இந்தியாவில் இறக்குமதியான முக்கியப் பொருள்கள் துணிகளும் உலோகப் பாத்திரங்களும் தட்டு முட்டுச் சாமான்களும் வேறு நுகர்வுப் பண்டங்களும் ஆகும்.

இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் காலனித் தன்மை பின்வரும் விவரங்களில் காணப்படும்: 1879ம் ஆண்டு செய்பொருள்கள் இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 3 சதவிகிதமே இருந்தன, ஆனால் மொத்த இறக்குமதியிலோ அவற்றின் பங்கு 65 சதவிகிதமாக இருந்தது. அதே சமயம் இந்தியாவின் காலனியாட்சிச் சுரண்டல் அமைப்பில் நாட்டின் உழைப்பாளி மக்கள், முதன்

மையாக விவசாயிகள், வரிகள் மூலம் சுரண்டப்படுவது தொடர்ந்து கணிசமான பங்கு ஆற்றி வந்தது.

1860க்களின் நடுவில் நாட்டுப்புற மக்கள் மீது புதிய வரிகள் விதிக்கப்பட்டன. நிலவரி விகிதங்கள் அதிகரிக்கத் தொடங்கின. தவிர, காலனியாட்சி நிர்வாக அதிகாரிகள் தாங்களே கூறியது போல, ''நிலம் வைத்திருந்தவர்களிடமிருந்து நிலவரி நல்ல விளைச்சல் உள்ள ஆண்டுகளிலும் சரி, விளைச்சல் பொய்த்துப்போன ஆண்டுகளிலும் சரி, கறாராக வசூலிக்கப்பட்டது.''

பிரிட்டிஷ் காலனியாட்சி அரசின் வருவாய்களுக்கான தலையூற்றுக இருந்தது நேர்முக, மறைமுக வரி விதிப்பே. இந்த அரசின் வருமானம் 1859ல் 3610 லட்சம் ரூபாய்களாக இருந்தது, 1890ல் 8510 லட்சம் ரூபாய்கள் வரை அதிகரித்து விட்டது. வரிச் சுமையின் அதிகரிப்பு இந்தியா விவசாய-மூலப் பொருள் துணை நிலம் ஆகிவிட்டதைக் காட்டியது. வரிகள் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தால் இந்திய விவசாயி தன் பண்ணையின் விளைச்சலில் பெரும் பகுதியைச் சந்தையில் விற்க நேர்ந்தது. இந்தியாவிலிருந்து விவசாய மூலப் பொருள்களை வாரிச் செல்வது ஆங்கிலேயர்களுக்கு எளிதாகும் படியான நிலைமைகள் இவ்வாறு உருவாயின.

உலகத் தானிய விற்பனை வளர்ச்சியின் தன்மையை விளக்குகையில், ருஷ்யாவிலும் இந்தியாவிலும் விவசாயிகள் ''தங்கள் விளைச்சலின் ஒரு பகுதியை, அதிலும் வர வர அதிகரிக்கும் பகுதியை, வரிகள் செலுத்தத் தேவையான பணத்தைச் சேகரிப்பதற்காக விற்க வேண்டி வந்தது. இந்த வரிகள் அரசின் இரக்கமற்ற வல்லாட்சியால் மிக அடிக்கடி சித்திரவதைகள் மூலம் அவர்களிடமிருந்து வசூலிக்கப் பட்டன''* என்று கார்ல் மார்க்ஸ் சுட்டிக் காட்டினார்.

காலனியாட்சிச் சுரண்டலின் பழைய முறைகள், புதிய வரலாற்றுக் காலப் பகுதி தொடங்கியதும், ஆட்சித் தலைமை நாட்டின் தேவைகளுக்காக மூலப் பொருள்களை வாரிச் செல்வது என்ற புதிய குறிக்கோளுக்கும் இவ்வாறு பயன்படலாயின.

மூலப் பொருள்களின் விலைநிலம், இயந்திரத் தொழில் பொருள்களுக்கான விற்பனைச் சந்தை என்ற வகையில் இந்தியா சுரண்டப்படுவது தீவிரம் ஆனதன் விளைவாக இந்திய நகரங்களிலும் சரி, கிராமங்களிலும் சரி, சரக்கு-பண உறவுகள் மேற்கொண்டு வளர்ச்சி அடைந்தன. முதலாளித்தவ அமைப்பு உருவாகிக் கொண்டிருந்த காலப்பகுதியில் சாதாரணச் சரக்கு உற்பத்தி வளர்ச்சி அடைந்ததால் விவசாய,

---

* கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 25, பாகம் 2, பக்கம் 282.

கைத்தொழில் உற்பத்தியில் வர்த்தக, வட்டித் தொழில் மூலதனம் மேலும் புகுவதற்கு வாய்ப்பான நிலைமைகள் ஏற்பட்டன.

நிலப்பிரபுத்துவ இந்தியாவிலேயே, நாட்டின் வர்த்தக, வட்டிக் கடன் நடவடிக்கைகளில் ஏகபோக உரிமை பெற்றிருந்த வர்த்தகர்-வட்டித் தொழிலர் சாதிகளின் பிரதிநிதிகள் (பனியாக்கள், மார்வாடிகள் முதலியோர்) ஏற்றுமதிக்கான ஒற்றைப் பயிர் விளைவித்த புதிய பிரதேசங்களுக்கு, சிறப்பாகப் பஞ்சாப், மேற்கு இந்தியா, மத்திய இந்தியா ஆகியவற்றுக்கு விரைந்தார்கள். ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகம் நடத்திய பெரிய ஆங்கில அல்லது இந்திய மொத்த வியாபாரியிலிருந்து நுகர்வோனும் சரக்கு விளைவிப்பவனுமான இந்திய விவசாயி, கம்மியன் வரையில் உள்ள சரக்குப் பரிமாற்றத் தொடர் அமைப்பில் இந்திய வர்த்தக-வட்டித் தொழில் மூலதனம் அடி அல்லது நடுக் கணுவாக இருந்தது.

இந்திய வர்த்தகர்களிடமும் வட்டித் தொழிலர்களிடமும் நிதி மூலதனம் குவிந்ததால் இரண்டு முக்கியமான சமுதாய-பொருளாதார விளைவுகள் ஏற்பட்டன. வர்த்தகர்-வட்டித் தொழிலர் சாதியினர் நில உடைமையாளர்கள் ஆனது ஒன்று. தேசிய இயந்திரத் தொழில் அமைவதற்கு ஏற்ற நிலைமைகள் உரு ஆனது மற்றொன்று.

விவசாயிகள் பட்ட வட்டிக் கடன்களின் அதிகரிப்பும் அவர்கள் நிலத்தை இழந்ததும்

ரயத்துவாரிப் பிரதேசங்களில் நிலவரி விதிப்பின் மறு பரிசீலனையும் விகித மாற்றமும் 1857-1859லேயே தொடங்கி இருந்தன. 60-70க்களில் இவை நிறைவு பெற்றன. புதிய நில அளவீடு செய்யப்பட்ட போது ரயத்துக்களின் தனி உடைமை உரிமை இறுதியாகச் சட்டத்தில் பதிவு செய்யப்பட்டது.

சரக்கு-பண உறவுகளின் வளர்ச்சி அதிகரித்து வந்த நிலைமைகளில் நிலத்தின் மீது தனியார் உடைமை உரிமை நிலைபெற்றதன் விளைவாக நிலம் விலை மதிப்பு உள்ளதாகிச் சந்தைச் சரக்குக் கொடுக்கல் வாங்கலில் தீவிரமாக ஈடுபடுத்தப்படலாயிற்று. நிலத்தின் விலை மளமளவென்று ஏறி, விவசாய விளைபொருள்களின் பொது விலையேற்றத்தை விஞ்சிவிட்டது. நாட்டில் முதலாளித்துவத் தொழில் முயற்சி வளர்ச்சி அடையாதிருந்த நிலையில் நிலத்தை விலைக்கு வாங்குவது வர்த்தக-வட்டித் தொழிலர்களிடமும் நிலப்பிரபுக்களிடமும் குவிந்திருந்த பணத்தை முதலீடு செய்வதற்கு எல்லாவற்றிலும் லாபகரமான வழிவமாக இருந்தது.

நிலம் வட்டித் தொழிலரின் கடனுக்கு எல்லாவற்றிலும் மேலான வகை உத்தரவாதமாக மதிக்கப்பட்டது. எனவே வர்த்தகர்களும் வட்டித் தொழிலர்களும் நிலப்பிரபுக்களும் விவசாயிகளின் நில சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கு நில அடைமானத்தின் பேரில் கடன் கொடுப்பதை முக்கிய வழியாகக் கொண்டார்கள்.

எடுத்துக்காட்டாக, வட மேற்கு மாநிலங்களில் 1840க்கள் முதல் 70க்களின் தொடக்கம் வரை ''நிலச் சொந்தக்காரர் அல்லாதவர் கள்'' கைகளுக்கு ஏறத்தாழப் பத்து லட்சம் ஏக்கர் நிலம் வந்து விட்டது. நில உடைமையில் அவர்களுடைய பங்கு 10லிருந்து 27 சதவிகிதமாக அதிகரித்தது. பஞ்சாபில் 60க்கள் முதல் 70க்களின் தொடக்கம்வரை வர்த்தகர்களும் வட்டித் தொழிலர்களும் விற்ற மொத்த நிலத்தில் 45 சதவிகிதத்தை உடைமையாகக் கொண்டிருந்தார்கள். விவசாயிகளின் நில இழப்பு மகாராஷ்டிரத்தில் சிறப்பாகத் தீவிர மாக நிகழ்ந்தது. உதாரணமாக அங்கே சதாரா மாவட்டத்தில் 1870க்களின் இறுதிக்குள் மொத்த உழவு நிலத்தில் சுமார் மூன்றில் ஒரு பகுதி வட்டித் தொழிலர்களிடம் போய்விட்டது.

இவ்வாறு ரயத்துவாரிப் பிரதேசங்களிலும் பஞ்சாபிலும் நிலப் பிரபுக்கள் தவிர வர்த்தக-வட்டித் தொழிலர்கள் வட்டாரத்தைச் சேர்ந்த நிலச் சொந்தக்காரர்களும் தோன்றி விட்டார்கள்.

நிலம் வட்டித் தொழிலர்கள், வர்த்தகர்கள், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் கைகளுக்கு மாறிவிட்டதனால் இந்திய வேளாண்மையின் பொருளாதார அடிப்படை மாறிவிடவில்லை. தன் சொந்த நிலப் பகுதியின் சொத்துரிமையை இழந்து விட்ட விவசாயி தனி பூட்டும் சிறு விவசாயக் குத்தகையின் மோசமான நிலைமைகளில் அதைத் தொடர்ந்து பண்படுத்தி வந்தான். குத்தகை நிலத்தின் பரப்பும் குத்தகைக்கார விவசாயிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தன. அதே சமயம் நிலக் குத்தகையை முக்கிய வருவாயாகக் கொண்ட நபர் களின் எண்ணிக்கையும் மிகுந்து கொண்டு போயிற்று. நிலப்பிரபு வர்க்கத்தைச் சேர்ந்தவர்களின் தொகையும் அதிகரித்தது (மக்கள் தொகைக் கணக்கின் படி 1881லிருந்து 1891 வரை 25 லட்சத்தி லிருந்து 40 லட்சமாகப் பெருகியது).

19ம் நூற்றாண்டின் 40-60க்களில் விவசாயிகளின் அதிருப்தி வளர்ந்ததாலும் சிறப்பாக 1857ம்-1859ம் ஆண்டுகளில் நடந்த கிளர்ச்சி காரணமாகவும் காலனி ஆட்சியாளர்கள் 60-80க்களில் வங் காள மாகாணத்திலும் வட மேற்கு மாநிலங்களிலும் பஞ்சாபிலும் மத்திய மாநிலங்களிலும் குத்தகைச் சட்டங்கள் பிறப்பித்தார் கள். நிலச் சொந்தக்கார ஜமீன்தார்களால் குத்தகைக்காரர் களின் சலுகை பெற்ற குழுக்கள் நிலப்பிரபுத்துவச் சுரண்டலுக்கு

உள்ளாக்கப்படுவதை இந்தச் சட்டங்கள் எழுத்தளவில் வரையறை செய்தன. நடப்பிலோ நிலப்பிரபுக்கள் எல்லா இடங்களிலும் விவசாயிகளிடமிருந்து விலைச்சலில் பாதிக்கு அல்லது இன்னும் அதிகத்துக்கு ஈடான குத்தகையைக் கறந்தார்கள். போதாக்குறைக்கு விவசாயிகள் நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு உரிய பற்பல சக்காத்து வேலைகள் வேறு செய்து வந்தார்கள்.

இந்திய விவசாயிகளின் அதிருப்தியைக் குறைக்கும் நோக்கத்துடன் காலனி ஆட்சியாளர்களால் பிறப்பிக்கப்பட்ட குத்தகைச் சட்டங்கள் நடப்பில் விவசாயிகளைச் சுரண்டுவதற்கான நிலப்பிரபுத்துவ நிலச் சொந்தக்காரர்களின் முறைகளை நிலைப்படுத்தவே செய்தன. அதே சமயம் குத்தகைக்காரர்களின் உயர் வட்டாரத்தினருக்கு வாரிசு வழியில் குத்தகை பெறும் உரிமைகள் சட்டப்படி அளிக்கப்பட்டதும் இந்த உரிமைகள் விலைக்கு வாங்கவும் விற்கவும் உரிய விஷயங்களாக மாற்றப்பட்டதும் குத்தகையின் அதிகரிப்பு ஓரளவு குறுக்கப்பட்டதும், அது பண்ட வடிவிலிருந்து பண வடிவுக்கு மாற்றப்பட ஊக்கம் அளிக்கப்பட்டதும் பணக்கார விவசாயிகள் வட்டாரம் உருவாக வாய்ப்பு அளித்தன. திரளான விவசாயிகள் மேலும் மேலும் சீரழிவுக்கு உள்ளான நிலைமைகளில் இந்த நிகழ்ச்சி விவசாயிகளின் வர்க்க வகைப்பட்ட அடுக்கமைவு ஏற்படத் தேவையான முதனிலைகளை உருவாக்கியது.

உடைமை நோக்கில் விவசாயிகளின் ஏற்றத்தாழ்வு நிலப்பிரபுத்துவக் கிராம சமுதாயத்தின் கருவிலேயே தொடங்கியிருந்தது. இப்போது நிலம் விவசாயித் தலைவர்களதும் நிதி மூலதன அதிபர்களதும் கைகளுக்கு மாறியதனால் இந்திய விவசாயத்தில் முதலாளித்துவ உறவுகளின் வருங்கால வளர்ச்சிக்கு ஏற்ற நிலைமைகள் உருவாகி இருந்த தருணத்தில் இந்த ஏற்றத்தாழ்வு புதிய சமுதாய-பொருளாதார அடிப்படையில் நிகழ்ந்தது. நிலப்பிரபுத்துவச் சமூகத்தில் உள்முரண்பாடுகள் மேற்கொண்டு கூர்மைப்பட்டதற்கு இது முக்கியக் காரணமாக இருந்தது.

ஆங்கில முதலாளி வர்க்கம் காலனிச் சுரண்டலின் புதிய முறைக்கு—மூலதன ஏற்றுமதி வாயிலாகச் சுரண்டும் முறைக்கு—மாறியது இந்தியப் பொருளாதாரத்தில் முதலாளித்துவ முறை வளர்ச்சி அடைவதைச் சாத்தியம் ஆக்கிற்று.

இந்தியா ஆங்கில மூலதன முதலீட்டுப் பிரதேசம்

19ம் நூற்றாண்டின் நடுவில் இந்தியா பிரிட்டிஷ் மூலதனம் முதலீடு செய்யப்படுவதற்கான பிரதேசம் ஆயிற்று. இந்தியாவில்

பிரிட்டிஷ் முதலீட்டுக்குரிய முதலாவது பெரிய இலக்காக இருந்தவை இருப்புப் பாதைகள். மூலப் பொருள் விளைநிலம், விற்பனைச் சந்தை என்ற முறையில் இந்தியாவைப் பயன்படுத்துவதற்கு நவீனப் போக்குவரத்து, தகவல் தொடர்புச் சாதனங்கள் தேவைப்பட்டன. 1860—90க்களில் இருப்புப் பாதைகளின் நீளம் 1300லிருந்து 25,600 கிலோமீட்டர்களாக அதிகரித்தது. இருப்புப் பாதைகளின் வலைப்பின்னல் பிரதானத் துறைமுகங்களிலிருந்து விசிறி வாகில் நாட்டின் உட்பகுதிகளுக்குச் சென்று இந்தியாவில் ஆங்கிலேயர் களின் முக்கியமான ஆதாரத் தளங்களை இணைத்தது. முதன்மையாக இராணுவ-போர்த்தந்திர நோக்கங்களுக்காகவே இந்தப் பாதைகள் போடப்பட்டன.

இருப்புப் பாதைக் கட்டுமானம் பிரிட்டிஷ் முதலாளித்துவத்தால் இந்தியா அடிமையாக்கவும் சுரண்டவும் படுவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. சரக்குகள் ஏற்றிச் செல்வதற்கான கட்டணங்கள் இதைச் சிறப்பான தெளிவுடன் காட்டின. நாட்டின் உட்பிரதேசங் களை இணைத்த பாதைகளில் கட்டணங்கள் உயர்வாக இருந்தன. உட் பிரதேசங்களிலிருந்து துறைமுகங்களுக்குச் சென்ற பாதைகளிலோ, அவை தாழ்வாக இருந்தன. இவற்றின் மூலம் ஏற்றுமதிச் சரக்குகளை அனுப்புவதற்கு ஊக்கம் அளிக்கவும் நாட்டுக்கு உள்ளே சரக்குக் கொடுக்கல் வாங்கலின் வளர்ச்சி கடினம் ஆக்கவும் பட்டது. அகலப் பாதை, மீட்டர் பாதை, குறுகல் பாதை என்னும் மூன்று வெவ்வேறு வகையான இருப்புப் பாதைகள் போடப்பட்டன. இதனாலும் உள்நாட்டுச் சரக்குப் போக்குவரத்து கிராக்கி ஆயிற்று, ஏனென்றால் வண்டிமாற்றச் சந்திப்பு நிலையங்களில் சரக்குகளை ஒரு வண்டி யிலிருந்து மற்றதற்கு மாற்ற வேண்டியிருந்தது.

இருப்புப் பாதைக் கட்டுமானம் ஆங்கிலத் தொழிலதிபர்களுக்கு உண்மையான ''தங்கச் சுரங்கமாக'' இருந்தது, ஏனெனில் கணக்குப் படி ஆன செலவுகள் என்னவாயினும் ரெயில்வேக் கம்பெனிகளுக்கு அதிகத்திலும் அதிகமான லாபம் கிடைக்கக் காலனியாட்சி அதிகாரி கள் உத்தரவாதம் அளித்தார்கள். பிரிட்டிஷ் கண்டிராக்டர்களின் ஊதாரித்தனத்துக்கு இந்திய வரி செலுத்துவோர் தங்கள் குருதியா லும் வியர்வையாலும் ஈடுகொடுத்தார்கள்.

பிரிட்டிஷ் மூலதன முதலீடுகளுக்கான இரண்டாவது முக்கிய இலக் காக இருந்தது பாசனக் கட்டுமானம். பாசன வசதிகள் ஏற்றுமதிப் பயிர்கள் விளைவிக்கப்பட்ட இடங்களில் கட்டப்பட்டன (உதாரண மாக, சிந்து, பஞ்சாப் மாநிலங்களில். அங்கே ஏற்றுமதிக்கான பருத்தியும் கோதுமையும் விளைவிக்கும் பிரதானத் தளம் அமைக்கப் பட்டிருந்தது). நீர்வரியைப் பயன்படுத்தி ஆங்கிலேயர்கள் பாசனக்

கட்டுமானச் செலவுகளை எல்லாம் இந்திய விவசாயிகளின் பணத்தால் ஈடுகட்டியதோடு, மேற்கொண்டு கொள்ளை லாபம் வேறு திரட்டினர்கள்.

பாசனக் கட்டுமானங்களும் இருப்புப் பாதைகளும் வழக்கமாக ஆட்சித் தலைமை நாட்டின் சொத்துக்களாக இருந்தன.

19ம் நூற்றாண்டின் நடுவில் தோட்டக்கால் வேளாண்மை தனியார் மூலதன முதலீட்டுக்கு எல்லாவற்றிலும் முக்கியமான துறை ஆகி விட்டது. ஆங்கிலக் காலனியாட்சி அரசாங்கம் இந்தியாவில் தேயிலை, காப்பி, ரப்பர்த் தோட்டக்கால்களின் வளர்ச்சிக்கு ஆதரவு அளித்தது. இந்தப் பயிர்களை வளர்க்க ஏற்ற நிலங்களை முழு சொத்தாக விற்றது, அல்லது சாதகமான நிபந்தனைகளின் பேரில் தோட்டக்கால் முதலாளிகளுக்குக் குத்தகைக்கு விட்டது.

தொழிற்சாலை, ஆலைத் துறையிலும் சுரங்கத் துறையிலும் பிரிட்டிஷ் மூலதனம் முதலீடு செய்யப்படலாயிற்று (கல்கத்தாவில் சணல் தொழிற்சாலைகளும் கான்பூரில் நெசவாலைகளும் ஆங்கில முதலாளிகளுக்குச் சொந்தமாய் இருந்தன). இதற்குத் தூண்டியது இருப்புப் பாதைக் கட்டுமானம். தண்டவாளங்களுக்கு உலோகம் தேவைப்பட்டது, எஞ்சின்களுக்கு நிலக்கரி வேண்டி இருந்தது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான சிறு உலோக வார்ப்புத் தொழிற்சாலை கல்கத்தாவில் இயங்கியது. நீராவி எஞ்சின் உலைகளில் எரிக்கப்பட்ட நிலக்கரி இந்தியாவிலேயே எடுக்கப்படலாயிற்று. போடப்பட்ட இருப்புப் பாதைகளைப் பயன்படுத்துவதற்குச் செப்பனிடும் தொழிற்கூடங்களும் இரும்புவார்ப்பு, இயந்திர நிர்மாணத் தொழிற்சாலைகளும் நிறுவுவது தேவைப்பட்டது.

இந்தியா ஏகாதிபத்திய முறைகளால் (மூலதன இறக்குமதியும் மூலப் பொருள் ஏற்றுமதியும்) சுரண்டலுக்கு இலக்கு ஆக்கப்பட்டது வரலாற்று நோக்கில் விதிமுறைக்குப் பொருந்துவதுதான். வி. இ. லெனின் காட்டியதுபோல, ''ஏகாதிபத்தியத்தின் இரண்டு பெரிய சிறப்புத் தன்மைகள் 19ம் நூற்றாண்டின் பாதி முதல் இங்கிலாந்தில் தென்படலாயின. பிரமாண்டமான காலனி ஆட்சிப்பரப்புக்களும் உலகச் சந்தையில் ஏகபோக நிலையும் இவை.''*

காலனியாட்சிச் சுரண்டலின் எல்லாமுறைகளையும்—வரிகள், தொழில் துறைச் சரக்குகளின் இறக்குமதி, மூலப் பொருள்களின் ஏற்றுமதி, மூலதன ஏற்றுமதி ஆகியவற்றைக்—கையாண்டு, பிரிட்டிஷ்

---

* வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 27, பக்கங்கள் 404-405.

ஏகாதிபத்தியம் அடிமை இந்தியாவிலிருந்து பேரளவான காலனிக் கப்பம் திரட்டிச் சென்று வந்தது. இதன் மதிப்பு ஆண்டுக்குப் பத்து கோடிப் பவுண்டு ஆகும். ''நில வாடகைகள், இந்தியர்களுக்கு அறவே தேவையற்ற இருப்புப் பாதைகளிலிருந்து வரும் ஆதாயப் பங்குகள், படையினருக்கும் படைச் சார்பற்ற அதிகாரிகளுக்கும் ஓய்வுச் சம்பளங்கள், ஆப்கானியப் போர்களுக்கும் பிற போர்களுக்கும் ஆன செலவுகள் முதலிய இன்னும் பல வித வடிவங்களில் ஆங்கிலேயர்கள் ஆண்டுதோறும் இந்தியர்களிடமிருந்து பறித்துச் செல்லும் பணம், எந்த வித ஈடும் இல்லாமல் அவர்கள் இந்தியர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளும் பணம், அவர்கள் இந்தியாவின் உள்ளே தங்களுக்கு உரிமைப்படுத்திக் கொள்வதைக் கணக்கில் சேர்க்காமலேயே—அதாவது, இந்தியர்கள் பிரிட்டனுக்கு ஆண்டுதோறும் இலவசமாக அனுப்ப வேண்டி இருக்கும் சரக்குகளின் மதிப்பை மட்டும் எடுத்துக் கொண்டால்—இந்தியாவின் ஆறு கோடி விவசாய, இயந்திரத் தொழில் உழைப்பாளர்களுடைய வருவாயின் மொத்தத் தொகையை விட அதிகம் ஆகும்! இது மெய்யான இரத்தப் பெருக்கு, இது சகிக்க முடியாத கோரம்! பஞ்ச ஆண்டுகள் அங்கே ஒன்றன் பின் ஒன்றுகத் தொடர்கின்றன. அதிலும் பஞ்சம் ஐரோப்பியர்கள் இன்று வரை கற்பனை கூடச் செய்யாத அளவுகளை எட்டிவிடுகிறது!''* என்று கார்ல் மார்க்ஸ் 1881ம் ஆண்டு எழுதினார்.

தேசிய முதலாளித்துவத் தொழில் முயற்சியின் வளர்ச்சி

நாட்டில் பெரிய முதலாளித்துவத் தொழில் நிலையங்கள் (தொழிற் சாலைகள், இருப்புப் பாதைகள், தோட்டக்கால்கள் முதலியன) தோன்றியது தேசிய முதலாளித்துவ வளர்ச்சியைத் தூண்டியது. வியாபாரிகளதும் வட்டித் தொழிலர்களதும் செயல் பரப்பு விரிவடைந்ததனால் நாட்டில் நிதி மூலதனங்கள் குவிவது சாத்தியம் ஆயிற்று. தரகு வியாபாரத்தில் இந்திய வர்த்தகர்கள் பெரும் பணத் தொகைகளைத் திரட்டி இருந்தார்கள்.

இதே காலப் பகுதியில் தொழிலாளர் சந்தையும் உருவாகத் தொடங்கியது. சீரழிந்த கம்மியர்களும் பஞ்சைகள் ஆகிவிட்ட விவசாயிகளும் தொழிலாளி வர்க்கத்தின் முதல் அணிகள் (தோட்டக்கால்

---

* கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 35, பக்கங்கள் 129—130.

களிலும், கட்டுமானத் துறையிலும் முதலாவது ஆலைகளிலும் கைத் தொழில் நிலையங்களிலும்) அமைவதற்கான தோற்றுவாய்களாக விளங்கினர்கள்.

இவ்வாறு, 19ம் நூற்றாண்டின் பிற்பாதியில் முதலாளித்துவ அமைப்பின் வளர்ச்சிக்கு வேண்டிய இரண்டு முக்கிய நிபந்தனைகள் இந்தியாவில் இருந்தன. முதலாவது, உற்பத்திச் சாதனங்களிலிருந்து ''விடுதலை பெற்ற'' தொழிலாளர்கள் இருந்தார்கள். இரண்டாவது, தொடக்க மூலதனக் குவிவு (இந்திய வர்த்தகர்களாலும் தரகர்களாலும்) நிகழ்த்தப்பட்டிருந்தது.

இந்தியாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி ஒரு போகான இரண்டு வழிகளில் நடந்தது. கைத்தொழில் உற்பத்தியின் அடிப்படையில் முதலாளித்துவக் கைத்தொழில் வளரத் தொடங்கியது. இயந்திரத் தொழிற்சாலை உற்பத்தியின் போட்டியைச் சமாளிக்கும் பொருட்டு இது இரண்டு வழிகளைக் கடைப்பிடித்தது. முதலாவதாகத் தொழிலாளர்கள் அளவுக்குமேல் சுரண்டப்பட்டார்கள். இவ்வாறு செய்வதற்கு முதலாளித்துவ முறைகளோடு வட்டிக் கடன் தரையும் சாதி ஒடுக்குமுறையும் கையாளப்பட்டன. இரண்டாவதாக, இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டு இயந்திரத் தொழிற்சாலைகளின் மலிவான அரைச் செய்பொருள்கள் பயன்படுத்தப்பட்டன. மில் நூல்களை உபயோகித்ததன் அடிப்படையிலேயே இந்தக் காலப் பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் வரம்புகளுக்குள் கைத்தறி நெசவின் விரைந்த மறு மலர்ச்சி தொடங்கிற்று. இந்தியாவின் வெவ்வேறு பிரதேசங்களில் (சிறப்பாக மகாராஷ்டிரத்திலும் சென்னையிலும் வட மேற்கு மாநிலங்களிலும்) தனித் தனி வகைக் குடிசைத் தொழில் உற்பத்திக்கான பெரிய மையங்கள் அமைந்தன. 1891ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி நாலரைக் கோடிப் பெயர் (குடும்பத்தினரைச் சேர்த்து) குடிசைத் தொழில்களில் ஈடுபட்டிருந்தார்கள். 1890க்களின் முடிவில் நெசவாலைகளில் பயன்படுத்தப்பட்டதைக் காட்டிலும் இரண்டரை மடங்கு அதிக நூல் கைத்தறி நெசவில் பயன்படுத்தப்பட்டது.

காலனி ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறையைச் சிறப்பாகக் கம்மியர்களும் கைத் தொழில் நிலைய உடைமையாளர்களும் தொழிலாளர்களும் உணர்ந்தார்கள். பிரிட்டிஷ் சரக்குகளின் போட்டியாலும் காலனி நிர்வாகத்தின் வரி விதிப்புக்களாலும் வன்முறைகளாலும் அவர்கள் துன்புற்றார்கள்.

திரளான நகர, நாட்டுப்புறக் கம்மியர்களும் தொழிலகங்களிலும் கைத் தொழில் நிலையங்களிலும் வேலை செய்த தொழிலாளர்களும் சிறு தொழிலதிபர்களும் வர்த்தகர்களும் விவசாயிகளுக்குப் பிறகு

இந்தியாவின் தேசிய விடுதலை இயக்கத்தினது மிகப் பெரிய சக்தி யாகத் திகழ்ந்தார்கள்.

கைத்தொழில் உற்பத்தியோடு கூடவே முதலாவது ஆலைகளும் தொழிற்சாலைகளும் 19ம் நூற்றாண்டின் நடுவில் நிறுவப்படலாயின. பம்பாய் இந்தியத் தொழில் துறையின் மிக முக்கிய மையம் ஆயிற்று. பம்பாய் வர்த்தகர்களிடமும் தரகர்களிடமும் (இவர்கள் பெரும்பாலும் பார்சிகள் அல்லது வர்த்தக-வட்டித் தொழில் சாதியைச் சேர்ந்த மார்வாடிகள்) வியாபாரத்தின் விளைவாகப் பெரு நிதிக் குவைகள் திரண்டிருந்தன. அவர்கள் மிகப் பரந்த வீச்சுடன் வர்த்தக நடவடிக்கைகள் நடத்தினர்கள். அபினித் தரகு வியாபாரத்தில் பங்கு கொண்டு சீனச் சந்தையையும் பொதுவாகத் தூரக் கிழக்கு நாடுகளின் சந்தையையும் நன்றாகத் தெரிந்து கொண்டார்கள். 19ம் நூற்றாண்டின் 40—60க்களில் பெரிய பம்பாய் வர்த்தக நிலையங்கள் பிரிட்டனில் தங்கள் பிரதிநிதிகளை வைத்திருந்ததால் தொழில் துறையின் வளர்ச்சியைத் தெரிந்து கொள்ள அவற்றால் முடிந்தது.

இந்த நிலைமைகளில் பம்பாய் வியாபாரிகள் பஞ்சாலைகள் நிறுவ முற்பட்டார்கள். 20ம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இவை சீனாவுக்காகவும் பிற தூரக் கிழக்குச் சந்தைகளுக்காகவும் நூல் உற்பத்தி செய்வதில் முதன்மையாக ஈடுபட்டிருந்தன.

பம்பாயில் முதலாவது பருத்தி நெசவாலை 1854ம் ஆண்டு உற்பத்தி தொடங்கியது. அகமதாபாதில் அது 1861ல் இயங்கலுற்றது. அகமதாபாத் நாட்டின் இரண்டாவது முக்கிய நெசவாலை மையம் ஆயிற்று.

19ம் நூற்றாண்டின் கடைசி முப்பது ஆண்டுகளில் பிரிட்டிஷ் முதலாளிகளுக்குச் சொந்தமான பஞ்சாலைகள் (பம்பாயிலும் கான்பூரிலும்) திறக்கப்பட்டன. ஆயினும் ஆங்கிலத் தனியார் மூலதனத்தின் கோட்டையாக இருந்து வந்தது சணல் தொழில். இது கல்கத்தாவிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் குவிந்திருந்தது. தவிரவும் விவசாய மூலப் பொருள்களின் தொடக்கப் பயன்பாட்டுக்கு உரிய ஏராளமான தொழில் நிலையங்கள் ஆங்கில மூலதனத்துக்குச் சொந்தமாய் இருந்தன.

19ம் நூற்றாண்டின் இறுதி வாக்கில் பேரளவு உற்பத்தியில் (தொழில் நிலையங்களும் தோட்டக்கால்களும்) மூன்றில் இரண்டு பாகம் பங்கு மூலதனம் ஆங்கிலேயர்களுக்கும் மூன்றில் ஒரு பாகம் மட்டும் இந்தியர்களுக்கும் சொந்தமாய் இருந்தன. இந்தியாவில் பெரு முதலாளித்துவத் தொழில் முயற்சித் துறையில் ஆங்கிலேயர் ஆதிக்கம் வகித்ததை இது காட்டுகிறது.

நாட்டில் புதிய வர்க்கங்கள் உரு ஆவதும் தேசிய முரண்பாடுகள் கூர்மை அடைவதும்

முதலாளித்துவம் நாட்டில் வளர்ச்சி அடைந்ததால் தொழிலாளி வர்க்கம் உரு ஆவது தொடங்கியது. பெரிய இயந்திரத் தொழிலின் வளர்ச்சி சமமாக இல்லாததன் விளைவாக அதன் முக்கியப் பகுதி நாட்டின் அதிக வளர்ச்சி பெற்ற மாநிலங்களான பம்பாயிலும் வங்காளத்திலும் குவிந்தது. ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் இருப்புப் பாதைகளிலும் சுரங்கங்களிலும் வேலை செய்துவந்த தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 19ம் நூற்றாண்டின் இறுதி வாக்கில் ஏறத்தாழ எட்டு லட்சம். தொழிலாளர்களில் பெரும் பான்மையோர் நெசவாலையினர்.

இந்தியத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகளும் வேலை நிலைமைகளும் சகிக்க முடியாத அளவு படு மோசமாய் இருந்தன. தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம் மிகக் குறைவாக இருந்ததால் அதைக் கொண்டு தங்கள் குடும்பத்தினரைப் பராமரிப்பது அவர்களுக்கு வழக்கமாக இயலாதிருந்தது. ஆகையால்தான் தொழில் துறை வளர்ச்சியின் முதல் பத்தாண்டுகளின் போது விவசாயிக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்—சிறு நிலப் பகுதிகளின் உடைமையாளர்கள் அல்லது குத்தகைக்காரர்கள்—பெரும்பான்மையினராக இருந்தார்கள். தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் மாதர்கள், சிறுவர் சிறுமியரின் உழைப்பு விரிவாகப் பயன்படுத்தப்பட்டதன் காரணமும் இதுவே.

முதலாளித்துவச் சுரண்டலோடு கூடவே பொருளாதாரச் சார்பற்ற நிர்ப்பந்தங்களின் பல்வேறு வடிவங்களாலும் வட்டிக் கடன் தளையாலும் தொழிலாளர்கள் துன்புறுத்தப்பட்டார்கள்.

19ம் நூற்றாண்டின் கடைசி முப்பது ஆண்டுகளில் இந்தியத் தொழிற்சாலைகளில் வேலை வாரம் 80 மணி நேரம் கொண்டிருந்தது (இங்கிலாந்தில் இது 56 மணி நேரமாக இருந்தது). வேலை நாள் 16 மணி நேரத்தை எட்டியது. தொழிற்கூடங்களில் மின் விளக்குகள் இல்லாமையால் வேலை நாள் வழக்கமாகச் சூரியன் உதிப்பதற்குப் பதினைந்து நிமிடங்கள் முன்பு தொடங்கிச் சூரியன் மறைந்து பதினைந்து நிமிடங்கள் கழிந்த பின்னர் முடிந்தது.

பிரிட்டிஷ் தொழிலதிபர்களுடன் சந்தையின் பொருட்டு நடந்த போட்டியில் இந்தியத் தொழிற்சாலை முதலாளிகள் தாக்குப் பிடிக்க முடிந்ததற்கு ஆதாரமாய் இருந்தது இந்தியத் தொழிலாளர்கள் எல்லை கடந்து சுரண்டப்பட்டதுதான்.

உற்பத்திச் செலவுகளை அதிகம் ஆக்குவதன் மூலம் இந்தியத்

தொழிலதிபர்களின் போட்டித் திறனைக் குறைக்கும் நோக்கத்துடன் ஆங்கில நெசவாலை முதலாளிகள் இந்தியாவில் தொழிற் சட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று தங்கள் பிரதிநிதிகள் மூலம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கோரத் தலைப்பட்டார்கள். ஆனால் தொழிற்சாலைகளின் இந்திய முதலாளிகள் மட்டும் இன்றி இந்தியாவில் ஆலைகளும் தொழிற்சாலைகளும் வைத்திருந்த ஆங்கிலேயர்களும் இந்தக் கோரிக்கையை எதிர்த்தார்கள். நாடாளுமன்றத்தால் சட்டங்கள் ஏற்கப்பட்டது இந்தியத் தொழிலாளி வர்க்கம் சுரண்டப்பட்டு வந்த அளவை நடப்பில் பாதிக்கவில்லை. 1881லும் 1891லும் பிறப்பிக்கப்பட்ட சட்டங்கள் கூலிக்கு அமர்த்தப்படுவதற்குத் தொழிலாளர்களின் வயதுத் தகுதியைத் தீர்மானித்தன—முதலில் ஏழாகவும் பின்பு ஒன்பதாகவும். குழந்தைகளுக்கும் சிறுவர் சிறுமியருக்கும் வேலை நேரமும் அளவறுக்கப்பட்டது. மிக மோசமாகக் கடைப்பிடிக்கப்பட்ட இந்தச் சட்டங்களே இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் கடினமான நிலைமையைக் காட்டின.

இயந்திரங்களையும் பொருள்களையும் உயர்ந்த ஏகபோக விலைகளுக்குக் கொடுத்ததன் மூலம் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் வளர்ந்து வந்த இந்திய தேசியத் தொழில் துறையினிடம் கடும் கப்பம் வசூலித்து வந்தது. ஆங்கிலப் பொறியாளர்களுக்கும் தொழில்நுட்ப நிபுணர்களுக்கும் தரப்பட்ட சம்பளமும் இங்கிலாந்தில் இருந்ததை விட மிக அதிகமாய் இருந்தது. இந்த அதிகப்படிச் செலவுகளை ஈடு கட்டுவதற்கு இருந்த ஒரே வழி இந்தியத் தொழிலாளி வர்க்கத்தை மட்டுமீறிச் சுரண்டுவதே. இவ்வாறு இந்தியத் தொழிலாளி வர்க்கம் சொந்த முதலாளி வர்க்கத்தாலும் அயல் நாட்டு முதலாளி வர்க்கத்தாலும் இரு வகைச் சுரண்டலுக்கு ஆளாகி வந்தது.

பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் இந்தியாவில் தனது அரசியல் ஆதிக்கத்தைப் பயன்படுத்தி நாட்டின் சுதந்திரப் பொருளாதார வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் முட்டுக்கட்டை போட்டது. இந்தியாவில் இறக்குமதியான பஞ்சுத் துணிகளுக்கு விதிக்கப்பட்டு வந்த தீர்வை லங்காஷயர் ஆலை முதலாளிகளின் வற்புறுத்தலுக்கு இணங்க 1879ல் ரத்து செய்யப்பட்டது. தொடக்கப் பருவத்தில் இருந்த இந்திய நெசவாலைத் தொழிலும் உலகிலேயே யாவற்றிலும் விறல் மிக்க பிரிட்டிஷ் நெசவாலைத் தொழிலும் இதனால் ஏற்றத் தாழ்வான நிலையில் வைக்கப்பட்டன. பிற சரக்குகள் மீது விதிக்கப்பட்டு வந்த தீர்வைகளும் 1882ல் அகற்றப்பட்டன. துணிகள் மீது இறக்குமதித் தீர்வை 1894ல் நிதித்துறை நோக்கங்களுக்காக மீண்டும் போடப்பட்டது. ஆனால் அதே சமயம் இந்திய ஆலைத் துணிகளுக்கு உற்பத்தி வரி விதிக்கப்பட்டது.

ஒழுங்கமைந்த முதலாளித்துவக் கடன் வசதி இல்லாததும் கடுமையான முட்டுக்கட்டையாக இருந்தது. இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் வங்கிகள் காலனியாட்சி இயந்திரத்துக்கும் பிரிட்டிஷ் வர்த்தக, தொழில் நிலையங்களுக்கும் மட்டுமே கடன் வசதிகள் அளித்தன. முதன்மையாக அவை வெளி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. இந்த நிலைமைகளில் இந்தியத் தொழிலதிபர்கள் மானேஜிங் ஏஜென்சிகள் எனப்பட்ட கடன் மேற் பார்வை நிறுவனங்களைச் சார்ந்து இருக்க வேண்டியதாயிற்று. இவை பெரிய பிரிட்டிஷ் ஏகபோகங்களின் மகவுக் கம்பெனிகள். மானேஜிங் ஏஜென்சிகள் தேவையான கடன் வழங்கின, தொழிற்சாலை இயந்திரங்கள் சப்ளை செய்தன. தொழில் நிலையம் இயங்கத் தொடங்கிய பிறகு இவை சில சந்தர்ப்பங்களில் அதன் வேலையை வழி காட்டி நடத்தின, மூலப் பொருள்கள் கிடைக்கவும் செய்பொருள்கள் விற்பனையாகவும் ஏற்பாடு செய்தன. இந்தியத் தொழிலதிபர்களின் லாபங்களில் கணிசமான பங்குகள் மானேஜிங் ஏஜென்சிகளுக்கு ஒதுக்கப்பட்டன.

வேளாண்மையில் நிலப்பிரபுத்துவ மீதமிச்சங்களின் ஆதிக்கமும் நாட்டுப்புறத்திலும் சிறு இயந்திரத் தொழில் உற்பத்தியிலும் வர்த்தக-வட்டித் தொழில் மூலதனத்தின் மிகுதியும் நாடு முதலாளித்துவ வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்புக்களைப் பெரிதும் குறுக்கி விட்டன.

இளம் இந்திய முதலாளி வர்க்கம் தான் உருவான தொடக்கக் காலம் முதலே ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, அரசியல் ஒடுக்கு முறையுடன் மோதிக் கொண்டது. ஆயினும் சிறு சரக்குத் துறையில், அதாவது, விவசாய, கைத்தொழில் உற்பத்திக் களத்தில்தான் இந்த ஒடுக்குமுறை நிலப்பிரபுத்துவ, வர்த்தக-வட்டிக் கடன் சுரண்டலோடு சேர்ந்து மிகக் கடுமையாக உறைத்தது.

காலனியாட்சி, நிலப்பிரபுத்துவ, வர்த்தக-வட்டிக் கடன் சுரண்டல்களின் விளைவாக விவசாயிகளும் கம்மியர்களும் திரள் திரளாகச் சீரழிவுக்கு உள்ளானார்கள். உழைப்பாளி மக்கள் வறுமையில் ஆழ்ந்தார்கள். விளைச்சல் பொய்த்துப் போன ஆண்டுகளில் பஞ்சம் பெருவாரியான உயிர்களைக் கொள்ளை கொண்டது. 1825—1850ல் பஞ்சம் இரண்டு தடவைகள் ஏற்பட்டு நான்கு லட்சம் மனித உயிர்களைக் குடித்தது என்றால் 1850—1875ல் ஆறு தடவைகளும் 1875—1900ல் பதினெட்டு தடவைகளும் நாட்டில் தலை விரித்தாடியது. உயிர்ச்சேதமும் முறையே ஐம்பது லட்சத்திலிருந்து இருநூற்று அறுபது லட்சம் வரை அதிகம் ஆயிற்று.

காலனியாட்சிச் சுரண்டல் தீவிரம் அடைந்தது, அதை அடுத்து நிலப்பிரபுத்துவ, வட்டிக் கடன் ஒடுக்குமுறை மேலும் கடுமை ஆனது,

நாட்டில் முதலாளித்துவம் வளர்ச்சி பெற்றதால் முதலாளித்துவ சமூகத்தின் வர்க்கங்கள் அமைந்தது ஆகியவற்றின் விளைவாக நாட்டுக்குள் வர்க்க முரண்பாடுகளும் அதே சமயம் இந்திய சமூக வர்க்கங்களுக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் இடையே முரண்பாடுகளும் கூர்மை அடைந்தன.

முதலாளித்துவத்துக்கு முந்திய அமைப்பைப் பிரதிநிதித்துவப் படுத்திய விவசாயிகளதும் கம்மியர்களதும் அரைச் சுயதேவைப் பூர்த்தித் தொழில்களின் கடல் நடுவில் முதலாளித்துவத் துறை சிறு தீவாக விளங்கியது. காலனியாட்சி-நிலப்பிரபுத்துவச் சமூகத்தினது சமுதாய-வர்க்கக் கட்டமைப்பின் தனித்தன்மைகளுக்கு இதுவே காரணம் ஆயிற்று. வர்க்கங்களது போராட்டத்தின் உள்ளடக்கத்திலும் வடிவங்களிலும் இந்த இயல்பு பிரதிபலித்தது.

1860-90க்களில் இந்திய மக்கள் நடத்திய தேசிய விடுதலைப் போராட்டம்

19ம் நூற்றாண்டின் 60—90க்களில் திரளான பொது மக்கள் (விவசாயிகளும் கம்மியர்களும்) நடத்திய போராட்டங்கள் இந்தியாவின் உள் முரண்பாடுகளையும் வெளி முரண்பாடுகளையும் யாவற்றிலும் துலக்கமாகப் பிரதிபலித்தன.

வங்காளத்தில் விவசாயிகளின் போராட்டம்

கிழக்கு வங்காளத்தில் 1859—1862ல் நடந்த அவுரித் தோட்டக் கிளர்ச்சி எனப்பட்டது நாட்டுப்புற மக்களின் முதலாவது பெரிய போராட்டமாக விளங்கியது.

நீலச் சாயம் தயாரித்து வந்த சிறு நிலையங்களின் சொந்தக்காரர்களான ஆங்கிலத் தொழிலதிபர்கள் ரயத்துக்களிடம் வரி வசூலிக்கும் உரிமையை ஜமீன்தார்களிடம் சில ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்து அவுரிச் செடிகள் பயிரிடும்படி விவசாயிகளைக் கட்டாயப்படுத்தினர்கள். விவசாயிகள் தங்கள் விளைச்சல் முழுவதையும் இந்தத் ''தோட்டக்காரர்களுக்குக்'' கட்டாயமாக விதிக்கப்பட்ட விலைகளுக்கு விற்க வேண்டி இருந்தது. நாளடைவில் ரயத்துக்கள் ஆங்கிலத் தோட்டக்காரர்களுக்கு உண்மையில் அடிமைகள் ஆக்கப்பட்டு விட்டார்கள். ஆங்கிலேயர்களோ, நாட்டுப்புறத்தில் பயங்கர ஆட்சியைப் பரப்பினர்கள்.

கட்டாய ஒப்பந்த முறைக்கு எதிராக நடந்த விவசாயிகளின் இயக்கம் அவுரிச் செடி பயிரிடவும் தோட்டக்காரர்களுக்குப் பழைய கடன்களைச் செலுத்தவும் மறுப்பதன் வடிவத்தை மேற்கொண்டது. சில கிராமங்களில் தானாகவே தொடங்கிய இந்த இயக்கம் வங்காளத்தின் ஐந்து மாவட்டங்களில் விரைவாகப் பரவியது. ரயத்துக்களின் வேலை நிறுத்தத்தை வன்முறைகளால் அடக்கத் தோட்டக்காரர்கள் செய்த முயற்சிகள் உறுதியான எதிர்ப்பின் முன் சிதறிப் போயின. அதையடுத்து விவசாயிகள் தோட்டக்காரர்களின் பண்ணைகளைத் தாக்கினர்கள்.

இந்த இயக்கத்தின் வீச்சு காலனி ஆட்சியாளர்களை ஒரே கலவரத்துக்கு உள்ளாக்கியது. எனவே, நிலைமையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட கமிஷன் கட்டாய ஒப்பந்த முறையைக் கைவிடும்படி சிபாரிசு செய்தது.

இயக்கம் பரவியிருந்த கிராமங்களுக்கு இராணுவ-போலீஸ் தண்டனைப் படைகள் அனுப்பப்பட்டன. ஆயினும் போராட்டம் அனேகமாக மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நடந்தது. விளைவாக ரயத்துக்கள்—மரபுரிமை பெற்ற குத்தகைக்காரர்கள்—பெருத்த வெற்றி அடைந்தார்கள். அவுரித் தோட்டக் கட்டாய ஒப்பந்த முறை ரத்து செய்யப்பட்டது. பல தோட்டக்காரர்கள் வேலை நிறுத்தத்துக்கு உள்ளான பிரதேசங்களில் தங்கள் தொழிலையே நிறுத்தி விட்டார்கள்.

இந்த இயக்கத்தின் போது விவசாயிகள் நிறுவனத்தின் முதல் வடிவங்கள் அமைக்கப்பட்டன. விவசாயிகள் சங்கங்கள் (ரயத்து சபாக்கள்) 1872—1873ல் நடந்த வங்காள விவசாயிகளின் அடுத்த பெரிய போராட்டத்தின் போது இன்னும் அதிக முக்கியப் பங்கு ஆற்றின.

''அவுரித் தோட்டக் கிளர்ச்சி'' ஆங்கிலத் தொழிலதிபர்களுக்கு எதிராக நடந்தது என்றால் பாப்னா, போக்ரா என்னும் வங்காள மாவட்டங்களில் விவசாயிகளின் கிளர்ச்சி நிலப்பிரபுத்துவ எதிர்ப்புத் தன்மை கொண்டிருந்தது. ஜமீன்தார்களுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய குத்தகை பற்றி 1859ல் பிறப்பிக்கப்பட்ட சட்டத்தின் சில பிரிவுகளை 1871ல் கல்கத்தா உயர் நீதி மன்றம் நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாக வியாக்கியானம் செய்தது. இதன் பின் ஜமீன்தார்கள் குத்தகை விகிதத்தைப் பெருந்திரளான விவசாயிகள் விஷயத்தில் உயர்த்திவிட்டார்கள். இந்தச் செயலே விவசாயிகளின் கிளர்ச்சிக்கு நேரடியான காரணம் ஆயிற்று.

விவசாயிகள் ஜமீன்தார்களின் பண்ணைகளைத் தாக்கி நொறுக்கினர்கள், குத்தகை ஒப்பந்தங்களையும் கடன் ஏற்புச் சீட்டுக்களையும்

அழித்தார்கள். பித்ரோகி (கிளர்ச்சிக்காரர்கள்) சங்கங்கள் எனப் பட்ட நிறுவனங்கள் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கின. காலனி ஆட்சி யாளர்கள் பாப்னு, போக்ரா விவசாயிகள் கிளர்ச்சியைக் கொடுமை யான முறைகளால் நசுக்கி விட்டார்கள். ஆனால் இந்தக் கிளர்ச்சியின் செல்வாக்கு காரணமாக வங்காளத்தில் குத்தகை பற்றிய புதுச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. சலுகை பெற்ற குத்தகைக்காரர்களின் வகைப் பிரிவை இது இன்னும் கொஞ்சம் விரிவுபடுத்தியது.

வட, வட மேற்கு இந்தியாவில் மக்களின் போராட்டம்

ஓரளவு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, காலனியாட்சி எதிர்ப்புத் தன்மை கொண்டிருந்த விவசாயிகள் போராட்டத்தோடு கூடவே மதப் பிரிவு இயக்கங்களின் தொன்று தொட்டு வந்த வடிவங்களிலும் திரளான பொது மக்களின் எதிர்ப்பு வெளிப்பட்டது. பொருளாதாரத் திலும் மிகப் பெரும் பகுதி மக்களின் உணர்விலும் நிலப்பிரபுத்துவ மீத மிச்சங்கள் ஆதிக்கம் செலுத்திவந்ததால் நிலப்பிரபுக்களுக்கும் அடிமைப்படுத்திய அயல்நாட்டினருக்கும் எதிரான போராட்டம் அடிக்கடி மதப் போராட்டக் கோஷங்களுடன் தொடங்கியது. 1857—1859 கிளர்ச்சி தோல்வியுற்றதாயினும் அதன் தலைமையில் முக்கியப் பங்கு ஆற்றிய வகாபியர் இயக்கத்தை முழுமையாக ஒடுக்க ஆங்கிலேயர்களுக்கு முடியவில்லை. 1860க்களின் தொடக்கத்தில் வகாபியர்கள் தங்கள் இரகசிய நிறுவனத்தை மீண்டும் அமைத் தார்கள். இதன் மையம் பாட்னாவில் (பீகார் மாநிலம்) ஏற்படுத்தப் பட்டது. காலனி ஆட்சியாளர்களுக்கு எதிராகப் புதிய ஆயுதப் போர் தொடங்குவதற்கு வகாபியர்கள் ஊக்கமாக ஆயத்தம் செய்யலானார் கள். இந்த நிறுவனம் விவசாயிகளையும் கம்மியர்களையும் மட்டும் உறுப் பினராகக் கொண்டிருக்கவில்லை. சிற்றதிகாரிகளும் வியாபாரிகளும் அறிவுஜீவிகளும் அதன் தலைவர்கள் இடையே இருந்தார்கள்.

சுதந்திரப் பட்டாணிய இனக் குழுவினரின் பிரதேசமான சித்தானாவில் வகாபியர்கள் ஒரு பெரிய இராணுவ தளத்தை முன்பே அமைத்திருந்தார்கள். இப்போது விருப்பத் தொண்டர்கள் அங்கே சென்றார்கள், ஆயுதங்களும் வெடி மருந்தும் பிற தளவாடங்களும் இரகசியமாக அனுப்பப்பட்டன. வகாபியத் தலைவர்களின் எண்ணப் படி சித்தானா கிளர்ச்சியின் ஆதாரத் தளமாக விளங்க வேண்டும். கிளர்ச்சியோ காப்பிரிகளுக்கு, அதாவது ஆங்கிலேயர்களுக்கு எதிரான ஜிகாது (அறப் போர்) ஆக நடக்கும்.

ஆங்கிலேயர்கள் சித்தாணுவுக்கு எதிராக ஒரு பெரும் படைப் பிரிவை 1863ல் அனுப்பினர்கள். வகாபியர்களை ஆதரித்து வந்த ஆப்கானிய இனக் குழுக்களை அவர்களிடமிருந்து தந்திரமாகப் பிரித்த பின் பெருத்த இழப்புக்களுக்கு ஆளான பிறகே கிளர்ச்சியின் இந்த ஆதாரத் தளத்தைத் தகர்க்க ஆங்கிலேயர்களால் முடிந்தது. வகாபியர்களின் பாட்னு, டில்லி மையங்கள் 1864ல் நொறுக்கப்பட்டன. அதன் பின் இயக்கம் படிப்படியாகத் தணிந்து அடங்கிப் போயிற்று.

19ம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகளிலேயே நிறுவப் பட்ட சீக்கியப் பிரிவான நாம்தாரிகளுடைய செயல்களின் வடிவில் நிலப்பிரபுத்துவத்துக்கும் காலனியாட்சிக்கும் எதிரான போராட்டம் பஞ்சாபில் 19ம் நூற்றாண்டின் 60—80க்களில் தொடங்கியது.

தச்சர் குடும்பத்தில் பிறந்த ராம் சிங் என்பவர் 1846ல் நாம் தாரிகளின் தலைவர் ஆனர். அதன் பிறகே அவர்களுடைய நடவடிக்கை கள் தீவிரம் அடைந்தன. 1863ல் ராம் சிங் நாம்தாரிப் போதனையை விரிவாக்கி விளக்கினர். ஆங்கிலச் சரக்குகளைப் பயன்படுத்துவதை யும் காலனியாட்சி நிர்வாகத்தின் அலுவலகங்களில் பணியாற்றுவதை யும் விட்டுவிடும்படி அவர் கோரினர். ஒரு காலத்தில் படைப்பணி ஆற்றியிருந்த ராம் சிங் நாம்தாரிப் பிரிவின் நிறுவனக் கட்டமைப் பில் சீர்திருத்தம் செய்தார். மாவட்டங்கள், வட்டங்கள், கிராமங்கள் தோறும் கண்டிப்பான படைத்தன்மை கொண்ட ஒழுங்கமைப்பை ஏற்படுத்தினர். காலனிச் சேனையின் சிப்பாய்ப் பிரிவுகளில் பணி யாற்றிய சீக்கியர்களோடு நாம்தாரிகள் தொடர்பு கொண்டார்கள். நன்கு ஒழுங்கமைந்தவர்களும் மதப் பிரிவுத் தலைவர் ராம் சிங்குக்கு மறு பேச்சின்றிக் கீழ்ப்படிந்தவர்களும் படைப் பயிற்சி பெற்றவர் களுமான நாம்தாரிகள் பெருத்த சக்தியாக விளங்கினர்கள். எனவே அவர்கள் போலீசின் எச்சரிக்கை நிறைந்த கண்காணிப்பில் வைக்கப் பட்டார்கள்.

கோயில் நிலங்கள் சீக்கியச் சமுதாயம் அனைத்துக்கும் பொது வாகச் சொந்தமாய் இருந்து வந்தன. ஆனல் பின்னர் சீக்கிய நிலப் பிரபுத் தலைவர்கள் இந்த நிலங்களின் சொத்துரிமையைத் தமதாக்கிக் கொண்டார்கள். 1860க்களின் பிற்பாதியில் இந்த நிலப்பிரபுத் தலை வர்களை எதிர்ப்பதே நாம்தாரிகளின் செயலாக இருந்தது. ஆனல் நாம்தாரிகளின் சில வெளிப்படையான போராட்டங்கள் வட்டாரச் சீக்கிய நிலப்பிரபுக்களின் உதவியுடன் ஆங்கிலேயர்களால் ஒடுக்கப் பட்டு விட்டன.

60க்களின் முடிவிலும் 70க்களின் தொடக்கத்திலும் நாம்தாரி களின் செயல்கள் மத-வகுப்புவாதத் தன்மையை மேற்கொள்ளலா யின. ஏனெனில் இந்துக்கள் போன்றே சீக்கியர்களுக்கும் புனிதமான

விலங்கு ஆகிய பசுவைக் கொன்று வந்த முகமதியக் கசாப்புக்காரர் களே நாம்தாரிகள் பல முறை தாக்கினர்கள். முகமதியக் கசாப்புக் கிடங்குகள் மீது நாம்தாரிகள் நடத்திய தாக்குதல்களே ஆங்கிலேயர் கள் தந்திரமாகப் பயன்படுத்திச் சீக்கியர்களுக்கும் முகமதியர்களுக்கும் சண்டை மூட்டிவிட முயல்வதை ராம் சிங் கண்டுகொண்டார். எனவே நாம்தாரிகளின் இந்தச் செயலைக் கடுமையாக எதிர்த்தார்.

ஆயினும் நாம்தாரிகளுக்கு உள்ளே வலிய எதிர்க் குழு உருவா யிற்று. இந்தக் குழு ராம் சிங் எதிர்த்ததைப் பொருட்படுத்தாமல் சிறு பஞ்சாபிச் சமஸ்தானமான மலேர்கோட்லாவின் மன்னரை எதிர்த்துப் போராட 1872 ஜனவரி நடுவில் தீர்மானித்தது. முக மதியரை இந்த மன்னன் இதற்குச் சிறிது காலத்துக்கு முன் ஓர் எருதைக் கொல்ல உத்தரவிட்டிருந்தார்.

மலேர்கோட்லா போகும் வழியில் நூறுக்கு மேல் நாம்தாரிகள் ஒரு சீக்கிய நிலப்பிரபுவின் இருப்பிடமான மலோத் கோட்டையைத் தாக்கினர்கள். நாம்தாரிகளுக்கு எதிரான அடக்குமுறைகளில் முன்பு ஆங்கிலேயருக்குத் தீவிரமாக உதவிவந்தவன் இந்த நிலப்பிரபு, கோட்டையில் இருந்த ஆயுதங்களைக் கைப்பற்றிப் பயன்படுத்தலாம் என நாம்தாரிகள் எண்ணினர்கள். ஆனால் மலோதையும் மலேர் கோட்லாவையும் கைப்பற்ற அவர்கள் செய்த முயற்சிகள் வீணாயின. அண்டைச் சீக்கியச் சிற்றரசுகளின் படைகளால் நாம்தாரிகள் சிதறடிக்கப்பட்டு விட்டார்கள். மக்கள் இயக்கங்களை நசுக்குவதில் தாங்கள் ஆங்கிலேயரின் விசுவாசமுள்ள துணைவர்கள் என்பதைத் துரோகிச் சிற்றரசர்கள் பின்னும் ஒரு முறை காட்டி விட்டார்கள்.

சிறை பிடிக்கப்பட்ட நாம்தாரிகள் ஆங்கிலேயர்களின் ஆணைப்படி வழக்கோ விசாரணையோ இன்றிப் பீரங்கிகளால் சுட்டுக் கொல்லப் பட்டார்கள். 1875ம் ஆண்டு இந்தியாவில் இருந்த மாபெரும் ருஷ்ய ஓவியர் விரிஷாகின் மிருகத்தனமான இந்தத் தண்டனையைத் தமது ஓவியத்தில் தீட்டியுள்ளார்.

1872ம் ஆண்டையப் போராட்டத்தின் தோல்விக்குப் பிறகு நாம் தாரிகள் கொடிய அடக்கு முறைகளுக்கு ஆளானர்கள். அவர் களுடைய தலைவர்கள் ராம் சிங்கின் தலைமையில் பர்மாவுக்கு ஆயுள் கைதிகளாக நாடு கடத்தப்பட்டார்கள். நாம்தாரிகளின் நடவடிக் கைகள் படிப்படியாகக் குறையலாயின.

சிறிது காலத்துக்குப் பின் மக்கள் போராட்டங்கள் மேற்கு, தெற்கு இந்தியாவில் தொடங்கின.

மகாராஷ்டிரத்தில் விவசாயிகள் இயக்கம். வாசுதேவ பலவந்த பட்கேயின் போராட்டம்

விவசாயிகள் நிலத்தை இழந்ததும் நிலம் வட்டித் தொழிலர்கள் கைகளுக்கு மாறியதும் மகாராஷ்டிரத்தில் மற்ற இடங்களைவிடத் தீவிரமாக நடந்தன. இதன் காரணம் என்னவென்றால் 19ம் நூற்றாண்டின் நடுவிலிருந்து, சிறப்பாக 60க்களில் பஞ்சுக்குத் திடீர்க் கிராக்கி ஏற்பட்ட காலப்பகுதியில், மேற்கு, மத்திய இந்தியாவில் பிரதேசங்கள் ஏற்றுமதிப் பயிர் நிலப்பரப்புக்களாக விரைவில் மாறிவிட்டதுதான். விளைவாக நாட்டுப்புறத்தில் சரக்கு-பண உறவுகள் வளர்ச்சி அடைந்தன. வர்த்தக வட்டிக் கடன் மூலதனம் அங்கு தீவிரமாக முன்னேறியது.

ஆகையால்தான் மகாராஷ்டிரத்தில் விவசாயிகள் இயக்கம் வட்டிக் கடன் தொழிலர்களுக்கு எதிரான போராட்டத்தின் வடிவத்தை மேற்கொண்டது. விவசாயிகள் வட்டிக் கடன் முதலாளிகளிடமிருந்து கடன் பத்திரங்களைப் பிடுங்கி அழித்தார்கள். எதிர்த்தால் கடன் முதலாளிகளைக் கிராமங்களிலிருந்து விரட்டி, அவர்களுடைய பண்ணை வீடுகளைத் தகர்த்தார்கள். நாட்டின் இந்தப் பகுதியில் விவசாயிகளின் இயக்கம் ஆயுதப் போராட்டமாக வளர்ந்தது. 1873—1875ல் மகாராஷ்டிரத்தின் எல்லா மாவட்டங்களிலும் ஆயுதமேந்திய விவசாயிகளின் படைப் பிரிவுகள் செயலாற்றி வந்தன. எல்லாவற்றிலும் பெரிய படைப் பிரிவைத் தலைமை தாங்கி நடத்தியவன் விவசாயிகள் தலைவன் கெங்கிளியா. விவசாயிகள் அவனைக் ''கடன்காரர்களின் நண்பன்'' என்று அழைத்தார்கள். ஆங்கிலத் தண்டனைப் படைகள் 1876ம் ஆண்டு கெங்கிளியாவைப் பிடித்து, கிளர்ச்சிக்கார விவசாயிகளின் முக்கியப் படைகளை முறியடித்தன. இதன் பின் சிறிது காலத்துக்கு இயக்கம் தணிந்தது. ஆனால் 1878—1879லேயே ஆயுதமேந்திய விவசாயிகளின் புதிய அணிகள் பம்பாய் மாநிலத்தில் தோன்றிவிட்டன. இவர்களில் பெரும்பாலோர் ரமோஷி இனக் குழுவைச் சேர்ந்தவர்கள். வழக்கமாக இவர்கள் நிலப்பிரபுக்களிடமும் வட்டிக் கடன் முதலாளிகளிடமும் கடன் வாங்கி அடிமைப்பட்ட நிலையில் இருந்தார்கள். சலுகை பெற்ற வேளாண்மைச் சாதிகளைச் சேர்ந்த வசதியுள்ள கிராம வட்டாரத்தினரும் இந்த இயக்கத்தில் பங்கு கொண்டார்கள்.

1876—1878ல் பம்பாய் மாநிலத்தில் கடும் பஞ்சம் பரவியது. ஆயினும் ஆங்கிலேயர்கள் உப்பு வரி விகிதத்தை உயர்த்தி 1878 முதல் தொழில் நிலையத்தினரிடமும் வர்த்தகர்களிடமும் தனியுரிமை வரி வசூலித்தார்கள். இதனால் மக்களின் விரிவான வட்டாரங்களி

னிடையே ஆங்கிலேயருக்கு எதிரான மனப்பான்மை தீவிரம் ஆயிற்று. பல இடங்களில் எதிர்ப்புக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. இந்த இயக்கம் 1878ல் உச்சக் கட்டத்தை எட்டியது. பம்பாய் மாநிலத்தின் சூரத்து நகர வியாபாரிகளும் கம்மியர்களும் அப்போது போராட்டம் நடத்தினர்கள்.

1870—1880ல் மகாராஷ்டிரத்தில் நடந்த விவசாயிகள், கம்மியர்கள், வியாபாரிகள் ஆகியோரின் இயக்கம் ஆயுதப் போராட்டத்தின் மட்டத்துக்கு உயர்ந்தது. வாசுதேவ பலவந்த பட்கேயின் (1845—1883) வீரப் போராட்டத்துக்கு இது வழி வகுத்தது.

ஒரு காலத்தில் மராட்டியப் பேஷ்வாக்களின் ஊழியத்தில் இருந்து விட்டு வறுமை அடைந்து விட்ட குடும்பத்தில் பிறந்தார் பட்கே. அவர் உயர் கல்வி பெற்றார். சமஸ்கிருதமும் ஆங்கிலமும் அறிந்திருந்தார். பூனாவில் ஓர் அரசாங்க இலாகாவில் சிற்றதிகாரியாக ஊழியம் புரிந்து வந்த பட்கே இந்தியச் சிறு முதலாளி வர்க்க அறிவுஜீவிகளின் இழிநிலையைத் தாமே அனுபவித்து உணர்ந்தார். அவர் அறிவார்வம் மிக்கவர், தாய்நாட்டின் மீது ஆழ்ந்த பற்று உள்ளவர். நாட்டை அடிமைப்படுத்தி இருந்த அன்னியர்களை அவர் நெஞ்சார வெறுத்தார்.

துவக்கத்தில் பூனா மராட்டிய இளைஞர்களிடையே அவர் ஆங்கில எதிர்ப்புப் பிரசாரம் நடத்தி வந்தார். பின்னர், பிரிட்டிஷ் காலனி ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கத்துடன் ஆயுதக் கிளர்ச்சியை ஒழுங்கமைக்கும் முன்கூட்டிச் சிந்தனை செய்திருந்த திட்டத்தை நிறைவேற்றுவதில் முனைந்தார். கிளர்ச்சிக்கார விவசாயிகளின் தலைவனை ஹரி நாயக்குடன் தொடர்பு கொண்டு 1879, இளவேனிலில் பட்கே படைப் பிரிவை நிறுவினர். அவருடைய நடவடிக்கைகள் வட்டார வட்டிக் கடன் முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிராக நடந்தன. அவர்களிடம் இருந்த விலை மிக்க பொருள்களை அவர் பறித்துக் கொண்டார். இவ்வாறு திரட்டிய பணத்தால் தொழில் முறைப் படையினரைச் சம்பளத்துக்கு அமர்த்தி, அவர்களைக் கொண்டு பெரும் படையை அமைப்பது பட்கேயின் திட்டம். இந்தப் படை காலனி நிர்வாக மையங்களைத் திடீர் திடீரென்று தாக்கியும் முக்கிய சாலைகளையும் தந்தி-தபால் தொடர்புகளையும் துணித்தும் தன் நடவடிக்கைகளால் மகாராஷ்டிரம் எங்கும் பொதுக் கிளர்ச்சி தொடங்குவதற்கு அறிகுறி காட்டும் என்றும் இந்தக் கிளர்ச்சி நாடு முழுவதிலும் பரவும் என்றும் பட்கே எண்ணி இருந்தார்.

மகாராஷ்டிரத்தின் திரளான விவசாயிகள் தமது திட்டத்தை ஆதரிப்பார்கள் என்று பட்கே எதிர்பார்த்தார். மெய்யாகவே மராட்டிய விவசாயிகளின் செயல்முறை உதவியை ஆதாரமாகக்

கொண்டு 1879ம் ஆண்டு வசந்தத்திலும் கோடையிலும் பட்கே சில துணிகரத் தாக்குதல்கள் நடத்தினார், பெருந்தொகையான பணத்தையும் பொருள்களையும் பறிமுதல் செய்தார். ஆயினும் அவருடைய படை அமைப்பு வலிமை குறைந்தது. இயக்கத்தை ஒடுக்குவதற்காக அனுப்பப்பட்ட தண்டனைப் படைகளின் வலிமையோ, மிக மிக அதிகம். இந்தக் காரணங்களால் அதே ஆண்டுக் கோடையின் நடுவில் பட்கேயினது படையின் முக்கியப் பகுதிகள் முறியடிக்கப்பட்டு விட்டன. பட்கே சிறைபிடிக்கப்பட்டுப் பூனாவில் இருந்த ஆங்கில நீதி மன்றத்தால் விசாரித்து ஆயுட்காலக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

பட்கே தம் படை செயலாற்றிய பிரதேசங்களில் ஆங்கில அதிகாரிகளுக்குத் தமது வேண்டுகோளை அச்சடித்து வினியோகித்தார். தமது செயல்திட்டத்தின் பிரதான அம்சங்களை இதில் அவர் விவரித்திருந்தார். இவையாவன: வரிகளைக் குறைப்பது, சமூக வேலைகளை ஒழுங்கமைப்பது, ஆங்கிலக் காலனியாட்சி அதிகாரிகளின் கொழுத்த சம்பளங்களைக் குறைப்பது. தம் செயல்திட்டம் ஏற்கப்படாவிட்டால் நாடு பரவிய கிளர்ச்சியைத் தூண்டி நடத்துவதாகப் பட்கே அச்சுறுத்தியிருந்தார். தேசிய இயந்திரத் தொழில், வர்த்தகம் ஆகியவற்றின் வளர்ச்சி குறித்த பிரச்சினைகள் மீது தம் செயல்திட்டத்தில் பட்கே பெருத்த கவனம் செலுத்தினார் என்று அவர் விட்டுச் சென்றுள்ள நாட்குறிப்புக்களிலிருந்து தெரிகிறது. அவருடைய அரசியல் கருத்துக்கள் கலப்படக் குழப்பம் நிறைந்தவை. அவற்றில் குடியரசுக் குறிக்கோள்கள் முடியரசுடன் வெகுளித்தனமாகக் கலந்துள்ளன.

ஆயினும் பட்கேயின் கொள்கைவாதத்திலும் நடைமுறைச் செயல்களிலும் முதன்மையானது காலனி ஆட்சி மீது ஆவேசம் பொங்கும் வெறுப்பும் ஆயுதப் போராட்டத்தின் மூலம் தேசிய சுதந்திரம் பெறும் உறுதியும் ஆகும்.

தேசிய விடுதலைப் போராட்டம், வட்டிக் கடன் முதலாளிகளுக்கு எதிரான போராட்டம், இரண்டின் அம்சங்களும் உள்ளார்ந்த உறுப்புக்களாக நேர்முகமாக ஒன்று சேர்ந்திருந்த முதலாவது மக்கள் கிளர்ச்சி என்ற வகையில் பட்கேயின் போராட்டம் குறிப்பிடத் தக்கதாக இருந்தது. திரளான பொது மக்களின் போராட்டம் குட்டி பூர்ஷ்வா ஜனநாயகவாதிகளின் தீவிரப் பிரிவினருடைய போராட்டத்துடன் கலந்ததற்கு முதலாவது எடுத்துக்காட்டாகவும் அது விளங்கியது.

பட்கேயின் போராட்டம் நடந்து கொண்டிருந்த போது சென்னை மாகாணத்தில் கோதாவரி ஆற்றின் கரையில் இருந்த ராம்பா என்னும் இடத்தில் விவசாயிகளின் பெருத்த கிளர்ச்சி மூண்டது.

தொடக்கத்தில் இந்தக் கிளர்ச்சியின் தலைமை இயக்கு சக்தியாக விளங்கியவர்கள் ராம்பாவில் வசித்த மலைநாட்டினர். ஆங்கில அதிகாரிகள் வரிகளை உயர்த்தியதும் ராம்பா முழுவதிலும் வரி வசூல் செய்து வந்த குத்தகைக்காரன் மக்களைக் கொடுமைப்படுத்தியதுமே கிளர்ச்சிக்கு நேரடியான காரணங்கள். சிறு நில உடைமையாளர்களான நிலப்பிரபுக்களும் கிராம மூப்பர்களும் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினர்கள். 1879 மார்ச்சு—ஜூன் மாதங்களில் ஆயுதமேந்திய விவசாயிகளது குழுக்களின் தனித் தனிச் சண்டைகள் உண்மையான கொரில்லாப் போராக ஒன்று கலந்தன. இந்தப் போர் வெற்றிகளும் தோல்விகளும் அடைந்தவாறு 1880ம் ஆண்டு நடு வரையில் தொடர்ந்தது.

கிளர்ச்சியின் போது கிளர்ச்சிக்காரர்களின் சில பெரும் படைகள் உருவாயின. கோதாவரி, விசாகபட்டினம் மாவட்டங்களின் இருபது லட்சம் மக்கள் கொண்ட விரிவான நிலப்பரப்பு கிளர்ச்சிக்கு உள்ளாயிற்று. கிளர்ச்சிக்காரர்கள் செயலாற்றிய பிரதேசங்களில் இருந்த விவசாயிகள் அவர்களுக்குப் பெருத்த உதவி புரிந்தார்கள். கடத்தற்கு அரிய மலைக்காட்டுப் பிரதேசத்தின் சாதக நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு, கொரில்லாப் போர்த்தந்திரத்தைத் திறமையாகக் கையாண்டவாறு கிளர்ச்சிக்காரர்கள் தங்களை அடக்குவதற்காக அனுப்பப்பட்ட அதிக எண்ணிக்கையுள்ள முறையான படைகளுக்குப் பெருஞ்சேதம் விளைத்தார்கள். போரின் போது கிடைத்தவையும் போலீசு நிலையங்களில் கைப்பற்றியவையுமான ஆயுதங்களையே கிளர்ச்சிக்காரர்கள் பயன்படுத்தினர்கள்.

1879ம் ஆண்டின் நடுவுக்குள் ராம்பாவும் அதை அடுத்த பிரதேசங்களும் கிளர்ச்சிக்காரர்களின் கைகளுக்கு வந்துவிட்டன. தாக்குதுருப்புக்களை ஏற்றிக் கொண்டு கோதாவரிப் பெருக்குக்கு எதிராக அனுப்பப்பட்ட இரண்டு நீராவிக் கப்பல்களில் ஒன்றைக் கைப்பற்றித் தீக்கிரை ஆக்குவதிலும் கூட அவர்கள் வெற்றி அடைந்தார்கள்.

ஆனாலும் கிளர்ச்சிக்காரர்களிடம் செயல்திட்டம் எதுவும் இல்லை. கிளர்ச்சி ஒழுங்கமைப்பு அற்ற தன்மை கொண்டிருந்தது. தனித்தனிப் படைப் பிரிவுகளின் தலைவர்களுக்கு இடையே கருத்து வேற்றுமைகள் நிலவின. விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே தனித்தனிப் படைப் பிரிவுகளுக்கு இடையே நடவடிக்கைகள் ஒருங்கிசைக்கப்பட்

டன். கிளர்ச்சிக்காரர்களில் வெவ்வேறு வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள் இருந்ததும் ஓரளவு முக்கியத்துவம் கொண்டிருந்தது. படு ஏழைகளான உழவர்களோடு கூடவே சிறு நிலப்பிரபுக்களும் இவர்களில் இருந்தார்கள். ஆங்கிலக் காலனி அதிகாரிகளும் போலீசாரும் வட்டிக் கடன் முதலாளிகளும் வரிக் குத்தகைக்காரர்களும் விரட்டப்பட்டுக் கிளர்ச்சியின் குறிக்கோள் அனேகமாக அடையப்பட்டதாகத் தோன்றிய போது படைத் தலைவர்கள் தங்களை ''ராஜாக்கள்'' என்றும் ''மகாராஜாக்கள்'' என்றும் பிரகடனம் செய்து கொண்டார்கள்.

ஆயுத பலத்தை மட்டும் நம்பி இராமல் ஆங்கிலேயர்கள் கிளர்ச்சியின் ஒரு சில தலைவர்களிடையே சச்சரவுகள் மூட்டுவதையும் சதியாலோசனைகளையும் கைக்கூலி கொடுப்பதையும் கையாண்டார்கள். கிளர்ச்சிக்காரர்கள் படைகளின் மிகப் பிரபலத் தலைவர்களில் ஒருவனாக விளங்கிய அம்மாள் ரெட்டி 1879ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் ஆங்கிலேயர்களிடம் காட்டிக்கொடுக்கப்பட்டான். கிளர்ச்சித் தலைவர்கள் யாவரிலும் சிறந்த தரக்கொண்டு செந்திரையா என்பவன் 1880ம் ஆண்டு பிப்ரவரி மாதம் தன் துணைவர்களில் ஒருவனால் துரோகம் செய்து கொல்லப்பட்டான்.

செந்திரையா கொல்லப்பட்ட பின் கிளர்ச்சி வர வர வேகம் குன்றியது. சில கிளர்ச்சிப் படைகள் காலனி ஆட்சியாளரின் நெருக்கிச் சூழ்ந்த தண்டனைப் படைகளுக்கு எதிராக ராம்பாக் காட்டுப் புதர்ச் செறிவில் அரண் செய்து கொண்டு இன்னமும் தற் காப்புப் போர் நடத்தி வந்தன. ஆனால் கொரில்லாப் படைகளின் கடைசித் தலைவனும் செந்திரையாவின் கூட்டாளியுமான தம்மண தொரை கொல்லப்பட்ட பின் 1880 ஜூலையில் எதிர்ப்பு அனேகமாக அடங்கிப் போயிற்று.

பொது மக்கள் திரள்களின் இந்த மிகப் பெரிய போராட்டங்களோடு கூடவே மத்திய, வட கிழக்கு இந்தியாவில் வசித்து வந்த தொல்குடி இனக் குழுக்களிடையே (பில்ல, சந்தால, கோண்டு, லுஷாய், கூக்கா, நாக முதலியவை) 1870க்களிலும் 80க்களின் தொடக்கத்திலும் கொந்தளிப்பு பரவியது. அதிக வளர்ச்சி பெற்ற அண்டைத் தேசிய இனங்களைச் சேர்ந்த நிலப்பிரபுக்களும் வட்டிக் கடன் முதலாளிகளும் இந்தத் தொல் குடிகளை அடிமைத் தளையில் சிக்க வைத்து இவர்களுடைய நிலங்களைப் பறித்துக் கொண்டதன் விளைவாக ஏற்பட்டது இந்தக் கொந்தளிப்பு. தொல் குடிகளின் போராட்டங்கள் வட்டாரக் காலனி ஆட்சி நிர்வாகத்துக்கு எதிராக நடந்தமையால் துலக்கமான காலனியாட்சி எதிர்ப்புப் போக்கும் கொண்டிருந்தன.

''நிலப்பிரபுத்துவத்தின் காப்புப் பண்ணைகளும்'' இந்தியாவில்

பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கோட்டைகளுமாக விளங்கிய சமஸ்தானங்களின் மக்களிடையிலும் அரசியல் விழிப்பு ஏற்படலாயிற்று. மேற்கு இந்திய சமஸ்தானம் ஆகிய பரோடாவின் அதே பெயருள்ள தலை நகரில் 1874ம் ஆண்டு காலனி ஆட்சியாளர்களுக்கு எதிராகப் பெருத்த போராட்ட நிகழ்ச்சிகள் சமஸ்தான மன்னன் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டதன் விளைவாக நடந்தன. மராட்டிய சமஸ்தானமான கோல்காப்பூரில் சமஸ்தான மன்னனுக்கும் அவனுடைய ஆதரவாளர்களான காலனியாட்சி அதிகாரிகளுக்கும் எதிராக நடந்த சதியாலோசனை 1880ல் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒரு வகையில் பட்கேயின் போராட்டத்தினது எதிரொலியாக விளங்கியது.

1860க்கள் முதல் 80க்களின் தொடக்கம் வரை நடந்த மக்கள் போராட்டங்கள் வட்டாரத் தன்மை கொண்டிருந்தன. வழக்கமாக இவை திட்டம் இன்றித் தாமே மூண்டன. இவற்றில் பங்கு கொண்டவர்களிடம் தெளிவான அரசியல் செயல்திட்டம் இருக்கவில்லை. அடிக்கடி அவர்கள் மதத்தின் பெயராலும் வெகுளித்தனமான முடியாட்சியின் பெயராலும் போராட்டம் நடத்தினர்கள். எனினும் திரளான விவசாயிகளும் கம்மியர்களும் சில இடங்களில் சிறு வர்த்தகர்களும் தோன்றி வளர்ந்து கொண்டிருந்த குட்டி பூர்ஷ்வா அறிவு ஜீவிகளும் இந்தப் போராட்டங்களில் கலந்து கொண்டது, நாட்டின் எல்லா முக்கியப் பிரதேசங்களிலும் மக்களின் சீற்றம் வெளிப்பட்டது, ஆயுதக் கிளர்ச்சி உட்படக் கூரிய வடிவங்களை இந்தப் போராட்டங்கள் மேற்கொண்டது ஆகிய காரணங்களால் குறித்த காலப் பகுதியில் நடந்த மக்கள் இயக்கங்கள் இந்தியாவில் ஆங்கிலேயரின் காலனி ஆதிக்கத்துக்கு ஆழ்ந்த அபாயத்தை ஏற்படுத்தின.

நாடு புதிய புரட்சி நெருக்கடியின் முன்வேளையில் இருந்தது.

ஆயினும், விவசாயிகளும் கம்மியர்களும் காலனி ஆட்சியாளர்களுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிராக நடத்திய போராட்டங்கள் மட்டுமே காலனியாட்சிக்கு முடிவு கட்ட வல்லவையாக இருக்கவில்லை. தேசிய விடுதலைப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கக் கூடிய முதலாளித்துவ சமூகத்தின் புதிய வர்க்கங்கள்—தொழிலாளி வர்க்கமும் தேசிய முதலாளி வர்க்கமும்—அரசியல் உருவாக்கத்தின் துவக்கக் கட்டங்களில் இருந்தன.

தொழிலாளர் இயக்கத்தின் தொடக்கம்

நெசவாலைத் தொழில் துறையிலேயே தொழிலாளி வர்க்கம் எல்லாவற்றிலும் அதிக அளவில் குவிந்திருந்தது. இந்தக் காரணத்தால் பஞ்சாலைத் தொழிலாளர்கள் சுரண்டுவோருக்கு எதிராக இந்தியத்

தொழிலாளி வர்க்கத்தினுடைய போராட்டத்தைத் தூண்டி நடத்து பவர்களாக முன்வர முடிந்தது. 1877ம் ஆண்டு நாகபுரி நெசவுத் தொழிற்சாலைகளில் ஒன்றில் முதலாவது தொழிலாளர் வேலைநிறுத் தம் நடந்தது. 1882 முதல் 1890 வரை உள்ள காலப்பகுதியில் பம்பாய், சென்னை மாகாணங்களில் 25 வேலைநிறுத்தங்கள் நடை பெற்றன. தொழிற்சாலைத் தொழிலாளர்களோடும் இருப்புப் பாதைத் தொழிலாளர்களோடும் கூடவே சுமைக் கூலிகளும் நகர சுத்தித் தொழிலாளர்களும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். இந்த முதல் வேலைநிறுத்தங்கள் முன்னேற்பாடுகள் இன்றித் திடீரெனத் தாமாகவே தோன்றின, குறைந்த காலமே நீடித்தன, தூய வட்டாரத் தன்மை கொண்டிருந்தன. தொழிலாளர் கள் பொருளாதாரக் கோரிக்கைகளை முன்வைத்தார்கள்.

பம்பாய்த் தொழிலாளி வர்க்கம் எல்லாவற்றிலும் அதிக ஊக்கத் துடன் செயல்பட்டது. தொழிலாளர் நிறுவனங்களை—தொழிற் சங்க முன்னெடிகளை—அமைப்பதற்கான முதல் முயற்சிகள் இங்கே தான் செய்யப்பட்டன. 1884ம் ஆண்டு பம்பாய் நெசவாலைத் தொழி லாளர்களின் முதலாவது பொதுக் கூட்டம் நடந்தது. கட்டாய ஓய்வு நாள், வேலைநேரக் குறைப்பு முதலியவைப் பற்றிய கோரிக்கைகள் அடங்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதே ஆண்டு பம்பாய் ஆலை ஒன்றில் அலுவலராக இருந்த லோகண்டே என்னும் மராட்டி யர் நெசவாலைத் தொழிலாளர்களின் முதலாவது நிறுவனத்தை அமைத்தார். ஆனால் அதன் உறுப்பினர்கள் மிக மிக அடிக்கடி மாறிக் கொண்டு இருந்தார்கள். மராட்டி மொழியில் தீனபந்து (ஏழைகளின் நண்பன்) என்னும் செய்தித்தாளையும் லோகண்டே வெளியிட்டார். இந்தச் செய்தித்தாள் முதலாளித்துவப் பரோபகாரப் போக்குள்ளது.

1880க்களின் முடிவிலிருந்து 90க்களின் தொடக்கம் வரை வேலை நிறுத்த இயக்கம் படிப்படியாகத் தீவிரம் அடைந்தது. ஆண்டில் ஒரு வேலைநிறுத்தங்கள் நடக்காத தொழிற்சாலைகள் அனேகமாக இல்லை. கல்கத்தா, சென்னை, அகமதாபாது, பிற நகரங்கள் ஆகியவற்றின் தொழிலாளர்கள் பம்பாய்ப் பாட்டாளிகளோடு கூடவே போராட் டத்தில் கலந்து கொண்டார்கள். தொழிலாளி மாதர்கள் போராட் டத்தில் வர வர அதிக ஊக்கத்துடன் பங்கு கொள்ளலாயினர்.

பம்பாய்த் தொழிலாளர் சங்கத்தின் நடவடிக்கைகளும் தீவிர மாயின. 1889ம் ஆண்டு பம்பாய் ஆலைத் தொழிலாளர்களின் இரண் டாவது பொதுக் கூட்டம் லோகண்டேயின் தலைமையில் நடந்தது. தொழிலாளர் சங்கம் (ஆங்கில டிரேடு யூனியன்களின் மாதிரியில்) சீர்திருத்தவாதத் தொழிற்சங்கத்தின் தன்மையை நாளுக்கு நாள் அதிகமாக மேற்கொள்ளலாயிற்று. இந்தியாவில் தொழிலாளர் இயக்

கத்தின் மிக முந்திய கட்டத்திலேயே முதலாளி வர்க்கம் தன் கொள் கைவாதத்தை அதன் மீது சுமத்த முயன்றது.

பிரிட்டிஷ் காலனியாட்சி அதிகாரிகளின் அடக்கு முறைகளின் காரணமாக 80க்களில் ஒப்பு நோக்கில் நிலவிய அமைதிக்குப் பிறகு 90க்களில் வேலைநிறுத்தப் போராட்டம் தீவிரம் அடைந்தது. மக்கள் போராட்டங்களின் புதிய கட்டத்துடன் இது ஒருங்கு நிகழ்ந்தது. மக்கள் கிளர்ச்சிகளின் முக்கிய மையங்களாக இருந்தவை சமஸ்தானங்கள்.

90க்களில் நடந்த மக்கள் போராட்டங்கள்

மேற்கு இந்தியாவில் இருந்த கம்பே என்னும் சிறு சமஸ்தானத் தில் 1890ல் கிளர்ந்து எழுந்த விவசாயிகள் நவாபை விரட்டிவிட்டுப் பல ஆழ்ந்த வெற்றிகள் அடைந்தார்கள். வேறு வழியின்றிச் சமஸ் தானத்தின் உள் விவகாரங்களில் தலையிட்ட பிரிட்டிஷ் காலனியாட்சி அதிகாரிகள் நவாபை ஆட்சியிலிருந்து அகற்றிவிட்டு நிலவரியைக் குறைத்தார்கள்.

மணிபுரி சமஸ்தானத்தில்(கிழக்கு இந்தியா) 1891ம் ஆண்டு நடந்த கிளர்ச்சி இந்தக் காலப்பகுதியில் நடைபெற்ற மக்கள் கிளர்ச்சிகள் எல்லாவற்றிலும் பெரியது ஆகும். 1890ம் ஆண்டு இலையுதிர் காலத் தில் மணிபுரியில் அரண்மனைப் புரட்சி ஏற்பட்டதன் விளைவாக ராஜா ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டு நிலப்பிரபுக்களின் ஒரு குழு ராஜாவின் சகோதரன் டிக்கேந்திரஜித் சிங் தலைமையில் ஆட்சிக்கு வந்தது. இவன் அகற்றப்பட்ட ராஜாவின் சிறு மகனின் சார்பில் சட்டப்படி ஆட்சிப் பிரதிநிதியாகப் பதவி ஏற்றான். டிக்கேந்திரஜித் சிங் ஆங்கில எதிர்ப்பு மனப்பான்மை கொண்டவன் என்பது பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குத் தெரிய வரவே, அவர்கள் மணிபுரியின் தலைநகர் இம்பாலுக்குப் படைப் பிரிவை அனுப்பினார்கள். யாரும் எதிர்க்காததால் ஆங்கி லேயர்கள் 1891ம் ஆண்டு மார்ச்சு மாதம் இம்பால் நகரில் புகுந்தார் கள். ஆனால் அரண்மனையைக் கைப்பற்ற அவர்கள் செய்த முயற்சி கள் பலிக்கவில்லை. மாறாக இம்பாலில் இருந்த பிரிட்டிஷ் ஆட்சிப் பிரதிநிதியின் (ரெசிடெண்டின்) கட்டிடத்தில் அவர்களே முற்று கைக்கு ஆளானார்கள். சில படை அதிகாரிகள் உட்படக் கணிசமான படைப்பகுதியை இழந்து ஆங்கிலேயர் பின்வாங்கினார்கள்.

ஆங்கிலப் படைப் பிரிவின் தோல்வியால் கல்கத்தாவில் இருந்த காலனியாட்சி அதிகாரிகளுக்குக் கிலி பிடித்து விட்டது. அதே ஆண்டு ஏப்ரல் மாதம் பெரிய தாக்குப்படை மணிபுரிக்குத் தக்க முன்னேற் பாடுகளுடன் அனுப்பப்பட்டது. சமஸ்தான மக்கள் ஆங்கிலேயரின்

படையை எதிர்த்து அவர்களுடைய பல ஆதாரத் தளங்களையும் போக்குவரத்துச் சாதனங்கள் எல்லாவற்றையும் அழித்து விட்டார்கள். எனினும் ஆங்கிலேயர்கள் இம்பாலைக் கைப்பற்றி இடித்துத் தகர்த்தார்கள். அவர்கள் டிக்கேந்திரஜித் சிங்கையும் மற்றக் கிளர்ச்சித் தலைவர்களையும் சிறை பிடித்துத் தூக்கிலிட்டார்கள். சிறு வனை புதிய மன்னனின் ஆட்சிப் பிரதிநிதியாக ஆங்கில அதிகாரி ஒருவன் நியமிக்கப்பட்டான்.

நிலப்பிரபுக் குழுவினரின் தலைமையில் நடந்த பொது மக்களின் காலனியாட்சி எதிர்ப்புப் போராட்டங்களில் மணிபுரிக் கிளர்ச்சி கடைசியானது.

அதே 1891ம் ஆண்டில் கேவஞ்சார் சமஸ்தானத்தில் (கிழக்கு இந்தியா) நிலப்பிரபுக்களுக்கு எதிராகக் கிளர்ச்சி மூண்டது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதிப் பத்து ஆண்டுகளில் பொது மக்கள் திரளின் பெரிய போராட்டங்கள் எவையும் இந்தியாவில் நிகழவில்லை. ஆனால் எல்லைப்புறப் பிரதேசங்களில் மேற்கே பட்டாணியர்களும் கிழக்கே நாகாக்களும் காலனி ஆட்சியாளரை விடாப்பிடியாக எதிர்த்தார்கள்.

பிரிட்டிஷ் காலனியாட்சி அதிகாரிகளுக்கும் ஆப்கானிய அமீர் அப்துர்ரகுமானுக்கும் இடையே எல்லைப் பிரச்சினைகள் குறித்து ஒப்பந்தம் 1893ல் ஏற்பட்ட பின் ஆப்கானிய இனக் குழுக்களின் போராட்டம் சிறப்பாக வலுத்தது. இந்த ஒப்பந்தத்தின் விளைவாக ஆப்கானிய இனக் குழுவினரின் கணிசமான பகுதியினர் ''டூராண்டு கோடு'' எனப்பட்ட எல்லைப் பிரிவால் ஆப்கனிஸ்தானிலிருந்து துணிக்கப்பட்டு, ஆங்கிலச் செல்வாக்கு மண்டலத்துக்குள் வந்து விட்டார்கள். இனக் குழுக்களின் நிலப்பரப்பில் கோட்டைகள் கட்டவும் பட்டாணியரிடமிருந்து வரிகள் வசூலிக்கவும் ஆங்கிலேயர் செய்த முயற்சிகளை மலை நாட்டினர் ஆயுதங்கள் ஏந்திக் கடுமையாக எதிர்த்தார்கள்.

யாவற்றிலும் பெரிய கிளர்ச்சிகள் 1894லும் 1895லும் 1897லும் நிகழ்ந்தன. இறுதிக் கிளர்ச்சியை அடக்குவதற்குப் பல்வகைப் படைகளைச் சேர்ந்த நாற்பதாயிரம் துருப்புக்களைச் சண்டையில் ஈடுபடுத்தி, பீரங்கிப் படையையும் கொண்டுவருவது ஆங்கிலேயருக்கு அவசியம் ஆயிற்று.

ஆனால் இதன் பிறகும் எல்லைப்புறப் பட்டாணிய இனக் குழுவினரின் பிரதேசத்திலும் சரி, வட கிழக்கு எல்லைப் பிரதேசத்திலும் சரி, ஆங்கிலேயர்களின் இராணுவ-அரசியல் கண்காணிப்பு பெரிதும் உறுதியற்றதாகவே இருந்து வந்தது.

முதலாளித்துவத் தேசியவாதத்தின் தோற்றமும் அதன் பல்வேறு போக்குகளும்

இந்தியாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி, இந்தியத் தேசிய முதலாளி வர்க்கம் நிலை பெற்றது ஆகியவற்றின் விளைவாக முதலாளித்துவத் தேசியவாத இயக்கம் தோன்றியது. காலனியாட்சியையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து மக்கள் நடத்திய போராட்டங்கள் இந்திய முதலாளி வர்க்கத்தின் அரசியல் அமைப்புகள் உருவான தற்குப் பெரிதும் காரணமாய் இருந்தன.

இந்தியாவில் முதலாளித்துவத் தேசியவாதத்தின் வளர்ச்சி இரண்டு கட்டங்களைக் கடந்தது. 1860—70க்களில் நாட்டின் பல் வேறு பிரதேசங்களில் முதலாளிகள்-நிலப்பிரபுக்களின் வட்டாரச் சமூக-அரசியல் நிறுவனங்கள் அமைந்தன. முதலாளித்துவ-தேசிய வாத இயக்கம் மேற்கொண்டு வளர்ச்சி அடைந்ததன் பயனாக 1880க்களின் நடுவில் அனைத்து இந்திய அளவில் இந்த இயக்கம் ஒன்றுயிற்று.

60—70க்களில் நடந்த முதலாளித்துவத் தேசியவாத இயக்கம்

முதலாளிகள்-நிலப்பிரபுக்களின் முதலாவது சமூக-அரசியல் நிறுவனங்கள் பொருளாதாரத் துறையில் எல்லாவற்றிலும் வளர்ச்சி மிக்க இந்திய மாநிலங்களான வங்காளத்திலும் பம்பாயிலும் ஏற் பட்டன. இவற்றில் பிரிட்டிஷ் இந்திய அசோசியேஷன் கல்கத்தாவி லும் பம்பாய் மாகாண அசோசியேஷன் பம்பாயிலும் 1840க்கள் முதலே செயலாற்றி வந்தன. பெரிய தரகு வர்த்தகர்கள், இந்திய முதலாளி-நிலப்பிரபு அறிவாளிகளின் தலைமைக் குழுவினர் ஆகியோ ரின் நலன்களை இவ்விரு நிறுவனங்களும் பிரதிநிதித்துவப்படுத்தின. தவிரவும் மிதவாத மனப்பான்மை கொண்ட வங்காள ஜமீன்தார் கள் பிரிட்டிஷ் இந்திய அசோசியேஷனில் முடிவான செல்வாக்கு பெற்றிருந்தார்கள்.

வரிகள் குறைக்கப்பட வேண்டும், காலனி ஆட்சி நிர்வாகச் செலவு கள் அளவறுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இந்த நிறுவனங் களின் பொருளாதாரச் செயல்திட்டத்தில் அடங்கி இருந்தது. அர சியல் செயல்திட்டமும் இவ்வாறே மிகக் குறுகிய வரம்புகளுக்கு உட்பட்டிருந்தது. இந்திய சமூகத்தின் மேற்படியினருக்கு ஐரோப் பியக் கல்வி பெறும் வாய்ப்புக்கள் (அடுத்தபடிக் காலனியாட்சி நிர் வாக அமைப்பில் பதவிகள் வகிக்கும் பொருட்டு) விரிவாக்கப்பட

வேண்டும் என்ற கோரிக்கையும் நாட்டில் கோலோச்சி வந்த இன வேறுபாடுகளுக்கு எதிர்ப்பும் இதன் முக்கிய உள்ளடக்கமாக இருந்தன.

மக்களின் போராட்டங்கள் மிதவாதத் தேசியவாதிகளைக் காலனி ஆட்சியாளர்களுடன் இன்னும் நெருங்கிய உறவு கொள்ளச் செய்தன.

நாட்டில் தேசிய விடுதலை இயக்க அலைகள் எழுந்து கொண்டிருந்த நிலைமைகளில் பழைய நிறுவனங்களின் சமூக முக்கியத்துவம் விரைவாகக் குறையலாயிற்று. இந்திய முதலாளித்துவ தேசியவாதிகளின் அதிகத் தீவிரப் போக்குள்ள புதிய நிறுவனங்கள் அமைப்பது புறநிலையாக இன்றியமையாதது ஆயிற்று.

பூனா சார்வஜனிக் சபா (பூனைப் பொது மக்கள் கழகம்) 1870ம் ஆண்டு மகாராஷ்டிரத்தில் உருவாயிற்று. 1876ம் ஆண்டு கல்கத்தாவில் இந்தியர் சங்கம் அமைக்கப்பட்டது. இவ்விரு நிறுவனங்களும் இந்திய முதலாளி வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் நலன்களைக் காத்து அதிக ஊக்கத்துடன் போராடின.

புதிய நிறுவனங்களுக்குள் (முதலாளித்துவ-தேசியவாத இயக்கம் அனைத்திலும் போன்றே) ஆரம்பம் முதலே ஒற்றுமை இல்லை. முதலாளித்துவ-தேசியவாத இயக்கத்தின் உள் வரலாற்றின் சிறப்பியல்பு மிதவாதம், ஜனநாயகவாதம் என்ற இரண்டு போக்குகள் அதில் தோன்றி வளர்ந்தது ஆகும்.

19ம் நூற்றாண்டின் அறுபதுக்கள் முதல் 80க்களின் தொடக்கம் வரை தேசிய இயக்கத்தில் மிதவாதத் தரப்பினர் நிறுவன நோக்கில் ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். ஏனெனில் அந்தக் காலப் பகுதியில் சிறு முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகள் தங்களுக்கே உரிய நிறுவனத்தை இன்னும் அமைக்கவில்லை.

வங்காளத்தில் சுரேந்திரநாத பானர்ஜியும் பம்பாய் மாகாணத்தில் தாதாபாய் நௌரோஜியும் மகாதேவ் கோவிந்த ரானடேயும் மிதவாதிகளின் பிரதானத் தலைவர்களாக இருந்தார்கள். புதிதாகத் தொடங்கியிருந்த இந்திய இயந்திரத் தொழில் துறையின் பால் காப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்குமாறும் வரிகளைக் குறைக்கும் படியும் காலனிக் கப்பத்தைக் குறைத்துக் கொள்ளும்படியும் காலனியாட்சி அரசாங்கத்தினிடம் மிதவாதிகள் கோரினார்கள். நிலவுடைமைப் பிரச்சினையில் நிலப்பிரபுக்களின் நிலவுடைமை உரிமை நிலைநிறுத்தப்படுவதற்கும் (வரிகளைக் குறைப்பதற்கும்) அவர்கள் ஆதரவாக இருந்தார்கள். பேரளவான நிலப்பிரபுப் பண்ணைகள் (பிரஷ்ய-யூங்கெர்களின் வழியில்) படிப்படியாக வளர்ச்சி செய்யப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரினார்கள்.

வைசிராயினதும் மாநில கவர்னர்களதும் ஆலோசனை மன்றங்களில் இந்திய சமூகத்தின் செல்வர்களான மேற்படியினருக்கு அளிக்கப்பட்ட பிரதிநிதித்துவம் விரிவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் இன வேறுபாடு பாராட்டுவதற்கு எதிர்ப்பும் அவர்களுடைய அரசியல் திட்டத்தின் சாரமாக இருந்தன. அரசாங்க வேலைகளுக்கான தேர்வுகளுக்குத் தக்க வயது எல்லையை உயர்த்த வேண்டும் என்றும் கல்லூரித் தேர்வுகள் இந்தியாவிலும் பிரிட்டனிலும் ஒரே நேரத்தில் நடத்தப்பட்ட வேண்டும் என்றும் அதில் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

காலனியாட்சி நிர்வாக அமைப்பில் நல்ல சம்பளங்கள் உள்ள பதவிகளைப் பிரிட்டிஷ் முதலாளி வர்க்க இளைஞர்களின் ஏகபோகமாக வைத்திருக்கக் காலனி ஆட்சியாளர்கள் முயன்றார்கள். இந்த நோக்கத்துடன் அவர்கள் ஏற்படுத்தி இருந்த முறையின்படி, அரசாங்க வேலைகளுக்காக லண்டனில் நடந்த தேர்வுகளில் கலந்து கொள்வதற்கு 22 வயதுக்கு மேற்படாத பிராயத்தினர் மட்டும் அனுமதிக்கப்பட்டார்கள். இந்த முறையினால் இந்திய சிவில் சர்விஸ் (ஐ. சி. எஸ்.) அமைப்பில் இடம் பெறுவதற்கான வாய்ப்பு இந்திய அறிவுஜீவிகளில் பெரும்பாலோருக்கு நடப்பில் இல்லாது போயிற்று. இந்தக் காலத்தில் இந்தியாவில் மாணவர்கள் பின்னதாகவும் ஆங்கிலேயர்கள் தங்கள் தாய்நாட்டில் முன்னதாகவும் கல்லூரிப் படிப்பை முடித்து வந்தார்கள். தவிரவும் ஆங்கிலப் பயணம் மிக மிகச் செல்வம் படைத்த இந்தியக் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்குக் கூட அளவு மீறி அதிகச் செலவுள்ளதாக இருந்தது. இந்தக் காரணங்களால் தான் மிதவாதிகள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்கள்.

இந்திய மிதவாதிகளின் செயல் தந்திரம் அவர்களுடைய அரசியல் செயல்திட்டம் போலவே தயக்கமும் நிதானமும் கொண்டிருந்தது. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்கும் ஆங்கிலக் காலனியாட்சி அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கும் மனுக்கள் சமர்ப்பிப்பது, வைசிராயிடமும் பிரிட்டனுக்கும் பிரதிநிதிக் குழுக்களை அனுப்புவது, பத்திரிகைகளில் தயக்கம் நிறைந்த எதிர்ப்புக்கள் வெளியிடுவது, தேசிய நிறுவனங்களின் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றுவது—இவையே தேசிய இயக்கத்தின் மிதவாதத் தரப்பினர் கடைப்பிடித்த போராட்ட வடிவங்கள்.

மக்கள் போராட்டங்களை மிதவாதிகள் கடுமையாக எதிர்த்தார்கள். காலனியாட்சி முறை நாட்டில் நிலைத்திருக்க வேண்டும் என்ற கருத்தில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள்.

ஆனால் தீவிரப் போக்குள்ள இடதுசாரி தேசிய இயக்கத்துக்குள் முதிர்ந்து வந்தது. வர்த்தக முதலாளி வர்க்கத்தின் தாழ்படியினர்,

சிறு தொழில் நிலையங்களின் உடைமையாளர்கள், செல்வம் குறைந்த அறிவுஜீவிகள்—பள்ளி ஆசிரியர்கள், எழுத்தர்கள், மருத்துவர்கள்—ஆகியோரைச் சிறு முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகள் பிரதி நிதித்துவப்படுத்தினர்கள். அதே சமயம் சீரழிவுக்கு உள்ளான சிறு நிலப்பிரபுக்களுடனும் உயர்படியில் இருந்த விவசாயிகளுடனும் அவர்கள் தொடர்பு கொண்டிருந்தார்கள்.

மிதவாதிகள் போலன்றி வங்காளச் சிறு முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகள் மக்கள் திரளின் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தில் ஆழ்ந்த அனுதாபம் கொண்டிருந்தார்கள். அவுரித் தோட்டக் கிளர்ச்சியின் போது ஜனநாயகவாதி எழுத்தாளர் தீன பந்து மித்திரர் நீல் தர்ப்பண் (நீலக் கண்ணாடி) என்ற தலைப்பில் ஒரு நாடகம் எழுதினர். கட்டாய ஒப்பந்த முறையை இதில் அவர் தாக்கி இருந்தார். வங்காள சமூகத்தின் முன்னணி வட்டாரங்களில் இந்த நாடகம் பெருத்த உளப்பதிவு ஏற்படுத்தியது. 1873ம் ஆண்டில், பாப்னா கிளர்ச்சி நடந்த சமயத்தில் மீர் மஷ்ரப் உசேன் எழுதிய ஜமீன் தார் தர்ப்பண் (ஜமீன்தாரின் கண்ணாடி) என்ற நாடகம் வெளியாயிற்று. ஜமீன்தார்களுடைய பண்ணைகளில் தாண்டவம் ஆடிய நிலப்பிரபுத் துவத் தான்தோன்றித்தனம் இந்த நாடகத்தில் உள்ளபடி சித்திரிக் கப்பட்டிருந்தது. விவசாயிகள் நடித்த இந்த நாடகம் கிராமங்களில் காட்டப்பட்டது வங்காள ரயத்துக்களிடையே புரட்சி மனப்பான்மை பரவுவதற்குத் துணை புரிந்தது.

விவசாயிகளின் வெகுஜனப் போராட்டங்களின் விளைவாக நாட் டின் நிர்வாக அமைப்பில் மாறுதல்கள் நிகழும் என்றும் காலனியாட்சி அடிமைத்தனம் தளர்ந்து முடிவில் ஒழிந்து போகும் என்றும் வங்காளத்தின் இடதுசாரித் தேசியவாதிகள் நம்பினர்கள்.

வங்காளத்தின் சிறு முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகள் இந்தியா முதலாளித்துவ முறையில் வளர்ச்சி பெற வேண்டும் என்று பாடுபட்ட வர்களின் நலன்களை எல்லோரையும் விட ஒத்திசைந்த முறையில் வெளியிட்டு வந்தார்கள். அவர்களது சமூக-அரசியல் கண்ணோட்டங் களில் இருந்த நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போக்குக்கு இதுவும் ஒரு காரணம் ஆகும்.

இந்தியச் சிறு முதலாளி வர்க்க இளைஞர்களின் விரிவான வட் டாரங்களைத் தேசபக்தி உணர்வில் பயிற்றுவது தங்கள் நடைமுறைச் செயல்களின் முக்கியப் பணி என்று சிறு முதலாளி வர்க்க ஜனநாயக வாதிகள் கருதினர்கள். எனவேதான் தங்கள் கருத்துக்களைப் பத்திரிகை கள் வாயிலாகப் பரப்புவதற்கு அவர்கள் முதன்மை கொடுத்தார்கள். கோஷ் சகோதரர்கள், ஹரிஷ்சந்திர முகர்ஜி, அந்தக் காலத்தின் தலைசிறந்த வங்காளி எழுத்தாளர் பங்கிம்சந்திர சட்டோபாத்தியா

யர் ஆகியோரும் பிறரும் தாங்கள் வெளியிட்டு வந்த செய்தித் தாள்கள், சஞ்சிகைகள் வாயிலாகச் சிறு முதலாளி வர்க்க தேசியவாதக் கருத்துக்களைப் பிரசாரம் செய்து வந்தார்கள். ஆனால், மிதவாதி களுடையவற்றிலிருந்து வேறான சொந்த அரசியல் நிறுவனங்கள் அவர்களிடம் இல்லாதது அவர்களுடைய பலவீனமாக இருந்தது. சிறு முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகளின் செயல்களில் இருந்த இந்தச் சிறப்பியல்பு வங்காளம் போன்றே இந்தியாவில் தேசிய இயக்கத்தின் ஒரு மையமாக விளங்கிய மகாராஷ்டிரத்திலும் காணப்பட்டது.

இங்கே இடதுசாரித் தீவிர தேசியவாதம் தோன்றக் காரணமாய் இருந்தவர் பிரபல இந்தியப் புரட்சிக்காரரும் ஜனநாயகவாதியுமான பால கங்காதர திலகர் (1856—1920). தொன்மை வாய்ந்த மகாராஷ் டிரப் பிராமணக் குடும்பத்தில் பிறந்த திலகர் மராட்டியர்களின் விடு தலைப் போராட்ட மரபுகளைச் சிறு வயதிலேயே புரிந்து கொண்டார். சிவாஜியின் தலைமையில் மராட்டிய அரசு அமைந்த காலப் பகுதியில் தோன்றியவை இந்த மரபுகள். திலகரின் அரசியல் கிளர்ச்சிப் பிர சாரம் முழுவதிலும் தேசிய மரபுகள் ஊறித் ததும்பின. மராட்டிய இளைஞர்கள் மராட்டியத் தேசியவாத உணர்வில் பயிற்சி பெற வசதி அளிப்பதும் எல்லோரும் எளிதில் சேரக் கூடியதுமான பள்ளி அமைப் பது பற்றிக் கல்லூரி மாணவராக இருந்த போதே திலகர் ஒத்த கருத்துடைய தம் தோழர்களுடன் கலந்து ஆலோசித்தார். ''புதிய ஆங்கிலப் பள்ளி'' 1880ம் ஆண்டு பூனாவில் திறக்கப்பட்டது. அடுத்த ஆண்டு முதல் திலகர் மராட்டி மொழியில் கேசரி என்ற செய்தித் தாளையும் ஆங்கிலத்தில் மராட்டா என்ற செய்தித்தாளையும் வெளி யிடத் தொடங்கினார்.

இந்தப் பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளிலும் பள்ளியில் கற்பித்த பாடங்களிலும் திலகரும் அவருடைய தரப்பினரும் இந்தியாவின் தேசிய முதலாளி வர்க்கம் அனைத்தினதும் நலன்களைப் பாதுகாத்து மிக மிக ஒத்திசைந்த முறையில் போராடி வந்தார் கள். இந்தியத் தொழிலதிபர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான போராட்ட வடிவமாக ஆங்கிலச் சரக்குக்களின் பகிஷ்காரத்தைத் திலகர் தெரிந்தெடுத்தார்.

வங்காளக் குட்டி பூர்ஷ்வா ஜனநாயகவாதிகள் போலவே திலகர் திரளான பொது மக்களின் பொருளியல் நிலைமையை மேம்படுத்து வதற்கு ஆதரவாய் இருந்தார். ஆனால் நிலவுடைமைப் பிரச்சினை குறித்த தெளிவான செயல்திட்டம் எதையும் அவர் முன்வைக்க வில்லை.

காலனியாட்சி முறைக்கு எதிராக மக்கள் திரளனது போராட்டத் தின் பால் திலகர் பரிவு காட்டினார். ஆனால் ஆயுதப் போராட்டம்

சுதந்திரம் பெறுவதற்குச் சரியான வழி என்று அவர் எண்ணவில்லை. ''வெகுஜனங்களை'' (அதாவது விரிவான சிறு முதலாளி வர்க்க வட்டாரத்தினரை) வருங்காலச் சுதந்திரப் போராட்டத்துக்கு ஆயத்தம் செய்வதே இந்தக் கட்டத்தில் தங்கள் முக்கியப் பணி என்று திலகர்வாதிகள் கருதினர்கள்.

வங்காளத்தையும் மகாராஷ்டிரத்தையும் தவிர்த்து இந்தியாவின் மற்றப் பிரதேசங்களில் 70—80க்களில் தேசிய இயக்கம் இத்தகைய வளர்ச்சித் தரத்தை எட்டவில்லை.

அனைத்து இந்திய தேசிய இயக்கத்தின் தொடக்கமும் இந்திய தேசியக் காங்கிரசின் ஸ்தாபனமும்

இந்தியாவில் தேசிய விடுதலை இயக்கம் வளர்ச்சி அடைந்ததைக் கண்ட பிரிட்டிஷ் காலனி ஆட்சியாளர்கள் அடக்குமுறைகளைக் கையாண்டார்கள். 1878ம் ஆண்டில் வைசிராய் லிட்டன் (1870—1880) ஆயுதச் சட்டம் பிறப்பித்தான். இதன்படி சுடு கருவிகள் (வேட்டை விலங்குகளிடமிருந்து தற்காத்துக் கொள்வதற்காகக் கூட) வைத்திருப்பது இந்தியர்களுக்குத் தடை செய்யப்பட்டது. அதே ஆண்டு கொடுமை மிக்க அச்சுச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இந்திய மொழிகளில் அச்சாகும் எல்லா வெளியீடுகளும் முன் தணிக்கைக்கு உள்ளாக வேண்டும் என்று இந்தச் சட்டம் விதித்தது. இது அடக்குமுறைத் தன்மை கொண்டிருந்தது.

ஆனால் இந்த அடக்குமுறைகள் விரும்பிய பயனைத் தரவில்லை. எனவே 1880ல் பிரிட்டனில் ஆட்சிக்கு வந்த மிதவாதிகள் இந்திய முதலாளி வர்க்க-நிலப்பிரபு தேசியவாதிகளை நைச்சியமாகப் பசப்பும் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர்கள். புது வைசிராய் ரிப்பன் (1880—1884) அச்சுச் சட்டத்தை ரத்து செய்தான்.

1882ல் பெரிய நகரங்களின் நகராண்மைக் கழக உறுப்பினர்களில் பெரும்பாலோர் உடையோர் வர்க்கங்களின் மேற்படியினரால் தேர்ந்தெடுக்கப்படலானார்கள். இந்திய மிதவாதிகளைப் பசப்பும் நோக்கத்துடன் செயற் குழு உறுப்பினன் இல்பர்ட் என்பவனால் வரையப்பட்ட ஒரு சட்ட மசோதாவை ரிப்பன் ஆதரித்தான். நீதி மன்றங்களில் இந்தியர்கள் பால் காட்டப்பட்ட இன வேறுபாடு இதன்படி ஒழிக்கப்பட்டது. ஆனால் பிரிட்டிஷ் அதிகார வர்க்கமும் இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் வர்த்தக-தொழில் அதிபர்களும் எதிர்த்ததால் ''இல்பர்ட் மசோதா'' பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் தோல்வியுற்றது. விளைவாக ரிப்பன் விரைவில் பதவியிலிருந்து விலக நேர்ந்தது. இந்தப் பிரச்சினை குறித்து நடந்த போராட்டம் காரணமாக

இந்தியத் தேசியவாதிகள் நாடு பரவிய அளவில் தங்கள் முயற்சிகளை ஒன்றுபடுத்துவதன் இன்றியமையாமையை நன்கு உணர்ந்தார்கள்.

1870க்களிலும் 80க்களின் தொடக்கத்திலும் புதிய புரட்சி நெருக்கடி இந்தியாவில் முதிர்ந்தது. முதலாளி வர்க்கத் தேசிய வாதிகளின் தீவிரவாதத் தரப்பினர் மக்கள் இயக்கத்துடன் தங்கள் செயல்களை இணைத்து விடுவார்களோ என்று காலனி ஆட்சியாளர்கள் அஞ்சினர்கள். ''உயர் கல்வி பெற்ற வர்க்கங்களின் பிரதிநிதிகள்... மக்கள் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி, திட்டமிட்ட குறிக் கோளை நோக்கி அவற்றைச் செலுத்தி, அவற்றைத் தேசியக் கிளர்ச்சி யாக மாற்றக் கூடும்'' என்று தன் ஓர் அறிக்கையில் குறிப்பிட்டான் பெரிய பிரிட்டிஷ் அதிகாரியான அல்லன் அக்டேவியன் ஹியூம்.

ஆகையினால்தான் மிதவாதிகளின் தலைமையில் ஒன்றித்த அனைத்து இந்திய அரசியல் நிறுவனம் அமைப்பதைக் காலனி ஆட்சியாளர்கள் ஆதரித்தார்கள்.

70க்களின் இறுதி முதலே வெவ்வேறு சமூக-அரசியல் நிறுவனங் களின் பிரதிநிதிகளுக்கு இடையே நெருங்கிய தொடர்புகள் ஏற் படலாயின. தேசியவாதிகளின் அனைத்து இந்திய நிறுவனம் அமைப் பதற்கான முதல் முயற்சிகள் 1883—1884ல் செய்யப்பட்டன.

முடிவாக 1885ம் ஆண்டு தேசியக் காங்கிரசின் முதல் மகாநாடு பம்பாய் நகரில் கூடியது. முதலாளிகள்-நிலப்பிரபுக்களின் முதலாவது அனைத்து இந்திய நிறுவனம் இது. அதிகாரிகளின் ஆதரவுடன் இது அமைக்கப்பட்டது. வைசிராய் டபெரின் (1884—1888) உத்தரவுப் படி ஹியூம் காங்கிரசின் முதலாவது பொதுச் செயலாளன் ஆனான்.

இந்திய முதலாளி வர்க்கத்தின் மேற்படியினர், தேசிய மனப் பான்மை கொண்ட நிலப்பிரபுக்கள் ஆகியோரின் நலன்களைத் தேசியக் காங்கிரஸ் வெளியிட்டது. காங்கிரசின் முதல் ஆறு மகாநாடுகளில் ஐம்பது சத விகிதம் பிரதிநிதிகள் முதலாளி வர்க்க-நிலப்பிரபு அறி வாளிகள், இருபத்தைந்து சத விகிதம் வர்த்தகர்கள், வக்கீல் கடன் முதலாளிகள் வக்கீலாரத்தினர், மீதி இருபத்தைந்து சத விகிதம் நிலப்பிரபுக்கள்.

தேசிய இயக்கத்தினது மிதவாதத் தரப்பின் பிரதிநிதிகள் காங் கிரசில் ஆதிக்கம் வகித்தார்கள். ஆனால் தங்கள் செயல்திட்டத்தில் அவர்கள் சற்று முன் சென்றார்கள். தேசியத் தொழில் துறையைக் காத்து வளர்க்க வேண்டும் என்றும் வரிகளைக் குறைக்க வேண்டும் என்றும் நிறுவன அமைப்புள்ள முதலாளித்துவக் கடன் வசதி முறை நாட்டில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அதிக ஒத்திசைந்த முறையில் கோரிக்கை விடுத்து வந்தார்கள். இந்தியத் தொழில் துறை விஷயத்தில் வேறுபாடு பாராட்டும் காலனி ஆட்சியாளர்களின்

தீர்வை முறையைக் காங்கிரஸ் அதிக வன்மையாக எதிர்த்தது. தேசியத் தொழில் துறைக்கு ஊக்கம் அளிக்கும் நோக்கத்துடன் தொழில் துறை மகாநாடுகளும் பொருட்காட்சிகளும் காங்கிரசின் ஆதரவில் நடத்தப்பட்டன. நிலப் பிரச்சினை பற்றிய காங்கிரஸ் திட்டம் நிலையான வரி விதிப்பு முறையைச் செயல்படுத்தும்படிக் கோரியது.

வெகுஜனங்களிடமிருந்து தொலைவில் இருந்த இந்திய மிதவாதிகள் தங்கள் சொந்த மக்களை அஞ்சினார்கள். 1893ல் நடந்த காங்கிரஸ் ஆண்டு மகாநாட்டில் தாதாபாய் நௌரோஜி பின்வருமாறு கூறினார்: ''அரசாங்கம் உறுதியும் நீதியும் உள்ளதாக இருக்க வேண்டும்... எல்லா விதமான சட்ட விரோதச் செயல்களையும் குடிமக்களின் அமைதியைக் குலைக்கும் முயற்சியையும் ஒடுக்குவது அதன் உடனடிக் கடமை ஆகும்.''

சட்ட மன்றங்களின் உறுப்பினர் தொகை அதிகமாக்கப்பட்டு இந்திய முதலாளி-நிலப்பிரபு வர்க்க மேற்படியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் அவற்றில் பெரும்பான்மையோராக இருக்க வகை செய்யப்பட வேண்டும் என்பதே அரசியல் துறையில் காங்கிரஸ் திட்டம் விடுத்த கோரிக்கை. சட்ட மன்றங்களில் இந்த வட்டாரத் தினரின் பிரதிநிதித்துவம் 1892ல் சிறிது அதிகமாக்கப்பட்டது.

தேசியக் காங்கிரஸ் நிறுவப்பட்ட பின் தேசிய இயக்கத்துக்குள் பல்வேறு குழுக்களிடையே போராட்டம் வலுத்தது. 90க்களின் நடுவில் பூனா சார்வஜனிக் சபாவின் தலைமையில் பெரும்பான்மை பெறுவதில் திலகர் வெற்றி அடைந்தார். அந்தக் காலத்துக்குள் அவர் நாட்டின் குட்டி பூர்ஷ்வாக்களுடைய தலைவராக எல்லோராலும் ஏற்கப்பட்டார். மராட்டா செய்தித்தாளில் வெளியான அவருடைய கட்டுரைகள் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் தீவிரத் தேசியவாதம் உரு ஆவதற்குப் பெரிதும் உதவின.

1895ம் ஆண்டில் கணபதி விழாவும் மராட்டிய வீரன் சிவாஜி விழாவும் பொது மக்கள் திருநாட்களாகக் கொண்டாடத் திலகர் ஏற்பாடு செய்தார். இந்த விழாக்கள் மாட்சி மிக்க அரசியல் மேடைகளாக மாறின. திலகர்வாதிகள் இவற்றில் வெகுஜன அரசியல் கிளர்ச்சிப் பிரசாரம் நடத்தினர்கள். விழாக்கள் வங்காளத்திலும் கொண்டாடப்படலாயின.

ஆனால் திலகர்வாதிகளுடைய செயல்களின் இந்து மதச் சாயல் எதிர்மறைத் தன்மையும் கொண்டிருந்தது. பிரிட்டிஷ்காரர்களின் செயல்முறை ஆதரவுடன் முகமதியக் கல்வி நிறுவனங்கள் முதலாளி வர்க்கத் தேசியவாதத்துக்கு எதிர் நிறையாக 80க்களின் தொடக்கம் முதல் செயலாற்றத் துவங்கின. இவை தேசிய இயக்கத்தில் இந்து-முஸ்லிம் வேற்றுமை அம்சத்தைப் புகுத்தின.

இந்த இயக்கத்தின் தலைவராக இருந்தார் சையது அகமதுகான். கல்வித் தேர்ச்சி பெற்ற முகமதிய நிலப்பிரபுக்களுக்கும் பெருத்த வியாபாரிகளுக்கும் இவர் பிரதிநிதியாக இருந்தார். முகமதியர் களிடையே கல்விச் சங்கங்களை இவர் அமைத்தார், அலிகார் கல்லூரியை நிறுவினார். காலனியாட்சி அமைப்புக்குத் தக்க அலுவலர் களாக முஸ்லிம் இளைஞர்களை இந்தக் கல்லூரி பயிற்றியது. சையது அகமதுகான் காலனியாட்சி அரசாங்கத்தின் தீவிர ஆதரவாளராக விளங்கினார்.

சையது அகமதுகானைப் பின்பற்றியவர்களோடு கூடவே வட இந்திய முகமதிய சமுதாயத்தினிடையே சிறு முதலாளி வர்க்க ஜன நாயகவாதிகளின் நிறுவனம் செயலாற்றி வந்தது. இதன் மையம் (டில்லிக்கு அருகே) தேவ்பந்த் என்னும் இடத்தில் இருந்தது. ஆனால் இந்த இயக்கத்தின் மதச் சாயல் மற்றச் சமூக-அரசியல் தேசியவாத நிறுவனங்களோடு தேவ்பந்த் மையம் நெருங்கி வருவதற்குத் தடை யாக இருந்தது.

இந்து-முஸ்லிம் பிணக்கைத் தூண்டி விடுவது 19ம் நூற்றாண்டின் கடைசி முப்பது ஆண்டுகள் முதல் ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள் கையின் ஆயுதங்களில் ஒன்றாக இடம் பெற்று விட்டது. பம்பாயில் பெருத்த இந்து-முஸ்லிம் கலகத்தை மூட்டி விடுவதில் ஆங்கிலேயர் கள் 90க்களில் வெற்றி அடைந்தார்கள்.

பிரிட்டிஷ் எதிர்ப்பு மனப்பான்மை பொதுவாக வளர்ச்சி பெற்றி ருந்த நிலையில், திலகரைப் பின்பற்றியவர்களான சப்பேக்கர் சோத ரர்கள் ராண்டு என்னும் ஆங்கில அதிகாரியை 1897ல் கொன்று விட்டார்கள். இதன் தொடர்பாகத் திலகர் கைது செய்யப்பட்டுச் சிறைத் தண்டனை விதிக்கப் பெற்றார்.

19ம் நூற்றாண்டின் இறுதி வாக்கில் நாட்டில் நிலைமை சிக்கலா யிற்று. தேசிய விடுதலைப் போராட்டத்தில் புதிய கட்டம் தொடங் கியது.

இந்தியா முதல் உலக யுத்தத்துக்கு முந்திய ஏகாதிபத்திய, ஆசிய விழிப்புக் காலப் பகுதியில் (1897-1917)

பிரிட்டிஷ்-இந்திய முரண்பாடுகள் கூர்மைப்படுதல்

இந்தியாவின் பொருளாதார, சமுதாய வாழ்வில் 19ம் நூற்றாண்டின் பிற்பாதியிலேயே காணப்பட்ட போக்குகள் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேற்கொண்டு வளர்ச்சி அடைந்தன. இந்த நிகழ்முறையின் உள்ளடக்கமாக விளங்கியது முதலாளித்துவத்தின் வளர்ச்சி. கூரிய வர்க்க, தேசிய முரண்பாடுகளை இது தோற்றுவித்தது.

காலனியாட்சிச் சுரண்டல் தீவிரமாகிறது

ஏகாதிபத்தியக் காலக் கட்டத்துக்கு இயல்பான காலனியாட்சிச் சூறையாடலின் வடிவங்களும் முறைகளும் புது நூற்றாண்டின் தொடக்க முனையில் அதிக முக்கியத்துவம் பெற்றன.

1893—1899ல் காலனியாட்சி அதிகாரிகள் நிதிச் சீர்திருத்தம் செய்தார்கள். ஆட்சித் தலைமை நாட்டின் விவசாய மூலப் பொருள் துணைநிலம் என்ற இந்தியாவின் நிலைமையை இது நிலைப்படுத்தி, பிரிட்டிஷ் மூலதனம் இந்தியாவுக்குள் புகுவதை எளிதாக்கியது. வெள்ளி ரூபாய் அச்சடித்து வந்த அக்கசாலைகள் மூடப்பட்டன. முன்பு வழக்கில் இருந்த வெள்ளி மதிப்பளவின் இடத்தில் ரூபாயின் தங்க மதிப்பளவு புகுத்தப்பட்டது. ரூபாயின் விகிதம் உயர்த்தப்பட்டுப் பிரிட்டிஷ் பவுண்டு-ஸ்டர்லிங்கைச் சார்ந்தது ஆக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே சரக்குப் பரிமாற்றம் வளர்ச்சி அடைய உதவின. இந்தியாவில் இறக்கு

மதியான சரக்குகளுக்கும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான சரக்குகளுக்கும் இடையே விலைகளில் இருந்த வேறுபாட்டையும் இவை அதிகப்படுத்தின. மற்ற ஆசிய நாடுகளின் வெள்ளி நாணயங்கள் மதிப்பிழந்து விட்டதால் அவற்றுடன் இந்தியாவின் வர்த்தக உறவுகள் இடர்களுக்கு உள்ளாயின. இந்த நடவடிக்கைகள் வர்த்தகத்தின் வாயிலாகவும் சமமற்ற சரக்குப் பரிமாற்றத்தின் வாயிலாகவும் பிரிட்டிஷ் ஏற்றுமதியாளர்கள் தங்கள் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள உதவின. நிதிச் சீர்திருத்தத்தின் நேரடியான விளைவால் அனேக இந்திய வர்த்தக நிலையங்கள் சீரழிந்தன, விலைகள் உயர்ந்தன. எல்லாவற்றிலும் முக்கியமாக, வெள்ளி நகைகள் கணிசமாக மதிப்பு இழந்தன. இந்தியாவின் விரிவான மக்கள் திரள்களின் பிரதானச் சேமிப்பு வடிவமாக விளங்கிய இந்த நகைகள் மதிப்பில் தாழ்ந்ததனால் உழைப்பாளி மக்களின் நிலைமை கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இந்தியச் சந்தையில் பிரிட்டிஷ் ஏற்றுமதியாளர்களின் நிலையை வலுப்படுத்திய நிதிச் சீர்திருத்தம் இந்தியாவை ஆட்சித் தலைமை நாட்டின் விவசாய-மூலப் பொருள் துணைநிலமாக மாற்ற உதவியது. பிரிட்டனுடனும் மற்ற முதலாளித்துவ நாடுகளுடனும் இந்தியாவுக்கு இருந்த வர்த்தக உறவுகளில் சமமற்ற பண்ட மாற்றம் நிகழ்ந்ததால் பிரமாண்டமான அளவில் பொருளியல் செல்வங்களை அவற்றின் மதிப்புக்கு மிகக் குறைவான விலைகள் கொடுத்தோ அல்லது ஒரு விலையும் கொடுக்காமலோ வாரிச் செல்வது வெளி நாட்டாருக்குச் சாத்தியம் ஆயிற்று. பின் வரும் புள்ளி விவரங்கள் இந்தக் கூற்றை உறுதிப்படுத்தும்: 1901ம் ஆண்டு இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதியைக் காட்டிலும் மதிப்பில் 110 லட்சம் பவுண்டு அதிகமாக இருந்தது; 1909/10—1913/14 ஆண்டுகளில் இது சராசரி 225 லட்சம் பவுண்டு அதிகமாக இருந்து வந்தது.

இவற்றோடு கூடவே பிரிட்டிஷ் மூலதனத்தை முதலீடு செய்யும் களமாக இந்தியாவைச் சுரண்டுவது நாளுக்கு நாள் அதிக முக்கியத்துவம் பெறலாயிற்று. இருப்புப் பாதைகளும் தபால் தந்திப் போக்குவரத்துச் சாதனங்களும் நிறுவுவதிலும் பயன்படுத்துவதிலும் பாசன வசதிகளிலும் தோட்டக்கால் வேளாண்மையிலும் கனியச் சுரங்கத் தொழிலிலும், நெசவாலை, உணவுப் பண்டத் தொழில் துறைகளிலுமே பிரிட்டிஷ் பணம் முன்போன்று தொடர்ந்து முதலீடு செய்யப்பட்டு வந்தது. இவ்வாறே வங்கித் தொழிலிலும் இன்ஷூரன்ஸ் தொழிலிலும் கணிசமான பணத் தொகைகள் முதலீடு செய்யப்பட்டன.

இந்தியத் தேசியப் பொருளாதாரத்தின் எந்தத் துறைகள்

இந்தியாவைச் சுரண்டுவதுடன் நேரான தொடர்பு கொண்டிருந்தன வோ, எவற்றின் வளர்ச்சியால் இந்தியச் சந்தையில் பிரிட்டிஷ் சரக்கு களுக்குப் போட்டி ஏற்படும் அபாயம் உண்டாகவில்லையோ, முதன்மை யாக அந்தத் துறைகளிலேயே பிரிட்டிஷ் நிதி மூலதனம் புகுந்தது.

வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் தென் இந்தியாவிலும் இருந்த தேயிலைத் தோட்டங்களில் பெரும்பாலானவையும் மைசூர் சமஸ் தானக் காப்பித் தோட்டக்கால்களும் திருவிதாங்கூர் சமஸ்தான ரப்பர்த் தோட்டங்களும் கல்கத்தாவில் இருந்த சணல் தொழிற்சாலை கள் யாவும் இயந்திரத் தொழிற்கூடங்களின் முக்கியப் பகுதியும் பம்பாயிலும் மற்ற மாநிலங்களிலும் இருந்த நெசவாலைகளில் கணிச மான பகுதியும் நாட்டில் இருந்த அனேகமாக எல்லா இருப்புப் பாதைத் தொழிற்கூடங்களும் சுரங்கங்களும் பிரிட்டிஷ் ஏகபோக நிறுவனங்களுக்குச் சொந்தமாய் இருந்தன. இந்தியாவின் ஆகப் பெரிய தொழில் நிலையங்களைப் பிரிட்டிஷ்காரர்கள் உடைமையாகக் கொண்டிருந்தார்கள். 1915ம் ஆண்டு சணல் தொழில் துறையிலும் துறைமுகத் தொழிலிலும் ஈடுபட்டிருந்த எல்லாத் தொழிலாளர் களும் இருப்புப் பாதை, டிராம்வே தொழிற்கூடங்களின் அனேகமாக எல்லாத் தொழிலாளர்களும் சர்க்கரை ஆலைகளிலும் கம்பளி நெச வாலைகளிலும் வேலை செய்தவர்களில் பாதித் தொழிலாளர்களும் காகிதத் தொழிற்சாலைத் தொழிலாளர்களில் நூற்றுக்கு எண்பது பெயரும் கட்டுமான, உலோக வார்ப்புத் தொழிற்சாலையினரில் நூற்றுக்கு அறுபது பெயரும் பிரிட்டிஷ் மூலதனத்துக்குச் சொந்த மான தொழில் நிலையங்களில் பணியாற்றி வந்தார்கள்.

இந்தியாவில் பிரிட்டிஷ் முதலீடுகளின் மதிப்பு 1896 முதல் 1910 வரை 400—500 கோடியிலிருந்து 600—700 கோடி ரூபாய் வரை உயர்ந்தது. இந்தியப் பொருளாதாரத்தில் பிரிட்டிஷ் நிதி மூலதனத்தின் ஆதிக்கத்தைப் பின்வரும் விவரங்கள் துலக்கமாக விளக்கிக் காட்டுகின்றன: 1905ம் ஆண்டு பிரிட்டனில் பதிவு செய்யப் பட்டு இந்தியாவில் தொழில் நடத்திவந்த 165 கம்பெனிகளின் மூலதனம் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட (பிரிட்டிஷ்காரர் களுடையவும் இந்தியர்களுடையவும்) கம்பெனிகளது மூலதனத்தைக் காட்டிலும் மும்மடங்கு அதிகமாய் இருந்தது.

ஆனால் இந்தியப் பொருளாதாரத்தில் பிரிட்டிஷ் ஏகபோகங் களின் நிலைகள் தேசியப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் ஆங்கிலேயர்களின் நேரடியான முதலீடுகளால் மட்டும் தீர்மானிக்கப் படவில்லை. தான் கைப்பற்றிய ஆதிக்க நிலைகளைப் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் தான் ஏற்படுத்தி இருந்த பொருளாதார நெம்புகோல்களின் உதவியால் வசப்படுத்தி வைத்திருந்தது.

இந்தியாவில் தன் பொருளாதார, அரசியல் ஆதிக்கத்தை நிலை நிறுத்தி வைக்கப் பிரிட்டனுக்கு உதவிய முக்கிய நெம்புகோலாகக் காலனியாட்சி அரசு இயந்திரம் முன்போலவே விளங்கி வந்தது. இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்களின் மொத்த முதலீடுகளில் பாதிக்கு மேல் காலனியாட்சி அரசின் கடன்களிலும் கடன் பத்திரங்களிலும் இருந்தது. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் காலனியாதிக்கத் துர்ச்சாகசப் போர் முயற்சிகளுக்குத் தேவைப்பட்ட பணத்தை இந்திய மக்கள் முன்போலவே கொடுத்துவர வேண்டி இருந்தது. சீனாவில் ''பாக்சர் கிளர்ச்சி'' ஒடுக்கப்பட்டது, திபெத்து மீது படையெடுப்பு, போயர்களுடன் போர் முதலியன இத்தகையவை. இந்தியாவின் ஸ்டர்லிங் ''கடன்'' 1900—1913ல் 13 கோடி 30 லட்சம் பவுண்டுகளிலிருந்து 17 கோடி 70 லட்சம் பவுண்டுகளாக அதிகரித்தது.

இந்தியாவில் பிரிட்டிஷ் காலனியாட்சி ஏகபோகங்களின் நிறுவனங்களான மானேஜிங் ஏஜென்சிகளின் முக்கியத்துவம் அதிகம் ஆயிற்று. மிகப் பெரிய பிரிட்டிஷ் ஏகபோகங்களின் மகவு நிலையங்களான புதிய மானேஜிங் ஏஜென்சிகள் பழையவை போலவே பிரிட்டிஷ் நிதி மூலதனத்துடனும் ஆகப் பெரிய பிரிட்டிஷ் காலனி வங்கிகளுடனும் நெருக்கமாக இணைந்திருந்தன. இந்தியாவில் இருந்த காலனியாட்சி நிர்வாகத் தலைமையினரோடும் பிரிட்டிஷ் நிதியதிபர்கள் குழுவோடும் அதிகார வர்க்கத்தோடும் நெருங்கிய தொடர்பு கொண்டு அவை செயலாற்றி வந்தன. அவை ''ஒரு வகையான குப்பி வாயாக... விளங்கின. பிரிட்டிஷ் மூலதனம் இதன் வழியாக இந்தியாவில் பெருகி, இந்த ஏஜென்சிகளால் நிறுவப்பட்ட வெவ்வேறு நிலையங்களுக்கு இடையே வினியோகிக்கப்பட்டது'' என்று பிரபல இந்தியப் பொருளாதார விற்பன்னர் ப. லோகநாதன் நகைச்சுவையுடன் எழுதினார். மானேஜிங் ஏஜென்சிகள் தங்களோடு இணைந்த தொழில் நிலையங்களின் லாபங்களில் குறித்த பங்கு பெற்று வந்தன. இந்தியாவில் செயல்பட்டுவந்த பெரும் பகுதியான பிரிட்டிஷ் மூலதனத்தையும் இந்திய மூலதனத்தையும் அவை தங்கள் கண்காணிப்பில் வைத்திருந்தன.

இந்தியா காலனியாட்சி மூலம் சுரண்டப்படுவது தீவிரமானதை ஒட்டிப் பிரிட்டிஷ் காலனி வங்கிகளின் பாத்திரம் அதிக அவசியமானது ஆயிற்று. லண்டன் வர்த்தக மையத்தின் மற்றொரு முக்கியப் பொருளாதார நெம்புகோலாக இருந்தன இந்த வங்கிகள். நாணய மாற்று வங்கிகள் எனப்பட்ட மெர்க்கன்டைல் பாங்கு, சார்ட்டர்டு பாங்கு ஆவ் இண்டியா ஆகியவையும் பிறவும் இந்தியாவின் வெளி நாட்டு வர்த்தகத்தை மேற்பார்த்தன, மொத்த ஏற்றுமதி-இறக்கு

மதி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த மிகப் பெரிய பிரிட்டிஷ் வர்த்தக நிலையங்களுக்கு நிதி வசதி அளித்தன. இந்திய வர்த்தக-வட்டிக் கடன் தரகு மூலதனத்தின் வாயிலாக இந்த வங்கிகள் மூலப் பொருள்களை உற்பத்தி செய்தும் வெகுஜன உபயோகத்துக்கான பிரிட்டிஷ் தொழிற்சாலைச் செய்பொருள்களை வாங்கியும் வந்த நாட்டுப்புறத்துடன் தொடர்பு கொண்டிருந்தன. அதே சமயம் நாட்டில் நிறுவன அமைப்புள்ள தொழில் துறைக் கடன் வசதி அனேகமாக இருக்கவில்லை. எனவே இந்தியத் தொழிலதிபர்கள் ஒன்று மானேஜிங் ஏஜென்சிகளின் உதவியை நாட வேண்டி இருந்தது, இல்லாவிட்டால் பெரிய வட்டிக் கடன் முதலாளிகளான சராப்புக்களைக் கேட்க வேண்டியிருந்தது. இந்த சராப்புக்கள் உள்நாட்டு வர்த்தகத்தைக் கண்காணித்தும் குடிசைத் தொழிலர்களையும் சிறு கைத்தொழில் உற்பத்தி நிலைய அதிபர்களையும் தங்கள் பணத்துக்கு அடிமைப்படுத்தி வைத்திருந்தார்கள்.

நாட்டில் சரக்கு-பண உறவுகள் மேற்கொண்டு வளர்ச்சி அடைந்தது, ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுத்துவமும் ஆதிக்கம் செலுத்தி வந்த நிலைமைகளில் உள்நாட்டுச் சந்தை உருவானது ஆகியவற்றின் விளைவாக வர்த்தக, வட்டிக் கடன் மூலதனம் பெருத்த வளர்ச்சி அடைந்தது. இது முதற்படியாக வெளிநாட்டு ஏகபோகங்களின் தரகு நிறுவனமாகச் செயல்பட்டது. 20ம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளின் தொடக்கத்தில் வட்டிக் கடன் முதலாளிகளின் வருமானம் ஆண்டுக்கு 20 கோடி ரூபாயாக இருந்தது.

நாட்டின் முக்கியமான வர்த்தக மையங்களில் பெருத்த தரகு வர்த்தக முதலாளி வர்க்கப் படிவு அமைந்தது. இந்தியாவில் பிரிட்டனின் ஏற்றுமதி-இறக்குமதி நடவடிக்கைகளில் இது பணி ஆற்றியது.

தேசிய முதலாளி வர்க்கம் உறுதிப்படுதல்

அதே சமயம் வர்த்தகத்திலும் வட்டிக் கடன் தொழிலிலும் இந்திய உடைமையாளர் வர்க்கங்கள் திரட்டிக் குவித்த செல்வம் வர வர அதிக அளவில் இயந்திரத் தொழில் துறைக்கு மாற்றப்பட்டு வந்தது. தேசியத் தொழில் முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுவது பிரிட்டிஷாரின் கொள்கையாக இருந்த போதிலும் இந்தியப் பொருளாதாரத்தில் முதலாளித்துவ அமைப்பு தொடர்ந்து உறுதிப்பட்டு வந்தது. 1900—1914ல் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட கூட்டுப் பங்குக் கம்பெனிகளின் எண்ணிக்கை 1360லிருந்து 2552 வரை அதிகரித்தது. அவற்றின் செலுத்தப்பட்ட மூலதனம் 36 கோடி 20

லட்சத்திலிருந்து 72 கோடி 10 லட்சம் ரூபாயாக உயர்ந்தது. பஞ்சு நெசவாலைத் தொழில் இந்தியத் தொழிலதிபர்களின் முக்கியச் செயல் துறையாக முன் போலவே இருந்து வந்தது. அதே சமயம் இந்தியத் தேசிய மூலதனம் தோட்டக்கால் பண்ணைகளிலும் கனியச் சுரங்கத் தொழிலிலும் புகத் தொடங்கியது. மிகப் பெரும்பாலான பஞ்சு கடையும் தொழிற்சாலைகள், அரைவை இயந்திரங்கள், நெல் குத்தும் இயந்திரங்கள், எண்ணெய் ஆலைகள் ஆகியவையும் அச்சகங் களும் இந்திய முதலாளிகளுக்குச் சொந்தமாய் இருந்தன.

ஆயினும் மிகப் பெரும்பாலான தொழில் நிலையங்கள் சிறியவை, அல்லது நடுத்தரமானவை. இவற்றில் நூற்றுக்கு எண்பது இயந்திர வசதி அற்றவை. தொழிற்சாலைகளின் துறையோடு கூடவே கைத் தொழிற் கூடங்களும் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வந்தன. நெசவுத் தொழில், தோல் பதனிடும் தொழில், வெள்ளீயப் பாத்திரங் களும் வீட்டுத் தேவைக்கான பிற அன்றாடச் சாமான்களும் தயாரிக் கும் தொழில், விவசாய மூலப் பொருள்களின் தொடக்கப் பதன் பாடு ஆகியவற்றில் முதலாளித்துவத் தொழில் முயற்சியின் தாழ்நிலை வடிவங்கள் எல்லாவற்றிலும் அதிகமாகப் பரவியிருந்தன. குடிசைத் தொழில்களிலும் வேளாண்மையிலும் ஆக அதிக எண்ணிக்கையில் உழைப்பாளர்கள், பல கோடி மனிதர்கள், ஈடுபட்டிருந்தார்கள்.

நாட்டின் பொருளாதாரத்தில் தனது நிலையை வலுப்படுத்திக் கொள்ளும் விருப்பத்தால் தூண்டப்பட்டு இளம் தேசிய முதலாளி வர்க்கம் தாய்நாட்டில் கனரக இயந்திரத் தொழிலை நிறுவ முயற்சி கள் செய்தது. இந்திய முதலாளியான ஜாம்ஷேட் டாட்டா இந்தியர் களுக்குச் சொந்தமான முதலாவது எஃகுத் தொழிற்சாலையை 1911ம் ஆண்டு சாக்சி கிராமத்தில் (பீகார்) இந்தியப் பெரு முத லாளி வர்க்கத்தின் ஆதரவோடு நிறுவினர். அவர் பெயரால் இந்தத் தொழிற்சாலை நகர் ஜம்ஷேட்பூர் என அழைக்கப்படலாயிற்று. டாட்டா நிறுவனத்துக்குச் சொந்தமான நீர் மின் நிலையம் 1915ம் ஆண்டு உற்பத்தி தொடங்கியது.

தேசியத் தொழில் முயற்சி வெற்றிகரமாக வளர்வதற்கு முத லாளித்துவக் கடன் வசதி அமைப்பை ஏற்படுத்துவது முக்கிய நிபந் தனையாக இருந்தபடியால் இந்திய முதலாளி வர்க்கம் சொந்த வங்கிகளை நிறுவத் தொடங்கியது. 19ம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சில பெரிய கூட்டுப் பங்கு வங்கி கள் திறக்கப்பட்டன. 1913ம் ஆண்டு இவற்றின் எண்ணிக்கை 18ஆக இருந்தது. இவை தவிர, நடுத்தர அளவுள்ள 23 வங்கிக் கிளைகளும் துணை நிலையங்களும் நாட்டில் செயலாற்றி வந்தன. இவையும் இந்தியத் தேசிய மூலதனத்துக்குச் சொந்தமாய் இருந்தன. ஆனால்

இந்தக் காலப் பகுதியில் இந்திய வங்கி மூலதனம் முதன்மையாக உள்நாட்டு வர்த்தகத் துறையில் செயலாற்றி வந்தது.

தேசிய முதலாளித்துவத் தொழில் முயற்சி வளர்ச்சி அடைந்தது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் இந்தியா மேலும் அதிகமாகச் சுரண்டப்பட்டது ஆகியவற்றின் விளைவாக இந்திய முதலாளி வர்க்கத்துக்கும் அயல்நாட்டு ஏகபோகங்களுக்கும் இடையே முரண்பாடுகள் கூர்மை அடைந்தன.

இந்தியாவின் பருத்தித் துணிச் சந்தையில் அவற்றின் நலன்கள் மிகக் கடுமையாக மோதிக்கொண்டன. தூரக் கிழக்கு, தென் கிழக்கு ஆசியச் சந்தைகளில் மலிவான ஜப்பானியச் சரக்குகள் 19ம் நூற்றாண்டின் இறுதி முதல் புகத் தொங்கின. விளைவாக, (முன்பு முதன்மையாக ஏற்றுமதியின் பொருட்டு நூல்கள் தயாரித்து வந்த) இந்திய நெசவாலைகள் பெரும்பாலும் பருத்தித் துணிகளை உள்நாட்டு உபயோகத்துக்காக நெய்து அளிப்பதில் விரைவாக ஈடுபடலாயின. அயல்நாட்டுப் போட்டிக்கு எதிரான போராட்டம் கைத்தறித் துணிகளின் நெசவை அதிகரிப்பதன் மூலமாகவும் நடந்தது. 20ம் நூற்றாண்டு தொடங்கிய தறுவாயில் நூற்பு ஆலைகளுக்கும் ஒரு கோடிப் பெயருக்கு மேல் ஈடுபட்டிருந்த கைத்தறி நெசவுத் தொழிலுக்கும் இடையே நெருக்கமான பரஸ்பரச் சார்பு நிலவியது. 1897—1901ல் நெசவாலைகள் ஆண்டு தோறும் சராசரி 8 கோடி 50 லட்சம் ராத்தல் பருத்தி நூலைப் பயன்படுத்தி வந்தன. கைத்தறிகாரர்களோ (குடிசைத் தொழில் நடத்திய சேணியர்களும் கைத்தொழிற் கூடங்களும்) 20 கோடி ராத்தல் நூலைப் பயன்படுத்தி வந்தார்கள்.

மிகப் பெரும் பகுதி இந்தியர்களுக்குச் சொந்தமாய் இருந்த பருத்தித் துணி நெசவாலைகளின் எண்ணிக்கை 1886—1905ல் 95லிருந்து 197ஆக உயர்ந்தது. இதே காலத்தில் கதிர்களின் எண்ணிக்கை இரு மடங்கும் தறிகளின் தொகை மும்மடங்கும் ஆயின. பிரிட்டிஷ் தொழிலதிபர்கள் இந்தியாவில் பருத்தித் துணி இறக்குமதியை அதிகப்படுத்தினர்கள். காலனியாட்சி இயந்திரத்தைப் பயன்படுத்தி, இந்தியத் துணி மீது 1896ம் ஆண்டில் அவர்கள் 3.5 சதவிகிதம் தீர்வை விதித்தார்கள். ஆயினும் 1901—1906ல் இந்தியச் சந்தையில் இறக்குமதித் துணிகளின் விகிதம் நூற்றுக்கு அறுபத்து மூன்றிலிருந்து ஐம்பத்து ஏழாகக் குறைந்து விட்டது. இந்திய ஆலை, கைத்தறித் துணிகளின் பங்கோ முறையே நூற்றுக்குப் பன்னிரண்டிலிருந்து பதினைந்தாகவும் இருபத்து ஐந்திலிருந்து இருபத்து எட்டாகவும் அதிகரித்தது.

இந்தக் காலப் பகுதியில் கைத்தறிப் பருத்தி நெசவுத் தொழில் இந்திய ஆலைகளின் கடுமையான போட்டிக்கு இன்னும் உள்ளாக

வில்லை. ஆனால் அடுத்து வந்த ஆண்டுகளில் இந்திய ஆலைகளில் தயாரான துணிகள் பிரிட்டிஷ் சரக்குகளோடு மட்டும் இன்றி உள்நாட்டுக் குடிசைத் தொழிற் செய்பொருள்களோடும் வெற்றிகரமாகப் போட்டி போடலாயின. 1901—1911ல் ஏறக்குறைய ஐந்து லட்சம் கைத்தறி நெசவாளர்கள் நொடித்துப்போய் ஊதியம் இழந்தார்கள். 1907—1914ல் கைத்தறித் துணி நெசவின் அளவு அனேகமாக மாறாது இருந்தது. அதே சமயம் ஆலைத் துணி உற்பத்தி மும்மடங்கு ஆகிவிட்டது. எனினும் இந்திய ஆலைகளின் அதிபர்களுக்கும் சரி, கைத்தறிகாரர்களுக்கும் சரி, முதல் பகைவனாக இருந்தது லங்காஷையர் தான்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் இந்தியத் தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் இடையே முரண்பாடுகள் கூர்மை அடைந்தது மொத்தத்தில் இந்தக் காலப் பகுதியின் இயல்பாக இருந்தது. அதே சமயம் இந்திய முதலாளி வர்க்கத்தின் மேற்படியினர் கடன் வசதிகள், இயந்திரங்களின் சப்ளை முதலிய வழிகளில் சிறப்பாக பிரிட்டிஷ் நிதி மூலதனத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்கள். நிலப்பிரபுத்துவச் சமூகத்தின் சுரண்டுவோர் வட்டாரங்களோடு இன்னும் நெருக்கமான உறவுகள் அவர்களைப் பிணைத்தன. இந்தியத் தொழிற்சாலை முதலாளிகள் திரளான எண்ணிக்கையில் வர்த்தகர்களதும் வட்டிக் கடன் தொழிலர்களதும் குடும்பங்களில் பிறந்தவர்கள். வர்த்தக-வட்டிக் கடன் நடவடிக்கைகள் மூலம் தங்கள் வருவாயின் ஒரு பகுதியை அவர்கள் தொடர்ந்து பெற்று வந்தார்கள். அந்தக் காலத்தில் நிறுவப்பட்ட கூட்டுப் பங்கு வாணிக வங்கிகள் மூலமாகவும் தொழிலதிபர்கள் வர்த்தக-வட்டிக் கடன் மூலதனத்தோடு தொடர்பு கொண்டிருந்தார்கள்.

மூலதனம் (சிறப்பாக வர்த்தக-வட்டிக் கடன் மூலதனம்) நிலப்பிரபுத்துவ நில உடைமையுடன் இணையும் நிகழ்முறையும் தொடர்ந்தது. வர்த்தகர்கள், வட்டிக் கடன் முதலாளிகள், சிறு தொழிலதிபர்கள் ஆகியோரின் கைகளுக்கு நிலம் மாறும் போக்கு சில மாநிலங்களில் பெருத்த அளவுகளை மேற்கொண்ட படியால் விவசாயிகளிடமிருந்து நிலம் ''விவசாயிகள் அல்லாத சாதியினருக்கு'' மாறுவதை வரையறை செய்யும் சட்டத்தைக் காலனியாட்சி அதிகாரிகள் பஞ்சாபில் 1900ம் ஆண்டு பிறப்பிக்க வேண்டியதாயிற்று. அதே சமயம் பல பெரிய ஜமீன்தார்களும் சில சமஸ்தான மன்னர்களுங் கூடத் தொழிற் துறை, வங்கி நிறுவனங்களின் பங்குதாரர்கள் ஆனார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடனும், சிறப்பாக நிலப்பிரபுக்களுடனும் இந்தியத் தேசிய முதலாளி வர்க்கத்தின் பொருளாதாரத் தொடர்புகள் அதன் அரசியல் செயல்திட்டத்தையும் தேசிய விடுதலை இயக்கத்தில் அதன் பங்கையும் பாதித்தன.

உழைப்பாளிகளின் நிலைமை மோசமானதும் வர்க்க, தேசிய முரண்பாடுகள் வலுத்ததும்

முதலாளித்துவம் வளர்ச்சி அடைந்த போதிலும் இந்தியா 19ம் நூற்றாண்டின் இறுதியிலும் நிலப்பிரபுத்துவ மீத மிச்சங்கள் மேலோங்கி இருந்த பின்தங்கிய விவசாய நாடாகவே இருந்தது. கம்மியர்கள் பெருந் திரளாகச் சீரழிந்து போனதன் விளைவாக தொழிற் சாலைப் பாட்டாளி வர்க்கத்தின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் விகிதம் 1901—1911ல் நூற்றுக்கு 66லிருந்து 72ஆக உயர்ந்தது. விவசாயிகள் முன்போலவே மூன்று வகைச் சுரண்டலுக்கு ஆளாகி இருந்தார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுக்களும் வர்த்தக-வட்டிக் கடன் முதலாளிகளும் அவர்களை ஒருங்கே சுரண்டி வந்தார்கள். ரயத்துவாரிப் பிரதேசங்களில் நில உடைமை தீவிரமாகப் புழக்கத்துக்கு வந்ததும் சிறு விவசாயிகளின் வாரக் குத்தகை நிலப்பரப்பு அதிகரித்ததும் ஏழை விவசாயிகள் தொடர்ந்து நிலத்தை இழந்து வந்ததையும் நிலப்பிரபுக்கள் விவசாயி மேற்படியினர் ஆகியோரின் கைகளில் நிலம் மேலும் மேலும் குவிந்ததையும் காட்டின.

அதே சமயம் விவசாய விளைபொருள்களின் விலைகள் ஏறியதன் காரணமாக நடுத்தர, செல்வச் செழிப்புள்ள விவசாயி வட்டாரங்களின் நிலைமை மேம்பட்டது. வர்த்தகப் பயிர் விவசாயம் வளர்ச்சி அடைந்ததனாலும் நகரங்களில் முதலாளி வர்க்கத்தினர் நிலை பெற்றதனாலும் இந்திய நாட்டுப்புறத்திலும் புதிய முதலாளி வர்க்க உறவுகள் உருவாகத் தொடங்கின. நாட்டுப்புற மக்கள் நகரங்களுக்கும் தோட்டக்கால் பண்ணைகளுக்கும் தீவிர வேளாண்மைப் பிரதேசங்களுக்கும் முறையாகச் செல்லத் தொடங்கினார்கள். பஞ்சைகள் ஆகிவிட்ட ஏழை விவசாயிகள் பாட்டாளிகளாக மாறும் நிகழ்முறை துவங்கி விட்டதை இந்த வெளியேற்றம் காட்டியது. நிலத்தைச் சார்ந்து இருந்தவர்களின் எண்ணிக்கை மட்டு மீறி வளர்ந்து கொண்டு போனதால் உழைப்பாளிகளின் தொகை தேவைக்கு மிக அதிகம் ஆகிவிட்டது. செல்வச் செழிப்பு உள்ள விவசாயிகளதும் ஒரு சில நிலப்பிரபுக்களதும் பண்ணைகளில் கூலிக்கு ஆட்களை அமர்த்திக் கொள்ளும் முறை வளர்ச்சி பெற இந்த நிலைமை உதவியது. எனினும் நாட்டுப்புறத்தில் முதலாளித்துவ உறவுகள் அப்போதுதான் அரும்பத் தொடங்கி இருந்தன. இந்தக் காலப் பகுதியில் வர்க்க முரண்பாடுகளுக்கும் தேசிய (இந்திய மக்களுக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் இடையே) முரண்பாடுகளுக்கும் நகரமே மையம் ஆயிற்று. 19ம் நூற்றாண்டின் பிற்பாதியில் மக்கள் போராட்டங்கள் முதன்மை

யாக நாட்டுப்புற வட்டாரங்களில் நிகழ்ந்தன என்றால் ஏகாதிபத்தியக் காலக்கட்டம் வந்ததும் புரட்சிப் போராட்டங்களின் தளங்கள் பெரும்பாலும் நகரங்களில் ஏற்படலாயின.

ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் நிலையாக வேலை செய்யும் தொழிலாளர் குழுக்கள் இயந்திரத் தொழிற் துறையில் உருவாயின. மிக முக்கிய இயந்திரத் தொழில் மையங்களான கல்கத்தா, பம்பாய், சென்னை, அகமதாபாது ஆகியவற்றிலும் வேறு சிலவற்றிலும் தொழிலாளி வர்க்கத்தினரின் எண்ணிக்கையும் குவிவும் அதிகமாயின. தொழிலாளர்களின் பொருளியல் நிலைமை மேம்படவில்லை. இந்திய, அயல் நாட்டு முதலாளிகள், வட்டிக் கடன் தொழிலர்கள், பல வகையான கூலிவேலைத் தரகர்கள் ஆகியோரால் அவர்கள் முன்போலவே சுரண்டப்பட்டு வந்தார்கள். பெரும்பாலான தொழில் நிலையங்களில் வேலை நாள் 12—14 மணி நேரம் நீடித்தது. பிரிட்டிஷ் ஏகபோகங்களுடன் போட்டிப் போராட்டம் நடத்தி வந்த இந்திய முதலாளி வர்க்கம் தொழிலாளர்களுக்குச் சம்பளத்தைக் கணிசமாகக் குறைத்ததன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைக்க முயன்றது. எனவே, 20ம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் அதிகத் தீவிரம் அடைந்த தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டம் புறநிலையாக ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையும் கொண்டிருந்தது.

திரளான கம்மியர்களும் கைத்தொழிற்கூடங்களின் தொழிலாளர்களும் சொந்தக்காரர்களும் சிறு வியாபாரிகளும் உருவாகிவந்த தொழிற்சாலைப் பாட்டாளிகளோடு சேர்ந்து நகரங்களில் தேசிய-விடுதலை இயக்கத்தின் பிரதானச் சக்தியாக விளங்கினார்கள். இந்தியா பிரிட்டிஷ் சரக்குகளின் விற்பனைச் சந்தையாக மாறியதன் நாசகரமான விளைவுகளை இந்த வட்டாரத்தினரே முதற்படியாக அனுபவித்து வந்தார்கள். பிரிட்டிஷ் காலனியாட்சி அதிகார வர்க்க இயந்திரத்துடன் இவர்களே அன்றாடம் மோதிக் கொள்ள நேர்ந்தது.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டக் கொள்கைவாதத்தைப் பரப்புபவர்களாகச் சிறு முதலாளி வர்க்க அறிவுஜீவிகள் இருந்து வந்தார்கள். நகரச் சிறு முதலாளி வர்க்க வட்டாரங்களுடனும் நிலை குலைந்த சிறு நிலப்பிரபுக்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த இவர்களில் மிகப் பெரும்பாலோர் இரங்கத் தக்க பிழைப்பு நடத்திவந்தார்கள். இந்திய அறிவுஜீவிகள் முதன்மையாகச் சுதந்திரத் தொழில்கள் நடத்தியவர்களும் பள்ளி ஆசிரியர்களும் சிறு அலுவலர்களுமாக இருந்தார்கள். அன்றாடம் கடுமையான வாழ்க்கைப் போராட்டம் நடத்தி வந்ததோடு, நாளுக்கு நாள் கூர்மையாகிக் கொண்டு போன வேலையில்லாப் பிரச்சினையையும் சமாளிக்க வேண்டியிருந்ததும். மெதுவாகவும் (காலனியாட்சி நிலைமைகளில்)

பாங்கின்றியும் நடந்த முதலாளித்துவ வளர்ச்சி இந்தியக் கல்லூரி களிலும் பல்கலைக்கழகங்களிலும் படித்துத் தேறிய மாணவர்களுக்கு அளவறுத்த வேலை வாய்ப்புக்களே அளிக்க வல்லதாய் இருந்தது. ஏறக் குறையப் பத்து லட்சம் பெயர் கொண்ட இந்திய மாணவர் குழாம் இந்திய சமூகத்தின் மிகுந்த புரட்சித்தன்மையுள்ள பகுதியாக விளங் கியது.

இந்திய அறிவுஜீவிகள் இன ஏற்றத்தாழ்வுக்கும் தேசியத் தன் மானத்தின் இழிவுபாட்டுக்கும் நாள்தோறும் ஆளாகி வந்தார்கள். மிகப் பெரும்பாலான இந்தியர்களுக்குக் காலனியாட்சி நிர்வாகத் தில் தாழ்ந்த பதவிகளே கிடைக்கக் கூடியவையாக இருந்தன. இந்திய சிவில் சர்விஸ் அமைப்பில் அலுவல் புரிந்த 8 ஆயிரம் ஆங்கிலேயர் கள் மொத்தம் 140 லட்சம் பவுண்டு சம்பளம் வாங்கினர்கள், 130 ஆயிரம் இந்தியர்களுக்கோ மொத்தம் 30 லட்சம் பவுண்டுதான் கிடைத்தது.

இவ்வாறு, இந்தியாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி காரண மாக இந்திய சமூகத்தின் பல்வேறு வர்க்கங்களதும் சமுதாயக் குழுக் களதும் தேசியத் தன்னுணர்வு அதிகரித்தது. ஏகாதிபத்தியத்தின் தாக்குதல், முதலாளித்துவச் சுரண்டல் தீவிரம் அடைந்தது, நிலப் பிரபுத்துவ, வர்த்தக-வட்டிக் கடன் சுரண்டல் அதிகரித்தது ஆகியவற்றின் விளைவாக வெகுஜனங்களின் பொருளியல் நிலைமை சீர்கெட்டதால் புரட்சி மனப்பான்மை வளர்ந்தது.

ஒரு புறம் உணவுப் பண்டங்களின் விலைகள் கணிசமாக உயர்ந் தன. மறு புறம் கூலித் தொழிலாளர்கள், அலுவலர்கள், மக்களின் பிற வட்டாரத்தினர் ஆகியோரின் சம்பளங்கள் அனேகமாக நிலை யாக இருந்தன. விளைச்சல் பொய்த்துப் போன வரட்சி ஆண்டுகளை அடுத்துப் பஞ்சம் தலைவிரித்தாடிய ஆண்டுகள் வந்தன: 1896—1897ல் 6 கோடி 20 லட்சம் மக்கள் வசித்த பிரதேசங்கள் பஞ்சத்துக்கு உள்ளாயின. 1899—1900ல் 2 கோடி 80 லட்சம் மக்களும் 1905—1906ல் 33 லட்சம் மக்களும் 1906—1907ல் 1 கோடி 30 லட்சம் மக்களும் 1907—1908ல் 4 கோடி 96 லட்சம் மக்களும் வாழ்ந்த பிரதேசங்களில் பஞ்சங்கள் கொடுமை விளைத்தன. பஞ்சத்தோடு கூடவே காலரா, பிளேகுக் கொள்ளை நோய்கள் பரவின, 1896—1908ல் பிளேகினால் 60 லட்சம் பெயருக்கு மேல் மடிந்தார்கள். நபர் வாரித் தேசிய வருமானத்தின் விகிதம் ஒரேயடியாகச் சரிந்தது. மக் கள் முற்றும் வறியவர்கள் ஆகும் நிகழ் முறை தீவிரமாக நடந்தது.

நாட்டில் அதிருப்தி அதிகரிக்கவும் தேசிய விடுதலை இயக்கம் விரி வாகப் பரவவும் பிரிட்டிஷ் காலனி ஆட்சியாளர்கள் தங்கள் உள் நாட்டுக் கொள்கையாலும் துணை செய்தார்கள்.

புரட்சியின் ஏற்றம்
1905—1908

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காலனி ஆட்சி அதிகாரிகளின் உள்நாட்டுக் கொள்கையும் புரட்சி இயக்கமும்

1899ல் இந்தியாவின் வைசிராயாக லார்டு கர்சன் (1899—1905) நியமிக்கப்பட்டான். கடைக்கோடிப் பிற்போக்கும் போர்வெறி மிக்க காலனியாட்சிப் பற்றும் கொண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் குழுவுக்கு இவன் பிரதிநிதியாக இருந்தான். தேசிய இயக்கத்தை முரட்டுத்தனமாக நசுக்குவது, ஒளிவு மறைவற்ற இன ஏற்றத் தாழ்வு பாராட்டுவது என்ற கொள்கையைக் கர்சன் கடைப்பிடித்து வந்தான். கர்சனின் நிர்வாகம் பிரிட்டிஷ் தொழிலதிபர்களுக்கு உற்சாகமாக ஆதரவு அளித்தும் இந்தியத் தொழில் துறையினருக்கு வெளிப்படையாக இடையூறுகள் விளைத்தும் வந்தது. 1903ல் பிறப்பிக்கப்பட்ட விசேஷச் சட்டம் இந்தியாவின் இயற்கை வளங்களைத் தேடி ஆராயவும் பயன்பாட்டுக்குக் கொண்டுவரவும் பிரிட்டிஷ் ஏகபோகங்களுக்கு எல்லா விதமான வசதிகளும் அளித்தது.

கர்சன் இந்திய அறிவுஜீவிகள் மீது தனிப்பட்ட வெறுப்பு கொண்டிருந்தான். வருமான வரி விலக்கு பெற்ற குறைந்தபட்ச ஆண்டு வருவாய்த் தொகை அவன் காலத்தில் 500லிருந்து 100 ரூபாயாகக் குறைக்கப்பட்டது. நகர நடுத்தர வகுப்பார் எனப்பட்டவர்களின் நலன்களை இந்த நடவடிக்கை விரிவாகப் பாதித்தது.

அரசாங்க இரகசியம் பற்றிய சட்டத்தின் செயல் எல்லை 1898லும் பின்னர் 1904லும் விரிவாக்கப்பட்டது. இந்தியாவின் தேசியப் பத்திரிகைகளுக்கு இன்னல் விளைப்பது இதன் நோக்கம்.

பதவிக்கு வந்ததும் கர்சன் எடுத்துக்கொண்ட முதல் நடவடிக்கைகளில் ஒன்று கல்கத்தா நகராட்சி மன்றத்தின் உறுப்பினர் தொகையைக் குறுக்கும் சட்டம் பிறப்பித்தது ஆகும். நகரவாசிகளில் செல்வம் படைத்த இந்தியர்களுக்கு நகராட்சி மன்றத்தில் இருந்த பிரதிநிதித்துவத்தைக் குறைப்பது இதன் நோக்கமாக இருந்தது. 1904ல் கர்சன் பல்கலைக்கழகச் சீர்திருத்தத்தைச் செயல்படுத்தினான். கல்விக் கட்டணம் வெகுவாக உயர்த்தப்பட்டது. பல்கலைக் கழகங்களின் எல்லா விவகாரங்களும் பிரிட்டிஷ் காலனியாட்சி அதிகார வர்க்கத்தின் கண்காணிப்பில் வைக்கப்பட்டன. இந்த நடவடிக்கையின் மூலம் சாதாரண இந்தியக் குடிகளுக்கு உயர் கல்வி பெறும் வாய்ப்பு இல்

லாதவாறு செய்யலாம் என்று காலனியாட்சி அதிகாரிகள் எண்ணினர்கள்.

தேசியக் காங்கிரசின் பால் தான் கொண்டிருந்த போக்கு குறித்து ''அதன் அமைதியான சாவில் ஒத்துழைக்க'' விரும்புவதாகக் கர்சன் கூறினான். இந்தியப் பண்பாட்டின் மேல் தனக்கு இருந்த இகழ்ச்சியை அவன் ஒளிவு மறைவு இன்றிக் காட்டிக் கொண்டான். கல்கத்தா பல்கலைக்கழகத்தில் ஆற்றிய ஓர் உரையில் கர்சன் இந்தியாவின் மாபெரும் தொன்மைப் பண்பாட்டைத் தயங்காமல் இழித்துக் கூறினான்.

பிற்போக்குள்ள உள்நாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்த அதே சமயத்தில் கர்சன் ஆசியாவில் புதிய துர்ச்சாகசப் போர்களுக்கு ஏற்பாடுகள் செய்தான். சேனையையும் போலீசையும் அவன் அவசரமாக மாற்றி அமைத்தான். தென்னப்பிரிக்காவில் போயர்களை ஒடுக்கிய ஜெனரல் கிச்னர் தலைமைத் தளகர்த்தனாக நியமனம் பெற்றான். படைச் செலவுக்கான மானியத் தொகைகள் ஒரேயடியாக உயர்த்தப்பட்டன. போர்த்திட்ட முக்கியத்துவம் கொண்ட புதிய இருப்புப் பாதைகள் நாட்டின் வட மேற்கு எல்லையில் போடப்பட்டன. இந்தப் பிரதேசத்தில் நிலையாக வேரூன்றிக் கொள்ளவும் இடைவிடாது போராடி வந்த பட்டாணிய இனக் குழுவினர்மீது விரிவான தாக்கு நடத்தவும் வசதியாக 1901ல் எல்லைப்புற மாவட்டங்கள் தனிப்பட்ட வட மேற்கு எல்லைப்புற மாநிலமாக அமைக்கப்பட்டன.

ஆனால் கர்சனின் அடக்குமுறைக் கொள்கை காலனியாட்சிக்கு எதிரான மனப் பாங்கையும் புரட்சிக் கொந்தளிப்பையும் அதிகமே ஆக்கியது.

1898ல் சிறையிலிருந்து வெளிவந்த பின் திலகர் மீண்டும் கேசரி பத்திரிகையின் ஆசிரியர் ஆனார். தேசியவாதிகளது இடதுசாரியின் நடவடிக்கைகள் மகாராஷ்டிரத்தில் தீவிரம் அடைந்தன. அரைச் சட்டபூர்வமான விளையாட்டுக் கழகங்களிலும் இளைஞர் நிறுவனங்களிலும் தேசிய உணர்வுள்ள இளைஞர்கள் காலனியாட்சி அடக்குமுறையாளர்களுக்கு எதிரான வருங்காலப் போராட்ட நடவடிக்கைகளுக்கு வேண்டிய பயிற்சி பெற்று வந்தார்கள். இவற்றை முழுமையாகத் தாக்கி ஒழிக்கப் போலீசால் முடியவில்லை. திலகர் தேசிய இயக்கத்தினது இடதுசாரியின் சர்வ சம்மதம் பெற்ற தலைவர் ஆனார். அவருடைய செல்வாக்கு பம்பாய் மாநிலத்துக்கு வெளியே நெடுந்தூரம் பரவி இருந்தது. வங்காளத் தேசியவாதிகளுடன் மராட்டியத் தேசபக்தர்கள் சிறப்பாக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள்.

மகாராஷ்டிரத்தில் போன்றே வங்காளத்தில் இடதுசாரித் தேசியவாதிகளின் அரைச் சட்டபூர்வமான நிறுவனங்களும் வட்டங்களும்

1890க்களின் இறுதியிலும் 1900ங்களின் தொடக்கத்திலும் அமைந்தன. இவற்றின் உறுப்பினர்கள் தேசியக் காங்கிரசின் தலைவர்களது மிதவாதம் தழுவிய எதிர்ப்பைக் கடுமையாக விமர்சித்து, இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆட்சி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகக் கிளர்ச்சி நடத்தி வந்தார்கள். வங்காளத்தில் (மகாராஷ்டிரத்தின் உதாரணத்தைப் பின்பற்றி) தொடர்ந்து நடந்த கணபதி விழா வெகுஜனக் கொண்டாட்டங்கள் ஆற்றல் மிக்க தேசபக்தி ஆர்ப்பாட்டங்களாக ஒன்று கலந்து தேசிய விடுதலை இயக்கத்தில் அனைத்து இந்திய ஒருமைப்பாட்டின் உருவகச் சின்னங்களாக விளங்கின. 1902ம் ஆண்டு கல்கத்தாவில் ஓர் இரகசியச் சங்கம் அமைக்கப்பட்டது. ஆயுதக் கிளர்ச்சிக்கு ஆயத்தம் செய்வதை இது தன் நோக்கமாக வைத்துக் கொண்டது.

தேசியக் காங்கிரசின் வட்டார நிறுவனங்களான மாநில மகாநாடுகளின் நடவடிக்கைகளும் தீவிரம் அடைந்தன. இடதுசாரிக் குட்டி பூர்ஷ்வாத் தேசியவாதிகளின் குரல்கள் இவற்றில் வர வர அதிக நம்பிக்கையுடன் ஒலித்தன. திலகரோடு கூடவே இடதுசாரித் தேசியவாதிகளின் தலைவர்கள் நாளுக்கு நாள் அதிகப் பிரபலம் அடைந்து வந்தார்கள். இவர்களாவர் வங்காளத்தில் விபின சந்திர பாலரும் அரவிந்த கோஷும் பஞ்சாபில் லாலா லஜபதி ராயும். தேசிய இயக்கத்தின் மிதவாதப் போக்குள்ளவர்களிலிருந்து இடதுசாரித் தேசியவாதிகளை வேறுபடுத்துவதற்காக மக்கள் அவர்களைத் தீவிரவாதிகள் என அழைக்கலானார்கள்.

1905ல் நடந்த வங்காளப் பிரிவினையும் வெகுஜன இயக்கத்தின் தொடக்கமும்

புரட்சி வெடித்துக் கிளம்பும் சாத்தியக் கூற்றைத் தடுக்கும் நோக்கத்துடன் பிரிட்டிஷ் காலனியாட்சி அதிகாரிகள் தேசியவாத-தேசபக்தச் சக்திகளுக்கு முன்கூட்டி நிர்ணயகரமான அடி கொடுக்க முடிவு செய்தார்கள். இந்த நோக்கத்திற்காகப் பிரிட்டிஷ் வைசிராய் கர்சன் 1905ல் வங்காளப் பிரிவினையை மேற்கொண்டான்.

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வங்காளம் தேசிய விடுதலை இயக்கத்தின் பிரதான மையமாக முன்போன்றே இருந்து வந்தது. வங்காளிகள் இந்தியாவில் மிக நன்கு அமைந்த நாட்டினமாக விளங்கினார்கள். அவர்களது நாட்டின ஒற்றுமை தேசத்தின் இந்தப் பகுதியில் தேசிய விடுதலை இயக்கம் வளர்ச்சி பெற உதவிய முக்கியக் காரணியாக இருந்தது. மேற்கு வங்காளம் (பீகாரும் ஓரிஸ்ஸாவும் அடங்கியது), கிழக்கு வங்காளம் (அஸ்ஸாம் அடங்கியது) என்ற இரு

பகுதிகளாக வங்காளம் கூறு போடப்பட்டது மதப் பிணக்குக்களும் நாட்டினப் பூசல்களும் முன்னிலும் உக்கிரமாக மூள வழி வகுத்தது: உண்மையில் மேற்கு வங்காளத்தில் பீகாரிகளும் ஓரிஸ்ஸாக்காரர்களும் மக்கள் தொகையில் பெரும்பாலராய் இருந்தார்கள். கிழக்கு வங்காளத்தில் பெரும்பாலோர் வங்காளிகள்தாம், எனினும் மக்கள் தொகையின் முக்கியப் பகுதியினர் இஸ்லாமியர்கள். புதிதாக அமைக்கப்பட்ட மாநிலத்தின் காலனியாட்சி நிர்வாகத்தில் முஸ்லிம் அறிவு ஜீவிகள் இந்துக்களைத் காட்டிலும் அனுகூலமான நிலையைப் பெறுவார்கள் என்று கிழக்கு வங்காளத்தின் முகமதிய நிலப்பிரபுக்கள், பெரிய முஸ்லிம் வர்த்தக முதலாளி வர்க்கத்தினர் ஆகியோரின் பிரதிநிதிகளிடம் வெளிப்படையாகக் கூறப்பட்டது.

ஆனல் காலனி ஆட்சியாளர்களின் திட்டங்களுக்கு மாருக வங்காளப் பிரிவினை நேர் எதிரான விளைவுகளை ஏற்படுத்தியது. வங்காளி சமூகத்தின் எல்லா வட்டாரங்களும் பிரிவினையை எதிர்த்தன. மாநிலத்தின் பிரிவினை உருவாகியுள்ள பொருளாதாரத் தொடர்புகளைக் குலைக்கும் என்றும் தன் முக்கிய உறுப்பான வர்த்தக-தொழில் மன்றத்தைப் பலவீனப்படுத்தும் என்றும் தேசிய இயந்திரத் தொழில், வர்த்தக முதலாளி வர்க்கம் அஞ்சியது. பிரிவினையை அடுத்துச் சாசுவத நிலவரி ஏற்பாடு அகற்றப்பட்டு நிலவரி விகிதங்கள் உயர்த்தப்படும் என்று நிலப்பிரபுக்களான ஜமீன்தார்கள் பயந்தார்கள். பிரிவினையின் விளைவாக நிர்வாக அமைப்பும் கல்கத்தாவில் கப்பல் கட்டுவதும் குறுக்கப்படும் என்றும் இதன் காரணமாக உயர் கல்வி பெற்ற நபர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பின்னர் கடுமை ஆகும் என்றும் அறிவுஜீவிகள் எண்ணினர்கள். மிதவாதப் போக்குள்ள வங்காளித் தேசியவாதிகளின் தலைவர் சுரேந்திரநாத பானர்ஜி எழுதியது போல, ''நாங்கள் அவமதிக்கவும் இழிவுபடுத்தவும் ஏமாற்றவும் பட்டதாகவும் எங்கள் வருங்காலம் அனைத்தும் பணயம் வைக்கப்பட்டிருப்பதாகவும் உணர்ந்தோம். வங்காளி மொழி பேசும் மக்களின் வளர்ந்து வந்த ஒருமைப்பாட்டின் மீதும் தன்னுணர்வின் மீதும் வேண்டுமென்றே கொடுக்கப்பட்ட அடி இது.''

நிலப்பிரபுக்களின் அற்பக் குழுக்களும் தரகு வர்த்தக முதலாளி வர்க்கமும் நிலப்பிரபுத்துவ முஸ்லிம் அறிவுஜீவிகளின் ஒரு பகுதியும் மட்டுமே பிரிவினையை ஆதரித்தன. காலனியாட்சி அதிகாரிகள் வங்காளப் பிரிவினை பற்றி 1905, ஜூலையில் அதிகாரபூர்வமாக அறிவித்தார்கள். ஆனல் ஆகஸ்டு மாதத்திலேயே கல்கத்தாவில் பிரமாண்டமான பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. பிரிட்டிஷ் சரக்குகளைப் பகிஷ்காரம் செய்வது என்ற தீர்மானம் இவற்றில் ஒரு கூட்டத்தில் ஏற்கப்பட்டது. வங்காளத்தில் தேசியவாதப் பத்திரிகைகளிலும்

பொதுக் கூட்டங்களிலும் தேசிய சமூக-அரசியல் நிறுவனங்களின் மகாநாடுகளிலும் அன்னியச் சரக்குகளைப் பகிஷ்காரம் செய்வதோடு சுதேசிச் சரக்குகளுக்கு ஆதரவு அளித்து ஊக்கும்படியும் கிளர்ச்சி நடந்தது.

சுதேசி இயக்கம் பொருளாதாரச் சாயல் கொண்டிருந்தாலும் அனேத்து இந்திய வெகுஜனத் தேசிய இயக்கம் ஆகி விட்டது. 1905ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் அது வங்காள எல்லையைக் கடந்து நாட்டின் வேறு சில பகுதிகளில், சிறப்பாக மகாராஷ்டிரத்திலும் பஞ்சாபிலும் பரவியது. திலகரும் அவருடைய போராட்டத் தோழர்களும் இந்த இயக்கத்துக்குத் தீவிர ஆதரவு அளித்தார்கள். சுதேசிப் பொருட் கடைகளும் தொழில் நிலையங்களும் எங்கும் திறக்கப்பட்டன. இயக்கத்தினர் அன்னியப் பொருட்களை விற்பனை செய்த கடைகளைப் பகிஷ்கரித்தார்கள், அவற்றின் முன் மறியல் செய்தார்கள்.

வங்காளப் பிரிவினைச் சட்டம் அமுலுக்கு வந்த 1905, அக்டோபர் 16ந் தேதி வங்காளத்தில் தேசியத் துயர நாளாக அறிவிக்கப்பட்டது. கல்கத்தாவில் பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் **வந்தே மாதர** கீதத்தை முழங்கியவாறு இந்துக்களுக்குப் புனித ஆறுனகங்கையின் கரையை அடைந்து தாயகத்தை மீண்டும் இணைக்கப் போராடுவதாகச் சபதம் ஏற்றது. நகரில் வர்த்தக-தொழில் வாழ்க்கை ஸ்தம்பித்து விட்டது. அடுப்புக்கள் எரியவில்லை, உணவு சமைக்கப்படவில்லை. சபதக் குறியாக வங்காளிகள் மணிக்கட்டுகளில் துணித் துண்டுகளைக் கட்டிக் கொண்டார்கள். இது வங்காளி மக்களின் ஒற்றுமையை உருவகப்படுத்தியது.

சுதேசி இயக்கம் விரிவடைந்து கிராமங்களுக்கும் பரவியது. பகிஷ்கார விதியை மீறியவர்கள் சமூக விலக்குக்கு ஆளானார்கள். பல தரகு வர்த்தகர்கள் ஓட்டாண்டிகள் ஆகி விட்டார்கள். கல்கத்தாவிலும் வங்காளத்தின் மற்ற நகரங்களிலும் தேசியத் தொண்டர் நிறுவனங்கள் இரகசியக் கழகங்களின் சார்பிலும் இளைஞர் விளையாட்டு நிறுவனங்களை ஆதாரமாகக் கொண்டும் அமைக்கப்பட்டன. தனிப்பட்ட சீருடை (மஞ்சள் தலைப்பாகையும் சிவப்புச் சட்டையும்) அணிந்த இந்தத் தொண்டர்கள் வெகுஜன ஆர்ப்பாட்டங்களையும் கூட்டங்களையும் ஒழுங்கமைப்பதிலும் பிரிட்டிஷ் வர்த்தக நிலையங்களை மறியல் செய்வதிலும் முதன்மையாகப் பங்கு கொண்டார்கள்.

சுதேசி இயக்கம் தேசியக் காங்கிரசின் தலைமையையும் பாதித்தது. 1905ல் நடந்த காங்கிரசின் ஆண்டுக் கூட்டத்துக்கு இந்திய மிதவாதத் தேசியவாதிகளின் மிகப் பிரபலத் தலைவர் கோபால கிருஷ்ண கோக்கலே தலைமை வகித்தார். தமது பேருரையில் அவர் வங்காளத்தில் பிரிட்டிஷ் சரக்குகளின் பகிஷ்காரத்தை அதன்

பிரிவினைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வடிவம் என்ற வகையில் ஆதரித்தார். ஆயினும், சுதேசி இயக்கத்தை எல்லா இந்திய மாநிலங்களிலும் பரப்ப வேண்டும் என்றும் பகிஷ்கார இயக்கம் நாட்டுச் சமூக வாழ்வின் எல்லாத் துறைகளிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் திலகரும் தீவிரவாதிகளும் முன்வைத்த யோசனையை மிதவாதிகள் ஆதரிக்கவில்லை.

காங்கிரசின் மிதவாதத் தலைவர்களால் வெகுஜன இயக்கத்தை இனியும் புறக்கணிக்க முடியவில்லை என்று ஆண்டுக் கூட்டம் காட்டியது. ஆனால் அவர்களுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே ஆழ்ந்த கருத்து வேற்றுமைகள் இருந்தது போராட்டத்தின் வரம்புகளை எல்லா வகையிலும் குறுக்க அவர்கள் செய்த முயற்சிகளால் புலனாயிற்று. புரட்சிப் போராட்டம் மேற்கொண்டு வளர்ச்சி அடைந்த போது இந்தக் கருத்து வேற்றுமைகள் இன்னும் மிகுதியாக அதிகரித்தன.

சுதேசி இயக்கத்தின் வளர்ச்சியும் அதில் வெகுஜனங்கள் கலந்து கொண்டதும்

1906ம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து சுதேசி இயக்கம் வங்காளத்தின் புதிய புதிய நகரங்களிலும் கிராமங்களிலும் நாட்டின் மற்றப் பிரதேசங்களிலும் தொடர்ந்து பரவியது. எங்கும் அது வெகுஜன ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் வடிவை மேற்கொண்டது.

வங்காளம், மகாராஷ்டிரம், பஞ்சாப், பிற மாநிலங்கள் ஆகியவற்றின் தீவிரவாதிகள் தங்கள் செயல்களை மேலும் துடியாக நடத்தினர்கள். வங்காளத்தில் (டாக்கா நகரை மையமாகக் கொண்ட) சட்ட விரோதமான புரட்சி நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டது. **அனுசீலன் சமிதி** (முற்போக்குக் கழகம்) என அழைக்கப்பட்ட இந்த நிறுவனம் மறைமுகப் புரட்சிக்காரர்களின் முயற்சிகளை ஒன்றிணைத்தது. இத்தகைய நிறுவனங்கள் பம்பாய் மாநிலத்திலும் பஞ்சாபிலும் அமைக்கப்பட்டன. நகரச் சிறு முதலாளி வர்க்க வட்டாரங்களுக்கும் சிறப்பாகப் பள்ளி, கல்லூரி மாணவ இளைஞர்களுக்கும் இடையே கிளர்ச்சியை இந்த இரகசியக் கழகங்கள் தீவிரமாக நடத்தின.

இடதுசாரிப் போக்குள்ள புதிய பத்திரிகைகள் வெளிவரலாயின. **ஜுகாந்தர்** (புது யுகம்), **வந்தே மாதரம்** என்னும் வங்காளி நாளிதழ்கள் மக்களால் சிறப்பாக விரும்பப்பட்டன. 1857—1859 மக்கள் கிளர்ச்சி பற்றியும் கரிபால்டி, மாஜினி ஆகியோரைக் குறித்தும் ருஷ்யப் புரட்சி பற்றியும் சிற்றேடுகள் அச்சிட்டுப் பரப்பப்பட்டன.

விளையாட்டு, இளைஞர் மன்றங்களும் கழகங்களும் சுதேசிக் கடைகளும் வியாபார நிறுவனங்களும் எங்கும் தோன்றியவாறு இருந்தன. தீவிரவாதிகள் தங்கள் இரகசியச் செயல்களுக்குச் சட்டபூர்வமான மறைப்பாக இவற்றைப் பயன்படுத்தினர்கள். சுதேசி இயக்கத்தின் துணையால் விரிவான வெகுஜனங்களைத் தீவிரமான ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபடுத்த இந்தியக் குட்டி பூர்ஷ்வாத் தேசிய வாதிகள் முயன்று வந்தார்கள். நகரக் குட்டி பூர்ஷ்வாக்களுக்கு இடையே வேலை செய்வதோடு நிற்காமல் தொழிலாளர்கள் இடையிலும் கிராமவாசிகள் இடையிலும் கூட அவர்கள் கிளர்ச்சி நடத்தத் தொடங்கினர்கள்.

பொதுக் கூட்டங்களிலும் வெகுஜன ஆர்ப்பாட்டங்களிலும் நகர மக்களின் குட்டி பூர்ஷ்வா வட்டாரத்தினரே முக்கியமாகக் கலந்து கொண்டார்கள். ஆனால் தொழிலாளி வர்க்கம் இவற்றை ஆதரித்தது. பம்பாய்ப் பஞ்சாலைகளில் 1905ம் ஆண்டு இலையுதிர் காலத்திலேயே பெருத்த வேலைநிறுத்தங்கள் சில நிகழ்ந்தன. இவற்றின் பயனாக வேலை நாள் நேரத்தை ஓரளவு குறைக்கச் செய்வதில் தொழிலாளர்கள் வெற்றி பெற்றார்கள். 1906ல் வேலைநிறுத்தப் போராட்டத்தின் மையம் பம்பாய்க்கு இடம் பெயர்ந்தது.

கிழக்கு இந்திய ரெயில்வேத் தொழிலாளர்களின் இரண்டு பெரிய வேலைநிறுத்தங்கள் கோடையில் மூண்டன. அரசாங்க அச்சக ஊழியர்களும் கல்கத்தா நகராட்சி மன்றத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தார்கள். அதே கல்கத்தாவில் ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான பல நெசவாலைகளில் பெரிய வேலைநிறுத்தங்கள் பல 1906 நடுவிலும் இறுதியிலும் நடந்தன.

1906ம் ஆண்டுக் கோடையிலும் இலையுதிர் காலத்திலும் நடந்த வேலைநிறுத்தப் போராட்டங்களின் சிறப்பு, தூய பொருளாதாரக் கோரிக்கைகளோடு கூடவே சில அரசியல் கோஷங்களையும் தொழிலாளர்கள் கிளப்பியது ஆகும். உதாரணமாக, பிரிட்டிஷ் நிர்வாகம் கடைப்பிடித்து வந்த இன ஏற்றத்தாழ்வுக்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். இருப்புப் பாதைத் தொழிலாளர்களும் நெசவாலைத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தங்கள் செய்து கொண்டிருந்த போது வங்காளச் சிறு முதலாளி வர்க்க ஜனநாயகவாதிப் பிரதிநிதிகளுடைய உதவியால் வட்டாரத் தொழிற்சங்கங்கள் அமைக்கப் பட்டன. ஏகாதிபத்திய எதிர்ப்புப் பொது ஜனநாயக இயக்கம் தொழிலாளி வர்க்கப் போராட்டத்துடன் சேர்ந்து கொண்டது, இந்தியாவின் தேசிய விடுதலை இயக்கத்தில் பண்பு வகையில் புதிய முன்னேற்றத்தைக் குறித்தது.

அதே சமயம் தீவிரவாதிகள், சிறப்பாக வங்காளத்திலும் பஞ்

சாபிலும், விவசாயிகளுக்கு இடையே கிளர்ச்சி நடத்தத் தொடங் கினர்கள். பிரிட்டிஷ் சரக்குகளைப் பகிஷ்கரிப்பதற்கு ஆதரவாக நாட்டுப்புறங்களில் கூட்டங்களும் போராட்டங்களும் மேலும் அடிக் கடி நிகழலாயின. தீவிரவாதக் கிளர்ச்சிக்காரர்கள் புரட்சி வாசகங் கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை விவசாயிகள் இடையே வினி யோகித்தார்கள். இத்தகைய துண்டுப் பிரசுரம் ஒன்றில் பின்வரு மாறு கூறப்பட்டிருந்தது: ''இந்தத் திருடர்கள் நம்முடைய ஆட்சி யாளர்களாக இருக்க முடியுமா? இவர்கள் நம் கைத்தொழில்களை அழித்து விட்டார்கள், நம்முடைய நெசவாளர்களுடையவும் கரு மான்களுடையவும் தொழில்களைப் பறித்துக் கொண்டு விட்டார்கள். தங்கள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளைக் கணக்கற்ற அளவில் நம் நாட்டுக்குச் கொண்டுவந்து நம் ஆட்கள் மூலமாக நம் முடைய சந்தைகளில் விற்று அதன் வாயிலாக நம் செல்வங்களைச் சூறையாடுகிறார்கள், நம்முடைய மக்களின் உயிரைக் குடிக்கிறார்கள். நமது மக்களின் விளைச்சலைக் கொள்ளை கொண்டு, பஞ்சத்துக்கும் காய்ச்சலுக்கும் பிளேகிற்கும் நம்மை ஆளாக்குபவர்கள் நம்முடைய ஆட்சியாளர்களாக இருக்க முடியுமா?... நம் மீது மேலும் மேலும் புதிய வரிகளை விதிக்கும் இந்த அயல் நாட்டார் நம் ஆட்சியாளர் களாக இருக்க முடியுமா?... சோதரர்களே, நீங்கள் இன்னும் பொறுக்கப் பொறுக்க இந்த வஞ்சகர்கள் உங்களை இன்னும் அதிக மாகக் கொடுமைப்படுத்துவார்கள். நாம் நம் சொந்த பலம் கொண்டு எழுந்து நின்று, விமோசனத்துக்கு வழி இல்லையா என்று பார்க்க வேண்டும். சகோதரர்களே, நாமே இந்தத் தரையில் உள்ளவை எல்லாம். நம் பணத்தால் அவர்கள் உழைக்காமல் கொழுக்கிறார்கள். அவர்கள் நம் குருதியைக் குடிக்கிறார்கள். நாம் எதற்காகப் பொறுக்க வேண்டும்?... சோதர இந்துக்களே, காளி மீதும் துர்கை மீதும் மகாதேவன் மீதும் கண்ணன் மீதும் ஆணையிட்டுச் சபதம் பூணுங்கள். சோதர முஸல்மான்களே, அல்லாவின் பெயரால் ஆணையிட்டு, இந்துக் களும் முஸல்மான்களும் சேர்ந்து தாய்நாட்டுக்குத் தொண்டு செய்வார்கள் என்று கிராமம் தோறும் அறிவியுங்கள்... எழுங்கள், சோதரர்களே! தாய்நாட்டுக்காக வீரத்துடன் போராடி அதன் பொருட்டு உயிரையும் வழங்கி நாம் அதன் தகுதி வாய்ந்த புதல்வர் கள் என்பதை நிரூபிப்போம்!''

இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு இந்த வேண்டுகோள் காரணத் தோடுதான் விடுக்கப்பட்டது. ஏனெனில், பொதுக் கூட்டங்களுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் தடை விதிப்பது, அவற்றைக் கலைப்பது, **வந்தே மாதர** கீதம் பாடுவதைத் தடை செய்வது முதலியவற்றின் மூலம் மக்கள் போராட்ட நடவடிக்கைகளை ஒடுக்கியதோடு நில்லாமல்

பிரிட்டிஷ் காலனியாட்சி அதிகாரிகள் இயக்கத்தைப் பிளவுபடுத்து வதில் முக்கிய கவனம் செலுத்தினர்கள். இந்து-முஸ்லிம் மத-வகுப்பு வாதக் கலகங்களை அவர்கள் இந்த நோக்குடன் மூட்டி விட்டார்கள். ஆயினும் 1905—1906ல் இந்து-முஸ்லிம் பிணக்குகளை மூட்டிவிட அவர்களால் முடியவில்லை. அப்போது, புரட்சிப் போராட்டம் வளர்ந்து வந்த சூழ்நிலையில், நிலப்பிரபுத்துவ உயர் குழுக்களையும் தரகுவர்த்தக முதலாளி வர்க்கத்தையும் சேர்ந்த பிரிட்டிஷ் ஆதர வாளர்களான முஸ்லிம் தலைவர்கள் அவசரமாக அணி திரட்டப் பட்டார்கள்.

புதிய வைசிராயான மிண்டோவை (1906—1910) ''பிரபல முஸல்மான்களின்'' பிரதிநிதிக் குழு பேட்டி காண்பது என்ற ஏற்பாடு 1906ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் பிரிட்டிஷாரின் தூண்டுதலால் நடந்தது. நகராட்சி மன்றங்களுக்கும் சட்ட மன்றங்களுக்குமான தேர்தல்களில் முகமதியர்களுக்குத் தனித் தொகுதி தரப்பட வேண்டும் என்று பிரதிநிதிக் குழு சமர்ப்பித்த நினைவறிக்கையில் மற்ற விஷயங் களோடு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. முஸ்லிம் நிலப்பிரபுத் துவ உயர் குழுவினரின் கோரிக்கைகளைப் பிரிட்டிஷ் காலனியாட்சி அதிகாரிகள் சாதகமான நோக்குடன் பரிசீலனை செய்தார்கள். நிர் வாக அமைப்பில் காலியாகும் பதவிகள் நிரப்பப்படுகையில் கிழக்கு வங்காளத்தில் முஸல்மான்களுக்குச் சலுகைகள் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் ஆதரவுப் பிற்போக்கு நிறுவனமான முஸ்லிம் லீகு அதே ஆண்டு டிசம்பர் மாதம் டாக்கா நகரில் அமைக்கப்பட்டது. ''இந்திய முஸல்மான்கள் இடையே பிரிட்டிஷ் ஆட்சியின்பால் விசு வாசம் வளர்வதற்கு உதவுவது'' தனது குறிக்கோள் என்று இந்த நிறுவனம் அறிவித்தது.

அதே ஆண்டு இந்துப் பிற்போக்காளர்கள் அதிகாரிகளின் ஆதர வுடன் தங்கள் மத-வகுப்புவாத நிறுவனம் ஆகிய **ஸ்ரீ பாரத தரும மண்டல்** என்பதை அமைத்தார்கள்.

எனினும், இயக்கத்தின் முதல் கட்டத்தின் போது இந்தியத் தேசிய வாதிகளுக்குள் நிலவிய கருத்து வேறுபாடுகளைப் பயன்படுத்தப் பிரிட்டிஷ்காரர்களுக்கு வாய்க்கவில்லை. மிதவாதிகள் சுதேசி இயக் கத்தை நிபந்தனைகளுடன்தான் என்றாலும் தொடர்ந்து ஆதரித்தார் கள். இந்த இயக்கம் தேசிய முதலாளித்துவத் தொழில்துறையின் வளர்ச்சிக்குத் தூண்டுதல் அளித்தது. இந்தக் காரணத்தால்தான் டாட்டா இரும்பு-எஃகுத் தொழிற்சாலையின் பங்குகள் மிகக் குறுகிய கெடுவுக்குள் ஏழாயிரம் பங்குதாரர்களிடையே விநியோகிக்கப்பட்டு விட்டன. பிரிட்டிஷ் இயந்திரத் தொழிற் பொருள்களின் பகிஷ்காரத்

திணல் விளைந்த பயன்களை இந்தியப் பெரு முதலாளி வர்க்கம் அனுபவித்தது. 1905—1907ல் இந்தியத் துணிகளின் விலைகள் 8 சதவிகிதம் ஏறின, பிரிட்டிஷ் துணிகளின் விலைகளோ, 25 சதவிகிதம் இறங்கின.

தீவிரவாதிகளும் மிதவாதிகளுடன் தொடர்புகளைத் துணித்துக் கொள்ள இன்னும் வெளிப்படையாக முயற்சி செய்யவில்லை. 1906ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் தேசியக் காங்கிரசின் கல்கத்தா ஆண்டுக் கூட்டத்துக்குத் தீவிரவாதிகள் திலகரைத் தலைவராகப் பிரேரித்தார்கள். அவரைத் தேர்ந்தெடுக்கப்பட விடக் கூடாது என்பதற்காக மிதவாதிகள் இந்தியத் தேசியவாதிகளின் வட்டாரங்களில் எல்லோராலும் பெரிதும் மதிக்கப்பட்ட தொண்டு கிழவரான தாதாபாய் நெளரோஜியைக் காங்கிரஸ் தலைமைப் பதவியில் அமர்த்தினார்கள்.

கல்கத்தா காங்கிரசில் தீவிரவாதிகளின் வற்புறுத்தல் காரணமாக இந்தியாவின் தேசிய விடுதலை இயக்கத்தில் முதன் முதலாக சுயராஜ்யக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. தன்னாட்சி பெற்ற பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் மாதிரியில் பிரிட்டிஷ் பேரரசின் வரம்புகளுக்கு உட்பட்ட சுயாட்சி என்று இதற்கு விளக்கம் தரப்பட்டது.

இந்தியாவின் தேசிய விடுதலை இயக்கத்தின் மீது முதலாவது ருஷ்யப் புரட்சி எத்தகைய ஆழ்ந்த பாதிப்பு விளைத்தது என்பதைக் கல்கத்தா காங்கிரஸ் கூட்டம் காட்டியது. தமது தலைமைப் பேருரையில் தாதாபாய் நெளரோஜி பின்வருமாறு கூறினார்: "ருஷ்ய விவசாயிகள் சுயாட்சிக்குத் தயாராக இருந்ததோடு உலகின் மிகப் பெரிய எதேச்சாதிகார அரசின் கைகளிலிருந்து அதைப் பிடுங்கிக் கொள்ளவும் வல்லமை பெற்றிருந்தார்கள் என்றால், கிழக்கு ஆசியாவில் சீனமும் மேற்கு ஆசியாவில் பாரசீகமும் விழிப்படைந்து வருகின்றன என்றால், ஜப்பான் விழிப்படைந்து விட்டது என்றால், ருஷ்யா தன் விடுதலைக்காக வீரத்துடன் போராடுகிறது என்றால், இந்தோ-பிரிட்டிஷ் பேரரசின் விடுதலை பெற்ற குடிகளாகக் கூறப்படும் நாம் வல்லாட்சியின் உரிமையற்ற பிரஜைகளாக இருக்க எப்படி முடியும்?"

தேசிய இயக்கத்தின் மீது 1905ம் ஆண்டு ருஷ்யப் புரட்சியின் செல்வாக்கு. சுயராஜ்யப் போராட்டத்தின் இரண்டாவது கட்டம்

முதலாவது ருஷ்யப் புரட்சி தீவிரவாதிகளின் செயல்கள் மீது யாவற்றிலும் அதிகமான செல்வாக்கு செலுத்தியது. ருஷ்யாவில் நடந்த புரட்சி நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள் பெரும்பாலும் ஐரோப்பிய முதலாளித்துவச் செய்தித் தாள்களிலும் சஞ்சிகைகளிலுமிருந்தே

இந்தியாவுக்குக் கிடைத்து வந்தன. இவை தனி நபர் பயங்கரச் செயல் களையே வழக்கமாகப் பெரிதுபடுத்தி, ''ருஷ்ய முறைகள்'' என்று அவற்றைக் குறித்தன. ருஷ்யாவில் நடந்த புரட்சி நிகழ்ச்சிகளின் வருணனை அடங்கிய சிற்றேடுகள் சட்டவிரோதமாக அச்சிடப்பட்டு இந்தியாவில் வெளியாயின. மறைமுகக் கழகங்களின் உறுப்பினர் களாக இருந்த இந்தியச் சிறு முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகள் ருஷ்யப் புரட்சியைத் தங்களுக்குத் தோன்றிய வகையில் புரிந்து கொண்டு, தேசபக்தி வாய்ந்த இந்திய இளைஞர்களுக்கு ஆயுதங்களைப் பிரயோகிப்பதில் பயிற்சி அளித்தார்கள்.

நாடு கடந்து ஐரோப்பாவில் வசித்து வந்த இந்தியப் புரட்சிக் காரர்களின் செயல்கள் ருஷ்யாவின் புரட்சி அனுபவம் பரவ வகை செய்தன. 1905—1907ல் முதலில் லண்டனிலும் பிறகு பாரிசிலும் நாடு கடந்த இந்தியப் புரட்சிக்காரர்களின் வட்டம் உருவாயிற்று. இவர்கள் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகவாதிகளுடன் நெருங்கிய தொடர்புகள் ஏற்படுத்திக் கொண்டார்கள். பின்னவர்கள் இந்தியர் களுக்குப் புரட்சி அனுபவத்தை அளித்தார்கள். இரண்டாவது அகிலத்தின் ஷ்டுட்கார்டு காங்கிரசின் உரையாளர் மேடையிலிருந்து காலனியாட்சி முறைக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக இந்தியப் பிரதிநிதிகளின் ஆவேசம் நிறைந்த சொற்பொழிவுகள் முழங்கின. ருஷ்யாவின் புரட்சியினது வீர உதாரணம் இந்தியத் தேசபக்தர்களுக்கு எத்தகைய பரவசம் ஊட்டி இருக்கிறது என்று இந்தியப் பிரதிநிதிகள் எடுத்து உரைத்தார்கள்.

ருஷ்யாவில் வீசிய புரட்சிப் புயலின் எதிரொலிகள் இந்தியாவை எட்டி, அந்நாட்டில் புரட்சி வேகம் தீவிரம் அடைய உதவின. தேசியக் காங்கிரசின் கல்கத்தா கூட்டம் ஒரு வகையில் போராட்டத்தின் முதலாவது கட்டம் நிறைவேறியதைக் குறித்தது. 1907ம் ஆண்டு முதல் சுதேசி இயக்கம் சுயராஜ்யம் பெறுவதற்கான இயக்கமாக வளர்ச்சி அடையலாயிற்று.

1907ம் ஆண்டு வசந்தத்தில் பஞ்சாபில் வெகுஜனப் போராட் டங்கள் மிகப் பேரளவில் நடைபெறலாயின. பிரிட்டிஷ்காரர்களுக்கு எதிரான பொதுக் கூட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் வேலை நிறுத்தங்களிலும் தொழிலாளர்கள் உட்பட நகரவாசிகளின் மிக விரிவான வட்டாரத்தினர் கலந்து கொண்டார்கள். லாலா லஜபதி ராய், அஜித் சிங் ஆகியோரின் தலைமையில் குட்டி பூர்ஷ்வா ஜனநாயக வாதிகள் இந்தியப் படைப் பிரிவுகளின் சிப்பாய்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார்கள். சிப்பாய்கள் பொதுக் கூட்டங்களில் பங்கு கொள்ளத் தொடங்கினார்கள். லஜபதி ராயும் அஜித் சிங்கும் கைது செய்யவும் நாடு கடத்தவும் பட்டது ராவல்பிண்டியில் கிளர்ச்சி

மூளக் காரணம் ஆயிற்று. பிரிட்டிஷ் படைப் பிரிவுகளின் பலத்தால் இது ஒடுக்கப்பட்டது. பஞ்சாப் நகரங்களில் நடந்த போராட்டங்களை அண்டைக் கிராம மக்கள் ஆதரித்தனர். அங்கே இயக்கம் மெய்யான அனைத்து தேசியத் தன்மையை மேற்கொண்டது.

வங்காளத்திலும் போராட்டம் வலுத்தது. வந்தே மாதரம் ஷொம் ப்ரதாய் (வந்தே மாதரக்கழகம்) என்ற புதிய இரகசிய நிறுவனம் அங்கே அமைந்தது. அது ஆயுதக் கிளர்ச்சிக்கு ஆயத்தங்கள் செய்யலாயிற்று. தேசியத் தொண்டர்கள் கடை வீதிகளைச் சூழ்ந்து கொண்டு பிரிட்டிஷ் சரக்குகளை அழித்த நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெறலுற்றன. ஆர்ப்பாட்டங்களும் பொதுக் கூட்டங்களும் பெரும்பாலும் போலீசாருடன் உண்மையான கைகலப்புக்களில் முடிந்தன. இத்தகைய ஒரு மோதலின்போது கல்கத்தாப் போலீசாரின் ஒரு குழுவினர் ஆர்ப்பாட்டக்காரர்களின் தரப்புக்கு வந்து விட்டார்கள்.

நாட்டின் வெவ்வேறு மையங்களில் மீண்டும் வேலைநிறுத்தங்கள் தொடங்கின. முந்திய, 1906ம், ஆண்டில் போலவே இப்போதும் இருப்புப் பாதைத் தொழிலாளர்கள் போராட்டத்தின் முன்னணியில் இருந்தார்கள். வசந்த காலத்தில் பம்பாய் இருப்புப் பாதைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். அக்டோபர் மாதத்தில் கிழக்கு இந்திய இருப்புப் பாதைத் தொழிலாளர்களும் அலுவலர்களும் பத்து நாள் பொது வேலைநிறுத்தம் நடத்தினர்கள். வங்காளத்தின் பொருளாதார வாழ்க்கை ஸ்தம்பித்துப் போயிற்று. நிலக்கரி போதாமையால் கல்கத்தாவிலும் மற்ற நகரங்களிலும் தொழிற் சாலைகள் நின்றுவிட்டன. ரெயில் நிலையங்களில் சரக்குகள் இறக்கப் படாத வண்டிகள் ஏராளமாகக் குவிந்தன. ஆனால் எல்லாவற்றிலும் முக்கியமானது வைசிராய் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் துணிக்கப்பட்டு விட்டது ஆகும். புரட்சி அலை மோதிக் கொண்டிருந்த நாட்டில் காலனியாட்சி அதிகாரிகளின் மதிப்புக்கு இதனால் பெருத்த கேடு விளைந்தது. வேலைநிறுத்தங்கள் வெவ்வேறு இடங்களில் ஆண்டின் இறுதி வரை தொடர்ந்தன. இவற்றை ஒழுங்கமைப்பதில் தீவிரவாதிகளின் பிரதிநிதிகள் முன்போலவே ஊக்கத்துடன் பங்கு கொண்டார்கள்.

தேசியவாதிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் ஆழமாகின்றன. தேசியக் காங்கிரசில் பிளவு

புரட்சிப் போராட்டம் எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்ததோ அந்த அளவுக்கு மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே கருத்து வேற்றுமைகள் அதிகமாகிக் கொண்டு போயின. இந்தியப் பெரு முதலாளி வர்க்கத்தையும் முதலாளி வர்க்க அறிவுஜீவிகளின்

மேல் வட்டாரத்தையும் தேசிய இயக்கத்துக்கு ஆதரவு அளித்து வந்த நிலப்பிரபுக்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய மிதவாதிகள் உள்நாட்டுத் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் கொள்கை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும், அன்னிய மூலதனம் ஓரளவு குறுக்கப்பட வேண்டும் என்றும், வைசிராயினதும் கவர்னர்களுடைய வும் சட்ட நிர்மாணக் கவுன்சில்களில் இந்தியாவின் உடைமையாளர் வர்க்கங்களுக்கு அதிக முழுமையான பிரதிநிதித்துவம் வழங்குவதன் வாயிலாகச் சுயாட்சி விரிவாக்கப்பட வேண்டும் என்றும் கோரு வதுடன் நிறுத்திக் கொண்டார்கள். காலனியாட்சி நிர்வாகத்தின் செயல்களை ஓரளவு மேற்பார்வை செய்யும் உரிமை இந்தக் கவுன்சில் களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரினர்கள்.

தீவிரவாதிகளின் பெரும் பகுதி ஆயுதக் கிளர்ச்சிக்கு அறைகூவி அழைக்கவில்லை என்றாலும் இந்தியாவின் பூரண சுதந்திரத்தை அவர் கள் வேண்டினர்கள். தேசிய விடுதலை இயக்கத்தில் திரளான வெகு ஜனங்களை ஈடுபடுத்தாமல் இந்தக் குறிக்கோளை அடைவது சாத்தியம் இல்லை என்று அவர்கள் கருதினர்கள். சுதேச சமஸ்தானங்களை ஒழித்து விட்டு இந்தியாவில் கூட்டுக் குடியரசை வருங்காலத்தில் நிறுவ வேண்டும் என்று அவர்கள் யோசனை தெரிவித்தார்கள். உள்நாட்டு சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தெளிவான செயல்திட்டம் தீவிரவாதிகளிடம் இல்லை. ஆயினும் அவர்கள் வெகுஜனங்களுக்கு விடுத்த வேண்டுகோள் தொழிலாளர்கள், விவசாயிகளின் வர்க்கப் போராட்டம் தொடங்குவதை எதார்த்தத்தில் சாத்தியம் ஆக்கிற்று. தீவிரவாதிகள் தேசியக் காங்கிரசின் மாநில நிறுவனங்களுக்கு உள்ளே மட்டுமே செயலாற்றி வந்தார்கள். அனைத்து இந்திய நிறுவனம் அவர் களிடம் இருக்கவில்லை. இதுவே அவர்களது பலவீனம்.

வெகுஜனங்களின் புரட்சி முன்முயற்சி தொடங்கியதும் வேலை நிறுத்த இயக்கம் ஏற்றம் பெற்றதும் இந்தியாவின் பெரு முதலாளி களுக்கும் மிதவாதிகளுக்கும் கலவரம் ஊட்டியது. பம்பாய் பெரும் தொழிலதிபர்களும் மிதவாதத் தலைவர்களான கோக்கலேயும் பானர் ஜியும் ஆற்றிய உரைகளில் காலனியாட்சி அதிகாரிகளோடு சமரசம் செய்து கொள்வதற்கான வேண்டுகோள்கள் நாளுக்கு நாள் அதிகத் துலக்கமாக ஒலித்தன.

வலதுசாரி தேசியவாதிகளின் பின்வாங்கலை விரைவுபடுத்தும் நோக்கத்துடன் வைசிராய் மிண்டோ நிர்வாகச் சீர்திருத்தங்கள் தயாராகி வருவதாக அறிவித்தான். வங்காள ஜமீன்தார்களின் உரிமை கள் சற்றும் பாதிக்கப்பட மாட்டா என்று காலனியாட்சி அதிகாரிகள் அவர்களுக்கு உறுதி கூறினர்கள்.

1907ம் ஆண்டு வசந்தத்தில் வங்காள மிதவாதிகளின் தூதுக்

குழு ஒன்று சுரேந்திரநாத பானர்ஜியின் தலைமையில் வைசிராயைச் சென்று கண்டது. ''வங்காளத்தில் கொந்தளிக்கத் தொடங்கியுள்ள ஆவேச உணர்ச்சிகளைக்'' கட்டுப்படுத்துவதில் உதவி அளிக்குமாறு அது கோரியது. மற்ற மாநிலங்களிலும் மிதவாதிகள் பிரிட்டிஷாருக்கு விசுவாசம் தெரிவித்துக் கொள்ளலாயினர். அதே ஆண்டுக் கோடையில் வங்காள ஜமீன்தார்கள் தனிப்பட்ட அறிக்கை ஒன்று வெளியிட்டார்கள். வெகுஜனப் போராட்டம் தொடங்குவதற்கு இதில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதே சமயம் தீவிரவாதிகளின் நிலையைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் திலகர் நாட்டில் அனேகச் சுற்றுப் பயணங்கள் செய்தார். அவருடைய சொற்பொழிவுகள் இந்தியச் செய்தித்தாள்கள் எல்லாவற்றிலும் விரிவாகப் பிரசுரமாயின. ''இந்திய அரசியல் சட்டம் குற்றச் சட்டத் தொகுப்பே'' என்ற திலகரின் வாசகம் இந்திய மக்களின் தாரக மந்திரம் ஆயிற்று.

தேசியக் காங்கிரசின் அடுத்த ஆண்டுக் கூட்டத்துக்கு யார் தலைமை வகிப்பது என்ற பிரச்சினை குறித்துக் கடுமையான போராட்டம் நடந்தது. ஆனால் திலகரைத் தலைவராக்குவது தீவிரவாதிகளுக்கு இந்தத் தடவையும் இயலவில்லை.

பம்பாய் மாகாணத்தின் சூரத்து நகரில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் பங்கு கொண்ட பெரும்பாலான பிரதிநிதிகள் வலது சாரியினர். முந்திய ஆண்டுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சுயராஜ்யப் போராட்டச் செயல்திட்டத்திலிருந்து மிதவாதிகள் விலகி விட்டதாக முதல் அமர்விலேயே திலகர் குற்றம் சாட்டினார். இந்த அமர்வு அடிபிடியிலும் மிதவாதிகளால் அழைக்கப்பட்ட போலீசாரின் தலையீட்டிலும் முடிந்தது. மறு நாள் இரு பிரிவினரும் தனித் தனி அமர்வுகள் நடத்தினார்கள். சொற்பொழிவுகளிலும் ஏற்கப்பட்ட தீர்மானங்களிலும் மிதவாதிகள் தாங்கள் ஏகாதிபத்தியவாதிகளின் அடிவருடிகள் என்பதைக் காட்டிக் கொண்டார்கள். தீவிரவாதிகள் தங்களுக்குச் சொந்தமான நிறுவனம் அமைக்க முயன்று தோல்வி அடைந்தார்கள். வெகுஜனப் போராட்டத்தை மேற்கொண்டு விரிவாக நடத்து மாறு பின்னர் அவர்கள் அழைப்பு விடுத்தார்கள். காங்கிரசில் பிளவு முற்றுக நடந்தேறிய நிகழ்ச்சி ஆகி விட்டது.

வெகுஜனப் போராட்டத்தின் வளர்ச்சி. பம்பாய் அரசியல் வேலைநிறுத்தம்

மிதவாதிகளின் சரணாகதிக்குப் பிறகு வெகுஜன இயக்கம் வங்காளத்தில் தணியலாயிற்று. மறைமுக கழகங்களின் செயல்கள் தனி நபர் பயங்கர நடவடிக்கைகளாகக் குறுகி விட்டன. போராட்ட

மையம் மகாராஷ்டிரத்துக்கும் தென் இந்தியாவுக்கும் இடம் பெயர்ந்தது.

1908ம் ஆண்டு வசந்தத்தில் சென்னை மாகாண நகரங்களான திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் பெருத்த கொந்தளிப்புகள் ஏற்பட்டன. இவை பொது அரசியல் வேலைநிறுத்தமாக வளர்ந்தன. தீவிரவாதிகளின் வட்டார நிறுவனங்கள் இதைத் தலைமை தாங்கி நடத்தின. பிரிட்டிஷ் படைகள் இந்தப் போராட்டத்தைக் கொடுமையாக நசுக்கி விட்டன.

மகாராஷ்டிரத்தில் தீவிரவாதிகள் பெரிய நிறுவன அமைப்பு வேலை செய்து பம்பாய் மாகாணத்தின் ஒவ்வொரு தாலுகாவிலும் தங்கள் சங்கத்தின் கிளைகளை நிறுவினார்கள். பம்பாய்த் தொழிலாளர்களிடையே அவர்கள் முன்னிலும் தீவிரமாக வேலை செய்தார்கள். தொழிலாளர்கள் பல பெரிய வேலைநிறுத்தங்களை நடத்தினார்கள். இவற்றில் ஒன்று—தந்தி ஊழியர்களின் வேலைநிறுத்தம்—நாட்டின் பிற நகரங்களுக்கும் பரவியது.

இதற்கிடையே பிரிட்டிஷ்காரர்கள் புரட்சிச் சக்திகள் மீது எதிர்த்தாக்கு தொடங்கினார்கள். தேசியத் தொண்டர் நிறுவனங்கள் வங்காளத்தில் தடை செய்யப்பட்டன. தேசிய முழக்கங்கள் தைக்கப்பட்ட உடைகளை அணிவதற்குக் கூட தண்டனை விதிக்கப்பட்டது. கிளர்ச்சிக் கூட்டங்கள் பற்றிய சட்டம் 1907ல் பிறப்பிக்கப்பட்டது. இதன்படி கூட்டங்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் கலைக்கப்பட்டன. 1908ல் பத்திரிகைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதன்படி ''கலகத்துக்குத் தூண்டியதாகக்'' குற்றம் சாட்டி எந்தச் செய்தித் தாளை வேண்டுமானாலும் நிறுத்த முடிந்தது.

பிரிட்டிஷ் காலனியாட்சி அதிகாரிகளதும் இந்தியா மந்திரி மார்லியுடையவும் கொள்கையின் தன்மையை விளக்குகையில் வி. இ. லெனின் பின்வருமாறு எழுதினார்: ''சுதந்திர பிரிட்டனின் மிக மிக மூற்போக்காளர்களும் தீவிரவாதிகளுமான தலைவர்கள், ருஷ்ய, ருஷ்யர் அல்லாத சட்டபூர்வ ஜனநாயகவாதிகளின் பிரமாண புருஷரும் ''முற்போக்குள்ள'' (உண்மையில் மூலதனத்துக்கு அடிவருடுகிற) பத்திரிகை எழுத்துத் துறை விண்மீனுமான ஜான் மார்லி (Morley) போன்றவர்கள், இந்தியாவின் ஆளுநர்கள் என்ற முறையில் அசல் செங்கிஸ்கான்களாக, அரசியல் எதிர்ப்பாளர்களை வெட்டிவிடுவது உட்பட எல்லா ''அடக்குமுறை'' நடவடிக்கைகளையும் அனுமதிக்க வல்லவர்களாக மாறிவிடுகிறார்கள்!''*

---

* வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 17, பக்கம் 178.

தேசிய விடுதலை இயக்கத்துக்கு முடிவான அடி கொடுக்கும் நோக்கத்துடன் காலனியாட்சி அதிகாரிகள் 1908ம் ஆண்டுப் பத்திரிகைச் சட்டத்தைப் பயன்படுத்தித் திலகரைக் கைது செய்தார்கள். அவர் கைது செய்யப்பட்டதற்கும் அதையடுத்து 1908 ஜூலை 13 முதல் 22ந் தேதி வரை நடந்த வழக்கு விசாரணைக்கும் எதிர்ப்பு தெரிவிப்பதற்காக வெகுஜன ஆர்ப்பாட்டங்களும் பொதுக் கூட்டங்களும் பம்பாய் மாகாணம் முழுவதிலும் நடந்தன. திலகரின் ஆதரவாளர்கள் பம்பாய்த் தொழிற்சாலைகளில் எதிர்ப்பு வேலைநிறுத்தங்களுக்கு ஏற்பாடுகள் செய்தார்கள்.

வழக்கு விசாரணையின் போது தமது கட்சிக்கு ஆதரவாக அளித்த வாக்குமூலத்தை இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினது கொள்கை மீது வழங்கிய மேதாவிலாசம் பொருந்திய குற்றத் தீர்ப்பாகத் திலகர் மாற்றிவிட்டார். திலகரது பேருரை நாட்டுக்கு உள்ளேயும் வெளியிலும் விரிவான உளப்பதிவு ஏற்படுத்தியது.

இந்தியப் பொது மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் திலகருக்குப் பெருத்த அபராதமும் ஆறு ஆண்டுக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டன. கடுங்காவல் தண்டனை பின்னர் சிறைவாசமாக மாற்றப்பட்டது.

தண்டனைத் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பின், திலகருக்கு விதிக்கப்பட்ட கடுங்காவல் தண்டனை ஆண்டுகளின் எண்ணிக்கைப்படி ஆறு நாட்கள் பொது வேலைநிறுத்தம் இந்தத் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக நடத்துமாறு தீவிரவாதிகள் பம்பாய் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள்.

பொது அரசியல் வேலைநிறுத்தம் ஜூலை 23ந் தேதி தொடங்கியது. பம்பாய்த் தொழில் நிலையங்கள் எல்லாவற்றையும் சேர்ந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டன. கல்வி நிலையங்கள் இயங்கவில்லை. தேசபக்தி முழக்க வாசகங்களும் திலகருடைய உருவப் படங்களும் எங்கும் ஒட்டப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்களும் எதிர்ப்புக் கூட்டங்களில் கலந்து கொண்டவர்களும் கல்மாரி பொழிந்து போலீசாரை எதிர்த்தார்கள். வேலைநிறுத்தத்தை ஒடுக்கக் காலனியாட்சி அதிகாரிகளால் முடியவில்லை. குறித்த ஆறு நாட்கள் கழிந்த பிறகே அது முடிந்தது.

பம்பாய் நிகழ்ச்சிகளின் வரலாற்று முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்து வி. இ. லெனின் பின்வருமாறு எழுதினார்: ''இந்திய ஜனநாயகவாதி திலகருக்கு (Tilak) பிரிட்டிஷ் நீதிகள் விதித்த இழிதகைமை வாய்ந்த தண்டனை—அவருக்குப் பல ஆண்டுகள் நாடுகடந்த சிறைவாசத் தண்டனை அளிக்கப்பட்டது; அதிலும், அவர் குற்றம் அற்றவர் என்று இந்திய ஜூரர்கள் கருத்து தெரிவித்ததாகவும் ஆங்கில

ஜூரர்களின் வாக்குக்களைக் கொண்டே குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டதாக வும் பிரிட்டிஷ் நாடாளுமன்ற மக்கள் சபையில் நடந்த கேள்வி-பதில் மூலம் தெரிய வந்தது!—பண மூட்டையின் கையாட்கள் அந்த ஜனநாயகவாதிக்குச் செய்த வஞ்சம், பம்பாயில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் வேலைநிறுத்தமும் நடக்கக் காரணம் ஆயிற்று. இந்தியாவிலும் பாட்டாளி வர்க்கம் உணர்வு பூர்வமான வெகுஜன அரசியல் போராட்டம் நடத்தும் அளவுக்கு வளர்ந்து விட்டது. நிலைமை இவ்வாறு இருப்பதால் இந்தியாவில் பிரிட்டிஷ்-ருஷ்ய முறை களுக்குச் சாவுமணி அடிக்கப்பட்டு விட்டது எனலாம்!''*

*1905—1908*ல் நிகழ்ந்த புரட்சி ஏற்றம் பம்பாய் வேலைநிறுத்தத் துடன் நிறைவுற்றது. பிரிட்டிஷ் காலனியாட்சி முறைக்கு எதிரான உணர்வு பூர்வமான அரசியல் போராட்டத்தில் நகரச் சிறு முதலாளி வர்க்கத்தின் விரிவான வட்டாரங்களும் தொழிலாளி வர்க்கத்தின் நடுத்தர வட்டாரங்களும் வங்காளத்திலும் பஞ்சாபிலும் விவசாயி களின் சில குழுக்களும் ஈர்க்கப்பட்டன. புரட்சி நிகழ்ச்சிகளில் தீவிர வாதிகள் ஊக்கத்துடன் பங்கு கொண்டதும், இந்தியாவின் பல்வேறு பிரதேசங்களில் நடந்த வெகுஜனப் போராட்டங்களுக்கு அவர்கள் தலைமை ஏற்றதும் தேசிய விடுதலை இயக்கத்துக்கு உள்ள சிறு முத லாளி வர்க்க, ஜனநாயகப் பிரிவு அமைவதற்கு உதவின. முதல் ருஷ்யப் புரட்சியின் செல்வாக்கு குட்டி பூர்ஷ்வா ஜனநாயகவாதி களின் செயல்களில் ஆக அதிக அளவில் வெளிப்பட்டது. வெகுஜன அரசியல் கிளர்ச்சிப் பிரசாரம், பொது அரசியல் வேலைநிறுத்தம் ஆகியவற்றில் ருஷ்யா பெற்றிருந்த அனுபவத்தை இந்திய நிலைமை களில் அவர்கள் புரிந்து கொண்டார்கள். குட்டி பூர்ஷ்வாப் புரட்சி கர ஜனநாயகக் கொள்கைவாதம் நிலைபெற்றது இந்தியர்களின் தேசியத் தன்னுணர்வு வளர்ச்சியின் வடிவில் வெளிப்பட்டது, அதைப் புதிய மட்டத்துக்கு உயர்த்தியது. பால கங்காதர திலகர், பிபின் சந்திர பால், அரவிந்த கோஷ், பிற தீவிரவாதத் தலைவர்கள் ஆகியோரின் கட்டுரைகளிலும் சொற்பொழிவுகளிலும் இந்த விஷயம் சிறப்பான தெளிவுடன் காணப்படுகிறது.

அதே சமயம், *1905—1908*ன் வட்டாரத் தன்மை கொண்ட நிகழ்ச்சிகளில் தேசிய இயக்கத்தின் பலவீனமும் வெளிப்பட்டது. நாட்டின் பொருளாதார, சமுதாய, அரசியல் துறைகளில் வரலாற்றுப் போக்கில் பெறப்பட்ட வளர்ச்சியின் தரத்திலுல் புறநிலையாக ஏற்பட்டது இந்தப் பலவீனம். உதாரணமாக, தேசியச் சக்திகளின்

---

* வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி *17*, பக்கங்கள் *178—179*.

பிளவும் சிறு முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகளுக்கு உரிய அனைத்து இந்திய நிறுவனம் இல்லாததும் நிலைமையைப் பாதித்தன.

தேசிய இயக்கத்தில் வெகுஜனங்கள் பங்கு கொள்வது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் வெற்றிக்கு வேண்டிய ஒரு முதனிலையாக இருந்தது. இது சாத்தியம் என்று 1900ங்களின் நிகழ்ச்சிகள் காட்டின. ஆயினும் இந்திய மக்களது முக்கியப் பகுதியின் மிக மிகப் பெரும்பாலராக இருந்த விவசாயிகள் அரசியல் போராட்டத்துக்குத் தேவையான விழிப்பை இன்னும் பெறவில்லை.

தேசிய விடுதலை இயக்கத்தினது இந்தக் கட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம், இருபதுக்களின் புரட்சித் தாக்கு நடந்த காலப் பகுதியில் காலனியாட்சி எதிர்ப்புப் போராட்டத்தின் பிரதான இயக்கு சக்தியாக விளங்கிய இந்திய சமூக வர்க்கங்களும் வட்டாரங்களும் அரசியல் விழிப்பு பெறத் தொடங்கியதே ஆகும்.

முதல் உலக யுத்தத்தின் முன்பும் யுத்தக் காலத்திலும் இந்தியா

மிண்டோ-மார்லி சீர்திருத்தம்

பம்பாய் அரசியல் வேலைநிறுத்தத்துக்குப் பின் வெகுஜன இயக்கத்தில் தாற்காலிகத் தணிவுக் காலப் பகுதி தொடங்கியது. பிரிட்டிஷ்-இந்திய அதிகாரிகளின் உள்நாட்டுக் கொள்கை இதற்குப் புறநிலையாக உதவிற்று. காலனியாட்சி எதிர்ப்பாளர்களின் முகாமில் பிளவை ஆழமாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது இந்தக் கொள்கை. ''அச்சுறுத்துவதும் ஆசை காட்டுவதும்'' என்ற கொள்கையைப் பிரிட்டிஷ் நிர்வாகம் முன்போலவே கடைப்பிடித்து வந்தது.

ஒரு புறம், காலனியாட்சி முறையை எதிர்த்துத் தீவிரமாகப் போராடியவர்கள் கொடிய அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். மறைமுக பிரிட்டிஷ் எதிர்ப்பு நிறுவனங்களை ஒடுக்குவதற்காக 1908—1913ல் பிறப்பிக்கப்பட்ட சட்டங்கள்—வெடிபொருள் உற்பத்தி குறித்த சட்டம் (1908), குற்றச் சட்டப்படி தண்டனைக்குரிய செயல்கள் பற்றிய சட்டம் (1908), இந்தச் சட்டத்தில் சேர்க்கப்பட்ட விதிகள் ஆகியவை—பயங்கர நடவடிக்கைக் கொள்கைக்குச் சட்ட ஆதாரம் அமைப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன.

ஏற்கெனவே (1907ல்) பிறப்பிக்கப்பட்டிருந்த கலகக்காரக் கூட்டங்கள் பற்றிய சட்டத்தின் அமல் முதலில் 1911 வரையிலும் பிறகு வரம்பற்ற காலத்திற்கும் நீடிக்கப்பட்டது. 1910ம் ஆண்டு புதிய அச்சுச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. தேசிய அச்சக வெளியீடுகளை நசுக்குவதற்குக் காலனியாட்சி நிர்வாகத்திற்கு இருந்த வாய்ப்புக்களை இது விரிவுபடுத்தியது. இந்தச் சட்டத்தின்படி நூற்றுக்கணக்கான இந்திய வெளியீடுகள் அடுத்து வந்த ஆண்டுகளில் நிறுத்தவோ, பறிமுதல் செய்யவோ அபராதம் விதிக்கவோ பட்டன. போலீஸ் பயங்கர நடவடிக்கைகள் நாடு முழுவதிலும் அலைமோதின.

மறு புறம், இந்திய உடைமையாளர் வர்க்கங்களில் (சமஸ்தான மன்னர்கள், நிலப்பிரபுக்கள், தரகு வர்த்தகர்கள் ஆகியோரில்) தங்களை ஆதரித்த குழுக்களுக்கு இடையே நிலைகளை வலுப்படுத்திக் கொள்ளும் பொருட்டும் தேசிய இயக்கத்தின் மிதவாதிப் பிரிவினரைத் தங்கள் தரப்புக்கு ஈர்க்கும் பொருட்டும் பிரிட்டிஷ்காரர்கள் சில அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

வைசிராய் மிண்டோவும் பிரிட்டனின் இந்தியா மந்திரி மார்லியும் தயாரித்த இந்தியச் சட்ட மன்றங்கள் பற்றிய புதிய சட்டம் 1909ல் ஏற்கப்பட்டது. இது மிண்டோ-மார்லி சீர்திருத்தம் எனப் பெயர் பெற்றது. 1910ம் ஆண்டு அமுலுக்கு வந்த இச்சட்டத்தின்படி, வைசிராயின் (பேரரசர்) மையச் சட்ட நிர்மாணக் கவுன்சிலில் அதன் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை பாதி வரை உயர்த்தப்பட்டது. பெரிய மாகாண கவர்னர்களின் கவுன்சில்களில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வகை செய்யப்பட்டது. அதே சமயம், தொகுதிவாரித் தேர்தல் முறை செயல்படுத்தப்பட்டது. அதாவது, பொதுத் தொகுதி, நிலச் சொந்தக்காரர்கள் தொகுதி, முஸ்லிம்கள் தொகுதி என்ற மூன்று தனித் தொகுதிகளில் தேர்தல் நடத்த வகை செய்யப்பட்டது. அதோடு முஸ்லிம்கள் தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டது. தவிரவும், நிலச் சொந்தக்காரர்கள், முஸ்லிம்கள் தொகுதிகளில் நேர்முகமாகவும் பொதுத் தொகுதியில் இரண்டு-மூன்று கட்டங்களாகவும் தேர்தல்கள் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நடவடிக்கைகளின் விளைவாக, நிலப்பிரபுக்களும் முகமதிய சமுதாயத் தலைவர்களும் இந்து முதலாளி வர்க்கத்தினருடனும் முதலாளித்துவ அறிவுஜீவித் தலைவர்களுடனும் ஒப்பிடுகையில் சலுகையுள்ள நிலைமையில் வைக்கப்பட்டார்கள். இந்து, முஸ்லிம் மத சமுதாயங்களை ஒன்றுக்கொன்று எதிர் நிறுத்துவது என்ற, பிரிட்டிஷார் கடைப்பிடித்த பிரித்தாளும் கொள்கைக்கு இது பொருந்தியது.

1909ம் ஆண்டு அமுலுக்கு வந்த நிர்வாகச் சீர்திருத்தம் மிகப் பெரும்பாலரான இந்தியர்களின் நலன்களை அறவே பாதிக்கவில்லை. வாக்காளர்கள் நாட்டின் மக்கள் தொகையில் ஒரு சத விகிதத்துக்கும் குறைவாக இருந்தார்கள். சட்ட நிர்மாணக் கவுன்சில்களின் வேலையோ, முன்போன்றே சட்ட ஆலோசனைத் தன்மை மட்டுமே கொண்டிருந்தது.

இந்திய உடைமையாளர் வர்க்கங்களுக்கு இடையே காலனியாட்சி அரசாங்கத்துக்கு வேண்டிய சமுதாய அடிப்படையை விரிவுபடுத்தும் உள்நாட்டுக் கொள்கையைப் புதிய வைசிராய் ஹார்டிஞ்சும் (1910—1916) தொடர்ந்து கடைப்பிடித்தான். 1911ம் ஆண்டு பிரிட்டிஷ் மன்னன் முதன் முதலாக இந்தியாவுக்கு வந்தான். டில்லிச் செங்கோட்டையில், முகலாயப் பேரரசர்களின் அரண்மனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆடம்பரமான அரசவையில் (தர்பாரில்) ஐந்தாம் ஜார்ஜ் இந்தியாவின் பேரரசனாக முடிசூட்டிக் கொண்டான். இந்தியாவின் நிலப்பிரபு வர்க்கம் பிரிட்டிஷ் அரசனுக்கு விசுவாசம் தெரிவித்துக் கொள்ள முடிசூட்டு விழா பயன்படுத்தப்பட்டது. மக்களால் பெரிதும் வெறுக்கப்பட்ட வங்கப் பிரிவினையை ரத்து செய்ய முடிவு செய்திருப்பதாக விழாக் கொண்டாட்டத்தின் போது அறிவிக்கப்பட்டது. அஸ்ஸாம், பீகார், ஓரிஸ்ஸா மூன்றும் வங்காளத்திலிருந்து பிரிக்கப்பட்டுத் தனி நிர்வாக அமைப்புள்ள மாநிலங்கள் ஆக்கப்படும் என்றும், தலைநகர் அமைதியற்ற கல்கத்தாவிலிருந்து வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த டில்லிக்கு மாற்றப்படும் என்றும் பிரகடனம் செய்யப்பட்டது.

தலைநகர் மாற்றம் உள்நாட்டு நோக்கில் மட்டுமின்றி அயல் நாட்டுக் கொள்கையின் நோக்கிலும் முக்கியத்துவம் கொண்டிருந்தது. ஆசியாவில் செல்வாக்கு மண்டலங்களின் எல்லைகளை வரையறுக்கும் பொருட்டு 1907ம் ஆண்டு கையெழுத்தான பிரிட்டிஷ்-ருஷ்ய ஒப்பந்தம் இந்தியாவின் எல்லைகளை ஒட்டிய நாடுகளில் பிரிட்டிஷ் செல்வாக்கை உறுதிப்படுத்தி இருந்தது. இவற்றில் திபெத்தும் ஒன்று. 1904ம் ஆண்டிலேயே பிரிட்டிஷ் படையணிகள் திபெத்துக்கு அனுப்பப் பட்டிருந்தன. ஆசியாவில் பிரிட்டிஷ்-ருஷ்யப் போட்டியின் இடத்தில் இப்போது கெய்சர் ஜெர்மனியுடன் மோதல் நடந்து வந்ததால் இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் கொள்கை அமைப்பாளர்கள் முஸ்லிம் கிழக்கு நாடுகள் மீது முக்கியமாகக் கவனம் செலுத்தத் தொடங்கி இருந்தார்கள். அங்கே, ஆட்டமான் (துருக்கிப்) பேரரசுக்கு உட்பட்ட நாடுகளில் ஜெர்மானிய ஒற்றர்கள் தீவிரமாகச் செயலாற்றி வந்தார்கள். இவற்றில் ஜெர்மானியருக்கு எதிராகச் செயல்பட்டதோடு கூடவே ஆப்கனிஸ்தானிலும் தங்கள் செல்வாக்கை வலுப்படுத்த பிரிட்டிஷாருக்கு முடிந்தது. பிரிட்டிஷ் அரசன் முகலாயப் பேரரசின்

அரியணையில் முறைப்படி அமர்ந்துள்ள வாரிசுரிமையாளன் என்று காட்டிக் கொள்வது (பிரிட்டிஷ் கொள்கை அமைப்பாளர்களின் எண்ணப்படி), இந்திய முஸ்லிம் சமுதாயத்தினர் இடையிலும் மேற்கு ஆசிய முஸ்லிம் மக்கள் இடையிலும் காலனியாட்சி அரசாங்கத்தின் மதிப்பை உயர்த்துவதாக அர்த்தப்பட்டது.

பண்பாட்டுத் துறையில் காலனியாட்சி அரசின் கொள்கையும் இதே நோக்கத்துடன் செயல்பட்டது.

19ம் நூற்றாண்டின் முடிவிலும் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சி

இடைக் கால இந்தியக் கட்டிடக் கலையின், முதன்மையாக இந்தோ-முஸ்லிம் எனப்பட்ட கட்டிடச் சிற்பக் கலையின் சிறந்த நினைவுச் சின்னங்கள் மீட்டமைக்கப்படுவது 19ம் நூற்றாண்டின் இறுதி முதல், வைசிராய் கர்சன் காலத்தில் நிகழ்ந்தது. 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிறுவப்பட்ட கலைப் பொருட்காட்சி சாலைகளில் (கல்கத்தாவில் விக்டோரியா ராணி பொருட்காட்சி சாலை, பம்பாயில் வேல்ஸ் இளவரசன் பொருட்காட்சி சாலை முதலியவற்றில்) நடுத்தரமான ஐரோப்பிய (முதன்மையாக பிரிட்டிஷ்) மரபுசார்ந்த ஓவியப் படைப்புக்களோடு கூடவே இந்தியக் கலைத் தொழிலும், இடைக் காலச் சிற்றுருவியக் கலையும் சிற்பக் கலையும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. அதே சமயம் தொல்கால, இடைக் கால இந்தியக் கட்டிடக் கலையின் பெருந்தொகையான நினைவுச் சின்னங்கள் நாடு முழுவதிலும் தாழ்வுற்று அழிந்து சிதைந்தன. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கோட்டைகள் (உதாரணமாக டில்லிச் செங்கோட்டையும் அலாகாபாது, அகமதாபாது கோட்டைகளும் பிறவும்) பிரிட்டிஷ்-இந்தியச் சேனையின் பாசறைகள் கட்டப்பட்டதால் அலங்கோலக் காட்சி அளித்தன.

கல் தச்சர் தொழில் வகுப்பைச் சேர்ந்த மக்கள் கலைஞர்களால் பாதுகாக்கப்பட்டு வந்த இந்திய தேசியக் கட்டிடக் கலை மரபுகள், அரசினிடமிருந்தோ தனி நபர்களிடமிருந்தோ அவர்களுக்குப் பெரிய வேலைகள் எவையும் கிடைக்காமையால் நாளடைவில் நசித்துப் போயின. நாட்டுப் புறத்திலும் பிராந்திய நகரங்களிலும் இருப்பிட வீடுகளில் தான் இந்த மரபுகள் அதிகமாக நிலைத்திருந்தன. பொதுக் கட்டிடங்களில் (ரெயில் நிலையங்கள், அலுவலகங்கள் முதலியன) ''விக்டோரியா கால'' ஆடம்பரப் பாணி முன்போலவே ஆதிக்கம் வகித்தது. போலித் தொன்மைக் கிரேக்க-ரோமானிய மரபும் போலி

கோத்திக் மரபும் இந்துக் கோயில்களிலும் முஸ்லிம் அரண்மனைகளிலு மிருந்து எடுத்துக் கொண்ட அலங்கார வேலைப்பாடுகளும் இந்தப் பாணியில் இணைந்திருந்தன. நவ இந்தியப் பாணி எனப்படுவதும் வளர்ச்சி அடைந்தது. இந்தியாவின் இடைக் காலக் கட்டிடக் கலையை, முதன்மையாக முகலாயக் கட்டிடச் சிற்பத்தை, ஒட்டிய கலைப் பாணி இதற்கு ஆதாரமாக இருந்தது. உதாரணமாக, புதிய தலைநகரின் ஐரோப்பியப் பகுதியான புது டில்லியில் அரசாங்க மையம் 1913—1931ல் நவ இந்தியப் பாணியில் கட்டப்பட்டது.

மதச் சார்பற்ற கட்டுமானத்தில் நவ இந்தியப் பாணி விரிவாகக் கையாளப்பட்டது ''பேரரசு மரபுகளை'' ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட காலனியாட்சி அதிகாரிகளின் கொள்கையோடு இணைந் திருந்தது. ஆனால் இந்தப் பாணி தோன்றியதற்குக் காரணம் 19ம் நூற் றாண்டின் முடிவிலும் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்திய மக்களின் வரலாற்று, பண்பாட்டு மரபுச் செல்வத்தின்பால் இந்திய, பிரிட்டிஷ் அறிவாளிகளின் முன்னணி வட்டாரங்களில் ஏற்பட்ட ஆர்வமே ஆகும். இந்தியாவின் தொன்மைக் கலையைப் பரப்புவதில் கல்கத்தா கலைக் கல்லூரி இயக்குநராய் இருந்த ஆங்கிலேயர் ஒய். பி. ஹாவெல், இந்தியாவின் கலைத் தொழில்களை ஆராய்ந்து அவற்றுக்குப் புத்துயிர் அளிப்பதற்கு அரும் பாடுபட்ட ஆனந்த குமாரசுவாமி இரு கலை இயல் அறிஞர்களும் பெரும் தொண்டு ஆற்றினார்கள்.

இந்தியப் பயன்முறைக் கலை மரபுகள் (கல், உலோக, மர இழைப்பு, செதுக்கு வேலை, அணிகலன்கள் புனையும் கலை, மட்பாண்டத் தொழில், துணி நெசவு, சித்திரத்தையல் கலை முதலியன) பாது காக்கப்பட்டதால் கலைத் தொழில் பொருள்களின் சில வகைகளுக்கு ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் 19ம் நூற்றாண்டின் இறுதியில் கிராக்கி அதிகரித்தது. கணிசமான அளவு ஐரோப்பிய வாடிக்கைக் காரர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட கலைத் தொழிற் பொருள்களில் (காச்மீரச் சால்வைகள், டில்லிப் பொற்கொல்லர்களின் அணிகலன் கள் முதலியன) அயல்நாட்டு மாதிரிகளின் செல்வாக்கு ஓரளவு காணப் பட்டது.

இந்தியாவின் தொன்மை சார்ந்த ஓவியக் கலையின் மரபுகளை வளர்த்து வந்த தேசியக் கலைப் பாணியின் பிரதிநிதிகள் ஓவிய, வரை யுருவக் கலைகளில் ஐரோப்பிய, கீழை நாட்டு (ஜப்பானிய, சீன) உத்தி களைப் படைப்புத் தன்மையுடன் கையாண்டார்கள். இந்திய ஓவிய-சிற்பக் கலையில் இந்தப் போக்கைத் தொடங்கி வைத்தவர் அவனீந் திரநாத தாகூர் (1871—1951). மகாகவி ரவீந்திரரைப் பெற்றதும் அறிவொளி பரப்பி வந்ததுமான புகழ் பெற்ற தாகூர் குடும்பத்தைச் சேர்ந்த இவர் கல்கத்தாவில் வேலை செய்து வந்தார். இந்தப்

போக்கைச் சேர்ந்த பெரும்பாலான ஓவியர்கள் வங்காளிகள். எனவே இந்திய ஓவிய-சிற்பக் கலையில் இந்தப் போக்கு வங்காள மறுமலர்ச்சிக் கலை எனப் பெயர் பெற்றது. அவனீந்திரநாத தாகூர், நந்தலால் போஸ், அசித் குமார் ஹல்தார், சமரேந்திரநாத குப்தர், சரதசந்திர உக்கீல் முதலியோரின் படைப்புக்கள் இந்தியாவின் நவீன ஓவிய, வரையுருவக் கலைகளுக்கு அடிக்கல் நாட்டின.

காலனியாட்சிக்கு உட்பட்ட இந்தியாவில் முதலாளித்துவ சமூகம் அமையத் தொடங்கியதுடன் தொடர்பு கொண்ட புதிய இந்தியப் பண்பாடு நிலை பெற்று விட்டதைப் புது இந்திய இலக்கியங்களின் வளர்ச்சி யாவற்றிலும் அதிகத் துலக்கமாகக் காட்டியது. ஐரோப்பா விலிருந்து பெற்ற உரைநடைப் படைப்புக்களில்—நாவல், சிறு கதை, கட்டுரை முதலியவற்றில்—இந்திய இலக்கிய ஆசிரியர்கள் தேர்ச்சி பெற்ற சிக்கலான நீண்ட கால நிகழ்முறை 20ம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில் நிறைவுற்றது. இந்திய உரைநடை, நாடகம், கவிதை ஆகியவற்றின் பெரும் பகுதி இந்திய மக்களின் முற்கால வரலாற்றையே முன்போன்று கருப்பொருளாகக் கொண்டிருந்தது. நெடுங் காலத்துக்கு முன் நடந்த போர்களிலும் கிளர்ச்சிகளிலும் காட்டப்பட்ட வீர பராக்கிரமங்களை வருணிப்பதன் மூலமே இந்திய எழுத்தாளர்கள் காலனியாட்சி அமைப்பின் நிலைமைகளில் தங்கள் வாசகர்களின் தேசபக்தியைத் தூண்டி எழுப்ப முடிந்தது. வீர வரலாற்றுக் கதைக் கருவின் காரணமாகவே கற்பனைப் பெருக்கு புதிய கால இந்திய இலக்கியங்களின் பிரதானப் பாணியாக நீண்ட காலம் நிலைத்திருந்தது.

சிறந்த இலக்கியத் தரமான வரலாற்று நவீனங்களோடு கூடவே மட்ட ரகமான சரக்குகளும் 19ம் நூற்றாண்டின் முடிவிலும் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஏராளமாக வெளியாயின. புராண, அல்லது வரலாற்றுக் கதைக் கருவை விவரிப்பதற்கான கற்பனை நவிற்சி கடந்த கால நிலப்பிரபுத்துவத்தைப் பிற்போக்குத்தனமாக ஆதர்சப்படுத்தும் பாங்கை இவற்றில் மேற்கொண்டது.

அதே சமயம், கற்பனை நவிற்சியின் இடத்தில் விமர்சன எதார்த்த வாதத்தைக் கையாளும் முறை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் வெகுவாகப் பரவியது. இது வீர-கற்பனை மூலத்தைப் பிரத்தியேகமான விதத்தில் இசைவித்துக் கொண்டது. இந்த எதார்த்த வாதத்தின் விளைவாக இந்திய உரைநடையின் சமூகப் போக்கு தீவிரம் ஆயிற்று. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்த கல்வி கற்ற இளைஞர்களின் முன்னணிப் பகுதியினருடைய பிரச்சினைகள் மீது நாளுக்கு நாள் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. புதிய காலத்துக்கும் அண்மைக் காலத்துக்கும் இடையே வாழ்ந்த மிகப்

பெரிய இந்திய எழுத்தாளர்களின் படைப்புக்களில் சமூகப் பிணக்குகள் பற்றிய கதைக்கரு வர வரத் துலக்கமாகப் புலப்பட்டது.

இலக்கியப் படைப்பில் புதிய போக்குக்கள் வங்காளி மொழியில் யாவற்றிலும் முழுமையாக வெளிப்பட்டன. எல்லா நவ இந்திய இலக்கியங்களுக்கும் இடையே வங்காளி இலக்கியம் முதல் இடத்தில் தொடர்ந்து இருந்து வந்தது. இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் இந்தியாவின் பண்பாட்டு வாழ்வு மீது மிகப் பெரிய செல்வாக்கு செலுத்திய தலை சிறந்த வங்காளி இலக்கியப் பிரதிநிதி ரவீந்திரநாத தாகூர் (1861—1941) ஆவார். தாகூர் மாபெரும் எழுத்தாளர், இசைப் படைப்பாளர், ஓவியர், தத்துவவாதி, கல்வித் துறை வித்தகர், சமூகத் தலைவர். நவீனங்கள், குறுநாவல்கள், சிறு கதைகள், அரசியல், சமூக, இலக்கிய விமர்சனக் கட்டுரைகள், தத்துவ உரைகள், கவிதைகள், நாடகங்கள் முதலியவற்றின் படைப்பாளராகத் தாகூர் இந்திய இலக்கிய வரலாற்றில் இடம் பெற்றுள்ளார். கவிதைத் திரட்டுக்கள், நாடகங்கள், ஏராளமான சிறுகதைகள் ஆகியவற்றின் ஆசிரியராக ரவீந்திரர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் எண்பது—தொண்ணூறுகளிலேயே இந்தியாவில் பிரபலம் ஆகி இருந்தார். ஆனால் இருபதாம் நூற்றாண்டில், கோரா (1907-1910), வீடும் உலகமும் (1915—1916) என்னும் நவீனங்கள் வெளியான பிறகே சிந்தனையாளர், நாவலாசிரியர் என்ற வகையில் அவர் புகழ் பெற்றார். வங்காளத்து அறிவாளிகளின் சித்தாந்தத் தேட்டங்கள் பற்றியவை இந்த நவீனங்கள். தேசிய இயக்கம் பற்றிய கதைக் கருக்கள் இந்திய இலக்கியத்தில் நிலை பெறுவதற்கு வீடும் உலகமும் என்னும் நவீனம் சிறப்பான தொண்டு ஆற்றியது. சுதேசி, சுயராஜ்யப் போராட்டக் காலப் பகுதியில் இந்திய தேசியவாதத்தின் வெவ்வேறு போக்குக்கள் குறித்துத் தாம் கொண்டிருந்த கருத்துக்களைத் தாகூர் இந்த நவீனத்தில் வெளியிட்டிருந்தார். உலகம் முழுவதிலும் பாராட்டப் பெற்ற தமது படைப்புக்களால் ரவீந்திரர் இந்திய இலக்கியத்தில் விமர்சன எதார்த்தவாத முறையின் வெற்றியை நிலைப்படுத்தினார். 1913ம் ஆண்டு தாகூருக்கு இலக்கியத்திற்கான நோபெல் பரிசு வழங்கப் பட்டது. நோபெல் பரிசு பெற்ற முதல் இந்தியர் ரவீந்திரநாத தாகூர்தாம்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இரண்டாவது பெரிய வங்காளி எதார்த்தவாதி எழுத்தாளராக விளங்கியவர் சரத்சந்திர சட்டோபாத்தியாயர். அவருடைய நவீனங்களில் அவர் கால வங்காளத்தின் வாழ்க்கை நிலைமைகள் உள்ளபடியே சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

பிற நவ இந்திய இலக்கியங்களிலும் இவை போன்ற நிகழ்ச்சி

கள்—புதிய படைப்பு வகைகளின் வளர்ச்சியும் விமர்சன எதார்த்த வாதத்தின் நிலைபேறும்—நடந்தன. மகாராஷ்டிரத்தில் புதிய போக்குக்களின் முன்னோடியாகத் திகழ்ந்தார் நவீன மராத்தி உரை நடையைத் தோற்றுவித்த ஹரிநாராயண் ஆப்டே (1864—1919). இவருடைய கொள்கைவாத நிலைகள் மீது பால கங்காதர திலகரின் செல்வாக்கு ஓரளவு காணப்பட்டது. இவர் போன்றே ஹிந்தியிலும் (ஸ்ரீநிவாஸ், தாஸ் கிஷோரிலால் கோஸ்வாமி முதலியோர்), தெலுங்கிலும் (கா. ஸ்ரீநிவாஸ ராவ், வெ. வெ. சாஸ்திரி முதலியோர்) பிற இந்திய மொழிகளிலும் பல நாவல், நாடக ஆசிரியர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கதைக் கருவாக எடுத்துக் கொண்டார்கள். ஒரியா மொழியின் நவீன இலக்கியத்தைத் தோற்றுவித்த பக்கீரா மோகன் சேனபதி (1847—1948) இயற்றிய சஹமனே ஆட்டா குண்டோ (ஆறு ஏக்கர் எட்டு மா நிலம்) என்ற நவீனம் (1902) அவருடைய காலத்து நாட்டுப் புறத்தின் கடுமையான சமூகப் பிரச்சினைகள் பற்றியது.

புதிய படைப்பு வகைகளோடு கூடவே மரபு வழி வந்த படைப்பு வகைகளும் முதன்மையாகக் கவிதையிலும் சற்று குறைந்த அளவில் நாடகத்திலும் தொடர்ந்து வளர்ச்சி அடைந்தன. எனினும் காவிய நூல்களும் புதிய போக்கினால் மேலும் மேலும் அதிகமாகப் பாதிக்கப்பட்டன. புதிய காலத்தையும் அண்மைக் காலத்தையும் சேர்ந்த இன்னொரு இந்தியப் பெருங் கவிஞர் இந்த ஆண்டுகளில் கவிதை புனையத் தொடங்கினர். அவர்தாம் முகமது இக்பால் (1873—1938). அவர் உருது, பார்சி, பஞ்சாபி ஆகிய மொழிகளில் எழுதி வந்தார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இக்பாலின் கவிதைகளில் சமூகக் கருத்துக்களும் தாய்நாடு பற்றிய கருத்துக்களும் தெளிவாக ஒலித்தன.

எளிய சொற்களைக் கொண்டு அபூர்வ எளிமை வாய்ந்த நடையில் கவிதைகள் இயற்றித் தமிழுக்குப் புத்துயிர் தந்த மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் (1882—1921) இந்தக் காலத்தைச் சேர்ந்தவர்தாம். தமிழ் மக்களின் அரசியல், சமூக, இலக்கிய வாழ்வின் எல்லாத் துறைகளிலும், பாரதியாரின் கவிதை, உரைநடைப் படைப்புக்கள் புது விழிப்பையும் புத்துணர்வையும் ஏற்படுத்தின.

பெரிய தேசிய எழுத்தாளர்களும் அறிவொளி பரப்பியவர்களும் நிறுவிய இலக்கிய-திறனாய்வுச் சஞ்சிகைகளும் தாய் மொழியையும் இலக்கியத்தையும் கற்பதற்கான நிலையங்களும் இந்தக் காலப் பகுதியில் இந்தியாவின் பல்வேறு மக்களினங்களது மொழிகளில் இலக்கியம் உரு ஆவதில் முக்கியப் பங்கு ஆற்றின. 1883ல் நிறுவப் பெற்ற காசி நாகரி பிரசாரிணி ஸபா (தேவநாகரியைப் பரப்புவதற்கான காசி நிலையம்) இத்தகைய நிலையங்களில் ஒன்று. இந்தி மொழி இலக்கிய

வரலாற்று ஆராய்ச்சியும் பிரசாரமும் நடத்தி வந்தது இந்த நிலையம். இந்தி இலக்கியம் பற்றி மகாவீர் பிரசாத் துவிவேதி, உருது இலக்கியம் பற்றி முகமது ஹசேன் ஆஜாத், தமிழ் இலக்கியம் பற்றி உ. வே. சுவாமிநாத அய்யர் ஆகியோரும் பிறரும் எழுதிய ஆராய்ச்சி நூல்கள் இந்திய இலக்கிய ஆராய்ச்சிக்கு அஸ்திவாரமாக அமைந்தன.

புதிய போக்கைச் சேர்ந்த எழுத்தாளர்களின் நூல்களில் உயிரோட்டமுள்ள பேச்சு வழக்கு மொழி கையாளப்பட்டது. இவர்களில் சிலர் இலக்கிய மொழி நடையில் உண்மையான சீர்திருத்தம் செய்தார்கள். தெலுங்கு இலக்கிய ஆசிரியர்களான கந்துக்கூரி வீரேசலிங்கம் பந்துலு (1848—1919), குருஜாதா அப்பா ராவ் (1861—1915) ஆகியோர் இத்தகையவர்கள்.

காலனியாட்சிக்கு எதிரான விடுதலை இயக்கம் புதிய பண்பாட்டினதும் மரபு வழி வந்த பண்பாட்டினதும் உள்ளடக்கத்தின் மீதும் கொள்கைவாதப் போக்கின் மீதும் முடிவான செல்வாக்கு செலுத்தியது. நிலவி வந்த மக்கள் நாடக மன்ற நிகழ்ச்சிகள், பாட்டு, இசை-நடனக் கலை ஆகியவற்றுக்கு இது பொருந்தியது. இந்திய இதிகாசக் கதைப் பாத்திரங்களின் உருவக மொழியில் இவை காலனியாட்சி அமைப்புக்கு எதிராகப் போராடுமாறு மக்களை அறைகூவி அழைத்தன. மக்கள் கலையில் இருந்த விடுதலைப் போக்கு பிரிட்டிஷாருக்கு எதிரான மறைமுக நிறுவனங்களின் உறுப்பினர்களுக்குக் கொள்கைவாத-அரசியல் நோக்கில் உகப்பாக இருந்தது.

மறைமுகப் புரட்சி நிறுவனங்களின் நடவடிக்கைகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வங்காளத்திலும் மகாராஷ்டிரத்திலும் தோன்றி சுதேசி, சுயராஜ்யப் போராட்டக் காலப் பகுதியில் தீவிரமாகச் செயலாற்றிய அரைச் சட்டபூர்வமான புரட்சி நிறுவனங்களும் மறைமுகக் கழகங்களும் வெகுஜன இயக்கம் தணிந்த பின் அரசியல் பயங்கரச் செயல்தந்திரத்தைக் கடைப்பிடிக்கலாயின. டாக்காவில் இருந்த **அனுசீலன் சமிதியும்** கல்கத்தாவில் இருந்த **ஜுகாந்தர் கட்சியும்** வங்காளத்தின் முக்கிய இரகசிய நிறுவனங்களாக விளங்கின. பல்வேறு நகரங்களிலும் கிராமங்களிலும் இவற்றுக்குப் பெருந்தொகையான கிளைகள் இருந்தன. புரட்சி நிறுவனங்களின் பணிகள் சிற்றேடுகளிலும் ஜுகாந்தர் என்னும் கல்கத்தாச் செய்தித் தாளிலும் விளக்கப்பட்டன. இளைஞர்களின் தேசியத் தன்னுணர்வை

வளர்ப்பது, நாட்டின் பூரண சுதந்திரத்தின் பொருட்டு எல்லா விதமான சாதனங்களையும் கையாண்டு போராட்டத்தை நடத்த ஆயத்தமாய் இருக்கும்படி அவர்களைப் பயிற்றுவது, ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளுக்கு முன்னேற்பாடுகள் செய்வது, பயங்கரச் செயல்களை நிறைவேற்றுவது ஆகியவை இந்தப் பணிகள். எடுத்துக் காட்டாக, இரகசிய நிறுவனத்தினரின் பர்த்தமான் ரணநீதி (தற்காலச் செயல்தந்திரம்) என்னும் சிற்றேட்டில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''ஒடுக்கு முறையை வேறு எந்த வழிகளாலும் ஒழிக்க முடியாவிட்டால், அடிமைப் பிணி நாட்டின் உடலில் இரத்தத்தை நச்சுப்படுத்தி அதன் உயிராற்றலைப் பறித்து வந்தால் போரைத் தவிர்க்க முடியாது.''

இந்திய இரகசிய நிறுவனத்தினர் அரசியல் பயங்கர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஐரோப்பாவில், சிறப்பாக ருஷ்யாவில் இருந்த சில புரட்சி நிறுவனங்கள் கணிசமான அளவு காரணமாய் இருந்தன. ஜுகாந்தர் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஹேம சந்திர தாஸ் என்பவர் 1907ம் ஆண்டு மேற்கு ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்டார். அங்கே அவர் நாடு கடந்த ருஷ்யப் புரட்சிக்காரர்களோடு தொடர்பு கொண்டு வெடி குண்டுகள் தயாரிக்கக் கற்றார். 1908ம் ஆண்டின் தொடக்கத்தில் அவர் இந்தியா திரும்பிய பின் இந்தியப் புரட்சிக்காரர்களிடையே ஒரு வகையான ''வெடி குண்டு வழிபாடு'' நிலை பெற்றது. இந்தியப் புரட்சிக்காரர்கள் தனி நபர் பயங்கர நடவடிக்கைகளைக் குறிக்கோளாக வைத்துக் கொள்ளவில்லை. இரகசிய நிறுவனத்தினருக்கு நேரடியான அபாயம் விளைத்த ஆங்கிலேயர்களுக்கும் இந்தியர்களுக்கும் எதிராக மட்டுமே பயங்கர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பயங்கரவாதிகளின் செயல்கள் இந்திய சமூகத்தில் புரட்சி நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் ஒருவகை ஊக்குவிப்பிகளாகப் பங்காற்ற வேண்டும் என்று இரகசிய நிறுவனங்களின் தலைவர்கள் எண்ணினர்கள். வங்காள பயங்கரவாதிகளின் தலைவர்களில் ஒருவரான ப. கோஷ் பின்வருமாறு எழுதினர்: ''ஒரு சில ஆங்கிலேயர்களைக் கொல்வதன் மூலம் நமது நாட்டுக்கு விடுதலை பெற்று விடலாம் என்று நாங்கள் நினைக்கவில்லை. எப்படித் துணிகரமாகச் செயலாற்றவும் உயிர் வழங்கவும் வேண்டும் என்று மக்களுக்குக் காட்டவே நாங்கள் விரும்பினோம்.'' இந்தக் காரணத்தால் தனி நபர் பயங்கரவாதம் வெவ்வேறு இரகசிய நிறுவனங்களின் செயல்களில் வேறு வேறான இடம் பெற்றிருந்தது. உதாரணமாக, ஜுகாந்தர் கட்சியின் போர்க் குழுவான மானிக்டோலா கார்டன் சொஸைட்டி (மானிக்டோலா பூங்காக் கழகம்) பயங்கரச் செயல்களை நிறைவேற்றுவது புரட்சிக்காரர்களுடைய முக்கியமான

வேலை என்று கருதியது. ஆனால் அனுசீலன் சமிதியும் குவாலியரில் இருந்த நவ்பாரத் சொஸைட்டியும் வருங்காலக் கிளர்ச்சிக்கு ஆயத்தம் செய்வதில் முக்கியமாகக் கவனம் செலுத்தின.

வங்காளத்தில் போன்றே மகாராஷ்டிரத்திலும் இரகசிய நிறுவனங்கள் செயலாற்றி வந்தன. விஞ்யக் சாவர்க்கர், கணேஷ் சாவர்க்கர் என்னும் சகோதரர்களது தலைமையில் 1907ம் ஆண்டு நிறுவப்பட்ட அபிநவ பாரத் (இளம் இந்தியா) என்ற நிறுவனம் அங்கே எல்லாவற்றிலும் அதிகச் செல்வாக்கு பெற்றிருந்தது. வங்காள, மகாராஷ்டிர மையங்களுடன் இணைந்த சில இரகசியக் குழுக்கள் பஞ்சாபிலும் ஐக்கிய மாகாணங்களிலும் மத்திய மாகாணங்களிலும் தென் இந்தியாவிலும் செயலாற்றி வந்தன.

வங்காளத்திலும் மகாராஷ்டிரத்திலும் முதல் பயங்கரச் செயல்கள் 1908ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டன. காலனியாட்சி அதிகாரிகள் இரகசிய நிறுவனத்தினரைக் கொடுமையாகத் தண்டித்தார்கள். தாக்குதல்களில் நேரடியாகப் பங்கு கொண்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இரகசியக் கழகங்களின் உறுப்பினர்கள் நீண்ட காலச் சிறைவாச தண்டனை அல்லது கடுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்றார்கள். மானிக்டோலா கார்டன் சொஸைட்டி, அபிநவ பாரத், அனுசீலன் சமிதி ஆகியவை 1908—1909ல் தாக்கித் தகர்க்கப்பட்டன. இரகசியப் புரட்சி நிறுவனங்களின் தலைவர்களான ப. கோஷ், உ. தத், ஹ. ச. தாஸ், உ. ந. பானர்ஜி, ஜ. பானர்ஜி, ப.ப. தாஸ், ப. ச. நாக், சாவர்க்கர் சோதரர்கள் ஆகியோரும் பிறரும் சிறைப்பட்டார்கள். ஆனால் ஒடுக்கு முறைகளால் புரட்சிக்காரர்களின் செயல்கள் நின்றுவிடவில்லை. தகர்க்கப்பட்ட நிறுவனங்களின் இடத்தில் புதிய குழுக்களும் கழகங்களும் தோன்றின. காசியில் மீட்டமைக்கப்பட்ட அனுசீலன் சமிதியின் கிளையும், மகாராஷ்டிரத்தில் நவ்பாரத் சொஸைட்டியும், கல்கத்தாவில் ராஜா பஜார் கழகமும், கிழக்கு வங்காளத்தில் பாரிசால் சமிதியும் பிறவும் முதலாவது உலக யுத்தம் மூள்வதற்கு முன் துடியாகச் செயலாற்றின. பிரிட்டிஷ்காரர்களுக்கும் போலீஸ் உளவாளிகளான இந்தியர்களுக்கும் எதிராக பயங்கரச் செயல்கள் தொடர்ந்து நடந்தன (1909—1914ல் இத்தகைய முப்பத்திரண்டு நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டன). 1912ம் ஆண்டு வைசிராய் ஹார்டிஞ்சு தாக்கப்பட்டான். குண்டு வெடித்ததால் அவன் படு காயம் அடைந்தான்.

பிரிட்டிஷ்-இந்தியப் படைப் பிரிவுகளில் பிரசாரம் செய்வதில் மறைமுகப் புரட்சிக்காரர்கள் தேசிய இயக்கம் ஏற்றம் பெற்றிருந்த 1905ம்—1906ம் ஆண்டுகளிலேயே தனிப்பட்ட கவனம் செலுத்தி வந்தார்கள். இந்தியச் சிப்பாய்களும் இராணுவச் சிற்றதிகாரிகளும்

பிரிட்டிஷ் எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது முக்கியச் சக்தியாகப் பயன் படுவார்கள் என அவர்கள் எண்ணினார்கள். கல்கத்தாவில் வைக்கப் பட்டிருந்த பஞ்சாப் ரெஜிமெண்டுச் சிப்பாய்களைக் கிளர்ச்சிக்குத் தூண்டி விட 1909ல் முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அது பலிக்க வில்லை. பஞ்சாபின் தலைநகர் லாகூர் உள்ளிட்ட ஐந்து வட இந்திய நகரங்களில் இருந்த காவற்படைகளின் சிப்பாய்கள் 1915ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒரே நேரத்தில் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்ற முடிவை நிறைவேற்ற இன்னும் கவனமாக முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் ஓர் உளவாளி காட்டிக்கொடுத்து விட்ட தால் சதியாலோசனையில் கலந்து கொண்டவர்கள் கைது செய்யப் பட்டார்கள். ராஷ் பிகாரி போஸின் தலைமையில் இயங்கிய மையம் தகர்க்கப்பட்டது.

சிறு முதலாளி வர்க்கத் தேசியப் புரட்சிக்காரர்களின் தோல்வி களுக்கு முதன்மையான காரணம் திரளான வெகுஜனங்களுடன் அவர் களுடைய தொடர்புகள் பலவீனமாய் இருந்ததும் பொருளாதார, சமுதாயச் செயல்திட்டம் எதுவும் அவர்களிடம் இல்லாததும் ஆகும். குறைந்த உறுப்பினர் எண்ணிக்கை கொண்ட இரகசிய நிறுவனங்கள் தனித்து ஒதுங்கி அடைபட்டு நிலவி வந்தன. அவற்றுக்குப் போதிய பொருளியல் அடிப்படை இல்லை. போலீசாரின் கொடிய அடக்கு முறைகளுக்கு அவை உள்ளாகி வந்தன. மாணவ இளைஞர்களையும் நகரச் சிறு முதலாளி வர்க்க வகுப்பினரையும் சிறு முதலாளி வர்க்க அறிவுஜீவிகளையுமே அவை தங்கள் பிரசாரத்துக்கு முக்கிய இலக்காகக் கொண்டன. இரகசிய நிறுவனத்தாரின் சில குழுக்களுக்கு இடையே ஒரு சில ஆண்டுகளில் தொடர்புகள் நிலவின என்றாலும் அனைத்து இந்திய நிறுவனம் அமைப்பது இயலவில்லை. தேசியப் புரட்சி நிறு வனங்களின் செயல்களில் பொதுத் தொடர்பு இல்லாததற்கு அந்தக் காலத்து இந்திய சமூகத்தின் வாழ்க்கை நிலைமைகளும், அதில் நில விய மானிட இன, பிரதேச, சாதிப் பிரிவினைகளும் முதன்மையாக மதப் பிரிவினைகளும் பெரிதும் காரணமாய் இருந்தன.

மதமும் மரபு வழி வந்த பிற பழக்க வழக்கங்களும் மிகப் பெரும் பாலான இந்தியர்களின் பிரபஞ்சப் புரிவை முன்போலவே நிர்ண யித்து வந்த, ஆதலால் வெகுஜன உணர்வைத் தூண்டி எழுப்புவதற் கான எந்த வேண்டுகோளும் மத வடிவில் அமைந்திருப்பது அவசிய மாய் இருந்தது. இந்த விஷயம் தீவிரவாதிகளுக்குப் பொருந்தியது போலவே மறைமுகப் புரட்சியாளர்களுக்கும் பொருந்தியது. இவர் கள் மீது 1905—1908ல் கணிசமான செல்வாக்கு செலுத்தி வந்தார் அரவிந்த கோஷ் (1909க்குப் பிறகு அவர் தீவிர அரசியல் நடவடிக்கை களிலிருந்து விலகி மதச் சீர்திருத்தத்திலும் கல்விப் பிரசாரத்தி

லும் தத்துவப் பிரச்சினைகளைச் சிக்கறுப்பதிலும் ஈடுபட்டார்). என வேதான், வெவ்வேறு மத சம்பிரதாயங்களுக்கு இடையே சமாதான மும் கருத்து ஒற்றுமையும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டு வந்த போதிலும் மறைமுகப் புரட்சி நிறுவனங்களில் இந்துக்கள் மட்டுமே சேர்ந்தார்கள். இந்திய முஸ்லிம்களிடையே இருந்த தீவிரவாதிகளின் செயல்கள் சொந்த வகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களின் வரம்புகளுக்கு உள்ளேயே நடந்தன.

நாடுகடந்த இந்தியப் புரட்சியாளர்கள்

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்திய தேசிய விடுதலை இயக்கத்தில் சிறு முதலாளி வர்க்கத் தீவிரவாதப் போக்கு இந்தியா வுக்கு உள்ளே மட்டும் இன்றி அதன் எல்லைகளுக்கு வெளியேயும் வளர்ச்சி அடைந்தது. நாடு கடந்த இந்தியப் புரட்சியாளர்களின் நிறுவனங்கள் ஐரோப்பாவிலும் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டி லும் கிழக்கு நாடுகளிலும் தோன்றின. நாடு கடந்த இந்தியர்களின் முதலாவது மையம் 1905ம் ஆண்டு லண்டனில் அமைந்தது. நாடு கடந்த இந்தியரான சியாம்ஜி கிருஷ்ணவர்மா **இந்திய ஹோம்ரூல் (இந்திய சுயாட்சி)** சங்கத்தை நிறுவினர். **இண்டியன் சோஷியாலஜிஸ்ட் (இந்தியச் சமூக இயலான்)** என்னும் தேசியச் சஞ்சிகையை சியாம்ஜி கிருஷ்ணவர்மா வெளியிட்டார். இந்தியாவின் சுதந்திரத்துக் காகப் போராடும்படி அது மக்களை அறைகூவி அழைத்தது. கிருஷ்ண வர்மா தவிர வினயக் சாவர்க்கர், வீரேந்திரநாத சட்டோபாத்தியா யர், ரவிபாய் ராணே, வ. வெ. சுப்பிரமணிய அய்யர் முதலியோரும் லண்டனிலிருந்த நாடு கடந்த இந்தியர்களுக்குத் தலைவர்களாய் இருந் தார்கள். பிரிட்டனுக்குக் கல்வி பெறுவதற்காக வந்த இந்திய மாண வர்களின் பொருட்டுக் கிருஷ்ணவர்மா நடத்தி வந்த **இந்தியா ஹவுஸ்** என்னும் விடுதியை மையமாகக் கொண்டு இந்த இந்தியர் கள் குழுமினர்கள். பிரிட்டிஷ் போலீசின் தொல்லை காரணமாக லண் டன் குழுவின் பெரும் பகுதியினர் வேறு வழியின்றி 1909—1910ல் பாரிசுக்குச் சென்று விட்டார்கள். நாடுகடந்த இந்தியர்களின் பெரிய மையம் அங்கே 1910—1914ல் உருவாயிற்று.

ருஸ்தம் காமா, ஹர்தயாள் ஆகியோரும் லண்டனிலிருந்து வந்த சியாம்ஜி கிருஷ்ணவர்மா, ரவிபாய் ராணே, வீரேந்திரநாத சட்டோ பாத்தியாயர், வ. வெ. சு. அய்யர் முதலியோரும் நாடுகடந்த இந் தியர்களது பாரிஸ் குழுவின் முக்கிய உறுப்பினர்களாக இருந்தார் கள். அது வரை பெரும்பாலும் பிரிட்டிஷ் லிபரல் கட்சி, தொழிற் கட்சி உறுப்பினர்களுடன் மட்டுமே நிலவி வந்த இந்திய தேசிய

விடுதலை இயக்க இடதுசாரியினரின் சர்வதேசத் தொடர்புகள் நாடு கடந்த இந்தியர்களது பாரிஸ் குழு உருவான பிறகு விரிவடைந்தன. காமாவும் ராணுவும் ஹர்தயாளும் மற்றவர்களும் பிரெஞ்சு சோஷலிஸ்டுகளோடு மட்டும் இன்றி, பிற ஐரோப்பிய நாடுகளின் புரட்சியாளர்களோடும், சிறப்பாக ருஷ்யாவிலிருந்து வந்திருந்த சமூக-ஜனநாயகவாதிகளோடும் சோஷலிஸ்டு அகிலத்தோடும் தொடர்புகள் ஏற்படுத்திக் கொண்டார்கள். பாரிஸ் மையம் இந்தியாவில் இயங்கி வந்த மறைமுக நிறுவனங்களோடு தொடர்புகளைச் சீர்படுத்திக் கொள்ளத் தொடங்கியது. பாரிசில் வெளியிடப்பட்டு வந்த **இண்டியன்** சோஷியாலஜிஸ்ட் (ஆசிரியர் சியாம்ஜி கிருஷ்ணவர்மா), **வந்தே மாதரம்** (ஆசிரியர்கள் ருஸ்தம் காமாவும் ரவி ராணுவும்) என்னும் பத்திரிகைகள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன. முதலாவது உலக யுத்தம் மூண்டபின் நாடுகடந்த இந்தியப் புரட்சியாளர்களின் பாரிஸ் மையம் நடப்பில் கலைந்து போயிற்று. காமாவும் ராணுவும் நாட்டு எல்லைக்குள் தடுத்து வைக்கப்பட்டார்கள். கிருஷ்ணவர்மா சுவிட்சர்லாந்துக்கும் சட்டோபாத்தியாயர் பெர்லினுக்கும் போய்விட்டார்கள். பத்திரிகைகளின் வெளியீடு நின்று விட்டது.

ஐரோப்பா தவிர, வட அமெரிக்காவிலும்—கானடாவிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும்—இந்திய தேசிய நிறுவனங்கள் இதே காலப் பகுதியில் உருவாயின. முதல் நிறுவனங்கள் (**இண்டியன் அசோசியேஷன்** முதலியவை) அமெரிக்க, கானடியத் தொழிலாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் சமமான உரிமைகள் நாடுகடந்து வந்துள்ள இந்தியர்களுக்கும் தரப்பட வேண்டும் என்று போராடுவதற்கான நிறுவனங்களாக இருந்தன. ஆனால் அந்நாடுகளுக்கு வந்து சேர்ந்த புரட்சியாளர்களின் செல்வாக்கினால் இவை விரைவில் அரசியல் தன்மை பெற்றுவிட்டன.

1906ம் ஆண்டு கானடா சென்ற தாரகநாத தாஸ் என்னும் வங்காளி பிரிட்டிஷ் காலனி ஆட்சி அரசாங்கத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற கருத்தைப் பரப்புவதில் பெரும் பங்கு ஆற்றினார். பின்னர் அவர் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்குப் போய் **பிரீ ஹிந்துஸ்தான்** (விடுதலை பெற்ற இந்தியா) என்னும் சஞ்சிகையை 1908ம் ஆண்டு முதல் நடத்தலானார். நாடுகடந்த இந்தியர்களிடையே இந்தச் சஞ்சிகை பெருத்த செல்வாக்கு பெற்றிருந்தது. தாரகநாத தாஸின் சமுதாய-அரசியல் கருத்துக்களில் சமத்துவவாத நிலையிலிருந்து தற்கால முதலாளித்துவ நாகரிகத்தை விமர்சிக்கும் போக்குக்கள் ஓரளவு இருந்தன. ருஷ்ய இலக்கிய மேதை லேவ் தல்ஸ்தோய்க்கு அவர் எழுதிய பகிரங்கக் கடிதம் பிரபலமானது. மனிதர்களின் அனைத்துலக சோதரத்துவத்தில் தாம் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் ஒரு

நாடோ இனமோ சமூகமோ தனி நபரோ பிறரை எவ்வகையிலும் சுரண்டுவதைத் தம்மால் பொறுக்க முடியாது என்றும் இதில் அவர் எழுதியிருந்தார். தாரகநாத தாஸின் பிரசார-கிளர்ச்சி நடவடிக்கைகள் நாடுகடந்த இந்தியர்களின் ஆகப் பெரிய நிறுவனம் அமைவதற்கு அடி கோலின. இந்த நிறுவனத்துக்கு முக்கியத் தூண்டு கோலாகத் திகழ்ந்தார் ஹர்தயாள்.

1911ல் சான் பிரான்சிஸ்கோ சேர்ந்த ஹர்தயாள் விரைவிலேயே அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருந்த நாடுகடந்த இந்தியர்களுக்கு இடையே குறிப்பிடத் தக்க மனிதர் ஆகி விட்டார். அவருடைய முயற்சியால் 1913ம் ஆண்டு முதல் கதர் (கிளர்ச்சி) என்னும் செய்தித் தாள் வெளிவரலாயிற்று. 1857—1859 கிளர்ச்சியின் நினைவாக அதற்கு இப்பெயர் சூட்டப்பட்டது. அமெரிக்காவில் இருந்த பல வேறு இந்திய சங்கங்களின் பிரதிநிதிகளது மகாநாடு 1913ல் நடந்தது. இந்தியக் கழகம் என்னும் நிறுவனம் அதனால் நிறுவப்பட்டது. இதன் ஆன்மாவாகத் திகழ்ந்தார் ஹர்தயாள். சிறிது காலத்துக்குப் பின் இந்த நிறுவனம் கதர் பார்ட்டி (கிளர்ச்சிக் கட்சி) என்று பெயர் பெற்றது. அமெரிக்காவில் பல கிளைகள் கொண்ட நிறுவனமாக விளங்கிய ''கதர்'' கட்சிக்கு ஜப்பான், பிலிப்பைன், இந்தோனேசியா, மலாயா, சீனு முதலிய பசிபிக் மாகடல் நாடுகளில் துணை நிறுவனங்கள் இருந்தன. ''கதர்'' கட்சியினர் இந்தியாவில் கிளர்ச்சி நடத்துவதற்கான சில திட்டங்களைத் தயாரித்தார்கள். இவற்றைச் செயல் படுத்துவதற்காகப் போராட்ட வீரர் குழுக்கள் வெளிநாடுகளில் பயிற்றப்பட்டன. இந்தக் குழுக்கள் கிளர்ச்சிக்காரர்களின் மையக் கருவாக விளங்க வேண்டும் என்பது கட்சித் தலைவர்களின் எண்ணமாக இருந்தது. போதிய செல்வச் செழிப்புடன் இருந்தவர்கள் உட்பட நாடுகடந்த இந்தியர்களிடம் திரட்டப்பட்ட பணத்தைக் கொண்டு இதே நோக்கத்துடன் ஆயுதங்கள் வாங்கப்பட்டன. கதர் என்னும் வார இதழும் ''கதர்'' கட்சியினரின் பிரசுரங்களும் பல இந்திய மொழிகளில் அமெரிக்காவில் பதிப்பிக்கப் பெற்று இந்தியாவில் வினியோகிக்கப்பட்டன. பிரிட்டிஷாருக்கு எதிரான வெகுஜனக் கிளர்ச்சிப் பிரசாரத்தின் வலிய கருவிகளாக விளங்கின இவை.

1914ம் ஆண்டுக் கோடையில் மூண்ட முதல் உலக யுத்தம் இந்தியாவில் குட்டி பூர்ஷ்வாப் புரட்சியாளர்களதும் பிற சமுதாய-அரசியல் சக்திகளதும் நிலைகளைப் பாதித்தது.

யுத்த காலத்தில் இந்தியாவின் தொழில்துறை

1913—1917ல் இந்திய வங்கிகள் பல வரிசையாகத் திவாலாயின. இதனால் இந்தியாவின் தேசியத் தொழில்துறை உற்பத்தியிலும்

சரக்குப் புழக்கத்திலும் பெருத்த அதிர்ச்சிக்கு உள்ளாயிற்று. இந்த நிகழ்ச்சிக்கு மூல காரணம் இந்தியப் பொருளாதாரத்தின் காலனித் தன்மையே, அரசும் நாட்டில் தொழில் நடத்தி வந்த பண பலம் மிகுந்த பிரிட்டிஷ் வங்கிகளும் இந்திய வங்கி மூலதனத்துக்கு ஆதரவு அளிக்காததே ஆகும்.

யுத்த காலத்தில் காலனி ஆட்சியாளர்களால் இந்தியா சூறை யாடப்படுவது தீவிரம் ஆயிற்று. உணவுப் பண்டங்களும் விவசாய, இயந்திரத் தொழில் மூலப் பொருள்களும் சுரங்கத் தொழில், உலோக வார்ப்புத் தொழில் செய்பொருள்களும் இந்தியாவிலிருந்து மிகப் பேரளவுகளில் வெளியேற்றப்பட்டன. இதனால் உள்நாட்டு உற்பத் தியை விரிவாக்க வாய்ப்பு இல்லாது போயிற்று. பிரிட்டிஷ் நிதித் துறை வரிச் சுமையை வெகுவாக அதிகரித்து இந்திய வரி செலுத்து வோரைச் சுரண்டி பிரமாண்டமான யுத்தச் செலவுகளுக்கு ஈடுகட்ட முயன்றது. இதனால் இந்தியாவின் திரளான வெகுஜனங்கள் மட்டும் இன்றி உடைமையாளர் வர்க்கங்களும் துன்பத்துக்கு உள்ளாயினர். காலனியாட்சி அதிகாரிகளும் பிரிட்டிஷ் வர்த்தக, தொழில் அதிபர் களும் செய்த நாணயமாற்று-நிதித் துறைப் பித்தலாட்டங்களின் விளைவாகப் பண வீக்கம் ஏற்பட்டது (புழக்கத்தில் இருந்த காகிதப் பணத்தின் மொத்தத் தொகை 1914—1918ல் ஏறக்குறைய மும் மடங்கு ஆகி விட்டது), வெள்ளி விலை ஒரேயடியாக ஏறிவிட்டது. பிற நாடுகளுடன் இந்தியாவின் பொருளாதார உறவுகள் குலைந்ததனால் ஏற்றுமதியும் இறக்குமதியும் கணிசமாகக் குறைந்தன. இவை எல் லாம் நாட்டின் பொருளாதார நிலைமைக்குக் கேடு விளைத்தன.

நிதித் துறையிலும் வெளி வர்த்தகத் துறையிலும் அரசாங்கக் கண்காணிப்பும் கட்டுப்பாடும் வலுத்தது, யுத்த தளவாடங்களுக் கான பெரிய ஆர்டர்கள் இந்தியத் தொழில் நிலையங்களுக்கு கொடுக் கப்பட்டது, உள்நாட்டுச் சந்தையில் அரசாங்க நிதித் துறை பேரளவு களில் பண்டங்கள் வாங்கியது ஆகியவற்றின் விளைவாக இந்தியப் பொருளாதாரத்தில் அரசு முதலாளித்துவத்தின் அம்சங்கள் அதிகரித்தன. காலனியாட்சி அரசின் பொருளாதாரக் கொள்கை காரணமாக ஏற்பட்ட தடங்கல்கள் இந்தியாவின் தேசியத் தொழில் துறையின் வளர்ச்சியைக் கடுமையாகப் பாதித்தன.

அதே சமயம் உள்நாட்டு முதலாளி வர்க்கத்தினர் மேலும், செல் வர்கள் ஆவதற்கு ஏற்ற நிலைமைகள் உருவாயின. ஏனெனில் பிரிட் டிஷ் நிறுவனங்களும் அரசாங்க இலாகாக்களும் யுத்த காலத்தில் இந் தியாவில் வாங்கிய சரக்குக்களில் பெரும் பகுதி இந்தியத் தொழிலதி பர்களுக்குச் சொந்தமான நிலையங்களில் வாங்கப்பட்டது. இந்தியா வில் பதிவு செய்யப்பட்ட கூட்டுப் பங்குக் கம்பெனிகளின் எண்

ணிக்கை கிட்டத்தட்டப் பத்து சதவிகிதம் அதிகரித்தது. அவற்றின் மொத்த மூலதனமோ ஏறத்தாழ முப்பது சதவிகிதம் அதிகம் ஆயிற்று. அன்னியத் துணிகளும் கைத்தறித் துணிகளும் விகிதத்தில் குறைந்ததன் காரணமாக மொத்த உள்நாட்டுப் பயன்பாட்டில் இந்திய ஆலைத் துணிகளின் ஒப்பு விகிதம் கணிசமாக உயர்ந்து 1917க்குள் மூன்றில் ஒரு பங்குக்கும் மேல் போய்விட்டது. இந்தியத் தொழிலதிபர்களுக்குக் கிடைத்த லாபங்களின் விகிதமும் மொத்தத் தொகையும் யுத்த காலத்தில் வெகுவாக அதிகரித்தன.

மக்களில் பெரும்பாலோரின் வறுமை காரணமாகவும் உற்பத்தி இயந்திர சாதனங்களை வெளி நாடுகளிலிருந்து தருவிப்பதற்கான வாய்ப்பு இன்மை காரணமாகவும் உள்நாட்டுச் சந்தை குறுகியதால் பொருளாதார இடர்கள் அதிகமாயின. இந்த நிலைமைகளில் இந்தியத் தொழில் முதலாளிகளின் வெவ்வேறு குழுக்களும் வர்த்தகர்களும் வட்டித் தொழிலர்களும் திரட்டிக் குவித்திருந்த பணத் தொகைகளை உற்பத்தித் தொழிலில் ஈடுபடுத்துவதற்கான வாய்ப்பு பெரிதும் குறுகிவிட்டது.

இவை எல்லாம் தேசிய முதலாளி வர்க்கத்தினரின் அரசியல் நிலைகள் மீது நிர்ணயகரமான பாதிப்பு விளைத்தன. பிரிட்டனின் யுத்த முயற்சிகளுக்கு அவர்கள் முழு ஆதரவு அளித்த போதிலும் காலனியாட்சி அரசாங்கத்தின்பால் அதிருப்தி அவர்களிடையே வளர்ந்து கொண்டு போயிற்று. பிரதான அரசியல் நிறுவனங்களான தேசியக் காங்கிரசிலும் முஸ்லிம் லீகிலும் எதிர்ப்பு மனப்பான்மை அதிகரித்தது.

தேசியக் காங்கிரசும் முஸ்லிம் லீகும் யுத்தத்துக்கு முன்பும் யுத்த காலத்திலும்.

ஹோம்ரூல் இயக்கம்

வெகுஜன இயக்கத்தில் சோர்வு ஏற்பட்டிருந்த காலப் பகுதியில், சொந்த நிறுவனமே அமைக்காதிருந்த தீவிரவாதிகள் இடையே சீர்குலைவு தொடங்கியது. தலைவர்களில் சிலர் (உதாரணமாகத் திலகர்) சிறையில் இருந்தார்கள். வேறு சிலர் (அரவிந்த கோஷ்) அரசியல் போராட்டத்திலிருந்து விலகி விட்டார்கள். பின்னும் சிலர் (விபின் சந்திர பால்) அதிக மிதவாதப் போக்கை மேற்கொள்ளலாயினர். காங்கிரசுக்குத் தலைமை வகித்த மிதவாதத் தலைவர்களோ, மறை முகப் புரட்சி நிறுவனங்களின் நடவடிக்கைகள் தீவிரம் அடைந்து வந்த சூழ்நிலையில் பிரிட்டிஷ் காலனியாட்சி அரசாங்கத்துக்குத் தங்கள் விசுவாசத்தைத் தெரிவித்துக் கொள்ள விரைந்தார்கள். 1912ல்

காங்கிரஸ் விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. தேசிய இயக்கத்தின் அதிகார பூர்வமான குறிக்கோள் பிரிட்டிஷ் பேரரசின் வரம்புகளுக்குள் இந்தியாவுக்குச் சுயாட்சி பெறுவது என்றும் இந்தக் குறிக்கோள் ''சட்டபூர்வமான வழிகளில்'' மட்டுமே பெறப்பட வேண்டும் என்றும் இவை அறிவித்தன. காங்கிரசின் ஆண்டுக் கூட்டங்களுக்குப் பிரதிநிதிகளின் தேர்வு முறை இடதுசாரித் தேசியவாதிகளின் பிரதிநிதிகள் தலைமை பெறுவதைக் கடினம் ஆக்கும் விதத்தில் வகுக்கப்பட்டிருந்தது. ஆனால் விரைவில் இரு போக்குக்களும் ஒன்றையொன்று நெருங்கும் மனப்பாங்கைக் காட்டின.

1914ல் சிறைத் தண்டனைக் காலம் முடிந்த பிறகு பால கங்காதர திலகர் விடுதலை செய்யப்பட்டார். அரசியல் செயற் களத்துக்கு அவர் திரும்பியது கோலாகலமாக வரவேற்கப்பட்டது. தேசியவாதிகள் வட்டாரத்தில் அவரது செல்வாக்கு முன்போலவே இருந்ததை இந்த வரவேற்பு காட்டியது. அதிகாரிகளின் வற்புறுத்தல் காரணமாகவும் செயல்தந்திர நோக்கங்கள் காரணமாகவும் திலகர் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்குத் தமது விசுவாசத்தைத் தெரிவித்துக் கொண்டதோடு பயங்கரவாதிகளின் செயல்களைக் கண்டனமும் செய்தார். பகிஷ்காரச் செயல்தந்திரத்திலிருந்து வெகுஜன அரசியல் கிளர்ச்சிப் பிரசாரத்துக்கு மாறுவதே சாராம்சத்தில் திலகரின் கொள்கைப் போக்காக விளங்கியது. இந்தியாவின் அரசியல் அரங்கில் தங்கள் நிலைகளை மீண்டும் அமைத்துக் கொள்ளத் தீவிரவாதிகளுக்கு இதன் மூலம் வாய்ப்பு கிடைத்தது. திலகரும் அவருடைய தரப்பினரும் ஹோம்ரூல், அதாவது சுயாட்சி இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்தினார்கள். இதைத் தோற்றுவித்தவர் இந்தியத் தியசாபிகல் சொசைட்டியின் தலைவரான அன்னி பெசண்டு அம்மையார். 1916ம் ஆண்டு வசந்தத்தில் திலகர் பூனாவில் ஹோம்ரூல் லீகை அமைத்தார். இது அவருடைய தரப்பாளர்கள் ஒன்று சேர்வதற்கான வடிவம் ஆயிற்று. 1916ம் ஆண்டின் போது இந்தியாவின் பல்வேறு மையங்களில் ஹோம்ரூல் லீகுகள் நிறுவப்பட்டன. அதே ஆண்டு இலையுதிர் காலத்தில் அனைத்து இந்திய ஹோம்ரூல் லீகு அன்னி பெசண்டு அம்மையாரின் தலைமையில் சென்னையில் அமைக்கப்பட்டது.

வெகுஜனக் கிளர்ச்சிப் பிரசார இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தியதன் விளைவாகத் திலகரின் நிலை தேசிய இயக்கத்தில் வலுவடைந்தது. அதே சமயம், அவருடைய அரசியல் போக்கில் ஏற்பட்டிருந்த மிதவாதத் தன்மை ஒரு புறமும் தேசியக் காங்கிரசுக்குள் எதிர்ப்பு மனப்பான்மையின் வளர்ச்சி மறு புறமும் காங்கிரஸ் தலைமையுடன் திலகர் இணக்கம் செய்து கொள்ள வாய்ப்பான எதார்த்த

நிலைமைகளை உருவாக்கின. கோபாலகிருஷ்ண கோக்கலேயும் பிரோஸ் ஷா மேத்தாவும் அப்போது காங்கிரசின் தலைவர்களாக இருந்தார்கள். 1915—1916ல் நடந்த பேச்சு வார்த்தைகளின் பயனாகக் காங்கிரசின் விதிகளில் 1912ல் புகுத்தப்பட்டிருந்த தடைவரம்புகள் நீக்கப்பட்டன. திலகரின் தலைமையில் தீவிரவாதிகள் 1916ல் நடந்த காங்கிரசின் லக்னௌ மகாநாட்டில் கலந்து கொள்வது இதனால் சாத்தியம் ஆயிற்று. ஹோம்ரூல் லீகின் செயல்களும் இதே மகாநாட்டில் ஒப்புதல் பெற்றன.

ஹோம்ரூல் லீகுகள் தீவிரவாதிகளுடைய நிறுவனத்தின் ஆதார மையங்கள் ஆயின. ஹோம்ரூல் இயக்கமோ, சுயாட்சிப் போராட்டத்தில் வெகுஜனங்களை—முக்கியமாக நடுத்தர வகுப்பாரை—ஈர்ப்பதற்கேற்ற சாதனம் ஆயிற்று.

தேசிய இயக்கத்தின் சட்டபூர்வமாகச் செயலாற்றிய எல்லா முக்கியச் சக்திகளும் லக்னௌ காங்கிரஸ் மகாநாட்டில் ஒன்றுக்கப்பட்டன. காங்கிரசின் இரண்டு பிரிவுகள் மீண்டும் இணைக்கப்பட்டதோடு முஸ்லிம் லீகுடனும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அந்த சமயத்தில் முஸ்லிம் லீகின் தலைமைக்குப் புதிய சக்திகள் வந்திருந்தன.

முஸ்லிம் குட்டி பூர்ஷ்வாக்களும் அறிவுஜீவிகளும் அரசியல் வாழ்க்கையில் ஈர்க்கப்பட்டதன் விளைவாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் முஸ்லிம் சமுதாய இயக்கத்தில் புதிய ஜனநாயகப் போக்கு தென்படலாயிற்று. நொமானி ஷிப்ளி, அபுல் கலாம் ஆஜாத், முகமது அலி ஆகியோரும் பிறரும் புதிய போக்கின் கொள்கைவாதிகளாகச் செயல் ஆற்றினார்கள். கற்றுத் தேர்ந்த இந்திய முஸ்லிம் இளைஞர்களைத் தங்கள் கால அரசியல் பிரச்சினைகளுக்குப் பழக்கப்படுத்தவும் தேசிய சமூக நிறுவனங்களின் நடவடிக்கைகளுடன் அவர்களை நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்யவும் இந்தக் கொள்கைவாதிகள் தங்கள் பிரசாரத்தின் வாயிலாக முயன்றார்கள்.

ஆஜாத் வெளியிட்டு வந்த அல் ஹிலால் (பிறைச் சந்திரன்), முகமது அலி நடத்திய காம்ரேட் (தோழர்), ஜபர் அலி கான் பதிப்பித்து வந்த ஜமீன்தார் ஆகிய பத்திரிகைகளில் காலனியாட்சி அரசாங்கம் மிகவும் மிதமாகத்தான் என்றாலும் விமர்சிக்கப்பட்டு வந்தது. 1905—1908 புரட்சி நிகழ்ச்சிகளில் ஆஜாத் கலந்து கொண்டது முஸ்லிம் நடுத்தர வகுப்பாரிடையே அவருக்கு முன்னிலும் அதிகச் செல்வாக்கை ஏற்படுத்தியது. முஸ்லிம் லீகின் இடதுசாரி ஆஜாதையும் அலி சகோதரர்கள் என்று அழைக்கப்பட்ட முகமது அலியையும் ஷௌகத் அலியையும் பிறரையும் மையமாகக் கொண்டு

திரண்டது. நிறுவனத்தின் அரசியல் திசையை மாற்றுவதற்காக இது போராட்டம் நடத்தியது. 1913ல் லீகின் விதிகள் மாற்றப்பட்டன. பிரிட்டிஷ் பேரரசின் வரம்புகளுக்குள் சுயாட்சி பெறுவது லீகின் குறிக்கோள் என அறிவிக்கப்பட்டது. லீக் மத-வகுப்புவாத நிறுவனத்தின் தன்மையை வைத்துக் கொண்டிருந்தது என்றாலும் மற்ற தேசிய நிறுவனங்களுடன் ஒத்துழைப்பதன் இன்றியமையாமை பற்றிய வாசகம் விதிகளில் சேர்க்கப்பட்டது.

ஆஜாத், பிற இடதுசாரித் தலைவர்கள் ஆகியோரின் செயல்முறை ஆதரவுடன் முகமது அலி ஜின்னா 1915ல் லீகின் ஆண்டுக் கூட்டத்துக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது தேர்வு முஸ்லிம் லீகில் இடதுசாரியினரின் வெற்றியை நிலைப்படுத்தியது.

சுயாட்சி பெறும் குறிக்கோளில் ஒற்றுமை குறித்துக் காங்கிரசுடன் முஸ்லிம் லீக் முறையான ஒப்பந்தம் செய்து கொள்ளத் தேவையான முதனிலைகள் இவ்வாறு நடந்த மாறுதல்களின் விளைவாக ஏற்பட்டன. எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்றுபடுத்தும் வழியில் இது முக்கியக் கட்டமாக விளங்கியது. தேர்ந்தெடுக்கப்படும் சட்ட மன்றங்களில் முஸ்லிம்களின் ஒரே பிரதிநிதியாக விளங்கும் உரிமை லீகிற்குக் கிடைக்கும் என்ற நிபந்தனை அதே சமயம் லக்னௌ உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டது. முஸ்லிம்களோ தங்களுக்கு உரிய தனித் தொகுதிகளில் மட்டுமே தேர்வு பெற உரிமை பெற்றிருந்தார்கள். மத-வகுப்புவாதப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டுக்குக் காங்கிரஸ் தலைமை இவ்வாறு விட்டுக் கொடுத்தது இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒருவருக்கொருவர் எதிர் நிறுத்தும் பிரிட்டிஷ் கொள்கை தொடர்வதற்கு எதார்த்த வாய்ப்புக்களை உருவாக்கியது. ஆனால் காங்கிரஸ், முஸ்லிம் லீக் (லீகின் ஆண்டுக் கூட்டமும் லக்னௌவில் நடந்தது) தலைவர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டது சுதந்திரப் போராட்டத்தில் இந்து-முஸ்லிம் ஒற்றுமை நிலைநாட்டப்பட்டதைக் காட்டியதாகப் பொது மக்களின் பிரதிநிதிகள் எண்ணினார்கள்.

அரசியல் அரங்கில் மோ. க. காந்தியின் அடிவைப்பு

தேசிய விடுதலை இயக்கத்தின் வருங்காலத் தலைவரான மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் (1869—1948) செயல்கள் இந்தக் காலப் பகுதியில் இந்தியாவின் சமூக-அரசியல் வாழ்க்கையில் புதிய நிகழ்ச்சியாக விளங்கின. காந்தி 1914ம் ஆண்டு இந்தியா திரும்பி இருந்தார். மோ. க. காந்தி வியாபாரிகளின் தொழில்முறைச் சாதியான பனியா சாதியைச் சேர்ந்த வசதி படைத்த குஜராத்திக் குடும்பத்

தில் பிறந்தவர். இந்தக் குடும்பத்தினர் குஜராத்தின் சிறு சமஸ்தானம் ஒன்றில் ஊழியம் புரிந்து வந்தார்கள். பிரிட்டனில் உயர் கல்வி பயின்று தேர்ந்த பின் மோ. க. காந்தி 1903 முதல் 1914 வரை தென் ஆப்பிரிக்காவில் வாழ்ந்து பாரிஸ்டராகத் தொழில் நடத்தி வந்தார். நாடுகடந்து தென் ஆப்பிரிக்காவில் குடியேறியிருந்த இந்தியர்கள் (இவர்களுடைய மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கு மேல் என்று கணக்கிடப்பட்டது) கொடுமையான இன வேறுபாடுகளுக்கு உள்ளாகி இருந்தார்கள். இவர்களுடைய உரிமைகளைக் காப்பதற்காக காந்தியின் அரசியல் நடவடிக்கைகள் இங்கே தொடங்கின. காந்தியின் தத்துவ, சமூக-பொருளாதாரக் கருத்தோட்டங்கள் முதன்மையாகத் தென் ஆப்பிரிக்காவில் உருவாயின. பிற்காலத்தில் பிரிட்டிஷ் காலனி ஆட்சி முறையை எதிர்த்துப் போராடுகையில் காந்தியின் செயல்தந்திரத்தை இந்தக் கருத்தோட்டங்களே வரையறுத்தன. ''சாத்துவிக ஒத்துழையாமை'' அல்லது ''சத்தியாக்கிரகம்'' (உண்மையை வலியுறுத்தல்) பற்றிய கோட்பாடுகளை இங்குதான் காந்தி முதன் முதலாகச் செயல்படுத்தினர். 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ருஷ்யாவின் சமூக-அரசியல் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளின் கணிசமான பாதிப்பினால் உருவாயிருந்தன இந்தக் கோட்பாடுகள். ருஷ்யாவில் நடந்த புரட்சி நிகழ்ச்சிகளின், முக்கியமாகப் பொது அரசியல் வேலைநிறுத்தத்தின் அனுபவத்திலிருந்து, அரசியல் எதிராளியை வற்புறுத்தும் சாதனம் என்ற வகையில் வெகுஜனங்களது ஒழுங்கமைந்த செயலின் இன்றியமையாமையை காந்தி புரிந்து கொண்டார். ருஷ்யாவில் 1905ம் ஆண்டு நடந்த நிகழ்ச்சிகளை மதிப்பிடுகையில், ''மிக மிக வலிமை வாய்ந்த ஆட்சியாளன் கூட ஆளப்படுவோரின் ஆதரவு இல்லாமல் ஆள முடியாது'' என்று காந்தி அழுத்திக் கூறினார். லேவ் தல்ஸ்தோயின் அகிம்சைப் போதனையிலிருந்து அகிம்சைப் போராட்ட முறைகளைக் காந்தி எடுத்துக் கொண்டார். முதலாவது சாத்துவிகச் சட்ட மறுப்பு இயக்கத்தை, அதாவது தென் ஆப்பிரிக்காவில் காலனியாட்சி அரசாங்கத்தின் இன வேறுபாட்டுச் சட்டங்களை ஒழுங்கமைந்த முறையில் மீறும் இயக்கத்தை அவர் 1908ம் ஆண்டு நடத்தினர்.

ஒவ்வோர் இயக்கத்தையும் தொடங்குவதற்கு முன் காந்தி அதிகாரிகளோடு பேச்சுவார்த்தைகள் நடத்தினர். சத்தியாக்கிரகம் நடந்து கொண்டிருக்கையிலும் அதிகாரிகளுடன் சமரசம் செய்து கொள்ள அவர் முயன்றார். தமது நடவடிக்கைகளின் வன்முறை அற்ற, சமாதானப் போக்கை வலியுறுத்தி பிரிட்டிஷ் அதிகாரிகளின்பால் தம் விசுவாசத்தை அவர் எல்லா வகையாலும் காட்டிக்கொண்டார். 1906ல் ஜூலூ இனத்தாரின் நாட்டின் மீது நடந்த படையெடுப்பின்

போது இந்தியர்களால் சாதன வசதிகள் அளிக்கப்பட்ட ஆம்புலன்ஸ் படையணிக்கு அவர் தலைமை தாங்கினார். இந்தப் படையணி காலனியாட்சியாளரின் படைகளின் சார்பில் செயலாற்றியது. பிற்காலத்தில், முதல் உலக யுத்தத்தின் போது அவர் பிரிட்டனை உற்சாகமாக ஆதரித்தார். தம் தாயகமான குஜராத்தில் விவசாயிகளை இராணுவத்தில் சேர்க்கும் பணியில் பங்காற்றினார்.

காந்தி ஆப்பிரிக்காவில் வெற்றிகரமாக நடத்திய சில சாத்துவிக ஒத்துழையாமை இயக்கங்களும் தாய்நாட்டுத் தேசிய இயக்கத்துக்கு ஆதரவாகப் பத்திரிகைகளில், சிறப்பாகத் தாமே வெளியிட்டு வந்த **இண்டியன் ஒப்பினியன் (இந்தியாவின் கருத்து)** என்னும் சஞ்சிகையில் அவர் எழுதிய கட்டுரைகளும் இந்தியாவில் அவருடைய பெயரை நாளுக்கு நாள் அதிகப் பிரபலம் ஆக்கின. தாயகம் திரும்பிய பின் காந்தி குஜராத்தி முதலாளி வர்க்கத்தினரின் ஆதரவுடன் சத்தியாக்கிரக ஆசிரமம் ஒன்றை அகமதாபாதில் 1915ம் ஆண்டு நிறுவினார். பின்னர் மூன்று சாத்துவிக ஒத்துழையாமை இயக்கங்களை வெற்றிகரமாக நடத்தினார். ராஜகோட் சமஸ்தானத்தில் சில சுங்கத் தீர்வைகளை ரத்து செய்வதன் பொருட்டு 1915ம் ஆண்டு நடந்த இயக்கம், இந்தியாவுக்கு வெளியே வேலை செய்வதற்குக் கூலிகள் திரட்டும் முறையைச் சீர்திருத்தும் படி கோரி 1917ல் நடந்த இயக்கம், பிரிட்டிஷ் தோட்டக்கால் முதலாளிகளால் விவசாயிகள் சுரண்டப்படும் முறைக்கு எதிராக பீகாரில் 1917ன் இறுதியிலும் 1918ன் தொடக்கத்திலும் நடந்த இயக்கம் ஆகியவை இவை. இந்த இயக்கங்கள் பிரசார நோக்கில் கணிசமான பயன் விளைத்தன. காந்தியை இவை இந்தியாவின் அரசியல் வாழ்வில் முன்னணிக்குக் கொண்டு வந்தன. காலனியாட்சி அரசாங்கத்துடன் போராட்டத்தில் வெகுஜனங்களை ஈடுபடுத்துவது இன்றியமையாதது என்னும் கருத்தைத் தேசியவாதிகளின் அறிவுகளில் உறுதியாகப் பதிக்க அவருடைய போராட்டங்கள் உதவின.

யுத்த காலத்தில் மறைமுகப் புரட்சி நிறுவனங்கள்

குட்டி பூர்ஷ்வா தேசியப் புரட்சி நிறுவனங்கள் யுத்த காலத்தில் ஊக்கமாகச் செயலாற்றத் தொடங்கின. ஐரோப்பிய, பிற முனைகளில் போர் நடவடிக்கைகள் தொடங்கி பிரிட்டிஷ் தரை, கடற் படைகளின் பெரும் பகுதிகள் அங்கு அனுப்பப்பட்டு விட்டது இந்தியாவில் ஆயுதக் கிளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மிக மிக வாய்ப்பான, மீண்டும் ஏற்பட முடியாத நிலைமைகளை உருவாக்கி இருந்தது என்று ''கதர்'' கட்சித் தலைவர்கள் எண்ணினர்கள். பல்லாயிரம் கட்சி உறுப்பினர்களும் அவர்களுடைய அனுதாபி

களான நாடுகடந்த இந்தியர்களும் கட்சித் தலைவர்களின் அழைப்புக்கு இணங்க யுத்தத்தின் முதல் மாதங்களில் பல்வேறு வழிகள் மூலம், பெரும்பாலும் சீனம், சயாம், பர்மா ஆகியவற்றின் வழியாக, தாய் நாடு திரும்பினர்கள். சோகன் சிங் பக்ஷ என்பவர் தலைமையில் ''கதர்'' கட்சித் தலைவர்களில் ஒரு பகுதியினரும் இந்தியா சேர்ந்தார்கள். 1914—1915ல் மொத்தம் சுமார் எண்ணூயிரம் இந்தியர்கள் தாயகம் திரும்பினர்கள். பெரும் அளவுகளில் ஆயுதங்களை இந்தியா கொண்டு சேர்க்க முயற்சிகள் செய்யப்பட்டன. இவை பெரும்பாலும் வீணையின. தாய்நாடு சேர்ந்த ''கதர்'' கட்சியினர் உள்நாட்டு மறை முக நிறுவனங்களோடு தொடர்புகள் ஏற்படுத்திக் கொண்டு, நாடு கடந்த இந்தியர்களது அயல்நாட்டு மையங்களின் ஆதரவைச் சார்ந்து கிளர்ச்சிக்கு முன்னேற்பாடுகள் செய்யலானார்கள். நாடுகடந்த இந்தியர்களின் பெர்லின் கமிட்டி இந்த மையங்களின் செயல்களை ஒருங்கிசைத்து வந்தது. கிளர்ச்சிக் கட்சியினரில் பெரும்பாலோர் சீக்கியர்களாய் இருந்தபடியால் இந்தக் கட்சிக்கு எல்லாவற்றிலும் அதிகச் செல்வாக்கு பஞ்சாபில் இருந்தது.

பிரிட்டிஷ்-இந்திய இராணுவப் பிரிவுகளின் சிப்பாய்கள் நிர்ணய கரமான பங்கு ஆற்ற வேண்டும் எனத் திட்டம் இடப்பட்டிருந்தது. இந்தப் படைப் பிரிவினரிடையே ''கதர்'' கட்சியினர் பிரிட்டிஷ் எதிர்ப்புப் பிரசாரத்தைப் பெரிதும் வெற்றிகரமாக நடத்தி வந்தார்கள். வடக்கு, வட மேற்கு இந்தியாவில் இருந்த சில காவற் படை நிலையங்களின் நடவடிக்கைகளுடன் கிளர்ச்சி தொடங்க வேண்டி இருந்தது. இதற்கு உரிய சமயம் 1914 நவம்பர் என்று முதலிலும் 1915 பிப்ரவரி என்று பின்னரும் குறிக்கப்பட்டது. ஆனால் ஒழுங்கமைப்பு பலவீனமாய் இருந்தமையாலும் ''கதர்'' கட்சியினரிடையே அனுப்பப்பட்டிருந்த ஒற்றர்கள் கிளர்ச்சித் திட்டங்களை அதிகாரிகளுக்குக் காட்டிக் கொடுத்து வந்தமையாலும் கிளர்ச்சி முற்றுகத் தோல்வி அடைந்தது. ஆயிரக்கணக்கான மறைமுகத் தொண்டர்களும் பஞ்சாபில் தொடங்கிய ''விவசாய ஒழுங்கீனங்களில்'' பங்கு கொண்டவர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பப்பட்டார்கள். 1915 நவம்பர் மாதம் சிங்கப்பூரில் சிப்பாய் ரெஜிமெண்டு கிளர்ச்சி செய்தது. ஆனால் இது துணையற்ற தனி நடவடிக்கையாக இருந்ததால் எளிதில் ஒடுக்கப்பட்டுவிட்டது. ''கதர்'' கட்சியினர் மேற்கொண்டும் தொடர்ந்து போராட முயன்றார்கள். ஆனால் தலைமையும் பொருளியல் சாதனங்களும் இல்லாமையால் தோல்வி அடைந்தார்கள். அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் பிற பசிபிக் மாகடல் பிரதேச நாடுகளிலும் இருந்த ''கதர்'' கட்சி மையங்கள் யுத்தம் முடியும் தறுவாய்க்குள் ஒடுக்கப்பட்டு விட்டன.

''கதர்'' கட்சிக்காரர்கள் முயற்சிகள் செய்து வந்த அதே நேரத்தில் தேசியவாத முஸ்லிம்களின் இரகசிய நிறுவனமும் இந்தியாவில் காலனியாட்சி அரசாங்கத்தை வன்முறைகளால் கவிழ்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்து வந்தது. இந்த நிறுவனத்தின் மையம் வட இந்தியாவில் தேவ்பந்த் என்னும் இடத்தில் தார்-உல்-உலூம் என்ற மதப் பள்ளியில் இருந்தது. நிறுவனத்தின் தலைவராக இருந்த மாமூது ஹசன் முஸ்லிம் சமுதாய இயக்கத்தின் தீவிர இடதுசாரி தேசியப் புரட்சிப் பிரிவைச் சேர்ந்த கொள்கைவாதி. ஹசனும் அவரைப் பின் பற்றியவர்களும் அனைத்துலக இஸ்லாமியக் கொள்கையின் பெயராலும் கலீபா (மதகுரு) என்ற முறையில் துருக்கி சுல்தானின் உரிமைகளைக் காப்பதன் பெயராலும் பிரிட்டிஷ் எதிர்ப்புக் கிளர்ச்சியை நடத்தி வந்தார்கள். இந்திய எல்லைகளுக்கு வெளியே இருந்த முஸ்லிம்களோடும் பிரிட்டனுடன் யுத்தம் செய்து வந்த வல்லரசுகளின், முதன்மையாக ஜெர்மனியுடனும் ஆட்டமான் துருக்கியுடனும் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள தேவ்பந்த் மையம் முயன்றது. ஹசனின் போராட்டத் தோழர்களில் ஒருவர் ஆன உபயதுல்லா சிந்தி 1915ம் ஆண்டு காபுல் சென்றார். நாடு கடந்த இந்தியர்களின் பெர்லின் மையப் பிரதிநிதிகள் அப்போது ஆப்கனிஸ்தானத்தில் இருந்தார்கள். இவர்களுடனும் ஜெர்மானிய இராணுவ-அரசாங்கத் தூதுக் குழுவினருடனும் உபயதுல்லா பேச்சு வார்த்தைகள் நடத்தினர். அதே சமயம் ஆப்கனிஸ்தான அமீர் ஹபிபுல்லாவையும் பிரிட்டிஷ் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு இணங்கச் செய்ய அவர் முயன்றார். எல்லைப்புறப் பட்டாணியர்கள் கிளர்ச்சி தொடங்குவதற்கு இந்த நடவடிக்கைகள் அறிகுறியாக விளங்க வேண்டும் என ஏற்பாடு.

ஆனால் ஹபிபுல்லா நடுநிலைமையைக் கடைப்பிடித்தான். சதியாலோசனை (இதன் திட்டம் பட்டுத் துணியில் எழுதப்பட்டதால் இது ''பட்டு எழுத்துச் சதியாலோசனை'' என்று பெயர் பெற்றது) பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதில் பங்கு கொண்டவர்கள் அடக்குமுறைகளுக்கு ஆளானார்கள்.

இந்தியாவில் இருந்த புரட்சிக்காரர்கள் போலவே நாடுகடந்த இந்தியர்களும் காலனியாட்சிக்கு எதிரான போராட்டத்தில் பிரிட்டனின் போர்ப் பகை நாடுகளின் ஆதரவு கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். 1915ல் பெர்லின் நகரில் அமைக்கப்பட்ட இந்திய சுதந்திரக் கமிட்டியின் வாயிலாக ஜெர்மானிய, துருக்கி அரசாங்கங்களுடன் முதன்மையாகத் தொடர்பு வைத்துக் கொள்ளப்பட்டது. இந்தியர்களுக்கும் பிரிட்டனுக்கும் இடையே யுத்த நிலைமையைப் பிரகடனம் செய்த அறிக்கை ஒன்றை இந்தக் கமிட்டி 1916ம் ஆண்டு வெளியிட்டது. ஹர்தயாள், வீரேந்திரநாத் சட்டோபாத்தியாயர் முதலியவர்

கள் போன்ற பிரபல இந்தியப் புரட்சியாளர்கள் அந்தக் காலத்தில் நாடுகடந்த இந்தியர்களின் பெர்லின் மையத்தில் பணியாற்றி வந்தார்கள். கமிட்டியின் ஆதரவுடன் வெளிநாட்டில் இந்தியாவின் தாற்காலிக அரசாங்கம் 1915ம் ஆண்டு காபுலில் அமைக்கப்பட்டது. இதன் உறுப்பினர்களாவர்: மகேந்திர பிரதாப்—குடியரசுத் தலைவர், பர்க்கத்துல்லா—முதலமைச்சர், உபயதுல்லா—வெளிவிவகார அமைச்சர். தாற்காலிக அரசாங்கம் 1916—1917ல் தன் தூதர்களை மூன்று முறை ஜார் அரசாங்க அதிகாரிகளிடம் அனுப்பியது. ஜார் அரசாங்கத்தினதும் பின்னர் ருஷ்யாவின் தாற்காலிக அரசாங்கத்தினதும் ஆதரவைப் பெறலாம் என்று அது வெகுளித்தனமாக எண்ணியது.

கெய்சர் ஜெர்மனியோ ஆட்டமான் துருக்கியோ காலனியாட்சி அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவு அளிப்பதில் அக்கறை கொண்டிருக்கவில்லை என்பது யுத்தத்தின் இறுதி வாக்கில் தேசியப் புரட்சியாளர்களுக்குத் தெளிவாகி விட்டது. பெர்லின்மையத்தின் துடியான ஊழியர்களில் கணிசமான பகுதியினர் 1916ம் ஆண்டு ஸ்டாக்ஹோம் நகருக்கு வந்து காலனி எதிர்ப்புப் பிரசாரத்தை அங்கிருந்து தொடர்ந்து நடத்தினர்கள்.

இந்திய அரசியலில் ''எரி பொருள்'' குவிந்திருந்த போதிலும், தேசிய இயக்கத்தின் மூன்று முக்கியப் போக்குக்களான மிதவாத, தீவிரவாத, தேசியப் புரட்சிப் போக்குக்களில் ஒன்றினாலும் காலனியாட்சி அரசாங்கத்தினிடம் பொருளார்ந்த சலுகைகள் சிறிதும் பெற முடியவில்லை. எனினும் இந்திய தேசபக்தர்களின் நடவடிக்கைகள் நாட்டில் புரட்சி நிலைமையின் அம்சங்கள் உருவாக உதவின. உலக யுத்த முடிவுக்கும் மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் வெற்றிக்கும் பின்னர் இந்தியாவில் ஏற்பட்டது இந்தப் புரட்சி நிலைமை.

அண்மைக் காலத்தில் இந்தியா

கி.கி. கத்தோவ்ஸ்கி

முதல் புரட்சித் தாக்கும் வெகுஜன அரசியல் நிறுவனங்களின் அமைப்பும் நடந்த காலப் பகுதியில் இந்தியா (1918—1927)

ருஷ்யாவில் அக்டோபர்ப் புரட்சியின் வெற்றி முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியைக் குறித்தது. இந்த நிகழ்முறையின் முக்கியமான உறுப்பாக விளங்கியது காலனியாட்சி அமைப்பின் நெருக்கடி. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே விழிப்படைந்து துடியான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தலைப்பட்டிருந்த கீழை நாடுகளின் மக்கள் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையை அகற்றுவதற்காக நிர்ணயகரமான போராட்டம் நடத்தக் கிளர்ந்து எழுந்தார்கள். ஆசியாவில் இருந்த காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் பரவியது இந்த மாபெரும் விடுதலை இயக்கம். இருபதாம் நூற்றாண்டின் இருபதுக்களில் இந்தியாவில் நடந்த நிகழ்ச்சிகள் இதன் பகுதியாக விளங்கின. பிரிட்டிஷ் காலனியாட்சி முறைக்கு எதிராகப் போர்கள் நிகழ்த்தியவாறு இந்தியா அண்மைக் கால வரலாற்றில் அடிவைத்தது.

தேசிய விடுதலை இயக்கத்தின் ஏற்றம்

உள்நாட்டுப் பொருளாதார, அரசியல் நிலைமை கூர்மை அடைதல்

முதல் உலக யுத்தத்தின் போது பிரிட்டன் இந்தியாவை முன்னிலும் கடுமையாகச் சுரண்டியது. யுத்தச் செலவுகளைக் கணிசமான அளவு தனது பிரதானக் காலனி மீதே அது சுமத்தியது. இதனால்

நகர, நாட்டுப்புற உழைப்பாளிகளின் நிலைமை படுமோசமாகப் பாதிக்கப்பட்டது.

யுத்த காலத்தில் உலகப் பொருளாதார உறவுகள் முறிந்ததனால் விவசாய மூலப் பொருள்களின் முக்கிய வகைகளது (சணல், பருத்தி, எண்ணெய் விதைகள் முதலியன) ஏற்றுமதி குறைந்தது. நாட்டுப் புறச் சரக்கு உற்பத்தியாளர்களின் நலன்கள் இந்தக் காரணத்தால் பெரிதும் கேடுற்றன. தங்கள் உழைப்பால் பயிர்களை விளைவித்த விவசாயிகளை மேலும் அதிகமாகச் சுரண்டியதன் மூலம் இந்த இழப்பை ஈடு கட்ட நிலப்பிரபுக்களும் வர்த்தகர்களும் முயன்றார்கள். வட்டித் தொழிலர்களிடம் விவசாயிகள் பட்டிருந்த கடன் 1911—1925ல் இரு மடங்காகி, குத்து மதிப்பாக மொத்தம் 600 கோடி ரூபாய்த் தொகையை எட்டி விட்டது.

நிலப்பிரபுக்கள், வர்த்தகர்கள், வட்டித் தொழிலர்கள் ஆகியோராலும் வரிகளாலும் விவசாயிகள் முன்னிலும் கடுமையாகச் சுரண்டப் பட்டதன் விளைவாக விவசாயிகளது நிலங்கள் அடைமானம் வைக்கப்படுவதும் விற்கப்படுவதும் யுத்த முடிவுக்குள் கணிசமாக அதிகரித்தன. விவசாயிகள் நிலமற்றவர்கள் ஆகும் நிகழ் முறை மேலும் மேலும் புதிய குழுக்களைப் பாதித்தது.

கைத்தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் விவசாயிகளுக்கு ஒப்பாகவே படு மோசமான நிலைமையில் இருந்தார்கள். கைத்தொழிலையும் குடிசைத் தொழிலையும் சேர்ந்த பல துறைகளில் (சிறப்பாகப் பஞ்சுத் துணி நெசவுத் துறையில்) உலக யுத்தம் மூள்வதற்கு முன்னும் யுத்தத்தின் போதும் உற்பத்தி குறைக்கப்பட்டமையால் பல பத்து லட்சம் கம்மியர்கள், குடிசைத் தொழிலர்கள், அவர்களுடன் இணைந்த சிறு வியாபாரிகள் ஆகியோரின் வருவாய்கள் வெகுவாகக் குறைந்தன.

தொழிற்சாலைத் தொழிலாளர்களின் உண்மைச் சம்பளம் விலைவாசி உயர்வு காரணமாக வரவரக் குறைந்தது. வறுமையுற்ற லட்சக் கணக்கான கம்மியர்கள் தொழிலாளர் சந்தையில் நிறைந்து விட்டதால் அவர்களுடைய நிலைமை இன்னும் மோசம் ஆயிற்று.

இரண்டு ஆண்டுகள் (1918—1919, 1920—1921) விளைச்சல் பொய்த்துப் போனதால் நாட்டின் பொருளாதார நிலைமை சிக்கல் ஆயிற்று. ஒரு புறம் உணவுப் பண்டங்களின் உற்பத்தி கணிசமாகக் குறைந்தது, மறு புறம் தானியங்களின் ஏற்றுமதி தொடர்ந்து நடந்தது. இந்த நிலைமைகளில் பொது மக்கள் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டார்கள். இன்புளுயென்சாக் கொள்ளை நோய் பஞ்சத்தின் கடுமையைப் பன் மடங்கு ஆக்கியது. ஒரு கோடி முப்பது லட்சம் உயிர்களை அது வாரிச் சென்றது.

முக்கியமான உழைப்பாளி வர்க்கங்களின் நலன்களோடு கூடவே தாழ்நிலை வட்டாரத் தொழிலதிபர்கள், அறிவுஜீவிகள், அலுவலர்கள் ஆகியோரது (நடுத்தர வகுப்பார் எனப்பட்டோரின்) நலன்களும் உணவுப் பண்டப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டன.

இந்தியாவின் தேசிய முதலாளி வர்க்கம் யுத்த காலத்தில் தன் தொழில் முயற்சிகளை விரிவுபடுத்திக் கொண்டு பொருளாதார நோக்கில் நிலையாக வேரூன்றி இருந்தது. காலனியாட்சி ஒடுக்குமுறையையும் பொருளாதார, அரசியல், பண்பாட்டு வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் காலனியாட்சி அதிகாரிகள் மேற்கொண்ட பாகுபடுத்தும் நடவடிக்கைகளின் விளைவுகளையும்அது முன்னிலும்தீவிரமாக உணர்ந்தது.

இருபதுக்களின் தொடக்கத் தறுவாயில் இரு வகையான முரண்பாடுகள் இந்தியாவில் கூர்மை அடைந்தன: உள்நாட்டுச் சுரண்டுவோர் வர்க்கங்களுக்கும் சுரண்டப்படுவோர் வர்க்கங்களுக்கும் இடையே நிலவிய முரண்பாடுகள் ஒரு வகை; இந்திய சமூகத்தின் முக்கிய வர்க்கங்கள், சமுதாய வட்டாரங்கள் ஆகியவற்றுக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் இடையே நிலவிய முரண்பாடுகள் மறு வகை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நிலப்பிரபுக்கள் வர்க்கத்தையும் சமஸ்தான மன்னர்களையும் தரகு வர்த்தக முதலாளிகளையும் இந்தக் குழுக்களுடன் இணைந்த வர்த்தக-வட்டித் தொழில் மூலதனத்தையும் தொடர்ந்து ஆதாரமாகக் கொண்டிருந்தது.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஏற்றம் தொழிலாளி வர்க்கப் போராட்டங்களுடன் தொடங்கியது. 1918ல் பம்பாய், சென்னை, கான்பூர், அகமதாபாது ஆகிய நகரங்களில் சில வேலைநிறுத்தங்கள் நடந்தன. அந்தக் காலத்துக்குப் பேரளவானவை இவை. தன்மையில் இவை தாமே மூண்ட பொருளாதார வேலைநிறுத்தங்கள். இராணுவ உற்பத்தி நிறுத்தப்பட்டதன் விளைவாகத் திரளான தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டதே இந்த வேலைநிறுத்தங்களுக்கு முக்கியக் காரணம். வேலைநிறுத்தப் போராட்ட இயக்கத்தை ஓட்டித் தொழிற்சங்கங்கள் தோன்றலாயின (தொழிலாளர்கள், அலுவலர்களின் தொழிற்சங்க மாதிரியான சில நிறுவனங்கள் இருபதாம் நூற்றாண்டின் இறுதி வாக்கில் இந்தியாவில் அமைக்கப்பட்டன, ஆனால் முதல் உலக யுத்த முடிவுக்குள் அவை அறவே சிதைந்து சிதறிப் போயின). முதலாவது தொழிற்சங்கம் பி. பி. வாடியாவினால் 1918ம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டது. அதன் பின் சில தொழிற் சங்கங்கள் பம்பாயிலும் வேறு சில பிற தொழில் மையங்களிலும், சிறப்பாக அகமதாபாதிலும் அமைக்கப்பட்டன. அகமதாபாதில் நெசவாலைத் தொழிலாளர் சங்கம் அதே ஆண்டு நிறுவப்பட்டது. இதில் மோ. க. காந்தியும் பங்காற்றினார்.

ருஷ்யாவின் புரட்சி பற்றிய செய்திகள் நாளடைவில் இந்தியாவில் பரவலாயின. நாட்டில் புரட்சி மனப்பான்மை வளர்வதற்கு இவை உதவின.

இந்தியா மீது அக்டோபர்ப் புரட்சியின் செல்வாக்கு

ருஷ்யாவின் எதேச்சாதிகார அரசை இந்தியாவில் நடந்த பிரிட்டிஷ் வல்லாட்சியின் மறு பிரதியாகவே இந்திய தேசியவாதிகள் கருதி வந்தார்கள். எனவே, பிப்ரவரிப் புரட்சியையும் ஜாரிசத்தின் வீழ்ச்சியையும் பற்றிய, ஆங்கில நாளிதழ்களால் இந்தியாவில் பரப்பப் பட்ட செய்திகள் அவர்கள் மீது ஆழ்ந்த உளப்பதிவை ஏற்படுத்தின. **ருஷ்யாவில் நடந்த நிகழ்ச்சிகள் தரும் படிப்பினை** என்ற உருவகப் பொருள் பொதிந்த தலைப்புடன் ஹோம்ரூல் கமிட்டி 1917ல் ஒரு சிற்றேடு வெளியிட்டது. ருஷ்யாவினது விடுதலை இயக்கத்தின் ''உட்கருத்தையும்'' முக்கியத்துவத்தையும் ''இந்தியப் பொது மக்கள் திரளுக்கு'' விளக்கும்படி ''கல்வித் தேர்ச்சி பெற்ற வர்க்கங்களுக்கு'' இதில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. ருஷ்யாவில் புரட்சியின் வெற்றி விடுதலைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்த இந்தியத் தேசியவாதிகளை ஊக்கியது. இந்தியத் தேசியப் பத்திரிகைகள் அந்தக் காலத்தில் கொண்டிருந்த மனப்பாங்கு **அப்யுதய் (எழுச்சி)** என்னும் அலகாபாதுச் செய்தித்தாளின் 1917 மார்ச்சு 24ந் தேதி இதழில் பிரசுரமான ஒரு கட்டுரையில் வெளியிடப்பட்டது. ''உயிர்த் துடிப்புள்ள தேசியவாதத்தால் வெல்ல முடியாத சக்தி உலகில் இல்லை என்பதை ருஷ்யாவின் புரட்சி நமக்கு அறிவுறுத்துகிறது'' என்று கூறியது இந்தக் கட்டுரை.

ருஷ்யாவில் புரட்சி நிகழ்ச்சிகள் மேற்கொண்டு வளர்ச்சி அடைந்தும் பிரிட்டிஷ் நாளிதழ்கள் உட்பட மேற்கத்திய முதலாளித்துவப் பத்திரிகைகள் வாசகர்களுக்குத் தவறான தகவல்களை மேலும் மேலும் அதிக அளவில் தரலாயின. இளம் சோவியத் அரசைப் பற்றி அப்பட்டமான அவதூறுகளை இவை பரப்பின. ருஷ்யாவில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள் மீது கடுமையான கண்காணிப்பைப் பிரிட்டிஷ் அதிகாரிகள் ஏற்படுத்தினர்கள். நாட்டில் கம்யூனிஸ்டு நூல்களின் வெளியீடு கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டது. ஆயினும், காலனியாட்சி அதிகாரிகள் இத்தகைய பல நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், அக்டோபர்ப் புரட்சி பற்றிய உண்மை மிக விரைவாக இந்தியாவில் பரவியது. பிரிட்டனின் இந்திய விவகார அமைச்சன் மாண்டேகுவும் வைசிராய் செம்ஸ்போர்டும் இந்த உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. இந்தியாவில்

பிரிட்டிஷ் கொள்கை பற்றிய அவர்களது கூட்டறிக்கை 1918ல் வெளியிடப்பட்டது. ''ருஷ்யாவில் நடந்த புரட்சி வல்லாட்சி மீது பெறப்பட்ட வெற்றியாக இந்தியாவில் புரிந்து கொள்ளப்பட்டது... இந்தியாவில் அரசியல் விருப்பங்கள் வளர்ச்சி அடைவதற்கு இந்த வெற்றி ஊக்கம் அளித்திருக்கிறது'' என்று அவர்கள் இந்த அறிக்கையில் எழுதினர்கள்.

''ஐரோப்பாவிலும் வட மேற்கு ஆசியாவிலும் போர்களில் பங்காற்றி விட்டு யுத்தத்துக்குப் பின் படைக்கலைப்பு பெற்று ஊர் திரும்பிய வீரர்கள் வாயிலாகக் கிராமவாசிகள் தொலைதூர ருஷ்யாவில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி அறிந்து கொண்டார்கள். வட இந்தியாவின் பல கிராமங்களில் இவ்வாறு நேர்ந்தது. இந்திய சேனைக்குத் துருப்பினர் முதன்மையாகப் பஞ்சாபில் திரட்டப்பட்டார்கள். இவர்கள் யுத்தத்தில் பங்காற்றியதோடு துருக்கிஸ்தானத்திலும் காஸ்பியன் கடல் பிரதேசத்திலும் வட மேற்கு ஆசியாவிலும் இராணுவ நடவடிக்கைகளில் கலந்து கொண்டிருந்தார்கள். எனவே சிறப்பாகப் பஞ்சாபின் கிராமவாசிகளுக்கு ருஷ்யாவின் நிகழ்ச்சிகள் குறித்த தகவல்கள் இவர்களிடமிருந்து கிடைத்தன'' என்று அவர்கள் எழுதினர்கள்.

இந்தியாவின் தேசியப் பத்திரிகைகளில் சோவியத் ருஷ்யாவில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்த தகவல்கள் 1917ம் ஆண்டு நவம்பர் மாத நடு முதல் வெளியாகத் தொடங்கின. **ருஷ்யாவின் மக்கள் இனங்களது உரிமைகள் பற்றிய பிரகடனம்** (1917, நவம்பர் 15ந் தேதி ஏற்கப்பட்டது), அதே ஆண்டு டிசம்பர் 3ந் தேதி வெளியிடப்பட்ட மக்கள் கமிஸாரவையின் **ருஷ்யாவையும் கிழை நாடுகளையும் சேர்ந்த எல்லா உழைப்பாளி முஸல்மான்களுக்கும் வேண்டுகோள்** ஆகியவெனினது புகழ் பெற்ற பத்திரங்கள் இந்தப் பத்திரிகைகளின் கவனத்தைச் சிறப்பாக ஈர்த்தன.

ருஷ்யாவில் நடந்த போராட்டத்தின்பால் அனுதாபம் கொண்டிருந்த பெரும்பாலான இந்திய தேசியவாதிகள் அக்டோபர்ப் புரட்சி நடந்ததை அடுத்த முதல் ஆண்டுகளில் புரட்சி நிகழ்ச்சிகளின் சமுதாய உட்பொருளைப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் தேசிய, காலனியாட்சி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் முன்னணி வீரனாக இளம் சோவியத் அரசை அவர்கள் அனைவரும் மதித்தார்கள்.

அக்டோபர்ப் புரட்சி ஆழ்ந்த சமுதாய மாற்றம் என்பதைத் தேசிய இயக்கத்தின் இடதுசாரியைச் சேர்ந்த சில தலைவர்கள் அப்போதே புரிந்து கொண்டார்கள்.

''ருஷ்யக் குடியரசில் பயிர் நிலம் அனைத்தும் நாட்டின் பிற வளங்களும் எல்லா மக்களுக்கும் உரிய செல்வம் ஆகிவிட்டன'' என்று

1917ம் ஆண்டின் இறுதியில் ஒரு கட்டுரையில் எழுதினார் தலைசிறந்த தமிழ்க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். இதையடுத்து அவர் பின் வரும் முடிவு செய்தார்: ''இந்தக் கோட்பாடு உலகம் முழுவதிலும் வெற்றி அடைந்து மக்களது வாழ்வின் நியமமாக மாறிய பின்பே மனித சமுதாயம் உண்மையான நாகரிகம் பெறும்.''

வி. இ. லெனினைப் பற்றி பிரிட்டிஷ் பத்திரிகைகள் பரப்பிய அவதூறுகளை எதிர்த்துக் கேசரி என்னும் தமது வார ஏட்டின் 1918, ஜனவரி 29 இதழில் பால கங்காதர திலகர் தலையங்கம் எழுதினார். ''பிரபு வம்சத்தினரின் நிலங்களை லெனின் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்தார். படையினர் மீதும் பொது மக்கள் மீதும் அவரது செல்வாக்கு வளர்ந்து வருவதற்கு இதுவே காரணம்'' என அவர் அழுத்திக் கூறினார். இடதுசாரித் தேசியவாதிகளின் மற்றொரு தலைவர் விபின் சந்திர பால் இளம் சோவியத் அரசின் அடிப்படைக் கோட்பாடுகளை உற்சாகமாக ஆதரித்து வந்தார். ''எல்லா வகையான பொருளாதார, முதலாளித்துவச் சுரண்டலையும் கள்ள வியாபாரத்தையும், சமுதாய ஏற்றத் தாழ்வையும் போல்ஷிவிக்குகள் எதிர்க்கிறார்கள்'' என்று 1919ல் தமது சொற்பொழிவு ஒன்றில் வெளிப்படையாகக் கூறினார் அவர்.

தேசியப் பத்திரிகைகள் சோவியத் ருஷ்யா பற்றி உண்மையான தகவல்களைப் பரப்பியதன் விளைவாக, போல்ஷிவிக்குகளின் செயல்திட்டம், கொள்கை ஆகியவற்றின்பால் இந்திய சமூகத்தின் ஆர்வம் இடையறாது வளர்ந்தது. வி. இ. லெனினையும் சோவியத் ஆட்சியையும் பற்றி இந்தியர்களால் எழுதப்பட்ட நூல்கள் இருபதுக்களின் தொடக்கத்திலேயே இந்தியாவில் வெளிவந்தன. இந்தியாவில் தனிப் பதிப்பாகப் பிரசுரமான லெனினுடைய முதலாவது வாழ்க்கைச் சரிதை தென் இந்திய சோஷலிஸ்டு ஜி.வி. கிருஷ்ண ராவ் என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. இந்தச் சிற்றேடு (சென்னை, 1920) நிக்கலாய் லெனின், அவரது வாழ்க்கையும் செயல்களும் என்ற தலைப்புடன் வெளியாயிற்று. 1921—1924ம் ஆண்டுகளுக்கு இடையே உள்ள காலத்தில் லெனினையும் அக்டோபர்ப் புரட்சியையும் பற்றி இந்தி, உருது, வங்காளி, மராட்டி, கன்னடம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏராளமான பத்திரிகைக் கட்டுரைகள் தவிர ஒரு பதினைந்து புத்தகங்கள் வெளியாயின.

இரகசியப் புரட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களான இடதுசாரி இந்தியத் தேசியவாதிகள் சோவியத் குடியரசைப் பிரிட்டிஷ் காலனியாட்சி அமைப்புக்கு எதிரான போராட்டத்தில் தங்கள் நெருங்கிய கூட்டாளியாக மதித்தார்கள். சோவியத் ருஷ்யாவுடன் நேரான தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளத் தொடங்கினர்கள். 1917ம் ஆண்டின் முடிவில் டில்லியில் நடந்த முஸ்லிம் தேசியவாதிகளின்

கூட்டத்தில் ருஷ்யப் புரட்சியை வரவேற்கும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இந்தத் தீர்மானம் சட்ட விரோதமான இந்தியப் பதிப்புக் களில் 1918, ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது. சோவியத் அர சாங்கத்துக்கு வாழ்த்து தெரிவிக்கும் பொருட்டுப் பேராசிரியர் ஜப் பார், சத்தார் என்னும் இரு முஸ்லிம் தேசியவாதிகள் மாஸ்கோவுக்கு அனுப்பப்பட்டார்கள். இவர்கள் சுற்று வழியாக ஐரோப்பாவைக் கடந்து 1918, நவம்பர் மாதம் மாஸ்கோ சேர்ந்தார்கள். வெளி விவகார மக்கள் கமிஸாரகத்துக்கு அளித்த நினைவறிக்கையில் இந்தியக் குட்டி பூர்ஷ்வாப் புரட்சியாளர்கள் ருஷ்யாவின் புரட்சியை வியந்து பாராட்டி இருந்தார்கள். காலனியாட்சி ஒடுக்குமுறையிலிருந்து விடுபட இந்தியாவுக்கு ருஷ்யா உதவி அளிக்கும் என்ற நம்பிக்கை இந்த அறிக்கையில் வெளியிடப்பட்டிருந்தது. நவம்பர் 23ந் தேதி இந்தியப் பிரதிநிதிகள் வி. இ. லெனினுல் தம் அலுவலகத்தில் வர வேற்கப்பட்டார்கள். இரண்டு நாட்களுக்குப் பின் அகில ருஷ்யாவின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் அவர்கள் இருந்தார்கள். பேராசிரி யர் ஜப்பார் உரை ஆற்றினர். மாஸ்கோவில் கண்டவை, வி. இ. லெனினுடனும் யா. மி. ஸ்வெர்திலோவுடனும் நிகழ்ந்த சந்திப்புக் கள் ஆகியவை இந்தியப் பிரதிநிதிகள் மீது பெருத்த உளப்பதிவு ஏற்படுத்தின. அவர்கள் தாய்நாடு திரும்பியபின் வெளியிட்ட அறிக்கை இதற்குச் சான்று பகர்கிறது.

நாடுகடந்து வாழ்ந்த இந்தியப் புரட்சியாளர்களும் இதே சமயத் தில் சோவியத் ருஷ்யாவுடன் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ள முற்பட்டார்கள். காபுலில் அமைக்கப்பட்ட நாடுகடந்த தாற்காலிக இந்திய அரசாங்கத்தின் தலைவர் மகேந்திர பிரதாப் 1918, மார்ச்சில் பெத்ரோகிராது சேர்ந்தார். அவருடைய வருகையை ஒட்டி இந்தியா வுடன் ஒருமைப்பாடு தெரிவிக்கும் பொதுக் கூட்டம் சோவியத் கல்வி அமைச்சர் அ. வ. லுனச்சார்ஸ்கியின் தலைமையில் நடைபெற்றது. அது ''உண்மையிலேயே மறக்க முடியாத, மகத்தான'' கூட்டம் என்று மகேந்திர பிரதாப் தம் நினைவுக் குறிப்புக்களில் கூறுகிறார். ஓர் ஆண்டுக்குப் பிறகு இந்த அரசாங்கத்தின் முதலமைச்சர் பேராசிரி யர் பர்க்கத்துல்லா மாஸ்கோ வந்தார். நாடுகடந்த இந்தியப் புரட்சி யாளர்கள் சோவியத் ருஷ்யாவின்பால் கொண்டிருந்த கொள்கை நிலையை இஸ்வேஸ்தியா செய்தித்தாள் நிருபருக்கு அளித்த பேட்டி யில் அவர் துல்லியமாக வரையறுத்தார்: ''நான் கம்யூனிஸ்டு அல்ல, சோஷலிஸ்டும் அல்ல. ஆனல் தற்போதைக்கு என் அரசியல் வேலைத் திட்டம் பிரிட்டிஷ்காரர்களை ஆசியாவிலிருந்து வெளியேற்றுவது ஆகும். ஆசியாவில் ஐரோப்பிய முதலாளித்துவத்துக்கு நான் சமரசப்படுத்த முடியாத பகைவன்... இதில் நான் கம்யூனிஸ்டு

களுடன் சேர்ந்து கொள்கிறேன். இந்த நோக்கில் நாங்கள் உங்களுடைய இயல்பான கூட்டாளிகள்.''

அதே 1919ம் ஆண்டு நாடுகடந்த இந்தியப் புரட்சியாளர்களின் பிரதிநிதிக் குழு மகேந்திர பிரதாப், பர்க்கத்துல்லா, இருவரதும் தலைமையில் மாஸ்கோவுக்குச் சென்றது. மே மாதம் 7ந் தேதி வி. இ. லெனின் தம் அலுவலகத்தில் இந்தப் பிரதிநிதிக் குழுவை வரவேற்றார்.

இதை அடுத்து வி.இ. லெனின் பின்னும் பல தடவைகள் இந்தியப் புரட்சியாளர்களைச் சந்தித்தார். உலகின் முதலாவது தொழிலாளர், விவசாயிகள் அரசின் தலைவரான லெனின் இந்தியாவில் நடந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை ஏகாதிபத்தியத்துக்கு எதிரான அனைத்துலகப் போராட்டத்தின் முக்கியமான உள்ளுறுப்பாகக் கருதி அதன் நிகழ்ச்சிகளை ஆழ்ந்த கவனத்துடன் நோக்கி வந்தார். ''ருஷ்யா, இந்தியா, சீனம் முதலியவை மக்கள் தொகையில் மிகப் பிரமாண்டமான பெரும்பான்மை கொண்டிருப்பதைப் போராட்டத்தின் முடிவு கடைசியாகச் சார்ந்திருக்கிறது. இந்தப் பெரும்பான்மை மக்களே அண்மை ஆண்டுகளில் தங்கள் விடுதலைக்கான போராட்டத்தில் அசாதாரணமான விரைவுடன் ஈர்க்கப்படுகிறார்கள்...''* என்று மேலானது கொஞ்சமே ஆனாலும் மேல் என்ற கட்டுரையில் வி. இ. லெனின் எழுதினார்.

காபுவில் மகேந்திர பிரதாப் நிறுவிய இந்தியப் புரட்சிச் சங்கம் என்னும் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக் கூட்டம் நிறைவேற்றிய வாழ்த்துத் தீர்மானத்துக்கு லெனின் 1920, மே 20ந் தேதி விடை அளித்தார். இந்தியாவில் போராட்டம் வெற்றிகரமாக நடப்பதற்கு மிக முக்கியமான ஒரு நிபந்தனையைத் தமக்கு இயல்பான அறிவுக் கூர்மையுடன் லெனின் குறிப்பிட்டார். இந்து-முஸ்லிம் ஒற்றுமையே இந்த நிபந்தனை. லெனினது செய்தி பின்வருமாறு கூறியது: ''முஸ்லிம்களதும் முஸ்லிம் அல்லாதாருடையவும் நெருங்கிய கூட்டை வரவேற்கிறோம். கீழை நாடுகளின் எல்லா உழைப்பாளிகள் இடையிலும் இந்தக் கூட்டு பரவ வேண்டும் என்று உளமார விரும்புகிறோம்.''**

இவ்வாறு, அக்டோபர்ப் புரட்சியின் வெற்றி இந்திய விடுதலை இயக்கத்தின் சர்வதேச உறவுகள் கணிசமாக விரிவடைய உதவியது. பண்பு நோக்கில் புதிய அம்சத்தை இந்த இயக்கத்தில் அது புகுத்தியது. கீழை நாட்டு மக்கள் இனங்களின் தேசிய விடுதலைப் போராட்

---

* வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 45, பக்கம் 404.
** வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 41, பக்கம் 122.

டத்துடன் உலகின் முதலாவது சோஷலிஸ அரசினது கூட்டு இந்தப் புதிய அம்சம்.

இந்தியத் தேசிய இயக்கத்தின் பல்வேறு போக்குகள் மீது மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் செல்வாக்கு வெவ் வேறு வகையாக இருந்தது. இடதுசாரித் தேசியவாதிகளின் சமுதாய வேலைத்திட்டத்தைத் தீவிரப்படுத்தவும் தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றுச் சிறப்புள்ள பாத்திரத்தை அவர்கள் நாளடைவில் புரிந்து கொள்ளவும் அது உதவியது. 1919ம் ஆண்டின் இறுதியில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் பால கங்காதர திலகர் பின்வருமாறு கூறி னார்: ''காலம் செல்லச் செல்லத் தொழிலாளர் நிறுவனங்களின் செல் வாக்கு வளர்ந்து கொண்டு போகும். தொழிலாளர்களே நாட்டின் சொந்தக்காரர்கள் ஆவார்கள்.'' ''தீவிரவாதிகளின்'' மற்றொரு தலை வரான லாலா லஜபதி ராய் தொழிலாளர்களின் போராட்டத்தில் வேலைநிறுத்தங்களின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு விளக்குகையில் பின்வருமாறு கூறினார்: ''ஐரோப்பியத் தொழிலாளர்கள் நேர்முக நட வடிக்கைகளுக்கு ஏற்ற இன்னொரு ஆயுதத்தைக் கண்டு பிடித்திருக் கிறார்கள். எல்லோருக்கும் முன்னே செல்கிறான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்ட விரும்பும் ருஷ்யத் தொழிலாளி...''

மறைமுக பிரிட்டிஷ் எதிர்ப்பு நிறுவனங்களின் உறுப்பினர்களான ''தீவிரவாதிகளும்'' புரட்சியாளர்களும் விஞ்ஞான சோஷலிஸத்தின் கொள்கை நிலைக்கு மாறுவதை அக்டோபர்ப் புரட்சியின் செல்வாக்கு சந்தேகமின்றி விரைவுபடுத்தியது.

எல்லாவற்றிலும் செல்வாக்கு மிக்க அரசியல்வாதத் தேசிய நிறு வனமாக இருந்த இந்தியத் தேசியக் காங்கிரசைப் பொறுத்த வரை யில், அதன் தலைமைக் குழு அக்டோபர்ப் புரட்சியின் சமுதாய-அரசி யல் வேலைத்திட்டத்தை ஏற்காவிடினும் புரட்சியை மொத்தத்தில் நல்லெண்ணத்துடன் வரவேற்றது. காங்கிரசின் 1917ம் ஆண்டுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த அன்னி பெசண்டு அம்மையார் தம் தொடக்கவுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''ருஷ்யப் புரட்சி யும் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் ருஷ்யக் குடியரசு உதயமாகும் வாய்ப்பும் இந்தியாவின் நிலைமையை அறவே மாற்றிவிட்டன... இனி, இந்தியா சுயாட்சி பெறும் வரையில் அதன் பார்வை தன் சுதந்திர அண்டை நாட்டார் மீதே நிலையாகப் பதிந்திருக்கும். அவர்களுடைய நிலைமைக்கும் அதன் நிலைமைக்கும் இடையே உள்ள வேறுபாடு நாட்டில் கிளர்ச்சிக் கொந்தளிப்பு வளர உதவும்.''

இந்தியா மீது அக்டோபர்ப் புரட்சியின் செல்வாக்கு பல பக்கங் கள் கொண்ட நீண்ட கால நிகழ்முறை. இந்தியாவின் பல்வேறு வர்க் கங்களும் அவற்றின் பிரதிநிதிகளாக விளங்கிய இந்திய சமூக-அரசி

யல் நிறுவனங்களும் ருஷ்யாவில் நடந்த புரட்சி நிகழ்ச்சிகளிலிருந்து நேராகப் பெற்ற முதன்மையான படிப்பினை என்ன என்றால் விடுதலைப் போராட்டம் வெற்றிகரமாக நடப்பதற்கு விரிவான வெகுஜனத் திரள்கள் அதில் செயல்முறைப் பங்கு ஆற்ற வேண்டும் என்பதே.

பிரிட்டிஷ்-இந்தியக் காலனி நிர்வாகம் ருஷ்யாவில் நடந்த புரட்சியின் அனுபவத்தைத் தனக்கு ஏற்ற விதத்தில் கணக்கில் எடுத்துக் கொண்டது.

இந்தியாவில் பிரிட்டிஷ் கொள்கை. மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தம்

இந்தியாவில் பிரிட்டிஷ் கொள்கையில் ஓரளவு திருத்தம் செய்வது அவசியம் என்ற பிரச்சினையை 1917ம் ஆண்டு மே மாதத்திலேயே பிரிட்டிஷ் வைசிராய் செம்ஸ்போர்டு பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு முன் வைத்திருந்தான். இதற்குக் காரணம் ருஷ்யப் புரட்சியின் செல்வாக்கினால் இந்தியாவின் நிலைமையில் ஏற்பட்டிருந்த மாறுதலே ஆகும். அதே ஆண்டு ஆகஸ்டு மாதம் 20ந் தேதி இந்தியா மந்திரி மாண்டேகு இந்தியக் கொள்கை குறித்த அரசாங்கப் பிரகடனத்தைப் பிரிட்டிஷ் நாடாளுமன்ற மக்கள் சபையில் படித்தான். இந்தியாவில் ''பொறுப்பாட்சி'' அமைப்பதற்கு ஏற்ற நிலைமைகளை உருவாக்குவது இந்தக் கொள்கையின் நோக்கம் என்று கூறப்பட்டது. இந்தப் பிரகடனத்துக்கு ஏற்ப, இந்தியாவில் பிரிட்டிஷ் கொள்கை குறித்த அறிக்கையை மாண்டேகுவும் செம்ஸ்போர்டும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்காகவும் நாடாளுமன்றத்திற்காகவும் தயாரித்தார்கள். இந்த அறிக்கை 1918, ஜூலையில் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையில் அடங்கிய முக்கியக் கருத்துக்கள் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தால் 1919ல் அங்கீகரிக்கப் பெற்ற இந்திய ஆட்சிச் சட்டத்தின் பகுதிகள் ஆயின. இந்தச் சட்டம் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம் என்ற பெயரால் பிரபலம் ஆயிற்று.

இந்தச் சட்டத்தின்படி மைய, மாகாணச் சட்ட மன்றங்களில் வாக்காளர்களின் விகிதத்தை 1909ம் ஆண்டைய மிண்டோ-மார்லி சீர்திருத்தத்தில் இருந்ததை விட அதிகமாக்க வகை செய்யப்பட்டது. பிந்தியதன்படி வயது வந்தவர்களில் ஆயிரத்துக்கு இருவர் தாம் வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்தார்கள். புதிய சட்டம் இதை மையத்தில் நூற்றில் ஒருவருக்கும் மாகாணங்களில் நூற்றில் மூவருக்கும் அளித்தது. மைய, மாகாண (மத்திய மாகாணமும் பஞ்சாபும் நீங்கலாக எல்லா மாகாண சட்ட மன்றங்களிலும் இரண்டு சபைகள் இருந்தன) சட்ட மன்றங்களின் கீழ் சபையிலும் மேல் சபையிலும்

(கவுன்சில் ஆவ் ஸ்டேட்) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெரும்பான்மை நிலையாக்கப்பட்டது.

வைசிராயினதும் மாகாண கவர்னர்களதும் செயற் குழுக்களில் சுகாதாரம், கல்வி ஆகிய இலாக்காக்களுக்கும் காலனியாட்சி நிர்வாகத்தின் இரண்டாந்தர முக்கியத்துவம் உள்ள வேறு சில இலாக்காக்களுக்கும் தலைவர்கள் (அமைச்சர்கள்) பதவிகளை இந்தியர்கள் ஏற்பதற்கு இடங்கள் அளிக்கப்பட்டன.

நிர்வாகச் சீர்திருத்தத்தின் இந்த விதிகள் இந்திய உடைமையாளர் வர்க்கங்களுக்கு ஓரளவு விட்டுக்கொடுக்கப்பட்டதைக் குறித்தன. தேசிய மனப்பான்மை கொண்ட முதலாளி வர்க்கத்தினர், நிலப் பிரபுக்கள், பெரு நிலப்பிரபு-முதலாளி வர்க்க அறிவுஜீவிகள் ஆகியோரை விடுதலை இயக்கத்திலிருந்து துணிப்பது இவற்றின் நோக்கமாக இருந்தது.

சட்ட மன்றத் தேர்தல்கள் தனித் தொகுதி முறைப்படி நடக்கும், என்ற, சீர்திருத்தத்தின் முக்கியமான விதியும் இந்தியத் தேசியவாதிகளின் அணிகளில் பிளவு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்துக்களும் முஸ்லிம்களும் தனித் தனியே வாக்களிப்பதற்கு இது வகை செய்ததோடு முஸ்லிம்களுக்கு ஓரளவு சலுகைகளும் அளித்தது. வாக்காளர்களிடையே முஸ்லிம்கள் சிறுபான்மையோராக இருந்த மாகாணங்களில் சட்ட மன்றத்தில் முப்பது சதவிகிதம் இடங்கள் அவர்களுக்கு உத்தரவாதம் செய்யப்பட்டன. அவர்கள் பெரும்பான்மை வகித்த மாகாணங்களிலோ, பாதிக்கு மேல் இடங்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டன.

இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒருவருக்கு ஒருவர் எதிர்நிறுத்தும் பிரிட்டிஷ் கொள்கை புதிய இந்திய ஆட்சிச் சட்டத்தில் மேற்கொண்டு வளர்ச்சி அடைந்தது.

நாட்டின் நிர்வாக இயந்திரத்தின் தலைமையில் இந்திய சமூக மேல்நிலைப் பிரதிநிதிகளின் பங்கை ஓரளவு விரிவுபடுத்திய போதிலும் பிரிட்டிஷ்காரர்கள் நடப்பில் அதிகாரம் அனைத்தையும் தங்கள் வசமே வைத்திருந்தார்கள். நிதி, இராணுவம், போலீஸ் முதலியவற்றை அவர்கள் முன் போன்றே முழுமையாகக் கண்காணித்து வந்தார்கள். தவிரவும் சட்ட மன்றங்களைக் கலைக்கவும் அவற்றின் தீர்மானங்களை ரத்து செய்யவும் வைசிராயும் மாகாண கவர்னர்களும் முழு உரிமை பெற்றிருந்தார்கள். இந்திய மந்திரிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றங்களுக்கு வரம்புக்குட்பட்ட பொறுப்பு ஏற்பதும் வைசிராயும் அவனது பிரதிநிதிகளான மாகாண கவர்னர்களும் எதேச்சாதிகார ஆட்சி நடத்துவதும் அடங்கிய இத்தகைய ஆட்சி அமைப்பு ''இரட்டையாட்சி'' எனப் பெயர் பெற்றது. இந்தியாவில்

தன் சமுதாய அடித்தளத்தை விரிவுபடுத்த முயன்ற அதே சமயத்தில் பிரிட்டிஷ் காலனியாட்சி முறை நாட்டில் தேசிய விடுதலை இயக்கத்தை ஒடுக்குவதற்கான இயந்திரத்தை வலுவாக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்தியாவில் அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கை குறித்து விசாரணை செய்த பிரிட்டிஷ் நீதிபதி ரௌலத்தைத் தலைவனாகக் கொண்ட குழுவின் அறிக்கை 1918ம் ஆண்டில் வெளியாயிற்று. இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகள் வலுவாக்கப்பட வேண்டும் என்று இந்தக் குழு முடிவு செய்து ஆலோசனைகள் தெரிவித்தது. இவற்றின் அடிப்படையில் இயற்றப்பட்ட சட்டங்கள் ''ரௌலத் சட்டங்கள்'' எனப் பெயர் பெற்றன. 1919, மார்ச்சு 18ந் தேதி இவை பிறப்பிக்கப்பட்டன. கொடுமையான இந்தப் புதிய சட்டங்களின்படி, குடிகளைக் கைது செய்யவும் நீதி மன்ற விசாரணை இன்றி அவர்களுக்குத் தீவாந்திரச் சிறைத் தண்டனை விதிக்கவும் வைசிராய்க்கும் கவர்னர்களுக்கும் உரிமை அளிக்கப்பட்டிருந்தது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருபதாம் நூற்றாண்டு தொடக்கம் முதல் இந்தியாவில் கடைப்பிடித்து வந்த ''அச்சுறுத்துவதும் ஆசை காட்டுவதும்'' என்று இந்தக் கொள்கை தோல்வி அடைந்தது. தேசிய விடுதலைப் போராட்ட அலை எழுந்து பரவிக் கொண்டிருந்தது. மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தமோ ரௌலத் சட்டங்களோ இந்த அலை எழுச்சியைத் தடுக்க முடியவில்லை. மாறாக வெகுஜனப் போராட்டத்தையும் ஒழுங்கமைந்த தேசிய இயக்கத்தின் முன்னேற்றங்களையும் தூண்டிவிடும் ஒருவகை ஊக்குவிப்பிகளாக இந்த நடவடிக்கைகள் விளங்கின.

காங்கிரசின் நிலையில் மாற்றம்.
மோ. க. காந்தி தேசிய இயக்கத்தின் தலைமைக்கு வருதல்

திலகரின் தலைமையில் தீவிரவாதிகள் இந்திய தேசியக் காங்கிரசுக்குத் திரும்பியது, ஹோம்ரூல் லீகின் செயல்கள் ஆகிய யாவும் கட்சியின் நிதானப் போக்குள்ள மிதவாதத் தலைமைக் குழுவுக்கு எதிர்க் குழு நாளடைவில் உருவாக வாய்ப்பு அளித்தன. 1918 ஆகஸ்டில் பம்பாய் நகரில் நடந்த அசாதாரணக் கூட்டத்தில் காங்கிரஸ் வெளிப்படையாகப் பிளவுபட்டது. மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம் பற்றிக் கடைப்பிடிக்க வேண்டிய போக்கு இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. பிரிட்டிஷ் யோசனைகள் ''போதாதவை, திருப்தி அளிக்காதவை, ஏமாற்றம் அளிப்பவை'' என்ற காரணத்தால் பெரும்பான்மை வாக்குக்களால் நிராகரிக்கப்பட்டன. முத

லாளி வர்க்க, குட்டி பூர்ஷ்வா வட்டாரங்களில் பரவி வந்த எதிர்ப்பு மனப்பான்மையை இந்திய தேசியக் காங்கிரஸ் மேலும் மேலும் தீவிரமாக வெளியிடலாயிற்று.

வலதுசாரியினர் சுரேந்திரநாத பானர்ஜியையும் வேறு சில தலைவர்களையும் பின்பற்றிக் காங்கிரசிலிருந்து வெளியேறி மிதவாதிகள் சங்கம் என்னும் புதிய கட்சியை அமைத்தார்கள். மேல்மட்ட முதலாளி-நிலப்பிரபு வர்க்க அரசியல் நிறுவனம் ஆகிய இது இந்தியத் தரகு வர்த்தக முதலாளி வர்க்கத்தைக் கணிசமான அளவு பிரதிநிதித்துவப்படுத்தியது. அடுத்து வந்த ஆண்டுகளில் இது காலனியாட்சி அரசாங்கத்தை முழுமையாக ஆதரிக்கும் நிலையை மாறுதல் இன்றி மேற்கொண்டது. நாட்டின் சமூக-அரசியல் வாழ்வில் கணிசமான பங்கு எதையும் இந்த நிறுவனம் ஆற்றவில்லை.

இதே காலம் முதல் காங்கிரசுக்குள் மோ. க. காந்தியின் செல்வாக்கு வெகுவாக அதிகரித்தது. அவர் இந்தியாவில் இரண்டு சத்தியாக்கிரகங்களை வெற்றிகரமாக நடத்தி இருந்தார். அகமதாபாதில் ஆலைத் தொழிலாளர்களின் தொழிற்சங்கம் நிறுவுவதில் செயல் முறைப் பங்கு ஆற்றி இருந்தார். அடிக்கடி பத்திரிகைகளில் எழுதியும் பொதுக் கூட்டங்களில் பேசியும் வந்தார். இந்தக் காரணங்களால் இருபதுக்களின் தொடக்க வாக்கில் அவர் இந்தியத் தேசியவாதிகளின் வட்டாரங்களில் மிக மிக விரும்பப்பட்ட தலைவர்களில் ஒருவர் ஆகி விட்டார். காங்கிரசுடன் அவர் ஒத்துழைத்து வந்தார். ஆனால் தொடக்கக் காலத்தில் அதற்கு வெளியில் இருந்தே செயலாற்றினார்.

அனைத்து இந்தியப் பரப்பில் வெகுஜன இயக்கம் நடத்தும் வகையில் காந்தி மேற்கொண்ட முக்கியமான முதல் செயல் ''ரௌலத் சட்டங்களுக்கு'' எதிர்ப்பு தெரிவிக்கும் போராட்டத்தை ஒழுங்கமைத்தது ஆகும். 1918ல் காந்தி ''சத்தியாக்கிரகப் பிரதிக்ஞை'' தயாரித்துத் தாமும் ஏற்றுத் தம் உடனுழைத்தவர்களையும் பின்பற்றியவர்களையும் ஏற்கச் செய்தார். ரௌலத் சட்டங்களுக்கும் அது போன்று இந்தியாவில் தேசிய இயக்கத்தை நசுக்குவதை நோக்கமாகக் கொண்ட பிற சட்டங்களுக்கும் கீழ்ப்படிய சாத்துவிகமான முறையில் மறுப்பதாக இந்தப் பிரதிக்ஞையில் ஆழ்ந்த உறுதி கூறப்பட்டிருந்தது. பம்பாயில் சத்தியாக்கிரக சபையை காந்தி அமைத்தார். இந்த நிறுவனம் ''சத்தியாக்கிரகப் பிரதிக்ஞையில்'' கையெழுத்துக்கள் சேகரித்தது. இந்த இயக்கம் வெற்றி அடைந்ததால் அடுத்த நடவடிக்கையை மேற்கொள்ள காந்திக்கு முடிந்தது. ''ரௌலத் சட்டங்களுக்கு'' எதிர்ப்பு தெரிவிப்பதற்கு அடையாளமாக ஹர்த்தால் (கடையடைப்பு) செய்யும்படி—அதாவது எங்கும் எல்லாவிதத் தொழில்[] நடவடிக்கைகளையும் நிறுத்தும்படி—சத்தியாக்கிரக

சபையின் பெயரால் 1919 மார்ச்சில் அவர் நாட்டுக்கு அழைப்பு விடுத்தார். உண்ணு நோன்பிருந்து பிரார்த்தனையில் அந்த நாளைக் கழிக்குமாறு இந்துக்களையும் முஸ்லிம்களையும் அவர் வேண்டிக் கொண்டார். 1919, ஏப்ரல் 6ந் தேதி ஹர்த்தாலுக்குக் குறிக்கப்பட்டது. காந்தியின் வேண்டுகோள் விரிவாக ஏற்கப்பட்டது. காங்கிரஸ் அவருடைய முயற்சிக்கு ஆதரவு அளித்தது. இவை யாவும் காந்தி எல்லோரது ஒப்புதலையும் பெற்ற தேசிய இயக்கத் தலைவர் ஆகி விட்டதற்குச் சான்று கூறின.

காந்தியின் சமூக-அரசியல், தத்துவக் கருத்துக்கள் அடிப்படை அம்சங்களில் இருபதுக்களிலேயே உருவாகி விட்டிருந்தன. இவை யும் விடுதலைப் போராட்டத்தில் அவருடைய செயல்திட்டமும் போர்த்தந்திரமும் இந்திய சமூகத்தினது மிக மிகப் பல்வேறு வர்க் கங்களின் ஆதரவைப் பெற்றன. இந்தக் காரணத்தால்தான் நாடு அனைத்திற்கும் தலைவர் என்னும் பாத்திரத்துக்கு அவர் விரைவாக உயர்ந்தார்.

நவீன முதலாளித்துவ நாகரிகத்தையும் பெரிய இயந்திரத் தொழில் துறையையும் முதலாளித்துவ நகரப் பண்பாக்கத்தையும் காந்தி தாக்கி விமர்சித்து வந்தார். கைத்தொழில், குடிசைத் தொழில் உற்பத்தியை மீண்டும் உயிர்ப்பித்து வளர்ப்பது, பொருளாதார நோக்கில் தனித்து இயங்கும் கிராம சமுதாயங்களை அடிப்படையாகக் கொண்ட நாட்டின் பொருளாதார வாழ்க்கையை மையக் கட்டுப் பாடு அற்றது ஆக்குவது ஆகியவை அவரது செயல்திட்டத்தில் அடங்கி இருந்தன. இந்திய விவசாயி, கம்மியன், குடிசைத் தொழி லாளி, சிறு வியாபாரி, ஆகியோரின் குட்டி பூர்ஷ்வாத் தன்மை கொண்ட கற்பனை சோஷலிஸ ஆதர்சம் காந்தியின் இந்த விமர்சனத் திலும் செயல்திட்டத்திலும் பரு வடிவு பெற்றது.

இந்தியாவில் சமூக உணர்வு வளர்ச்சி பெறுத நிலையில் இருந்தது. நாட்டின் பொருளாதார, சமுதாய, பண்பாட்டு வாழ்க்கையில் நிலப் பிரபுத்துவத்தின் வன்மை மிக்க மீத மிச்சங்கள் நிலவி வந்தன. இந்த நிலைமைகளில் காந்தி மக்களிடம் பேசுவதற்கு மேற்கொண்ட மத-ஒழுக்க நெறி உபதேச வடிவம் அவருடைய கருத்துக்களை எழுத்தறி வற்ற விரிவான இந்திய வெகுஜனங்களுக்குப் புரியக் கூடியவை ஆக்கிற்று. இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டவையும் இஸ்லாம், கிறிஸ்துவம், பிற மதங்கள் ஆகியவற்றிலிருந்து எடுத்துக் கொண்ட கதம்பக் கருத்துக்கள் சேர்ந்தவையுமான காந்தியின் தத்துவக் கண்ணோட்டங்களும் இதற்குத் துணை புரிந்தன.

சொந்த வாழ்வில் காந்தி துறவி போன்ற எளிமையைக் கடைப் பிடித்தார். பொது மக்களோடு விரிவாகக் கலந்து பழகினார் (உதா

ரணமாக, அவர் ரெயிலில் மூன்றும் வகுப்பில்தான் பயணம் செய்தார், பல இந்திய மொழிகளில் பேசினார்). உளவியலை நுட்பமாக அறிந்திருந்தார். இந்தியாவின் சாதாரண மக்களது உளப்பாங்கில் ஏற்பட்ட மாறுதல்களை உய்த்து உணர்ந்து வந்தார். இந்தப் பண்புகள் மக்களின் நன்மதிப்பைப் பெற அவருக்கு உதவின.

ஒவ்வொரு கட்டமாகத் தாண்டிச் சுதந்திரத்தை நோக்கிப் படிப்படியாக முன்னேறுவதே காந்தி தமக்கு வைத்துக் கொண்ட பொதுப் போர்த்திட்டக் குறிக்கோள். இந்தக் குறிக்கோளை அடைவதற்கான முக்கிய அரசியல் பணியில் ஒன்றித்த முதலாளித்துவ-தேசியத் தலைமையின் கீழ் எல்லா வர்க்கங்களும் அரசியல் சக்திகளும் இணைவது அடங்கி இருந்தது. அதனால்தான் இந்திய சமூகத்தைச் சேர்ந்த வர்க்கங்களுக்கு இடையே போராட்டத்துக்கு காந்தி எதிரியாக இருந்தார். வர்க்க சமாதானத்தை நிலைநாட்டுவதன் அடிப்படையில் நகரத்திலும் நாட்டுப்புறத்திலும் பொருளாதார, சமுதாயப் பிணக்குகள் சமரசமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று ஒத்திசைந்த முறையில் அவர் வலியுறுத்தி வந்தார். இந்திய சமூகம் மத நோக்கிலும் சாதிகளின் நோக்கிலும் ஆழ்ந்த பிரிவுகளாகப் பாகுபட்டிருந்த நிலைமைகளில் இந்துக்களும் முஸ்லிம்களும் தேசிய இன, சாதிக் குழுக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பது காந்தியின் சித்தாந்தத்திலும் கொள்கையிலும் முக்கியமான இடத்தைப் பெற்றது.

இந்திய தேசியத்தின் எல்லாச் சக்திகளையும் ஒன்று சேர்ப்பதும் தாம் முன்வைத்த செயல்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வெற்றிகரமாகப் போராடுவதும் திரளான வெகுஜனங்கள் விடுதலை இயக்கத்தில் விரிவாகப் பங்கு கொண்டால் தான் சாத்தியம் ஆகும் என்று அதே சமயம் காந்தி தெளிவாகக் கண்டார். காலனியாட்சி அமைப்புக்குத் தீவிரமான எதிர்ப்பும் அகிம்சையும் இணைந்த சத்தியாக்கிரகம் பொது மக்களின் விரிவான வட்டாரங்களைத் தேசிய விடுதலை இயக்கத்தில் ஈர்ப்பதற்கும் இயக்கத்தின் தலைமையை முதலாளித்துவ-தேசியச் சக்திகளின் கைகளில் வைத்திருப்பதற்கும் ஏற்ற சர்வப் பொது வடிவம் என காந்தி புரிந்து கொண்டார்.

தேசிய முதலாளித்துவத் தொழில் முயற்சியின் வளர்ச்சிக்குச் செயல் முறை ஆதரவு அளித்த காந்தியின் இந்த அரசியல் வேலைத் திட்டமும் செயல்தந்திரமும் இந்தியாவின் தேசிய முதலாளி வர்க்கத்தினது அடிப்படைப் பகுதியினராலும் தேசிய மனப்பான்மை கொண்ட நிலப்பிரபுக்களாலும் விரிவாக ஆதரிக்கப்பட்டன. இருபதுக்களின் தொடக்கத்திலேயே காந்தி இந்தியத் தேசிய முதலாளி வர்க்கத்தின் அரசியல் தலைவர் ஆகி விட்டார்.

காலனியாட்சி எதிர்ப்புப் போராட்டத்தின் புதிய கட்டத்தில்

இந்திய முதலாளித்துவ, குட்டி பூர்ஷ்வா தேசியவாதத்தினது பிரதானப் போக்குக்களின் ஒன்றிப்பு வரலாற்று நோக்கில் காந்தியின் உருவில் பரு வடிவு பெற்றது போலும்.

வெகுஜனப் போராட்டத்தின் தொடக்கம். ஜாலியான்வாலா பாக்

1919 ஏப்ரல் மாதம் இந்தியாவின் பல நகரங்களில் நடந்த ஹர்த்தால்கள் நாட்டில் புரட்சி நிகழ்ச்சிகளின் வளர்ச்சியில் புதிய கட்டம் தொடங்கி விட்டதைக் குறித்தன. 1918ல் நடந்த பொருளாதார வேலைநிறுத்தங்களின் இடத்தில் நகரவாசிகளின் விரிவான வட்டாரங்களுடைய வெகுஜனப் போராட்டங்கள் மூண்டன. சிற்சில இடங்களில் இவை போராட்டத்தின் உச்ச வடிவத்தை—ஆயுதமேந்திய கிளர்ச்சியின் வடிவத்தை—மேற்கொண்டன.

இந்த நிகழ்ச்சிகள் பஞ்சாபில் எல்லாவற்றிலும் பெரிய அளவை எட்டின. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. முதலாவதாக, பஞ்சாப் ஆகப் பெரிய அளவில் ''இரத்தவரி'' செலுத்தி இருந்தது (அதாவது, பிரிட்டிஷ் இந்தியச் சேனைக்குத் துருப்புக்கள் திரட்டி அனுப்பி இருந்தது); இந்தியாவின் தானியக் களஞ்சியம் எனக் கருதப்பட்ட பஞ்சாபின் விவசாயப் பொருளாதாரத்தையே யுத்தத்தின் எல்லாச் சுமைகளும் சார்ந்திருந்தன. பேரளவான இயந்திரத் தொழில் உற்பத்தியின் விளைவாகப் பஞ்சாபின் கைத்தொழிலும் குடிசைத் தொழிலும் சிறப்பாகப் பெருத்த சேதம் அடைந்தன. இரண்டாவதாக, பிரிட்டிஷ் இந்தியாவின் மற்ற மாகாணங்களைக் காட்டிலும் பஞ்சாப் சோவியத் மத்திய ஆசியாவுக்கு அருகாமையில் இருந்தது. ருஷ்யாவில் நடந்த புரட்சி நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள் பஞ்சாபுக்கு அதிக விரைவாகக் கிடைத்து வந்தன. படைப் பணி முடிந்து ஊர் திரும்பிய சீக்கியத் துருப்பினர் கொண்டு வந்த செய்திகள் இதற்குத் துணை புரிந்தன. மூன்றாவதாக, ''கதர்'' கட்சியினரதும் அவர்களுடன் இணைந்த நாடுகடந்த புரட்சியாளர்களதும் கணிசமான செல்வாக்கு பஞ்சாபில் நிலைத்திருந்தது.

வட்டாரத் தேசியவாதிகளால் ஒழுங்கமைக்கப்பட்ட பிரிட்டிஷ் எதிர்ப்புப் பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் பஞ்சாபின் பல நகரங்களில் மார்ச்சு மாதத்திலேயே தொடங்கி விட்டன. ஏப்ரல் 10ந் தேதி பிரிட்டிஷ் அதிகாரிகள் மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட தலைவர்களான கிச்லூவையும் சத்தியபாலையும் அமிர்தசரசிலிருந்து வெளியேற்றினர்கள். இந்தச் செயல் எதிர்ப்பு இயக்கம் விரைவாகப் பரவுவதற்கு அறிகுறியாகப் பயன்பட்டது. இதன் பின் லாகூர், குஜரான்வாலா போன்ற மாகாணத்தின் சில பெரிய மையங்களில் ஹர்த்

தால்களும் பொதுக் கூட்டங்களும் பிரிட்டிஷ் நிர்வாகத்துக்கு எதிரான ஆயுதப் போராட்டங்களாக வளர்ந்தன. தொழிலாளர்களும் சிறப்பாக இருப்புப் பாதைத் தொழிலாளர்களும் இவற்றில் துடியாகப் பங்கு கொண்டார்கள்.

கவர்னர் ஓட்வயர், தளகர்த்தன் ஜெனரல் டயர் ஆகியோரின் தலைமையில் பஞ்சாபின் காலனியாட்சி அதிகாரிகள் இயக்கத்தில் கலந்து கொண்டவர்களைக் கடுமையாகத் தண்டிக்க முடிவு செய்தார்கள். இந்த நோக்கத்துடன் படைப் பிரிவுகள் ஏப்ரல் 9ந் தேதியே பஞ்சாபுக்குத் தருவிக்கப்பட்டன. கிச்லூவும் சத்தியபாலும் வெளியேற்றப்பட்டதை எதிர்க்கும் பொருட்டு ஏப்ரல் 13ந் தேதி அமிர்தசரஸ், ஜாலியான்வாலா பாகில் நடந்த பொதுக் கூட்டத்தின் மீது படையினர் குண்டு மாரி பொழிந்தார்கள். கூடி இருந்த தற்காப்பற்ற மக்களில் ஓராயிரம் பெயர் ஈவிரக்கமின்றிக் கொன்று குவிக்கப்பட்டார்கள். ஏறத்தாழ இரண்டாயிரம் பெயர் காயம் அடைந்தார்கள். டயர் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்திருந்தபடியால் மருத்துவ உதவி கிடைக்க வகை இல்லாது போயிற்று. சதுக்கத்திலும் அக்கம் பக்கத்துச் சந்துகளிலும் கிடந்தவர்கள் காயங்களிலிருந்து குருதி பெருகியதால் மடிந்தார்கள். பஞ்சாபில் போர்நிலைமை செயல்படுத்தப்பட்டது. திரளான மக்கள் கைது செய்யவும் பகிரங்கமாகத் தூக்கிலிடவும் பட்டார்கள். பிற கொடுமைகளும் நடந்தன.

ஆயினும் பிரிட்டிஷ்காரர்களின் கொடிய அடக்கு முறைகளால் விரும்பிய பயன் விளையவில்லை. மாறுக லாகூரிலும் அமிர்தசரசிலும் தற்காப்புப் படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. இவை பெரும்பாலும் குண்டாந்தடிகளை ஆயுதமாகக் கொண்டிருந்தன. ஆகையால் இவை ''டண்டா பௌஜ்'' (குண்டாந்தடிச் சேனை) என்று பெயர் பெற்றன. வெகுஜனப் போராட்டங்கள் மாநிலம் முழுவதிலும் தொடர்ந்தன. போலீஸ் நிலையங்கள் மீது தாக்குதல்களும் கைதானவர்கள் விடுவிக்கப்படுவதும் மிக அடிக்கடி நிகழ்ந்தன. இருப்புப் பாதைத் தொழிலாளர்கள் சுற்றுப்புற விவசாயிகளின் உதவியால் பல துருப்பு ரெயில்களைத் தடம் புரளச் செய்தார்கள்.

பஞ்சாபிலிருந்து வெளிச் சென்ற செய்திகளைப் பிரிட்டிஷ்காரர்கள் தணிக்கை செய்தார்கள். எனினும் அமிர்தசரஸ் நிகழ்ச்சிகள் குறித்த செய்திகள் நாடு எங்கும் பரவி ஆத்திரப் புயலைக் கிளப்பின. நாட்டின் பெரிய இயந்திரத் தொழில் மையங்களான பம்பாய், கல்கத்தா, சென்னை, கான்பூர் முதலிய நகரங்களில் பிரிட்டிஷ் எதிர்ப்புப் பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் சிறப்பாக ஆவேசத்துடன் நடை பெற்றன. அகமதாபாதில் நெசவாலைத் தொழிலாளர்களின் வெகுஜன அரசியல் போராட்டங்கள் தொடங்கின.

இயக்கம் அகிம்சையின் வரம்புகளைக் கடந்து விட்டதால் கவலை அடைந்த காந்தி அகமதாபாதில் சமாதானம் செய்து வைப்பவராகப் பணியாற்றி, பஞ்சாபுக்குச் செல்ல முயன்றார். ஆனால் காலனியாட்சி அதிகாரிகள் அவரது இந்தப் பயணத்தைத் தடை செய்து விட்டார்கள்.

பஞ்சாப் நிகழ்ச்சிகள் வி. இ. லெனினது கவனத்தைக் கவர்ந்தன. இந்தியாவின் தேசிய விடுதலை இயக்கத்தில் தொடங்கி இருந்த புதிய கட்டத்தை அவர் மதிப்பீடு செய்தார். கிழக்கு நாடுகளின் விடுதலைப் போராட்டத்தினது தன்மையை விளக்கி லெனின் பின்வருமாறு எழுதினார்: ''பிரிட்டிஷ் இந்தியா இந்நாடுகளின் தலைமையில் இருக்கிறது. ஒரு புறம் இயந்திரத் தொழில்துறை, இருப்புப் பாதைப் பாட்டாளி எந்த அளவுக்கு முக்கியம் உள்ளவன் ஆகிறானோ, மறு புறம், வெகுஜனப் படுகொலை (அமிர்தசரஸ்), பகிரங்கச் சவுக்கடி தண்டனை முதலியவற்றை மேலும் மேலும் அடிக்கடி கையாண்டு வரும் பிரிட்டிஷ்காரர்களின் பயங்கர நடவடிக்கைகள் எந்த அளவுக்கு அதிக விலங்குத்தன்மை உள்ளவை ஆகின்றனவோ, அந்த அளவுக்கு அதிக விரைவாகப் புரட்சி அங்கே வளரும்.''*

1919ம் ஆண்டையப் புரட்சி நிகழ்ச்சிகள் தேசியக் காங்கிரசின் எவ்விதமான கண்காணிப்பும் இல்லாமலே பெரும்பாலும் நடந்தன. எனவே, தன்னுடைய மதிப்பையும் செல்வாக்கையும் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுக் காங்கிரஸ் வெகுஜன நிறுவனங்களில் வேலை செய்வது பற்றிய தனது போக்கை மாற்றிக்கொள்வது இன்றியமையாதது ஆயிற்று. பிரிட்டிஷ் மிருகத்தனத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக 1919ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் அமிர்தசரசில் கூடிய காங்கிரஸ் மகாநாட்டில் ஏற்கப்பட்ட ஒரு தீர்மானம் தொழிலாளர்களிடையே தொழிற்சங்கங்கள் அமைக்குமாறு காங்கிரஸ்காரர்களுக்கு யோசனை கூறியது.

புதிய இந்திய ஆட்சிச் சட்டத்துக்கு இணங்க நிர்ணயிக்கப்பட்டிருந்த சட்ட மன்றத் தேர்தல்களைப் பகிஷ்காரம் செய்வது என்று இதே மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. மைய, மாகாணச் சட்ட மன்றத் தேர்தல்கள் இடை முறிக்கப்பட்டன.

முதலாவது சாத்துவிகச் சட்ட மறுப்பு இயக்கம். கிலாபத்து இயக்கம்

1919ம் ஆண்டைய வெகுஜனப் போராட்டங்களின் அனுபவம் கட்டங்களாகப் பகுக்கப்பட்ட விரிவான சத்தியாக்கிரகப் போராட்ட வேலைத்திட்டம் தயாரிப்பது இன்றியமையாதது என்ற முடிவுக்குக்

* வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 44, பக்கம் 5.

காந்தியை இட்டு வந்தது. போராட்டத்தை அகிம்சையின் வரம்புகளுக்குள் வைத்திருப்பது இந்த நிலைமையிலேயே சாத்தியம் என அவர் கண்டார். காலனியாட்சி நிர்வாகத்துடன் வெகுஜன சாத்துவிக ஒத்துழையாமை இயக்கத்தை நாடு அனைத்திலும் பரவிய அளவில் நடத்துவது இரண்டு கட்டங்கள் வழியே செல்ல வேண்டும் என்று காந்தி எண்ணினார். முதல் கட்டத்தில் காலனியாட்சி அரசாங்கத்தைப் பகிஷ்கரிப்பதற்கான பின்வரும் வழிவகைகளைச் செயல்படுத்துவது அவசியமாகக் கருதப்பட்டது: கௌரவப் பதவிகளையும் பட்டங்களையும் துறப்பது; அரசாங்க வரவேற்புகள் முதலியவற்றைப் பகிஷ்கரிப்பது; பிரிட்டிஷ் பள்ளிகளையும் கல்லூரிகளையும் நீதிமன்றங்களையும் பகிஷ்கரிப்பது; சட்ட மன்றத் தேர்தல்களைப் பகிஷ்கரிப்பது; அயல்நாட்டுச் சரக்குகளைப் பகிஷ்கரிப்பது. இரண்டாவது கட்டத்தில் அரசுக்குரிய வரிகளைச் செலுத்த மறுக்க வேண்டும்.

1920, ஆகஸ்டு 1ந் தேதி இயக்கம் தொடங்குவதற்கான நாளாகக் குறிக்கப்பட்டது. காந்தியும் அவரைப் பின்பற்றியவர்களும் கிலாபத்து இயக்கத்தினருடன் நெருக்கமாக ஒத்துழைத்து இதை ஏற்பாடு செய்து நடத்தினர்கள். கிலாபத்து இயக்கம் இந்திய முஸ்லிம் அறிவுஜீவிகளாலும் மதகுருமாராலும் தொடங்கப்பட்டது. இந்திய முஸ்லிம்கள் உள்ளிட்ட உலக ஸீன்னி முகமதியர் அனைவருடையவும் கலீபாவாக—அதாவது மதத் தலைவனுக—மதிக்கப்பட்ட துருக்கி சுல்தானின் உரிமைகளைக் காப்பது என்ற முழக்கத்துடன் இந்த இயக்கம் நடந்தது. ஆட்டமான் பேரரசு சிதறியதற்கும் கலீபா-சுல்தான் ஆட்சி இழந்ததற்கும் நேரடியான பொறுப்பாளி மேற்கு வல்லரசுகள், சிறப்பாக பிரிட்டன், கீழை நாடுகள் விஷயத்தில் கடைப்பிடித்த கொள்கையே என்று கிலாபத் இயக்கத்தினர் எண்ணினார்கள். எனவே இயக்கம் எடுத்த எடுப்பிலேயே ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையை மேற்கொண்டது. இந்திய முஸ்லிம் வெகுஜனங்களோ, இயக்கத்தின் மத அம்சத்தை அல்ல, காலனியாட்சி எதிர்ப்பு அம்சத்தையே முதன்மையாகக் கருதினர்கள். ''கிலாபத்'' என்ற சொல்லுக்கு ''எதிர்ப்பு'' என்ற பொருளும் உண்டு. இயக்கத்தில் கலந்து கொண்ட சாதாரண மக்கள் இந்த அர்த்தத்தில் இதைப் பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கம் என்றே புரிந்து கொண்டார்கள். இந்தியாவின் வட மேற்கு எல்லையில் (அண்டை முஸ்லிம் நாடான) ஆப்கனிஸ்தானம் சுதந்திரத்திற்காகப் போர் தொடங்கியது. வட மேற்கு எல்லைப்புற மாகாணத்தைச் சேர்ந்த பட்டாணிய இனக் குழுவினர் கலகக் கிளர்ச்சி செய்து இதற்குத் தீவிர ஆதரவு அளித்தார்கள். இந்த ஆப்கனிஸ்தானப் போர் கிலாபத்து இயக்கத்தைப் பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கமாகப் புரிந்து கொள்ள வாய்ப்பு அளித்தது.

இயக்கத்தின் தலைமை கிலாபத்துக் கமிட்டியின் கைகளில் இருந்தது. 1918ல் முஸ்லிம் லீகிலிருந்து பிரிந்த, குட்டி பூர்ஷ்வா இடதுசாரியை இந்தக் கமிட்டி பிரதிநிதித்துவப்படுத்தியது. கிலாபத்து இயக்கமும் சாத்துவிகச் சட்டமறுப்பு இயக்கமும் அருகருகாக நடந்தது இரண்டு பிரதான மத சமுதாயங்களைச் சேர்ந்த இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே விடுதலைப் போராட்டத்தில் ஒத்துழைப்பும் ஒற்றுமையும் ஏற்படுத்தச் சாதகமான வாய்ப்புக்களை உருவாக்கியது. தேசியக் காங்கிரஸ் உறுப்பினர்களான முகமது அலி, ஷௌகத் அலி சகோதரர்களின் தலைமையில் இயங்கிய கிலாபத்துக் கமிட்டியுடன் காந்தி நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டார். காந்தி கிலாபத்துக் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்பட்டதற்கு உருவகச் சின்னம் ஆயிற்று.

ஆகஸ்டு 1ம் தேதி தொடங்கிப் பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், பல்வேறு வகை ஹர்த்தால்கள் ஆகியவற்றின் வடிவில் நடந்த சாத்துவிகச் சட்ட மறுப்பு இயக்கம் நாட்டின் புதிய புதிய பிரதேசங்களுக்குப் பரவியது. காந்தி காங்கிரஸ் தலைவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் தாமே இந்த இயக்கத்தை அறிவித்து நடத்தினார். ஆயினும் காந்தியினது அரசியல் செயல்தந்திரத்தின் வெற்றி நாட்டின் ஆகப் பெரிய தேசிய நிறுவனமான காங்கிரஸ் மீது மேலும் மேலும் அதிகச் செல்வாக்கு செலுத்தியது. 1920ம் ஆண்டு நடந்த காங்கிரஸ் மகாநாடுகள் இதை உறுதிப்படுத்துகின்றன. செப்டெம்பர் மாதத் தொடக்கத்தில் கல்கத்தாவில் நடந்த அசாதாரண மகாநாட்டில் லாலா லஜபதி ராய், சித்தரஞ்சன் தாஸ் ஆகியோர் உட்பட மதிப்புள்ள காங்கிரஸ் தலைவர்கள் எதிர்த்தும் கூட ஒத்துழையாமை வேலைத் திட்டம் பற்றிய காந்தியின் யோசனை ஏற்கப்பட்டது. மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் அடிப்படையில் நடக்கும் தேர்தல்களில் கலந்து கொள்ளத் தான் மறுப்பதாகக் காங்கிரஸ் உறுதிப்படுத்தியது.

காந்தியும் அவருடைய தரப்பாளர்களும் பெற்ற வெற்றி அதே ஆண்டு டிசம்பர் மாதம் நாகபுரியில் கூடிய அடுத்த காங்கிரஸ் மகாநாட்டில் இறுதியாக உறுதிப்பட்டது. காந்தியால் தயாரிக்கப்பட்ட அரசியல் செயல்திட்டத்தையும் செயல்தந்திரத்தையும் மகாநாடு ஏற்றுக் கொண்டது. காந்தீயம் காங்கிரசின் அதிகார பூர்வமான கொள்கைவாதம் ஆகி விட்டது. காங்கிரசை வெகுஜன நிறுவனமாக மாற்றும் விதித் தொகுப்பு முதன்முதலாக ஏற்கப்பட்டது. காங்கிரசின் ஆண்டு மகாநாடுகளுக்கு இடையே செயலாற்றும் உயர் நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. அதிக விரிவான அனைத்து இந்தியக் காங்கிரஸ் கமிட்டியும் குறுகிய செயற் குழுவும் மாகாணங்களில் வட்

டாரக் கிளைகளும் இவை. காங்கிரசைத் திரளான பொது மக்களுக்கு நெருக்கமானது ஆக்கும் பொருட்டும், காலனி ஆட்சியாளர்களால் சுமத்தப்பட்டிருந்த நாட்டின் நிர்வாக-பிரதேசப் பங்கீட்டை எதிர்த்தும் தேசிய சுய நிர்ணய உரிமைக்காகவும் வெவ்வேறு மக்கள் இனங்களால் தொடங்கப்பட்டிருந்த இயக்கத்தை மேற்பார்க்கும் பொருட்டும் காங்கிரசின் வட்டாரக் கிளைகள் தேசிய அடிப்படையில்—காங்கிரஸ் மொழிவாரி மாகாணங்கள் எனப்பட்டவற்றின் அடிப்படையில்—அமைக்கப்பட்டன.

காங்கிரஸ் நிறுவன நோக்கில் மாற்றி அமைக்கப்பட்டதன் விளைவுகள் மிக விரைவில் ஏற்பட்டன. அடுத்த ஆண்டின் முடிவுக்குள் காங்கிரசில் ஏறக்குறைய ஒரு கோடி உறுப்பினர் சேர்ந்தார்கள். இளைஞர்களான காங்கிரஸ் உறுப்பினர்களைக் கொண்டு தொண்டர் படை அமைக்கப்பட்டது. 1920ம் ஆண்டு இலையுதிர் கால வாக்கில் இவர்களுடைய எண்ணிக்கை 150 ஆயிரம் ஆயிற்று. ஒத்துழையாமை இயக்கத்தின் வரம்புகளுக்குள் நடந்த ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள், மறியல்கள் ஆகியவற்றைத் தொண்டர்கள் ஒழுங்கமைத்தார்கள்.

பிரிட்டிஷ் காலனியாட்சிக்கு எதிரான ஒத்துழையாமை, கிலாபத்து இயக்கங்களோடு கூடவே தொழிலாளர்கள், விவசாயிகளின் வர்க்கப் போராட்டங்களும் நாட்டில் விரிவாக நடக்கத் தொடங்கின.

இருபதுக்களின் தொடக்கத்தில்
தொழிலாளர், விவசாயிகள் இயக்கம்

1920ம்—1921ம் ஆண்டுகளில் வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொண்டு வளர்ச்சி அடைந்தது (இந்த ஆண்டுகளில் சராசரி 4—6 லட்சம் பெயர் வேலைநிறுத்தம் செய்தார்கள்). முந்திய காலப் பகுதியுடன் (1918—1919) ஒப்பு நோக்குகையில் ஒழுங்கமைந்த தொழிலாளர் இயக்கத்தில் புதிய தன்மைகள் தோன்றின. தொழிலாளர்களின் வர்க்க ஒற்றுமை வலுவடைந்தது. அவர்கள் மேலும் மேலும் அடிக்கடி ஒருமைப்பாட்டு வேலைநிறுத்தங்கள் நடத்தலானார்கள். பம்பாயிலும் ஜம்ஷேட்பூரிலும் பிற இயந்திரத் தொழில் மையங்களிலும் நடந்த பொது வேலைநிறுத்தங்கள் இதற்குச் சான்று பகர்ந்தன.

தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டம் பொது அரசியல் போராட்டத்துடன்—சாத்துவிகச் சட்ட மறுப்பு இயக்கத்துடன்—நாளுக்கு நாள் அதிக நெருக்கமாக இணைந்தது.

இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் ஆகப் பின்தங்கிய பகுதியினரான தோட்டக்கால் கூலிகள் போராட்டத்தில் கலந்து கொள்ளத் தொடங்கினர்கள். 1921, மே மாதம் அஸ்ஸாம் தேயிலைத் தோட்டங்களில் பன்னிரண்டாயிரம் தொழிலாளர்கள் தோட்டக்கால்களை விட்டு வெளியேறி மாட்சி மிக்க வேலைநிறுத்தம் செய்தார்கள்.

வேலைநிறுத்தப் போராட்டத்தின் போது சம்பள உயர்வையும் வேலை நிலைமைகளின் சீர்திருத்தத்தையும் பற்றிய தங்கள் முக்கியமான கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதில் தொழிலாளர்கள் வழக்கமாக வெற்றி பெற்றார்கள். அதே சமயம் புதிய தொழிற்சங்கங்கள் உருவாயின. அனைத்து இந்தியத் தொழிற்சங்க மையம் அமைப்பதற்கு ஏற்ற எதார்த்த நிலைமைகள் ஏற்பட்டன. ஜெனீவா சர்வதேசத் தொழிலாளர் மகாநாட்டுக்கு இந்தியத் தொழிலாளர்களின் பிரதிநிதியைக் காலனியாட்சி அதிகாரிகள் நியமித்ததற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக நடந்த பொதுக் கூட்டம் இதற்கு வாய்ப்பு அளித்தது. 1920, மே மாதம் பம்பாயில் நடந்த இந்தக் கூட்டத்தில் அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் அமைக்கும் தீர்மானம் ஏற்கப்பட்டது.

காங்கிரசின் தலைமை முதலாளித்துவச் சீர்திருத்தவாதிகளின் கைகளில் இருந்தது. தேசியக் காங்கிரசின் தலைவர்களில் ஒருவரான லாலா லஜபதி ராய் இதன் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தொழிற்சங்கக் காங்கிரஸ் அமைக்கப்பட்டதால் வேலைநிறுத்தப் போராட்ட முனை விரிவடைந்தது. 1919ல் 19 வேலைநிறுத்தங்கள் நடந்தன என்றால் 1920ல் 200ம் 1921ல் 400ம் நடந்தன. ஆனால் முந்திய ஆண்டுகளில் போலவே வேலைநிறுத்தங்கள் அடிக்கடி தாமே தொடங்கின, மோசமாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

தொழிற்சங்கக் காங்கிரசின் செயல்களில் சில குறைகள் இருந்தாலும் அது அமைக்கப்பட்டது இந்தியாவில் நிறுவனப் பாங்கில் ஒழுங்கமைந்த தொழிலாளர், தொழிற்சங்க இயக்கத்தின் வளர்ச்சியில் புதிய திருப்பத்தைக் குறித்தது.

தொழிற்சங்க இயக்கம் வலுவடைந்ததால் தொழிலாளி வர்க்கத்தில் தன் செல்வாக்கை நிலைப்படுத்தவும் விரிவாக்கவும் வேண்டித் தொழிற்சங்கங்களில் தன் வேலையைத் தீவிரப்படுத்தும் பணி தேசியக் காங்கிரசுக்கு எதிர்ப்பட்டது. இதன் பொருட்டு 1921 ஜனவரி மாதம் காங்கிரசின் விசேஷக் கமிட்டி அமைக்கப்பட்டது.

1920ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் இயக்கம் நாட்டுப்புறத்துக்கும் பரவியது. யாவற்றிலும் தீவிரமான விவசாயிகள் போராட்டங்கள் ஐக்கிய மாகாணத்தில் 1921—1922ல் நடந்தன. 1857—1859

மக்கள் கிளர்ச்சியின் நினைவுகள் இன்னும் பசுமையாக இருந்த கிழக்கு மாவட்டங்களிலோ இவை சிறப்பாக மும்முரமாக இருந்தன. விவசாயிகளது அதிருப்தியின் முதல் நெருப்புப் பொறிகள் பைஜாபாது, ராய் பரேலி மாவட்டங்களில் வெடித்துச் சிதறின. பெரும்பாலும் தாழ்ந்த சாதிகளைச் சேர்ந்தவர்களான குத்தகைக்கார விவசாயிகள் இம்மாவட்டங்களில் வட்டார ஜமீன்தார்களின் பயிரை வயல்களில் அழித்தார்கள், அவர்களுடைய பண்ணை வீடுகளைத் தாக்கினார்கள். வர்த்தக நகரங்களிலும் குடியிருப்புக்களிலும் வட்டித் தொழில் நிலையங்களையும் வர்த்தக நிலையங்களையும் அவர்கள் தாக்கினார்கள். விவசாயிகள் இடையிலிருந்து தலைவர்கள் தோன்றினார்கள். கிராமச் சந்தைகளில் ஆடப்படும் புராண நாடகங்களையும் நாடோடிக் கவிஞர்களதும் இசைஞர்களதும் பாட்டுக்களையும் வெகுஜனக் கிளர்ச்சிப் பிரசார சாதனங்களாக இவர்களில் சிலர் பயன்படுத்தினர்கள்.

தாமாக வெடித்துக் கிளம்பிய இந்தத் திடீர்ப் போராட்டங்கள் 1921ம் ஆண்டின் முற்பாதி நெடுகிலும் தொடர்ந்தன. ஆனால் இராணுவ-போலீஸ் படைகளால் இவை கொடுமையாக நசுக்கப்பட்டு விட்டன. அடக்குமுறை நடவடிக்கைகளின் போது பல ஆயிரம் பெயர் கைது செய்யப்பட்டார்கள்.

1921ம் ஆண்டின் பிற்பாதியில் ஐக்கிய மாகாண மாவட்டமான சுல்தான்பூரில் நடந்த விவசாயிகள் இயக்கம் இதே தன்மை கொண்டிருந்தது.

ஐக்கிய மாகாண விவசாயிகளின் போராட்டம் அயோத்தி மாவட்டத்தில் இன்னும் உயர்ந்த மட்டத்தை எட்டியது. குத்தகைக்கார விவசாயிகளின் ஏகா (ஒற்றுமை) என்ற பெயர் தாங்கிய ஆயுதப் படைப் பிரிவுகள் 1921—1922ல் இங்கே செயல் ஆற்றின. நிலப் பிரபுக்களான தாலுகாதார்களின் நிலத்தையும் உடைமைகளையும் கிளர்ச்சிக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். அவர்களுக்கு எதிராகத் தண்டனைப் படைகள் அனுப்பப்பட்டன. கிளர்ச்சிக்காரர்கள் இந்தப் படைகளை நீண்ட காலம் விடாப்பிடியாக எதிர்த்துப் போரிட்டார்கள். கிளர்ச்சிப் படைப் பிரிவுகளின் தலைவர்களில் மிகப் பிரபலமாக இருந்தவர்கள் தாழ் சாதிகளைச் சேர்ந்தவர்களான பாஸி மதாரி, சாகரேப் என்பவர்கள்.

ஐக்கிய மாகாணத்தில் நடந்த விவசாயிப் போராட்டங்கள் திட்டமிடப்படாமல் தாமே மூண்டன, வட்டாரத் தன்மை கொண்டிருந்தன. கிளர்ச்சிக்காரர்களின் படைப் பிரிவுகளுக்கு இடையே செயல் ஒழுங்கிசைவு பலவீனமாக இருந்தது. எவ்வகையான வேலைத் திட்டமும் அவற்றுக்கு இருக்கவில்லை. இவையும் இவை போன்ற பிற குறைகளும் இருந்தாலும் இந்தப் போராட்டங்கள் குறித்த அளவு

நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு நோக்கம் (வட்டித் தொழிலருக்கு எதிரான நோக்கமும் கூடக்) கொண்டிருந்தன.

விவசாயிகள் போராட்டத்தின் போது முதல் விவசாயிகள் கழகங்களின் (கிஸான் சபா) வடிவில் விவசாயி நிறுவனத்தின் முளைக் கருக்கள் சில இடங்களில் தோன்றின. இவற்றை அமைப்பதில் கிராமங்களுக்கு வந்த காங்கிரஸ்காரர்கள் பங்கு கொண்டார்கள். இவர்களில் ஒருவர் இளம் ஜவாகர்லால் நேரு. விவசாயிகள் இயக்கத்தில் கலந்து கொண்டதற்காகவே அவர் முதன் முறை கைது செய்யப்பட்டார்.

காங்கிரசின் செல்வாக்கும் கிலாபத்துக்காரர்களின் செல்வாக்கும் அந்த ஆண்டுகளில் கிராமங்களில் அனேகமாகப் பரவவில்லை. ஆயினும் ஒழுங்கமைந்த தேசிய இயக்கத்துக்கும் தானே மூண்ட விவசாயிகள் இயக்கத்துக்கும் இடையே தொடர்புகள் ஏற்படத் தொடங்கின. ஐக்கிய மாகாணத்தில் கிளர்ச்சி செய்த விவசாயிகள் பல சந்தர்ப்பங்களில் காந்திக்கு விண்ணப்பங்கள் அனுப்பினர்கள். சில இடங்களில் அவர்கள் காங்கிரஸ் தொண்டர்களோடு சேர்ந்து செயல் புரிந்தார்கள்.

ஐக்கிய மாகாணத்தில் நடந்த விவசாயிகள் இயக்கம் போதிய தெளிவுடன் வெளிப்பட்ட வர்க்கத் தன்மை கொண்டிருந்தது. புதிய வரலாற்றுக் கால கட்டத்தின் வருகையை அது முன்னறிவித்தது. ஆனால் விவசாயிகளின் பிற பெரிய போராட்டங்களில் (பஞ்சாபிலும் மலையாள மாவட்டத்திலும்) சென்று போன காலத்தின் சுவடு இன்னும் பதிந்திருந்தது. இங்கே விவசாயிகளின் போராட்டம் முன்போலவே மத வடிவத்தை மேற்கொண்டிருந்தது.

கோயில் சொத்துக்களின் நிர்வாகத்தையும் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து கிடைத்த வருமானத்தையும் கைப்பற்றிக் கொண்ட சீக்கிய மத சமுதாயத்தின் நிலப்பிரபுத்துவத் தலைமைக் குழுவினருக்கு எதிராக 1921—1922ல் சீக்கிய விவசாயிகள் பஞ்சாபில் பல போராட்டங்கள் நடத்தினர்கள். உள்ளடக்கத்தில் இது பெரு நிலச் சொந்தக்காரர்களான நிலப்பிரபுக்களுடன் சிறு நில உடைமையாளர்களும் குத்தகைக்காரர்களும் நடத்திய விவசாயிகள் போராட்டம் தான். ஆனால் வடிவத்திலோ, சீக்கிய சமுதாயத்தின் வாழ்வில் ஜனநாயக மரபுகள் மீண்டும் துளிர்க்க வேண்டும் என்பதற்காக நடந்த இயக்கமாக இருந்தது இது. சமுதாயத்துக்குள் அகாலிகள் (இறப்பு அற்றவர்கள்) என்னும் பிரிவு தோன்றியது. சீக்கியக் கோயில் கட்டிடங்களையும் பிற புனிதத் தலங்களையும் அகாலிகள் அமைதியான முறையில் கைப்பற்றிக் கொண்டார்கள்.

அகாலிகள் இயக்கம் அமைதியாக நடந்த போதிலும் பஞ்சாபில் சீக்கிய வழிபாட்டு மையங்களான நான்காஞவில் 1921லும் குருகா

பாகில் 1922லும் கோயில் நிர்வாகிகளான மகந்துகளின் அழைப்புக்கு இணங்க வந்த போலீஸ்காரர்கள் ஆயுதங்கள் அற்ற அகாலிகளைக் கூட்டங் கூட்டமாகத் தாக்கிப் புடைத்தார்கள்.

இயக்கம் ஒடுக்கப்பட்ட பின் 1923ல் அகாலிகளிடையே பிளவு ஏற்பட்டது. இடதுசாரியினரான பபர்-அகாலிகள் (சிங்க-அகாலிகள்) தனியாகப் பிரிந்தார்கள். பின்னர் இவர்கள் பஞ்சாப் மறைமுகப் பயங்கரவாதிகளின் நிறுவனத்தில் சேர்ந்தார்கள். அகாலிகளது போராட்டத்தின் அகிம்சைத் தன்மை காந்தியின் ஆழ்ந்த அனுதாபத்தையும் தேசியக் காங்கிரசின் ஆதரவையும் பெற்றது.

ஆனால் ஐக்கிய மாகாணத்தில் நடந்த ஏகா இயக்கத்தின் பாலும் சென்னை மாகாணத்தின் மலையாள மாவட்டத்தில் இருபதுக்களின் தொடக்கத்தில் நிகழ்ந்த மற்றொரு மிகப் பெரிய விவசாயிகள் போராட்டத்தின்பாலும் காங்கிரசும் காந்தியும் மேற்கொண்ட போக்கு முற்றிலும் வேறாய் இருந்தது.

1921ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மலையாள மாவட்டத்தில் மாப்பிள்ளைகள் (கேரள முகமதியர்கள்) கிளர்ச்சி தொடங்கினார்கள். மாப்பிள்ளை விவசாயிகளும் நாட்டுப்புற முஸ்லிம் மதகுருக்களில் சிலரும் இந்தக் கிளர்ச்சியில் பங்கு கொண்டார்கள். மாப்பிள்ளை வர்த்தகர்கள் கிளர்ச்சியிலிருந்து ஒதுங்கி இருந்தார்கள்.

திரூர் அங்காடி என்னும் இடத்தில் உயர்ந்த பிராமண சாதியைச் சேர்ந்த நம்பூதிரி நிலப்பிரபுக்களால் ஒழுங்கமைக்கப்பட்டு மசூதி மீது நடந்த தாக்குதல் மாப்பிள்ளைகளின் போராட்டத்தைத் தூண்டி விட்டது. கொஞ்சம் கொஞ்சமாகக் கிளர்ச்சி மலையாள மாவட்டத்தின் கணிசமான பகுதியில் பரவியது. இந்து நிலப்பிரபுக்களுக்கு எதிராக மாப்பிள்ளைக் குத்தகைக்காரர்களின் போராட்டம் என்ற தன்மையை அது மேற்கொண்டது. பல இடங்களில் இந்துக் குத்தகைக்காரர்கள் மாப்பிள்ளைகளின் தோளோடு தோள் சேர்ந்துப் போராடினார்கள். வடிவத்தில் மதத் தன்மை கொண்டிருந்தாலும் மாப்பிள்ளைக் கிளர்ச்சி நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, காலனியாட்சி எதிர்ப்புப் போக்கு உள்ளதாய் இருந்தது.

வயநாடு, வல்லவநாடு தாலுகாக்களில் காலனியாட்சி நிர்வாகத்தின் அதிகாரம் அகற்றப்பட்டு விட்டது. கிளர்ச்சிக்காரர்கள் ''கிலாபத்து ஆட்சியை'' அமைத்தார்கள். இந்த நிறுவனம் கிளர்ச்சிப் படைப் பிரிவுகளின் செயல்களை வழி காட்டி நடத்தியது, வட்டார நிர்வாகத்தின் பொறுப்புக்களை நிறைவேற்றியது. வட்டார முஸ்லிம் மதகுருக்களின் பிரதிநிதிகள் இந்த ''ஆட்சியின்'' தலைவர்கள் ஆனார்கள். முதலில் அலி முஜப்பர் என்பவனும் பின்பு குன்ஹாமேது ஹாஜியும் இவ்வாறு தலைமை தாங்கினார்கள்.

மாப்பிள்ளைகளை அடக்குவதற்காக இராணுவப் படைகளும் போலீஸ் படைகளும் ஏவப்பட்டன. மாப்பிள்ளைகளின் மையங்கள் மலைப்பாங்கான காட்டுப் பிரதேசங்களில் இருந்தன. அவற்றை அடைவது கடினமாய் இருந்தது. இந்த இயற்கை நிலைமையைத் திறமையாகப் பயன்படுத்திக் கொண்டு மாப்பிள்ளைகள் வீரத்துடன் எதிர்த்தார்கள். எனினும், அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் கிளர்ச்சி அடக்கப்பட்டு விட்டது. முப்பதாயிரத்துக்கும் அதிகமான மாப் பிள்ளைகள் சிறை பிடிக்கப்பட்டார்கள்.

பிரிட்டிஷ்காரர்கள் கிளர்ச்சிக்காரர்களைக் கொடுமையாகத் தண்டித்தார்கள். போர்க் கைதிகள் ரெயில் மார்க்கமாகச் சரக்கு வண்டியில் இட்டுவரப்படுகையில் ஒரு பெட்டியில் இட நெருக்கத் தால் மூச்சு திணறி எழுபது பெயர் மாண்டார்கள்.

போதனூர் ரெயில் நிலையத்தில் நிகழ்ந்த இந்த விபத்தை விசாரணை செய்வதற்காக மக்கள் பிரதிநிதிகளின் குழு ஒன்றைத் தேசியக் காங்கிரஸ் அமைத்தது. அதே சமயம், ஆயுதப் போராட்டத் தன்மை கொண்டிருந்த மாப்பிள்ளை நடவடிக்கைகளை அது கடுமை யாக நிந்தித்தது. காந்தி மேற்கொண்டது போன்ற நிலைமையே கிலாபத்துக் கமிட்டியின் தலைவர்களும் மேற்கொண்டார்கள்.

மலையாள மாவட்டம், பஞ்சாப், ஐக்கிய மாகாணம் ஆகிய வற்றோடு வங்காளம், பம்பாய் மாகாணம், நாட்டின் மற்றப் பகுதிகள் ஆகியவற்றிலும் விவசாயிகளின் தனித் தனி நடவடிக்கைகள் தாமே வெடித்துக் கிளம்பின. ஆயினும் விவசாயிகளின் போராட்டம் இன்னும் சார்பற்றது ஆகவில்லை. தேசிய விடுதலை இயக்கத்தின் ஓரளவாவது நிர்ணயகரமான காரணியும் ஆகி விடவில்லை.

இயக்கம் பின்வாங்குகிறது

1921ம் ஆண்டின் இறுதித் தறுவாயில் இந்தியாவில் அரசியல் நிலைமை கூர்மை அடைந்தது. ஆண்டின் பிற்பாதியில் தொழிலாளர், விவசாயிகள் இயக்கம் ஆக உயர்ந்த மட்டத்தை எட்டியது. சாத்து விக ஒத்துழையாமை இயக்கம் வெற்றிகரமாக நடந்து வந்தது. காங் கிரசின் செல்வாக்கு வளர்ந்து கொண்டு போயிற்று, அதன் வெகுஜன அடித்தளம் உறுதிப்பட்டது. அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசின் இரண்டாவது மகாநாட்டில் நிறுவன அமைப்புள்ள தொழிலாளர் இயக்கத்துக்குத் தமது தலைமையைக் காங்கிரஸ்காரர் கள் நிலைப்படுத்திக் கொண்டார்கள்.

பிரிட்டனின் பட்டத்துக்கு உரிய வேல்ஸ் இளவரசன் 1921,

நவம்பர் 17ந் தேதி இந்தியா வந்தபோது பம்பாய்த் தொழிலாளர் கள் நடத்திய நான்கு நாள் அரசியல் வேலைநிறுத்தம் நிகழ்ச்சிகளின் போக்கில் உச்ச கட்டமாக விளங்கியது. சென்னையிலும் நாட்டின் மற்ற நகரங்களிலும் வேலைநிறுத்தங்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங் களும் நடந்தன.

காந்தி பம்பாய் நிகழ்ச்சிகளைக் கண்டனம் செய்தார், ஆயினும் பின்வாங்க இன்னும் சைகை செய்யவில்லை. சுயராஜ்யம் பெறும்வரை யிலும் கலீபாவின் (துருக்கி சுல்தானின்) தனியுரிமை மீட்டளிக்கப் படும் வரையிலும் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவது என்று அகமதாபாது காங்கிரஸ் மகாநாட்டில் (1921 டிசம்பர்) முடிவு செய்யப்பட்டது. காந்தி இயக்கம் நடத்தும் விஷயத் தில் முழு அதிகாரம் பெற்ற தலைவராக (''சர்வாதிகாரியாக'') நிய மிக்கப்பட்டார்.

அதே சமயம் காலனியாட்சி நிர்வாகம் இயக்கத்தினருக்கு எதிராக வெகுஜன அடக்குமுறை நடவடிக்கைகளைத் தொடங்கியது. அதன் முதன்மையான தாக்கு காங்கிரஸ் தொண்டர்களுக்கு எதிராக நடந்தது. 1922ம் ஆண்டின் தொடக்கத்திற்குள் சுமார் பதினாயிரம் பெயர் கைது செய்யப்பட்டார்கள். மோதிலால் நேரு, ஜவாகர்லால் நேரு, அலி சகோதரர்கள், சித்தரஞ்சன் தாஸ், லாலா லஜபதி ராய் முதலியோர் போன்ற பிரபல காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப் பட்டவர்களில் இருந்தார்கள்.

அடக்குமுறை நடவடிக்கைகளை உடனே நிறுத்தும்படி வைசிராய் ரீடிங்குக்கு காந்தி பிப்ரவரி 1ந் தேதி இறுதிக் கோரிக்கை விடுத்தார். இல்லாவிடில் ஒத்துழையாமை இயக்கத்தின் இரண்டாவது கட்ட மான வரிகொடா இயக்கத்தைத் தொடங்கிவிடுவதாக அவர் எச்சரித் தார்.

ஆனால் சில நாட்கள் கழியு முன்னரே காந்தி போர்த்தந்திரத்தை ஒரேயடியாக மாற்றி விட்டார். காங்கிரசின் கொள்கையில் இந்தத் திடீர்த் திருப்பத்துக்குக் காரணமாகப் பயன்பட்டவை சௌரி சௌராவில் (ஐக்கிய மாகாணத்தில் கோரக்பூர் மாவட்டத்தைச் சேர்ந்தது) பிப்ரவரி 4ந் தேதி நடந்த நிகழ்ச்சிகள். அங்கே திரளான விவசாயிகள் தங்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய போலீஸ்காரர் களை நிலையக் கட்டிடத்துக்குள் விரட்டிக் கட்டிடத்தை நெருப்பிட்டுப் பொசுக்கி விட்டார்கள்.

தீக்கிரையான போலீஸ்காரர்களின் குடும்பங்களுக்கு காந்தி வெளிப்படையாக அனுதாபம் தெரிவித்தார். விவசாயிகள் போராட்ட நடவடிக்கைகளில் பங்கு கொண்டவர்களை அதே சமயம் அவர் கடுமையாகக் கண்டனம் செய்தார். தம் கருத்துப்படி நாடு

அகிம்சைக்கு இன்னும் ஆயத்தம் ஆகவில்லை என்று கூறி, சாத்துவிக ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்திவிட்டதாக அறிவித்தார்.

காந்தியின் இந்த முடிவுக்குக் காரணங்கள் இரு வகையானவை: அவருடைய கணிப்பில் ஒரு புறம், தேசிய எதிர்ப்புச் சக்திகள் ஏகாதிபத்தியத்தின் வலிமைக்கு எதிர்நிற்க இன்னும் திறன் பெறவில்லை. மறு புறம், வெகுஜன இயக்கம் காங்கிரஸ் தலைமைக் குழுவின் கட்டுப் பாட்டிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தது.

குஜராத்து மாநிலத்தைச் சேர்ந்த பார்டோலி என்னும் இடத் தில் கூடிய காங்கிரஸ் செயற் குழுவின் அசாதாரணக் கூட்டம் காந்தி யின் நிலையை ஒரு தீர்மானத்தால் உறுதிப்படுத்தியது. தீர்மானம் போராட்டத்தை நிறுத்தும்படி விவசாயிகளைக் கேட்டுக் கொண்ட துடன் நிலச் சொந்தக்காரர்களுக்கு அனுதாபம் தெரிவித்தது. தொண் டர் படையின் நடவடிக்கைகளை நிறுத்தி விடும்படி யோசனை தெரி விக்கப்பட்டது. காந்தி முன்வைத்த ஆக்க வேலைத்திட்டத்தை நிறை வேற்றுவது காங்கிரஸ்காரர்களின் குறிக்கோள் ஆயிற்று. கைத்தறி நெசவும் நூற்பும் வளர்ச்சி அடைய எல்லா வகையாலும் உதவுவது இந்தத் திட்டத்தின் பிரதான அம்சமாக இருந்தது.

விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டிருந்த சாதாரணத் தொண் டர்களுக்கு காந்தியும் காங்கிரஸ் தலைமைக் குழுவும் செய்த முடிவு முற்றிலும் எதிர்பாராததாக இருந்தது. காங்கிரசின் தாழ்நிலை நிறு வனங்களில் அதற்குப் பெருந் தொகையான எதிர்ப்புக்கள் கிளம்பின. தேசியவாதிகளின் இடதுசாரிக் குழுக்கள் தெளிவாக உருவாகவும் மறைமுகப் பயங்கரவாத நிறுவனங்களின் நடவடிக்கைகள் மீண்டும் உயிர்ப்படையவும் இந்த நிலைமை வாய்ப்பு அளித்தது.

ஒத்துழையாமை இயக்கம் சிறிது காலம் தொடர்ந்து நடந்தது. ஆனால் தலைமை இல்லாமையாலும் அடக்கு முறைகள் அதிகரித்த படியாலும் அது விரைவில் அடங்கிப் போயிற்று.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எதிர்த் தாக்கு

1923—1927ல் இந்தியாவில் பிரிட்டிஷ் கொள்கை

1918முதல் 1922 வரை நடந்த முதலாவது புரட்சித் தாக்குக்குப் பிறகு தேசிய விடுதலைச் சக்திகளின் தாற்காலிகப் பின்வாங்கலும் ஏகாதிபத்தியத்தின் எதிர்த் தாக்கும் கொண்ட காலப் பகுதி வந்தது.

இது 1927ம் ஆண்டு வரை நீடித்தது. இந்தியாவின் உள்நாட்டு அரசியல் நிலைமையில் ஏற்பட்ட மாறுதல்கள், முதலாளித்துவ, காலனியாட்சி உலகில் நடந்து வந்த பொது நிகழ்முறைகளின் பகுதியாக விளங்கின. முதலாளித்துவத்தின் அம்சரீதியான நிலைப்பாட்டை இந்த நிகழ்முறைகள் காட்டின.

பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் தனக்கு இந்தியாவில் பொருளாதார, அரசியல் துறைகளில் நேர்ந்த இழப்புக்களுக்கு ஈடு செய்ய முயன்றது. காலனியாட்சி அரசு இயந்திரத்தின் நேரான ஆதரவைச் சார்ந்தும் பொருளாதார ஆதிக்க விசைகளைப் பயன்படுத்தியும் பிரிட்டிஷ் தொழில் அதிபர்கள் இந்தியாவுக்குப் பருத்தி நூல் துணிகள் உட்படத் தங்கள் செய்பொருள்களின் ஏற்றுமதியை அதிகப்படுத்தினர்கள். இந்தியச் சந்தையில் வெளிநாட்டுப் போட்டி எளிதாக ஏற்ற சுங்கத் தீர்வைக் கொள்கையைக் காலனியாட்சி நிர்வாகம் கடைப்பிடித்தது: பஞ்சாலைத் தொழிலுக்குரிய காப்புத் தீர்வை 1925லும் இரும்புத் தொழிலுக்குரிய காப்புத் தீர்வை 1927லும் அகற்றப்பட்டன. ரெயில்வே சரக்குப் போக்கு வரத்துக்கான சுங்க வரிகளும் கட்டணங்களும் அதே சமயம் உயர்த்தப்பட்டன. இந்த எல்லா நடவடிக்கைகளும் இந்தியத் தொழிற் பொருள்களின் போட்டித் திறனைக் குலைத்தன.

ரூபாயின் புதிய மதிப்பை அமுலுக்குக் கொண்டுவந்த நாணய மாற்று-நிதித்துறைச் சீர்திருத்தம் இந்தியக் காலனிப் பொருளாதாரம் பிரிட்டனுக்கு அடிப்பட்டிருப்பதை நிலைப்படுத்தியது.

அரசியல் துறையில் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தால் இந்திய முதலாளி வர்க்கத்துக்குக் காட்டப்பட்டிருந்த அற்பச் சலுகைகளை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நாளடைவில் அறவே அகற்றி விட்டது. சாத்துவிக ஒத்துழையாமை இயக்கம் நசுக்கப்பட்ட பிறகு காலனியாட்சி நிர்வாகம், சிறப்பாக வங்காளத்தில், எதிர்ப்பின் எல்லா வித வெளிப்பாட்டையும் நேரடியாக ஒடுக்கும் முறையைக் கடைப்பிடித்து வந்தது.

இந்தியாவில் சுயாட்சியைச் செயல்படுத்த பிரிட்டிஷ் அரசாங்கம் அறவே தயாராய் இல்லை என்பதை 1922 ஆகஸ்டில் இந்தியாவில் தன் கொள்கை பற்றி பிரிட்டிஷ் முதலமைச்சன் லாயிட் ஜார்ஜ் ஆற்றிய வேலைத்திட்ட உரை காட்டியது. மாகாணங்களில் பிரிட்டிஷ் காலனியாட்சி அதிகாரிகளின் முழுமையான ஆட்சி மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. மைய, மாகாணச் சட்ட மன்றங்களின் தீர்மானங்களை இவர்கள் ஆடம்பரமாக அலட்சியம் செய்தார்கள். எடுத்துக் காட்டாக, மையச் சட்ட மன்றத்தின் பெரும்பான்மையினரது கருத்துக்கு மாறுக, சமஸ்தானங்களில் தேசிய இயக்கத்தை நசுக்குவதற்கான

நடவடிக்கைகளுக்கு வகை செய்த சட்டத்தை வைசிராய் 1922ம் ஆண்டில் பிறப்பித்தான். வங்காளத்திலும் மத்திய மாகாணங் களிலும் இரட்டையாட்சியின் செயல்பாடு 1924—1925ல் சட்ட பூர்வமாகக் கூட ரத்து செய்யப்பட்டது.

இதோடு கூடவே பிரிட்டிஷ் காலனியாட்சி தொகுதிவாரித் தேர் தல்களை விரிவாகப் பயன்படுத்தி இந்து-முஸ்லிம் வேற்றுமையை மீண் டும் கிளப்பி விட்டு அதனால் ஆதாயம் பெறத் திட்டம் இட்டது. ஆயிரத்துத் தொள்ளாயிரங்களின் தொடக்கத்திலேயே அமைக்கப் பட்ட மத-வகுப்புவாதக் கட்சிகளான முஸ்லிம் லீக், இந்து மகாசபை ஆகியவற்றின் நடவடிக்கைகள் மீண்டும் தீவிரம் ஆயின. இந்து மதவெறிக் கொள்கைவாதத்தைப் பரப்புவதில் முக்கியமான மைல் கல்லாக விளங்கியது 1925ல் நடந்த இந்து மகாசபையின் ஆண்டு மகாநாடு ஆகும். இந்திய முஸ்லிம்களை வலுக்கட்டாயமாக இந்துக் கள் ஆக்கும் அறைகூவல் இதிலேயே விடுக்கப்பட்டது. முஸ்லிம் மத-வகுப்புவாத நிறுவனங்களும் மதகுருக் குழுவும் இதற்கு எதிர்வினை யாக வெறி கொண்ட இந்து விரோதப் பிரசாரம் செய்தன. இந்தச் சூழ்நிலையில் மத-வகுப்புவாத நிறுவனங்களின் உதவியுடன் 1923—1927ல் வரிசையாக இந்து-முஸ்லிம் பூசல்களையும் படுகொலைகளையும் தூண்டிவிட ஆங்கிலேயர்களுக்கு இயன்றது. கிலாபத்து இயக்க ஆண்டுகளில் இரு மத வகுப்பாருக்கும் இடையே ஏற்படுத்தப் பட்டிருந்த ஒத்துழைப்பு அடியோடு குலைந்து விட்டது.

இந்த ஆண்டுகளில் நாட்டின் வெவ்வேறு மாகாணங்களில் அமைக் கப்பட்ட நிலப்பிரபுக்களின் வட்டாரப் பிற்போக்குக் கட்சிகளும் காலனியாட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு அளித்தன. பஞ்சாபில் யூனியனிஸ்டுக் கட்சியும் சென்னையில் ஜஸ்டிஸ் (நீதிக்) கட்சியும் இத்தகையவை.

தங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்த தேசியவாதிகளுக்கு விரோத மாகப் பிற்போக்குக் கட்சிகளையும் நிறுவனங்களையும் பயன்படுத்த ஆங்கிலேயர் முயன்றார்கள்.

தேசியக் காங்கிரசை ஆதரித்த முதலாளி-நிலப்பிரபு வட்டாரங் களின் சமரசப் போக்கு இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் உள்நாட்டு அரசியல் நிலைகள் வலுப்பட உதவியது. இந்தப் போக்கு வளர்ச்சி அடைய ஒத்தாசை செய்தது பேரளவான இந்தியத் தொழில் முயற்சி மேற்கொண்டு விரிவு பெற ஒப்புநோக்கில் சாதகமான நிலை மைகளின் சேர்க்கை இருபதுக்களின் நடுவில் உருவானதே ஆகும்.

காங்கிரசில் உள் போராட்டம்.
சுயராஜ்யக் கட்சியினர்

1922ல் தேசியச் சக்திகள் பின்வாங்கியதை அடுத்து வெகுஜன இயக்கத்தில் தணிவுக் காலப் பகுதி தொடங்கியது. புரட்சியின் ஏற்றக் காலத்தில் போராட்டத்தில் பங்கு கொண்டவர்கள் திரட்டிய அனுபவத்தை அவர்கள் பண்படுத்தித் தேர்வதற்கு இந்தக் காலப் பகுதி பயன்பட்டது. மாறியுள்ள உள்நாட்டு அரசியல் நிலைமைகளில் தக்க செயல்தந்திரத்தைத் தேர்ந்தெடுப்பது பற்றிக் காங்கிரசிற்குள் கடும் விவாதம் மூண்டது.

நிறுவனம் என்ற முறையில் தேசியக் காங்கிரஸ் ஆழ்ந்த நெருக்கடிக்கு உள்ளாகி இருந்தது. 1921ல் ஒரு கோடியாக இருந்த அதன் உறுப்பினர் தொகை குறைந்து கொண்டு போய் 1923ல் சில லட்சங்கள் ஆகி விட்டது. விடுதலை இயக்கத்தின் தாற்காலிகத் தோல்வி காரணமாகத் திரளான பொது மக்கள் அதிலிருந்து விலகிவிட்டார்கள். காங்கிரஸ் தலைமைக் குழுவினுல் பார்டோலித் தீர்மானம் ஏற்கப்பட்ட பிறகு போராட்டத் தலைவன் என்ற முறையில் காங்கிரசின் மதிப்பு கணிசமாகக் குறைந்து விட்டது.

சுயராஜ்யம் பெறுவது, போராட்ட முறைகளை மாற்றுவது, வெகுஜன இயக்கத்திற்குத் தலைமை வகிப்பது ஆகியவற்றைக் குறித்து தேசியக் காங்கிரசிற்குள் ஏற்பட்ட கருத்து வேற்றுமையின் விளைவாகக் கட்சியில் இரண்டு பிரதான உட்குழுக்கள் உருவாயின. மாறுதலை எதிர்ப்போர் எனப்பட்டவர்கள் அடங்கிய முதல் குழு காந்தியின் ஆதரவாளர்களை உறுப்பினர்களாகக் கோண்டிருந்தது. தேசியத் தலைவரான காந்தி சோதித்து அறியப்பட்டிருந்த வெகுஜன சத்தியாக்கிரகப் போர்த்தந்திரத்தை மாறிய நிலைமைகளில் தாற்காலிகமாகக் கைவிட்டு விட்டு ''ஆக்க வேலைத்திட்டம்'' எனப்பட்டதை முன்வைத்திருந்தார்.

காந்தியும் அவரைப் பின்பற்றியவர்களும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் முக்கிய வடிவங்கள் பின்வருவன: கைத்தொழில்களுக்கு, முதன்மையாகக் கை நூற்புக்கு ஊக்கம் அளிப்பது; ''தீண்டாமைக்கு'' எதிராக, அதாவது, எல்லோரிலும் தாழ்ந்த ''தீண்டத்தகாத'' சாதியைச் சேர்ந்த மனிதர்களிடம் சமுதாயத்திலும் அன்றுட வாழ்க்கையிலும் காட்டப்பட்ட வேறுபாட்டு உணர்ச்சிக்கு எதிராகப் போராடுவது; இந்து-முஸ்லிம் ஒற்றுமை பற்றிப் பிரசாரம் செய்வது. ''ஆக்க வேலைத்திட்டத்தைச்'' செயல்படுத்துகையில் காந்தி எதார்த்தத்தில் இரண்டு முக்கிய நோக்கங்களை நிறைவேற்ற முயன்றார். அவையாவன: தேசிய இயக்கத்தைப் பிளவுபடுத்துவதற்காகப்

பிரிட்டிஷார் செய்த முயற்சிகளைக் குலைப்பது, காங்கிரசின் வெகுஜன அடித்தளத்தை, முதன்மையாக நகர நடுத்தர வகுப்பினர், கைத் தொழிலாளர்கள், வர்த்தகர்கள் ஆகியோரின் துணையால், பாது காத்து வைத்திருப்பது.

1924லும் 1925லும் காந்தி இரு சத்தியாக்கிரகங்களைத் திருவி தாங்கூர் சமஸ்தானத்தில் உள்ள வைக்கம் என்னும் இடத்தில் நடத்தி னார். பங்கு கொண்டவர்களின் எண்ணிக்கைப்படி இவை சிறு சத்தியாக்கிரகங்கள். ''தீண்டத்தகாத'' நபர்களுக்கு அங்கு விதிக்கப் பட்டிருந்த சில மத, வாழ்க்கைத் தடைகளை நீக்குவது இந்த சத்தியாக்கிரகங்களின் நோக்கமாய் இருந்தது. 1925ல் அவர் அனைத்து இந்தியச் சர்க்கா சங்கத்தை நிறுவினார். சர்க்காவை (இராட்டினத்தை) பற்றிப் பிரசாரம் செய்ததோடு இந்தச் சங்கம் கைநூற்பாளர்களுக்குப் பஞ்சு கொடுத்தும் அவர்கள் நூற்ற நூலை விற்பனை செய்தும் உதவியது.

காங்கிரசின் இரண்டாவது உட்குழுவில் இருந்தவர்கள் ''மாறு தலை ஆதரிப்போர்'' எனப்பட்டார்கள். ஐக்கிய மாகாண முதலாளித் துவத் தேசியவாதிகளின் தலைவர்களில் ஒருவராய் இருந்த மோதிலால் நேருவும் வங்காளக் காங்கிரஸ் நிறுவனத்தின் தலைவர் சித்தரஞ்சன் தாசும் இந்த உட்குழுவின் பிரபலப் பிரதிநிதிகள். வெகுஜனங்கள் அரசியல் போராட்டத்தில் ஈர்க்கப்படுவதை இந்தக் குழு எதிர்த்தது. சுயாராஜ்யம் ''உள்ளிருந்து பெறப்பட'' வேண்டும், மைய, மாகாணச் சட்ட மன்றங்களைக் காங்கிரஸ்காரர்கள் வென்று கைப் பற்றுவதன் வாயிலாக அடையப்பட வேண்டும் என்று இது கரு தியது. எனவே சட்ட மன்றங்களுக்கு நடக்கவிருந்த தேர்தல்களில் காங்கிரஸ் கலந்து கொள்வதை இந்தக் குழுவினர் ஆதரித்தார்கள். இந்தியாவின் அரசியல் வளர்ச்சியில் சுதந்திரமான முக்கியக் காரணி ஆகிவிட்டிருந்த இந்திய உழைப்பாளி மக்களது வெகுஜனப் போராட் டத்தின் பால் அச்சம் ''மாறுதலை ஆதரிப்போரின்'' வேலைத்திட்டம் பற்றிய தீர்மானங்களில் வெளிப்படையாக இழையோடி இருந்தது.

இந்த உட்குழுவின் மகாநாடு 1923, மார்ச்சு மாதம் அலாகாபாது நகரில் நடந்தது. தேசியக் காங்கிரசுக்குள் சுயராஜ்யக் கட்சியை இது அமைத்தது. சட்ட மன்றங்களுக்கான தேர்தல்களில் கலந்து கொள்வது என்றும் சட்ட மன்றங்களில் புகுந்த பின்பு நாடாளுமன்ற முட்டுக்கட்டை முறைகளின் உதவியால் தேசிய இயக்கத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றக் காலனியாட்சி நிர்வாகத்தை இணங்க வைப்பது என்றும் சுயராஜ்யக் கட்சியினர் முடிவு செய்தார்கள்.

1922ல் கயாவில் (பீகார்) நடந்த தேசியக் காங்கிரசின் ஆண்டுக் கூட்டம் காந்தியின் ஆதரவாளர்களது நிலையை உறுதிப்படுத்தியது.

ஆனால் டில்லியில் (1923ல்) நடந்த அசாதாரணக் கூட்டத்தில் தேர்தல்களுக்கு வேட்பாளர்களை நிறுத்த சுயராஜ்யக் கட்சியினரை அனுமதிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடுமையான உட்கட்சிப் போராட்டத்தின் விளைவாக காந்தி சுயராஜ்யக் கட்சியினருக்கு முக்கியமான விஷயங்களில் விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. சாத்துவிக ஒத்துழையாமை காங்கிரசின் நடவடிக்கைகளது முக்கிய வடிவம் என்பதைத் தனிப்பட்ட தஸ்தாவேஜில் (காந்தி—சித்தரஞ்சன் தாஸ் உடன்படிக்கை) அகற்றுமாறு அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார். பெல்காமில் (பம்பாய் மாகாணம்) 1924ம் ஆண்டு நடந்த காங்கிரஸ் ஆண்டுக் கூட்டத்தில் இந்த உடன்படிக்கை உறுதி செய்யப்பட்டது. அடுத்த ஆண்டு கான்பூரில் நடந்த ஆண்டுக் கூட்டமோ, சுயராஜ்யக் கட்சியினரின் நடவடிக்கைகள் காங்கிரஸ் வேலையின் பிரதான வடிவம் என ஒப்புக்கொண்டு விட்டது. ஆனால் உண்மையில் சட்ட ஆலோசனை உறுப்புக்களாக இருந்த சட்ட மன்றங்களைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் காலனியாட்சி நிர்வாகத்திடமிருந்து உருப்படியான ஒரு சலுகை கூடப் பெற சுயராஜ்யக் கட்சியினரால் முடியவில்லை. தோல்விகளின் காரணமாக முதலாளி-நிலப்பிரபு வட்டாரங்கள் மீது சுயராஜ்யக் கட்சியினரின் செல்வாக்கு குன்றியது. 1926ம் ஆண்டுத் தேர்தல்களில் அவர்கள் தோல்வியுற்றார்கள்.

காங்கிரசின் சுயராஜ்யக் கட்சித் தலைமைக் குழுவின் சுறுசுறுப்பற்ற செயல்முறையின் பால் அதிருப்தி தேசிய முதலாளி வர்க்கத்தின் (சிறப்பாகச் சிறு, நடுத்தர முதலாளி வர்க்கத்தின்) விரிவான வட்டாரங்களிலும் காங்கிரசுக்குள் அவற்றின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய குழுக்களிலும் பரவியது. இந்த நிலைமைகளில் சுயராஜ்யக் கட்சியினர் வலு இழந்ததன் விளைவாக உட்கட்சிச் சக்திகளின் மறு அணிவகுப்பும் கட்சித் தலைமையின் ஓரளவு ஒன்றிணைவும் நிகழ்ந்தன. இந்தக் காலப் பகுதியின் (1923—1927) இறுதியில் காங்கிரஸ் தலைமையில் இருந்தவை சித்தரஞ்சன் தாஸையும் மோதிலால் நேருவையும் தலைவர்களாகக் கொண்ட சுயராஜ்யக் கட்சியினரின் குழுவும் காந்தியையே தலைவராகக் கொண்ட காந்தியவாதிகளின் (ராஜேந்திர பிரசாத், விட்டல்பாய், வல்லபாய் படேல் சகோதரர்கள் முதலியோர்) குழுவும் ஆகும்.

காங்கிரசுக்குள் இடதுசாரியின் தோற்றம்

தலைமைக் குழுவின் கொள்கையினால் காங்கிரசில் விரிவாகப் பரவிய அதிருப்தியின் விளைவாக இடதுசாரிப் போக்கு தோன்றியது.

காங்கிரசை ஆதரித்த சிறு முதலாளி வட்டாரங்களின் நலன்களே இந்தப் போக்கு முதன்மையாகப் பிரதிபலித்தது. ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, அரசியல் தாக்குதலால் மிக அதிக அளவு துன்புற்றவை இந்த சமுதாய-வர்க்கக் குழுக்களே ஆகும். எனவே காலனியாட்சி அமைப்புக்கு எதிராக அதிகத் தீவிரமான போராட்டத்துக்கு இவை ஆதரவாக இருந்தன.

காங்கிரசில் இந்தப் போக்குக்குப் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் முதன்மையாக இளைஞர்களே. இவர்களுடைய முக்கியத் தலைவர்களாகவும் கொள்கைவாதிகளாகவும் விளங்கியவர்கள் ஜவாகர்லால் நேருவும் (1889—1964) சுபாஷ் சந்திர போசும் (1897—1945). இருவரும் இந்திய சமூகத்தின் மேற்குடிக் குடும்பங்களில் பிறந்தவர்கள். சிறந்த பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி பெற்ற பின் நேருவும் போசும் காந்தியை ஆர்வத்துடன் பின்பற்றுவோராக இருபதுக்களின் தொடக்கத்தில் தேசிய இயக்கத்தில் துடியாகப் பங்காற்றத் தலைப்பட்டார்கள்.

காங்கிரசில் இடதுசாரி தோன்றியதும் அதன் பிரதிநிதிகள் கட்சித் தலைமையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதும் வெகுஜனங்களிடையே காங்கிரசின் செல்வாக்கை அதிகமாக்கின. இந்தக் காரணத்தினாலேயே தேசிய இயக்கத்தின் தலைமையில் தேசிய முதலாளி வர்க்கம் நிலைத்திருப்பதை இந்த நிகழ்ச்சிகள் சாத்தியம் ஆக்கின.

அதே சமயம் தேசியக் காங்கிரசுக்குள் நடந்த இம்மாறுதல்கள் இந்தியாவின் அரசியல் வாழ்வில் நிகழ்ந்த முற்போக்கான ஆழ்ந்த மாற்றங்களைப் பிரதிபலித்தன. வெகுஜனப் போராட்டத்தில் தாற்காலிகத் தணிவு ஏற்பட்டிருந்தாலும் 1922—1927ல் நடந்த இந்த மாற்றங்களின் விளைவாக நாட்டில் இடதுசாரிச் சக்திகள் வலுவடைந்தன.

நாளடைவில் இடதுசாரியினர் புதிய புரட்சிக் கருத்துக்களை நுட்பமாகப் புரிந்து கொண்டும் இந்தியாவிலேயே சமுதாய-அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்டிருந்த மாறுதல்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டும், காங்கிரசின் வேலைத்திட்டத்தைத் தீவிரமாக்குவதும் வெகுஜனங்களிடையே காங்கிரஸ்காரர்களின் வேலையை ஊக்கப்படுத்துவதும் இன்றியமையாதவை என்ற முடிவுக்கு வந்தார்கள். அவர்களுடைய கருத்தோட்டங்கள் உரு ஆவதில் லெனினுடைய போதனையும் அக்டோபர்ப் புரட்சி, சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானம் ஆகியவற்றின் அனுபவமும் செல்வாக்கு செலுத்தின. இளம் ஜவாகர்லால் நேரு 1927ல் சோவியத் நாட்டுக்குத் தம் தந்தை மோதிலால் நேருவுடன் வருகை தந்தார். இந்தப் பயணம் அவரது உள்ளத்தில் ஆழ்ந்த பதிவு ஏற்படுத்தியது.

இடதுசாரியினரின் இவ்விரு இளம் தலைவர்களதும் நடைமுறைச் செயல்களில் ஓரளவு வேற்றுமைகள் இருந்தன. இளைஞர்களின், முதன்மையாகக் கல்லூரி மாணவர்களின் நிறுவனங்கள் அமைப்பதிலும் காங்கிரசின் வங்காள நிறுவனத்தில் தம் செல்வாக்கை நிலைப்படுத்துவதிலும் போஸ் இருபதுக்களின் இறுதியிலும் முப்பதுக்களின் தொடக்கத்திலும் தமது பெரும்பாலான முயற்சிகளை ஈடுபடுத்தினர். ஜவாகர்லால் நேருவோ, அயல்நாட்டு முற்போக்கு நிறுவனங்களுடனும் புரட்சிப் போக்குகளுடனும் இந்தியத் தேசிய இயக்கத்திற்குத் தொடர்புகள் ஏற்படுத்தவும் இருந்த தொடர்புகளை விரிவாக்கவும் இந்த ஆண்டுகளில் முயன்றார். 1927ம் ஆண்டு பிரஸ்ஸல்சில் நடந்த காலனி மக்கள் மகாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாக ஜவாகர்லால் நேரு கலந்து கொண்டார். ஏகாதிபத்திய எதிர்ப்பு லீக் இம் மகாநாட்டில் நிறுவப்பட்டது. இந்தியா திரும்பியதும் லீகின் கிளைகளை இந்தியாவில் அமைப்பதற்கு நேரு பெருந்தொண்டு ஆற்றினர்.

1927ம் ஆண்டின் இறுதிக்குள் தேசியக் காங்கிரசிற்குள் இடதுசாரி கணிசமாக வலு அடைந்தது. இந்திய தேசிய விடுதலை இயக்கத்தின் முக்கியக் குறிக்கோள் பூரண சுயராஜ்யம் பெறுவதே என்ற தீர்மானம் ஜவாகர்லால் நேருவால் சென்னைக் காங்கிரஸ் மகாநாட்டில் பிரேரிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. ஏகாதிபத்திய எதிர்ப்பு லீகுடன் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்வதை மகாநாடு உறுதிப்படுத்தியது. நேருவும் போசும் 1928ம் ஆண்டுக்குக் காங்கிரசின் பொதுச் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இந்தியாவில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் தோற்றமும் தொழிலாளர், விவசாயிகளின் அரசியல் நிறுவனங்கள் அமைந்ததும்

அயல் நாடுகளில் புரட்சிக் குழுக்கள்

நாடு கடந்த இந்தியப் புரட்சியாளர்களின் முயற்சிகளுக்கும் சோவியத் ஆட்சிக்கும் இடையே தொடர்புகள் 1918லேயே ஏற்படத் தொடங்கின. தேசியப் புரட்சியாளர்கள் வட்டாரங்களில் மார்க்சியக் கொள்கைவாதம் புகுவதற்கு இந்தத் தொடர்புகள் உதவின. 1918—1922ல் சோவியத் ருஷ்யாவுக்கு வருகை தந்த இந்தியர்கள் மீது வி. இ. லெனினுடனும் பிற சோவியத் தலைவர்

களுடனும் நேர்ந்த சந்திப்புக்களும் மாஸ்கோ, பெத்ரோகிராது, தாஷ்கந்த், பாக்கூ, மற்ற சோவியத் நகரங்கள் ஆகியவற்றில் அவர் கள் கண்டவை யாவும் மிகப் பெரிய உளப்பதிவு ஏற்படுத்தின. இந் தியச் சிறு முதலாளி வர்க்கப் புரட்சியாளர்கள் அக்டோபர்ப் புரட்சி பற்றியும் போல்ஷிவிக்குகளுடைய வேலைத்திட்டத்தையும் செயல் முறையையும் பற்றியும் மிகத் தெளிவற்ற புரிவே கொண்டிருந்தா லும் பிரிட்டிஷ் காலனியாட்சியுடன் போராட்டத்தில் சோவியத் நாடு தங்கள் கூட்டாளி என்பதைக் கண்டார்கள். நாடு கடந்த இந்தியர்கள் முதலில் காபுல் மையம் வாயிலாகவும் பின்னர் பெர்லின் மையம் மூலமாகவும் மாஸ்கோவுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார்கள்.

காபுலில் இருந்த இந்தியப் புரட்சிச் சங்கம், ''இந்தியாவின் தாற் காலிக அரசாங்கம்'' ஆகியவற்றின் பிரதிநிதிக் குழு உறுப்பினர் களான பர்க்கத்துல்லா, மண்டயம் பிரதிவாதி பயங்கரம் திருமலாச் சாரி, அப்துர் ரப் மூவரும் 1919ம் ஆண்டு வசந்தத்தில் மாஸ்கோ வந்தார்கள். வி. இ. லெனின் அவர்களைத் தம் அலுவலத்தில் வர வேற்று உரையாடினர். மூன்று இந்தியப் பிரதிநிதிகளும் சோவியத் நாட்டில் பல மாதங்கள் தங்கி இருந்தார்கள். போல்ஷிவிஸமும் முஸ்லிம் மக்கள் இனங்களும் என்ற சிற்றேட்டை (தாஷ்கந்த், 1919) பர்க்கத்துல்லா பார்சி மொழியில் எழுதி வெளியிட்டார். விரைவில் பிற கீழை நாடுகளின் மொழிகளிலும் இது பெயர்க்கப்பட்டது. சோவியத் மத்திய ஆசியாவிலும் அண்மை, மத்தியக் கிழக்கு நாடு களிலும் இந்தியாவிலும் தேசிய இனங்கள் குறித்த சோவியத் கொள் கையின் உண்மையைப் பரப்புவதில் இந்தச் சிற்றேடு கணிசமான பங்கு ஆற்றியது.

1919ன் முடிவில் காபுல் திரும்பிய திருமலாச்சாரியும் அப்துர் ரபும் அந்த சமயத்தில் ஆப்கனிஸ்தானத்தில் இருந்த இந்தியர்களின் பல குழுக்கள் சோவியத் துருக்கிஸ்தானப் பிரதேசம் செல்வதற்குப் பெரிதும் உதவினர்கள். அனைத்து இந்தியக் கிலாபத்துக் கமிட்டியின் அழைப்பிற்கு இணங்க, கிலாபத்து இயக்கத்தில் கலந்து கொண்ட வர்களின் பெருங் குழுக்கள் 1920ம் ஆண்டின் தொடக்கத்தில் இந்திய எல்லையைத் தாண்டி ஆப்கனிஸ்தானத்துக்கு வரத் தொடங்கின. இவற்றில் பெரும்பாலராய் இருந்தவர்கள் தேசிய உணர்வுள்ள முஸ் லிம் இளைஞர்கள். பின்னர் துருக்கிக்குச் செல்வது, சுல்தான்-கலீபா வின் தனியுரிமைகளைக் காக்கும் பொருட்டு ஏகாதிபத்திய வல்லரசு களுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் கலந்து கொள்வது என்பது இவர்களுடைய நோக்கம். இவர்கள் ''முஹாஜிர்கள்'' (வீடு துறந்த பரதேசிகள்) எனப்பட்டார்கள். முஹாஜிர் இயக்கத்துக்கு

ஆதரவு தெரிவித்து ஆப்கனிஸ்தான அமீர் விடுத்திருந்த செய்தி கிலாபத்துப் பொதுக் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் படிக்கப் பட்டது. இந்தியாவிலிருந்து ஆப்கனிஸ்தானத்துக்குச் சென்ற முஹாஜிர்களின் மொத்த எண்ணிக்கை வெவ்வேறு கணக்கீடுகளின்படி முப்பதினாயிரம் முதல் ஐம்பதினாயிரம் வரை இருந்தது. இவர்களது வருகை ஆப்கனிஸ்தான அரசாங்கத்துக்குக் கணிசமான சங்கடங்களை ஏற்படுத்தியது. அதே ஆண்டின் இறுதிக்குள் பெரும்பாலான முஹாஜிர்கள் வேறு வழியின்றி இந்தியா திரும்ப வேண்டியதாயிற்று. வெகு சிலருக்கே வெவ்வேறு வழிகளில் அண்மைக் கிழக்கு செல்ல வாய்த்தது.

ஆக அதிக அரசியல் உணர்வு பெற்ற முஹாஜிர்கள் இடையே காபுல் மறைமுகப் புரட்சிச் சங்க உறுப்பினர்கள், முதன்மையாகத் திருமலாச்சாரியும் அப்துர் ரபும் நடத்திய கிளர்ச்சிப் பிரசாரத்தின் பயனாக 1920ம் ஆண்டில் முஹாஜிர்களின் மூன்று குழுக்கள் ஆப்கனிஸ்தான எல்லையைக் கடந்து சோவியத் நாட்டுக்குச் சென்றன. இவற்றில் ஏறத்தாழ இருநூறு பெயர் இருந்தார்கள். இவர்களில் சுமார் பாதிப் பெயர் விரைவில் இந்தியா திரும்பி விட்டார்கள். ஒரு பகுதியினர் காக்கேஷியா மார்க்கமாகத் துருக்கிக்கு அனுப்பப்பட்டார்கள். சுமார் முப்பது பெயர் தாஷ்கந்தில் தாமதித்தார்கள். இதனால் இந்தியப் புரட்சிச் சங்கத்தின் தாஷ்கந்த கிளையை அமைப்பது திருமலாச்சாரிக்கும் அப்துர் ரபுக்கும் இயன்றது. சங்கத்தின் தலைவர் என்ற முறையில் திருமலாச்சாரி 1920ம் ஆண்டுக் கோடையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது மகாநாட்டில் பங்கு கொண்டார்.

இதற்குள் இந்தியர்களின் இன்னொரு குழு பாக்கூ நகரில் முகாம் போட்டது. ஹொராசானில் (பாரசீகம்) இருந்த பிரிட்டிஷ் படைகளிலிருந்து ஓடி வந்திருந்த துருப்பினர் இவர்களில் கணிசமான பகுதியினராய் இருந்தார்கள். பாக்கூவில் **அஜாத் ஹிந்துஸ்தான் அஃபார்** (சுதந்திர இந்தியச் செய்திகள்) என்ற நாளிதழ் உருது மொழியில் வெளியிடப்பட்டது. 1920, செப்டெம்பரில் பாக்கூவில் நடைபெற்ற கீழை நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்களின் மகாநாட்டில் இந்தியப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

இந்தியப் புரட்சியாளர்கள் இடையே மார்க்சியக் கருத்தோட்டங்கள் பரவலாயின. இதில் பெரும் பங்கு ஆற்றியவர் மானவேந்திர நாத் ராய்.

எம். என். ராய் என்ற பெயரால் நன்கு அறியப்பட்ட இவர் இந்திய மறைமுகப் புரட்சி நிறுவனங்களின் நடவடிக்கைகளில் பங்கு காற்றிய பின் நாட்டை விட்டு வெளியேறி ஜப்பானிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் மெக்சிக்கோவிலும் வசித்தார். மெக்சிக்கோவின் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவியவர்களில் இவர் ஒருவர். இந்தக்

கட்சியின் சான்றுச் சீட்டு பெற்று, கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது மகாநாட்டுப் பிரதிநிதியாக 1920ல் பெர்லின் வழியாக மாஸ்கோ சேர்ந்தார். மகாநாட்டில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். கீழை நாட்டுக் கமிஷன் தலைவர்களில் ஒருவராக 1920 முதல் 1927 வரை வேலை செய்தார்.

மகாநாட்டு வேலை முடிந்ததும் ராய் தாஷ்கந்த் சென்றார். இந்தியக் கம்யூனிஸ்டுகளின் நாடுகடந்த முதல் குழுவை நிறுவுவதில் அங்கே பயனுள்ள பங்கு ஆற்றினார். 1920, அக்டோபர் 17ந் தேதி இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி என்ற பெயரில் இந்தக் குழு அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் பத்துப் பெயர் மட்டுமே இதில் சேர்ந்தார்கள். ஆனால் 1921ல் முஹாஜிர்கள் சேர்ந்தமையால் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்தது. 1921ல் கம்யூனிஸ்டு அகிலத்தின் கீழ் நிறுவப்பட்ட கீழை நாட்டு உழைப்பாளிகளின் கம்யூனிஸ்டுப் பல்கலைக்கழகத்தில் இந்தியக் குழுவாக இவர்கள் அவ்வாண்டு வசந்த காலத்தில் அமைந்தார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது மகாநாட்டின் போது மாஸ்கோவில் இருந்த நாடுகடந்த புரட்சியாளர்களை "தாற்காலிக அனைத்து இந்திய மையப் புரட்சிக் கமிட்டியாக" எம். என். ராய் ஒன்றுபடுத்தினர். இந்தியாவிலும் அதற்கு வெளியேயும் இருந்த புரட்சிக்காரர்களோடு இந்தக் கமிட்டியின் பெயரால் அவர் கடிதப் போக்குவரத்து நடத்தினர்.

இந்தக் குழுவின் முதல் செயலாளராக முகமது ஷபீக் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1920 மே மாதத்திலேயே தாஷ்கந்தில் இந்தியப் புரட்சிச் சங்கத்தின் வெளியீடான **ஜமீன்தார் (நிலத்துக்கு உரியவன்,** அதாவது, விவசாயி என்ற பொருளில்) என்னும் பத்திரிகையின் ஒரே இதழைப் பதிப்பித்தார்.

தாஷ்கந்திலும் மாஸ்கோவிலும் பயிற்சி பெற்ற பிறகு முன்னாள் முஹாஜிர்களின் ஒரு பகுதியினர், உதாரணமாக, முகமது ஷபீக், பிரோசுத்தீன் மன்ஸூர், அப்துல் மஜீது, ரபீக் அகமது, ஷௌகத் உஸ்மானி முதலியோர், இந்தியா திரும்பி அங்கே நிறுவப்பட்டிருந்த கம்யூனிஸ்டுக் குழுக்களின் செயல்களில் பங்கெடுத்துக் கொண்டார்கள். மற்றவர்கள் நாட்டுக்கு வெளியே தங்கி, கம்யூனிஸ்டு அகிலத்தின் உறுப்புக்களிலும் பிற சர்வதேசப் புரட்சி நிறுவனங்களிலும் வேலை செய்து வந்தார்கள்.

பெர்லினில் இருந்த இந்தியப் புரட்சிக் கமிட்டியின் பிரதிநிதியாகக் கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது மகாநாட்டிற்கு வந்த அபனி முகர்ஜியும் கம்யூனிஸ்டுகளின் நாடுகடந்த குழுவை அமைப்பதில் ராயுடன் சேர்ந்து முக்கியப் பங்கு ஆற்றினர்.

இந்தியாவின் தேசிய விடுதலை இயக்கம், நாட்டின் பொருளாதார, அரசியல் நிலைமை ஆகிய விஷயங்களைக் குறித்து எம். என். ராயும் அபனி முகர்ஜியும் நூல்களும் சிற்றேடுகளும் கட்டுரைகளும் இருபதுக்களில் வெளியிட்டார்கள். இவை சட்ட விரோதமாக இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டன. சிறு முதலாளி வர்க்கத் தேசியவாதிகளுக்கு மார்க்சியத்தைப் புரிய வைப்பதிலும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியை அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் செய்வதிலும் இவை பெரும் பங்கு ஆற்றின. 1920ம் ஆண்டுக் கோடையில் ஆங்கிலச் செய்தித் தாள்களில் வெளியான முதலாவது இந்தியப் புரட்சியாளர்களுக்கு அறிக்கையில் அவர்கள் கையெழுத்துக்கள் இட்டிருந்தார்கள். தேசியப் புரட்சியாளர்கள் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியத்துக்கு மாறுவதும் இந்தியாவில் சமுதாயப் புரட்சிக்கு முன்னேற்பாடுகள் செய்வதும் பணிகளாக இதில் குறிக்கப்பட்டிருந்தன.

இந்தியாவில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஆரம்பக் கட்டத்தில் எம். என். ராய் வகித்த பாத்திரம் முரண்பாடுகள் கொண்டதாக இருந்தது. கீழை நாடுகளில் புரட்சியை மதிப்பிடுகையில் ராய் குறுகிய பிரிவுவாத நிலையை மேற்கொண்டார். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது மகாநாட்டிலேயே தேசிய-காலனிப் பிரச்சினையில் வி. இ. லெனினுடன் ராய்க்கு ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளில் இந்த நிலை ஓரளவு வெளிப்பட்டது. விடுதலை இயக்கத்தில் தேசிய முதலாளி வர்க்கத்தின் பங்கை அவர் மறுத்தார். இவையும் இவை போன்ற பிற கருத்துக்களும் இருபதுக்களில் இந்தியாவில் தோன்றிய கம்யூனிஸ்டுக் குழுக்கள் அரசியல் துறையில் சரியான திசையில் முன்னேறுவதற்குத் தடங்கலாக இருந்தன. இந்தியத் தேசிய இயக்கத்தில் இடதுசாரிச் சக்திகளின் பொது அணி அமைவதையும் இவை கடினம் ஆக்கின. அரசியல் தவறுகள் காரணமாக முடிவில் ராய் கம்யூனிஸ்டு இயக்கத்திலிருந்து விலக நேர்ந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற் குழுவிலிருந்து 1929ம் ஆண்டு அவர் நீக்கப்பட்டார்.

அதே சமயம், இந்தியாவில் மார்க்சியத்தைப் பரப்புவதிலும் இந்தியக் கம்யூனிஸ்டுகளின் நிறுவனத்தை அமைப்பதிலும் ராயின் செயல்கள் பெருத்த பயனுள்ள முக்கியத்துவம் கொண்டிருந்தன. ராயும் முகர்ஜியும் தேசியப் புரட்சியாளர்களின் வட்டாரத்திலிருந்து வந்தவர்கள் ஆதலால் இந்தியாவின் மறைமுகப் புரட்சி நிறுவனங்களையும் அவற்றின் அயல்நாட்டு மையங்களையும் தேசியக் காங்கிரசுக்குள் இருந்த இடதுசாரியையும் இந்தியாவில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் துணைப் படையாகக் கருதினர்கள். எனவேதான் சிறு முதலாளி வர்க்க இளைஞர் சமுதாயத்தை முதலாளி வர்க்கக் கொள்கைவாதத்

தின் செல்வாக்கிலிருந்து விடுவிக்கும் நிகழ்முறையை விரைவு படுத்துவது தங்கள் பணி என அவர்கள் எண்ணினர்கள். இந்த நோக்கங்களுக்காகவே ராயும் முகர்ஜியும் அவர்களது தலைமையில் இயங்கிய நாடுகடந்த கம்யூனிஸ்டுகள் குழுவினரும் சுயராஜ்யக் கட்சித் தலைவர்கள் முதல் 1922க்குப் பின் இந்தியாவில் தீவிரம் அடைந்த மறைமுகப் புரட்சி நிறுவனங்களின் தலைமைக் குழுக்கள் வரை இந்தியாவில் இருந்த பல்வேறு அரசியல் போக்குகளுடனும் நிறுவனங்களுடனும் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ள முயற்சிகள் செய்து வந்தார்கள்.

1921ம் ஆண்டு டிசம்பரில் அகமதாபாதில் கூடிய இந்தியத் தேசியக் காங்கிரசின் முறையான மகாநாட்டுக்காக எம். என். ராயும் அபனி முகர்ஜியும் விரிவான கொள்கை அறிக்கை தயாரித்தார்கள். தொழிலாளி, விவசாயி வெகுஜனங்களை ஒழுங்கமைப்பது காங்கிரசின் பணி என்று இந்த அறிக்கை கூறியது. தங்கள் கோரிக்கைகளைத் தன் வேலைத்திட்டத்தில் சேர்த்துக் கொண்டால்தான் காங்கிரஸ் திரளான பொது மக்களுக்குத் தலைமை தாங்க முடியும் என்று அறிக்கையாளர்கள் வலியுறுத்தினர்கள். இந்தக் கொள்கை அறிக்கையின் பல பிரதிகள் தயாரிக்கப்பட்டு என். குப்தா என்ற கம்யூனிஸ்டால் சட்ட விரோதமாக இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டன.

இந்தியத் தேசிய இயக்கத்தின் புரட்சிச் சாரியில் வெவ்வேறு நிறுவனங்களும் குழுக்களும் இருந்தது, ராயின் கருத்தோட்டங்களிலும் வேறு பல இந்தியக் கம்யூனிஸ்டுகளின் கருத்தோட்டங்களிலும் சிறு முதலாளித்துவக் கொள்கைவாதமும் குறுகிய பிரிவுவாதப் போக்குக்களும் மேலோங்கி இருந்தது—இவை எல்லாம் ஒரு பொது அரசியல் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் இடதுசாரிச் சக்திகள் ஒன்றுவதைக் கடினம் ஆக்கின. பெர்லின் இந்தியப் புரட்சிக் கமிட்டித் தலைவரான வீரேந்திரநாத் சட்டோபாத்தியாயர் நாடு கடந்த புரட்சிச் சக்திகள் அனைத்தையும் ஒன்றுபடுத்துவதற்காக 1921ம் ஆண்டு மாஸ்கோவில் நடந்த விசேஷ மகாநாட்டில் எடுத்துக் கொண்ட முயற்சி பலிக்காமல் போனதற்குக் காரணம் இதுவே. நாடுகடந்த புரட்சியாளர்களது வெவ்வேறு குழுக்களின் பிரதிநிதிகளுக்கு இடையே மாஸ்கோவில் நடந்த பேச்சு வார்த்தைகள் முறிந்த பின் வீரேந்திரநாத் சட்டோபாத்தியாயர் பெர்லின் திரும்பி சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்பு லீகின் மகாநாட்டைக் கூட்டுவதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்வதில் முனைந்தார். இந்த லீகின் ஓர் அமைப்பாளராகவும் தலைவராகவும் அவர் விளங்கினர்.

இருபதுக்களின் தொடக்கத்தில் இந்தியாவிலும் கம்யூனிஸ்டுகளின் முதல் குழுக்கள் உருவாயின.

இந்தியாவில் கம்யூனிஸ்டுக் குழுக்கள் உருவானதும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி அமைந்ததும்

புரட்சிச் சக்திகள் பின்வாங்க வேண்டும் எனக் குறிக்கும் எக்கால முழக்கமாக ஒலித்த பார்டோலித் தீர்மானத்துக்குப் பிறகு, ஒத்து ழையாமை இயக்கத்தில் அதுவரை ஊக்கத்துடன் பங்காற்றி வந்த தேசியப் புரட்சியாளர்கள், இடதுசாரிக் காங்கிரஸ்காரர்கள் ஆகியோ ரின் வட்டாரங்களில் காந்தியின் அரசியல் தலைமை குறித்து ஏமாற்றம் தோன்றலாயிற்று. மறைமுக நிறுவனத்தினரின் செயல் கள் மீண்டும் தீவிரம் ஆயின. இவர்கள் பெரும்பாலும் ''ஹிந்துஸ் தான் ரிபப்ளிகன் அசோஸியேஷன்'' என்ற நிறுவனத்தை மையமாகக் கொண்டு ஒருங்கிணைந்தார்கள். மறைமுகப் புரட்சி நிறுவனங்கள், சிறப்பாகப் பஞ்சாபில், நாடுகடந்த இந்தியப் புரட்சியாளர்களின் காபுல் மையத்துடன் தொடர்பு கொண்டிருந்தன. 1921ல் மீண்டும் உயிர்ப்படைந்த இந்த மையம் தேசியக் காங்கிரசின் கிளையாகச் செயல்படலாயிற்று. பஞ்சாபில் ஆயுதக் கிளர்ச்சிக்கு ஆயத்தம் செய் யும் புதிய சதியாலோசனை நடந்ததாக இதே ஆண்டு காலனியாட்சி அதிகாரிகள் வழக்கு ஜோடித்தார்கள். அதே சமயம், புரட்சி மனப் பான்மை கொண்ட இளைஞர்கள் இடையிலிருந்தும் நாளுக்கு நாள் அதிக எண்ணிக்கையினர் மார்க்சியத்தைப் பின்பற்றத் தொடங் கினர்.

1917 முதல் 1921 வரையுள்ள காலப் பகுதி இந்தியாவில் கம்யூ னிஸ்டு இயக்கத்தின் முன்னேற்பாட்டுக் கட்டமாக ஒரு வகையில் விளங்குகிறது. அக்டோபர்ப் புரட்சி, இளம் சோவியத் அரசின் முதல் அடிவைப்புக்கள், கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்கள், எம். என். ராயையும் அபனி முகர்ஜியையும் தலைமையில் கொண்ட நாடுகடந்த இந்தியக் கம்யூனிஸ்டுகள் குழுவின் பணிகள் ஆகிய வற்றைப் பற்றிய செய்திகள் நாட்டில் பரவியதன் விளைவாக முதல் மார்க்சிய வட்டங்கள் தோன்றுவதற்கு ஏற்ற நிலைமைகள் உருவா யின.

விஞ்ஞானக் கம்யூனிசக் கருத்துக்களின் விளக்கவுரை (வெவ்வேறு வடிவங்களிலும் தரங்களிலும்) அடங்கிய பல நூல்கள் இந்த ஆண்டு களில் இந்தியாவில் வெளியாயின. லெனினுக்கு எதிராக காந்தி என்ற தலைப்பில் ஸ்ரீபாத அமிர்த டாங்கே என்னும் பம்பாய்க் கல்லூரி மாண வர் எழுதிய நூல் இவற்றில் சிறந்து விளங்கியது. அண்மைக் காலம் வரை ஒத்துழையாமை இயக்கத்தில் துடியாகப் பங்காற்றி வந்த டாங்கே லெனினதும் காந்தியினதும் அரசியல் போராட்ட முறைகளை இந்த நூலில் ஒப்பிட்டு, காந்திய வேலைத்திட்டத்தையும் செயல்

முறையையும் தாக்கி விமர்சித்திருந்தார். 1922, மே மாதம் முதல் ஆங்கில மொழியில் சோஷலிஸ்ட் என்னும் வாரப் பத்திரிகையை டாங்கே வெளியிடலானார். இந்தியாவின் முதலாவது மார்க்சியச் சஞ்சிகை இதுவே. இந்தப் பத்திரிகை மார்க்சினதும் லெனினதும் நூல்களைப் பற்றிப் பிரசாரம் செய்தது, அக்டோபர்ப் புரட்சி பற்றிய தகவல்களைத் தந்தது, இந்தியத் தேசிய விடுதலை இயக்கம் பற்றிய பிரச்சினைகளை அலசியது. இந்தப் பத்திரிகை பரவியதனால் புரட்சி மனப்பான்மை வாய்ந்த பம்பாய் இளைஞர்கள் டாங்கேயை மையமாகக் கொண்டு ஒன்று சேர்வது சாத்தியம் ஆயிற்று. ''இந்தியத் தேசியக் காங்கிரசின் இந்திய சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சி'' அமைக்கப்பட்டது பற்றிய அறிவிப்பு 1922, செப்டெம்பர் மாதம் சோஷலிஸ்டு பத்திரிகையில் பிரசுரமாயிற்று. எஸ். ஏ. டாங்கே, எஸ். வி. காட்டே, கே. என். ஜோக்ளேகர், ஆர். எஸ். நிம்கர் முதலியோர் அடங்கிய மார்க்சியக் குழுவுக்கு இவ்வாறு பெயரிடப்பட்டது, அந்தக் காலப் பகுதியில் தேசிய இயக்கத்தில் மார்க்சியப் பிரிவு தோன்றியதை டாங்கேயும் அவருடைய தோழர்களும் காங்கிரசுக்குள் இடதுசாரி உட்குழு அமைந்ததாகக் கருதினர்கள் என்பதைக் காட்டுகிறது. பம்பாய்க் குழு சோஷலிஸ்ட் என்னும் மாதச் சஞ்சிகையை 1923லிருந்து வெளியிடத் தொடங்கியது.

மற்றப் பெரிய இயந்திரத் தொழில் மையங்களிலும் மார்க்சியக் குழுக்கள் தோன்றின. 1922ல் மாஸ்கோவிலிருந்து திரும்பிய பின் ஷௌகத் உஸ்மானி காசியில் கம்யூனிஸ்டுகள் குழுவை அமைத்தார். அதே சமயம் லாகூரில் கம்யூனிஸ்டுக் குழு செயல்படத் தொடங்கிற்று. இதன் தலைவரான குலாம் உசேன் தாஷ்கந்திலிருந்து காபுலுக்கு அனுப்பப்பட்ட முகமது அலி (செபாசி)யுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். குலாம் உசேன் உருது மொழியில் வெளியிட்ட இன்கலாப் (புரட்சி) என்ற செய்தித்தாள் லாகூர் குழுவின் வெளியீடாக விளங்கிற்று. முஜப்பர் அகமதின் தலைமையில் இயங்கிய கல்கத்தா குழுவும் இதே சமயத்தில் விஞ்ஞானக் கம்யூனிச நிலையை மேற்கொண்டது. கணவாணி (மக்கள் குரல்) என்னும் பத்திரிகையை அவர் வங்காளி மொழியில் 1923 முதல் வெளியிடலானார். சிங்காரவேலு செட்டியாரின் தலைமையில் மார்க்சியக் குழு சென்னையில் தோன்றியது. கிஸான்-லேபர் கெஜட் (விவசாயி-தொழிலாளிச் செய்தித்தாள்) என்னும் ஆங்கிலப் பத்திரிகையைச் செட்டியார் 1923 முதல் வெளியிட்டார்.

கூட்டுப் பிரசாரகன், கூட்டு ஒழுங்கமைப்பாளன் என்ற தங்கள் பங்கை முதல் மார்க்சிய வெளியீடுகள் நிறைவேற்றின. வேன்கார்ட் ஆவ் இண்டியன் இண்டிபெண்டென்ஸ் (இந்திய சுதந்திரத்தின் முன்னணிப்

படை, 1922—1924), மாஸஸ் ஆவ் இண்டியா (இந்தியப் பொது மக்கள், 1925—1927) ஆகிய சஞ்சிகைகள் இந்தியாவில் இரகசியமாக வினியோகிக்கப்பட்டதும் இதே மாதிரி முக்கியத்துவம் கொண்டிருந்தது.

1923—1925ல் நடப்பிலிருந்து மார்க்சியக் குழுக்கள் விரிவடைந்ததோடு புதிய குழுக்களும் அமைந்தன. உதாரணமாக, இயந்திரத் தொழில் மையங்களான கான்பூரிலும் கராச்சியிலும் இத்தகைய குழுக்கள் அமைக்கப்பட்டன. தனித்தனி மார்க்சிய மையங்களுக்கு இடையே தொடர்புகள் ஏற்பட்டன. இந்தியக் கம்யூனிஸ்டுகளின் நாடுகடந்த மையங்களுடன் கடிதப் போக்குவரத்து தொடங்கியது. தங்கள் முயற்சிகளை ஒழுங்கிணைத்து அனைத்து இந்திய நிறுவனத்தை அமைப்பது இந்தியாவில் இருந்த மார்க்சியக் குழுக்களின் முதன்மைப் பணி ஆயிற்று.

காலனிக் கொடுங்கோல் ஆட்சியின் நிலைமைகளில் இந்தியக் கம்யூனிஸ்டுகள் செயலாற்றுவது பெரிதும் கடினமாய் இருந்தது. நாடு கடந்த புரட்சி மையங்களின் வேலையில் பங்காற்றிவிட்டு இந்தியா திரும்பிய முஹாஜிர்கள் மீது பெஷாவர் சதி வழக்குகள் எனப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகளை அதிகாரிகள் 1922—1923ல் ஜோடனை செய்து நடத்தினர்கள். 1924ல் கம்யூனிஸ்டுகள் மீது முதல் வழக்கு கான்பூரில் நடந்தது. மார்க்சியக் குழுவின் தலைவர்களான எஸ். ஏ. டாங்கே, முஜப்பர் அகமது, ஷௌகத் உஸ்மானி முதலியோருக்கு இதில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ''போல்ஷிவிக் ஏஜெண்டுகளாகச்'' செயல்கள் ஆற்றியதாக இந்தியக் கம்யூனிஸ்டுகள் மீது குற்றம் சாட்டப்பட்டது. அடக்கு முறைகளைக் கையாண்ட போதிலும் இந்தியாவில் கம்யூனிஸ்டு இயக்கத்தை நசுக்க பிரிட்டிஷ் இரகசியப் போலீசால் முடியவில்லை. மாறுக, 1924—1925ல் மார்க்சியக் குழுக்கள் தங்கள் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தின.

கான்பூர் பத்திரிகையாளரான சத்திய பக்த் என்பவர் சட்டபூர்வமான ''இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி'' அமைக்கப்பட்டிருப்பதாக 1924, செப்டெம்பர் மாதம் அறிவித்தார். இந்தக் கட்சி கம்யூனிஸ்டு அகிலத்துடனும் மற்ற அயல்நாட்டுப் புரட்சி மையங்களுடனும் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்று அதன் தலைவர்கள் தங்கள் அறிக்கையில் அழுத்திக் கூறியிருந்தார்கள். இந்தக் காரணத்தால் அது நிறுவப்பட்டதை அதிகாரிகள் பொறுமையுடன் அனுமதித்தார்கள். சத்திய பக்த் அமைத்த கட்சி இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு ஈர்ப்பு மையமாக விளங்கவில்லை என்றாலும் இந்திய மார்க்சியவாதிகளின் தனித் தனிக் குழுக்களை ஒன்றுக இணைப்பதற்கான முன்னேற்பாடுகளை அவர் தொடர்ந்தார். ஒன்றிணைப்பு மகாநாடு கூட்டுவதற்கு

முன்னேற்பாடுகள் செய்யும் பொருட்டு இடதுசாரிக் காங்கிரஸ்காரரான ஹஜ்ரத் மொஹானியின் தலைமையில் ஒழுங்கமைப்புக் கமிட்டி நிறுவப்பட்டது. இதன் பயனாக இந்தியக் கம்யூனிஸ்டுகளின் முதல் மகாநாடு 1925, டிசம்பர் 28 முதல் 30 வரை கான்பூரில் சென்னைக் கம்யூனிஸ்டு எம். சிங்காரவேலுச் செட்டியாரின் தலைமையில் நடந்தது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியை அமைப்பது என்றும் அதன் மையத்தை பம்பாயில் வைத்துக் கொள்வது என்றும் மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியச் செயற்குழுவின் செயலாளர்களாக ஜே. பெகெர்ஹொத்தாவும் எஸ். வி. காட்டேயும் பதவி ஏற்றார்கள். இந்தியாவில் இருந்த முக்கியமான கம்யூனிஸ்டுக் குழுக்கள் எல்லாவற்றினுடையவும் பிரதிநிதிகள் மத்தியச் செயற்குழுவில் இடம் பெற்றார்கள்.

கம்யூனிஸ்டு அகிலத்துடன் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறவுகள் பற்றிய பிரச்சினை மீது கட்சிக்குள் போராட்டம் தொடங்கியது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி தன் ''தேசியத் தன்மையை'' நிலையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று சத்திய பக்த் வாதாடினார். கம்யூனிஸ்டு அகிலத்துடன் அது எவ்வித உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது என்றார் அவர். 1926ம் ஆண்டு கல்கத்தாவில் நடந்த கம்யூனிஸ்டுக் கட்சியின் இரண்டாவது மகாநாட்டில் பெரும் பாலான பிரதிநிதிகள் இந்த நோக்கை ஆதரிக்கவில்லை. சத்திய பக்த் கட்சியிலிருந்து வெளியேறி ''இந்தியாவின் தேசியக் கம்யூனிஸ்டுக் கட்சியை'' அமைத்தார். நடப்பில் இது புரட்சிகர ஜனநாயகவாதிகளின் நிறுவனமாக விளங்கியது.

சட்டபூர்வமாக வேலை செய்யும் வாய்ப்பைக் காத்துக் கொள்ளும் நோக்கத்துடன் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி இந்தக் காலத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் பகுதி ஆகவில்லை. ஆயினும் சர்வதேசப் புரட்சி இயக்கத்துடன் அதன் தொடர்புகள் வலுப்பட்டன. பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியுடன் ஏற்பட்ட உறவுகள் இதற்கு உதவின. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுத் தீர்மானப்படி இந்தியக் கம்யூனிஸ்டுகளுடன் வேலையை நடத்தும் பொறுப்பு பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 1925—1928ல் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளின் பிரதிநிதிக் குழுக்கள் இந்தியாவுக்கு வருகை தந்தன. வெகுஜனப் புரட்சி நிறுவனத்தையும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியையும் அமைப்பதை இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி நோக்கமாகக் கொண்டது.

அயல் நாடுகளில் வசித்த இந்தியக் கம்யூனிஸ்டுகளின் குழு 1924ம் ஆண்டு முதல் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அயல்நாட்டு அலுவலகமாக எம். என். ராயின் தலைமையில் செயல்படத் தொடங்

கிற்று. 1927ல் பம்பாய் நகரில் நடந்த மூன்றாவது மகாநாட்டில் ஏற்கப்பட்ட கட்சியின் விதித் தொகுப்பில் இது பிரதிபலித்தது.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உருவாக்கம் நாட்டில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் புதிய கட்டத்தைக் குறித்தது. தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டம் ஊக்கமடைந்ததுடனும் தொழிற்சங்கங்களின் செயல்கள் விரிவானதுடனும் இது ஒருங்கு நிகழ்ந்தது.

1923—1927ல் தொழிலாளர் இயக்கம். தொழிலாளி-விவசாயிக் கட்சிகள்

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் 1922ம் ஆண்டில் தொடங்கிய தணிவு தொழிலாளர் இயக்கத்தையும் பாதித்தது. அடுத்து வந்த ஆண்டுகளில் வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கையும் அவற்றில் கலந்து கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையும் குறைந்தன. ஆயினும் வேலைநிறுத்தங்கள் முன்னிலும் நன்றாக ஒழுங்கமைக்கப்பட்டன, அதிகம் நீடித்தும் விடாப்பிடியாகவும் நடந்தன. 1924லும் 1925லும் வேலைநிறுத்தப் போராட்டம் சிறப்பாகக் கடுமையாக நடந்தது. இந்த ஆண்டுகளில் முறையே 87 லட்சம், 125 லட்சம் வேலை நாட்கள் இழக்கப்பட்டன (1922ல் இந்தத் தொகை 39 லட்சமாகவும் 1926ல் பத்து லட்சமாகவும் 1927ல் இருபது லட்சமாகவும் இருந்தது). வேலைநிறுத்தங்கள் வழக்கமாகத் தற்காப்புத் தன்மை கொண்டிருந்தன. சம்பளக் குறைப்பு, வேலை நாள் நேர நீடிப்பு முதலியவற்றுக்கு எதிராக அவை நடந்தன. தொழிலாளி வர்க்கத்தின் ஆகப் பெரிய போராட்டங்களாக விளங்கியவை 1924லும் 1925லும் பம்பாய் நெசவாலைத் தொழிலாளர்களின் பொது வேலைநிறுத்தங்களும் 1926லும் 1927லும் இருப்புப் பாதைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களும் ஆகும். இந்த ஆண்டுகளில் பம்பாய்ப் பாட்டாளி வர்க்கம் இந்தியத் தொழிலாளர் இயக்கத்தின் முன்னணிப் படையாகத் திகழ்ந்தது.

தொழிலதிபர்களும் அவர்களுக்கு ஆதரவாயிருந்த காலனியாட்சி நிர்வாகத்தினரும் தாக்குதல் நடத்தினர்கள். தொழிலாளர் நிறுவனங்களின் நடவடிக்கைகள் மீது அரசாங்கக் கண்காணிப்பை நிலை நாட்டிய விசேஷத் தொழிற்சங்கச் சட்டம் 1926ல் பிறப்பிக்கப்பட்டது. இந்த நிலைமைகளில் பெரும் பகுதி வேலைநிறுத்தங்கள் தொழிலாளர்களின் தோல்வியில் முடிந்தன. தொழிற்சங்கங்களின் தலைமை தேசியச் சீர்திருத்தவாதிகளிடம் இருந்தது இதற்குப் பெருமளவு காரணம் ஆகும்.

1918—1922ல் நிகழ்ந்த புரட்சியின் ஏற்றம் தணிந்த பிறகு கடந்த ஆண்டுகளில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சியும் அவற்றின் நிறுவன அமைப்பின் உறுதிப்பாடும் காணப்பட்டன. தொழிற்சங்க இயக்கம் விரிவடைந்ததற்கு முக்கியக் காரணம் பம்பாய் அலுவலர்களும் தொழிற்சாலைத் தொழிலாளிகளும் அதில் சேர்ந்ததுதான் என்பது உண்மையே. 1926ல் சுமார் மூன்று லட்சம் உறுப்பினர்கள் அடங்கிய ஒரு இருநூறு தொழிற்சங்கங்கள் இந்தியாவில் இருந்ததாகக் கணக்கிடப்பட்டன. இவற்றில் மொத்தம் 125 ஆயிரம் உறுப்பினர்கள் கொண்ட ஐம்பத்தேழு தொழிற்சங்கங்கள் அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசில் சேர்ந்திருந்தன.

இந்தியாவில் கம்யூனிஸ்டு இயக்கம் தோன்றியதால் தொழிற் சங்க இயக்கம் புதிய பண்புகள் பெற்றது. முதல் கம்யூனிஸ்டுக் குழுக்களின் உறுப்பினர்கள் வேலைநிறுத்தங்களை ஒழுங்கமைப்பதிலும் தொழிலாளர்கள், அலுவலர்களின் வட்டாரச் சங்கங்களை வழிகாட்டி நடத்துவதிலும் துடியாகப் பங்கு கொள்ள முற்பட்டார்கள். கம்யூனிஸ்டுக் குழுக்களின் பல தலைவர்கள் (உதாரணமாக எம். அகமது, குலாம் உசேன், பம்பாய்க் குழுவின் தலைவர்கள் முதலியோர்) தொழிற் சங்கங்களின் நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டிருந்தது இதற்கு உதவியாக இருந்தது. 1925ல் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி தோன்றிய பின் தொழிற்சங்கங்களில் கம்யூனிஸ்டுகளின் செயலூக்கம் குறிப்பிடத் தக்கவாறு அதிகரிக்கலாயிற்று.

கம்யூனிஸ்டுகளதும் பிற தீவிரவாதிகளதும் செல்வாக்கினால் தொழிற்சங்க சம்மேளனத்தின் மகாநாடுகளில் அரசியல் தன்மை வாய்ந்த தீர்மானங்கள் ஏற்கப்பட்டன: 1924ல்—உழைப்பாளிகளின் போராட்டங்களை நசுக்குவதற்குப் போலீஸ் பயன்படுத்தப்படுவதற்கு எதிராக; 1925ல்—தொழிலாளர்களுக்கு வாக்குரிமை அளிக்குமாறு கோரி; 1926ல்—''தீண்டாமைக்கும்'' இன வேறுபாட்டு உணர்ச்சிக்கும் எதிராக.

இந்த ஆண்டுகளில் நிறுவன அமைப்பு உள்ள தொழிலாளர் இயக்கத்தின் தலைமைக்காக ஒரு புறம் தேசிய-சீர்திருத்தவாதிகளுக்கும் மறு புறம் கம்யூனிஸ்டுகளுக்கும் புரட்சி ஜனநாயகவாதிகளுக்கும் இடையே போராட்டம் தொடங்கியது. பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் 1925—1927ல் பல பிரதிநிதிக் குழுக்களை இந்தியாவுக்கு அனுப்பி, இந்தியத் தொழிற்சங்கங்களைத் தங்கள் செல்வாக்குக்கு உட்படுத்த முயன்றார்கள்.

1927ம் ஆண்டு கான்பூரில் நடந்த தொழிற்சங்க சம்மேளனத்தின் எட்டாவது மகாநாட்டில் வெவ்வேறு அரசியல் சக்திகளுக்கு இடையே போராட்டம் மூண்டது. அனைத்து இந்தியத் தொழிற்சங்க

சம்மேளனம் மஞ்சள் தொழிற்சங்கங்களின் ஆம்ஸ்டர்டாம் அகிலத்தில் சேர வேண்டும் என்று பிரிட்டிஷ் தொழிற்சங்கப் பொதுக் கவுன்சில் முன்வைத்த யோசனை மகாநாட்டில் நிராகரிக்கப்பட்டது. தொழிற்சங்க அகிலத்தில் உறுப்பு ஏற்கும்படியும் ஏகாதிபத்திய எதிர்ப்பு லீகில் சேரும்படியும் இடதுசாரியினர் பிரேரித்த யோசனையையும் மகாநாடு ஏற்கவில்லை. தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைமைக் குழுவில் பெரும்பான்மை முன்போலவே தேசிய-சீர்திருத்தவாதிகளிடம் இருந்தது. எனினும் அதில் குறித்த பதவிகளைக் கம்யூனிஸ்டுகளின் பிரதிநிதிகளும் வகித்தார்கள். பம்பாய் தொழிலாளி-விவசாயிக் கட்சித் தலைவர் தேங்கடி சம்மேளத்தின் உதவித் தலைவராகவும் டாங்கே உதவிப் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தொழிலாளர் இயக்கத்தில் கம்யூனிஸ்டுகளின் நிலைகள் உறுதிப்படுவதற்கு அவர்கள் நிறுவிய தொழிலாளி-விவசாயிக் கட்சிகளின் செயல்கள் துணை புரிந்தன.

உழைப்பாளி மக்களின் சட்டபூர்வமான வெகுஜன நிறுவனத்தை —தொழிலாளி-விவசாயிக் கட்சியை—கம்யூனிஸ்டுகளின் தலைமையில் நிறுவுவதற்கான முதல் முயற்சி 1923லேயே சிங்காரவேலு செட்டியாரால் (சென்னை) மேற்கொள்ளப்பட்டது, ஆனால் பலிக்காது போயிற்று. 1926—1928ல் தொழிலாளி-விவசாயிக் கட்சிகள் முதலில் வங்காளத்திலும் பின்பு பம்பாய் மாகாணத்திலும் பஞ்சாபிலும் ஐக்கிய மாகாணத்திலும் அமைக்கப்பட்டன. இந்த நிறுவனங்களின் தலைமையில் கம்யூனிஸ்டுகளோடு கூடவே புரட்சி ஜனநாயகவாதிகளும் இடம் பெற்றார்கள்.

தொழிலாளி வர்க்கம், விவசாயிகள் சமூகம், நடுத்தர நகர வட்டாரங்கள் ஆகியவற்றின் மீது கம்யூனிஸ்டுகளின் செல்வாக்குக்கு மிக முக்கியச் சாதனங்களாகத் தொழிலாளி-விவசாயிக் கட்சிகள் இந்த ஆண்டுகளில் விளங்கின. தொழிலாளர்களின் பல தொழிற்சங்கங்களும் முப்பதுக்களின் தொடக்கத்தில் ஒரு சில இடங்களில் அமைந்த கிஸான் சபாக்களும் (விவசாயிகள் கழகங்கள்) கம்யூனிஸ்டுகளின் தலைமையில் செயலாற்றின.

இந்தக் கட்சிகள் தொழிலாளி வர்க்கத்தினதும் விவசாயிகள் சமூகத்தினதும் நலன்களைக் காத்துப் போராடின. உதாரணமாக ஜமீன்தாரி முறையை ஒழிக்குமாறு கோரின, பூரண சுதந்திரத்தை ஆதரித்தன. தொழிலாளி விவசாயிக் கட்சிகளின் வேலைத்திட்ட தஸ்தாவேஜுகள் பிரசுரிக்கப்பட்டதும் தேசியக் காங்கிரசுக்கு அவை வேண்டுகோள் விடுத்ததும் காங்கிரசுக்கும் இடதுசாரி அமைய வாய்ப்பு அளித்தன. இக்கட்சிகளின் செயல்கள் பற்றிய பிரசாரத்

தில் இவற்றின் பத்திரிகை வெளியீடுகள் குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றின. இவையாவன, வங்காளத்தில் கணவாணி (மக்கள் குரல்), பம்பாயில் கிராந்தி (புரட்சி), பஞ்சாபில் கிர்த்தி (தொழிலாளி), மேஹ்னத்கஷ் (உழைப்பாளி), மஸ்தூர் கிஸான் (தொழிலாளியும் விவசாயியும்) முதலியன.

கம்யூனிஸ்டுகளுடையவும் தொழிலாளி-விவசாயிக் கட்சிகளுடைய வும் செயல்கள் விடுதலை இயக்கத்தின் புதிய ஏற்றம் தொடங்கு வதற்கு ஏற்ற முதனிலைகள் உருவாக உதவின.

உள்நாட்டு அரசியல் நிலைமையில் நெருக்கடி 1927ம் ஆண்டின் இறுதியில் தொடங்கியது .இதியாவின் ஆட்சி பற்றிய புதிய சட்டத் தின் மசோதாவைத் தயாரிப்பதற்காக சைமனின் தலைமையில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பதாக அப்போது பிரிட்டிஷ் அரசாங் கம் அறிவித்தது. இந்தக் கமிஷனில் இந்திய மக்களின் பிரதிநிதிகள் சேர்த்துக் கொள்ளப்படாதது நாட்டினர் அனைவருக்கும் ஆத்திரம் ஊட்டியது. காங்கிரசின் சென்னை மகாநாடு சைமன் கமிஷனை பகிஷ்கரிப்பது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. பிரிட்டிஷ் காலனியாட்சிக் கொள்கைக்கு எதிராக நாடு முழுவதிலும் கண்டன இயக்கம் தீவிரமாகப் பரவியது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் ஏற்றமும் ஒன்றித்த முன்னணிக்கான போராட்டமும் (1928—1939)

1918—1922ல் இந்தியாவில் புரட்சி ஏற்றத்தைத் தோற்றுவித்த பொருளாதார, சமுதாய-அரசியல் காரணங்கள் அகற்றப்படவில்லை. அடுத்து வந்த ஆண்டுகளில் ஏகாதிபத்தியம் நடத்திய எதிர்த்தாக்கு காலனியாட்சி அமைப்புக்கும் இந்திய சமூகத்தின் பல்வேறு வர்க்கங் களுக்கும் இடையே முரண்பாடுகள் கூர்மைப்பட வழி வகுத்தது.

இந்த நிலைமைகளில் தேசிய முதலாளித்துவம் மேற்கொண்டு வளர்ச்சி அடைந்தது பிரிட்டிஷ் ஏகபோகங்களுக்கும் இந்தியத் தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் இடையே முரண்பாடுகளை இன்னும் அதிகமாகக் கூர்மையாக்கியது.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் புதிய ஏற்றம்

இந்தியாவின் பொருளாதார நிலைமை மீது உலகப் பொருளாதார நெருக்கடியின் செல்வாக்கு

1929ம் ஆண்டில் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக் கடி இந்தியாவின் தேசியப் பொருளாதாரத்தைக் கடுமையாக உருக்குலைத்தது. விவசாய நெருக்கடி—விவசாய விளைபொருள்களின் விற்பனையில் நெருக்கடி—இன்னும் முன்பே, 1927—1928லேயே தொடங்கி விட்டது. விவசாயச் சரக்கு உற்பத்தியின் பல வகைப் பண்டங்களின் விலைகளில் வீழ்ச்சி மிகக் கணிசமாக இருந்தது. உதாரணமாக, கோதுமையின் விலை பேர் பாதியாகவும் சணலின் விலை இரண்டு, மூன்று மடங்கும் குறைந்து விட்டன. இதே சமயத்தில்

காலனியாட்சி அதிகாரிகள் நிலவரி விகிதங்களை மறு பரிசீலனை செய்து கணிசமாக உயர்த்தினார்கள். விளைவாக வேளாண்மைத் தொழிலின் உண்மை வருவாய் வெகுவாகக் குறைந்தது. பாதகமான சந்தை நிலைமைகளின் சேர்க்கை காரணமாக விளைந்த இழப்புக்களைக் குறைப்பதற்காக நிலச் சொந்தக்காரர்கள் திரளான குத்தகைக்காரர்களிடமிருந்து பண்டக் குத்தகைக்குப் பதில் பணக் குத்தகை வாங்கத் தலைப்பட்டார்கள். குத்தகைக்காரர்களுடையவும் சிறு உடைமையாளர்களுடையவும் சீரழிந்த பண்ணைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. விவசாயிகளின் நிலங்களது உடைமை மாற்றம் தீவிரமாயிற்று. மேலும் மேலும் அதிக எண்ணிக்கையில் நிலப்பிரபுக்களதும் வட்டித் தொழிலர்களதும் உயர்நிலை வேளாளர்களதும் கைகளுக்கு மாறலாயின. வட்டித் தொழிலர்களுக்கு விவசாயிகள் பட்டிருந்த கடன் சுமை ஒரேயடியாக அதிகரித்து 900 கோடி ரூபாய் வரை போய் விட்டது.

நாட்டுப்புறத்தை அடுத்து நகர்ப்புறமும் நெருக்கடிக்கு உள்ளாயிற்று. தொழிற்சாலைகளும் சிறு தொழில் நிலையங்களும் மூடப்பட்டன. உற்பத்தியைச் சீருறப் புதுக்கும் வியாஜத்தில் தொழிலாளர்கள் திரளாக வேலையிலிருந்து நீக்கப்பட்டதும் அதே சமயம் விலைவாசி உயர்வும் சேர்ந்து தொழிலாளி வர்க்கத்தினதும் சிறு அலுவலர்களதும் நிலைமையை மோசமாக்கின.

காலனிகளின், முதன்மையாக இந்தியாவின் தலையில் கை வைத்துப் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபட பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் முயன்றது. இந்தியாவின் ஏற்றுமதிச் சரக்குகளுடைய விலைகளுக்கும் அயல் நாடுகளின், முதன்மையாக பிரிட்டனின் இறக்குமதிச் சரக்குகளுடைய விலைகளுக்கும் இடையே இருந்த பிளவு இந்த ஆண்டுகளில் வெகுவாக அதிகரித்தது.

விலைவாசிகளின் இடையறுத உயர்வு, திரளான சிறு உற்பத்தியாளர்களின் சீரழிவு ஆகியவற்றின் நிலைமைகளில் இந்தியர்களில் பெரும் பகுதியினர் தங்கள் சேமிப்புக்களை விற்றுக் காசாக்குவது இன்றியமையாதது ஆயிற்று. இவை மரபு வழி வந்த வடிவில் தங்க, வெள்ளி நகைகளாக இருந்தன. பிரிட்டிஷ் வங்கிகள் தங்கள் வட்டித் தொழில் ஏஜெண்டுகள் மூலமாகச் செயலாற்றி நெருக்கடி ஆண்டுகளில் இந்தியாவிலிருந்து சுமார் 300 கோடி ரூபாய் பெறுமானமுள்ள விலை மிக்க உலோகங்களைத் தங்கள் நாட்டுக்கு அனுப்பின.

நெருக்கடியால் பாதிக்கப்பட்டது உழைப்பாளிகளின் நிலைமை மட்டும் அல்ல. ஏராளமான சிறு, நடுத்தரத் தொழில் நிலையங்களும் வர்த்தக நிலையங்களும் திவாலாயின. இந்தியாவில் தொழில் நடத்தி வந்த அயல்நாட்டு ஏகபோகங்களோடு இந்தியப் பெரு முதலாளி

வர்க்கம் மட்டுமே நாட்டின் பொருளாதாரத்தில் தனது நிலைகளை உறுதிப்படுத்திக் கொண்டது. எனினும், காலனியாட்சி அமைப்பு நிலைத்திருந்த நிலைமைகளில் இந்தியத் தேசிய முதலாளி வர்க்கத்தின் உயர்படியினர் தொழில் முயற்சித் துறையில் தங்கள் நிலைகளை விரிவுபடுத்திக் கொண்டதும் ஏகாதிபத்தியத்துடன் அவர்களது முரண்பாட்டை ஆழமாக்கியது.

இவ்வாறு பொருளாதார நெருக்கடி வர்க்க ரீதியான முரண்பாடுகளையும் தேசிய முரண்பாடுகளையும் ஒரேயடியாக அதிகமாக்கி, அந்தக் காரணத்தினாலேயே நாட்டில் வர்க்கப் போராட்டத்தையும் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் தீவிரப்படுத்தியது.

1928—1929ல் தொழிலாளர் இயக்கம்

நாட்டில் புரட்சி ஏற்றம் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களுடன் மீண்டும் தொடங்கியது. வேலைநிறுத்தப் போராட்டம் புத்துயிர் பெற்றது. 1928லேயே ஐந்து லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். இருபதுக்களின் முடிவிலும் முப்பதுக்களின் தொடக்கத்திலும் நடந்த வேலைநிறுத்தங்கள் முந்திய பத்தாண்டுக் காலத்தில் நடந்த தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்துடன் ஒப்பிடுகையில் சில புதிய அம்சங்கள் கொண்டிருந்தன.

வேலைநிறுத்தக் கமிட்டிகள் அமைத்தல், தொழில் நிலையங்களில் மறியல் செய்தல் போன்ற செயல் வடிவங்கள் வேலைநிறுத்தங்களின் போது மேலும் மேலும் அடிக்கடி கையாளப்பட்டன. நிறுவன அமைப்புள்ள தொழிலாளர் இயக்கத்தின் உள்ளேயோ, ஒரு தரப்பில் கம்யூனிஸ்டுகளுக்கும் அவர்களோடு இணைந்த ஜனநாயகவாதிகளுக்கும் மறு தரப்பில் தேசிய-சீர்திருத்தவாதிகளுக்கும் இடையே தொழிலாளர் தொழிற்சங்கங்களதும் வேலைநிறுத்தக் கமிட்டிகளதும் தலைமைக்காகப் போராட்டம் மேலும் மேலும் கூர்மையாகிக் கொண்டு போயிற்று.

இந்தப் போராட்டத்தின் பயனாகப் புரட்சிகரத் தொழிற்சங்கங்கள் உருவாயின. இவை பொருளாதாரப் போராட்டத்தையும் அரசியல் போராட்டத்தையும் தங்கள் வேலையில் பொருத்தமாகச் சேர்த்தன, தொழிலாளர்களின் வர்க்க நலன்களை ஒத்திசைந்த முறையில் காத்தன.

இம்மாதிரியான முதல் தொழிற்சங்கம் பம்பாயில் நெசவாலைத் தொழிலாளர்களின் பொது வேலைநிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்கை

யில் தோன்றியது. இதுவே பிற்காலத்தில் நாட்டில் இடதுசாரித் தொழிற்சங்க இயக்கத்தின் அடித்தளமாக அமைந்த கிர்னி காம்கார் லால் பாவ்ட்டா (ஆலைத் தொழிலாளர் சிவப்புப் பாவட்டா). எஸ். ஏ. டாங்கேயும் இந்தியாவில் வேலைசெய்து வந்த பிரிட்டிஷ் கம்யூனிஸ்டு பி. பிராட்லியும் இதன் தலைவர்களாக இருந்தார்கள்.

பம்பாய் நெசவாலைகளில் திரளான கதவடைப்புக்கள் நிகழ்ந்து பல்லாயிரம் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்ட பிறகு தொடங்கிய இந்த வேலைநிறுத்தம் நீடித்த தன்மையை மேற்கொண்டு பம்பாய் நெசவாலைத் தொழிலாளர்கள் அனைவரையும் பற்றியது. ஆறு மாத காலத்தில் (வேலைநிறுத்தம் 1928 ஏப்ரல் முதல் அக்டோபர் முடிய நீடித்தது) இரண்டு கோடிக்கும் மேல் வேலை நாட்கள் வீணையின. வேலைநிறுத்தக்காரர்களின் நிலையுறுதி நாட்டின் தொழிலாளர் இயக்கம் அனைத்தின் மீதும் பெருத்த பாதிப்பு விளைத்தது. ஷோலாப்பூரையும் பிற இயந்திரத் தொழில் மையங்களையும் சேர்ந்த தொழிலாளர்களும் இருப்புப் பாதைத் தொழிலாளர்களும் தங்கள் வர்க்கத் தோழர்களுக்கு ஆதரவாகப் போராட்டம் நடத்தினர்கள். இந்தியாவிலும் பிரிட்டனிலும் சோவியத் யூனியனிலும் வேலை நிறுத்தக்காரர்களின் நிதிக்காகப் பணம் திரட்டப்பட்டது.

வேலைநிறுத்த ஒழுங்கமைப்பாளர்களுக்கு எதிராக அடக்குமுறை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கருங்காலிகளின் துணையாலும் இத்தகைய பிற வழிகளாலும் வேலைநிறுத்தத்தை முறிக்க முயற்சிகள் செய்யப்பட்டன. ஆயினும் தொழிலதிபர்களும் காலனியாட்சி அதிகாரிகளும் விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. வேலைநிறுத்தக்காரர்கள் முன்வைத்த பொருளாதாரக் கோரிக்கைகளை (சம்பளக் குறைப்பும் வேலை நீக்கங்களும் ''தீண்டத் தகாதவர்கள்'' பால் வேற்றுமை பாராட்டுவதும் நிறுத்தப்பட வேண்டும்) ஆராய்வதற்கு விசேஷக் கமிட்டி அமைக்கப்பட்டது. கிர்னி காம்கார் பம்பாய் நெசவாலைத் தொழிலாளிகளின் பிரதிநிதித் தொழிற்சங்கமாக ஏற்கப்பட்டது. வேலைநிறுத்தக் கமிட்டித் தலைவர்கள் குற்றச் சட்ட வகையில் துன்புறுத்தப்படுவது நிறுத்தப்பட்டது.

பம்பாய் நெசவாலைத் தொழிலாளர்களின் பொது வேலைநிறுத்தம் இந்தியாவின் தொழிலாளர் இயக்க வரலாற்றில் புகழ் மிக்க ஏடாக இடம் பெற்றது. இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் அடுத்து வந்த போராட்டங்களுக்கு ஒரு வகையில் புரட்சி முன்னேற்றம் அளித்தது அது.

கிர்னி காம்கார் தொழிற்சங்கம் அமைக்கப்பட்டதும் அதன் முதல் வெற்றிகளும் அனைத்து இந்தியத் தொழிற்சங்க சம்மேளனத்தில் இடதுசாரி உரு ஆவதை விரைவுபடுத்தின. இந்த ஆண்டுகளில்

கம்யூனிஸ்டுகள் தொழிற்சங்க சம்மேளனத்தில் மேலும் மேலும் அதிகக் குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றலாயினர்.

சுதந்திர இந்தியாவில் சோஷலிஸக் குடியரசு நிறுவப்படும் என்றும் நிலமும் தொழில்துறையும் அதில் தேசிய உடைமை ஆக்கப்படும் என்றும் 1928ல் ஜரியாவில் (வங்காளம்) கூடிய தொழிற்சங்க சம்மேளனத்தின் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தொழிற்சங்க இயக்கத்தின் அரசியல் வேலைத்திட்டம் கணிசமாகத் தீவிரம் ஆக்கப்பட்டதை இது காட்டியது.

இந்தியாவின் தொழிற்சங்க நிறுவனங்களில் இடதுசாரிச் சக்திகள் வலுவடைந்தது குறித்து 1929ல் பிரிட்டனில் ஆட்சிக்கு வந்த தொழிற் கட்சியினர் இரு வகையான உணர்ச்சிகளை வெளியிட்டார்கள். ஒரு புறம் இந்தியாவின் தொழிலாளி வர்க்கத்துக்கு ஆதரவாகச் சில பகட்டான சைகைகள் செய்தார்கள். உதாரணமாக, தொழிலாளி வர்க்கத்தின் நிலைமையை ஆராய்வதற்கு அரசுக் கமிஷனை (விட்லி கமிஷன்) நிறுவினார்கள். மறு புறம், நிறுவன அமைப்புள்ள தொழிலாளர் இயக்கத்தைக் கொடுமையாக நசுக்கும் முந்திய கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்தார்கள். தொழிலாளர்களின் அரசியல் நிறுவனங்களை அமைப்பதற்குத் தடை விதிப்பவையும் தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தூய பொருளாதாரப் பிரச்சினைகளுக்குள் குறுக்குபவையும் கம்யூனிஸ்டு நடவடிக்கைகள் மீது அடக்குமுறையைத் தீவிரப்படுத்துபவையுமான சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன.

இடதுசாரித் தொழிற்சங்கங்களை ஆதரித்த தொழிற்சாலைக் கமிட்டி உறுப்பினர்கள் துன்புறுத்தப்படுவது தொடங்கியது. கிர்னி காம்கார் நிறுவனத்தைக் காக்க பம்பாய் நெசவாலைத் தொழிலாளர்கள் மீண்டும் எழுந்தார்கள். 1929 மார்ச்சு மாதம் அவர்கள் மறுபடி பொது வேலைநிறுத்தம் ஆரம்பித்தார்கள். ஆனால் தொழிற்சங்கங்களில் இடதுசாரியின் தலைமை தாங்கும் மையக் குழு கைது செய்யப்பட்டதால் இந்த வேலைநிறுத்தம் தோல்வியில் முடிந்தது.

தொழிற்சங்க இயக்கத்தில் கம்யூனிஸ்டுகளதும் இடதுசாரிக் காங்கிரஸ்காரர்களதும் செல்வாக்கு அதிகரித்ததால் தேசிய-முதலாளித்துவ வட்டாரத்தினர் ஆழ்ந்த கவலைக்கு உள்ளானார்கள். 1929ம் ஆண்டு நவம்பர் மாதம் நாகபுரியில் நடந்த பத்தாவது மகாநாட்டில் அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசின் வலதுசாரியினர் தொழிற்சங்க மையத்தில் கிர்னி காம்கார் நிறுவனம் ஏற்கப்படுவதைத் தடை செய்ய முயன்றார்கள். தாங்கள் சிறுபான்மையினர் என்று கண்டதும் அவர்கள் தொழிற்சங்கக் காங்கிரசிலிருந்து வெளியேறி இந்தியத் தொழிற்சங்க சம்மேளனம் என்னும் புதிய அனைத்து

இந்தியத் தொழிற்சங்க மையத்தை அதே ஆண்டு டிசம்பர் மாதம் அமைத்தார்கள். வி. வி. கிரியும் என். எம். ஜோஷியும் இதன் தலைவர்கள் ஆனார்கள். இந்தியாவின் ஒன்றித்த தொழிற்சங்க இயக்கத்தில் முதல் பிளவு இவ்வாறு ஏற்படுத்தப்பட்டது.

தொழிற்சங்கங்களின் நாகபுரி மகாநாடு விட்லி கமிஷனைப் பகிஷ்கரிப்பது என்று முடிவு செய்தது. சுபாஷ் சந்திர போஸ் தொழிற் சங்கக் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கம்யூனிஸ்டுகளுக்கும் அவர்களோடு சேர்ந்த புரட்சிகர ஜனநாயகவாதிகளுக்கும் காங்கிரசின் இடதுசாரியினருக்கும் இடையே ஒத்துழைப்புக்கு அனுகூலமான வாய்ப்புக்கள் உருவாகி இருப்பதை இந்தியாவின் தொழிலாளர் இயக்கத்தின் நிகழ்ச்சிப் போக்கு காட்டியது. ஆயினும் இந்த வாய்ப்புக்கள் பயன்படுத்தப்படவில்லை. கம்யூனிஸ்டுகள் மேற்கொண்ட நிலைகளும் இதற்கு ஒரு வகையில் காரணமாய் இருந்தன.

கம்யூனிஸ்டு இயக்கத்தில் இருந்த நிலைமை

இருபதுக்களின் முடிவிலும் முப்பதுக்களின் தொடக்கத்திலும் கம்யூனிஸ்டுகளுடைய வேலையின் மையம் தொழிற்சங்கங்களில் இருந்தது. அவற்றில் ஓரளவு வெற்றிகளும் பெறப்பட்டன. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வெகுஜனச் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான மற்றொரு சாதனமாக விளங்கியவை தொழிலாளி-விவசாயிக் கட்சிகள். தொழிலாளர் இயக்கம் ஏற்றம் பெற்றதால் இவற்றின் நடவடிக்கைகள் வெளிப்படையாகச் சுறுசுறுப்பு அடைந்தன.

1928ம் ஆண்டு டிசம்பரில் தொழிலாளி-விவசாயிக் கட்சியின் முதலாவது மகாநாடு நடைபெற்றது. தனித் தனி மாகாணங்களில் இதே பெயருடன் நிலவி வந்த நிறுவனங்களை இந்தக் கட்சி ஒன்றுக்கியது.

இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் பெற்றுத் தருவது குறிக்கோள் என மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்தன, தேசிய விடுதலை இயக்கத்தில் தொழிலாளி வர்க்கம் தலைமைச் செல்வாக்கு பெறும் என இதனால் அனுமானிக்கப்பட்டது. தொழிலாளர்களதும் விவசாயிகளதும் வர்க்கப் போராட்டம் தீவிரம் ஆக்கப்படுவதன் முக்கியத்துவத்தை மகாநாடு வலியுறுத்தியது.

வங்காளம், பஞ்சாப், பம்பாய் ஆகிய மாகாணங்களின் தொழிலாளர்கள் இடையிலும் கல்லூரி மாணவ இளைஞர்கள் இடையிலும் கம்யூனிஸ்டுகள் ஆக அதிகமான செல்வாக்கு பெற்றிருந்தார்கள். இளைஞர் நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. இவற்றில் ஒன்று **நவ ஜவான் பாரத் சபா (இளம் இந்தியக் கழகம்).**

வெகுஜன நிறுவனங்களில் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு விரிவடைவதைத் தடுக்கும் நோக்கத்துடன் காலனியாட்சி நிர்வாகம் 1929ல் இடதுசாரிச் சக்திகளின் தலைமை மீது தாக்கு தொடுத்தது. பிரிட்டிஷ் அரசனுக்கு எதிராகச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு 33 இடதுசாரித் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட 14 கம்யூனிஸ்டுகள் இவர்களில் இருந்தார்கள். கைதானவர்களில் 18 பெயர் தொழிற்சங்கத் தலைவர்கள். மீரட் சதி வழக்கு என்று (விசாரணை நடந்த நகரின் பெயரால்) அழைக்கப்பட்ட இந்த வழக்கு விசாரணை நான்கு ஆண்டுகள் நீடித்தது. இந்தியாவில் பிரிட்டிஷ் காலனியாட்சிக் கொள்கையை அம்பலப்படுத்துவதற்கும் விஞ்ஞான சோஷலிஸக் கருத்துக்களைப் பிரசாரம் செய்வதற்கும் ஏற்ற மேடையாகக் கம்யூனிஸ்டுகள் இதைத் திறமையாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். தேசியக் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் உட்பட நாட்டின் விரிவான சமூகப் பிரதிநிதி வட்டாரத்தினர் மீரட் காவல் கைதிகளை ஆதரித்தார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களின் தரப்பில் வழக்காடுவதற்கான தனிக் கமிட்டிகள் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் அமைக்கப்பட்டன.

சிறைப்படாமல் வெளியில் இருந்த கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களில் ஒரு பகுதியினர் குறுகிய பிரிவுவாத நிலைகளை மேற்கொண்டார்கள். இந்தியாவில் கம்யூனிஸ்டு இயக்கத்துக்குப் பெருங் கேடு இதனாலும் விளைந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் இன்டர்நேஷனல் பிரெஸ் கரெஸ்பாண்டன்ஸ் (சர்வதேசப் பத்திரிகை நிருபம்) என்னும் பத்திரிகையில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி நடவடிக்கைகளின் கொள்கைத் திட்ட முன்வரைவு வெளியிடப்பட்டது. ஆயுதக் கிளர்ச்சி மூலம் சோஷலிஸப் புரட்சி நடத்தி சோவியத் ஆட்சியை நிலைநாட்டும்படி அதில் கூறப்பட்டிருந்தது. இது அந்தக் காலத்து இந்தியாவின் நோக்கில் குறுகிய இடதுசாரிப் பிரிவுவாதத் தன்மை கொண்டிருந்தது. இந்தக் கட்டளையைப் பின்பற்றிய காரணத்தால் தேசியக் காங்கிரசின் தலைமையில் 1931—1932ல் நடந்த வெகுஜன இயக்கத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி பங்கு கொள்ளவில்லை.

தொழிற்சங்கங்களது புரட்சிகர மையக் கருத்தைக் கைவிடப்பட்டது, அவை பிளவுபட்டது, கம்யூனிஸ்டுகள் குறுகிய இடதுசாரிப் பிரிவுவாதப் போக்கை மேற்கொண்டது ஆகிய இவை யாவும் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தைப் பாதித்தன, புரட்சி அலை மேற்கொண்டு ஏற்றம் பெற்ற போதிலும் வேலைநிறுத்த இயக்கம் 1927—1929 மட்டத்தை எட்டவில்லை.

பெருந் தீபகற்ப இருப்புப் பாதைத் தொழிலாளர்களும் அலுவலர்களும் நடத்திய வேலைநிறுத்தம் 1930ம்—1933ம் ஆண்டுக் காலப்

பகுதியில் நடந்த மிகப் பெரிய வேலைநிறுத்தமாக விளங்கியது. எண் பதினாயிரம் பேருக்கு மேல் அதில் கலந்து கொண்டார்கள். காலனி யாட்சிக் கால இந்தியாவில் நெசவாலைத் தொழிலாளர்களுக்கு இணை யாகத் தொழிலாளி வர்க்கத்தின் ஊக்கம் மிக்க முன்னணியாக விளங் கினார்கள் இருப்புப் பாதைத் தொழிலாளர்கள். அவர்களுடைய வேலை நிறுத்தம் அசாதாரணப் பிடிவாதத்துடன் நடந்தது. தொழிற்சங்கத் தலைவர்கள் சமரசப் போக்கை மேற்கொண்டதையும் பெருவாரியான கதவடைப்புக்கள் நடந்ததையும் படையினர் ஏவப்பட்டதையும் பொருட்படுத்தாமல் வேலைநிறுத்தம் ஏறத்தாழ ஓர் ஆண்டு நீடித்தது. மற்ற இருப்புப் பாதைத் தொழிலாளர்களும் அலுவலர்களும் இதை ஆதரித்தார்கள்.

ஆயினும் தொழிற்சங்க மையத்தில் ஏற்பட்ட இரண்டாவது பிளவு காரணமாக நிறுவன அமைப்புள்ள தொழிலாளர் இயக்கம் மீண்டும் பலவீனம் அடைந்தது. அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசின் அடுத்த மகாநாடு 1931ம் ஆண்டு கல்கத்தாவில் நடை பெற்ற போது கம்யூனிஸ்டுகளைத் தலைமையில் கொண்ட இடதுசாரி யினர் தாங்கள் தொழிற்சங்க நிறுவனத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்தார்கள். கம்யூனிஸ்டு இருப்புப் பாதைத் தொழிலாளர் பிரதிநிதிகளின் முழு அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளும் பிரச்சினையில் தொழிற்சங்க மையத் தலைமைக் குழுவின் பெரும்பான்மையினரோடு கடுமையான கருத்துவேற்றுமைகள் ஏற்பட்டது இந்த வெளிநடப் புக்குக் காரணம் ஆயிற்று. புதிய அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் கூட்டு நிறுவனம்—சிவப்புத் தொழிற்சங்கக் காங்கிரஸ்—அமைக்கப் பட்டது. இது தொழிற்சங்க அகிலத்துடன் சேர்ந்து கொண்டது.

கம்யூனிஸ்டு அகிலம், சோதரக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஆகிய வற்றின் உதவியால் இந்தியக் கம்யூனிஸ்டுகளின் தவறுகள் திருத்தப் பட்டன. ஜெர்மனி, பிரிட்டன், சீனம் ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகளது இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்குப் பகிரங்கக் கடிதம் கம்யூ னிஸ்டு அகிலத்தின் பத்திரிகைகளில் 1932, ஜூனில் வெளியாயிற்று. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் குறுகிய இடதுசாரிப் பிரிவுவாத நிலை களின் தவறுகள் இதில் எடுத்துக் காட்டப்பட்டிருந்தன. காங்கிரசின் தலைமையில் நடக்கும் அனைத்து மக்கள் இயக்கத்தில் பங்கு கொள்ளும் படியும் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியை உருவாக்க முயலும்படியும் யோசனை கூறப்பட்டிருந்தது.

இந்தியக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் தலைவர்களில் ஒரு பகுதியினர் சிறையில் (மீரட் சதி வழக்கின் தொடர்பில்) இருந்தபடியால் குறு கிய இடதுசாரிப் பிரிவுவாத நிலைகளை மேற்கொள்ளவில்லை. மேற்

குறித்த பகிரங்கக் கடிதம் வெளியானது இந்தியாவில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மீது பயனுள்ள செல்வாக்கு விளைத்தது.

அனைத்து இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி மகாநாடு 1933, டிசம்பர் மாதம் கல்கத்தாவில் நடந்தது. க. அதிகாரியைப் பொதுச் செயலாளராகக் கொண்ட புதிய மத்தியக் கமிட்டியை இந்த மகாநாடு தேர்ந்தெடுத்தது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி கம்யூனிஸ்டு அகிலத்தின் ஒரு பிரிவு ஆயிற்று. இந்தியக் கம்யூனிஸ்டுகள் அனைத்து தேசிய இயக்கத்தில் ஊக்கத்துடன் பங்கு கொள்ளும் போக்கை மேற்கொண்டார்கள். ஆனால் புரட்சி அலையில் ஏற்றம் ஏற்பட்ட பிறகே இது நிகழ்ந்தது.

1928லும் 1929லும் தொழிலாளி வர்க்கம் நடத்திய விறல் மிக்க போராட்டங்கள் நாட்டின் அரசியல் வாழ்க்கை அனைத்தும் புத்துயிர் பெறும் வகையில் தூண்டுதல் அளித்தன.

புதிய இந்திய ஆட்சிச் சட்டத்துக்கான ஏற்பாடும் தேசியக் காங்கிரஸ் மேற்கொண்ட நிலையும்

இந்தியாவை ஆள்வதற்கான புதிய சட்டத்துக்கு ஏற்பாடு செய்யும் பொருட்டு சைமன் கமிஷன் 1928, பிப்ரவரி 3ந் தேதி இந்தியாவுக்கு வந்தது. இதை வியாஜமாகக் கொண்டு நாட்டில் வெகுஜன ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் நிகழ்ந்தன. தேசியக் காங்கிரசும் அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசும் விடுத்த அறைகூவல்களை ஏற்று இந்தியாவின் பெரிய தொழில் மையங்கள் எல்லாவற்றிலும் ''சைமனே, திரும்பிப் போ!'' என்ற கோஷத்துடன் கடையடைப்புக்களும் வேலைநிறுத்தங்களும் நடந்தன. இந்தியாவை ஆள்வதற்கான புதிய சட்டத்திற்கு முன்னேற்பாடு செய்கையில் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய சமூகப் பிரதிநிதிகளுடைய கருத்தைப் புறக்கணித்ததற்கு தேசியக் காங்கிரசும் ஜனநாயக நிறுவனங்களும்— தொழிலாளர்-விவசாயிகள் கட்சிகளும் தொழிற் சங்கங்களும்— மட்டும் அல்ல, முஸ்லிம் லீகும் இந்து மகாசபையும் கூட எதிர்ப்பு தெரிவித்தன. பிற்போக்கு நிலப்பிரபுத்துவக் கட்சிகள் மாத்திரந்தான் சைமன் கமிஷனுடு ஒத்துழைத்தன.

சைமன் கமிஷனை விலக்கீடு செய்ய வேண்டும் என்று நாட்டின் அரசியல் நிறுவனங்கள் அறிவித்தன. மத்தியச் சட்ட சபையின் பெரும் பான்மை உறுப்பினர்கள் இந்த விலக்கீட்டை ஆதரித்தார்கள்.

இந்தியத் தேசியக் காங்கிரசின் முயற்சியால் 1928ம் ஆண்டில் சர்வ கட்சி மகாநாடுகள் கூட்டப்பட்டன. குடியேற்ற நாட்டு அந்தஸ்து வழங்கப்படுவதன் அடிப்படையில் இந்தியாவின் அரசை,

அரசியல் அமைப்பு குறித்த கோட்பாடுகள் இந்த மகாநாடுகளில் ஆராயப்பட்டன.

சைமன் கமிஷனை மக்கள் அனைவரும் விலக்கீடு செய்வதற்கு ஏற்பாடு செய்து (இந்தக் கமிஷனுக்கு எதிர்நிறையாக இந்திய அரசியல் சட்டத்தின் தன் சொந்த மசோதாவைத் தயாரித்ததோடு கூடவே) தனது வெகுஜன அடித்தளத்தை விரிவாக்குவதற்கும் ஏற்ற நடவடிக்கைகளைக் காங்கிரஸ் எடுத்துக்கொண்டது. அனேக நாட்டுப்புற வட்டாரங்களில் காங்கிரசின் கிளைகள் நிறுவப்பட்டன. பெரும்பாலும் வசதியுள்ள விவசாயிகள் இவற்றில் சேர்ந்தார்கள்.

மோ. க. காந்தி, வல்லபாய் படேல், இருவரதும் தலைமையில் பார்டோலி தாலுக்காவில் (குஜராத்து) நில உடைமையாளர்களான விவசாயிகள் நடத்திய வரிகொடாச் சத்தியாக்கிரகம் காங்கிரசின் மதிப்பையும் தனிப்பட்ட முறையில் காந்தியின் மதிப்பையும் மீண்டும் நிலைநாட்ட உதவியது. வரி விகிதங்கள் கணிசமாக உயர்த்தப்பட்டதை எதிர்த்துப் போராட்டம் விரிவாக நடந்தது. போலீஸ் அடக்கு முறைக்கும் நிலப் பறிமுதலுக்கும் கலங்காமல் உறுதியாகப் போராடிய விவசாயிகளுக்கு ஆதரவாகக் காங்கிரஸ் 1928, ஜூன் 12ந் தேதியை அனைத்து இந்திய அளவில் ''பார்டோலி தினமாகக்'' கொண்டாடியது. ஒருமைப்பாட்டுப் பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் எங்கும் நடந்தன.

சத்தியாக்கிரகம் ஓரளவு வெற்றி அடைந்ததும் அதைப் பற்றிய விவரங்கள் தேசியச் செய்தித்தாள்களில் விரிவாகப் பிரசுரமானதும் காந்தி, காங்கிரஸ் தலைவர்கள் ஆகியோரின் செல்வாக்கையும் மக்களிடையே மதிப்பையும் வெகுவாக உறுதிப்படுத்தின.

இதற்கிடையே, மோதிலால் நேருவின் தலைமையில் அமைந்த கமிஷனின் அறிக்கை 1928, ஜூன் மாதம் வெளியாயிற்று. இதில் இந்திய அரசியல் சட்டத்தின் முன்வரைவு அடங்கி இருந்தது. பின்பு இது நேரு அரசியல் சட்டம் என்ற பெயர் பெற்றது. இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளிக்கப்பட இதில் வகை செய்யப்பட்டிருந்தது. தேர்ந்தெடுக்கப்படும் உறுப்புக்கள் வரவு செலவுத் திட்டத்தைக் கண்காணிக்கும் என்றும் வெளி நாட்டுக் கொள்கையையும் தற்காப்பையும் பிரிட்டிஷ் அரசாங்கம் மேற்பார்க்கும் என்றும் இந்த முன்வரைவு கூறியது. நேரு அரசியல் சட்டம் சமஸ்தான மன்னர்களுக்குக் காப்பு அளிக்கும் பகுதிகளைக் கொண்டிருந்தது. அதே சமயம் நாட்டு உழைப்பாளி வெகுஜனங்களுடைய ஜீவாதாரக் கோரிக்கைகளைப் புறக்கணித்தது.

காங்கிரஸ் கட்சியின் வட்டாரக் கிளைகளில் நேரு அரசியல் சட்டம் விவாதிக்கப்பட்ட போது நேரு கமிஷனால் தயாரிக்கப்பட்டிருந்த

செயல்திட்டத்தின் கடைக்கோடி நிதானப் போக்கு கடுமையான தாக்குதலுக்கு உள்ளாயிற்று. நேரு கமிஷனின் யோசனைகளுக்கு எதிர்ச் செயலாகக் காங்கிரசின் இடதுசாரி நாடு முழுவதிலும் சுதந்திரச் சங்கங்களை அமைத்தது. இந்தியா ''பூர்ண ஸ்வராஜ்யம்'' (முழுமையான சுயாட்சி) பெற வேண்டும் என்று இந்தச் சங்கங்கள் பிரசாரம் செய்தன. அனைத்து இந்திய சுதந்திரச் சங்கத்தின் மகாநாடு 1928, நவம்பரில் நடந்தது. ஜவாகர்லால் நேருவும் சுபாஷ் சந்திர போசும் சங்கத்தின் தலைவர்கள் ஆனார்கள்.

சைமன் கமிஷன் நேரு அரசியல் சட்டத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. சட்டபூர்வமான முறைகளால் பிரிட்டிஷாரிடமிருந்து ஒரு சில சலுகைகள் பெறலாம் என்று தேசியக் காங்கிரஸ் தலைமைக் குழுவின் மிதவாதப் பிரிவினர் கொண்டிருந்த நம்பிக்கை வீணாயிற்று. இதனால் காங்கிரசில் இடதுசாரி மேற்கொண்டு வலிமை அடைந்தது. கட்சிக்கு உள்ளேயும் அதற்கு வெளியிலும் ''பூர்ண ஸ்வராஜ்யத்துக்கான'' பிரசாரத்தை வட்டார சுதந்திரச் சங்கங்களின் வாயிலாக இது தீவிரமாக நடத்தியது. எனினும், காந்தி உட்பட காங்கிரஸ் தலைமையின் பெரும்பான்மையினர் இடதுசாரியினரின் கோரிக்கைகளுக்கு உடனே இணங்கி விடவில்லை.

1928ன் இறுதியில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் ஆண்டு மகாநாட்டில் மோதிலால் நேரு கமிஷனின் அறிக்கை ஆமோதிக்கப் பட்டது. சாத்துவிக ஒத்துழையாமை இயக்கம் தொடங்கும் பிரச்சினைக்கு முடிவு ஓர் ஆண்டுக்கு ஒத்திப்போடப்பட்டது.

மறைமுகப் புரட்சியாளர்களின் செயல்கள். பயங்கரவாத நிறுவனங்களின் நெருக்கடி

நாட்டில் தொடங்கிய பொது ஜனநாயக ஏற்றமும் தொழிலாளி வர்க்கத்தின் கடும் போராட்டங்களும் மறைமுகப்புரட்சி நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்குப் புது உற்சாகம் ஊட்டின. இருபதுக்களின் முடிவிலும் முப்பதுக்களின் தொடக்கத்திலும் முதலாவது இளைஞர், மாணவர் நிறுவனங்களைக் கம்யூனிஸ்டுகளும் காங்கிரஸ்காரர்களும் அமைத்திருந்தார்கள். எனினும் தீவிரப் போக்குள்ள, பெரும்பாலும் சிறு முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு இவ்விரு கட்சியினரில் ஒருவருடைய செயல்முறையும் திருப்தி தரவில்லை. தவிரவும், அந்தக் காலத்தில் கம்யூனிஸ்டுகள் இந்திய சமூகப் பிரதிநிதிகளின் விரிவான வட்டாரங்களில் அவ்வளவாகப் பிரபலம் அடையவில்லை. இளைஞர்கள் உடனடியாகச் செயலாற்ற ஆவல் கொண்டு துடித்தார்கள். எனவே உருவாகி இருந்த மறைமுகப் போராட்ட மரபைப் பின்பற்றினர்கள்.

1928ல் பயங்கரவாதிகளின் தனித்தனி நிறுவனங்களின் அடிப்படையில் இண்டியன் ரிபப்ளிகன் சோஷலிஸ்டு அசோசியேஷன் (இந்தியக் குடியரசுவாத சோஷலிஸ்டு சங்கம்) ஆர்வம் மிகுந்த புரட்சியாளர் பகத் சிங்கின் தலைமையில் அமைக்கப்பட்டது. இதன் கிளைகள் பஞ்சாப், ராஜபுதனம், ஐக்கிய மாகாணம், பீகார் ஆகியவற்றில், அதாவது வட மேற்கு இந்தியாவிலும் வட இந்தியாவிலும் அனேகமாக எங்கும் செயலாற்றி வந்தன. பெரிய மறைமுக நிறுவனம் வங்காளத்திலும் செயலாற்றியது. அங்கே பல பயங்கரவாதிகள் வட்டாரக் காங்கிரஸ் நிறுவனத்தின் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

எல்லாவற்றிலும் துடியாக வேலை செய்து வந்தது பஞ்சாப் நிறுவனம். 1925ல் பகத் சிங்கால் நிறுவப்பட்ட **நௌஜவான் பாரத் சபா (யுவ இந்திய சபை)** என்னும் வட்டார நிறுவனத்தை இது சார்ந்திருந்தது. இரகசியமாக வெடிகுண்டுகள் தயாரிக்கும் வேலையை பயங்கரவாதிகள் லாகூரில் ஒழுங்குபடுத்திக் கொண்டார்கள்.

பேரளவான பயங்கர நடவடிக்கைகள் விவசாயிகள் திரளாகப் போராட்டம் தொடங்குவதற்குக் குறி அறிவிப்பாகப் பயன்படும் என்று மறைமுகப் புரட்சியாளர்கள் நம்பினார்கள். தானாகவே மூண்டு எழும் விவசாயிப் புரட்சியின் அழுத்தத்தால் இந்தியாவில் காலனியாட்சி அமைப்பு வீழ்த்தப்பட்டு விடும் என்று அவர்கள் எண்ணினார்கள். தொழிலாளி வர்க்கம் ஆற்றும் பங்கையோ உழைப்பாளிகளின் வெகுஜன நிறுவனங்களில் செய்யப்படும் வேலையையோ அவர்கள் சரியாக மதிப்பிடவில்லை.

வரையறுக்கப்பட்ட செயல்திட்டத்தை நிறைவேற்றியவாறு குடியரசு சங்கத் தலைவர்களான பகத் சிங்கும் பக்தேஷ்வர் தத்தும் 1929, ஏப்ரல் 8ந் தேதியன்று மத்திய சட்ட மன்றக் கட்டிடத்துக்குள் புகுந்து வெடி குண்டுகளை அங்கே எறிந்து விட்டு ஆர்ப்பாட்ட முறையில் தங்களைப் போலீசாரிடம் ஒப்படைத்துக் கொண்டார்கள். பிரிட்டிஷ் போலீஸ் குடியரசு சங்கத் தலைமை அலுவலகத்தைத் தாக்கி வெடி குண்டுகள் தயாரிக்கும் இரகசியத் தொழிற் கூடத்தையும் கண்டு பிடித்து விட்டது. ''லாகூர் சதி வழக்கு'' என்ற பெயரால் கைதிகள் விசாரிக்கப்பட்டார்கள். பகத் சிங்கினதும் அவருடைய தோழர்களதும் வீர உருவங்கள் தேசியவாதிகளின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தூண்டின. கைதிகள் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களுக்கு ஆதரவாகவும் அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நாடு முழுவதிலும் அலையாகப் பரவின.

ஆனாலும் இந்திய மறைமுகப் புரட்சியாளர்களின் பயங்கரச் செயல்கள் காலனியாட்சிக்கு எதிராக வெகுஜனப் போராட்

டத்தைத் தூண்டிவிடவில்லை என்பது இயல்பே. பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளில் நேர்ந்த தோல்விகள் இயக்கம் அனைத்திலும் ஆழ்ந்த நெருக்கடியை ஏற்படுத்தின. சிறையில் இருந்த போது பகத் சிங்கும் மறைமுக நிறுவனங்களின் பிற தலைவர்களும் தங்கள் பல கொள்கை நிலைகளை மறுபரிசீலனை செய்தார்கள். அவர்களில் பெரும்பான்மை யினர் மார்க்சிய-லெனினியத்தைப் புரிந்து கொண்டு இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார்கள். தூக்கில் ஏறு முன்பு பகத் சிங் கடைசியாகப் படித்த புத்தகம் வி. இ. லெனினது வாழ்க்கை வரலாறு என்பது தெரிந்ததே. தனி நபர் பயங்கரச் செயல்கள் தவறுனவை என்பதை ஒப்புக் கொள்வதற்குத் தேவையான அரசியல் துணிவு பகத் சிங்கிடம் இருந்தது. தொழிலாளி வர்க்கப் போராட்டத் துடன் தங்கள் விதியை இணைத்துக் கொள்ளும் படி இந்தியப் புரட்சி யாளர்களுக்குச் சிறையிலிருந்து விடுத்த செய்தியில் அவர் அறிவுரைத் தார்.

இந்திய தேசியத்தின் சுதந்திரப் போக்கு என்ற முறையில் பயங்கரவாத இயக்கம் முப்பதுக்களின் தொடக்கத்திலேயே அரசியல் அரங்கிலிருந்து அகன்று விட்டது.

ஆயினும், வெகுஜன ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களின் பின்னணியில் மறைமுகப் புரட்சியாளர்கள் புரிந்த வீரச் செயல்கள் மொத்தத்தில் நாட்டில் புரட்சி மனப்பான்மை வளர்வதற்கு உதவின.

இரண்டாவது சாத்துவிக ஒத்துழையாமை இயக்கம். இயக்கம் கிளர்ச்சியாக வளர்தல்

சமுதாய இறுக்கம் விரைவாக வளர்ந்து கொண்டு போனதால் வெகுஜன அரசியல் இயக்கங்களை விரிவாக நடத்துவதற்கு ஏற்ற நிலைமைகள் நாட்டில் உருவாயின. காலனியாட்சி அரசாங்கத்தை முடிவாகக் கட்டாயப்படுத்துவதற்குப் போதிய அளவு வாய்ப் பான சூழ்நிலை ஏற்பட்டு வருவதாக காந்தி எண்ணினார். ஜவா கர்லால் நேருவின் தலைமையில் லாகூரில் (1929, டிசம்பர் மாதம்) நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் புதிய சாத்துவிக ஒத்துழையாமை இயக்கம் நடத்துவது என்ற தீர்மானம் ஏற்கப்பட்டது. முந்திய தடவை போன்று இம்முறையும் காந்தி இயக்கத்தின் தலைவர் ஆனார்.

இந்தியாவில் மேலோங்கி இருந்த மனப்பாங்கைக் கணக்கில் எடுத்துக் கொண்டும் தேசிய இயக்கத்தின் இடதுசாரியினது வற்புறுத்தலுக்கு இணங்கியும் மகாநாடு தேசியப் போராட்டத்தின் இறுதிக் குறிக்கோள் பூரண சுதந்திரம் பெறுவதே என்ற தீர் மானத்தை ஏற்றுக் கொண்டது.

காங்கிரசின் தீர்மானப்படி 1930ம் ஆண்டு ஜனவரி மாதம் 26ந்

தேதி நாடு முழுவதிலும் சுதந்திர தினமாகக் கொண்டாடப்பட்டது. காங்கிரஸ்காரர்களால் ஒழுங்கமைக்கப்படும் ஆர்ப்பாட்டங்களில் தேசபக்தச் சக்திகள் பங்கு கொள்ளும் அளவைக் கொண்டு புதிய ஒத்துழையாமை இயக்கத்துக்கு நாடு எவ்வளவு தூரம் ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என இந்தக் கொண்டாட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள் திட்டம் இட்டிருந்தார்கள்.

அதே ஆண்டு மார்ச்சு மாதத்தில் காந்தி தாம் பதிப்பித்து வந்த யங் இண்டியா பத்திரிகையில் தமது பெயர் பெற்ற பதினெரு அம்சக் கோரிக்கையை வெளியிட்டார். இந்திய முதலாளி வர்க்கத்துக்குச் சாதகமாகப் பொருளாதாரக் கொள்கை மாற்றப்பட வேண்டும், வன்முறைச் செயல்கள் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்படாத அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் இதில் அடங்கி இருந்தன (சிறையில் உழன்ற பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக வாதாட காந்தி தயாராயில்லை என்பதை இது காட்டியது).

காந்தியின் யோசனைகளை வைசிராய் இர்வின் மறுத்து விட்டபடியால் 1930, ஏப்ரல் மாதத்தில் புதிய ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப் போவதாக அவர் அறிவித்தார். அனேகமாக இருபதுக்களின் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்டது போன்ற வேலைத்திட்டத்தையே இந்த இயக்கம் கடைப்பிடித்தது. உப்பின் மீது அரசுக்கு இருந்த ஏகபோக உரிமையை மீறுவது என்ற அம்சம் சேர்க்கப் பட்டதுதான் புதிது. இந்த நடவடிக்கை எவ்விதத் தீவிர மாறுதலையும் புகுத்திவிடவில்லை. எனினும் இந்திய மக்களின் மிக விரிவான வட்டாரங்களில் இயக்கத்துக்கும் அதன் ஒழுங்கமைப்பாளர்களுக்கும் பெருத்த மதிப்பை இது உடனே ஏற்படுத்தி விட்டது.

அதே ஆண்டு மார்ச்சு மாதம் காந்தி தம்முடைய எழுபத்தெட்டு தரப்பாளர்களும் பின்பற்றுவோரும் உடன்வர, அகமதாபாதிலிருந்த தலைமை அலுவலகமான சத்தியாக்கிரக ஆசிரமத்திலிருந்து புறப்பட்டு அரபிக் கடற்கரையில் இருந்த டாண்டி என்னும் இடத்துக்கு குஜராத்து மாநிலத்தின் வழியாகப் பிரசாரக் கால்நடைப் பயணம் செய்தார். உப்பு ஏகபோகச் சட்டத்தை ஆர்ப்பாட்ட முறையில் மீறி, கடல் நீரைக் காய்ச்சி உப்பு எடுப்பது அவருடைய திட்டம்.

இந்த டாண்டி யாத்திரை பற்றிய விவரங்கள் இந்தியச் செய்தித் தாள்களில் விரிவாக வெளியிடப்பட்டன. சத்தியாக்கிரகக் கருத்து பரவுவதற்கு இந்த யாத்திரை உதவியது. ஒத்துழையாமை இயக்கம் இந்தியா முழுவதிலும் வெற்றிகரமாகப் பரவியது. எனவே காலனி ஆட்சியாளர்கள் எதிர்த்தாக்கு நடத்தத் தீர்மானித்தார்கள்.

பிரிட்டிஷ் அதிகாரிகள் ஒத்துழையாமை இயக்கம் நடத்துவதற்குத் தடை விதித்ததோடு காங்கிரசையும் வேறு சில தேசிய நிறு

வனங்களையும் சட்ட விரோதமானவை என்று அறிவித்துத் திரளான சத்தியாக்கிரகிகளைக் கைது செய்தார்கள். மே மாதத்தில் காந்தியும் கைது செய்யப்பட்டார். 1930ம் ஆண்டு முடிவுக்குள் சிறையில் இடப்பட்டவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட அறுபதாயிரம் ஆயிற்று.

ஆனால் அடக்கு முறைகளால் விடுதலைப் போராட்டத்தை நிறுத்த முடியவில்லை. அந்த ஆண்டு வசந்த காலத்தில் போராட்டம் உச்சத்தை எட்டி ஆயுதமேந்திய கிளர்ச்சியின் வடிவத்தை மேற் கொண்டது.

மிகப் பெரிய ஆயுதப் போராட்டங்கள் மூன்று நகரங்களில் நடந்தன. அவையாவன: பெஷாவர், சிட்டகாங், ஷோலாப்பூர். ஆயுதப் போராட்டத்தின் இந்த பூகோளம் தற்செயலானது அல்ல. இருபதாம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகளில் தேசிய விடுதலைப் போராட்டம் ஆக உயர்ந்த மட்டத்தை எட்டியிருந்த வட மேற்கு எல்லைப்புற மாகாணம், வங்காளம், மகாராஷ்டிரம் ஆகியவற்றை முறையே சேர்ந்தவை இந்த நகரங்கள்.

பெஷாவரில் சாத்துவிக ஒத்துழையாமை இயக்கத் தலைவர்கள் ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டார்கள். விளைவாக நகரப் பொது மக்களிடையே பெருத்த கொந்தளிப்பு ஏற்பட்டது. இது வீதித் தடையரண்கள் அமைந்த ஆயுதப் போர்களாக வளர்ந்தது. வட மேற்கு எல்லைப்புற மாகாணத்தின் மையமான இந்த நகரின் உதவிக்கு அக்கம் பக்கத்துப் பட்டாணிய கிராமங்களிலிருந்து விவசாயிகள் வந்தார்கள். நகரின் வர்த்தக-தொழில் வாழ்க்கை ஸ்தம்பித்துப் போயிற்று. ஆங்கிலேயர்கள் நகர அரணில் ஒளிந்து கொள்ள வேண்டியதாயிற்று.

கர்வால் துப்பாக்கி ரெஜிமெண்டுத் துருப்புக்கள் சுட மறுத்துக் கிளர்ச்சிக்காரர்களோடு நட்பாடத் தொடங்கிய பின் நிலைமை அதிகச் சிக்கல் அடைந்தது. நகர்க் காவற் படையின் பிரிட்டிஷ் கமாண்டர்கள் ரெஜிமெண்டுத் துருப்புக்களை நிராயுதபாணிகள், ஆக்கி, எல்லாப் படையினரையும் இரண்டு வாரங்களுக்கு நகருக்கு வெளியே இட்டுச் சென்று இந்தியச் சிப்பாய்கள் மக்கள் தரப்புக்குப் போகாதவாறு தடுத்து விட்டார்கள்.

மோமாந்துகள், அப்ரீதிகள் என்னும் கலகக்காரப் பட்டாணிய இனக் குழுக்களின் படைப் பிரிவுகள் பெஷாவர் நகரின் உதவிக்கு விரைந்தன. ஆனால் காங்கிரஸ் தலைவர்கள் தலையிட்டு வன்முறையை மேற்கொள்ளாதிருக்கும்படி வேண்டிக் கொண்ட பின் அவை மலைகளில் தங்கள் நாடோடி இருப்பிடங்களுக்குத் திரும்பி விட்டன. பிரிட்டிஷ் படைகள் மே மாதம் 4ந் தேதி பெஷாவரில் புகுந்தன

என்றாலும் நகர் மீது முழுமையான கண்காணிப்பை மீண்டும் ஏற்படுத்த மாத நடுவில் தான் அவற்றால் முடிந்தது.

பெஷாவர் கிளர்ச்சி பிரிட்டிஷாருக்கு எதிராகப் பட்டாணிய விவசாயிகளின் வெகுஜனப் போராட்டங்கள் தொடங்குவதற்கான குறி அறிவிப்பாகப் பயன்பட்டது. புஷ்தூன் ஜிர்கா (ஆப்கானிய ஆலோசனை மன்றம்) என்னும் நிறுவனம் கிராமவாசிகளிடையே செயலாற்றியது. செஞ்சட்டைப் போர்ப் படையணிகள் இந்த நிறுவனத்துக்குக் கீழ்ப்படிந்தன. காந்தியின் பக்தரான அப்துல் கபார்கான் கிளர்ச்சிக்காரப் பட்டாணியர்களின் தலைவராக விளங்கினர்.

1930ம் ஆண்டு முடிவுக்குள் எல்லைப்புற மாகாணம் அனைத்தும் கிளர்ச்சிக்கு உள்ளாகி விட்டது. அப்ரீதிகளுடையவும் மோமாந்துகளுடையவும் போராட்டங்களை ஆதரித்த செஞ்சட்டைப் படையினர் இந்தப் பிரதேசத்துக்கு இட்டுவரப்பட்டிருந்த பெரும்பாலான பிரிட்டிஷ்-இந்தியப் படைகளுடன் கொரில்லாப் போரைத் திறமையாக நடத்தினர்கள். போராட்டம் அடுத்த ஆண்டும் தொடர்ந்தது. செஞ்சட்டையினரின் எண்ணிக்கை ஓர் ஆண்டில் 80 ஆயிரத்திலிருந்து 300 ஆயிரமாகப் பெருகி விட்டது.

இந்தியாவின் கிழக்கு எல்லையில் இருந்த சிட்டகாங்கில் கிளர்ச்சி பெஷாவர் நிகழ்ச்சிகள் நடந்த போதே மூண்டு விட்டது. பெஷாவர் கிளர்ச்சி போலன்றிச் சிட்டகாங் கிளர்ச்சி முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அம்பிகா சக்ரவர்த்தி, சூர்ஜய் சென், இருவரையும் தலைவர்களாகக் கொண்ட ''சிட்டகாங் குடியரசுச் சேனை'' என்னும் வட்டார மறைமுக நிறுவனம் கிளர்ச்சியை வழிகாட்டி நடத்தியது.

பயங்கரவாதிகளினது லாகூர் நிறுவனத்தின் துயர் மிக்க அனுபவத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு சக்ரவர்த்தியும் சென்னும் தேசபக்த இளைஞர்களின் ஆயுதப் படைப் பிரிவுகளைப் பயிற்றினர்கள். ஏப்ரல் 18ந் தேதியன்று ஆயுதசாலையும் பாசறையும் ரெயில் நிலையமும் கைப்பற்றப்பட்டதுடன் கிளர்ச்சி தொடங்கிற்று. நகரம் பத்து நாட்கள் கிளர்ச்சிக்காரர்கள் வசம் இருந்தது. ஆனால் துறை முகத்தில் அரண் செய்து கொண்டிருந்த ஆங்கிலேயர்கள் கல்கத்தாவுடன் தொடர்பு கொண்டு அங்கிருந்து உதவிப்படைகளைத் தருவித்தார்கள். கிளர்ச்சிக்காரர்கள் போரிட்டவாறே அணிகள் கலையாமல் நகரை விட்டு வெளியேறி, நகரைப் பார்த்திருந்த உயரமான இடத்தில் அரண் செய்து கொண்டு சிறிது காலம் தங்கள் முகாமைத் தற்காத்துப் போரிட்டார்கள். ஆனால் சக்திகள் பெரிதும் சமமற்று இருந்ததால் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டு விட்டது.

மூன்றாவது ஆயுதப் போராட்டம் ஷோலாப்பூரில் நடந்தது. மே

மாதம் 8ந் தேதியன்று ஆயுதமேந்திய போலீசின் ஆத்திரமூட்டும் செயலின் விளைவாகத் தடையரண் போர்கள் தொடங்கின. இவை பொதுக் கிளர்ச்சியாக வளர்ந்தன. கிளர்ச்சிக்காரர்கள் காலனி யாட்சி நிர்வாக அலுவலகங்களைத் தீக்கிரை ஆக்கினர்கள். பிரிட்டிஷ் காலனியாட்சி நிர்வாக அலுவலர்கள் அரண் செய்து கொண்டிருந்த ரெயில் நிலையத்தை அவர்கள் முற்றுகை இட்டார்கள். வீதிப் போர் கள் பல நாட்கள் தொடர்ந்து நடந்தன. நகரில் அதிகாரம் ஆலோசனை மன்றங்கள் எனப்பட்ட புரட்சி ஆட்சி உறுப்புக்களின் கைகளில் இருந்தது. மே மாதம் 16ந் தேதி கிளர்ச்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னரே கிளர்ச்சி முழுமையாக ஒடுக்கப்பட்டது.

பெஷாவரிலும் சிட்டகாங்கிலும் இயக்கத்தினரின் செயலூக்கம் மிக்க பகுதியாக இருந்தவர்கள் தேசபக்தி வாய்ந்த சிறு முதலாளி வர்க்க இளைஞர்கள். மாறுக ஷோலாப்பூரில் கிளர்ச்சியின் பிரதான இயக்கு சக்தியாக விளங்கினர்கள் தொழிலாளர்கள்.

கிளர்ச்சிகள் (அவற்றின் வட்டாரத் தன்மை, பெருமளவு முன் னேற்பாடு இன்மை, எதிராளிகளின் சக்தியில் இருந்த சமமின்மை ஆகியவை காரணமாகத்) தோல்வி அடைந்து விட்ட போதிலும் நாட்டிற்குள் அரசியல் சூழ்நிலை அனைத்தின் மீதும் அவை கணிசமான அளவு புரட்சிகரமாக்கும் பாதிப்பு விளைத்தன.

1930—1931ம் ஆண்டுகளில் பம்பாய், கல்கத்தா, சென்னை, டில்லி, கராச்சி ஆகியவை உள்ளிட்ட நாட்டின் பல பெரிய மையங் களில் அரசியல் வேலைநிறுத்தங்கள் நடந்த வண்ணமாய் இருந்தன. இயக்கம் கிராமங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும் பரவலாயிற்று.

விவசாயிகள் இயக்கம். சமஸ்தானங்களில் கிளர்ச்சிகள்

பார்டோலி சத்தியாக்கிரகம் நடத்தியது காங்கிரசுக்கு ஒரு வகையில் நாட்டுப்புற வேலைக்கான ''உரை கல்லாக'' மட்டுமே பயன்பட்டது. 1929 முதல் காங்கிரஸ்காரர்கள் நாட்டின் பல பிர தேசங்களில், சிறப்பாக ஐக்கிய மாகாணத்தில், விவசாயிகள் சங்கங் களை அமைக்கத் தொடங்கினர்கள். விவசாயிகளைச் சாத்துவிகச் சட்ட மறுப்பு இயக்கத்தில் சேர்ப்பதே அவர்களுடைய முக்கிய நோக்கமாக இருந்தது. தவிரவும் நாட்டுப்புறத்தில் வேலையை ஒழுங்கமைத்தவர் கள் விவசாயிகளின் போராட்டத்தை ஏகாதிபத்திய எதிர்ப்புப் பணி களின் வரம்புகளுக்குள் குறுக்க முயன்றார்கள். கிராமங்களில் நிலவிய நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான வர்க்கப் பிணக்கை அவர்கள் புறக்கணித்தார்கள்.

தேசியக் காங்கிரஸ் யாவற்றிலும் அதிக வெற்றி அடைந்தது

அயோத்தியில் ஆகும். குத்தகை விகிதமும் நிலப்பிரபு-ஜமீன்தார்கள் கஜானுவுக்குச் செலுத்திய நிலவரியும் ஒரே நேரத்தில் குறைக்கப் பட வேண்டும் என்று கோரி இங்கே ஜவாகர்லால் நேருவின் தலைமை யில் விரிவான இயக்கம் நடந்தது.

ஆனல் ஐக்கிய மாகாணத்தில் காங்கிரஸ்காரர்களோடு கூடவே கம்யூனிஸ்டுகளும் புரட்சிகர ஜனநாயகவாதிகளும் விவசாயிகள் இடையே வேலை தொடங்கினர்கள்.

1931 முதல் 1933 முடிவு வரையுள்ள காலப்பகுதி முழுவதிலும் ஐக்கிய மாகாணம், பஞ்சாப், பீகார், வங்காளம், கர்நாடகம், ஆந் திரம் ஆகிய பிரதேசங்களில் ஒழுங்கமைந்த விவசாயிகள் இயக்கம் அரசுக்கு வரிகள் செலுத்தாமல் இருக்கும்படி கிளர்ச்சிப் பிரசாரம் செய்த கிஸான் சபாக்களின் நடவடிக்கைகளது வடிவத்தில் பிரதான மாக நடந்து வந்தது. ஐக்கிய மாகாணத்தில் விவசாயிகள் போராட் டம் யாவற்றிலும் கடுமையாக இருந்தது. அங்கே நாட்டுப்புற வட் டாரங்களில், சிறப்பாக அலாகாபாத் மாவட்டத்தில், சாத்துவிக ஒத்துழையாமை இயக்கம் விவசாயிகள் படைப் பிரிவுகளின் ஆயுதப் போராட்டங்களாக வளர்ந்தது.

தொடக்க காலப் பகுதிக்கு மாறுக 1929—1933ல் விவசாயிகள் இயக்கம் அதிக ஒழுங்கமைப்புள்ள தன்மை கொண்டிருந்தது. பெரும் பாலான மாநிலங்களில் வட்டார விவசாயிகள் சங்கங்கள் அமைக்கப் பட்டிருந்தன. பெரும்பாலும் பணக்கார, நடுத்தர விவசாயிகள் இவற்றில் சேர்ந்திருந்தார்கள். நாட்டின் பல பிரதேசங்களில், சிறப் பாக ஐக்கிய மாகாணத்திலும் பீகாரிலும் கம்யூனிஸ்டுகளும் சிறு மூதலாளிப் புரட்சிகர ஜனநாயகவாதிகளும் விவசாயிகள் சங்கங் களின் மீது பெருத்த செல்வாக்கு செலுத்தினர்கள். விவசாயிகள் இயக்கத்தின் தலைமைக்காக இவர்கள் காங்கிரசுடன் போராட்டம் தொடங்கினர்கள்.

பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய விடுதலை இயக்கம் வளர்ச்சி அடைந்தது சமஸ்தானங்களின் உள் நிலைமை மீது பாதிப்பு விளைத் தது. 1931—1933ல் சில சமஸ்தானங்களில் விடுதலைப் போராட்டம் தொடங்கியது. இது ஆயுதமேந்திய கிளர்ச்சியாக வளர்ந்தது.

காச்மீர சமஸ்தானத்தில் நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் பெரிய அளவை எட்டின. பெரும்பாலான குடிகள் முஸல்மான்களாக இருந்த இந்த சமஸ்தானத்தில் டோக்ரா நாட்டினத்தையும் ராஜபுத்திர சாதியையும் இந்து மதத்தையும் சேர்ந்த மன்னனிடமும் அவனது பரிவாரத்தினிடமும் ஆட்சி அதிகாரம் குவிந்திருந்தது. மத நோக்கி லும் நாட்டின வகையிலும் சாதி முறையிலும் காச்மீரிகள் வேறு பாட்டுக்கு உள்ளாக்கப்பட்டதால் காச்மீரத்தில் நிலப்பிரபுத்துவ

ஒடுக்கு முறை மேலும் ஆழ்ந்தது ஆயிற்று. சமஸ்தானத்தில் பிரிட்டிஷ் காலனியாட்சியின் பிரதிநிதியாக இருந்த ரெசிடெண்டு மன்னனுடைய எதேச்சாதிகாரத்தையும் டோக்ரா உயர் குடியினரின் நிலப் பிரபுத்துவத் தான்தோன்றி நடவடிக்கைகளையும் ஆதரித்து வந்தான்.

விவசாயிகள், கம்மியர்களின் விரிவான வட்டாரங்களும் காச்மீர முதலாளி வர்க்கமும் முதலாளி வர்க்க அறிவுஜீவிகள் சமுதாயமும் ஆட்சி புரிந்த நிலப்பிரபுத்துவக் குழுவுக்கு எதிராகப் போராடினார்கள்.

காச்மீரத்தில் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இயக்கம் 1931ம் ஆண்டுக் கோடையில் விவசாயிகளின் தானே எழுந்த போராட்டங்களுடன் தொடங்கியது. விவசாயிகள் படைப் பிரிவுகள் அமைத்துக் கொண்டு சமஸ்தானத் தலைநகரான ஸ்ரீநகரை முற்றுகையிட்டார்கள். நகரில் கம்மியர்களும் சில்லரை வியாபாரிகளும் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் தொடங்கினார்கள்.

வர்த்தகர்களையும் குடிசைத் தொழிலகங்களின் உடைமையாளர்களையும் பிரதிநிதிகளாகக் கொண்ட வட்டார தேசிய முதலாளி வர்க்கத்தினர் ''வாசகசாலைக் கட்சி'' என்ற கல்வியறிவு பரப்பும் நிறுவனத்தை அமைத்தார்கள். அதே ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இந்த நிறுவனம் ஒரு கொள்கை அறிக்கையை வெளியிட்டது. மத, நாட்டின வேறுபாடுகளை நிறுத்தும்படியும் சில முதலாளித்துவ-ஜனநாயக சுதந்திரங்களை வழங்கும்படியும் அறிக்கை கோரியது.

பிரிட்டிஷ்காரர்கள் காச்மீரத்துக்குப் படைகளை இட்டுச் சென்று இந்து-முஸ்லிம் பூசல்களைத் தூண்டி விடுவதில் வெற்றி பெற்றார்கள். காச்மீர நிகழ்ச்சிகளின் மத-வகுப்புவாத அம்சம் இந்தியாவின் எஞ்சிய பகுதிகளில் இந்து-முஸ்லிம் உறவுகளைக் கெடுதலாகப் பாதித்தது.

ஆனாலும் விவசாயிகளின் போராட்டங்களை முழுமையாக ஒடுக்க அதிகாரிகளால் முடியவில்லை. நிலைமையை ஆராயும் பொருட்டு ஒரு கமிஷனை நியமிப்பது ஆங்கிலேயருக்கு இன்றியமையாதது ஆயிற்று. வாசகசாலைக் கட்சியின் முக்கியக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளும் படி இந்தக் கமிஷன் பரிந்துரைத்தது.

காச்மீர மகாராஜா கமிஷனின் யோசனைகளைச் செயல்படுத்தத் தயாராய் இல்லை. எனவே 1932ம் ஆண்டின் தொடக்கத்தில் நிகழ்ச்சிகளில் பயங்கரத் திருப்பம் ஏற்பட்டது. வாசகசாலைக் கட்சியின் அடிப்படையில் ஜம்மு-காச்மீர அரசியல் மகாநாடு என்ற கட்சி உருவாக்கப்பட்டது. இது அதிக ஜனநாயகத் தன்மை கொண்டிருந்தது. இது வெளியிட்ட செயல்திட்டத்தில் முந்தியவற்றோடு புதிய கோரிக்கைகளும் சேர்க்கப்பட்டிருந்தன. மகாராஜாவின் வல்லாட்சி குறுக்கப்பட வேண்டும், நிலவரி குறைக்கப்பட வேண்டும், வரி பாக்கிகள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் முதலியன இவை.

மகாநாடு நில வரி கொடா இயக்கம் தொடங்கியது. ஆனல் சமஸ்தானத்தில் இருந்த பிரிட்டிஷ் படைகளின் உதவியுடன் 1932ம் ஆண்டின் முடிவில் கிளர்ச்சி அடக்கப்பட்டு விட்டது. எனினும் மகாராஜா சமஸ்தானத்தின் தேசிய முதலாளி வர்க்கத்துக்கு ஒரு சில விஷயங்களில் விட்டுக் கொடுத்து, 1934ல் சட்ட மன்றத்தைக் கூட்ட வேண்டியதாயிற்று.

ராஜபுதனத்தைச் சேர்ந்த ஆல்வார் சமஸ்தானத்தில் 1932ன் நடுவில் கிளர்ச்சி மூண்டது. காச்மீரத்தில் போன்றே இங்கும் நிலப் பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டம் மத-வகுப்புவாத வடிவத்தை மேற்கொண்டது. சமஸ்தானத்தின் மன்னனும் நிலப்பிரபுக்களும் தென் பாகத்தைச் சேர்ந்த விவசாயிகளும் இந்துக்கள். வடக்கு ஆல்வாரில் இருந்த விவசாயிகளோ, முஸ்லிம்கள். நிலப்பிரபுத்துவச் சுரண்டலைக் குறுக்கும்படியும் மத நோக்கில் ஏற்றத்தாழ்வு பாராட்டுவதைக் கைவிடும்படியும் வடக்கு ஆல்வார் விவசாயிகள் கோரினர்கள். இந்த இரண்டாவது கோரிக்கையை முஸ்லிம் அறிவுஜீவிகளும் சிறு நிலப்பிரபுக்களும் ஆதரித்தார்கள். இயக்கத்துக்கு மதச் சாயம் ஏற்றுவதில் இவர்கள் வெற்றி பெற்றார்கள்.

1932ம் ஆண்டின் முடிவு வாக்கில் கிளர்ச்சிக்கார விவசாயிகள் முப்பதாயிரம் பெயர் அடங்கிய சேனையாக அமைந்தார்கள். சமஸ்தானத்தின் வட பாகத்தில் சில சிற்றூர்களைக் கைப்பற்றிக் கொண்டு அவர்கள் தலைநகரான ஆல்வாரை நோக்கி முன்னேறினர்கள். நாளடைவில் விவசாயிகளின் இயக்கம் வர்க்க நோக்கில் அதிக ஒத்திசைவு உள்ளது ஆயிற்று, ஏனெனில் கிளர்ச்சிக்காரர்கள் முஸ்லிம் நிலப்பிரபுக்களின் பண்ணைகளையும் தாக்கத் தலைப்பட்டார்கள். இந்த நிலைமைகளில் ''ஆல்வார் முஸல்மான்களைக் காக்கும் பொருட்டு'' பிரிட்டிஷ் படைகள் சமஸ்தானத்துக்குள் அனுப்பப்பட வேண்டும் என்று முஸ்லிம் லீக் கோரியது. பிரிட்டிஷ் தலையீட்டை இந்து மகாசபையும் வற்புறுத்திக் கோரியது, ஆனல் ''சமஸ்தான இந்துக்களைக் காப்பதற்காக'' அதன் முயற்சியால் இந்தியா முழுவதிலும் ''ஆல்வார் தினம்'' கொண்டாடப்பட்டது. இதனல் நாட்டில் மத-வகுப்புவாத உணர்ச்சிகள் தீவிரம் ஆயின.

கிளர்ச்சிக்காரர்கள் வீரமாக எதிர்த்தும் 1933 முடிவு வாக்கில் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டு விட்டது.

புஷ்து மொழி பேசும் பட்டாணிய இனத்தவர் வாழ்ந்த புல்ரா, தீர் என்னும் சிறு ஜமீன்களிலும் 1932—1933ல் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்தன.

சமஸ்தானங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிகள் நாடு முழுவதிலும் விரிவாக நடந்த விடுதலைப் போராட்டத்தின் நேர் விளைவுகளே ஆகும்.

பிரிட்டிஷ் கொள்கையும் காங்கிரசின் நிலையில் மாற்றமும்

தேசிய இயக்கத்தை நேரடியாக ஒடுக்கியதோடு கூடவே பிரிட்டிஷ் காலனி ஆட்சி தன் பகைவர்களது முகாமில் பிளவு ஏற்படுத்தும் நோக்கத்துடன் அரசியல் குயுக்திகளையும் கையாளத் தொடங்கியது.

சைமன் கமிஷனின் அறிக்கை 1930, ஜூனில் வெளியிடப்பட்டது. இந்தியாவின் வருங்கால அரசியல் சட்ட அமைப்பு பற்றிய பரிந்துரைகள் இதில் அடங்கி இருந்தன. இந்திய தேசிய இயக்கத்தின் முக்கியக் கோரிக்கைகள் அறிக்கையில் புறக்கணிக்கப்பட்டிருந்தன. வைசிராயின் அதிகாரத்தை முழுமையாக வைத்திருப்பதற்கு வகை செய்யப்பட்டிருந்தது. அதே சமயம் வாக்காளர்களை வகுப்பு வாரித் தொகுதிகளாகப் பிரிப்பது மேலும் விரிவாக்கப்பட்டிருந்தது. ''தீண்டத்தகாதவர்களுக்குத்'' தனித் தொகுதி அளிக்கப்பட்டிருந்தது. மையச் சட்ட மன்றத்தில் சமஸ்தான மன்னர்களின் நியமன உறுப்பினர்களின் செல்வாக்கை அதிகரிக்க வகை செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு மத, சாதி அடையாளங்களின்படி தேசியச் சக்திகளை மேற்கொண்டு பிளவுபடுத்தவும் பழமைப்பற்றுள்ள நிலப்பிரபுத்துவ சமுதாயக் குழுக்களின் செல்வாக்கை நாட்டில் வலுவாக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதே சமயம் இந்தியாவின் உடைமையாளர் வர்க்கங்களுக்குச் சிறு சலுகைகள் அளிக்கப்பட்டிருந்தன: வாக்காளர்களின் எண்ணிக்கை விரிவாக்கப்பட்டிருந்தது. முஸ்லிம் லீக் கோரியதற்கு இணங்க சிந்து தனி மாநிலம் ஆக்கப்பட்டிருந்தது. விவசாயிக் கிளர்ச்சிகள் அலையடித்துக் கொண்டிருந்த பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டிருந்தது. பர்மிய தேசிய இயக்கத்தை இந்திய இயக்கத்திலிருந்து தனிப்படுத்துவதில் காலனி ஆட்சியாளர்கள் அக்கறை கொண்டிருந்தார்கள்.

சைமன் கமிஷனின் அறிக்கை பற்றி விவாதிக்கும் பொருட்டு இந்திய அரசியல் நிறுவனங்களின் பிரதிநிதிகளது ''வட்ட மேஜை மகாநாடு'' கூட்டும் யோசனையை பிரிட்டிஷ் அரசாங்கம் 1929லேயே வெளியிட்டது. சைமன் கமிஷனின் அறிக்கையை நிராகரித்த தேசியக் காங்கிரஸ் இந்த யோசனையை ஏற்க மறுத்துவிட்டது. 1930, நவம்பர் 12ந் தேதி லண்டனில் கூடிய முதலாவது வட்ட மேஜை மகாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதிகளாக சமஸ்தான மன்னர்களும், முஸ்லிம் லீக், இந்து மகாசபை, மிதவாதிகள் சங்கம், பி. ஆர். அம்பேத்கர் நிறுவிய ''தீண்டத்தகாதவர்'' சங்கம் ஆகியவற்றின் தலைவர்களும் கலந்துகொண்டார்கள்.

பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவின் பல்வேறு மத சமுதாயங்களின்

பிரதிநிதிகளுக்கு இடையே கருத்து வேற்றுமைகளைத் தந்திரமாகத் தூண்டிவிட்டு எதார்த்தத்தில் மகாநாட்டைக் குலைத்து விட்டார்கள்.

அதே சமயம் பிரிட்டிஷ் நிர்வாகம் இந்திய முதலாளி வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்வதற்கு அறிகுறியாகத் தீர்வைக் கொள்கையில் சில மாறுதல்கள் செய்தது. சிறையில் இருந்த காந்தியுடன் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டன. 1931ம் ஆண்டு ஜனவரி மாதம் காந்தி விடுவிக்கப்பட்டார்.

காங்கிரஸ் தலைமைக்கும் வைசிராயின் நிர்வாகத்துக்கும் இடையே ஒப்பந்தம் (காந்தி—இர்வின் ஒப்பந்தம்) 1931, மார்ச்சு 5ந் தேதி ஏற்பட்டது. அடக்கு முறைகளை நிறுத்திவிட்டுக் கைதிகளை—வன்முறைச் செயல்களுக்காகக் குற்றம் சாட்டப்படாதவர்களை மட்டும்—விடுவிப்பதாகப் பிரிட்டிஷ் தரப்பு இதன்படி வாக்களித்தது. காங்கிரஸ் சாத்துவிக ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தி விட்டதாக அறிவித்தது. இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டில் கலந்து கொள்ள காந்தி இசைந்தார்.

காந்தி-இர்வின் ஒப்பந்தம் காங்கிரசுக்கு உள்ளேயும் வெளியேயும் இடதுசாரியினரால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. சில மாகாணக் காங்கிரஸ் நிறுவனங்கள் (உதாரணமாக, வங்காள, பஞ்சாப் நிறுவனங்கள்) அதை ஆதரிக்க மறுத்துவிட்டன.

ஆயினும் காங்கிரசின் அடுத்த கராச்சி மகாநாட்டில் (1931 மார்ச்சு) காந்தியின் நிலை ஒப்புதல் பெற்றது. தேசிய இயக்கத் தலைமைக்கும் காலனியாட்சி அரசாங்கத்துக்கும் இடையே தாற்காலிக சமரசம் ஏற்பட்டது.

தனது பிரதான அரசியல் எதிராளியுடன் பேச்சுவார்த்தைகளுக்கு ஆயத்தம் செய்கையில் இந்திய முதலாளி வர்க்கம் கராச்சியில் தனது பொருளாதார, சமுதாயச் செயல்திட்டத்தைச் சூத்திரப்படுத்தியது. நேரு அரசியல் சட்டத்தின் முக்கிய வரையறுப்புக்களைக் காட்டிலும் முன்னே சென்றது இது. போராட்டத்தின் முதன்மைக் குறிக்கோள் ''பூர்ண ஸ்வராஜ்'' (அல்லது ''காங்கிரஸ் சுதந்திரம்'') என்று இது உறுதிப்படுத்தியது. இந்தச் சொற்றொடரின் உட்பொருளை வெவ்வேறு விதமாக, முழு சுதந்திரம் என்றே, குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்றே விளக்கிக் கொள்ள முடிந்தது. வட்ட மேஜை மகாநாட்டில் பேச்சுவார்த்தைகளுக்கான கொள்கைத் திட்டம் பற்றிய தீர்மானத்தில் தற்காப்பின் மீதும் வெளிநாட்டு உறவுகள் மீதும் கண்காணிப்பு ஏற்படுத்தும் கோரிக்கை அடங்கி இருந்தது.

இந்தியக் குடிகளின் அடிப்படை உரிமைகளும் கடமைகளும் பற்றி மகாநாட்டில் ஏற்கப்பட்ட தீர்மானத்தில் முதலாளித்துவ-ஜனநாயக சுதந்திரங்களை இந்தியாவில் செயல்படுத்துவது குறித்த அம்சங்கள்

அடங்கி இருந்தன. இவையாவன: சாதி, மத சமத்துவம், நாட்டை மொழிகளின் அடிப்படையில் நிர்வாகப் பிரதேசங்களாகப் பிரித்தல் முதலியன. குறைந்த பட்சச் சம்பளத்தைத் திட்டப்படுத்தவும் குத்தகையை வரையறுக்கவும் வரிச் சுமையைக் குறைக்கவும் வகை செய்யப்பட்டிருந்தது.

காங்கிரசின் அதிகாரபூர்வமான செயல்திட்ட தஸ்தாவேஜில் முதன் முறையாக உழைப்பாளிகளின் சில முக்கியக் கோரிக்கைகள் கணக்கில் எடுக்கப்பட்டிருந்தன. காங்கிரசில் இடதுசாரிச் சக்திகளின் செல்வாக்கு இந்தத் தஸ்தாவேஜின் பிற பகுதிகளிலும் இருந்தது. தொழில் துறையின் முக்கியக் கிளைகள் தேசிய உடைமை ஆக்கப் படுவது இன்றியமையாதது என இந்தப் பகுதிகள் கூறின. காப்புத் தீர்வைகள் முதலியன விதிக்கப்பட வேண்டும் என்ற அம்சம் தேசியத் தொழிலதிபர்களின் விரிவான வட்டாரங்களின் நலன்களைப் பிரதி பலித்தது.

குறித்த சில பலவீனங்கள் இருந்த போதிலும் கராச்சியில் காங் கிரசால் ஏற்கப்பட்ட செயல்திட்டம் கட்சியின் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவும் அதன் வெகுஜன அடித்தளத்தை விரிவுபடுத்த வுமான பாதையில் முக்கியமான முன்னேற்றமாக விளங்கியது.

கிட்டத்தட்டக் காங்கிரஸ் மகாநாடு நடந்த அதே சமயத்தில் அனைத்து இந்தியத் தொழிலாளர்-விவசாயிகள் கட்சியின் இரண் டாவது மகாநாடு நடைபெற்றது. சமுதாய-பொருளாதார மாற்றங் கள் குறித்துக் காங்கிரசினுடையதற்கு பதிலியான செயல்திட்டம் இதில் ஏற்கப்பட்டது.

எட்டு மணி நேர வேலை நாள், சம்பளத்துடன் விடுமுறைகள், வேலைநிறுத்தம் செய்யவும் வர்க்க நோக்கில் தொழிற்சங்கங்கள் அமைக்கவும் தொழிலாளருக்குள்ள உரிமைகளை ஏற்பது ஆகிய கோரிக்கைகள் இந்த மகாநாட்டுத் தீர்மானங்களில் முன்வைக்கப் பட்டிருந்தன. நிலப்பிரபுத்துவ நில உடைமை அகற்றப்பட வேண் டும், வருமான வரி விதிக்கப்பட வேண்டும், சக்காத்து வேலை ஒழிக் கப்பட வேண்டும், குத்தகை குறைக்கப்பட வேண்டும், கடன்களையும் குத்தகை பாக்கியையும் வரிபாக்கியையும் செலுத்துவதற்கு நீண்ட காலத் தவணை அளிக்கப்பட வேண்டும், சாதி ஏற்றத்தாழ்வு ஒழிக் கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் விவசாயிகளின் விருப்பங்களை வெளியிட்டன. முழுமையான சுதந்திரம் பெறுவதும் சமுதாய-பொருளாதார மாற்றங்களைச் செயல்படுத்துவதும் விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் குறிக்கோள் என்று விளக்கப்பட்டன.

நௌஜவான் பாரத் சபா என்னும் இளைஞர் நிறுவனத்தின் மகா நாடும் அதே சமயத்தில் நடந்தது. தொழிலாளர்களதும் விவசாயி

களதும் நலன்களைக் காப்பதற்கான போராட்டச் செயல்திட்டத்தை இது மேற்கொண்டது. நிலப்பிரபுக்களான ஜமீன்தார்களின் நில உடைமையை ஒழிப்பது பற்றிய அம்சங்கள் இதில் அடங்கி இருந்தன. கம்யூனிஸ்டு அகிலத்துக்கு முகமன் கூறும் தீர்மானம் மகாநாட்டில் நிறைவேறியது.

நாட்டில் இடதுசாரி, புரட்சிச் சக்திகளின் செல்வாக்கு கணிசமாக விரிவாகி இருந்ததை இவ்விரு மகாநாடுகளும் காட்டின. காந்தி-இர்வின் ஒப்பந்தத்தையும் இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டில் கலந்து கொள்ளத் தேசியக் காங்கிரஸ் இசைந்ததையும் இரு நிறுவனங்களும் கடுமையாக எதிர்த்தன.

ஆயினும் வெகுஜன நிறுவனங்களை அமைப்பதில் கம்யூனிஸ்டுகள் பெற்ற வெற்றிகளை மேற்கொண்டு விரிவாக்க முடியாதவாறு அந்தக் காலப் பகுதியில் அவர்கள் மேற்கொண்டிருந்த குறுகிய இடதுசாரிப் பிரிவுவாதப் போக்குகள் தடை செய்தன. தொழிலாளர்-விவசாயிகள் கட்சியின் வேலை 1931ம் ஆண்டுக்குப் பிறகு மளமளவென்று குறைக்கப்பட்டதற்கும் பெருமளவில் காரணம் இதுவே. ஆயினும், நாட்டில் வர்க்கச் சக்திகளின் தொடர்ந்த துருவ முனைப்பும் சுதந்திர அரசியல் அடிப்படையில் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியும் வெகுஜன அடித்தளம் அமைப்பதில் எல்லா முயற்சிகளையும் ஒரு முனைப்படுத்துவது அவசியம் என்ற முடிவுக்குக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைக் குழுவை இட்டு வந்தன.

மூன்றுவது சாத்துவிக ஒத்துழையாமை இயக்கம். இந்து சமுதாயத்துக்குள் ஒற்றுமைக்கான போராட்டம்

1931, செப்டெம்பர் மாதம் காந்தி இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டனுக்குப் புறப்பட்டார். முதல் மகாநாட்டில் பங்கு கொண்டவர்களே இதிலும் கலந்து கொண்டார்கள்.

பேச்சு வார்த்தைகளில் பிரிட்டிஷ்காரர்கள் முந்திய சூழ்ச்சியையே கடைப்பிடித்து மத முரண்பாடுகளைத் தூண்டி விட்டார்கள். இந்தப் பிரச்சினைகளில் முற்போக்கு நிலையை மேற்கொண்டிருந்த காந்தி இந்தியாவுக்குச் சுயாட்சி வழங்குவதே இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே உறவுகளை ஒழுங்குபடுத்துவதற்கான முக்கிய நிபந்தனையாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

வகுப்புப் பிரச்சினையின் பால் அடிப்படையில் வேறான இரண்டு அணுகு முறைகள் மகாநாட்டில் தெளிவாகப் புலப்படலாயின. வகுப்பு

உறவுகள் குறித்த விவாதத்துக்கு இடமான பிரச்சினைகளின் தீர்வு இந்தியர்களின் உள் விவகாரம் என்றும் இந்தியாவுக்குச் சுயாட்சி (இது குடியேற்ற நாட்டு அந்தஸ்தா, பூரண சுதந்திரமா என்பது தெளிவாக்கப்படவில்லை) வழங்கப்பட்டால் இது சாத்தியம் ஆகும் என்றும் தேசியக் காங்கிரஸ் கருதியது. இந்தியப் பிரதிநிதிகளால் ஒப்பந்தத்துக்கு வர முடியவில்லை ஆதலால் சட்டத்தின் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று அரசாங்கம் யோசனை தெரிவிக்கிறது என்றார்கள் பிரிட்டிஷ்காரர்கள். முஸ்லிம் லீக் இந்த நிலையை மேலும் மேலும் திட்டவட்டமாக ஆதரித்தது.

பிரிட்டிஷ்காரர்கள் பேச்சுவார்த்தைகள் முறிவதற்குத் தூண்டி விட்டதோடு அதற்குப் பொறுப்பாளிகள் காந்தியும் தேசியக் காங்கிரசும் தாம் என்று காட்ட முயன்றார்கள்.

ஆயினும், மகாநாட்டு வேலை முடிந்து 1931, டிசம்பரில் தாயகம் திரும்பிய காந்தியின் மதிப்பு காங்கிரசுக்கு உள்ளேயோ தேசம் முழுவதிலுமோ குலையவில்லை. இந்தியாவில் புரட்சி நிலையின் கூறுகள் குவிந்து கொண்டிருந்தன: வெவ்வேறு மாகாணங்களில் விவசாயிகளின் ஊக்கம் மிக்க போராட்டங்கள் தொடர்ந்து நடந்து வந்தன. காச்மீரத்திலும் ஆள்வாரிலும் கிளர்ச்சிகள் மூண்டிருந்தன. தன் தரப்பில் பிரிட்டிஷ் நிர்வாகம் காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை மீறியவாறு காங்கிரசின் தாழ்நிலை நிறுவன ஊழியர்களுக்கு எதிராக அடக்குமுறைகளைத் தொடர்ந்து கையாண்டு வந்தது.

இந்தச் சூழ்நிலையில் அடக்குமுறைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று காந்தி வைசிராயுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். இவை தோல்வியில் முடிந்தன. எனவே, புதிய சாத்துவிக ஒத்துழையாமை இயக்கம் தொடங்குவதாக அவர் 1932, ஜனவரியில் அறிவித்தார். இம்முறை அது தனி நபர் சத்தியாக்கிரக வடிவத்தை மேற்கொள்ளும் என்று காந்தி நிச்சயித்தார். டில்லியில் நடந்து கொண்டிருந்த காங்கிரஸ் கூட்டத்தின் பிரதிநிதிகள் அனைவரும், காந்தி உட்பட, அக்கணமே கைது செய்யப்பட்டார்கள். இம்முறை சத்தியாக்கிரகம் குறைந்த பயன் விளைத்ததற்கு அதிகாரிகளின் இந்த நடவடிக்கை பெரும் அளவு காரணம் ஆயிற்று.

அடக்குமுறைகளைத் தீவிரப்படுத்திய அதே சமயத்தில் பிரிட்டிஷ் காரர்கள் இந்தியாவை ஆள்வதற்கான புதிய சட்டத்தின் தயாரிப்பைத் தொடர்ந்து விரைவுபடுத்தினார்கள். தேசிய இயக்கத்தின் வெவ்வேறு போக்குக்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் மேலும் ஆழம் ஆவதற்கு அவர்கள் தூண்டி விட்டார்கள். வட்ட மேஜை மகாநாட்டின் மூன்று துணைக் கமிட்டிகளுடைய பிரதிநிதிகள் இந்தியா வந்து சேர்ந்தார்கள். மத நோக்கிலும் வேறு வகையிலும்

''சிறுபான்மையினர்'' எனப்பட்டவர்களின் பிரச்சினைகளை ஆராய்வதில் ஈடுபட்டிருந்தவர்கள் இவர்கள்.

இந்திய வகுப்புவாதக் கட்சிகளுடன் கலந்து ஆலோசித்த பிறகு இந்தியச் சட்ட மன்றங்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றிய சட்டம் 1932ல் வெளியிடப்பட்டது.

முஸ்லிம் லீகுடன் ஒப்பந்தத்துக்கு வருவது அசாத்தியமாய் இருந்தபடியால் ''சாதி இந்துக்களைத்'' ''தீண்டத்தகாதவர்களுக்கு'' (பழ மரபுக்கொத்த இந்து மதக் கோட்பாட்டின்படி இவர்கள் சாதிகளுக்குப் புறம்பானவர்களாகக் கருதப்பட்டார்கள்) எதிர்நிறுத்தும் பிரிட்டிஷ் சூழ்ச்சியைத் தகர்ப்பதில் காந்தி முக்கியமாகக் கவனம் செலுத்தினார். காங்கிரசின் மத்தியஸ்தத்தினாலும் காந்தி தனிப்பட்ட முறையில் ஊக்கத்துடன் பங்காற்றியதாலும் தீண்டத்தகாதவர் சங்கத் தலைவர்களுக்கும் இந்து மகாசபைத் தலைவர்களுக்கும் இடையே சட்ட மன்றங்களில் தீண்டத்தகாதவர்களுக்குக் குறித்த எண்ணிக்கையுள்ள இடங்கள் ஒதுக்கப்படுவது பற்றி ஒப்பந்தம் 1932ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் ஏற்பட்டது. தீண்டத்தகாதவர்களுக்குத் தனித் தொகுதி ஏற்படுத்தித் தேர்தல்கள் நடத்தும் பிரிட்டிஷ் திட்டம் இந்தக் காரணத்தால் பலிக்காது போயிற்று.

இந்து, முஸ்லிம் வகுப்புவாத நிறுவனங்களுக்கு இடையே பேச்சுவார்த்தைகள் அக்டோபர் மாதம் தொடங்கின. ஆனால் அவற்றால் ஒரு பயனும் விளையவில்லை.

''சாதி இந்துக்கள்'', தீண்டத்தகாதவர்கள்'' ஆகியோரின் நிறுவனங்களுக்கு இடையே ஏற்பட்டிருந்த ஒப்பந்தங்களை நிலைப்படுத்தும் நோக்கத்துடன் காந்தி 1932 டிசம்பரிலும் 1933 தொடக்கத்திலும் இந்தியா முழுவதிலும் தீண்டாமை எதிர்ப்பு இயக்கம் நடத்தினார். அவர்களை ''ஹரிஜனங்கள்'' (கடவுளின் மக்கள்) என அவர் அழைத்தார். ''ஹரிஜன்'' என்ற பெயரால் காந்தி நடத்திய வாரப் பத்திரிகை விரிவாகப் பரவியது.

1932ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் மூன்றாவது வட்ட மேஜை மகாநாடு லண்டனில் கூடியது. முதல் மகாநாட்டில் போலவே இம்முறையும் காங்கிரஸ் அதில் பங்கு கொள்ளவில்லை. இந்தியாவின் புதிய அரசியல் சட்ட அமைப்பு இந்த மகாநாட்டில் இறுதியாக வரையறுக்கப்பட்டது.

வெகுஜன இயக்கம் கொடுமையாக ஒடுக்கப்பட்டு, சமஸ்தானங்களில் நடந்த கிளர்ச்சிகள் படு தோல்வி அடைந்து, சத்தியாக்கிரகம் நாளுக்கு நாள் பலம் குன்றி வந்த சூழ்நிலையில், 1933, மே மாதம் காந்தி சாத்துவிக ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தினார்.

இந்தியத் தேசியப் புரட்சி இரண்டாவது தடவை பின்வாங்கியது.

தேசிய இயக்கத்தில் இடதுசாரிச் சக்திகளின் பலம் மிகுதலும் தலைமைக்கானப் போராட்டம் கூர்மை அடைதலும்

மூப்பதுக்களின் நடுவில் இந்தியாவின் பொருளாதார நிலை

1929—1933ல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து நீடித்த பொருளாதார மந்திப்புக் காலப் பகுதி வந்தது (இது தனி வகை மந்திப்பு எனப்பட்டது). 1937ல் இதன் இடத்தில் கவிந்து கொண்டிருந்தது உலகப் பொருளாதார நெருக்கடி. இரண்டாவது உலக யுத்தம் மூண்டதனால் இதன் வளர்ச்சி இடைமுறிந்தது.

நகர, நாட்டுப்புற உழைப்பாளி வர்க்கங்களின் நிலைமை பெரிதும் துன்பம் நிறைந்ததாக இருந்தது. விவசாயிகளும் கம்மியர்களும் நெருக்கடி ஆண்டுகளில் பெருவாரியாகச் சீரழிந்ததால் உழைப்பாளர் சேமிப்புப் படை கணிசமாக வளர்ந்தது. நாட்டுப்புறத்தில் மட்டு மீறிய மக்கள் தொகைப் பெருக்கத்தின் மறைமுக வடிவங்களில் நில வியது இந்தப் படை. வேலை இல்லாதவர்களின் நிரந்தர சைனியம் பல லட்சம் பெயர் கொண்டதாயிற்று.

நாட்டுப்புறத்தில் மக்கள் தொகை பெருகியதன் விளைவாக நிலப் பகுதிகளைக் குத்தகைக்கு விடுபவர்களைச் சூழ்ந்து நிலமில்லா விவசாயி களின் போட்டி கடுமை ஆயிற்று. நிலப்பிரபுக்களும் குத்தகைத் தரகர்களும் பணக்கார விவசாயிகளும் குத்தகை விகிதத்தை ஒரேயடி யாக உயர்த்த வாய்ப்பான நிலைமை இதனால் உருவாயிற்று.

பொருளாதார நெருக்கடி ஆண்டுகளிலும் நெருக்கடிக்குப் பிந்திய காலப் பகுதியிலும் விவசாயி வெகுஜனங்கள் சீரழிந்து பஞ்சைகள் ஆகிவிட்டதன் விளைவாக உடைமை நோக்கில் விவசாயிகளின் அடுக்கமைவும் வர்க்கப் பாகுபாடும் தீவிரம் ஆயின. ஒரு புறம் விவ சாயிகளிடமும் சிறு சரக்கு உற்பத்தியாளர்களிடமும் நிலக் குறைவும் நிலம் இன்மையும் மேலும் மேலும் அதிகரித்தன என்றால் மறு புறம் ரயத்துவாரிப் பிரதேசங்களில் உடைமையாளி விவசாயிகள் இடை யிலும் ஜமீன்தாரிப் பிரதேசங்களில் சலுகை பெற்ற குத்தகைக்காரர் களுக்கு இடையிலும் பணக்கார விவசாயி மேற்குடியினர் அதிக மாயினர்.

சரக்கு-பண உறவுகளும் உள்நாட்டுச் சந்தையும் மேற்கொண்டு வளர்ச்சி அடைந்ததன் விளைவாக விவசாயி உற்பத்தித் துறையில் புதிய முதலாளித்துவ உறவுகள் உரு ஆகும் நிகழ்முறை விரைவாக நடந்தது. அதே சமயம், விவசாயத்தில் நிலப்பிரபுத்துவ மீதமிச்சங் களின் (நிலப்பிரபுவின் நில உடைமை, வர்த்தக-வட்டித் தொழில்

மூலதனம் ஆகியவற்றின்) ஆதிக்கம் காலனியாட்சியின் ஆதரவுடன் நிலைத்திருந்தமையால் விவசாயம் தாழ்நிலைக்கு இழிந்து தேக்க நிலைக்கு உள்ளாயிற்று. நாட்டில் உணவுப் பண்டச் சமன்பாடு சீர்குலைந்ததும் இந்தியாவின் ஏற்றுமதி வாய்ப்புக்கள் குறுகியதும் இதற்குச் சான்று கூறின. இந்திய நாட்டுப்புறத்தில் முதலாளித்துவப் பண்புகளின் அதிகரிப்பு சமூக வளர்ச்சியின் முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்திய தோடு சிக்கலும் ஆக்கிற்று.

நாட்டுப்புறத்தில் பிரதான வர்க்கங்களுக்கும் வர்க்க அடுக்கு களுக்கும் இடையே முரண்பாடுகள் கூர்மை அடைந்தன. சமுதாய இறுக்கம் அதிகரித்தது.

நகரங்களில் சிறு பண்ட உற்பத்தியாளர்களையும் கைத்தொழிற் கூடங்களையும் சிறு ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் சீரழிவுக்கு உள்ளாக்கிய நெருக்கடி, அதே சமயத்தில் மூலதனத்தின் மையப் பாட்டையும் குவிவையும் விரைவுபடுத்த உதவிற்று. முப்பதுக்களில் இந்தியாவின் முதலாவது ஏகபோகக் கம்பெனிகள் உருவாகும் விரைந்த நிகழ்முறை, முதன்மையாகச் சிமெண்டுத் தொழிலிலும் (1936ல் இத்துறையில் ''அசோசியேட்டட் சிண்டிக்கேட்'' அமைக்கப்பட்டது, 1937ல் வலிமை மிக்க டால்மியா—ஜைன் குழு உதயம் ஆயிற்று) சர்க்கரை ஆலைத் தொழிலிலும் (இத்துறையில் 1937ல் ''இண்டியன் ஷுகர் சிண்டிக்கேட்'' என்னும் கூட்டு நிலையம் தோன்றிற்று. இதில் 108 ஆலைகள் சேர்ந்திருந்தன) நடந்தது.

இந்தியா, முதன்மையாகப் பேரளவான, தொழிற்சாலைத் துறைஉள் நாட்டுச் சந்தையில் தனது நிலையைப் படிப்படியாக வலுப்படுத்திக் கொண்டது. உதாரணமாக, துணிச் சந்தையில் அதன் பங்கு 1927—1937ல் 41லிருந்து 62 சதவிகிதமும் உலோகச் சந்தையில் (டாட்டா கம்பெனி) 1927—1934ல் 30லிருந்து 72 சதவிகிதமும் ஆயிற்று.

இந்தியத் தொழில், வர்த்தக மூலதனத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து கடன் துறையில் குவிவும் மையப்பாடும் ஏற்படும் நிகழ் முறை விரைவுபட்டது. இந்தியாவில் தொழில் நடத்திவந்த வங்கி களின் கிளைகள் 1918—1937ல் நான்கு மடங்கு ஆயின. பெரிய (பட்டியலில் குறிக்கப்பட்டவை எனப்பட்ட) வங்கிகளின் செலுத்தப் பட்ட மூலதனம் 1918—1940ல் மூன்றில் ஒரு பங்கும் சேமிப்புக் கள் 60 சதவிகிதமும் அதிகரித்தன.

வர்த்தக, வட்டித் தொழில் துறைகளிலிருந்து வங்கித் துறை, தொழில் துறை நடவடிக்கைகளுக்கு மூலதனப் பாய்ச்சல் விரைவு பட்டது.

இந்தியப் பெரு முதலாளிகள் வட்டாரத்திலிருந்து முன்வந்த டாட்டா, டால்மியா, ஜைன், வால்சந்த், பிர்லா, சிங்காணியா ஆகிய

கோடீசுவரர்களின் குடும்பங்கள் தேசியத் தொழில் முயற்சித் துறையில் ஆதிக்க நிலையை மேற்கொண்டன.

நாட்டில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி பலவீனமாக இருந்த பொதுச் சூழலில், முதலாளித்துவத்துக்கு முந்தியவையும் தொடக்க முதலாளித்துவக் காலத்தவையுமான உடைமை வடிவங்கள் மேலோங்கி இருந்த நிலையில், இந்திய ஏகபோகங்கள் வர்த்தக-வட்டித் தொழில் மூலதனத்துக்கு மேல் அமைந்த ஒரு வகை மேல் கட்டுமானமாக விளங்கின. அதனால் தான் கொழுத்த முதலாளிகளின் வருவாய்களில் வர்த்தகத்திலும் வட்டித் தொழிலிலுமிருந்து வந்த தொகைகள் முன்போலவே பெரும் பகுதியாக இருந்தன.

இந்திய முதலாளி வர்க்கத்தின் மேல்நிலையினர் நிலப்பிரபு வர்க்கத்தோடு மட்டும் இன்றி பிரிட்டிஷ் காலனியாட்சியின் சமுதாய-பொருளாதார, அரசியல் அமைப்பு அனைத்துடனும் ஓரளவு உறவு கொண்டிருந்த போதிலும் இந்தியப் பெரும் தொழிலதிபர் குழுவில் தோன்றிய ஏகபோகப் போக்குகள் தேசிய முதலாளித்துவத்தின் வளர்ச்சியையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு முரண்பாடுகளின் அதிகரிப்பையும் எதார்த்தத்தில் வெளியிட்டன.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தேசிய மூலதனத்தைத் தனது கண்காணிப்பில் வைக்க முயன்றது. இந்த நோக்கத்துடன் 1935ம் ஆண்டு இந்திய ரிஸர்வ் வங்கி நிறுவப்பட்டது. மத்திய அரசாங்க வங்கியாகப் பணி ஆற்றிய இந்த நிறுவனம் பண நோட்டுக்களும் பத்திரங்களும் அச்சிடும் உரிமை பெற்றிருந்தது. அரசு நிதிகளையும் இந்திய வங்கி மூலதனத்தையும் பெருத்த வட்டித் தொழில் நிலையங்களையும் ரிஸர்வ் வங்கி கண்காணித்தது. 1936ல் மானேஜிங் ஏஜென்சிகள் பற்றிய சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இந்தியப் பொருளாதாரத்தின் மீது பிரிட்டிஷ் ஏகபோகங்களின் கண்காணிப்பை நிலைநாட்டுவதில் இந்த ஏஜென்சிகளின் நடவடிக்கைகள் சட்டத்தினுல் சுருவாக்கப்பட்டன. இந்திய தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்துக்கும் இடையே முரண்பாடுகள் இந்த நடவடிக்கைகளின் விளைவாக மேலும் கூர்மை அடைந்தன.

முப்பதுக்களில் இந்தியாவில் நிகழ்ந்த பொருளாதார, சமுதாய வளர்ச்சி தேசிய, வர்க்க முரண்பாடுகள் (இந்திய சமூகத்தின் வெவ்வேறு வர்க்கங்களுக்கு வெவ்வேறு அடிப்படைகளிலும் அளவுகளிலும் என்றாலும்) கூர்மை அடைவதற்கு இட்டுச் சென்றது.

ஆயினும் யுத்தத்துக்கு முந்திய காலப் பகுதியில் எந்த அரசியல் நிகழ்ச்சிகள் தேசிய விடுதலை இயக்கத்தில் 1936—1939ல் புதிய ஏற்றத்தைத் தோற்றுவித்தனவோ அவற்றின் வளர்ச்சி பொருளாதாரக் காரணங்களால் மட்டும் ஏற்பட்டதாகக் கூற முடியாது.

புரட்சி ஏற்றத்தின் ஆண்டுகளில் (1929—1933) இந்தியாவின் அரசியல் வாழ்வில் ஆழ்ந்த முன்னேற்றங்கள் நிகழ்ந்தன. இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் இவற்றுக்கு விளக்கமாக அமைந்தன. முதலாவ தாக, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, தொழிலாளர்-விவசாயிகள் கட்சி கள், சிவப்புத் தொழிற்சங்கக் காங்கிரஸ் ஆகியவற்றினது நடவடிக் கைகளின் பயனாகத் தொழிலாளி வர்க்கம் சுதந்திரமான அரசியல் சக்தியாக மாறிவிட்டது. இரண்டாவதாக, விவசாயிகளின் வர்க்க நிறுவனங்களை அமைக்கவும் அவர்களையும் இந்தியாவின் அரசியல் வாழ்வில் சுதந்திரக் காரணிகளாக மாற்றவும் தேவையான முதனிலை கள் ஏற்பட்டிருந்தன.

1934—1939ல் தொழிலாளர் இயக்கம். தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமை மீண்டும் நிலைபெறுதல்

தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் போராட் டம் 1934—1939ல் வளர்ச்சி அடைந்ததனால் நிறுவன அமைப்புள்ள தொழிலாளர் இயக்கத்தில் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு அதிகரித் தது. ஒன்றித்த தொழிற்சங்க மையத்தை மீண்டும் அமைப்பதில் அவர்கள் முன்முயற்சி எடுத்துக் கொண்டார்கள்.

இந்த ஒன்றிப்பு ஒத்திசைந்த இரண்டு கட்டங்களில் நிகழ்ந்தது. தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமைக்காக 1934—1935ல் நடந்த போராட்டத்தின் முதல் கட்டத்தினது சிறப்புத்தன்மை என்ன என் றால் அது கீழிருந்து, வேலைநிறுத்தங்களின் போக்கில், தேசிய-சீர் திருத்த, வலதுசாரிச் சீர்திருத்தப் பிளவுவாதிகளின் எதிர்ப்பை வென்றதன் மூலம் வளர்ச்சி அடைந்ததாகும்.

1934ல் நடந்த நெசவாலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம் தொழி லாளர் இயக்கத்தின் முக்கிய மைல் கல்லாக விளங்கியது. தொழில் துறையின் இந்தக் கிளை முழுவதிலும் பரவியது இது. மூன்று வெவ் வேறு தொழிற்சங்க மையங்களைச் சேர்ந்த தொழிற்சங்கங்களின் செயல்கள் இந்த வேலைநிறுத்தத்தின் போது ஒன்றுயின.

கம்யூனிஸ்டுகளும் அவர்களது தலைமையில் இயங்கிய தொழிற் சங்க மையமும் வேலைநிறுத்தத்தில் ஆற்றிய நிர்ணயகரமான பங்கு பிற்போக்காளர்களை ஒரேயடியாகக் கலவரத்துக்கு உள்ளாக்கியது. எனவே காலனியாட்சி அதிகாரிகள் கம்யூனிஸ்டுக் கட்சியையும் அதன் செல்வாக்கிற்கு உட்பட்ட பல தொழிற்சங்கங்களையும் சட்ட விரோத மானவை என்று அறிவித்தார்கள். இடதுசாரிச் சக்திகளின் முன் னணிப் படையினது நடவடிக்கைகளை இந்தச் செயல் சிக்கலாக்கியது.

1935ல் துறைமுகத் தொழிலாளர்களதும் இருப்புப் பாதைத் தொழிலாளர்களதும் பெரிய வேலைநிறுத்தங்கள் தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமை என்ற கோஷத்துடன் நடந்தன.

சிவப்புத் தொழிற்சங்கக் காங்கிரஸ் தலைவர்களின் யோசனைப் படி அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசுடன் அது 1935, ஏப்ரலில் பின்வரும் முக்கிய நிபந்தனைகளின் கீழ் மீண்டும் சேர்ந்தது: வர்க்கப் போராட்டக் கோட்பாடு ஏற்கப்பட வேண்டும்; தொழில் துறையின் ஒவ்வொரு கிளையிலும் ஒன்றித்த தொழிற்சங்கம் அமைக்கப்பட வேண்டும்; சர்வதேசத் தொழிற்சங்க மையங்களில் சேர மறுக்க வேண்டும்; ஒருவரை ஒருவர் தாக்காமல் பிரசாரம் செய்யும் உரிமை இருக்க வேண்டும்; சிறுபான்மையினர் பெரும்பான்மையினருக்குக் கட்டாயம் கீழ்ப்படிய வேண்டும் (இந்தக் கடைசி நிபந்தனையை ஒப்புக் கொண்டதன் மூலம் கம்யூனிஸ்டுகள் பெரிதும் விட்டுக் கொடுத்தார்கள். ஏனெனில் ஒன்றிப்புக்கு முன் சிவப்புத் தொழிற்சங்கக் காங்கிரசில் பதினாயிரம் உறுப்பினர்களும் அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசில் எண்பதாயிரம் உறுப்பினர்களும் இருந்தார்கள்).

சில வலதுசாரித் தொழிற்சங்கத் தலைவர்கள் மறைமுக அழிவு வேலை செய்த போதிலும் தொழிற் கிளைகளின் வரம்புகளுக்குள் ஒன்றிப்பு வேலை 1936ல் வெற்றிகரமாக நிறைவேறியது. தொழிற் சங்க மையங்கள் ஒன்றுபட்டதன் முதல் பயன் முழு அல்லது அம்சரீதியான வெற்றியில் முடிந்த வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை அதிகரித்தது ஆகும் (1936ல் மொத்த வேலைநிறுத்தங்களின் 47 சதவிகிதம்). வேலைநிறுத்தங்கள் அதிக நீடித்த காலம், விடாப்பிடியாக நடக்கலாயின.

தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமைக்காக நடந்த போராட்டத்தின் இரண்டாவது கட்டத்தில், 1936—1939ல், தொழிலாளி வர்க்கம் முப்பதுக்களின் முற்பாதியில் நடத்திய தற்காப்புப் போர்களிலிருந்து தாக்குதலுக்குப் படிப்படியாக மாறி, சம்பளங்கள் உயர்த்தப்பட வேண்டும் என்றும் தொழிலதிபர்களும் அதிகாரிகளும் தொழிற்சங்கங்களுக்கு ஒப்புதல் தர வேண்டும் என்றும் கோரியது. வேலைநிறுத்தங்களின் தொகையும் அவற்றில் பங்கு கொண்டவர்களின் எண்ணிக்கையும் (சராசரி ஓர் ஆண்டுக்கு) மேலும் மேலும் அதிகரித்தன:

ஆண்டுகள்	வேலைநிறுத்தங்களின் தொகை	வேலைநிறுத்தம் செய்தவர்களின் எண்ணிக்கை, ஆயிரங்களில்
1934—1935	150	200
1936—1939	400	500

இரு தொழிற்சங்க மையங்களும் ஒன்று சேர்ந்தது, கம்யூனிஸ்டுகளால் முன்வைக்கப்பட்ட கோட்பாட்டு முக்கியத்துவம் உள்ள சில வரையறுப்புக்கள் ஒன்றித்த அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசால் ஏற்கப்பட்டது ஆகியவற்றின் விளைவாகத் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கைகள் தீவிரம் அடைந்தன. எடுத்துக்காட்டாக, 1935லும் 1936லும் மே தினக் கொண்டாட்டங்களின் போது இது வெளிப்பட்டது. 1936ம் ஆண்டில் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோஷங்களுடன் ''தொழிலாளர் வாரம்'' கொண்டாடப்பட்டது. அவ்வாண்டு நடந்த அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசின் 15ம் மகாநாட்டில் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தில் தொழிலாளி வர்க்கம் விரிவாகப் பங்காற்றுவது பற்றியும் விடுதலைப் போராட்ட முறைகள் பற்றியும் ஆராய்ந்து, தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் வேலைநிறுத்தமே இந்தப் போராட்டத்தின் மிக முக்கிய வழி என்று அறிவித்தது.

இரு தொழிற்சங்க மையங்கள் இணைந்ததால் தொழிலாளி வர்க்கத்தின் நிறுவன அமைப்பு வளர்ந்தது. 1936—1939ல் தொழிற்சங்கங்களின் மொத்த எண்ணிக்கை இரு மடங்கு ஆயிற்று. அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசின் செல்வாக்கு உழைப்பாளி வெகுஜனங்களிடையே பெரிதும் அதிகரித்தது. இந்தியத் தொழிற்சங்க சம்மேளனத்தின் வலதுசாரிச் சீர்திருத்தவாதத் தலைவர்களுடைய நிலை இதனால் பலவீனம் அடைந்தது.

தொழிலாளி வர்க்கத்தினுடைய பொருளாதாரப் போராட்டத்தின் வளர்ச்சியில் 1937ம் ஆண்டில் நடந்த பொது வேலைநிறுத்தங்கள் நிர்ணயகரமான பங்கு ஆற்றின. கான்பூர் நெசவாலைத் தொழிலாளர்கள், வங்காள-நாகபுரி இருப்புப் பாதைத் தொழிலாளர்கள், வங்காளச் சணல் ஆலைத் தொழிலாளர்கள் ஆகியோர் இவற்றில்

கலந்து கொண்டார்கள். அதிகம் பின்தங்கிய தொழிலாளர் வட்டாரங்களுக்கு அவர்கள் கிளர்ச்சி ஊட்டினர்கள்.

தொழிலாளி வர்க்கத்தில் தன் செல்வாக்கை நிலையாக வைத்திருப்பதற்காக இந்தியத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர்கள் அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசுடன் இணைந்துவிட இசைந்தார்கள். 1938, ஏப்ரல் மாதம் நாகபுரியில் நடந்த இணைப்பு மகாநாட்டில் இரு நிறுவனங்களும் ஒன்றுயின. இந்த இணைவு கணிசமான அளவு சம்மேளனத்தின் கொள்கைத் திட்ட அடிப்படையில் நிகழ்ந்தது. தொழிலாளர்களதும் தொழிலதிபர்களதும் வர்க்க ஒத்துழைப்பை இந்தத் திட்டம் ஆதரித்தது. புதிய ஒன்றித்த தொழிற்சங்க மையத்தில் (அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசில்) தலைமை இடங்களைக் காங்கிரஸ்காரர்கள் பிடித்துக் கொண்டார்கள். 1938—1939ல் தொழிற்சங்கக் காங்கிரசின் அரசியல் நடவடிக்கைகள் ஒரு சிறிது தளர்வு அடைந்தாலும் இந்தியத் தொழிற்சங்க இயக்கம் மீண்டும் ஒன்றிணைந்தது தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்தின்மீது சாதகமான பாதிப்பு நிகழ்த்தியது; இந்த ஆண்டுகளில் வேலைநிறுத்த இயக்கம் சமஸ்தானங்கள் உட்பட இந்தியாவின் மிக மிகப் பின்தங்கிய பிரதேசங்களுக்கும் பரவியது.

1939ல் ஆகப் பெரிய கிளைச் சங்கங்களின் இணைவு பெரும்பாலும் நிறைவு பெற்றது. இருப்புப் பாதைத் தொழிலாளர்கள், மாலுமிகள், துறைமுகத் தொழிலாளர்கள், நெசவாலைத் தொழிலாளர்கள் ஆகியோரின் சங்கங்கள் இவை. இணைந்த சங்கங்களில் சில (இருப்புப் பாதைத் தொழிலாளர்களதும் நெசவாலைத் தொழிலாளர்களதும் சங்கங்கள்) 1938—1939ல் கிளை முழுதும் பரவிய அளவில் ஒருங்கிணைவு மகாநாடுகள் நடத்தின. தனித் தனித் தொழில் நிலையங்களின் தரத்தில் தொழிற்சங்கங்களின் நிலைகள் மீது இந்தச் செயல் பயனுள்ள செல்வாக்கு விளைத்தது.

ஏகாதிபத்தியத்துடனும் முதலாளி வர்க்கத்துடனும் கடும் போராட்டங்கள் நிகழ்த்தித் தனது கட்சியையும் தன் வர்க்கத் தொழிற்சங்கங்களையும் அமைத்த தொழிலாளி வர்க்கம் தேசிய இயக்கத்தின் தலைமைக்காகத் தேசிய முதலாளி வர்க்கத்துடன் போராட்டம் தொடங்கியது. முப்பதுக்களின் பிற்பாதி நடுவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாமுக்குள் ஏற்பட்ட நிகழ்ச்சிப் போக்கு இந்தக் காரணியால் பெருமளவு நிச்சயிக்கப்பட்டது.

போராட்டம் இரண்டு முக்கியத் துறைகளில் நடந்தது: விவசாயிகள் இயக்கத்தின் தலைமைக்காகவும் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி அமைப்பதற்காகவுமே.

விவசாயிகள் இயக்கம்.
அனைத்து இந்திய விவசாயிகள் சங்கம் உருவாதல்

முந்திய காலப் பகுதியில், 1934—1935ல், நிறுவப்பட்ட கிஸான் சபாக்கள் (விவசாயிகள் சங்கங்கள்) விவசாயிகளுடைய சில அடிப் படைப் பொருளாதாரக் கோரிக்கைகளின் நிறைவேற்றத்துக்காகப் போராட்டத்தைத் தொடர்ந்தன. இந்தக் கோரிக்கைகளாவன: நில வாடகைகள், வரிகள் முதலியவற்றின் குறைப்பும் இத்தகைய பிற வும். விவசாயிகளின் பொதுக் கூட்டங்கள், அணி நடைகள், கிராம, வட்ட, மாவட்ட அளவுகளில் மகாநாடுகள் ஆகியன இயக்கத்தின் பிரதான வடிவங்களாக விளங்கின. பீகார், பஞ்சாப், வட சென்னை (ஆந்திரப் பிரதேசம்) ஆகிய மாகாணங்களில் கிஸான் சபாக்கள் சிறப் பாகத் துடியாகச் செயலாற்றின. இவற்றில் மாவட்ட அளவில் மட்டும் இன்றி மாகாண அளவிலும் விவசாயிகளின் நிறுவனங்கள் இயங்கின.

பெரும்பாலான வட்டாரக் கிஸான் சபாக்கள் கம்யூனிஸ்டு களுடையவும் விவசாயி ஜனநாயகவாதிகளுடையவும் செல்வாக்கில் இருந்தன. நிறுவன அமைப்புள்ள விவசாயிகள் இயக்கத்தை வசப் படுத்தக் காங்கிரஸ்காரர்கள் செய்த முயற்சிகள் தோல்வி அடைந் தன. இந்த நிலைமைகளில் என். ஜி. ரங்கா, வி. வி. கிரி, வேறு சில தேசியச் சீர்திருத்தவாதிகள் ஆகியோர் தேசியக் காங்கிரசின் ஆதர வில் அனைத்து இந்திய விவசாயிகள் நிறுவனம் ஒன்று அமைக்க ஏற்பாடு கள் தொடங்கினர்கள். 1935ம் ஆண்டு நடந்த முன்னேற்பாட்டு மகாநாட்டில் ரங்கா குழுவினருக்கு அரசியல் ஆதரவு அதிகமாகக் கிடைத்தது. ஆயினும் ஒன்றிப்புக்கு இசைவு தெரிவித்த மாகாணக் கிஸான் சபாக்களின் தலைமை இடதுசாரிச் சக்திகளின் கரங்களில் இருந்தது. புதிய நிறுவனத்தின் முதல் மகாநாட்டிலேயே இந்த நிலைமை பாதிப்பு நிகழ்த்தியது.

''ஆல் இண்டியா கிஸான் சபா'' (அனைத்து இந்திய விவசாயிகள் சங்கம்) சட்ட அமைப்பு மகாநாடு தேசியக் காங்கிரசின் ஆண்டுக் கூட்டம் நிகழ்ந்த அதே சமயத்தில் லக்னௌ நகரில் 1936, ஏப்ரல் மாதத்தில் நடந்தது (இரு நிறுவனங்களும் நெருங்கியவை என்பதை உருவகப்படுத்திக் காட்டுவதற்காக இந்த ஏற்பாடு). கிஸான் சபாவின் தலைமை உறுப்பான ''மைய விவசாயிகள் ஆலோசனைக் குழுவில்'' பெரும்பான்மை பெறத் தேசியச் சீர்திருத்தவாதிகளுக்கு முடியவில்லை.

அதே ஆண்டு ஆகஸ்டில் நடந்த குழுவின் கூட்டத்தில் விவசாயி களது உரிமைச் சாசனம் ஏற்கப்பட்டது. இது கிஸான் சபாவின் செயல்

திட்டத் தஸ்தாவேஜு. ஜமீன்தாரி வகையான நிலப்பிரபுத்துவ நில உடைமையை ஒழிப்பதற்கும் ரயத்துவாரிப் பிரதேசங்களில் வரிவிதிப்பு முறையைச் சீர்திருத்துவதற்கும் குத்தகை விகிதத்தைக் குறைப்பதற்கும் இவை போன்ற பிறவற்றுக்கும் சாசனத்தில் வகை செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு, நாட்டுப்புற முதலாளி வர்க்கத்தையும் ரயத்துவாரிப் பிரதேசங்களில் நிலப்பிரபு வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சிலரையும் கூட உள்ளிட்ட தேசியச் சக்திகளின் முடிந்தவரை விரிவான கூட்டணியின் அடிப்படையில் ஏகாதிபத்தியத்துடனும் நிலப்பிரபுத்துவத்துடனும் போராடுவதற்கு இந்திய விவசாயிகளை ஆயத்தப்படுத்தியது இந்தச் சாசனம்.

நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான விவசாயிகளின் போராட்டத்தையும் தேசிய விடுதலை இயக்கத்தையும் ஒன்றுகப் பிணைத்தது சாசனத்தின் முக்கியத்துவமாக விளங்கியது. வட்டாரக் கிஸான் சபாக்கள் சாசனத்தின் வரையறுப்புக்களைப் பிரசாரம் செய்தன. விவசாயிகள் தங்கள் வர்க்க நலன்களைத் தெரிந்து கொள்ள இந்தப் பிரசாரம் உதவியது. அதோடு, விவசாயிகளிடம் தேசிய உணர்வையும் ஜனநாயக உணர்வையும் தூண்டியது.

அனைத்து இந்தியக் கிஸான் சபாவின் அடுத்த மகாநாடு 1936, டிசம்பரில், முந்திய மகாநாடு போலவே தேசியக் காங்கிரசின் ஆண்டுக் கூட்டம் நடந்த இடத்திலேயே, அதாவது, இம்முறை பைஸ்பூரில் (மகாராஷ்டிரம்) நடந்தது. இந்த மகாநாட்டில் இடதுசாரிச் சக்திகளின் நிலை மேலும் வலுவடைந்தது. மகாநாடு விவசாயிகளின் உரிமைச் சாசனத்திற்கு ஒப்புதல் அளித்தது. ரங்கா குழுவினரோடு கடுமையான போராட்டத்துக்குப் பின்னர் காங்கிரஸ் கொடியை விட்டு விட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொடியை—அரிவாளும் சம்மட்டியும் பொறித்த செங்கொடியைத்—தனது சின்னமாக ஏற்றது. பீகார் மாகாணக் கிஸான் சபாத் தலைவர்களில் ஒருவரும் புரட்சிகர ஜனநாயகவாதியுமான சுவாமி சகஜானந்த சரசுவதி நிறுவனத்தின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அனைத்து இந்தியக் கிஸான் சபா நிறுவப்பட்டது இந்தியாவின் விவசாயிகள் இயக்க வரலாற்றில் முக்கியமான திருப்பமாக விளங்கியது. இந்திய சமூகத்தில் எல்லாவற்றிலும் அதிக எண்ணிக்கை கொண்ட வர்க்கம் ''தன் உணர்வு பெற்ற வர்க்கம்'' ஆகி, தேசிய விடுதலைப் போராட்டத்தில் சுதந்திரமான பாத்திரம் வகிக்கத் தொடங்கியது.

தொழிலாளர்களதும் விவசாயிகளதும் வெகுஜன நிறுவனங்களின் தலைமைக்கான போராட்டம் வெவ்வேறு வடிவங்களில் நடை

பெற்றது. நாட்டின் உள் அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்ட மாறுதல் களையும் தேசியக் காங்கிரசின் உள் நிகழ்ந்த பரிணும வளர்ச்சியை யும் இது பெருமளவு சார்ந்திருந்தது.

ஒன்றித்த தேசியக் கூட்டணி ஏற்படுத்தும் முயற்சிகள். காங்கிரசில் உள் போராட்டம் முற்றுகிறது

காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சி அமைக்கப்படுதல்

1934, மத்தியச் சட்ட சபைத் தேர்தல்கள் நெருங்கி வந்த போது தேசியக் காங்கிரசின் வலதுசாரி இந்தத் தேர்தல்களில் பங்கு கொள்வதற்கான காங்கிரஸ் உறுப்பாக சுயராச்சியக் கட்சியை மீண் டும் உயிர்ப்பித்தது. ஆனல் காங்கிரசில் இருந்த பழமை விரும்பிச் சக்திகள் அந்தக் காலத்துக்குள் தங்கள் செல்வாக்கை வெகுவாக இழந்துவிட்டிருந்தன. நாட்டில் இடதுசாரிச் சக்திகள் நிலை பெற்று விட்டது, உழைப்பாளி மக்களின் வெகுஜன நிறுவனங்களின் தலைமை உறுப்புக்களில் கம்யூனிஸ்டுகளும் புரட்சிகர ஜனநாயகவாதிகளும் நிலையான இடங்களைக் கைப்பற்றி இருந்தது ஆகிய இந்த எல்லா நிகழ்ச்சிகளும் காங்கிரசின் வெகுஜன அடித்தளத்தை விரிவாக்க உத வும் வகையில் அதன் அமைப்பில் திட்டவட்டமான சீர்திருத்தங்கள் செய்யும்படிக் கட்சித் தலைமையை வற்புறுத்திக் கட்டாயப்படுத்தின.

1918—1920ல் நிகழ்ந்த தன் அடிப்படைச் சீரமைப்புக்குப் பதினேந்து ஆண்டுகள் பின்னரும் காங்கிரஸ் எல்லாவற்றிலும் செல்வாக்கு மிக்க அனைத்துத் தேசிய நிறுவனமாக விளங்கிவந்தது. முதலாளித்துவ நிலப்பிரபுத்துவக் கட்சியாக இருந்த காங்கிரஸ், முதலாளித்துவ, சிறு முதலாளித்துவத் தேசியவாதிகளின் பல்வேறு போக்குக்களும் குழுக்களும் சேர்ந்த தனிவகைக் கூட்டணியாக நாளடைவில் மாறியிருந்தது. இவை வர்க்கங்களின் கணிசமாக விரிவான நிறமாலையைப் பிரதிநிதித்துவப்படுத்தின. இந்தக் கூட்டணி யின் தலைமை முதலாளி வர்க்கத்திடமே இருந்தது. நிறுவனத்தின் இத்தகைய தனிவகைத் தன்மை காங்கிரசிற்கு உள் இருந்த பிரதானப் போக்குகளின் வகைவேறுபாடுகள் காரணமாக ஏற்பட்டது. வலது சாரிச் சீர்திருத்தவாதம், ஆதிக்கம் வகித்த காந்தியம், இடதுசாரிப் போக்கு ஆகியவை இவை. இடதுசாரிப் போக்கைப் பிரதிநிதித்து வப்படுத்தியவை சுபாஷ் சந்திர போசையும் ஜவாகர்லால் நேருவை

யும் ஆதரித்த இளைஞர்களின் உட்குழுக்கள் மட்டும் அல்ல, இந்தியாவில் சோஷலிஸ சமூகத்தை நிறுவுவதற்குத் தாங்கள் ஆதரவாளர்கள் என்று அறிவித்த குழுக்களும் ஆகும். விஞ்ஞான சோஷலிஸத்தின் பாலும் கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துழைப்பின் பாலும் கவர்ச்சி இந்தக் குழுக்களிடையே மிகுந்து கொண்டு போயிற்று.

இந்தப் போக்குக்கு எதிர்நிறையாக ஜெயப்பிரகாஷ் நாராயண், ஆசாரிய நரேந்திர தேவ், அசோக் மேத்தா ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்ட சோஷலிஸ்டுகளின் குழு 1934ல் காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவிற்று. இந்தக் கட்சி காங்கிரசின் வரம்புகளுக்குள் செயலாற்றியது. கட்சியின் சட்ட அமைப்பு மகாநாடு அந்த ஆண்டு அக்டோபர் மாதம் பம்பாயில் கூடியது. தனது சித்தாந்தத்திலும் கொள்கையிலும் இம்மகாநாடு மேற்கு ஐரோப்பிய சமூக-ஜனநாயகத்தைப் பல அம்சங்களில் பின்பற்றியது.

உழைப்பாளிகளின் வெகுஜனப் போராட்டத்தை ஒழுங்கமைப்பதும் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே காங்கிரசின் நிலையான சமுதாய அடித்தளத்தை நிறுவுவதும் தங்கள் அதி முக்கியப் பணி என்று காங்கிரசுக்குள் இருந்த மற்ற இடதுசாரிக் குழுக்கள் போலவே காங்கிரஸ் சோஷலிஸ்டுகள் எண்ணினார்கள்.

வெகுஜனங்களுக்கு இடையே வேலை செய்வதற்கான வழிகள் பற்றி முக்கியமான இரண்டு அணுகுமுறைகள் இடதுசாரிக் குழுக்களில் மிகத் தெளிவாகக் காணப்பட்டன. பொருளாதாரப் போராட்டம் நடத்துவது போதும் என்றும் அரசியல் இயக்கங்கள் நடத்தும் ஏகபோக உரிமையைக் காங்கிரசுக்கு விட்டு விடலாம் என்றும் சீர்திருத்தப் போக்கு கருதியது. வெகுஜனங்களின் பொருளாதாரப் போராட்டத்தையும் அரசியல் போராட்டத்தையும் இணைக்க வேண்டும் என்று புரட்சிப் போக்கு வலியுறுத்தியது. ஆனால் காங்கிரசில் இருந்த இடதுசாரியினரின் இரு பிரிவுகளும் வெகுஜன இயக்கத்தின் தனித் தலைமை காங்கிரசிடமே இருக்க வேண்டும் என்பதில் கருத்து ஒற்றுமை கொண்டிருந்தன. காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சி விதிகளின்படி, காங்கிரஸ்காரர்கள்தாம் அதன் உறுப்பினர்கள் ஆகலாம் என்பது கவனத்துக்கு உரியது.

காங்கிரசில் இடதுசாரிச் சக்திகளின் செல்வாக்கு விரைவாக வளர்ந்தமையால் நிறுவனத்தின் மீது தம்முடையவும் தமது குழுவினுடையவும் கண்காணிப்பை உறுதிப்படுத்துவதற்காகக் காங்கிரசின் தலைமை உறுப்புக்களது அமைப்பில் ஒரு சில மாறுதல்கள் செய்வது காந்திக்குக் கட்டாயம் ஆயிற்று. 1934, அக்டோபர் மாதம் பம்பாயில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் அதன் விதிகளில் பின்வரும் திருத்தம் செய்யப்பட்டது: காங்கிரஸ் செயற்குழு இனி அனைத்து

இந்தியக் காங்கிரஸ் கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்படாது; ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுக்கப்படும் காங்கிரஸ் தலைவரால் நியமிக்கப் படும். சாத்துவிக ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்திவிடுவது என்ற காந்தியின் முடிவை பம்பாய் மகாநாடு உறுதிப்படுத்தியது. மத்தியச் சட்ட மன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் கலந்து கொள்ளும் என அது தீர்மானித்தது.

காந்தி சடங்கு முறையில் காங்கிரசிலிருந்து விலகி விட்டார். மக்களிடையே தம் செல்வாக்கையும் கட்சிக்கு மேற்பட்ட அனைத்து தேசியத் தலைவர் என்ற மதிப்பையும் காப்பாற்றிக் கொள்ள இது அவருக்கு உதவிற்று. ஏனெனில் காங்கிரசின் சமயோசிதப் போக்கு களுக்கும் போர்த்தந்திரப் பின்வாங்கல் நடந்த காலப் பகுதியில் காலனி ஆட்சியாளர்களுடன் அதன் அம்சரீதியான ஒப்பந்தத்துக்கும் இப்போது அவர் பொறுப்பு ஏற்க வேண்டி இருக்கவில்லை. இந்த ஆண்டுகளில் அவர் தமது ஆக்க வேலைத்திட்டத்தை (இந்து-முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, கை நெசவுக்கும் நூற்புக்கும் ஊக் கம் அளித்தல், சிறு உற்பத்தி வளர்ச்சி) மீண்டும் தீவிரமாகப் பிர சாரம் செய்தார். நகர, நாட்டுப்புறக் கம்மியர்கள், குடிசைத் தொழி லர்கள், சிறு தொழிலகத் தலைவர்கள், வியாபாரிகள் ஆகியோர் இடையிலும் நகரத் தாழ்நிலையினர் இடையிலும் காந்தியின் செல் வாக்கு இதனால் உறுதிப்பட்டது. அவர் நடத்திய வெகுஜன சாத்து விக ஒத்துழையாமை இயக்கங்களில் இவர்களே இயக்கு சக்தியாக இருந்தார்கள்.

''1935ம் ஆண்டு அரசியல் சட்டமும்''
புதிய சட்ட மன்றத் தேர்தல்களும்

இந்தியாவின் உடைமையாளர் வர்க்கங்களிடையே காங்கிரசின் அபரிமிதமான செல்வாக்கு நிலைத்திருந்தபடியால் 1934, நவம்பரில் நடந்த, ஆறரை லட்சம் வாக்காளர்கள் கலந்துகொண்ட தேர்தல் களில் பாதிக்கு மேற்பட்ட வாக்குக்களும் மத்தியச் சட்ட மன்றத்தில் இடங்களும் அதற்குக் கிடைத்தன.

சைமன் கமிஷனதும் வட்ட மேஜை மகாநாட்டினதும் பரிந் துரைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இந்திய ஆட்சிச் சட்டத் தின் புதிய மசோதாவைப் புதிய மத்தியச் சட்ட மன்றத்தில் ஒரு கட்சி கூட ஆதரிக்கவில்லை. ஆனால் புதிய ''அரசியல் சட்டம்'' பிரிட் டிஷ் நாடாளுமன்றத்தால் 1935, ஆகஸ்டில் ஏற்கப்பட்டது.

புதிய சட்டத்தில் இந்திய முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக் கும் ஒரு சில சலுகைகள் காட்டப்பட்டிருந்தன. வாக்காளர் தொகை வயது வந்த மக்கள் தொகையில் 12 சதவிகிதம் வரை அதிகமாக்கப்

பட்டிருந்தது. வாக்காளர்களின் உடைமைத் தகுதியும் பிற தகுதி களும் குறைக்கப்பட்டதையும் உடைமையாளர் வர்க்கங்களின் தாழ் நிலை வட்டாரங்களுக்கும் உழைப்பாளர்களின் சில குழுக்களுக்கும் (உயர்நிலை விவசாயிகளுக்கும் தொழிலாளர் தொகுதியில் வாக்களித்த தொழிலாளர்களின் சில பிரிவுகளுக்கும்) வாக்குரிமை வழங்கப் பட்டதையும் இது குறித்தது. சட்ட மன்றங்களின் சிறப்புரிமை களும் சிறிது விரிவாக்கப்பட்டிருந்தன. மாகாண அமைச்சரவைகள் (கவர்னர்களின் சீரமைக்கப்பட்ட நிர்வாக சபைகள்) இனி சட்ட மன்றங்களுக்குப் பொறுப்பேற்கக் கடமைப்பட்டிருந்தன.

அதே சமயம் இந்தச் சட்டம் இரட்டையாட்சியை நிலையாக வைத்திருந்தது. நடப்பில் முழு அதிகாரமும் பிரிட்டிஷ் காலனியாட்சி நிர்வாக இயந்திரத்தினிடமே இருந்தது.

தவிரவும் தேர்தல்களில் தொகுதி முறையை விரிவாகப் பயன் படுத்த இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தது. இது தேசிய இயக்கத்தைப் பிளவுபடுத்தியது, பழமை விரும்பிச் சக்திகளின் நிலைகளை வலுப்படுத்தியது. இந்து-முஸ்லிம் உறவுகளை மேற்கொண்டு சிக்கலாக்கும் நோக்கத்துடனும் தேசியக் காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முட்டுக்கட்டை போடு வதற்காகவும் முஸ்லிம்களுக்கும் பிற ''சிறுபான்மையினருக்கும்'' ஓரளவு சாதகமான வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டிருந்தன. ''தீண்டத்த காதவர்களைச்'' சேர்த்து இந்துக்கள் எழுபது சதவிகிதம் வாக்குக்கள் கொண்டிருந்தார்கள், ஆனால் அவர்களுக்கு ஐம்பத்தைந்து சதவி கிதம் இடங்களே தரப்பட்டிருந்தன. சமஸ்தான மன்னர்களின் செல் வாக்கு அதிகமாக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய நியமன உறுப்பி னர்கள் மத்தியச் சட்ட மன்றத்தில் மூன்றில் ஒரு பங்கு இடங்களும் ராஜ்ய சபையில் ஐந்தில் இரண்டு பங்கு இடங்களும் பெற்றிருந்தார் கள்.

நாட்டின் அந்தஸ்து பற்றிச் சட்டத்தில் ஒன்றும் கூறப்படவில்லை. ஆனால் வருங்காலத்தில் அது துண்டாடப்படுவதற்கு வகை செய்யப் பட்டிருந்தது. கூட்டரசுத் திட்டம் எனப்பட்டதால் இவ்வாறு கூறு போட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்படி சமஸ்தான மன் னர்களுக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சேரவோ அல்லது ஆட்சித் தலைமை நாட்டுடன் சுதந்திர உறவுகள் ஏற்படுத்திக் கொள்ளவோ உரிமை தரப்பட்டிருந்தது. ''கூட்டரசுத் திட்டம்'' பெருத்த ஆத் திரம் ஊட்டியது. அது செயல்படுத்தவே படவில்லை.

புதிய அரசியல் சட்டம் பிரகடனப்படுத்தது நாடு முழுவதிலும் எதிர்ப்பைக் கிளப்பியது. ''அடிமை அரசியல் சட்டம்'' என்று அதற்குப் பெயரிடப்பட்டது.

மத்தியச் சட்ட மன்றத்துக்கும் மாகாணச் சட்ட மன்றங்களுக்கும் புதிய தேர்தல்கள் 1937ல் நடத்துவதாகக் காலனியாட்சி அரசாங்கம் தீர்மானித்தது. பிரிட்டிஷ் காலனியாட்சிக் கொள்கைக்குக் கடுமையான கண்டனங்கள் தெரிவித்தவாறு தேர்தல் ஏற்பாடுகள் நாட்டில் விரிவாகத் தொடங்கின.

தேர்தல்களுக்கு முன்னேற்பாடுகள் செய்கையில் கம்யூனிஸ்டுகளும் அவர்களோடு சேர்ந்த புரட்சிகர ஜனநாயகவாதிகளும் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி அமைப்பதற்கான போராட்டத்தைத் தொடங்கினர்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசின் தீர்மானங்கள் கம்யூனிஸ்டுகளின் கொள்கை மீது மிகப் பெருத்த, நிர்ணயகரமான செல்வாக்கு செலுத்தின. பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்களான பாம் தத்தும் பென் பிராட்லியும் இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு எழுதிய பகிரங்கக் கடிதத்தில் திண்ணமான யோசனைகள் தெரிவித்தார்கள்.

கம்யூனிஸ்டுகள் காங்கிரசில் சேர்வது என்ற தீர்மானத்தை இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி மேற்கொண்டது. கூட்டாகக் காங்கிரசில் சேரும் முடிவை அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் 1936, மே மாதம் செய்தது. அனைத்து இந்தியக் கிஸான் சபாவும் இதே தீர்மானத்தை நிறைவேற்றியது. கம்யூனிஸ்டுகளின் தலைமையில் இயங்கும் பிரிவு நிறுவனத்தில் அமைக்கப்படுவதற்கு அஞ்சிய காங்கிரஸ் தலைவர்கள் இந்த முயற்சிக்கு மறுப்பு தெரிவிக்கவே கம்யூனிஸ்டுகளும் ஜனநாயகவாதிகளும் தனி நபர்களாகக் காங்கிரசில் பெருத்த எண்ணிக்கையில் சேர முற்பட்டார்கள். எப்படியும் காங்கிரசை ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியாக மாற்றுவது அவர்களுடைய நோக்கமாக இருந்தது.

இந்தச் செயல்களின் விளைவாகக் காங்கிரசில் இடதுசாரி வலுவடைந்தது. ஜவாகர்லால் நேரு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லக்னௌ காங்கிரசில் (1936, மே) இந்த விஷயம் வெளிப்பட்டது. நேரு நியமித்த செயற் குழு உறுப்பினர்களில் மூன்றில் ஒருவர் இடதுசாரிக் காங்கிரஸ்காரர்களின் பிரதிநிதியாக இருந்தார்.

முப்பதுக்களில் ஜவாகர்லால் நேருவின் அரசியல் கொள்கை நிலை ஓரளவு முரண்பாடுகளும் ஒத்திசைவு இன்மையும் கொண்டதாக இருந்தது. அந்தக் காலத்துக்குள் அவருடைய சமூக-அரசியல், தத்துவக் கருத்துக்கள் பெரும்பாலும் உருவாகிவிட்டிருந்தன. விஞ்ஞான சோஷலிஸத்தின் ஓரளவு செல்வாக்கு இவற்றில் காணப்பட்டது. அதே சமயம் நேருவின் சோஷலிஸ ஆதர்சங்கள் அவருக்கு ஏற்புடையவையாக இருந்த, உலகக் கண்ணோட்டம் பற்றியவையும் சிறப்பாக நடைமுறை அரசியலைச் சேர்ந்தவையும் ஆன காந்தியின்

சிந்தனைப் போக்குக்களுடன் கதம்பக் கலவையாகச் சேர்ந்திருந்தன.

ஜவாகர்லால் நேரு மீதும் காங்கிரசின் இடதுசாரியைச் சேர்ந்த சுபாஷ் சந்திர போஸ் உள்ளிட்ட வேறு பல தலைவர்கள் மீதும் சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானத்தின் வெற்றிகள் பெருத்த உளப்பதிவை ஏற்படுத்தி இருந்தன. சோவியத் அரசின் பால் தங்கள் பற்றுதலை அவர்கள் பகிரங்கமாக வெளியிட்டார்கள். வீர ஸ்பெயினையும் தங்கள் சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருந்த சீனத்தையும் அபிசீனியாவையும் ஆதரித்துப் பேசியும் எழுதியும் வந்தார்கள்.

தேசியக் காங்கிரசின் இடதுசாரியைச் சேர்ந்த இந்த இரு பிரபலத் தலைவர்களின் செயல்களில் வேறுபாடுகள் இருந்தன. இருபதுக்களின் முடிவுக்கும் முப்பதுக்களின் தொடக்கத்துக்கும் இடைப்பட்ட காலப் பகுதியிலிருந்து மரபு முறையில் அவர்கள் பெற்றவை இந்த வேறுபாடுகள். வங்காள மாகாண நிறுவனத்தின் அடிப்படையில் தமது சொந்த ஆதாரத்தானத்தைக் காங்கிரசில் அமைப்பதற்காக சுபாஷ் சந்திர போஸ் முனைந்து பாடுபட்டார். முடிவில் தலைமைக் குழு உறுப்பினர்களையும் கட்சியின் கொள்கையையும் மாற்றுவது அவருடைய நோக்கமாக இருந்தது. நேருவோ, மொத்தத்தில் காந்தியின் கட்சிக் கொள்கை என்ற பாதுகாப்பான தடத்தைப் பின்பற்றினார். இதனால் அந்தக் காங்கிரஸ் தலைவரின் நிலையான ஆதரவு அவருக்குக் கிடைப்பது உறுதியாக இருந்தது. முப்பதுக்களின் பிற்பாதி நடுவில் நேரு ஆற்றிய செயல்களின் முக்கியமான அம்சம், வெவ்வேறு முன்னேற்றப் போக்குகளுடனும் நிறுவனங்களுடனும், சிறப்பாகத் தமது அயல்நாட்டுப் பயணங்களின்போது, காங்கிரசின் சர்வதேசத் தொடர்புகளை விரிவுபடுத்தியது ஆகும். இந்தியத் தேசியவாதத்தின் சர்வதேச உறவுகளை விரிவாக்குவது விடுதலைப் போராட்டத்தில் முக்கியமானது என்று நேரு கருதினார்.

''அடிமை அரசியல் சட்டத்துக்கு'' எதிராகப் போராடும் நோக்கத்துடன் காங்கிரஸ் தேர்தல்களில் கலந்துகொள்ளும் என்று லக்னௌ மகாநாடு தீர்மானித்தது.

அதே ஆண்டு டிசம்பர் மாதம் பைஸ்பூரில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் விவசாயிப் பிரச்சினை குறித்த பூர்வாங்கக் கோரிக்கைகள் விவசாயிகளின் உரிமைச் சாசனத்துக்கு மாற்றாக ஏற்கப்பட்டன. குத்தகை விகிதம், கடன்களுக்கு வட்டி, நிலவரி ஆகியவற்றைக் குறைக்கும் பொருட்டுக் காங்கிரசின் ஆதரவுடன் விவசாயிகள் இயக்கம் தொடங்குவதற்கு மகாநாட்டுத் தீர்மானங்களில் வகை செய்யப்பட்டது. கிஸான் சபாவின் தலைமையின் பொருட்டுக் கம்யூனிஸ்டு

களுடன் போராட்டம் தொடங்கக் காங்கிரஸ் கொண்டிருந்த உறுதியை இந்தத் தீர்மானங்களின் நிறைவேற்றம் காட்டியது.

இதற்கிடையே பொது ஜனநாயக இயக்கம் மேலும் மேலும் புதிய சமூக வட்டாரங்களுக்கும் குழுக்களுக்கும் பரவியது. அனைத்து இந்திய மாணவர் சம்மேளனம், அனைத்து இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கம், அனைத்து இந்திய சமஸ்தான மக்கள் மகாநாடு ஆகிய நிறுவனங்கள் 1936ல் அமைக்கப்பட்டன. காங்கிரஸ்காரர்கள் மட்டும் இன்றிக் கம்யூனிஸ்டுகளும் புரட்சிகர ஜனநாயக வாதிகளும் இந்த எல்லா நிறுவனங்களிலும் ஊக்கத்துடன் வேலை செய்தார்கள். அனைத்து தேசிய ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி அமைக்க இது உதவியது. கம்யூனிஸ்டுகள் தேர்தல்களில் காங்கிரசை ஆதரித்தார்கள். மூன்று சதவிகிதம் இடங்கள் மட்டுமே ஒதுக்கப் பட்டிருந்த தொழிலாளர் தொகுதியில் மாத்திரம் அவர்கள் சுதந்திரமாகப் போட்டியிட்டார்கள்.

முப்பதுக்களின் நடு வாக்கில் இந்தியாவில் இருந்த கட்சி-அரசியல் அமைப்பு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் மிகப் பல் வகையாகக் காட்சி அளித்தது. காங்கிரசையும் முஸ்லிம் லீகையும் இந்து வகுப்புவாத நிறுவனமான இந்து மகாசபையையும் தவிரச் சில மாகாணங்களில் காங்கிரசுக்கு எதிரான வட்டார முதலாளி வர்க்க, சிறு முதலாளி வர்க்கக் கட்சிகள் செயலாற்றி வந்தன. இவையாவன: பஞ்சாபில் ''யூனியனிஸ்டுக் (ஐக்கியவாதிக்) கட்சி'', வங்காளத்தில் ''பிரஜா கிருஷக் ஷமிதி'' (மக்கள் விவசாயிக் கட்சி), ஐக்கிய மாகாணத்தில் தேசிய விவசாயிகள் கட்சி, பம்பாயிலும் மத்திய மாகாணத்திலும் சுதந்திரத் தொழிலாளர் கட்சி, சென்னையில் நீதிக் கட்சி, ஒரிஸ்ஸாவில் ''அட்வான்ஸ்'' (முன்னேற்றக்) கட்சி.

இந்தக் கட்சிகளில் சிறு முதலாளி வர்க்கக் குழுக்களோடு கடைக் கோடிப் பிற்போக்காளிகளான நிலப்பிரபுத்துவ வட்டாரங்களும் சேர்ந்திருந்தன. இவற்றில் சிலவற்றின் செயல்களில் தெளிவான வகுப்புவாத (உதாரணமாக, ''யூனியனிஸ்டுக் கட்சியும்'' ''பிரஜா கிருஷக் ஷமிதியும்'') அல்லது சாதி (அம்பேத்கரைத் தலைவராகக் கொண்ட சுதந்திரத் தொழிலாளர் கட்சியும் நீதிக் கட்சியும்) வண்ணச் சாயல் வெளிப்படையாகத் தெரிந்தது.

எனினும் இந்தக் கட்சிகளின் செல்வாக்கு அளவறுத்ததாகவே இருந்தது. காங்கிரசின் முக்கிய எதிர்க் கட்சிகளாக இருந்தவை இந்து மகாசபையும் முஸ்லிம் லீகுமே.

இந்தக் காலத்துக்குள் முஸ்லிம் லீகில் முகமது அலி ஜின்னாவின் தலைமையில் அதிக முற்போக்குள்ள பிரிவு உருவாகி இருந்தது. அது வரை வெகுஜன ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் நடத்தி

இராத முஸ்லிம் லீக், இந்தியாவின் பூரண சுதந்திரத்தைப் பெறுவதற்கான போராட்டமே தனது முக்கியக் குறிக்கோள் என்று 1937ல் தன் லக்னௌ மகாநாட்டில் அறிவித்தது. ஆனால் அதன் பின் நாடு விடுதலை பெற்ற ஜனநாயக அரசுகளின் கூட்டரசாக மாற வேண்டும் என அது கூறியது. முஸ்லிம் லீகின் புதிய செயல்திட்டம் காங்கிரசைப் பின்பற்றி வந்த முஸல்மான்களில் ஒரு பகுதியினரை அதன் தரப்புக்கு ஈர்க்க உதவியது. சுதந்திர இந்தியா கூட்டரசாக அமைய வேண்டும் என்ற கருத்து லீகினுடைய நடவடிக்கையின் மத-வகுப்புவாதத் தன்மைக்கு ஏற்றதாக இருந்தது. இந்திய முஸ்லிம்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தத் தனக்கே ஏகபோக உரிமை உண்டு என்று லீக் கூறி வந்தது. சுதந்திரப் பாக்கிஸ்தான அரசை நிறுவுவதற்கான வருங்காலக் கோரிக்கையின் வித்தும் இந்தக் கூட்டரசுக் கருத்தில் அடங்கி இருந்தது.

காங்கிரசும் லீகும் மாகாண அரசாங்கங்களில். நாட்டில் அரசியல் போராட்டம் தீவிரம் ஆகிறது

தேர்தல்களின் விளைவாகக் காங்கிரஸ் பத்தில் எட்டு மாகாணங்களில் (பஞ்சாபையும் வங்காளத்தையும் தவிர) வெற்றி அடைந்து அவற்றில் மாகாண அரசாங்கங்களை அமைத்தது. ஆனால் 1938ல் காங்கிரசும் முஸ்லிம் லீகும் அஸ்ஸாமிலும் சிந்துவிலும் கூட்டணி அரசாங்கங்களை நிறுவின.

காங்கிரஸ் அரசாங்கங்கள் புதிய விவசாயச் சட்டங்கள் தயாரிக்கத் தொடங்கின. சலுகை பெற்ற குத்தகைக்காரர்களின் வட்டாரத்தை விரிவுபடுத்தவும் குத்தகை விகிதங்களை அளவறுக்கவும் வட்டித் தொழிலர்களிடம் விவசாயிகள் பட்ட கடன்களின் தீர்வை நீண்ட காலத்துக்கு ஒத்திப் போடவும் இத்தகைய பிற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவும் இவற்றில் வகை செய்யப்பட்டிருந்தது. உழைப்பாளி விவசாயிகளின் நலன்களுக்கு மட்டும் இன்றி கிராம முதலாளி வர்க்க நபர்களுடையவும் நலன்களுக்கு இந்த நடவடிக்கைகள் ஏற்றவையாக இருந்தன.

அதே சமயம் காங்கிரஸ் அரசாங்கங்கள் புரட்சிகரத் தொழிற் சங்கங்களின் உரிமைகளுக்கு ஊறு செய்யும் தொழிற் சட்டங்களைத் தயாரித்தன. தொழிற்சாலைத் தகராறுகளைத் தீர்ப்பதற்கான பம்பாய்ச் சட்டத்தை இவற்றுக்கு உதாரணமாகக் காட்டலாம்.

தொழிலாளி வர்க்கம் வேலைநிறுத்தங்களாலும் எதிர்ப்புக் கூட்டங்களாலும் காங்கிரசின் தொழிலாளி விரோதக் கொள்கைக்குப் பதில் அளித்தது.

தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்கள் வரவர அதிக அரசியல் தன்மையை மேற்கொண்டன. 1938, மார்ச்சில், மீரட் சதி வழக்கின் ஆண்டு நிறைவின் போது, கம்யூனிஸ்டுக் கட்சி சட்டபூர்வம் ஆக்கப்பட வேண்டும் என்ற கோஷத்துடன் ''இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி தினம்'' மிகுந்த வெற்றிகரமாகக் கொண்டாடப்பட்டது. ''ஷோலாப்பூர் சிறைக் கைதிகள் காப்பு தினம்'' (1930ல் நடந்த ஷோலாப்பூர் கிளர்ச்சியில் தண்டனை பெற்ற தலைவர்களின் காப்பு தினம்) அதே ஆண்டு மே மாதத்தில் இவ்வாறே கொண்டாடப்பட்டது. பாட்டாளி வர்க்கப் புரட்சித் திருநாட்கள் கொண்டாடப்பட்டது தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வு வளர்ந்து விட்டதற்கு முக்கிய அறிகுறியாக இருந்தது. 1939ல் மே தினம் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோஷங்களுடன், ஒன்றித்த அனைத்துத் தேசியக் கூட்டணி அமைக்கப்பட்ட அடையாளத்துடன் கொண்டாடப்பட்டது. மே தினப் பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் இந்தியத் தொழிலாளர்களின் வர்க்க ஒருமைப்பாட்டு வளர்ச்சியைப் பிரதிபலித்தன. பிரிட்டிஷ் இந்தியாவின் தொழில் மையங்களிலும் சமஸ்தானங்களின் சில பெரிய நகரங்களிலும் இவை விரிவாக நடந்தன.

1937 தேர்தல்களுக்குப் பின் இந்தியாவின் உள்நாட்டு அரசியல் நிலைமையில் ஏற்பட்ட மாறுதல்கள் விவசாயிகள் இயக்கத்தின் வடிவங்களையும் பாதித்தன. கிஸான் சபாவினால் ஒழுங்கமைத்து நடத்தப்பட்ட விவசாயிப் போராட்டங்களின் பிரதான வடிவமாக விளங்கியவை வெகுஜனக் கிளர்ச்சிப் பிரசார அணிநடைகள். விவசாயிகள் சங்கத்தின் தீவிர ஊழியர்கள் இந்த அணிநடைகளின் போது கிஸான் சபாவின் கொள்கையை விளக்கி விவரித்தார்கள், அதன் அடித்தளத்தை விரிவுபடுத்தினர்கள், நிலச் சீர்திருத்தங்கள் செய்வது (குத்தகை பற்றிய சட்டங்களை மாற்றுவது) குறித்த விண்ணப்பங்களில் கையெழுத்துக்கள் சேகரித்தார்கள். இந்த விண்ணப்பங்கள் பின்னர் மாகாண அரசாங்கங்களின் காங்கிரஸ் அமைச்சர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. இத்தகைய அணிநடைகளும் விவசாயிகளின் பிரமாண்டமான பொதுக் கூட்டங்களும் ஐக்கிய மாகாணம், பீகார், ஆந்திரம் ஆகியவற்றிலும் நாட்டின் வேறு சில பிரதேசங்களிலும், அதாவது, அனைத்து இந்தியக் கிஸான் சபாவின் வட்டாரக் கிளைகள் இயங்கிய எல்லா இடங்களிலும், 1937—1938ல் ஏற்பாடு செய்யப்பட்டன.

கிஸான் சபாவின் செல்வாக்கு இடைவிடாது அதிகரித்தது: 1938ல் நடந்த அதன் மூன்றாவது மகாநாட்டில் ஆறு லட்சம் உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டார்கள். 1939லோ, இவர்களுடைய எண்ணிக்கை எட்டு லட்சம் ஆகிவிட்டது.

ஒழுங்கமைந்த விவசாயிகள் இயக்கம் காங்கிரஸ்காரர்கள் மீது—அமைச்சர்கள் மீதும் சட்ட மன்ற உறுப்பினர்கள் மீதும்—ஏற்படுத்திய பாதிப்பின் விளைவாகவே மேலே குறிப்பிட்ட நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப் பெற்றன.

தொழிலாளர், விவசாயிகள் நிறுவனங்களின் வெற்றிகரமான வளர்ச்சியின் அடிப்படையில் தொழிலாளர்-விவசாயிகள் ஒற்றுமை வலுவடைந்தது. 1937லும் 1938லும் வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களுக்கு ஆதரவாக வங்காளத்திலும் சென்னையிலும் விவசாயிகள் நிறுவனங்கள் பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தின. தங்கள் தரப்பில் தொழிற் சங்கங்கள் மாநில மையங்களுக்கு வந்த விவசாயிப் பிரதிநிதிகளுக்கு ஆதரவு அளித்தன.

தொழிலாளர், விவசாயிகள் நிறுவனங்கள் அனைத்து இந்திய மட்டத்தில் தங்கள் செயல்களை ஒருங்கிசைக்கத் தொடங்கின. உதாரணமாக, 1938, ஜனவரி மாதம் டில்லியில் நடந்த அனைத்து இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசின் மகாநாட்டில் தொழிலாளர்களின் கோரிக்கைகள் அடங்கிய சாசனம் ஏற்கப்பட்டது. நிலப் பிரச்சினை குறித்த அம்சங்களும் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. அனைத்து இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசின் தலைவர்களில் ஒருவரும் கம்யூனிஸ்டும் ஆன மீரஜ்கர் கிஸான் சபாத் தலைவர் சுவாமி சகஜானந்த சரசுவதியுடன் 1938ன் முடிவிலும் 1939ன் தொடக்கத்திலும் மகாராஷ்டிரத்தில் சேர்ந்து சுற்றுப் பயணம் செய்து தொழிலாளர்-விவசாயிகள் பொதுக் கூட்டங்களில் சொற்பொழிவுகள் ஆற்றினர். முடிவில் 1939, ஜூலையில் ஒருங்கிசைவிப்புக் கமிட்டி நிறுவப்பட்டது. இதில் அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ், அனைத்து இந்திய விவசாயிகள் சங்கம், இரு நிறுவனங்களுடையவும் பிரதிநிதிகள் இருந்தார்கள். இந்தியாவில் தொழிலாளர்களதும் விவசாயிகளதும் கூட்டு அரசியல் எதார்த்தம் ஆகிவிட்டது.

யுத்தத்துக்கு முந்திய இந்த ஆண்டுகளில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிலைகள் கணிசமாக உறுதிப்பட்டன. மறைமுக வேலை, கொடுமையான அடக்குமுறை ஆகியவற்றின் நிலைமைகளில் கம்யூனிஸ்டுக் கட்சி கடினமான போராட்டம் நடத்திவந்தது. விஞ்ஞான சோஷலிஸக் கருத்துக்களையும் கட்சியின் கொள்கையையும் பரப்புவதில் கட்சி வெளியீடுகள் பெரும் பங்கு ஆற்றின. சட்ட விரோதமாகப் பதிப்பிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களும் சிற்றேடுகளும் சட்டபூர்வமான பிரசுரங்களும் இவற்றில் இருந்தன. 1938ம்—1939ம் ஆண்டுகளில் வெளிவந்த நேஷனல் பிரண்ட் (தேசியக் கூட்டணி) என்னும் வார ஏடு இந்தப் பிரசுரங்களில் சிறப்பானது. கம்யூனிஸ்டுக் கட்சி தொழிற்சங்கங்களிலும் விவசாயிகள் நிறுவனங்களிலும் தனது

செல்வாக்கை இடையறாது விரிவாக்கியது. புரட்சிகர ஜனநாயகவாதி களுடன் இவற்றில் அது வெற்றிகரமாக ஒத்துழைத்தது. இந்துலால் யாக்ஞிக், சுவாமி சகஜானந்த சரசுவதி ஆகியோருடன் கம்யூனிஸ்டு களின் ஒத்துழைப்பு இதற்கு எடுத்துக்காட்டு ஆகும். அதிகாரி, காட்டே, மீரஜ்கர், டாங்கே, முஜப்பர் அகமது முதலியோரின் தலைமை யில் கம்யூனிஸ்டு இயக்கத் தலைவர்களின் மையக் குழு அப்போதே உரு ஆயிற்று. காந்தியம், காங்கிரஸ் சோஷலிஸ்டுக்களின் வலது சாரி சோஷலிஸ சித்தாந்தங்கள், எம். என். ராயின் குட்டி முதலாளி-குறுகிய பிரிவுவாதக் கருத்தோட்டங்கள் ஆகியவற்றுக்கு எதிராகக் கொள்கைவாதப் போராட்டம் நடத்தி இந்தியக் கம்யூனிஸ்டு இயக்கம் உரம் அடைந்தது.

நிகழ்ச்சிகளின் இந்தப் போக்கு தேசியக் காங்கிரஸ் தலைமைக் குழுவுக்கு ஆழ்ந்த கலவரம் ஏற்படுத்தியது. சில இடங்களில் (உதாரண மாக பீகாரில்) விவசாயிகள் நிறுவனங்களைப் பிளவுபடுத்தக் காங் கிரஸ்காரர்கள் முயன்றார்கள். வேறு இடங்களில் (சிறப்பாக ஐக்கிய மாகாணத்தில்) போட்டிக் கிஸான் சபாக்களை நிறுவ அவர்கள் முயற்சி செய்தார்கள். கிஸான் சபாக்களில் காங்கிரஸ்காரர்கள் வேலை செய் வதை பீகார் மாகாணக் காங்கிரஸ் நிறுவனம் தடைசெய்தது. அனைத்து இந்தியக் காங்கிரஸ் செயற்குழு 1938, ஜனவரி மாதம் இந்தச் செய லுக்கு ஒப்புதல் அளித்தது. ஆனால் பொது மக்களின் பிரதிநிதிகளது வற்புறுத்தல் காரணமாகக் காங்கிரசின் பிற்ரவரி மகாநாட்டில் இந்த முடிவு ரத்து செய்யப்பட்டது.

காங்கிரசை ஒன்றித்த கூட்டணியின் கருவியாக மாற்றக் கம்யூ னிஸ்டுகளும் புரட்சிகர ஜனநாயகவாதிகளும் செய்த முயற்சிகள் யாவும் காங்கிரஸ் தலைமைக் குழுவின் விடாப்பிடியான எதிர்ப்பில் மோதின. தேசிய விடுதலை இயக்கத்தில் தங்கள் நிறுவனத்தின் ஏகபோக உரிமையை நிலைநாட்டக் காங்கிரஸ் தலைவர்கள் விரும்பினர்கள்.*

காங்கிரசுக்கு வெளியே இடதுசாரிச் சக்திகளின் பலம் அதிகரித் தது, ஒழுங்கமைந்த தொழிலாளர், விவசாயிகளின் இயக்கத்தின் மட் டம் உயர்ந்தது ஆகியவை ஒரு புறமும், சர்க்கார்கள் வாயிலாகவும் சட்ட மன்றங்கள் மூலமாகவும் காங்கிரஸ்காரர்கள் காலனி ஆட்சி நிர்வாகத்தின் செயல்களில் பங்காற்றியது மறு புறமும் காங்கிரசுக் குள் அரசியல் எல்லைகள் நிர்ணயிக்கப்படும் நிகழ்முறையை விரைவு படுத்தின.

---

* ஒன்றித்த தலைமை பற்றிய கருத்தை நேரு ஆதரித்தது உண்மையே, ஆனால் கம்யூனிஸ்டுக் கட்சி சித்தாந்த நோக்கில் காங்கிரசுக்கு முழுமையாகக் கீழ்ப்படும் என்ற நிபந்தனையின் பேரில் ஆதரித்தார்.

தேசியக் காங்கிரசில் கருத்து வேற்றுமைகள் கூர்மை அடைதல்

விடுதலை இயக்கம் பரப்பிலும் ஆழத்திலும் வளர்ந்ததற்கு ஏற்ப, காங்கிரஸ் சமுதாய-வர்க்கத் தன்மையில் வெவ்வேறான சமூக-அரசியல் சக்திகளின் கூட்டாக மட்டும் இன்றி, வெவ்வேறு வட்டார நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களின் கூட்டணியாகவும் நாளுக்கு நாள் அதிகமாக மாறிக் கொண்டு போயிற்று. இந்தியாவில் தேசிய இன நலன்களின் பொதுமைகள் உருவான நிகழ்முறையைப் பிரதிபலித்த தேசிய இன இயக்கங்கள் அதிகரித்ததன் தொடர்பாக முப்பதுக்களின் இறுதி வாக்கில் காங்கிரசின் உள் கட்சிக் கொள்கையில் வட்டார, பிரதேசப் போக்குகள் தீவிரம் அடையத் தொடங்கின. இந்த இயக்கங்கள் ஆக உயர்ந்த மட்டத்தை எட்டியது தேசியப் பிரதேசங்களான ஆந்திரத்திலும் கருநாடகத்திலும். இந்தப் பிரதேசங்களில் ''ஆந்திர மகாஜன சபா'', ''கர்நாடக ஏகீகரண ஸம்ஸ்தெ''* என்ற முதலாளித்துவ நிறுவனங்கள் செயல் ஆற்றி வந்தன. ஒரிஸ்ஸாவில் இருந்த சில சமஸ்தானங்களிலும் காச்மீரத்திலும் தேசிய சுயநிர்ணயப் போராட்டம் விரிவாக நடக்கலாயிற்று.

முப்பதுக்களின் இறுதி வாக்கில் இந்தியாவின் அறுநூறு சமஸ்தானங்களில் அனேகமாக எல்லாம் தேசியக் காங்கிரசின் தலைமையில் பொது ஜனநாயக இயக்கத்தில் ஈர்க்கப்பட்டு விட்டன. 1938ன் தொடக்கத்தில் ''பிரஜா மண்டல்'', ''பிரஜா பரிஷத்'' என்ற சொந்த அரசியல் நிறுவனங்கள் அறுபது சமஸ்தானங்களில் இருந்தன.

சில சமஸ்தானங்களில், உதாரணமாக மைசூரிலும் திருவிதாங்கூரிலும் ராஜ்கோட்டிலும் (குஜராத்து) வேறு சிலவற்றிலும் வட்டார முதலாளித்துவ-தேசியவாத நிறுவனங்கள் ஹர்த்தால்கள் (கடையடைப்புக்களும் வேலைநிறுத்தங்களும்) நடத்தின. சமஸ்தான மன்னர்களின் எதேச்சாதிகாரத்தை வரையறைக்கு உட்படுத்துவது இவற்றின் நோக்கம். சமஸ்தானங்களின் நிர்வாக விவகாரங்களில் பங்கு கொள்ள முயன்று வந்த முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவப் பிரதிநிதிகளின் தலைமையில் பெரும்பாலான சமஸ்தானங்களில் போராட்டம் நடந்தது. ஆனால் காச்மீரத்திலும் திருவிதாங்கூரிலும் இயக்கம் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புத் தன்மையை மேற்கொண்டது. கங்கபூர் (ஒரிஸ்ஸா), ராம்துர்க் (பம்பாய் மாகாணம்) என்னும் சிறு சமஸ்தானங்களிலோ, விவசாயிப் போராட்டங்கள் கிளர்ச்சியாக ஒன்று கலந்தன.

---

* கருநாடகம் நிர்வாக நோக்கில் பம்பாய் மாகாணத்துக்கும் ஹைதராபாது, மைசூர் சமஸ்தானங்களுக்கும் இடையே பிரிக்கப்பட்டிருந்தது.

அனைத்து இந்தியத் தேசிய இயக்கத்தில் சமஸ்தானங்கள் கலந்து கொண்டதனால் இயக்கமும் தேசியக் காங்கிரசும் சந்தேகம் இன்றி வலுவடைந்தன. அதே சமயம் இந்தப் புதிய அம்சம் காங்கிரசின் உள் நிலைமையைச் சிக்கல் ஆக்காமல் இருக்க முடியவில்லை.

காங்கிரசில் இடதுசாரியினருக்கும் வலதுசாரியினருக்கும் வெளிப் படையான மோதல்கள் ஹரிபுரா (வங்காளம்) காங்கிரஸ் மகாநாட் டில் நடந்தன. காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த சுபாஷ் சந்திர போசின் தரப்பாளர்கள் காந்தியின் கருத்துக்கு மாறுகப் ''பூரண சுயராச்சியத்தின்'' பொருட்டுத் துடியான நட வடிக்கைகள் எடுத்துக் கொள்ளும் திட்டத்தை வகுத்தார்கள்.

அனைத்து இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிலும் இடதுசாரி உரு வாயிற்று. காங்கிரசின் அடுத்த மகாநாட்டுக்கு மாகாண நிறுவனங் களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் இடதுசாரியினர் நாற் பது சதவிகிதத்துக்குக் குறையாமல் இருந்தார்கள். இந்தக் காரணங் களால் போசின் நிலை மேலும் உறுதிப்பட்டது.

பட்டாபி சீதாராமையாவைத் தலைவராகக் கொண்ட காங்கிரஸ் வலதுசாரி, இந்த நிலைமைகளில் காந்தியின் தீவிர ஆதரவுடன் காங் கிரஸ் தலைவர் மீது பகிரங்கத் தாக்குதல் தொடுத்தது. போசுக்கு எதிர்த் தரப்பாக மாறி விட்ட காங்கிரஸ் செயற்குழு காந்தியின் வற்புறுத்தலுக்கு இணங்கி ராஜிநாமா செய்து விட்டது. ஆயினும் அனைத்து இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் ஜனவரிக் கூட்டத்தில் சுபாஷ் சந்திர போஸ் மேலும் ஓர் ஆண்டுக்குக் காங்கிரஸ் தலை வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வட கிழக்கு இந்திய சமஸ்தானமான திரிபுராவின் அதே பெயர் கொண்ட தலைநகரில் காங்கிரஸ் மகாநாடு 1939, மார்ச்சு மாதம் சிக்கலான சூழ்நிலையில் நடைபெற்றது. கடுமையான உட்கட்சிப் போராட்டத்துக்குப் பின், காந்தியின் ஆதரவைப் பெற்ற பெரும் பாலரான வலதுசாரி மையவாதிகளின் சார்பாக கோவிந்த வல்லப பந்த் பிரேரித்த தீர்மானம் ஏற்கப்பட்டது. செயற்குழுவின் புதிய உறுப்பினர்களைத் தாமே நியமிக்கும் அதிகாரம் இதன்படி காந்திக்கு அளிக்கப்பட்டது.

1939, ஏப்ரல் மாதம் சுபாஷ் சந்திர போஸ் காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து விலகினர். காந்தியின் நெடுங்காலப் போராட்டத் தோழரும் பீகார் காங்கிரஸ்காரர்களின் தலைவருமான ராஜேந்திர பிரசாத் போசின் இடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தம் தரப்பினரின் பெருங் குழுவுடன் போஸ் காங்கிரசிலிருந்து விரைவில் வெளியேறி, ''பார்வர்டு பிளாக்'' என்னும் கட்சியை

அமைத்தார். பெரும்பாலும் வங்காளத்தில் செல்வாக்கு பெற்றிருந்தது இந்தக் கட்சி.

காங்கிரசில் ஏற்பட்ட பிளவு அதன் இடதுசாரியில் எல்லை வரை யறுப்பு நிகழ்வதைத் துரிதப்படுத்தியது. காங்கிரசின் தலைமையில் காந்தியும் அவருடைய குழுவும் மேற்கொண்ட நிலையை நேரு ஆதரித்தார். காங்கிரஸ் சோஷலிஸ்டுகளின் இடதுசாரிக் குழுக்களோ (சிறப்பாகக் கேரளம், ஆந்திரம், ஐக்கிய மாகாணம் ஆகியவற்றில்) 1939—1940ல் காங்கிரசிலிருந்து வெளியேறி வட்டாரக் கம்யூனிஸ்டு நிறுவனங்களின் சட்டகத்தை அமைத்தார்கள்.

எனினும் நாட்டில் தொடங்கியிருந்த புதிய புரட்சி ஏற்றமும் முடிவில் அதன் காரணமாக ஏற்பட்ட அரசியல் சக்திகளின் அணிவகுப்பு மாற்றமும் திடீரென மூண்ட இரண்டாவது உலக யுத்தத்தால் இடை முறிக்கப்பட்டன.

இரண்டாவது உலக யுத்தக் காலத்தில் இந்தியா

யுத்தத்தின் முதல் கட்டத்தில் அரசியல் கட்சிகளின் நிலைகளும் வெகுஜன ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமும் (1939—1941)

இந்தியா போரிடும் நாடாக அறிவிக்கப்படுதல். அரசியல் கட்சிகளின் நிலைகள்

ஐரோப்பாவில் மூண்ட யுத்தத்தில் பிரிட்டன் கலந்து கொண்ட பின்னர் இந்தியாவின் வைசிராய் லார்டு லின்லித்கோ இந்தியாவைப் போரிடும் நாடாக அறிவித்தான். இந்திய அரசியல் கட்சிகளை முன் கூட்டிக் கலந்து ஆலோசிக்காமல் காலனியாட்சி அதிகாரிகள் புரிந்த இந்தச் செயல் விரிவான பொது மக்களின் எதிர்ப்பு இயக்கத்தைத் தூண்டிவிட்டது. 1939ம் ஆண்டின் இலையுதிர் காலம் முழுதும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் பொதுக் கூட்டங்களும் நாட்டில் அலையடித்துப் பரவின. பாசிஸ்டு ஜெர்மனி மீது போர்ப் பிரகடனம் செய்த நாடுகளில் இந்தியா ஒன்றில்தான் யுத்தத்துக்கு எதிரான வெகுஜன இயக்கம் எடுத்த எடுப்பிலேயே விரிவான அளவுகளை மேற்கொண்டது.

வைசிராயின் செயலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொருட்டு மையச் சட்டமன்றத்தில் இருந்த காங்கிரஸ் குழு மன்றக் கூட்டத்தை பகிஷ்கரித்தது. எனினும் வைசிராய் தன் சிறப்புரிமையைப் பயன்படுத்தி இந்திய அரசியல் சட்டத்தில் புதிய அம்சங்களைச் சேர்க்கும் சட்டத்தையும் இந்தியத் தற்காப்புச் சட்டத்தையும் பிறப்பித்தான். கூட்டங் கூடுதல், அச்சுப் பதிப்புகள் வெளியிடுதல் முதலியவற்றுக்கான ஜனநாயக சுதந்திரங்களை மேற்கொண்டும் முழுமையாகவும் நசுக்குவதற்கு காலனியாட்சி நிர்வாகத்துக்கு முழு அதிகாரங்களை இந்தச் சட்டங்கள் அளித்தன. தடுப்புக் காவல் நடவடிக்கையைப் புகுத்தின. சட்டமன்றங்களுக்குப் பொறுப்புள்ள மாகாண அரசாங்கங்களை பிரிட்டிஷ் கவர்னர்கள் கலைத்து விடுவதற்கு வகை செய்தன.

அனைத்து இந்தியக் காங்கிரஸ் கமிட்டி யுத்தத்தின் பால் தனது போக்கு குறித்த விசேஷ அறிக்கையை 1939, செப்டெம்பர் 14ந் தேதி ஏற்றது. பிரிட்டனின் போர் முயற்சிகளைக் காங்கிரஸ் பின் வரும் நிபந்தனைகளின் பேரில் ஆதரிக்கும் என அறிக்கையில் பிரகட

னம் செய்யப்பட்டிருந்தது: இந்தியாவின் சுயநிர்ணய உரிமையை பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகாரபூர்வமாக ஒப்புக்கொள்ள வேண்டும்; அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட வேண்டும்; வருங்காலத்தில் இந்தியாவின் கொள்கையை வழிகாட்டி நடத்த இந்திய அரசியல் கட்சிகளுக்கு உள்ள உரிமை ஒப்புக் கொள்ளப்பட வேண்டும்; மையச் சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள அரசாங்கம் வைசிராயின் கீழ் தாமதம் இன்றி அமைக்கப்பட வேண்டும்.

முஸ்லிம் லீகும் பிரிட்டனின் போர் முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பதாக அறிவித்தது, ஆனால் சட்டமன்றங்களில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் விரிவாக்கப்பட வேண்டும் என்று நிபந்தனை விதித்தது.

பிற்போக்கு முகாம்—சமஸ்தான மன்னர்களும் நிலப்பிரபுக்களும் தரகு வர்த்தகர்களும்—மட்டுமே பிரிட்டிஷ் காலனியாட்சி நிர்வாகத்துக்கு நிபந்தனை அற்ற ஆதரவு அளித்தது.

யுத்தத்தில் இந்தியா பங்கு கொள்வது குறித்து இந்தியத் தேசிய முதலாளி வர்க்கம் மேற்கொண்ட இரு வகையான போக்கு இந்திய அரசியல் கட்சிகளின் நிலைகளில் பிரதிபலித்தது: ஒரு புறம், பல்வேறு இராணுவ ஆர்டர்களை நிறைவேற்றுவது தேசிய உற்பத்தி விரிவடையவும் லாபங்கள் கணிசமாகப் பெருகவும் வாய்ப்பு அளித்தது; மறு புறம், பிரிட்டனின் இராணுவ-அரசியல் நிலைமை சிக்கல் அடைந்தது குறித்த அரசியல் சலுகைகளை அதனிடமிருந்து பெறுவதற்குப் புதிய சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தியது.

இராணுவ ஆர்டர்களை வினியோகிப்பதற்காகக் காலனி நிர்வாகத்தால் நிறுவப்பட்ட உறுப்புக்களில்—பொருளாதார வளவாய்ப்புக் கவுன்சில், சப்ளை இலாகா முதலியவற்றில்—இந்தியப் பெரு முதலாளிகள் ஊக்கத்துடன் பங்காற்றிக் கொண்டிருந்த அதே சமயத்தில், இந்திய முதலாளி வர்க்கத்தின் அரசியல் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்துடனும் இந்தியாவில் அதன் பிரதிநிதியான வைசிராயுடனும் சிக்கலான பேரத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார்கள்.

யுத்தத்தின்பால் தங்கள் போக்கு பற்றித் தேசியக் காங்கிரஸ், முஸ்லிம் லீக் ஆகியவற்றின் தீர்மானங்களில் வெளியிடப்பட்ட இந்திய முதலாளித்துவத் தேசியவாதிகளின் கேள்விகளுக்கு விடை அளிப்பது போல, பிரிட்டிஷ் அரசாங்கம் 1939, அக்டோபர் 17ந் தேதி வெள்ளை அறிக்கையை வெளியிட்டது. யுத்தத்தின் நோக்கங்கள் இதில் விவரிக்கப்பட்டிருந்தன. அனைத்து இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் மேற்குறித்த அறிக்கையில் விடுக்கப்பட்டிருந்த கோரிக்கைகளுக்கு நேரான விடை அளிக்காமல் மழுப்பியது பிரிட்டிஷ் அரசாங்கம். யுத்தத்துக்குப் பிறகு இந்திய அரசியல் கட்சிகளின் பிரதிநிதி

களோடு கலந்து ஆலோசித்து இந்தியாவின் புதிய அரசியல் சட்டத்தைத் தயாரிக்கத் தான் எண்ணம் கொண்டிருப்பதாக அது அறிவித்தது. வைசிராயின் செயற் குழுவில் இந்தியர்களைச் சேர்த்து அதன் உறுப்பினர் தொகையை அதிகரிப்பதாகவும் இந்திய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் சமஸ்தான மன்னர்களும் அடங்கிய ஆலோசனைக் குழு ஒன்றை வைசிராயின் கீழ் அமைப்பதாகவும் அது வாக்களித்தது.

எதிர்க் கட்சிகளின் யோசனைகளுக்கு எதார்த்தத்தில் மறுப்புத் தெரிவிக்கும் பதிலே வெள்ளை அறிக்கையில் அடங்கி இருந்தது.

பிரிட்டிஷ் நிர்வாகத்தின் நிலைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொருட்டு எட்டு மாகாணங்களின் காங்கிரஸ் அமைச்சர்கள் ராஜினாமா செய்தார்கள். அந்த நிலைமைகளில் மாகாண கவர்னர்கள் அரசியல் சட்டத்தில் புதிய அம்சங்களைச் சேர்க்கும் சட்டத்தின் அடிப்படையில் புதிய நிர்வாக உறுப்புக்களை நியமித்தார்கள்.

வெள்ளை அறிக்கையில் அடங்கி இருந்த பிரிட்டிஷ் யோசனைகளுக்கு அதிகாரபூர்வமான பதிலைத் தேசியக் காங்கிரசின் தலைமைக் குழு அக்டோபர் 23ந் தேதி வெளியிட்டது. இதன் சுருக்கம் வருமாறு: 1) இந்தியாவில் பொறுப்பாட்சி சர்க்கார் உடனடியாக அமைக்கப்பட வேண்டும்; 2) புதிய அரசியல் அமைப்புச் சட்டம் அரசியல் நிர்ணய சபையால் தயாரிக்கப்பட வேண்டும்; 3) தேசியக் காங்கிரசின் கோரிக்கைகள் ஏற்கப்படா விட்டால் அது வேறு வழி இன்றி சாத்துவிகச் சட்டமறுப்பு இயக்கம் தொடங்க வேண்டி வரும்.

உருவாகி இருந்த சூழ்நிலையில் தனது முக்கிய அரசியல் போட்டிக் கட்சியான தேசியக் காங்கிரசிற்கு நஷ்டம் ஏற்படுத்தித் தன் நிலைகளை வலுப்படுத்திக் கொள்ள முஸ்லிம் லீகின் தலைமைக் குழு முயன்றது. ''காங்கிரஸ் நுகத்திலிருந்து விடுதலை'' இயக்கத்தை (மாகாணக் காங்கிரஸ் அரசாங்கங்களின் ராஜினாமாக்களுக்குப் பின்னர்) நாட்டில் நடத்தப் போவதாக 1939, டிசம்பரில் லீக் அறிவித்தது. ஆனால் இந்த இயக்கம் வெகுஜனத் தன்மையை மேற் கொள்ளவில்லை. லீக் உறுப்பினர்களின் தலைமையில் இயங்கி வந்த அஸ்ஸாம், சிந்து, வட மேற்கு எல்லைப்புற மாகாண அரசாங்கங்கள் காலனியாட்சி நிர்வாகத்துடன் தொடர்ந்து ஒத்துழைத்தன.

முஸ்லிம் லீக் தலைமைக் குழு கடைப்பிடித்த, உண்மையில் பிளவுபடுத்துவதான, இந்தப் பிரிவினைப் போக்கு நாட்டில் அரசியல் போராட்டத்தின் அடுத்து வந்த வளர்ச்சியைக் கணிசமான அளவு முன்கூட்டி நிர்ணயித்தது. இந்து-முஸ்லிம் முரண்பாடுகளைத் தூண்டி விட்டு நெடுங் காலமாகக் காரியத்தைச் சாதித்து வந்த பிரிட்டிஷ் காரர்களுக்கே முஸ்லிம் லீகின் கொள்கை உண்மையில் சாதகமாய்

இருந்தது. ஆனால் முஸ்லிம் லீகின் செல்வாக்கு தேசியக் காங்கிரசின் செல்வாக்கை விட எவ்வளவோ பலவீனமாய் இருந்தது என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் இருக்கக் காலனியாட்சி நிர்வாகத்தால் முடியவில்லை. அந்தக் காலப் பகுதியில் காங்கிரஸ் இந்திய முஸ்லிம் சமுதாயத்தின் ஒரு பிரிவினர் மீதும் ஓரளவு செல்வாக்கைக் காப்பாற்றி வைத்துக் கொண்டிருந்தது. தேசியக் காங்கிரஸ் தலைமைக் குழுவின் பிடிவாதம் அப்போது தொடங்கி இருந்த வெகுஜன ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தால் உறுதிப்படுத்தப்பட்டதால் பிரிட்டிஷ் அரசாங்கம் புதிய யோசனைகளைத் தேசிய இயக்கத்தின் முன் வைக்க வேண்டியதாயிற்று. 1940, ஜனவரி 10ந் தேதி வைசிராய் பம்பாய் ''ஓரியண்டல் கிளப்'' (''கீழ்த் திசைக் கழகம்'') என்னும் நிறுவனத்தில் பேசினான். யுத்தத்துக்குப் பின் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளிக்கப்படும் என்றும் அதே சமயம் சமஸ்தான மன்னர்களுடையவும் சிறுபான்மையினரதும் நலன்கள் கருத்தில் கொள்ளப்படும் என்றும் அடுத்து வரும் முப்பது ஆண்டுகளுக்கு இந்தியாவின் தற்காப்புக்கான பொறுப்பு பிரிட்டனிடம் இருந்து வரும் என்றும் இந்தப் பேச்சில் அவன் அறிவித்தான்.

ஆனால் இந்தப் புதிய பிரிட்டிஷ் யோசனைகளும் தேசியக் காங்கிரசுக்கு ஏற்கத்தக்கவையாகப் படவில்லை. ஏனெனில் வைசிராயின் கீழ் பொறுப்பாட்சி சர்க்கார் உடனடியாக அமைக்கப்பட வேண்டும் என்ற தேசியவாதிகளின் பிரதானக் கோரிக்கைக்குச் சாதகமான பதில் அவற்றில் இல்லை.

1939—1940ல் வெகுஜன இயக்கம்.
தேசிய இயக்கத்தில் முரண்பாடுகள் ஆழமாதல்

கம்யூனிஸ்டுகளாலும் காங்கிரஸ்-சோஷலிஸ்டுகளாலும் ஒழுங்கமைக்கப்பட்ட யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இந்தியாவில் 1939, செப்டெம்பர் மாதத்திலேயே தொடங்கி விட்டன. இவை எல்லாவற்றிலும் பெருத்த ஆர்ப்பாட்டம் சென்னையில் நடந்தது. அக்டோபரிலும் நவம்பரிலும் யுத்த எதிர்ப்பு வேலைநிறுத்தங்கள் பம்பாய், கான்பூர், பாட்னா, ஜரியா ஆகிய நகரங்களிலும் வேறு சில தொழில் மையங்களிலும் நடந்தன. 1939ம் ஆண்டின் இறுதியில் மொத்தம் 110 வேலைநிறுத்தங்கள் நடந்தன. 170 ஆயிரம் பெயர் அவற்றில் பங்கு கொண்டார்கள். யுத்தத்தின் முதல் விளைவுகளுக்கு—அடிப்படைத் தேவைப் பண்டங்களின் விலைவாசி ஏற்றத்துக்கும் கள்ள வியாபாரத்துக்கும்—எதிராகத் தொழிலாளர்களதும் பிற உழைப்பாளி வட்டாரங்களதும் இயக்கம் இதே மாதங்களில் நாட்டில் விரிவாக நடந்தது.

1939, அக்டோபரில் தொழிலாளர், விவசாயிகள், மாணவர் நிறுவனங்களின் அனைத்து இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு மகாநாடு நாகபுரியில் நடை பெற்றது. தேசிய இயக்கத்தில் இடதுசாரிச் சக்திகளின் நடவடிக்கைகளை ஒருங்கிசைப்பதற்கு இந்த மகாநாடு பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, காங்கிரஸ்-சோஷலிஸ்டுகள் குழு, ''பார்வர்டு பிளாக்'' மூன்றும் இதில் கலந்து கொண்டன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்பால் தேசிய விடுதலை இயக்கத்தின் இடதுசாரி கொண்டிருந்த சமரசமற்ற போக்கு மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களில் பதிவு செய்யப்பட்டது. யுத்தம் ஏகாதிபத்தியத் தன்மை உள்ளது என்று இடதுசாரித் தேசியவாதிகள் போன்றே இந்தியக் கம்யூனிஸ்டுகள் கருதினர்கள். இந்தியா அதில் இழுக்கப்பட்டதை அவர்கள் எதிர்த்தார்கள்.

மகாநாட்டில் கலந்து கொண்ட இடதுசாரி நிறுவனங்களது அழைப்பின் பேரில் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் பொதுக் கூட்டங்களும் பஞ்சாபிலும் ஐக்கிய மாகாணத்திலும் ஆந்திரத்திலும் மலையாளப் பிரதேசத்திலும் நடந்தன. எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளதும் ஒன்றித்த தேசியக் கூட்டணி அமைப்பதற்கு ஏற்ற சூழ்நிலை மீண்டும் உருவாயிற்று. ஆனால் நாட்டின் முக்கியமான இரண்டு அரசியல் கட்சிகளான தேசியக் காங்கிரஸ், முஸ்லிம் லீக் ஆகியவற்றின் தலைமைக் குழுக்களது நிலைகள் இதற்குத் தடையாக இருந்தன.

இடதுசாரிச் சக்திகளால் ஒழுங்கமைக்கப்பட்ட வெகுஜனப் போராட்டங்களுக்கு எதிரான போக்கைக் காங்கிரஸ் தலைமைக் குழு மேற்கொண்டது. தொழிலாளி வர்க்கத்தின் வேலைநிறுத்தப் போராட்டத்தையோ விவசாயிகளின் இயக்கத்தையோ அது ஆதரிக்கவில்லை. பிரிட்டிஷாருக்கு எதிரான வெகுஜன இயக்கங்கள் நடத்தியபோது கூட, தேசிய இயக்கத்தில் தனது தலைமையை உறுதிப்படுத்திக் கொள்ள அது முதன்மையாக முயன்றது. எடுத்துக்காட்டாக, 1940ல் புதிய வெகுஜன சாத்துவிகச் சட்டமறுப்பு இயக்கம் நடத்துவது என்ற தீர்மானத்தைக் காங்கிரஸ் மகாநாடு நிறைவேற்றியது. ஆனால் அதன் தொடக்கமும் வடிவங்களும் தனியே காந்தியால் நிச்சயிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் கூறியது. காந்தி சத்தியாக்கிரகத்தின் சர்வாதிகாரியாக மீண்டும் நியமிக்கப்பட்டார்.

திரிபுரா காங்கிரஸ் மகாநாட்டுக்கு (1939) பிறகு தேசியக் காங்கிரசின் இடதுசாரிக்கு எதிராகக் கட்சித் தலைமைக் குழுவால் விரிவாகத் தொடங்கப்பட்ட போராட்டம் நிறுவனத்தின் ஒற்றுமையைக் குலைத்தது. 1940, மார்ச்சில் ராம்கர் நகரில் (பீகார்) நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் மிகப் பெரிய மாகாண நிறுவனங்களில் ஒன்றான

வங்காள மாகாணக் காங்கிரசின் பிரதிநிதிக் குழு கலந்து கொள்ள வில்லை. வங்காள மாகாணக் காங்கிரசில் பெரும்பாலராய் இருந்த சுபாஷ் சந்திர போசின் தரப்பாளர்கள் அவருக்கு எதிராகக் காங் கிரஸ் தலைமைக் குழு எடுத்துக் கொண்ட ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு (திரிபுரா காங்கிரஸ் மகாநாட்டுக்குப் பின் காங்கிரஸ் செயற்குழுவின் அனுமதியை முன்கூட்டிப் பெறுமல் பொதுக் கூட்டத்தில் பேசியதற் காக கட்சியில் தலைமைப் பதவிகள் வகிக்கும் உரிமை சுபாஷ் போசுக்குக் கிடையாது என்று தீர்மானிக்கப்பட்டது) எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் காங்கிரஸ் மகாநாட்டைப் பகிஷ்கரித்தார்கள்.

போசின் தரப்பாளர்கள் தங்கள் ''சமரச எதிர்ப்பு மகாநாட் டைக்'' கூட்டினர்கள். தேசியக் காங்கிரசின் தலைமைக் குழுவினரும் காந்தியும் இம்மகாநாட்டில் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்கள். இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி காங்கிரசின் இடதுசாரிச் சக்திகளுடன் ஒத்துழைக்க ஆர்வம் கொண்டிருந்தது, ஆயினும் இந்த மகாநாட்டில் பங்கு கொள்ளவில்லை. ஏனெனில் மகாநாடு ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் ஒற்றுமைக்குப் பெருத்த கேடு விளைக்கும் என்று அது எண்ணியது.

காங்கிரஸ் மகாநாடும் போசின் தரப்பாளர்களுடைய மகாநாடும் நடந்த அதே சமயத்தில், முஸ்லிம் லீகின் மகாநாடு லாகூரில் 1940, மார்ச்சில் நடந்தது. இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இந்தியத் தேசிய இயக்கத்தின் அடுத்து வந்த வரலாற்றில் நிர்ணயகரமான பங்கு ஆற்றியது. முஸ்லிம் லீக் நடத்திவந்த போராட்டத்தின் இறுதிக் குறிக்கோள் இந்திய முஸ்லிம்களின் அரசான பாக்கிஸ்தானை நிறுவுவது என்று இந்தத் தீர்மானம் அறிவித்தது.

காந்தியும் தேசியக் காங்கிரஸ் தலைவர்களும் முஸ்லிம் லீகின் இந்தத் தீர்மானத்தைக் கண்டனம் செய்தார்கள். ராம்கர் மகாநாட் டில் தேசிய முஸ்லிம் பிரமுகரான அபுல் கலாம் ஆஸாத் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது இந்து-முஸ்லிம் ஒற்றுமைக் கான போராட்டத்தின் உருவகச் சின்னமாக விளங்கியது.

இந்தியத் தேசிய இயக்கத்துக்குள் வெவ்வேறு அரசியல் போக்குக் களுக்கு இடையே மேலும் மேலும் ஆழமாகி வந்த வேற்றுமைகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சூழ்ச்சி செய்வதற்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்தின, ஒன்றித்த விடுதலைக் கூட்டணி அமைப்பதற்கு இடையூறு செய்தன. ஆனல் நாட்டில் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட அவற்றுல் முடியவில்லை.

1940, ஜனவரி 26ந் தேதி நடந்த வழக்கமான சுதந்திர தினக் கொண்டாட்டம் வெகுஜன பிரிட்டிஷ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள தும் வேலைநிறுத்தங்களதும் தன்மையை மேற்கொண்டது. 1940ம்

ஆண்டு மார்ச்சு-ஏப்ரல் பம்பாய் நெசவாலைத் தொழிலாளர்களின் பொது வேலைநிறுத்தம் நடந்தது. கிர்னி காம்கார் என்னும் புரட்சிகரத் தொழிற் சங்கத்தால் ஒழுங்கமைக்கப்பட்டது இந்த வேலைநிறுத்தம். பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த பிற தொழில் மையங்களில் ஒருமைப்பாட்டைக் காட்டும் ஒரு நாள் வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன.

வேலைநிறுத்தங்களில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையும் (409 ஆயிரத்திலிருந்து 450 ஆயிரமாக) இழக்கப்பட்ட வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கையும் (50 லட்சத்திலிருந்து 75 லட்சமாக) 1939—1940ல் உயர்ந்தன.

1940ல் வேலைநிறுத்தங்களின் மொத்த எண்ணிக்கை (406 விருந்து 322 ஆக) குறைந்தது என்ருலும் அவற்றில் பங்கு கொண்டவர்களின் தொகையும் இழக்கப்பட்ட வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கையும் அதிகரித்தது. வேலைநிறுத்தங்கள் அதிக ஒழுங்கமைப்பு கொண்டிருந்ததையும் தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டம் அதிக விடாப்பிடியாக நடந்ததையும் காட்டுகிறது.

காலனியாட்சி நிர்வாகம் வெகுஜனப் போராட்டத்துக்கு வழக்கம் போல அடக்குமுறைகளால் பதிலளித்தது. கம்யூனிஸ்டுகளின் சட்டபூர்வமான வெளியீடுகளும் தொழிற் சங்கங்களதும் விவசாயிகள் நிறுவனங்களதும் பத்திரிகைகளும் மூடப்பட்டன. தொழிலாளர், விவசாயிகள் இயக்கத் தலைவர்கள் கைது செய்யப்படுவது தொடங்கியது. ஆயினும் ஒழுங்கமைந்த தொழிலாளர் இயக்கம் மேற்கொண்டு வளர்ச்சி அடைவதை நிறுத்த இந்த நடவடிக்கைகளால் முடியவில்லை.

அனைத்து இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசின் அடுத்த மகாநாடு 1940, செப்டெம்பரில் நடைபெற்றது. இந்தியாவின் தொழிற் சங்க மையங்களை மீண்டும் ஒன்றிணைக்கும் முடிவை இந்த மகாநாடு முறைப்படி உறுதிப்படுத்தியது. தொழிலாளர்களும் அலுவலர்களுமாக 374 ஆயிரம் உறுப்பினர்கள் கொண்ட 195 தொழிற் சங்கங்கள் அனைத்து இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசில் சேர்ந்தன. கூலி உழைப்பாளர்களின் பெரும் பகுதியினர் ஒழுங்கமைந்த தொழிற் சங்க இயக்கத்துக்கு வெளியே இருந்தார்கள். எனினும் அதில் ஏற்பட்டிருந்த பிளவு அகற்றப்பட்டது நாட்டின் தொழிலாளர் இயக்க வரலாற்றில் முக்கியமான மைல் கல்லாக விளங்கியது.

மகாராஷ்டிரம், கருநாடகம், ஆந்திரம், கேரளம் என்ற மொழிவாரி மாநிலங்களை (அதாவது, முறையே மராட்டி, கன்னட, தெலுங்கு, மலையாள மொழிகள் பேசும் மக்கள் வாழ்ந்தவையும் வெவ்வேறு மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலும் சேர்ந்திருந்தவையுமான பிரதேசங்களின் கூட்டுக்களை) ஏற்படுத்துவதன் மூலம் இந்தியாவின்

நிர்வாக-பிரதேசப் பாகுபாட்டைத் தேசிய இன அடிப்படையில் மாற்றி அமைப்பதற்கான பொது ஜனநாயக இயக்கம் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தோடு கூடவே இந்த ஆண்டுகளில் தீவிரம் அடைந்தது. அண்டை மாநிலங்களான அஸ்ஸாமையும் பீகாரையும் சேர்ந்திருந்த, வங்காளி மக்கள் வாழ்ந்த பிரதேசங்களைத் தாய் மாகாணத்துடன் மறுபடி இணைப்பதற்கான இயக்கம் வங்காளத்தில் தொடங்கியது.

இந்தியாவில் இருந்த பல்வேறு பெரிய மானிட இனக் குழுக்களின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஏற்ற புறநிலையான பொருளாதார, சமுதாய, பண்பாட்டு நிகழ்முறைகள் இருபதாம் நூற்றாண்டின் முப்பதுக்களில் விரைவடைந்ததன் காரணமாக இந்த இனக் குழுக்களின் தேசியத் தன்னுணர்வு அதிகரித்ததை மேற்குறித்த இயக்கங்கள் பிரதிபலித்தன.

1940ம் ஆண்டு இளவேனிலிலும் கோடையிலும் மேற்குப் போர் முனையில் ஜெர்மனியின் வெற்றிகளால் பிரிட்டனின் இராணுவ-அரசியல் நிலைமை மோசமாயிற்று. இந்தியாவில் இருந்த நிலைமையையும் இது பாதித்தது.

1940, ஜூலையில் அனைத்து இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் பூனாவில் நடந்தது. பின்வரும் நிபந்தனைகளின் பேரில் பிரிட்டனின் போர் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கத் தயாராய் இருப்பதாகச் சிறப்புத் தீர்மானத்தில் கமிட்டி மீண்டும் உறுதி கூறியது: 1) யுத்தத்துக்குப் பின்னர் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவதாக பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவிக்க வேண்டும்; 2) பொறுப்பாட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

இந்த யோசனைகள் வைசிராயிடம் ஆகஸ்டில் அளிக்கப்பட்டன.

தேசியக் காங்கிரசின் தலைமைக் குழு பிரிட்டனின் ஆழ்ந்த யுத்த நெருக்கடிகளைப் பயன்படுத்தி, குறித்த சலுகைகள் பெறும் பொருட்டு பிரிட்டிஷ் சர்க்காரை மீண்டும் வற்புறுத்த முயன்றது. ஆனால் காலனியாட்சி அதிகாரிகள் தேசிய இயக்கத்தை முடிவாக முறியடிப்பதற்குத் தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

சாத்துவிகச் சட்டமறுப்பு இயக்கம் தொடங்குவதாக 1940, அக்டோபர் மாதம் காந்தி அறிவித்தார். இது ''தனி நபர் சத்தியாக்கிரகத்தின்'' வடிவில் நடந்தது. இதன்படி காந்தியால் முன்கூட்டி நியமிக்கப்பட்ட காங்கிரஸ் உறுப்பினர்கள் பொது இடங்களில் யுத்த எதிர்ப்பு உரைகள் ஆற்றவோ சமாதான கோஷங்களை முழக்கவோ வேண்டி இருந்தது. ஊக்கமுள்ள காங்கிரஸ் உறுப்பினர்களில் கணிசமான பகுதியினரின் பெயர்கள் அடங்கியிருந்த சத்தியாக்கிரகிகளின் பட்டியல் போலீசாருக்குத் தெரிந்து விடவே அவர்கள் தனித் தனியே

சத்தியாக்கிரகிகளைக் கைது செய்து ஏறக்குறைய இருபதாயிரம் காங்கிரஸ்காரர்களை இவ்வாறு சிறைகளில் அடைத்து விட்டார்கள். இதன் பின் 1941 இறுதி வரை காங்கிரஸ் துடியாகச் செயல் ஆற்றவில்லை.

இந்தியப் புரட்சியின் உள்நாட்டுச் சக்திகளை மட்டும் கொண்டு இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தைக் கவிழ்ப்பது சாத்தியம் என்பதில் சுபாஷ் சந்திர போஸ் நம்பிக்கை இழந்து விட்டார். போரில் பிரிட்டன் இறுதியாக முறியடிக்கப்படுவது அணித்தான வருங்காலத்தில் நிகழும் என்று அவர் எண்ணினார். எனவே, பாசிஸ்டு ஜெர்மனியையும் அதன் கூட்டாளிகளையும் அவர் நம்பினார். 1941ம் ஆண்டு இளவேனில் காலத்தில் இரகசியமாக இந்திய-ஆப்கானிய எல்லையைக் கடந்து அங்கிருந்து பெர்லின் போய்ச் சேர்ந்தார். பின்னர் பெர்லினிலிருந்து ஜப்பானுக்கு அனுப்பப்பட்டார். பிரிட்டனின் யுத்த எதிரிகள் தங்கள் ஆயுத பலத்தால் அயல் நாட்டு ஓடுக்கு முறையிலிருந்து இந்தியாவுக்கு விடுதலை தேடித் தருவார்கள் என்று போஸ் வெகுளித்தனமாக நம்பினார்.

1942 "ஆகஸ்டுப் புரட்சியும்" பிரிட்டிஷ் காலனியாட்சியின் கொள்கையும்

1942 கோடை வாக்கில் நாட்டின் நிலைமை. கிரிப்ஸ் மிஷன்

1941, ஜூனில் பாசிஸ்டு ஜெர்மனி சோவியத் யூனியனைத் தாக்கியதும் சோவியத் நாடு யுத்தத்தில் ஈர்க்கப்பட்டதும் யுத்தத்தின் தன்மையை அடிப்படையில் மாற்றி விட்டன. இந்தியக் கம்யூனிஸ்டுகளின் கொள்கையிலும் இது பிரதிபலித்தது. நாட்டின் சுதந்திரத்துக்கான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதோடு பாசிஸ்டு அச்சு நாடுகளுடன் யுத்தத்தை மக்கள் யுத்தமாக மாற்றுவோம் என்ற கோஷத்தை இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி எழுப்பியது. எனவே இராணுவ உற்பத்தியில் இடை நிறுத்தத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சி எதிர்த்தது. இந்தப் பிரச்சினைகள் மீது காங்கிரஸ்காரர்களுடனும் பல்வேறு இடதுசாரிக் குழுக்களுடனும் முதன்மையாகத் திரோத்ஸ்கிவாதி வகைக் குழுக்களோடும் கம்யூனிஸ்டுகளின் உக்கிரமான கொள்கைவாதப் போராட்டம் மூண்டது.

அனைத்து இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசின் 19வது மகாநாடு கான்பூரில் (1942, பிப்ரவரி) நடந்தது. யுத்தத்தின் தன்மை பற்றிய மதிப்பீடு, பிரிட்டனின் போர் முயற்சிகள் பால் கடைப்பிடிக்க வேண்டிய போக்கு ஆகியவை குறித்த பிரச்சினைகள் மீது கருத்து வேறுபாடுகள் காரணமாக நிறுவனத்திலிருந்து ஒரு பகுதி விலகிவிட்டது. இடதுசாரித் தீவிரவாதக் குழுவினர், பெரும்பாலும் எம். என். ராயையும் வி. பி. கார்ணிக்கையும் தலைவர்களாகக் கொண்ட வங்காளிகள், இதைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்கள். அனைத்து இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசிலிருந்து விலகிய தொழிற்சங்கத் தலைவர்கள் இந்தியத் தொழிலாளர் சம்மேளனம் என்ற சொந்த நிறுவனத்தை உருவாக்கினர்கள். நாட்டின் தொழிற்சங்க இயக்கத்தில் புதிய பிளவு இவ்வாறு ஏற்பட்டது.

தேசிய இயக்கத்தில் கொள்கைவாத அரசியல் வேறுபாடுகள் கூர்மை அடைந்தது, அனைத்து இந்தியத் தொழிற் சங்க மையம் பிளவுபட்டது, தேசிய நிறுவனங்களின் துடியான ஊழியர்கள் கணிசமான எண்ணிக்கையில் கைதானது—இவை யாவும் தொழிலாளி வர்க்கத்தின் வெகுஜனப் போராட்டத்திற்குக் கேடு செய்தன. முந்திய ஆண்டுடன் ஒப்பு நோக்கில் 1941ம் ஆண்டு வேலைநிறுத்த இயக்கம் துலக்கமாக இறக்கத்தில் சரிந்து கொண்டு போயிற்று.

1941ம் ஆண்டின் இறுதியில் சனியவாத ஜப்பான் யுத்தத்தில் கலந்து கொண்டதனால் பிரிட்டனின் ஆசியக் காலனிகள் மீது படையெடுப்பு நிகழும் நேரடியான அபாயம் ஏற்பட்டது. யுத்தச் சூழ்நிலையில் மாற்றம் நிகழ்ந்ததாலும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிரிட்டிஷ் சர்க்காரை நேர்முகமாக வற்புறுத்தியதாலும் இந்தியாவில் புதிய அரசியல் உத்திகளைக் கையாள்வது பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குக் கட்டாயம் ஆகிவிட்டது.

கைது செய்யப்பட்ட சத்தியாக்கிரகிகளில் பெரும்பாலோர் 1941, டிசம்பரில் விடுவிக்கப்பட்டார்கள். 1942ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் பிரிட்டிஷ் சபை அமைச்சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் விசேஷத் தூதுவராக இந்தியாவுக்கு வந்தார். பிரிட்டிஷாரின் புதிய யோசனைகளை அவர் காங்கிரஸ் தலைவர்களுக்குத் தெரிவித்தார். இவையாவன: 1. யுத்த காலத்தில் இதுவரை இருந்த நிலை இந்தியாவில் இருந்து வரும், ஆனால் யுத்தத்துக்குப் பிறகு இந்தியா டொமினியன் (குடியேற்ற நாடு) ஆகி விடும். 2. யுத்தம் முடிந்ததுமே சட்ட மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்படும். இச்சட்ட மன்றங்கள் அரசியல் நிர்ணய சபை உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும். சமஸ்தான மன்னர்களால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளும் சபையில் இடம் பெறுவார்கள். அரசியல் நிர்ணய சபை டொமினியனின் புதிய அரசியல்

அமைப்புச் சட்டத்தைத் தயாரிக்கும். 3. தனி மாகாணங்களும் சமஸ்தானங்களும் சுயேச்சையான டொமினியன்களின் உரிமைகள் பெற்று பிரிட்டிஷ் பேரரசின் பகுதிகளாக இருந்து வரலாம்.

இந்தியாவைத் துண்டாடிப் பல தனி அரசுகளாகப் பிரிக்க பிரிட்டனின் ஆளும் வட்டாரத்தினர் கொண்டிருந்த நோக்கம் இந்தத் தஸ்தாவேஜில் முதன் முதல் தெளிவாகக் குறிக்கப்பட்டிருந்தது.

காங்கிரஸ் தலைமைக் குழுவின் மீது (பிற அரசியல் நிறுவனங்களின் வாயிலாகவும் முதன்மையாக மத-வகுப்புவாதக் கட்சிகள் மூலமும்) கிரிப்ஸ் வற்புறுத்தலைக் கையாண்டார். எனினும் அவருடைய யோசனைகள் ஏற்கப்படவில்லை. கிரிப்ஸ் மிஷன் தோல்வி அடைந்தது.

1942 வசந்தத்திலும் கோடையிலும் பிரிட்டிஷ் எதிர்ப்புப் போராட்டத்தின் ஏற்றம்

1942, மார்ச்சில் ஜப்பானிய சேனை பர்மாவில் புகுந்து விரைவாக அதைக் கைப்பற்றியதன் விளைவாக யுத்தம் இந்தியாவின் எல்லை அருகேயே வந்து விட்டது. பர்மாவில் பிரிட்டிஷ் சேனையின் தோல்வி, பிரிட்டிஷ்-இந்தியப் படைகளின் ஒரு பகுதியினர் போர்க் கைதிகள் ஆனது, பிரிட்டிஷ்காரர்கள் கிலி கொண்டு பின்வாங்கி இந்தியா சேர்ந்தது ஆகிய எல்லா நிகழ்ச்சிகளும் ஜப்பானியர்களின் தாக்குதலிலிருந்து நாட்டைத் தற்காப்பதற்குக் காலனி நிர்வாகம் வலிவான முன்னேற்பாடுகள் செய்யாததைப் புலப்படுத்தின. மறு புறம் அவை அரசியல் இறுக்கத்தை அதிகமாக்கின.

அதிகத் துடியான போராட்ட வடிவங்களுக்குத் திருப்பம் தேசியக் காங்கிரசின் போர்த் தந்திரத்தில் காணப்பட்டது. ஹரிஜன் பத்திரிகையில் 1942, ஏப்ரல் மாதம் வெளியான தமது கட்டுரை ஒன்றில் ''இந்தியாவிலிருந்து வெளியேறு!'' என்ற கோஷத்தை காந்தி எழுப்பினர். இந்தியாவுக்கு உடனடியாகச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இது குறித்தது. வர்தாவில் (பம்பாய் மாகாணம்) ஜூலை 6ந் தேதி கூடிய காங்கிரஸ் செயற்குழு தனது தீர்மானத்தில் இந்தியாவின் தற்காப்புக்குப் பிரிட்டிஷ் சேனை பொறுப்பு ஏற்பதற்கு இசைவு தெரிவித்தது. ஆனால் அதே சமயம் ''இந்தியாவிலிருந்து வெளியேறு!'' என்னும் கோஷத்தையும் அது ஆதரித்தது.

நிறைவேறிய தீர்மானம் குறித்துக் கருத்து தெரிவிக்கையில், அதைச் செயல்படுத்துவதற்கான போராட்டம் வெகுஜன சாத்துவிகச் சட்டமறுப்பு இயக்கத்தின் வடிவில் நடக்கும் என்றும் அது அகிம்சையின் வரம்புகளைத் தாண்டிவிடக் கூடும் என்றும் காந்தி

கூறினர். இந்தக் கூற்று பிரிட்டிஷாரை நேர்முகமாக அச்சுறுத்தியது.

பம்பாயில் கூடிய அனைத்து இந்தியக் காங்கிரஸ் கமிட்டி ஒத்துழையாமை இயக்கம் தொடங்கும் தீர்மானத்தை ஆகஸ்டு 7ந் தேதி நிறைவேற்றியது. ஆனால் காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் பெருந் தலைவர்களும் மாகாண நிறுவனங்களின் முதல்வர்களும் காலனியாட்சி அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்கத்துடன் சதித் திட்டம் தயாரித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டார்கள். போலீசாரால் புனையப்பட்ட பொய்யை ஆதாரமாகக் கொண்டிருந்தது இந்தக் குற்றச் சாட்டு. இதன் பின் காங்கிரசின் நடவடிக்கைகள் அதிகாரபூர்வமாகத் தடை செய்யப்பட்டு விட்டன.

ஜப்பானியப் படையெடுப்பு அபாயம் சூழ்ந்திருந்த நிலைமையில் தேசியக் காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டது பிரிட்டிஷ் காரர்களுக்கு எதிராக வெகுஜனங்களின் சுயேச்சையான போராட்டங்கள் தொடங்குவதற்கான அறிகுறியாகப் பயன்பட்டது. ஆகஸ்டு மாதம் நெடுகிலும் செப்டெம்பர் மாதத் தொடக்கத்திலும் நாட்டின் பல இடங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் வேலைநிறுத்தங்களும் கடையடைப்புக்களும் தாமாகவே நடந்தன. வழக்கமாகக் கம்யூனிஸ்டுகளாலும் இடதுசாரிக் காங்கிரஸ்காரர்களாலும் தலைமை வகிக்கப்பட்ட இளைஞர் பிரிவுகள் நூற்றுக்கணக்கான ரெயில் நிலையங்களையும் தபால் தந்தி அலுவலகங்களையும் போலீஸ் ஸ்டேஷன்களையும் தாக்கின. இருப்புப் பாதைகள் தகர்க்கவும் தந்திக் கம்பிகள் அறுக்கவும் பட்டன. இருப்புப் பாதைகளிலும் சாலைகளிலும் பாலங்களும் மேம்பாலங்களும் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டன. பீகாரிலும் ஐக்கிய மாகாணத்தின் கிழக்கு மாவட்டங்களிலும் பம்பாய் மாகாணத்தின் சதாரா மாவட்டத்திலும் இந்தப் போராட்டங்கள் மிகப் பரந்த அளவுகளில் நடந்தன. ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த பலியா, ஆஜம்கட் மாவட்டங்களில் வெள்ளையரின் தண்டனைப் படைகளுடன் மக்கள் உண்மையான கொரில்லாப் போர் புரிந்தார்கள்.

ஆயினும் இந்த எல்லாப் போராட்டங்களும் ஒழுங்கமைப்பு இன்றித் தாமாகவே வெடித்துக் கிளம்பின. ஒரு மையத்திலிருந்து இவை ஒருங்கிசைக்கப்படவில்லை. ஆயுத பலம் குன்றிய கிளர்ச்சிக் காரர்களால் காலனியாட்சி அரசாங்கத்தின் இராணுவ-போலீஸ் படைகளை எதிர்த்து நிற்க முடியவில்லை. போராட்டங்களில் கலந்து கொண்டவர்களை அதிகாரிகள் கொடுமையாகப் பழி வாங்கினர்கள். இரண்டாயிரம் பெயருக்கு மேல் கொல்லப்பட்டார்கள். சுமார் அறுபதினாயிரம் பெயர் கைது செய்யப்பட்டார்கள். காவலில் வைக்கப்பட்ட இந்தியத் தேசபக்தர்களுக்காகச் சிறை முகாம்கள் பல இடங்களில் அமைக்கப்பட்டன.

1942ம் ஆண்டுக் கோடையில் நடந்த வெகுஜனப் போராட்டங்கள் வரலாற்றில் 1942ம் ஆண்டு ''ஆகஸ்டுப் புரட்சி'' என்று குறிக்கப்படுகின்றன. இந்தப் புரட்சி தோல்வியில் முடிந்தது. ஆனால் தேசிய இயக்கத்தில் முக்கியமான முன்னேற்றத்தை—காந்திய அகிம்சை போதனையில் பயிற்றப்பட்ட தேசியவாதிகள் விடுதலைப் போராட்டத்தில் ஆயுமேந்திச் செயலாற்ற ஆயத்தமாய் இருந்ததை—அது காட்டியது.

தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டமும் ஓரளவு தீவிரம் ஆயிற்று. முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1942ம் ஆண்டு வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை 359லிருந்து 694 ஆயிற்று. அவற்றில் கலந்து கொண்டவர்களின் தொகை 291 ஆயிரத்திலிருந்து 772 ஆயிரமாக உயர்ந்தது. இழக்கப்பட்ட வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கை 30 லட்சமாக இருந்தது, 57 லட்சமாக அதிகரித்தது.

ஐக்கிய மாகாணம், பீகார், வட மேற்கு எல்லைப்புற மாகாணம், வங்காளம், ஒரிஸ்ஸா ஆகியவற்றில் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னிலும் அடிக்கடி நடக்கலாயின.

நாட்டின் பொருளாதார நிலைமை மேற்கொண்டு சீர்கேடு அடைந்த சூழலில் உழைப்பாளிகளின் வெகுஜனப் போராட்டம் விரிவாக நடந்தது.

யுத்தத்தின் கடைசி ஆண்டுகளில் (1943—1945) இந்தியாவின் பொருளாதார, அரசியல் நிலைமை

கிழக்கு இந்தியாவில் பஞ்சம். விவசாயிகளின் போராட்டம்

1943லும் 1944லும் இந்தியாவின் அனேகப் பிரதேசங்களில் விளைச்சல் பொய்த்துவிட்டதன் காரணமாக உணவுப் பண்டச் சேமிப்புகள் கணிசமாகக் குறைந்தன, திரளான மக்கள் பஞ்சத்திற்கு ஆளானார்கள். வங்காளத்திலும் பீகாரையும் ஒரிஸ்ஸாவையும் சேர்ந்த பல பிரதேசங்களிலும் பஞ்சம் பேரளவாக மக்களைப் பீடித்தது. 1943ம்—1944ம் ஆண்டுப் பஞ்சத்திற்கு உணவுப் பண்டங்களின் பற்றாக்குறையை விட பிரிட்டிஷ் நிர்வாகத்தின் மோசமான வினியோக முறையும் விளைச்சல் பொய்த்துப் போன நிலைமைகளில் தானியங்களின் தொடர்ந்த ஏற்றுமதியுமே காரணம். 1943ல் பற்றாக்

குறை 40 லட்சம் டன்களாக மதிப்பிடப்பட்டிருந்த போது 10 லட்சம் டன் தானியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

உணவுப் பண்டங்களின் விலைகள் மள மளவென்று ஏறத் தொடங்கின. யுத்தத்துக்கு முந்திய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 1943ல் விலைகள் பத்து மடங்கு ஏறிவிட்டன. விலையேற்றத்தால் முதன் முதலில் பாதிக்கப்பட்டவர்கள் உடைமையற்ற வட்டாரத்தினரே. கிராமங்களிலும் இந்த வட்டாரத்தினரின் கதி இதுவாகவே இருந்தது. அங்கே விவசாயிகள் திரள் திரளாகப் பஞ்சைகளாகி வட்டித் தொழிலர்களிடம் அதிகக் கடன்பட்டார்கள். நிலங்கள் ஜமீன்தார்களின் கைகளுக்கும் வட்டித் தொழிலர்களின் கைகளுக்கும் மாறின.

பஞ்சம் 50 லட்சத்துக்கும் மேல் மனித உயிர்களை வாரிச் சென்றது. வட, கிழக்கு இந்தியாவின் பெரும் பகுதி கொடும் பஞ்சத்திற்கு உள்ளாகி இருந்ததால் இந்தப் பிரதேசங்களில் விவசாயிகள் இயக்கம் தணிந்து விட்டது. அதன் மையம் தெற்குத் திசைக்கு—தமிழ் நாடு, கேரளம் ஆகியவற்றின் பிரதேசங்களுக்கு—மாறியது. இவற்றிலும் பின்னர் வங்காளத்திலும் விவசாயிகள் நிலப்பிரபுக்களின் தரிசாய்க் கிடந்த நிலங்களை உழுவது, தானியக் களஞ்சியங்களைக் கைப்பற்றுவது ஆகிய வடிவங்களில் போராட்டம் நடத்தினர்கள்.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி சட்டபூர்வம் ஆக்கப்பட்டதை ஒட்டிய நிகழ்ச்சிகள் வெகுஜன இயக்கம் விரிவாகத் தொடங்குவதற்கு அனுகூலமாய் இருந்தன.

1942—1945ல் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி

பிரிட்டிஷ் காலனியாட்சி அதிகாரிகள் 1942ம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சட்டபூர்வம் ஆக்கினர்கள். யுத்தத்தின்பால் தனது போக்கை இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி 1941ம் ஆண்டு இலையுதிர்காலம் முதல் மாற்றிக் கொண்டுவிட்டது இதற்குப் பெருமளவு காரணம் ஆகும். இந்தியக் கம்யூனிஸ்டுகள் புதிய நிலைமைகளில் ''மக்கள் யுத்தம்'' என்னும் கோஷத்தைக் கிளப்பி நாட்டில் போர்த் தளவாட உற்பத்தியை எல்லா வகையாலும் விரிவுபடுத்துவதைப் பணியாக முன்வைத்தபடியால் அவர்களுடைய நடவடிக்கைகளுக்குச் சட்டபூர்வமான நிலைமைகள் உருவாக்கப்பட்டது நேச நாடுகளுக்கு மிகக் கடுமையாய் இருந்த 1942ம் ஆண்டில் அவற்றின் ஆசியப் பின்புலத்தை வலுப்படுத்தும் நோக்கத்துக்கு எதார்த்தத்தில் பொருத்தமாக இருந்தது. பிரிட்டிஷ் ஆளும் வட்டாரங்களின் இந்தச் செயல் ஓரளவு சர்வதேசத் தன்மையும் கொண்டிருந்தது—சோவியத் யூனியனுக்கு ஒரு வகையில் நட்புக் குறி காட்டியது இது.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சட்டபூர்வம் ஆக்கியதனால் தேசிய இயக்கத்தில் பிளவு ஏற்படுத்தலாம் என்றும் காலனியாட்சி அதிகாரிகள் நம்பினார்கள். சட்ட பூர்வமான கம்யூனிஸ்டுக் கட்சியைத் தடை செய்யப்பட்டிருந்த காங்கிரசுக்கு எதிர் நிறுத்துவதன் மூலம் இவ்வாறு பிளவு ஏற்படுத்த அவர்கள் திட்டம் இட்டார்கள். உண்மையாகவே இந்தச் சூழ்நிலை இந்தியக் கம்யூனிஸ்டுகளைச் சிக்கலான நிலைமைகளில் வைத்தது. பாசிஸ்டுக் கூட்டணிக்கு எதிரான போராட்டத்தில் நேச நாடுகளுடைய நலன்களையும் பிரிட்டிஷ் காலனியாட்சிக்கு எதிரான போராட்டத்தில் இந்திய மக்களின் நலன்களையும் பொருத்தமாக இணைக்கும் சரியான செயல்தந்திரப் போக்கை வரையறுப்பது அதற்கு அவசியமாய் இருந்தது.

பிரிட்டனின் போர் முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பதற்கு உடனடியாகப் பொறுப்பாட்சி சர்க்கார் அமைக்கப்பட வேண்டும் என்றே வேறு பெரிய அரசியல் சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்றே காங்கிரசைப் போலக் கம்யூனிஸ்டுக் கட்சி நிபந்தனைகள் விதிக்கவில்லை. ஆனால் அடிப்படையான பொது தேசியக் கோரிக்கைகளை அது தொடர்ந்து ஆதரித்தது. இவற்றில் முதன்மையானது அனைத்து தேசிய அரசாங்கம் அமைக்கும் கோரிக்கை. இந்தியாவின் சாத்தியமான எல்லா வாய்ப்புக்களையும் ஜெர்மன் பாசிஸத்துடனும் ஜப்பானியச் சைனியவாதத்துடனும் போராட்டத்தில் முழுமையாகப் பயன்படுத்த இத்தகைய அரசாங்கத்தால்தான் முடியும் என்று கம்யூனிஸ்டுகள் சுட்டிக் காட்டினார்கள்.

தேசிய இயக்கத்தில் ஈடுபட்டுள்ள வெவ்வேறு சக்திகளின் ஒற்றுமையைப் பெறுவது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் வெற்றிக்கு மிக முக்கியமான நிபந்தனை என்ற கருத்தைக் கம்யூனிஸ்டுகள் விரிவாகப் பரப்பி வந்தார்கள். தேசியக் காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகுக்கும் இடையே ஒப்புந்தம் ஏற்படுவது இன்றியமையாதது என்று இந்த நோக்கில் அவர்கள் எண்ணினார்கள்.

அதே சமயம், பிற்காலத்தில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஒப்புக் கொண்டது போல, அந்தக் காலப் பகுதியில் அரசியல் கொள்கைத் திட்டத்திலும் சரி, போர்த்தந்திரப் போக்கைச் செயல்படுத்துவதிலும் சரி, தவறுகள் நேர்ந்தன. எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்றிணைக்கும் காரியத்துக்கு இவை தீங்கு விளைத்தன. கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி ''ஆகஸ்டுப் புரட்சியை'' எதிர்மறையாக மதிப்பீடு செய்தது. மக்கள் தொகையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையோராக இருந்த பிரதேசங்கள் அரசுரிமை பெற்ற நாடுகளாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற முஸ்லிம் லீகின் லாகூர் தீர்மானத்தை அது ஆதரித்தது; காந்தியும் பிற தலைவர்களும் விடு

விக்கப்பட வேண்டும் என்றும் அடக்குமுறைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தேசியக் காங்கிரஸ் சட்டபூர்வம் ஆக்கப்பட வேண்டும் என்றும் தாற்காலிகத் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்றும் கோரி இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி 1942, செப்டெம்பரில் தீர்மானம் நிறைவேற்றிய போதிலும் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்களுக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் இடையே உறவுகள் தொடர்ந்து மோசமாகி வந்தன. 1942—1945ல் வெகுஜன நிறுவனங்களில் தனது செல்வாக்கை விரிவாக்கி வலுப்படுத்துவதில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி பெற்ற கணிசமான வெற்றிகள் காங்கிரசுடன் அதன் உறவுகள் இவ்வாறு சீர்கேடு அடைவதற்கு எதார்த்தத்தில் உதவின.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி முறைப்படி சட்டபூர்வம் ஆக்கப்பட்டதை அடுத்த முதல் மாதங்களில் அதன் உறுப்பினர்கள் கடினமான நிலைமைகளில் வேலை செய்ய நேரிட்டது. மத்தியக் கமிட்டித் தலைவர்களில் பலர் இன்னும் சிறைகளில் இருந்தார்கள். காலனியாட்சி அமைப்புக்கு எதிரான ஆயுதப் போராட்டங்கள் பற்றி இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி மேற்கொண்டிருந்த அதிகாரபூர்வமான நிலையைப் பொருட்படுத்தாமல் அதிகாரிகள் 1942ம் ஆண்டுக் கோடை நிகழ்ச்சிகளில் ஏதேனும் விதத்தில் பங்கு கொண்ட ஊக்கமுள்ள கட்சி உறுப்பினர்களை நாட்டின் பல பிரதேசங்களில் கணிசமான எண்ணிக்கையில் கைது செய்திருந்தார்கள். எனினும் சட்டபூர்வம் ஆக்கப்பட்டது கட்சியின் வேலை நிலைமைகளை அடிப்படையில் மாற்றிவிட்டது. கட்சி ஏடுகளை முறையாக வெளியிட முதன்மையாக வாய்ப்பு கிடைத்தது.

பீப்புள்ஸ் வார் (மக்கள் யுத்தம்) என்னும் வார ஏடு 1942 ஜூலை மாதத்திலிருந்து முதலில் ஆங்கிலத்திலும் பின்னர் பதிஞெரு இந்திய மொழிகளிலும் வெளிவரத் தொடங்கியது. கட்சியின் கூட்டு அமைப்பாளியாக இந்தப் பத்திரிகை பயன் விளைக்கும் முறையில் செயலாற்றியது. கட்சித் தலைமை அலுவலகம் இருந்த பம்பாயில் பல்வேறு பிரசாரச் சிற்றேடுகளும் பிற பிரசுரங்களும் கட்சி அச்சகத்தில் அச்சிடப்பட்டன. நாட்டில் நடந்து வந்த தொழிலாளர், விவசாயிகள் இயக்கத்தையும் பொது ஜனநாயக இயக்கத்தையும் பற்றிய செய்திகள் காலனியாட்சி அதிகாரிகள் விதித்திருந்த தடையைப் பொருட்படுத்தாமல் பத்திரிகையில் விரிவாக வெளியிடப்பட்டன. இரண்டாவது உலக யுத்தப் போர்முனைகளில் இருந்த நிலைமை பற்றியும் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுடன் செஞ்சேனையின் வீரப் போராட்டம் பற்றியும் பத்திரிகை வாசகர்களுக்குத் தகவல்கள் அறிவித்து வந்தது. புதிய பத்திரிகை வெளிவரத் தொடங்கியதுமே காலனி

யாட்சி அதிகாரிகளின் அடக்குமுறைகள் அதன் மீது பொழியலாயின: அபராதங்கள் விதிப்பது, பிரதிகள் பறிமுதல் செய்யப்படுவது, பதிப் பகமும் அச்சகமும் சோதனை போடப்படுவது, கட்சிப் பிரசுரங்களை மக்களிடையே வினியோகிப்பவர்கள் கைது செய்யப்படுவது முதலி யன இவை. பிற்போக்காளர்கள் அச்சகக் கட்டிடத்தைத் தாக்கித் தகர்க்கவும் அதற்குத் தீ வைக்கவும் ஏற்பாடுகள் செய்தார்கள். ஆனால் இந்த இடர்கள் எவற்றையும் லட்சியம் செய்யாமல் பீப்புள்ஸ் வார் விஞ்ஞானக் கம்யூனிஸக் கருத்துக்களை உழைப்பாளி மக் களிடையே தொடர்ந்து பரப்பி வந்தது.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முதலாவது மகாநாடு பம்பா யில் 1943, மே 23ந் தேதி தொடங்கியது. இது கட்சியின் அரசியல் கொள்கைப் போக்கை வகுத்தது, பி. ஸி. ஜோஷியின் தலைமையில் புதிய மத்தியக் கமிட்டியைத் தேர்ந்தெடுத்தது. சட்டபூர்வ மாகச் செயலாற்றத் தொடங்கிய முதல் ஆண்டிலேயே இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர் தொகை வெகுவாக (1942ல் 4 ஆயிரமாக இருந்தது 1943 மே மாதத்தில் 16 ஆயிரமாக) அதிகரித் திருந்தது. அடுத்த ஆண்டுகளில் கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை யும் வெகுஜன அடித்தளமும் தொடர்ந்து அதிகரித்தன. 1944, ஜன வரியில் கட்சி உறுப்பினர் தொகை 30 ஆயிரம் ஆயிற்று. 1946ன் நடுவிலோ இது 53 ஆயிரமாக உயர்ந்தது.

1943—1945ல் வெகுஜன இயக்கம்

வெகுஜன அடித்தளத்தை விரிவாக்கி வலுப்படுத்துவது தங்கள் மிக முக்கியப் பணி என்று கம்யூனிஸ்டுகள் எண்ணினார்கள். தொழிற் சங்க, விவசாயிகள் நிறுவனங்களிலும் பிற வெகுஜன நிறுவனங் களிலும் அவர்களுடைய செல்வாக்கு அதிகரித்தது. அதே சமயம், காங்கிரஸ்காரர்களுடனும், முதன்மையாக காங்கிரஸ்-சோஷலிஸ்டு களுடனும் மற்ற அரசியல் குழுக்களுடனும் அவர்களுடைய போராட் டம் மேலும் மேலும் தீவிரம் ஆயிற்று.

அனைத்து இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசின் இருபதாவது மகாநாட்டில் (1943, மே, நாகபுரி) தேசியக் காங்கிரஸ் தரப்பாளர் கள் பிரேரித்த அரசியல் தீர்மானமோ கம்யூனிஸ்டுகள் பிரேரித்த தீர்மானமோ தொழிற்சங்கக் காங்கிரஸ் விதிகளின்படி இன்றியமை யாத பெரும்பான்மை வாக்குகள் பெறுமையால் ஏற்கப்படவில்லை. வெகுஜனங்கள் மீது செல்வாக்குக்காகப் போராடிய முக்கியக் குழுக் களின் குறித்த அளவு ''சக்திச் சமநிலையை'' இந்த நிகழ்ச்சி காட்டி யது. அனைத்து இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசின் தலைவராக

எஸ். ஏ. டாங்கேயும் பொதுச் செயலாளராக ஜனநாயகவாதியும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு நெருங்கியவருமான என். எம். ஜோஷியும் தேர்ந்தெடுக்கப்பட்டது கம்யூனிஸ்டுகளின் நிலை உறுதிப் பட்டதற்குச் சான்று பகர்ந்தது.

அனைத்து இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசில் நடந்த உட்குழுப் போராட்டமும் 1941ம் ஆண்டிலேயே உருவாகி இருந்த இந்தியத் தொழிலாளர் சம்மேளனத்தின் பிளவுபடுத்தும் போக்கும் காரண மாகத் தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்துக்கு ஊறு விளைந்தது. இழக்கப்பட்ட வேலை நாட்களின் மொத்த எண் ணிக்கை 1941ம்—1942ம் ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 1943ம் ஆண்டில் 23 லட்சம் வரையும் 1944ம் ஆண்டில் 34 லட்சம் வரை யும் குறைந்தது. ஐந்து லட்சத்துக்குச் சற்றே அதிக எண்ணிக்கை கொண்ட தொழிலாளர்களும் அலுவலர்களும் வேலைநிறுத்தங்களில் கலந்து கொண்டார்கள்.

யுத்தத்தின் கடைசி ஆண்டுகளில் வேலைநிறுத்தங்கள் முன்னை விடக் குறைந்த காலமே நீடித்தன என்பதும் கவனத்தை ஈர்க்கிறது. பஞ்ச ஆண்டுகளான 1943—1944ல் தொழிலாளர்கள் இருந்த கடின மான நிலைமைகளும் காலனியாட்சி அதிகாரிகளின்] தொழிலாளர் விரோதக் கொள்கையும் பாதிப்பு விளைத்தன. 1942ம் 1943ம் ஆண்டு களில் இந்தியத் தற்காப்புச் சட்டத்தில் புதிய அம்சங்கள் சேர்க்கப் பட்டன. இவற்றின்படி வேலைநிறுத்தங்கள் செய்வது நடப்பில் தடை செய்யப்பட்டது. தொழில் பிணக்குக்களின் பல்வேறு கூறுகள் பற்றி யும் முதன்மையாகத் தொழில் சட்டங்கள் குறித்தும் விவாதிப் பதற்குரிய தனிப்பட்ட அமைப்பு சர்வதேசத் தொழிலாளர் நிறு வனத்தின் யோசனைகளுக்கு இணங்க ஏற்படுத்தப்பட்டது. முத்தரப்பு உழைப்பு மகாநாடு இந்த அமைப்பு. அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட பத்து பெயரும் தொழிலதிபர்களாலும் தொழிற் சங்கங்களாலும் நியமிக்கப்பட்ட ஐந்து-ஐந்து பெயரும் இத்தகைய மகாநாடுகளில் பங்கு கொண்டார்கள்.

அரசாங்கத்தின் வெளிப்படையான தடையுத்தரவைப் பொருட் படுத்தாமல் வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்ந்து யுத்தத்தின் முடிவு வாக்கில் தீவிரம் ஆகிவிட்டது. அனைத்து இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசின் தலைமையில் தொழிலாளி வர்க்கத்தின் பொரு ளாதாரப் போராட்டம் நாகபுரி மகாநாட்டுத் தீர்மானங்களில் விடுக் கப்பட்டிருந்த கோரிக்கைகளை மையமாகக் கொண்டு நடந்தது. கள்ள வியாபாரிகள் மீது கண்காணிப்பு ஏற்படுத்தப்பட வேண்டும், தொழி லாளர்களுக்கு போனசும் பஞ்சப் படியும் அளிக்கப்பட வேண்டும் என்பவை இந்தக் கோரிக்கைகள். அனைத்து இந்தியத் தொழிற்

சங்கக் காங்கிரசின் நிலைமை வெகுவாக மேம்பட்டது. அதில் இணைந்த தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 1943ம் ஆண்டு மே மாதம் முதல் 1945ம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை 259லிருந்து 575 வரை அதி கரித்தது. அவற்றில் சேர்ந்த உழைப்பாளிகளின் எண்ணிக்கையோ, 332 ஆயிரத்திலிருந்து 509 ஆயிரம் வரை உயர்ந்தது.

அனைத்து இந்தியக் கிஸான் சபாவில் சேர்ந்திருந்த விவசாயிகள் சங்கங்களிலும் தங்கள் வேலையைக் கம்யூனிஸ்டுகள் அதே சமயம் தீவிரம் ஆக்கினர்கள். 1941ம்—1942ம் ஆண்டுகளின் போது முதலில் சோஷலிஸ்டுகளும் ''பார்வர்டு பிளாக்'' உறுப்பினர்களும் பின்னர் என். ஜி. ரங்காவைத் தலைவராகக் கொண்ட வலதுசாரிக் குழுவினரும் கிஸான் சபாவிலிருந்து விலகினர்கள். விவசாயிகள் சங்கங்களில் ஏற் பட்ட பிளவு காரணமாகக் கிஸான் சபாவின் உறுப்பினர் தொகை கணிசமாகக் குறைந்து விட்டது. யுத்தத்துக்கு முன் அது 800 ஆயிர மாக இருந்தது. 1942லோ, அது 225 ஆயிரம் ஆகி விட்டது. எனி னும், கம்யூனிஸ்டுகளும் அவர்களை ஆதரித்த கட்சிச் சார்பு அற்ற விவசாயி ஜனநாயகவாதிகளும் கூட்டாகச் செய்த விடாப்பிடியான ஒழுங்கமைப்பு வேலையின் பயனாக விவசாயிகள் சங்கங்களின் செல் வாக்கு கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு அதிகரித்தது. விவசாயிகள் இயக்கத்தின் முது பெருந் தலைவர்களான இந்துலால் யாக்ஞிக்கும் சுவாமி சகஜானந்த சரசுவதியும் காரியானந்த சர்மாவும் விவசாயி ஜனநாயகவாதிகளின் தலைமையில் இருந்தார்கள். விவசாயி வெகு ஜனங்களின், முதன்மையாகக் குறைந்த நிலம் உள்ள விவசாயிகளதும் குத்தகைக்காரர்களதும் பொருளாதார நலன்களைக் கிஸான் சபா செயல்முறையில் ஆதரித்ததும் அதன் செல்வாக்கு வளர உதவியது. கிஸான் சபாவின் உறுப்பினர் எண்ணிக்கையும் அதிகரித்தது. 1945, மார்ச்சில் அதில் 825 ஆயிரம் உறுப்பினர்கள் இருந்தார்கள். நேத் திரக்கோன் கிராமத்தில் (வங்காள மாகாணத்தில் மைமன்சிங் மாவட் டத்தைச் சேர்ந்தது) 1945, மார்ச்சில் நடந்த சபாவின் அடுத்த மகாநாட்டில் இந்தியக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பழம் பெருந் தலை வர்களில் ஒருவரான முஜப்பர் அகமது தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

1943—1944ல் விவசாயிகள் போராட்டத்தின் முக்கியப் பிர தேசங்களாக விளங்கியவை வங்காளம், பஞ்சாப், பீகார் ஆகியவை யும் தெற்கே சென்னை மாகாணத்தில் தஞ்சாவூர் மாவட்டமும் தெலுங்கர்கள் வாழ்ந்த வடக்குப் பிரதேசங்களும் மலையாளிகள் வசித்த மலபார் மாவட்டமும் ஆகும். குத்தகைக்கார விவசாயிகள் எல்லோரிலும் தீவிரமாகப் போராடினர்கள். குத்தகை ஒப்பந்தத்தில் தங்களுக்குப் பாதகமான நிபந்தனைகள் அகற்றப்பட வேண்டும்

என்று கோரியதோடு நில்லாமல் இவர்கள் உழவு நிலங்களைப் பகிரங்க மாகக் கைப்பற்றிக் கொள்ளவும் முற்பட்டார்கள்.

தொழிலாளி வர்க்கத்தினதும் விவசாயிகள் சமூகத்தினுடையவும் வெகுஜனப் போராட்டம், அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங் கிரசினதும் கிஸான் சபாவினதும் துடியான நடவடிக்கைகள், கம்யூ னிஸ்டுகளின் தலைமையில் இயங்கிய இளைஞர் (மாணவர்), மாதர் நிறுவனங்களின் கணிசமான அளவு செயல்பாடு ஆகிய நிகழ்ச்சிகளின் போது காங்கிரஸ்-சோஷலிஸ்டுகளின் இடதுசாரிப் பிரதிநிதிகள் பலர் படிப்படியாக விஞ்ஞான சோஷலிஸத்தின் நிலைகளுக்கு மாறி, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் ஆனார்கள். நாட்டின் தெற்கே ஆந் திரம், கேரளம் ஆகிய பிரதேசங்களிலும் வடக்கே ஐக்கிய மாகாணத் திலும் இந்த நிகழ்முறை சிறப்பாகத் தீவிரமாக நடந்தது.

யுத்தம் முடியும் தறுவாயில் நாட்டின் அரசியல் நிலைமை

அடக்குமுறைகளை மதியாமல் தொடர்ந்து நடந்த வெகுஜன இயக்கத்தையும் வெகுஜன நிறுவனங்களில் இடதுசாரிச் சக்திகள் படிப்படியாக வலு அடைவதையும் கருத்தில் கொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் யுத்தம் முடியும் தறுவாயில் புதிய அரசியல் உத்தி களைக் கையாண்டது. இந்திய மக்களால் சற்றும் விரும்பப்படாத வைசிராய் லின்லித்கோ 1943, அக்டோபரில் அகற்றப்பட்டு, அவ னுடைய இடத்தில் வேவல் நியமிக்கப்பட்டான். 1944, மே 6ந் தேதி காந்தி சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். மற்றக் காங்கிரஸ் தலைவர்களும் சிறையிலிருந்து வெளிவந்தார்கள்.

அரசியல் முயற்சி தொடங்கும் வாய்ப்பைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு பிரிட்டிஷ் அதிகாரிகள் வேவலின் மத்தியஸ்தத்தில் காந்திக்கும் ஜின்னாவுக்கும் இடையே பேச்சு வார்த் தைத் தொடருக்கு 1944ல் ஏற்பாடு செய்தார்கள். யுத்தத்துக்குப் பிந்திய வருங்காலத்தில் இந்தியாவில் நிலைமையை முறைப்படுத்துவது குறித்த இந்தப் பேச்சு வார்த்தைகளின் போது காங்கிரசுக்கும் முஸ் லிம் லீகுக்கும் இடையே வேற்றுமைகளை மேலும் ஆழமாக்குவதில் பிரிட்டிஷார் வெற்றி பெற்றார்கள்.

தேசியக் காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட வேண்டும் என்று கோரிய பொது மக்கள் கருத்தின் வற்புறுத் தல் காரணமாக 1944, செப்டெம்பரில் இரு நிறுவனங்களதும் தலை வர்களின் இரண்டாவது பேச்சு வார்த்தைத் தொடர் நடைபெற்றது. இம்முறை நடுவராக இருந்தது ''சப்ரூ கமிட்டி'' (மிதவாதிகள் பெடரேஷன் தலைவரும் கமிட்டியின் முதல்வருமான தேஜ் பகதூர் சப்ரூவின் பெயரால் அவ்வாறு அழைக்கப்பட்டது).

தேசியக் காங்கிரசின் தலைவர்களில் ஒருவரான சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் ஜின்னுவுக்கு ஒரு யோசனையை அனுப்பினர். அதன் சுருக்கமாவது: 1) தேசியக் காங்கிரஸ் பாக்கிஸ்தான் அமைக்கப்படுவதற்கு இசைவு தெரிவிக்கிறது, ஆனால் நாடு சுதந்திரம் பெற்ற பின்பே இது அமைக்கப்பட வேண்டும்; 2) பாக்கிஸ்தான் பற்றிய பிரச்சினை குடியொப்பத்தின் மூலம் தீர்க்கப்படும்; 3) அரசியல் ஒழுங்கமைப்புப் பிரச்சினை முடிவாகத் தீர்க்கப்படும் வரை தாற்காலிக அரசாங்கம் ஏற்படுத்தப்படும், முஸ்லிம் லீக் இதில் கட்டாயமாகப் பங்கு கொள்ள வேண்டும்.

1944, ஆகஸ்டில் முஸ்லிம் லீக் கவுன்சிலின் கூட்டம் கராச்சியில் நடந்தது. காந்தியுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு ஜின்னுவுக்கு முழு அதிகாரம் வழங்கும் தீர்மானம் அதில் ஏற்கப்பட்டது. இரு தலைவர்களுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றம் எழுத்து வடிவில் நடந்தது (1944, செப்டெம்பர் 21—27). சுதந்திரம் பெறும் வரை அரசியல் ஒழுங்கமைப்புக்கான நிபந்தனைகளில் ஒன்றுகப் பாக்கிஸ்தான் சூத்திரத்தைக் காங்கிரஸ் ஏற்க வேண்டும் என்று ஜின்னு வற்புறுத்தியதால் பேச்சு வார்த்தைகள் தோல்வியில் முடிந்தன.

ஆயினும் காங்கிரசினதும் லீகினுடையவும் தாழ்நிலை நிறுவனங்களில் ஒற்றுமை ஆர்வம் அதிகரித்தது. அவற்றின் நிர்ப்பந்தம் காரணமாக முஸ்லிம் லீகின் பொதுச் செயலாளர் லியாகத் அலி கானுக்கும் மையச் சட்ட மன்றத்தில் காங்கிரஸ் பிரதிநிதிக் குழுத் தலைவர் புலபாய் தேசாய்க்கும் வருங்காலத் தாற்காலிக அரசாங்கம் அமைப்பதற்கான பின்வரும் கோட்பாடுகள் குறித்து ஒப்பந்தம் ஏற்பட்டது: 1) இரு அரசியல் நிறுவனங்களுக்கும் அதில் தலைக்கு 40 சதவிகிதம் இடங்கள் கிடைக்கும்; 2) எஞ்சிய இடங்கள் ''மதச் சிறுபான்மையினருக்கு'' (கிறிஸ்தவர்கள், ''தீண்டத்தகாதவர்கள்'', சீக்கியர்கள், பார்சிகள் ஆகியோருக்கு) வழங்கப்படும்; 3) நாட்டின் படைகளுக்குத் தலைமைத் தளகர்த்தனை பிரிட்டிஷ் ஜெனரலே இருந்து வருவான்; 4) இந்தியா பிரிக்கப்படுவதையும் பாக்கிஸ்தான் தனியாவதையும் பற்றிய பிரச்சினை நாட்டின் அரசியல் அந்தஸ்து முடிவாக நிர்ணயிக்கப்பட்ட பிறகு தீர்க்கப்படும்.

பிரிட்டிஷ் காலனியாட்சி அமைப்புடன் புதிய, நிர்ணயகரமான போராட்டத்துக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளை ஒன்றுபடுத்தும் பாதையில் பெருத்த சாதனையாகத் திகழ்ந்தது இந்த ஒப்பந்தம்.

சுதந்திரப் போராட்டத்தின் இறுதிக் கட்டம் (1945—1947)

1945—1946ல் வெகுஜன இயக்கமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அரசியல் தந்திரங்களும்

நாஜி ஜெர்மனியும் அதன் கூட்டாளி நாடுகளும் தோல்வி அடைந்தது, பாசிஸ்டு ஆக்கிரமிப்பை முறியடிப்பதில் முதன்மையாகப் பங்கு ஆற்றிய சோவியத் யூனியனின் சர்வதேச மதிப்பும் செல்வாக்கும் அதிகரித்தது, சோவியத் சேனையால் விடுதலை அளிக்கப்பட்ட மத்திய, தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் புரட்சிகர மாற்றங்கள் தொடங்கியது, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஜனநாயக சக்திகள் வலு அடைந்தது—இந்த எல்லா அயல்நாட்டு அரசியல் நிகழ்ச்சிகளும் யுத்தம் முடிந்ததும் இந்தியாவின் நிலைமை மீது மேலும் மேலும் அதிகரித்த அளவில் செல்வாக்கு செலுத்தத் தொடங்கின. ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளில் காலனியாட்சி வல்லரசுகளின் நிலைகள் பொதுவாகப் பலவீனம் அடைந்தது யுத்தத்தின் போது புலப்பட்டது. ஏகாதிபத்தியத்தின் காலனித் தொகுப்பு அனைத்திலும் நெருக்கடி கூர்மை அடையத் தொடங்கியதை இது காட்டியது.

ஜப்பானியக் கைப்பற்றுளர்களை விரட்டுவதற்கும், முந்திய காலனியாட்சி அமைப்புக்களை மீண்டும் ஏற்படுத்த பிரிட்டிஷ், பிரெஞ்சு, டச்சு முதலாளி வர்க்கம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிராகவும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நடந்த போராட்டம் இந்தியாவில் உள்நாட்டு அரசியல் சூழ்நிலையைப் புரட்சிகரம் ஆக்கியது.

நாட்டில் வர்க்க, தேசிய இன முரண்பாடுகள் கூர்மை அடைந்தது இரண்டாவது உலக யுத்த ஆண்டுகளில் நிகழ்ந்த பொருளாதார மாறுதல்கள் காரணமாக ஏற்பட்டது.

தேசிய முதலாளி வர்க்கத்தின் நிலைகள் உறுதிப்படுதல்

போர்த் தளவாட உற்பத்தி விரிவாக நடந்தது இந்தியத் தொழில் துறைக்கு நன்மை விளைத்தது. யுத்தத்துக்கு முந்திய காலப் பகுதி

யுடன் ஒப்பு நோக்குகையில் தொழில்துறை உற்பத்தியின் மொத்த அளவு 1943 வாக்கில் கிட்டத்தட்ட 25 சதவிகிதம் அதிகரித்தது. இராணுவ ஆர்டர்கள் பெற்ற உலோகவார்ப்பு, பஞ்சாலை, இரசாயன தொழிற் கிளைகளும் இந்தியாவில் இருந்த ஐந்து லட்சத்துக்கும் அதிகமான பிரிட்டிஷ் இராணுவத்தினருக்குத் தேவையான பண்டங்களை உற்பத்தி செய்தவையும் (உதாரணமாக உணவுப் பண்டத் தொழில்) மேலான நிலைமையில் இருந்தன என்பது உண்மையே. தொழிற்சாலைத் துறையோடு கூடவே கைத்தொழிற்கூட, குடிசைத் தொழில் உற்பத்தியின் சில கிளைகள் ஓரளவு வளர்ச்சி பெற்றன. இவையும் இராணுவ அலுவலகங்களின் ஆர்டர்களை நிறைவேற்றியதன் மூலமே வளர்ச்சி அடைந்தன.

யுத்த காலத்தில் பெற்ற கொழுத்த லாபங்களைக் கொண்டு கணிசமான பணம் திரட்டுவது இந்திய முதலாளி வர்க்கத்துக்கு இயன்றது. யுத்தத்துக்கு முந்திய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்திய கூட்டுப் பங்கு வங்கிகளின் மொத்தச் சேமிப்புத் தொகை பல மடங்கு அதிகரித்து விட்டது. விவசாயிகளையும் சிறு தொழிலதிபர்களையும் கம்மியர்களையும் குடிசைத் தொழிலாளர்களையும் சுரண்டியதன் மூலம் வர்த்தக-வட்டித் தொழில் முதலாளிகளும் கணிசமான பணத் தொகைகளைத் திரட்டிக் குவித்தார்கள்.

தங்கள் நிதி அடித்தளத்தை வலுவாக்கிக் கொண்ட இந்திய வர்த்தக, தொழிலதிபர்கள் முன்பு பெரும்பாலும் பிரிட்டிஷ் மூலதனத்தின் ஆதிக்கத்தில் இருந்து வந்த தேயிலைத் தோட்டக்கால் தொழில், சணல் ஆலைத் தொழில் முதலிய கிளைகளில் (பங்குகளை விலைக்கு வாங்கியதன் மூலம்) புகத் தொடங்கினார்கள். இந்தியப் பெரு வாணிக தொழில்துறை இரசாயனத் தொழில், மோட்டார் நிர்மாணம் முதலிய முன்னணி உற்பத்திக் கிளைகளில் கூட்டுக் கம்பெனிகள் அமைப்பதை வர வர அதிக விரிவாகக் கடைப்பிடிக்கத் தொடங்கிற்று. இந்திய ஏகபோகக் குழுவினர்—டாட்டா, பிர்லா, டால்மியா-ஜைன், வால்சந்த் முதலியோர்—பிரிட்டிஷ் ஏகபோகக் கம்பெனிகளின் இளநிலைப் பங்காளிகளாகச் செயல்பட்டார்கள். இந்தியப் பெரு மூலதனம் ஆக அதிக வளர்ச்சி அடைந்த சமஸ்தானங்களில் (பரோடா, குவாலியர், மைசூர், ஜெய்பூர்) துடியாகப் புகுந்தது. இவற்றின் மன்னர்கள் அங்கு நிறுவப்பட்ட தொழில்துறைக் கம்பெனிகளின் பங்குதாரர்கள் ஆனார்கள்.

இந்தியாவில் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தின் பொருளாதார நிலைகள் வலு இழந்ததும் பிரிட்டிஷ்-அமெரிக்க முரண்பாடுகளும்

இந்திய வர்த்தக-தொழில்துறை முதலாளி வர்க்கத்தின் தொழில் நடவடிக்கைகள் அதிகத் தீவிரம் அடைந்ததும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலும் அதன் நிலைகள் உறுதிப்பட்டதும் இந்தியாவில் பிரிட்டிஷ் மூலதனத்தின் நிலைகள் ஓரளவு வலு இழந்ததோடு ஒரே நேரத்தில் நிகழ்ந்தன. யுத்த காலத்தில் பிரிட்டிஷ் மூலதனம் தாய்நாட்டுக்கு அனுப்பப்படுவது அதிகரித்தது. வர்த்தக-தொழில் துறை நடவடிக்கையின் அனேகத் துறைகளில் அதன் ஏக போகம் குலைந்தது.

இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே நிதிக் கணக்கீடுகளிலும் ஆழ்ந்த மாறுதல்கள் நிகழ்ந்திருந்தன. இந்தியாவின் இராணுவ சப்ளைகளுக்கான கணக்குக்களைத் தீர்ப்பது குறித்துத் தனிப்பட்ட பிரிட்டிஷ்-இந்திய ஒப்பந்தம் 1939ல் ஏற்பட்டிருந்தது. இதன்படி பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த சப்ளைகளைக் கடனாகப் பெற்றது. பிரிட்டிஷ் வங்கியில் தனிக் கணக்கில் இந்தக் கடன் பதிவு செய்யப்பட்டது. ஆட்சித் தலைமை நாட்டு பட்ஜெட் செலவினத்தை மிகைப்படுத்தாமல் இந்தியாவின் ஆள் வளங்களையும் பொருள் வளங்களையும் யுத்த காலத்தில் அதிகத்திலும் அதிகமாகப் பயன்படுத்துவதற்கு பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் இவ்வாறு வகை செய்து கொண்டிருந்தது. தவிரவும், பிரிட்டனுக்கு இந்தியா பட்டிருந்ததாகக் கூறப்பட்ட அரசாங்கக் ''கடன்'' இந்தியாவின் ஸ்டர்லிங் சேமிப்புகளின் பகுதியிலிருந்து வரவு வைத்துக் கொள்ளப்பட்டது. 19ம் நூற்றாண்டிலேயே ஏற்பட்டிருந்தது இந்தக் ''கடன்.'' காலனிப் போர்கள் நடத்தியதற்கும் பிறவற்றுக்கும் ஆன செலவுகள் ஆட்சித் தலைமை நாட்டினால் இந்தியாவின் கணக்கில் எழுதப்பட்டு இந்தக் ''கடனில்'' சேர்க்கப்பட்டிருந்தன. முடக்கப்பட்டிருந்த ஸ்டர்லிங் சேமிப்புகள் 1945ல் நூறு கோடி பவுண்டு ஸ்டர்லிங்குக்கும் அதிகமான தொகை ஆகி இருந்தன. இந்தியாவின் யுத்தத்துக்குப் பிந்திய பொருளாதார வளர்ச்சிப் போக்கு மீது செல்வாக்கு செலுத்துவதற்கு இந்தச் சேமிப்புகளை பிரிட்டன் பயன்படுத்தி இருக்க முடியும். ஆயினும் கணிசமான அன்னிய நாணயச் சேமிப்புகள் இருந்ததும் இந்தியாவின் ''கடன்'' தீர்ந்து விட்டதும் தேசிய முதலாளி வர்க்கத்தின் பொருளாதார நிலைகளைச் சந்தேகமின்றி வலுப்படுத்தின.

யுத்த-காலத்தில் பிரிட்டனுக்கு நேர்ந்த பொருளாதார, இராணுவ-அரசியல் இடர்களையும் ஜப்பானியப் போட்டியின் மறைவை

யும் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்க மூலதனம் வாய்ப்புக்கள் மிகுந்த இந்தியச் சந்தையில் வலிந்து புகத் தொடங்கியது. யுத்த காலத்தில் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட தங்கள் பொருளாதார, தொழில்நுட்ப மிஷன்களையும் இரவல்-குத்தகை முறைப்படி செய்யப் பட்ட சப்ளைகளையும் பிற வழிகளையும் கையாண்டு அமெரிக்க முதலாளி வர்க்கத்தினர் இந்தியாவில் ஆழ்ந்த பொருளாதார வேவு வேலை நடத்தினார்கள், இந்தியத் தொழிலதிபர்களுடனும் வர்த்தகர் களுடனும் தொடர்புகள் ஏற்படுத்திக் கொண்டார்கள். யுத்தம் முடியும் தறுவாயில் இந்தியாவின் ஏற்றுமதியில் அமெரிக்காவின் பங்கு 8லிருந்து 21 சதவிகிதமாகவும் இறக்குமதியில் 6லிருந்து 25 சதவிகிதமாகவும் உயர்ந்தது. இந்தியச் சந்தையில் தீவிரம் அடைந்து கொண்டு போன பிரிட்டிஷ்-அமெரிக்கப் போட்டி பிரிட்டிஷ் ஏக போகங்கள் விஷயத்தில் இந்திய முதலாளி வர்க்கத்தின் நிலைகளை உறுதிப்படுத்தியது.

இராணுவ சப்ளைகளால் செல்வப் பெருக்கு அடைந்த இந்தியத் தேசிய முதலாளி வர்க்கம், சிறப்பாக அதன் உயர்படியினர், காலனி யாட்சி அமைப்பின் ஒடுக்குமுறையைக் கடுமையாக உணர்ந்தார்கள். இந்த அமைப்பு அவர்களிடம் குவிந்து வந்த பணத்தை உற்பத்தி யில் ஈடுபடுத்த விடாமல் தடை செய்தது, தேசிய முதலாளித்துவத் தொழில் முயற்சியின் கட்டற்ற வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட் டது. 1944ம் ஆண்டில் தொழில் உற்பத்தி குறைந்ததனால் இந்த முரண்பாடுகள் இன்னும் அதிகக் கூர்மை அடைந்தன.

வர்க்க முரண்பாடுகள் கூர்மை அடைதல்

இராணுவ ஆர்டர்கள் நின்று விட்டதனால் உற்பத்தி குறைந்தது, தொழில் நிலையங்கள் மூடப்பட்டன, திரளான தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். தொழிலதிபர்கள் தங்கள் நஷ் டங்களுக்குத் தொழிலாளி வர்க்கத்தைச் சுரண்டி ஈடுகட்ட முயன் றார்கள். போனஸ்களும் பஞ்சப் படியும் தர அவர்கள் மறுத்தார் கள். குடிசைத் தொழிலாளிகளும் கைத் தொழிற்கூடத்தினரும் மிக வும் சங்கடமான நிலைமையில் இருந்தார்கள். ஏனெனில் சந்தை நில வரம் சரிந்ததனால் சிறு உற்பத்தித் தொழில் கடுமையான இடர்ப் பாட்டுக்கு உள்ளாயிற்று. 1943—1944ல் பஞ்சத்தில் அடிபட்ட கிராமங்களிலிருந்து விவசாயிகள் திரள் திரளாக நகரங்களுக்கு ஓடி யதன் விளைவாக வேலையற்றோரின் எண்ணிக்கை வெகுவாக உயர்ந் தது. இதனால் கூலி வேலை நிலைமைகள் உடனே பாதிக்கப்பட்டன.

1944ம்—1945ம் விவசாய ஆண்டில் உணவுப் பயிர்களும் தொழிற்

பயிர்களும் குறைந்த விளைச்சல் தந்ததால் உணவுப் பண்டங்களிலும் சில மூலப் பொருள் வகைகளிலும் பற்றுக்குறை ஏற்பட்டது. கிட்டத் தட்டப் பத்துக் கோடி மக்கள் வசித்த பிரதேசங்கள் பஞ்ச அபாயத் துக்கு உள்ளாகி இருந்ததாக அதிகாரிகள் ஒப்புக் கொண்டார்கள்; உணவுப் பண்டங்களும் பிற பொருள்களும் போதாமையினால் விலை வாசி உயர்வும் கள்ள வியாபாரமும் மேலும் அதிகரித்தன. தொழி லாளர்கள், சிறு அலுவலர்கள், நகர, நாட்டுப்புற உழைப்பாளிகளின் பிற வட்டாரத்தினர் ஆகியோரின் நிலைமை இதனால் மிகக் கடினம் ஆயிற்று.

மக்களின் பெரும்பாலான பகுதியினரது பொருளாதார நிலைமை சீர்கெட்டதனால் வர்க்க முரண்பாடுகள் மேற்கொண்டு கூர்மை அடைந்தன. மக்களிடையே அதிருப்தி விரிவாகப் பரவிய சூழ்நிலை யில் வெகுஜன நிறுவனங்களின் செயல்கள் தீவிரம் அடைந்ததன் விளை வாக நாட்டில் வர்க்கப் போராட்டம் ஏற்றம் பெற்றது.

காலனியாட்சி அமைப்புக்கு முடிவு கட்டிவிட வேண்டும் என்ற உணர்வு இந்திய சமூகத்தின் எல்லா வட்டாரங்களிலும் மேலும் மேலும் விரிவாகப் பரவலாயிற்று. இதனால்தான் வர்க்க மோதல் கள் தவிர்க்க இயலாதவாறு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கை மேற்கொண்டன. நிலப்பிரபுக்களும் சமஸ்தான மன்னர்களும் தரகு வர்த்தக முதலாளிகளும் மட்டுமே இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி யாட்சி அமைப்பை ஆதரித்தார்கள்.

1945ல் இந்தியாவில் பிரிட்டிஷ் கொள்கை

இந்தியாவில் காலனியாட்சி அமைப்பை நிலையாக வைத்திருக்க முயன்ற பிரிட்டிஷ் ஆளும் வட்டாரத்தினர் நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகளான தேசியக் காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகுக்கும் இடையே கருந்து வேறுபாடுகளைக் கூர்மை ஆக்குவதன் மூலம் காரியத் தைச் சாதித்துக் கொள்ளத் தொடர்ந்து திட்டம் இட்டார்கள். 1945, மே மாதம் லண்டன் சென்று திரும்பியதும் இந்திய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்டு வைசிராய் செயலாட்சிக் கவுன் சிலை அமைக்க எண்ணி இருப்பதாக வேவல் அறிவித்தான். வைசிரா யின் கோடைகால வாசஸ்தலமான சிம்லாவில் தேசியக் காங்கிரஸ், முஸ்லிம் லீக் பிரதிநிதிகளுடன் ஜூன் மாதம் பேச்சு வார்த்தைகள் நடத்தினான். காங்கிரஸ் தலைவர்களான ஜவாகர்லால் நேரு, வல்ல பாய் படேல், அபுல் கலாம் ஆஸாத் மூவரும் இந்த மகாநாட்டுக்கு முன்பு விடுதலை செய்யப்பட்டார்கள். காந்தியுடன் இவர்கள் சிம்லா பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டார்கள்.

செயலாட்சிக் கவுன்சில் அமைப்பதற்கான முறையை வேவல் பிரேரித்தான். முதல் பார்வைக்கு இது லியாகத் அலி கான்—புலபாய் தேசாய் ஒப்பந்தத்தில் இருந்த சூத்திரம் போலக் காணப்பட்டது. ஆனால் கவுன்சிலில் இடங்கள் அரசியல் கட்சிகளுக்கு அல்ல, மத சமுதாயங்களுக்கு ஒதுக்கப்படும் என்று வேவலின் யோசனையில் வகைசெய்யப்பட்டிருந்தது. இது இரு கட்சிகளுக்கும் ஏற்கத் தகாததாக இருந்தது. தேசியக் காங்கிரஸ் தன்னை இந்து நிறுவனமாக அல்ல, மதச் சார்பு அற்ற அனைத்து இந்திய நிறுவனமாகக் கருதி வந்தது. மாறுக முஸ்லிம் லீக் இந்திய முஸ்லிம்களின் தனி அரசியல் பிரதிநிதித்துவம் தனக்கே உரியது என்று உரிமை கொண்டாடி வந்தது. காங்கிரஸ் முஸ்லிம்கள் கவுன்சில் உறுப்பினர்கள் ஆவதற்கு இசைய அதனால் முடியவில்லை. தவிரவும் செயலாட்சிக் கவுன்சில் பிரிட்டிஷ் அரசனுக்கும் நாடாளுமன்றத்துக்கும் மட்டுமே பொறுப்பு உள்ளதாக இருக்கும் என்று அனுமானிக்கப்பட்டது.

சிம்லா பேச்சு வார்த்தைகள் தோல்வியில் முடிந்தன. ஆனால் இதற்குப் பொறுப்பாளிகள் மகாநாட்டில் கலந்து கொண்ட இந்திய அரசியல் கட்சிகளே என்று காலனியாட்சி நிர்வாகம் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியது. காங்கிரசுக்கும் லீகுக்கும் இடையே கருத்து வேற்றுமைகள் மேற்கொண்டு கூர்மை அடைவதும் நாட்டில் இந்து-முஸ்லிம் உறவுகள் பொதுவாகச் சிக்கல் அடைவதும் இந்தியாவில் காலனியாட்சி அமைப்பை நிலையாக வைத்திருக்க உதவும் என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எண்ணியது.

1945ம் ஆண்டுக் கோடையில் பிரிட்டனில் நடந்த யுத்தத்துக்குப் பிந்திய முதலாவது தேர்தல்களில் தொழிற் கட்சி பெற்ற வெற்றி இந்தியா பற்றிய பிரிட்டிஷ் கொள்கையில் சாராம்சமான மாறுதல் எதையும் ஏற்படுத்தவில்லை. ஜூலை மாதம் வேவல் பிரிட்டனுக்கு அழைக்கப்பட்டான். அவன் திரும்பிய பின் 1945, செப்டெம்பர் 19ந் தேதி இந்தியக் கொள்கை பற்றிய ஆட்லி சர்க்காரின் முதலாவது அறிக்கை லண்டனிலும் டில்லியிலும் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டது. 1942ல் கிரிப்ஸின் யோசனைகளில் விவரிக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தொழிற் கட்சியினர் செயல்படுத்துவார்கள் என்று அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. 1945/46 குளிர் காலத்தில் மைய, மாகாணச் சட்ட மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப் பெறும் என்று அறிவிக்கப்பட்டது. எனினும் காலனியாட்சிக்கு எதிராகத் மக்கள் நடத்திய வெகுஜனப் போராட்டங்கள் பிரிட்டிஷ் ஆளும் வட்டாரத்தினரின் திட்டங்களில் முக்கியமான திருத்தங்களைப் புகுத்தின.

1945 இலையுதிர் காலத்திலும் 1946 தொடக்கத்திலும் வெகுஜனப் போராட்டங்கள்

1945ம் ஆண்டின் நடுவிலிருந்து நாட்டில் வேலைநிறுத்த இயக்கத்தின் புதிய ஏற்றம் தொடங்கியது. வேலைநிறுத்தங்கள் மேலும் மேலும் அடிக்கடி அரசியல் தன்மையை மேற்கொண்டன. தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டம் மாணவர்களதும் உழைப்பாளிகளின் பிற குழுக்களதும் அரசியல் போராட்டங்களுடன் சேர்ந்தது. வெகுஜனத் தொழிலாளர் இயக்கத்தின் புதிய பண்பாக இருந்தது இது. 1945ம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடந்த அனைத்து இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசின் பதினேராவது மகா நாட்டின் தீர்மானங்கள் தொழிலாளர் இயக்கத்தின் இத்தகைய வளர்ச்சியைச் சாத்தியம் ஆக்கின. தொழிற் சங்க இயக்கத்தின் பிரபல தலைவர்களில் ஒருவரும் காங்கிரஸ்காரருமான வி. வி. கிரி பிரேரித்த அரசியல் நிலைமை பற்றிய தீர்மானம் இந்த மகாநாட்டில் ஒரு மனதாக ஏற்கப்பட்டது. இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்கப் பட வேண்டும் என்ற கோரிக்கை இதில் அடங்கி இருந்தது. தேசிய விடுதலை இயக்கம் ஏற்றம் பெற்றிருந்த காலப் பகுதியில் அனைத்து இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸ் நாட்டில் தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கிய தோடு காலனியாட்சி அமைப்புக்கு எதிரான பரந்த பொது ஜனநாயக இயக்கத்தின் அனைவருக்கும் உரிய பாதையிலும் அதைச் செலுத்தியது. தொழிற் சங்க நிறுவனங்களுக்குள் இருந்த பல் வேறு அரசியல் பிரிவுகளுக்கு இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு ஏற்ற நிலைமைகள் போராட்டத்தின் போது உருவாயின, ஒற்றுமை முயற்சிகளின் முன்னோடிகளாகச் செயல்பட்டார்கள் கம்யூனிஸ்டுகள். நிறுவன அமைப்புள்ள தொழிலாளர் இயக்கத்தில் அவர்களுடைய செல்வாக்கு இதனால் இன்னும் அதிகம் ஆயிற்று.

1945ம் ஆண்டின் பிற்பாதியில் வேலைநிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் படையினருடனும் போலீசாருடனும் ஆயுதப் பூசல்களாக வளர்ந்தன. போலீசாருடன் முதலாவது பெரிய மோதல் காசி நகரில் ஆகஸ்டு மாதம் நிகழ்ந்தது. அதை அடுத்து பம்பாயில் கலவரங்கள் நடந்தன. காலனியாட்சி நிர்வாகத்தின் ஏஜெண்டுகள் இவற்றை இந்துமுஸ்லிம் வகுப்புக் கலகங்களின் பாதையில் செயற்கையாகத் திருப்பி விட்டார்கள். இந்தக் கலகங்கள் தொடர்ந்து பல நாட்கள் நடந்தன. யுத்தம் முடிந்த பின் இரு மத சமுதாயங்களுக்கும் இடையே நடந்த முதலாவது பெருத்த மோதல் இதுவே. இதைத் தூண்டி விட்டதன் மூலம் பிரிட்டிஷ் காலனி ஆட்சியாளர்கள் ஏகாதிபத்திய

எதிர்ப்புப் போராட்டத்தில் வலுவாகிக் கொண்டு வந்த இந்து-முஸ்லிம் ஒற்றுமையைக் குலைக்க முயன்றார்கள்.

1945ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் நடந்த இரண்டு நிகழ்ச்சிகள் உள்நாட்டு அரசியல் நிலைமையைக் கூர்மையாக்கிக் காலனியாட்சிக்கு எதிரான வெகுஜன இயக்கம் மேற்கொண்டு பரவுவதற்கு ஊக்கம் அளித்தன. தென் கிழக்கு ஆசிய நாடுகளில் தேசிய விடுதலை இயக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் பிரான்சுக்கும் உலாந்தாவுக்கும் உதவி அளிப்பதற்காக பிரிட்டிஷ்-இந்திய சேனையின் பிரிவுகளைப் பயன்படுத்த பிரிட்டிஷ் அரசாங்கம் செய்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொருட்டுத் தேசியக் காங்கிரஸ், முஸ்லிம் லீக், கம்யூனிஸ்டுக் கட்சி, பிற வெகுஜன நிறுவனங்கள் ஆகியவற்றின் தலைவர்களது அறைகூவலின் பேரில் கண்டனக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நாடு முழுவதிலும் நடை பெற்றன. அக்டோபர் 25ந் தேதி ''இந்தோனீசியா தினம்'' நாடெங்கும் கொண்டாடப்பட்டது. போர்த் தளவாடங்களுடன் அந்த நாட்டுக்குப் புறப்பட இருந்த கப்பல்களில் சரக்கேற்றத் துறைமுகத் தொழிலாளர்கள் மறுத்து விட்டார்கள்.

பர்மாவிலும் பிற தென் கிழக்கு ஆசிய நாடுகளிலும் போர்க் கைதிகள் ஆகி இருந்த பிரிட்டிஷ்-இந்தியத் துருப்பினரைக் கொண்டு சுபாஷ் சந்திர போஸால் அமைக்கப்பட்ட ''இந்தியத் தேசிய சேனை'' அதிகாரிகள் சிலர் மீது வழக்கு நவம்பர் மாதம் டில்லியில் தொடங்கியது. சுபாஷ் சந்திர போஸ் பர்மாவிலிருந்து 1945ல் தப்பி வெளியேறி, ஜப்பானுக்குச் செல்லும் வழியில் விமான விபத்தில் கொல்லப்பட்டார். போசும் அவருடைய போராட்டத் தோழர்களும் தேசிய சுதந்திரத்தின் பொருட்டுக் காலனியாட்சி அமைப்புக்கு எதிராக ஆயுதமேந்திச் சமர் புரிந்த போர் வீரர்கள் என்று இந்தியப் பொது ஜன அபிப்பிராயம் மதிப்பிட்டது. தம் தாயகமான வங்காளத்தில் போஸ் மக்களால் சிறப்பாகப் பெரிதும் மதிக்கப்பட்டார். அவரால் நிறுவப்பட்ட ''பார்வர்டு பிளாக்'' அங்கே செயலாற்றி வந்தது. வங்க மக்கள் அவரை நேத்தாஜி (தலைவர்) என்றே அழைத்தார்கள்.

இந்தியத் தேசிய சேனையின் முன்னாள் படைத் தலைமையகத் தலைவர் ஷாநவாஸும் இன்னும் இரு அதிகாரிகளும் நீண்ட காலச் சிறைக் காவல் தண்டனை விதிக்கப்பட்டதற்கு எதிராகக் கல்கத்தாவில் தேசிய உணர்வுள்ள இந்தியர்களிடையே ஆவேசக் கொந்தளிப்பு ஏற்பட்டது. அங்கே வெகுஜன ஆர்ப்பாட்டங்கள் பொது அரசியல் வேலை நிறுத்தமாக வளர்ந்தன. தொழிலாளர்களும் மாணவர்களும் வியாபாரிகளும் கம்மியர்களும் இதில் கலந்து கொண்டார்கள். நகரில் வீதித் தடையரண்கள் நிறுவப்பட்டன. போக்குவரத்து ஊழியர்கள், நகர் சுத்தித் தொழிலர்கள் ஆகியோரின் வேலைநிறுத்தம் காரணமாக

நகரில் குடி தண்ணீரும் விளக்கு வெளிச்சமும் இல்லாமல் போயின. போலீசாருடனும் படையினருடனும் மோதல்கள் நவம்பர் 22 முதல் 25ந் தேதி முடியத் தொடர்ந்து நடந்தன. ஆர்ப்பாட்டக்காரர்கள் பதிற்றுக் கணக்கில் கொல்லப்பட்டார்கள், நூற்றுக் கணக்கில் காயம் அடைந்தார்கள். ''நேத்தாஜியின்'' தமையனூர் சரச்சந்திர போஸ் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களின் தலையீடுதான் வேலைநிறுத்தத்தை இடை முறித்தது. எதிர்ப்பு இயக்கம் கல்கத்தாவிலிருந்து பம்பாய்க்கும் வேறு சில இந்திய நகரங்களுக்கும் பரவியது.

ஆயினும் காலனியாட்சி அதிகாரிகள் இந்தியத் தேசிய சேனையின் தளபதிகள் மீது வழக்கு தொடுப்பதையும் அவர்களைத் தண்டிப்பதையும் தொடர்ந்தார்கள். 1946, பிப்ரவரியில் இன்னொரு முஸ்லிம் அதிகாரி தண்டிக்கப்பட்டார். 1945, நவம்பர் நிகழ்ச்சிகள் கல்கத்தாவில் புது ஆற்றலுடன் மீண்டும் நடந்தன. பிப்ரவரி 11ந் தேதி வங்காள மாணவர் நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட ஹர்த்தால் புதிய பொது வேலைநிறுத்தத்தின் தொடக்கம் ஆயிற்று. இந்த வேலைநிறுத்தம் பிப்ரவரி 15ந் தேதி வரை தொடர்ந்தது. இதன் போது போலீசாருடன் கடுமையான சண்டைகள் நிகழ்ந்தன. வீதிகள் எங்கும் தடையரண்கள் எழுந்தன. கல்கத்தாவிலிருந்து இயக்கம் பம்பாய்க்கும் வட மேற்கு இந்தியாவின் வேறு பல பெரிய நகரங்களுக்கும் பரவியது. ஆங்கிலேயர்களிடையே கிலி தொடங்கியது. அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் கூட்டங்களையும் அடக்குவதற்குப் பெரும் படைப் பிரிவுகள் ஏவப்பட்டன.

இந்தியத் தேசிய சேனைக்கு ஆதரவான போராட்டங்களை இம்முறை காங்கிரஸ் மட்டும் இன்றி முஸ்லிம் லீகும் ஆதரித்தது. பிரிட்டிஷ்காரர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் இந்து-முஸ்லிம் கலகங்களை மூட்டி விட அவர்களால் முடியவில்லை.

1946ம் ஆண்டுத் தொடக்கத்தில் நாட்டில் பொருளாதார நிலைமை சீர்கேடு அடைந்ததால் வேலைநிறுத்த அலைகள் மீண்டும் ஏற்றம் பெற்றன. சமஸ்தானங்களிலும், உதாரணமாக மைசூரிலும் (தங்கச் சுரங்கங்கள்) குவாலியரிலும் (நெசவாலைகள்), தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபடத் தலைப்பட்டார்கள்.

வேலைநிறுத்தப் போராட்டத்தின் ஏற்றம் பின்வரும் அட்டவணையால் தெளிவாகப் புலப்படும்:

ஆண்டுகள்	வேலைநிறுத் தங்களின் எண்ணிக்கை	பங்கு கொண்ட வர்கள் தொகை, ஆயிரங்களில்	இழக்கப்பட்ட வேலை நாட்கள், லட்சங்களில்
1945	850	800	38
1946 (முதல் மூன்று மாதங்கள்)	426	580	30

கொந்தளிப்பு நாட்டுப்புறத்திலும் புகுந்து விட்டது. 1945ம் ஆண்டு இலையுதிர் காலத்திலேயே காலனியாட்சி அமைப்புக்கு எதிரான வெகுஜனப் போராட்டங்கள் சில சந்தர்ப்பங்களில் ஆக உயர்ந்த மட்டத்தை—ஆயுதப் போராட்டத்தின் தரத்தை—எட்டி விட்டன. 1946, பிப்ரவரியில் படைப் பிரிவுகள் இயக்கத்தில் ஈடுபடத் தொடங்கியதும் நிகழ்ச்சிகளின் உச்ச நிலை ஆரம்பம் ஆயிற்று.

கடற்படையில் எழுச்சி.
புரட்சி நிலைமை இந்தியாவில் உருவாதல்

பம்பாய்த் துறைமுகத்தில் தல்வார் (வாள்) என்ற கடற்படைப் பயிற்சிக் கப்பலின் மாலுமிகள் தாமாகவே திடீரெனக் கிளர்ச்சி செய்து தலைமை அதிகாரிகளிடம் உணவு மோசமாய் இருப்பதாக அறிக்கை செய்து கொண்டார்கள் (சாதாரணக் கடற்படையினருக்கு மணல் கலந்த சோறு கொடுக்கப்பட்டது). அறிக்கை செய்தவர்கள் மீது அடக்குமுறை நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளத் தலைமை அதிகாரிகள் முயற்சி செய்ததன் காரணமாகக் கடற்படையினர் பொது வேலைநிறுத்தம் செய்தார்கள். இந்த வேலைநிறுத்தம் பிப்ரவரி 18ந் தேதி தொடங்கியது. துறைமுகத்தில் இருந்த இருபது போர்க் கப்பல்களின் மாலுமிகள் அனைவரும் மறு நாள் தல்வாருடன் சேர்ந்து கொண்டார்கள். கடற்படையில் இன ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும் என்றும் கடற்படைப் பணிக்கான நிபந்தனைகள் ஆங்கிலக் கடற்படையினருக்கு உள்ளவை போன்றே இந்தியர்களுக்கும் இருக்க வேண்டும் என்றும் வசதிகள், முதன்மையாக உணவு வசதிகள் மேம்பட வேண்டும் என்றும் வேலைநிறுத்தம் செய்த கடற்

படையினர் கோரினர்கள். பிரிட்டிஷ் அதிகாரிகள் இந்தியக் கடற் படையினரை அவமதிப்புக்கு ஆளாக்கி வந்ததை அவர்கள் எதிர்த் தார்கள்.

கடற்படையினர் வேலைநிறுத்தக் கமிட்டியைத் தேர்ந்தெடுத்து, பிப்ரவரி 19ந் தேதி பம்பாயில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள். கடற் படையினரின் போராட்டம் அரசியல் தன்மையை மேற்கொள்ளலா யிற்று. படைப் பணி நிலைமைகளைச் சீர்திருத்துவது பற்றிய மேற் குறித்த கோரிக்கைகளோடு இன்னும் இரண்டை ஆர்ப்பாட்டக்காரர் கள் சேர்த்துக் கொண்டார்கள். அவையாவன: எல்லா அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும்; பிரிட்டிஷ்-இந்தியப் படைகள் இந்தோனீசியாவிலிருந்து வாபஸ் பெறப்பட வேண்டும்.

தேசியக் காங்கிரஸ், முஸ்லிம் லீக், கம்யூனிஸ்டுக் கட்சி ஆகிய வற்றின் மூன்று கொடிகளின் கீழ் ஆர்ப்பாட்டம் நடந்தது. முக்கிய ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள் யாவற்றையும் ஒன்று சேர்க்கும் முயற்சியை இது உருவகப்படுத்தியது.

எழுச்சியை அடக்குவதற்காகப் படைப் பிரிவுகள் பிப்ரவரி 20ந் தேதி பம்பாய்க்கு இட்டுவரப்பட்டன. வேலைநிறுத்தம் செய்த கடற் படையினர் தங்கள் நடவடிக்கைகளை ஒன்றிணைத்து ஐந்து பெயர் கொண்ட செயற்குழுவைத் தேர்ந்தெடுத்தார்கள்.

மறு நாள் பிரிட்டிஷ் படைகள் போர் நடவடிக்கைகள் தொடங் கின. பகல் முழுவதும் பம்பாயில் குண்டுகளும் எதிர்க் குண்டுகளும் சுடப்பட்டன, பீரங்கிச் சண்டை நடந்தது. போர் நடவடிக்கைகளின் போது எந்த ஒரு தரப்பும் உணர்வில் படத் தக்க மேம்பாடு பெற வில்லை. பகல் நான்கு மணிக்குப் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

எழுச்சி பற்றிய செய்தி விரைவில் நாடு முழுவதிலும் பரவியது, வேலைநிறுத்தம் செய்த பம்பாய்க் கடற்படையினருக்கு ஆதரவாகக் கராச்சியிலும் கல்கத்தாவிலும் சென்னையிலும் விசாகபட்டணத்திலும் இருந்த கடற்படையினரும் டில்லி, தாணே, பூனே ஆகியவற்றில் கரைப் பணி ஆற்றி வந்த கடற்படையினரும் செயல்பட்டார்கள். பிரிட்டிஷ்-இந்தியக் கடற்படை அனைத்திலும் எழுச்சி பரவும் அபாயம் ஏற் பட்டது.

விமானப் படை விமானிகளும், பம்பாய் விமான நிலைய ஊழியர் களும் இன ஏற்றத்தாழ்வு பாராட்டுவதை எதிர்த்தும் படைக் கலைப்பை விரைவுபடுத்துமாறு கோரியும் பிப்ரவரி மாதத் தொடக் கம் முதல் வேலைநிறுத்தம் செய்திருந்ததால் நிலைமை இன்னும் சிக்கல் ஆயிற்று. கல்கத்தாவையும் வேறு சில விமானப் படைத் தளங்களை யும் சேர்ந்த விமானிகள் அவர்களோடு சேர்ந்து கொண்டார்கள்.

பிரிட்டிஷ்-இந்தியத் தரைப் படையிலும் கடற்படையிலும் நடந்த

போராட்டங்கள் ஜனநாயகச் சக்திகளால் ஆர்வத்துடன் ஆதரிக்கப் பட்டன. கம்யூனிஸ்டுக் கட்சியின் அழைப்புக்கு இணங்க பிப்ரவரி 22ந் தேதியன்று பொது வேலைநிறுத்தமும் ஆர்ப்பாட்டங்களும் பொதுக் கூட்டமும் பம்பாயில் தொடங்கின. பம்பாய் உழைப்பாளி மக்களது போராட்டம் அமைதியான தன்மை கொண்டிருந்த போதி லும் அவர்களுக்கு எதிராகப் பெருத்த படை-போலீஸ் பிரிவுகள் கொண்டு வரப்பட்டன. இவை கொடுமையான தண்டனை நடவடிக் கைகள் எடுத்துக் கொண்டன. சுமார் முன்னூறு பெயர் கொல்லப் பட்டார்கள். 1,700 பெயர் காயம் அடைந்தார்கள்.

சேனையின் ஒத்துழைப்புடன் நடந்த ஆயுதப் போராட்டங்களும் அவற்றில் கம்யூனிஸ்டுகள் ஊக்கத்துடன் பங்கு கொண்டதும் காலனி யாட்சி நிர்வாகத்தை மட்டும் இன்றி முதலாளித்துவ-நிலப்பிரபுத் துவத் தேசிய நிறுவனங்களின் தலைமைக் குழுக்களையும் கலவரத்துக்கு உள்ளாக்கின. தேசியக் காங்கிரசினதும் முஸ்லிம் லீகினுடையவும் தலைவர்கள் கடற்படையினருக்குத் தங்கள் அனுதாபத்தைத் தெரி வித்து அவர்களுடைய முக்கியக் கோரிக்கைகளை ஆதரித்த அதே சமயத்தில் வேலைநிறுத்தத்தையும் அதிகாரிகளுக்கு எதிர்ப்பையும் கைவிட்டு விடும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். வேலை நிறுத்தக்காரக் கடற்படையினரின் செயற்குழுவுடன் பேச்சு வார்த் தைகள் நடத்துவதற்காகத் தேசியக் காங்கிரஸ் தலைமைக் குழுவின் சார்பில் வல்லபாய் படேல் பம்பாய் சென்றார்.

காங்கிரஸ், லீக் தலைவர்களின் வற்புறுத்தல் காரணமாக வேலை நிறுத்தக் கமிட்டி பிப்ரவரி 23ந் தேதி சரணடைந்தது. ஆயினும் நாட் டின் சில பிரதேசங்களில் கடற்படையினரதும் தரைப் படையினர தும் வேலைநிறுத்தங்கள் இன்னும் சில நாட்கள் தொடர்ந்து நடந்தன.

இந்தியப் படைப் பிரிவுகளில் நிகழ்ந்த போராட்டங்கள் இந்தியா வில் புரட்சி நிலைமை உரு ஆகி வந்ததைக் காட்டின.

இந்தியாவில் தொழிற் கட்சியினரின் கொள்கை. நாட்டைத் துண்டாடும் போக்கு

இந்தியாவில் நடந்த நிகழ்ச்சிகளின் நிர்ப்பந்தத்தால் தொழிற் கட்சி அரசாங்கம் நாட்டில் தேசிய விடுதலை இயக்கத்துக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழு பிப்ரவரி மாதம் இந்தியாவுக்குப் புறப்பட்டது. பிரிட்டனின் இந்தியா மந்திரி பெத்திக் லாரென்ஸ், கடல் துறை அமைச்சன் அலெக்சாந்தர், வர்த்தக அமைச்சன் கிரிப்ஸ் ஆகியோர் தூதுக் குழுவில் இருந்தார்கள். தொழிற் கட்சியினரின் இந்தியக் கொள்கை

பற்றிய இரண்டாவது அறிக்கையை 1946, மார்ச்சு 15ந் தேதி ஆட்லி பிரிட்டிஷ் மக்கள் மன்றத்தில் படித்தான். இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளிக்கப்படும் என்று இதில் அறிவிக்கப்பட்டிருந்தது. தேசிய விடுதலை இயக்கம் அனைத்து மக்கள் இயக்கம் என்றும் அதில் சேனை ஈர்க்கப்பட்டிருக்கிறது என்றும் தன் அறிக்கையில் ஆட்லி ஒப்புக் கொண்டான்.

மூன்று அமைச்சர் தூதுக் குழு மார்ச்சு முடிவில் இந்தியா சேர்ந்து தேசியக் காங்கிரஸ், முஸ்லிம் லீக் தலைவர்களுடன் நீடித்த பேச்சு வார்த்தைகள் நடத்தியது. பேச்சு வார்த்தைகள் ஏப்ரல் மாதம் முழுவதும் தொடர்ந்தன. 1946, ஏப்ரலில் நிறைவுற்ற மாகாணச் சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள் இரண்டு கட்சிகளதும் நிலைகள் மீது பாதிப்பு நிகழ்த்தின.

இந்தத் தேர்தல்களில் 13 சதவிகிதத்துக்கும் குறைவான மக்களே கலந்து கொண்டார்கள். இவை தொகுதிவாரியாக நடந்தன. மத-சமுதாய உறவுகளை அரசியல் வாழ்க்கையின் முன் அரங்கிற்குக் கொண்டுவர இவை வாய்ப்பு அளித்தன. தேசியக் காங்கிரஸ் எல்லா மாகாணங்களிலும் பொது (இந்துத்) தொகுதிகளில் முழுப் பெரும் பான்மை வாக்குகள் பெற்றது. முஸ்லிம் தொகுதிகளிலோ, வட மேற்கு எல்லைப்புற மாகாணத்தில் மட்டுமே அதற்குப் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன. முஸ்லிம் லீக் இந்துக்கள் பெரும்பான்மையினராக இருந்த எல்லா மாகாணங்களிலும் முஸ்லிம் தொகுதிகளில் பெரும் பான்மை வாக்குகள் பெற்றது. முஸ்லிம்கள் பெரும்பாலராய் இருந்த வங்காளத்திலும் அதற்குப் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன. முஸ்லிம் பெரும்பான்மை மாகாணங்களான பஞ்சாபிலும் சிந்திலும் முஸ்லிம் தொகுதி வாக்குகள் முஸ்லிம் லீகுக்கும் எதிர்த்தரப்பு வட்டாரக் கட்சிகளுக்கும் இடையே பகிர்ந்து கொள்ளப்பட்டன.

தேர்தல்கள் பின்வரும் உண்மைகளைக் காட்டின: முதலாவதாக, மிகப் பெரும்பாலரான வாக்காளர்கள் இந்தியாவின் ஒற்றுமையை நிலையாக வைத்திருப்பதை ஆதரித்தார்கள்; இரண்டாவதாக, முஸ்லிம் லீக் எழுப்பிய பாக்கிஸ்தான் கோஷம் முஸ்லிம் அல்லாதார் பெரும்பாலராய் இருந்த மாகாணங்களில் இருந்த முஸ்லிம் வாக்காளர்களில் பெரும்பாலருக்குக் கவர்ச்சியாக இருந்தது; மூன்றாவதாக, முஸ்லிம் லீக் இந்தியா முழுவதிலும் முஸ்லிம் சமுதாயத்தில் நிலையான இடம் பெற்று விட்டது.

தேசியக் காங்கிரஸ் மாகாணச் சட்டமன்றங்களில் 930 இடங்களைப் பெற்றது. முஸ்லிம் லீகுக்கு 497 இடங்கள் கிடைத்தன, ஆனால் வங்காளத்தில் மட்டுமே சர்க்கார் அமைக்க அதனால் முடிந்தது.

ஏற்கெனவே கூறப்பட்டது போல வாக்கு அளிக்கும் உரிமை

இந்திய மக்களில் சிறு பகுதியினருக்கே இருந்தது. எனினும் வாக்காளர்கள் யாவரிலும் அதிக அரசியல் உணர்வு பெற்ற மக்களை வழக்கமாகப் பிரதிநிதித்துவப்படுத்தினர்கள். பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதில் அவர்கள் நிர்ணயகரமான செல்வாக்கு செலுத்தினர்கள்.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி முதன் முறையாகத் தேர்தல்களில் பங்கு கொண்டது. அது தன் 108 வேட்பாளர்களை நிறுத்தியது. இவர்களில் 9 பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கம்யூனிஸ்டுக் கட்சி மொத்தம் 700 ஆயிரம் வாக்குகள் பெற்றது. தன் தேர்தல் அறிக்கையில் சமுதாய மாற்றங்கள் குறித்த விரிவான செயல்திட்டத்தைக் கட்சி முன்வைத்தது. இதன் அம்சங்களாவன: நிலப்பிரபுக்களின் நிலவுடைமை பறிமுதல் செய்யப்படும்; தொழில்துறையில் முக்கியக் கிளைகள் தேசிய உடைமை ஆக்கப்படும்; தொழிற்சாலைகள் மீது தொழிலாளர் கண்காணிப்பு முறை அமுலாக்கப்படும் முதலியன. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தேசிய இனப் பிரச்சினைக்கு ஜனநாயகத் தீர்வு காணுவதற்கும் ஜனநாயக முறையில் அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் வகை செய்யப்பட்டிருந்தது. போராட்டத்தின் இறுதிக் குறிக்கோள் நாட்டின் முழு சுதந்திரம் என்று அறிவிக்கப்பட்டது. கம்யூனிஸ்டுக் கட்சியின் நிலைகள் இன்னும் பலவீனமாக இருந்தன, ஆயினும் தேர்தல்களில் அது கலந்து கொண்டது இந்திய சமூகப் பிரதிநிதிகளின் விரிவான வட்டாரத்தினர் கம்யூனிஸ்டுகளின் கொள்கைவாதக் கருத்தோட்டங்களை அறிந்து கொள்ள உதவியது.

தேர்தல் முடிவுகள் இந்தியாவின் ஒற்றுமையை நிலையாக வைத்திருப்பது என்ற தேசியக் காங்கிரஸ் தலைமையின் உறுதியை வலுப்படுத்தியது போலவே பாக்கிஸ்தான் அமைக்கும் கருத்தைச் செயல்படுத்துவது என்ற முஸ்லிம் லீக் தலைமையின் உறுதியையும் வலுப்படுத்தின.

பேச்சு வார்த்தைகளின் போது பிரிட்டிஷ் தரப்பு காங்கிரசுக்கும் லீகுக்கும் இருந்த முரண்பாடுகளைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டது. பேச்சு வார்த்தைகள் முறிந்தன. 1946, மே 16ந் தேதி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அறிக்கை வெளியிடப்பட்டது. இந்தியா துண்டாடப்படும் கருத்து இதில் ஒப்புக்கு நிராகரிக்கப்பட்டிருந்தது என்றாலும் ஒன்றித்த டொமினியனில் இந்துப் பெரும்பான்மையினரால் விழுங்கப்படும் அபாயம் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு இருப்பது அதே சமயம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எனவே பிரிட்டிஷ் அரசாங்கம் பின்வரும் ''சமரசத்'' திட்டத்தைப் பிரேரித்தது:

1. இந்திய டொமினியன் மிக விரிவான சுயாட்சி பெற்ற மாநிலங்

களும் சமஸ்தானங்களும் சேர்ந்த கூட்டாக விளங்கும். தற்காப்பு, வெளி உறவுகள், போக்குவரத்து ஆகியவை குறித்த பிரச்சினைகள் மட்டுமே மைய அரசாங்கத்தின் அதிகார வரம்புக்குள் இருக்கும்.

2. பிரிட்டிஷ் இந்திய மாநிலங்கள் மூன்று மண்டலங்களாக இணைக்கப்படும்: முதலாவது, இந்துக்கள் பெரும்பாலராய் உள்ள மண்டலம். இந்தியாவின் வடக்கு, மத்திய, தெற்கு மாநிலங்கள் இதில் இருக்கும். இரண்டாவது, முஸ்லிம்கள் பெரும்பாலராய் உள்ள மேற்கு மண்டலம்—பஞ்சாப், சிந்து, வட மேற்கு எல்லைப்புற மாநிலம் ஆகியவை அடங்கியது. மூன்றாவது, முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட வங்காளமும் அஸ்ஸாமும் அடங்கிய கிழக்கு மண்டலம். ஒவ்வொரு மண்டலத்திலும் மண்டல அரசாங்கம் அமைக்கப்படும்.

3. மாநிலச் சட்ட மன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் சமஸ்தான மன்னர்களால் நியமிக்கப்பட்டவர்களுமான உறுப்பினர்கள் அடங்கிய அரசியல் நிர்ணய சபை அனைத்து இந்திய அரசியல் சட்டத்தைத் தயாரிக்கும். மூன்று மண்டலங்களின் அரசியல் சட்டங்களும் அந்தந்த மண்டலத்தின் மாநிலங்களைச் சேர்ந்த உறுப்பினர்களால் அரசியல் நிர்ணய சபையின் மூன்று பிரிவுகளில் தயாரிக்கப்படும்.

4. அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள் இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் என்ற மூன்று தொகுதிகளில் (பத்து லட்சம் மக்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற கணக்கில்) நடத்தப்படும். அரசியல் சட்ட மசோதாவின் ஒவ்வொரு விதியும் சபையினது முழுக் கூட்டத்தின் முழுமையான பெரும்பான்மையால் மட்டும் இன்றி இந்து, முஸ்லிம் தொகுதிகளின் உறுப்பினரது பெரும்பான்மையாலும் ஆமோதிக்கப்பட்டால் தான் உறுதிப்பட்டதாகக் கருதப்படும்.

அரசியல் நிர்ணய சபையின் வேலை நிலைமைகள் காங்கிரசுக்கும் லீகுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படுவதைக் கடினம் ஆக்கி முடிவில் அதை முறித்துவிடும் விதத்தில் அவற்றை உருவாக்க பிரிட்டிஷ் யோசனைகள் வகை செய்திருந்தன. இந்தியாவைக் கூறுகளாக்கிப் பாக்கிஸ்தான் அமைக்கும் முயற்சியில் முஸ்லிம் லீகுக்கு ஆதரவு அளிக்கும் போக்கை பிரிட்டிஷ் ஆளும் வட்டாரங்கள் மேற்கொண்டன என்பதற்கு—அவை எவ்வளவோ மூடி மறைத்த போதிலும்—இந்த விஷயம் சான்று பகர்ந்தது. முஸ்லிம் லீகின் செயல்திட்டம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்குப் பொருந்தியது. இந்தியாவைக் காலனியாக வைத்திருக்க இப்போது முடியாமையால் நாட்டைப் பொருளாதார நோக்கிலும் இராணுவ நோக்கிலும் ஒரேயடியாகப் பலவீனப்படுத்தி முந்திய ஆட்சித் தலைமை நாட்டை அது சார்ந்திருப்பதற்கு வேண்டிய அடிப்படையை ஏற்படுத்த வல்ல

அரசியல் தீர்வு காண்பதற்குப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சூழ்ச்சி செய்தது.

இந்தியாவின் வருங்கால அந்தஸ்து குறித்த பிரச்சினையை வேறு வழியில் தீர்ப்பதற்குத் தடைகள் விளைப்பவையும் ''ஆட்சி அதிகாரத்தை ஒப்படைப்பதை'' எல்லா வகையிலும் இழுத்தடிப்பவையுமான நடவடிக்கைகளைக் காலனியாட்சி நிர்வாகம் அதே சமயம் மேற்கொண்டது.

விடுதலை அடையும் வழியில்

தாற்காலிக அரசாங்கம் அமைக்கப்படுதல். உள் அரசியல் சூழ்நிலை மேலும் உக்கிரம் ஆகிறது

மூன்று அமைச்சர்கள் தூதுக் குழுவினது யோசனைகள் பற்றிக் காங்கிரசும் லீகும் மேற்கொண்ட போக்கு ஒரே மாதிரியாக இல்லை. முஸ்லிம் லீக் தலைமைக் குழு பிரிட்டிஷ் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்ததுடன், வேவலால் மே 16ந் தேதி அறிவிக்கப்பட்டிருந்த தாற்காலிக அரசாங்கத்தில் பங்கு கொள்ளவும் இசைவு தெரிவித்தது. தாற்காலிக அரசாங்கம் தொகுதி அடிப்படையில் அமைக்கப்படும் என்றும் முஸ்லிம் தொகுதி வேட்பாளர்களை முஸ்லிம் லீக் மட்டுமே நிறுத்தும் என்றும் அதற்கு இணங்க இந்துத் தொகுதி வேட்பாளர்களைத் தேசியக் காங்கிரஸ் நிறுத்தும் என்றும் அனுமானிக்கப்பட்டது. இந்த வாய்ப்புக்கள் முஸ்லிம் லீகுக்குக் கவர்ச்சியாய் இருந்தன.

தன் மதச் சார்பற்ற தன்மையை வலியுறுத்திய காங்கிரஸ் மேற்குறித்த கடைசி நிபந்தனையை நிராகரித்து விட்டது. காங்கிரஸ் தலைவர்கள் தூதுக் குழுவினரோடும் வைசிராயுடனும் அதிகப்படி பேச்சுவார்த்தைகள் நடத்தி, பிரிட்டிஷ் யோசனைகளில் சில மாறுதல்களைப் புகுத்த முயன்றார்கள். ஆனால், தூதுக் குழுவின் திட்டம் ஒன்றை முழுமையாக ஏற்கப்பட வேண்டும், இல்லாவிட்டால் நிராகரிக்கப்பட வேண்டும் என்று விளக்கம் தரப்பட்டதும் அரசியல் சட்டம் தயாரிப்பதற்கான அடிப்படையாகப் பிரிட்டிஷ் யோசனைகளை ஏற்றுக் கொள்வது காங்கிரஸ் தலைமைக் குழுவுக்குக் கட்டாயம் ஆகிவிட்டது.

அரசியல் நிர்ணய சபைக்குப் பொறுப்பு அற்ற வைசிராயின் செயலாட்சிக் கவுன்சில் போன்று அமைக்கப்பட்ட தாற்காலிக அரசாங்கத்தில் உறுப்பு ஏற்கக் காங்கிரஸ் மறுத்து விட்டதால் அரசாங்கம் அமைக்கும் யோசனையை ஒப்புக்கொள்வதாக லீக் அறிவித்தது. ஆனால் வைசிராய் லீகின் யோசனையை நிராகரித்து விட்டு அரசாங்க அலுவலர்களைக் கொண்டு செயலாட்சிக் கவுன்சில் அமைத்தான்.

இந்த நிலைமைகளில், தாற்காலிக அரசாங்கத்தில் மட்டும் இன்றி, அரசியல் நிர்ணய சபையின் நடவடிக்கைகளிலும் முஸ்லிம் லீக் பங்கு கொள்ளாது என்று அதன் கவுன்சில் அறிவித்தது. பாக்கிஸ்தானுக்காக நேர்முகப் போராட்டம் நடத்தப் போவதாக லீக் பிரகடனம் செய்தது.

அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்தல்கள் ஜூன் மாதம் நடந்தன. ஆயினும், காங்கிரசைத் தவிர இரு பெரிய குழுக்களான முஸ்லிம் லீகும் சீக்கியரும் சபையின் நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்தமையால் அதன் கூட்டம் தொடங்குவதில் சங்கடம் ஏற்பட்டது. இந்த நிலை பிரிட்டிஷாரின் நலன்களுக்குப் பொருத்தமாக இருந்தது. வட மேற்கு எல்லைப்புற மாநிலத்தையும் அஸ்ஸாமையும் சேர்ந்த உறுப்பினர்களில் பெரும்பாலோர் மத-வகுப்புவாத நோக்கில் நாட்டைப் பிரிவுபடுத்துவதற்கு எதிரிகளாய் இருந்தார்கள். கிழக்கு, மேற்கு ''முஸ்லிம்'' மண்டலங்கள் அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த இது இடைஞ்சலாய் இருந்தது.

ஜூன் மாதம் ஆஸாதின் இடத்தில் ஜவாகர்லால் நேரு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உதவிப் பிரதமர் என்ற முறையில் வைசிராயின் செயலாட்சிக் கவுன்சிலின் அதிகாரம் பெற்ற தாற்காலிக அரசாங்கத்தை அமைக்கும்படி வைசிராய் (அவன் அரசாங்கத் தலைவனாக இருந்து வந்தான்) நேருவைக் கேட்டுக் கொண்டான். இந்த வேண்டுகோள் ஏற்கப்பட்டது. ஆகஸ்டு 24ல் புதிய செயலாட்சிக் கவுன்சிலின் உறுப்பினர் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. நேரு உதவிப் பிரதமராய் இருந்தார். பிரபலக் காங்கிரஸ் தலைவர்களான வல்லபாய் படேல், ராஜேந்திர பிரசாத் ஆகியோரும் பிறரும், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பார்சிகள் ஆகிய மதத்தினரின் பிரதிநிதிகளும் அமைச்சர்கள் ஆனார்கள்.

தாற்காலிக அரசாங்கத்தின் அதிகாரம் வரம்புக்கு உட்பட்டதாக இருந்தாலும் அதன் கொள்கை காலனியாட்சி நிர்வாகத்தின் கொள்கைக்கு முற்றிலும் மாறுனது என்பதை அதன் முதல் நடவடிக்கைகள், சிறப்பாக அயல் நாட்டுக் கொள்கைத் துறையில், காட்டின.

அரசாங்கம் அமைக்கப்பட்டதால் முஸ்லிம் லீக் பெருத்த ஆத்திரம் அடைந்தது. இந்த நிகழ்ச்சியை முஸ்லிம்களுக்குப் பிரிட்டிஷ் காரர்கள் இழைத்த துரோகம் என்று ஜின்னு மதித்தார். பாக்கிஸ்தானுக்காக நேர்முகப் போராட்டத்தின் தொடக்க நாளாக ஆகஸ்டு 16ந் தேதியை அவர் அறிவித்தார். கல்கத்தாவில் பேரளவான இந்து-முஸ்லிம் கலகங்கள் மூண்டிவிடப்பட்டன. பீகாரையும் வங்காளத்தையும் சேர்ந்த அண்டைப் பிரதேசங்களுக்கு இந்தக் கலகங்கள் பரவின. பம்பாயிலும் கலகங்கள் தொடங்கின.

காந்தி கலகங்களைக் கடுமையாகக் கண்டனம் செய்தார். இந்து-முஸ்லிம் பூசல்கள் நிகழ்ந்த இடங்களுக்கு அவர் சென்றார். தற்காப்புப் படைப் பிரிவுகள் அமைப்பதை அவர் ஆதரித்தார். வழக்கமாகக் கம்யூனிஸ்டுகளும் பிற ஜனநாயகவாதிகளுமே இத்தகைய படைப் பிரிவுகளை அமைத்தார்கள்.

செப்டெம்பர் மாதம் லீக் தாற்காலிக அரசாங்கத்தில் பதவி ஏற்றது, ஆனால் அரசியல் நிர்ணய சபையைத் தொடர்ந்து பகிஷ்கரித்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு வருங்கால அரசியல் சட்ட விதிகளை உறுதிப்படுத்தும் வாக்களிப்பு முறையில் மாறுதல் செய்யலாம் என யோசனை தெரிவித்தது. எந்த மாநிலங்களின் பெரும்பாலான உறுப்பினர்கள் சபைக் கூட்டத்தில் பங்கு கொள்ளவில்லையோ அவற்றில் அரசியல் சட்டம் செல்லாது என்பது இந்த மாறுதல். ஒன்றித்த இந்தியாவை நிலையாக வைத்திருப்பது பற்றிய, நேரு வற்புறுத்தி வந்த தீர்மானம் அரசியல் நிர்ணய சபையில் ஏற்கப்படுவதைக் குலைப்பதற்கான வாய்ப்பை இது முஸ்லிம் லீகுக்கு அளித்தது.

யுத்தத்துக்குப் பின் தேசியக் காங்கிரசின் முதலாவது மகாநாடு 1946ம் ஆண்டு அக்டோபர் மாதம் மீரட் நகரில் நடந்தது. ஆச்சாரிய கிருபளானி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மகாநாடு தேசியக் காங்கிரஸ் தலைமைக் குழுவின் அரசியல் கொள்கைப் போக்குக்கு ஒப்புதல் அளித்தது. இந்தியா அரசுரிமை பெற்ற குடியரசாக மாற்றப்பட வேண்டும் என்று அது கருத்து தெரிவித்தது.

1946, டிசம்பர் மாதம் அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் நேரு இதே பிரேரணையை முன்வைத்தார். ஆனால் இந்திய யூனியனைச் சேர்ந்த சமஸ்தானங்களில் முடியரசு முன்போல இருந்துவரலாம் என்று அவர் கூறினார்.

1946லும் 1947ன் துவக்கத்திலும் வெகுஜனப் போராட்டம் தீவிரமடைதல்

ஆனால் பின்வாங்கும் கடைசி அடி எடுத்து வைக்கும்படிக் காலனி ஆட்சி அமைப்பைக் கட்டாயப்படுத்தியவை உழைப்பாளி மக்களின் ஆற்றல் மிக்க போராட்டங்களே தவிர தேசியக் கட்சிகளின் அரசியல் யுக்திகள் அல்ல. 1946லும் 1947லும் நாட்டில் பொருளாதார நிலைமை தொடர்ந்து மோசம் ஆகிக் கொண்டு போயிற்று. நகரத்திலும் நாட்டுப்புறத்திலும் வெகுஜனப் போராட்டங்கள் மேற்கொண்டு வளர்வதற்கு இது தூண்டுதல் அளித்தது.

தென் இந்திய, வட மேற்கு இருப்புப் பாதைகளிலும் வங்காளம்,

சென்னை, நாகபுரி, கோயம்புத்தூர் ஆகியவற்றிலும் பிற இயந்திரத் தொழில்துறை மையங்களிலும் இருந்த ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் 1946ம் ஆண்டுக் கோடையிலும் இலையுதிர் காலத்திலும் சில பெரிய வேலைநிறுத்தங்கள் நடந்தன. திருவிதாங்கூரிலும் கொச்சியிலும் செப்டெம்பர் முதல் நவம்பர் முடியத் தென்னைப் பண்ட (கயிறும் கொப்பரையும்) தயாரிப்புத் தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தம் செய்தார்கள். இந்த வேலைநிறுத்தத்தின் போது புன்னப்புரா, வயலார் பிரதேசங்களில் போலீசாருடன் ஆயுதப் பூசல்கள் நேர்ந்தன. இவ்வாறு வேலைநிறுத்த இயக்கம் மற்ற சமஸ்தானங்களுக்கும் பரவி, மைசூரிலும் ஹைதராபாதிலும் ஆகப் பெரிய அளவை எட்டியது.

1946ம் ஆண்டில் மொத்தம் இரண்டாயிரத்துக்கும் மேல் பதிவு செய்யப்பட்ட வேலைநிறுத்தங்கள் நடந்தன. இவற்றில் ஏறக்குறைய இருபது லட்சம் தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள். ஒரு கோடி முப்பது லட்சம் வேலை நாட்கள் இழக்கப்பட்டன. 1947ம் ஆண்டின் முதல் பாதியிலும் வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்ந்தது. கான்பூரிலும் கல்கத்தாவிலும் யாவற்றிலும் கொந்தளிப்பு மிக்க நிகழ்ச்சிகள் நடந்தன. வேலைநிறுத்தக்காரத் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் மீது இந்த இடங்களில் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்கள். இரு நகரங்களிலும் கடையடைப்புக்கள் நடந்தன.

1946ல் கிராமங்களும் போராட்டங்களில் கலந்து கொண்டன. விவசாயிகளின் தன்னியல்பான போராட்டங்கள் எல்லா மாநிலங்களிலும் மூண்டன. சில பிரதேசங்களில் இவை நிலப்பிரபுக்களுடனும் போலீசாருடனும் ஆயுதமேந்திய சண்டைகளாக வளர்ந்தன. ஐக்கிய மாகாணத்தில் மிகக் கடுமையான போராட்டம் பஸ்தி, பலியா மாவட்டங்களில் நடந்தது. இங்கே நிலச் சீர்திருத்தங்களை எதிர்பார்த்து ஜமீன்தார்கள் நிலங்களிலிருந்து குத்தகைக்காரர்களைத் திரளாக வெளியேற்றத் தலைப்பட்டிருந்தார்கள். இந்த நடவடிக்கைக்கு எதிராகக் குத்தகைக்காரர்கள் போராடினர்கள். சீர்திருத்தத்திற்கான முன்னேற்பாடு 1946ல் தொடங்கியது.

வங்காளத்தில் திபாக் (மூன்றில் ஒரு பங்கு) இயக்க நெருப்பு நாளுக்கு நாள் அதிக உக்கிரமாக மூண்டு எரிந்தது. குத்தகை விளைச்சலில் மூன்றில் ஒரு பங்காகக் குறைக்கப்பட வேண்டும் என்று குத்தகைக்காரர்களும் பாட்டக்காரர்களும் (பர்காதார்களும் அதியார்களும்) நடத்திய போராட்டம் இது. மாநிலத்தின் பதினெரு மாவட்டங்களில் இந்த இயக்கம் பரவியது. தண்டனைப் படைப் பிரிவுகளுக்கும் நிலப்பிரபுக்களின் கைக்கூலிகளுக்கும் (குண்டாக்கள்)

எதிரான உண்மையான கொரில்லாப் போராக இது மாறிவிட்டது. இயக்கத்தில் ஏறக்குறைய 50 லட்சம் பெயர் பங்கு கொண்டார்கள். பாட்டக்காரர்களின் உரிமைகளைக் காக்கும் சட்டம் 1946ல் வங்காளச் சட்ட மன்றத்தில் நிறைவேறிய பின்பே இயக்கம் நிறுத்தப்பட்டது.

பஞ்சாபில் விவசாயிகள் இயக்கத்தின் மையமாக விளங்கியது லயால்பூர் மாவட்டம். குத்தகை குறைக்கப்பட வேண்டும் என்றும் விவசாயிகள் கடன்களைச் செலுத்துவதற்குத் தவணை ஒத்திவைக்கப் பட வேண்டும் என்றும் கோரி இங்கே குத்தகைக்காரர்கள் கிஸான் சபாவின் தலைமையில் போராட்டம் நடத்தினர்கள். பம்பாய் மாநி லத்தில் வார்லி இனக் குழுவினர் நடத்திய போராட்டம் வட்டித் தொழிலருக்கு எதிர்ப்புத்தன்மை கொண்டிருந்தது. இதன் பயனாக ஓராயிரத்துக்கு மேல் வார்லிகள் வட்டார வட்டித் தொழிலர்களான சாவ்கார்களிடம் கடனுக்காக அடிமைப்பட்டிருப்பதிலிருந்து விடு விக்கப்பட்டார்கள்.

ஆனல் விவசாயிகள் இயக்கம் ஆக உயர்ந்த மட்டத்தை எட்டியது தெலிங்கானவில் (ஹைதராபாது சமஸ்தானத்திலுள்ள மாவட்டம், தெலுங்கு பேசும் மக்களைக் கொண்டது). இங்கே நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறை மத, தேசிய இன வகை ஒடுக்குமுறையுடன் சேர்ந் திருந்தது.

சூரியப்பேட் என்னும் கிராமத்தில் தன்னியல்பாகத் தொடங்கிய தெலிங்கானு விவசாயிகள் கிளர்ச்சி விரைவில் பிரமாண்டமான நிலப்பரப்பில் பரவியது. இந்த நிலப்பரப்பில் ஹைதராபாது நிஜா மின் நிர்வாகத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது, மக்கள் ஆட்சி உறுப்புக்களான பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தப்பட்டன. விவசாயி கள் தலைவனது இறுதிச் சடங்கின் போது சவ ஊர்வலத்தின் மீது போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதே கிளர்ச்சி மூளக் காரணம் ஆயிற்று. கிளர்ச்சி நடக்கையில் தற்காப்புப் படைப் பிரிவுகள் அமைக் கப்பட்டன.

ஹைதராபாது தவிர காச்மீரத்திலும் சமஸ்தான மன்னனது ஆட் சிக்கு எதிராகப் பெரும் போராட்டங்கள் 1946ல் நடந்தன. இங்கே, மன்னனுடைய நிர்வாகத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண் டும் என்று கோரி வெகுஜன ஆர்ப்பாட்டங்கள் நகரங்களில் தொடங் கின. ''ஜம்மு-காச்மீர மகாநாடு'' என்னும் கட்சி இவற்றை ஒழுங்க மைத்து நடத்தியது. ''காச்மீரத்திலிருந்து வெளியேறு!'' என்ற கோஷம் விரைவில் கிராமங்களிலும் மக்களால் விரும்பப்படலாயிற்று. கிராமங்களில் வெகுஜன வரி கொடா இயக்கம் தொடங்கிற்று.

அதிகாரிகள் எதிர்த்தரப்பினருக்கு எதிராகக் கொடிய அடக்கு முறைகளைக் கையாண்டார்கள். ''மகாநாடு'' மறைமுக நடவடிக்கை

கள் தொடங்கியது. அதன் தலைவர் ஷேக் அப்துல்லா கைது செய்யப் பட்டார்.

காச்மீர மன்னரும் சமஸ்தான நிர்வாகத் தலைமை அதிகாரிகளும் இந்துக்கள். எதிர்த்தரப்பினரோ முஸ்லிம் சமுதாயத்தினர். இந்தக் காரணத்தால் காச்மீரத்தில் நிலைமை சீர்கேடு அடைந்தது, எஞ்சிய இந்தியாவில் இந்து-முஸ்லிம் உறவுகளது வளர்ச்சிக்குத் தீங்கு விளைத் திருக்கக் கூடும். எனவே நேரு தாமே 1946, ஜூன் மாதம் காச்மீரம் போய்ச் சேர்ந்தார். சமஸ்தானப் போலீஸ் உடனே அவரைக் கைது செய்தது. சமஸ்தானத்தில் இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காகப் பொது ஹர்த்தால் நடந்தது. நேருவை விடுவிப்பதற்காகவும் சூழ் நிலையைச் சற்று சீர்படுத்துவதற்காகவும் வைசிராய் தலையிட வேண் டும் என்று கோரப்பட்டது.

காச்மீரத்தையும் ஹைதராபாதையும் தவிர ராஜபுதனத்திலும் மத்திய இந்தியாவிலும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டங் கள் (கணிசமாகக் குறைந்த அளவில்) நடைபெற்றன.

இந்தச் சூழ்நிலையில், அரசியல் நிர்ணய சபையில் சமஸ்தானங் களின் பிரதிநிதித்துவ முறையைப் பற்றி சமஸ்தான மன்னர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக ஒரு விசேஷக் கமிட்டியைக் காங்கிரஸ் 1947, ஜனவரியில் அமைத்தது. அவற்றின் பாதிப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றும் மறு பாதிப் பெயர் மன்னர்களால் நியமிக்கப்படுவார்கள் என்றும் ஒப்பந்தம் ஏற்பட்டது. 1947, ஏப்ரலில் ''பிரஜா பரிஷத்'' பிரதிநிதிகளின் மகாநாடு குவா லியரில் நடந்தது. விடுதலைக்கான பொது ஜனநாயகப் போராட்டத் தில் சமஸ்தான மக்கள் செயலூக்கத்துடன் ஈடுபட்டு விட்டதை இந்த நிகழ்ச்சி காட்டியது.

மவுண்ட்பேட்டன் திட்டமும் இந்தியாவின் பிரிவினையும். இரு டொமினியன்கள் உருவாதல்

நாட்டில் புரட்சி நிலைமை உருவாயிற்று. இந்திய முதலாளி வர்க் கத்தினுடையவும் நிலப்பிரபுக்களுடையவும் பிரதிநிதிகளிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைப்பதில் மேற்கொண்டு தாமதம் செய்வதால் நிலைமை சீர்கேடு அடைந்து இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உருவாக்கி இருந்த அரசியல் அமைப்பு திரளான மக்களின் ஆயுத மேந்திய தாக்குதலால் நொறுங்கிச் சிதறிவிடும் என்பது கண்கூடாய் இருந்தது.

இந்தியாவில் தொழிற் கட்சி அரசாங்கத்தின் கொள்கை பற்றிய மூன்றாவது அறிக்கையை 1947, பிப்ரவரி 20ந் தேதி ஆட்லி வெளி யிட்டான். பிரிட்டிஷ்காரர்கள் 1948, ஜூலைக்கு மேல் தாமதிக்காமல்

இந்தியாவிலிருந்து வெளியேறி விடுவார்கள் என்றும் அந்தக் காலத்துக்குள் மத்திய சர்க்கார் அமைக்கப்படவில்லை என்றால் ஆட்சி அதிகாரம் மாநிலங்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. பிரிட்டிஷ் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகப் புதிய வைசிராய் மவுண்ட்பேட்டன் நியமிக்கப்பட்டான்.

தேசியக் காங்கிரசும் முஸ்லிம் லீகும் அறிக்கையை ஆமோதித்தன. அப்போது, இரு கட்சிகளுக்கும் இடையே உறவுகளைச் சிக்கல் ஆக்கும் பொருட்டு பிரிட்டிஷ்காரர்கள் இந்துமுஸ்லிம் கலகங்களை மூட்டி விட்டார்கள். பஞ்சாபில், இந்தியாவின் ஒற்றுமையை ஆதரித்தவர்களுடைய மாநில அரசாங்கத்துக்கு எதிராக முஸ்லிம் லீக் ஆர்ப்பாட்டம் நடத்திய போது இந்து-முஸ்லிம் பூசல்கள் சிறப்பாகக் கடுமை ஆயின.

இந்தியாவிலிருந்து வெளியேறித் தீர வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நாட்டில் தன் நிலைகளை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் இந்தியாவைத் துண்டு போட ஏற்பாடுகள் செய்தது. மவுண்ட்பேட்டன் ஏப்ரல் மாதம் இந்தியா வந்து சேர்ந்தான். இந்தியாவை இரண்டு டொமினியன்களாகப் பிரிக்கும் ''மவுண்ட்பேட்டன் திட்டம்'' ஜூலை 3ந் தேதி பிரகடனம் செய்யப்பட்டது. திட்டத்தின் சுருக்கம் வருமாறு:

1. இந்திய யூனியன், பாக்கிஸ்தான் என்னும் இரண்டு டொமினியன்கள் இந்தியாவில் அமைக்கப்படும்.

2. மத அடிப்படையில் வங்காளத்தையும் பஞ்சாபையும் பிரிக்கும் பிரச்சினை இந்த மாநிலங்களில் இந்துக்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மை வகிக்கும் பகுதிகளைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களின் தனித்தனி வாக்களிப்பின்படி தீர்க்கப்படும்.

3. பெரும்பாலும் முஸ்லிம்கள் வசிக்கும் வட மேற்கு எல்லைப்புற மாநிலத்திலும் சில்ஹட் மாவட்டத்திலும் (அஸ்ஸாம்) பொது மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

4. சிந்து மாநிலச் சட்ட மன்ற வாக்கெடுப்பு மூலம் அதன் விதி முடிவு செய்யப்படும்.

5. சமஸ்தானங்கள் ஏதேனும் ஒரு டொமினியனில் சேர்வது அவற்றின் மன்னர்களது அதிகார வரம்புக்கு உட்பட்டதாய் இருக்கும்.

6. அரசியல் நிர்ணய சபை இரு டொமினியன்களின் அரசியல் நிர்ணய சபைகளாகப் பிரிக்கப்படும்; அவை இரு அரசுகளதும் வருங்கால அந்தஸ்தைத் தீர்மானிக்கும்.

பிரிட்டிஷ்காரர்கள்—லீகின் ஆதரவுடன்—எல்லா விதமுறைகளையும் கையாண்டு நாட்டைக் கட்டாயம் துண்டு போட்டு விடுவார்

கள் என்பதைத் தேசியக் காங்கிரஸ் புரிந்து கொண்டது. எனவே, புதிய இரத்தப் பெருக்குகளைத் தவிர்க்கும் பொருட்டு ''மவுண்ட் பேட்டன் திட்டத்தை'' ஏற்க அது இசைந்தது.

1947ம் ஆண்டு ஜூன் மாதம் கூடிய அனைத்து இந்தியக் காங்கிரஸ் கமிட்டி 61க்கு எதிராக 157 வாக்குகளால் பிரிட்டிஷ் யோசனையை ஏற்றது.

அதே சமயம் முஸ்லிம் லீக் கவுன்சில், முழு வங்காளமும் முழுப் பஞ்சாபும் பாக்கிஸ்தானில் சேர்க்கப்பட வேண்டும் என்ற அதிகப் படிக் கோரிக்கையை விடுத்தது.

பஞ்சாபிலும் வங்காளத்திலும் வாக்கெடுப்பின்போது ''இந்து'' மாவட்டங்களைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் காங்கிரஸ் தீர்மானத்துக்கு இணங்க மாநிலங்களின் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்தார்கள். ''முஸ்லிம்'' மாவட்டங்களைச் சேர்ந்த உறுப்பினர்களோ வங்காளமும் பஞ்சாபும் முழுமையாக வைத்திருக்கப்படுவதற்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.

சிந்து மாநிலத்தில் நடந்த சட்ட மன்ற வாக்களிப்பும் சில்ஹட்டியிலும் வட மேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் நடந்த பொது மக்கள் வாக்கெடுப்புக்களும் அவை பாக்கிஸ்தானில் சேர்வதற்கு ஆதரவாக முடிந்தன. சுதந்திரப் புஷ்தூனிஸ்தான் அமைக்கப்படும் பிரச்சினை பொது மக்கள் வாக்கெடுப்பில் சேர்க்கப்பட வேண்டும் என்று செஞ்சட்டையினர் தலைவரான அப்துல் கபார்கான் விடுத்த கோரிக்கையை வைசிராய் நிராகரித்து விட்டான். வாக்குரிமை பெற்றிருந்த 15 சதவிகிதம் மக்களில் மிகப் பெரும்பாலோர் பாக்கிஸ்தானில் சேர ஆதரவாய் இருந்தார்கள்.

1947, ஆகஸ்டில் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ''மவுண்ட்பேட்டன் திட்டத்தை'' இந்திய சுதந்திரச் சட்டமாக உறுதிப்படுத்தியது. அதே ஆண்டு ஆகஸ்டு 17ந் தேதி இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தது.

அன்றைய தினம் ஜவாகர்லால் நேரு இந்தியாவின் தேசியக் கொடியை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த டில்லிச் செங்கோட்டை மீது பறக்க விட்டார். இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களின் பல தலைமுறையினர் ஆற்றிய அருஞ்சமர் வெற்றிகரமாக நிறைவுற்றது. தேசியப் புரட்சியின் வெற்றியுடன் இந்திய வரலாற்றில் புதிய காலப் பகுதி—சுதந்திர வளர்ச்சிக் காலப் பகுதி—தொடங்கியது.

இந்திய யூனியன் டொமினியன்

சுதந்திரப் பாதையில் முதல் அடிவைப்புகள்

இந்தியா டொமினியனுகப் பிரகடனம் செய்யப்பட்டதால் அதன் அரசு-சட்ட அந்தஸ்தில் அடிப்படையான மாறுதல்கள் நிகழ்ந்தன. முன்னுள் பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களும் சமஸ்தானங்களும் கூட்டரசு அடிப்படையில் ஒன்று சேர்ந்ததால் உருவான இந்திய யூனியனின் நிலப்பரப்பில் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தால் பிறப் பிக்கப்பட்ட சட்டங்களின் அமுல் படிப்படியாக நிறுத்தப்பட்டது. அரசியல் நிர்ணய சபை வேலை தொடங்கியது. காங்கிரஸ் தலைவர் களில் ஒருவரும் காந்தியின் ஒரு துணைவருமான ராஜேந்திர பிரசாத் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுதந்திர இந்தியாவின் முதல் அரசாங்கத்துக்குத் தலைமை தாங் கினர் நேரு. வெளி விவகார அமைச்சராகவும் தற்காப்பு அமைச்சரா கவும் அவர் ஒரே நேரத்தில் பணியாற்றினர். அமைச்சர்களில் பெரும் பாலோர் இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களாய் இருந்தார்கள். இவர்கள் தவிர, ''தீண்டத்தகாதவர்'' சம்மேளனத் தின் தலைவரான பி. ஆர். அம்பேத்கர் நீதி அமைச்சராகவும் இந்து மகாசபைத் தலைவர் சியாமா பிரசாத் முகர்ஜி தொழில்துறை, சப்ளை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்கள்.

''தேசிய ஒருமுனைப்பாடு'' அரசாங்க உறுப்பினர் குழு, சுதந் திரம் பெற்ற முதல் ஆண்டுகளில் நாட்டில் உருவாகி இருந்த சமு தாய-அரசியல் சக்திகளின் அணி வரிசையைப் பிரதிபலித்தது. நேரு பிரதமராக இருந்தார், காங்கிரசில் இருந்த இடதுசாரியினரின் ஆதர வைப் பெற்றிருந்தார், ஆயினும் அரசாங்கத்தில் மிதவாதப் பழமைப் பற்றுள்ள சக்திகளின் செல்வாக்கு மேலோங்கி இருந்தது. உள்துறை அமைச்சராகவும் துணைப் பிரதமராகவும் வல்லபாய் படேல் நியமிக் கப்பட்டார். இந்தச் காலத்துக்குள் அவர் காங்கிரஸ் தலைமையில் வலதுசாரிக் குழுவின் மதிக்கப் பெற்ற தலைவராக விளங்கினர். முக்கியமான பொருளாதார அமைச்சகங்கள்—நிதி, வர்த்தக அமைச்

சகங்கள்—முறையே சிந்தாமண் தேஷ்முக், டி. டி. கிருஷ்ணமாச்சாரி இருவரதும் பொறுப்பில் இருந்தன. இவர்கள் இந்தியப் பெரு மூலதனத்துடன் தொடர்பு கொண்டவர்கள்.

1946ல் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலச் சட்ட மன்றங்களும் அவற்றுக்குப் பொறுப்பு உள்ளவையாக இருந்த மாநில அரசாங்கங்களும் ஆட்சிக்கு வந்த முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவக் கூட்டணியின் நலன்களைப் பிரதிபலித்தன.

நிர்வாக இயந்திரத்தையும் இராணுவத்தையும் இந்தியமயம் ஆக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வது புதிய அரசாட்சி அதிகாரத்தின் உடனடிப் பணியாக இருந்தது. இதனால் சுதந்திர இந்தியாவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைமீது பிரிட்டிஷ் செல்வாக்கு வெகுவாகக் குறைந்தது. பிரிட்டிஷ் படைகளின் கடைசிப் பிரிவுகள் 1948, பிப்ரவரி மாதம் இந்தியாவிலிருந்து வெளியேறுமாறு செய்ய இந்திய அரசாங்கத்துக்கு இயன்றது. எனினும் 1949ம் ஆண்டில் கூட, மைய நிர்வாக அமைப்பில், முதன்மையாக அரசாங்கத் தூதரகப் பணிகளில், ஏறக்குறைய ஓராயிரம் பிரிட்டிஷ் அலுவலர்கள் இருந்து வந்தார்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவில் தன் நிலைகளை முடிந்த வரை காப்பாற்றிக் கொள்ள முயன்றது. இதன் பொருட்டு அது நிர்வாக இயந்திரத்தில் இருந்த தன் நேர்முக ஏஜெண்டுகள் குழுவை மட்டும் நம்பி இருக்கவில்லை, முதன்மையாகச் சமஸ்தானங்களையும் பயன்படுத்திக் கொண்டது. சுதந்திரப் பிரகடனத்துக்குப் பிறகும் இவற்றில் மன்னர்களின் நிர்வாகம் முன்போலவே நடந்து வந்தது. எனவே சமஸ்தானங்களை டொமினியனுடன் சேர்த்துக் கொள்ளும் நிகழ்முறையை விரைவுபடுத்துவது புதிய இந்திய அரசின் முதல் பணி ஆயிற்று.

சமஸ்தானங்கள் சேர்த்துக் கொள்ளப்படுதல்.
முதல் நிர்வாக-பிரதேசச் சீர்திருத்தம்

சமஸ்தான விவகாரங்களை மேற்பார்க்க விசேஷ அமைச்சகம் 1947ல் ஏற்படுத்தப்பட்டது. உள்துறை அமைச்சர் வல்லபாய் படேல் இதையும் சேர்த்து நிர்வகித்தார். சமஸ்தான மன்னர்களுடன் அவர் நடத்திய பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு இந்திய யூனியனில் சமஸ்தானங்கள் இணைவதற்கான சூத்திரம் தயாரிக்கப்பட்டது. ஒவ்வொரு சமஸ்தான மன்னரும் டொமினியன் அரசாங்கத்துடன் ஒரே மாதிரி ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தம் சமஸ்தான விவகார அமைச்சகத்திடம் பாதுகாத்து வைக்கும் பொருட்டுக் கொடுக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தப்படி சமஸ்தான மன்னர்களுக்குச் சொந்தமான ஸ்தாவர, ஜங்கம சொத்துக்கள் அவர்களுக்கே உரியவையாக வைக்கப்பட்டன. இந்திய யூனியனில் சேரும் ஒப்பந்தம் அமுலுக்கு வருமுன் அவர்கள் செய்த எந்தச் செயலுக்காகவும் அவர்கள் மீது நீதி மன்ற விசாரணை நடத்தப்பட முடியாது என அறிவிக்கப்பட்டது. மன்னர்கள் அரசுப் பரிவுதியங்கள் பெற்றுர்கள் (மொத்தம் 5 கோடி 60 லட்சம் ரூபாய்). சமஸ்தான நிர்வாக அலுவலர்களும் ஓரளவு உத்தரவாதங்கள் (ஊழியம், ஓய்வு ஊதியம் முதலியன குறித்தவை) பெற்றுர்கள்.

அதே சமயம் சமஸ்தான மன்னர்களின் அரசியல் ஆட்சி அதிகாரம் பறிக்கப்பட்டது. சமஸ்தானப் படைகள் ஒன்று கலைக்கப்பட்டன, இல்லாவிட்டால் இந்தியாவின் நிலையான சேனையில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. சமஸ்தான நிலப்பரப்புக்கள் இந்தியாவுடன் சேர்க்கப்பட்டன. இந்தியச் சட்டங்கள் அவற்றிலும் செயல்பட்டன.

1947ம் ஆண்டைய இந்திய சுதந்திரச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க சமஸ்தானங்கள் இந்தியாவில் (அல்லது பாக்கிஸ்தானில்) சேர்வது அவற்றின் மன்னர்களது விருப்பத்தைப் பொறுத்திருந்ததால் பல மன்னர்கள் ஆரம்பத்தில் தங்கள் முடிவைத் தெரிவிக்க அவசரப்படவில்லை. பிரிட்டிஷ் முடியரசுடன் முன்பு இருந்த நேர்முக உறவுகளை ஏதேனும் ஒரு வடிவில் நிலையாக வைத்திருக்கலாம் என்று அவர்கள் நம்பினர்கள். மன்னர்களின் எதிர்த்தரப்புக்கு ஆங்கிலேயரின், முதன்மையாக 1948, ஜூன் வரை கவர்னர் ஜெனரல் பதவியில் இருந்த மவுண்ட்பேட்டனின் ஆதரவு கிடைத்தது. ஆனால் சமஸ்தானங்கள் சேர்வதற்கு மன்னர்களுக்கு மிக அனுகூலமான நிலைமைகளை ஏற்படுத்திய இந்திய அரசாங்கத்தின் உறுதியான நிலையும் சமஸ்தானங்களில் (சிறப்பாக ஹைதராபாது, காச்மீரம், திருவிதாங்கூர், போபால் ஆகியவற்றிலும் ஒரிஸ்ஸா சமஸ்தானங்களிலும்) நடந்த நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இயக்கமும் ''இணைவதற்கான சூத்திரம்'' அடங்கிய பத்திரத்தில் கையெழுத்திட விரையும்படி மன்னர்களைக் கட்டாயப்படுத்தின.

1947—1949ல் 601 இந்திய சமஸ்தானங்களில் 555 இந்தியாவில் சேர்ந்தன, மற்றவை பாக்கிஸ்தானின் பகுதிகள் ஆயின. முன்னாள் சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் சேர்ந்தது மூன்று வழிகளில் நடந்தது: எல்லாவற்றிலும் சிறியவையான 216 சமஸ்தானங்கள் அண்டை மாநிலங்களுடன் (பம்பாய், மத்திய மாநிலம், ஒரிஸ்ஸா முதலியவற்றுடன்) இணைந்து, அவற்றில் தனி மாவட்டங்கள் ஆயின. 70 சமஸ்தானங்கள் மையத்திலிருந்து நேராக ஆளப்படும் நிர்வாக அலகுகளாக டொமினியனின் பகுதிகளாயின. இவை ஒன்று முந்திய

நிர்வாக எல்லைகளுக்குள் இருந்தன (போபால், மணிபுரி, திரிபுரா), இல்லாவிட்டால் சமஸ்தானங்களின் கூட்டுக்களாக இணைக்கப்பட்டன (இமாசலப் பிரதேசம், கச்சு, விந்தியப் பிரதேசம்); 269 சமஸ்தானங்கள் கூட்டரசின் அலகுகள் ஆயின. இவை ஒன்று சமஸ்தானங்களின் கூட்டுக்கள் (பெப்சு—பட்டியாலா, கிழக்குப் பஞ்சாப் சமஸ்தான யூனியன், ராஜஸ்தானம், சௌராஷ்டிரம், மத்திய பாரதம், திருவிதாங்கூர்-கொச்சி), இல்லாவிட்டால் பழைய எல்லைகளுக்குள் நிலவிய தனியான கூட்டரசு மாநிலங்கள் (ஹைதராபாது, மைசூர், ஜம்மு-காச்மீரம்).

புதிய மாநிலங்களில், சமஸ்தானங்களின் கூட்டுக்களிலும் சரி, தனியான முன்னாள் சமஸ்தானங்களிலும் சரி, சட்ட மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடந்தன, அவற்றுக்குப் பொறுப்புள்ள அரசாங்கங்கள் அமைந்தன. மைய ஆட்சி அதிகாரத்தின் பிரதிநிதிகளான கவர்னர்களின் இடத்தில் முன்னாள் மன்னர்கள் ராஜப்பிரமுகர்கள் என்ற பதவிப் பெயருடன் அங்கே நியமிக்கப்பட்டார்கள்.

இவ்வாறு, முன்னாள் சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைக்கையில் முதலாவது பெரிய நிர்வாக-பிரதேசச் சீர்திருத்தம் செயல்படுத்தப்பட்டது. அதே சமயம் அரசு நிலங்களில் அளவீடு நடத்தப்பட்டு ரயத்துவாரி வகை நிலவரி விதிப்பு முறை ஏற்படுத்தப்பட்டது. அனேக முன்னாள் சமஸ்தானங்களில் நிலவரி விகிதம் குறைக்கப்பட்டது.

சமஸ்தானங்கள் இந்தியாவுடன் சேர்க்கப்பட்டதும் அவற்றில் நிர்வாக, நிலவரிச் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டதும் இந்திய அரசு அமைப்பைக் கணிசமாக வலுப்படுத்தின, நிலப்பிரபுத்துவச் சக்திகளுக்குப் பலத்த அடி கொடுத்தன. ஆயினும் இந்தப் பிரச்சினை சமரசமாகத் தீர்க்கப்பட்டது, மன்னர்களின் நிலவுடைமைகளது பெரும் பகுதிகளும் அரண்மனைகளும் இத்தகைய பிற செல்வங்களும் அவர்களுக்கே உரியவையாக வைக்கப்பட்டது, அவர்களுக்குப் பெருந் தொகைகள் (உதாரணமாக, ஹைதராபாது நிஜாமுக்கு ஆண்டு தோறும் 50 லட்சம் ரூபாய், மைசூர் மகாராஜாவுக்கு 26 லட்சம் ரூபாய் முதலியன) பரிவுதியமாக வழங்கப்பட்டது, பல்வேறு சலுகைகள் கொடுக்கப்பட்டது, முன்னாள் மன்னர்களில் சிலர் ராஜப் பிரமுகர் பதவியில் நியமிக்கப்பட்டது முதலிய இவை எல்லாம் முன்னாள் சமஸ்தானங்களின் பொருளாதார, அரசியல், பண்பாட்டு வளர்ச்சி மீது மன்னர்களின் குறித்த அளவு செல்வாக்கை நிலையாக வைத்திருக்க வாய்ப்பான நிலைமைகளை உருவாக்கின.

சமஸ்தானங்கள் இந்திய யூனியனுடன் சேரும் நிகழ்முறை 1947—1949ல் மொத்தத்தில் இடர்கள் இன்றி நடந்தது. ஜூனாகட்

(கத்தியவார் தீபகற்பத்தில் உள்ளது), ஹைதராபாத், காச்மீரம் ஆகிய மூன்று சமஸ்தானங்களில் மட்டுமே கொந்தளிப்பு ஏற்பட்டது.

ஜூனகட் சமஸ்தானத்தின் பாதிக்கும் மேல் குடிகள் இந்துக்கள், ஆயினும் அதன் நவாபு சமஸ்தானத்தைப் பாக்கிஸ்தானில் சேர்க்க எண்ணுவதாக அறிவித்தான். நவாபின் இந்த முடிவு ஜூனகடில் பெருத்த கிளர்ச்சி அலைகளை எழுப்பியது. விளைவாக 1948, பிப்ரவரி மாதம் இந்திய அரசாங்கம் சமஸ்தானத்துக்குப் படைகளை அனுப்பி, மக்களின் நேர்முக வாக்கின் மூலம் குடியொப்பம் வேண்ட ஏற்பாடு செய்தது. வாக்களித்தவர்களில் மிகப் பெரும்பான்மையினர் இந்தியாவுடன் சேர விருப்பம் தெரிவித்தார்கள். நவாபு பாக்கிஸ்தானுக்குத் தப்பி ஓடினான்.

மிகப் பெரிய சமஸ்தானமான ஹைதராபாதில் அதிகச் சிக்கலான நிலைமை உருவாயிற்று. அதன் முகமதிய ஆட்சியாளனை நிஜாம் பிரிட்டிஷாரின் அரசியல் ஆதரவை ஆதாரமாகக் கொண்டு சமஸ்தானத்தை இந்தியாவுடன் சேர்க்கும் பிரச்சினையை எல்லா வகையிலும் இழுத்தடித்துக் கொண்டிருந்தான். ஹைதராபாதின் தனிச் சிறப்பான நிலையையும் லண்டனுடன் அதன் நேர்முக உறவுகளையும் அப்படியே வைத்திருப்பதற்கு ஆதரவாகப் பத்திரிகைகள் மூலம் பிரசார இயக்கத்தைத் தூண்டி நடத்திக் கொண்டிருந்தார்கள் ஆங்கிலேயர்கள். இந்தச் சூழ்நிலையில் இந்திய அரசாங்கம் நிஜாமுடன் 1947, அக்டோபரில் ஓர் ஆண்டுக் காலத்துக்கு விசேஷ ஒப்பந்தம் செய்து கொண்டது. இதன்படி ஏற்கெனவே இருந்த நிலை அப்படியே வைக்கப்பட்டது, ஆனால் தன் படைகளை அதிகம் ஆக்குவதில்லை என்றும் வெளியிலிருந்து இராணுவ உதவி பெறுவதில்லை என்றும் இவ்வாறே பிறவகைகளிலும் நிஜாம் உறுதி அளிக்க வேண்டியதாயிற்று.

எனினும் நிஜாம் தனது வாக்குறுதியை விரைவில் முறித்து விட்டான். 1948ம் ஆண்டு பாக்கிஸ்தானிலிருந்து பேரளவில் ஆயுதங்கள் ஹைதராபாதுக்குக் கொண்டுவரப்பட்டன. சுதந்திர இந்தியாவின் நடுவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இராணுவ-அரசியல் தளத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடப்பது துலக்கமாகத் தெரிந்தது. அதே சமயம் சமஸ்தானத்துக்கு உள்ளேயும் சூழ்நிலை பெரிதும் சிக்கல் ஆயிற்று. நிஜாமின் ஆட்சிக்கு எதிராக 1946ம் ஆண்டிலேயே தொடங்கிய மக்கள் போராட்டங்கள் விவசாயிகளின் எழுச்சியாக வளர்ந்து சமஸ்தானத்தின் கிழக்குப் பகுதி (தெலிங்கானை) முழுவதிலும் பரவின. எழுச்சியை அடக்கும் பொருட்டு சமஸ்தான நிர்வாகமும் நிலப்பிரபுக்களும் ரஜாக்கார்கள் என்ற இராணுவ அமைப்புள்ள முரடர்கள் கும்பல்களை ஏற்படுத்தினர்கள். ஹைதராபாதின் முஸ்லிம் அல்லாத மக்களை இந்த முரடர்கள் மிரட்டி வெருட்டி வந்தார்கள்.

தெலிங்கானவில் நடந்த விவசாயிகள் இயக்கம் அண்டையில் ஆந்திர மக்கள் வாழ்ந்த சென்னை மாகாணத்தின் வடக்கு மாவட்டங்களின் நிலைமையையும் வரவர அதிகமாகப் பாதிக்கத் தொடங்கியது. இந்தச் சூழ்நிலையில், இந்தியாவிலிருந்து ஹைதராபாது பிரிவதையும் விவசாயிகள் இயக்கம் ஆந்திரப் பிரதேசத்தில் பரவுவதையும் தடுக்கும் நோக்கத்துடன் இந்திய அரசாங்கம் 1948ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நிஜாமுக்கு இறுதி எச்சரிக்கை அனுப்பியது. ரஜாக்கார் படைப் பிரிவுகள் கலைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் இதில் இருந்தது. இந்திய யூனியன் படைகள் செப்டெம்பர் 13ந் தேதி சமஸ்தானப் பிரதேசத்தில் புகுந்து ஐந்து நாட்களில் அதைக் கைப்பற்றின. இந்தியாவின் நிலையான படைகள் ரஜாக்கார் படைப் பிரிவுகளை ஒழித்ததோடு தெலிங்கானக் கிளர்ச்சிக்காரர்களுக்கும் எதிராக நடவடிக்கைகள் தொடங்கின. ஹைதராபாது இந்திய டொமினியனில் சேர்ந்தது குறித்த ஒப்பந்தத்தில் நிஜாம் 1949ம் ஆண்டுத் தொடக்கத்தில் கையெழுத்திட்டான். தன் முன்னுள் சமஸ்தானத்தில் அவன் ராஜப்பிரமுகன் ஆக்கப்பட்டான்.

காச்மீரத்துக்காக இந்திய-பாக்கிஸ்தானப் போரின் தொடக்கம்

யாவற்றிலும் சிக்கலான சூழ்நிலை ஜம்மு-காச்மீர சமஸ்தானத்தில் உருவாயிற்று. நேஷனல் கான்பரன்ஸ் கட்சியின் தலைமையில் சமஸ்தான மன்னனுக்கு எதிரான இயக்கம் அங்கே தொடர்ந்து நடந்தது. 1947ம் ஆண்டுக் கோடையில் காச்மீரம் சென்ற மவுண்ட்பேட்டன் குடியொப்பம் வேண்டுவதற்கு மன்னனை இணங்கச் செய்ய முயன்றான். சமஸ்தானத்தின் மிகப் பெரும்பாலரான காச்மீர முஸ்லிம்கள் பாக்கிஸ்தானோடு சேர்வதற்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்று அவன் நம்பினான்.

இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் ஆழ்ந்த, நீண்ட காலப் பிணக்குகளை மூட்டி விடுவது ஹைதராபாதில் போலவே காச்மீரத்திலும் பிரிட்டிஷ்காரர்களின் கொள்கையாக இருந்தது.

ஆனல் 1947, செப்டெம்பரில் காந்தியின் காச்மீர வருகை பிரிட்டிஷ்காரர்களின் சூழ்ச்சிகளைத் தகர்த்து விட்டது. ஷேக் அப்துல்லாவைச் சிறையிலிருந்து விடுதலை செய்விப்பதிலும் மன்னனுக்கும் நேஷனல் கான்பரன்ஸ் தலைமைக் குழுவுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படுத்துவதிலும் காந்தி வெற்றி பெற்றார். அப்போது ஏகாதிபத்திய வாதிகள் இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் நேர்முகமான ஆயுதப் போரை மூட்டி விட்டார்கள். 1947ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ந் தேதி வட மேற்கு எல்லைப்புற மாகாணத்திலிருந்து பட்டாணிய

இனக் குழுப் படைகள் காச்மீரப் பிரதேசத்தில் புகுந்து அக்டோபர் 26ந் தேதி சமஸ்தானத் தலைநகரமான ஸ்ரீநகரை நெருங்கி விட்டன.

சமஸ்தான நிர்வாகம் தகர்ந்து சரிந்தது. மன்னன் ஸ்ரீநகரிலிருந்து தப்பி ஓடினான். நேஷனல் கான்பரன்சின் ஜனநாயகப் பிரிவினரதும் கம்யூனிஸ்டுகளுடையவும் தலைமையில் மக்கள் படைகளால் நகரின் தற்காப்பு ஒழுங்கமைக்கப்பட்டது.

மவுண்ட்பேட்டன் எதிர்த்ததைப் பொருட்படுத்தாமல் இந்தியத் தரையிறங்கு படைகள் அக்டோபர் 27ந் தேதி விமானங்களிலிருந்து ஸ்ரீநகரில் இறக்கப்பட்டன. மறு நாளே இந்தியப் படைப் பிரிவுகள் பட்டாணியப் பிரிவுகளைத் தொடர்ந்து காச்மீரத்துக்குள் புகுந்திருந்த நிலையான பாக்கிஸ்தானப் படைகளைச் சந்தித்தன. நீடித்த ஆயுதப் போர் தொடங்கியது. இதில் இரு தரப்பு நடவடிக்கைகளையும் தலைமை தாங்கி நடத்தினர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகள்—டொமினியன் தரைப் படைகளின் தளகர்த்தர்கள் (அக்டோபர் முடிவு வரை இரு தரப்புச் சேனைகளுக்கும் ஒருவனே தலைமைத் தளகர்த்தனாக இருந்தான். அவன்தான் பிரிட்டிஷ் ஜெனரல் ஆக்கின்லெக்!).

பாக்கிஸ்தானியர்களால் கைப்பற்றப்பட்ட காச்மீரப் பிரதேசத்தில் ''ஆஜாத் காஷ்மீர்'' (விடுதலை பெற்ற காச்மீர) அரசாங்கம் அமைக்கப்பட்டது.

இந்தியா காச்மீரப் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சங்கப் பாதுகாப்புக் கவுன்சிலின் பரிசீலனைக்கு 1947, டிசம்பர் 31ந் தேதி சமர்ப்பித்தது. காச்மீரப் பிரச்சினை பற்றிய ஐ. நா. சங்கக் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. பிரிட்டிஷ்-அமெரிக்கக் கூட்டணிப் பிரதிநிதிகள் இந்திய-பாக்கிஸ்தான முரண்பாடுகளை ஆழப்படுத்தும் போக்கை இதில் மேற்கொண்டார்கள். 1948ம் ஆண்டு வசந்தத்தில் போர் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. போர் நிறுத்த ஒப்பந்தம் 1949, ஜனவரி 1ந் தேதி முதல் அமுலுக்கு வந்தது.

1947ம் ஆண்டு இலையுதிர் காலத்திலேயே காச்மீர மன்னன் அரியணையைத் துறந்து விட்டான். அவனுடைய பட்டத்து இளவரசன் அரசுத் தலைவன் பதவியைப் பெற்றதும், ஜம்மு-காச்மீரத்தை இந்தியாவில் சேர்க்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டான். ஆயினும் ஒப்பந்தம் புதிய மாநிலத்துக்குச் சிறப்பான சுயாட்சி வழங்கியது. காச்மீரத்தின் வருங்கால அந்தஸ்து பற்றிய பிரச்சினையின் இறுதித் தீர்வு இதன்படி ஒத்திவைக்கப்பட்டது.

காச்மீர, ஹைதராபாது நிகழ்ச்சிகள் முக்கிய மத சமுதாயத்தினரான இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே உறவுகளை இன்னும் மோசமாக்கின.

இந்து-முஸ்லிம் படு கொலைகள்.
காந்தியின் மரணம்

இந்தியா இரண்டு டொமினியன்களாகப் பிரிக்கப்பட்டதையும் புதிய அரசுகளின் எல்லைகள் தீர்மானிக்கப்பட்டதையும்அடுத்து இந்துக்களும் சீக்கியர்களும் பாக்கிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கும் இந்தியாவிலிருந்து பாக்கிஸ்தானுக்கும் பெருந் திரள்களாகக் குடி பெயர்ந்தார்கள். இந்த வெகுஜனக் குடி பெயர்ச்சிகள் முதன்மையாக இரு அரசுகளதும் எல்லைப் பிரதேசங்களில் நிகழ்ந்தன. இந்தியாவின் உட் பிரதேசங்களிலிருந்து பாக்கிஸ்தானுக்குச் சென்றவர்கள் சொத்துள்ள மேற்குடியினரே—வர்த்தக, தொழில் துறை முதலாளி வர்க்கத்தினரே ஆவர். இந்துக்களும் முஸ்லிம்களும் திரள் திரளாகக் குடி பெயர்ந்ததன் விளைவாக இரு டொமினியன்களிலும் இந்து-முஸ்லிம் வேற்றுமைகள் ஒரேயடியாகக் கூர்மை அடைந்தன. கொள்ளைகளும் அகதிகளின் இருப்பிடங்கள் தகர்த்து நொறுக்கப்படுவதும் திரளான படுகொலைகளும் அன்றாட நிகழ்ச்சிகள் ஆயின. மதவெறியினர் அகதிகளான இந்துக்கள், சீக்கியர்களுக்கு மேற்குப் பஞ்சாபில் இழைத்த மிருகத்தனமான கொடுமைகளுக்குப் பதிலாக ராஜஸ்தானிலும் டில்லியிலும் முஸ்லிம்களின் படுகொலைகள் தொடங்கின. இவை பீகாருக்கும் இந்தியாவின் வேறு சில பிரதேசங்களுக்கும் பரவின.

இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகப் போராடி வந்த காந்தி இந்த நிகழ்ச்சிகளால் ஆழ்ந்த துயரம் அடைந்தார். முஸ்லிம்களின் படு கொலைகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக அவர் உண்ணா விரதம் மேற்கொண்டார். காந்தியின் நிலை இந்து மதவெறியர் வட்டாரங்களில் பெருத்த அதிருப்தி ஏற்படுத்தியது. இவர்கள் இந்து மகாசபையையும் அதற்கு நெருக்கமான, இராணுவ அமைப்புகள் மத நிறுவனமாகிய ராஷ்டிரீய சுயம்சேவக சங்கத்தையும் மையமாகக் கொண்டு திரண்டார்கள். இந்து-முஸ்லிம் உறவுகள் குறித்த பிரச்சினையில் காந்தி மேற்கொண்ட நிலை மட்டும் அல்ல, அவருடைய கருத்துக்களில் நாற்பதுக்களில் ஏற்பட்டிருந்த தீவிர முற்போக்கும் பிற்போக்காளர்களுக்குக் கசப்பாய் இருந்தது. மதவெறிப் பிரசாரம் காட்டுத் தீயாகப் பரவி வந்த சூழலில் இந்து மகாசபை உறுப்பினன் ஒருவன் 1948ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ந் தேதி காந்தியை ரிவால்வரால் சுட்டான். விளைவாக அவர் உயிர் துறந்தார்.

காந்தி கொலை செய்யப்பட்டதால் இந்திய மக்கள் அனைவரும் ஆத்திரம் அடைந்தார்கள். இந்து மத சமுதாய நிறுவனங்கள் தடை செய்யப்பட வேண்டும் என்று பொது ஜன அப்பிராயம் கோரியது. இந்த நிறுவனங்களின் உறுப்பினர்கள் சில இடங்களில் கொல்லப்பட்

டார்கள். அரசாங்கம் ராஷ்டிரீய சுயம்சேவக சங்கத்தின் நடவடிக்கைகளைத் தடை செய்து விட்டது. இந்து மகாசபை அரசியல் நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பதாகவும் பண்பாடு-கல்வித் துறைகளில் மட்டும் வேலை செய்யப் போவதாகவும் அறிவிக்க வேண்டியதாயிற்று. நாட்டின் தலைவர், ''இந்திய தேசத் தந்தை'' காந்தியின் கொலையில் முடிந்த 1948, ஜனவரி மாதத் துன்ப நிகழ்ச்சிகளின் போது நாட்டில் இந்து வகுப்புவாதத்துக்குப் பலத்த அடி கொடுக்கப்பட்டது.

அரசின் ஆட்சி உரிமையை வலுப்படுத்துவதோடு கூடவே நாடு இரு டொமினியன்களாகப் பிரிக்கப்பட்டதால் ஏற்பட்ட பொருளாதார விளைவுகள் மீது வெற்றி கொள்வது இரண்டாவது மிக முக்கியப் பணியாக இருந்தது.

நாட்டின் பிரிவினையால் ஏற்பட்ட பொருளாதார விளைவுகள்

பல ஆண்டுகள் விளைச்சல் பொய்த்துப் போனது, போர்த் தேவை உற்பத்திகள் குறைந்தது, சில வகையான மூலப் பொருள்களும் தொழிற் பொருள்களும் பற்றுக்குறையாக இருந்தது ஆகியவற்றால் ஏற்பட்டிருந்த போருக்குப் பிந்திய பொருளாதார இடர்கள் நாடு இரு டொமினியன்களாகப் பிரிக்கப்பட்டதால் மேலும் ஆழமாயின. 40 சதவிகிதம் பருத்தியும் 85 சதவிகிதம் சணலும் 40 சதவிகிதம் கோதுமையும் விளைந்த விவசாயப் பிரதேசங்கள் பாக்கிஸ்தானின் பங்குக்குக் கிடைத்தன. விளைவாக இந்தியாவில் முக்கியத் தொழிலான துணி நெசவுத் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்களுக்கும் உணவுப் பண்டங்களுக்கும் பற்றுக்குறை உடனே ஏற்பட்டது.

இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையே 1947—1948ல் நடந்த ஆயுதப் போரும் அதை அடுத்து 1949-1950ல் நடந்த வர்த்தகப் போரும் காலனியாட்சிக் காலத்திலேயே உருவாகி இருந்த பிரதேசப் பொருளாதார உறவுகளுக்குக் கேடு விளைத்தன. சொந்தப் பருத்தி, சணல் விளை நிலங்கள் ஏற்படுத்திக் கொள்ளும் பிரச்சினை இந்தியாவுக்கு எதிர்ப்பட்டது. பாக்கிஸ்தானுக்கோ சொந்த நெசவாலைத் தொழில் துறையை அமைத்துக் கொள்வது அவசியம் ஆயிற்று. இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையே வர்த்தக உறவுகள் முறையாக்கப்படுவதற்கு வேறு பல பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படாதிருந்ததும் இடைஞ்சலாய் இருந்தது. அகதிகளின் சொத்துக்கள் பற்றிய சிக்கல்கள் தீராதது, பரஸ்பர நிதித்துறை உரிமைக் கோரிக்கைகள், செலாவணி சேமிப்புகளின் பங்கீடு முதலியனவும் இவற்றில் அடங்கி இருந்தன.

ஒன்றித்த பாசனக் கால்வாய்த் தொகுப்பும் போக்கு வரத்துப் பாதைகளும் துணிக்கப்பட்டன. அஸ்ஸாமுடன் தொடர்பு நீண்ட காலம் வரை விமான மூலமே வைத்துக் கொள்ளப்பட்டது.

நெசவாலைகளுக்கு மூலப் பொருள் சப்ளை குறைந்ததாலும் விற்பனைச் சந்தை குறுகியதாலும் ஆலைகள் ஒன்று மூடப்பட்டன, இல்லாவிட்டால் அரைகுறையாக வேலை நடத்தின. மூலப் பொருள் பற்றுக்குறையாலும் விற்பனை கடினமானதாலும் சிறு அளவு உற் பத்தியும் கைநூற்பும் கைத்தறி நெசவும் சிறப்பாக இடர்ப்பட்டன.

1949ம் ஆண்டு இலையுதிர் கால வாக்கில் முக்கியத் தொழில் கிளை களில் உற்பத்தியின் மொத்த அளவு இரண்டாவது உலக யுத்தக் காலத்தில் அடையப்பட்டிருந்த மட்டத்துக்கு 60—70 சதவிகிதமே இருந்தது. தொழில்துறை உற்பத்தியில் இறக்க நிலை ஏற்பட்டதற்குக் காரணம் மூலப்பொருள், செய்பொருள் சந்தையில் நேர்ந்த இடர்ப் பாடு மட்டுமின்றி மூல இயந்திர சாதனங்களின் தேய்வும் ஆகும். போக்குவரத்திலும் இதே போன்ற நிலைமை உருவாயிற்று. நீராவி எஞ்சின்களிலும் ரெயில் பெட்டிகளிலும் 60 சதவிகிதத்தை மாற்று வது அவசியமாக இருந்தது.

உற்பத்தி குறைந்ததன் விளைவாக வேலை வாய்ப்புப் பிரச்சினை சிக்கலாயிற்று. சில பிரதேசங்களில் இயந்திரத் தொழில், கைத்தொ ழில் துறைத் தொழிலாளர்களிடையே வேலையின்மை அச்சுறுத்தும் அளவுகளை எட்டியது. உதாரணமாக, கிழக்குப் பஞ்சாபில் இயந்திரத் தொழில்துறைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1946/47ம்— 1947/48ம் பொருளாதார ஆண்டுகளில் மூன்றில் ஒரு பங்கு குறைந் தது. எழுபது லட்சத்துக்கும் மேல் அகதிகள் பெருகி வந்ததனால் வேலை வாய்ப்பு நிலைமை இன்னும் கடுமை ஆயிற்று.

பரந்த உபயோகத்துக்கான தொழில்துறைச் செய்பொருள்களின் பற்றுக்குறை உணவுப் பொருள் பற்றுக்குறையோடு சேர்ந்து கொண் டது. சுதந்திரம் பெற்றதை அடுத்த முதல் ஆண்டுகளில் விவசாய விளைச்சல் யுத்தத்துக்கு முந்திய மட்டத்துக்குத் தொண்ணூறு சதவிகிதமே இருந்தது.

இந்தியப் பொருளாதாரத்தின் காலனிப் பாங்கான அமைப்பு காரணமாக அதன் பொருளாதார வளர்ச்சியில் நிலவிய முரண்பாடு களை நாட்டின் பிரிவினை மொத்தத்தில் இன்னும் தீவிரம் ஆக்கிற்று. சுதந்திரம் பெற்ற பின்னர் தொடக்க ஆண்டுகளில் இந்தியா முன் போலவே பின்தங்கிய விவசாய நாடாக இருந்து வந்தது. அதன் பொருளாதார அமைப்பில் முதலாளித்துவத்துக்கு முந்திய முறைகள் ஆதிக்கம் செலுத்தின. 1948/49க்கான தேசிய வருமானம் பற்றிய புள்ளி விவரங்களின்படி விவசாயத்தின் பங்கு 48.1 சதவிகிதமாக

இருந்தது. குடிசைத் தொழில், கம்மிய உற்பத்தியின் பங்கு 11.5 சதவிகிதமாகவும் தொழிற்சாலை உற்பத்தியின் பங்கு 8.3 சதவிகித மாகவும் இருந்தன. நில உடைமை, நிலப் பயன்பாட்டு அமைப்பில் நிலப்பிரபுத்துவ மீதமிச்சங்களின் ஆதிக்கமும் விவசாயக் கருவிகளின் இடைக்காலத் தரமும் காரணமாக இந்தியாவில் உழைப்பின் உற் பத்தித் தரம் உலகில் ஆகக் குறைந்த தரங்களில் ஒன்றாக இருந் தது. நபர்வாரித் தேசிய வருமானத்தில் கடைசி இடங்களில் ஒன்றில் இருந்தது இந்தியா—1948ல் இந்த வருமானம் 246 ரூபாய். இது பிரிட்டனதை விடப் பத்து மடங்கும் அமெரிக்க ஐக்கிய நாடு களுடையதை விட இருபது மடங்கும் குறைவு.

பொருளாதாரத் துறையின் மிக முக்கியக் கிளைகளில் அயல் நாட்டு, முதன்மையாக பிரிட்டிஷ் மூலதனம் ஆதிக்க நிலைகளைக் கைப்பற்றிக் கொண்டிருந்தபடியால் பொருளாதார முனையில் உத்திகளைக் கடைப் பிடிக்கும் வாய்ப்புக்கள் இந்திய முதலாளி வர்க்கத்துக்கு மிக மிக வரம்புக்கு உட்பட்டவையாக இருந்தன. இந்தியாவில் அன்னிய முதலீடுகள் பற்றிய முதலாவது புள்ளி விவரத் தொகுப்பு 1948, ஜூன் மாத விவரங்களின்படி தயாரிக்கப்பட்டது. இவற்றின் மொத்தத் தொகை 320 கோடி ரூபாய் என்றும் இதில் 72 சதவிகிதம் பிரிட் டனின் பங்கு என்றும் இந்தத் தொகுப்பு உறுதிப்படுத்தியது. பெட்ரோலியம் எடுக்கும் தொழிலிலும் சுத்திகரிக்கும் தொழிலிலும் மொத்த முதலீடுகளில் 97 சதவிகிதம் அயல் நாட்டார் வசம் இருந் தது. ரப்பர் தொழிலில் 93 சதவிகிதமும் குறுகிய இருப்புப் பாதை களிலும் நெருப்புப் பெட்டி உற்பத்தியிலும் 90 சதவிகிதமும் சணல் தொழிலில் 89 சதவிகிதமும் தேயிலைத் தோட்டக்கால் தொழிலில் 86 சதவிகிதமும் கனியம் வெட்டி எடுக்கும் தொழிலில் 73 சத விகிதமும் முதலீடுகள் அன்னியர் கைகளில் இருந்தன. இவ்வாறே பிறவும்.

முதலீட்டுத் தொகைகளின் பேரில் சராசரி 120—150 கோடி டாலர்கள் அன்னிய ஏகபோகங்களுக்கு லாபமாகக் கிடைத்தன.

இந்தியப் பொருளாதாரத்தின் காலனிப் பாங்கான அமைப்பும் அன்னிய மூலதனத்தின் ஆதிக்கமும் சர்வதேச உழைப்புப் பங்கீட்டில் இந்தியாவின் இடத்தையும் தீர்மானித்தன. இந்தியா வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளின், முதன்மையாகப் பிரிட்டனின் விவசாய-மூலப் பொருள் துணைநிலமாக முன்போன்றே இருந்து வந் தது: 1946/47ல் மொத்த இறக்குமதி மதிப்பில் 60 சதவிகிதம் பரந்த உபயோகத்துக்கான உணவுப் பண்டங்களும் தொழிற்சாலைச் செய் பொருள்களுமாகவும் ஏற்றுமதியில் 52 சதவிகிதம் மூலப் பொருள் களும் உணவுப் பொருள்களுமாகவும் இருந்தன.

நூற்றாண்டுக் காலப் பின்தங்கிய நிலையிலிருந்து விடுபட்டுப் பல கிளைகள் கொண்ட நவீனப் பொருளாதாரத்தை நிறுவும் மாண்பு மிக்க பணி இளம் இந்திய அரசுக்கு எதிர்ப்பட்டது.

பொருளாதாரக் கொள்கை.
''கலப்புப் பொருளாதாரப்'' பாதையில்

சுதந்திரம் பெற்றதை அடுத்த முதல் ஆண்டுகளில் பொருளாதாரத் துறையில் அரசாங்கத்தின் முயற்சிகள் நாட்டின் பிரிவினையால் ஏற்பட்ட விளைவுகளைச் சமாளிப்பதையே முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தன.

சணல் விளைநிலப் பரப்பு நாளடைவில் கணிசமாக (60—70 சதவிகிதம்) விரிவாக்கப்பட்டது. பருத்தி விளைநிலப் பரப்பும் அப்படியே (20—25 சதவிகிதம்). புதிய பாசன வசதிகள் ஏற்படுத்தும் வேலை தொடங்கியது. தரிசு நிலங்களைப் பண்படுத்தும் பொருட்டு 1947ல் அரசாங்க டிராக்டர் நிறுவனம் அமைக்கப்பட்டது.

ஆயினும் உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத் திட்டம் மிகக் குறைந்த அளவே வெற்றி பெற்றது. உணவுப் பொருள் பற்றாக்குறை மட்டுப்படவில்லை. 1947—1950ல் இந்தியா ஒரு கோடி டன்னுக்கும் மேல் தானியங்கள் இறக்குமதி செய்தது.

நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும் முக்கிய உணவுப் பண்டங்களின் நபர்வாரி உபயோகம் தொடர்ந்து குறைந்து கொண்டு போயிற்று. 1948ல் நகரங்களில் மிக முக்கிய உணவுப் பண்டங்களுக்குப் பங்கீட்டு முறை ஏற்படுத்தப்பட்டது. உணவுப் பண்டங்களிலும் அடிப்படைத் தேவைப் பொருள்களிலும் கள்ள வியாபாரம் தலைவிரித்து ஆடியது. தொழிலாளர்கள், கம்மியர்கள், சிறு, நடுத்தர அலுவலர்கள், தொழிலதிபர்களின் தாழ்நிலை வட்டாரத்தினர் ஆகியோருடைய குடும்பங்களின் வரவு செலவை இந்த நிலைமை கடுமையாகப் பாதித்தது. அதே சமயம் கள்ள வியாபார நடவடிக்கைகளின் மூலம் ஏராளமான சொத்துக்கள் திரண்டன—தொடக்க மூலதனக் குவிவு தீவிரம் ஆயிற்று.

1949 வாக்கில் நாட்டில் பொருளாதார நிலைமை ஓரளவு ஸ்திரப் பட்டது சொத்துள்ள வர்க்கத்தினரிடம் குவிந்த பணத் தொகைகள் தொழில் முயற்சிகளுக்கு மாற்றப்படும் நிகழ்முறையை ஊக்கியது.

நெசவாலை தொழில் உற்பத்திக் குறைவு தொடர்ந்தது, ஆயினும் கனரகத் தொழிற் கிளைகள் சிலவற்றில் (சிமெண்டு, இரசாயன, உருக்காலைத் தொழில்களில்) உற்பத்தி அதிகரிப்பு காணப்பட்டது. பொதுத்

துறை, தொழில்துறைக் கட்டுமானம் துடியாக நடந்தது இந்த அதிகரிப்பின் காரணம்.

நிலை முதல் இயந்திர சாதனங்களின் இறக்குமதியை மிகக் கணிசமாக அதிகரிப்பதன் வாயிலாக இருப்புப் பாதைகளில் வண்டி பொறித் தொகுதியையும் தொழிற்சாலைகளில் இயந்திரங்களின் தொகுப்பையும் புதுப்பிப்பது தொடங்கியது.

சுதந்திரத்தை அடுத்த முதல் ஆண்டுகளில் இயந்திரங்களின் இறக்குமதிச் செலவு யுத்த காலத்தில் திரண்ட இந்தியாவின் ஸ்டர்லிங் சேமிப்புகளைக் கொண்டு சரிக்கட்டப்பட்டது. 1947ல் இவற்றின் மொத்தத் தொகை 1,500 கோடி ரூபாயாக இருந்தது. 1948, ஜூலையில் கையெழுத்தான பிரிட்டிஷ்-இந்திய நிதி ஒப்பந்தத்தின்படி, இராணுவச் சொத்துக்கள், பிரிட்டிஷ் அலுவலர்களுக்குப் பென்ஷன்கள் முதலியவற்றின் கணக்கைத் தீர்க்கும் பொருட்டு 500 கோடி ரூபாய் பிடித்துக் கொள்ளப்பட்டது. எஞ்சிய 1,000 கோடி ரூபாய் பிரிட்டிஷ் உற்பத்தி இயந்திரங்களுக்கு விற்பனைச் சந்தையை உறுதிப்படுத்தியது. இந்தியத் தொழிற்சாலைகளைப் புதுமைப்படுத்தவும் விரிவாக்கவும் இந்த இயந்திரங்கள் உதவின.

பிரிட்டிஷ்-இந்திய ஒப்பந்தம் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிப் போக்கு மீது பிரிட்டிஷ் ஏகபோகங்களின் செல்வாக்கை ஒரு குறித்த காலத்துக்கு அதிகப்படுத்தியது. ஆனாலும் போட்டி (அமெரிக்க, ஜப்பானிய, கூட்டாட்சி ஜெர்மானிய) ஏகபோகங்கள் இந்தியாவில் நுழைவதை அது தவிர்க்கவில்லை. தேசிய முதலாளி வர்க்கம் வலு அடைவதையும் அது தடுக்கவில்லை.

நிதித் துறையிலும் சிறப்பாகத் தொழில்நுட்ப நோக்கிலும் பலவீனமாய் இருந்த இந்திய முதலாளி வர்க்கம் பெரும்பாலும் கலப்புக் கம்பெனிகளின் வடிவில் அன்னிய மூலதனத்துடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதன் அடிப்படையிலேயே புதிய உற்பத்திக் கிளைகளை நிறுவியது. சுதந்திரத்தை அடுத்த முதல் மூன்று ஆண்டுகளில் மோட்டார் பகுதி இணைப்பு, டிராக்டர் பகுதி இணைப்பு, சைக்கிள் நிர்மாணம் ஆகிய தொழில்களிலும் பிற உற்பத்திக் கிளைகளிலும் 88 கலப்புக் கம்பெனிகள் நிறுவப்பட்டன.

அரசாங்கம் காப்புச் சுங்கத் தீர்வைகள் விதித்தும் அயல்நாட்டுத் தனியார் மூலதனத்தின் நடவடிக்கைகளை ஓரளவு கட்டுப்படுத்தியும் இந்தியத் தனியார் தொழில் முயற்சிக்கு ஊக்கம் அளித்தது. தொழில் துறைக் கட்டுமானத்துக்கு நிதியுதவி அளிக்கும் நோக்கத்துடன் 10 கோடி ரூபாய் முதலுடன் தொழில்-நிதி வாரியம் 1948ல் அமைக்கப்பட்டது.

1948, ஏப்ரலில் அரசியல் நிர்ணய சபையில் ஜவாகர்லால் நேரு

படித்த தொழில் துறைக் கொள்கை பற்றிய பிரகடனம் இந்திய யூனியன் டொமினியன் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைக் கோட்பாடுகளே யாவற்றிலும் முழுமையாக விவரித்தது. குறித்த தொழில் துறைகளே அரசுக்கு ஒதுக்குவதன் மூலம் கலப்புப் பொருளாதாரம் எனப்படுவதை வளர்ச்சி பெறச் செய்யும் பாதை இந்தச் செயல்திட்ட தஸ்தாவேஜில் குறிக்கப்பட்டிருந்தது. ஆயுத உற்பத்தியும் அணுக்கரு ஆற்றல் உற்பத்தியும் இருப்புப் பாதைகளும் அரசின் ஏகபோகங்கள் என அறிவிக்கப்பட்டன. இரும்பு வகை உலோக வார்ப்பு, நிலக்கரி, பெட்ரோலியத் தொழில், விமான நிர்மாணத் தொழில், சில வேறு வகை இயந்திர நிர்மாணத் தொழில்கள் ஆகியவை உள்ளிட்ட கனரகத் தொழிற் கிளைகளின் தொகுப்பில் புதிய தொழில் நிலையங்கள் நிறுவும் தனி உரிமையை அரசு தனக்கே வைத்துக் கொண்டது. மூடிவாக, கனரக, லேசுரகத் தொழில் துறையின் மிக முக்கியமான 17 கிளைகள் அரசாங்கக் கட்டுப்பாட்டுக்கும் திட்ட வகுப்புக்கும் உட்பட்டவை என்று அறிவிக்கப்பட்டன.

1948, ஜூலை 1ந் தேதி இந்திய ரிஸர்வ் வங்கி தேசிய உடைமை ஆக்கப்பட்டது. 1949ல் பிறப்பிக்கப்பட்ட வங்கிகள் பற்றிய சட்டம் தனியார் கூட்டுப் பங்கு வங்கிகளின் நடவடிக்கைகள் மீது அரசுக் கண்காணிப்பை அதிகப்படுத்தியது. இந்த நடவடிக்கைகள் அரசு முதலாளித்துவக் கொள்கைப் போக்கைப் புலப்படுத்தின.

காலனியாட்சி அரசாங்கத்தின் முன்னுள் சொத்துக்களே (முதன்மையாக இராணுவத் தொழில் நிலையங்களேயும் இருப்புப் பாதைகளேயும் மின் நிலையங்களேயும்) ஆதாரமாகக் கொண்டு உருவான அரசினர் துறையில் 1948ம் ஆண்டு மொத்தத் தொழில் உற்பத்தியின் ஆறு சதவிகிதந்தான் அடங்கி இருந்தது.

நேரு அரசாங்கத்தின் அரசு முதலாளித்துவ நடவடிக்கைகள் எவ்வளவுதான் வரம்புக்கு உட்பட்டவையாக இருந்தாலும் அதன் பொருளாதாரக் கொள்கை காலனியாட்சி அதிகாரிகளின் கொள்கையிலிருந்து அடிப்படையில் வேறுபட்டு இருந்தது.

டொமினியன் அரசாங்கத்தின் அயல்நாட்டுக் கொள்கை

டொமினியன் அரசாங்கத்தின் அயல்நாட்டுக் கொள்கையில் தேசிய அரசுரிமைக் கோட்பாடுகள் இன்னும் அதிக அளவில் கடைப்பிடிக்கப்பட்டன. இந்தியாவின் நடுநிலைமையையும் இராணுவக் கூட்டுக்களில் சேராமைக் கொள்கையையும் காலனியாட்சி இந்தியாவின் தாற்காலிக அரசாங்கம் 1946, செப்டெம்பர் 7ந் தேதியே அறிவித்திருந்தது. நாடு சுதந்திரம் பெற்ற பின்பு சமாதானக் கோட்பாடும்

பயனுள்ள நடுநிலைமைக் கோட்பாடும் மேற்கொண்டு முழு வளர்ச்சி அடைந்தன. தூதரக உறவுகளில் ஒதுக்க நிலைக் காலப் பகுதி இந்தியாவுக்கு ஏற்படவில்லை. இந்தியாவின் அயல் நாட்டுக் கொள்கை துடியாகச் செயல்பட இந்த நிலைமை வாய்ப்பு அளித்தது. 1950ம் ஆண்டுத் தொடக்கத்துக்குள் இந்தியா 39 அரசுகளுடன் தூதரக உறவுகள் ஏற்படுத்திக் கொண்டு விட்டது.

ஆளும் கட்சியான தேசியக் காங்கிரசின் ஜெய்பூர் மகாநாட்டில் (1948ல்) இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைக் கோட்பாடுகள் ஒரு தனித் தீர்மானத்தில் வரையறுக்கப்பட்டன. அவையாவன: காலனியாட்சி எதிர்ப்பு, சமாதானமும் நடுநிலைமையும், இராணுவக் கூட்டுக்களில் சேராமை ஆகியன.

மாண்டேட்டுப் பிரதேசங்கள் ஐக்கிய நாடுகள் சங்கத்தின் அரவணைப்பில் வைக்கப்பட வேண்டும் என்று ஐ. நா. சங்கத்தில் இந்தியப் பிரதிநிதிகள் பிரேரித்தார்கள். தென் ஆப்பிரிக்காவில் நிலவும் ''இன ஏற்றத்தாழ்வை எதிர்த்து ஐ. நா. சங்க நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதிகள் நடத்திய போராட்டத்தில் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் இருந்த காலனியாதிக்க எதிர்ப்புப் போக்கு துலக்கமாக வெளிப்பட்டது.

ஆசிய நாடுகளுடன் பல தரப்புத் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ள இந்தியா செய்த முதல் முயற்சி 1947ம் ஆண்டு டில்லியில் அனைத்து ஆசிய மகாநாடு கூட்டியதாகும். 32 நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டார்கள். ஆயினும் பொது அரசியல் கொள்கைத் திட்டம் இல்லாமையால் அதன் ''உபயோகமான விளைவுகள் மிக அளவறுத்தவையாகவே இருந்தன.

நேரு அரசாங்கம் சோவியத் யூனியனுடனும் பிற சோஷலிஸ நாடுகளுடனும் நட்பு உறவுகள் ஏற்படுத்திக் கொண்டது. சீன மக்கள் குடியரசை முதன் முதலில் அங்கீகரித்த அரசாங்கங்களில் அது ஒன்றாக இருந்தது.

அதே சமயம் இந்த ஆண்டுகளில் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் ஓரளவு தயக்கமும் ஒருங்கிசைவின்மையும் காணப்பட்டன. இந்தியாவின் உள் நாட்டு அரசியல் நிலைமையும் சிறப்பாக, நாட்டில் கணிசமான பொருளாதார, அரசியல் செல்வாக்கை இன்னும் வைத்திருந்த முன்னாள் ஆட்சித் தலைமை நாட்டின் வற்புறுத்தலும் இவற்றுக்குக் காரணங்கள். உதாரணமாக, ஹோசிமின் அரசாங்கத்தை ஆதரித்த இந்தியா அதே சமயம் மலாயாவில் பிரிட்டிஷ் கொள்கையுடன் எதார்த்தத்தில் ஒருமைப்பாடு கடைப்பிடித்தது. இந்தோனீசியப் பிரச்சினை குறித்து ஆலோசிக்க டில்லியில் 1949ல் நடந்த சர்வதேச மகாநாட்டில் ஐ. நா. சங்கத் தீர்மானங்

களை ஆதரிப்பதுடன் இந்தியா நின்று கொண்டது. ஐ. நா. சங்கமோ, காலனியாட்சியுடன் நடந்த போராட்டத்தில் தேசியச் சக்திகளுக்கு எவ்வித உதவியும் அளிக்கவில்லை.

இதே ஆண்டுகளில் இந்தியா அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சார்ந்திருக்க முயற்சி செய்தது. நாட்டின் இயந்திரத் தொழில் பெருக்கத்துக்கு அமெரிக்காவின் நிதியுதவியும் தொழில்நுட்ப உதவியும் கிடைக்கும் என்று அது நம்பியது. இந்திய-அமெரிக்க உறவுகளை விரிவுபடுத்துவதன் மூலம் இந்தியா மீது பிரிட்டனின் அழுத்தத்தைச் சற்று குறைக்கலாம் என்றும் நேரு எண்ணினார். இந்த நோக்கத்துடன் அவர் அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். 1949, அக்டோபர் 11 முதல் நவம்பர் 7ந் தேதி வரை நீடித்தது இந்தச் சுற்றுப் பயணம். அரசியல் நட்புறவு ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சி பலிக்கவில்லை என்றாலும் அடுத்து வந்த ஆண்டுகளில் விரிவான இந்திய-அமெரிக்கப் பொருளாதார ஒத்துழைப்பு ஏற்படவும் அமெரிக்க மூலதனம் இந்தியாவில் முதலீடு செய்யப்படவும் இந்தியாவில் அமெரிக்காவின் கொள்கை எதார்த்தத்தில் உதவியது.

யாவற்றிலும் குறைந்த அளவு அனுகூலமாக அமைந்தன பாக்கிஸ்தானுடன் இந்தியாவின் உறவுகள். காச்மீரப் பிரச்சினை காரணமாக இவை மோசமாகி இருந்தன. காச்மீரத் தகராறு ஐ. நா. சங்கத்தின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டதனால் காச்மீரம் பற்றிய ஐ. நா. கமிஷனின் உதவியாலும் பின்னர் ஐ. நா. சங்க நடுவர் அலுவலகத்தின் உதவியாலும் இரு டொமினியன்களதும் உள் நாட்டு விவகாரத்தில் தலையிடும் வாய்ப்பு ஆங்கில-அமெரிக்கக் கூட்டணிக்குக் கிடைத்தது. காச்மீரத்தில் குடியொப்பம் வேண்ட ஏற்பாடு செய்யலாம் என்று ''நடுவர்கள்'' பல முறை கூறிய யோசனைகளை இந்தியா நிராகரித்து விட்டது. மிக முக்கியமான பிரதேசத்தில்—சோவியத் யூனியன், சீனம், இந்தியா, பாக்கிஸ்தான், ஆப்கனிஸ்தான் ஆகியவற்றின் எல்லைகள் சந்திக்கும் இடத்தில்—நாட்டோவின் இராணுவத் தாக்கு தளமாகக் காச்மீரத்தை மாற்றும் வாய்ப்பை இந்தியா மேற்கொண்ட உறுதியான நிலை தவிர்த்து விட்டது.

வர்க்கப் போராட்டம் மும்முரம் ஆகிறது

இந்தியா அரசியல் சுதந்திரம் பெற்றது பொருளாதார, சமூதாயத் துறைகளில் நாடு மேற்கொண்டு முன்னேறுவதற்கு மிக அவசியமான நிபந்தனையாக இருந்தது. ஆனால் சுதந்திர வளர்ச்சியின்

முதல் ஆண்டுகளில் இந்திய சமூகத்தின் உடைமையாளி வர்க்கங்கள் தாம் அதன் பயன்களை அனுபவிக்க முடிந்தது. 1947—1949ல் திரளான இந்தியப் பொது மக்களின் வாழ்க்கை நிலைமைகள் மோசம் ஆயின. நாட்டில் சமுதாய இறுக்கம் ஏற்படுவதற்கும் வர்க்கப் போராட்டம் நடப்பதற்கும் வேண்டிய முதனிலைகள் இதனால் உருவாயின.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் இரண்டாவது மகாநாடு. கம்யூனிஸ்டு இயக்கத்தில் இடதுசாரிப் பிறழ்ச்சி

1948ம் ஆண்டு பிப்ரவரி இறுதியிலும் மார்ச்சு தொடக்கத்திலும் பம்பாயில் நடந்த இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் இரண்டாவது மகாநாடு நிறைவேற்றிய தீர்மானங்கள் 1948—1949ல் நடந்த ஒழுங்கமைந்த தொழிலாளர், விவசாயிகள் இயக்கங்களின் மீது பெருத்த செல்வாக்கு செலுத்தின. கட்சியின் 89 ஆயிரம் உறுப்பினர்களின் பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். கட்சியின் அணிகள் கணிசமாக விரிவடைந்திருந்ததை உறுப்பினர் தொகை காட்டியது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் பி. ஸி. ஜோஷியின் அறிக்கை மகாநாட்டில் கடுமையான கண்டனத்துக்கு உள்ளாயிற்று. ஜோஷியைத் தலைவராகக் கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமைக் குழு வலதுசாரி சந்தர்ப்பவாத, தேசியவாதப் பிறழ்ச்சிக்கு உள்ளானதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

புரட்சிச் சக்திகளின் முதன்மைப் பணி ஜனநாயகக் கூட்டணி அமைப்பது என்று மகாநாட்டில் சுட்டிக் காட்டப்பட்டது. கூட்டணியின் செயல்திட்டத்தில் பின்வருபவை உள்ளிட்ட ஆழ்ந்த சமுதாய மாற்றங்கள் அடங்கி இருந்தன: இழப்பீடு கொடுக்காமல் நிலப்பிரபுத்துவ நில உடைமைகள் ஒழிக்கப்படுவது; பிரிட்டிஷ் தொழில் நிலையங்களும் தொழில்துறையின் முக்கியக் கிளைகளும் வங்கிகளும் தேசிய உடைமை ஆக்கப்படுவது; குறைந்த பட்சச் சம்பளமும் எட்டு மணி நேர வேலை நாளும் அமுலாக்கப்படுவது; தொழில் நிலையங்கள் மீது தொழிலாளர் கண்காணிப்பு ஏற்படுத்தப்படுவது; சமஸ்தானங்களை ஒழிப்பதும் தேசிய இன அடிப்படையில் அவற்றை நிர்வாக நோக்கில் மாற்றி அமைப்பதும்; இந்தியாவின் எல்லாத் தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை அறிவிக்கப்படுவது; சாதி வகையும் பிற வகையுமான ஏற்றத்தாழ்வுகள் தடை செய்யப்படுவது முதலியன. இந்தியா துண்டாடப்பட்டது ஏகாதிபத்தியவாதச் சூழ்ச்சி என்று மகாநாடு கண்டனம் செய்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் உறவுகளை அறவே துணித்துக் கொள்ளும்படி அது கோரியது.

ஆனால், ஜனநாயகக் கூட்டணி குறித்த போர்த்தந்திரம் அறிவிக்கப்பட்ட போதிலும் தேசியச் சக்திகளின் பால் குறுகிய இடதுசாரிப் பிரிவுவாத நிலையைப் பெரும்பாலான பிரதிநிதிகள் ஆதரித்தார்கள். நேரு அரசாங்கம் ஏகாதிபத்தியவாத முகாமுக்கு மாறுவதாகச் சித்திரிக்கப்பட்டது. பி. டி. ரணதிவேயின் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சியின் புதிய தலைமைக் குழு ஆயுதக் கிளர்ச்சி மூலம் காங்கிரஸ் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் பாதையை எதார்த்தத்தில் மேற்கொண்டது.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமைக் குழுவின் செயல்களில் இடதுசாரிப் பிரிவுவாதப் பிறழ்ச்சி நாட்டில் கம்யூனிஸ்டு இயக்கத்துக்குக் கெடுதல் விளைத்தது. அனேக இடங்களில் வெகுஜனங்களுடன் கட்சியின் தொடர்புகள் வலுவிழந்தன. மக்களில் அரசியல் உணர்வு பெற்ற சில குழுக்கள் கட்சியிலிருந்து விலகி விட்டன.

நாட்டில் இருந்த வலதுசாரி சக்திகள் கம்யூனிஸ்டுகளைத் தாக்கித் துன்புறுத்தத் தலைப்பட்டன. கம்யூனிஸ்டுக் கட்சியும் அதன் தலைமையில் இயங்கிய வெகுஜன நிறுவனங்களும் தலை மறைவாக வேலை செய்வது எதார்த்தத்தில் கட்டாயமாயிற்று. சில மாநிலங்களில் (சென்னை, மேற்கு வங்காளம், திருவிதாங்கூர்-கொச்சி ஆகியவற்றில்) அவற்றின் நடவடிக்கைகள் சட்டத்தால் முறையாகத் தடை செய்யப்பட்டன. கம்யூனிஸ்டுகளுக்கும் வெகுஜன நிறுவனங்களின் துடியான ஊழியர்களுக்கும் எதிராக அடக்குமுறைகள் தொடங்கின. பொலிட்பியுரோ உறுப்பினர்கள் பலரும் அனைத்து இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸ், கிஸான் சபா ஆகியவற்றின் பல தலைவர்களும் சிறையில் இடப்பட்டார்கள்.

இடர் நிறைந்த மறைமுகப் போராட்ட நிலைமைகள் கட்சி மையக் குழுவை எஃகு உறுதி உள்ளது ஆக்கின. ஆனால் அதே சமயம், வெகுஜன நிறுவனங்களின் செயல்களை விரிவாக நடத்துவது இந்த நிலைமைகளின் காரணமாகக் கடினம் ஆயிற்று.

தொழிலாளர்-விவசாயிகளின் இயக்கம்

கம்யூனிஸ்டுக் கட்சியும் தொழிற் சங்கங்களும் அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டதற்கு எதிர்ப்புக் கூட்டங்களாலும் வேலை நிறுத்தங்களாலும் இந்தியத் தொழிலாளி வர்க்கம் பதில் அளித்தது. ஆயினும் வேலைநிறுத்தப் போராட்டத்தின் பொது மட்டம் தணிந்தது: 1948ம் ஆண்டில் 1050 ஆயிரம் தொழிலாளர்கள் அதில் கலந்து கொண்டார்கள், 78 லட்சம் வேலை நாட்கள் இழக்கப்பட்டன. 1949லோ, முறையே தொழிலாளர் எண்ணிக்கை 685 ஆயிரமாகவும் வேலை நாட்களின் எண்ணிக்கை 67 லட்சமாகவும் குறைந்து

விட்டது. தொழிலாளி வர்க்கத்தினது பொருளாதாரப் போராட்டத்தில் இறக்கம் நேர்ந்ததற்குக் காரணம் தொழிலாளி வர்க்கத்தின் கூளப்பும் அதிகாரிகளின் கொடிய அடக்குமுறைகளும் கம்யூனிஸ்டு இயக்கத்தில் இருந்த நிலைமையும் மட்டும் அல்ல, நாட்டின் தொழிற் சங்க இயக்கத்தில் ஏற்பட்ட பிளவும் ஆகும்.

1947, மே மாதத்திலேயே தேசியக் காங்கிரசின் ஆதரவில் இந்திய தேசியத் தொழிற் சங்கக் காங்கிரஸ் என்ற நிறுவனம் அமைக்கப்பட்டிருந்தது. தொழில் துறையில் வர்க்க சமாதானம் நிலை நாட்டப்படுவது பற்றிக் காங்கிரஸ் செயற்குழு தொழிலாளர்களுக்கு விடுத்த வேண்டுகோளை இந்த நிறுவனத்தின் தலைமைக் குழு 1948, ஜனவரியில் உற்சாகமாக ஆதரித்தது. 1948ல் வேறு இரு இணையொத்த தொழிற் சங்கங்கள் அமைக்கப்பட்டன. ''ஹிந்த் மஸ்தூர் சபா'' (இந்தியத் தொழிலாளர் சங்கம்), ஒன்றித்த தொழிற் சங்கக் காங்கிரஸ் ஆகியவை இவை. சோஷலிஸ்டுகளின் வெவ்வேறு குழுக்களுடைய செல்வாக்கில் இருந்தன இந்தத் தொழிற் சங்கங்கள். இரண்டாவது தொழிற் சங்க மையத்தில் பெரும்பாலும் மேற்கு வங்காள நிலப்பரப்பில் இருந்த தொழிற் சங்கங்கள் சேர்ந்திருந்தன.

மூன்று புதிய தொழிற் சங்க மையங்கள் உருவானதை அடுத்த முதல் ஆண்டுகளில் அனைத்து இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸ் இந்திய உழைப்பாளிகளின் யாவற்றிலும் அதிகப் பிரதிநிதித்துவம் வாய்ந்த நிறுவனமாக இருந்தது. 1949ம் ஆண்டு பம்பாயில் நடந்த அதன் அடுத்த மகாநாட்டில் இந்த உண்மை உறுதிப்பட்டது. கோயம்புத்தூரில் நெசவுத் தொழிலாளர்கள் பல மாத காலம் தொடர்ந்து நடத்திய வேலைநிறுத்தங்களும் கல்கத்தா, பம்பாய், நாட்டின் பிற தொழில் மையங்கள் ஆகியவற்றில் நடந்த அலுவலர்களின் போராட்டங்களும் இந்த ஆண்டுகளில் நிகழ்ந்த ஆகப் பெரிய வேலைநிறுத்தங்கள் ஆகும். நிலைமைகள் சாதகம் அற்றவையாக இருந்தும் கூடச் சில வேலைநிறுத்தங்கள் தொழிலாளர்களின் வெற்றியில் முடிந்தன: ஆண்டு முழுவதும் இயங்கிய தொழில் நிலையங்களில் வேலை நாள் குறைக்கப்பட்டது, சில தொழில் நிலையங்களில் சம்பளம் உயர்த்தப்பட்டது, பஞ்சப் படி வழங்கப்பட்டது.

1948—1949ம் ஆண்டுகளில் பிறப்பிக்கப்பட்ட பல அரசாணைகள் தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் மிக முக்கிய விளைவுகளாகத் திகழ்ந்தன. இவை சுதந்திர இந்தியாவில் உழைப்பு பற்றிய சட்டங்களின் அடிப்படையாக இருந்தன. குறைந்தபட்சச் சம்பளம், சமூக இன்ஷூரன்ஸ், எட்டு மணி நேர வேலை நாள், அரசாங்க நடுவர் தீர்ப்பு ஆகியவை குறித்த சட்டங்களும் உழைப்புச் சச்சரவுகள் பற்றிய சட்டமும் பிறவும் இத்தகையவை.

பிறப்பிக்கப்பட்ட தொழிலாளர் பற்றிய சட்டங்கள் செயலாக்கப்படுவதற்கான போராட்டத்தைத் தொழிற் சங்க நிறுவனங்கள் நடத்தின.

தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தோடு கூடவே இந்திய விவசாயிகளின் பல்வேறு வட்டாரங்களது வெகுஜனப் போராட்டங்கள் நாட்டின் சில பிரதேசங்களில் 1947—1949ல் நடந்தன. குத்தகைக்கார விவசாயிகளின் தாழ்நிலை வட்டாரங்களைச் சேர்ந்த பல்வேறு குழுக்களின் போராட்டம் யாவற்றிலும் மும்முரமாக நடந்தது. குத்தகை விகிதம் குறைக்கப்பட வேண்டும், பண்ட வகையிலிருந்து பண வகைக்கு அது மாற்றப்பட வேண்டும், வாரிசு முறைக் குத்தகை உரிமைகள் நிலையாக்கப்பட வேண்டும் என்று இந்த விவசாயிகள் கோரினர்கள். மேற்கு வங்காளம், பீகார், பம்பாய், பஞ்சாப் ஆகியவற்றிலும் பிற மாநிலங்களிலும் பாட்டக்காரர்களின் போராட்டம் இந்தக் கோரிக்கைகளின் பொருட்டு நடந்தது. நிலப் பிரபு நிலச் சொந்தக்காரர்களும் பணக்கார விவசாயிகளும் குத்தகைக்காரர்களை நிலங்களிலிருந்து வெளியேற்றியது பற்றிய பிரச்சினை குத்தகைக்கார விவசாயிகளின் போராட்டங்களில் முக்கியமான இடம் பெற்றது.

ஜனநாயக உரிமைகள் செயல்படுத்தப்பட வேண்டும், 1946—1949ல் மாநில அரசாங்கங்களால் சட்ட மன்றங்களில் விவாதத்துக்காக முன்வைக்கப்பட்ட ஜமீன்தாரி ஒழிப்புச் சட்ட மசோதாக்கள் விரைவில் செயலாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் நடத்தப்பட்ட வெகுஜன இயக்கங்களில் அதிக விரிவான விவசாயி வட்டாரங்கள் பங்கு கொண்டன. குத்தகைக்காரர்களின் உயர்நிலை வட்டாரத்தினரும் இவற்றில் கலந்து கொண்டார்கள். ஐக்கிய மாகாணத்தின் சில பிரதேசங்களிலும் (பலியா மாவட்டம்) பெப்சு மாநிலத்திலும் தென் இந்தியாவிலும் விவசாயிகள் நிலப்பிரபுக்களின் நிலங்களைத் தாமே கைப்பற்றத் தொடங்கினர்கள்.

விவசாயிகள் போராட்டத்தின் இந்த வடிவம் தெலிங்கானாவில் யாவற்றிலும் விரிவான அளவுகளை எட்டியது. இங்கே 1946லேயே துவங்கிய கிளர்ச்சி இன்னும் தொடர்ந்து நடந்து வந்தது. கிளர்ச்சி நடந்த பிரதேசங்களில் மக்கள் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டன. அதிகார உறுப்புக்களான இவை நிலச் சீர்திருத்தத்தைச் செயல்படுத்தின. பேரளவான நில உடைமைகளை இவை குறுக்கின, இவ்வாறு பறிக்கப்பட்ட நிலங்களைக் குறைந்த நிலமுள்ள விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்தன. 1948ம் ஆண்டு முடிவுக்குள் 12 லட்சம் ஏக்கருக்கும் மேல் நிலப் பகுதிகள் இவ்வாறு பங்கிடப்பட்டன.

விவசாயிகளின் இந்தக் கிளர்ச்சியை ஒடுக்கும் பொருட்டு

அனுப்பப்பட்ட நிலையான இந்தியப் படைப் பிரிவுகள் 1949ல் ஹைதராபாதில் புகுந்தன. இதன்பின் கிளர்ச்சி கொரில்லாப் போராக வளர்ந்து1951 வரை நீடித்தது. இந்த இரண்டாவது கட்டத்தின் போது கிளர்ச்சிக்காரர்களுக்கிடையே மேற்கொண்டு பாகுபாடுகள் நிகழ்ந்தன. உயர்நிலையினரான விவசாயிகள் இயக்கத்திலிருந்து விலகி விட்டார்கள். இவர்கள் 1949—1950ல் அமுலாக்கப்பட்ட நிலச் சீர்திருத்தங்களால் திருப்தி அடைந்திருந்தார்கள். தவிரவும் மக்கள் பஞ்சாயத்துக்களில் ஏழை விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்ததையும் அவர்கள் கிளர்ச்சியின் தலைமையை மேற்கொண்டதையும் கண்டு இவர்கள் அச்சம் அடைந்திருந்தார்கள்.

விவசாயிகளின் போராட்டம் நிலச் சீர்திருத்தங்களைத் தயாரித்துச் செயல்படுத்துவதை விரைவுபடுத்தும்படி முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ அரசாங்கங்களைக் கட்டாயப்படுத்தியது. 1950ம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தியா அரசுரிமை பெற்ற குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்ட பின்பே இந்தச் சீர்திருத்தங்கள் செயல் படுத்தப்பட்டன.

புதிய அரசியல் அமைப்புச் சட்டம் வகுத்து நிறைவேற்றப்படுதல்

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்தச் செயலுக்கு முன்னர் தேசிய முதலாளி வர்க்கத்தின் கைகளுக்கு ஆட்சி அதிகாரம் மாறி விட்டதை உறுதிப்படுத்தும் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தயாரிக்கும் நீடித்த வேலை நடந்தது. சுதந்திர இந்தியாவின் இந்த அடிப்படைச் சட்டத்தைத் தயாரிக்கும் நிகழ்முறையில் இரண்டு பிரச்சினைகள் குறித்துச் சிறப்பாகக் கடுமையான கருத்து வேறுபாடுகள் எழுந்தன. பிரிட்டனுடன் இந்தியாவின் அரசியல் சட்ட ரீதியான உறவுகள், தேசிய இனங்களின் பிரச்சினை ஆகியவை இவை.

இந்தியாவின் பொருளாதாரத்தில் பிரிட்டிஷ் மூலதனத்தின் நிலை, தேசிய உற்பத்தி பிரிட்டிஷ் சந்தையைச் சார்ந்திருந்தது—இந்த எல்லாக் காரணங்களாலும் இந்திய முதலாளி வர்க்கம் இந்தியாவைப் பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளின் (யுத்தத்துக்குப் பின் பிரிட்டிஷ் பேரரசு இவ்வாறு அழைக்கப்படலாயிற்று) வரம்புகளுக்குள் வைத்திருக்க முயன்றது. ஆனால் தேசிய அரசுரிமையைக் குலைக்காத வகையில் இந்தியாவைக் காமன்வெல்த்தின் பகுதியாக வைத்திருக்க ஏற்ற வடிவத்தை இந்திய அரசியல் தலைவர்கள் தேடினார்கள்.

1948, அக்டோபர் மாதம் லண்டனில் கூடிய காமன்வெல்த் முதலமைச்சர்கள் மகாநாட்டில் இந்தப் பிரச்சினைகள் விவாதிக்கப் பட்டன. புதிய டொமினியன்கள் (இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை)

பிரிட்டிஷ் காமன்வெல்த்தின் உறுப்பினர்களாக இருந்து கொண்டே பிரிட்டிஷ் அரசாட்சியிலிருந்து அரசியல் சுதந்திரம் பெற்றிருக்கும் என முடிவு செய்யப்பட்டது.

முன்னுள் ஆட்சித் தலைமை நாட்டுடன் அரசியல் உறவுகள் அறவே துணிக்கப்பட வேண்டும் என்று 1948, டிசம்பரில் ஜெய்பூரில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் சில பிரதிநிதிகள் வற்புறுத்திக் கோரினர்கள். ஆயினும், 1948ம் ஆண்டைய பேரரசு மகாநாட்டு முடிவுகளின் அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. அடுத்த பேரரசு மகாநாட்டில் (லண்டன், 1949, ஏப்ரல்) ஒரு சூத்திரம் தயாரிக்கப்பட்டது. இதன் படி அரசுரிமை பெற்ற குடியரசான இந்தியா பிரிட்டிஷ் அரச மகுடத்தைக் காமன்வெல்த்தின் உருவகச் சின்னமாக ஏற்றுக் கொண்டது. 1949, மே மாதம் அனைத்து இந்தியக் காங்கிரஸ் கமிட்டியும் அரசியல் நிர்ணய சபையும் இந்தச் செயலுக்கு ஒப்புதல் அளித்தன (அரசியல் அமைப்புச் சட்டத்தின் வாசகத்தில் பிரிட்டிஷ் காமன்வெல்த் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை என்பது சிறப்பான கவனத்துக்கு உரியது).

1928ம் ஆண்டு ''மோதிலால் நேரு அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே'' வகை செய்யப்பட்டுள்ளபடி மொழிவாரி (அதாவது தேசிய இனங்களின்) அடிப்படையில் இராச்சியங்கள் அமைக்கும் பிரச்சினை மீதும் ஜெய்பூர் காங்கிரஸ் மகாநாட்டில் இதே அளவு காரசாரமான விவாதம் நடந்தது. அந்தக் காலத்துக்குள் ஆந்திரம், கருநாடகம், கேரளம், மகாராஷ்டிரம் ஆகிய தேசிய இன இராச்சியங்கள் அமைப்பதன் ஆதரவாளர்களுடைய வற்புறுத்தலுக்கு இணங்க அரசியல் நிர்ணய சபையின் அரசியல் சட்ட மசோதா தயாரிப்புக் கமிட்டி மொழிவாரி மாநிலங்கள் பிரச்சினையை ஆராய விசேஷக் கமிஷன் ஒன்றை (இது தார் கமிஷன் என்று பெயர் பெற்றது) ஏற்படுத்தியது. 1948ம் ஆண்டு இறுதி வாக்கில் சமர்ப்பித்த தனது அறிக்கையில் தார் கமிஷன் மொழிவாரி (தேசிய இனவாரி) மாநிலங்கள் அமைக்கப்படுவதைக் கண்டிப்பாக எதிர்த்தோடு நில்லாமல் வரலாற்றுப் போக்கில் உருவாகி இருந்த இந்தியாவின் நிர்வாக-பிரதேசப் பிரிவினையில் எவ்வித மாறுதலும் செய்வதற்கு எதிராகக் கருத்து தெரிவித்தது.

தார் கமிஷன் அறிக்கையை ஆராய்ந்து இறுதி யோசனைகள் வெளியிடும் பொருட்டு ஜவாகர்லால் நேரு, வல்லபாய் படேல், பட்டாபி சீதாராமையா மூவரும் அடங்கிய ஒரு கமிட்டியை (உறுப்பினர் பெயர்களின் ஆங்கில முதல் எழுத்துக்களைக் கொண்டு இது ஜே. வி. பி. கமிட்டி எனப் பெயர் பெற்றது) காங்கிரசின் ஜெய்பூர் மகாநாடு நியமித்தது. தேசிய இனங்களின் அடிப்படையில் இராச்சியங்கள்

அமைக்கும் கோட்பாட்டை இந்தக் கமிட்டியும் நிராகரித்து விட்டது. அண்மையில் நாடு பிரிக்கப்பட்ட பின்னர் மொழிவாரிப் பொதுமைகளை ஒருங்கிணைப்பது உள் நாட்டு அரசியலில் பிரிந்து செல்லும் புதிய போக்குகளைத் தோற்றுவிக்கக் கூடும் என்று தன் கருத்துக்கு அது காரணம் காட்டியது. முன்னுள் சமஸ்தானங்களின் எல்லைகள் மீறப் படுவது இந்தியாவின் அரசு ஒற்றுமையைப் பலவீனமாக்கும் ஆதலால் நாட்டின் நிர்வாக-பிரதேசப் பிரிவினையை மாற்றி அமைப்பது விரும்பத் தக்கது அல்ல என்று கமிட்டி தன் அறிக்கையில் அழுத்திக் கூறியது.

இவ்வாறு, தேசிய இன அடிப்படையில் இராச்சியங்களை அமைப்பதற்கான போராட்டம் முதல் வட்டத்தில் தோல்வி அடைந்தது. ஆயினும், கருநாடகம், கேரளம், ஆந்திரம், மகாராஷ்டிரம், மகா குஜராத்து ஆகிய மொழிவாரி மாநிலங்கள் அமைக்குமாறு கோரி யுத்தத்துக்குப் பிந்திய ஆண்டுகளில் நடந்த இயக்கம் தொடர்ந்து விரிவடைந்து கொண்டு போயிற்று.

அரசியல் நிர்ணய சபை 1949ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ந் தேதி இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது. இந்தியாவின் அரசு அமைப்பைத் திண்மைப்படுத்தி ஆட்சி அதிகாரத்தை மையப்படுத்தும் விருப்பத்தால் நிறைந்திருக்கிறது இந்த அடிப்படைச் சட்டம்.

இந்தியா அரசுரிமை பெற்ற குடியரசாகப் பிரகடனம் செய்யப் பட்டது. குடியரசுத் தலைவருக்கு முக்கியமான அதிகாரங்கள் அளிக்கப் பட்டிருந்தன: நாட்டின் படைகளுக்கு அவரே தலைமைத் தளகர்த்தர்; முதலமைச்சரை அவரே நியமிப்பார்; மத்திய அரசாங்க அமைச்சர்களும் இராச்சியங்களின் ஆளுநர்களும் அவருடைய யோசனைப் படியே நியமிக்கப்படுவார்கள் (ஆளுநர்கள் மைய நிர்வாக அதிகாரத்தின் பிரதிநிதிகள் ஆவர்); குடியரசுத் தலைவர் நாடாளுமன்ற அமர்வுகளின் இடைக்காலத்தில் சட்டங்கள் பிறப்பிப்பார், ரத்து செய்வார், அரசியல் அமைப்புச் சட்டத்தின் செயல்பாட்டை நிறுத்தி வைக்கவும் செய்வார். மத்திய நாடாளுமன்றத்தாலும் இராச்சியங்களின் சட்ட மன்றங்களாலும் ஏற்கப் பெற்ற சட்டங்களை அவர் உறுதிப் படுத்துவார். சட்டங்களை மேற்கொண்டு ஆராய்வதற்காகவும் மாற்றுவதற்காகவும் சட்ட மன்றங்களுக்குத் திருப்பி அனுப்பும் உரிமை குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்ற உச்ச உறுப்பு மத்திய நாடாளுமன்றம் ஆகும். இது இரண்டு பிரிவுகள் கொண்டது. ஒன்று மக்கள் மன்றம் (லோக் சபா), மற்றது இராச்சியங்கள் மன்றம் (ராஜ்ய சபா). இராச்சியங்களின் சட்டம் இயற்றும் உறுப்புக்களாக விளங்கு

பவை சட்ட மன்றங்கள். இவையும் மக்கள் மன்றமும் ஐந்து ஆண்டு களுக்கு ஒரு முறை அனைத்து மக்கள் வாக்குரிமையின் அடிப்படையில் நேர்முக இரகசிய வாக்களிப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும். 21 வயது ஆன எல்லா இந்தியக் குடிகளுக்கும் தேர்ந்தெடுக்கும் உரிமை யும் 25 வயது (இராச்சியங்கள் மன்றத்துக்கு 30 வயது) ஆனவர் களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமையும் உண்டு.

இராச்சியங்கள் மன்றத்தின் உறுப்பினர்கள் இராச்சியங்களின் சட்ட மன்றங்களுடைய உறுப்பினர் அடங்கிய தேர்வாளர் குழுக் களால் தேர்ந்தெடுக்கப்படுவர் (மன்றத்தின் 12 உறுப்பினர்கள் பண் பாட்டு, விஞ்ஞான, சமூகச் செயல் துறைகளில் ஆற்றிய தொண்டு களுக்காகக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவார்கள்).

குடியரசுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இராச்சியச் சட்ட மன்றங்களின் உறுப்பினர்களும் அடங்கிய தனிப்பட்ட தேர் வாளர் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

சட்டம் இயற்றுதல், செயல்படுத்துதல், நீதி வழங்குதல் ஆகிய அதிகாரங்கள் அரசியல் சட்டத்தில் கண்டிப்பாக வேறுபடுத்தப் பட்டுள்ளன. மத்திய அரசாங்கமும் இராச்சிய அரசாங்கங்களும் (முதலமைச்சர்களின் தலைமையில்) முறையே மைய நாடாளுமன்றத் துக்கும் இராச்சியச் சட்ட மன்றங்களுக்கும் பொறுப்புள்ளவை.

இந்தியாவின் உச்ச நீதி மன்றமும் இராச்சியங்களின் தலைமை நீதி மன்றங்களும் சட்டத்தை விளக்க உரிமை பெற்றுள்ளன. சட்டங் கள் ''அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு முரண்படுபவை'' என்ற காரணத்தால் அவற்றின் செயல்பாட்டை நிறுத்தி வைக்க இந்த நீதி மன்றங்களால் முடியும்.

மையத்துக்கும் இராச்சியங்களுக்கும் இடையே பொருளாதார, அரசியல் செயல்களின் கண்டிப்பான எல்லை வரையறுப்புக்கு அரசி யல் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. நாட்டின் நிர்வாக அமைப்பு முழுவதிலும் தனியரசுக்கு உரிய உயர்தர மையப்பாடும் கூட்டரசு அமைப்பின் அம்சங்களும் சிறப்பான முறையில் இணைந் திருக்கின்றன.

தேசியப் புரட்சியின் வெற்றிக்குப் பின் பெறப்பட்ட பொது ஜனநாயகத் தன்மை வாய்ந்த மிக முக்கியச் சாதனைகள் அரசியல் சட்டத்தில் நிலைப்படுத்தப்பட்டன. இவையாவன: முதலாளித்துவ ஜனநாயகக் குடிமைச் சுதந்திரங்கள், தேசிய இன, மனித இன, சாதி அல்லது மத அடிப்படையில் ஏற்றத் தாழ்வுகளின் எவ்வித வடிவத்துக்கும் தடை.

தனியார் சொத்துக்குச் சட்டப் பாதுகாப்பு அரசியல் சட்டத்தின் 31வது பிரிவில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. சமூக நோக்கங்களுக்

காகச் சொத்தைப் பறிமுதல் செய்யும் உரிமையை இது வரம்புக்கு உட்படுத்துகிறது, இழப்பீட்டுக்கும் வகை செய்கிறது.

இந்தியாவில் முதலாளித்துவ ஜனநாயக அமைப்பு நிலைநாட்டப் பட்டதைப் புதிய அரசியல் சட்டம் பிரதிபலித்தது. தேசிய முதலாளித்துவ வளர்ச்சியின் சட்ட அடிப்படைகள் இதில் உறுதி செய்யப்பட்டன.

அரசியல் நிர்ணய சபையினால் இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது நாட்டின் வரலாற்று வாழ்வில் நிகழ்ந்த மாபெரும் திருப்பத்துக்குச் சட்ட வடிவம் அளித்தது. காங்கிரசின் முது பெரும் தலைவர்களில் ஒருவரும் காந்தியின் போராட்டத் துணை வருமான ராஜேந்திர பிரசாதை இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்கள் ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஜவாகர்லால் நேரு இந்தியாவின் முதலாவது பிரதமர் ஆனார்.

அரசியல் அமைப்புச் சட்டம் 1950 ஜனவரி 26ந் தேதி, சுதந்திர தின விழாவன்று,, செயல்படுத்தப்பட்டது. அப்போது முதல் இந்த நாள் தேசிய விழாவாக—குடியரசுத் திருநாளாகக்—கொண்டாடப் பட்டு வருகிறது.

இந்தியக் குடியரசு: சுதந்திரத்தின் அடித்தளம் நிறுவப்படுகிறது (1950—1964)

50க்களின் தொடக்கத்தில் உள்நாட்டு அரசியல் நிலைமை

சுதந்திர வளர்ச்சியின் முதல் ஆண்டிலேயே இந்தியக் குடியரசுக்கு ஆழ்ந்த பொருளாதார, அரசியல் இடர்கள் எதிர்ப்பட்டன. நாடு துண்டாடப்பட்டதன் கொடிய விளைவுகள் இன்னும் அகற்றப்பட வில்லை, யுத்தத்துக்குப் பிந்திய ஆண்டுகளின் இறக்கப் பகுதியிலிருந்து தொழில்துறை இன்னும் மேலே வரவில்லை, அதற்குள் நாட்டின் பல பிரதேசங்களில் விளைச்சல் பொய்த்துப் போனதால் உணவுப்பண்டப் பற்றுக்குறை ஒரேயடியாகக் கடுமை ஆயிற்று. திரளான மக்கள் பஞ்சத்திற்கு ஆளாகும் அபாயம் இந்தியாவில் ஏற்பட்டது.

உணவுப் பொருள்கள் தந்து உதவும்படி அமெரிக்க ஐக்கிய நாடு களுக்கு இந்திய அரசாங்கம் வேண்டுகோள் விடுத்தது. கடன் நிபந் தனைகள் பற்றி நீடித்த பேச்சு வார்த்தைகள் நடந்தன. இந்தியாவின் கொள்கை மீது செல்வாக்கை நிலைநாட்டுவதற்கு இந்தப் பேச்சு வார்த்தைகளின் போது அமெரிக்க ஏகாதிபத்தியம் முயன்றது. சோவியத் யூனியனும் சீன மக்கள் குடியரசும் உணவுப் பொருள் உதவி அளித்ததனால் தான் இந்திய-அமெரிக்கப் பேச்சு வார்த்தைகள் விரைவுபட்டன. விளைவாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கோதுமை வாங்கும் பொருட்டு முதலாவது பெரிய கடன் (19 கோடி டாலர்) 1951ம் ஆண்டு ஜூன் மாதம் வழங்கப்பட்டது.

உணவுப் பொருள் முட்டுப்பாடுகள், சிறப்பாகத் தெற்கு இராச் சியங்களில் ஏற்பட்டதால் நாட்டில் சமுதாய இறுக்கம் அதிகரித்தது. தொழிலாளர்கள், விவசாயிகளின் வெகுஜன நிறுவனங்களுடைய நடவடிக்கைகள் நசுக்கப்பட்டதையும் நிறுவன அமைப்புள்ள தொழிற் சங்க இயக்கத்தில் பிளவு ஏற்பட்டதையும் பொருட்படுத்தாமல் நகரத்திலும் நாட்டுப்புறத்திலும் வர்க்கப் போராட்ட ஆவேசம் குன்றாது ஓங்கி வந்தது.

காங்கிரசுக்குள் போராட்டம்.
புதிய இடதுசாரி எதிர்க் கட்சிகள் உருவாதல்

இடையறுத வெகுஜன இயக்கமும் சிக்கலான உள்நாட்டு அரசியல் நிலைமையும் ஒரு புறமும் வெளியிலிருந்து—பிரிட்டிஷ், அமெரிக்க முதலாளி வர்க்கத்தின் தரப்பிலிருந்து—அழுத்தம் மறு புறமும் இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த நிலைமையை வெகுவாகப் பாதித்தன.

அரசியல் சுதந்திரம் அடைந்த பின்னர் ஆழ்ந்த பொருளாதார, சமுதாய-அரசியல், பண்பாட்டு மாறுதல்களைச் செயல்படுத்தும் வரலாற்றுச் சிறப்புள்ள பணி இந்தியாவுக்கு எதிர் நின்றது. காலனிப் பாங்கு-நிலப்பிரபுத்துவப் பொருளாதார, சமுதாயச் சட்டகத்தை மாற்றி அமைப்பதும் தேசியப் பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் பின்தங்கிய நிலையை ஒழிப்பதும் சுதந்திர வளர்ச்சியின் அஸ்திவாரம் என்ற முறையில் பல்வகைப்பட்ட நவீனப் பொருளாதாரத்தை நிறுவுவதும் இன்றியமையாதவையாக இருந்தன.

இந்தப் பிரச்சினைகளின் தீர்வுக்கு இரண்டு அணுகு முறைகள் தேசியக் காங்கிரஸ் தலைமைக் குழுவில் வரையறுக்கப்பட்டன. தனியார் முதலாளித்துவத் தொழில் முயற்சியின் வரம்பற்ற வளர்ச்சி, நிலப்பிரபு வர்க்கத்துடனும் சமஸ்தான மன்னர்களுடனும் சமரசம், உழைப்பாளிகளின் போராட்டத்தை ஒடுக்குதல், அயல்நாட்டுக் கொள்கையில் மேற்கு நாடுகள் மீது சாய்வு—இது ஒரு போக்கு. உதவிப் பிரதமரும் உள்துறை அமைச்சருமான வல்லபாய் படேலைத் தலைவராகக் கொண்ட வலதுசாரிக் குழுவினர் காங்கிரஸ் தலைமைக் குழுவில் இந்தப் போக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்கள். அரசினர் துறையின் வளர்ச்சிக்கு முதலிடம் கொடுப்பது, தேசியப் பொருளாதார வளர்ச்சி அரசினால் கட்டுப்படுத்தி இயக்கப்படும் முறையில் திட்ட வகுப்பைப் புகுத்துவது, நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான நிலச் சீர்திருத்தங்களையும் பிற மாறுதல்களையும் படிப்படியாகச் செயல்படுத்துவது, உழைப்பாளி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வது, அயல்நாட்டுக் கொள்கையில் காலனியாதிக்க எதிர்ப்புத் தன்மை கொண்ட நடுநிலைமைப் போக்கைக் கடைப்பிடிப்பது—இது மறு போக்கு. ஜவாகர்லால் நேருவின் செயல்திட்ட ஆணைக் குறிப்புக்களில் இந்தப் போக்கு பிரதிபலித்தது. ஆளும் கட்சியின் தலைமையிலும் மையச் சட்ட நிர்மாண, நிர்வாக உறுப்புக்களிலும் நடு, இடதுசாரிக் குழுவினரால் இது தீவிரமாக ஆதரிக்கப்பட்டது.

இந்தியாவின் வளர்ச்சி குறித்த இந்த இரு போக்குகளின் ஆதர

வாளர்களுக்கு இடையே நடந்த போராட்டம் தேசியக் காங்கிரசின் உள் நிலைமையை வரையறுத்தது. பழமைப் பற்றுள்ள சக்திகள் எதிர்த்த போதிலும் யுத்தத்துக்குப் பிந்திய முதல் ஆண்டுகளில் தாம் திட்டமிட்ட அரசியல் போக்கைச் செயல்படுத்துவது நேருவுக்கு இயன்றது. ஆனால் ஆளும் கட்சியிலும் அரசிலும் இரண்டாவது தலைவர் ஆகிவிட்ட வல்லபாய் படேலின் அரசியல் ஆதிக்கமும் செல்வாக்கும் இடையறாது வளர்ந்துகொண்டு போயின. நிர்வாக இயந்திரத்தை வலுப் படுத்துவதிலும் நாட்டின் ஒற்றுமையை நிலைநிறுத்துவதிலும் தேசிய அரசமைப்பைத் திண்ணமாக்குவதிலும் அவர் ஆற்றிய தனிப்பட்ட தொண்டு அவரது செல்வாக்கு வளரப் பெரிதும் துணை புரிந்தது. முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ வட்டாரத்தினர் படேலைப் போற்றி வணங்கினார்கள், இந்திய அரசாங்கத்தின் ''இரும்பு மனிதராக'' மதித்தார்கள். 1950 ஜனவரியில் அமுலுக்கு வந்த புதிய அரசியல் அமைப்புச் சட்டம் சமூக வாழ்வில் ஓரளவு ஜனநாயக முறைகளை நிலைநாட்டியது எனினும், அதே ஆண்டு பிப்ரவரி மாதக் கடைசியில் நாடாளுமன்றம் (மறு வடிவம் பெற்ற அரசியல் நிர்ணய சபை) படேலின் யோசனைப்படி தடுப்புக் காவல் சட்டத்தை நிறைவேற்றியது. அரசியல் காரணங்களுக்காக ஒருவனைக் கைது செய்யவும் வழக்கோ விசாரணையோ இல்லாமல் ஓர் ஆண்டுக் காலம் வரை சிறையில் வைத்திருக்கவும் இந்தச் சட்டம் போலீசாருக்கு உரிமை அளித்தது.

1950ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் நாசிக் நகரில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டுக்குப் படேலின் தரப்பாளரான புருஷோத்தம் தாஸ் டண்டன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன்பின் படேலினதும் அவருடைய குழுவினரதும் செல்வாக்கு வெளிப்படையாக அதிகரித்தது. ஆளும் கட்சியின் தலைமையிலும் வட்டார நிறுவனங்களிலும் சூழ்நிலை சிக்கலாயிற்று. விளைவாகச் சில இடதுசாரிக் குழுக்கள் காங்கிரசிலிருந்து வெளியேறி விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சியையும் (மேற்கு வங்காளத்தில் வெகுஜன ஆதரவு பெற்றது) மக்கள் காங்கிரஸ் கட்சியையும் (உத்தரப் பிரதேசத்தில் முதன்மையான செல்வாக்கு பெற்றது) அமைத்தன. காங்கிரசுக்குள் இடதுசாரி எதிர்த்தரப்பு ஜனநாயக முன்னணியாக உருவாயிற்று. புதிய அனைத்து இந்தியச் சிறு முதலாளி வர்க்கக் கட்சியான கிஸான் மஸ்தூர் பிரஜா பார்ட்டி (விவசாயி-தொழிலாளி மக்கள் கட்சி)யின் சட்ட அமைப்பு மகாநாடு 1951 ஜூன் மாதம் பாட்னா நகரில் நடைபெற்றது. ஆச்சாரிய கிருபளானி, ரபி அகமது கித்வாய், இருவரதும் தலைமையில் காங்கிரசிலிருந்து வெளியேறிய ஜனநாயக முன்னணியும் விவசாயிகள்-தொழிலாளிகள் கட்சி, மக்கள் காங்கிரஸ் ஆகிய

வற்றின் சில நிறுவனங்களும் இணைந்ததால் உருவாயிற்று இந்தக் கட்சி.

ஒரு புறம் சில இடதுசாரிக் குழுக்கள் காங்கிரசிலிருந்து வெளியேறியதும் மறு புறம் 1950ல் வல்லபாய் படேல் காலமானதும் கட்சித் தலைமையில் கடைக்கோடி வலதுசாரியையும் இடதுசாரியையும் பலவீனப்படுத்தின. விளைவாக ஜவாகர்லால் நேருவின் தலைமையில் நடுநிலைவாதிகளின் நிலைமை எதார்த்தத்தில் வலுவாயிற்று. எனினும் கட்சியின் மைய உறுப்புக்களில் வலதுசாரியினரின் செல்வாக்கு இன்னமும் மிகக் கணிசமாக இருந்தது. இவர்கள் தேசியக் காங்கிரசின் தலைவர் புருஷோத்தம் தாஸ் டண்டனை மையமாகக் கொண்டு குழுமினர்கள். 1951, செப்டெம்பரில்தான் நெருங்கிக் கொண்டிருந்த சட்ட மன்றத் தேர்தல்களை எதிர்நோக்கியும் மக்களிடையே ஜவாகர்லால் நேருவுக்கு இருந்த அளவற்ற மதிப்பைக் கருத்தில் கொண்டும் காங்கிரஸ் செயற்குழு நேருவைக் கட்சியின் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுத்தது.

தேசியக் காங்கிரசுக்குள் சக்திகளின் துருவ முனைப்பும் புதிய சிறு முதலாளித்துவ அரசியல் நிறுவனங்களின் அமைவும் ஒரு புறம் நிகழ்ந்து கொண்டிருக்கையில் இடதுசாரி எதிர்த்தரப்பில் மேற்கொண்டு எல்லைப்பிரிவுகள் ஏற்படும் நிகழ்முறை தீவிரம் ஆயிற்று. 1951 ஏப்ரலில் இடதுசாரி சோஷலிஸ்டுகளின் குழு அருணா ஆஸப் அலியின் தலைமையில் சோஷலிஸ்டுக் கட்சியிலிருந்து விலகிவிட்டது. ஜெயப்பிரகாஷ் நாராயண், கட்சியின் மற்றத் தலைவர்கள் ஆகியோரின் கொள்கையை இந்தக் குழு கடுமையாகக் கண்டனம் செய்தது, கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துழைப்பதை ஆதரித்தது. கம்யூனிஸ்டுகளும் சிறு முதலாளித்துவப் புரட்சிகர ஜனநாயகவாதிகளும் ஒத்துழைப்பதற்கு அதிகச் சாதகமான நிலைமைகள் நாட்டில் உருவாகத் தொடங்கின. இந்தியாவின் கம்யூனிஸ்டு இயக்கத்தில் நிகழ்ந்த மாறுதல்கள் இதற்குத் துணை செய்தன.

கம்யூனிஸ்டுக் கட்சியில் இடதுசாரிப் பிறழ்ச்சி அகற்றப்படுகிறது. 50க்களின் தொடக்கத்தில் வெகுஜன இயக்கம்

குறுகிய இடதுசாரிப் பிரிவுவாதப் பிறழ்ச்சியும் ஆட்சி அதிகார உறுப்புக்கள் எடுத்துக்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகளும் கம்யூனிஸ்டு இயக்கத்துக்குப் பெருத்த கேடு விளைத்தன, வெகுஜனங்களுடன் கம்யூனிஸ்டுகளின் தொடர்புகளைக் கடுமையாகப் பாதித்தன. 1951ன் தொடக்கத்துக்குள் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவாகி விட்டது.

மொத்தம் 25 ஆயிரம் உறுப்பினர்களே அதில் இருந்தார்கள். ஆனால் கட்சிக்குள் இருந்த நலம் வாய்ந்த சக்திகள் குறுகிய இடதுசாரிப் பிரிவுவாதப் பிறழ்ச்சியை அகற்றுவதற்கான போராட்டத்தைத் தொடங்கின. 1950 மே மாதமே இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் முழுக் கூட்டம் நடைபெற்றது. மத்தியக் கமிட்டியின் புதிய தாற்காலிக உறுப்பினர்களை அது தேர்ந்தெடுத்தது. மத்தியக் கமிட்டியின் புதிய பொலிட்பியுரோ கட்சிச் செயல்திட்ட உருவரையைத் தயாரித்து 1951 ஏப்ரலில் வெளியிட்டது. நிலப்பிரபுத்துவத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிராகத் தொழிலாளி வர்க்கத்தினதும் அதன் கட்சியுடையவும் தலைமையில் விரிவான கூட்டணி அமைக்கும் கொள்கைப் போக்கு இதில் குறிக்கப்பட்டிருந்தது. தேசிய முதலாளி வர்க்கமும் இந்தக் கூட்டணியில் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்று உருவரை கூறியது. நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு மாற்றங்களைச் செயல்படுத்துவது கட்சியின் நோக்கம் என்று செயல்திட்ட உருவரை விதித்தது. 1951ம் ஆண்டு மே மாதம் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் முழுக் கூட்டம் நடந்தது. அது செயல்திட்டத்தையும் கொள்கை பற்றிய அறிக்கையையும் அங்கீகரித்தது. இரு தஸ்தாவேஜுகளும் இந்தியக் கம்யூனிஸ்டுகளின் கொள்கையில் நிச்சயமான திருப்பம் தொடங்கி விட்டதைக் குறித்தன. அதே ஆண்டு அக்டோபரில் நடந்த கம்யூனிஸ்டுக் கட்சியின் அனைத்து இந்திய மகாநாட்டில் செயல்திட்டம் சிறு திருத்தங்களுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மத்தியக் கமிட்டி, பொலிட்பியுரோ ஆகியவற்றின் புது உறுப்பினர்கள் பொதுச் செயலாளர் அஜய் கோஷின் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கட்சியில் ஏற்பட்டிருந்த இடதுசாரிப் பிரிவுவாதம் அகற்றப்பட்டது அஜய் கோஷின் பெயருடன் தொடர்பு கொண்டது.

இந்தியக் கம்யூனிஸ்டுகளின் செயல்திட்ட ஆணைக் குறிப்புகளிலும் போர்த்தந்திரத்திலும் ஏற்பட்ட சாதகமான மாறுதல்கள் நாட்டில் வெகுஜன இயக்கம் மேற்கொண்டு நடக்க வாய்ப்பு அளித்தன. சமூக வாழ்வில் ஜனநாயக முறைகளை அதிகமாகச் செயல்படுத்தும் திக்கில் நேரு அரசாங்கத்தின் உள்நாட்டுக் கொள்கையில் ஓரளவு திருப்பம் 1950ன் நடுவில் காணப்பட்டது. கம்யூனிஸ்டுகள், வெகுஜன நிறுவனங்களில் அவர்களோடு ஒத்துழைத்த ஜனநாயகவாதிகள் ஆகியோரின் வேலை இதனால் சற்று எளிதாயிற்று. கைதான கம்யூனிஸ்டுகள் 1950 கோடை முதல் சிறைகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுவிக்கப்படலாயினர். கம்யூனிஸ்டுக் கட்சியினதும் வேறு சில வெகுஜன நிறுவனங்களதும் நடவடிக்கைகள் மீது விதிக்கப்பட்டிருந்த

தடை சென்னையில் அவ்வாண்டு இலையுதிர் காலத்திலும் மேற்கு வங்காளத்தில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திலும் நீக்கப்பட்டது.

கம்யூனிஸ்டுகளின் தலைமையில் இயங்கிய விவசாயிகள் சங்கங்களது நடவடிக்கைகள் தீவிரமாயின. அனைத்து இந்தியக் கிஸான் சபா 1951 ஆகஸ்டில் சட்டபூர்வம் ஆக்கப்பட்ட பின்போ, இவை சிறப்பாக அதிகரித்தன. குறுகிய காலத்திற்குள் அதன் உறுப்பினர் எண்ணிக்கை 800 ஆயிரத்துக்கும் மேல் போய்விட்டது.

கம்யூனிஸ்டுகளின் தலைமையில் இயங்கிய அனைத்து இந்திய விவசாயிகள் சங்கத்தின் வட்டாரக் கிளைகளோடு கூடவே 40க்களின் முடிவிலும் 50க்களின் தொடக்கத்திலும் நாட்டுப்புறத்தில் வேறு விவசாயி நிறுவனங்களும் செயலாற்றி வந்தன. சோஷலிஸ்டுகளைத் தலைவர்களாகக் கொண்ட கிஸான் சபாக்கள் ஆறு இராச்சியங்களில் அமைக்கப்பட்டன, ஆனால் பீகார், உத்தரப் பிரதேசம் என்னும் இரண்டு இராச்சியங்களில் மட்டுமே அவை உண்மையில் வெகுஜன நிறுவனங்களாக இருந்தன. மாநிலக் கிஸான் சபாக்கள் 1949, மார்ச்சில் ஹிந்த் கிஸான் பஞ்சாயத்து (இந்திய விவசாயிகள் சங்கம்) என்னும் அனைத்து இந்திய நிறுவனமாக இணைக்கப்பட்டன. சிறிது காலத்துக்குப் பின் ஹிந்த் கிஸான் பஞ்சாயத்து சுவாமி சகஜானந்த சரசுவதி, யக்ஞதத்த சர்மா முதலிய விவசாயி ஜனநாயகவாதிகளின் தலைமையில் இயங்கிய விவசாயி நிறுவனங்களோடு சேர்ந்து ஸம்யுக்த கிஸான் சபா (ஒன்றித்த விவசாயிகள் சபை) என்ற நிறுவனமாக அமைந்தது. இந்தச் சபையின் பெரும்பாலான செல்வாக்கு பீகார், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளத்தின் சில மாவட்டங்கள் ஆகியவற்றில் பரவி இருந்தது.

தேசியக் காங்கிரஸ் நாட்டுப்புறத்தில் தனது வேலையில் வட்டாரக் கட்சி நிறுவனங்களையும் யுத்த காலத்திலேயே என். ஜி. ரங்கா அமைத்திருந்த தேசிய விவசாயிகள் காங்கிரசையும் (1950ல் இது இந்திய விவசாயிகள் மகாநாடு என மறு பெயர் பெற்றது) முக்கியமாகச் சார்ந்திருந்தது. இந்த நிறுவனம் விவசாயிகளில் வசதி பெற்ற மேல் நிலையினரை இலக்காகக் கொண்டது. நாட்டின் தென் பாகத்தில் ஆக அதிகச் செல்வாக்கு பெற்றிருந்தது. தேசியக் காங்கிரசின் நிலக் கொள்கையை இந்திய விவசாயிகள் மகாநாடு ஆதரித்தது.

இராச்சியங்களின் சட்ட மன்றங்களில் விவாதிக்கப்பட்டு வந்த ஜமீன்தாரி முறை ஒழிப்புச் சட்ட மசோதாவை மிக விரைவில் தீவிரமாக்கிச் செயல்படுத்துவதற்கான போராட்டம் நிறுவன அமைப்புள்ள விவசாயிகள் இயக்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. எல்லா இராச்சியங்களிலும் வெகுஜனப் பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. விவசாயிகளின் கோரிக்கைகள் அடங்கிய

விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டுச் சட்ட மன்றங்களுக்கும் நிர்வாக அதிகார அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டன. விவசாயிகளின் வெகுஜனப் போராட்டங்கள் சில சந்தர்ப்பங்களில் போலீசாருடன் மோதல்களில் முடிந்தன.

நிலத்துக்கான போராட்டத்தோடு கூடவே நிறுவன அமைப்பு உள்ளதும் தானுக எழுந்ததுமான விவசாயிகள் இயக்கத்தின் இரண்டாவது மிக முக்கியத் திசையாக இருந்தது குத்தகை நிலைமைகளைச் சீர்படுத்துவதற்கான போராட்டம். நிலச் சீர்திருத்தங்கள் வரப்போவதை எதிர்பார்த்து நிலப்பிரபு-ஜமீன்தார்கள் நிலையான குத்தகை உரிமை பெற்ற குத்தகைக்காரர்களைத் திரள் திரளாக நிலங்களிலிருந்து வெளியேற்றத் தலைப்பட்டார்கள். பாட்டக்காரர்களுக்குவாரக் குத்தகைக்கு விடப்படும் நிலங்களின் பரப்பை விரிவாக்குவது அவர்களுடைய நோக்கம். ஏனெனில் நிலச் சீர்திருத்தச் சட்டப்படி இந்த நிலங்கள் நிலச் சொந்தக்காரர்களிடமே விடப்பட்டன. விவசாயிகளின் எதிர்ப்பு நிலச் சொந்தக்காரர்களுடன் ஆயுதச் சண்டைகளாக வளர்ந்தன. எனவே சில இராச்சியங்களில் (உத்தரப் பிரதேசம், சென்னை முதலியவற்றில்) இராச்சிய அரசாங்கங்கள் குத்தகைக்காரர்களை நிலங்களிலிருந்து ஜமீன்தார்கள் வெளியேற்றுவதைத் தடை செய்யும் விசேஷ ஆணைகள் பிறப்பித்தன.

குத்தகைக்காரர்கள் எல்லோரிலும் அதிக உரிமையற்றவர்களும் சுரண்டப்பட்டவர்களும் ஆன பாட்டக்கார விவசாயிகளின் போராட்டங்களால் ஏற்பட்ட நிர்ப்பந்தத்தின் விளைவாக 40க்களின் இறுதியிலும் 50க்களின் தொடக்கத்திலும் குத்தகை உறவுகளை முறைப்படுத்தும் சட்டங்கள் பெரும்பாலான இராச்சியங்களில் நிறைவேற்றப்பட்டன. இவற்றின்படி மேல் வாரத்தின் உச்ச விகிதங்கள் நிறுவப்பட்டன, குத்தகை நிலத்திலிருந்து குத்தகைக்காரனை வெளியேற்றும் உரிமை குறுக்கப்பட்டது, இத்தகைய பிற நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆனால் வட்டார நிர்வாக-வரி விதிப்பு அலுவலகத்துடன் தொடர்புள்ள நிலச் சொந்தக்காரர்களின் எதிர்ப்பு காரணமாகவும் திரளான குத்தகைக்கார விவசாயிகளின் அரசியல் ஒழுங்கமைப்பு பலவீனமாக இருந்ததாலும் அவர்களது வர்க்க உணர்வின் தரம் தாழ்வாக இருந்ததாலும் இந்தச் சட்டம் அனேகமாகச் செயல்படுத்தப்படவில்லை. எனவேதான் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் இயங்கிய கிஸான் சபாக்கள் நிறைவேற்றப்பட்ட குத்தகைச் சட்டம் பற்றிக் குத்தகைக்காரர்களுக்குத் தகவல் தெரிவிக்கும் நோக்கத்துடனும் நிலப்பிரபுத்துவச் சுரண்டலைக் குறுக்குவதற்காகப் போராட அவர்களை ஊக்கும் பொருட்டும் குத்தகைக்கார விவசாயிகளுக்

கிடையே வெகுஜனக் கிளர்ச்சிப் பிரசாரமும் பிற வகை வேலைகளும் எங்கும் நடத்தின.

நாட்டின் சில பிரதேசங்களில் (உத்தரப் பிரதேசம், சென்னை, ஒரிஸ்ஸா, பஞ்சாப் முதலிய இராச்சியங்களின் சில மாவட்டங்களில்) விவசாயத் தொழிலாளர்களின் ஒழுங்கமைந்த போராட்டம் தொடங்கியது. இதை இயக்கியவை தனிப்பட அமைக்கப்பட்ட சங்கங்கள். நாட்கூலி உயர்த்தப்பட வேண்டும் என்றும் வேலை நிலைமைகள் சீராக்கப்பட வேண்டும் என்றும் கோரி இவை போராட்டம் நடத்தின. ஆயினும் விவசாயப் பாட்டாளிகளின் போராட்டம் வட்டார, வரம்புக்குட்பட்ட தன்மை கொண்டிருந்தது. விவசாயிகள் இயக்கத்தின் பொதுப் பெருக்கில் பெரிதும் முக்கியமற்ற இடத்தையே அது வகித்தது.

முதலாளித்துவச் சீருறப் புதுக்கலுக்கு (நீடித்த வேலை நாள், உற்பத்தி அளவுமான அதிகரிப்பு முதலியவற்றுக்கு) எதிராகவும் சம்பள உயர்வுக்காகவும் நடந்த பொருளாதார வேலைநிறுத்தங்களோடு கூடவே, 1948ல் பிறப்பிக்கப்பட்ட தொழிற் சட்டங்கள் தொழிலதிபர்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று கோரித் தொழிற்சங்கங்கள் நடத்திய போராட்டங்களும் 50க்களின் தொடக்கத்தில் தொழிலாளர் இயக்கத்தில் பெருத்த முக்கியத்துவம் பெற்றன. தொழிலதிபர்களுடனும் தொழிற்சட்டங்களின் நிறைவேற்றத்தைக் கண்காணித்த அரசாங்க அலுவலகங்களுடனும் உள்ள உறவுகள் குறித்த பிரச்சினைகள் தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளில் நாளுக்கு நாள் அதிக இடம் பெறலாயின. தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள் மீது எதார்த்தத்தில் அரசாங்கக் கண்காணிப்பை ஏற்படுத்தும் சட்ட மசோதா 1950ல் வெளியிடப்பட்டது. ஆனால் நிறுவன அமைப்புள்ள தொழிலாளி வர்க்கத்தின் உக்கிரமான எதிர்ப்பின் விளைவாக இது இடையில் கைவிடப்பட்டது.

1951—1953ல் நாட்டில் ஏற்பட்ட கடுமையான உணவுப்பண்ட முட்டுப்பாடும் விலைவாசி உயர்வும் இந்த ஆண்டுகளில் வேலைநிறுத்த இயக்கத்தின் வளர்ச்சியை மோசமாகப் பாதித்தன. பொருள் வசதிகள் இன்மையால் விளைந்த கடுமையான நிலைமைகளில் நீடித்த வேலை நிறுத்தங்கள் நடத்துவது தொழிலாளர்களுக்குக் கடினமாக இருந்தது. எனவேதான் இழக்கப்பட்ட வேலை நாட்களின் மொத்த எண்ணிக்கையில் பெருத்த ஊசலாட்டம் காணப்பட்டது. 1950ல் 130 லட்சமாய் இருந்த இந்த எண்ணிக்கை 1951—1954ல் 30—40 லட்சமாகக் குறைந்து விட்டது.

தொழிற்சங்க இயக்கத்தில் ஏற்பட்ட பிளவும் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் இயங்கிய தொழிற்சங்கங்களின் வேலையில் இடதுசாரிப்

பிரிவுவாதப் பிறழ்ச்சியும் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்துக்குத் தீங்கு விளைத்தன.

புறநிலை, அகநிலைத் தன்மை வாய்ந்த ஆழ்ந்த இடர்ப்பாடுகள் இருந்த போதிலும் தொழிலாளர்கள், விவசாயிகள், நகரச் சிறு முதலாளிகள் ஆகியோரின் வெகுஜனப் போராட்டங்கள் முதலாவது பொதுத் தேர்தல் முடிவுகளைப் பாதித்தன. குடியரசுப் பிரகடனத்துக்குப் பின்னர் இந்தியாவின் உள்நாட்டு அரசியல் வாழ்வின் முக்கிய நிகழ்ச்சியாக விளங்கின இந்தத் தேர்தல்கள்.

1951—1952ல் நடந்த முதலாவது பொதுத் தேர்தல்கள்

இந்தியா விரிந்து பரந்த நாடு. தவிர, போதிய எண்ணிக்கையில் நிர்வாக ஊழியர்களோ, முதலாளித்துவ நாடாளுமன்ற நடைமுறை அனுபவமோ அதற்கு இருக்கவில்லை. எனவே அங்கே முதலாவது பொதுத் தேர்தல்கள் (நாடாளுமன்றத்துக்கும் இராச்சியச் சட்ட மன்றங்களுக்கும்) ஒரே நேரத்தில் நடக்கவில்லை. 1951, அக்டோபர் 25 முதல் 1952, பிப்ரவரி 24ந் தேதி வரை அவை நடந்தன.

1951ல் நடந்த தேர்தல் பிரசாரம் பல்வேறு அரசியல் நிறுவனங்களுக்குத் தீவிரமாகச் செயல்பட வாய்ப்பு அளித்து, சமூக-அரசியல் சக்திகளின் அணிவரிசையைப் புலப்படுத்தியது.

முதன் முதலாக வாக்களிக்க இருந்த பெருந்திரளான வாக்காளர்களிடையே (இவர்களில் மிகப் பெரும்பாலோர் விவசாயிகளும் நகர மக்களின் பல்வேறு சிறு முதலாளித்துவ வட்டாரங்களைச் சேர்ந்தவர்களும்) தனது செல்வாக்கில் தேசியக் காங்கிரஸ் மற்ற எல்லா அரசியல் நிறுவனங்களையும் வெகு தூரம் முந்தி இருந்தது என்பது தேர்தல்களுக்கு முன்பே கண்கூடாகத் தெரிந்தது. தேசியப் புரட்சியை வெற்றிக்கு இட்டு வந்த காங்கிரசின் வரலாற்றுச் சிறப்புள்ள தொண்டும் ஆளும் கட்சி என்ற நிலையும் அதோடு வெகுஜன அரசியல் நிறுவனம் என்ற வகையில் அதன் தனித் தன்மையும் இதற்குக் காரணங்கள். தேசிய முதலாளி வர்க்கத்தின் மிகப் பெரிய, எல்லாவற்றிலும் அதிகச் செல்வாக்குள்ள கட்சியாக இருந்து கொண்டே காங்கிரஸ் விரிவான நகரச் சிறு முதலாளித்துவ வட்டாரங்களையும் விவசாயிகளையும் சார்ந்த அனைத்துத் தேசிய நிறுவனத்தின் தன்மையையும் காப்பாற்றி வைத்துக் கொண்டிருந்தது. கட்சியின் செயல்திட்ட ஆணைக் குறிப்புக்களிலும் போர்த்தந்திரப் போக்கிலும் இந்த வர்க்கங்களின் நலன்கள் முதன்மையாகக் கருத்தில் கொள்ளப்பட்டன. காங்கிரஸ் நிறுவனங்களின் தலைமையில் பல்வேறு சிறு முதலாளி வர்க்க வட்டாரங்களும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. கட்சி என்ற முறையில் காங்கிரசின் நிறுவன-அரசியல் கட்டமைப்பில்

இருந்த இந்தச் சிறப்புத் தன்மைகள் அதன் வெகுஜன அடித்தளத்தை நிலையாக வைத்திருக்கப் பெரிதும் உதவின.

தேசியக் காங்கிரஸ் இந்தியாவின் அரசியல் வாழ்வு என்னும் நிறமாலையில் நடு இடத்தில் இருந்தது எனலாம். இதன் வலப் பகுதியாக இருந்தவை நிலப்பிரபுத்துவ, வகுப்புவாதப் பிற்போக்கைச் சேர்ந்த பல்வேறு கட்சிகள். இவை யாவற்றிலும் அதிகச் செல்வாக்கு பெற்றிருந்தவை முன்னாள் சமஸ்தான மன்னர்களால் அமைக்கப்பட்ட ராமராஜ்ய பரிஷதும் இந்து வகுப்புவாதத்தின் மிகப் பழைய நிறுவனமான இந்து மகாசபையும் தேர்தல்களுக்கு முன் தோன்றிய ஜனசங்கமும் ஆகும். இந்து வர்த்தக முதலாளி வர்க்கத்தையும் நகர நடுத்தர வகுப்பினரில் மதவெறி மனப்பாங்குள்ள பகுதியையும் முதன்மையாகச் சார்ந்திருந்தது ஜனசங்கம்.

இவையும் பிற வலதுசாரி எதிர்த்தரப்பு நிறுவனங்களும் இந்திய சமூகத்தில் இருந்த நிலப்பிரபுத்துவ-நிலச் சொந்தக்கார, வியாபார-வட்டித் தொழில் வட்டாரங்களின் நலன்களைப் பெரும்பாலும் பிரதிநிதித்துவப்படுத்தின.

தனது செல்வாக்கை வெற்றிகரமாக மீண்டும் நிலைநாட்டி விட்ட கம்யூனிஸ்டுக் கட்சி, புரட்சிகர ஜனநாயகக் கட்சியான ''பார்வர்டு பிளாக்'', புரட்சிகர-சோஷலிஸ்டுக் கட்சி, மகாராஷ்டிரத்தின் தொழிலாளர்-விவசாயிகள் கட்சி ஆகியவையும் வேறு சில கட்சிகளும் இடதுசாரியில் இருந்தன. புரட்சிகர ஜனநாயகக் கட்சிகள் தனித்தனி இராச்சியங்களின் எல்லைகளுக்குள் செயலாற்றின. அவை அனைத்து இந்தியத் தன்மை கொண்டிருக்கவில்லை. மார்க்சியத்தின் கூறுகள் சிறு முதலாளித்துவ வகை சோஷலிஸத்துடனும் காந்தியத்துடனும் அவற்றின் கொள்கைவாதத்தில் அவற்றுக்கே உரிய விதத்தில் சேர்ந்திருந்தன.

சிறு முதலாளித்துவத் தன்மை வாய்ந்த சோஷலிஸ்டுக் கட்சியும் கிஸான் மஸ்தூர் பிரஜா பார்ட்டியும் தனி வகையான ''இடதுமையமாக'' விளங்கின. இவற்றின் கொள்கைவாதத்தின் மீது மேற்கத்திய சமூக-ஜனநாயகத்தின் செல்வாக்கு கணிசமாகப் படிந்திருந்தது. கம்யூனிஸ எதிர்ப்பும் சோஷலிஸ நாடுகளின்பால் பகைமையும் இந்தக் கட்சிகளின் கொள்கைக்கு இயல்பான பண்புகள்.

தேர்தல் பிரசாரத்தில் மொத்தம் சுமார் 80 கட்சிகள் பங்கு கொண்டன. ஒரே இராச்சியத்திற்குள், அல்லது இராச்சியத்தைச் சேர்ந்த தனித்தனிப் பிரதேசங்களின் எல்லைகளுக்குள் கூட வரையறுத்த செல்வாக்கு பெற்ற பற்பல நிறுவனங்கள் நிலவுவது; புரட்சிகர ஜனநாயகத் தன்மையும் முதலாளித்துவ-தேசியவாதத் தன்மையும் வாய்ந்த கொள்கைவாதமும் கொள்கையும் சிக்கலாகப் பின்னிப்

பிணைந்திருப்பது; முதலாளித்துவ நலன்களுக்கும் சிறு முதலாளித்துவ நலன்களுக்கும் தெளிவான பாகுபாடு இல்லாமை; அரசியல் நிறுவனங்களின் தோற்றத்திலும் செயல்பாட்டிலும் மத, சாதி, வட்டாரப் பண்புக் கூறுகள் ஆற்றும் கணிசமான பங்கு ஆகியவை இந்தியாவின் கட்சி-அரசியல் அமைவுக்குச் சிறப்பாக இயல்பானவை. இந்தியச் சமூகத்தின் சமுதாய-வர்க்க அமைவு இதில் போதிய அளவு முழுமையாகப் பிரதிபலித்தது. இந்தச் சமூகம் தனது மாதிரியில் (முதலாளித்துவத்துக்குப்) பரிணமிப்பது. சிறு முதலாளித்துவ வட்டாரங்களும் குழுக்களும் இதில் முக்கியமான இடம் பெற்றிருந்தன. சிதைந்து கொண்டிருந்த நிலப்பிரபுத்துவ அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கங்கள் இதில் இன்னும் நிலவின. உருவாகிக் கொண்டிருந்த இந்திய முதலாளி வர்க்கத்தின் சிறப்புத் தன்மை இந்தியாவின் அரசியல் வாழ்வு மீது தனது சுவட்டைப் பதித்தது. இந்த வர்க்கத்தின் முக்கியக் குழுக்கள் வட்டார, தேசிய, மத நலன்களே அடிக்கடி பிரதிநிதித்துவப்படுத்திய சிறு தொழிலதிபர்களால் ஆனவை. சாதி, மதம் போன்ற மரபு வழி வந்த சமுதாய ஏற்பாடுகளின் கணிசமான பாத்திரமும் இந்திய அரசியல் வாழ்வு மீது தன் சுவட்டைப் பதித்தது.

காங்கிரசின் தனி வகையான அரசியல் ஏகபோகத்துக்கு முடிவு கட்டவும் ஆட்சி அதிகாரத்துக்கு உரிமை கோரும் வலிய எதிர்த்தரப்பை நாட்டில் உரு ஆக்கவும் தங்களுக்கு இயலும் என்று வலது சாரி சோஷலிஸ்டுத் தலைவர்கள் தேர்தல்களின் முன் வேளையில் நம்பினர்கள். ஆனால் உண்மை நிகழ்ச்சி அவர்கள் போட்ட கணக்கைத் தவறு ஆக்கி விட்டது. பெரும்பாலான மக்கள் காங்கிரசை ஆதரித்தார்கள் என்றும் இடப்புறமிருந்து காங்கிரசின் பிரதான எதிர்த்தரப்பாக முன் வந்தது சில புரட்சிகர-ஜனநாயகக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்திருந்த கம்யூனிஸ்டுக் கட்சி என்றும் தேர்தல்கள் காட்டின. மேற்கு வங்காளம், பீகார், ஓரிஸ்ஸா, சென்னை, திருவிதாங்கூர்-கொச்சி ஆகிய சில இராச்சியங்களில் ஒன்றித்த கூட்டணி அமைப்பது கம்யூனிஸ்டுகளுக்கு இயன்றது.

வலதுசாரி சோஷலிஸ்டுக் கட்சிகளும் வகுப்புவாதப் பிற்போக்குக் கட்சிகளும் பெருந் தோல்வி அடைந்தன.

நாடாளுமன்றத் தேர்தல்களில் தேசியக் காங்கிரஸ் கட்சி 44.5 சதவிகிதம் வாக்குக்களும் 74.3 சதவிகிதம் இடங்களும் (பெரும்பான்மை முறைப்படி) பெற்றது. கம்யூனிஸ்டுக் கட்சியும் அதன் கூட்டாளிகளும் 6.7 சதவிகிதம் வாக்குக்களும் சுமார் 10 சதவிகிதம் இடங்களும் பெற்றன. வலதுசாரி சோஷலிஸ்டுகள் 12.6 சதவிகிதம் வாக்குக்கள் பெற்றாலும் 5 சதவிகிதத்துக்கும் குறைவான இடங்களே அவர்களுக்குக் கிடைத்தன. இந்து மகாசபை, ராமராஜ்ய பரிஷத்,

ஜனசங்கம் ஆகிய மூன்று வலதுசாரி கட்சிகளும் 4.8 சதவிகிதம் வாக்குகளும் 10 (480ல்) இடங்களும் மட்டுமே பெற்றன.

இராச்சியச் சட்ட மன்றங்களுக்கான தேர்தல்களில் காங்கிரசுக்கு மொத்த வாக்குக்களில் 42 சதவிகிதமும் மொத்த இடங்களில் 65.7 சதவிகிதமும் (2248 இடங்கள்) கிடைத்தன; கம்யூனிஸ்டுக் கட்சியும் அதன் கூட்டாளிகளும் ஒன்றித்த கூட்டணியாக 234 இடங்கள் பெற்றன. வலதுசாரி சோஷலிஸ்டுகளுக்கு 204 இடங்களும் மூன்று வலதுசாரி கட்சிகளுக்கும் 87 இடங்களும் கிடைத்தன.

மையத்திலும் இராச்சியங்களிலும் தனிக் கட்சி அரசாங்கங்கள் அமைக்கும் வாய்ப்பு காங்கிரசுக்குக் கிடைத்தது. தேர்தல் அறிக்கையில் விவரிக்கப்பட்டிருந்த சமூக-பொருளாதார அடிப்படை மாற்றத்துக்கான செயல்திட்டங்களைக் காந்தி, நேருவின் கட்சி நிறைவேற்றும் என நம்பித் திரளான வாக்காள வெகுஜனங்கள் அதற்கு ஆதரவு அளித்தார்கள். நாட்டின் பொதுஜன அபிப்பிராயத்தில் ஓரளவு இடதுசாரி நோக்கு ஏற்பட்டிருந்ததை மொத்தத்தில் தேர்தல்கள் காட்டின. 30 ஆயிரம் உறுப்பினர்கள் கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சி ஏறக்குறைய 60 லட்சம் வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றது. மேற்கு வங்காளத்திலும் சென்னை, ஹைதராபாது, திருவிதாங்கூர்-கொச்சி ஆகிய தெற்கு இராச்சியங்களிலும் அது சிறப்பாக வலிய நிலைகளை அடைந்தது. இந்த இராச்சியங்களில் வெகுஜன விவசாயி நிறுவனங்கள் அதன் அடித்தளமாக விளங்கின.

காலனியாட்சி-நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பை மாற்றி நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட பொருளாதார, சமூகச் சீர்திருத்தங்கள் குறித்த செயல்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அதிகாரத்தைத் தேர்தல்கள் ஆளும் கட்சிக்கு அளித்தன.

பொருளாதார, அரசியல் கொள்கை

நிலச் சீர்திருத்தங்கள்

காலனியாட்சிக் காலப்பகுதியிடமிருந்து மரபுரிமையாகக் கிடைத்த பொருளாதார அமைப்பை முதலாளித்துவப் பாங்கில் மாற்றுவதன் பொருட்டுப் பொருளாதாரக் கொள்கைத் துறையில் எடுத்துக் கொள்ளப்பட்ட முதலாவது முக்கிய நடவடிக்கை

40க்களின் முடிவிலும் 50க்களின் தொடக்கத்திலும் செயல்படுத்தப் பட்ட நிலச் சீர்திருத்தம் ஆகும்.

அரசுக்கும் விவசாயிகளுக்கும் நடுவில் உள்ள எல்லா ''இடையாட்களையும்'' அகற்றிவிடுவதாக 1946ம் ஆண்டுத் தேர்தல் அறிக்கையிலேயே காங்கிரஸ் பிரகடனம் செய்திருந்தது. ஆனால் ''இடையீடு'' என்ற முறை நிலப்பிரபுத்துவ-நிலவுடைமை அனைத்துமாக இன்றி ஜமீன்தாரி வகை நிலவுடைமை என்று மட்டும் பொருள் செய்து கொள்ளப்பட்டது. நிலப்பிரபுத்துவ-நிலச்சுவான்தார் வர்க்கத்தின் மையக்கருவாகவும் இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதாரத் தூணாகவும் இருந்த ஜமீன்தார்கள் நிலச்சுவான்தார் வர்க்கத்தின் கடைக்கோடிப் பிற்போக்காளிப் பகுதியாக விளங்கினார்கள். இந்தியத் தேசிய முதலாளி வர்க்கத்துடன் அவர்கள் ஆகக் குறைந்த அளவே தொடர்பு கொண்டிருந்தார்கள். எனவே அவர்களுடைய நிலவுடைமைகள் குறுக்கப்பட்டது நடப்பில் இருந்த நிலவுடைமை முறையை மாற்றும் நோக்கம் கொண்ட நிலச் சட்டத்தைச் செயல் படுத்துவதில் முதல் நடவடிக்கையாக இருந்தது. நிலச் சீர்திருத்தம் (உண்மையில் ஜமீன்தாரி ஒழிப்பு) பற்றிய சட்டம் 1947-1954ல் ஒவ்வொரு இராச்சியத்திலும் தயாரிக்கப்பட்டு இராச்சியச் சட்ட மன்றத்தால் ஏற்கப்பட்டது, பின்பு குடியரசுத் தலைவரால் உறுதிப் படுத்தப்பட்டது. அதே சமயம், நாட்டின் பயிர் நிலங்களில் 57 சதவிகிதம் அடங்கி இருந்த ரயத்துவாரிப் பிரதேசங்களில் நிலச் சுவான்தாரின் நிலவுடைமையை நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் அறவே பாதிக்கவில்லை.

ஜமீன்தாரிப் பிரதேசங்களில் நிலச்சொந்தக்கார ஜமீன்தார்களிடமிருந்த எல்லா நிலமும் உடைமை மாற்றத்துக்கு உள்ளாகவில்லை. ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டங்களின் படி ''ஸீர்'' எனப்பட்ட சொந்தப் பண்ணை வகையைச் சேர்ந்த நிலம் ஜமீன்தார்களுடைய சொத்தாக எஞ்சி இருந்தது. ஜமீன்தார்களின் பண்ணை வீடுகளும் அவற்றைச் சார்ந்த எல்லாக் கட்டுமானங்களும் நிலங்களும் விவசாயக் கருவிகளும் கால்நடைகளும் அரை நிலப்பிரபுத்துவப் பாங்கில் விவசாயிகளைச் சுரண்டித் திரட்டப்பட்ட பிறவகைப் பொருட் செல்வமும் ஜமீன்தார்களுக்கே உரியவையாக இருந்து வந்தன.

ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தின் சிறப்புத் தன்மை என்னவென்றால் உடைமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களுக்காக ஜமீன்தார்கள் மீட்புப் பணம் பெற்றார்கள் என்பதாகும். மொத்தத்தில் இதன் தொகை 700 கோடி ரூபாயாக இருந்தது. மீட்புப் பணம் செலுத்துவதற்குத் தலையூற்றாகப் பயன்பட்டது நிலவரி. முன்னாள் ஜமீன்தார்களுடைய எஸ்டேட்டுகளின் உடைமை மாற்றம் பெற்ற நிலங்கள்

மீது குத்தகைக்காரர்களிடமிருந்து அரசு இந்த வரியை வசூலித்தது. பெரும்பாலான இராச்சியங்களில் குத்தகைக்காரர்கள் முந்திய குத்தகைப் பணத்தை தொடர்ந்து செலுத்தினர்கள், ஆனால் இப்போது நேராக அரசாங்கத்துக்கே கொடுத்தார்கள். மறு புறம் ஜமீன்தார்கள் ஆண்டுதோறும் பெற்ற மீட்புப் பணம் நில வாடகையிலிருந்து அவர்களுக்கு முன்பு கிடைத்த வருவாய்களைக் காட்டிலும் குறைவாய் இருந்தது. குத்தகைக்கார விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட உபரிப் பண்டத்தின் பண மதிப்பு இந்தியச் சமூகத்தின் பல்வேறு ஆதிக்க வர்க்கங்களுக்கு இடையே ஓரளவு மறு பங்கீடு செய்யப்படுவது தேசிய முதலாளி வர்க்கத்துக்குச் சாதகமாக நிகழ்ந்தது: அரசாங்க பட்ஜெட்டில் புதிதாக வரவு வந்த தொகைகள் நாட்டில் முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டன. ஜமீன்தார்களுடைய நிலங்களின் பெரும் பகுதி உடைமை மாற்றம் செய்யப்பட்டது. இதன் ஒப்பளவு உத்தரப் பிரதேசத்தில் 87 சதவிகிதமும் பீகாரில் 84 சதவிகிதமும் ஏறத்தாழ இவ்வாறே பிற இராச்சியங்களிலும் இருந்தது. நிலச் சீர்திருத்தத்தின் இந்தக் கட்டத்தில் இந்தியாவின் நிலச்சுவான்தார் வர்க்கம் தனக்கு முன்பு சொந்தமாயிருந்த சுமார் 60 சதவிகிதம் நிலத்தை மொத்தத்தில் இழந்தது.

இவ்வாறு, ஜமீன்தார் வகை நிலச்சுவான்தார்களின் பெரும் பகுதி சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் பொருளாதார நோக்கில் கணிசமாகப் பலவீனம் அடைந்தது. ஆனால் பொருளாதார நோக்கிலும் அதன் விளைவாக அரசியல் நோக்கிலும் வலு இழந்த போதிலும் ஜமீன்தார்கள் நிலச்சுவான்தார் வர்க்கத்தின் பகுதியாக நிலைத்திருந்தார்கள்.

குத்தகைக்கார விவசாயிகளின் நிலைமையில் நிலச் சீர்திருத்தம் எத்தகைய மாறுதல்களை ஏற்படுத்தியது? ஜமீன்தார்கள் அல்லது துணை உடைமையாளர்களிடமிருந்து நேரடியாக நிலத்தைக் குத்தகைக்கு எடுத்த மேல்மட்டம் குத்தகைக்காரர்கள் ரயத்துவாரிப் பிரதேசங்களைச் சேர்ந்த நில உடைமையாளர்களின் அந்தஸ்துக்கு ஒப்பான அந்தஸ்தைப் பெற்றார்கள். நாட்டின் பெரும்பாலான இராச்சியங்களில் (அஸ்ஸாம், மேற்கு வங்காளம், ஓரிஸ்ஸா, பீகார், போபால், ராஜஸ்தான், ஆஜ்மீர், மத்தியப் பிரதேசம், ஆந்திரம், சென்னை முதலியன) மேற்குறித்த குத்தகைக்காரர்கள் புதிய நில அளவீடு நடந்ததும் இயல்பாக இந்த அந்தஸ்தை அடைந்தார்கள். மற்ற இராச்சியங்களிலோ (உத்தரப் பிரதேசம், பம்பாய், மைசூர் முதலியன) அவர்கள் மீட்புப் பணம் செலுத்தி இந்த உரிமைகளைப் பெற்றார்கள். மீட்புத் தொகை அவர்களுடைய நிலப் பகுதிகளுக்கு

உரிய வரிக்குப் பத்து மடங்காக உத்தரப் பிரதேசத்திலும் ஆறு மடங்காக சௌராஷ்டிரத்திலும் இருந்தது.

நிலச் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்ட பின் உடைமை மாற்றம் செய்யப் பெற்ற ஜமீன்தாரின் நிலங்களில் குத்தகைக்காரர்களின் நிலைமை பெரும்பாலான இராச்சியங்களில் சாராம்சத்தில் மாறவில்லை. அவர்களில் பெரும்பான்மையினர் முந்திய குத்தகை விகிதத்துக்கு ஈடான நிலவரியைச் செலுத்தி வந்தார்கள். முந்திய குத்தகையும் ஒப்பு நோக்கில் நிலவரி குறைக்கப்பட்ட இராச்சியங்களில் கூட இந்தக் குறைப்பு (சௌராஷ்டிரம் ஒன்று தவிர மற்றவற்றில்) அவ்வளவு கணிசமாக இல்லை.

ஆயினும், நிலச் சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்ட பின் நிலப் பிரபுத்துவத்துக்கு உரிய பல்வேறு தனி வரிகளின் வசூலிப்பு நின்று விட்டதால் எல்லாக் குத்தகைக்காரர்களும் சந்தேகமின்றிப் பயன் அடைந்தார்கள். ஆனால் கிராமவாசிகள் மீது விதிக்கப்பட்ட நேர்முக வரிகள் உயர்த்தப்பட்டதாலும் மறைமுக வரிகள் அதிகரித்ததாலும் இந்தப் பயன் எதார்த்தத்தில் இல்லாததற்கு ஒப்பாகி விட்டது.

நிலச் சீர்திருத்தங்கள் கடுமையான அரசியல் போராட்ட நிலைமைகளில் நிறைவேற்றப்பட்டன. நிலப் பிரச்சினைக்கு அடிப்படையான தீர்வு காணப்பட வேண்டும் என்று விவசாயிகள் கோரினார்கள். ஏற்கப்பட்ட நிலச் சட்டங்கள் விரைவில் அமுலாக்கப்பட வேண்டும் என்பது அவர்களுடைய குறைந்தபட்சக் கோரிக்கையாக இருந்தது. அதே சமயம், நிலச்சுவான்தார் வட்டாரங்களும் இராச்சிய அரசாங்கங்களிலும் சட்ட மன்றங்களிலும் இருந்த அவற்றோடு தொடர்பு கொண்ட குழுக்களும் சீர்திருத்தங்களை வன்மத்துடன் எதிர்த்தன.

நிலச் சீர்திருத்தங்கள் என்னதான் அளவறுத்தவை ஆனாலும் நிலப்பிரபுத்துவ, அரை நிலப்பிரபுத்துவ முறைகளில் விவசாயிகள் சுரண்டப்படும் பரப்பு குறுகுவதற்கு அவை காரணமாய் இருந்தன. அவற்றின் புறநிலையான, வரலாற்று நோக்கில் முற்போக்கு முக்கியத்துவம் இதில் அடங்கி இருந்தது. அதே சமயம், பண்ணை நிர்வாகத்தை முதலாளித்துவ அடிப்படையில் நடத்துவதற்கு மாற ஜமீன்தாரி ஒழிப்பு மட்டுமே நிலச்சுவான்தார்களுக்குப் போதிய அளவு ஊக்கம் அளிக்கவில்லை.

உண்மையிலோ, நிலச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துகையில் நிலச்சுவான்தார்களின் நிலவுடைமை பகுதியளவு காப்பாற்றி வைக்கப்பட்டதின் பொருளாதார நோக்கம், அவற்றை உருவாக்கியவர்களின் கருத்துப்படி, அதன் அடிப்படையில் பேரளவான முதலாளித்துவப் பண்ணையைப் பிற்பாடு அமைப்பதே ஆகும்.

ஆதலால்தான் ஜமீன்தாரி முறை ஒழிப்புச் சட்டங்கள் செய

லாக்கப்பட்டதோடு கூடவே வேறு சில நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன. எல்லா அரை நிலப்பிரபுத்துவ நிலச்சுவான்தார்களும் (ஜமீன்தார்கள் மட்டும் அல்ல) முதலாளித்துவப் பண்ணை நிர்வாகத்துக்கு மாறுவதை விரைவுபடுத்துவதை இவை நோக்கமாகக் கொண்டிருந்தன. நிலவுடைமையின் அதிகப்பட்சத்தை நிர்ணயிப்பதற்கான சட்டங்களின் தயாரிப்பு இவற்றில் ஒன்று. எனினும், சுதந்திரம் பெற்றதை அடுத்த முதல் ஆறு ஆண்டுக் காலத்தில், ஜமீன்தாரி முறைச் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்ட காரணத்தால் இந்தப் பிரச்சினை ஒரு வகையில் பின்னணிக்குப் போய்விட்டது. நில உடைமையின் அதிகப்பட்சம் (உச்ச வரம்பு) பற்றிய பிரச்சினை 1953ம் ஆண்டில் மீண்டும் உடனடிக் கவனத்துக்கு உரியது ஆயிற்று. இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கான முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் அமல்படுத்தப்பட்ட காலப் பகுதியில் நில உடைமையின் உச்ச வரம்பை நிர்ணயிப்பது நிலக் கொள்கைச் செயல் பாட்டின் முதற்படிப் பணிகளில் ஒன்றாக இருந்தது.

நில உடைமையின் உச்ச வரம்பு பற்றிய பிரச்சினை தேசிய முதலாளி வர்க்கத்துக்குள்ளும் ஆட்சி புரிந்த கட்சியிலும் ஆழ்ந்த கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தியது. முதலாவதாக, உச்ச வரம்பு ஜமீன்தார்களை மட்டும் இன்றி, நிலச்சுவான்தார் வர்க்கம் அனைத்தையும் பாதித்தது; இரண்டாவதாக, இந்த நடவடிக்கை நிலப்பிரபுத்துவ, அரை நிலப்பிரபுத்துவ நிலச்சுவான்தார்களோடு கூடவே முதலாளித்துவ வகையினர் உட்படப் பொதுவாகப் பெரிய நில உடைமையாளர்கள் எல்லோரையும் பாதித்தது; மூன்றாவதாக, பெரும்பாலான கிராமங்களில் நிலத்தைத் தங்கள் வசம் வைத்திருந்த விவசாய உயர் நிலையினர், தங்களுடைய நலன்களும் பாதிக்கப்படலாம் என்று அஞ்சினார்கள்.

1960க்களின் நடுவரை நில உடைமையின் உச்ச வரம்பு பற்றிய சட்டங்கள் பெரும்பாலான இராச்சியங்களில் நிறைவேற்றப்பட்டன. மற்ற இராச்சியங்களின் சட்ட மன்றங்களில் அவை நிறைவேற்றத்துக்கான வெவ்வேறு கட்டங்களில் இருந்தன. நாட்டில் 60 சதவிகிதத்துக்கு மேற்பட்ட நில உடைமைகளின் சராசரி அளவு 5 ஏக்கருக்கும் குறைவாக இருந்த நிலைமைகளில் இந்த மட்டத்துக்குப் பல மடங்கு (பாசன வசதி அற்ற நிலங்களுக்கு மைசூர் இராச்சியத்தில் 40 மடங்கும் ஆந்திரப் பிரதேசத்தில் 60 மடங்கும்) அதிகமான உச்ச வரம்பு அளவுகள் இராச்சியங்களில் விதிக்கப்பட்டன.

தவிரவும், பல இராச்சியங்களில் ஐந்து பேருக்கு அதிகமானவர்கள் கொண்ட குடும்பங்களுக்கு அதிகப்படி நிலம் வைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. ''பயன்பாடு உள்ள பண்ணைகள்'',

''கூட்டுறவுப் பண்ணைகள்'', நில உடைமைகளின் வேறு சில வகைகள் ஆகியவற்றின் மீது இந்தச் சட்டங்கள் செல்ல மாட்டா என்று பொருள்பட்ட சில பாராக்கள் சட்டங்களில் சேர்க்கப்பட்டன.

தயாரிக்கப்பட்ட சட்டங்கள் முழுமையாகச் செயல்படுத்தப் பட்டாலும் உடைமைகளின் பெரும் பகுதி—சிறு, நடுத்தர உடைமை கள்—பாதிக்கப்படாமலே இருந்து விடும் என்று தெரிய வந்தது. பாசன வசதி உள்ள நிலத்துக்கு 15 முதல் 30 ஏக்கர் வரையும் பாசன வசதி இல்லாத நிலத்துக்கு 80 முதல் 100 ஏக்கர் வரையும் விதிக்கப்பட்ட சராசரி உச்ச வரம்பு விவசாயிகளது பண்ணைகளின் பெரும்பாலான (60—70 சதவிகிதம்) பகுதிகளது அளவுகளைக் காட் டிலும் மிக அதிகம் என்பதும் தெரிய வந்தது. பெரும்பாலான விவ சாயிப் பண்ணைகளின் அளவுகள் வாய்க்கால் வசதியுள்ள பிரதேசங் களில் 5 ஏக்கராகவும் நீர் வசதியற்ற பிரதேசங்களில் 10 ஏக்கராக வும் இருந்தன. ஹைதராபாதிலும் வங்காளத்திலும் சட்டங்கள் அமுலாக்கப்பட்ட போது ஏற்பட்ட அனுபவம் காட்டியதுபோல அளவுக்கு மிஞ்சிய நிலம் அனேகமாக எங்கும் இருக்கவில்லை. சட்டங்களில் இருந்த ஏராளமான தப்பும் வழிகளைப் பயன்படுத்தி அவற்றை எளிதில் மீறுவது நிலச்சுவான்தார்களுக்கு இயன்றது. பெரு நிலச்சுவான்தார்களிடம் 10 கோடி ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் இருந்தது ஆயினும் தனி நில உடைமையின் விதிக்கப்பட்ட உச்ச வரம்புக்கு அதிகமாக 23 லட்சம் ஏக்கர் நிலம் தான் 1967ம் ஆண்டு வரையில் அறிவிக்கப்பட்டது.

''அதிகப்படி'' நிலங்கள் மீட்புப் பணம் கொடுத்து நிலச்சுவான் தார்களிடமிருந்து உடைமை மாற்றம் செய்யப்பட்டன. ஜமீன்தாரி முறை ஒழிப்பின் போது போலவே ரொக்கமாகவோ அரசாங்க நிதித் துறையால் தீர்க்கப்படக் கூடிய விசேஷக் கடன் பத்திரங்களின் வடிவிலோ தவணைத் திட்டப்படி செலுத்தக் கூடியதாய் இருந்த மீட்புப் பணத்தின் அளவுகள் ஜமீன்தார்களுக்கு கொடுக்கப்பட்ட மீட்புப் பணத்தின் அளவுகளைக் காட்டிலும் மிக அதிகமாய் இருந்தன.

நாட்டின் விவசாயம் முதலாளித்துவப் பாதைக்கு மாறுவதைப் பொருளாதாரத்துக்குப் புறம்பாகக் கட்டாயப்படுத்தும் சாதனத்தின் உதவியால் விரைவுபடுத்தத் தேசிய முதலாளி வர்க்கம் முயன்றது; நில உடைமையின் உச்ச வரம்பை நிர்ணயிக்கும் சட்டங்கள் உருவாக்கப்பட்டது இத்தகைய சாதனம் ஆயிற்று.

மறு புறம் இந்த நடவடிக்கைகள் செயல்முறை வர்க்கப் போராட் டத்திலிருந்து விவசாயிகளது கவனத்தைத் திருப்பின. எனவே, இந் திய நாட்டுப்புறம் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதைக்குத் திண்ண

மாகத் திரும்பி, விவசாயிகள் இயக்கத்தில் தாற்காலிகமாகத் தணிவு ஏற்பட்ட காலப் பகுதியில் உச்ச வரம்புப் பிரச்சினை மீண்டும் பின்னுக்குப் போய் விட்டது.

பூதான, கிராமதான இயக்கம்

நிலத்தின் மறு பங்கீட்டுக்கான போராட்டத்தின் விளைவாகத் தொடங்கியது பூதான இயக்கம். நிலம் இல்லாதவர்களும் குறைந்த நிலம் உள்ளவர்களுமான விவசாயிகளுக்கு இடையே பகிர்ந்து அளிக்கப்படுவதற்காக உடைமையாளர்கள் தாமாக விரும்பி நிலத்தை நன் கொடையாக வழங்க வேண்டும் என்பது பூதான இயக்கத்தின் சாரம். இந்த இயக்கத்தைத் தொடங்கியவர் பிரபல காந்தியவாதியான ஆச்சாரிய வினோபா பாவே. தெலிங்கானாவில் கிளர்ச்சிக்கார விவசாயிகள் நிலச்சுவான்தார்களின் நிலங்களை வலுவந்தமாகக் கைப்பற்றி மறு பங்கீடு செய்ததற்கு எதிராகப் பூதான இயக்கம் அவரால் ஆரம்பிக்கப்பட்டது. வினோபா பாவேயின் முதல் உரை 1951, ஏப்ரல் 15ந் தேதி அங்கே நிகழ்த்தப்பட்டது.

ஜமீன்தாரி ஒழிப்பு குறித்த சீர்திருத்தங்கள் உருவாக்கவும் செயல்படுத்தவும் பட்ட காலப் பகுதியில் இந்த இயக்கம் ஒப்பு நோக்கான வெற்றி அடைந்து வந்தது. நிலச்சுவான்தார்கள் நன்கொடையாக வழங்கிய—43 லட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட—நிலத்தின் பெரும் பகுதி 1955 வாக்கில் உத்தரப் பிரதேசத்திலும் பீகாரிலும் இருந்தது. ஜமீன்தாரிப் பிரதேசங்களில் நிலச் சீர்திருத்தம் செயல்படுத்தப் பட்டதன் விளைவாக விவசாயிகளின் போராட்டத்தில் தாற்காலிக மாக ஓரளவு தணிவு ஏற்பட்டதும் பூதான இயக்கத்தை மேற்கொண்டு நடத்துவதற்கான அவசியமும் மறைந்துவிட்டது. அது நாளடைவில் இல்லாததற்குச் சமமாகிவிட்டது. மேலும், நன்கொடையாக வழங்கப்பட்ட நிலத்தின் கணிசமான பகுதி பயிரிட ஏற்றது அல்ல என்றும் தெரிய வந்தது.

1955ம் ஆண்டின் முடிவில் இயக்கம் தனது கடைசிக் கட்டமான கிராமதானத்தில் பிரவேசிக்கத் தொடங்கியது. இயக்கத்தினது இந்தப் புதிய வடிவத்தின் சாராம்சம் என்ன என்றால் கிராமத்தில் உள்ள நிலம் அனைத்தும் ''ஆண்டவனுடையது'', ''ஒரு மனிதனுக்கும் உரியதல்ல'', கிராமச் சமுதாயம் அனைத்துக்கும் சொந்தமானது என்று அறிவிக்கப்பட்டதாகும். ஆயினும் இத்தகைய கிராமங்களுக்குள் உண்மையில் நிலவிய வர்க்க உறவுகளில் ஆழ்ந்த மாற்றங்கள் ஏற்பட்டு விட்டதை இது குறிக்கவில்லை. இந்த இயக்கம் பூதான இயக்கம் போன்று அவ்வளவு வெற்றி பெறவில்லை.

தேசியக் காங்கிரசும் அரசாங்கமும் பூதான, கிராமதான இயக்கங்களுக்கு எல்லா வகையான ஆதரவும் அளித்தன. நிலங்களைத் திரட்டுவதையும் பங்கிடுவதையும் நிர்வாக இயந்திரத்தின் கண்காணிப்புக்கு உட்படுத்தும் சட்டங்கள் முக்கிய இராச்சியங்களில் நிறைவேற்றப்பட்டன. இயக்கத்தின் ஆதரவுக்காகப் பணத் தொகைகள் அரசாங்க பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டன.

அனைத்து இந்திய விவசாயிகள் சங்கமும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் தொடக்கம் முதலே பூதான இயக்கத்தின்பால் விமர்சனத் தன்மை கொண்டதாயினும் நல்லெண்ணம் உள்ள போக்கைக் கடைப் பிடித்து வந்தன. பூதானம் இந்தியாவின் நிலப் பிரச்சினையைத் தீர்க்க வல்லது அல்ல என்று விவசாயிகள் சங்கத்தின் வட்டார ஊழியர்கள் விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினார்கள். அதே சமயம், நிலம் பகிர்ந்தளிக்கப்படுவதை அவர்கள் ஆதரித்தார்கள். நன்கொடைகள் மூலம் கிடைத்த நிலப் பகுதிகள் நிலம் இல்லாதவர்களும் குறைந்த நிலம் உடையவர்களுமான விவசாயிகளிடையிலும் விவசாயத் தொழிலாளர்களிடையிலும் மெய்யாகவே மறு பங்கீடு செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கோரிக்கையை அவர்கள் முன்வைத்தார்கள். நில உறவுகளின் துறையில் நிகழ்த்தப்பட்ட மாற்றங்கள் இந்தியாவின் நில அமைப்பில் நிலப்பிரபுத்துவ மீதமிச்சங்களின் ஆதிக்கம் ஒழிவதற்கு வகை செய்தன. ''தேவை காரணமாக'' உருவான சிறு விவசாயிக் குத்தகை முறை விவசாயி நில உடைமையின் முக்கிய வடிவமாக இருந்தது நின்று விட்டது. 1961ம் ஆண்டில் குத்தகைக் காரர்களின் பண்ணைகள் மொத்தப் பண்ணைகளில் 7.7 சதவிகிதமாக இருந்தன, மொத்த நிலப்பரப்பின் 4.22 சதவிகிதப் பகுதியை உள்ளடக்கி இருந்தன. அரைக் குத்தகைக்காரர்களின் பண்ணைகளோ, மொத்தப் பண்ணைகளில் 15.46 சதவிகிதமாக இருந்தன, மொத்த நிலப்பரப்பில் 18.19 சதவிகிதப் பகுதியை வியாபித்துக் கொண்டிருந்தன. விவசாயத்தில் சிறு அளவு சரக்கு உற்பத்தி முறையும் முதலாளித்துவ முறையும் உரு ஆவது விரைவுபட்டது. முதலாளித்துவ இயந்திரத் தொழில் பெருக்கக் கொள்கையைச் செயல்படுத்துவதற்கு வாய்ப்பான நிலைமைகளை இந்த நிகழ்ச்சிகள் யாவும் ஏற்படுத்தின.

அரசு முதலாளித்துவத்தின் தீவிரம் ஆக்கப்பட்ட வளர்ச்சி

தேசியப் பொருளாதாரக் கட்டுமானத்தில் அரசின் நிர்ணயகரமான பாத்திரம் பொருளாதாரக் கொள்கைத் துறையில் முதலாவது முக்கியச் செயல்திட்ட தஸ்தாவேஜுகளிலேயே (தொழில்துறைக்

கொள்கை குறித்து 1948ல் செய்யப்பட்ட அறிவிப்பு, 1950ம் ஆண்டு நாசிக்கில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானம் முதலியவற்றிலேயே) வலியுறுத்தப்பட்டிருந்தது. அரசியல் அமைப்புச் சட்டமும் இதை வலியுறுத்தியது. 1950ம் ஆண்டு அரசாங்கத் திட்டக் கமிஷன் நிறுவப்பட்டது. ஜவாகர்லால் நேரு இதற்குத் தலைமை தாங்கினார். கமிஷன் முதல் ஐந்தாண்டுத் திட்ட உருவரையைத் தயாரித்தது. 1952, ஏப்ரல் 1 முதல் 1956, மார்ச்சு 31 வரையுள்ள காலப் பகுதிக்கு, அதாவது, 1951/52—1955/56 நிதி ஆண்டுகளுக்கு உரியது இத்திட்டம். பொருளாதார வளர்ச்சிக்கான முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி, அடுத்து வந்த ஐந்தாண்டுத் திட்டங்களிலும் சரி, தொழில் துறையிலும் அடிப்படைக் கட்டுமானத் தொகுப்பிலும் அரசினர் துறையின் முதன்மையான வளர்ச்சிக்கு வகை செய்யும் கொள்கைப் போக்கு அடங்கி இருந்தது. தொழிற் பொருள்கள், விவசாய விளை பொருள்கள் ஆகியவற்றின் முக்கிய வகைகளுக்குத் திட்டமிட்ட உற்பத்திக் குறிக்கோள்கள் ஏற்படுத்தப் பட்டன. அரசினர் துறையிலும் தனியார் துறையிலும் முதலீடுகளின் அளவும் முக்கியத் திசைகளும் தீர்மானிக்கப்பட்டன. அரசினர் துறை யில் மூலதனக் குவிவின் ஊற்றுக்கண்களும் அளவும் நிச்சயிக்கப் பட்டன.

தொழில்துறையை மீட்டமைப்பதற்கான முன்னேற்பாட்டு நட வடிக்கைகளைச் செயல்படுத்துவது கணிசமான அளவு முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாக இருந்தது என்றால், இரண்டா வது (1956/57—1960/61), மூன்றுவது (1961/62—1965/66) ஐந் தாண்டுத் திட்டங்கள் நாட்டின் இயந்திரத் தொழில் பெருக்கத்துக் குரிய விரிவான செயல்திட்டத்தை உள்ளடக்கி இருந்தன.

பொருளாதார வளர்ச்சிக்கான ஐந்தாண்டுத் திட்டங்கள் இந்தியா வில் அரசு முதலாளித்துவக் கொள்கையின் யாவற்றிலும் திரண்ட வடிவமாக விளங்கின.

அரசு முதலாளித்துவக் கொள்கையைக் கடைப்பிடித்ததும் அரசி னர் துறையை நிறுவியதும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கு வேண்டிய முக்கியச் சாதனமாக இருந்தன. அதே சமயம், அரசினர் துறை அமைக்கப்பட்டது இந்தியச் சமூகத் தின் சமுதாய-பொருளாதார இயல்பை மாற்றுதது மட்டும் இன்றித் தனி முதலாளித்துவத் தொழில் முயற்சியின் வளர்ச்சிக்கும் வாய்ப்பு அளித்தது. பின்வரும் விவரங்கள் எடுத்துக் காட்டானவை: இந்தியா வின் பொருளாதார வளர்ச்சிக்குரிய முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் காலத்தில்(1950/51—1955/56, 1955/56—1960/61) தனியார் கூட்டுப் பங்குக் கம்பெனிகளின் செலுத்தப்பட்ட மூல

தனம் 57.4 சதவிகிதம் அதிகரித்தது. தொழிற்சாலைகள், கனியச் சுரங்கத் தொழில் ஆகியவற்றின் மொத்த ஆண்டு உற்பத்தியில் அரசுத் தொழில் நிலையங்களின் பங்கு 1960/61ல் சுமார் 10 சதவிகிதம் மட்டுமே இருந்தது.

ஆயினும் அரசினர் துறை அமைந்து வளர்ச்சி அடைந்ததன் விளைவாக நாட்டின் பொருளாதார, அரசியல் சூழ்நிலையில் ஓரளவு மாறுதல்கள் ஏற்பட்டன. முதலாவதாக, இந்தியாவின் இயந்திரத் தொழில் பெருக்கத்துக்கு அடிப்படையான கனரகத் தொழிலின் முக்கிய நிறுவனங்கள் அரசினர் துறையில் குவிக்கப்பட்டுள்ளன; இரண்டாவதாக, அரசினர் துறை தனியார் துறையைக் காட்டிலும் விரைவாக வளர்ச்சி அடைந்து வரும். அரசினர் கம்பெனிகளின் செலுத்தப்பட்ட மூலதனம் 1951-1961ல் 2,630 லட்சம் ரூபாயிலிருந்து 54,520 லட்சம் ரூபாயாக (அதாவது, 20 மடங்குக்கும் மேல்) எதார்த்தத்தில் அதிகரித்தது. இதே காலப் பகுதியில் தனியார் கம்பெனிகளின் செலுத்தப்பட்ட மூலதனம் 74, 910 லட்சம் ரூபாயிலிருந்து 1,18,940 லட்சம் ரூபாயாக (1.5 மடங்குக்குச் சிறிதே கூடுதலாக) அதிகரித்தது. அரசினர் கம்பெனிகளின் செலுத்தப்பட்ட மூலதனம் 1951ல் தனியார் கம்பெனிகளின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் சுமார் 3.5 சதவிகிதமாக இருந்தது. 1961லோ இது 46 சதவிகிதம் ஆகிவிட்டது. புறநிலையாக ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை கொண்ட அரசினர் துறை நாட்டின் வெவ்வேறு அரசியல் குழுக்களால் ஒரே மாதிரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. பொது ஜனநாயகத் தன்மை கொண்ட மாற்றங்கள் குறித்த செயல்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு, சிறப்பாகத் தனியார் முதலாளித்துவத் தொழில் முயற்சிகளைக் குறுக்குவதற்கு, மிக இன்றியமையாத பொருளாதார அடிப்படையாக அரசினர் துறையை ஜனநாயகச் சக்திகள் மதிக்கின்றன. பிற்போக்குச் சக்திகளோ, அதன் அடுத்துவரும் வளர்ச்சியைக் குறுக்கும் படியும் இந்தியப் பெரு முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கு அதை அடிப்படுத்தும் படியும் வற்புறுத்துகின்றன.

நாட்டினது தொழில் பெருக்கத்தின் தொடக்கமும் அதன் சிறப்புத் தன்மைகளும்

இந்தியாவின் காலனி-நிலப்பிரபுத்துவப் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றி நிறுவப்படுகையில் அரசின் பாத்திரம் இடையறாது வளர்ந்து கொண்டு போயிற்று. அரசினர் தொழில் நிலையங்களோடு (உற்பத்தித் துறையிலும் சரி, வினியோகத் துறையிலும் சரி) பொருளாதாரத்தை முறைப்படுத்துவதற்காக அரசினர் மேற்கொண்ட

பல்வேறு வகையான நடவடிக்கைகளும் அரசு முதலாளித்துவத்தின் மிக முக்கிய வடிவமாக விளங்கின. தேசிய உற்பத்தியைக் காப்பதும் தனியார் துறையின் செயல்களைக் கட்டுப்படுத்துவதும் தேசியப் பொருளாதாரத்தின் குறித்த கிளைகளது வளர்ச்சியை (தனியார் துறை, அரசினர் துறை, இரண்டின் வரம்புகளுக்குள்ளும்) ஊக்குவதும் (அல்லது குறுக்குவதும்) இந்த நடவடிக்கைகளின் நோக்கங்களாக இருந்தன.

அரசின் பொருளாதார, நிதித் துறை உறுப்புக்கள் முறைப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கையில் சிறப்பான பல சட்டங்களை ஆதாரமாகக் கொண்டன. இவையாவன: 1947—பங்குகளின் வெளியீடு மீது கட்டுப்பாடும் செலாவணி-இறக்குமதிக் கட்டுப்பாடும் பற்றிய சட்டங்கள்; 1949—வங்கித் தொகுப்பின் செயல்களை முறைப்படுத்தும் சட்டம்; 1951—தொழில் துறையின் வளர்ச்சியையும் முறைப்பாட்டையும் பற்றிய சட்டம்; புதிய தொழில் நிலையங்கள் அமைப்பதற்கு லைசென்ஸ் வழங்கவும் இயங்கி வந்த நிலையங்களில் முக்கியமான விஸ்தரிப்பு செய்யவும் இந்தச் சட்டம் வகை செய்தது. 1955—உள்நாட்டுச் சந்தையில் அடிப்படைச் சரக்குகளின் விலைகள்மீது கட்டுப்பாடு பற்றிய சட்டம்; 1956 (1960 செய்யப்பட்ட சேர்க்கையுடன்)—தொழில் துறைக் கம்பெனிகள் பற்றிய சட்டம்; இது மானேஜிங் ஏஜென்சிகளது செயல் பாட்டைக் குறுக்கியது. வேறு பல சட்டங்களும் இத்தகையன.

தனியார் துறையை முறைப்படுத்தியும் கட்டுப்படுத்தியும் வந்த அதே சமயத்தில் அரசு தனியார் முதலாளித்துவத் தொழில் முயற்சிக்கு நேரடியாக ஊக்கமும் அளித்து வந்தது. விலைக் கொள்கைத் துறையில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கைகள், காப்புத் தீர்வை விதிப்பு, வரி விதிப்பில் சலுகைகள் முதலியன இவ்வாறு ஊக்கம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன. தொழில் வளர்ச்சிக்குக் கடன் வசதிகள் ஏற்படுத்திய பல்வேறு அரசு, அரையரசு முதலீட்டு நிறுவனங்கள் மிக முக்கியப் பங்காற்றின. இந்தியாவின் தொழில்-நிதி வாரியம் (1948ல் நிறுவப்பட்டது), 1951க்குப் பிறகு அமைக்கப்பட்ட இராச்சிய நிதி வாரியங்கள், தேசியத் தொழில் வளர்ச்சி வாரியம் (1954) முதலியன இவை. எல்லாவற்றிலும் பெரிய தனியார் வர்த்தக வங்கியான இம்பீரியல் பாங்கு 1955ல் தேசிய உடைமை ஆக்கப்பட்டு ஸ்டேட் பாங்கு (அரசு வங்கி) என மறு பெயரிடப்பட்டது. இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கான தனிப்பட்ட அரசு வங்கி 1964ம் ஆண்டு திறக்கப்பட்டது. மொத்தத்தில் 1956-1966ல் தனியார் தொழில் அதிபர்களுக்கு அரசிடமிருந்து ஏறக்குறைய 900 கோடி ரூபாய் நிதி உதவியாகக் கிடைத்தது.

சிறு அளவுத் தொழில்களுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டுத் தனிப்பட்ட தேசிய வாரியம் நிறுவப்பட்டது. அரசு நிதி உதவி வழங்கியதோடு நில்லாமல் சிறு இயந்திரத் தொழில்களுக்கும் கைத் தொழில் உற்பத்திக்கும் இயந்திர சாதனங்களும் மூலப் பொருள்களும் சப்ளை செய்தும் தயாரான பண்டங்களுக்கு விற்பனை வசதி அளித்தும் உதவியது.

அரசின் உதவி உயர்படி, தாழ்படி முதலாளித்துவ அமைப்புக்களில் மூலதனக் குவிவைச் சாத்தியம் ஆக்கியது.

தேசிய உற்பத்தியை முறைப்படுத்தவும் ஊக்கவும் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்தில் முதலீட்டின் அளவுகளிலும் திசைகளிலும் ஆழ்ந்த மாறுதல்களை ஏற்படுத்தின. தொழில் நிலையங்களின் மூல நிதிகளில் முதலீடுகள் 1948-1962ல் 910 கோடி ரூபாயிலிருந்து (1948 விலைகளில்) 3,600 கோடி ரூபாயாக அதிகரித்தன. எல்லாப் புதிய முதலீடுகளதும் பெரும் பகுதி கனரகத் தொழிலில்—இரும்பு வகை, இரும்பற்ற வகை உலோக வார்ப்பு, இயந்திர நிர்மாணம், பெட்ரோலியச் சுத்திகரிப்பு, இரசாயனம், கட்டுமானப் பொருள் உற்பத்தி, மின் ஆற்றல் உற்பத்தி ஆகியவற்றில்—செய்யப்பட்டது.

கனரகத் தொழிலில் முதலீடுகளின் அதிகரிப்பு உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தித் தொழில், நுகர்வுப் பொருள் உற்பத்தித் தொழில் (முதலாவது, இரண்டாவது) உட்பிரிவுகளின் ஒப்பு நிலையில் கணிசமான மாறுதல்களை ஏற்படுத்தியது. காட்டாக, 1951ல் முதலாவது பிரிவைச் சேர்ந்த நான்கு பெருங் கிளைகள் (இயந்திர நிர்மாணமும் உலோக வார்ப்பும், இரும்பு வகை உலோக வார்ப்பு, இரசாயனம், சிமெண்டுத் தொழில் ஆகியன) பொருள் பண்பாட்டுத் தொழிலில் செய்யப்பட்ட முதலீடுகளின் மொத்தத் தொகையில் 24.3 சதவிகிதத்தைக் குவித்திருந்தன. 1955ல் இது 31.5 சதவிகிதமும் 1960ல் 48.9 சதவிகிதமும் ஆகிவிட்டன. 60க்களின் நடுவில் மொத்த உற்பத்தியின் மதிப்பில் இரு பிரிவுகளின் பங்கும் சமம் ஆகி விட்டன.

முதலீடுகள் அதிகரித்ததன் விளைவாக நாட்டின் தொழில் வளர்ச்சி விரைவுபட்டது. 1937 முதல் 1947 வரை தொழில் பொருள் உற்பத்தியில் ஆண்டுதோறும் அதிகரிப்பு 0.6 சதவிகிதமாக இருந்தது. 1951—1955ல் இது 6.5 சதவிகிதமாக உயர்ந்தது. 1956—1960ல் 7.3 சதவிகிதமாகவும் 1961—1962ல் 7.7 சதவிகிதமாகவும் வளர்ந்தது. யாவற்றிலும் அதிக ஏற்றம் கனரகத் தொழிலின் நவீனக் கிளைகளில் நிகழ்ந்தது.

1948—1964ல் தொழில் உற்பத்தியின் மொத்த அளவு 2.5 மடங்கு அதிகரித்தது.

நாட்டில் தொடங்கி இருந்த தொழில் பெருக்கத்தை இயக்கும் தலைமைப் பாத்திரம் வகித்தது அரசு. பேரளவுத் தொழில் முயற்சியில் அரசின் பங்கு இந்தியாவில் புதிய உற்பத்திக் கிளைகள் உருவாக வழி கோலியது. இந்தக் கிளைகள் தேசிய அடிப்படையில் மறு உற்பத்திக்கு அஸ்திவாரம் அமைத்தன. திட்ட வகுப்பு உள்ளிட்ட அரசு-முதலாளித்துவ நடவடிக்கைகளின் விளைவாக அரசினர் துறை வளர்ச்சி வேகத்தில் தனியார் துறையை விஞ்சியது. தொழில் துறை அனைத்தின் மொத்த உற்பத்தியில் அரசினர் துறையின் பங்கு 1966ல் சுமார் 18 சதவிகிதமாக இருந்தது.

இந்தியாவின் தொழில் பெருக்கம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முரண்பாடுள்ள போக்குக்களைத் தோற்றுவித்தது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட போது காலனியாட்சி இந்தியாவின் பிரிவினையால் பொருளாதாரத் துறையில் ஏற்பட்டிருந்த முதன்மையான கேடுகள் அகற்றப்பட்டன. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின் அரசினர் துறையை முதன்மையாக விரிவாக்குவதன் வாயிலாக நாட்டில் தொழில் பெருக்கம் செய்யும் கொள்கைப் போக்கு மேற்கொள்ளப்பட்டது. தொழில் கொள்கை பற்றி இந்திய அரசாங்கத்தின் புதிய தீர்மானம் 1956, ஏப்ரல் 30ந் தேதி செய்யப்பட்டது. தொழில் முயற்சியில் அரசு தனி உரிமையோ முதன்மையான உரிமையோ பெற்றிருந்த கிளைகளின் வட்டம் 1948ம் ஆண்டைய அறிவிப்புடன் ஒப்பிடும்போது இந்தத் தீர்மானத்தில் கணிசமாக விரிவாகி இருந்தது. ஆயினும் தேசியப் பெரு முதலாளி வர்க்கத்தின் வற்புறுத்தல் காரணமாகத் தனியார் துறைக்குப் பெருத்த சலுகைகள் 50க்களின் இறுதியிலும் 60க்களின் தொடக்கத்திலும் அளிக்கப்படலாயின.

தேசியப் பொருளாதாரத்தின் சில கிளைகளில் தனியார் மூலதனத்தின் செயல் குறுக்கப்பட்டது என்றாலும் மொத்தத்தில் அரசு முதலாளித்துவம் இந்தியாவில் தனியார் முதலாளித்துவத் தொழில் முயற்சிக்குத் தனது முனையைக் கணிசமாக விரிவுபடுத்த வசதி அளித்ததோடு மூலதனம் செறிந்து மையப்படும் நிகழ்முறை, சிறப்பாக உச்ச மட்டப் பகுதிகளில், தீவிரமாகவும் உதவியது. இந்தியப் பெரு முதலாளி வர்க்கத்தின் ஏகபோக உயர்படியினரின் நிலைகள் உறுதிப்பட்டன. இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் காலப் பகுதியில் (1956—1966) தனியார் துறைக்கு வழங்கப்பட்ட மொத்த அரசு நிதி உதவியில் பாதிக்கு மேல் எல்லாவற்றிலும் பெரிய 73 வாரியங்களுக்குக் கிடைத்தது என்பது எடுத்துக் காட்டான முக்கியத்துவம் உள்ளது.

இந்தியாவின் பெரு முதலாளி வர்க்கத்தினது செயல் பரப்புக்கள் மேலும் விரிவடைந்ததால் சிறிய, பெரிய தொழில் முயற்சிகளின் வளர்ச்சியில் இருந்த இயைபுப் பொருத்தமின்மை அதிகரித்தது. இந்தியாவினது பொருளாதாரக் கட்டமைப்பின் சிறப்புத் தன்மை பல்வேறு அமைப்புகள் அதில் ஒருங்கே நிலவியது ஆகும். இவற்றில் தாழ்நிலை (அரைச் சுயதேவைப் பூர்த்தி, சிறு அளவு உற்பத்தி, சிறு அளவு முதலாளித்துவ) அமைப்புக்களில் உழைக்கும் மக்களில் பெரும் பான்மையினர் குவிந்துள்ளனர். விவசாயம், இயந்திரத் தொழில், தேசியப் பொருளாதாரத்தின் பிற கிளைகள் ஆகியவற்றில் இவர்கள் வேலை செய்கின்றனர். தொழில் பெருக்க நிகழ்முறை 60க்களின் முடிவு வரை பெரும்பாலும் நவீன, தொழிற்சாலை உற்பத்தியைத் தான் உள்ளடக்கி இருந்தது. எனவே தாழ்நிலை, உயர்நிலை அமைப்புக் களுக்கு இடையே இருந்த இயைபுப் பொருத்தமின்மை அதிக மாயிற்று. வளர்ச்சி வேகத்தில் கனரக இயந்திரத் தொழில் வெகு வாக முன் சென்றதால் முதலாவது, இரண்டாவது உட்பிரிவுகளின் வளர்ச்சித் தரங்களுக்கு இடையே 60க்களின் நடுவில் ஏற்றத் தாழ்வு ஏற்பட்டது. இவை எல்லாவற்றின் விளைவாகவும் தொழில் பொருள் சந்தையில் ஆழ்ந்த இடர்கள் நேர்ந்தன, உற்பத்தித் திறன்கள் அரை குறையாகவே பயன்படுத்தப்பட்டன. முடிவில் தொழில் பெருக்கக் காலக் கெடுவுகள் நீடித்தன, திட்டங்களின் குறிக்கோள்கள் முழுமை யாக நிறைவேற்றப்படவில்லை. தேசியப் பொருளாதாரத்தின் முக்கியக் கிளையான விவசாயம் தொடர்ந்து பின்தங்கியது இந்தியா வின் பொருளாதாரக் கட்டமைப்பை அடிப்படையில் மாற்றும் நிகழ்முறைக்குப் பெருத்த முட்டுக் கட்டையாக இருந்தது.

விவசாயத்தில் மாறுதல்கள்

நாட்டின் தொழில் பெருக்கமும் நகரங்களில் முதலாளித்துவ அமைப்பின் வளர்ச்சியும் இந்திய நாட்டுப்புறத்தின் மீது மேலும் மேலும் அதிகரித்த செல்வாக்கு செலுத்தத் தொடங்கின. நிலச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டதும் இந்தியாவின் நில அமைப்பை முதலாளித்துவப் பாங்கில் மாற்றுவதற்கு அதிகச் சாதகமான நிலைமை களை ஏற்படுத்தியது.

நிலச் சீர்திருத்தங்கள் நாட்டின் பாதி நிலப்பரப்பில் (ரயத்து வாரிப் பிரதேசங்களில்) செய்யப்படாததாலும் முன்னுள் ஜமீன்தாரி நில உடைமைகளில் கணிசமான பகுதி நிலங்கள் சீர்திருத்தங்களுக்கு முன்பே குத்தகைக்காரர்களின் உச்ச மட்ட வட்டாரத்தினரின் பண்ணைகளில் குவிந்திருந்ததாலும் சீர்திருத்தத்துக்குப் பிந்திய காலப்

பகுதியில் கூடப் பயிர் நிலப் பகுதிகள் பல்வேறு பண்ணைக் குழுக்களுக் கிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டதில் சமமின்மை நில உறவுகளின் இயல்பாக இருந்தது. நிலச்சுவான்தார்கள், பணக்கார விவசாயிகள் ஆகியோரின் பண்ணைகளில் விவசாய உற்பத்தியின் தீவிரம் ஓரளவு அதிகமாக்கப்பட்டதாலும் பயிர் நிலப்பரப்பு விரிவாக்கப்பட்டதா லும் மொத்த விவசாய விளைச்சல் 1951—1965ல் 65 சதவிகிதம் அதிகரித்தது.

எனினும் விவசாய விளைச்சலின் நபர்வாரி அதிகரிப்பு இதற்கு மிகக் குறைவாக இருந்தது. ஏனெனில் நாட்டின் மொத்த மக்கள் தொகை இந்த ஆண்டுகளில் ஏறக்குறைய 25 சதவிகிதம் உயர்ந்தது. 60க்களின் நடு வாக்கில் தேசிய விவசாய விளைச்சல் நாட்டின் உணவுப் பண்டத் தேவையையும் சில வகை விவசாய மூலப் பொருள்களின் தேவையையும் முழுமையாக நிறைவேற்றப் போதுமானதாக இல்லை. இந்தியப் பொருளாதாரத்தின் இந்த மிக முக்கியக் கிளை பின்தங்கிய தற்கு முதல் காரணம் பெரும்பாலான (60 சதவிகிதம் வரை) பண்ணைகள் பொருளாதார நோக்கில் லாபம் தராத, அரை நுகர்வுத் தன்மை கொண்ட விவசாயிப் பண்ணைகளாக இருந்ததுதான்.

தேசியக் காங்கிரஸ் அரசாங்கம் கடைப்பிடித்து வந்த விவசாயக் கொள்கை இந்தியாவின் விவசாயத்தில் முதலாளித்துவ வளர்ச்சிக்குப் புறநிலையாக உதவியது. பயிர் நிலப் பகுதிகளின் பரப்பு விரிவாக்கப் பட்டது (1951—1966ல் அரசு நிறுவனங்களால் 75 லட்சம் ஏக்கர் கன்னி நிலங்களும் தரிசு நிலங்களும் பண்படுத்தப்பட்டன), பெரிய, சிறிய நீர்ப்பாசன அமைப்புக்கள் நிறுவப்பட்டது (நீர்ப் பாசன வசதி பெற்ற நிலப் பகுதிகளின் மொத்தப் பரப்பு 1951-1966ல் இரு மடங்கு ஆயிற்று), சாலைகள் போடப்பட்டது, கால்நடை வளர்ப்பு, விதை வளர்ப்புப் பண்ணைகள் அமைக்கப்பட்டது, 1951ல் நிறுவப்பட்ட நாட்டுப்புறப் பிரதேசங்களின் வளர்ச்சிக்கான அரசு நிறுவனத்தின் (சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் எனப்பட்டவற்றின்) வாயிலாக முன்னணி விவசாயத் தொழில்நுட்ப அனுபவம் பரப்பப் பட்டது, பல வித சமுதாய-பண்பாட்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டது—இவை எல்லாம் விவசாயத்தில் நவீன உள்ள மைப்பை உருவாக்கின.

அரசின் நிதி, நிறுவன ஆதரவு பெற்ற பணித்துறை (கடன் வசதி, விற்பனை, நுகர்வுக்) கூட்டுறவு அமைப்புக்கள் வளர்ச்சி அடைந்ததால் மூலதனத்தின் தாழ்நிலை வடிவங்களான வர்த்தக, வட்டிக் கடன் மூல தனங்கள் நாட்டுப்புறக் கடன் வசதி, வர்த்தகத் துறைகளிலிருந்து பகுதியளவில் அகற்றப்பட்டுவிட்டன. நாட்டுப்புறக் கடன் வசதியில் கூட்டுறவு நிறுவனங்களின் பங்கு 1951—1961ல் ஐந்து மடங்குக்கும்

மேல் அதிகரித்தது. உருவாகி இருந்த நாட்டுப்புற முதலாளி வர்க்கம் இந்தியாவில் முதலாளி வர்க்கத்தின் தாழ்நிலை வட்டாரங்களைச் சேர்ந்த எண்ணிக்கை பெருத்த குழு ஆயிற்று.

தேசிய முதலாளி வர்க்கத்தின் பல்வேறு குழுக்களது நிலைமையில் மாறுதல்கள்

நகர வர்த்தக-தொழில் முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த பல்வேறு குழுக்களது நிலைமையிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் நிகழ்ந்தன. தேசிய அரசினர், தனியார் தொழில் முயற்சியினது வளர்ச்சியின் விளைவாகவும் பொருளாதாரக் காப்புச் சலுகைக் கொள்கையின் பயனுகவும் அயல் நாட்டு முதலாளி வர்க்கத்தின் செல்வாக்கு குறுகியது. ஆயினும், இந்தியப் பொருளாதாரத்தில் அன்னிய மூலதனத்தின் ஒப்பு விகிதம் மொத்தத்தில் குறைந்த போதிலும் பேரளவுத் தொழில் துறையின் முதலீடுகளில் அதன் பங்கு குறைவது மெதுவாகவே நிகழ்ந்தது. பொருள் பண்பாட்டுத் தொழிலில் அன்னிய முதலீடுகள் கிட்டத்தட்டத் தனியார் தேசிய முதலீடுகளின் வேகத்திலேயே அதிகரித்து, 1948—1960ல் இரண்டரை மடங்காக (70 கோடியிலிருந்து 184 கோடி ரூபாய் வரை) பெருகின. பெட்ரோலிய சுத்திகரிப்பு, இரசாயனம், இயந்திர நிர்மாணம், மின்தொழில்நுட்ப உற்பத்தி ஆகிய புதிய கிளைகளில் மூலதனப் பெருக்கு யாவற்றிலும் அதிகமாக இருந்தது. அன்னிய ஏகபோகங்களின் உண்மைச் செல்வாக்கு முதலீடுகளில் அவற்றின் ஒப்பு விகிதத்தைக் காட்டிலும் மிக அதிகமாய் இருந்தது. ஏனெனில் புகுவதற்கான புது வடிவங்களில் (கலப்புக் கம்பெனிகள், லைசென்சுகள் வழங்குதல், தொழில்நுட்ப ஒத்துழைப்பு பற்றிய ஒப்பந்தங்கள் முதலியவற்றில்) இந்தியாவில் இவற்றின் அக்கறைகளுக்கு உரிய மண்டலம் முதலீடுகளின் மொத்தத் தொகையைக் காட்டிலும் விரைவாக அதிகரித்தது. இந்தக் காரணத்தால், அன்னிய மூலதனத்தின் வாயிலாகத் தனித் தனி தொழில் நிறுவனங்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப் பட்ட அளவு குறைந்த போதிலும் மூலதன மறு உற்பத்தி, தனியார் துறைக்குப் பாய்ச்சல் ஆகியவற்றின் விசை அமைப்பு முழுவதன் மீதும் அதன் செல்வாக்கு (செலாவணி—தொழில்நுட்ப உதவி வாயிலாக) அதிகரித்துக் கொண்டு போயிற்று. இந்த நிகழ்முறை அரசினர் துறைக்கும் ஓரளவு பொருந்தும்.

அரசினர் முதலீடுகளாலும் அரசாங்கம் மேற்கொண்ட காப்புச் சலுகை நடவடிக்கைகளாலும் தொழில் துறைக்குக் கிடைத்த திடீர் வளர்ச்சி வாய்ப்புக்களின் சூழ்நிலையில் இந்திய மூலதனத்தின் பொரு

ளாதார விறல் கணிசமாக அதிகரித்தது. இந்தியாவில் தனியார் கூட்டுப் பங்குக் கம்பெனிகளின் செலுத்தப்பட்ட மூலதனம் 1947—1962ல் 480 கோடியிலிருந்து 1,250 கோடி ரூபாயாக, அதாவது கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகரித்தது. பெரு மூலதனம், ஏகபோகங்கள் ஆகியவற்றின் பங்கும் இடையறாது அதிகமாகிக் கொண்டு போயிற்று. முதலாளிகளின் இந்தக் குழுவுக்கு அரசு ஐந்தாண்டுத் திட்டங்களின் வரம்புகளுக்குள் எல்லா வகையிலும் ஆதரவு அளித்து வந்தது, ஏனெனில் இந்தக் குழு தனது சேமிப்புக் கூலை முதலாவது உட்பிரிவைச் சேர்ந்த கிளைகளில் ஈடுபடுத்தியது. அன்னிய ஏகபோகங்களும் பெரு மூலதனத்துக்குக் கடன்களும் சாதன வசதிகளும் அளித்துக் கணிசமாக உதவின. தனியார் துறையில் 80 சதவிகிதத்துக்கு மேற்பட்ட பெரிய தொழில் நிலையங்கள் மேற்கு நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நிறுவப்பட்டன.

இந்த எல்லா நிலைமைகளும் யாவற்றிலும் பெரிய, சிறப்பாக இந்திய ஏகபோகங்களுடன் தொடர்பு கொண்ட, கம்பெனிகளின் குறுகிய குழுவுக்குப் பிறவற்றை முந்தும் வளர்ச்சி வேகம் ஏற்படக் காரணம் ஆயின. உதாரணமாக, 1 கோடி ரூபாய்க்கு மேல் செலுத்தப் பட்ட மூலதனம் உடைய கம்பெனிகளின் பங்குக்கு 1956—1960ல் வெளியிடப்பட்ட பங்குகளின் 68 சதவிகிதம் வந்தது என்றால், 1961ல் 70 சதவிகிதமும் 1962ல் 78 சதவிகிதமும் வந்தன. பொருள் உற்பத்தியில் செயலாற்றி வந்த டாட்டா குழுவைச் சேர்ந்த கம்பெனிகளின் சொத்துக்கள் 1947—1960ல் 70 கோடி ரூபாயிலிருந்து 400 கோடி ரூபாய் மதிப்புக்கும் பிர்லாவின் சொத்துக்கள் 40 கோடி ரூபாயிலிருந்து 300 கோடி ரூபாய் மதிப்புக்கும் உயர்ந்தன. இவற்றைத் தவிர இன்னும் நான்கு கூட்டுக் கம்பெனிகள் ஒவ்வொன்றும் 60க்களின் தொடக்கத்தில் 100 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள சொத்துக்களை வைத்திருந்தன (டால்மியா-ஜெயின், முகர்ஜி, முருகப்ப செட்டியார், ஹீராசந்த்-கீலாசந்த்).

மூலதனக் குவிவின் தரம் வங்கித் தொழிலிலும் இவ்வாறே உயர்வாக இருந்தது. இந்திய ஏகபோகக் குழுக்களால் கட்டுப்படுத்தப் பட்டவையும் தனியார் வங்கிகளின் மொத்த எண்ணிக்கையில் சுமார் 10 சதவிகிதமே இருந்தவையுமான ஏழு பெரிய வங்கிகள் தனியார் வங்கிகளின் சேமிப்புக்களில் 65 சதவிகிதத்தை வைத்திருந்தன.

இந்தியப் பெரு முதலாளி வர்க்கமும் அதன் ஏகபோக மேல் வட்டாரமும் மிகுந்த வலுவடைந்ததாலும் அன்னிய ஏகபோகங்களுடன் அவை நெருங்கிய உறவுகள் கொண்டிருந்ததாலும் இந்தியாவின் பொருளாதார, சமுதாய வளர்ச்சியில் பிற்போக்குத் தன்மைகள் அதிகரித்தன. இந்தியத் தேசிய முதலாளி வர்க்கத்துக்கு உள்ளேயும்

முரண்பாடுகள் அதிக ஆழ்ந்தவை ஆயின. வர்த்தக-தொழில் முதலாளி வர்க்கத்தினுடைய வாழ்நிலைக் குழுக்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தது இதற்கு ஒரு காரணம் ஆகும்.

சிறு அளவுத் தொழில் துறையில் 1947க்குப் பிறகு சாராம்சமான மாறுதல்கள் நிகழ்ந்தன. இங்கே யாவற்றிலும் முக்கிய நிகழ்ச்சி இயந்திர வசதி கொண்ட சிறு தொழில் நிலையங்களின் விரைந்த வளர்ச்சி ஆகும். சிறு சரக்கு உற்பத்தியையும் கைத்தொழில் உற்பத்தியையும் இலேசுரகத் தொழிலின் மரபு வழி வந்த கிளைகளில் இந்த நிலையங்கள் அகற்றி விட்டன. அதோடு நில்லாமல் புதிய கிளைகளுக்கும் (இலேசுரக இயந்திர நிர்மாணம், உலோகப் பண்பாடு, இலேசுரக, பயன்பாட்டு இரசாயனம் முதலியவற்றுக்கும்) இவை பரவின. பிந்திய குழுவில் சிறு தொழிலதிபர்களின் ஒரு பகுதியினர் பெரு மூலதனத்துடன் ஒத்துழைத்தார்கள், பல இரண்டாந்தர உற்பத்திச் செயல்களை நிறைவேற்றினர்கள். சிறு தொழிலதிபர்களின் வரிசைகள் கணிசமாக விரிவடைவதற்கு அரசின் ஊக்கமளிக்கும் கொள்கை உதவியது. இதன்படி சிறு உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தி மண்டலங்கள் ஒதுக்கப்பட்டன, அவர்களுக்கு நிதி உதவி தரப்பட்டது, விற்பனைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது, வரி, கடன் சலுகைகள் வழங்கப்பட்டன. தொழிற்சாலை மாதிரியான சிறு நிலையங்களின் எண்ணிக்கை விரிவானதோடு கூடவே பட்டியலில் குறிக்கப்படாத நிலையங்களின் (10க்கு மேற்படாத தொழிலாளர்கள் கொண்ட இயந்திரத் தொழில் நிலையங்களதும் 20க்கு மேற்படாத தொழிலாளர்கள் இருந்த கைத்தொழிலகங்களதும்) எண்ணிக்கையும் அதிகரித்தது. இவற்றில் பெரும் பகுதி குடும்ப உழைப்பை ஆதாரமாகக் கொண்ட நிலையங்கள். இந்தத் துறையில் வேலை செய்து வந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1952—1961ல் 99 லட்சத்திலிருந்து 143 லட்சமாக உயர்ந்தது. 1960ல் சிறு தொழில் நிலையங்களும் சிறு தொழிற்சாலைகளும் நாட்டின் மொத்தத் தொழில் நிலையங்களில் 93 சதவிகிதமாக இருந்தன.

சிறு தொழில் (பெருமளவு செயற்கை முறையில்) காப்பாற்றப்பட்டதும் அதன் ''விரிவாக்கப்பட்ட மறு உற்பத்தியும்'' இரு வகையான விளைவுகளை ஏற்படுத்தின. ஒரு புறம், திரளான புது மூலதனமும் தொழிலாளர்களும் உற்பத்தியில் ஈடுபட்டமையால் உள்நாட்டுச் சந்தை விரிவடைந்தது; மறு புறம், உற்பத்திச் செறிவும் தனி வகைப்பாடும் நிகழும் போக்குகள் தடைப்பட்டன, உயர்ந்த விலைகளும் செலவுகளும் நீண்ட காலம் நிலைத்திருந்தன.

இலேசுரகத் தொழிலில் பெரும்பாலும் முதலீடு செய்து வந்த நடுத்தரத் தொழில் முதலாளி வர்க்கம் தொழிலதிபர்களின் உயர்

நிலை, தாழ்நிலைக் குழுக்களைக் காட்டிலும் மெதுவாகவே வளர்ச்சி அடைந்தது. சிறு அளவு உற்பத்திக்கும் கனரகத் தொழிலுக்கும் ஊக்கம் அளிக்கும் நோக்கத்துடன் இரண்டாம் உட்பிரிவைச் சேர்ந்த தொழில் நிலையங்கள் மீது அரசாங்கம் விதித்த பெருத்த கட்டுப்பாடு கள் இதற்கு முக்கியக் காரணம் ஆகும். இந்தியாவில் கூட்டுப் பங்குக் கம்பெனிகளின் மூலதனம் மிகப் பேரளவில் அதிகரித்துக் கொண்டு போன போதிலும் இவற்றின் எண்ணிக்கை 1950—1963ல் 27.5 ஆயிரத்திலிருந்து 25.5 ஆயிரமாகக் குறைந்து விட்டது. இந்தச் சூழ்நிலை முதலாளித்துவச் செறிவுப் போக்கு மேலும் ஆழமானதை மட்டும் இன்றி, நடுத்தர முதலாளி வர்க்கத்தின் நிலைகள் பலவீனம் அடைந்ததையும் காட்டுகிறது. இந்த எல்லாப் பொருளாதார நிகழ் முறைகளும் இந்தியத் தேசிய முதலாளி வர்க்கத்துக்குள் கடுமையான பிணக்கை மூட்டிவிட்டன.

அன்னியப் பொருளாதார உறவுகள்.
சோவியத்-இந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு

காலனிக்குரிய பின்தங்கிய நிலையிலிருந்து மீள்வதற்கு இந்தியா செய்து வந்த முயற்சிகளில் அதற்கு எதிர்ப்பட்ட முக்கியமான தடை உற்பத்தி வடிவத்தில் (அதாவது, இயந்திர சாதனங்கள், சாதனக் கூறுகள், தொழில் பொருள்கள், எரிபொருள் ஆகியவற்றின் வடிவத் தில்) மூலதனங்களின் கடும் பற்றுக்குறை ஆகும். மேலும் மேலும் அதிகரித்த அளவுகளில் உற்பத்திச் சாதனங்களை இறக்குமதி செய் வதன் இன்றியமையாமையாலும் இவற்றை விலைக்கு வாங்கத் தேவை யான செலாவணியின் கடுமையான முட்டுப்பாட்டாலும் இந்தியா தொல்லைப்பட்டது. எனவேதான் இந்தியாவின் தொழில் பெருக்கச் செயல்திட்டத்தை நிறைவேற்றுகையில் அன்னிய, முதன்மையாக அரசு, உதவிக்கு முக்கியமான இடம் தரப்பட்டது.

உற்பத்தி இயந்திரங்களும் பண்டங்களும் தருவிக்கவும் அயல் நாட்டு நிபுணர்களுக்குச் சம்பளங்கள் கொடுக்கவும் இந்த உதவி பயன்படுத்தப்பட்டது.

ரிஸர்வ் வங்கியின் புள்ளி விவரப்படி இந்தியாவில் முதலீடு செய்யப்பட்ட அன்னிய மூலதனத்தின் மொத்தத் தொகை 1948ல் 255.8 கோடி ரூபாயாக இருந்தது, 1960ன் முடிவில் 566.4 கோடி ரூபாய் ஆயிற்று. அன்னியத் தனியார் முதலீடுகளில் 40 சதவிகிதம் மறு முதலீடுகளின் வடிவில் செய்யப்பட்டு வந்தது. அன்னியத் தனியார் முதலீடுகளின் மொத்த ஆண்டு வரத்து 1956—1960ல் 3462 லட்சம் ரூபாயாக இருந்தது. தூய சராசரி ஆண்டு வரத்து 2190 லட்சம்

ரூபாய். தனியார் மூலதனத்தின் முக்கியத் தலையூற்றாக இருந்து வந்தது பிரிட்டன் (1960ல் அன்னிய மூலதனத்தின் மொத்தத் தொகையில் 78.6 சதவிகிதம் பிரிட்டனிலிருந்து வந்தது). இரண்டாவது இடத்தில் இருந்தது அமெரிக்க ஐக்கிய நாடுகள் (14 சதவிகிதம்).

அரசுக் கடன்களதும் நிதியுதவிகளதும் வடிவில் கிடைத்த பொருளாதார உதவி இந்தியாவின் அன்னியப் பொருளாதார உறவுகளில் இன்னும் அதிக முக்கியத்துவம் கொண்டிருந்தது. முதலாளித்துவ நாடுகள் அளித்த உதவி 1965ம் ஆண்டு இலையுதிர் கால வாக்கில் ஏறத்தாழ 3,500 கோடி ரூபாயாக இருந்தது (இதில் 1,400 கோடி ரூபாய் அமெரிக்க ஐக்கிய நாடுகள் அளித்த உதவி). ஆற்றல் உற்பத்தி, போக்குவரத்து ஆகியவற்றின் பல்வேறு கிளைகளையும் பொருள் பண்பாட்டு, கனியச் சுரங்கத் தொழில் கிளைகளையும் விரிவாக்கவும் பெரும் அளவுகளில் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பண்டங்களுக்கு (முதன்மையாக அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட கோதுமைக்கு) விலை செலுத்தவும் அன்னியக் கடன்களும் நிதியுதவிகளும் முதன்மையாகப் பயன்பட்டன.

இந்தியாவில் அன்னியத் தனியார், அரசினர் மூலதனத்தின் வரத்து எதார்த்தத்தில் நாட்டின் தொழில் பெருக்கத்துக்கு உதவியது. அதே சமயம் நாட்டில் அன்னிய ஏகபோகங்களின் நிலைகளை அது உறுதிப்படுத்தியது. உலக முதலாளித்துவப் பொருளாதாரத்துடன் இந்தியாவின் ஒருமைப்பாட்டை அது தீவிரமாக்கிற்று.

இந்தியாவின் அன்னியப் பொருளாதார உறவுகளில் சோவியத் யூனியனுடனும் பிற சோஷலிஸ நாடுகளுடனும் அதன் உறவுகள் சிறப்பான இடம் பெற்றன. கிழக்கு நாடுகளின் மக்களது தேசிய விடுதலை இயக்கத்துக்கு ஆதரவு அளிக்கும் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த சோவியத் அரசு, பொருளாதார சுதந்திரம் பெறுவதற்காக இந்தியா செய்து வந்த முயற்சிகளுக்கு நட்பு, பரஸ்பர உதவிக் கோட்பாடுகளை வழிகாட்டியாகக் கொண்டு உறுதியான ஆதரவு அளித்தது. குறித்த அளவு திட்ட அடிப்படையில் செயலாற்றுவது, சக்தி மிக்க அரசினர் துறையை நிறுவுவது, தொழில் பெருக்கத்தை முயன்று விரைவுபடுத்துவது முதலியவற்றில் சிறப்பாக வெளிப்பட்ட இந்தியப் பொருளாதாரக் கொள்கையின் முற்போக்குத் தன்மைக் கூறுகள் சோவியத் மக்களாலும் சோஷலிஸ நட்பு மண்டலம் அனைத்தின் மக்களாலும் ஆதரிக்கப்பட்டன.

1955—1965ல் கையொப்பமான பல ஒப்பந்தங்களின் அடிப்படையில் சோவியத் யூனியன் இந்தியாவுக்கு 60 கோடி ரூபிளுக்கு மேற்பட்ட தொகையை நீண்ட தவணைக் கடனாக அனுமதித்தது. இந்தியாவுக்கு சோவியத் யூனியன் அளிக்கும் உதவியில் மையமான

இடம் பெற்றிருப்பது இரும்புவகை உலோக வார்ப்புத் தொழில் என்பது தெரிந்ததே: சோவியத் கடன்களின் கணிசமான பகுதி இந்தத் துறையில் ஈடுபடுத்தப்பட்டது. சோவியத் உதவியால் நிறுவப்பட்டு சோவியத்-இந்திய நட்பின் சின்னம் ஆகிவிட்ட பிலாய் உருக்காலை 1966ல் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மொத்த எஃகில் சுமார் மூன்றில் ஒரு பங்கைத் தயாரித்தது. அதன் உற்பத்தித் திறனை விரிவுபடுத்துவதுடன் சம்பந்தப்பட்ட கட்டுமான வேலைகள் இந்த உருக்காலையில் 1967ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டதோடு, தொடக்கத்தில் திட்டமிடப்பட்டதை ஒப்பிடுகையில் உற்பத்தித் திறனை மேலும் மூன்று மடங்கு விரிவாக்குவதற்கான ஏற்பாடுகள் துவங்கின. பொக்காரோவில் திறன் மிக்க புதிய உருக்காலையின் கட்டுமானம் அதே ஆண்டு தொடங்கப்பட்டது.

இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்காக சோவியத் யூனியன் அளித்து வரும் உதவியில் இரண்டாவது இடம் பெற்றிருப்பது பெட்ரோலியம். நீர்ம எரிபொருள் சப்ளை போன்ற ஜீவாதார முக்கியத்துவம் உள்ள துறையில் சர்வதேச ஏகாதிபத்திய ஏகபோகங்களைச் சார்ந்திருப்பதிலிருந்து விடுபெற இந்தியாவுக்கு சோவியத் யூனியன் உதவியது:

உலோகவார்ப்பிலும் கனியச் சுரங்கத் துறையிலும் முழுமையான தொழில் நிலையத் தொகுப்புக்களை நிறுவியதன் வாயிலாக ராஞ்சியிலும் துர்காபூரிலும் கனரக இயந்திர நிர்மாணத் தொழிற் சாலைகள் கட்டுவதில் இந்தியாவுக்கு சோவியத் யூனியன் உதவியது: இத்தொழிற்சாலைகள் இந்தத் துறைகளின் அடுத்துவந்த வளர்ச்சிக்கு வகை செய்யக் கடமைப்பட்டிருந்தன. சோவியத்-இந்தியப் பொருளாதார ஒத்துழைப்பின் நோக்கப் பொருத்தம் இதில் அடங்கி இருந்தது.

சோவியத் யூனியன் இந்தியாவுக்கு அளிக்கும் பொருளாதார உதவியில் மின்னுற்றல் முக்கிய இடம் பெற்றுள்ளது. சோவியத் யூனியன் இந்தியாவில் முழுமையாகவோ பகுதி அளவிலோ 11 மின் நிலையங்கள் கட்டியது. நாட்டில் உற்பத்தியாகும் மின்னுற்றலில் 20 சதவிகிதம் வரை இந்த நிலையங்கள் தருகின்றன. சோவியத்-இந்தியப் பொருளாதார ஒத்துழைப்பின் மூன்று முக்கியத் திசைகள் இவை. இயந்திரக் கருவிகள் தயாரிப்பு, மருந்துகள் தயாரிப்பு, நிலக்கரிச் சுரங்கத் தொழில், மீன் பிடிப்பு, விவசாயம், அலுவலர் பயிற்சி முதலிய துறைகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் இவற்றை நிறைவு படுத்தின. சோவியத் உதவியால் 60க்களின் முடிவுக்குள் மொத்தம் 60க்கு மேற்பட்ட இலக்குகள் கட்டப்பட்டிருந்தன அல்லது கட்டப் பட்டுக் கொண்டிருந்தன. சோவியத் யூனியனின் உதவியால் கட்டப்

பட்ட நிலையங்களில் 70க்களின் தொடக்கத்தில் 30சதவிகிதம் எஃகு உற்பத்தி செய்யப்பட்டது, 85 சதவிகிதம் கனரக இயந்திர சாதனங்களும் 60சதவிகிதம் கனரக மின் இயந்திர சாதனங்களும் 20 சதவிகிதம் அலுமினியமும் தயாரிக்கப்பட்டன, 80 சதவிகிதம் பெட்ரோலியம் எடுக்கப்பட்டது. சோவியத் கடன்களை இந்தியச் சரக்குகள் மூலம் இந்தியா தீர்க்கிறது. சோவியத் பொருளாதார உதவி இந்தியாவின் தொழில் பெருக்க நிகழ்முறை மீது, ஏற்றுமதிக் கிளைகளின் வளர்ச்சி உள்பட, எல்லா வகையிலும் ஆழ்ந்த பாதிப்பு நிகழ்த்த இந்த ஏற்பாடு வாய்ப்பு அளித்தது.

இரு நாடுகளுக்கும் இடையே வலுவடைந்து கொண்டு போகும் பொருளாதார உறவுகளின் முக்கியச் சான்றாக விளங்கியது வர்த்தகக் கொடுக்கல் வாங்கலின் விரைந்த வளர்ச்சி. சுதந்திரத்துக்குப் பிந்திய ஆண்டுகளில் இது 30 மடங்குக்கு மேல் அதிகரித்தது. இந்தியாவின் அன்னிய வர்த்தகக் கூட்டாளிகளில் இரண்டாவது இடத்தை சோவியத் யூனியன் பெற்று விட்டது.

இந்தியாவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையில் "நேருவின் போக்கு" உருவாதல்

சுதந்திர இந்தியாவின் தேசியப் பொருளாதாரம் அரசு முதலாளித்துவப் பாதைகளில் வளர்ச்சி அடைந்தது, அன்னிய மூலதனத்தின் நிலைகளை மட்டுப்படுத்தும் நோக்கத்துடனும் விவசாயத்தில் முதலாளித்துவத்துக்கு முந்திய உறவுகளின் அமைப்பைப் படிப்படியாக மாற்றும் நோக்கத்துடனும் பல நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன—இவை எல்லாம் நாட்டின் பொருளாதார சுதந்திரத்துக்கு அடிகோலின.

பொருளாதார வளர்ச்சிக்கான முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் காலத்தில் அரசினர் துறையும் தனியார் துறையும் அக்கம் பக்கமாக வளர்வதற்கு ஏற்ற போக்கு கடைப்பிடிக்கப்பட்டது. ஜவாகர்லால் நேருவால் பிரகடனம் செய்யப்பட்ட "கலப்புப் பொருளாதாரக்" கருதுகோளுக்கு இது பொருத்தமாய் இருந்தது. 50க்கள் முதல் 60க்களின் நடு வரை தேசியக் காங்கிரஸ் கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கை உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையில் "நேருவின் போக்கினது" முக்கிய உறுப்பாக இருந்தது.

1951/52ல் நடந்த பொதுத் தேர்தல்கள் இந்தியாவின் அரசியல் அரங்கில் இடப்புறம் ஓரளவு முன்னேற்றத்தை உறுதிப்படுத்தி ஆண்ட

கட்சிக்குள் இடது, நடுநிலைவாதிச் சக்திகளை வலுவாக்கின. காங்கிரசுக்குள் இருந்த ஜனநாயகப் பிரிவு, இடதுசாரிக் கட்சிகளின் செல்வாக்கில் இயங்கிய உழைப்பாளிகளின் வெகுஜன நிறுவனங்கள் ஆகியவற்றின் செயலூக்கம் அதிகரித்திருந்த சூழ்நிலையில், முதலாளித்துவ ஜனநாயகத்தின் அடிப்படைகளை நாட்டில் மேலும் விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல முக்கியமான உள்நாட்டுக் கொள்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வது நேருவுக்கு இயன்றது.

இந்தியாவில் நவீன முதலாளித்துவ சமூகத்தின் உருவாக்கம் சோஷலிஸத்தை நோக்கி அனைத்து உலக இயக்கம் நடக்கும் காலப் பகுதியில், தேசிய-விடுதலை இயக்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, முதலாளித்துவ எதிர்ப்பு மரபுகள் நிலை பெற்றிருக்கும் நிலைமைகளில் நிகழ்ந்தது. எனவே, ''சோஷலிஸ மாதிரி சமூகம்'' நிறுவுவதற்கான செயல்திட்டத்தில் இங்கே இது பிரதிபலித்தது. நேருவின் யோசனைப் படி காங்கிரசின் ஆவடி மகாநாட்டில் (1955) இந்தச் சொற்றொடர் காங்கிரசின் அதிகாரபூர்வமான செயல்திட்டத்தில் புகுத்தப்பட்டது. தனியார் சொத்துரிமையோ, அதன் அடிப்படையில் அமைந்த சுரண்டல் முறையோ அகற்றப்பட்டுவிட்டதைக் ''காங்கிரஸ் சோஷலிஸம்'' நடப்பில் குறிக்கவில்லை. அதே சமயம், அரசினர் துறையின் வளர்ச்சிக்கு முதன்மை கொடுக்கப்பட வேண்டும், அரசு தனியார் துறையைக் கட்டுப்படுத்தவும் முறைப்படுத்தவும் தேவையான பல்வேறு வடிவங்கள் உருவாக்கப்பட வேண்டும், தேசியப் பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளில் சிறு அளவுத் தொழில் முயற்சிக்கு ஆதரவு அளிக்கப்பட வேண்டும், ஏகாதிபத்திய எதிர்ப்பும் நிலப் பிரபுத்துவ எதிர்ப்பும் கொண்ட சமுதாய-பொருளாதார மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற ஆணைக் குறிப்பு ''காங்கிரஸ் சோஷலிஸத்தில்'' அடங்கி இருந்தது.

''சோஷலிஸ மாதிரி சமூகம்'' நிறுவுவது பற்றிய தீர்மானம் காங்கிரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு எடுத்துக் கொள்ளப்பட்ட முக்கியமான உள்நாட்டுக் கொள்கை நடவடிக்கைகளில் ஒன்று இந்தியாவை நிர்வாக-பிரதேச நோக்கில் பாகுபடுத்தும் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டது ஆகும். தேசிய இனப் பிரச்சினையின் கடுமையைக் குறைப்பது இந்தச் செயலின் நோக்கமாக இருந்தது.

1956ல் செய்யப்பட்ட நிர்வாக-பிரதேசச் சீர்திருத்தங்கள்

இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி 28 இராச்சியங்கள் உருவாக்கப்பட்டன. இவை மூன்று பெரிய குழுக்களாகச் சேர்க்கப்பட்டிருந்தன (''ஏ'', ''பி'', ''சி''). புதிய நிர்வாக-அரசியல்

பாகுபாட்டில் சமஸ்தானங்கள் அகற்றப்பட்டதன் விளைவுகள் நிலைப் படுத்தப்பட்டிருந்தன. ஆனால் புதிய இராச்சியங்கள் இந்தியாவின் மொழிவாரி வரைபடத்தைப் பிரதிபலிக்கவில்லை. அவை தேசிய இன அடிப்படையில் அமைக்கப்படவில்லை. மாறுக, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் போது வரலாற்றுப் போக்கில் ஏற்பட்டிருந்த நிர்வாக-பிரதேசப் பாகுபாட்டைப் பிரதிபலித்தன. தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கான போராட்டம் வெகுஜன இயக்கத்துடன், முதன்மையாக விவசாயிகளின் போராட்டத்துடன் நாளுக்கு நாள் அதிகமாகப் பின்னிப் பிணைந்தது. தெலிங்காணாவிலும் ஆந்திரத்திலும் இந்த நிகழ்முறை யாவற்றிலும் துலக்கமான வடிவத்தை மேற்கொண்டது. எனவேதான், நிர்வாக தேசிய இனப் பிரதேசங்கள் அமைப்பது பற்றி தேசிய முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த வட்டாரக் குழுக்களும் விரிவான ஜனநாயக சமூகப் பிரதிநிதிகளும் விடுத்த கோரிக்கைகளுக்கு மத்திய அரசாங்கம் இங்கே விட்டுக்கொடுத்தது.

தெலுங்க (ஆந்திர) மக்களின் சிறு முதலாளி வட்டாரங்கள் ஆந்திர இராச்சியம் அமைப்பதற்கு ஆதரவான முக்கிய இயக்கு சக்தியாகச் செயல்பட்டன. சென்னையில் காங்கிரசின் சிறு முதலாளிப் பிரிவைச்சேர்ந்த தலைவர்களில் ஒருவரான பொட்டி ஸ்ரீராமுலு தேசியக் காங்கிரஸ் தலைவர்களுக்கும் சென்னை அரசாங்கத்துக்கும் விசேஷ வேண்டுகோள் ஒன்றைப் பத்திரிகைகளில் 1952, செப்டெம்பர் மாதம் வெளியிட்டார். புதிய ஆந்திர இராச்சியம் அமைக்கும் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணும்படி அதில் அவர் கோரினார். இந்த வேண்டுகோளுக்குச் சாதகமான பதில் எதுவும் கிடைக்காமையால் அக்டோபர் மாத முடிவில் ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் தொடங்கினார். 58 நாட்கள் உண்ணா விரதத்தின் விளைவாக, 1952, டிசம்பர் 15ந் தேதி அவர் இறந்து போனார்.

ஸ்ரீராமுலுவின் மரணத்துக்குப் பிறகு மத்திய அரசாங்கத்துக்கும் சென்னை அரசாங்கத்துக்கும் எதிராக வெகுஜன ஆர்ப்பாட்டங்கள் ஆந்திரம் முழுவதிலும் நடந்தன. யுத்தத்துக்குப் பிந்திய காலப் பகுதியில் நடந்த ஆகப் பெரிய வெகுஜனப் போராட்டங்கள் இவை. பெரிய தொழில் நிலையங்களில் வேலைநிறுத்தங்கள் தொடங்கின. இந்த எல்லா நிகழ்ச்சிகளதும் நிர்ப்பந்தம் காரணமாக மத்திய அரசாங்கம் ஆந்திர இராச்சியம் அமைக்கும் தீர்மானத்தை 1952, டிசம்பர் 19ந் தேதி ஏற்றது. எனினும் ஓர் ஆண்டுக்குப் பின்பே இந்தத் தீர்மானம் செயலாக்கப்பட்டது.

ஆந்திர இராச்சியம் அமைக்கப்பட்டது தெலுங்கர்கள் வாழ்ந்த பிரதேசத்தில் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பாதையில் நிச்சயமான அடி வைப்பாக விளங்கியது. ஆயினும் ஹைதராபாதைச்

சேர்ந்த தெலிங்காணுப் பிரதேசத்தில் தெலுங்கர்களின் கணிசமான பகுதியினர் இருந்தார்கள். எனவே இந்தப் பிரச்சினை இறுதியாகத் தீர்க்கப்படவில்லை.

தேசிய இனப் பிரச்சினையின் தீர்வில் அடுத்த கட்டம் 1953—1956ல் தொடங்கியது. இந்தியாவின் நிர்வாக-பிரதேசப் பாகுபாடு அப்போது மறு பரிசீலனைக்கு உள்ளாயிற்று. மக்களின் மானிட இன அமைவைக் கருத்தில் கொண்டு இராச்சியங்களைச் சீரமைப்பதற்குரிய யோசனைகளைத் தயாரிக்கும் பொருட்டு விசேஷ அரசாங்கக் கமிஷன் அமைக்கும் தீர்மானம் தேசியக் காங்கிரசின் செயற் குழுவினது கூட்டத்தில் 1953, மே மாதம் நிறைவேறியது. இராச்சியச் சீரமைப்புக் கமிஷன் அதே ஆண்டு டிசம்பர் மாதம் அமைக்கப் பட்டது. இந்தக் கமிஷன் 1955ல் தனது அறிக்கையை வெளியிட்டது. கமிஷனுடைய அறிக்கையின் அடிப்படையில் தயாரான சட்ட உரு வரை 1956, ஆகஸ்டு 31ல் நாடாளுமன்றத்தால் உறுதிப்படுத்தப் பட்டது. இதற்கேற்ப அரசியல் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள் செப்டெம்பர் மாதம் ஒப்புதல் பெற்றன. இந்தியாவின் நிர்வாக-பிரதேசப் பாகுபாடு பற்றிய புதிய சட்டம் 1956ம் ஆண்டு நவம்பர் மாதம் 1ந் தேதி அமுலுக்கு வந்தது. 14 புதிய இராச்சியங்களும் மத்திய அரசாங்கத்தால் நிர்வகிக்கப்பட்ட 6 பிரதேசங்களும் அமைக்கப்பட்டன.

இந்தியாவின் அரசியல் வரைபடம் மாற்றி வகுக்கப்பட்டுப் புதிய இராச்சியங்கள் நிறுவப்பட்டதும் மத்திய அரசாங்கத்திலும் காங்கிரஸ் தலைமைக் குழுவிலும் வருங்கால அச்சம் தலை தூக்கியது. புதிய நிர்வாகப் பாகுபாடு, தேசிய இன அடிப்படையில் இராச்சியங்களின் அமைப்பு ஆகியவற்றுடன் தொடர்பு கொண்ட எல்லாப் பிரச்சினைகளும் பிரதேச உரிமைப் போக்கு வளர்வதற்கும் பல்வேறு தேசிய இனக் குழுக்களுக்கு இடையே முரண்பாடுகள் கூர்மைப்படுவதற்கும் போராட்டத்துக்கும் தவிர்க்க முடியாதவாறு இட்டுச் செல்லும் என்ற அச்சம் இது. மையச் சார்புள்ள போக்குக்களைத் தீவிரமாக்கும் பொருட்டு ஐந்து மண்டலங்களையும் மண்டல ஆலோசனை மன்றங்களையும் அமைக்கும் தீர்மானம் செய்யப்பட்டது. ஒவ்வொரு மண்டல ஆலோசனை மன்றமும் மத்திய அரசாங்கம், மண்டலத்தில் உள்ள இராச்சியங்களின் அரசாங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கியது. மண்டல ஆலோசனை மன்றங்கள் ஒருங்கிசைவு, திட்ட வகுப்புப் பிரச்சினைகளையும் வெவ்வேறு இராச்சியங்களின் பொருளாதார வளர்ச்சிச் செயல்திட்டங்களையும் இராச்சியங்களில் உள்ள தேசிய இனச் சிறுபான்மையினர் பிரச்சினைகளையும் ஆராய்வதோடு எல்லைச் சச்சரவுகளையும் நீர்மின் நிலையத் தொகுப்பு, போக்கு வரத்துப்

பாதைப் பின்னல் முதலியவற்றின் கூட்டுப் பயன்பாட்டுடன் தொடர்புள்ள சிக்கல்களையும் தீர்க்கின்றன.

1956ல் நிர்வாக-பிரதேசச் சீர்திருத்தம் செயல்படுத்தப்பட்டதால் இந்தியாவின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டுவிடவில்லை.

இராச்சியங்களின் சீரமைப்புக்குப் பின் தேசிய இனப் பிரச்சினை

மொழிவாரி இராச்சியங்கள் அமைப்பதற்கான போராட்டம் பல மொழிகளின் அடிப்படையில் நிர்வாகப் பாகுபாடு நிலவித்திருந்த பிரதேசங்களில் (பம்பாய், அஸ்ஸாம், பஞ்சாப்) முதன்மையாகத் தொடர்ந்தது.

குஜராத்தை மகாராஷ்டிரத்திலிருந்து பிரிப்பதற்கான போராட்டம் பம்பாய் இராச்சியத்தில் நடந்தது. விரிவான ஒன்றித்த கூட்டணி அமைப்பது கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இயன்றது. 1957ல் நடந்த இரண்டாவது பொதுத் தேர்தல்களில் இந்தக் கூட்டணி தேசியக் காங்கிரசுக்குப் பெருஞ்சேதம் விளைத்தது. வெகுஜனப் போராட்டத்தின் பயனாக, பம்பாயைத் தலைநகராகக் கொண்ட மகாராஷ்டிரம், அகமதாபாதைத் தலைநகராகக் கொண்ட குஜராத்து என்னும் இராச்சியங்களை உருவாக்கும் தீர்மானம் 1960ம் ஆண்டு வசந்தத்தில் ஏற்கப்பட்டது.

பஞ்சாபில் தேசிய இனப் பிரச்சினை மதப் பிரச்சினையுடன் நேரான தொடர்பு கொண்டிருந்தது. ஏனெனில் பஞ்சாபி மொழியையும் சீக்கிய மத சமுதாயத்தினர் வாழும் இடங்களையும் ஆதாரமாகக் கொண்ட பஞ்சாப் இராச்சியம் (''பஞ்சாபி சூபா'') அமைக்கும்படிக் கோரிப் போராட்டம் நடந்தது.

பஞ்சாப் மக்கள் இரு முக்கியக் குழுக்களை—பஞ்சாபிகளையும் இந்துஸ்தானிகளையும்—சேர்ந்தவர்கள். மத நோக்கிலும் அவர்கள் வெவ்வேறு ஆனவர்கள்: 30 சத விகிதத்தினர் சீக்கியர்கள். மதப் பிரிவும் தேசிய இனப் பிரிவும் ஒத்துவரவில்லை: பஞ்சாபி மொழி பேசியவர்களில் இந்துக்களும் இந்தி பேசியவர்களில் சீக்கியர்களும் இருந்தார்கள்.

பஞ்சாபிகளின் பண்பாட்டு வாழ்வில் பஞ்சாபி மொழியின் பாத்திரத்தையும் இடத்தையும் பற்றிய பிரச்சினையை இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின் அகாலி தளம் கிளப்பியது. அந்தக் காலம் முதல் மொழிப் பிரச்சினை அகாலி தளத்தின் செயல்திட்டத்திலும் சரி, அரசியல் போராட்டத்தில் அதன் போர்த்தந்திரத்திலும் சரி, ஒரு முக்கிய அம்சம் ஆகி விட்டது.

அகாலி தளத் தலைவர்களின் வற்புறுத்தலுக்கு இணங்க அரசாங்கம் பஞ்சாபை இரு மொழி இராச்சியமாக 1949ல் அறிவித்தது: இந்தி மொழி பேசியவர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் தொடக்கக் கல்வி இந்தியில் அளிக்கப்பட்டது. பஞ்சாபி மொழியினர் பெரும்பாலராய் இருந்த பிரதேசங்களில் பஞ்சாபியில் தொடக்கக் கல்வி அளிக்கப் பட்டது. ஆயினும் பத்திரிகைகளில் காலனியாட்சிக் காலத்தில் போன்றே இந்தியும் உருதுவும் ஆதிக்கம் வகித்தன. அதிகாரபூர்வமான கடிதப் போக்குவரத்து மொழியாக ஆங்கிலம் தவிர உருதுவும் வழங்கி வந்தது. எனவே, பஞ்சாபி மொழி பேசுவோர் வாழ்ந்த பிரதேசத்தைத் தனி இராச்சியமாக அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அதிகாரபூர்வமான கோஷமாக அகாலி தளம் 1951/52ல் நடந்த பொதுத் தேர்தல்களில் முன்வைத்தது.

ஆயினும் அகாலி தளத்தினிடம் எவ்வித சமூகச் செயல் திட்டமும் இருக்கவில்லை. விளைவாக, வட்டார முதலாளி வர்க்கத்தின் பெரும் பகுதியினரும் உழைப்பாளி விவசாயி வெகுஜனங்களும் தேசியக் காங்கிரசை ஆதரித்தார்கள். அகாலி தளம் படு தோல்வி அடைந்தது. இராச்சியச் சட்ட மன்றத்தின் 122ல் 22 இடங்கள்தாம் அதற்குக் கிடைத்தன. இதன் பின் ''பஞ்சாபி சூபா'' என்ற கோஷத்தில் மாறுதல் செய்யப்பட்டது. முன்னர் மொழியின் அடிப்படையில் இராச்சியத்தைச் சீரமைக்கும்படி கோரிப் பல இடங்களில் போராட்டம் நடந்தது. 1952ம் ஆண்டுத் தேர்தல்களுக்குப் பின்போ, பஞ்சாபின் சீக்கிய மக்கள் இடையே தனது நிலைகளை மீண்டும் வலுப்படுத்திக் கொள்ளும் விருப்பம் காரணமாக அகாலி தளம் இந்தக் கோஷத்திற்குப் பதில் சீக்கிய மக்களைப் பெரும்பாலராய்க் கொண்ட ''பஞ்சாபி சூபா'' அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தது.

முன்னுள் கிழக்குப் பஞ்சாப் சமஸ்தானங்களின் கூட்டான பெப்சுவையும் பஞ்சாபையும் சேர்த்துப் புதிய பஞ்சாப் 1956ல் உருவாக்கப்பட்டது. அப்போது, பஞ்சாபி மக்களின் விருப்பத்திற்கு இணங்கியும் மிகப் பல்வேறான மக்கள் வட்டாரங்களில் ''பஞ்சாபி சூபா'' கோஷத்துக்கு இருந்த ஆதரவைக் கருத்தில் கொண்டும் பிரதேசச் சூத்திரம் எனப்பட்டதைத் தேசியக் காங்கிரஸ் பிரேரித்தது. இது ஏற்கவும் பஞ்சாபில் செயல்படுத்தவும் பட்டது. பஞ்சாப் அரசாங்கத்திலும் சட்ட மன்றத்திலும் பிரதேச ஆலோசனைக் குழுக்கள் எனப்பட்டவை உருவாக்கப்பட்டன. பஞ்சாப் பிரதேச ஆலோசனைக் குழு, ஹரியாணு (இந்தி பேசுவோர் பெரும்பாலராய் இருந்த வட்டாரங்களின்) ஆலோசனைக் குழு என்பவை இவை. சம்பந்தப்பட்ட மாவட்டங்களையும் அமைச்சகங்களையும் சேர்ந்த சீக்கியர்களும்

இந்துக்களுமான சட்ட மன்ற உறுப்பினர்கள் முறையே இவற்றில் உறுப்பினர் ஆனார்கள். இவை ஆலோசனை உறுப்புக்கள். சம்பந்தப் பட்ட வட்டாரங்களின் பொருளாதார வளர்ச்சி குறித்த பிரச்சினைகளை இவை கவனித்துக் கொண்டன, முதன்மையாக அரசாங்கக் கடன்களின் வினியோகத்தை மேற்பார்த்தன. கல்வி, பண்பாடு பற்றிய பிரச்சினைகளையும் இவை கவனித்துக் கொண்டன.

பஞ்சாபி இராச்சியத்தின் அரசாங்க மொழியாக நிச்சயிக்கப்பட்டது. இந்தி இரண்டாவது அரசாங்க மொழியாக இடம் பெற்றது. மாவட்டத் தரத்தில் அரசாங்கக் கடிதப் போக்குவரத்தைப் பொறுத்த வரையில் பஞ்சாப் வட்டாரங்களில் பஞ்சாபியிலும் ஹரியாணு வட்டாரங்களில் இந்தியிலும் அது நடத்தப்பட்டது.

பிரதேசச் சூத்திரம் ஏற்கப்பட்டது பஞ்சாபில் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் பெருத்த முன்னேற்றமாக விளங்கியது.

சுதந்திரம் பெற்ற பின் முதன் முதலாகத் தேசியக் காங்கிரசுக்கும் அகாலி தளத்துக்கும் இடையே ஒப்பந்தம் பிரதேசச் சூத்திரத்தின் அடிப்படையில் ஏற்பட்டது. பஞ்சாபில் எல்லாவற்றிலும் அதிகச் செல்வாக்கு பெற்றிருந்த இரண்டு கட்சிகளும் 1957ல் நடந்த இரண்டாவது பொதுத் தேர்தல்களில் ஒரே வேட்பாளர் பட்டியலுடன் கலந்து கொண்டன.

ஆயினும் 50க்களின் முடிவில் அகாலி தளத்தின் தலைமையில் மத வெறியினரின் கை மேலோங்கியது. மத அடிப்படையில் பஞ்சாப் பகுக்கப்பட வேண்டும் என்று கோரி இவர்கள் போராட்டம் நடத்திஞர்கள். நீடித்த போராட்டத்துக்குப் பின்னர் 1964ல் பஞ்சாப் இரண்டு இராச்சியங்களாகப் பகுக்கப்பட்டது. இந்தி பேசுவோரைப் பெரும்பாலராகக் கொண்ட ஹரியாணு அதிலிருந்து தனியாக்கப் பட்டது.

இந்தியாவின் வட கிழக்கில்—அஸ்ஸாம் இராச்சியத்திலும்—தேசிய இனச் சுயாட்சிப் பிரச்சினை இதே அளவு கடுமையாக இருந்தது. இங்கே நாகா, மிஜோ, லுஷாய் முதலிய இனக் குழுக்கள் வசித்த பிரதேசங்களில் 50க்களின் துவக்கம் முதற்கொண்டே இயக்கம் நடந்து வந்தது. நாகாக்களின் போராட்டம் அரசாங்கத்தின் இராணுவ-போலீஸ் சக்திகளுக்கு எதிரான கொரில்லாப் போராக வளர்ந்தது. விளைவாக 1960ன் தொடக்கத்தில் நாகாலாந்து என்னும் புதிய இராச்சியம் உருவாக்கப்பட்டது. அஸ்ஸாமின் மற்ற இனக் குழுக்களுடைய பிரதேசங்களில் சுயாட்சி இயக்கத்திற்கு இது தூண்டுதல் அளித்தது.

மானிட இன அடிப்படையில் இராச்சியங்கள் அமைப்பதற்கான

இயக்கம் தவிர தேசிய இனப் பிரச்சினை குறித்த போராட்டத்தின் இரண்டாவது முக்கியமான அம்சமாக விளங்கியது அரசாங்க மொழி பற்றிய பிரச்சினை. தேவநாகரி எழுத்தில் இந்தி இந்தியாவின் அரசாங்க மொழியாக இருக்கும் என்றும் அதிகாரபூர்வமான இரண்டாவது அரசாங்க மொழி என்ற முறையில் ஆங்கிலம் 15 ஆண்டுக் காலத்துக்கு இருந்து வரும் என்றும் 1949லேயே அரசியல் நிர்ணய சபை கிட்டத்தட்ட ஒருமனதாகத் தீர்மானித்திருந்தது.

பி. ஜி. கேரின் தலைமையில் அரசாங்க மொழிக் கமிஷன் ஒன்றைக் குடியரசுத் தலைவர் 1955ம் ஆண்டு ஜூன் மாதம் நியமித்தார். அரசின் பணித்துறை நோக்கங்களுக்கு இந்தியை அதிக விரிவாகப் பயன்படுத்துவது குறித்த யோசனைகளைக் குடியரசுத் தலைவருக்குத் தெரிவிப்பது கமிஷனின் கடமையாக இருந்தது. இந்தியாவின் பொருளாதார, பண்பாட்டு, விஞ்ஞான வளர்ச்சியையும் இந்தி தாய் மொழியாக இல்லாத பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் நலன்களையும் கருத்தில் கொண்டு கமிஷன் தன் யோசனைகளை முன்வைக்க வேண்டி இருந்தது. கமிஷனின் வேலை ஓர் ஆண்டுக்கு மேல் நீடித்தது. 1956, ஆகஸ்டில் அது தனது அறிக்கையைக் குடியரசுத் தலைவருக்குச் சமர்ப்பித்தது. 1957, ஆகஸ்டில் இந்த அறிக்கை நாடாளுமன்றத்தின் பரிசீலனைக்காக முன்வைக்கப்பட்டது. அரசியல் சட்டத்தின் மொழி பற்றிய வரையறுப்பைக் கமிஷன் ஆமோதித்தது. இந்தியாவின் விரிவான மக்கள் திரளுக்குக் கல்வி பயிற்றும் சாதனமாக ஆங்கில மொழியைப் பயன்படுத்துவது இயலாது என்று அது சுட்டியது. வட்டார இந்திய மொழிகள் பயன்படுத்தப்படும் என்ற நிபந்தனையின் பேரில் தான் கட்டாயத் தொடக்கக் கல்வித் திட்டம் நிறைவேற்றப்பட முடியும் எனக் கமிஷன் கூறியது. இந்திய மக்களின் மிகப் பெரும் பகுதியினர் இந்தி மொழியில் பேச முடியும் என்ற காரணத்தால் அது அரசாங்க மொழியாகச் சிபாரிசு செய்யப்பட்டது.

கமிஷனின் அறிக்கை வெளியிடப்பட்டது மொழிப் பிரச்சினை குறித்த கருத்து வேற்றுமைகளுக்கு முடிவு கட்டி விடவே இல்லை. தவிரவும், மொழிக் கோட்பாட்டின்படி இந்தியாவின் நிர்வாக-பிரதேசப் பாகுபாடு 1956ல் சீரமைக்கப்பட்டதன் தொடர்பாக அரசாங்க மொழி குறித்த சிக்கல் முன்னிலும் கடுமை ஆயிற்று. பெரிய அரசாங்க, சமூகத் தலைவர்கள் பலர், சிறப்பாகத் தமிழ்நாட்டிலும் வங்காளத்திலும், கமிஷனின் பரிந்துரைகளை எதிர்த்தார்கள்.

அரசாங்க மொழி குறித்த நாடாளுமன்றக் கமிட்டி 1957, செப்டெம்பர் மாதம் அமைக்கப்பட்டது. உள்துறை அமைச்சர் கோவிந்த வல்லப பந்த் கமிட்டியின் தலைவர் ஆக்கப்பட்டார். அரசாங்க மொழிக் கமிஷனின் அறிக்கை பற்றித் தனது கருத்தைக் குடியரசுத்

தலைவருக்குத் தெரிவிப்பது கமிட்டியின் காரியமாக இருந்தது. கமிட்டி தனது அறிக்கையை 1959, ஏப்ரலில் சமர்ப்பித்தது. 1965ல் இந்தி ''முக்கிய அரசாங்க மொழி'' ஆன பிறகு, ஆங்கிலம் ''நாடாளுமன்றத் தால் தீர்மானிக்கப்பட வேண்டிய நோக்கங்களுக்காக, இன்றியமை யாத காலத்துக்கு அரசாங்கத் துணை மொழி'' என்ற முறையில் வைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று அறிக்கையில் யோசனை தெரிவிக்கப்பட்டது. ஆங்கிலத்திலிருந்து இந்திக்கு மாறுவதற்கான திட்டம் தயாரிக்கும் பொறுப்பை மத்திய அரசாங்கத்துக்கு அளிக்கும் படி கேர் கமிஷன் போன்றே பந்த் கமிட்டி பரிந்துரைத்தது.

ஆயினும், 1965ல் முடிந்த 15 ஆண்டுக் கெடு ஆங்கிலத்தின் இடத் தில் இந்தியைக் கொண்டு வருவதற்குப் போதாது என்பது தெளி வாயிற்று. ஆங்கிலத்தை மாற்றுவதற்கான கெடுவை வரையறையற்ற காலத்துக்கு நீடிப்பது என்ற அரசாங்கத்தின் தீர்மானம் நாடாளு மன்றத்தின் 1962ம் ஆண்டு அமர்வில் அறிவிக்கப்பட்டது. இந்தியில் கலைச் சொற்களின் உருவாக்கத்தை விரைவுபடுத்துவது பற்றியும் பல்கலைக்கழகங்களில் பயிற்சி மொழியாக இந்தியைப் புகுத்துவது பற்றியும் அதே சமயம் முடிவு செய்யப்பட்டது.

முதலாளித்துவ-தேசிய இனவாத வட்டாரங்களில், சிறப்பாகத் தென் இந்தியாவில், இந்த முடிவுகள் பெருத்த எதிர்ப்பைத் தூண்டி விட்டன. இந்தியைப் பள்ளிகளில் கட்டாய மொழியாகப் புகுத்து வதற்கு எதிராக எல்லா இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. கல்விப் பயிற்சியும் அலுவல்களும் நடத்த வேண்டிய மொழி பற்றிய சிக்கல் 50க்களின் முடிவு முதல் இந்தியாவினது உள்நாட்டு அரசியல் போராட்டத்தின் முக்கிய அம்சம் ஆகி விட்டது.

தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கான போராட்டம் நாளுக்கு நாள் அதிக அளவில் வெகுஜனப் பொது ஜனநாயக இயக்கத்தின் பகுதி ஆயிற்று.

நிலச் சீர்திருத்தங்கள் செயல்பட்ட காலத்தில் விவசாயிகள் இயக்கம்

நிறுவன அமைப்பு உள்ள விவசாயிகள் இயக்கத்தில் ஒற்றுமை யின் பொருட்டுப் போராடுவதற்கான நிலைமைகள் முதலாவது பொதுத் தேர்தல்களுக்குப் பின் உருவாகலாயின. அனைத்து இந்திய விவசாயிகள் சங்கத்துக்கும் ஒன்றித்த விவசாயிகள் சங்கத்துக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைகளின் பயனாக இரு நிறுவனங் களதும் பல வட்டாரக் கிளைகள் ஒன்றுயின. ஒன்றித்த விவசாயிகள் சங்கத் தலைவரும் புரட்சிகர ஜனநாயகவாதியும் ஆன இந்துலால்

யாக்ஞிக் 1953ல் கிஸான் சபாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கிஸான் சபாவின் 11 வது மகாநாடு 1953, ஏப்ரலில் கண்ணனூர் என்னும் இடத்தில் நடந்தது. அப்போது முதல் இந்த நிறுவனத்தின் மகாநாடுகள் ஆண்டுதோறும் நடக்கலாயின. நிறுவனத்தின் நடவடிக்கைகளை மீண்டும் மேற்கொள்வதற்காகச் செய்யப்பட்ட வேலை குறித்த விவரங்கள் மகாநாட்டில் தொகுத்துரைக்கப்பட்டன, விவசாயிகள் போராட்டத்தின் போர்த்திட்ட, செயல்தந்திரப் பணிகள் குறிக்கப்பட்டன. மகாநாட்டினால் ஏற்கப்பட்ட **கொள்கை பற்றிய அறிக்கையில்** கிஸான் சபாவின் புதிய செயல்திட்டம் சூத்திர வடிவில் தரப்பட்டது. நாட்டில் மேற்கொள்ளப்பட்ட நிலச் சீர்திருத்தங்களைச் செயல்திட்டம் கணக்கில் எடுத்துக் கொண்டது. நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராக விரிவான கூட்டணி அமைக்குமாறு இராச்சிய, மாவட்ட நிறுவனங்களைச் செயல்திட்டம் பணித்தது.

நிலச் சீர்திருத்தங்கள் செயல்பட்ட காலப் பகுதியில் விவசாயிகள் இயக்கத்தின் உள்ளடக்கம் மாறலுற்றது. ஜமீன்தாரி முறை ஒழிப்புச் சட்டங்களின் செயல்பாடு விரைவுபடுத்தப்பட வேண்டும், அவை எல்லா வித நிலச்சுவான்தார் நில உடைமை மீதும் அமுலாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் பெரிய நில உடைமையாளர்களின் நிலங்களிலிருந்து குத்தகைக்காரர்கள் வெளியேற்றப்படுவதற்கு எதிர்ப்பும் புதிய கட்டத்தில் வெகுஜனப் போராட்டத்தின் முக்கியப் பிரச்சினையாக இருந்தன.

''சொந்தப் பண்ணை நிர்வாகத்துக்கு மாறும்'' சாக்கில் குத்தகைக்காரர்களை வெளியேற்றும் உரிமையைக் குத்தகை பற்றிய புதிய சட்டங்கள் நிலச்சுவான்தார்களுக்கு அளித்தன. இந்த விதியைப் பயன்படுத்தி நிலச்சுவான்தார்களும் பணக்கார விவசாயிகளும் 50க்களின் பிற்பாதியில் பெருந்திரளாகக் குத்தகைக்காரர்களை வெளியேற்றத் தலைப்பட்டார்கள். பத்தாயிரக் கணக்கிலும் லட்சக் கணக்கிலும் குத்தகைக்காரர்கள் வாரிசு வழியில் வந்த குத்தகை உரிமையை இழந்தார்கள். வெளியேற்றத்துக்குக் குத்தகைக்கார விவசாயிகளின் எதிர்ப்பு இந்தக் காலப் பகுதியில் ஏழை விவசாயிகளது போராட்டத்தின் முக்கியப் போக்கு ஆயிற்று.

வெகுஜனப் போராட்டங்கள் (பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் முதலியன) நாடாளுமன்றத்திலும் சட்ட மன்றங்களிலும் கம்யூனிஸ்டு, ஜனநாயகவாதி உறுப்பினர்களின் போராட்டத்துடன் ஒருங்கு சேர்ந்தன.

விவசாயிகளுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் நேரடியான மோதல்கள் பல பிரதேசங்களில் நிகழ்ந்தன (உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம், பஞ்சாப், பீகார், அஸ்ஸாம்). விவசாயிகளின் வெகுஜன

இயக்கத்தின் விளைவாகக் குத்தகைக்காரர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடை செய்யும் உத்தரவுகளைப் பெரும் பாலான இராச்சியங்களின் அரசாங்கங்கள் 1954ல் பிறப்பித்தன.

குறைந்த நிலம் உள்ளவர்களும் நிலம் இல்லாதவர்களுமான விவசாயிகளால் அரசாங்கத்தின் புறம்போக்கு நிலங்கள் கைப்பற்றப் படும் வடிவத்திலும் (திருவிதாங்கூர்-கொச்சி, சென்னை, ஆந்திரப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம்) நில உடைமை களை வலுக் கட்டாயமாக ஒன்றுக்குவது ஏழை விவசாயிகளால் எதிர்க்கப்படும் வடிவத்திலும் நிலத்துக்கான போராட்டம் நடந்தது. இந்தப் போராட்டத்தின்போது பணக்கார விவசாயிகளின் ஒதுக்கீட்டு நிலங்கள் ஒருங்கு சேர்க்கப்பட்டன.

இதோடு கூடவே குத்தகை நிலைமைகளின் மேம்பாட்டுக்காகவும் போராட்டம் நடந்தது. நிலச்சுவான்தார்களின் நில உடைமை வரையறை செய்யப்படாத ரயத்துவாரிப் பிரதேசங்களில் இந்தப் போராட்டம் முதன்மையாக நடந்தது.

நாட்டுப்புற மக்கள் மீது நேர்முக வரி உயர்வுக்கு எதிராகவும் விவசாய விளை பொருள்களின் விலைகள் கிராமச் சரக்கு உற்பத்தி யாளர்களுக்குச் சாதகமாக நிர்ணயிக்கப்படுவதற்கு ஆதரவாகவும் சிறு சொத்துக்கார விவசாயிகள் தீவிரமாகப் போராடினர்கள்.

பொருளாதாரப் போராட்டம் விவசாயிகளின் எல்லா வட்டாரங் களையும், சிறு நிலச்சுவான்தார்களையும் கூட, முன்போலவே கவர்ந் தது. ஆனால் நிலச் சீர்திருத்தங்களின் போது, நாட்டுப்புறத்தில் விவ சாயிகளின் பொருளாதார, சமுதாய அடுக்கமைவு தீவிரமாக நிகழ் கையில் உருவான குலாக்குகள்* வகுப்பின் தலைமையில் வசதியுள்ள விவசாயிகள் நாளடைவில் போராட்டத்திலிருந்து விலகத் தொடங் கினர்கள்.

அதே சமயம் விவசாயத் தொழிலாளர்களின் போராட்டம் நாட்டுப்புறத்தில் வலுத்தது. நாட்டுப்புறத்தில் வர்க்க சக்திகளின் அணி வரிசைகள் மாறி இருந்த நிலைமைகளில் விவசாயிகள் சங்கங்கள் சரியான திசையில் செல்வதற்கு 1954, ஏப்ரலில் கூடிய இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் முழுக் கூட்டம் நிலப் பிரச் சினை குறித்துச் செய்த முடிவுகள் பெருத்த முக்கியத்துவம் கொண் டிருந்தன. அனைத்து விவசாயிகளின் ஒற்றுமை காக்கப்பட்ட வேண் டும் என்ற ஆணைக் குறிப்பு இவற்றில் அடங்கி இருந்தது. விவசாயத் தொழிலாளர்களின் சுதந்திர நிறுவனங்களை அமைத்து விரிவாக்கு

---

* குலாக்குகள்—பிறருடைய உழைப்பைச் சுரண்டும் பணக்கார விவசாயிகள்.—மொ-ர்.

வதன் இன்றியமையாமைமீது சிறப்பான கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டங்கள் பிறப்பிக்கவும் 1957-1958ல் பெரும்பாலும் செயல்படுத்தவும் பட்டது, குத்தகைச் சட்டங்கள் அமல்படுத்தப்பட்டது, முதலாளித்துவ வகை விவசாயக் கூட்டுறவின் பல்வேறு வடிவங்கள் நாட்டுப்புறத்தில் உருவாகி வளர்ந்தது இவை எல்லாம் நாட்டுப்புறத்தின் மீது பெருத்த பாதிப்பு விளைத்தன. விவசாயிகளுக்குள் சமுதாய முரண்பாடுகள் கூர்மை அடையவும் அனைத்து விவசாயிகளின் ஒன்றித்த கூட்டணி சிதறவும் தொடங்கின. அனேக இராச்சியங்களில் கிஸான் சபாவின் தாழ்நிலை நிறுவனங்களது வர்க்க அமைவு மாறலுற்றது. அவை பெரும்பாலும் ஏழை விவசாயிகளது போராட்ட உறுப்புக்களாக மாறத் தொடங்கின. வசதியுள்ள விவசாயிகள் சங்கங்களிலிருந்து விலகியதனால் பல இராச்சியங்களில் கிஸான் சபா பலவீனம் ஆயிற்று. 1955ல் பத்து லட்சத்துக்கும் அதிகமாய் இருந்த அதன் உறுப்பினர் எண்ணிக்கை பின்னர் குறையலுற்றது.

காங்கிரஸ் தலைமைக் குழு வெகுஜனங்கள் மீது தன் செல்வாக்கை விரிவுபடுத்தும் பொருட்டு ''மண்டல சமிதிகள்'' அமைப்பதன் மூலம் தாழ்நிலை நிறுவனங்களின் வலைப் பின்னலை வலுப்படுத்துவது என்றும் காங்கிரசின் மாநில, மாவட்டக் கமிட்டிகளில் ''விவசாயிகள் பிரிவுகள்'' ஏற்படுத்துவது என்றும் 1958ல் முடிவு செய்தது.

புரட்சிகர-ஜனநாயக சக்திகள், முதன்மையாகக் கம்யூனிஸ்டுக் கட்சியும் அனைத்து இந்திய விவசாயிகள் சங்கமும், விவசாயிகள் இயக்கத்தைப் புதிய திசையில் செலுத்தும் நோக்கத்துடன் நாட்டுப் புறத்தில் விரிவான கிளர்ச்சிப் பிரசாரம் நடத்தத் தீர்மானித்தன. ஆயினும், கம்யூனிஸ்டுகள் எவ்வளவோ முயற்சி செய்தும்கூட, விவசாயிகள் சங்கங்கள் தங்கள் நடவடிக்கைகளை விரிவுபடுத்தவில்லை. 1955ல் 10 லட்சத்து 87 ஆயிரமாக இருந்த அனைத்து இந்திய விவசாயிகள் சங்கத்தின் உறுப்பினர் தொகை 1959/60ல் 5லட்சத்து 72 ஆயிரமாகக் குறைந்துவிட்டது.

1955-1960ல் விவசாயிகள் சங்கத்தின் செல்வாக்கு நாட்டின் சில மாநிலங்களில் கணிசமாகக் குறைந்தது. அது வரை விவசாயிகள் இயக்கத்தின் முக்கியத் தளங்களாக விளங்கி வந்த சில ஆந்திர, வங்காளப் பிரதேசங்களில் இது சிறப்பாகப் புலப்பட்டது. 1958, வசந்தத்தில் நடந்த கம்யூனிஸ்டுக் கட்சியின் 5வது அசாதாரண மகாநாட்டில் இந்த நிலைமை ஒப்புக் கொள்ளப்பட்டது. 1958, அக்டோபரில் (சென்னையில்) நடைபெற்ற கம்யூனிஸ்டுக் கட்சியின் தேசியக் கவுன்சில் முழுக் கூட்டம் கிஸான் சபாவை வலுப்படுத்துவதில் பெரும்

பங்கு ஆற்றியது. நிலப் பிரச்சினை குறித்த விரிவான தீர்மானங்களை இது மேற்கொண்டது. விவசாயிகள் சமூகத்தின் ஒற்றுமையை இந்தத் தீர்மானங்கள் ஒரு புறம் வலியுறுத்தின. மறு புறம், குலாக்குகள் குழுவைச் செயலற்றதாக்கும்படிக் கோரின.

நிலச் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்ட பின் விவசாயிகளின் வெகுஜன இயக்கம், சிறப்பாக நிறுவன அமைப்புள்ள இயக்கம், 1952-1955 உடன் ஒப்பு நோக்குகையில் ஓரளவு பலவீனம் அடைந்தது, அதில் தணிவு ஏற்பட்டது என்றாலும் நிலப் பிரச்சினை குறித்த கொள்கைவாத-அரசியல் போராட்டத்தின் மீதும் தேசிய முதலாளி வர்க்கத்தின் நிலக் கொள்கை மீதும் அது கணிசமான பாதிப்பு நிகழ்த்தியது.

தொழிலாளர் இயக்கம்.
1952—1962ல் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி

சுதந்திர இந்தியாவில் விவசாயிகள் இயக்கத்தோடு கூடவே தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் போராட்டமும் உழைப்பாளிகளது வெகுஜனப் போராட்டங்களின் மிக முக்கிய வடிவமாக விளங்கியது. சுதந்திர ஆண்டுகளில் பாட்டாளிகளின் பொருளாதாரப் போராட்டம் கணிசமாக வளர்ந்து கொண்டு போயிற்று: உலக யுத்தத்துக்கு முந்திய பத்தாண்டுடன் (1930—1939) ஒப்பிடுகையில் 50க்களில் (1950—1959) வேலைநிறுத்தங்களின் ஆண்டுச் சராசரி எண்ணிக்கை 5 மடங்குக்கும் மேல் அதிகரித்தது. இவ்வாறே வேலை நிறுத்தக்காரர்களின் எண்ணிக்கை சராசரி 1.3 மடங்கு அதிகமாயிற்று.

இந்திய அலுவலர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஊக்கத்துடன் பங்கு கொள்ளத் தொடங்கினர்கள். 50க்களின் பிற்பாதியில் நடந்த ஆகப் பெரிய வேலைநிறுத்தங்கள் அனைத்து இந்திய முக்கியத்துவம் கொண்டிருந்தன. ஜம்ஷெட்பூரில் டாட்டாவின் தொழிற்சாலையில் நடந்த பொது வேலைநிறுத்தம் (1958), தோட்டக்கால் தொழிலாளர்களதும் (1958) கல்கத்தா டிராம்வே தொழிலாளர்களதும் (1958) பொது வேலைநிறுத்தங்கள் ஆகியன இவை. 1959ல் மேற்கு வங்காளத்தில் சணல் தொழில் துறைத் தொழிலாளர்களதும் பள்ளி ஆசிரியர்களதும் பொது வேலைநிறுத்தங்கள் நடந்தன. 1960ல் நெசவாலைத் தொழிலாளர்கள், கொப்பரைத் தொழிலாளர்கள் ஆகியோரின் பெரிய வேலைநிறுத்தங்களும் மைய அரசாங்கத்திற்கு உட்பட்ட அரசினர் தொழில் நிலையங்களில் தொழிலாளர்கள், அலுவலர்களின் ஐந்து நாள் பொது வேலைநிறுத்தமும் நடை பெற்றன.

பொருளாதார வேலைநிறுத்தங்களுடன் கூடவே வெகுஜன அரசியல் இயக்கங்களிலும் தொழிலாளர்கள் மேலும் மேலும் அதிக ஊக்கத்தோடு பங்கு கொண்டார்கள். காங்கிரஸ் சர்க்கார்களின் உணவுக் கொள்கைக்கு எதிராக 1959ல் கம்யூனிஸ்டுக் கட்சியால் ஒழுங்கமைக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களும் பொதுக் கூட்டங்களும், அதே ஆண்டு கேரளத்துக்கு ஆதரவாக நடந்த இயக்கம் முதலியன இத்தகையவை.

வேலைநிறுத்தப் போராட்டத்தின் வளர்ச்சி தொழிற்சங்கங்கள் அதிகத் துடியாகச் செயலாற்றத் தொடங்கியதைக் காட்டியது. 12 ஆண்டு கட்டற்ற வளர்ச்சிக் காலத்தில் இந்தியத் தொழிற் சங்கங்களுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்குக்கும் மேல் அதிகரித்தது. 1956/57 முதல் 1958/59 வரையுள்ள காலப் பகுதியில் மட்டும் தொழிற்சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 35 சதவிகிதம் அதிகமாயிற்று. முதன்மையாகத் தோட்டக்கால் தொழிலாளர்களை உள்ளிட்ட விவசாயத் தொழிலாளர்கள், போக்குவரத்து, தகவல் தொடர்புத் தொழிலாளர்கள், தொழிற்சாலைப் பாட்டாளிகள் ஆகியோரின் காரணமாகத் தொழிலாளி வர்க்கத்தின் நிறுவன அமைப்பு இந்த ஆண்டுகளில் வளர்ந்தது.

அதிகார பூர்வமான புள்ளி விவரங்களின் படி, 1958/59ல் பெரிய உற்பத்தி நிலையங்களின் ஏறக்குறைய 30 லட்சம் தொழிலாளர்கள், அதாவது மொத்த எண்ணிக்கையில் 40 சதவிகிதத்தினர், தொழிற் சங்கங்களில் சேர்ந்திருந்தார்கள்.

1947—1949ல் அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசில் ஏற்பட்ட பிளவு தொழிற்சங்க இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பெருங் கேடு விளைத்தது. 1949—1951ல் ஹிந்த் மஸ்தூர் சபா எல்லாவற்றிலும் அதிகச் செல்வாக்கு பெற்றிருந்தது. ஏனெனில், இது சீர்திருத்த வாதக் கொள்கையைக் கடைப்பிடித்த போதிலும் அந்தக் காலத்தில் வேலைநிறுத்தப் போராட்டத்தை அறவே மறுத்து வந்த இந்தியத் தேசியத் தொழிற் சங்கக் காங்கிரசுடன் ஒப்பிடுகையில் அதிகச் சுதந்திரமானது எனத் தொழிலாளர்களால் மதிக்கப் பட்டது.

கிட்டத்தட்ட 1951ம் ஆண்டு முடிவு முதல், நாட்டின் உள் நிலைமையில் ஜனநாயகத் தன்மை அதிகரித்த அளவுக்கும் தொழிற் சங்கங்களின் அனேகத் தலைவர்கள் குறுகிய பிரிவுவாதத்தைக் கைவிட்ட அளவுக்கும் ஏற்ப அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் மீண்டும் நிலை பெறலாயின. 1953ன் நடுவுக்குள் அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் தன் வெகுஜன அடித்தளத்தைக் கணிசமாக வலுவாக்கிக் கொண்டது.

இந்தியாவின் தொழிற் சங்க இயக்கத்தில் சக்திகளின் அணி வரிசை மாற்றம் 1954 வாக்கில் மீண்டும் நிகழ்ந்தது.

ஹிந்த் மஸ்தூர் சபா தன் செல்வாக்கைக் கணிசமான அளவு இழந்து விட்டது. இந்திய சோஷலிஸ்டுக் கட்சியில் ஏற்பட்டிருந்த நெருக்கடியை அதன் நிலைமை பிரதிபலித்தது. அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ், இந்தியத் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் இரண்டினதும் செல்வாக்கு அதிகரித்தது. அந்தக் காலத்துக்குள் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் உறுப்பினர் எண்ணிக்கையில் அ. இ. தொழிற்சங்கக் காங்கிரசையும் ஹிந்த் மஸ்தூர் சபாவையும் விஞ்சி விட்டது (ஹி. ம. சபா செல்வாக்கிலும் உறுப்பினர் தொகையிலும் அ. இ. தொழிற்சங்கக் காங்கிரசுக்குப் பிந்தி இருந்தது).

எல்லாத் தொழிற்சங்கங்களதும் ஒற்றுமையை நிலைநாட்டவும் நாடு அனைத்திற்கும் ஒரே தொழிற்சங்க மையத்தை மீண்டும் ஏற்படுத்தவும் ஹி. ம. சபாத் தலைவர்கள் 1956ம் ஆண்டு நடுவில் முயற்சி செய்தார்கள். அ. இ. தொழிற்சங்கக் காங்கிரசும் ஒன்றித்த தொழிற் சங்கக் காங்கிரசும் தொழில்துறைவாரியான சுதந்திரத் தொழிற் சங்கங்களும் ஹி. ம. சபாவின் முயற்சிக்கு வரவேற்பு அளித்தன. இந்தியத் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் தலைமைக் குழு அந்தக் காலத்தில் இவ்விஷயம் பற்றி அதிகாரபூர்வமான அறிக்கை வெளியிடவில்லை. ஆனால் தேசியத் தொழிற் சங்கக் காங்கிரஸ் தலைவர்களின் தனித்தனி அறிக்கைகள் பத்திரிகைகளில் பிரசுரமாயின. இந்தத் தொழிற்சங்க மையத்தின் தலைவர்கள் ஹி. ம. சபாவுடன் நிறுவன நெருக்கம் கொள்ள இசைந்ததை இவை காட்டின. அ. இ. தொழிற் சங்கக் காங்கிரசோடு ஒற்றுமை ஏற்படுத்துவதற்கு இவர்கள் எதிராய் இருந்தார்கள். ஆனால் துறைவாரியான தேசிய சம்மேளனங்களில் இந்தத் தொழிற்சங்க மையங்களைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் ஒத்துழைப்பது சாத்தியம் என அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

1954/55—1956/57ல் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் தனது செயல்தந்திரத்தை ஓரளவு மாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று என்பது குறிப்பிடத்தக்கது. தங்கள் நேரடியான பொருளாதாரக் கோரிக்கைகளுக்கு ஆதரவாகத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்களை இந்த ஆண்டுகளில் தான் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசின் தலைவர்கள் சில வேளைகளில் ஆதரிக்கவும் தலைமை ஏற்று நடத்தவும் கூட முன்வந்தார்கள்.

1957, ஜூலை மாதம் நடந்த தொழிலாளர் பற்றிய பதினைந்தாவது முத்தரப்பு அனைத்து இந்திய மகாநாட்டின் தீர்மானங்கள் தொழி

லாளி வர்க்கத்தின் குறிப்பிடத்தக்க சாதனையாக விளங்கின. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சம்பள விஷயமான கொள்கை பற்றி விசேஷத் தீர்மானம் தொழிலாளர் பிரதிநிதிகளின் முயற்சியால் இந்த மகாநாட்டில் ஏற்கப்பட்டது. திட்ட உருவரையில் இருந்த இவ்விஷயம் பற்றிய யோசனைகளைக் காட்டிலும் அதிக முற்போக்குள்ள யோசனைகள் இந்தத் தீர்மானத்தில் அடங்கி இருந்தன.

தொழிலாளர் பற்றிய பதினைந்தாவது மகாநாட்டின் தீர்மானங்களைச் செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை 1957 முதல் இந்தியத் தொழிற் சங்கங்களுடைய நடவடிக்கைகளின் முக்கியப் பகுதியாக மதிக்கப்படலாயிற்று. நாடாளுமன்றத்திலும் முத்தரப்பு நிறுவனங்களிலும் போராட்டம் நடந்தது. சம்பளம் பற்றிய புதிய கோட்பாடு கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று கோரி வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் வேறு வெகுஜன நடவடிக்கைகளும் நடத்தப்பட்டன.

அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ், இந்தியத் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் என்னும் இரு தொழிற்சங்க மையங்கள் 1957ம் ஆண்டு வாக்கில் நாட்டின் தொழிற்சங்க இயக்கத்தில் முக்கியமான இடங்களைப் பிடித்துக் கொண்டன.

அ. இ. தொ. காங்கிரஸ் தொழிலாளர்களின் உடனடி முக்கியக் கோரிக்கைகளை ஆதரித்துப் போராடியது, உழைப்பாளி மக்களின் வெகுஜன அரசியல் இயக்கங்களில் அது தலைமைப் பாத்திரம் வகித்தது, தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்கான போராட்டத்தில் ஒத்திசைந்த போக்கைக் கடைப்பிடித்தது, துறைவாரியான சுதந்திர சம்மேளனங்களில் அதன் தொழிற்சங்கங்கள் செயலாற்றியது ஆகிய காரணங்களால் அ. இ. தொ. சங்கக் காங்கிரசின் செல்வாக்கு பெரிதும் வலுவடைந்து விரிவாவது சாத்தியம் ஆயிற்று.

அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசின் 25 வது அமர்வு 1957ம் ஆண்டு முடிவில் எரணாகுளத்தில் (கேரள இராச்சியம்) நடந்தது. நாட்டில் தொழில் பெருக்கம் செய்யும் கொள்கைப் போக்கை இது ஆதரித்தது.

நாட்டில் தொழில் பெருக்கம் செய்யப்பட வேண்டும், அரசினர் துறையும் கனரகத் தொழிற் கிளைகளும் முதன்மையாக விரிவாக்கப்பட வேண்டும் என்ற இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட யோசனைகள் அந்தக் காலத்தில் பிற்போக்காளர்களின் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாகி இருந்தது தெரிந்ததே. கனரகத் தொழில் வளர்ச்சித் துறையில் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுவது தேசிய அரசுரிமையை வலுவாக்குவதற்கு இன்றியமையாத முதனிலை என்று கருதி இந்த வளர்ச்சிப் பாதையை ஆதரிக்கத் தான் தயார் என

அ. இ. தொ. காங்கிரஸ் அறிவித்தது. ஆனால் இந்த வளர்ச்சி உழைப் பாளிகளுக்குக் கேடு விளைக்கும் வகையில் நடைபெறக் கூடாது என்று அது நிபந்தனை விதித்தது.

தங்கள் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காகவும் தொழிற் சங்க உரிமைகளை விரிவுபடுத்துவதற்காகவும் மேற்கொண்டு போராடும்படித் தொழிலாளர்களை அ. இ. தொ. காங்கிரஸ் அறை கூவி அழைத்தது. போராட்ட வடிவங்களை விரிவாக்கும்படி அது யோசனை கூறியது. நாடாளுமன்ற உரை மேடை, பேச்சு வார்த்தை கள், கலந்தாலோசித்தல், பத்திரிகைகள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங் கள் ஆகியவற்றை அதிகத் துடியாகப் பயன்படுத்தும்படியும் கடைசி யான சாதனமாக வேலைநிறுத்தத்தைக் கையாளும்படியும் அது அறி வுறுத்தியது.

காங்கிரஸ் கட்சியினதும், சிறப்பாக சோஷலிஸ்டுக் கட்சியுடைய வும் தொழிற்சங்கங்களின் செல்வாக்கு ஓரளவு பலவீனம் அடைந் திருந்த சந்தர்ப்பத்தில் தொழிலாளர் இயக்கத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிலைகள் 1957 வாக்கில் வலுவடைந்தது பெரிதும் வியப் பூட்டுவதாக இருந்தது.

ஆனால் தொழிலாளர் இயக்கத்தின் வெற்றிகள் தொழிலதிபர் களுக்கு ஆழ்ந்த கவலை ஏற்படுத்தின. வலதுசாரிச் சக்திகளின் வற் புறுத்தல் காரணமாக ஒழுங்கு முறை விதிகள் 1958ல் அரசாங்கத் தால் பிறப்பிக்கப்பட்டன. வேலைநிறுத்தங்கள் செய்வதற்கான தொழிற்சங்கங்களின் உரிமைகளை இவை குறுக்கின. அரசாங்கத்துக்கு ஆதரவாய் இருந்த இ. தே. தொ. காங்கிரசை இவை சலுகை பெற்ற நிலையில் வைத்தன. அடுத்த மூன்று ஆண்டுகளில் அரசாங்கத் தொழி லாளர் இலாகாக்களின் ஆதரவுடன் தனது நிலைகளை வலுப்படுத்திக் கொள்ளவும் அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ், ஹிந்த் மஸ்தூர் சபா, ஒன்றித்த தொழிற்சங்கக் காங்கிரஸ் ஆகியவற்றுக்கு ஊறு விளைக்கவும் இந்தத் தொழிற்சங்க மையத்துக்கு முடிந்தது.

தொழிலாளர் இயக்கத்தில் இடதுசாரிச் சக்திகளின் செல்வாக் கைச் செயலற்றதாக்கும் பொருட்டு இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சி எடுத்துக் கொண்ட விசேஷ நடவடிக்கைகளும் இ. தே. தொ. காங்கிரசை வலுப்படுத்த உதவின.

தேசியக் காங்கிரஸ், இ. தே. தொ. காங்கிரஸ் இரண்டின் தலை வர்களதும் சிறப்பான கூட்டு மகாநாடு 1960 செப்டெம்பரில் நடந்தது. மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், பீகார் முதலிய இராச்சியங்களின் தொழிலாளர் அமைச்சர்களுடன் சேர்ந்து இந்தியத் தேசியக் காங்கிரசின் தலைமைக் குழு ஓராண்டுக் காலம் இந்த மகாநாட்டுக்கு ஏற்பாடுகள் செய்தது.

தொழிலாளர் கொள்கைத் துறையில் ஆளும் கட்சியின் எல்லா நடவடிக்கைகளும் இந்தியத் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசின் மூலமாகவே இனி எடுக்கப்பட்டு வரும் என்ற தீர்மானம் இந்த மகா நாட்டில் நிறைவேறியது.

இ. தே. தொ. காங்கிரசின் வட்டாரக் கிளைகளைக் கலந்து ஆலோசிக்காமல் எந்தத் தொழிற்சங்கங்களையும் நிறுவாதிருக்கும்படியும் காங்கிரஸ்காரர்கள் இ. தே. தொ. காங்கிரசின் தொழிற்சங்கங்களில் மட்டுமே சேருமாறு புரியத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்படியும் மகாநாட்டுப் பிரதிநிதிகள் தேசியக் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு யோசனை கூறினர்கள்.

1958 முதல் தொழிற்சங்க ஒற்றுமை குறித்த எல்லா யோசனைகளையும் இ. தே. தொ. காங்கிரஸ் தலைமைக் குழு அறவே நிராகரிக்கத் தொடங்கியது.

1958-1959ல் இ. தே. தொ. காங்கிரஸ் தலைமைக் குழு தொழிலாளர்களுக்கு இடையே சிறப்பாகக் கடுமையான கம்யூனிஸ்டு எதிர்ப்பும் பிளவுபடுத்தும் போக்கும் கொண்ட பிரசாரத்தை நடத்தியது.

இ. தே. தொ. காங்கிரஸ் தலைமைக் குழு மேற்கொண்ட கம்யூனிஸ்டு எதிர்ப்பும் பிளவுபடுத்தும் போக்கும் வாய்ந்த நிலைகள் காரணமாக நிறுவன அமைப்புள்ள தொழிலாளர் இயக்கத்தில் ஏற்பட்டிருந்த இடர்கள் சோஷலிஸ்டுகளுடைய செல்வாக்கில் இருந்த தொழிற்சங்க மையங்களின் உள் நெருக்கடியால் மேற்கொண்டு கடுமை ஆயின. ஒன்றித்த தொழிற் சங்கக் காங்கிரசில் 1959ல் பிளவு ஏற்பட்டது. 1961ல் ஹிந்த் மஸ்தூர் சபா பிளவுபட்டது.

சக தொழிற் சங்கக் கூட்டுகளின் வலதுசாரிச் சந்தர்ப்பவாதித் தலைவர்களுடைய எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் தொழிற் சங்க ஒற்றுமையின் பொருட்டு விடாப்பிடியான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியது.

நாட்டில் வெகுஜனத் தொழிலாளர், விவசாயிகள் இயக்கம் மும்முரமாக நடந்தது இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் (இ. க. கட்சி) செல்வாக்கு விரிவடைந்ததைப் பெருமளவு சார்ந்திருந்தது. 1953 டிசம்பரிலும்—1954 ஜனவரியிலும் இ. க. கட்சியின் மூன்றாவது மகா நாடு நடை பெற்றது. இடதுசாரிப் பிரிவுவாதப் பிறழ்ச்சியைப் போக்குவதற்காக நடந்த போராட்டத்தின் விளைவுகள் இதில் தொகுத்துரைக்கப்பட்டன. அதேசமயம் பொது ஜனநாயகக் கூட்டணி அமைக்கும் பணியை நிறைவேற்றுவதற்குத் தேவையான விரிவான செயல் திட்டமும் குறிக்கப்பட்டது. ஆனால் நாட்டில் வர்க்க சக்திகளின் அணி வரிசையைக் கட்சி மட்டுமீறி எளிமைப்படுத்திப் புரிந்து கொண்டது.

நாட்டில் பொருளாதார, அரசியல் நெருக்கடி வளர்ந்து வருவதாக அது கருதியது. நேரு அரசாங்கத்தின் இடத்தில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஜனநாயக ஒற்றுமை அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோஷத்தை அது முன்வைத்தது. தேசியக் காங்கிரசின் செல்வாக்கில் இருந்த வெகுஜனங்களுடன் தொடர்புகள் ஏற்படுத்த இந்தப் போக்கு தடையாய் இருந்தது.

1955, ஜூன் மாதம் நடந்த இ. க. கட்சி மத்தியக் கமிட்டியின் முழுக் கூட்டத்திலும் பின்னர் 1956ல் நடந்த இ. க. கட்சியின் 4வது மகாநாட்டிலும் இந்த நிலை மாற்றிக் கொள்ளப்பட்டது. அணித்தான கோரிக்கைகள் பற்றிய செயல்திட்டத்தை மகாநாடு குறித்தது. செயல்பூர்வமான ஜனநாயகக் கூட்டணி அமைப்பதற்காக வெகுஜனங்களுடன் வேலை செய்வது திட்டத்தின் அடிப்படையாக இருந்தது. போராட்டத்தின் உடனடிப் பணி அரசாங்க மாற்றம் என்ற கோஷம் அகற்றப்பட்டது. வெகுஜனங்கள் மீது கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு விரிவடைய இது உதவியது. 1957ம் ஆண்டு வசந்தத்தில் நாட்டில் பொதுத் தேர்தல்கள் ஏற்பாடு செய்து நடத்தப்பட்ட காலப்பகுதியில் இந்த விளைவு வெளிப்பட்டது.

இரண்டாவது பொதுத் தேர்தல்கள்.
கேரளத்தில் முதலாவது கம்யூனிஸ்டு அரசாங்கம்

நாடாளுமன்றத்துக்கும் இராச்சியச் சட்ட மன்றங்களுக்கும் நடந்த இரண்டாவது பொதுத் தேர்தல்கள் இந்தியாவில் சமூக-அரசியல் சக்திகளின் அணி வரிசையில் 50க்களின் முற்பாதியில் ஏற்பட்டிருந்த மாறுதலைப் பிரதிபலித்தன. நேரு அரசாங்கத்தின் உள்நாட்டுக் கொள்கை, முடிவாகப் பகுத்தாய்கையில், சுதந்திரத்தின் பொருளாதார அடித்தளத்தை நிறுவுவதையும் இந்தியாவின் சமுதாய, பண்பாட்டு, அரசியல் வாழ்வில் காலனியாட்சி விட்டுச் சென்றிருந்த கேடுகளை அகற்றுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்தக் கொள்கை தேசியக் காங்கிரசுக்கு மக்களிடையே மதிப்பை மேலும் வலுப்படுத்தியது. இந்த நிலைமையும் திறமையாக நடத்தப்பட்ட தேர்தல் பிரசாரமும் ஆட்சியிலிருந்த கட்சிக்கு நாடாளுமன்றத் தேர்தலிலும் இராச்சியச் சட்ட மன்றத் தேர்தல்களிலும் முழுமையாகவும் ஒப்பு நோக்கிலும் (1952ல் 45 சதவிகிதமாக இருந்தது 1957ல் 47.8 சதவிகிதமாக) அதிகரித்த வாக்குகள் கிடைக்க வகை செய்தன. இந்திய நாடாளுமன்றத்தின் மக்கள் அவையில் காங்கிரசின் முழுப் பெரும்பான்மை மேலும் அதிகரித்தது. இராச்சியச் சட்ட மன்றங்களில் மொத்த இடங்களில் 65.1 சதவிகிதத்தை அது பிடித்துக் கொண்டது.

பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியும் மற்ற வலதுசாரி சோஷலிஸ்டுக் குழுக்களும் நாடாளுமன்றத் தேர்தலில் படு தோல்வி அடைந்தன. ஆனால் இராச்சியச் சட்ட மன்றங்களில் இடங்களின் மொத்த எண்ணிக்கையில் தேசியக் காங்கிரசுக்கு அடுத்த இடத்தைப் பிடித்துக் கொண்டன (மொத்தம் 2901 இடங்களில் 195; தேசியக் காங்கிரஸ்—1889, கம்யூனிஸ்டுக் கட்சி 162). காங்கிரசுக்கு மாற்றான அரசியல் திட்டத்தை முன்வைக்கப் பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியால் முடியவில்லை. தனது கம்யூனிஸ்டு எதிர்ப்புப் போக்கிற்காகவும் அது தண்டனை பெற்றது. தேர்தல்களில் பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியின் தோல்வி இந்திய சோஷலிஸ்டு இயக்கத்தில் கருத்து வேறுபாடுகளையும் பிளவையும் அதிகம் ஆக்கிற்று.

முதலாளித்துவ, சிறு முதலாளித்துவச் சக்திகள் தேசியக் காங்கிரசை மையமாகக் கொண்டு ஒன்றிணைந்தது, நிலப்பிரபுத்துவ-நிலச்சுவான்தார் குழுக்களின் செல்வாக்கு கட்சியில் வெகுவாகக் குறைந்தது ஆகியவற்றை அடுத்து வலதுசாரி, இடதுசாரி எதிர்த்தரப்பு வலுவடைந்தது. வாக்காளர்களின் ஆதரவை இழந்த இந்து மகாசபையின் இடத்திற்கு 1951ல் உருவாக்கப்பட்ட ஜனசங்கம் வந்தது. இந்த அரசியல் நிறுவனத்தின் கொள்கைவாதத்தில் இந்து வகுப்புவாதக் கருத்துக்கள் கணிசமான பாத்திரம் வகித்தன.

நாடாளுமன்றத்தில் நான்கு இடங்களும் இராச்சியச் சட்ட மன்றங்களில் 46 இடங்களும் ஜனசங்கத்துக்குக் கிடைத்திருந்தன. சிறு, நடுத்தர வியாபாரிகளையும் மதவெறி மனப்பான்மை கொண்ட அறிவுஜீவிகளையும் பிற நகர நடுத்தர வட்டாரங்களையும் விவசாய உயர்படியினரில் ஒரு பகுதியையும் இந்தக் கட்சி பெரும்பாலும் சார்ந்திருந்தது.

பொருளாதார, அரசியல் துறைகளில் யாவற்றிலும் பின்தங்கிய இராச்சியங்களில் ஒன்றான ஒரிஸ்ஸாவில் பெருந் தொகையான முன்னாள் சமஸ்தான மன்னர்களதும் அவர்களுடைய பரிவாரங்களதும் கணிசமான செல்வாக்கு எஞ்சி இருந்தது. அங்கே கணதந்திர பரிஷத் என்னும் பிற்போக்குக் கட்சியுடன் தேசியக் காங்கிரஸ் கூட்டணி அரசாங்கம் அமைத்தது.

அதே சமயம் இடதுசாரி எதிர்த் தரப்பின் நிலைகளும் வலுவடைந்தன. தனது அரசியல் ஏகபோகத்துக்கு யாவற்றிலும் பெருத்த அபாயமாக இதையே காங்கிரஸ் தலைமைக் குழு கருதியது. கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஆகப் பெரிய வெற்றிகள் கேரளம், மேற்கு வங்காளம், ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றில் கிடைத்தன. கேரளச் சட்ட மன்றத் தேர்தல்களில் முழுப் பெரும்பான்மை பெற்ற கம்யூனிஸ்டுக் கட்சி 1957 ஏப்ரல் தொடக்கத்தில் அங்கே அரசாங்கம் அமைத்தது

இந்தியாவில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ச்சியில் வரலாற்றுச் சிறப்புள்ள நிகழ்ச்சி ஆயிற்று.

இராச்சியக் கம்யூனிஸ்டுக் கட்சி நிறுவனத்தின் தலைவர் இ. எம். எஸ். நம்பூதிரிபாதின் தலைமையில் அமைந்த கேரள அரசாங்கம் சிக்கலான நிலைமைகளில் வேலை செய்ய வேண்டி இருந்தது. கேரள இராச்சியத்தில் பொருளாதாரத்தின் அஸ்திவாரம் விலை மிக்க வெப்ப மண்டலப் பயிர்களின் (தேங்காய், முந்திரிக் கொட்டை, தேயிலை, ரப்பர், மசாலைப் பொருள்கள் முதலியன) விளைச்சல் ஆகும். இந்தியாவின் ஏற்றுமதி வருமானத்தில் கணிசமான பங்கு இவற்றிலிருந்து கிடைக்கிறது. அதே சமயம் கேரளத்தில் உணவுப் பண்டப் பற்றாக் குறை நிலவுகிறது. இராச்சிய மக்களின் முக்கிய உணவான அரிசியைப் பிற இராச்சியங்களிலிருந்து அது தருவிக்கிறது. தொழில் துறையிலும் கேரளம் இந்தியாவில் ஆகக் குறைந்த வளர்ச்சி பெற்ற இராச்சியம் ஆகும். கேரளத்தில் இடதுசாரி எதிர்த்தரப்பு அமைத்திருந்த அரசாங்கத்தின் மீது பாதிப்பு நிகழ்த்துவதற்கு மத்திய சர்க்காரிடமும் அண்டை இராச்சியங்களின் சர்க்கார்களிடமும் சக்தி மிக்க விசைகள் இருந்தன.

நம்பூதிரிபாத் அரசாங்கம் முதலாளித்துவ அரசியல் சட்டத்தின் வரம்புகளுக்குள் செயலாற்ற வேண்டி இருந்ததும் அடிப்படையான சமுதாய-பொருளாதார மாறுதல்களைச் செயல்படுத்துவதற்கான அதன் வாய்ப்புக்களைப் பெரிதும் குறுக்கி விட்டது. எனவே அதனால் திட்டமிடப்பட்ட பொது ஜனநாயகவாதச் சீர்திருத்தங்கள் மொத்தத்தில் தேசியக் காங்கிரசின் செயல்திட்ட எல்லைகளுக்கு வெளியே போகவில்லை. நகரங்களுக்கு இடையே பயணிகள் போக்குவரத்துச் சாதனங்கள் தேசிய உடைமை ஆக்கப்பட்டன, அரசு இயந்திர அமைப்பில் சீர்திருத்தம் தொடங்கியது, அதிகாரிகளின் இலஞ்ச ஊழலுக்கும் கள்ள வியாபாரத்துக்கும் எதிராகப் போராட்டம் நடத்தப்பட்டது; அரசு நிதி வளங்களைச் சீர்படுத்தும் துறையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக இராச்சியத்தின் பட்ஜெட் பல ஆண்டுகளுக்குப் பின் முதன் முதலாகச் சரிக்கட்டப்பட்டது.

ஆனால் எல்லாவற்றிலும் முக்கியமான சீர்திருத்தங்கள் விவசாயத் துறையிலும் பொதுக் கல்வித் துறையிலும் செய்யப்பட்டன. குத்தகைக்காரர்கள் அவர்களுடைய நிலப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடை செய்யும் உத்தரவை அரசாங்கம் பிறப்பித்தது. ஜென்மி எனப்பட்ட ஜமீன்தாரி வகையான நிலப்பிரபுத்துவ நில உடைமையை ரத்து செய்யும் சட்டத் தொகுப்பையும் அது செயல்படுத்தியது. அரசின் நிலத் தொகுதியிலிருந்து நிலப் பகுதிகள் நிலம் இல்லாத விவசாயிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டன. அதே

சமயம் நிலச் சீர்திருத்தம் பற்றிய எல்லா விவரங்களையும் உள்ளடக்கிய விரிவான சட்டம் தயாரிக்கப்பட்டுச் சட்டமன்றத்தின் ஆலோசனைக்கு முன்வைக்கப்பட்டது. நிலச்சுவான்தாரின் நில உடைமையைக் குறுக்குவதும் குத்தகைக்காரர்களுக்குச் சொத்துரிமை அளிப்பதும் பயிர்த் தொழிலாளர்களுக்கு நிலத்தைப் பகிர்ந்தளிப்பதும் இந்தச் சட்டத்தின் நோக்கங்கள்.

பொதுக் கல்வித் துறையில் தனியார் பள்ளிகளையும் கல்லூரிகளையும் அரசின் கட்டுப்பாட்டில் வைக்க அரசாங்கம் முயன்றது.

நிலச் சீர்திருத்தமும் கல்வித் துறையில் எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் வலதுசாரி எதிர்த் தரப்பால் வன்மத்துடன் தாக்கப்பட்டன. கேரளத்தில் மிக உறுதியான நிலைகளில் இருந்த கத்தோலிக்க மத நிறுவனத்தினரும் ''நாயர் சேவா சமாஜம்'' என்னும் நிறுவனத்தை மையமாகக் கொண்டு திரண்ட இந்து மத வெறியர்களும் படு மூர்க்கமாக இவற்றைத் தாக்கினர்கள்.

இராச்சியக் காங்கிரஸ் நிறுவனத்தின் தலைமையில் இயங்கிய எதிர்த் தரப்பு அரசாங்க எதிர்ப்புப் பிரசாரம் நடத்துவதுடன் நிற்கவில்லை. 1957—1959ல் அது பற்பல எதிர்ப்புப் பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் ஹர்த்தால்களும் இத்தகைய பிறவும் நடத்திய வண்ணமாய் இருந்தது. இராச்சியத்தில் முறையான வாழ்க்கைப் போக்கைச் சிதைப்பதும் ஒழுங்கீனங்களைத் தூண்டிவிடுவதும் இவ்வாறு மத்திய அதிகாரிகளின் தலையீட்டுக்குக் காரணம் ஏற்படுத்துவதும் எதிர்த் தரப்பினரது முயற்சியின் நோக்கமாய் இருந்தது.

காங்கிரசின் தலைமையில் ஒன்றித்த எதிர்த் தரப்பு வட்டாரப் பிற்போக்குச் சக்திகளதும் மையத்தினதும் ஆதரவுடன் ஒழுங்கீனங்களைத் தூண்டி விடுவதிலும் அரசு இயந்திரத்தின் முறையான செயல் பாட்டைப் பகுதி அளவில் குலைப்பதிலும் 1959ம் ஆண்டுக் கோடையில் வெற்றி பெற்றது. ''சட்டமும் ஒழுங்கும்'' குலைக்கப்பட்டுவிட்டது என்ற சாக்கில் 1959, ஜூலையில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. சட்ட மன்றம் கலைக்கப்பட்டது, அரசாங்கம் அகற்றப்பட்டது. ஆளுநரால் நியமிக்கப்பட்ட ''அலுவலர் அமைச்சவை'' அதன் இடத்துக்கு வந்தது. 1960ல் இராச்சியச் சட்ட மன்றத்துக்கு நடந்த கெடுவுக்கு முந்திய அடுத்த தேர்தல்கள் வரை இந்த ''அமைச்சவை'' முழு அதிகாரம் பெற்றிருந்தது.

கேரளத்தில் 1957-1959ல் நடந்த நிகழ்ச்சிகள் கம்யூனிஸ இயக்கத்துக்கு மிகப் பெரிய முக்கியத்துவம் கொண்டிருந்தன, ஏனெனில் அமைதியான வழியில் ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்பை இவை ஏற்படுத்தின. அமிர்தசரஸில் 1958ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடந்த கம்யூனிஸ்டுக் கட்சியின் 5வது அசாதாரண

மகாநாட்டில் இதுவே பிரதான விஷயமாக இருந்தது. மொத்தத்தில் மகாநாட்டில் நிறுவனப் பிரச்சினைகள் ஆராயப்பட்டன. கட்சியை வெகுஜனக் கட்சியாக மாற்றவும் தொழிற் சங்கங்களுக்கும் விவசாயிகள் நிறுவனங்களுக்கும் நிலையான தலைமைக்கு வகை செய்யவும் வல்ல கட்சி வேலை முறைகளையும் வடிவங்களையும் உருவாக்கும் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. முந்திய காலப் பகுதியில் கட்சியின் நடவடிக்கைகள் பற்றிய ஆழ்ந்த பகுத்தாய்வு மகாநாட்டில் செய்யப்பட்டது. கம்யூனிஸ்டுக் கட்சியின் மைய அலுவலகத்தினதும் தாழ் நிலை நிறுவனங்களதும் வேலை சுய விமர்சன முறையில் மீண்டும் மதிப்பிடப் பட்டது. மகாநாடு புதிய விதிகளை ஏற்றது. நிறுவனப் பிரச்சினை குறித்த முக்கியமான தீர்மானமும் அதில் நிறைவேற்றப்பட்டது.

புரட்சியின் அமைதியான வளர்ச்சி பற்றிய கொள்கைப் போக்கைத் தயாரித்த இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 5வது மகாநாட்டுத் தீர்மானங்கள் மீது சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 20வது காங்கிரஸ், சோஷலிஸ்டு நாடுகளின் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிப் பிரதிநிதிகளின் மாஸ்கோ மகாநாடு ஆகிய வற்றின் முடிவுகள் செல்வாக்கு செலுத்தின. ஒன்றித்த பொது ஜன நாயகக் கூட்டணி அமைக்கும் முக்கியமான வேலையைக் கட்சி இலக்காகக் கொண்டது. ஆயினும் கட்சி நிறுவனங்களின் நடைமுறைச் செயல்களில் சீர்திருத்தவாத, குறுகிய பிரிவுவாதப் பிறழ்ச்சிகள் விரைவில் புலப்பட்டன. 1961ம் ஆண்டு நடந்த அடுத்த கட்சி மகாநாட்டில் இந்த விவரம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாவது பொதுத் தேர்தல்களுக்குப் பின் இந்தியாவின் உள்நாட்டு அரசியல் வளர்ச்சி

இரண்டாவது பொதுத் தேர்தல்களில் இடதுசாரிச் சக்திகளின் வெற்றிகளும் கேரளத்தில் கம்யூனிஸ்டு அரசாங்கம் அமைக்கப்பட்டதும் அதன் நடவடிக்கைகளும் நாட்டில் சமுதாய-அரசியல் சக்திகளின் அணி வரிசை மீது பாதிப்பு நிகழ்த்தின. ஆட்சியில் இருந்த கட்சியினது வலதுசாரியின் உடனடியான எதிர்வினை பழமைப்பற்று மனப்போக்குள்ள சில தலைவர்கள் (சி. இராஜகோபாலாச்சாரியார், என். ஜி. ரங்கா முதலியோர்) கட்சியிலிருந்து வெளியேறியதும் 1959, ஆகஸ்டில் புதிய வலதுசாரி அரசியல் நிறுவனத்தை—பிற்போக்குச் சுதந்திரக் கட்சியை—அமைத்ததும் ஆகும். இராஜகோபாலாச்சாரியார், ரங்கா, முன்னாள் வலதுசாரி சோஷலிஸ்டு மசானி ஆகியோர் கட்சிக்குத் தலைமை தாங்கினார்கள். நிலச் சீர்திருத்தங்களைச் செயல் படுத்தியது, அரசினர் துறையை முதன்மையாக விரிவுபடுத்தியது

முதலியவை உட்பட நேரு அரசாங்கம் மேற்கொண்ட பல ஜனநாயகச் செயல்களைப் புதிய கட்சியின் தலைவர்கள் ஆரம்பம் முதலே வெளிப் படையாகத் தாக்கினர்கள். இந்தியாவின் பொருளாதார வாழ்வை வழிகாட்டி நடத்துவதில் திட்ட வகுப்பு புகுத்தப்படுவதை அவர் கள் கடுமையாக எதிர்த்தார்கள். தனியார் சொத்துரிமையையும் ''தொழில் முயற்சிச் சுதந்திரத்தையும்'' அவர்கள் தீவிரமாக ஆதரித்தார்கள். அயல்நாட்டுக் கொள்கைத் துறையில் பயனுள்ள நடுநிலைமைப் போக்கு மாற்றப்பட வேண்டும் என்றும் மேற்கு நாடுகளின் சார்பில் திருப்பப்பட வேண்டும் என்றும் அவர்கள் வாதித்தார்கள். பெரு முதலாளி வர்க்கம், நிலச்சுவான்தார்கள், முன் னாள் சமஸ்தான மன்னர்கள் ஆகியோரின் அரசியல் நிறுவனமாக விளங்கிய சுதந்திரக் கட்சி, இந்தியாவில் எல்லாப் பிற்போக்குச் சக்திகளதும் கவர்ச்சி மையம் ஆகிவிட்டது.

வலதுசாரி எதிர்த் தரப்புச் சக்திகள் ஒன்று திரண்டதைத் தொடர்ந்து இந்து, முஸ்லிம் வகுப்புவாத நிறுவனங்களின் செயல் கள் தீவிரம் ஆயின.

இந்துக்களின் மத வெறியையும் பிற மதத்தவர்பால், முதன்மை யாக முஸ்லிம்கள்பால் அவர்களது பொறுமை இன்மையையும் தூண்டி விடுவதில் ஜனசங்கம் சிறப்பான பங்கு ஆற்றத் தொடங்கியது. 50க்களின் பிற்பாதியில் துடியாகச் செயல்பட ஆரம்பித்த இந்தக் கட்சி இந்து வகுப்புவாதிகளின் இராணுவ முறையில் அமைந்த நிறு வனமான ராஷ்டிரீய சுயம்சேவக் சங்கத்தை ஆதாரமாகக் கொண்டி ருந்தது. முற்போக்கு விரோதியும் சீர்திருத்தப் பகைவருமான கோல் வால்கர் ராஷ்டிரீய சுயம்சேவக் சங்கத்தின் தலைவராய் இருந்தார். இந்தியாவின் ஜனநாயக வளர்ச்சியை ஜனசங்கம் எதிர்த்தது. பெரும் பாலும் எழுத்தறிவு அற்றவர்களாய் இருந்த மக்களின் கணிசமான பகுதியினர் அரசியலிலும் சமுதாயத் துறையிலும் பெரிதும் பின் தங்கி இருந்ததைத் திறமையாகப் பயன்படுத்திக் கொண்ட ஜனசங் கம் தனது பிரசாரத்தில் இந்துக்களின் மத உணர்ச்சிகளைத் தூண்டி விட்டது. தானே ''உண்மையான தேசியவாதத்தின்'' காப்பாளி என்று சொல்லாடம்பரத்துடன் கூறிக் கொண்டு உள்நாட்டு, வெளி நாட்டு அரசியலில் ''நேருவின் போக்கை'' வெளிப்படையாக எதிர்த்து வந்தது ஜனசங்கம்.

ஜனசங்கமும் இந்து வகுப்புவாத நிறுவனங்களும் துடியாகச் செய லாற்றத் தொடங்கியது முஸ்லிம்களின் பிற்போக்கான மத-வகுப்பு வாத நிறுவனங்களின் நடவடிக்கைகள் விரிவடைய வாய்ப்பு அளித் தது. இவற்றில் முதன்மையானவை ''ஜமாத்-ஏ-இஸ்லாமீ ஹிந்த்'' (''இந்திய முஸ்லிம்களின் மன்றம்''), ''மஜ்லிஸ் இத்தஹாதுல் முஸ்லி

மீன்'' (முஸ்லிம்கள் ஒற்றுமைச் சங்கம்) ஆகியவை. தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் முற்போக்குள்ள சமுதாய, பொருளாதார மாற்றங்களை ஜனசங்கம் போன்றே இவையும் எதிர்த்தன.

இந்து, முஸ்லிம் வகுப்புவாத நிறுவனங்களின் நடவடிக்கைகள் தீவிரம் ஆனதோடு கூடவே அரசியல் வாழ்வில் கிறிஸ்தவ மதச் சபையின் தலையீடும் அதிகரித்தது. கேரளப் பிரதேசத்தில் கிறிஸ்தவ மதச் சபையின் சமூக நிறுவனமாகச் செயல்பட்ட கேரளக் கத்தோலிக்கக் காங்கிரஸ் 1957—1959ல் கம்யூனிஸ்டு அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் மிக முக்கியமான பங்கு ஆற்றியது.

இந்தியாவில் ஒரு புறம் வகுப்புவாதம் வளர்ந்து கொண்டு போன போது மறு புறம் சாதி அடிப்படையில் சச்சரவுகள் கூர்மையாகத் தொடங்கின. விஷயம் என்ன என்றால், சுதந்திரம் பெற்ற பின் (நாட்டுப்புறத்தில் அரை நிலப்பிரபுத்துவ சமுதாய-பொருளாதாரக் கட்டமைப்பு அப்படியே இருந்ததாலும் மக்களின் அரசியல் ஒழுங்கமைப்பு பலவீனமாய் இருந்ததாலும்) கல்வி பரவியது, சர்வஜன வாக்குரிமையும் சிறப்பாக கிராமச் சுய நிர்வாக முறையும் (பஞ்சாயத்துக்கள்) செயல்படுத்தப்பட்டது, அதனால் திரளான பொது மக்கள் அரசியல் வாழ்வில் ஈர்க்கப்பட்டது ஆகியவற்றின் விளைவாக, சமூக நிறுவன அமைப்பின் யாவற்றிலும் பொதுவான வடிவம் என்ற முறையில் சாதிகளின் முக்கியத்துவம் அதிகமாயிற்று.

இந்த அடிப்படையில் ''ஆதிக்கம் செலுத்திய சாதிகள்'', அதாவது நிலச் சொத்துக்களின் பெரும் பகுதியைத் தங்கள் கைகளில் வைத்திருந்தவையும் சொத்துக்கார விவசாயிகளின் முக்கியத் திரளை உள்ளடக்கியவையுமான சாதிகள், சம்பந்தப்பட்ட இராச்சியத்தின் அல்லது பிரதேசத்தின் அரசாங்க நிர்வாக உறுப்புக்களில் தங்கள் செல்வாக்கை அதிகரிப்பதற்குச் சாதி ஒருமைப்பாட்டைப் பயன்படுத்தின. இந்த நிலையின் காரணமாக, ஒரு புறம் போட்டியிடும் உயர் சாதிகளுக்கிடையிலும் மறு புறம் தாழ் சாதிகளுக்கும் உயர் சாதிகளுக்கும் இடையிலும் மோதல்கள் கூர்மை அடைந்தன.

50க்களின் நடுவில் நாட்டுப்புறத்தில் சாதிப் பிணக்குகள் சிறப்பாகத் தீவிர வளர்ச்சி அடையலாயின; நாட்டுப்புறத் தாழ்படியினருக்கும் நிலப்பிரபு-குலாக்கு உயர்படியினருக்கும் இடையே நிலவிய வர்க்க முரண்பாடுகள் இவற்றில் வெளிப்பட்டன.

உழைப்பாளிகளின் வர்க்கப் போராட்டமும் மத, சமுதாய, சாதி அடிப்படையில் பிணக்குகளும் வளர்ந்தது, பிற்போக்கு அரசியல் நிறுவனங்களின் செயல்கள் தீவிரம் அடைந்தது, சுதந்திரக் கட்சி அமைக்கப்பட்டது ஆகிய நிகழ்ச்சிகள் நாட்டில் அரசியல் சக்திகளின் துருவ முனைப்பு தொடங்கிவிட்டதைக் காட்டின.

1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 6வது மகாநாட்டுத் தீர்மானங்களில் இந்தியாவில் உருவாகி இருந்த நிலைமை பற்றிய மதிப்பீடு தரப்பட்டது. 1960, நவம்பரில் நடை பெற்ற கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகளது மாஸ்கோ மகாநாடு செய்த முடிவுகளை இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி மகாநாடு ஆமோதித்தது. நாட்டின் முக்கிய அரசியல் சக்திகளின் பால் கட்சியின் போக்கு குறித்து மகாநாட்டில் மறு மதிப்பீடு செய்யப்பட்டது. இந்தியத் தேசிய முதலாளி வர்க்கத்தின் இரட்டை நிலை விளக்கப்பட்டது. மகாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசியக் கவுன்சில் கட்சியின் தலைமை உறுப்பு ஆயிற்று. இந்தக் கவுன்சில் அஜய் குமார் கோஷைப் பொதுச் செயலாளராகக் கொண்ட மத்தியச் செயலகத்தைத் தேர்ந்தெடுத்தது (அஜய் குமார் கோஷ் 1962, ஜன வரியில் காலமானார்).

தொழிலாளி வர்க்கம், அதன் கட்சி ஆகியவற்றின் தலைமையில் ஒன்றித்த ஜனநாயகக் கூட்டணி அமைக்கும் போக்கை மகாநாடு வகுத்தது. ஏகாதிபத்தியத்துடன் இணைந்திராத தேசிய முதலாளி வர்க்கப் பகுதி உட்பட எல்லா முக்கிய வர்க்கச் சக்திகளையும் இந்தக் கூட்டணி உள்ளடக்கி இருக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. எனவே தேசியக் காங்கிரசின் ஜனநாயகப் பிரிவுடன் ஒன்றித்த கூட்டணி அமைக்கும் போர்த்தந்திரத்தைச் செயல்படுத்தும் யோசனை முன்வைக்கப்பட்டது. ஆனால் தேசியக் காங்கிரஸ் தலைமைக் குழுவும் சோஷலிஸ்டுக் கட்சிகளின் தலைமைக் குழுக்களும் கம்யூனிஸ்டு எதிர்ப்பு நிலையை மேற்கொண்டதாலும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் தீவிரம் அடைந்ததாலும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 6வது மகாநாட்டினால் வகுக்கப்பட்ட பொதுப் போக்கைச் செயல்படுத்துவது கடினம் ஆயிற்று.

1962ல் நடந்த மூன்றும் பொதுத் தேர்தல்களும் தேசியக் காங்கிரசுக்குள் போராட்டம் தீவிரம் அடைந்ததும்

நாடாளுமன்றத்துக்கும் இராச்சியச் சட்ட மன்றங்களுக்கும் 1962 பிப்ரவரியில் நடந்த மூன்றும் பொதுத் தேர்தல்களுக்கான பிரசாரத்தின் போதும் தேர்தல்களிலும் இந்தியாவின் முக்கியமான வர்க்கச் சக்திகளின் எல்லை வரையறுப்பு புலப்பட்டது. நாட்டின் தலைமை அரசியல் கட்சி என்ற முறையில் காங்கிரசின் நிலையைத் தேர்தல்கள் மீண்டும் உறுதிப்படுத்தின. நாடாளுமன்றத்தின் மக்கள் சபையில் மொத்தம் 520ல் 361 இடங்கள் காங்கிரசுக்குக் கிடைத்தன. தேர்தல்களில் கலத்து கொண்டவர்களில் 46.02 சதவிகிதம்

வாக்காளர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்தார்கள். ஆயினும் காங்கிரஸ் வேட்பாளர்களுக்குக் கிடைத்த வாக்குக்கள் மொத்தத்திலும் ஒப்பு நோக்கிலும் குறைந்ததைக் காட்டும் போக்கு 1962லேயே தென்பட்டது: 1957ம் ஆண்டுடன் ஒப்பு நோக்கில் 60 லட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்களைத் தேசியக் காங்கிரஸ் இழந்து விட்டது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி தன் நிலைகளை இன்னும் வலுவாக்கிக் கொண்டது. அதன் 29 வேட்பாளர்கள் மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், அது முதன்மையான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை நிலைப்படுத்திக் கொண்டது. அதே சமயம் நாடாளுமன்றத்திலும் சரி, இராச்சியச் சட்ட மன்றங்களிலும் சரி, வலதுசாரி எதிர்த் தரப்பைச் சேர்ந்த கட்சிகள் கணிசமாக அதிக இடங்கள் பெற்றன. சுதந்திரக் கட்சியும் ஜனசங்கமும் சேர்ந்து மக்கள் சபையில் 32.2 சதவிகிதம் இடங்களைக் கைப்பற்றின (மொத்த வாக்குக்களில் 13.2 சதவிகிதம் அவற்றுக்குக் கிடைத்தது; கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கிடைத்தவை 10 சதவிகிதம் வாக்குக்களே).

ஆயினும் நாட்டில் வலதுசாரி ஆபத்து வளர்ந்து வந்ததை அந்தக் காலப் பகுதியில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியோ தேசியக் காங்கிரசோ வேண்டிய அளவில் மதிப்பிடவில்லை.

காங்கிரசின் நிலைகள் பலவீனம் அடைவதற்குக் கட்சியில் நடந்த உட்குழுப் போராட்டம் பெரும் அளவு காரணமாய் இருந்தது. இந்தப் போராட்டம் இரு வகைக் காரணம் கொண்டிருந்தது. ஒரு புறம், பல இராச்சியங்களில், சிறப்பாக இந்தி மொழிப் பிரதேசங்களிலும் மேற்கு வங்காளத்திலும் இராச்சியக் காங்கிரஸ் நிறுவனங்களின் தலைமையிலும் நாடாளுமன்ற உட்பிரிவுகளிலும் அரசாங்கங்களிலும் இருந்த வெவ்வேறு குழுக்களுக்கு இடையே கடுமையான மோதல்கள் நிகழ்ந்தன. வட்டார, அனைத்து இந்திய முதலாளி வர்க்கத்தையும் இந்தியச் சமூகத்தின் பிற உடைமையாளர் வட்டாரங்களையும் சேர்ந்த வெவ்வேறு குழுக்களுக்கு இடையே நிலவிய ஆழ்ந்த முரண்பாடுகளை இந்த மோதல்கள் பிரதிபலித்தன. மறு புறம், வலதுசாரி, இடதுசாரிச் சக்திகளின் துருவ முனைப்பு நிகழ்முறை காங்கிரசுக்குள் தீவிர வளர்ச்சி அடையலாயிற்று. எதார்த்தத்தில் கட்சிக்குள் மூன்று முக்கிய உட்பிரிவுகள் உருவாயின. நேருவையும் அவருடைய போராட்டத் தோழர்களையும் மையமாகக் கொண்டு ஒன்றிணைந்த நடுநிலைப் பிரிவு; மத்திய அரசாங்க அமைச்சர்களான எஸ். கே. பாட்டீல், மொரார்ஜி தேசாய் ஆகியோரையும் வெவ்வேறு இராச்சியங்களில் பெரிய காங்கிரஸ் நிறுவனங்களின் தலைவர்களையும் (உதாரணமாக, மேற்கு வங்காளத்தில் அதுல்ய கோஷையும் உத்தரப் பிரதேசத்தில் சந்திர பானு குப்தாவையும் பிறரையும்)

ஆதரித்த வலதுசாரிப் பிரிவு; மத்திய அரசாங்கத்தின் அமைச்சர் கே. டி. மாளவியாவைத் தலைவராகப் பெற்றதும் யாவற்றிலும் குறைந்த ஒழுங்கமைப்பு உள்ளதும் ஆன இடதுசாரிப் பிரிவு ஆகியவை இவை.

காங்கிரசில் உட்பிரிவுப் போராட்டம் 1962ம் ஆண்டுத் தேர்தல் களுக்குப் பிறகு முன்னிலும் கடுமை ஆயிற்று. ஆட்சியில் இருந்த கட்சிக்குள் நிலவிய வெவ்வேறு குழுக்களின் பிரதிநிதிகள் தேர்தல் களில் அதிகாரபூர்வமான காங்கிரஸ் வேட்பாளர்களை உண்மையில் அடிக்கடி எதிர்த்தார்கள்.

பீக்கிங்கால் மூட்டிவிடப்பட்ட சீன-இந்திய எல்லைப் போர் 1962ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் கடுமையானதை ஒட்டிக் காங்கிரஸ் கட்சிக்குள் வலதுசாரிச் சக்திகளின் ஒன்றிணைவு வலுப்பட்டது. கட் சிக்கு வெளியே இருந்த, நேரு அரசாங்கம் ராஜினாமா செய்ய வேண் டும் என்று 1963ம் ஆண்டுக் கோடையில் நாடாளுமன்றத்தில் கோரிய, பழமை விரும்பிச் சக்திகளோடு இவை உண்மையில் கூட்டு சேரத் தொடங்கின. கட்சியின் ஒற்றுமையை வலுப்படுத்தும் நோக்கத் துடன் அதே ஆண்டு ஆகஸ்டு மாதம் சென்னை இராச்சிய முதலமைச் சர் கே. காமராஜரின் யோசனைப்படி ''காமராஜர் திட்டம்'' எனப் பட்டது ஏற்கப்பட்டது. சில பிரபல காங்கிரஸ் தலைவர்கள் அமைச் சர் பதவிகளிலிருந்து கட்சி வேலைக்கு மாறுவது இந்தத் திட்டத்தின் நோக்கமாக இருந்தது. இந்தத் திட்டம் செயலாக்கப்பட்டதன் விளை வாக மாற்றி அமைக்கப்பட்ட மத்திய அரசாங்கத்தில் வலதுசாரிப் பிரிவின் நிலைகள் ஓரளவு வலுக் குறைந்தன என்றாலும், எஸ். கே. பாட்டீலும் மொரார்ஜி தேசாயும் உட்பட அனேக வலதுசாரித் தலைவர்கள் காங்கிரஸ் தலைமையில் ''சிண்டிக்கேட்டு'' எனப்பட்ட அதிகாரபூர்வம் அற்ற குழுவை உருவாக்கினார்கள். ஆட்சியில் இருந்த கட்சியின் கொள்கை மீது இந்தக் குழுவின் செல்வாக்கு 60க்களில் மிகக் கணிசமாக இருந்தது. 1963ல் ஜெய்பூரில் நடந்த அனைத்து இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில் காமராஜர் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காங்கிரசுக்குள் நிலவிய கடுமையான கருத்து வேறுபாடுகள் 1964, ஜனவரியில் புவனேசுவரத்தில் (ஒரிஸ்ஸா) நடைபெற்ற கட்சி மகாநாட்டில் வெளிப்பட்டன. ''ஜனநாயக சோஷலிஸச்'' செயல் திட்டத்தின் தனது உரு மாதிரியை இடதுசாரிக் குழு கே. டி. மாள வியாவின் தலைமையில் இந்த மகாநாட்டில் பிரேரித்தது. ஆனால் விடாப்பிடியான போராட்டத்துக்குப் பின் இடதுசாரிப் பிரிவின் யோசனைகள் ஏற்கப்படவில்லை. காங்கிரசுக்குள் இருந்த வலதுசாரிச் சக்திகளுக்கு வெளிப்படையாக விட்டுக்கொடுக்கும் சலுகைகள்

அடங்கிய வரையறுப்புக்கள் ''ஜனநாயக சோஷலிசம்'' பற்றிய தீர்மானத்தில் சேர்க்கப்பட்டன.

50க்களின் இறுதியிலும் 60க்களின் தொடக்கத்திலும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கை சிக்கல் அடைந்ததும் ஆட்சியில் இருந்த கட்சியில் பிளவுகள் ஏற்பட்டதும் தேசியத் தலைவர் ஜவாகர்லால் நேருவைக் கடுமையாகப் பாதித்தன. 1964ம் ஆண்டு மே மாதம் 27ந் தேதி அவர் காலமானார். சுதந்திர இந்திய வரலாற்றின் முதல் கட்டம் அவரது மரணத்துடன் ஒரு வகையில் முடிவடைந்தது. இந்தியாவுடைய உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளின் அடிப் படைகள் இந்தக் கட்டத்தில் நிறுவப்பட்டன.

1950—1964ல் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை

இந்தியக் குடியரசு ஏற்பட்ட பின்னர், அரசாங்கத்தின் வெளி நாட்டுக் கொள்கை நடவடிக்கைகளின் போதும் உருவான புதிய சர்வதேசத் தொடர்புகளின் விளைவாகவும் அயல்நாட்டுக் கொள்கை பற்றிய நேருவின் கருத்து வரையறுக்கப்பட்டது. பயனுள்ள நடு நிலைமைக் கொள்கை என்று இது அழைக்கப்பட்டது. ஒன்றுக்கு ஒன்று எதிராக இருந்த உலக அரசியல் கூட்டணிகள் இரண்டில் எதனுட னும் சேராமைக் கொள்கை இதன் அடிப்படை. ஆனாலும் இந்தியா வின் வெளிநாட்டுக் கொள்கை தனித்து ஒதுங்கும் போக்கு எதுவும் கொண்டிருக்கவில்லை. மாறாக, டொமினியனாக இருந்த ஆண்டு களிலேயே சுதந்திரம் பெற்ற நாட்டின் நிலைகளை மேற்கொண்டு சர்வதேச உறவுகளின் தொகுப்பில் தனக்கு உரிய இடத்தைப் பெற இந்தியா முயன்று வந்தது.

ஆசிய-ஆப்பிரிக்கக் கண்டங்களில் தேசிய விடுதலை இயக்கத்துக்கு ஆதரவு அளிப்பது ''மூன்றாவது உலகைச்'' சேர்ந்த நாடுகளின் அரசுரிமை வாய்ந்த பொருளாதார, அரசியல் வளர்ச்சி குறித்த நலன்களைக் காப்பது என்ற கொள்கை, இந்திய அரசியலில் ''நேரு வின் போக்கு'' உருவாகத் தொடங்கிய ஆண்டுகளிலும் ஓரளவு ஒத்திசைந்த முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

கொரியப் போரின் நிறுத்தத்தில் இந்தியா குறித்த அளவு பங்கு ஆற்றியது என்றாலும் கொரியச் சண்டையின் துவக்கக் கட்டத்தில், 1952ல் ஐ. நா. சங்கப் பாதுகாப்புக் கவுன்சிலின் தாற்காலிக உறுப் பினர் என்ற வகையில் இந்தியாவின் நிலை எப்போதும் ஒத்திசைந்த தாக இருக்கவில்லை. கொரியாவில் ஆக்கிரமிப்பு நடத்தியதாகச் சீனா மீது குற்றம் சாட்டுவதை இந்திய அரசாங்கம் எதிர்த்தது. பின்னர்

போர்நிறுத்தத்தைச் செயல்படுத்துவதிலும் போர்க் கைதிகள் விவகாரத்தை முறையாகத் தீர்ப்பதிலும் அது செயல்முறைப் பங்கு ஆற்றியது.

இந்தோசீனத்தில் போர் நிறுத்தத்துக்கு ஆதரவாக இன்னும் அதிக ஒத்திசைந்த வகையில் இந்தியா செயலாற்றியது. ஜெனீவா ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவும், விரைவாகத் தென்கிழக்காசியாவின் இந்தப் பிரதேசத்தில் உறவுகள் 1954—1956ல் பகுதியளவில் முறைப்படவும் அது உதவியது.

வெவ்வேறு வகையான வட்டாரப் பூசல்கள் நிறுத்தப்படவும் நீடித்த உலக சமாதானம் ஏற்படவும் ஆதரவாகவும் இராணுவக் கூட்டணிகளும் தளங்களும் அமைக்கப்படுவதற்கும் பிற அரசுகளின் நிலப்பரப்புக்களில் அயல்நாட்டுப் படைகள் நிலவுவதற்கும் எதிராகவும் சர்வதேச அரங்கில் இந்தியா எப்போதும் ஊக்கத்துடன் போராடி வந்தது.

அயல்நாட்டுக் கொள்கைத் துறையில் நேரு அரசாங்கம் மேற்கொண்ட இந்த நிலைகள் மேற்கு நாடுகளுடன் இந்தியாவின் உறவுகளில் ஓரளவு சிக்கல்கள் ஏற்படுத்தின. ஒரு புறம் காலனியாதிக்க, புதுக் காலனியாதிக்கக் கொள்கைக்கு எதிராக இந்தியா மிக ஒத்திசைந்த போராட்டம் நடத்திவந்தது. மறு புறம், நாட்டின் பொருளாதாரத்தில் தங்கள் நிலைகளைப் பயன்படுத்திய ஏகாதிபத்தியச் சக்திகளின் வற்புறுத்தலை இடையறுமலும் நாளுக்கு நாள் அதிகரிக்கும் அளவிலும் அது அனுபவித்து வந்தது. இந்தியா அமெரிக்காவின் இராணுவ உதவியை நிராகரித்து விட்டது என்றாலும் அமெரிக்காவுடன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு குறித்த அனேக ஒப்பந்தங்களில் அது 1951—1952ல் கையொப்பம் இட்டது. இந்தியாவின் உள் வாழ்வின் வெவ்வேறு துறைகளில் அமெரிக்கா நுழைவதற்கான வாய்ப்பை இந்த ஒப்பந்தங்கள் ஏற்படுத்தின.

சோஷலிஸ்டு நாடுகளுடன் இந்தியாவின் உறவுகள் எல்லாத் துறைகளிலும் ஒத்துழைப்பை மேலும் மேலும் விரிவாக்கும் கொள்கைப்படி வளர்ச்சி அடைந்தன. 1955ல் இந்தியத் தலைவர்களும் சோவியத் தலைவர்களும் ஒருவர் நாட்டுக்கு மற்றவர் வருகை தந்தார்கள். பல்வேறு மட்டங்களில் அரசாங்கப் பிரதிநிதிக் குழுக்களின் முறையான வருகைகளுக்கு இது தொடக்கமாக அமைந்தது. சீன மக்கள் குடியரசு உட்பட மற்ற சோஷலிஸ்டு நாடுகளோடும் இந்தியாவின் உறவுகள் இதே அளவு சாதகமாக வளர்ந்து வந்தன.

1954ல் திபெத்து பற்றி இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. மத்திய ஆசியாவில் உள்ள இந்தப் பிரதேசத்தின் அந்தஸ்து குறித்து நிலவி வந்த கருத்து வேற்றுமைகளை அகற்றி

விட்ட இந்த ஒப்பந்தத்தில் சமாதான சகவாழ்வு பற்றிய புகழ்பெற்ற ஐந்து கோட்பாடுகள் (பஞ்சசீலம்) அடங்கி இருந்தன. ஒப்பந்தம் நிறைவேறியதை அடுத்து அரசாங்கப் பிரதிநிதிக் குழுக்கள் ஒரு நாட்டுக்கு மற்றது வருகை தந்தன. இவற்றால் இரு நாடுகளுக்கும் இடையே நட்புறவுகள் வலுப்பட்டன.

1955ம் ஆண்டு பாண்டுங் நகரில் நடந்த கூட்டுசேரா நாடுகளின் வரலாற்றுச் சிறப்புள்ள மகாநாடு வெற்றி பெறுவதற்கு இந்திய-சீன ஒத்துழைப்பு வகை செய்தது.

ஆயினும் 50க்களிலும் 60க்களிலும் சீனாவின் உள்நாட்டு, வெளி நாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட திருப்பத்தின் காரணமாக இந்திய-சீன உறவுகள் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு போயின. 1959ல் சீனத் தரப்பினால் மூட்டி விடப்பட்ட எல்லைச் சண்டைக்கும் இது இட்டு வந்தது. 1962ம் ஆண்டு எல்லைச் சச்சரவு புதிய உக்கிரத்துடன் மூண்டது. விளைவாக எல்லைப் பகுதியில் பெருத்த இராணுவ மோதல் நிகழ்ந்தது. 1962ம் ஆண்டின் நிகழ்ச்சிகள் இந்தியாவின் உள் நிலைமையைக் கெடுதலாகப் பாதித்தன. ஏனெனில் நாட்டில் இருந்த சோஷலிஸவிரோத, கம்யூனிஸவிரோதச் சக்திகள் எல்லாம் துடியாகச் செயல்படத் தொடங்கின. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை நிலைகளையும் இந்த நிகழ்ச்சிகள் பாதித்தன. ஏனெனில் இந்திய-சீனச் சச்சரவின் போது சீன மக்கள் குடியரசுக்கும் பாக்கிஸ்தானுக்கும் ஏற்பட்ட நெருக்கம் இந்திய-பாக்கிஸ்தான ஒப்பந்தம், முதன்மையாகக் காச்மீரப் பிரச்சினை குறித்து, நிறைவேறுவதைக் கடினம் ஆக்கியது.

பிரான்சுடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு இணங்க பிரெஞ்சுக் காலனியாட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகளை நாட்டின் பிரதான நிலப்பரப்புடன் இந்தியா 1954ல் சேர்த்துக் கொண்டது. கோவாவையும் இந்தியாவில் இருந்த மற்றப் போர்ச்சுகேசியக் காலனிகளையும் அது 1961ல் விடுவித்தது. ஆயினும் இந்துஸ்தானத் தீபகற்பத்தில் நீடித்த, நிலையான அமைதியை நிலைநாட்டும் பிரச்சினை தீர்க்கப்படாமலே இருந்தது.

"நேருவின் போக்கைத்" தொடர்வதற்கான போராட்டம் (1964—1972)

பொருளாதார, அரசியல் நெருக்கடி அதிகரித்தல்

சமுதாய-அரசியல் சக்திகளின் துருவ முனைப்புப் போக்கு மூன்றும் பொதுத் தேர்தல்களுக்கு (1962) முன்பும் தேர்தல்களின் போதும் வெளிப்பட்டது. இதன் விளைவாக நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகளில், முதன்மையாகத் தேசியக் காங்கிரசில், உள்போராட்டம் மேலும் கூர்மை அடைந்தது. உள்நாட்டுக் கொள்கைத் துறையில் ஒப்பு நோக்கான நிலைப்புக் காலப்பகுதி ஜவாகர்லால் நேருவின் மறைவோடு முற்றுப் பெற்றது. சமுதாய, அரசியல் சச்சரவுகள் நாளுக்கு நாள் மும்முரம் ஆகும் காலப் பகுதியில் நாடு அடிவைத்தது.

உட்கட்சிப் போராட்டம் தீவிரமாதல்

ஆட்சியில் இருந்த கட்சியில் நேருவின் தனிப்பட்ட செல்வாக்கு காரணமாக அதுவரை ஓரளவு அடங்கி இருந்த உட்பிரிவுப் போராட்டம் அதிகரித்தது. புதிய பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி நெளிவுசுளிவுள்ள சாமர்த்தியமான கொள்கையைக் கடைப்பிடிப்பதில் கணிசமான அளவு வெற்றி பெற்றார். காங்கிரசின் மையத் தலைமையிலும் இராச்சியங்களிலும் செல்வாக்குள்ள குழுக்களின் நலன்களை நாளுக்கு நாள் அதிகமாகக் கணக்கில் எடுத்துக் கொள்வது அவருக்கு அவசியமாய் இருந்தது. இராச்சியங்களில் கட்சி இயந்திரத்தைக் கட்டுப்படுத்தியவையும் காங்கிரசின் மையத் தலைமையிலும் மத்திய அரசாங்கத்திலும் இருந்த சில உறுப்பினர்களுக்கு ஆதரவு அளித்தவையுமான குழுக்கள் வலுவடைந்தன. இந்த நிலைமைகளில் காங்கிரஸ் நிறுவனங்களின் வட்டார "நாட்டாண்மைக்காரர்களுடைய" பாத்திரம் வெளிப்படையாக அதிகரித்தது. இவர்கள் செல்வாக்குள்ள முதலாளித்துவ வட்டாரங்களோடு வழக்கமாகத் தொடர்பு கொண்டிருந்தார்கள். அதுல்ய கோஷ் (மேற்கு வங்காளம்), சந்திரபானு

குப்தா (உத்தரப் பிரதேசம்), பிஜு பட்நாயக் (ஒரிஸ்ஸா) முதலியோர் இத்தகையவர்கள். காங்கிரசின் தலைமையில் வலதுசாரித் தலைவர்களது அரசியல் மதிப்பு மையத்தில் அவர்களுக்கு இருந்த சொந்தத் தொடர்புகளால் மட்டும் இன்றித் தனித்தனி இராச்சியங்களில் ஆட்சியில் இருந்த கட்சியினது பெரிய நிறுவனங்களுடைய ஆதரவினாலும் கணிக்கப்பட்டது (உதாரணமாக, குஜராத்துக் காங்கிரஸ்காரர்கள் மொரார்ஜி தேசாயையும் மகாராஷ்டிரக் காங்கிரஸ் காரர்கள் எஸ். கே. பாட்டீலையும் ஆதரித்தார்கள்).

காங்கிரஸ் நிறுவனங்களுக்குள் ''நாட்டாண்மைவாதம்'' அதிகரித்ததன் விளைவாகக் கட்சியில் உட்குழுப்பான்மையும் உட்பிரிவுப் பூசல்களும் மேற்கொண்டு வளர்ச்சி அடைந்ததோடு இராச்சியங்களில் ஒரு வகையான இரு முனை அமைப்பும் உருவாயிற்று. இவற்றில் பகைக் குழுக்கள் இராச்சிய முதலமைச்சரையும் வட்டாரக் கட்சித் தலைவரையும் மையங்களாகக் கொண்டு திரண்டன. இந்த இரண்டாவது போக்கு மையத்தில் நாளுக்கு நாள் அதிகக் கண்கூடாகத் தென்படலாயிற்று. அங்கே, நேருவின் மறைவுக்குப் பிறகு காங்கிரஸ் தலைவர் காமராஜரின் பாத்திரம் உட்கட்சிக் கொள்கையைச் செயல்படுத்துவதிலும் சரி, அரசாங்கத்தின் கொள்கைப் போக்கு அனைத்தையும் வரையறுப்பதிலும் சரி, கணிசமாக அதிகரித்தது.

உட்கட்சிப் போராட்டத்தின் போது வலது சாரியின் நிலைகள் வெளிப்படையாக வலுவடைந்தன. அரசாங்கத்தின் கொள்கை மீது அது மேலும் மேலும் அதிகரித்த அளவில் வற்புறுத்தல் நிகழ்த்தலாயிற்று.

நாட்டின் எல்லாவற்றிலும் பெரிய கட்சியில் மையத்தைவிட்டு விலகும் போக்கு வளர்ச்சி அடைந்ததும் அதில் வலதுசாரி பலப்பட்டதும் இந்தியாவின் அரசியல் வாழ்க்கை அனைத்தையும் ஓரளவு பாதித்தன.

ஆட்சியில் இருந்த கட்சியின் உள் ஒற்றுமை தளர்ந்தது இடதுசாரி, வலதுசாரி எதிர்த் தரப்புக்களின் நடவடிக்கைகள் தீவிரமாகத் தூண்டுதல் அளித்தது. அதே சமயம், நாட்டில் வர்க்கப் போராட்டம் கூர்மை அடைந்தது, அடிப்படையான சமூகப் பிரச்சினைகள் பல தீர்க்கப்படாமல் இருந்தது ஆகியவற்றின் பின்னணியில், வளர்ந்து வந்த சமுதாய-அரசியல் நெருக்கடியிலிருந்து வெளியேறுவதற்கான வழிகள் குறித்து எதிர்த் தரப்புக் கட்சிகளுக்குள் போராட்டம் வலுப்பட்டது.

பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியும் சோஷலிஸ்டுக் கட்சியும் 1964ல் குறுகிய காலத்துக்கு ஒன்றாக இணைந்த பிறகு 1965ல் புதிய பிளவு ஏற்பட்டது. உருவாகி இருந்த ஒன்றித்த சோஷலிஸ்டுக் கட்சியி

லிருந்து முந்திய பிரஜா சோஷலிஸ்டுக் கட்சிக் குழு என். ஜி. கோரே, எஸ். என். துவிவேதி ஆகியோரின் தலைமையில் வெளியேறி விட்டது.

வெகுஜன இயக்கங்கள் நடத்துவதிலும் சட்ட மன்றங்களுக்குள் வேலை செய்வதிலும் கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துழைப்பது பற்றி ஒன்றித்த சோஷலிஸ்டுக் கட்சியின் உட்பிரிவுகள் மேற்கொண்ட வெவ்வேறு நிலைகளே கட்சித் தலைமைக்குள் மோதல் நிகழ்ந்ததற்கு முக்கியக் காரணம். முன்னாள் பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியின் வலது சாரித் தலைவர்கள் கம்யூனிஸ்டு எதிர்ப்பு, சோவியத் எதிர்ப்புப் போக்கை முன்போலவே கடைப்பிடித்து வந்தார்கள். ஒன்றித்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர்களான எஸ். எம். ஜோஷி, ராம் மனோகர் லோகியா, மது லிமாயே ஆகியோர் முற்போக்குச் சக்திகளுடன் ஓரளவு ஒத்துழைப்பதற்கு ஆதரவாய் இருந்தார்கள். பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவிய அசோக் மேத்தாவின் தலைமையில் ஒரு குழு காங்கிரசில் சேர்ந்த பின் சோஷலிஸ்டுகளின் பலம் குன்றியது. அசோக் மேத்தா இந்திய அரசாங்கத்தில் திட்ட வகுப்பு அமைச்சர் பதவியில் அமர்ந்தார்.

ஒன்றித்த சோஷலிஸ்டுக் கட்சியில் பிளவு ஏற்பட்ட பின்னர் ஹிந்த் மஸ்தூர் பஞ்சாயத்து என்ற தொழிற்சங்க மையம் அதன் கட்டுப்பாட்டில் நிலைத்திருந்தது. ஆனால் இன்னும் பெரிய தொழிற் சங்கக் கூட்டு ஆன ஹிந்த் மஸ்தூர் சபா பெருத்த சுதந்திரம் பெற்று விட்டது, ஏனெனில் அதன் தலைமையில் சில குழுக்கள் மீது முறையே ஒன்றித்த சோஷலிஸ்டுக் கட்சி, பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி ஆகிய வையும் காங்கிரஸ் உட்படப் பிற அரசியல் சக்திகளும், செல்வாக்கு செலுத்தின.

கம்யூனிஸ்டு இயக்கத்தின் நிலைமை

இந்திய-சீன எல்லைச் சச்சரவு காரணமாக ஏற்பட்டிருந்த இறுக்கம் ஓரளவு தளர்ந்த பிறகு, 1963ம் ஆண்டுக் கடைசி முதல், உழைப்பாளி களின் உரிமைகளைக் காக்கும் பொருட்டு அவர்களுடைய வெகுஜனப் போராட்டங்களைக் கம்யூனிஸ்டுக் கட்சி மீண்டும் ஒழுங்கமைக்கத் தொடங்கியது.

10 ஆண்டு இடைநிறுத்தத்துக்குப் பின் 1963ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொழிற்சங்க ஊழியர்களான கம்யூனிஸ்டுகளின் மகா நாட்டைக் கம்யூனிஸ்டுக் கட்சி கூட்டியது. சுதந்திரம் பெற்ற பின் கடந்த ஆண்டுகளில் நிகழ்ந்த மாறுதல்கள் காரணமாகத் தொழிற் சங்கங்களுக்கு எதிர்ப்பட்டிருந்த பணிகள் இந்த மகாநாட்டில் விவாதிக்கப்பட்டன.

விலைகளும் வரிகளும் குறைக்கப்படுவதற்காகவும் சம்பளங்கள் உயர்த்தப்படுவதற்காகவும் வங்கிகளும் தொழில் துறையின் சிலகிளைகளும் தேசிய உடைமை ஆக்கப்படுவதற்காகவும் நாடு முழுவதிலும் வெகுஜனப் போராட்ட இயக்கம் நடத்துவதென்ற தீர்மானத்தை மகாநாடு ஏற்றது.

அரசினர் துறைத் தொழில் நிலையங்களின் தொழிலாளர்களதும் அலுவலர்களதும் தேசிய மகாநாடு கம்யூனிஸ்டுக் கட்சியின் முயற்சியால் 1964, ஜூனில் கூட்டப்பட்டது. அரசினர் நிலையங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் உடனடியான பொருளாதார நலன்களுக்காகவும் ஜனநாயக உரிமைகளுக்காகவும் அரசினர் தொழில் நிலையங்கள் மேற்கொண்டு விரிவாக்கப்படுவதன் பொருட்டும் உற்பத்திச் செயலை வெற்றிகரமாக நடத்துவதன் பொருட்டும் போராடுவது தொழிற்சங்கங்களின் பணி என்று மகாநாடு குறித்தது.

அதே சமயம் 1963ன் முடிவு முதல் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி உழைப்பாளிகளின் வெகுஜன இயக்கங்களையும் நடத்தத் தொடங்கியது. 1963, ஆகஸ்டில் சோஷலிஸ்டுக் கட்சியால் பம்பாயில் ''பந்த்''(அதாவது தொழிலகங்களிலும் அலுவலகங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் பொது வேலைநிறுத்தம்) நடத்தப்பட்ட போது கம்யூனிஸ்டுகள் அதில் கலந்து கொண்டார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஏற்பாடு செய்த முதலாவது வெகுஜன இயக்கம் **வெகுஜன மகஜரில்** நாடு முழுவதிலும் கையெழுத்துக்கள் திரட்டியதும் இந்த மகஜரை நாடாளுமன்றத்துக்கு அளிக்கும் பொருட்டு எல்லா இராச்சியங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட ''பேரணி நடை'' 1963, செப்டெம்பர் 13ந் தேதி டில்லியில் நடத்தியதும் ஆகும். கூட்டு சேராக் கொள்கைக்கும் அரசின் பொருளாதாரத் திட்ட வகுப்புக்கும் தற்காப்பு முயற்சிகளுக்கும் மகஜரில் ஆதரவு தெரிவிக்கப்பட்டது. அதோடு கட்டாயக் கடன் முறையும் தங்கக் கட்டுப்பாடும் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் விலைகளும் வரிகளும் குறைக்கப்பட வேண்டும் என்றும் வங்கிகளும் பெட்ரோலியத் தொழிலும் வெளிநாட்டு வர்த்தகமும் தேசிய உடைமை ஆக்கப்பட வேண்டும் என்றும் அதில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன.

தேசியக் காங்கிரசில் இருந்த முற்போக்காளர்களும் இடதுசாரி எதிர்த் தரப்புக் கட்சிகளும் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தார்கள். **வெகுஜன மகஜரில்** 10,200 ஆயிரம் கையெழுத்துக்கள் திரட்டப்பட்டன. இந்த எண்ணிக்கை 1962ம் ஆண்டுப் பொது தேர்தல்களில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக

வாக்களித்த வாக்காளர்களின் எண்ணிக்கைக்குக் கிட்டத்தட்ட சமம் ஆகும். ''பேரணி நடையில்'' நாட்டின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த 200 ஆயிரம் பெயர் கலந்து கொண்டார்கள்.

அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் 1962, டிசம்பரில் அனைத்து இந்தியத் தொழில் சங்க மகாநாட்டைக் கூட்டியது. 1964ம் ஆண்டில் உழைப்பாளிகளின் வெகுஜனப் போராட்டங்களை நடத்துவது என்ற தீர்மானம் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் இரண்டினதும் தலைமைக் குழுக்கள் போராட்டத்தின் மூன்று கட்டங்களைத் திட்டம் இட்டன. முதல் கட்டத்தில் நாடு முழுவதிலும் இருந்த தொழிற்சங்க ஊழியர்கள் 1964, பிப்ரவரி 20 முதல் மூன்று நாட்கள் உண்ணாவிரதம் இருந்து வேலைநிறுத்தம் செய்தார்கள். இரண்டாவது கட்டத்தில், மார்ச்சு 7ந் தேதி தொழிற்சாலை வாயில்கள் முன்பு 15 நிமிட ஆர்ப்பாட்டம். இதில் பதினாயிரக் கணக்கில் தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள். மூன்றாவது கட்டத்தில், ஜூலை—ஆகஸ்டில், தனித்தனி இராச்சியங்களில் ஒரு நாள் ''பந்த்''. ஆகஸ்டு மாதத்தில் நாடு பரவிய சத்தியாக்கிரக இயக்கம்.

கேரள இராச்சியத்திலும் குஜராத்திலும், சிறப்பாக அதன் தலைநகர் அகமதாபாதில் (இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியினதும் இரண்டு வட்டார வெகுஜன நிறுவனங்களதும் தலைமையில்), மகாராஷ்டிரத்திலும், முக்கியமாக பம்பாயில் (இடதுசாரி எதிர்த் தரப்புக் கட்சிகளின் ஆதரவுடன் முப்பது லட்சம் பெயர் பங்கெடுத்துக் கொண்ட நிலைமையில்), உத்தரப் பிரதேசத்திலும், முதன்மையாகக் கான்பூரில், ஒரு நாள் பந்த்கள் (வேலைநிறுத்தமும் கடையடைப்பும்) நடந்தன.

நாடு அனைத்திலும் ''வெகுஜன சத்தியாக்கிரக'' இயக்கம்—அரசாங்க அலுவலகங்கள், வங்கிகள், பங்கு மார்க்கெட்டுகள், சந்தைகள் ஆகியவற்றின் முன் மறியலும் ஆர்ப்பாட்டமும்—ஆகஸ்டு 24—28ல் நடந்தது. சுதந்திரத்துக்குப் பின் நடந்த இத்தகைய இயக்கங்களில் ஆகப் பெரிதாக இருந்த இந்த சத்தியாக்கிரகத்தில் 80 ஆயிரம் பெயர் பங்கு கொண்டார்கள். இவர்களில் 25 ஆயிரம் பெயர் மறியல் நடந்த இடங்களில் கைது செய்யப்பட்டார்கள்.

செப்டெம்பர் 25ந் தேதி திட்டமிடப்பட்டிருந்த ''அனைத்து இந்திய பந்த்'' நடவடிக்கையைத் தாற்காலிகமாக ஒத்தி வைப்பதென்று கட்சி முடிவு செய்தது. ஏனெனில் இந்த நடவடிக்கைக்கு ஹிந்த் மஸ்தூர் சபா உட்படப் பிற பெரிய தொழிற்சங்க நிறுவனங்களின் ஆதரவைப் பெற முடியவில்லை.

இந்திய மக்களுக்குப் புரிந்தவையும் காலனி ஆட்சிக் காலத்திலேயே மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தவையுமான (ஹர்த்தால்,

சத்தியாக்கிரகம் போன்ற) போராட்ட வடிவங்களைக் கம்யூனிஸ்டுக் கட்சியும் பிற இடதுசாரிச் சக்திகளும் பயன்படுத்தியது வெகுஜனங்களிடையே அவற்றின் செல்வாக்கு வளர உதவியதோடு இடதுசாரி எதிர்த் தரப்பின் செயல் ஒற்றுமையையும் வலுப்படுத்தியது.

1964ம் ஆண்டு முதல் நாட்டில் வேலைநிறுத்த இயக்கம் மேலும் மேலும் வளர்ச்சி அடையலாயிற்று. இடதுசாரித் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் வேலைநிறுத்தப் போராட்டத்தை வழி காட்டி நடத்தும் செயல் கமிட்டிகளை அனேக இராச்சியங்களிலும் அனைத்து இந்தியத் தரத்திலும் 1965ல் அமைத்தார்கள். அனைத்து இந்தியச் செயல் கமிட்டி உழைப்பாளிகளின் கோரிக்கைப் பத்திரத்தை அரசாங்கத்துக்கு அளித்தது. பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் இதில் எழுப்பப்பட்டிருந்தன. கோரிக்கைப் பத்திரத்துக்கு ஆதரவாக 1965, செப்டெம்பர் 21ந் தேதி ''தேசிய நடவடிக்கைகள் தினம்'' கொண்டாடத் திட்டமிடப்பட்டது. ஆனால் செப்டெம்பரில் இந்திய-பாக்கிஸ்தானப் போர் மூண்டு விட்டபடியால் இந்த நாளைக் கொண்டாட முடியவில்லை.

நாட்டில் வெகுஜன இயக்கம் வளர்ச்சி அடைவதும் கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கு விரிவாவதும் கம்யூனிஸ்டு இயக்கத்தில் நேர்ந்த பிளவு காரணமாகத் தடைப்பட்டன. 1962ம் ஆண்டு இலையுதிர் காலத்திலேயே தொடங்கி விட்ட இந்தப் பிளவு 1964 அக்டோபரில் முற்றுப் பெற்றது. இடதுசாரிப் பிரிவு மனப்பான்மை கொண்ட சில தலைவர்கள் அப்போது இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமைக் குழுவிலிருந்து வெளியேறி மாற்றுக் கம்யூனிஸ்டுக் கட்சி மகாநாட்டைக் கல்கத்தாவில் கூட்டினர்கள். இந்த மகாநாடு புதிய கட்சியின் செயல்திட்டத்தை ஏற்றதோடு பி. சுந்தரய்யாவைப் பொதுச் செயலாளராகக் கொண்ட மத்தியக் கமிட்டியைத் தேர்ந்தெடுத்தது. மாற்றுக் கம்யூனிஸ்டுக் கட்சி இ. க. க. (மா)—இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (மார்க்சிஸ்டு) எனப் பெயர் பெற்றது.

மாற்றுக் கட்சித் தலைவர்கள் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி திருத்தல் வாதம் கடைப்பிடிப்பதாகக் குற்றம் சாட்டி, தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகள் ஆகியோரின் நிறுவனங்கள் மீது இ. க. கட்சியின் செல்வாக்குக்கு எதிராகப் போராட்டம் தொடங்கினர்கள். இராச்சியங்களிலும் அனைத்து இந்திய அளவிலும் இடதுசாரி எதிர்த் தரப்புச் சக்திகளை ஒன்றிணைக்கும் வாய்ப்புக்கு இது ஊறு விளைத்தது.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 7வது மகாநாடு 1964, டிசம்பர் மாதம் பம்பாயில் நடை பெற்றது. நாட்டில் நிலவிய அரசியல் நிலைமையும் கம்யூனிஸ்டு இயக்கத்தில் பிளவு நிகழ்ந்த பின்னர் கட்சியில் இருந்த நிலைமையும் மகாநாட்டில் விவரமாகப் பகுத்து

ஆராயப்பட்டன. தேசிய-ஜனநாயகக் கூட்டணி அமைக்கும் பணி மகாநாட்டில் ஏற்கப்பட்ட புதிய செயல்திட்டத்தில் முன்வைக்கப் பட்டது. உழைப்பாளிகளின் வெகுஜன நிறுவனங்களில் பிளவின் விளைவுகளைப் போக்குவதற்கான சள்ளைபிடித்த வேலை தொடங்கியது.

இந்திய-பாக்கிஸ்தான் போர்

இந்திய-பாக்கிஸ்தான் உறவுகள் 1965ம் ஆண்டுத் தொடக்கத் தறுவாயில் சிக்கல் அடைந்தன. காச்மீரத்தைக் குறித்த சச்சரவு புது உக்கிரத்துடன் மூண்டது. அயூப் கானின் தலைமையில் பாக்கிஸ் தானின் பிற்போக்கு அரசாங்கம் இந்தியாவுக்கு எதிரான வெறி கொண்ட மனப்பான்மை நாட்டில் வளர்வதற்கு ஊக்கம் அளித்தது. 1965, ஏப்ரல் மாதம் கட்சுக் கடற் கழிப் பிரதேசத்தில் எல்லைத் தகராறு நிகழ்ந்தது. பாக்கிஸ்தானில் இருந்த தீவிரவாதி வட்டாரங் களுடன் தொடர்பு கொண்ட குழுக்களால் தூண்டி விடப்பட்ட குழப் பங்கள் காச்மீரத்தில் நடந்தன. காச்மீரத்தில் இருந்த இந்தியப் படைகள் பாக்கிஸ்தான் படைப் பிரிவுகளுக்கு எதிரான நடவடிக்கை களில் ஈடுபட வேண்டியதாயிற்று. ஆகஸ்டு மாதம் நெடுகிலும் சண்டைகள் நடந்த வண்ணமாய் இருந்தன. செப்டெம்பர் 6ந் தேதி பஞ்சாப் எல்லையில் ஆயுதப் போர்கள் தொடங்கின.

இந்தப் போரை நிறுத்துவதில் நிர்ணயகரமான பங்கு ஆற்றியது சோவியத் யூனியன். ஆகஸ்டு மாதம் அது சமாதான முயற்சிகள் தொடங்கி விட்டது. சோவியத் யூனியன் அமைச்சவைத் தலைவர் அ. நி. கஸிகின் 1965, செப்டெம்பர் 17ந் தேதி இந்திய, பாக்கிஸ் தான் அரசாங்கத் தலைவர்களுக்கு அனுப்பிய செய்தியில் சச்சரவைத் தீர்த்து வைப்பதில் தொண்டாற்ற ஆயத்தமாக இருப்பதாகத் தெரி வித்தார். அவரது யோசனை ஏற்கப்பட்டது. 1966, ஜனவரி 3 முதல் 10ந் தேதி வரை தாஷ்கந்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அ. நி. கஸிகின், லால் பகதூர் சாஸ்திரி, அயூப் கான் மூவரும் அதில் கலந்து கொண்டார்கள். பேச்சு வார்த்தைகளின் பயனைத் தாஷ் கந்த் அறிக்கை கையெழுத்திடப் பெற்றது. இரு நாடுகளுக்கும் இடையே இராணுவ அரசியல் முறைப்பாட்டுக்கான நிபந்தனைகள் இதில் அடங்கி இருந்தன. உறவுகளைச் சீர்படுத்துவதற்கும் இது வழி கோலியது.

தாஷ்கந்த் அறிக்கை கையெழுத்தான செய்தி இந்துஸ்தானத் துணைக்கண்டத்தில் மட்டும் இன்றி உலகம் முழுவதிலும் சமாதானத் தின் நண்பர்களால் மகிழ்வுடன் வரவேற்கப்பட்டது. ஆனால் அறிக்கை கையெழுத்தான சிறிது நேரத்திற்குள் லால் பகதூர் சாஸ்

திரி காலமாகிவிட்டார் என்ற தகவல் துயர நிழலைப் பரப்பியது. இந்தியாவின் பிரதமர் காலமாகி விட்டது அங்கே உள்நாட்டு அரசியல் நிலைமையில் புதிய சிக்கலுக்குக் காரணம் ஆயிற்று.

1965—1966ல் நேர்ந்த வரட்சி, தேசிய, அன்னியப் பெரு மூல தனத்தின் தாக்குதல் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்ட ஆழ்ந்த பொருளாதாரச் சங்கடங்கள் சூழ்நிலையைச் சிக்கலாக்கின. இந்திய-பாக்கிஸ்தான் போரின் விளைவுகள் இந்தச் சிக்கலை மேற்கொண்டு அதிகரிக்கச் செய்தன.

60க்களின் நடுவில் நேர்ந்த பொருளாதார நெருக்கடி

நாட்டினது முதலாளித்துவ வளர்ச்சியின் ஆழ்ந்த முரண்பாடுகள் 60க்களின் நடு வாக்கில் நாளுக்கு நாள் அதிக வன்மையுடன் பாதிப்பு நிகழ்த்தலாயின: மூலதனக் குவிவின் மந்த கதி, உள்நாட்டுச் சந்தையின் குறுகிய தன்மை, தொழில் புரட்சி முற்றுப் பெறுமை, முதலீடு செய்வதற்கான மூலதனத்தின் பற்றுக்குறை, விவசாயத் துறையில் முதலாளித்துவ வளர்ச்சியின் பலவீனம், வர்த்தக-வட்டிக்கடன் மூலதனத்தின் விரிவான செல்வாக்கு, நாட்டின் பொருளாதாரம் அன்னிய மூலதனத்தைப் பெரிதும் சார்ந்திருந்த நிலை, நாளுக்கு நாள் அதிகமாக வெளிப்பட்ட அரசு முதலாளித்துவத்தின் பலவீனம் (செல்வாக்கின் அளவறுத்த தன்மை, பயன்பாடின்மை, அதிகார வர்க்க மனப்பான்மை முதலியன), திட்ட வகுப்பின் வரையறுத்த தன்மையும் முன்பின் இசைவின்மையும், பற்றுக்குறை நிதியாட்சியின் இடர்கள், சமுதாய-பொருளாதார முரண்பாடுகளின் அதிகரிப்பு முதலியன இவை. நாட்டின் பொருளாதாரம் அனைத்தும் சங்கடத்துக்கு உள்ளாகி இருந்தது. இதற்குக் காரணம் முதலாளித்துவத் துறைக்குள் முரண்பாடுகள் தீவிரமானது மட்டும் அல்ல, வளர்ச்சி அடைந்து கொண்டிருந்த முதலாளித்துவத் துறைக்கும் கணிசமான அளவு தேக்க நிலையில் இருந்த முதலாளித்துவத்துக்கு முந்திய பொருளாதாரத் துறைகளுக்கும் (அமைப்புகளுக்கும்) இடையே முரண்பாடுகள் வலுப்பட்டு பிளவு அதிகரித்ததும் ஆகும். பிந்திய அமைப்புகள் சமூக உற்பத்தியின் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பகுதியில் பரவி இருந்தன, நாட்டில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியைச் சுணக்கப்படுத்தின. இந்த எல்லா முரண்பாடுகளும், 1965—1967 வரட்சிகளால் மேலும் கடுமையாக்கப்பட்ட விவசாய உற்பத்தி நெருக்கடியின் தீவிர அதிகரிப்புடன் சேர்ந்து நிகழ்த்திய பாதிப்பின் விளைவாக நாட்டின் பொருளாதாரம் 60க்களின் நடுவில் ஆழ்ந்த, நீண்டகால இறக்கமும் வளர்ச்சி வேகத்தின் மந்திப்பும் கொண்ட காலப் பகுதி

யில் பிரவேசித்தது. சுரண்டலின் முதலாளித்துவ வடிவத்தாலும் முதலாளித்துவத்துக்கு முந்திய பல்வேறு வடிவங்களாலும் துன்பப் பட்டுக் கொண்டிருந்த விரிவான உழைப்பாளி வெகுஜனங்களின் நிலைமை வரிகளும் விலைகளும் பணவீக்கமும் வெகுவாக அதிகரித்த தனால் இன்னும் மோசமாயிற்று. ஏற்றத்தாழ்வுகள் ஆழமாயின, காங்கிரஸ் ஆட்சியின் மீது அதிருப்தி, முதன்மையாக நகர வெகுஜனங்களது அதிருப்தி, செயல்படவும் அதிகரிக்கவும் தொடங்கியது.

பொருளாதார இடர்கள் அதிகரித்துக் கொண்டு போன நிலைமைகளில் அரசாங்கத்திலும் காங்கிரஸ் தலைமையிலும் செல்வாக்கு பெற்றிருந்த பழமைவிரும்பிச் சக்திகளின் வற்புறுத்தல் காரணமாக அரசாங்க வட்டாரங்கள் சந்தை விசை அமைப்பையும் தனியார் தொழில் நிலையங்களையும் தனியார் முன்முயற்சியையும் கடுமையாகவும் விவரமாகவும் ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த கொள்கையிலிருந்து அவற்றுக்கு ஊக்கம் அளிக்கும் கொள்கைக்கு 1963 இறுதி முதலே மாறத் தொடங்கின. திட்ட அடிப்படைகள் தளர்த்தப்பட்டது, கடன் பத்திரங்களது வெளியீட்டின் மீது கட்டுப்பாடும், தொழில் நிலையங்களுக்கு லைசென்சும் விலைகள் மீதும் வினியோகத்தின் மீதும் கட்டுப்பாடும் அகற்றவோ தளர்த்தவோ பட்டது, இறக்குமதி அனுமதி தாராளமாக்கப்பட்டது, தனியார் தொழில் நிலையங்களுக்கு நிதிச் சலுகைகள் விரிவாக்கப்பட்டது முதலிய செயல்களில் இந்தப் புதிய கொள்கை வெளிப்பட்டது. இந்தச் செயல்களின் எதார்த்த விளைவு தேசிய வளங்கள் தனியார் துறைக்குச் சாதகமாக மறு வினியோகம் செய்யப்பட்டதாகும்.

1966—1969ல் உள்நாட்டு அரசியல் நிகழ்ச்சிப் போக்கு. 1967ல் நடந்த நான்காம் பொதுத் தேர்தல்கள்

லால் பகதூர் சாஸ்திரியின் மரணம் ஆட்சியில் இருந்த கட்சியின் தலைமைக் குழுவில் முரண்பாடுகள் மீண்டும் வெளிப்படக் காரணம் ஆயிற்று. காங்கிரஸ் கட்சியின் வரலாற்றில் முதன் முதலாகப் பிரதமர் பதவிக்கு இரண்டு வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டார்கள். ஒருவர் ஜவாகர்லால் நேருவின் புதல்வியான இந்திரா காந்தி, இடைநிலை வாத, இடதுசாரிப் பிரிவுகளின் வேட்பாளர். மற்றவர் வலதுசாரிப் பிரிவைச் சேர்ந்த மொரார்ஜி தேசாய். காங்கிரசின் நாடாளுமன்றப் பிரிவுக்குள் கடும் போராட்டம் நடந்த பின்னர் இந்திரா காந்தி பெரும்பான்மை வாக்குகளால் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1967ல் நடந்த அடுத்த பொதுத் தேர்தல்களுக்கு முன் தேசியக் காங்

கிரசின் உட்கட்சி நிலைமையும் அரசியல் நிலையும் பெரிதும் சிக்கல் நிறைந்தவையாக இருந்தன. இராச்சியங்களில் ஆட்சியிலிருந்த கட்சியின் அனேக நிறுவனங்களில் 1965—1966ல் பிளவு ஏற்பட்டது. காங்கிரசிலிருந்து வெளியேறிய குழுக்களாலும் தலைவர்களாலும் அமைக்கப்பட்ட புதிய வட்டாரக் கட்சிகள் மேற்கு வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா, ராஜஸ்தான், கேரளம், மைசூர் ஆகிய இராச்சியங்களில் ஓரளவு முக்கியமான அரசியல் காரணியாக 1967 தேர்தல்களில் செயல்பட்டன. உத்தரப் பிரதேசம், ஹரியாணு, மத்தியப் பிரதேசம் ஆகியவற்றின் சட்ட மன்றங்களில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வெவ்வேறு சமயங்களில்—தேர்தல்களுக்குப் பின்—தேசியக் காங்கிரஸ் பிரிவிலிருந்து வெளியேறினர்கள். விளைவாக இந்த இராச்சியங்களில் காங்கிரஸ் அரசாங்கங்கள் வீழ்ச்சி அடைந்தன.

முன்னுள் காங்கிரஸ்காரர்களின் பெரும்பாலான வட்டாரக் கட்சிகள் 1967, மே மாதம் ''பாரதீய க்ராந்தி தளம்'' (இந்தியப் புரட்சிக் கட்சி) என்னும் புதிய அனைத்து இந்தியக் கட்சியை உருவாக்கின. ஆனால் இதை அமைத்த இராச்சியக் கட்சிகள் தங்கள் சுயாட்சியையும் பெயர்களையும் அப்படியே வைத்திருந்தன.

ஒன்றித்த சோஷலிஸ்டுக் கட்சியிலும் மாறுதல்கள் நிகழ்ந்தன. ஸ்தூலமான சமுதாயபொருளாதார மாறுதல்கள் குறித்து ஒன்றித்த சோஷலிஸ்டுக் கட்சியால் 1966ல் மேற்கொள்ளப்பட்ட செயல்திட்டம் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியாலும் மாற்றுக் கம்யூனிஸ்டுக் கட்சியாலும் மேற்கொள்ளப்பட்டிருந்த செயல்திட்டங்களை மொத்தத்தில் ஒத்திருந்தது. தனது இறுதிக் குறிக்கோள் உற்பத்திச் சாதனங்களைச் சமூக உடைமை ஆக்குவது என்றும் தான் வர்க்கப் போராட்ட நிலைகளை ஆதரிப்பதாகவும் ஒன்றித்த சோஷலிஸ்டுக் கட்சி அறிவித்தது. அதே சமயம் ஒன்றித்த சோஷலிஸ்டுக் கட்சியின் பிரசார நடவடிக்கைகளிலும் கொள்கையிலும் தேசியவாதம் பெரும் பங்கு ஆற்றியது. ஒன்றித்த சோஷலிஸ்டுக் கட்சியின் பல தலைவர்களது அரசியல் நிலைகளில் துர்ச்சாகசப் போக்கின் தடங்கள் காணப்பட்டன. காங்கிரசைத் தோற்கடிக்கும் நோக்கத்துடன் எல்லா எதிர்த் தரப்புக் கட்சிகளும், அவற்றின் அரசியல் போக்கு எதுவாய் இருந்தாலும், தேர்தல் ஒப்பந்தங்கள் செய்து கொள்ள வேண்டும் என்ற கருத்தை ஒன்றித்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவரான, காலஞ்சென்ற, ராம் மனோகர் லோகியாதாம் 60க்களின் தொடக்கத்தின் வெளியிட்டார். 1967ம் ஆண்டுத் தேர்தல் பிரசார இயக்கத்தின் போது இடதுசாரிக் கட்சிகளுடனும் வலதுசாரிக் கட்சிகளுடனும் இத்தகைய ஒப்பந்தங்கள் செய்து கொள்ள ஒன்றித்த சோஷலிஸ்டுக் கட்சி முயன்றது.

1962 தேர்தல்களுடன் ஒப்பிடும்போது வாக்காளர்கள் மீது அரசியல் கட்சிகளின் செல்வாக்கும் நாடாளுமன்றத்தில் அவற்றின் அரசியல் மதிப்பும் எவ்வளவு மாறிவிட்டன என்பதை 1967ல் நடந்த இந்தியப் பொதுத் தேர்தல்கள் காட்டின. தேசியக் காங்கிரசின் நிலைமை யாவற்றிலும் கணிசமாக மாறி விட்டது.

1967 நாடாளுமன்றத் தேர்தல்களில் தேசியக் காங்கிரசுக்கு 40 சதவிகிதம் வாக்குகளும் மக்கள் சபையில் 54 சதவிகிதம் இடங்களும் கிடைத்தன. 1962ல் முறையே 45 சதவிகிதம் வாக்குகளும் 73 சத விகிதம் இடங்களும் அதற்குக் கிடைத்திருந்தன. இவ்வாறு காங்கிரஸ் 5 சதவிகிதம் வாக்குகளையும் சுமார் 19 சதவிகிதம் இடங்களையும் இழந்தது.

வாக்காளர்களுக்கு இடையே காங்கிரசின் செல்வாக்கு குறைந் ததை விட, சட்ட மன்றங்களில் அதன் பிரதிநிதித்துவம் எவ்வளவோ அதிகமாகக் குறைந்திருந்தது. இதற்குப் பெருமளவு காரணம் எதிர்க் கட்சிகளுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தங்களும் வாக்காளர்கள் பெரிய எதிர்க் கட்சிகளுக்குத் தேர்தல்களில் முதன்மை கொடுத்ததும் ஆகும். எனினும் 1967லும் கூடத் தேர்தல்களின் பெரும்பான்மை முறை காங்கிரசுக்கு முதன்மை அளித்தது. அதற்கு வாக்களித்த தேர் வாளர்களின் விகிதத்தை விட (40 சதவிகிதம்) அதிக விகிதம் இடங் கள் நாடாளுமன்றத்திலும் (54 சதவிகிதம்) இராச்சியங்களின் சட்ட மன்றங்களிலும் (50 சதவிகிதம்) அதற்குக் கிடைத்தன.

இவ்வாறு, 1967 தேர்தல்களின் விளைவாகவும் அவற்றின் நேரான தொடர்ச்சியாக அனேக இராச்சிய நிறுவனங்களில் ஏற்பட்ட பிளவு களின் விளைவாகவும் 17 இந்திய இராச்சியங்களில் 9ல் காங்கிரஸ் ஆளும் கட்சி என்ற தனது நிலையை இழந்து விட்டது. இந்த ஒன்பது இராச்சியங்களில் நாட்டின் மொத்த மக்களில் ஐந்தில் மூன்று பங்கினர் செறிந்திருந்தார்கள்.

தேசியக் காங்கிரசை எதிர்த்த கட்சிகளின் கூட்டணி அரசாங்கங் கள் இந்த இராச்சியங்களில் அமைக்கப்பட்டன. மொத்தம் ஏறத் தாழ 6 கோடி மக்கள் வசித்த கேரளத்திலும் மேற்கு வங்காளத்தி லும் இடதுசாரிக் கட்சிகளும் ஜனநாயகக் கட்சிகளும் அடங்கிய கூட்டணி அரசாங்கங்கள் அமைந்தன, இவற்றில் கம்யூனிஸ்டுகளின் கை மேலோங்கி இருந்தது. ஆனால் இவர்கள் பெரும்பாலும் மாற்றுக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். கேரள அரசாங்கத்துக்கு இந்தக் கட்சி தலைமை வகித்தது. மேற்கு வங்காளத்தில் அரசாங்கக் கூட்டணியில் மிகப் பெரிய பங்கு இந்தக் கட்சி பெற்றிருந்தது. பீகார், பஞ்சாப், உத்தரப் பிரதேசம் ஆகிய இராச்சியங்களில் இடதுசாரிக் கட்சிகளும் (இவற்றில் இரண்டு கம்யூனிஸ்டுக் கட்சிகளும் இருந்தன

ஆனால் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிலை அதிக வலுவாயிருந்தது), வலதுசாரிக் கட்சிகளும் (இவற்றில் ஜனசங்கத்தின் நிலை எல்லாவற்றிலும் வலுவாய் இருந்தது) கூட்டணி அரசாங்கங்களில் பங்கு பெற்றிருந்தன. பீகாரில் இடதுசாரிக் கட்சிகளும் (கூட்டணியில் எல்லாவற்றிலும் பெரிதாய் இருந்தது ஒன்றித்த சோஷலிஸ்டுக் கட்சி), உத்தரப் பிரதேசத்தில் வலதுசாரிக் கட்சிகளும் (ஆகப் பெரிய கட்சி ஜனசங்கம்) கூட்டணிகளில் ஆதிக்கம் வகித்தன. பஞ்சாபில் வட்டாரத் தேசியவாதக் கட்சியான அகாலி தளம் கூட்டணியில் முதன்மை வாய்ந்த கட்சியாக இருந்தது. சென்னையில் வட்டாரக் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தால் அரசாங்கம் அமைக்கப்பட்டது. வலதுசாரிக் கட்சிகள் காங்கிரசிலிருந்து பிரிந்து வந்த குழுக்களோடு சேர்ந்து கூட்டணி அரசாங்கங்களை இரண்டு இராச்சியங்களில் உருவாக்கின. இவையாவன ஒரிஸ்ஸாவில் சுதந்திரக் கட்சியும் மத்தியப் பிரதேசத்தில் ஜனசங்கமும். ஹரியாணாவில் காங்கிரசிலிருந்து பிரிந்த குழு அங்கே செல்வாக்கு பெற்றிருந்த வலதுசாரிக் கட்சிகளின் ஆதரவைச் சார்ந்து அரசாங்கம் அமைத்தது. காங்கிரஸ் அல்லாத கூட்டணி அரசாங்கங்கள் அமைந்த ஒன்பது இராச்சியங்களில் ஹரியாணா தவிர இன்னும் ஐந்தில் (மேற்கு வங்காளம், பீகார், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், மத்தியப் பிரதேசம்) காங்கிரசிலிருந்து பிரிந்த குழுக்களின் தலைவர்கள் முதல் அமைச்சர்கள் ஆனார்கள் என்பது மொத்தத்தில் பெரிதும் முக்கியத்துவம் உள்ளது.

ஆட்சி அதிகாரத்துக்குக் காங்கிரசின் ஏகபோக உரிமை கீழறுக்கப்பட்டு விட்டதைத் தேர்தல்கள் காட்டின. சுரண்டும் வர்க்கங்களின் நலன்களுக்காகக் கையாளப்பட்டு வந்த ஒரு கட்சி நிர்வாக முறை இரு கட்சி அல்லது பல கட்சி முறைக்கு இடத்தை விட்டுக் கொடுத்தது.

இந்தியாவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையில் ''நேருவின் போக்கு'' கடைப்பிடிக்கப்படுவதற்கு முட்டுக்கட்டை போடவும் இந்திரா காந்தியின் தனிப்பட்ட நிலைகளைக் கீழறுக்கவும் காங்கிரசுக்குள் இருந்த வலதுசாரிச் சக்திகள் ''சிண்டிக்கேட்டின்'' தலைமையில் 1967லும் 1968லும் தொடர்ந்து முயற்சி செய்தன.

காங்கிரசின் சீர்குலைந்த மதிப்பை மீண்டும் நிலைநாட்டும் நோக்கத்துடன் இந்திரா காந்தி 1969, கோடையில் 14 பெரிய தனியார் வங்கிகளைத் தேசிய உடைமை ஆக்கினார். இதை அடுத்து நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் பதவியிலிருந்து விலகினார். ஜாக்கிர் உசேன் காலமான பிறகு அவரது இடத்தில் புதிய குடியரசுத் தலைவர் பதவிக்கு 1969, ஆகஸ்டில் தேர்தல் நடந்தது. காங்கிரசின் இடதுசாரி நடுநிலைவாதக் குழு தன் வேட்பாளராக இந்தியத் தொழிற்சங்க

இயக்கத்தின் முதிர்ந்த தலைவர் வி. வி. கிரியை நிறுத்தி வெற்றி பெற்றது. காங்கிரசில் நடப்பில் பிளவு ஏற்பட்டது. 1969ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் இரண்டு இணையொத்த காங்கிரஸ் நிறுவனங்கள் (நாடு முழுவதிலும்) உருவாயின. இவ்வாறு இந்தப் பிளவு முற்றுப் பெற்றது.

கிடைத்த வெற்றியை நிலைப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, வங்கிகளைத் தேசிய உடைமை ஆக்கியதை அடுத்து முற்போக்குள்ள வேறு பல சமுதாய-பொருளாதார நடவடிக்கைகளை இந்திரா காந்தி மேற்கொண்டார்.

ஏகபோகங்களையும் வரையறுத்த வர்த்தக நடைமுறையையும் பற்றிய சட்டம் 1969, டிசம்பரில் பிறப்பிக்கவும் உறுதிப்படுத்தவும் பட்டது. 1970, ஜூன் 1ந் தேதி முதல் இது நடப்புக்கு வந்தது. ஒரு கோடி ரூபாயும் அதற்கு மேலும் பெறுமானமுள்ள சொத்துக்கள் கொண்டவையும் ஒரு துறையில் ஆதிக்கம் வகிப்பவையுமான நிலையங்களையும் 20 கோடி ரூபாய் அல்லது அதற்கு மேல் பெறுமானம் உள்ள சொத்துக்கள் கொண்ட கூட்டு நிறுவனத்தில் சேரும் எல்லா விதமான நிலையங்களையும் நிறுவுவது, இணைப்பது, அல்லது கணிசமாக விரிவாக்குவது ஆகியவற்றுக்கு அரசாங்கத்தின் விசேஷ அனுமதி தேவை என்று இந்தச் சட்டம் விதித்தது. ஏகபோகங்களையும் வரையறுத்த வர்த்தக நடைமுறையையும் பற்றிய நிலையான கமிஷனை நிறுவச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தது. இந்த விஷயம் குறித்து இன்றியமையாத சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துக்கு யோசனைகள் தெரிவிப்பதும் ஏகபோகங்களையும் வரையறுத்த வர்த்தக நடைமுறையையும் பற்றிய நிகழ்ச்சிகளை ஆராய்ந்து ''சமூக நலன்களுக்கு முரண்படும்'' நிகழ்ச்சிகளைத் தடை செய்வதும் இந்தக் கமிஷனின் பணிகளாக இருந்தன.

அரசு, பெரிய தனியார் தொழிலதிபர் குடும்பங்கள், சிறு அளவுத் தொழில் துறை, பிற தனியார் தொழிலதிபர்கள் ஆகியோருக்கு உரிய தொழில் முயற்சி எல்லைப் பரப்புக்களைத் தீர்மானிக்கும் புதிய கொள்கையை 1970, பிப்ரவரியில் அரசாங்கம் அறிவித்தது. அரசுத் துறையின் எல்லைப் பரப்பு மொத்தத்தில் 1956ல் நிறைவேற்றப்பட்ட தொழில் துறைக் கொள்கை பற்றிய தீர்மானத்தில் இருந்தவாறே, கடந்த காலப் பகுதியில் ஏற்பட்டிருந்த மாறுதல்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு வரையறுக்கப்பட்டது.

4வது ஐந்தாண்டுத் திட்டப்படி (1969/70—1973/74) செய்யப்பட்டிருந்த பண ஒதுக்கீடுகளில் திருத்தங்கள் 1970, பிப்ரவரியில் அறிவிக்கப்பட்டன. திருத்திய திட்ட வரைவுப்படி அரசுத் துறையில் முதலீடுகள் ஆரம்பத் திட்ட வரைவுடன் ஒப்பிடுகையில் 12,250

கோடி ரூபாயிலிருந்து 13,660 கோடி ரூபாயாகவும் அவற்றின் பங்கு 55லிருந்து 60 சதவிகிதமாகவும் உயர்த்தப்பட்டன. தனியார் துறையின் பங்கு 45லிருந்து 40 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. அதில் செய்யத் திட்டமிட்டிருந்த முதலீடுகள் 10,000 கோடியிலிருந்து 8,980 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டு விட்டன. பிர்லா ஏக போகக் குடும்பத்தின் மீதும் பிற ஏகபோகக் குழுக்கள் மீதும் இருந்த குற்றச் சாட்டுகளை விசாரிப்பதற்கு ஒரு கமிஷன் அதே மாதம் நியமிக்கப்பட்டது.

38 வகைச் சரக்குகளின் இறக்குமதியை அதிகப்படியாக அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசாங்கம் அதே ஆண்டு மார்ச்சு மாதத்தில் முடிவு செய்தது (அது வரை 22 வகைச் சரக்குகளின் இறக்குமதி அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது). 1970, ஆகஸ்டில் பருத்தி இறக்குமதி அதிகப்படியாகத் தேசிய உடைமை ஆக்கப்பட்டது.

17 மிக முக்கிய வகை மருந்துகளின் விலைகளை அரசாங்கம் ஏப்ரல் மாதம் குறைத்தது (வெவ்வேறு வித மருந்துகள் விஷயத்தில் இந்தக் குறைப்பு 10 முதல் 70 சதவிகிதம் வரை இருந்தது). தொழிலாளிகளிலும் அலுவலர்களிலும் ஒருவரைத் தொழில் நிலையத்தின் இயக்குநர்களில் ஒருவராக நியமிப்பதன் மூலம் தொழில் நிலையங்களின் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு கொள்வதை விரிவாக்க அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக அதே மாதம் அறிவிக்கப்பட்டது.

சர்க்கரை ஆலை, இயந்திர நிர்மாணம், மின்னுற்றல் உற்பத்தி ஆகிய தொழில்களிலும் சாலைப் போக்கு வரத்திலும் துறைமுக நிர்வாகத்திலும் சம்பள உயர்வு குறித்த தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பகுதி அளவில் நிறைவேற்ற அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக 1970ல் அறிவிக்கப்பட்டது. இரும்பு வகை உலோக வார்ப்புத் தொழில், வங்கி, இன்ஷூரன்ஸ் தொழில் ஆகியவற்றின் தொழிலாளர்களுடனும் அலுவலர்களுடனும் சம்பள ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன.

நாட்டுப்புறத்தில் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கும் விரிவான செயல்திட்டத்தை அமுல்படுத்தப் போவதாக மத்திய அரசாங்கம் 1971, ஜனவரியில் அறிவித்தது. 1971, ஏப்ரலில் நடப்புக்கு வந்த இந்தச் செயல்திட்டம் 4வது ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சிய மூன்று ஆண்டுகளை உள்ளடக்கியது. பெரிய உழைப்பாளர் சேமிப்புக்களின் பயன்பாடு தேவைப்படும் வகையான வேலைகளைச் செயல்படுத்த இதில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் முக்கிய நோக்கங்கள் பின்வருவன என அறிவிக்கப்பட்டன: 1) ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 ரூபாய் சராசரி மாதச் சம்பளத்தில் 100 பெயருக்கு

ஆண்டில் 10 மாதங்களுக்கான வேலை இடங்களை ஏற்படுத்துவது (வேலை செய்யும் வயது வந்த ஆட்கள் தற்போது இல்லாத குடும்பங்களுக்கு முதலுரிமை தரப்படும்); 2) சாலைகள், சிறு பாசன வசதிகள், நிலச் சீராக்க அமைப்புக்கள் முதலிய நீண்ட கால வேலை வசதிகளை ஏற்படுத்துவதன் வாயிலாக வட்டாரப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஒத்துழைப்பது. இந்தச் செயல்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆகும் 50 கோடி ரூபாய்ச் செலவை மத்திய அரசாங்கம் முழுமையாக ஏற்றுக்கொள்ளும் என அறிவிக்கப்பட்டது.

இடதுசாரிச் சக்திகள் வலுவடைகின்றன

வெகுஜனப் போராட்டம் தீவிரமாதல்

1969லும் 1970லும் இந்திரா காந்தி அரசாங்கம் முக்கியமான, முற்போக்குள்ள சமுதாய-பொருளாதார நடவடிக்கைகளை மேற் கொண்டது நாட்டில் அரசியல் சக்திகளின் அணி வரிசையில் இடப் புறம் ஓரளவு மாற்றம் தொடங்கியதைக் காட்டியது. பொது ஜனநாயக மாறுதல்களைச் செயல்படுத்துமாறு கோரி உழைப்பாளிகள் நடத்திய வெகுஜனப் போராட்டத்தின் விளைவாகவே இந்த மாற்றம் நிகழ்ந்தது.

கம்யூனிஸ்டு இயக்கத்தில் பிளவு வெகுஜன இயக்கத்துக்குத் தீங்கு செய்தது. ஆயினும் 60க்களின் பிற்பாதியில் தொழிலாளி வர்க்கத் தின் போராட்டம் தொடர்ந்து தீவிரம் ஆயிற்று. தொழிலாளர் இயக் கத்தில் ஒற்றுமை ஆர்வம் வலுத்து வந்த சூழ்நிலையில் முக்கியத் தொழிற்சங்க மையங்களின் பிரதிநிதிகள் பொதுப் போராட்டச் செயல்திட்டத்தைத் தயாரித்தார்கள். இந்தத் தஸ்தாவேஜில் ஏறத் தாழ 50 லட்சம் கையெழுத்துக்கள் திரட்டப்பட்டன. 1969, மே 1ந் தேதி, இது மகஜர் வடிவில் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப் பட்டது. ஆனல் அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசில் பிளவு ஏற்பட்டதாலும் புதிய தொழிற்சங்கக் கூட்டு—இந்தியத் தொழிற்சங்க மையம்—மாற்றுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக் கின் கீழ் 1970, மே மாதம் உருவானதாலும் ஒற்றுமை முயற்சிக்குத் தடங்கல் நேர்ந்தது.

கம்யூனிஸ்டு இயக்கத்தில் உண்டான பிளவு விவசாயிகள் நிறு வனங்களின் செயல்களையும் பாதித்தது. 1965—1966ல் 4-5 ஆண்டுக்

கால இடைநிறுத்தத்துக்குப் பிறகு கிஸான் சபா புதிய ஊக்கத்துடன் செயல்படத் தொடங்கியது என்றாலும் அனேக இராச்சியங்களில் மாற்று நிறுவனங்கள் தோன்றின. 1968ன் தொடக்கத்தில் இரண்டு அகில இந்திய விவசாயிகள் சங்கங்கள் தோன்றியதுடன் இந்தப் பிளவு முறைப்படி முழுமை பெற்றது. ஏழை விவசாயிகளின், சிறப்பாக வாரக் குத்தகைக்காரர்களின் போராட்டம் இந்த ஆண்டுகளில் மேற்கு வங்காளத்திலும் பீகாரிலும் உத்தரப் பிரதேசத்திலும் தமிழ் நாட்டிலும் ஆகப் பெரிய அளவில் நடந்தது. மேற்கு வங்காளத்தில் தீவிரவாதிகளின் தலைமையில் 1968ம் ஆண்டு விவசாயிகளின் (''நக்சலைட்டுகளின்'') ஆயுதமேந்திய போராட்டங்கள் நடை பெற்றன. நக்சலைட்டுகளின் (இடதுசாரித் தீவிரவாதிகளின்) இயக்கம் பிற பிரதேசங்களில் (சிறப்பாக ஆந்திரப் பிரதேசத்திலும் பஞ்சாபிலும்) பரவத் தொடங்கியது. இடதுசாரித் தீவிரவாதிகள் மாற்றுக் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து வெளியேறி 1969, மே மாதம் மூன்றாவது (மார்க்சிய-லெனினியக்) கம்யூனிஸ்டுக் கட்சியை உருவாக்கினார்கள்.

விவசாயத் தொழிலாளர்களின் போராட்டம் விரிவாக நடந்தது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்குக்கு உட்பட்ட அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் 1968ல் அமைக்கப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் கிஸான் சபாவும் விவசாயத் தொழிலாளர் சங்கமும் வலுவந்தமாக நிலத்தைக் கைப்பற்றும் வெகுஜன இயக்கத்தை 1969-1970ல் நடத்தின.

தனி நபர் பயங்கரச் செயல் உள்ளிட்ட வன்முறை, நாளுக்கு நாள் அதிகமாகப் பரவிய அரசியல் போராட்ட முறை ஆயிற்று. இந்தச் சூழ்நிலையில் விரிவான சமூக வட்டாரங்களில் அரசியல் நிலைப்பாடு வேண்டும் என்ற ஆர்வம் அதிகரித்தது. சமூக மனப்பாங்கில் ஏற்பட்ட திருப்பத்தைக் கருத்தில் கொண்டும் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சிக்கு மக்களிடையே அதிகரித்து வந்த செல்வாக்கை ஆதாரமாகக் கொண்டும் கெடுவுக்கு முன்னர் பொதுத் தேர்தல்கள் நடத்த அதன் தலைமை முடிவு செய்தது.

சமுதாய-பொருளாதாரத் துறைகளில் தான் மேற்கொண்டவையும் உறுதியளித்தவையுமான நடவடிக்கைகள் பற்றிக் காங்கிரஸ் கட்சி விரிவான பிரசாரம் நடத்தியது. கட்சித் தலைவர்களும் அரசாங்கத் தலைவர்களும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பொதுக் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் கணக்கற்ற உரைகள் நிகழ்த்தினார்கள். மேற்கொண்டு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியும் கட்சியின் சமுதாய-பொருளாதாரக் கொள்கை குறித்துத் தனிப்பட்ட பிரசாரச் சிற்றேடுகள் வெளியிட்டது. பொருளாதாரக் கொள்கை பற்றிய பம்பாய்த் தீர்மானமும் அடுத்து வந்த நடவடிக்கைகளும் (1970,

ஜூலையில் வெளியிடப்பட்டது), வங்கிகள் தேசிய உடைமை ஆக்கப் பட்ட பின் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (1970, செப்டெம்பரில் வெளியிடப்பட்டது) ஆகியவை இவற்றில் சில. உண்மையில், கெடுவுக்கு முந்திய பொதுத் தேர்தல்களை அறிவிப்பதற்கு வெகு காலம் முன்பே காங்கிரஸ் கட்சி விரிவான தேர்தல் பிரசார இயக் கம் தொடங்கிவிட்டது. கட்சியின் தேர்தல் அறிக்கையில் மேலே குறிப்பிட்ட தஸ்தாவேஜுகளிலும் சிற்றேடுகளிலும் தரப்பட்ட வாக்குறுதிகளே பெரும்பாலும் மீண்டும் அளிக்கப்பட்டன. வாக்களிக் கப்பட்ட சமுதாய-பொருளாதார நடவடிக்கைகளைச் செயல்படுத்து வதற்கு நாடாளுமன்றத்தில் திண்ணமான பெரும்பான்மை வேண்டி யிருப்பதால் கெடுவுக்கு முன் தேர்தல்கள் நடத்த நேர்ந்ததாகக் காங்கிரஸ் கட்சி கூறியது.

1971லும் 1972லும் நடந்த பொதுத் தேர்தல்கள்

ஆட்சியில் இருந்த கட்சியினதும் அரசாங்கத்தினதும் கொள்கை யில் நிகழ்ந்த முற்போக்குள்ள மாறுதல்கள், இந்த மாறுதல்களைப் பற்றிய விரிவான பிரசாரம், அவை மேலும் வளர்ச்சி பெறும் என்ற வாக்குறுதி ஆகியவை 1971ல் கெடுவுக்கு முன் நடந்த தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி பெறுவதில் முக்கியப் பங்கு ஆற்றின. இந்த மாறு தல்கள் நிகழ்வதற்குக் கணிசமான அளவு காரணமாய் இருந்தவை 1967ம் 1969ம் ஆண்டுத் தேர்தல்களில் இடதுசாரிக் கட்சிகள் பெற்ற வெற்றிகள் ஆகும்.

இடதுசாரிக் கட்சிகள் முன்வைத்தவற்றுக்கு நெருக்கமான செயல் திட்டக் கோஷங்களை எடுத்துக் கொண்டு விரிவான சமுதாய மாற்றங் கள் நிகழும் என்று வாக்களித்தும் இந்த வாக்குறுதிகளைச் செயல் படுத்தச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டும் காங்கிரஸ் கட்சி முன்னர் இடதுசாரிக் கட்சிகளை ஆதரித்து வந்த வாக்காளர்களில் ஒரு பகுதியினரைத் தன் தரப்புக்கு ஈர்த்தது. மறுபுறம், சமுதாய-பொருளாதாரத் துறையில் முற்போக்குள்ள மாறுதல்கள் நிகழ்த்து வதற்கு முட்டுக்கட்டை போடும் பிரதான சக்தி எதிர்த் தரப்புக் காங்கிரசே என்று குற்றம் சாட்டி, முன்பு ஒன்றித்த தேசியக் காங் கிரசுக்கு வாக்களித்து வந்தவர்களில் பெரும் பகுதியினரைத் தன் தரப்பாளர்கள் ஆக்குவது ஆட்சியிலிருந்த கட்சிக்கு இயன்றது.

1971, மார்ச்சில் நடந்த கெடுவுக்கு முந்திய தேர்தல்களின் விளை வாக ஆட்சியில் இருந்த கட்சி நாடாளுமன்றத்தில் மீண்டும் முழுப் பெரும்பான்மை பெற்றதோடு அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்

தங்கள் செய்வதற்குத் தேவையான மூன்றில் இரு பங்கு வாக்குகளை யும் பெற்றது.

தேசியக் காங்கிரஸ் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் இருந்த திண்ணமான பெரும்பான்மையையும் இடதுசாரிச் சக்திகளின் ஆதர வையும் சார்ந்து முற்போக்குள்ள பொருளாதார மாற்றங்கள் குறித்த செயல்திட்டத்தை நிறைவேற்றும் போக்கை 1971ம் ஆண்டு முழுவதிலும் தொடர்ந்து கடைப்பிடித்தது. அரசியல் அமைப்புச் சட்டத்தில் இரண்டு திருத்தங்கள் செய்யப்பட்டன. இவற்றின்படி முழு இழப்பீடு தராமல் தனியார் சொத்துரிமையைக் குறுக்கும் சட்டங்களை நிறைவேற்ற நாடாளுமன்றத்துக்கு உரிமை அளிக்கப் பட்டது. பொருளாதார, சமுதாயச் சட்டங்கள் இயற்றும் துறையில் தனது இறைமையை நாடாளுமன்றம் உறுதிப்படுத்தியது. வங்கிகளைத் தேசிய உடைமை ஆக்குவதையும் முன்னாள் சமஸ்தான மன்னர்களின் சலுகைகளை அகற்றுவதையும் குறித்த அரசாங்கத்தின் முடிவுகள் செயலாக்கப்படுவதற்கு முட்டுக்கட்டை போட இந்திய உச்ச நீதி மன்றத்தின் பிற்போக்குள்ள பெரும்பான்மையாளரது முயற்சிகளை இவ்வாறு அது இடை முறித்து விட்டது. முன்னாள் சமஸ்தான மன் னர்களுக்கு உதவிச் சம்பளம் கொடுப்பதை நிறுத்திவிடுவது என்று ஆண்டு முடிவில் நாடாளுமன்றம் தீர்மானித்தது. இதனால் ஆண்டுக்கு 5 கோடி ரூபாய்க்கு மேல் மிச்சப்பட்டது. நாட்டின் அரசியல் வாழ் வில் நிலப்பிரபுத்துவப் பிற்போக்காளர்களின் தலையீட்டுக்கு இருந்த பொருளாதார அடிப்படையும் இதனால் தகர்ந்து விட்டது.

தனியார் தொழில் நிலையங்கள் மீது கட்டுப்பாடு ஏற்படுத்தும் உரிமையை அரசாங்கத்துக்கு அளிக்கும் சட்டம் நிறைவேற்றப் பட்டது முக்கியமான முற்போக்கு நடவடிக்கையாக விளங்கியது. 64 இந்திய, 42 அயல்நாட்டுப் பொது இன்ஷூரன்ஸ் கம்பெனிகளையும் 214 நிலக்கரிச் சுரங்கங்களையும் பிற தொழில் நிலையங்களையும் இந் திரா காந்தி அரசாங்கம் தன் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டது. சில இராச்சியங்களில் அனேக இலேசு ரகத் தொழிற்சாலைகளும் உணவுப் பண்டத் தொழிற்சாலைகளும் அரசாங்கக் கட்டுப்பாட்டுக் குள் வந்தன.

நிலச் சீர்திருத்தங்களின் புதிய வட்டம் தொடங்கி விட்டதாக அறிவிக்கப்பட்டது. தனியார் நில உடைமையின் புதிய, தாழ்த்தப் பட்ட உச்ச வரம்பு ஏற்கப்பட்டது. அதோடு இந்தியப் பொருளா தாரத்தின் வெவ்வேறு துறைகளில் அரசுக் கட்டுப்பாட்டை விரிவாக் கும் கொள்கைப் போக்கு உறுதிப்படுத்தப்பட்டது. வாக்காள வெகு ஜனங்களிடையே காங்கிரசின் நிலை இன்னும் அதிகமாக வலு வடைந்தது.

1972ல் இராச்சியச் சட்ட மன்றங்களுக்கு நடந்த தேர்தல்களில் தேசியக் காங்கிரசுக்கு 48 சதவிகிதம் வாக்குகள் கிடைத்தன. 1971ல் நடந்த கெடுவுக்கு முந்திய நாடாளுமன்றத் தேர்தல்களில் அதற்குக் கிடைத்தவை 43.6 சதவிகிதம் வாக்குகள்தாம். 1967ல் இதே இராச்சியங்களில் நடந்த தேர்தல்களில் காங்கிரஸ் (பிளவுக்கு முன்பு) 42.7 சதவிகிதம் வாக்குகளே பெற்றது. எனவே, இந்திரா காந்தியின் தலைமையில் தேசியக் காங்கிரசின் செல்வாக்கு அதிகரித்தது என்பதில் சந்தேகம் இல்லை. விளைவாக இராச்சியச் சட்ட மன்றங்களில் தனது நிலைகளைக் கணிசமாக வலுப்படுத்திக் கொள்வது காங்கிரசுக்கு இயன்றது. அவற்றில் சுமார் 76 சதவிகிதம் இடங்கள் அதற்குக் கிடைத்தன. ''பழைய'' காங்கிரஸ் 1967ல் 50 சதவிகிதத்துக்கும் குறைவான இடங்களையே இராச்சியச் சட்ட மன்றங்களில் பெற்றது.

21 இராச்சியங்களில்* 15ல் இந்தியத் தேசியக் காங்கிரஸ் அரசாங்கங்கள் அமைத்தது. 16 சட்ட மன்றங்களில் 11ல் காங்கிரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு இடங்கள் கிடைத்தன என்ற விஷயமும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இதனால் நாடாளுமன்றத்தின் மேல் சபையில் (ராஜ்ய சபாவில்) 1972, ஏப்ரலில் நடந்த தேர்தல்களில் காங்கிரசுக்குப் பெரும்பான்மையான இடங்கள் கிடைப்பதற்கு அனுகூலமான அதிகப்படி வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

ஆயினும், பெரும்பாலான இராச்சியங்களில் காங்கிரசுக்கு 1972ல் கிடைத்த வாக்குகளின் பங்கு 1971ல் நடந்த வெற்றிகரமான நாடாளுமன்றத் தேர்தல்களில் கிடைத்ததைக் காட்டிலும் குறைவாய் இருந்தது. காரணம் என்னவென்றால், 1971ல் நடந்த தேர்தல்களுக்கு மாறாக, 1972ல் ஆண்டுத் தேர்தல் பிரசாரத்தில் வட்டாரப் பிரச்சினைகள் அதிக அளவில் கிளப்பப்பட்டன. இவற்றில் இராச்சியக் காங்கிரஸ் நிறுவனங்களின் நடவடிக்கைகள் கணிசமாக அதிக அளவில் இருள்படிந்த பகுதிகள் கொண்டிருந்தன.

முக்கிய வலதுசாரிக் கட்சிகளின் நாடாளுமன்ற நிலைகள் பெரிதும் பலவீனம் அடைந்ததை (இராச்சியச் சட்ட மன்றங்களில் இடங்களின் எண்ணிக்கைக் குறைவைத்) தேர்தல்கள் காட்டின. ஆயினும் வெகுஜனங்கள் மீது இந்தக் கட்சிகளது செல்வாக்கின் வீழ்ச்சி மிகக் குறைவாகவே புலப்பட்டது.

1972ல் நடந்த இராச்சியச் சட்ட மன்றத் தேர்தல்களின் விளைவாக இடதுசாரிக் கட்சிகள் தங்கள் நிலைகளை மொத்தத்தில் காப்பாற்றிக் கொண்டன. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு 4.2 சதவிகி

---

* 1972ல் தேர்தல்கள் நடக்காத இராச்சியங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு.

தம் வாக்குகள் கிடைத்தன (1971ல் 4.9 சதவிகிதமும் 1967ல் 4.1 சதவிகிதமும் வாக்குகள் அதற்குக் கிடைத்திருந்தன). மேற்கு வங்காளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கு கணிசமாக அதிகரித்ததைக் குறிப்பிடுவது அவசியம் (1967ல் 7.4 சதவிகிதம், 1972லோ, 13 சதவிகிதம் வரை). மேற்கு வங்காளம், பீகார், பஞ்சாப், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், மைசூர் ஆகியவற்றில், அதாவது 16ல் 6 இராச்சியங்களில் (அவற்றோடு டில்லியிலும்) தேர்தல் தொகுதிகளின் பங்கீடு குறித்துக் கம்யூனிஸ்டுக் கட்சி தேசியக் காங்கிரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தது. இந்த இராச்சியங்களின் சட்ட மன்றங்களில் தன் நிலைகளை வெகுவாக வலுப்படுத்திக் கொள்ள இதனால் அதற்கு முடிந்தது.

மாற்றுக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு 4.6 சதவிகிதம் வாக்குகள் கிடைத்தன. 1971ல் 4.9 சதவிகிதமும் 1967ல் 4சதவிகிதமும் வாக்குகளை அது பெற்றிருந்தது. ஆயினும் அதனுடைய தலைமைக் குழுவின் பிளவுபடுத்தும் நடவடிக்கைகள் அந்தக் கட்சி மேற்கு வங்காளத்தில் படு தோல்வி அடையவும் அதன் நாடாளுமன்ற நிலைகள் மொத்தத்தில் கணிசமாகப் பலம் குன்றவும் காரணம் ஆயின. தேர்தல்களுக்கு முன் மொத்தம் 128 சட்ட மன்ற உறுப்பினர்கள் கொண்டிருந்த இந்தக் கட்சிக்குத் தேர்தல்களில் மொத்தம் 34 இடங்களே கிடைத்தன. எதார்த்தத்தில் அது தனது அனைத்து இந்தியச் செல்வாக்கை இழந்துவிட்டது.

மொத்த வெகுஜனச் செல்வாக்கில் சோஷலிஸ்டுகளின் நிலைகள் ஓரளவு பலவீனம் அடைந்தன (1967ல் 5.1 சதவிகிதமாக இருந்த வாக்குகள் இப்போது 4.6 சதவிகிதமாகக் குறைந்தன). சட்ட மன்றங்களில் அவர்கள் பெற்ற இடங்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது (இருந்த 117க்கு மாறுக 58). பீகாரில் மட்டுமே சோஷலிஸ்டுகள் எல்லாவற்றிலும் பெரிய எதிர்க் கட்சியாக இருந்தார்கள் (16 சதவிகிதம் வாக்குகள்).

இந்திரா காந்தியின் அரசாங்கம் முற்போக்குள்ள சமுதாய-பொருளாதார மாறுதல்கள் அடங்கிய செயல்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அனேக நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டது அரசியல் சக்திகளின் அணி வரிசையில் ஓரளவு இடப்புறம் நோக்கிய மாற்றம் தொடங்கி விட்டதைக் காட்டியது. முடிவான பகுத்தாராய்வில் உழைப்பாளி மக்களின் வெகுஜனப் போராட்டம் காரணமாகவே உள்நாட்டு அரசியலில் மாறுதல்கள் நிகழ்ந்தன.

காங்கிரசின் தலைமையில் இடதுசாரி நடுநிலைவாதக் குழுவினது செல்வாக்கின் அதிகரிப்பு இடதுசாரி எதிர்த் தரப்புக் கட்சிகளின் பால், முதன்மையாக கம்யூனிஸ்டுக் கட்சியின் பால், காங்கிரசினதும்

அதன் செல்வாக்கில் இருந்த வெகுஜன நிறுவனங்களதும் உறவுகளைப் பாதித்தது. இந்தியத் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசின் தலைமையிலும் மாறுதல்கள் நிகழ்ந்தன. அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசுடனும் மற்றத் தொழிற்சங்க மையங்களுடனும் அது அதிக ஒத்திசைந்த முறையில் ஒத்துழைக்கத் தொடங்கியது. அனைத்து இந்தியத் தொழிற்சங்க மகாநாடு 1971, மே மாதம் டில்லியில் நடந்தது. முக்கியமான எல்லா அனைத்து இந்தியத் தொழிற்சங்கங்களும் கிளைத் தொழிற்சங்கங்களும் இதில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. விரிவான ஒன்றித்த நடவடிக்கைகள் குறித்த சாசனத்தை மகாநாடு ஏற்றது. உழைப்பாளிகளின் பொருளாதார உரிமைகளுக்கான போராட்டம் பற்றிய பொதுச் செயல்திட்டம் இதில் வரையறுக்கப் பட்டிருந்தது.

1971, அக்டோபர் மாதம் கொச்சியில் நடந்த கம்யூனிஸ்டுக் கட்சியின் 9வது மகாநாட்டில் எல்லா இடதுசாரி, ஜனநாயகச் சக்திகளதும் ஒற்றுமையைப் பெறுவதற்கான கொள்கைப் போக்கு உறுதிப்படுத்தப்பட்டது. காங்கிரசுக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்த இடதுசாரியினருடன் கம்யூனிஸ்டுகளின் ஒத்துழைப்பும் உழைப்பாளிகளின் நலன்களுக்காக விரிவான வெகுஜனப் போராட்டமும் ஒருங்கமைந்த இலாகவமான செயல்தந்திரத்தை மகாநாடு வகுத்தது.

தேர்தல்களுக்குப் பின் தேசியக் காங்கிரஸ் பெரும்பாலான இராச்சியங்களில் அரசாங்கங்கள் அமைத்தது. ஆயினும் வலதுசாரி நபர்கள் பெருந் திரளாக அதற்குத் திரும்பி விட்ட படியால் கட்சிக்குள் நிலைமை சிக்கலாயிற்று. காங்கிரசில் வலதுசாரி பலம் பெற்றதால் உள் கட்சிப் போராட்டம் தீவிரம் அடைந்தது, சில இராச்சியங்களில் காங்கிரஸ் அரசாங்கங்களின் நிலைமை உறுதியற்றது ஆயிற்று, 1972, அக்டோபரில் அனைத்து இந்தியக் காங்கிரஸ் கமிட்டியால் திட்டமிடப்பட்ட முற்போக்குள்ள பொருளாதார நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டது. இந்த எல்லா நிகழ்ச்சிகளும் நாட்டில் பொருளாதார நிலை தொடர்ந்து சீர்கேடு அடைந்தும் (தேசிய வருமான அதிகரிப்பில் குறைவு 1969—1972ல் தொடர்ந்தது) சமுதாய இறுக்கம் அதிகமாகியும் வந்த சூழலில் நடந்தன. இடப் புறம் மேற்கொண்டு முன்னேறும் பணி கடினம் ஆயிற்று.

1970—1972ல் இந்திரா காந்தி அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை. 1971ல் நடந்த இந்திய-பாக்கிஸ்தான் போர்

1969ல் தேசியக் காங்கிரஸ் பிளவுபட்ட பின்னர், இந்திய அரசாங்கத்தின் நடுநிலைப் போக்குள்ள அயல் நாட்டுக் கொள்கையைப்

பெரும்பாலும் மேற்கு நாடுகளுக்கு, சிறப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஆதரவாக மாற்றும் நோக்கத்துடன் அதை வற்புறுத்தி வந்த சக்திகள் ஆட்சியில் இருந்த கட்சிக்குள் வெளிப்படையாகப் பலம் குன்றின. ஜவாகர்லால் நேரு நாட்டை வழி காட்டி நடத்திய காலப் பகுதியில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டுக் கொள்கை சம்பந்தமான முக்கியக் கோட்பாடுகளைப் பின்பற்றவும் சோவியத் யூனியனுடனும் பிற சோஷலிஸ்டு நாடுகளுடனும் அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் ஒத்துழைப்பை மேற்கொண்டு விரிவாக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவும் இந்திரா காந்தி அரசாங்கத்துக்கு இதனால் வாய்ப்பு கிடைத்தது.

''மூன்றாவது உலகில்'' இந்தியாவின் நிலைகளை வலுப்படுத்திக் கொள்ளும் கொள்கைப் போக்குக்கு இணங்க ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளுடன் இரு தரப்பு உறவுகளை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்திய அரசதந்திர நடவடிக்கைகள், 1967—1969ல் போலவே, தொடர்ந்தன. வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளோடும் உறவுகளை வலுவாக்குவதும் விரிவுபடுத்துவதும் இந்திய வெளிநாட்டுக் கொள்கைப் பணிகளில் அடங்கி இருந்தன. நாட்டின் பொருளாதார, சமுதாய-பண்பாட்டு வளர்ச்சிக்கான தேவைகள் இவற்றுக்கு முதன்மைக் காரணங்களாக இருந்தன.

பாக்கிஸ்தானுடனும் சீன மக்கள் குடியரசுடனும் உறவுகள் முன் போலவே இந்தியாவின் மிக முக்கிய வெளிநாட்டுக் கொள்கைப் பிரச்சினையாக இருந்து வந்தன. இந்திய-பாக்கிஸ்தான், இந்திய-சீனத் தகராறுகள் நீடித்துக் கொண்டு போனது மூன்றும் நாடுகளுடன், முதற்படியாகப் பெரு வல்லரசுகளுடன், இந்தியாவின் உறவுகள் வளர்வதற்குத் தொடர்ந்து இடையூறு விளைத்து வந்தன.

பாக்கிஸ்தானுடன் இந்தியாவின் உறவுகளில் இருந்த இறுக்கம் 1970ம் ஆண்டுக் கோடையில் ரபாத்தில் நடந்த முஸ்லிம் நாடுகளின் மகாநாட்டில் துலக்கமாக வெளிப்பட்டது. 1970 இறுதி முதல் பாக்கிஸ்தானின் உள்நாட்டு அரசியல் நிலைமை ஒரேயடியாக மோசம் ஆனதை ஒட்டி இந்த இறுக்கம் மேலும் அதிகரித்தது.

கிழக்குப் பாக்கிஸ்தானில் தேசிய விடுதலை இயக்கத்தின் ஏற்றம்; பாக்கிஸ்தானின் வரலாற்றில் முதன் முதலாக 1970, டிசம்பரில் நடந்த பொதுத் தேர்தல்களில் வங்காளத் தேசியக் கட்சியான அவாமி லீக் (மக்கள் கழகம்), மேற்குப் பாக்கிஸ்தானில் யஹ்யாகானின் இராணுவ ஆட்சியை எதிர்த்த சக்திகள் ஆகியவற்றின் வெற்றி; பாக்கிஸ்தானின் ஆளும் வட்டாரத்தினர் தேர்தல் முடிவுகளை ஒப்பாமை; இராணுவச் சக்தியால் வங்காளத் தேசிய நிறுவனங்கள் நசுக்கப்பட்டது; கிழக்குப் பாக்கிஸ்தானில் சட்டமியற்றும் நிறுவனங்கள்

கலைக்கப்பட்டது; வங்காளத் தேசியத் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் 1971, மார்ச்சு 26ல் கைது செய்யப்பட்டது—இந்த நிகழ்ச்சித் தொடர், எதிர்ப்புப் படைப் பிரிவுகளுக்கும் அவற்றுக்கு ஆதரவு அளித்த வங்காள மக்களுக்கும் எதிராக அனுப்பப்பட்ட மேற்குப் பாக்கிஸ்தான் சேனையின் விரிவான இராணுவ நடவடிக்கைகளில் முடிந்தது. அரசாங்கப் படைகள் எட்டு மாதக் காலம் பேரளவில் அழிவு விளைத்தன, மக்களைத் திரளாகக் கொன்று குவித்தன. விளைவாக வங்காள அகதிகள் இந்தியாவுக்கு வெள்ளமாகப் பெருகி வந்தார்கள். 1971ம் ஆண்டின் முடிவு வாக்கில் இவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியை எட்டி விட்டது.

இவ்வளவு பெருந் திரளான மக்களுக்கு இடம் அளித்து அவர்களைப் பராமரிப்பது இந்தியாவின் பொருளாதாரத்தின் மீது பெருத்த சுமையாக அழுத்தியது. வங்காளத் தேசிய இயக்கத்துக்கு இந்திய அளித்த தார்மிக ஆதரவு பாக்கிஸ்தானில் வன்மம் நிறைந்த இந்தியா எதிர்ப்பு இயக்கத்தை மூட்டி விட்டது. பாக்கிஸ்தான் இராணுவ நிர்வாகம் இந்த இயக்கத்துக்கு ஊக்கம் அளித்தது. இவை எல்லாம் இந்திய-பாக்கிஸ்தான் உறவுகளை ஒரேயடியாகச் சிக்கல் ஆக்கின. சீன அரசாங்கம் பாக்கிஸ்தானின் ஆளும் வட்டாரங்களை வெளிப் படையாக ஆதரித்ததும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பாக்கிஸ்தானின் கொள்கைபால் மொத்தத்தில் நல்லெண்ணம் நிறைந்த போக்கைக் கடைப்பிடித்ததும் நிலைமையை இன்னும் சிக்கலாக்கின.

இந்தச் சூழலில் சோவியத் யூனியனின் உறுதியான, ஒத்திசைந்த போக்கு பெரும் பங்கு ஆற்றியது. இரத்தப் பெருக்கு நிறுத்தப்பட வேண்டும் என்றும் பிரச்சினைகளுக்குச் சமாதானமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் சோவியத் யூனியன் சந்தேகத்துக்கு இடமின்றி வாதாடியது. இந்தியாவின் வெளிநாட்டு, உள்நாட்டுக் கொள்கை நிலைமைகளது போக்கின் தர்க்கம் சோவியத் யூனியனோடு நெருங்கிய உறவு கொள்வதை அதற்கு அவசியம் ஆக்கிற்று. சமாதானத்தையும் நட்பையும் ஒத்துழைப்பையும் பற்றிய சோவியத்-இந்திய உடன்படிக்கை 1971, ஆகஸ்டு 9ந் தேதி கையெழுத்தாயிற்று. இரு நாடுகளதும் உறவுகளை இது புதிய மட்டத்துக்கு உயர்த்தியது. அதோடு இந்தியாவின் சர்வதேச நிலையையும் கணிசமாக உறுதிப்படுத்தியது.

இந்துஸ்தானத் துணைக்கண்டத்தில் நிகழ்ச்சிகள் மேற்கொண்டு சீர்கெடுவதைத் தடுக்க முயற்சிகள் செய்யப்பட்டன. ஆயினும் 1971, டிசம்பர் 3ந் தேதி இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையே போர் மூண்டது. விரிவான முனையில் 14 நாட்கள் நடந்த போர் நடவடிக்கைகளின் முடிவில் பாக்கிஸ்தான் படைகள் சரணடைந்தன.

இந்தியாவின் முன்முயற்சியால் டிசம்பர் 17ந் தேதி போர் நிறுத்தம் செய்யப்பட்டது.

பாக்கிஸ்தானின் தோல்வி, இராணுவ நிர்வாக ஆட்சி தகர்ந்தது, பாங்களா தேஷ் மக்கள் குடியரசின் உருவாக்கம், இந்தியாவின் இராணுவ வெற்றி—இந்த எல்லா நிகழ்ச்சிகளும் தெற்கு ஆசியாவில் சக்திகளின் ஒப்பு நிலையைப் பெரிதும் மாற்றிவிட்டன. இந்தியாவுக்கு உள்ளேயும் நிலைமையை இவை பாதித்தன. இந்திரா காந்தியின் மதிப்பு வெகுவாக உயர்வதற்கும் 1972ம் ஆண்டுத் தேர்தல்களில் தேசியக் காங்கிரஸ் வெற்றி அடைவதற்கும் உதவிய காரணிகளாக இவை பயன்பட்டன.

இந்திய-பாக்கிஸ்தான் போரின் விளைவுகளோடு தொடர்பு கொண்ட பிரச்சினைகளின் தீர்வு 1972ம் ஆண்டு முழுவதிலும் இந்தியாவினது அயல்நாட்டுக் கொள்கையில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றது. 1971, டிசம்பர் 6ந் தேதியே இந்தியா பாங்களா தேஷுக்கு அதிகாரபூர்வமான அங்கீகாரம் அளித்திருந்தது. 1972, மார்ச்சு மாதத்தில் அது பாங்களா தேஷுடன் நட்பு, ஒத்துழைப்பு உடன்படிக்கை செய்து கொண்டு அதற்குப் பொருளாதார உதவி வழங்கியது. 1972, மார்ச்சில் இந்தியப் படைகள் பாங்களா தேஷிலிருந்து வாபஸ் பெறப்பட்டன.

இந்திரா காந்திக்கும் பாக்கிஸ்தானின் புதிய குடியரசுத் தலைவர் ஜுல்பிகார் அலி புட்டோவுக்கும் சிம்லாவில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. இவற்றின் முடிவில் 1972, ஜூலை 3ந் தேதி இந்திய-பாக்கிஸ்தான் ஒப்பந்தம் நிறைவேறியது. விவாதத்துக்கு இடமான பிரச்சினைகளைச் சமாதான முறையில் வருங்காலத்தில் தீர்த்துக் கொள்வதற்கு இந்த ஒப்பந்தம் அடி கோலியது. போரின் தொடர்பாக எழுந்த அனேகப் பிரச்சினைகள் (காச்மீரத்தில் ஆதிக்கப் பிரதேசங்களின் எல்லை வரையறுப்பு, படைகள் வாபஸ் பெறப்படுதல், போர்க் கைதிகளின் பரிமாற்றம் முதலியன) இந்த ஒப்பந்தத்துக்கு இணங்க 1972 முடிவு வாக்கில் பெரும்பாலும் தீர்க்கப்பட்டன.

போரின் போது அமெரிக்க ஐக்கிய நாடுகள் பாக்கிஸ்தானுக்கு ஆதரவான நிலையை மேற்கொண்டதாலும் இந்தியாவுக்கு அமெரிக்க உதவி நிறுத்தி வைக்கப்பட்டதாலும் அமெரிக்க-இந்திய உறவுகள் பெரிதும் சீர்கேடு அடைந்தன. அதே சமயம், உலக அரசியலில் முற்போக்குச் சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய அரசுகளுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ளும் போக்கு வலுத்தது. வியத்நாம் ஜனநாயகக் குடியரசுக்கும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கும் இந்தியா அரசதந்திர அங்கீகாரம் அளித்ததும் தெற்கு வியத்நாம் குடியரசின் தாற்காலிகப் புரட்சி அரசாங்கத்தின் யோசனைகளை இந்திய அரசாங்

கம் அதிகாரபூர்வமாக ஆதரித்ததும் இந்தப் போக்கைக் காட்டிய நிகழ்ச்சிகளில் சில. வியத்நாமில் அமெரிக்காவின் கொள்கையையும், சைகோன் அரசாங்கத்தின் நிலையையும் அரபு நாடுகள் மீது இஸ்ரேலின் ஆக்கிரமிப்பையும் இந்தியா வன்மையாகக் கண்டனம் செய்தது.

1971ம் ஆண்டு நிறைவேறிய சோவியத்-இந்திய உடன்படிக்கை அரசியல், பொருளாதார, பண்பாட்டு ஒத்துழைப்பு மேலும் மேலும் வளர்வதற்கு வாய்ப்பு அளித்தது. விஞ்ஞான-தொழில்நுட்ப ஒத்துழைப்புத் துறையில் பெரிய சோவியத்-இந்திய ஒப்பந்தங்கள் 1972ல் செய்து கொள்ளப்பட்டன.

சர்வதேச இறுக்கம் தளர்வதன் திசையில் 1972ல் ஏற்பட்ட பொதுத் திருப்பம் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை மீதும் பாதிப்பு நிகழ்த்தியது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் லியனீத் இலியீச் பிரேழ்னிவ் சோவியத்-இந்திய நட்பின் முக்கியத்துவத்தையும் சர்வதேச உறவுகளின் தொகுப்பில் இந்தியாவின் இடத்தையும் பின்வருமாறு மதிப்பிட்டார்: ''ஆசியாவின் விதியை உருவாக்குவதில் மிக முக்கியமான இடம் சந்தேகமின்றி இந்தியாவுக்கு உரியது. சமாதானத்தையும் நட்பையும் ஒத்துழைப்பையும் பற்றிய உடன்படிக்கை இந்த நாட்டுடன் நம்மை இணைக்கிறது. நீடித்த கால நல்ல, நட்பார்ந்த உறவுகளின் நம்பகமான அஸ்திவாரமாக நாம் அதைக் கருதுகிறோம். உலக அரசியல் முழுவதிலும் இந்தியா மதிப்புள்ள பல பங்களிப்புகள் நிகழ்த்தி இருக்கிறது. அதன் பாத்திரம் மேலும் மேலும் உயரும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். சோவியத்-இந்திய நட்பு ஆண்டுக்கு ஆண்டு மேலும் வலுவடையும். இந்தத் திசையில் புதிய அடிவைப்புகள் காரணமாக வருங்காலம் குறிப்பிடத் தக்கதாக விளங்கும் என்பதிலும் இவற்றால் நம் இரு நாடுகளின் மக்களுக்கும் உலக சமாதானக் குறிக்கோளுக்கும் பெருத்த நன்மை விளையும் என்பதிலும் சந்தேகம் இல்லை.''*

---

* பிராவ்தா, 1973, செப்டெம்பர் 25.

70க்களின் நடுவில் இந்தியா

உள் வளர்ச்சி குறித்த முரண்பாடுகள்
கூர்மை அடைதல் (1973—1977)

1971லும் 1972லும் நடந்த தேர்தல்களில் முற்போக்குள்ள சமுதாய-பொருளாதார மாற்றங்களுக்கான செயல்திட்டத்துடன் கலந்து கொண்ட இந்தியத் தேசியக் காங்கிரசுக்குத் திரளான வாக்காளர்கள் அளித்த ஆதரவு, தேர்தல்களின் போது காங்கிரசுக்கும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் (இ. க. கட்சி) இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், கம்யூனிஸ்டுகளுக்கும் ஆளும் கட்சியின் இடது-நடுநிலைப் பிரிவுக்கும் இடையே குறித்த சில துறைகளில் ஒத்துழைப்பு ஆகியவை நாட்டின் அரசியல் வாழ்வில் இடப்புற முன்னேற்றம் மேற்கொண்டு நடப்பதற்கேற்ற எதார்த்த வாய்ப்பை ஏற்படுத்தின. ஆனால் இந்திரா காந்தியால் தேர்தல்களில் அறிவிக்கப்பட்ட இடது-நடுநிலைவாதச் செயல்திட்டத்தின் நிறைவேற்றம் இந்தியாவின் முதலாளித்துவ வளர்ச்சியில் முரண்பாடுகள் மேலும் ஆழமானதால் கடினம் ஆயிற்று. நாட்டில் வளர்ந்து வந்த சமுதாய-அரசியல் நெருக்கடியை 1971லும் 1972லும் நடந்த தேர்தல்களில் காங்கிரஸ் பெற்ற வெற்றி அகற்றவில்லை. மாறாக, ''நேருவின் போக்கினது'' பயனுள்ள அம்சங்களைக் காப்பாற்றி வைத்திருப்பதற்கான போராட்டத்தில் புதிய கட்டத்தை அது தோற்றுவித்தது.

70க்களின் நடுவில் பொருளாதார நிலைமை

முதலாளித்துவப் பாதையில் இந்தியாவின் வளர்ச்சி குறித்த முரண்பாடுகள் நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார இடர்களில் முதன்மையாக வெளிப்பட்டன.

சுதந்திரம் பெற்றதற்குப் பிந்திய ஆண்டுகளில் இந்தியா பொருளாதார வளர்ச்சியில் ஓரளவு வெற்றிகள் அடைந்திருந்தது. தொழில் உற்பத்தியின் மொத்த அளவு 70க்களின் நடு வாக்கில் நான்கு மடங்குக்கும் மேல் அதிகரித்திருந்தது. சுரங்க, பொருள்

பண்பாட்டுத் தொழில்களின் புதிய கிளைகள், உலோக வார்ப்பும் கனரக இயந்திர நிர்மாணமும் உட்பட, அரசினர் துறையினதும் தனியார் துறையினதும் வரம்புகளுக்குள் அமைக்கப்பட்டன. ஆற்றல் வளம் அதிகரித்தது: எடுக்கப்பட்ட நிலக்கரியின் அளவு 2.3 மடங்கும் பெட்ரோலியத்தின் அளவு 25 மடங்குக்கு மேலும் பெட்ரோலியப் பண்டங்களின் அளவு 85 மடங்கும் மின்னுற்றல் அளவு 10 மடங்கும் அதிகரித்தன. விவசாயத்தின் முதலாளித்துவத் துறை இயந்திரமயமும் இரசாயனமயமும் ஆக்கப்படத் தொடங்கியது இந்தியாவில் தொழில் புரட்சி புதிய கட்டத்தில் அடி வைத்து விட்டதைக் காட்டியது.

ஆயினும், காலனி ஆட்சியிடமிருந்து வாரிசுரிமையாகப் பெற்ற பொருளாதாரச் சட்டகத்தை மாற்றி அமைப்பதில் கணிசமான முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் முதலாளித்துவப் பாதையில் வளர்ச்சி பெறுவதில் உள்ள இடர்கள் 60க்களின் நடு முதல் நாளுக்கு நாள் அதிகக் கண்கூடாக வெளிப்படலாயின. பொருளாதார வளர்ச்சியின் வேகம் மட்டுப்பட்டதில் இந்த உண்மை முதன்மையாகப் புலனுயிற்று. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழிற் பொருள்களின் உற்பத்தியில் ஆண்டுதோறும் சராசரி அதிகரிப்பு 6.5 சதவிகிதமாகவும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 7.3 சதவிகிதமாகவும் மூன்ருவதில் 7.8 சதவிகிதமாகவும் இருந்தது என்ருல் நான்காவதில் (1969/70—1973/74) 3.8 சதவிகிதமாக மட்டுமே இருந்தது (1937-46ல் 0.6 சதவிகிதம்). திட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்த அதிகரிப்போ ஆண்டுக்கு 8—10 சதவிகிதம். 70க்களின் முற்பாதியில் தொழில் உற்பத்தி அதிகரிப்பின் வேகம் தொடர்ந்து குறைந்து கொண்டு போயிற்று: 1971ல் 3.6 சதவிகிதம், 1972ல் 2.9 சதவிகிதம், 1973ல் 2.5 சதவிகிதம். அடுத்த இரண்டு ஆண்டுகளில், 1974லும் 1975லும் தொழில் உற்பத்தி வளர்ச்சி எதார்த்தத்தில் சுழி ஆகிவிட்டது.

இந்தியத் தொழில் வளர்ச்சியில் தேக்கம் ஏற்பட்டதற்கு மிக முக்கியமான காரணம் விவசாயத்தின் பின்தங்கிய நிலை அப்படியே இருந்தது ஆகும். சுதந்திரத்துக்குப் பிந்திய ஆண்டுகளில் விவசாய உற்பத்தி ஓரளவு (விரிவான முறையிலும் ஆழமான முறையிலும்) வளர்ச்சி அடைந்தது. விளைச்சலின் மொத்த அளவு இரு மடங்குக்கும் மேல் அதிகரித்தது. பயிர் நிலப் பகுதிகளின் பரப்பு 30 சதவிகிதமும் பாசன வசதி பெற்ற நிலங்களின் பரப்பு இரு மடங்கும் முக்கியப் பயிர்களின் சராசரி விளைச்சல் திறன் 40 சதவிகிதமும் அதிகமாயின. ஆனல் ''பசுமைப் புரட்சி'' நடந்த காலப் பகுதியில், 60க்களின் நடு முதல், விளைச்சலுடைய வளர்ச்சியின் அடித்தளம் மிகவும்

குறுகியதாக இருந்தது. அதன் பரப்பு மொத்தப் பயிர்நிலங்களில் 20 சதவிகிதத்துக்கு மேல் போகவில்லை. இவை பெரும்பாலும் பணக்கார விவசாயிகளுடையவும் நிலப்பிரபுக்களுடையவும் நிலங்கள். 70க்களின் தொடக்க வாக்கில் நாட்டின் மொத்தப் பயிர்நிலப் பரப்புக்களில் பாதிக்குக் குறையாமல் இவர்கள் தங்கள் கைகளில் குவித்துக் கொண்டார்கள். நிலப்பிரபுக்களதும் பணக்கார விவசாயிகளதும் பண்ணைகளில் பயிர்த் தொழில் முன்போலவே மரபு வழி வந்த வேளாண்மைக் கருவிகளைக் கொண்டே நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. ''பசுமைப் புரட்சி'' 70க்களின் நடுவில் வட மேற்கு இந்தியாவின் மிக வளர்ச்சி பெற்ற பிரதேசங்களிலும் (பஞ்சாப், ஹரியாணா, மேற்கு உத்தரப் பிரதேசம்) நாட்டின் மேற்கு, தெற்கு மாநிலங்களில் ஒரு சில மாவட்டங்களிலும் மட்டுமே பரவியது.

விவசாயிகளுடைய பண்ணைகளில் மிகப் பெரும்பாலானவற்றுக்கு (சுமார் 70 சதவிகிதம்) குறைந்த நிலமுள்ள ஏழைகளும் அரைப் பாட்டாளிகளும் உடைமையாளர்களாக இருந்தார்கள். பயிர் நிலங்களில் கிட்டத்தட்டப் பாதியில் விளைச்சல் தேக்க நிலையில் இருந்தது. ''ஆதாயமற்ற'' இந்த நிலங்களின் உடைமையாளர்களோ, ஓட்டாண்டிகளும் பாட்டாளிகளுமாக மாறுவதற்குரிய வெவ்வேறு கட்டங்களில் இருந்தார்கள்.

விவசாய விளைச்சலிலும் தொழிற் பொருள்களின் உற்பத்தியிலும் இந்தியாவால் பெறப்பட்ட வளர்ச்சி வேகத்தால் மக்கள் தொகை அதிகரிப்புக்கு (ஆண்டுதோறும் சராசரி 2.5 சதவிகிதம்) ஈடு கட்ட அனேகமாக முடியவில்லை. எனவே, 1950—1971ல் மக்களின் நபர் வாரி வருமானம் ஆண்டுக்கு 1.5 சதவிகிதமே அதிகரித்தது. 1972—1975லோ, இடையருது குறைந்து கொண்டு போயிற்று. 1976—1977ல் தான் அது மீண்டும் உயர்ந்தது.

அதிகார பூர்வமான புள்ளி விவரங்களின் படி, 70க்களின் துவக்கத்தில் நாட்டுப்புற மக்களில் 40 சதவிகிதம் பெயரும் நகர மக்களில் 50 சதவிகிதம் பெயரும் ''வறுமை மட்டத்துக்குக்'' கீழ் வாழ்ந்தார்கள், அதாவது, சொந்தத் தேவைகளுக்காக மாதத்துக்கு 20 ரூபாய்க்கு மேற்படாமல் செலவிட்டார்கள் (1961ம் ஆண்டு விலை வாசிப்படி). ஒரு புறம் இவ்வளவு பெரிய வறுமைக் கடல் இருந்த தோடு மறு புறம் உடைமை ஏற்றத்தாழ்வு மேற்கொண்டு அதிகரித்தது, உடைமையாளி வர்க்கங்களின் சொந்தத் தேவைகள், இந்தியப் பத்திரிகைகளின் கருத்துப் படி, ''வெட்கக்கேடான'' முறையில் அதிகரித்தன. முதலாளித்துவ வளர்ச்சியின் இந்த ஏற்றத்தாழ்வுகள் இந்தியாவின் பெரிய நகரங்களில், சிறப்பாக பம்பாயில், போல அவ்வளவு கண்கூடாக வேறு எங்கும் வெளிப்படவில்லை. இங்கே

அழுக்குச் சேரிகள் அதிகரித்த அதே சமயத்தில் ஆடம்பரமான ஓட்டல்களும் புதுப் பணக்காரர்களுக்கான பல மாடிக் கட்டிடங்களும் கட்டப்பட்டன.

இந்திய மக்களின் பெரும் பகுதியினர் மிக மிகத் தாழ்ந்த வாங்கும் திறன் கொண்டிருந்தது, இந்தியப் பொருளாதாரத்தின் முக்கியத் துறைகளில் தொழில்நுட்பப் புனரமைப்புக்கான வாய்ப்புக்கள் அளவறுத்தவையாகவும் அதன் வேகம் குறைவாகவும் இருந்தது, கனியத் தொழிலிலும் பொருள் பண்பாட்டுத் தொழிலிலும் இயந்திரத் தொழிற்சாலைக் கட்டத்துக்கு மாறுவது பொருளாதாரத்தில் இன்னும் முற்றுப்பெறுதிருந்தது, இந்தியத் தொழிற் பொருள்களின் கணிசமான பகுதிக்கு உலகச் சந்தையில் போட்டியிடும் திறன் தாழ்வாக இருந்தது—இந்த எல்லாக் காரணங்களாலும் இந்தியாவின் தொழில் துறைக்கு மிகவும் குறுகிய சந்தையே கிடைக்க முடிந்தது. தொழில் திறன்கள் கணிசமான அளவு பயன்படாதிருப்பது இந்தியத் தொழில் துறையின் முக்கியமான கீளைகளுக்கு இயல்பான நிகழ்ச்சி ஆகி விட்டது.

இந்தியப் பொருளாதாரத்தின் தகவுப் பொருத்தமும் முழு இணைவும் இல்லாத வளர்ச்சியின் சிக்கலே நெருக்கடி நிகழ்ச்சிகள் மேலும் தீவிரமாக்கின. இந்திய வர்த்தக-தொழில் முதலாளி வர்க்கத்தின் வெவ்வேறு வட்டாரங்களுக்கும் குழுக்களுக்கும் இடையே முரண்பாடுகள் வலுத்தன.

இந்தியாவின் தொழில் பெருக்கத்தில் அரசினர் துறையின் தலைமைப் பாத்திரம் 70க்களின் நடு வாக்கில் முடிவாக நிச்சயமாயிற்று. பொருளாதார வளர்ச்சியில் அரசின் பங்கு 1950/51ல் 3 சதவிகிதமாக இருந்தது. 1971/72ல் 48 சதவிகிதமாக உயர்ந்தது. அரசினர் துறையில் முதலீடுகள் தனியார் முதலாளித்துவ முதலீடுகளுடன் ஒப்பு நோக்கில் அவற்றை முந்தும் வேகத்தில் வளர்ச்சி அடைந்தன. அரசினர் துறைத் தொழில் நிலையங்களில் (அடிப்படைக் கட்டுமானத் தொகுப்பு உட்பட) மொத்த முதலீடுகளின் மதிப்பு 70க்களின் தொடக்கத்தில் 22 ஆயிரங்கோடி ரூபாயாகவும் தனியார் துறை நிலையங்களில் 13 ஆயிரங்கோடி ரூபாயாகவும் இருந்தது.

பொருளியல் உற்பத்தியின் சில கிளைகளில் அரசினர் துறை நிர்ணயகரமான பங்கு ஆற்றத் தொடங்கியது. அரசினர் தொழில் நிலையங்கள் 85 சதவிகிதம் வார்ப்பிரும்பும் 48 சதவிகிதம் எஃகும் தயாரித்தன, 95 சதவிகிதம் பெட்ரோலியம் எடுத்தன, பெட்ரோலியப் பண்டங்கள் தயாரித்தன, 80 சதவிகிதம் மின்னுற்றல் உற்பத்தி செய்தன, 50 சதவிகிதம் இரசாயன உரங்கள் உற்பத்தி செய்தன.

அடிப்படைக் கட்டுமானத் தொகுப்பிலும் அரசின் பாத்திரம்

கணிசமானது: இருப்புப்பாதைகளும் சாலைகளும், கடல் துறைமுகங்களும், விமானப் போக்குவரத்தும், தகவல் தொடர்பும், பெரிய பாசன, மின்னுற்றல் கட்டுமானங்களும் அரசினுடையவை.

நாணயச் செலாவணித் துறையில் அரசின் நிலைகளும் இவ்வளவே முக்கியமானவை: வங்கிச் சேமிப்புக்களில் அரசின் பங்கு 87 சத விகிதத்துக்கும் இறக்குமதி வியாபாரத்தில் 70 சதவிகிதத்துக்கும் ஏற்றுமதி வியாபாரத்தில் 30 சதவிகிதத்துக்கும் ஒப்பானது.

ஆயினும் அரசினர் துறை தேசியப் பொருளாதாரத்தில் பிரதான இடத்தை இன்னும் பெறவில்லை. அரசினர் துறையின் ஒப்பு நிலை பொருள் பண்பாட்டுத் தொழிலில் கிட்டத்தட்ட 30 சதவிகிதத்தையும் மொத்த தேசிய உற்பத்தியில் 16 சதவிகிதத்தையும் எட்டியது. தொழில் உற்பத்தியின் 8 சதவிகிதமும் விவசாய உற்பத்தியின் 0.2 சதவிகிதமும் தான் 70க்களின் தொடக்கத்தில் அரசினர் துறையின் பங்காக இருந்தன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அரசினர் துறையின் பாத்திரமும் அரசுக் கட்டுப்பாட்டின் வெவ்வேறு வடிவங்களும் இடையறாது அதிகரித்ததன் விளைவாகத் தனியார் முதலாளித்துவத் தொழிலதிபர் குழு அரசு முதலாளித்துவத்தை வர வரக் கடுமையாகத் தாக்கி விமர்சிக்கலாயிற்று. இந்தத் தாக்குதலுக்குக் காரணம் பொருளாதார நிகழ்ச்சிகளின் சேர்க்கை பற்றிய எண்ணங்களும் மூலப் பொருள்களுக்கும் மூலதனங்களுக்கும் தயாரான பொருள்களுக்கும் சந்தையில் நேர்ந்த மோதல்களும் மட்டும் அல்ல, விறல் மிக்க அரசினர் துறை முதலாளித்துவம் அற்ற வளர்ச்சியின் பக்கம் திருப்பத்துக்குப் பொருளாதார அடித்தளமாக வருங்காலத்தில் மாறக் கூடும் என்ற அச்சமும் ஆகும். அதே சமயம், அரசினர் துறையின் பாலும் மொத்தத்தில் அரசு முதலாளித்துவத்தின் பாலும் தேசிய முதலாளி வர்க்கத்தின் போக்கு இருவகைத் தன்மை கொண்டிருந்தது. அரசினர் துறையைச் சார்ந்தும் அரசின் கட்டுப்படுத்தும் பொருளாதார விசை அமைப்பையும் உள்நாட்டுத் தொழிலுக்குச் சலுகை அளிக்கும் காப்புக் கொள்கையையும் பயன்படுத்தியும் தேசிய முதலாளி வர்க்கம் சுதந்திரத்துக்குப் பிந்திய 30 ஆண்டுகளில் தனது செயல் வட்டத்தைக் கணிசமாக விரிவாக்குவதில் வெற்றி பெற்றிருந்தது. இந்தியாவில் மூலதனம் குவிவதையும் மையப்படுவதையும் அரசினர் துறை தடை செய்யவில்லை. ஏகபோகங்களின் செயல்களைக் குறுக்கும் பொருட்டு 60க்களிலும் 70க்களின் தொடக்கத்திலும் எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பயனற்றவை ஆயின. 70க்களின் தொடக்கத்தில் தனியார் கூட்டு மூலதனக் கம்பெனிகளின் மொத்தச் சொத்துக்களில் 75 சதவிகிதம் வரை 133 மிகப் பெரிய இந்திய,

அயல் நாட்டுக் குழுக்களின் பங்குக்கு வந்தன. 100 கோடி ரூபாய்க் கும் மேல் சொத்துக்கள் வைத்திருந்த மிகப் பெரிய ஏகபோகக் குழுக் களின் எண்ணிக்கை எட்டு. இவற்றில் பிர்லா குழுவினிடம் 1060 கோடி, டாட்டா குழுவினிடம் 970 கோடி, மபத்லால் குழுவினிடம் 690 கோடி ரூபாய் மதிப்புக்குச் சொத்துக்கள் இருந்தன.

பெரு முதலாளி வர்க்கம், அதன் ஏகபோகத் தலைமைக் குழு ஆகிய வற்றின் நிலைகள் வலுவடைந்ததோடு கூடவே சிறு அளவு முதலாளித் துவத் தொழில் முயற்சிகளும் தொடர்ந்து அதிகரித்து வந்தன. முதலாளித்துவத்தின் வளர்ச்சி நூருயிரக் கணக்கான சிறு தொழிற் சாலைகளும் அரைக் கைத் தொழில் வகைப்பட்ட தொழில் நிலையங் களும் அமைக்கப்படுவதில் விரிவாக வெளிப்பட்டது. எனினும், இயந் திரத் தொழிற்சாலைகளைக் காட்டிலும் அதிகத் தொழிலாளர்கள் வேலை செய்து வந்த சிறு அளவு உற்பத்தி, நவீன முதலாளித்துவ உற் பத்தியால் படிப்படியாக நெருக்கித் தள்ளப்பட்டது. தொழில் துறை யில் பெறப்பட்ட தேசிய வருமானத்தில் சிறு அளவுத் தொழிலின் பங்கு 1950/51ல் 62 சதவிகிதமாக இருந்தது 1972/73ல் 34.6 சதவிகிதமாகக் குறைந்து விட்டது. பேரளவு உற்பத்தி மீது சிறு அளவு உற்பத்தியின் சார்பும் அவற்றுக்கு இடையே முரண்பாடுகளும் பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளில் அதிகரித்தன.

இந்தியாவின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட இந்தச் சிக்கலான, முரண்பாடுகள் நிறைந்த நிகழ்முறைகள் உள்நாட்டு அரசியல் நிலையைப் பாதித்தன.

1973—1975ல் உள்நாட்டு அரசியல் நிலைமை

நாட்டில் வளர்ச்சி அடைந்து வந்த பணவீக்க நிகழ்முறையின் விளைவாக மொத்த விலைகளும் சில்லறை விலைகளும் 70க்களின் முற் பாதி முழுவதிலும் இடைவிடாமல் அதிகரித்துக் கொண்டு போயின. 1974ம் ஆண்டு ஒன்றில் மட்டும் சில்லறை விலைகள் 30 சதவிகிதம் உயர்ந்தன. விரிவான உழைப்பாளி வெகுஜனங்களை இந்த விலை உயர்வு கடுமையாகத் தாக்கியது. உழைப்பாளிகளின் வேலைநிறுத்தப் போராட்டம் விரிவாயிற்று. வேலைநிறுத்தங்களின் காரணமாக இழக்கப்பட்ட வேலை நாட்களின் எண்ணிக்கை 1971ல் 150 லட்சம் ஆள்-நாட்களாக இருந்தது 1974ல் 310 லட்சம் வரை அதிகரித்தது. 1973—1974ல் நடந்த ஆகப் பெரிய தொழிலாளி வர்க்கப் போராட் டங்களாவன: ரெயில்வே எஞ்சின் டிரைவர்களின் அனைத்து இந்திய வேலைநிறுத்தம்; பம்பாய் நெசவாலைத் தொழிலாளர்களின் 40 நாள் வேலைநிறுத்தம்; மேற்கு வங்காளத்தில் சணல் தொழிற்சாலைத் தொழி

லாளர்களின் 33 நாள் வேலைநிறுத்தம்; கான்பூர், தமிழ்நாடு நெச வாலைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்கள் ஆகியவை. வெவ் வேறு தொழிற்சங்கக் கூட்டுகளுக்கிடையே செயல் ஒற்றுமை பெறு வதற்கான முயற்சி வேலைநிறுத்தப் போராட்டத்தின் போது வலுவடைந்தது. 1972, மே மாதம் இந்தியத் தொழிற்சங்கங்களின் தேசியக் கவுன்சில் உருவானது இதற்கு வாய்ப்பு அளித்தது. அனைத்து இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ், இந்திய தேசியத் தொழிற் சங்கக் கவுன்சில், ஹிந்த் மஸ்தூர் சபா என்னும் நாட்டின் ஆகப் பெரிய தொழிற்சங்க மையங்கள் இதில் சேர்ந்தன. இ. க. கட்சியினதும் இ. க. கட்சி (மா)வினதும் செல்வாக்கில் இருந்த தொழிற்சங்க மையங்களுக்கிடையே தொடர்ந்து நடந்த போராட்டம் தொழிற் சங்க இயக்கத்தில் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்குப் பெருத்த இடையூறாக இருந்தது.

தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தோடு கூடவே உழைக் கும் விவசாயிகளதும் விவசாயத் தொழிலாளிகளதும் நிறுவனங் களின் நடவடிக்கைகள் தீவிரம் ஆயின. முறையே இ. க. கட்சி, இ. க. கட்சி (மா) இரண்டினதும் செல்வாக்கில் இருந்தவையும் இணையாகச் செயலாற்றியவையும் ஆன அனைத்து இந்திய விவசாயிகள் சங்கங் கள் (கிஸான் சபாக்கள்) 1972—1975ல் பல அனைத்து இந்திய, வட் டார இயக்கங்களை நடத்தின. நிலவுடைமைக்கான உச்ச வரம்பு குறித்த சட்டங்களைச் செயல்படுத்துவது, குத்தகைக்காரர்களின் நலன்களைப் பாதுகாப்பது, விவசாயிகள் வாங்கும் தொழில் பொருள் களின் விலைகளைக் குறைப்பது, விவசாய விளை பொருள்களின் வாங் கும் விலைகளை உயர்த்துவது முதலியவை இந்த இயக்கங்களின் நோக் கங்களாக இருந்தன. விவசாய நிறுவனங்களின் உறுப்பினர் தொகை குறைவாய் இருந்ததும் வெகுஜனப் போராட்டம் நடத்துவதில் தொடர்பின்மை நிலவியதும் அவற்றின் பெருத்த பலவீனமாக விளங் கின.

கிஸான் சபாவின் 21வது அனைத்துத் தேசிய மகாநாடு 1973, செப்டெம்பர் மாதம் பட்டிண்டா நகரில் (பஞ்சாப்) நடைபெற்றது. விவசாயிகள் போராட்டத்தின் செயல்திட்டம் இதில் வகுக்கப்பட் டது.

அனைத்து இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கமும் இதே ஆண்டுகளில் விரிவாகச் செயல் தொடங்கியது. ''தீண்டத்தகாத'' பண்ணைத் தொழிலாளிகள் இதன் பெரும்பாலான உறுப்பினர்கள். கூலி உயர்வுக்காகப் போராடுவது, நிலத்துக்காகவும் நிலச் சீர் திருத்தத்துக்காகவும் போராடுவது, தீண்டத்தகாதவர்கள் சாதி வேறுபாட்டுக்கு உட்படுத்தப்படுவதை எதிர்த்துப் போராடுவது

ஆகியவை சங்கத்தின் நடவடிக்கைகளது முக்கியப் போக்குகளாக இருந்தன. 1974ல் தெனாலியில் (ஆந்திரப் பிரதேசம்) சங்கத்தின் மூன்றாவது மகாநாடு நடந்தது.

தொழிற்சங்க, விவசாயிகள், இளைஞர்கள் நிறுவனங்களதும் பிற வெகுஜன நிறுவனங்களுடையவும் ஒத்துழைப்புடன் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி உழைப்பாளி மக்களின் பொருளாதார, அரசியல் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு 1972—1974ல் அனேக அனேத்துத் தேசிய வெகுஜன இயக்கங்கள் நடத்தியது.

1972, அக்டோபரில் அனேத்து இந்திய சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது. முற்போக்குப் பொருளாதாரக் கொள்கை செயல்படுத்தப்பட வேண்டும் என்ற கோஷங்களுடன் தாசீல் மட்டம் வரை நிர்வாக அலுவலகங்களின் மறியல் அப்போது ஒழுங்கமைக்கப்பட்டது. 1973, மார்ச்சு 27ந் தேதி நாடாளுமன்றத்துக்கு வெகுஜனப் பேரணி நடத்தப்பட்டது. ஐந்து லட்சம் பெயருக்கு மேல் இதில் கலந்து கொண்டார்கள். காங்கிரசின் தேர்தல் அறிக்கைச் செயல்திட்டத்தில் கண்ட முற்போக்குள்ள சமுதாய-பொருளாதார மாற்றங்கள் நிகழ்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய மகஜரில் 150 லட்சம் கையெழுத்துக்கள் திரட்டப்பட்டன.

கள்ள வியாபாரிகளுக்கும் உணவுப் பண்டங்களைப் பதுக்கியவர்களுக்கும் எதிராக வெகுஜனப் போராட்ட இயக்கங்களை இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி 1973லும் 1974லும் நடத்தியது.

நாடாளுமன்றத்திலும் மாநிலச் சட்ட மன்றங்களிலும் காங்கிரசை ஆதரிப்பது, தேர்தல்களில் அதனுடன் கூட்டு சேர்வது, அதே சமயம் அதன் கொள்கையில் 1967—1972ல் காணப்பட்ட இடதுசாரி-இடைநிலைவாத மாற்றத்தை விரிவாக்கும் நோக்கத்துடன் காங்கிரசைக் கட்டாயப்படுத்தும் சாதனமாக வெகுஜன நடவடிக்கைகளை மேற்கொள்வது என்ற அரசியல் கொள்கைப் போக்கை இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி கடைப்பிடித்தது.

வெகுஜனப் போராட்டத்தின் போது இடதுசாரிக் கட்சிகளின் ஒற்றுமையைப் பெற முயற்சி செய்யப்பட்டது. இ. க. கட்சி, இ. க. கட்சி (மா), சோஷலிஸ்டுக் கட்சி, சில வட்டார இடதுசாரிக் கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடைய கூட்டம் 1974, ஏப்ரலில் இந்த நோக்கத்துடன் கூட்டப்பட்டது. பொதுவான குறைந்தபட்சச் செயல்திட்டம் இந்தக் கூட்டத்தில் ஏற்கப்பட்டது. இடதுசாரிச் சக்திகளின் இந்த ஒற்றுமையின் துணையால் 1974, மே மாதத்தில் ரெயில்வேத் தொழிலாளர்களின் அனேத்து இந்திய வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடத்தப்பட முடிந்தது. இதில் 15 லட்சம் பெயர் கலந்து கொண்டார்கள்.

1975, ஜனவரி 27 முதல் பிப்ரவரி 2ந் தேதி முடிய விஜயவாடாவில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 10வது காங்கிரஸ் நடைபெற்றது. 9வது காங்கிரசுக்கு (1971) பிறகு கட்சி நடத்திய போராட்டத்தின் விளைவுகளை இது தொகுத்து உரைத்து, இடதுசாரி, ஜனநாயகச் சக்திகளது ஒன்றித்த கூட்டணியின் செயல்திட்டத்தைக் குறித்தது.

ஆனால் நாட்டில் உள்நாட்டு அரசியல் சூழ்நிலையில் மேற்கொண்டு ஏற்பட்ட நிகழ்ச்சிப் போக்கு இடதுசாரி, ஜனநாயகக் கட்சிகளின் ஒன்றிணைவுக்குத் தடை விளைத்தது.

பொருளாதார நிலைமை மோசமானதாலும் விரிவாகப் பரை சாற்றப்பட்ட பொருளாதார, சமுதாய மாற்றங்கள் குறித்த செயல் திட்டத்தைக் காங்கிரஸ் நிறைவேற்றுமையாலும் மக்களிடையே வெகுவாகப் பரவிய அதிருப்தியின் அடிப்படையில் காங்கிரசுக்கு எதிரான வெவ்வேறு தேசியவாதச் சிறு முதலாளி வர்க்க, முதலாளி வர்க்கக் கட்சிகளின் நடவடிக்கைகள் தீவிரமாயின.

வட்டாரத் தேசியவாத, பிரதேச உரிமைப் போக்குகள் வலுவடைந்ததற்கு எடுத்துக்காட்டாக இருந்தது 1972—1973ல் ஆந்திரப் பிரதேசத்தில் நடந்த இயக்கம். மாநிலத்திலிருந்து புதிய நிர்வாகப் பிரதேசம் பிரிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இது நடந்தது.

உத்தரப் பிரதேசம், ஒரிஸ்ஸா, இன்னும் மூன்று இராச்சியங்களும் யூனியன் பிரதேசங்களும் ஆகியவற்றின் சட்ட மன்றங்களுக்குத் தேர்தல்கள் 1974ம் ஆண்டுத் தொடக்கத்தில் நடந்தன. ஒன்றையொன்று ஆதரிப்பதாக மீண்டும் ஒப்பந்தம் செய்து கொண்ட காங்கிரசும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் இவற்றில் மீண்டும் வெற்றி பெற்றன. ஆயினும் எதிர்த் தரப்புக் கட்சிகள் கணிசமாக முன்னேறின.

அரசினர் துறையை மேற்கொண்டு வலுப்படுத்துவது என்ற ஆளும் கட்சியின் கொள்கைப் போக்கினாலும் தானிய வியாபாரத்தை அரசின் ஏகபோக உரிமை ஆக்குவதற்கு 1973—1974ல் செய்யப்பட்ட, வெற்றி பெறுத முயற்சியாலும் அதிருப்தி அடைந்த நகர, நாட்டுப்புற முதலாளி வர்க்கத்தின் கணிசமான பகுதியினர் காங்கிரசின் எதிர்த் தரப்பை ஆதரிக்கத் தொடங்கினர்கள். ஆதாயமற்ற சில நூறு நிலக்கரிச் சுரங்கங்களையும் நெசவாலைகளையும் இந்த ஆண்டுகளில் அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்திய அரசாங்கத்தின் செய்கை சில வட்டாரங்களுக்குக் கலவரம் ஊட்டியது.

இத்தகைய சூழ்நிலையில், பிரபல சமூகத் தலைவரும் காந்தியவாதியும் முன்னர் சோஷலிஸ்டுத் தலைவர்களில் ஒருவராக இருந்தவரும் ஆன ஜெயப்பிரகாஷ் நாராயண் தலைமையில் குஜராத்திலும் பீகாரி

லும் 1974ல் தொடங்கிய வெகுஜன இயக்கம் காங்கிரசுக்கு ஆழ்ந்த அபாயம் விளைத்தது. மையத்திலும் மாநிலங்களிலும் காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்ப்பதை நோக்கமாகக் கொண்டு ''சர்வாம்சப் புரட்சி'' நடத்த வேண்டும் என்ற கோஷத்துடன் இந்த இயக்கம் நடந்தது. குஜராத்தில் நிகழ்ந்த வெகுஜன ஒழுங்கீனங்களின் விளைவாகச் சட்ட மன்றம் கலைக்கப்பட்டுக் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. பீகாரில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வட்டார நிறுவனமும் பின்னர் காங்கிரசும் எடுத்துக் கொண்ட தீவிர நடவடிக்கைகளின் பயனாக அரசாங்கம் கவிழ்த்தப்படும் ஆபத்து விலக்கப்பட்டது.

அரசாங்கத்துக்கு எதிராக ஜெ. பி. நாராயணும் அவரை ஆதரித்த எதிர்த் தரப்புக் கட்சிகளும் நடத்திய வெகுஜன இயக்கத்தின் பின்னணியில் அதிதீவிர வலதுசாரி (ஆர். எஸ். எஸ்., ஆனந்த் மார்க்), இடதுசாரி (நக்சலைட்டுகள்) நிறுவனங்களும் குழுக்களும் தங்கள் நடவடிக்கைகளை ஊக்கத்துடன் நடத்தின. மத்திய போக்குவரத்து அமைச்சர் மிச்ரா 1975, ஜனவரி மாதம் பீகாரில் பயங்கரவாதிகளால் கொலை செய்யப்பட்டார். டில்லியில் உச்ச நீதிமன்ற நீதிபதி ஏ. என். ராய் தாக்கப்பட்டார்.

குஜராத்தில் மொரார்ஜி தேசாயின் தலைமையில் வெகுஜன இயக்கம் நடந்தது. தேசாய் எதிர்ப்பைக் காட்டுவதற்காக உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்தார். விளைவாக அந்த மாநிலத்தில் காங்கிரஸ் அரசாங்கம் அகற்றப்பட்டுக் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. 1975ல் குஜராத்தில் சட்ட மன்றத் தேர்தல் நடந்தது. ஜெயப்பிரகாஷின் யோசனைப்படி முக்கியமான எதிர்க் கட்சிகள் எல்லாவற்றையும் இணைத்து உருவாக்கப்பட்ட ''ஜனதா கூட்டணி'' வெற்றி அடைந்தது. ஒன்றித்த எதிர்க் கட்சிகள் காங்கிரஸ் ஆட்சிக்கு ஆழ்ந்த அபாயமாக விளங்குவதைக் குஜராத்துத் தேர்தல் காட்டியது.

ஜெயப்பிரகாஷுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு ஆதரவாகக் காங்கிரஸ் கட்சிக்கு உள்ளேயே இயக்கம் வலுத்தது. உதாரணமாக, ''இளந் துருக்கர்'' எனப்பட்டவர்களின் குழு இந்தப் போக்கை மேற்கொண்டிருந்தது. சந்திர சேகர், மோகன் தாரியா முதலிய இடதுசாரிக் காங்கிரஸ்காரர்கள் அடங்கிய இந்தக் குழு 1975ல் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகியது.

1971 தேர்தல்களில் ராய் பரேலி தொகுதியில் இந்திரா காந்திக்கு எதிராக நின்ற வேட்பாளர் தேர்தல் பிரசாரத்தின் போது அவர் தம் அதிகாரத்தைத் தவறுகப் பயன்படுத்தினர் என்று குற்றம் சாட்டித் தொடர்ந்திருந்த வழக்கில் அலாகபாது உயர் நீதி மன்றம் ஜூன் மாதம் தீர்ப்பு வழங்கிய பின் நாட்டில் இருந்த காங்கிரஸ் எதிர்ப்புச்

சக்திகள் பிரதமர் இந்திரா காந்திக்கு எதிராக வெளிப்படையான தாக்குதல் தொடுத்தன. இந்திரா காந்தி நாடாளுமன்றத்தில் தம் உறுப்பினர் இடத்தையும் (அதன் விளைவாகப் பிரதமர் பதவியையும்) இழந்து விட்டதாகவும் தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளை வகிப் பதிலிருந்து அவர் ஆறு ஆண்டுகளுக்குத் தடை செய்யப்பட்டிருப்ப தாகவும் நீதி மன்றத் தீர்ப்பில் கூறப்பட்டது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக இந்திரா காந்தி உச்ச நீதி மன்றத்தில் அப்பீல் செய்து கொண்டார். ஆனால் முதலில் உச்ச நீதி மன்றம் அலாகபாது நீதி மன்றத் தீர்ப்பின் நிறைவேற்றத்தை ஒத்திப் போட்டு இரு பொருள் படும்படியான தீர்ப்பு வழங்கியது.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (மா) உள்ளிட்ட பிரதான எதிர்க் கட்சிகள் இந்திரா காந்தி பதவியிலிருந்து விலக வேண்டும் என்று கோரின. நாடு முழுவதிலும் சாத்துவிகச் சட்டமறுப்பு இயக்கம் நடத்த முடிவு செய்யப்பட்டது. அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியாதிருக் கும்படி சேனையையும் போலீசையும் ஜெயப்பிரகாஷ் கேட்டுக்கொண் டார்.

உள்நாட்டு அரசியல் போக்கில் திருப்பம்: நெருக்கடி நிலையும் 1977 தேர்தல்களும்

எதிர்க் கட்சிகளின் செயல்களுக்கு விடையாக ஜூன் 26ந் தேதி நாட்டில் நெருக்கடி நிலை அமுலாக்கப்பட்டது. இந்தப் பிரகடனத் தில் கையெழுத்திட்டவர் வி. வி. கிரியின் பதவிக் காலம் முடிந்த பின் 1974, ஆகஸ்டில் இந்தியக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டிருந்த பக்ருதீன் அலி அகமது. எதிர்க் கட்சிகளின் 600க்கு மேற்பட்ட தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். எதிர்க் கட்சி களையும் ஜெயப்பிரகாஷ் நாராயணின் இயக்கத்தையும் சேர்ந்த 30,000க்கும் அதிகமான ஊக்கமுள்ள உறுப்பினர்கள் 1975ல் சிறைப் படுத்தப்பட்டார்கள். 26 அதிதீவிரவாத நிறுவனங்களின் (ஆர். எஸ். எஸ்., ஆனந்த் மார்க், நக்சலைட்டுகள் குழு முதலியன) நடவடிக்கை கள் ஜூலை 4ந் தேதி தடை செய்யப்பட்டன.

வானொலி வாயிலாக மக்களுக்கு விடுத்த செய்தியில் இந்திரா காந்தி முற்போக்குள்ள சமுதாய-பொருளாதாரச் சீர்திருத்தங்கள் குறித்த 20 அம்சங்கள் அடங்கிய செயல்திட்டத்தை அறிவித்தார். நிலச் சீர்திருத்தத்தின் செயல்பாட்டை விரைவுபடுத்துவது, விவ சாயத் தொழிலாளர்களின் நிலைமையை மேம்படுத்துவது, கடன் தளையை அகற்றுவது முதலியன இந்தச் செயல்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக இருந்தன.

எதிர்த் தரப்புக்கு இந்திரா காந்தி கொடுத்த அடி பொருளா தார நிகழ்ச்சிச் சேர்க்கை சீர்பட்டுக் கொண்டிருந்த பின்னணியில் தரப்பட்டது. 1974-75 விவசாய ஆண்டின் ரெக்கார்டு விளைச்சலுக்கு (12 கோடி டன் தானியங்கள்) பின் 1974 இலையுதிர் காலம் முதல் பணவீக்கத்தை நிறுத்தவும் 1976 வசந்த காலம் வரை மொத்த விலைகளையும் சில்லறை விலைகளையும் கட்டுக்குள் வைத்திருக்கவும் அரசாங்கத்துக்கு இயன்றது.

வலப்புறமிருந்து வந்த அபாயத்துக்கு எதிரான நடவடிக்கை யாகவே நெருக்கடி நிலை ஆளும் கட்சித் தலைமையால் பிரகடனம் செய்யப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி அரசாங்கத்தின் இந்தச் செயலுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்து 20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் காங்கிரசுடன் துடியாக ஒத் துழைக்கத் தொடங்கியது.

அரசாங்கப் புள்ளி விவரங்களின் படி, 25 லட்சம் ஏக்கருக்கு மேல் ''உபரி நிலங்கள்'' பறிமுதல் செய்யப்பட்டன, நிலம் இல்லாத வர்களும் குறைந்த நிலம் உள்ளவர்களும் ஆன விவசாயிகளுக்கு ஏறத்தாழ 15 லட்சம் ஏக்கர் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. சுமார் 70 லட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கு இருப்பிடங்கள் கட்டிக்கொள்வதற்கு நிலம் வழங்கப்பட்டது. விவசாயக் கடன் களுக்குத் தவணை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும் கடனைத் தீர்ப் பதற்காக வேலை செய்வது ரத்து செய்யப்பட்டதாகவும் குடியரசுத் தலைவரின் ஆணைப்படி அறிவிக்கப்பட்டது.

கிஸான் சபாவும் விவசாயத் தொழிலாளர் சங்கமும் 20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 1975—1976ல் பாதயாத்தி ரைகள் நடத்தின. அறிவிக்கப்பட்ட நடவடிக்கைகளால் நாட்டுப்புற ஏழைகளில் பெரும்பான்மையினரின் நிலைமை பாதிக்கப்படவில்லை என்பது இந்த யாத்திரைகளின் போது, தெரிய வந்தது.

நெருக்கடி நிலையின் தீய விளைவுகள் நாளடைவில் வெளிப் படலாயின. ''தொழில் துறையில் அமைதி'' பற்றிய தீர்மானத்தைத் தொழிலதிபர்கள் நிறைவேற்றவில்லை. கதவடைப்புகளும் சம்பளக் குறைப்பும் வழக்கமான நிகழ்ச்சிகள் ஆகி விட்டன. அதே சமயம் வேலைநிறுத்தங்கள் தடை செய்யப்பட்டிருந்தன, தொழிலாளி வர்க் கத்தின் போராட்டம் கொடுமையாக நசுக்கப்பட்டது. கட்டாயச் சேமிப்புத் திட்டம் தொழிலாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் சிறப் பாக அதிருப்தி உண்டாக்கிற்று.

தணிக்கை முறை புகுத்தப்பட்டது. பத்திரிகைச் சுதந்திரம், சட்ட மன்ற நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் உட்பட, குறுக்கப் பட்டது. முற்போக்கு ஆங்கில மொழிச் சஞ்சிகைகளான மெயின்ஸ்

டிரீம், செமினர் என்பவை 1976ம் ஆண்டின் பிற்பாதியில் மூடப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 42 வது திருத்தம் இந்தியாவை ''சோஷலிஸக் குடியரசு'' என்று அறிவித்தாலும் சட்ட மன்றத்துக்கும் நீதி மன்றத்துக்கும் கேடு செய்து நிர்வாக அதிகாரத்தை வலுப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது.

இந்தியாவின் உச்ச நீதி மன்றம் இந்திரா காந்தி வழக்கில் அலாகாபாது நீதி மன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்து விட்டது. நாடாளுமன்றப் பெரும்பான்மையோ, பொதுத் தேர்தல்களை ஓர் ஆண்டுக்குத் தள்ளி வைக்கும் தீர்மானங்களை 1975லும் 1976லுமாக இரு முறை நிறைவேற்றியது. அரசாங்கத்திற்குள்ளும் ஆளும் கட்சியின் தலைமையிலும் சர்வாதிகாரப் போக்குகள் வலுத்தன. இந்தியாவைக் குடியரசுத் தலைவர் ஆட்சி வடிவத்துக்கு மாற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

தற்காப்பு அமைச்சர் பன்சிலால், பிரதமரின் புதல்வர் சஞ்சய் காந்தி இருவரதும் தலைமையில் ''சட்டத்துக்குப் புறம்பான மையம்'' எனப்பட்டது ஆட்சி அமைப்பில் 1975—1976ன் போது படிப்படியாக உருவாயிற்று. அரசாங்கத்திலோ, காங்கிரஸ் தலைமையிலோ உறுப்பு வகிக்காத சஞ்சய் காந்தி ஆளும் கட்சியின் இளைஞர் நிறுவனத்தினுடைய செயல்களைத் தனக்கு அடிப்படுத்திக் கொண்டார். நாட்டில் சஞ்சய் காந்தியின் சுற்றுப் பயணங்களின் போது அவருக்குக் காட்டப்பட்ட மரியாதை பிரதமர் பால் உள்ள விசுவாசத்தின் அளவுகோல் ஆகி விட்டது. குடும்பக் கட்டுப்பாட்டுக்கான கட்டாய அறுவை இயக்கத்தை இந்திய சமூகப் பிரதிநிதிகள் சஞ்சய் காந்தியின் பெயரோடு இணைத்தார்கள். சுமார் ஒரு கோடிப் பெயர் இந்த அறுவைக்கு உள்ளானார்கள். இவர்களில் பெரும்பாலோர் சிறு அலுவலர்களும் நகர, நாட்டுப்புற ஏழைகளும் முதன்மையாக முஸ்லிம்களும் தீண்டத்தகாதவர்களும் ஆவர்.

ஆளும் கட்சிக்குள் இடதுசாரி இடைநிலைவாதச் சக்திகளின் செல்வாக்கு, சிறப்பாக சோஷலிஸச் செயலுக்கான காங்கிரஸ் கருத்தரங்கு கலைக்கப்பட்ட பின்னர், பலவீனமாயிற்று. 1976, இலையுதிர் காலம் முதல் கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான பிரசார இயக்கத்தைக் காங்கிரஸ் தலைமைக் குழு தொடங்கியது. இரண்டு கட்சிகளுக்கும் இடையே உறவுகள் மோசமாயின.

நாடாளுமன்றத் தேர்தல்கள் நடக்கும் என்று 1977, ஜனவரி மாதம், ஓரளவு எதிர்பாரா விதமாக அறிவிக்கப்பட்டது. எதிர்க் கட்சியினர் சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் (பல எதிர்க் கட்சித் தலைவர்கள் 1976லேயே சிறைகளிலிருந்து வெளிவந்திருந்தார்கள்). தேர்தல்கள் நடத்துவது என்ற முடிவு உள், வெளி

நிலைமைகளின் காரணமாக எடுக்கப்பட்டது. 20 அம்சத் திட்டம் அமுலாக்கப்பட்டதால் ஏற்பட்ட நற்பயன்களையும் 1976ம் ஆண்டில் வாய்த்த பொருளாதார நிலைமைகளின் சாதகமான சேர்க்கையையும் பயன்படுத்திக் கொள்ளக் காங்கிரஸ் தலைமை முயன்றது போலும். இவை தவிர, பெரு வர்த்தக, தொழில் வட்டாரங்களின் நன்மைக்காக, பொருளாதாரத்தின் மீது அரசுக் கட்டுப்பாட்டைத் தளர்த்தும் கொள்கை 1973ல் முதல் ஒத்திசைந்த முறையில் கடைப் பிடிக்கப்பட்டதால் இந்த வட்டாரங்களின் ஆதரவையும் பயன் படுத்திக் கொள்ளலாம் எனக் காங்கிரஸ் தலைமை எண்ணியது.

ஆனல் நெருக்கடி நிலைமையின் பாதகமான அம்சங்கள் (வேலை நிறுத்த இயக்கமும் பத்திரிகைச் சுதந்திரமும் நசுக்கப்பட்டது, குடும்பக் கட்டுப்பாட்டுக்கான கட்டாய அறுவை முதலியன உட்பட) வாக்காளர்களின் ஒரு பகுதியினர் காங்கிரசிலிருந்து விலக வழி வகுத்தன. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கையும் ஆளும் கட்சியின் கொள்கைப் போக்கும் ஒன்றே என்று காட்டுவதற்கு முயன்ற வாறு காங்கிரஸ் எதிர்ப்புத் தேர்தல் கூட்டணி விரிவான பிரசார இயக்கம் நடத்தியது. விளைவாக இ. க. கட்சியின் பிரதிநிதித்துவமும் குறைந்தது.

முக்கிய எதிர்த் தரப்புச் சக்திகள் (ஸ்தாபனக் காங்கிரஸ், பாரதீய லோக் தளம், ஜனசங்கம், சோஷலிஸ்டுகளும் சந்திரசேகரின் தலைமையில் அமைந்த சோஷலிஸ்டுக் குழுவும்) ''ஜனதா கட்சி'' என்ற பெயரால் ஒன்றித்த தேர்தல் கூட்டணி அமைப்பதில் வெற்றி பெற்றன. சஞ்சய் காந்தியின் செயல்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இடது-இடைநிலைவாதச் சக்திகளின் ஒரு பகுதியினர் மத்திய அமைச்சர்களில் ஒருவரான ஜகஜீவன் ராம் தலைமையில் தேர்தல்களுக்கு முன் காங்கிரசிலிருந்து வெளியேறி ''ஜனநாயகக் காங்கிரஸ்'' என்னும் புதிய கட்சியை அமைத்தார்கள். இந்தக் கட்சியும் இ. க. கட்சி (மா)வும் ஜனதா கட்சியுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்து கொண்டன.

இந்தியாவின் குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது 1977, பிப்ரவரியில் காலமானர்.

1977, மார்ச்சில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் ஜனதா கட்சிக் கூட்டணி வெற்றி பெற்றது. நாடாளுமன்றத்தின் மக்கள் சபையில் அதற்குச் சார்பற்ற பெரும்பான்மை கிடைத்தது. இந்திரா காந்தி பதவியிலிருந்து விலகினர். மொரார்ஜி தேசாய் பிரதமர் ஆனர்.

கூட்டணிக் கட்சிகளும் ஜனநாயகக் காங்கிரசும் மே மாதத் தொடக்கத்தில் ஜனதா கட்சியாக முறைப்படி இணைந்தன. சந்திர சேகர் அதன் தலைவர் ஆனர்.

அதே ஆண்டுக் கோடையில் ஒன்பது மாநிலச் சட்ட மன்றங்களுக்கு நடந்த தேர்தல்களில் ஜனதா கட்சி மீண்டும் (ஆனால் வாக்குகளின் எண்ணிக்கையில் குறைந்த பெரும்பான்மை பெற்று) வெற்றி அடைந்தது. அதனுடன் கூட்டு சேர்ந்திருந்த இ. க. கட்சி (மா) மேற்கு வங்காளத்திலும் அகாலி தளம் பஞ்சாபிலும் ''அனைத்து இந்திய அண்ணா தி. மு.'' கட்சி தமிழ்நாட்டிலும் வென்றன. ஜனதா கட்சி வேட்பாளரான சஞ்சீவ ரெட்டி இந்தியாவின் புதிய குடியரசுத் தலைவராக 1977, ஜூலையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அரசியல் சக்திகளின் அணி வகுப்பு மாற்றம் நிகழ்ந்த சிக்கலான காலப் பகுதியில் நாடு அடி வைத்தது. காங்கிரசில் இந்திரா காந்தியின் ஆதரவாளர்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே போராட்டம் வலுத்தது. புதிய ஆளும் கட்சியிலும் மைய விலக்கப் போக்குகள் தோன்றின. அரசியல் நோக்கில் சிதறியிருந்த இடதுசாரிச் சக்திகளிடையே—இ. க. கட்சி, இ. க. கட்சி (மா), காங்கிரசையும் ஜனதாவையும் பிற கட்சிகளையும் சேர்ந்த இடதுசாரி உட்குழுக்கள் ஆகியவற்றின் இடையே—பரஸ்பரப் புரிவையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் முக்கியம் ஆயின.

1976ன் இறுதியில் பொருளாதார நிலைமை மேலும் மோசமானது, பணவீக்கத்தினால் விலைகள் மீண்டும் ஏறியது ஆகிய நிகழ்ச்சிகள் திரளான பொது மக்களின் மனநிலைமையைப் பாதித்தன. உடனடியான பொருளாதார, சமுதாயப் பிரச்சினைகளை ஜனநாயக அடிப்படையில் தீர்ப்பதற்காகப் போராடும்படியும் உழைப்பாளிகளுடைய உரிமைகளின் பொருட்டு அவர்களது வெகுஜன இயக்கத்தை விரிவாக நடத்தும்படியும் 1977, ஏப்ரலிலும் அக்டோபரிலும் நடந்த தேசியக் கவுன்சில் முழுக் கூட்டங்களில் கம்யூனிஸ்டுக் கட்சி அறைகூவி அழைத்தது.

ஜனதா கட்சிச் செயற்குழுவின் கூட்டம் 1977, ஆகஸ்டில் நடந்தது. இந்தியாவில் ''சோஷலிஸ சமூகத்தை'' நிறுவுவது என்ற கட்சியின் நோக்கம் இதில் உறுதி செய்யப்பட்டது. நெருக்கடி நிலையின் காலப் பகுதியில் ஜனநாயக சுதந்திரங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டன. நக்சலைட்டுகளின் கணிசமான பகுதியினர் குற்ற மன்னிப்பு அளிக்கப்பட்டுச் சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். ''நெருக்கடி நிலையின் காலப் பகுதியில் நடந்த அதிகார துஷ்பிரயோகம்'' பற்றி ஆராயும் பொருட்டு அரசாங்கம் பல விசாரணைக் கமிஷன்களை நியமித்தது. அதே சமயம் இந்து, முஸ்லிம் வகுப்புவாதப் பிற்போக்குச் சக்திகள் மீண்டும் சுறுசுறுப்பாகச் செயல் படத் தொடங்கின. நிலப்பிரபுக்களும் பணக்கார விவசாயிகளும் அடங்கிய தலைமைக் குழுவினரால், கிராம மேற்குடியினரால் ஏழைத்

தீண்டத்தகாத சாதியினரான எளியவர்கள் துன்புறுத்தப்படுவது நாட்டில் அலையாகப் பரவியது.

எதிர்த் தரப்பு முகாமிலும் ஆளும் கட்சியான ஜனதாவிலும் கொள்கைவாத-அரசியல் போராட்டம் 1977ம் ஆண்டின் கடைசி மாதங்களில் தீவிரம் ஆயிற்று. நெருக்கடி நிலை பற்றிய மதிப்பீடு, அந்தக் காலப் பகுதியிலும் 1977 தேர்தல்களுக்குப் பிறகும் தேசியக் காங்கிரசின் பால் கம்யூனிஸ்டுக் கட்சி கடைப்பிடித்த போக்கு ஆகியவை குறித்து இ.க. கட்சிக்குள்ளும் இ. க. கட்சிக்கும் இ. க. கட்சி (மா)வுக்கும் இடையிலும் விவாதம் மூண்டது. காங்கிரசுக்குள் இந்திரா காந்தி குழுவின் ஆதரவாளர்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே நடந்த போராட்டத்தின் விளைவாக 1978, ஜனவரியில் இரண்டு அனைத்து இந்தியக் காங்கிரஸ் நிறுவனங்கள், முறையே பிரமானந்த ரெட்டியினதும் இந்திரா காந்தியினதும் தலைமையில் உருவாயின.

ஜனதா கட்சிக்குள் வலுத்து வந்த போராட்டம் இந்த நிறுவனத்தின் வர்க்க அமைவைப் பிரதிபலித்தது. காங்கிரசில் போலவே இந்தக் கட்சியிலும் ஒன்றுக்கொன்று பெரிதும் முரணான வெவ்வேறு நலன்கள் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. சொத்து உள்ள வர்க்கங்களின் மேல்நிலையினர், முதன்மையாகப் பெரு முதலாளி வர்க்கத்தினர், சிறு வர்த்தகர்கள், தொழிலதிபர்கள், நாட்டுப்புற மேற்குடியினர் ஆகியோரும் இந்திய சமூகத்தின் ஜன நாயக வட்டாரங்களைச் சேர்ந்தவர்களும் ஜனதா கட்சியில் இருந்தார் கள். 1977ன் தொடக்கத்தில் கட்சி எந்த அரசியல் ஆக்கக் கூறுகளைக் கொண்டு உருவாக்கப்பட்டதோ அவற்றின் பிரதிநிதிக் குழுக்களுக்கு இடையே அரசாங்க, கட்சி அமைப்பில் செல்வாக்கின் பொருட்டு நடந்த போராட்டத்தினுல் ஜனதா கட்சியில் நிலைமை மேலும் சிக்கல் ஆயிற்று.

இந்தச் சிக்கலான சூழ்நிலையில் ஜனதா கட்சியின் பொருளாதாரச் செயல்திட்டம் 1977, நவம்பரில் வெளியிடப்பட்டது. விவசாயம், சிறு அளவுத் தொழில்துறை ஆகியவற்றின் முதன்மையான வளர்ச் சியை நோக்கமாகக் கொண்டிருந்தது இது. இந்தச் செயல்திட்டம் குறித்து விரிவாக நடந்த விவாதம் தீர்வை எதிர்பார்த்திருந்த இந் தியப் பொருளாதார, சமுதாய-அரசியல் பிரச்சினைகளின் பெருத்த சிக்கலைப் பிரதிபலித்தது.

வெளிநாட்டுக் கொள்கை

70க்களின் நடுவில் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் மிக மிக முக்கியமான இடம் பெற்றிருந்தவை பாங்களா தேஷ் குடி யரசுடனும் பாக்கிஸ்தானுடனும் உறவுகள் குறித்த பிரச்சினைகள்

ஆகும். தொழில்துறையிலும் விவசாயத் துறையிலும் உற்பத்தியை மீட்டமைக்கவும் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய லட்சக் கணக்கான அகதிகளுக்கு வாழ்க்கை வாய்ப்பு அளிக்கவும் பல்வேறு வகைப் பண்டங்களும் சரக்குக்களும் உணவுப் பொருள்களும் பிறவும் சப்ளை செய்ததன் மூலம் பாங்களா தேஷுக்கு இந்தியா கணிசமான பொருளுதவி அளித்தது. உதவியின் பெரும் பகுதி திரும்பத் தரத் தேவை அற்ற நன்கொடையின் வடிவில் அளிக்கப்பட்டது. இது தவிரக் கடன்களும் வழங்கப்பட்டன. எங்கும் மாற்றப்படக் கூடிய அன்னியச் செலாவணிக் கடன்களும் இவற்றில் அடங்கி இருந்தன. 1972ல் கையெழுத்தான நட்பு உடன்படிக்கையையும் வர்த்தக ஒப்பந்தத்தையும் ஆதாரமாகக் கொண்டு இரு தரப்புகளும் பொருளாதார, அரசியல் உறவுகளை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டன.

பாக்கிஸ்தானிப் போர்க் கைதிகளையும் பாதுகாப்புக் காவலில் இருந்த சிவிலியன்களையும் இந்தியாவிலிருந்து பாக்கிஸ்தானுக்கும், பாக்கிஸ்தானில் இருந்த பாங்களா தேஷ் குடிகளையும் பாங்களா தேஷில் இருந்த பாக்கிஸ்தானிகளையும் தத்தம் தாயகங்களுக்கும் திருப்பி அனுப்பும் பிரச்சினை குறித்து இந்தியா, பாக்கிஸ்தான், பாங்களா தேஷ் ஆகியவற்றுக்கிடையே உறவுகளில் ஓரளவு இடர்கள் நேர்ந்தன. மேலே குறித்த மூன்று வகையான சிவிலியன்களையும் இராணுவத்தினரையும் தாய்நாடுகளுக்கு ஒரே நேரத்தில் திருப்பி அனுப்புவதற்கு வகை செய்த இந்திய-பாங்களா தேஷ் அறிக்கை 1973, ஏப்ரலில் வெளியிடப்பட்டது. அதே ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நிறைவேறிய இந்திய-பாக்கிஸ்தான ஒப்பந்தம் இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. 93 ஆயிரம் பாக்கிஸ்தான இராணுவத்தினரையும் சிவிலியன்களையும் தாயகம் திருப்பி அனுப்பும் செயலை இந்தியா 1974, ஏப்ரல் 30ந் தேதி நிறைவேற்றி முடித்தது.

1974, பிப்ரவரியில் பாக்கிஸ்தான் பாங்களா தேஷுக்கு அங்கீகாரம் அளித்தது. இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையே உறவுகள் மேற்கொண்டு முறைப்படி அமைவதற்கு இது உதவியது. இந்தியாவின் யோசனைப்படி மூன்று நாடுகளுடையவும் வெளிவிவகார அமைச்சர்கள் 1974, ஏப்ரலில் டில்லியில் சந்தித்துப் பேசினர்கள். மூன்று நாடுகளுக்கும் இடையே உறவுகளை முறைப்படுத்தவும் துணைக்கண்டத்தில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தவும் ஏற்ற வழிகளைக் குறிக்கும் ஒப்பந்தம் இந்தச் சந்திப்பின் பயனாகக் கையெழுத்தாயிற்று. 1974, செப்டெம்பர் மாதம் இந்திய-பாக்கிஸ்தானப் பேச்சு வார்த்தைகள் இஸ்லாமாபாதில் நடைபெற்றன. இவற்றின் விளைவாக இரு நாடுகளுக்கும் இடையே தபால் தந்தித் தொடர்பு

களும் தொலைபேசித் தொடர்புகளும் மீட்டமைக்கப்பட்டன. இந்திய, பாக்கிஸ்தானைக் குடிகள் ஒருவர் நாட்டுக்கு மற்றவர் பயணம் செய்வதற்கான வசதிகளும் மீண்டும் ஏற்படுத்தப்பட்டன. 1965ம் ஆண்டு இந்திய-பாக்கிஸ்தானப் போரின்போது இரு நாடுகளுக்கும் இடையே விதிக்கப்பட்டிருந்த வாணிகத் தடையாணை 1974, டிசம்பரில் ரத்து செய்யப்பட்டது. இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையே தூதரக உறவுகளை மீண்டும் ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தம் 1976, மே மாதத்தில் முடிவாகக் கையொப்பமிடப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையே முறையான விமான, ரெயில், சாலைப் போக்குவரத்துத் தொடர்புகளைப் புதுப்பிப்பது குறித்து அதே சமயம் உடன்பாடு ஏற்பட்டது. 1976, ஜூலையில் இரு நாடுகளுக்கும் இடையே அரசாங்க தூதர்களின் பரிமாற்றம் நிகழ்ந்தது.

1975ல் பாங்களா தேஷிலும் 1977ல் பாக்கிஸ்தானிலும் அரசாங்க மாற்றங்கள் ஏற்பட்டு ஆட்சி இராணுவத்தினர் கைகளுக்குப் போய்விட்டப் பின் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள தன் பிரதான அண்டை நாடுகளுடன் இந்தியாவின் உறவுகளது வளர்ச்சி சிக்கலாயிற்று.

பாக்கிஸ்தான், பாங்களா தேஷ் ஆகியவற்றோடு கூடவே பிற ஆசிய அண்டை நாடுகளுடனும் தன் உறவுகளை வலுவாக்கவும் விரிவுபடுத்தவும் இந்தியா முயன்றது. 1973ல் இந்தியா நேபாளத்துடனும் இலங்கையுடனும் ஆட்சித் தலைவர்களின் பயணப் பரிமாற்றம் நிகழ்த்தியது. இலங்கையில் வசித்து வந்த 150 ஆயிரம் இந்திய வம்சவழியினரின் குடியுரிமை குறித்து இலங்கையுடன் ஒப்பந்தம் 1974, ஜனவரியில் செய்து கொள்ளப்பட்டது. இவர்களில் பாதிப் பெயருக்கு இந்தியக் குடியுரிமையும் மறு பாதிப் பெயருக்கு இலங்கைக் குடியுரிமையும் அளிக்கப்பட்டன. பாங்களா தேஷுடனும் பர்மாவுடனும் நில எல்லைகளும் இந்தோனீசியாவுடனும் இலங்கையுடனும் கடல் எல்லைகளும் அதே ஆண்டில் வரையறுக்கப்பட்டன.

சீனாவுடன் தன் உறவுகளை ஒரு சிறிது கூட மேம்படுத்த இந்தியாவுக்கு இயலவில்லை. 1962ல் நடந்த இந்திய-சீனப் போர்க் காலம் முதல் இந்த உறவுகள் இறுக்கம் நிறைந்தவையாக இருந்து வந்தன. உறவுகளை மேம்படுத்த இந்திய அரசதந்திரிகள் செய்த முயற்சிகள் பீக்கிங் தரப்பில் உரிய முறையில் புரிந்து கொள்ளப்படவில்லை. இந்திய-சீன எல்லை அருகே இருந்த தளங்களில் கலகக் கிளர்ச்சிக்காரர்கள் பயிற்றவும் ஆயுதங்கள் அளிக்கவும் பட்டார்கள். இவர்களது படைப் பிரிவுகள் நாகாலாந்திலும் வட கிழக்கு இந்தியாவின் வேறு சில பிரதேசங்களிலும் செயல்பட்டன. எல்லையோரத்தில் இத்தகைய பயிற்சித் தளங்கள் இருந்தது இரு நாடுகளுக்கும் இடையே உறவு

களை முறைப்படுத்த இடைஞ்சலாய் இருந்தது. இரண்டு நாடுகளுக்கும் இடையே அரசாங்க தூதர்களின் மட்டத்தில் தூதராலய உறவுகளை மீண்டும் அமைத்துக் கொள்வது பற்றிய உடன்பாடு 1976, ஏப்ரலில் பெறப்பட்டது உண்மையே. ஆனால் இதன் பயனாக மொத்தத்தில் இந்திய -சீன உறவுகளில் திருப்பம் ஏற்படவில்லை.

சர்வதேச உறவுகளின் அமைப்பில் கூட்டு சேரா நாடுகளின் குழுவில் இந்தியா 70க்களில் முன்போலவே ஒரு தலைமை இடத்தைப் பெற்றிருந்தது. இந்திய அரசதந்திரிகள் ''நேருவின் போக்கைத்'' தொடர்ந்து கடைப்பிடித்து வந்தார்கள். காலனியாதிக்கம், புதுக் காலனியாதிக்கம், இன வெறி, இன ஒதுக்கம், ஏகாதிபத்தியவாதம் ஆகியவற்றை அவர்கள் தீவிரமாக எதிர்த்து வந்தார்கள். வியத்நாம், தென்னாப்பிரிக்கா, இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு உள்ளான அரபு நாடுகள் ஆகியவற்றின் மக்களுக்கு இந்தியா ஆதரவாக இருந்தது.

மரபு வழி வந்த பயனுள்ள நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித்த இந்தியா சர்வதேச இறுக்கத்தைத் தளர்த்துவதற்கும் உறுதியான, நீடித்த சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும் அனைத்துலக ஆயுத ஒழிப்புக்கும் தொடர்ந்து ஆதரவு அளித்து வந்தது. சர்வதேசக் கருத்து அரங்கங்களில், முதன்மையாக ஐ. நா. சங்கத்திலும் அதன் விசேஷ நிறுவனங்களிலும், ''மூன்றாவது உலக'' நாடுகளின் பொருளாதார, சமுதாய அபிவிருத்தி பற்றியும் வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கும் இடையே வர்த்தக பொருளாதார உறவுகள் பற்றியும் புதிய உலகப் பொருளாதார ஒழுங்கை ஏற்படுத்துவது பற்றியும் பிரச்சினைகள் விவாதிக்கப்படுகையில் இந்தியாவின் குரல் ஒலித்தது. ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளுக்கு இடையே பொருளாதார, வர்த்தக உறவுகள் வளர்ச்சி அடைவதற்கு இந்தியா ஆதரவாக இருந்தது. இந்தக் கொள்கையின் படி 1973—1974ல் ஈரானுடன் இந்தியாவின் வர்த்தக உறவுகள் கணிசமாக அதிகரித்தன. ஈரான் இந்தியாவுக்கு மிக அதிக அளவில் பெட்ரோலியம் சப்ளை செய்து, அந்த நோக்கத்துடன் விசேஷக் கடனும் அளித்தது. இரு நாடுகளின் அரசாங்கத் தலைவர்களும் பரஸ்பரம் வருகை தந்தார்கள்.

பயனுள்ள நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித்த இந்தியா கூட்டு சேரா நாடுகளின் இயக்கத்தில் துடியாகப் பங்காற்றியது. அல்ஜீரியாவிலும் (1973) கொழும்புவிலும் (1976) நடந்த கூட்டு சேரா நாடுகள் மகாநாடுகளில் இந்திரா காந்தி கலந்து கொண்டார். கூட்டு சேரா நாடுகளின் அமைச்சர்களது ஆலோசனைக் கூட்டம் இதே 1976ம் ஆண்டு டில்லியில் நடந்தது. வளர்ச்சி அடைந்து வரும் நாடு

களின் தகவல் சாதனங்கள் மீது மேற்கத்தியச் செல்வாக்கைக் குறைக்கும் நோக்கத்துடன் செய்தி நிறுவனங்கள் அமைப்பது பற்றி இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்திய மாகடலில் உள்ள டியேகோ-கார்சியா தீவில் அமெரிக்க இராணுவ தளம் அமைக்கவும் விரிவாக்கவும் பட்டதை இந்திய அரசாங்கமும் சமூகப் பிரதிநிதிகளின் விரிவான வட்டாரங்களும் விடாப்பிடியாகத் தொடர்ந்து எதிர்த்தன. இந்திய மாகடல் அன்னிய இராணுவ மூஸ்தீப்புகளிலிருந்து விடுபட்ட சமாதான மண்டலமாக மாற்றப்பட வேண்டும் என்று இந்தியா கோரியது.

1971ல் நடந்த இந்திய-பாக்கிஸ்தானப் போரின் காலப் பகுதியில் பெரிதும் மோசமாகி இருந்த இந்திய-அமெரிக்க உறவுகளே டியேகோ-கார்சியாவின் பிரச்சினை சந்தேகமின்றி இன்னும் சிக்கலாக்கியது. ஆயினும் 1973 முதல் இரு தரப்புக்களும் பரஸ்பர உறவுகளைச் சீர்படுத்த முயன்றன. இந்தியாவுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அமெரிக்கப் பொருளாதார உதவி மீண்டும் அளிக்கப்படத் தொடங்கியது இதற்கு உதவியது. டில்லியில் இருந்த அமெரிக்கத் தூதரகக் கணக்கில் குவிந்திருந்த பேரளவான ரூபாய் நிதிகள் பற்றிய பிரச்சினை தீர்க்கப்பட்டது 70க்களில் இந்திய-அமெரிக்க உறவுகளில் முக்கியமான மைல் கல்லாக விளங்கியது. இந்தியாவுக்கு அமெரிக்க உணவுப் பொருள்கள் சப்ளை செய்யப்பட்டதன் விளைவாகக் குவிந்தவை இந்த நிதிகள். 2250 கோடி ரூபாய் மதிப்புள்ள பெரும் பகுதி (மூன்றில் இரண்டு பங்கு) நிதிகளைச் செலவிடும் உரிமை இந்தியாவுக்கு அளிக்கப்பட்டது. 500 கோடி ரூபாய் அமெரிக்கத் தரப்புக்கு உரியதாயிற்று. எஞ்சிய பகுதியை இந்திய மாற்றப்படக் கூடிய அன்னியச் செலாவணியில் செலுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அமெரிக்க வெளி விவகார அமைச்சர் ஹென்ரி கிஸ்ஸிங்கர் 1974, அக்டோபர் மாதம் இந்தியாவுக்கு வருகை தந்தார். பொருளாதார, விஞ்ஞான-தொழில்நுட்ப ஒத்துழைப்பு குறித்த கூட்டுக் கமிஷன் நிறுவும் ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திட்டார். 1973—1977ல் இந்திய-அமெரிக்க உறவுகள் சாதகமான முன்னேற்றம் அடைந்தன என்றாலும், 50க்களிலும் 60க்களின் முற்பாதியிலும் இருந்த மட்டத்துக்கு அவை உயரவில்லை.

வளர்ச்சி பெற்ற பிற முதலாளித்துவ நாடுகளுடன் போன்றே அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் இந்தியாவின் உறவுகள் மேற்கு நாடுகளுடன் வர்த்தக-பொருளாதார உறவுகளை வளர்ப்பதிலும் பொருளாதார, நிதி உதவி பெறுவதிலும் அது கொண்டுள்ள அக்கறையால் முதன்மையாகத் தீர்மானிக்கப்படுகின்றன. 1974 முதல் ''இந்தியாவுக்கு உதவிக்'' கூட்டிணைப்பினிடமிருந்து புதிய நீண்டகாலக் கடன்

கள் இந்தியாவுக்குக் கிடைத்தன. 70க்களின் நடுவில் முதலாளித்துவ உலகைப் பீடித்த ஆற்றல், செலாவணி-நிதி நெருக்கடி, வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளுடன் இந்தியாவின் முரண்பாடுகளைக் கூர்மையாக்குவதில் தனது செல்வாக்கைச் செலுத்தியது. மேற்கு நாடுகளையும் ஜப்பானையும் சேர்ந்த பலதேச வாரியங்கள் இந்தியப் பொருளாதாரத்தில் ஆழப் புகுந்ததும் இதற்கு உதவியது. ஜப்பான் இந்தியச் சந்தைக்காகத் தனது மேற்கு ஐரோப்பிய, வட அமெரிக்கப் போட்டியாளர்களுடன் போராட்டத்தை வலுப்படுத்தியது.

1975ம் ஆண்டு பிறப்பதற்கு முன் வேளையில் போர்ச்சுகலுடன் தூதராலய உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக் கொண்டது மேற்கு நாடுகளுடன் உறவுகளை அரசியல் நோக்கில் சீர்படுத்துவதில் முக்கிய நிகழ்ச்சியாக விளங்கியது. இதை அடுத்து 1975, ஜூன் மாதம் லிஸ்பனில் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. அதன்படி கோவா மீதும் இந்தியாவில் உள்ள பிற முன்னாள் போர்ச்சுகேசியக் காலனிகள் மீதும் இந்தியாவின் அரசுரிமையைப் போர்ச்சுகல் அங்கீகரித்தது.

மேற்கு நாடுகளுடன் இந்தியாவின் பொருளாதார, அரசியல் உறவுகள் சிக்கல் அடைந்த சூழலில் சோஷலிஸ நாடுகளுடன் நட்பார்ந்த ஒத்துழைப்பு 70க்களின் முற்பாதியிலும் நடுவிலும் வளர்ச்சியும் ஆழமும் அடைந்தது. உலக சோஷலிஸ அமைப்பைச் சேர்ந்த நாடுகளோடு இந்தியாவின் வர்த்தகக் கொடுக்கல் வாங்கலும் பொருளாதார, விஞ்ஞான-தொழில்நுட்ப, பண்பாட்டு ஒத்துழைப்பும் விரிவாயின. அரசியல் தொடர்புகளும் விரிவடைந்தன. எல்லா சோஷலிஸ நாடுகளுடனும் அரசு, அரசாங்கத் தலைவர்களதும் வெளி விவகார அமைச்சர்களதும் பயணங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

1971ம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட சமாதான, நட்புறவு, ஒத்துழைப்பு உடன்படிக்கையின் அடிப்படையில் வளர்ச்சி அடைந்து வந்த சோவியத்-இந்திய ஒத்துழைப்பு மேற்கு நாடுகளிடமிருந்து அரசியல், பொருளாதார, இராணுவத் துறைகளில் இந்தியா சுதந்திரம் பெறுவதற்குப் பேருதவி புரிந்தது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் லியனீத் பிரேழ்னிவ் 1973, நவம்பரில் இந்தியாவுக்கு வருகை தந்தது சோவியத்-இந்திய நட்புறவுகளின் வரலாற்றில் நிலையான இடம் பெற்றுவிட்ட முக்கிய நிகழ்ச்சியாக விளங்கியது. சர்வதேச இறுக்கத்தைத் தளர்த்துவதற்கும் சூழ்நிலையை மேம்படுத்துவதற்கும் மேற்கொண்டும் முயற்சிகள் செய்வது என்ற தங்கள் தீர்மானத்தை லியனீத் பிரேழ்னினது வருகையின் போது கையெழுத்தான கூட்டறிக்கையிலும் டில்லியில் உச்ச மட்டத்தில் நிகழ்ந்த பேச்சுவார்த்தைகளிலும் சோவியத் யூனியனும் இந்தியாவும்

உறுதிப்படுத்தின. ஆயுத உற்பத்திப் போட்டியை நிறுத்துவதற்கும் பொதுவான, பூரண ஆயுத ஒழிப்பைப் பெறுவதற்கும் அனைத்துலக ஆயுத ஒழிப்பு மகாநாட்டுக்கு முன்னேற்பாடுகள் செய்வதற்கும் காலனியாதிக்கத்தையும் இன வெறியையும் மிக விரைவில் முழுமையாக ஒழிப்பதற்கும் ஆதரவாக அவை கருத்து தெரிவித்தன. தமது ஒரு சொற்பொழிவில் லியனீத் பிரேழ்னிவ் இந்தியாவின் வெளி நாட்டுக் கொள்கைப் போக்கை உயர்வாக மதிப்பிட்டார்: ''இந்தியா கூட்டு சேராமை இயக்கம் தோன்ற ஒரு காரணமாய் இருந்தது, அதன் முற்போக்குக் கோட்பாடுகளை உருவாக்குவதில் ஒத்துழைத்தது. காலனியாதிக்கத்துக்கும் இன வெறிக்கும் எதிரான போராட்டம், ஏகாதிபத்திய இராணுவக் கூட்டணிகளுக்கு எதிர்ப்பு, தேசிய விடுதலைக்காகப் போராடும் மக்கள் இனங்களுக்கு ஆதரவு, சமாதான, சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளின் கடைப்பிடிப்பு—இவையாவும் இந்தியாவின் கொள்கை உயர்ந்த மதிப்பு பெறுவதற்கு உரிய தகுதி அளித்தன.''*

இந்த வருகையின் பயனாக, கூட்டறிக்கை தவிர வேறு சில முக்கிய தஸ்தாவேஜுகளும் கையெழுத்தாயின. அடுத்த 15 ஆண்டுகளுக்குப் பொருளாதார, வர்த்தக ஒத்துழைப்பின் வளர்ச்சி பற்றிய ஒப்பந்தம், சோவியத் யூனியனின் அரசுத் திட்ட நிறுவனத்துக்கும் இந்தியாவின் திட்டக் கமிஷனுக்கும் இடையே ஒத்துழைப்பு பற்றிய ஒப்பந்தம், வாணிக தூதரக ஒப்பந்தம் ஆகியன இவை.

லியனீத் பிரேழ்னிவின் இந்தியப் பயணமும் அதன் விளைவுகளும் சோவியத்-இந்திய உறவுகளின் உயர்ந்த தரத்தைப் பிரதிபலித்தன. இரு நாடுகளதும் மரபு வழி வந்த நட்பை ஆதாரமாகக் கொண்டவை இந்த உறவுகள்.

பிலாயிலும் பொக்காரோவிலும் சோவியத் உதவியுடன் நிறுவப்பட்டுள்ள உலோக வார்ப்புத் தொழிற்சாலைகளை விரிவாக்கவும் பெட்ரோலியச் சுத்திகரிப்பு, இரும்பற்ற உலோக வார்ப்பு, நிலக்கரியும் நிலவாயுவும் எடுப்பது, மின்னுக்கம், கப்பல் கட்டுமானம் முதலியவற்றுக்கான நிலையங்களை சோவியத் உதவியுடன் நிருமிக்கவும் வகை செய்யப்பட்டது. எலெக்டிரானிக்ஸ், விண்வெளி ஆராய்ச்சிகள், சமாதான நோக்கங்களுக்காக அணுசக்தி இயலின் வளர்ச்சி ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பு திட்டமிடப்பட்டது.

இந்தியாவின் விஞ்ஞான ஆற்றல் அதிகரித்திருந்தது சோவியத்-

---

* **லி. இ. பிரேழ்னிவின் இந்தியப் பயணம்,** மாஸ்கோ, *1973*, பக்கம் *87*.

இந்திய விஞ்ஞான ஒத்துழைப்பு விரிவாக நடப்பதற்கு ஏற்ற நிலைமை களை ஏற்படுத்தியது. 1974ல் இந்தியா தரைக் கீழ் அணு வெடிப்பை அமைதியான நோக்கங்களுக்காக நிறைவேற்றியது. 1975, ஏப்ரலில் முதல் இந்தியத் துணைக் கோள் ஆரியபட்ட சோவியத் ராக்கெட்டின் துணையால் கோளப் பாதையில் செலுத்தப்பட்டது. சோவியத் யூனியன் விஞ்ஞானப் பேரவை சந்திரத் தரை மாதிரிகளை இந்திய விஞ்ஞானிகளுக்கு வழங்கியது. சந்திரனின் மேற்பரப்பில் சோவியத் நிலா ஊர்திகள் அகழ்ந்ததால் கிடைத்தவை இவை.

இயற்கை விஞ்ஞான, சமூக விஞ்ஞானத் துறைகளில் சோவியத்-இந்திய ஒத்துழைப்பு பற்றி நீண்டகால ஒப்பந்தங்கள் 1974—1975ல் செய்து கொள்ளப்பட்டன.

1974—1977ல் சோவியத்-இந்திய ஒத்துழைப்பு தொடர்ந்து இடையறாது வளர்ச்சி அடைந்தது. 1976ல் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரசில் அறிக்கை சமர்ப்பித்துப் பேசுகை யில் லியனீத் பிரேழ்னிவ் இந்தியா குறித்த சோவியத் கொள்கை சம்பந்தமாக, ''இந்த மாபெரும் நாட்டுடன் நட்பை நாம் சிறப்பான முக்கியத்துவம் உள்ளதாக மதிக்கிறோம்''* என்றார்.

1970க்களின் நடு வாக்கில் சோவியத் யூனியன் இந்தியாவின் மிக முக்கிய வர்த்தகக் கூட்டாளி ஆகி விட்டது.

1953—1976ல் இரு நாடுகளுக்கும் இடையே சரக்குப் பரிமாற் றம் 300 மடங்குக்கும் மேல் அதிகரித்து, 900 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பை எட்டியது. சோவியத் யூனியனின் உதவியால் இந்தியாவில் 80க்கும் மேல் தொழில் நிலையங்கள் நிறுவப்பட்டுக் கொண்டிருந்தன அல்லது நிறுவப்பட்டு விட்டிருந்தன. பிலாய், பொக் காரோ உருக்காலைகளும் வெப்ப, நீர் மின் நிலையங்களும் பெட்ரோ லியம் எடுப்பதற்கும் சுத்தி செய்வதற்குமான தொழில் நிலையங்களும் நிலக்கரிச் சுரங்கங்களும் கனரக இயந்திர நிர்மாணத் தொழிற்சாலை களும் மருத்துவச் சாதனங்களும் மருந்துகளும் தயாரிக்கும் தொழிற் சாலைகளும் பிறவும் இவற்றில் சில.

சோவியத் உதவியுடன் நிறுவப்பட்ட தொழில் நிலையங்களில் 80 சதவிகிதம் உலோக வார்ப்பு இயந்திர சாதனங்களும் 60 சதவிகி தம் கனரக மின் இயந்திர சாதனங்களும் நிர்மாணிக்கப்பட்டன, 30 சதவிகிதம் எஃகு தயாரிக்கப்பட்டது, 20 சதவிகிதம் மின் ஆற்றல்

---

* லி. இ. பிரேழ்னிவ், சோ. யூ. க. கட்சி மத்தியக் கமிட்டியின் அறிக்கையும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைத் துறையில் கட்சியின் முன் நிற்கும் பணிகளும். சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 25வது காங்கிரசுக்கு முன் ஆற்றிய உரை, மாஸ்கோ, 1976, பக்கம் 17.

உற்பத்தி செய்யப்பட்டது, 50 சதவிகிதத்துக்குமேல் பெட்ரோலிய மும் 35 சதவிகிதம் பெட்ரோலியப் பண்டங்களும் எடுக்கப்பட்டன. சோவியத்-இந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு அரசினர் துறை யின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் பல்வகைத் தொழிற்சாலைத் தொகுப்பை அமைப்பதற்குரிய நிர்ணயகரமான காரணிகளில் ஒன்று ஆயிற்று.

1977, மார்ச்சில் நடந்த பொதுத் தேர்தல்களின் பயனாக ஆட்சிக்கு வந்த புதிய ஜனதா கட்சி அரசாங்கம் மரபு வழி வந்த வெளிநாட்டுக் கொள்கைப் போக்கைத் தொடர்ந்து கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்தது. இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பிந்திய முதல் முப்பது ஆண்டுக் காலத்தில் வகுக்கப்பட்ட தேசிய வெளிநாட்டுக் கொள்கை யின் மரபுத் தொடர்பை இந்தியாவின் புதிய வெளிவிவகார அமைச்சர் அடல் பிகாரி வாஜ்பேயி உறுதிப்படுத்தினார். நாட்டின் புதிய தலைமைக் குழு பயனுள்ள நடுநிலைமைக் கொள்கைப் போக்கைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதையும் எல்லா நாடுகளுடனும் அண்மையிலும் தொலைவிலும் உள்ள அண்டை நாடுகளுடனும் உறவுகளை மேம்படுத்தவும் வளர்க்கவும் அது முயன்று வருவதையும் 1977ன் நடுவிலும் பிற்பாதியிலும் மொரார்ஜி தேசாய் அரசாங்கம் எடுத்துக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கை நடவடிக்கைகள் உறுதி செய்தன. சோவியத் யூனியனுடன் நட்பு உறவுகளை நிலையாக வைத் திருப்பதற்கு முதற்படி முக்கியத்துவம் தரப்பட்டது. சோவியத் யூனி யன் வெளிவிவகார அமைச்சர் அந்திரேய் குரோமீக்கோ 1977, ஏப்ரலிலேயே இந்தியாவுக்கு வருகை தந்தார். டில்லியில் நடந்த பேச்சுவார்த்தைகளின் பயனாக வெளியிடப்பட்ட அறிக்கையின் ஒரு பகுதியில் பின்வருமாறு கூறப்பட்டது: ''சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்கும் இடையே உருவாகி உள்ளவையும் காலத்தின் சோதனையில் தேறி உள்ளவையுமான மரபு வழி வந்த நட்பு, ஒத் துழைப்பு, பரஸ்பர மரியாதை, நம்பிக்கை ஆகியவை நிறைந்த உறவுகளின் வளர்ச்சியால் இரு தரப்புக்களும் மனநிறைவை வெளி யிட்டன.''*

இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் 1977, அக்டோபரில் அரசின் சார்பில் சோவியத் யூனியனுக்கு வருகை தந்த போது இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே உறவுகள் மேற் கொண்டு வளர்வதற்கான போக்கு உறுதியாக்கப்பட்டது. அரசியல், வர்த்தகபொருளாதார, விஞ்ஞான-தொழில்நுட்ப, பண்பாட்டு ஆகிய எல்லாத் துறைகளிலும் உறவுகளையும் தொடர்புகளையும் மேற்

---

* பிராவ்தா, 1977, ஏப்ரல் 18.

கொண்டு வளர்ப்பதற்கான வாய்ப்புக்களை மாஸ்கோவில் அக்டோபர் 26ந் தேதி கையெழுத்தான சோவியத்-இந்தியக் கூட்டறிக்கை குறிப் பிட்டது. அக்டோபர் புரட்சியின் 60ம் ஆண்டு விழாவும் இந்திய சுதந்திரத்தின் 30ம் ஆண்டு விழாவும் இரு நாடுகளிலும் விரிவாகக் கொண்டாடப்பட்ட காலப் பகுதியில் நிகழ்ந்தது மொரார்ஜி தேசா யின் வருகை.

சோவியத்-இந்திய ஒத்துழைப்பின் சர்வாம்ச ரீதியான மதிப்பீடு அறிக்கையில் தரப்பட்டது. அதன் ஒரு பகுதியில் பின்வருமாறு கூறப் பட்டது: ''சோவியத்-இந்திய நட்பு காலத்தின் சோதனைக்கு ஈடு கொடுத்துள்ளது, நிலைமைகளின் சேர்க்கைக் காரணத்துக்கு உட்பட வில்லை என்பதையும் ஆசியாவிலும் உலகம் முழுவதிலும் சமாதானத் துக்கும் நிலைப்பாட்டுக்கும் முக்கியக் காரணியாக அது பணியாற்று கிறது என்பதையும் இரு தரப்புக்களும் குறிக்கின்றன.

''1971, ஆகஸ்டில் கையெழுத்தான சமாதான, நட்பு, ஒத்து ழைப்பு உடன்படிக்கை சோவியத் யூனியனதும் இந்தியாவினதும் நலன்களுக்கு நம்பகமாகப் பணியாற்றுகிறது. இந்த உடன்படிக்கை யின் உணர்வில் சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்கும் இடையே மரபு வழி வந்த நட்பும் ஒத்துழைப்பும் அடைந்துள்ள வளர்ச்சியால் மனநிறைவை இரு தரப்புக்களும் வெளியிட்டன.''*

இவ்வாறு, சோவியத்-இந்திய நட்புறவுகள் இந்திய வெளி நாட்டுக் கொள்கையின் மிக முக்கியத் துறைகளில் ஒன்றாகவும் சர் வதேச உறவுகளின் நிலைப்பாட்டையும் நீடித்த உலக சமாதானத்தின் திசையில் இயக்கத்தையும் நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்றாகவும் நிலைத்துள்ளன.

---

* பிராவ்தா, 1977, அக்டோபர் 27.

கலைச்சொல் வரிசை

அகமண முறை—endogamy
அடிப்படைக் கட்டுமானத் தொகுப்பு—infra-structure
அடிமைச் சொந்தக்கார அமைப்பு—slave owning structure
அடிமைச் சொந்தக்கார முறை—slave owning system
அடுக்கமைப்பு—stratification
அடுக்குப் படிவு ஆராய்ச்சி—stratigraphy
அண்ட அமைப்பு [இயல்]—cosmography
அரசினர் துறை—state sector
அரசு அமைப்பு (உருவாக்கம்)—state organization (formation)
அரசு நிலம்—state lands
அறிதல் சித்தாந்தம்—theory of cognition
அறிவொளி (கல்வி) பரப்புவோர்—enlightener
அனைத்திறைக் கொள்கை—pantheism
ஆட்சித் தலைமை நாடு—parent state
ஆதாரம்—source
இடைக் கால—mediaeval
இதிகாசக் காலப்பகுதி—epic period
இந்திய [ஆராய்ச்சி] இயல்—indology
இயற்கை விஞ்ஞானத் தத்துவம்—natural philosophy
இருத்தல்—being
இருமைக் கொள்கை—dualism
இனக் குழு—tribe
இனக் கூட்டு—ethnic community
இனக் கொள்கை—racial theory
இன வகை—ethnic group
உடைமை—ownership

உடைமையுரிமை—ownership rights
உண்டியல்—bill of exchange
ஒரு கடவுள் கோட்பாடு—monotheism
ஒரு தார மணம்—monogamy
ஐரோப்பிய மத்தியத்துவம்—Europe-centrism
கடவுளர் கலப்புப் போக்கு—syncretistic tendency
கடவுளர் குழு—pantheon
கதவடைப்பு—lock-out
கரிமப் பகுப்பாய்வு—corbonic analysis
கருங்காலி—black-leg
கருத்துக் குறி—ideogramme
காப்பாட்சி—protectorate
காப்புக் கொள்கை—protectionism
காப்புத் தடை உரிமைகள்—immunity rights
காரண காரிய விதி—the law of causation
குடிப் பெயர்ச்சி—migration
குடியுரிமை—citizenship right
குடியேற்ற நாடு—dominion
குடியொப்பம்—plebiscite
குலச் சமுதாயம்—tribal community
குலமரபுச் சின்னம்—totem
கூட்டுப் பங்குக் கம்பெனி—joint-stock company
சட்டம் இயற்றும் அதிகாரம்—legislative rights
சமயமுரணை—heretic
சமுதாயக் கட்டுமானம்—social structure
சமுதாயப் படிவரிசை—social hierarchy
சித்திர எழுத்துக்கள்—hieroglyphics
சிலராட்சி—oligarchy
சுயதேவைப் பூர்த்திக்கான தொழில்—natural economy
செயல்படுத்தும் அதிகாரம்—executive power
செவிவழி இலக்கியம்—folk-lore
சொத்து—property
சொத்துரிமை—property rights
தருக்கப் பகுப்பாய்வு—syllogism
தலைக் கடவுள் கோட்பாடு—henotheism
தனியார் நிலச் சொத்து—private landed property
தன்மயமாக்கல்—assimilation
தீவிரவாதம்—extremism

தொகுதி—constituency
தொல் பொருள் இயல்—archeology
தொழிற் குழு—guild
நகரப் பண்பாக்கம்—urbanization
நடப்பியல் கொள்கை—realism
நடுநிலைமை—neutrality
நாஸ்திகவாதம்—atheism
நிகழ்ச்சிச் சேர்க்கை—conjuncture
நீக்ரோ வகை—negroid
பஞ்சப் படி—dearness allowance
பண்ட வாடகை—natural rent
பண்ணையடிமை முறை—serfdom
பல தெய்வ வழிபாடு—polytheism
பன்மை—plurality
பாகுபாடு—differentiation
பிரபஞ்ச அறிவியல்—gnoseology
போகவாதம்—hedonism
மாகாணம்—presidency
மானிட இயல்—anthropology
மானியம்—grant
மானியக்காரன்—vassal
முதற்குடிகள்—aborigenes
மூலப் பண்பு—ontology
மொழிவாரி—linguistic
வகுப்புவாதம்—communalism
வரலாற்றுவரைவு—historiography
வாணிகத் தடையாணை—embargo
வாரக் குத்தகை—metayage
வேலை வாய்ப்பு—employment opportunity

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை **முன்னேற்றப் பதிப்பகம்** மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து,

"Progress Publishers,
17, Zubovsky Boulevard, Moscow, USSR"

என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41-B, Sidco Industrial Estate, Ambattur, Madras-600098

ஷோரூம்

6/30, Mount Road, Madras-600002

கிளைகள்

80, West Tower St., Madurai-625001
87/89, Oppanakara St., Coimbatore-641001
Singarathope, Tiruchirappalli-620008
Cherry Road, Salem-636001